Vol. XVI 1937-1938

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

பதினாறாம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
யவர்கள், பி. ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்

ஈசுவர—வெகுதானிய௵

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Tinnevelly and Madras

[Price Rs. 3—8

உள்ளுறை

[* இக் குறியிடப்பட்டவை இத் தொகுதியில் முடிவுபெறாது தொடர்வன.]

உருவப்படங்கள்



27-7-37-ல் பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோவில் எருமைக்கடாப் பலிவிலக்குத் தொண்டர் குழாத்தினர்.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] ஈசுவர—ஆவணி [பரல்-க

செல்வி பதினாறும் சிலம்பு

'செல்வி' இன்று கசு-ஆம் சிலம்பு பெறுகின்றனள். பதினைந்து ஆண்டுகள் நிரம்பி இன்று நல்ல கட்டிளஞ் செல்வியாய் விளங்குகின்றனள். சென்ற ஆண்டுகளிலெல்லாம் அழகிய கட்டுரையுணவுகள் ஊட்டித் தன்னை அருமை பெருமையாய் வளர்த்துவந்த புலமைசான்ற பெருமக்களாஞ் செவிலியரை மீண்டும் ஒருமுறை நன்றியுணர்வுடன் திரும்பி நோக்கி அவர்கள் உடன்பாடும் வாழ்த்தும் பெற்று எல்லாம் வல்ல இறைவன்பால் முன்னையினுஞ் சிறந்த கசு-ம் சிலம்பு ஏற்று அருள் குழைந்த நன்முறுவலுடன் இன்று தமிழகத்தை ஆர்வமாய் நோக்குகின்றனள்.

இஃது ஆவணித்திங்கள் தமிழ் வழக்கில் தமிழாண்டின் முதல் திங்கள், இம்முதற்றிங்களில் 'தமிழ்ச்செல்வி' புதுச் சிலம்பு பெறுகின்றனள். மேலும், இது கார் காலத்தவக்கம். இறைவன் திருவருளே வான் சிறப்பாம். அத்திருவருளே நம் செந்தமிழ்ச் செல்வியாம் அம்மை. எனவே, அவள் கார் காலத்திலன்றோ முதற்பெயல் கொள்வள். இனி, அன்பும் மெய்யுணர்வும் பன்மொழிப் புலமையும் நன்கு வாய்ந்த சான்றோர்களின் அறிவுக்கடலிற் சென்று படிந்து தமிழ்க்கலை நீர் மொண்டுவந்து பிறமொழிக் கோடைகள் தீரக் குளிரப்பொழிவள். அதுவுந் திங்கடோறுந் தவறாது காலத்திற்பெய்து தமிழ்ப்பயிர் விளைப்பள். நமதருமைச் 'செந்தமிழ்ச்செல்வி' சூல்கொண்ட செந்தமிழ் மேகமாய் வான் உலவுகின்றனள். தமிழ்மக்கள் வறுமைகள் ஒழிந்து உரிமைகள் பெறுவர்.

நாட்டுக்கு உயிர், மொழி; நாகரிகத்துக்கு உயிர், மொழி; உலகத்தில் மொழியே யார்க்கும் அடையாளப்பொருள். உலகத்தில் மொழியினாலேயே சாதி; மொழியினாலேயே

பெயர்; மொழியே உடன்வருஞ் சொத்து. ஒரு நாட்டை விட்டு வேறுநாடு செல்லலாம். ஆனல் மொழிமட்டும் நம்மோடு உடன்வரும். செல்லுந் தேயங்களிலும் நமக்கு மொழியினலேயே பெயருண்டாகும்; சாதியுண்டாகும். மொழியோடு முன்னோர் கலையுணர்வுகளும் உடன்வரும். அதனல், நாம் எங்கே போயினும் நமது நாகரிகம் நமது மொழியினலேயே மீண்டும் உருக்கொண்டு நிலைபெறும். நமது செந்தமிழ் நாட்டை வேற்றரசுகள் அவ்வப்போதும் படையெடுத்துத் தம் நாடு என்றன. ஆனல் நமது செந்தமிழ் மொழியைமட்டுந் தம்மொழி என்றில. நாடிழந்த காலங்களிலெல்லாம் நமதுமொழி ஒன்றே நம்முடன் இருந்து நாம் இன்னர் என்பதை மற்றவர்கட்குக் காட்டிவருகின்றது! நமது நாகரிகத்தையும் நாம் இழவாதபடி பாதுகாத்து வருகின்றது! மொழி புறப்பொருளன்று; அஃது உயிருணர்வோடு பிரியாது பிணைந்துகிடக்கும் அகப்பொருளாகும்; ஆதலின், மொழியே நிலையான அருமைச் சொத்து. தமிழகத்தில் தமிழ்மொழி என்ன நிலையிலிருக்கின்றது நோக்குமின்! தமிழ்மொழிக்கு இவ்வாண்டில் நல்ல நெருக்கடி தோன்றியிருக்கின்றது. பிறமொழிப் படைகள் நம் மொழிமேற் சீறுகின்றன. இந்நிலையிற் 'செந்தமிழ்ச் செல்வி தன் இன்னெலிச்சிலம்பின் சீறடிவீசி நடந் துவங்குகின்றனள். தமிழ்த் திருவரங்கம் பெரிதாகுக! நெருக்கடி வறிதாகுக!

'செல்வி' இந்நெருக்கடியிற் பலவகையான ஆக்கவேலைகளையும் அழிப்புவேலைகளையும் மேற்கொள்வள். இறைவன் திருநடக்கருத்தும் இவையேயாம். 'செல்வியின்' தொண்டு இவ்வாண்டில் விரைவும் வீரமும் உள்ளதாயிருக்கும். உணர்ச்சியும் வளர்ச்சியும் வாய்ந்ததாயிருக்கும்; தமிழ் நாட்டுக்குப் புத்துணர்வும் புது நலங்களும் வழங்குவதாயிருக்கும்; ஒருமையும் பெருமையும் அளிப்பதாயிருக்கும். தமிழ்ச் சைவ நாகரிகம் குமரிக்கடலடியிலும் பனிமலை நுனியிலுமே பெருகத் தங்கியிருக்கின்றது. இடைவெளியை இடைக்கால மொழியாளர்கள் அந்திப் புன்மாலைபோல் ஆட்சிசெய்யப் பார்க்கின்றனர். செல்வியின் திருநடம் அம்மேடுபள்ளங்களை விரைந்து நிரவும்; தமிழகத்தைப் பழமைபோல் ஒளிகொள்ளச் செய்யப் பெரிது முயலும். முயன்முல் முடியாததும் உண்டுகொல்! 'செல்வி'யின் திருநடத்துக்கு இவ்வாண்டில் நேயர்கள் அரங்கம் பெரிது கோலல்வேண்டும். அனைவரும் அவ்வரங்கத்தின் உறுப்பினராதல்வேண்டும். வேண்டுதும் அன்பர்கள் நேயமுந் திருவருள் துணையும்! வாழி செல்வி! வாழிதமிழ்! வாழி தமிழர் மணித்திரு நாடு!

—இளவழகனர்.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழ் நாடும் ' இந்தி'யும்

[திரு. இளவழகனார் எழுதியது]

மொழிப் பயிற்சியின் முதன்மை

'மக்கள் வறுமையின்றி வாழவேண்டுமானால் நாட்டில் மொழிக்கல்வி வளம்பெறவேண்டும்; அதற்கான தொண்டு தான் மக்கள் நல்வாழ்வுக்கு முதன்முதலாகச் செய்யவேண்டிய துவக்க வேலை' என்று மொழிக்கழகங்களும் மொழியறிஞர் குழாங்களும் அறிவித்து வந்தன. 'அது பசியை உடனே நீக்காது; குடிக்கக் கால்வயிறு கஞ்சியும் உடுக்க இரண்டு முழந் துண்டுதானும் இல்லாத இக்காலத்தில் மொழிக் கல்வியைக் கற்பதெங்கே' எனவெல்லாஞ் சொல்லிக்கொண்டு நம் நாட்டவர் பல இயக்கங்கள் கண்டு பலவாறு பணிசெய்யத் தொடங்கினர். அவ் வியக்கங்களுள் தேயத்தொண்டர் இயக்கமும் ஒன்று. கடைசியில், 'நாட்டவர் பசியின்றி வாழ மொழியறிவு கட்டாயமாகும்; அதுவும் எந்த வேலை எப்படியானாலும் அவைகளைப் பின்னால் தள்ளிவிட்டு இதுவே உடனே செய்தற் குரியது; அதுவுங் கட்டாய முறையிற் செய்தே ஆகவேண்டியிருக்கின்றது' என்னும் முடிவுக்குத் தேயத்தொண்டர் இயக்கமே இப்போது முனைந்துவந்திருக்கின்றது. அவ் வியக்கம் செய்த இம் முடிபினால் மக்களுக்கு ஒரு சிக்கலான கருத்தைத் தெரிவித்ததாகின்றது. ஒரு சிறந்த உண்மையைத் திறந்து காட்டியதாகின்றது. மொழிக்கும் பசிக்குந் தொடர்பு காட்டியதாகின்றது. இம் முடிபை முன்னமேயே சான்றோர் முடித்துவைத்திருக்கின்றனர்.

ஆசிரியர் திருவள்ளுவர் 'பொருட்பால்' என ஒன்று தமது திருக்குறளில் வகுத்தார். ஆனால், அவர் அதன் முதலிலேயே என்ன சொல்கின்றார்? பொருள் தேடுவதற்காக நெல்விளையும் வயல்களுக்கோ, பொன்விளையுங் கடைகளுக்கோ, அல்லது மாற்றரசரோடு போரிடும் போர்க்களங்களுக்கோ திருவள்ளுவர் முதலில் நம்மைப் போகச்சொல்லவில்லை. அவற்றிற்குச் செல்லுமுன் 'கல்வி வேண்டும்' என்றார்; 'எண்ணும் எழுத்தும் வேண்டும்' என்றார். 'எவ்வளவுக்கெவ்வளவு கல்வியை ஆழ்ந்து கற்கக்கூடுமோ அவ்வளவுங் கற்கவேண்டும்'

என்றார்; 'அவ்வளவுக்கு அவ்வளவும் அறிவு பெருகும்' என்றார்; அவ்வறிவு 'அவ்வளவும் பொருள்தான்' என்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே செய்துவைத்த இந்த அரிய சீர்திருத்தம் இன்று எவ்வளவு முதன்மையாயிற்று பாருங்கள். யார் எந்த இயக்கத்தைத் துவங்கினாலும் முதலிற் 'பிள்ளையார் குட்டுப்'போல் மொழிக்குப் பணிந்து, அதற்கானவையெல்லாஞ் செய்துவிட்டுப் பின்புதான் மற்றவைகளைக் கருதிப்பார்க்கவேண்டுமென்றும், அம் மொழி முயற்சியையுங் கட்டாய முறையிற் கைக்கொள்ளவேண்டுமென்றும் இதனால் நன்கு தெரிகின்றதன்றோ! நமது நாட்டில் இம் முடிபு காலங் கண்டது.

தமிழ்மொழிக் கல்விகளுக்கு ஏற்பாடுகள்

முதலில் ஒவ்வொருவருங் கற்கவேண்டிய மொழி அவரவர் தாய்மொழியே என்பதில் நாட்டின் நலம் விரும்புந் தலைவர்கள் எவருமே மாறுகொள்ள இடமில்லை.

நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் இன்னும் எழுதப்படிக்கத் தெரியாத நிலைமையில் இருக்கின்றனர். முதலில் அந் நிலைமையை மாற்றுவதற்கு நமது நாட்டின் பொருள் செலவாகவேண்டிய கட்டாயமிருக்கின்றது.

அதன் பின், எழுதப்படிக்கத் தெரிந்த நிலையிலிருந்து மக்கள் அறிவு நிலையை மேல் உயர்த்துவதற்கு அவர்களுக்குச் சிறந்த கல்விப் பயிற்சிகள் தரவேண்டியிருக்கின்றன. கல்விப் பயிற்சியின் அளவுக்கு ஏற்றபடியே எவர்க்கும் அறிவு வளர்ச்சி அமையும் என்பது சான்றோர் கருத்தன்றோ? 'மணற்கேணியை எவ்வளவு தோண்டுகின்றோமோ அவ்வளவுக்கு நீர் ஊறுவதுபோல, மாந்தர் எவ்வளவு கல்வி பயில்கின்றார்களோ அவ்வளவுக்கு அவர் அறிவு பெருகும்' என்பது தெய்வத் திருவள்ளுவர் பொன்மொழி. திருவள்ளுவர் சீர்திருத்தங்களிற் பராமுகமாயிருந்தால் உலக மக்கட்கு வேறு உய்தியில்லை. ஆதலால், மக்களுக்கு ஆழ்ந்த கல்விப்பயிற்சிகள் தந்து அவர்களை மேன்மேல் அறிஞர்களாக்கும்பொருட்டு அதற் கடுத்தபடியாக நமது நாட்டுப் பொருள் செலவாகவேண்டியிருக்கின்றது.

இனித் தமிழ்நாட்டு மக்களை இங்ஙனம் அவர் தாய்மொழிக் கல்வி வாயிலாகப் பேரறிஞர்களாய்ச் செய்வதற்கு ஏற்ற நூல்கள் அவர்கள் தமிழ் மொழியில் இல்லையென்றால், அத்தகைய நூல்களைத் தமிழில் கொண்டுவருவதற்காகவும் அவற்றைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்காகவும் அவற்றிற்கு வேறே

அவர்கள் நாட்டுப்பொருள் செலவாகவேண்டி யிருக்கின்றது. இதுவன்றோ உரிமைவேட்கை மிக்க தேயத் தொண்டர்கள் செய்யவேண்டிய முதற் செயல்! இல்லாவிட்டால், அவர்கள் தாய்மொழி பாதுகாப்புடையதாகாது.

மேற்காட்டிய இத் தமிழ்த் துறைகட்கெல்லாந் தமிழ் நாட்டவர் பொருள் ஒதுக்கப்பட்டபிறகு அவர்கள் அயல் மொழிப் பயிற்சிகளுக்காகச் செலவுசெய்வதுபற்றி எவரும் நினைக்கவேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இதுவே உரிமை யாட்சியிற் பெறவேண்டிய முதல் நன்மையா யிருக்கின்றது.

அயல் மோழிக் கல்விகளில் விருப்பம்

ஏறக்குறைய ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயும் நம் நாட்டவர் அயல்மொழிகளைப் பயில்வ துண்டு. ஆனால் அப்படிப் பயில்வது அவ் வயல்மொழியாள ரோடு உறவு கலந்து வாணிகஞ் செய்து பொருள் ஈட்டும் பொருட்டாகவே அன்று. ஏனென்றால், அதற்குப் பெரும் பயிற்சிகள் தேவையில்லை. அயல்மொழியாளர்களோடு பழகு தலொன்றே போதுமானதாயிருந்தது. மற்றப்படி தாம் தமது அறிவு உழைப்பினாற் கண்டுவைத்த அரும்பெருங் கருத்துக் களை அயல்மொழியாளர்களுக்கு அறிவிக்கவேண்டுமென்னும் பெரும்போக்கான நோக்கம்பற்றியே பண்டைக்காலத்து நல்லோர் அவ் வயல்மொழிகளைப் பயின்று வந்தனர். அஃது அவர்கட்கு ஓர் இன்பப்பயிற்சியா யிருந்தது. அதுவும் அவ் வயல்மொழி நாடுகளுக்குச் சென்றே அவைகளைப் பயில்வது வழக்கம். அதுவும், தமது கட்டிளமைப் பருவம் வரையில் தமது தாய் மொழியையே திருத்த மாகப் பல கலைகளுடன் ஆழ்ந்து பயின்று பின் திருமணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்வில் வைகிப் பொருளிடர்ப் பாடு இல்லாமல் இன்ப வாழ்விற் களிதுளும்பும்போது தான் அயல் நாடுகளுக்குச் சென்று அயல் மொழிகளைப் பயில்வது நம் தமிழ் மக்களின் வழக்கம். அவருள்ளும், பொருள் வளமும் அறிவு வளமும் படைத்த சிலரே அங்ஙனம் பிற நாடுகள் சென்று அயல்மொழிகள் பயில்வர். இம் முறைதான் 'ஓதற் பிரிவு' என்று தொல்காப்பியப் பொருளதி காரத்தில் ஓதப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மைகளை அப் பகுதிகட்கு உரையாசிரியர்கள் எழுதிய உரைக் கருத்துகள் கொண்டுந் தெளிந்துகொள்ளலாம்.

பிறமொழிப் பயிற்சிகளால் நாடு இப்போது அடைந் திருக்கும் இனிமை இன்னாமைகளை உற்றுநோக்குங்கால்

பண்டைக் காலத்தில் மேற்கொண்டுவந்த இம் முறையே நலமுள்ளதாகக் காணப்படுகின்றது. இதுகொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரலாம். தமிழ் நாட்டவர் தமது தாய் மொழியில் தக்கவாறு பயிற்சிபெறுவதற்குமுன் சிறு பருவங்களிற் பிறமொழிகள் பயில இடஞ் செய்யலாகாது.

சிறு பருவங்களிற் பல மொழிகள் பயில்வதனால் தாய் மொழியில் மனப்பாடஞ் செய்யவேண்டிய பல பகுதிகள் செய்ய இயலாமற்போகின்றன. அவர்கள் தமது இளம்பருவ மெல்லாம் பல அறிவுத்துறைகளில் நல்ல பயிற்சிகள் பெறும் பொருட்டு அதற்கான எல்லா அறிவுநூல்களும் அவர்கள் தாய்மொழியிலேயே வகுத்துத் தரவேண்டும். அதற்குமேல் அவர்கள் பிறமொழிகள் பயில விருப்பமிருக்குமானால் அங்ஙனம் விரும்புவோர் அவை பயிலலாம். இங்ஙனம் அமையின் நம் நாட்டவர் செல்வம் வீண்முறையிற் செலவழியாமல் நிற்பதோடு நமது தாய்மொழியும் நம் நாகரிகங்களும் நன்கு பாதுகாக்கப்பட்டு மேன்மேல் வளர்ச்சியும் அடைந்து அறிவிலும் பொருளிலும் நாடு மேன்மேல் உயர்ந்து இன்புற இயலும். பண்டைக் காலங்களிலெல்லாம் தமிழரசுகள் மிக்க வலிமையோடு திகழ்ந்திருந்தன. வேண்டுமானால் அவர்கள் தமது நாட்டில் எத்தனையோ அயல்மொழிக் கல்லூரிகள் திறப்பித்திருக்கலாம். ஆனால், நாட்டிற் பொதுவாகப் பயன் படும்படி அங்ஙனம் அவர்கள் செய்ததில்லை. பெரும்பொருட் செலவுக்கு இடமாதலுடன், அம்முறை, நாட்டு மொழிக்கு ஊறுசெய்யும் என்பதும் அவர்கள் கருத்து.

அயல்மொழிச் சேர்க்கையால் விளையும் ஊறுபாடுகள்

பிறமொழி மக்கள் உலகத்தில் எத்தனையோ பிரிவினராயிருத்தலால், அத்தனை பேரோடுங் கலந்து பேச அத்தனை மொழிகளுங் கற்றல் ஏலாதாகலின், சில குறிப்பிட்டமொழிகளையேனுங் கற்கவேண்டிய கட்டாயத்துக்கு வந்து அவற்றிற்காகப் பெரும்பொருள் செலவுசெய்ய நேரிடும். தமிழ் மக்கள் தமது தாய்மொழியையே நன்கு கல்லாதவராயிருந்தும், அவர்கள் ஆங்கிலம் என்னும் அயல்மொழியோடு 'இந்தி' என்னும் மற்றோர் அயல்மொழியையுங் கற்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுதலைக் காண்கின்றோம்.

இனித் தமிழ் மக்களில் எத்தனை பேர் தமிழிற் சிறிது கூட எழுதவும் பேசவுங்கூடாத நிலைமையில் ஆங்கிலம் முதலான அயல் மொழிகளில்மட்டும் வல்லமையாய்ப் பேசவும் எழுதவும் பெரிய அலுவல் நிலைகளில் இருக்கவும் வாய்ப்புகள்

நேர்ந்த தமிழ் மொழியின் உதவியே சிறிதுந் தேவை யில்லாத முறையில் தமிழ் நாட்டிலேயே உலாவுகின்றார்கள். பெரிய நிலையிலிருப்பவர்களும் செல்வர்களுமெல்லாம் இங்ஙனந் தாய் மொழியைப் புறக்கணித்து அயல் மொழிகளைச் சார்ந்து உயிர்வாழ்வது அவ் வயல்மொழிச் சேர்க்கைகளால் விளைந்த ஊறுபாடல்லாமல் வேறென்ன? இங்ஙனம் பிற மொழிச் சேர்க்கைகளால் தமிழ் நாடு, தமிழ் மொழி, தமிழ் நாகரிகம் முதலானவற்றிற்கு ஊறு உண்டாகும் என்றால் 'ஒரு காலும் உண்டாகாது' என்று சிலர் வலியுறுத்திச் சொல் கின்றார்கள். ஆனால் கட்டாயம் ஊறு உண்டாகும் என்னும் உண்மை நமது நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சிறிது பின் திரும்பிப் பார்ப்பதனாலும் நன்கு விளங்கிவிடும்.

தமிழ் மொழியில் வடமொழிச் சேர்க்கை

ஆசிரியர் தொல்காப்பியர் காலம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் என்ப. அவர் இயற்றிய தொல்காப்பியந் தான் நமக்கு இப்போது கிடைக்கும் நூல்களில் மிகவும் பழமையானது. அக்காலத்திலேயே தமிழ் நாட்டில் வட மொழிச் சேர்க்கை இருந்தது. அதனைத் தொல்காப்பியர் ஓர் அளவுபடுத்தியிராவிட்டால் தமிழ்மொழியை இப்போது இந்நிலையிலாவது காண இயலாது. தொல்காப்பியர் காலத் துக்குப் பின் இங்ஙனம் அளவு படுத்தும் முயற்சிகள் பெரும்பாலுங் குறைந்துகொண்டே வந்தன. சென்ற ஆயிரம் ஆண்டுகளாக அம் முயற்சி அடியோடு இல்லாமற் போனதோடு அங்ஙனம் அளவுபடுத்தாமலிருப்பதுதான் மொழி வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் என்றுங் கூறி ஒரு வரை துறையில்லாமற் கலந்து வந்தனர். அதற்கு முன்பே சமணர் புத்தர் முதலான பல சமயத்தவர் வந்து தங் கொள்கைகளை இங்கே பரவச்செய்த காலங்களில் அவர்களால் ஏராளமான வடசொற்கள் தமிழிற் புகுந்தன. பின்பு வைணவ ஆசிரியர் களிற் சிலர் தோன்றி நூற்றுக்குத் தொண்ணூறு சொற்க ளுக்குமேல் தமிழில் வடசொற்கள் கலந்து அங்ஙனங் கலந்த கலப்பு நடைக்கு 'மணிப்பிரவாள நடை' என்று ஒரு பெயருங் கொடுத்து அது மிக அழகாயிருக்கின்றதென்று விரும்பி எழுதியும் பேசியும் வந்தனர். அவர்க்குப் பின் புராணகாரர் கள் பலர் தோன்றி மக்கள்பால் இன்னிசைக் கருவிகளோடு கவர்ச்சியான கதைகள் சொல்லியும் எத்தனையோ வட மொழிப் புராணங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் உலக வழக்கிலும் நூல்வழக்கிலும் நிறையப் பிறமொழிச் சொற்

களைப் புகுத்தி அதற்கோர் மதிப்புத் தந்தனர். இதனாலேயே இடைக்காலங்களில் அரிய சங்கநூற் பயிற்சிகள் அருகிப் போயின.

வடமொழிச் சேர்க்கையால் தமிழ் தன் நிலை குலைந்தது

கடைசியில் விளைந்த பயன் என்ன? தலைவர்கள் இதனை எண்ணிப் பார்ப்பார்களா? ஒரு காலத்தில் தமிழ்மொழி உலகமெங்குங் கதிர் வீசிக்கொண்டு வடக்கே பனிமலையையுந் தெற்கே குமரிநிலப்பரப்பின் கோடியையுந் தனக்கு இடமாய் உரிமைகொண்டிருந்தது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் முறையில் உழவுநூல் முதல் மறை நூல்வரையிற் பெருவாரியான கலைநூல்களெல்லாந் தன்னகத்தேகொண்டு உலக அறிவு அரங்கத்திற் செங்கோல் ஒச்சியிருந்தது. அந்தகைய பெருநிலையிலிருந்த அருமைத் தமிழ்மொழியை இன்று என்ன நிலையிற் காண்கின்றோம்? இந்தியாவின் தென்கோடியிற் பல மொழிகளினிடையில் நசுக்குண்டு அருமை பெருமையின்றி வாடிக்கிடக்கின்றது. குப்பையின் மறைந்த ஆலமுளைபோலவும், வைக்கோலின் மூடிய கொழுந்தீப்போலவும் அயல்மொழி ஆரவாரங்களினிடையில் இவ் வுயர் தமிழ்மொழி ஒடுங்கியுள்ளது. ஆயினும் முன்னைப் பழமைக்குப் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இருவகை வழக்கிலும் பேராற்றலோடு வழங்கிவரும் உயிருள்ள மொழியன்றோ இம் மொழி! இப்போதும் ஒன்றுங் கெட்டுவிடவில்லை. தமிழ்மக்கள் மட்டும் அறிவும் ஆண்மையும் உள்ளவர்களானால், அன்பும் அறமும் உள்ளவர்களானால், ஊக்கமும் உழைப்பும் உள்ளவர்களானால், பெருந்தன்மையும் நல்லெண்ணமும் உள்ளவர்களானால், புனிதமும் பொறுமையும் உள்ளவர்களானால், சுரணையும் சுறுசுறுப்பும் உள்ளவர்களானால் அவர்கள்பால் இன்னதென்று கூறமுடியாததொரு தெய்வ ஆற்றல் பளிச்சிட்டு மும்முரமாய்ச் செயல் நிகழ, அதனால் அவ் வாலமுளை நாற்புறமுந் தன்னை மறைத்த குப்பைகளையே உணவாய்க்கொண்டு மேல் எழுந்து நாலா பக்கமும் அகலத் தழைத்து அங்கங்கும் கிளைகள் ஊன்றி உலக மக்களுக்கே குளிர்ந்த நிழல் தருமாறுபோலவும், அச்சிறிய கொழுந்தீப்பொறி மெல்லக் கனிந்து தன்னை மூடிய வைக்கோலையே தன் அழல்வண்ணமாக்கிக் கிளர்ந்தெரிந்து யாவற்றையுந் தூய்மைசெய்வதுபோலவும் நம் தமிழ்மொழியும் தன்னை மறைக்கும் மொழிகளையே கருவியாகக்கொண்டு அவற்றையுந் தன் வண்ணமாக்கி மேல் உயர்ந்து தழைத்து உலகமெங்குந் தன் தண்ணிழல் பரப்பிப் பழமைபோல் ஒளிகாட்

டிக் கதிர்வீசுதல் கூடும். தமிழ் மக்கட்குத் தெய்வம் நல்லியல்புகளும் முயற்சிகளும் உதவுக! தமிழர் வீறுகொண்டு எழுக!

தமிழ்மொழி முன்னே உலகமொழி!
வடமொழிச் சேர்க்கையால் தன்கதிர் மழுங்கியது!

மேற்கே எகுபதிநாட்டில் 'நைல்' ஆற்றின் பள்ளத்தாக்குகளில் அகப்படும் பழைய நாகரிகப் பொருள்கள் கொண்டு இன்றைக்கு ஆறாயிரம் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்மக்கள் அங்கே செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்று அறிஞர் துணிகின்றனர். வடமேற்கே உள்ள இத்தாலிய நாட்டில் மிகப் பழைய காலத்திலேயே தமிழ் வகுப்பினர் இருந்தனர் என்று ஆசிரியர் கால்டுவேல் கூறுகின்றார். நமது நாட்டுச் சேரவேந்தன் ஒருவன் யவனர் நாடாகிய 'கிரீசு', 'இத்தாலி' என்னும் நாடுகளை ஆண்டுவந்தனன் என்று,

"வன்சொல் யவனர் வளநாடு ஆண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோன்"

எனச் சிலப்பதிகாரம் உரைக்கின்றது. இந்நாவலந் தீவின், பனிமலைக்கும் வடக்கே உள்ள சைபீரியா நாட்டில் அக்கிரீன் வகுப்பார் பேசும்மொழி தமிழோடு தொடர்புள்ளது என்றும் அறிஞர் கூறுவர். இங்ஙனமாக உலகமெங்குந் தமிழ்மொழி ஒருகால் நன்கு கதிர்வீசி விளங்கியிருந்தது. ஆசியா ஐரோப்பாக் கண்டங்களில் ஆரிய மொழிக்குமுன் தமிழ்போன்றதொரு முதல்மொழி உலாவியிருந்ததென்று மேனாட்டாசிரியர்கள் கருதுவதாக ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும் இவ்வுண்மையை எடுத்துக்காட்டுவாராயினர்.

"சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமோ"

என்னும் அவர் தமிழ்த்தெய்வ வணக்கமும் இதனை வலியுறுத்துகின்றது. வரவர உலகமெங்கும் வீசிய இத் தமிழ்மொழிக் கதிர்கள் சுருங்கிவிட்டன காண்மின்!

நாவலந் தீவே முன்பு தமிழ்நாடு;
வடமொழிச் சேர்க்கையால் தமிழ் தனது நாழடிந்தது

தமிழ்மொழிக்கு உரிய இடம் ஒருகாலத்தில் "வடா அது பனிபடு நெடுவரை வடக்கும் தெனாஅது உருகெழுகுமரியின் தெற்கு" மாயிருந்தது. "முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வப்பேர் இமயமலை" என்பதும் இதனை வலியுறுத்தும். ஜர்மன் ஆசிரியர் தமிழரைப் 'பிரமபுத்திரர்' என்றும், 'காளிபுத்திரர்' என்றுங் கூறுவர். பாஞ்சாலநாட்டு மன்னன் பிரவாகசைவலி காலத்தில் அங்கே தமிழ்க் கழகம் சிறந்திருந்த

தாகச் சாந்தோக்ய உபநிடதங் கூறுகின்றது. 'ஜனகன்' தமிழரசன் என்பது சதபத பிராமணத்தால் விளங்குகின்றது. அத்தினபுரியைத் தலைநகராகக் கொண்ட குருநாடுந் தமிழ் நாடென்பர். பின்பு தமிழெல்லை விந்தியமலை வடக்குங் குமரித்துறை தெற்குமாயிற்று. அதன்பின் வடவேங்கடந் தென் குமரியாயிற்று. இப்போது அவ்வெல்லைகூடத் தமிழ் எல்லையாகக் கூறமுடியவில்லை. மேற்குக் கடலெல்லைகூடத் தமிழ் எல்லையாகக் காணப்படவில்லை. எஞ்சிய நடுப்பகுதியிலும் பிறமொழிமக்கள் ஊடுருவி நீக்கமற நிற்கின்றனர். தமிழ் மொழி மக்களும் பிறமொழி பேசியே உயிர்வாழ்தலை விரும்புகின்றனர். நாவலந் தீவின் தமிழ் மொழிநிலை இங்ஙனமா நிலைகுலையவேண்டும்! பிறமொழி மக்களின் துணிவும் முயற்சியும் எவ்வளவு? நம்மொழி மக்களின் கோழைமையும் ஏழைமையும் எவ்வளவு?

வடமொழிச் சேர்க்கையால் தமிழ் தன் கலை இழந்தது

இனி, இயல், இசை, நாடக நூல்களில் இப்போது இசை நாடக நூல்களேயில்லை. சிலப்பதிகாரம் ஒன்றிலேதான் முத்தமிழும் சிறிது மணம் வீசுகின்றது. ஏரணம் உருவம் யோகம் இசை கணக்கு இரதம் ஜாலம் தாரணம் அறம் சந்தம் தம்பம் நீர் நிலம் உலோகம் ஆரணம் பொருள் முதலான கலைகள்மேல் எழுந்த தமிழ் அறிவு நூல்களெல்லாம் இன்று இருக்குமிடந் தெரியவில்லை. இவற்றை முறையே உழவு ஓவியம் ஒருமை இசை கணக்கு நாணயம் புற்பூண்டுகள் உயிர்ப்பு அறம் செய்யுள் சிற்றுயிர்கள் நீர் நிலம் உருக்கு மறை பொருள் என்னுங் கலைகளென்ப. தமிழ் மொழியிலிருந்த அரிய அறிவுநூல்களும் இங்ஙனம் மறைந்து போயின. எடுத்துக்காட்டாகப் பழைய தமிழ் இசைகளும் அவற்றிற்குரிய பழைய தமிழ்ச்சொற்களும் மறைந்துபோய் அவற்றிற்குரிய இடத்தில் இப்போது வடசொற்களும் வடமொழி நூல்களும் வழங்குகின்றனவல்லவா? 'குரல்' 'துத்தி' முதலான எழுவகைத் தமிழ் இசைப்பெயர்கள் இப்போது வழங்குகின்றனவா? இல்லையே. தமிழ் இசைச் சொற்கள் வழங்காவிட்டால், பின், அவை உள்ள நூல்கள் பயில்வாரற்று இறவாதிருக்குமோ? எத்தனை இசை நாடக நூல்கள் இறந்துபோயின!

வடமொழிச் சேர்க்கையால் தமிழ் தன் சொற்களஞ்சியம் இழந்தது

இனித் தமிழ்மொழியிலுள்ள ஏனைச் சொற்களேனும் நின்றனவா இல்லையே. எத்தனையோ ஆயிரக் கணக்கான

அரிய முழுமுழுச் சொற்களெல்லாம் இருவகை வழக்கிலும் இல்லாமற்போயின. சில, நூல்வழக்கில் மட்டும், அதுவும் இப்போது எடுத்து வழங்குதற்கு ஏலாத முறையிற் பாசி பிடித்துக் கிடக்கின்றன. இருவகை வழக்கிலும் அயல் மொழிச் சொற்கள் நுழைந்து வழங்கி அவற்றுக்கு நேரான சிறந்த பொருட்கருவுள்ள பைந்தமிழ்ச் சொற்களெல்லாம் வழக்கறும்படி செய்துவிட்டன. தமிழ் மக்களாயினோர் இந்த அலங்கோலத்தை இன்னமும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இதுவரையில் நம் தமிழ்மக்கள் எத்தனையோ சொன் மணிகளை இழந்துவிட்டனர். மிச்சமிருப்பவைகளையும் பாது காக்கின்றாரில்லை. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லும் எத்தனை அழகான பொருட்கருவுள்ளதாயிருக்கின்றது பார்மின்கள்!

தமிழிற் 'கடல் என்னுஞ் சொல்' 'கடக்கவேண்டுவது' என்னும் பொருட்கரு வுள்ளது. 'விடல்' விடுக என்னும் பொருளில் வருவதுபோல. தமிழ்மக்கள் கடல்கடந்து செல் லும் முயற்சி முனைப்பை இப் பெயர் காட்டுகின்றது. 'ஆழி' என்பது ஆழமுள்ளது என்னும் பொருளால் வந்த பெயர். தமிழ்மக்கள் கடலிற் செல்லுங் காலங்களிலும் முத்துக் குளித் தல் முதலிய தொழிலை மேற்கொள்ளுங் காலங்களிலும் பிற காலங்களிலும் அவர்கட்குண்டான உணர்வே அதற்கு இப் பெயர் இட நேர்ந்தமையால், அவர்கள் பழக்கம் தொழில் முதலியன இப்பெயர்கொண்டும் அறியலாம். 'வேலை' என்பதும் கடலுக்கு ஒரு பெயர். எப்பொழுதுங் கடல் ஓய்வின்றி வேலையாயிருத்தலால் அதற்கு இப் பெயர் வந்தது. இதனால் தமிழ் மக்களின் உவப்பு நகைப்புத் திறம் விளங்கும். இங்ஙனம் பல. இத்தகைய அரிய பொருட்கருக்களும் தமிழ்மக்கள் திறங்களும் அமைந்த சிறந்த தமிழ்ச் சொற்களில் ஒன்றே னும் மக்கள் வழங்குகின்றனரா? இல்லையே! குப்பத்தில் இருக்குங் குழந்தைகள்கூடச் 'சமுத்திரம்' என்றன்றோ வழங்குகின்றன. உலக வழக்கில் தமிழ்ச்சொல் வழக்காறற்று வடசொல் ஆக்கம் பெற்றது காண்மின்! கடல் என்று கூடப் பொதுமக்கள் பெரும்பான்மையுஞ் சொல்வதில்லை.

இனித் தமிழில் உள்ள 'கணவன்' என்னுஞ் சொல் 'கருத்துக் கிசைந்தவன்' என்னும் பொருள்தந்து தமிழர் காதல் முறைப் பழக்கத்தை நன்கு தெரிவிக்கின்றது. தமிழ் மக்களின் அரிய நாகரிகமொன்றைக் காட்டும் இத் தூய் தமிழ்ச் சொல்லைப் பொதுமக்கள் வழங்குவதில்லை. சேரிப் புறங்களிலுள்ள பெண்டிரும் 'புருசன்' என்னும் வடசொல் லையே கொச்சையாகவாவது வழங்குகின்றனர். இதனால்

'கணவன்' என்னும் இச்சொல்லும் உலகவழக்கில் பெரும் பான்மையும் வழக்காறறுதல் கண்டுகொண்மின்!

இனித் 'தேம்' என்பது ஒரு தமிழ்ச்சொல். இதற்குத் 'தெய்வம்' என்பது பொருள். 'இனிமை இயல்புள்ளது தெய்வம்' என்பதும், 'இனிமைத்தன்மை பெறுதலே தெய்வத் தன்மை பெறுதலாம்' என்பதும் இதன் விழுமிய பொருள்களாகும். இதனுல் தமிழர் தெய்வக்கொள்கை இன்னதென்பதும், அவர்கள் வழிபாட்டுமுறை இன்னதென்பதும் தெளியப்படும். இவ்வழகிய சொல் நூல்வழக்கிலேயே பெரும்பான்மையுங் காணப்படவில்லை. ஆதலால் இச்சொல் நூல்வழக்கிலும் வழக்காறற்றுப் போதல் கண்டு கொள்க. பொதுமக்கள் பெரும்பாலும் 'சுவாமி' என்னும் வடசொல்லையே உலகவழக்கிலும் வழங்குகின்றனர். இப்படியே ஆங்கிலமொழிச் சேர்க்கையாலும் 'பெஞ்சு', 'ரூம்' முதலான ஆங்கிலச் சொற்களையே வழங்கி அவற்றிற்கு நேரான தமிழ்ச்சொற்களை மறக்கின்றனர். இவைபோன்றவற்றிற்குக் கணக்கேயில்லை.

இங்ஙனமாக நம் அருமைத் தமிழ்ச் சொற்களெல்லாம் அயல்மொழி வழக்குகளால் வழக்கற்றுப்போய்விட்டால் அப்புறம் 'தமிழர்கள்' 'தமிழ் நாடு' என்னும் பெயர்தாம் எதற்கு? அயல்மொழிகளையெல்லாம் எல்லைப்புறத்திலேயே அளவுபடுத்தி அவற்றின் நற்கருத்துகளைமட்டும் அவரவர் தாய்மொழியிற் புகவிடும் புனித முயற்சி பண்டுதொட்டே நிகழ்ந்திருக்குமாஞல் நம் தமிழ்ச் சொற்களஞ்சியம் இங்ஙனமெல்லாம் நிலைகுலைந்துபோமா, நினைமின்கள்!

வடமொழிச் சேர்க்கையால் தமிழ் தன் மக்களை இழந்தது! முடி துறந்தது!

பிறமொழிச் சேர்க்கையினுல் தாய்மொழிக்கு 'ஊறு இல்லை; ஊறு இல்லை' என்று உரைப்பவர்களெல்லாம் இவ்வழிவு நிலைகளை எண்ணிப்பார்ப்பார்களா? உலகமெங்குந் தன் தண்ணெளி பரப்பிய நம் அருமைத் தமிழ்த்தாய் இங்ஙனமெல்லாம் தன் கதிர் மழுங்கி இடம் சுருங்கி ஆற்றல் மடங்கிச் சொற்களும் வழக்காறற்று ஒரு மூலையில் இருக்குமிடந் தெரியாமலிருக்கும் அலங்கோல நிலையை அடைந்திருப்பதற்கு ஏது என்ன? அயல்மொழிப் படையெடுப்புகளும் நம் தமிழ் மக்களின் விழிப்பின்மையுமல்லவா, ஆராய்மின்! தமிழ்மொழியோடு பிறமொழிகள் கலந்தமையாலன்ருே, அங்ஙனங் கலந்த பகுதிகள் செந்தமிழ்க்கு முற்றிலும் வேருய் வழங்கி

வந்து 'தெலுங்கு', 'கன்னடம்', 'மலையாளம்' முதலிய பல மொழிகளாய்ப் பிரிந்துவிட்டன. முன்னே 'தமிழ்' என்னும் ஒரு மொழி பேசிய மக்களெல்லாரும் இப்போது தெலுங்கர்களாயும் கன்னடர்களாயும் மலையாளத்தவர்களாயும் இன்னும் பிறமொழியாளர்களாயும் பிரிந்து சிதறி ஒற்றுமை கெட்டனர். இதனால் தமிழ் அரசும் நிலைகுலைந்தது! உலகத்திலுள்ள பெரும்பான்மையான மொழிகளெல்லாம் இங்ஙனமே ஒன்றோடொன்று விழிப்பின்றிக் கலத்தலாற் பலவாகப் பிரிவுண்டு அதனால் மக்களும் ஒவ்வொரு மொழிக்குரியராய்ப் பல வாறாய்ச் சிதறி ஒற்றுமையழிந்து எந்நேரமும் ஓயாப் பகையும் போருமாய் வாழ்நாளை ஒழித்து மடிகின்றனர். மொழிக் கலப்பால் ஒற்றுமை உண்டாகும் உண்டாகும் என்பவர் இதனைச் சிறிது உன்னிப் பார்ப்பரா? இந் நாவலந் தீவில் மட்டும் இப்போது எத்தனை மொழிகள் முன்னையினும் பெருவாரியாகப் பல்கி அதனால் தனித்தனி வகுப்பினராய் மக்கள் சிதறி ஒருமையிழந்து போராடுகின்றனர்!

வடமொழிச் சேர்க்கைக்குத் தோல்காப்பியர் அணைகோலினர்

இதனாலன்றோ, ஆசிரியர் தொல்காப்பியர், பிறமொழிச் சொற்கள் கலந்துவிடுதலில் மிகவும் விழிப்புக்காட்டியிருக்கின்றார். 'நூல்கள் எழுதும்போது இனிய இயற் சொற்களாலேயே அவை எழுதவேண்டும்; சில இடங்களில் அழகுக்காகச் சில திரிசொற்கள் சேர்த்தெழுதலாம்; வழக்குண்மைகள் தெரிவதற்காக ஒரோவோரிடங்களில் மிகச் சிலவாய்த் திசைச் சொற்களும் வழங்கலாம்; இவ்வளவுந் தனித்தமிழாய் வழங்கி அதற்குமேற் கட்டாயமிருந்தால் வரலாற்றுண்மை தெரிவதற்காக எங்கோ அரிதாகிவர ஒரோவொரு வடசொல் சேர்த்தெழுதலாம்' என்று அவர் கூறிய அருமையைப் பாருங்கள். ஆயினும் அப் பிறமொழிச் சொற்களும் அம்மொழி எழுத்துக்கள் நீங்கியிருக்கும் நிலையிலேயே சேர்க்கவேண்டும் என்பதும், அவற்றுள்ளும் சில குறியீட்டுப் பெயர்களே அங்ஙனம் நூல்களிற் சேர்க்கத்தக்கவை என்பதும் அவர் கருத்து.

தேயத்தொண்டர்கள் முதலிற் பிறமொழித் தடுப்பிற் கருத்தூன்றுக

இம் முதன்மையான செயலிற் கருத்தூன்றாமல் இருத்தலாகாது. பிறமொழிச் சேர்க்கைகளை இங்ஙனம் தக்கவாறு அளவுபடுத்தி அவற்றின் இன்றியமையாத நற்கருத்துகளை மட்டும் நமது தாய்மொழியிற் சேர்த்து நலஞ்செய்யுமாறு அரசினர் தக்கவாறு ஒரு 'தமிழ்க் கல்விக் கழகம்' உடனே அமைக்கவேண்டும். இதற்கான கட்டாய திட்டங்களை

முதலில் வகுக்கவேண்டும். ஏனைப் பொருந்தா வீண் முயற்சிகளால் நாடு மேற்கண்டவாறுதான் சீரழியும். மொழியின் தூய்மைக்கும், நாட்டுக்கும், பசிக்கும் உள்ள அணுக்கத் தொடர்பை அறியாமற்போனமையாலும், பிறமொழிகளைக் கண்டபடி வழங்கிவந்தமையாலும் நாவலந் தீவு எவ்வளவு ஒற்றுமை கெட்டுச் சிதறி வறுமையில் நெளிகின்றது, உன்னுமின்!

ஏனைய மொழிகளும் நமது முயற்சியும்

இனிப்போதாக் குறைக்குச் சென்ற சில நூற்றாண்டுகளாகத் துலுக்குமொழிப் படையெடுப்பும் ஆங்கிலமொழிப் படையெடுப்பும் வந்துசேர்ந்து இங்ஙனமே நமது செந்தமிழ் மொழியை நலிவுறச் செய்தன. 'தமிழ்மொழி மிகப் பழைய மொழியாயிற்றே; தமிழ் மக்களின் பழமையை நோக்குங்கால், ஏனையோர் பழமை நொடிப்பொழுதுக்கு முன் பெற்ற 'ரூட்டர்' தந்திச் செய்தியை ஒக்கும்' என்று முன்னிருந்த சென்னைக் கவர்னர் 'கிராண்ட்டஃப்' (Grant Duff) துரையும் சொல்லினரே! தமிழோடு தோன்றிய அயல்மொழிகளில் ஒன்றுதானும் இப்போது உலக வழக்கில் இல்லையே! தமிழ் மொழி மட்டும் இன்றுகாறும் இருவகை வழக்கிலும் உயிரோடு உலவி வருகின்றதே! சிறந்த இலக்கண இலக்கியங்கள் அமைந்ததாயிற்றே! உலகில் உள்ள, ஒன்று குறைய ஆயிரம் மொழிகளுக்கும் இல்லாத இயல் இசை நாடக வகுப்பும் பொருளிலக்கணச் சிறப்பும் பிறவுந் தனக்கு மட்டும் அமையப் பெற்ற நனி நாகரிக மொழியாயிற்றே! பேச, எழுத, எந்நாட்டவர்க்கும் எளிதாயிருக்கின்றதே; இதன்கண், மெல்லிய சிறு சிறு சொற்கள் அல்லவா முழுதுங் காணப்படுகின்றன! முப்பதே எழுத்துகளாலான அருமைமொழியன்றோ இது; எத்தனையோ படையெடுப்புகளினும் இன்னுந் தன் அழியா இளமையோடு திகழ்வதாயிற்றே; இதனை இதனியல்பில் அழகுறப் பாதுகாத்து நலப்படுத்தி நாமும் நலம்பெறுவோம்' என்னும் நல்லெண்ணம் அயல்மொழியாளர்களுக்கு இல்லை. அவர்மேற் குறை நினைத்தலிற் பயனில்லை. தமிழ் மக்களே தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். "தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்."

> "நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
> நிலைகலக்கிக் கீழ் இடுவானும்—நிலையினும்
> மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
> தலையாகச் செய்வானுந் தான்"

என்னும் அருமைத் திருமொழியை உன்னுமின்.

அளவு மீறிய நம்பிக்கையும் மேல் வீரமும்

'தமிழ்மொழி இயற்கை மொழி; அஃது ஒருகாலும் அழியாது; எது வந்தாலும் வரட்டும்; நமக்கொன்றுங் கவலையில்லை' என்று நம்மிற் சிலர் கூறிக்கொண்டு மேல்வீரங் காட்டுகின்றனர்! இத்தகைய அளவு மீறிய நம்பிக்கை முடிவில் இன்னலையே விளைக்கும் என்பது மேற்காட்டிய தமிழ் வரலாற்றால் நன்கு தெரிகின்றதன்றோ! தமிழ்மொழிக்கு இன்னும் என்ன அழிவு வேண்டும்? தமிழ்மொழி எங்கோ ஒரு மூலையில் எங்கோ அறியாமை மக்களிடம் மட்டுஞ் சிதைந்து சிதைந்து குற்றுயிருங் குலையுயிருமாய் வழங்கிக்கொண்டிருந்துவிட்டாற் போதுமா? அல்லது சிறிதும் அசையா நிலையிற் பேழையுட் கிடக்கும் பொற்கட்டிபோல் மிகப் பழைய நூல்களில் யார்க்கும் புலப்படாதவகையில் ஒதுங்கிக் கிடந்துவிட்டாற் போதுமா? நாற்புறமும் அடிக்குங் காற்றுக்கு அசையாதவண்ணம் மின்மினி போல் ஒரு சிறிய விளக்கொளி ஒரு குடத்துக்குட் பாதுகாப்பாய் ஒளிந்து கொண்டிருந்துவிட்டாற் போதுமா? இவ்வகையில் அழியாமலிருப்பதையா தமிழ் மக்கள் விரும்புகின்றனர்? அதனால் யாருக்கு என்ன பயன்? நாற்புறமும் ஓங்கி வீசுஞ் சுழற் காற்றுக்கும் நிலைதுளங்காத வகையில் அவ் விளக்கைத் தக்க பாதுகாப்புகளுடன் ஒளி பெருகிக் கலங்கரை விளக்கம்போல்வெளி நிறுத்தி ஆற்றலோடு ஒளிருமாறு அமைத்து எல்லார்க்கும் பயன்படும்படி செய்யவேண்டாமா? அது செய்வது விட்டுப் 'பிறமொழிச் சேர்க்கைகளால் தாய்மொழி அழியாது, அழியாது' என்று கூறிவிடுவதும் ஓர் ஆண்மையா? இம் மேல் வீர ஆரவாரத்தால் யாது பயன்?

தமிழ் நாட்டில் 'இந்தி' மொழிச் சேர்க்கை

இனி, இவ்வளவும் போதாதென்று தமிழ்மொழிக்கு நேர் ஒலி மாறுபாடும் நேர்க் கருத்து வேறுபாடும் உள்ள பொருட்கருக்களில்லாக் கொச்சைக் கலப்பு மொழியான 'இந்தி'மொழிச் சேர்க்கையும் வருமானால், அதுவுங் கட்டாய பாடமாக வந்து மூலை முடுக்குகளிலும் தெரு திட்டுகளிலும் பெண்கள் குழந்தைகள் முதற் பேச நேருமானால் ஐயோ, தமிழகமே! நின் நிலை என்னாவது? நினக்குத் தமிழகம், என்னும் பெயர்தானும் நிலைக்குமா? விளைவறியாத தமிழ் மக்களின் ஆரவாரத்தை என்னென்பேம்! தமிழ் எழுத்துக் களையும் ஒழித்து எல்லாம் நாகர எழுத்தாலேயே எழுத வேண்டுமென்று இந்தி மொழி யியக்கம் தீர்மானித் திருப்பதைத் தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்கின்றனரா? இதுவுங்

தமிழ்மொழிக்கு ஆக்கம் என்பர் போலும்! தன் ஒளி மழுங்கி அரசழிந்து நாடிழந்து கலைதொலைந்து பல சொற்களும் ஒழிந்து நிற்குந் தமிழ்மொழி இப்போது இந்திமொழிச் சேர்க்கையின் கட்டாயத்தாற் பேச்சு வழக்கும் ஒழிந்து அதனால் உலகவழக்கு அறுதலும், நாகர எழுத்துச் சேர்க்கையால் தன் எழுத்து வழக்கும் ஒழிந்து அதனால் நூல் வழக்கு அறுதலுந்தாமா, தமிழ் நாட்டுக்கு நன்மை செய்வேம் என்று எழுந்த தேயத் தொண்டர்களால் தமிழகம் பெற்ற பயன்! "தெருவெலாந் தமிழ் முழக்கம்" செய்விக்க ஏவிய நாட்டுப் பாடலின் பயன் இதுதானோ? இதற்குத் தானா இத்தனை ஆண்டுகளாகப் பெரு முயற்சி செய்து தேயத் தொண்டர்கள் அரசவை புகுந்தது! இதுவுந் தேயத் தொண்டுதானா? தமிழ் மொழியின் இருவகை வழக்கும் ஒழிந்து 'தமிழர்' என்னும் பெயரும் அழிந்துபோனபின், தமிழ் மக்கள் இன்னும் என்ன நன்மை பெறுவதற்காகத் தேயத்தொண்டு செய்கின்றார்கள், தெரியவில்லையே! வாளா உயிர் வாழ்ந்துகொண்டிருப்பதற்கா? நன்று, நாகரிகம்!

இந்திப் பயிற்சி

[பண்டித, ஞா. தேவநேயப்பாவாணன்]

சென்ற சில்லாண்டுகளாக இந்தியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டுமென்றும், தேசீயமொழி (அதாவது இந்து தேசப் பொதுமொழி) யாக்கவேண்டுமென்றும் வடநாட்டாருந் தென்னாட்டில் வடமொழிப் பற்றுள்ள ஒரு சாராரும் செய்து வரும் முயற்சி முதலாவது கவனிப்பிற் கிடமின்றி எள்ளி நகையாடப்பட்டதேனும், இதுபோது, தென்றல் முற்றிப் பெருங்காற்றாவது போலும், துரும்புபெருத்துத் தூணாதற்போலும், சிறுபொறி பெருந்தீ யானாற்போலும் மிக்குப் பெருகித் தமிழ் வளர்ச்சி தடைப்படுமாறு அத்துணை இந்திப் பயிற்சியைப் பன்னூறாண்டுகளாக வேற்றுக் கொள்கைகட் கடிமைப்பட்டுத் தாய்மொழிப்பற்று தினைத்தனையுமில்லாத தமிழ் மக்களிடை பரவியுள்ளது.

ஏனைய நாட்டாரெல்லாம் தத்தம் தாய்மொழியை எத்துணையோ வளம்படுத்தி வருகின்றனர். தமிழ் நாட்டாரோ 'எங்கெழிலென் ஞாயிறெமக்கு' என்றிருக்கின்றனர். அங்கிலத்திற்கும் பிறவற்றிற்கும் ஆயிரக்கணக்கான பொற்காசுகளை வலியக் கொட்டியளக்கும் தமிழரும் உளர். தமிழுக்குப்

பெரும் பொருள் வழங்குந் தமிழரோ தமிழுலானைத்தினும் ஒருவரிருவரே உள்ளனர். இந்துதேசத்தில் வடநாட்டார் மேனாட்டாரும் பிற்படும்படி தாய்மொழிப் பற்றில் தலைசிறந் துள்ளனர். தமிழ் மக்களோ மேலைக்கலைச் சுடர்கள் மிளிர்ந் தொளிரும் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் சுதந்தரவுணர்ச்சி யினும் தாய்மொழிப் பற்றினும் செத்துவிறைத்துச் சில்லிடத் துயிர்ப்பிக்கும் நிலையுமின்றி 'இராமன் ஆண்டாலென்ன, பாத னாண்டாலென்ன' என்று கண்மூடித்தனமாய்க் காலங் கழித்து வருகின்றனர்.

இந்திப்பயிற்சியைப் பாடசாலைகளில் வலிந்து புகுத்த விரும்புவார் தம் கொள்கைக்குத் தேசியப் போர்வை போர்ப் பினும் அதற்குக் காரணம் அவர்க்குள்ள ஆங்கிலப்பகையும் வடமொழி வேட்கையுமே என்பது கூர்ந்து நோக்குவார் யார்க்கும் புலனாகாமற் போகாது.

தமிழுணர்ச்சி சிறிதுமில்லாத தமிழ் மக்களிடை இந்திப் பயிற்சியைப் பரப்புவதினால், ஒருகால் தமிழ்க்குக் கேடாகப் பெரும்பான்மை (majority) மட்டும்பற்றி இந்திக்கட்டாயப் பயிற்சித்தீர்மானம் ஈடேறவுங் கூடும். இதனால் இந்திப்பயிற் சியே வேண்டாமென்பதில்லை, அதன் கட்டாயப் பயிற்சியே வேண்டாமென்கின்றோம். பயனில் முயற்சியும் தீமை விளைக் கும் தீர்மானமும் வேண்டாமென்பதை அழுக்காறுக் கொள் ளார் அறிவுடையார். தமிழால் வளர்ந்து தமிழால் வாழ்ந்து தமிழுக்கே கேடுசூழும் தனியடியாரும் தொகையடியாரும் மிக்கிருக்கின்ற இக்காலத்துக் காற்றுடன் நெருப்புக் கூடிப் பகை முயற்சி வலியுறுவண்ணம், தமிழன்பரும் தமிழை வளர்க்க மடிதற்றுத் தாழுந்துறும் கழகங்களும் தமிழைத் தழீஇக் காப்பாராக.

முதலாவது இந்திப்பயிற்சி வேண்டுவதா என்றும், பின்பு அது கட்டாயமாய் வேண்டுவதா என்றும் நடுவுநிலையாய் ஆராய்தல் வேண்டும்.

'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்' அன்றோ?

(1) கருத்தறிவிப்பு (2) கல்வியறிவு, (3) அலுவற்பேறு, (4) மொழி நூற்பயிற்சி, (5) விருப்பம் என்னும் ஐந்து காரணம் பற்றியே மக்களால் மொழி அல்லது மொழிகள் பயிலப்படு வனவாகும்.

ஒருவன் தனித்திருந்தால் ஒருமொழி வேண்டியதில்லை. பிறருடன் கலந்துறைந்தால் தன் கருத்தைப் பிறர்க்கறிவித் தற்கு ஒரு தாய்மொழியேனுந் தெரிந்திருத்தல்வேண்டும். தென்னாட்டார்க்குத் தமிழ் மலையாளம் முதலிய தாய்மொழி களிருத்தலால் தம் கருத்தை யறிவித்தற்குப் பிறிதோர்மொழி வேண்டுவா ரல்லர்.

கல்வி, அலுவல் என்ற இரண்டிற்கும் தமிழ் ஒருகால் முழுத்துணையாயிருந்து இதுபோது ஆங்கில ஆட்சியினாலும் விஞ்ஞானகலை வளர்ச்சியினாலும் குறைபாடுள்ளதாயிற்று. ஆயினும், இலக்கணம், இசை, நீதி, காவியம், இல்லறம், சித்தாந்தம், மருத்துவம் முதலிய பல துறைகளில் இன்னும் இம்மை மறுமைப் பயன்களுக் கேற்ற பெரும்புலமையளிப் பதும், தனியாகவும் ஆங்கில வாயிலாகவும் பல அலுவல்கட்கு ஆதாரமு மாகவுள்ளது. இலக்கணம் நீதி என்ற இரண்டை நோக்கின் உலக முழுவதிலும் ஒப்புயர்வற்றதாகவும் விளங்கு கின்றது!

மொழிநூற் பயிற்சிக்கு உலகத்திலுள்ள மொழிகளெல் லாம் ஒக்க வேண்டுவவேனும், தமிழானது தன் தொன்மை, முதன்மை, தாய்மை, இயற்கையொலி, சொல்வளம், இலக்கியச் சிறப்பு முதலியவற்றால் இந்தியின்மட்டு மல்ல ஆங்கிலத்தினும் பன்மடங்கு சிறந்ததாகும்.

இந்தி; கருத்தறிவிப்பு, கல்வி, அலுவல் என்னும் முக் காரணம் பற்றித் தென்னாட்டாருக்கு முற்றும் வேண்டுவ தன்று. மொழிநூலறிஞர் உலக முழுவதினும் விரல் வைத் தெண்ணுமாறு அத்துணைச் சிலராவர். விருப்பம் பற்றி இந்திகற்பவரும் சிலரே. ஆதலான் இவர் பொருட் டெல்லார்க்கும் பொதுவாய் இந்தியைக் கட்டாயப் பாட மாக்குவது கல்வி முறைக்கும் நியாயத்திற்கும் மாறாகும்.

வடநாட்டு மொழிகளெல்லாம் பெரும்பாலும் வட மொழியைத் தாயாகவுடையன. தென்னாட்டிலும் தமி ழொழிந்த பிறமொழிகள் வடமொழித்துணையைப் பெரிதும் வேண்டுவன. இந்தியும் மகமதியரிற் பெரும்பாலார் பேசும் இந்துஸ்தானியும் ஏறத்தாழ ஒன்றே. ஆதலான் வட மொழிக் கிளையாகிய இந்தியைப் பொதுமொழியாக்கத் தமிழரொழிந்த பிறரெல்லாம் இசையினும் இசையலாம். ஆனால் வங்காளத்தார் அதனை முற்றிலும் வெறுக்கின்றனர். பிறர் பெரும்பால ராதலின் அவர் கொள்கை வலியுறுவதாகக் கூற லாம். ஆனால், புது மொழிப்பயிற்சி எங்கும் அளவிற் பலரே னும் சிலரேனும் ஒவ்வொருவர்க்கும் தனித்தனி வருத்தம்

ஒன்றே. பலரானால் வருத்தங் கூடுவதும் சிலரானால் குறைவது மில்லையே. மேலும், தமிழ் நாடு சிறு நாடேனும் தலை நாடன்றோ?

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்க சிறு பிறை நுதலுந் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திரவிட நற்றிரு நாடும்"

என்று நம் சுந்தரம் பிள்ளையவர்கள் கூறியது சரித்திரமும் மொழிநூலும் நோக்கின் உயர்வு நவிற்சியன்றி உண்மை நவிற்சியேயன்றோ?

உலகத்தில் மக்கள் சராசரி அந்தக்கரணவலி இரு மொழியே பயில உதவும். 'ஆயிரம் பாட்டிற்கு அடி தெரியும்' என்றாற் போலும் 'Jack of all trades, master of none' என்றாற் போலும் நுனிப்புல் மேய்ச்சலாய் அரை குறையாய்க் கற்பதானால் பலரும் பன்மொழிகள் பயிலலாம். ஆனால், அற்ப அறிவு அல்லற்கிடம் ('Little knowledge is a dangerous thing') என்றபடி அது துன்பந்தருவதேயன்றி இன்பந்தருவதன்று. ஒருவருடைய காரியசித்தி பெரிதும் அவருடைய சொல்வன்மையைப் பொறுத்ததாகும். ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்பர்.

"ஆக்கமுங் கேடும் அதனால் வருவதாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு"

என்றார் திருவள்ளுவர்.

ஒருவர் சாதுரியமாயும் மாதுர்யமாயும் பேசினால் கருதிய காரியங் கைகூடும்; பகைவரும் வயப்படுவர்.

"திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளும் அதனினூங் கில்"

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்றார் திருவள்ளுவர்.

ஒருவர்கூற்று; திட்டம் (Precision), இனிமை, தூய்மை (Purity), பொருத்தம் (Propriety) விரைவு முதலிய குணங்களைத் தழுவிச் சிறந்த சொற்களைக் கொண்டுள்ளதாயின், மிக வலியுறுகின்றது. ஒருவர் பன்மொழி வல்லுநரேனும் அரை குறையாய்க் கற்ற ஒரு புதுமொழியிற் பிழைபடப் பேசுவராயின் அவர் இகழப்படுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

இளமை முதல் இங்கிலீஷ் பயின்று இங்கிலீஷ் அடிக்கடி பேசுகிற பெரிய பட்டதாரிகள்கூடச் சில வேளைகளிற் பிழை விடுகின்றனர். இங்கிலீஷ் நன்ருய்ப் பயிலின் தமிழிற்கும், தமிழ் நன்ருய்ப் பயிலின் இங்கிலீஷிற்கும் போதிய காலமில்லாது போகின்றது. இவ்விருமொழியும் வல்லார் தமிழ் நாட்டிலும் மிகமிகச் சிலரே. இங்ஙனமிருக்க இன்னொரு மொழியைக் கூட்டின். ஒருவன் உத்தியோக (25) வயதிற்கு முன் மும்மொழி பயில எங்ஙனமுடியும்? அந்தக்கரணவலி (உணர்ச்சிவலி, நினைவாற்றல்) யிருப்பினும் காலங்காணுதே. அரைகுறையாய் மும்மொழி பயில்வதினும் ஒரு சிறிதேனும் நிறைவாக இருமொழி பயிறல் ஏற்றமன்றே! பெஸ்கி (வீரமா முனிவர்), மாக்ஸ்முல்லர், போப், கால்டுவெல் முதலியோர் பன்மொழி பயின்ருரேயெனின், அவர்க்கிருந்த அந்தக்கரணவலி அனைவர்க்கு மில்லையே!

இங்கிலீஷிற்குப் பதிலாக இந்தியை வைப்போமெனின் அஃது எவ்வதும் இயல்வதா? இங்கிலீஷானது இங்கிலீஷ் காரரின் உயர்வினல் உலகப் பொதுமொழியா யன்ருே ஆகி வருகின்றது! உலகில் ¼ பங்கு ஆங்கில வயம். சர்வதேச சங்கத்தில் ஆங்கிலத் தலைமை உலகவாணிகத்திற்கு உயிர்நாடிகளாகவுள்ள வழிகளும் துறைகளும் இங்கிலீஷ்காரருடையன. இங்கிலாந்து போன்றே ஏற்றமடைந்துள்ள ப்ராஞ்சு, ஜெர்மெனி முதலிய பிற நாடுகளிலும் உண்டிச்சாலை (Hotel) நூல் நிலையம் முதலிய பொதுவகங்களில் ஆங்கில மறிந்தவரே அலுவல் பெறுகின்றனர் என்று கூறுகின்றனர். ஐம்பெருங் கண்டங்களுள் ஒன்ருகிய அமெரிக்காவிற் பெரும்பாலர் தாய்மொழி ஆங்கிலமே. ஆங்கிலரும் அமெரிக்கரும் புது திருமாண விஞ்ஞான கலையில் தலைசிறந்துள்ளனர். இது காலை இந்தியர்க்குத் தெரியாத விஞ்ஞான கலைகளெல்லாம் இங்கிலீஷில் எழுதப்பட்டுள. 'ஆடிக்காற்றில் அம்மி பறக்கையில் ஆலிலை எந்த மூலை' என்றபடி எத்துணையோ இலக்கியப் பெருமையும் மொழித் தலைமையுமுள்ள வடமொழி தென் மொழி யென்னும் இருபேரிந்தியத் தாய்மொழிகளே விஞ்ஞானகலை நூலின்மையால் இங்கிலீஷிற்கு எதிர்நில்லாவெனின், இனி ஒரு பெருமையுமில்லாத இந்தி எதிர்நிற்குமா? சூரியனுக்குமுன் மின்மினியும், யானைக்கு முன் பூனையும் போல்வதே யன்ருே?

இந்தியினின்றும் தமிழுக்கு வந்ததெல்லாம் நியாயப் பிரகாசம் போன்ற இரண்டொரு நூன் மொழிபெயர்ப்பே. தருக்கமுறை யிரண்டனுட் சிறந்த வைசேடிகமுறை அகத்தி

யர் காலத்தே தமிழிலிருந்ததாகத் தெரிகின்றது. நியாயப் பிரகாசம் போன்ற இரண்டொரு வசன நூல்களை நீக்கு வதினால் தமிழிலக்கியத்திற்கு யாதொரு குறைவுமின்று. தமிழிலக்கியம் என்று சொல்லப் படுவதெல்லாம் பண்டைச் சங்கநூல்களும் சங்கமருவிய நூல்களுமே. இன்றும் தமி ழறிஞரிற் பலர் இந்திநூன் மொழிபெயர்ப்புக்களையே அறிந் திலர்.

இந்தியில் மேலைக்கலைகளையெல்லாம் மொழிபெயர்த்துக் கொள்வமெனின், அஃது எளிதில் இயல்வதா? எல்லாக்கலை கட்கும் ஏற்ற சொற்கள் இந்தியிலுண்டா? வடமொழித் துணைகொண்டு மொழிபெயர்த்துவிடினும், இந்திப்பயிற்சி மேனாட்டிற்குப் பயன்படுமா? இந்தியிற் பயின்று பின்பு ஆங்கிலத்திற் பயில்வோமெனின் ஒருவேலைக் கிருவேலையா? 'ஈனனுக் கிருசெலவு' என்றன்றோ ஆகிவிடும்! ஆங்கிலங் கற்றால் உலகனைத்தும் செல்லும். இந்தியோ இந்தியாவிற்குள் தான் செல்லும். மேலும், அவ்வக்கலை வல்லாரால் எழுதப் பட்ட மூலநூல்களைக் கற்க இடமிருக்கும்போது அவற்றை ஏன் மொழிபெயர்த்துக் கற்கவேண்டும்? ஆங்கிலத்திற் புதிதுபுதிதாய் நூல்கள் தோன்றிக் கொண்டே யிருக்கும். அவற்றை யெல்லாம் மொழிபெயர்ப்பதாயின் ஒரு மொழி பெயர்ப்பு இலாகாவே நிலையாக வேண்டுமன்றோ! எத்துணைக் காலமும் பொருளும் முயற்சியும் வீணும்! இங்கிலீஷை யாம் உயர்த்துக் கூறுவதால் இங்கிலீஷ்காரரின் அரசாட் சியை விரும்பிக் கூறுவதாக எண்ணற்க. இங்கிலீஷ் அர சாட்சி ஒழியலாம். இங்கிலீஷ்காரரும் நீங்கலாம்; ஆனால் இங்கிலீஷ் நீங்குவதற்கோ எட்டுணையும் இடமின்று. ஒவ் வொரு மொழியிலுள்ள இலக்கியமும் அவ்வம்மொழியைப் பேசுவாரின் கருத்துக்களைத் தழுவியதாகும். இங்கிலீஷ்கார ரிடம் சில தீக்குணங்களிருப்பினும் நாம் பின்பற்றக்கூடிய பல நற்குணங்களுள வென்பதை நடுவுநிலையுள்ள எவரும் மறுக்கொணாது. ஆராய்ச்சி, நடுவுநிலை, சமுதாய நிலை முத லியவற்றில் அவர் தலைசிறந்தவராவர். Thurston தர்ஸ்டன் எழுதிய தென்னிந்திய குல மரபு நூலும், கால்டுவேல் எழுதிய திராவிட ஒப்பியலிலக்கணமும் அவர் ஆராய்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாம். ஆங்கிலர் நமது நாட்டிற்கு வந்து நம்மைப் பற்றியே நமக்கு அறிவிப்பது நமக்குப் பெரிதும் நாணைத் தருகின்றது. அங்ஙனம் அறிவித்தும் அவற்றை அறிந்தவர் ஆயிரத்திற் கொருவரே ஆவர். உண்மையான சரித்திரமும் மொழி நூலும் ஆங்கிலரே நமக்குணர்த்தினர். சுதந்தரம், சமத்துவம், சோதரத்துவம் முதலியவை பற்றிய பரந்த நோக்

கும் திருந்தின வுணர்ச்சியும் ஆங்கில நூல்களாலேயே உண்டாகும். இந்தியருள் சீர்திருத்தம் விரும்புவாரெல்லாம் ஆங்கில மறிந்தவராயும் விரும்பாதவரெல்லாம் பெரும்பாலும் அறியாதவராயு மிருத்தல் காண்க. இந்தி நூல்களோ குலப் பிரிவினையும் பிறப்புப்பற்றிய ஏற்றிழிபுங்கூறி மேன்மேலும் அடிமைத்தனத்திற்கும் அறியாமைக்கும் உள்ளாக்கித் தேசக் கேட்டிற்கே நேர்வழி காட்டுவவாகும். தட்பவெப்ப நிலை, தொழில், ஒழுக்கம், மனிதன் கட்டுப்பாடு முதலியவை பற்றி இடையில் ஏற்பட்ட குலங்கள் படைப்புக் காலந்தொட்டே யிருப்பனவாயின், மேனாடுகளில் ஏன் அவை யில்லை? பிரமாவுக்கு இந்தியாவிற்குள்தான் அதிகாரமோ? தாழ்ந்தோர் சிறிதும் தலையெடா வண்ணம் அவர்களை அமிழ்த்திக் கொல்லுகின்ற அநியாயக் கொள்கைகளும், சரித்திரப்புளுகுகளும், குலப்புரட்டுகளும், மந்திரதந்திர ஏமாற்றங்களும் மலிந்துள்ள இதிகாச புராணக் குப்பைகளே இந்தியிலுள்ளன. ஆகையால் இதுபோது இந்தியப் பொதுமொழியாயும் உலகப்பொது மொழியாயும் இருக்கின்ற ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை ஏற்படுத்தல் கோளரியை நீக்கிவிட்டுக் குள்ளநரியை இருத்துவதையே ஒக்கும்.

இந்தி ஆணவத் தன்மை வாய்ந்து செவிக்கின்பம் பயப்பதென்று சிலர் கூறுகின்றனர். அஃது உண்மையே. ஆனால், அதன் ஆணவத்தன்மை எளிதாய் உச்சரிக்க வொண்ணாத செயற்கை யொலிகளாலாகி முயற்சி வருத்தத்தை யுண்டு பண்ணுவதால் அது குற்றமாகவு முள்ளது. இனி இனிமையோ பலவகைப்படும். மா, பலா, வாழை முதலிய பல கனிகளின் சுவையும் இனிமையே யாயினும் ஒவ்வொன்றன் இனிமையும் வெவ்வேறு வகைப்படும். அதுபோல மொழிகளின் இனிமையும் வெவ்வேறு வகைப்படும். இலத்தீன் இனிமை வேறு; இந்தியினிமை வேறு; தமிழினிமை வேறு, தமிழினிமையைத் திருக்குறள், திருக்கோவை, சிலப்பதிகாரம். மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் முதலிய நூல்களிற் கண்டுகொள்க. ஆண்டும் செவிப்புலன் நுணுகியார்க்கே சிறந்து புலனும். தமிழின்பம் இயற்கையும் இந்தியின்பம் செயற்கையுமாகும்.

இந்திப் பயிற்சியைப் பரப்புவார் ஆங்காங்கு எளிய கட்டணப் பாடசாலைகளை ஏற்படுத்தித் தற்கல்விக் கேற்ற பல இந்தி நூல்களையும் உரையுடன் பல மொழிகளில் வெளியிட்டு எளிய விலைக்கு விற்று வருகின்றனர். இந்திப் பற்றுள்ள தேசியத் தலைவர்களும் சுயராஜ்யம் விரைந்து

வருமென்றும், வந்தவுடன் இந்தியே தேச மொழியென்றும், அதற்கு முன்னரே தாங்கள் இனிப் பேசுவதெல்லாம் இந்தியேயென்றும், இந்தியறியாதார் தங்கள் சொற்பொழிவு களைக் கேட்டுணர முடியாதென்றும் ஆங்காங்கு நாக் கடிப்பாக வாய்ப்பறையறைகின்றனர். இதனை நம்பிப் பலர் இந்தி பயில்கின்றனர். வடமொழி யிறந்து பட்டதே என்று வயிறெரிகின்ற வடமொழி வெறியார்க்கு வட மொழிக் கிளையான இந்திப்பயிற்சி கோடை மழை போலக் குளிர்ச்சி தருகின்றது. இந்திவாயிலாய் வட மொழியை உயிர்ப்பித்து மீட்டும் வளர்க்கலாமென்று அவர் பகற்கனுக் காண்கின்றனர்.

இந்திப் பயிற்சியால் தேசீய ஒற்றுமை உண்டாகு மென்று சில தேசீயத் தொண்டர் ஏமாற்றுகின்றனர். சிலர் ஏமாறுகின்றனர். தேசீய ஒற்றுமை கருதி இந்தி பயில்வது அவலை நினைத்து உரலை இடிப்பதாகின்றது. இந்து தேசத்தி லுள்ள பிரிவினை குலமத வேறுபாட்டானும் பிறப்புப் பற்றிக் கற்பிக்கும் ஏற்றிழிபானுமன்றித் தேசப் பொது மொழியின்மையானன்று. இந்திப் பயிற்சி ஒரு வேளை இன்றுள்ள பிரிவினையைப் பெருக்குமே யன்றிக் குறைக்கா தென்பது ஒருதலை.

இனி இந்தியால் தமிழ் வளர்ச்சியுறும் என்று ஏமாற்று வாரும் உளர். ஒரு கிளைமொழி அல்லது சார்பு மொழி யாயின் பிற மொழிச் சார்பால் வளரும். ஒரு தனித் தாய்மொழியோ பிற மொழிச் சார்பால் தூய்மையிழக்கும். ஆங்கிலம் ஒரு சார்பு மொழியாயும் உலகப் பொதுமொழி யாயு மிருத்தலின், அது பல மொழிகளினுங் கடன் கொள்வது இன்றியமையாததாகின்றது. ஆங்கிலத்தின் பெருமைக்குக் காரணம் ஆங்கிலரின் ஆட்சி, வாணிகம் புது நிருமாணவன்மை முதலியவையேயன்றி அயன் மொழியிற் கடன் கோடலன்று. தமிழ், தெலுங்கு முதலிய இந்திய மொழிகள் கடன் கொள்வதினால் ஆங்கிலப் பெருமை யடைய முடியுமா? இக் காலத்தில் ஒரு வகுப்பார் விஞ்ஞானகலைத் தேர்ச்சியும் புது நிருமாணவன்மையும் பெற்றாலொழிய அவர் மொழி எங்ஙனம் பெருமை பெறக் கூடும்? புது நிருமாணவன்மையிற் சிறந்த பல வகுப்பார் மொழிகளுள்ளும் ஆங்கிலம் தலை சிறந்து விளங்குகின்றதே! தெலுங்கு மலையாளம் முதலிய மொழிகள் வெறுமையாய் வழங்குவதற்கே பிறமொழித் துணையை வேண்டுகின்றன. சில மொழிகள் மொழியளவாய்த் தமித்து வழங்கினும் கலை வளர்ச்சிக்குப் பிறமொழித்துணை வேண்டுவ வாகின்றன. தமிழோ எதற்கும் பிற மொழித்துணை வேண்டாதவாறு

அத்துணைச் சொல்வளமுடைத்தாயுள்ளது. ஆயினும், ஆங்கிலத்திற்குரிய பெருமை அதற்கில்லையே! இதுவரையில்லாத பெருமையா இனிக் கடன்கோடலால் தமிழுக்கு வந்துவிடும்? இக்கால உயர்தரக் கல்வியெல்லாம் விஞ்ஞானகலையாகவன்றோ வடிவு கொண்டுள்ளது? விஞ்ஞானகலைகளையெல்லாம் மொழி பெயர்த்துக் கொள்வமெனின், எந்த மொழியில்தான் (பிற மொழித்துணை கொண்டேனும்) அவற்றை மொழிபெயர்க்க முடியாது? மொழிபெயர்த்தவளவானே எம்மொழிக்கும் ஏற்றம் வந்துவிடுமா? ஆகையால், தமிழ் பெருமை பெறாததற்குக் காரணம் அதில் விஞ்ஞானகலை முதனூலின்மையேயன்றி அதன் கடன்கொள்ளாமையன்று.

பாடசாலைகளிலுங் கல்லூரிகளிலும் மாணவர் பாடங்களுள் அயன்மொழி ஆங்கிலம் ஒன்றேயாயிருக்கும்போதே தமிழ்ப் பயிற்சி மிகக் குன்றியுளது. இனி இந்தியும் ஒரு பாடமாயின் தமிழ்ப்பயிற்சி மிகமிகக் குன்றும் என்பதற்கு ஐயமின்று. மேலும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள வடமொழிப் பற்றினரெல்லாம் இந்தியைத் தாய்மொழியெனக் கூறுவர். ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் இறந்துபட்ட வடமொழியே இன்றும் தம் தாய்மொழியெனக் கூசாது கூறுபவர், இதுபோது வழக்கிலுள்ள இந்தியைக் கூறாது விடுவரா; விடாரன்றே! ஆகையால், இப்போதுள்ள பிரிவினை இன்னும் வைரங் கொள்ளுமன்றோ?

இனி! இந்தி அயலார் முக்கியமாய்த் தமிழர் எளிதிற் பயிலுமாறு அத்துணை இலக்கண நேர்மையுடையதுமன்று. அதன்மயக்குகளிற் சிலவாவன :—

1. பால்கள் தமிழிற்போற் பொருள்பற்றி யில்லாமல் வடமொழியிற்போல் ஈறு பற்றியே யிருக்கும். பெரும்பாலும் அ ஆ ஈற்ற ஆண்பாலென்றும், இ ஈ ஈற்ற பெண்பாலென்றுங் கூறப்படும். ஆயினும், हवा (காற்று), दवा (மருந்து), जुकाम (சளி), इच्छा (விருப்பம்), दुनियां (உலகம்), जायदाद (சொத்து), तकलिफ़ (கஷ்டம்), मौत (மரணம்), सभा (சபை), दावता (விருந்து), बात (வார்த்தை), तवियता (தேகஸ்திதி), खवर (சமாச்சாரம்), पूंछ (வால்), आँख (கண்) முதலிய எத்துணையோ சொற்கள் அ ஆ ஈற்றவேனும் பெண்பாலே. இ ஈ ஈற்ற ஆண்பாற் சொற்கள் சிலவே.

இந்தியிற் சில விடத்துச் சொற்களினீற்றிலுள்ள அகரம் ஒலிப்பதில்லை. ஆண்டு ஒலி பற்றி மெய்யீறாயினும் எழுத்துப் பற்றி உயிரீறாகவே கொள்ளப்படும்.

ஆங்கிலத்தில் உச்சரிப் பொழுங்கின்மைபோல் இந்தியிற் பாலொழுங்கின்மையால் பல சொற்கட்குத் தனித்தனி பாலறிய வேண்டுவதாகின்றது.

2. பெயரெச்சமும் வினையெச்சமும் பால் எண் காட்டும்.

உ-ம். अच्छा लडका (அச்சா லட்கா) நல்ல பையன்.
अच्छी लडकी (அச்சீ லட்கீ) நல்ல பெண் பிள்ளை.
अच्छे लडके (அச்சே லட்கே) நல்ல பையன்கள்.
} பெயரெச்சம்.

गया है (கயா ஹை) போயிருக்கிறான்.
गयी है (கயீ ஹை) போயிருக்கிறாள்.
गये हैं (கயே ஹைன்) போயிருக்கிறார்கள்.
} வினையெச்சம்.

3. वह என்னுஞ் சொல் ஒன்றே அவன், அவள், அது என்னும் மூன்று ஒருமைப்பாற் சுட்டுகளையும், वे என்னுஞ் சொல் ஒன்றே அவர்கள் அவைகள் என்னும் இரு பன்மைப் பாற் சுட்டுகளையுங் குறிக்கும்.

4. இறந்த கால வினைகளுள்,

செயப்படுபொருள் குன்றிய வினையானல் தமிழிற் போல் பால் எண்களில் எழுவாயைத் தழுவும்.

செயப்படுபொருள் குன்றாவினையானல் எழுவாயைத் தழுவாது செயப்படுபொருளைத் தழுவும். எழுவாய் ने விகுதி பெறும்.

உ-ம். मने एक घोडा देखा (மைனே ஏக் கோடா தேக்கா) நான் ஓர் ஆண் குதிரையைப் பார்த்தேன்.

मैने दस घोडे देखे (மைனே தஸ் கோடே தேக்கேன்) நான் பத்து ஆண் குதிரைகளைப் பார்த்தேன்.

இனி, செயப்படுபொருள் தொக்கு நின்றாலும், की என்ற வேற்றுமையுருபைக் கொண்டிருந்தாலும், இறந்தகால வினை (எழுவாய் எந்தப் பாலிடமானாலும்) எப்போதும் ஆண்பாற் படர்க்கை ஒருமையாகவே யிருக்கும்.

உ-ம். सीताने देखा (ஸீத்தானே தேக்கா) சீதை பார்த்தாள்.

हमने उस श्री को देका (ஹம்னே உஸ் ஸ்த்ரீகோ தேக்கா) நாங்கள் அப்பெண்ணைப் பார்த்தோம்.

5. ஆறும் வேற்றுமை யுருபாகிய का என்பது பின்னால் வரும் பெயர்ச்சொல் ஆண்பாலாயிருந்து வேற்றுமையுருபு கொண்டிருந்தால் के என மாறும்.

உ-ம். राम के घर मे

இம்மாதிரியே பின்னால் வேற்றுமையுருபுடன் வரும் ஆண்பாற் பெயர்ச்சொல்லின் ஈற்றிலுள்ள आ வும், அப் பெயரைத் தழுவும் உரிச்சொல்லின் ஈற்றிலுள்ள आ வும் ए என மாறும்.

உ-ம். राम के बडे घोडे पर

இன்னுஞ் சில மயக்கங்களுமுள.

இதுகாறுங் கூறியவற்றைத் தமிழ்மக்கள் செவ்வனே ஆராய்ந்து, எரிமடுப்பினும் இடம்பெயராத மாசுணம் போல் மந்தமாயிராது இனிமேலாயினும் புத்துயிர்பெற்றெழுந்து தம் தாய்மொழிக்குச் செய்யவேண்டிய பணியை யறிந்து கடைப் பிடிப்பாராக.

குறுந்தொகை

[வித்வான் இரா. சிவ. சாம்பசிவ சர்மா எழுதியது.]

பாலை

பிரிந்துசென்ற தலைவனது பிரிவு நீட்டித்தவழி ஆற்றாது வருந்திய தலைவியைக் கண்டு தோழி கூறியது.

பூங்கணுத்திரையார் பாடியது

48. தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதற் பசலை நீங்கும் வண்ணம்
நசையாகு பண்பி னொருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

என்பது பகற் குறிக்கட் காணும் பொழுதினுங் காணாப்பொழுது பெரிதாகலின் வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.

பதவுரை:—

காலை வருந்தும் கையாறு—காலைப்பொழுதிலே வருந்திச் செயலற்றிருப்பதை, ஓம்பு என—நீக்குவாயாக என்று, ஓரை ஆயம் கூறக் கேட்டும்—தனது உடன் விளையாட்டுத் தோழிகள் கூறுவதைக் கேட்டும், இன்ன பண்பின்—இந்தத் தன்மையிலே, இனை பெரிது உழக்கும்—வருந்தி மிகவும் துயருறும், நன்னுதல்—நல்ல நெற்றியையுடைய தலைவி யினது, பசலை நீங்கும் வண்ணம்—பசலையானது நீங்கும்படி யாக, நசை ஆகு பண்பின் ஒரு சொல்—அன்போடு விருப்பத்தைத் தரும் தன்மைவாய்ந்த ஒரு சொல்லை, தாதிற் செய்த தண் பனிப்பாவை—தாதால் செய்யப்பட்டாற் போன்ற மிக்க குளிர்ச்சிபொருந்திய குராவின் மலராகிய பாவை, காதலர் தமக்கு—நம்மாட்டு அன்பையுடைய தலைவருக்கு, இசையாது கொல்லோ—சொல்லமாட்டாதோ?

தாது—மகரந்தப்பொடி, தண்பனி—ஒரு பொருட்பன்மொழி. பாவை—குராவின்மலர்; அது பாவை வடிவமுடையது. கையாறு—செயலற்றிருத்தல்; ஓம்பு—நீக்கு ஓரை ஆயம்—விளையாட்டுத் தோழியர்களின் கூட்டம். இனை—வருத்தம். நன்னுதல்—பண்புத் தொகையன்மொழி. பசலை—குறுந். 13-ம் பாட்டின் குறிப்புக் காண்க. நசை—விருப்பம், அன்பு. ஒரு சொல் என்றது "தலைவனை விரைந்து சென்று தலைவியை வரைந்து கொள்ளுமாறு கூறுதல்". காதலர் தமக்கு—உருபு மயக்கம்; கொல், ஓ—என்பன ஐயப் பொருளன; ஏ—அசையுமாம்.

மேற்கோள் விளக்கம்:—

1. 'ஓரை ஆயம்'—(1) 'ஓரையாயத் தொண்டொடி மகளிர்'—
2. "விளையா டாயமொ டோரை யாடாது" (புறம். 176-1)
—(நற். 68)
3. 'ஓரைமகளிர்' —(குறுந். 316, 401.)
"குராமலரைப் பாவை யெனல்"—
1. "நறம்பூங் குரவம் பயந்த செய்யாப் பாவை"
—(ஐங். 344)
2. "வழிகாட் டிடாய் பல பாவைக ளோடிங்கு வாழ்குரவே"
—(துறைசைக்கோவை. 363)

3. "குராவளித்திடு பாவை" —(காஞ்சி—திருநாட்டு. 52)
4. "குராப்பாவை கண்டவர்" —(காஞ்சி—திருநாட்டு. 53)
5. "தான்தாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய் நீ பாவை யிருங்குரவே" —(திணைமாலை. 65)
6. 'ஆடவ ரீர்குரவம் பாவைகா ளென்றழைத்து"
—(துறைசைக் கோவை. 356)

'நன்னுதற் பசலை'

1. "ஒருநாணீ ரொளிக்குங்கால் ஒளிசிறந்தொரு நாணீர்
பாராட்டாக் காற்பசக்கு நுதலெனவு முளதன்றோ"
—(கலி. பாலை. 24-2·12)
2. "பிறையேர் சுடர் நுதற் பசலை" —(கலி. 125-23)
3. "இல்லா கின்றவளாய் நுதற்பசப்பே" —(கலி. 144-73)
4. "சுறுநுதல், பீரல ரணிகொண்டு" —(53. 15)
5. "பிரிந்தவர் நுதல் போலப் பீரவாய்"
"பீரல ரணிகொண்ட பிறைநுதல்"
—(கலி. 31. 4; 124. 8)
6. "மையில் வாண்முகம் பசப்பூரும்மே"
—கலி 7. 8
7. "பழிதபு வாண்முகம் பசப்பூர" —கலி. 100. 18
8. "திங்கதிர் மதியேய்க்கும் திருமுகம் அம்முகம் பாம்புசேர்
மதிபோலப் பசப்பூர்ந்து" —கலி. 15-17
9. "நுதலூரும் பசப்பாயி னுணங்கிறையளியென்னோ"
—கலி 28-15

"நன்னுதற் பசலை நீங்கும் வண்ணம்"
"நன்னுதற் பசலை நீங்கவன்ன"—பிரதிபேதம்.

"குரவுப் பாவை"

1. "பன்னெடுங் குரவளித்திடு பாவைகள் பயிலும்"
2. "கோட்ட முன்றினிலாடுபெ குரவருள் பாவை"
—(சிதம்பரசபாநாத புராணம்—நாட்டு. 69-70)
3. "கூனல் வானரங்கள் குரவருள் பாவை" —நாட்டு. 162

"இடிதுடிக் கம்பலையு மின்னுதல் வோசையு மிசையினாராக்
கடுவினை யாளர் கடத்திடைப் பைங்குரவே கவன்று நின்றாய்
கொடுவினை மேற்செய்த வெம்மேபோ னீயும்
படுசினைப் பாவை பறித்துக்கோட் பட்டாயோ பையக்கூறாய்"
(தோல். அகத். மேற்கோள். பக். 115-6.)

மெய்ப்பாடு—இளிவரல்.

பயன்—ஆற்றுவித்தல்.

நெய்தல்

தலைவன், பரத்தையிடத்துப் பிரிந்துவந்து தலைமகளையடைந்து, பிரிவாற்றாமை நீங்கப்பெற்ற 'தலைவியின் ஊடலைத் தணிவித்துப் பள்ளியிடத்து அவளைக் கூடும்பொழுது தலைவி, தலைமகனுக்குக் கூறியது.

அம்மூவனார் பாடியது

49. அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

என்பது தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்த வழி ஆற்றாளாகிய தலைமகள் அவனைக் கண்டவழி அவ்வாற்றாமை நீங்குமன்றே; நீங்கிய வழிப் பள்ளியிடத்தணுகிய தலைமகற்குச் சொல்லியது.

பதவுரை:—

அணில்பல் அன்ன—அணிலின் பல்லைப்போன்ற, கொங்கு முதிர்—வாசனைமிகுந்த, முண்டகத்து—கழிமுள்ளி மலர்களையுடைய, மணிக்கேழ் அன்ன—நீலமணியின் நிறத்தையொத்த, மாநீர்ச் சேர்ப்ப—பெரிய கரிய நீரையுடைய கடலைச் சார்ந்த துறைவனே, இம்மை மாறி மறுமை ஆயினும்—இப் பிறப்பு நீங்கி மறுபிறப்பினை அடைந்தாலும், நீயாகியர் எம் கணவனை—நீயே என் கணவனாகுக; யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே—நானே உன் மனத்திற்குப் பொருந்திய மனைவியாகுக.

கொங்கு—தேன், வாசனை. முண்டகம்—கடல் முள்ளி, தாழையுமாம்; கடலோரத்தில் காணும் பூஞ்செடி. கேழ்—நிறம். மாநீர்—கடல். மா—கருமை "மாமிடற் றம்பலவன்" (திருக்கோவை 102). சேர்ப்பு—கடற்கரை. இம்மை—இப் பிறப்பு. கணவனை—ஐ—சாரியை; மறுமை—மறு பிறப்பு. ஆகியர்—இயர்- வியங்கோள் வினைமுற்று விகுதி. "மறு பிறப்பில் நீ என் கணவனாகுக; நான் உன் மனதிற்கிசைந்த மனைவியாகுக. இப்பிறவியில் இன்புற்று வாழும் பேற்றினைப் பெறவில்லை எனினும் வருபிறப் பிறப்பிலேனும் பெறுவேனாகுக" என்று தலைவி நொந்து கூறியதாம்.

மேற்கோள் விளக்கம்:—

"காதல் கொண்ட மான்போலும் நோக்கினையுடைய மடந்தை தனக்கு இம்மைமறுமைக்குத் துணையாகக் காதலித்தலைக் கொள்கின்ற கலியாண நாளிலே"

—(கலி 69. நச்சினார்க்கினியருரை.)

முண்டகம்:—

"கருமையை யுடைத்தாகிய மலரையுடை நீர்முள்ளி" (நச்சினார்க்கியர் கலி. 133). இது நீர்ப்பூ. இப்பூவின் காம்பினடியிற் சிறிது தேனுண்டு. முள்ளிச்செடி என்னும் கத்தரிவகையுள் ஒன்றன்று. இது ஆதலின் இதனைக் கழிமுள்ளி என்பர்; கடன்முள்ளி என்றும் வழங்கப்படும். முள்ளையுடையது இது. இதனை,

1. "முள்ளிக், கொடுங்கான் மாமலர்"—(பெரும்பாண். 215-6

2. "கூர்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்" —(குறுந். 51)

3. "கூர்முண் முள்ளிக்குவி குலைக்கழன்ற, மீன்முள்ளன்ன வெண்கால் மாமலர்" —(அகம். 26)

4. "முண்டகங் கதிர்மண கழா அலவும்" —(சிறுபாண். 184)

5. "மணிப்பூ முண்டகத்து" —(மதுரைக். 96)

6. "மணிமருள் மலரமுள்ளி" —(அகம். 236)
இப்பூவை நெய்தனில மகளிர் அணிவதுண்டு.

7. "அணிமலர் முண்டகத்தாய் பூங்கோதை
மணிமருள் ஐம்பால் வண்படத் தைஇ" —(நற். 245)

8. 'முண்டகக்கோதை நனையத்
தெண்டிரைப் பௌவம் பாய்ந்து நின்றோளே" (—ஐங். 121)

9. "முண்டகக்கோதை யொண்டொடி மகளிர்" —(புறம். 24)

10. "காமக்கிழத்தி நலம்பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்"—என்பதில்

"அணிற்பல்லன்ன.........நேர்பவளே"—என்பது

"தலைமகள் நலம் பாராட்டிய வழிக்கூறப் பெற்றது"
—(தொல். கற்பு. இளம்பூ. பக். 245)

அகப்பட்டாரை வருத்துவதும் அழிப்பதுமான பெற்றிவாய்ந்த முட்களையுடைய முண்டகத்தையும் கடலையும் உடையதுறைவன் என்றமையால் நின்னையடைந்த மெல்லியரை வருத்தியும் அழித்தும்விடும் இயல்பினை என்று தலைவனைச் சுட்டியது குறிப்பிற் பெறப்படுகின்றது.

மெய்ப்பாடு—அழுகை.

பயன்—ஊடனீங்குதல்.

வரலாற்றுப் பகுதி: History & Biography

திருவள்ளுவர்

[துடிசைகிழார் அ. சிதம்பரனுர் இயற்றியது]

[சிலம்பு 15 பரல் 11-பக்கம் 537-ல் திருவள்ளுவர் பிறந்த ஊர் மதுரைதான் என்பதற்கு உள்ள ஆதாரங்களைச் சற்று விரிவாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் இஃது எழுதலாயிற்று.]

நல்கூர் வேள்வியார் பாடியது

"உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தரமா மதுரைக்கு அச்சென்ப—இப்பக்கம்
மாதா னுபங்கி மருவுபுலச் செந்நாப்
போதார்புனற் கூடற் கச்சு."

திருக்குறளுக்கு உரை எழுதினவர்கள் பதின்மர் ஆவர். அவ்வுரைகளில் பரிமேலழகர்—மணக்குடியார் உரைகளோ அச்சுவாகனம் ஏறி உலவுகின்றன. தருமர்—தாமத்தர்—நச்சர் முதலியோர்களுடைய உரைகள் சென்னையில் சர்க்கார் நூல் நிலயங்களில் கையெழுத்துப் பிரதிகளாக இருக்கின்றன. இப்போது பரிதியின் உரையும் கிடைத்துக் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் சென்ற இரண்டு மாதங்களாக மாணவர் பலருக்கும் தமிழ் அன்பர்களுக்குப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

பரிதியின் உரை மிகத் தெளிவாகவும், ஏனை உரையாசிரியர்களுடைய உரைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவைகளின் வன்மைமென்மைகளை அறிய உபயோகமுள்ளதாகவும் இருக்கிறது.

பரிதி உரை பார்த்தவர்கள் வேறு உரைகளை நாடார். பரிதி உரை திருக்குறளுக்கு ஒரு பரிதியே.

மேலே காட்டிய செய்யுளில் பரிதி என்பவர் "மாதனுபங்கி மருவுபுலச்செந்நா" என்ற பாடமே கொண்டிருக்கிறுர்.

நால்கூர் வேள்வியார் என்பவர் திருவள்ளுவருடன் இருந்த ஒரு காலத்துப் புலவர். திருவள்ளுவருடைய சரித்திரத்தை நன்குய் உணர்ந்தவர். ஆனபடியால், அவர் திருவள்ளுவர் சரித்திரத்தை நுணுக்கமாகவும் விளக்கமாகவும் கண்ணன் சரித்திரத்தை உவமானமாகச் சொல்லி விளங்க

வைத்துள்ளார். திருக்குறள்போலவே இப்பாடலும் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் அழகை உடைத்தாயிருக்கிறது.

இப்பாடலை நுணுகி ஆராயுமிடத்துக் கிடைக்கும் பொருள்களாவன :—

1.	கண்ணன் பிறந்தது— வடமதுரை	நாயனார் பிறந்தது— தென்மதுரை
	,, வளர்ந்தது— கோகுலம்	,, வளர்ந்தது— திருமயிலை
2.	,, பிறந்தது— அரசகுலம்	,, பிறந்தது— வேளிர் குலம்
	,, வளர்ந்தது— ஆயர்குலம்	,, வளர்ந்தது— வள்ளுவர் குலம்
3.	,, மணந்தது—நப்பின்னை என்கிற உபகேசி	,, மணந்தது—வாசுகி என்கிற மாதானுபங்கி
4.	,, உபதேசித்தது— கீதை	,, உபதேசித்தது— குறள்
5.	,, உபதேசித்தது— பாண்டியன் மருமகனாகிய அர்ச்சுனனுக்கு	,, ,, பாண்டிய அரசனாகிய வழுதிக்கு
6.	,, கீர்த்திபெற்றது— மல்ல உயுத்தத்தில்	,, கீர்த்திபெற்றது— வாள் சண்டையில்
7.	,, செய்தது—துட்டநிக்கிரகம் சிட்டபரிபாலனம்	,, செய்தது—மறங்கடிந்து அறத்தை நிலைநாட்டியது
8.	,, துவரைக்கோமானாக இருந்தது	,, பாண்டியனுடைய உள்மந்திரத் தலைமை பெற்று வள்ளுவர் என்னும் பட்டம்பெற்றது.
9.	,, வதைத்து கஞ்சன் முதலிய கோடியோர் அறுவரையும்	,, வதைத்தது— காமக் குரோத—உலோப—மோக—மத மாச்சரியம் என்னும் உட்பகைவர் அறுவரையும்

இப்படி இவ்வொரு பாட்டிலேயே திருவள்ளுவருடைய சரித்திரத்தை உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கவைத்த புலவராகிய நல்கூர்வேள்வியாருடைய ஆற்றலே ஆற்றல்.

திருவள்ளுவர் திருமயிலையில் பிறக்கவில்லை. அவர் அங்கே வளர்ந்து வந்தார் என்பதற்குக் கபிலர் அகவலே சான்று. "தொண்டைமண்டலத்தில் வண்டமிழ் மயிலையில் பறையரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்." ஈண்டு "வளர்ந்தனர்" என்று கபிலர் கூறினாரேயொழிய "பிறந்தார்" என்று கூறவில்லை. ஆகையால், பிறந்தது வேறு இடம் என்பது கபிலருக்கும் கருத்தாகும்.

நல்கூர் வேள்வியார் பாட்டால் பிறந்த ஊர் தென்மதுரை என்பது வெளிப்படை.

கண்ணனுக்கு எப்படிப் பிறந்த அரசர் குலத்தைவிட, வளர்ந்த ஆயர்குலமே சிறப்பாக உலகில் வழங்குகிறதோ, அதுபோலவே, திருவள்ளுவருக்கும் பிறந்த குலமாகிய வேளிர் குலத்தைவிட, வளர்ந்த குலமாகிய வள்ளுவர் குலமே சிறப்பாக உலகில் வழங்குகிறது.

கண்ணன் வடமதுரையில் பிறந்தவனாயிருந்தாலும் எப்படிக் கோகுலநாதன் என்று கூறப்படுகின்றானோ, அதுபோலவே, நாயனாரும் தென்மதுரையில் பிறந்தவராயிருந்தபோதிலும் திருமயிலை வள்ளுவர் என்றே அழைக்கப்படுகின்றார்.

யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை என்னும் புலவர் தாம் எழுதிய அபிதானகோசத்தில் "2060 வருடங்களுக்கு முன் இலங்கையை வெற்றிகொண்டு அரசாண்ட சோழ அரசனாகிய ஏலேல சிங்கன் உடைய பேரனுக்குப் பேரனாகிய ஏலேலசிங்கன் என்னும் பிரபுவுக்குத் திருவள்ளுவர் நண்பர்" என்றும், அவருடைய மரக்கலம் ஒன்று கரைதட்ட "ஏலேலையா" என்று சொல்லித் தள்ளும்படி திருவள்ளுவர் கூற, அக்கலம் பண்டுபோல் மிதந்தது" என்றும் எழுதுகிறார்.

2060-ல் 1937-ஐக் கழிக்க 123 ஏற்படுகிறது. அதில் தலைமுறைக்கு 20 வருடங்களாக நான்கு தலைமுறைகளுக்கு 80 வருடங்கள்போக பாக்கி 43 அதாவது, 5-வது தலைமுறையில் i. e, 4,313-யில் வள்ளுவர் வாழ்ந்தவர் என்று ஏற்படுகிறது.

திருவள்ளுவர் காலத்தில் சோழநாட்டை ஆண்டவன் கரிகாலன் I என்பவன் ஆவான்.

ஏலேலசிங்கச் சோழனுக்குப் பேரனுக்குப் பேரனாகிய ஏலேலசிங்கன் திருவள்ளுவர் காலத்தில் ஒரு பிரபுவாக மயிலையில் வாழ்ந்துவந்தார்.

கருங்கை உள்வாள் பெரும்பெயர்வழுதி கி. பி. 30-ல் இறந்த பிற்பாடு, திருவள்ளுவர் மயிலை சென்று தம் நண்பர் ஏலேலசிங்கருடன் வசித்துவந்தார். ஏலேலசிங்கன் திருவள்ளுவர் உயிரோடிருக்கும்போதே அவர் பிறந்த நாட் கொண்டாட்டத்தைத் திருவிழாவாகக் கொண்டாடிவந்தார். திருவள்ளுவர் முத்திஎய்திய பின்னும் முன்மாதிரி மயிலையில் மட்டும் பிறந்தநாட்கொண்டாட்டம் நடைபெற்று வருகின்றது. ஏனைய இடங்களில் அவர் முத்தியெய்தின தினமாகிய குருபூசை நாளைக் கொண்டாடுகிறார்கள்.

அரசுக்கு உரியவன் அரசை இழந்து விட்டால் அவன் பிரபுவாக ஆகின்றதை நாம் தற்கால அரசியலிலும் பார்க்கலாம்.

எட்டுவார்டு VIII என்பவர் அரசைவிட்டு நீங்கினதும் விண்ட்சர் கோமகனாக (Duke of Windsor) மாறிவிட்டதை எல்லோரும் அறிவர். அதுபோல, ஏலேல சிங்கனும் கரிகாலன் I பட்டத்துக்கு வந்ததும் பிரபுவாக மாறிவிட்டான். அந்தச் சங்கதிதான் அபிதானகோசத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இதுகாறுங் கூறியவாற்றால், திருவள்ளுவர் தென் மதுரையில் பிறந்து, திருமயிலையில் வளர்ந்தவர் என்று பல காரணங்களால் நிலைநாட்டப்பட்டது.


தமிழ்மொழி

தமிழ்மொழி பண்டையது, நலஞ்சிறந்தது, உயர்நிலையில் நிற்பது. இதைப்போன்ற திராவிடமொழி வேறெதுவும் இன்று. திராவிட மொழி அமைப்பில் தமிழே நன்கு வளர்ந்து மற்றை மொழிகளுக்குப் பிறப்பிடமாயுள்ளது. சமஸ்கிருதத்தின் உதவியின்றியே நன்னிலையில் நடைபெறக் கூடியது.

—டாக்டர் கால்டுவேல்.

தமிழ்மொழி நிறைந்து தெளிந்து ஒழுங்காயுள்ள மொழிகளில் மிகவுஞ் சிறந்ததாகும்.

—டேய்லர்.



நலவழி (சுகாதாரம்)

பழத்தோல்கள்

நியூயார்க் நகரைச் சேர்ந்த ஜார்ஜ்வுட்க்ளாப், டி. டி. எஸ். ஆரேஞ்சுப் பழங்களைப் பயன்படுத்த வேண்டிய வகையைப்பற்றிப் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

ஆரெஞ்சுப் பழத்தின் இரசத்தை மட்டும் சாப்பிட்டுத் தோலைத்தூர எறிந்து விடுவது அந்தப் பழத்திலுள்ள முக்கியமான உயிர்ப் பொருள்களை (ஜீவ சத்துக்களை) இழப்பதாகும். ஆரெஞ்சுப்பழத் தோலும் அதனுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் உள் பக்கமான வெண்மைப் பாகத்திலுந்தான் உயிர்ப் பொருள்கள் நிறைந்திருக்கின்றன. ஆரெஞ்சுப்பழ இரசம் ‘விட்டமின்‘ஸி’ நிறைந்தது. இதில் கால்சியம்(Calcium) சத்தும் ஏராளமாக இருக்கின்றது. இந்தக் கால்சியம் விரைவில் உடலில் ஊறத் தக்க வகையிலிருக்கின்றது. இவையிரண்டும் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. ஆனால் ஆரெஞ்சுப்பழம் மக்கட் கூட்டத்திற்கு வழங்கும் பயன், இவற்றுடன் நின்று விடவில்லை.

தோலின் மேற்புறமும் உட்புறமுமுள்ள பொருள்கள் சீரண சக்தியை வளர்ப்பதில் மிகச் சிறந்தவை “பயரியா” என்னும் பல் நோயால் வருந்துபவர்கள் ஆரெஞ்சுத் தோலைச் சாப்பிட்டு வருவது நல்லது. இந்தத்தோல் குழந்தைகளுக்குச் செரியாது என்று சகசமாகக் கருதப்பட்டு வருவதற்குச் சிறிதேனும் இடமில்லை. குழந்தைகளுக்கு இந்தத் தோலைக் கொடுப்பதால் எவ்வளவோ பயன்கள் ஏற்படுகின்றன. இந்தத்தோலின் இரசத்தைப் பிழிந்தெடுத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

பால்கூட செரிக்கத் தக்க நிலையில்லாதவர்கள் நாடோறும் இரண்டு அல்லது மூன்று ஆரெஞ்சுப் பழங்களை மேற் கூறியபடி சாப்பிட்டுவந்தால் அவர்களுக்கு நல்ல சீரண சக்தியுண்டாகும். ஒரு பழம் சாப்பிட்டபிறகு அரைக்கால் படித்

தண்ணீர் உட்கொள்வது நல்லது. குழந்தைகளுக்குப் பசும் பாலுடன் ஆரெஞ்சு இரசத்தையுஞ் சேர்த்துக் கொடுத்தால் வயிற்றில் எந்த வகையான மப்பும் சேராது.

நாம் தூர எறிந்துவிடும் ஆரெஞ்சுப் பழத் தோலிலும் ஏராளமான சத்திருக்கின்றது. இதை அறிந்தோ அல்லது அறியாமலோ பலர் அத்தோலை எறிந்து விடுகின்றார்கள். ஆரெஞ்சுத் தோலை நீங்கள் கவனித்துப் பார்த்தால் அதில் இரண்டு பாகங்களிருப்பது தெரியவரும். ஒன்று மேற்புற மாகவுள்ள தடித்த மஞ்சள் பாகம். இன்னொன்று உட்புற மாக விருக்கும் நரம்புகள் ஓடுவது போன்ற வெண்மையான பாகம். மேற்பாகத்தில் ஏராளமான எண்ணெய்க் கோசங்க ளிருக்கின்றன; தோலை எடுத்து நன்கு பிழிந்தால் இவை சிறுசிறு துளிகளாகத் தெறித்து வருவது தெரியும். குடலில் வாயு சேராமல் தடுக்கவல்லவை இந்தத் துளிகள்தாம். இவை விட்டமின்கள் 'பி' 'ஸி' நிறைந்தவை. நரம்பு வலுப் பெறுதலுக்கும், இரத்த விருத்திக்கும் இவை இன்றியமை யாதன.

உட்புறத்திலிருக்கும் வெண்மையான பாகம் 'செல்லு லோஸ்' என்னும் சத்து மிகுந்தது. குடலில் மலம் சிக்காமல் அப்புறப்படுத்துவதில் இணையற்றது. இப்பொழுதாவது உங்களுக்கு ஆரெஞ்சுத் தோலை எறிந்து விடுவதனால் எவ் வளவு சத்துக்களை நாம் இழந்து விடுகின்றோம் என்பது தெரிந்ததா? இதை நமது தினசரிச் சமையலில் எவ்வளவோ வகைகளில் பயன்படுத்தலாம். தோலைச் சிறுசிறு துண்டு களாக நறுக்கி ஊறு காயாகவோ அல்லது பச்சடியாகவோ செய்து சாப்பிடலாம். அல்லது தோலை நன்றாக இடித்து இரசமெடுத்து சர்பத்துகள் செய்யலாம்.

ஆரேஞ்சுத் தோலைப் போலவே எலுமிச்சம் பழத்தோலும் மிகவும் பயன்படக் கூடியது. நூற்றுயிரத்தில் ஒருவர் கூட இந்தத் தோலைப் பயன் படுத்துவதில்லை. வீட்டுக் குப்பை களில் பார்த்தால் எலுமிச்சம்பழத் தோல்கள் எறியப்பட்டுக் கிடப்பதைக் காணலாம். எலுமிச்சம் பழத் தோலை எறிந்து விடுவதால் நமக்குப் பெரிதும் பயன்படக்கூடிய பி. அண்டு ஸி. விட்டமின்களை நாம் இழக்கிறோம் என மருத்துவ அறிஞர்கள் கூறுகின்றார்கள். எலுமிச்சைத் தோலின் மேற்புறமாகவுள்ள மஞ்சள் பாகத்திற்கு ஆங்கிலத்தில் "ப்ளாவடோ" என்றும், உட்பாகத்திலுள்ள வெண்மைப் பாகத்திற்கு "ஆல்படோ" என்றும் பெயர். ஆரெஞ்சுத்

தோலைப் போலவே இதன் மேல் பாகத்திலிருந்தும் சிறுசிறு எண்ணெய்த் துளிகள் தெறிக்கின்றன. பயனும் ஆரெஞ்சைப் போலவே. உட்பாகம் செல்லுலோஸ் நிறைந்தது. இவை இரத்த வோட்டத்திற்கும் நரம்புகளுக்கு வலுவூட்டவும் சிறந்தவை. எலுமிச்சைத் தோலைப் பொடிப் பொடியாக நறுக்கி ஊறுகாய் போட்டுக் கொள்ளலாம்.

உருளைக் கிழங்குத் தோலையும் நாம் எறியக் கூடாது. இந்தத் தோல் மிகுந்த உடல் வளர்க்குந் தன்மை வாய்ந்தது. அயர்லாந்து தேசத்தவர்கள் இந்தத் தோலின் பெருமையை முற்றிலும் உணர்ந்திருக்கின்றனர். அந்தத் தேசத்தின் முக்கியமான உணவு உருளைக்கிழங்குதான். இந்த உருளைக்கிழங்கின் தோலையும் வெள்ளாட்டுப் பாலையுமட்டும் உட்கொண்டே பலர் சீவிக்கின்றனர். இதுமட்டுமல்ல, உருளைக் கிழங்கைச் சமையல் செய்த பிறகு நிற்கும் தண்ணீரையுங் கூட அவர்கள் பயன்படுத்துகிறார்கள். உருளைத் தோலிலும், அதைச் சமைத்த நீரிலும் உலோக உப்புகளும் கொழுப்புச் சத்தும்ப்ரோடீனும் மிகுதியாக விருக்கின்றன. குடலுக்குச் சுறுசுறுப்பூட்டும் செல்லுலோஸ் என்னும் சத்தும் மிகுதியும் உண்டு.

'தமிழன்'

தமிழ்மொழி

"தமிழ் எந்த மொழிக்கும் இழிந்தது அன்று. ஆனாலும், சிலர் அதை எங்கேயோ ஆங்கில அரசாட்சியின் அநாகரிகமான ஓரிடத்திற் பேசும் மொழி என எண்ணுகிறார்கள். அன்றியும் அதை நம் அரசாட்சியாரும் பல்கலைக் கழகத்தாரும் சிறிதேனும் அருமையறிந்து போற்றுகிறார்களில்லை. ஆகையால் அதில் பயின்று புலமை நிரம்பப் பாடுபடுகிறவர்கள் கடலிற் குளித்து முத்தமெடுக்கப் பாடுபட்டு உளந்திகைப்பவர் போலாகின்றார்கள்."

—டாக்டர் ஜி. யு. போப்.

டாக்டர் போப் இறக்கும்போது தம் கல்லறையின் மேல் தம்மைச் 'செந்தமிழ் மாணவன்' என்று பொறிக்கும் படி கேட்டுக்கொண்டாராம்.

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

(முன் கங-ஆம் சிலம்பு, ஙசுக-ஆம் பக்கத்தொடர்ச்சி)

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—திரு. க. ப. சந்தோஷம்]

இயற்கை வடிவங்களோடு ஒகரம் ஒத்திருத்தல்

இதுகாறும், எழுத்துக்களின் உருமாற்றமும் மொழியி னமைப்பும் எங்ஙனம் இந்துக்களின் மறைத்தன்மைவாய்ந்த உண்மையியலோடு ஒத்திருக்கின்றன என்பதை எடுத்துக் கூறினேன். எழுத்துக்களும், மொழியும், மறைப் பகுதியும், உண்மையியலுமாகியவெல்லாம் மக்களால் தோற்றுவிக்கப் பட்டனவென்றே கருதப்படுகின்றன. இப்பொழுது, மக் களால் தோற்றுவிக்கப்பட்டனவென்று கருதப்படுகின்ற இவை, இயற்கையால் அல்லது கடவுளால் தோற்றுவிக்கப் பட்ட வடிவங்களோடு ஒத்திருப்பதைக் காட்டப்போகின் றேன். கல்வெட்டுக்களில் மாறுதிருப்பதும், மறைப்பகுதியின் புகலிடமுமாகிய ஒகரம், இயற்கை வடிவங்களோடு ஒத்தி ருப்பதை விளங்கவைப்பதே இப்பொழுது எனது நோக்க மாகும். மக்கள் உடம்பிலுள்ள கருவிகளை நுட்பமாய் நோக் குவோமாயின், அவற்றுளோர் ஒற்றுமையும் அமைதியுமிருக் கப் பார்க்கலாம். அடுத்த பக்கத்தில், மக்களுடம்பிலுள்ள சில தலையாய கருவிகளின் உருவங்களைக் காணலாம். இவை மக்களது உடற்கூற்றை நுண்ணிதின் ஆராய்ந்து வெளியிடும் நூல்களிலிருந் தெடுக்கப்பட்டன. முதலாவது வடிவம் மக் களது மூளையை மேலிருந்து கீழே இருகூறாய் வகுத்துக்காட்டு வதாகும். இவ்வடிவத்தின் வெளிப்பகுதியை இடதுபுற மிருந்து வலதுபுறம் செல்கின்ற முறையில் உற்றுநோக்குவோ மாயின், எழில் நிறைந்த ஓர் ஒகர எழுத்துப் புலப்படுகின்றது. உள்ளிருக்கும் பகுதிகளிலும் ஒகரத்தின் தலையாய கூறுகள் வெளிப்படுகின்றன. இரண்டாவது படம், மூளையை நேர் குறுக்கே வகுத்துக் காட்டுகின்றது. இதிலும் ஒகரவடிவத்தை நாம் காணலாம். மூன்றாவது வடிவம், முதுகெலும்பிலுள் ளிருக்கும் மூளையைப் பாதியாய்த் தறித்துக் காண்பிக்கின்றது. ஈண்டும், ஒகரத்தின் வடிவம் கருதத்தகும் வகையில் வெளிப் படுவதை நோக்குக.

நான்காவது, மக்களுடைய காதின் உட்பகுதியும் வெளிப் குதியும் சேர்த்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வடிவத்

தின் விளிம்புக்கோட்டை இடதுபுறமிருந்து வலதுபுறமாகத் தொடர்ந்து செல்வோமாயின், அழகிய ஒகரம் ஒன்று தோன்றுகின்றது.

ஐந்தாவது, மக்களது குண்டிக்காயை (சிறுநீர் முதலிய அழுக்குகளை வெளிப்படுத்துங்கருவி) அதன் வளைவு சிதையாமல் இருபிளவாக்கி, ஒரு பிளவைக் காண்பிக்கின்றது. இஃது ஒகரவடிவத்தோடு ஒத்திருப்பது காணற்கெளிது. இது போன்றே, வெவ்வேறு தொழில்களியற்றுகின்ற நுரையீரல், மண்ணீரல் முதலிய கருவிகள் ஒகரவடிவமுடையனவா யிருக்கின்றன. ஆறுவது செரிப்பு முக்கருவிகளாகிய ஈரல், வயிறு, குடல்கள் ஆகியவற்றின் உருவங்கள் ஒரு தொகுதியாக வரையப்பட்டிருக்கின்றன. பொதுவாக இவை உண்டதைச் செரிக்கச் செய்யுந் தொழிலியற்றுவனவாயினும், ஒவ்வொன்றும் செரிப்பு நிகழ்வதில் வெவ்வேறு பணி செய்கிறது. ஈரலின் வடிவம் ஒருவாறு ஒகரத்தின் வடிவத்தை யொக்கும். வயிற்றின் வடிவம் தலைகீழாய் வரையப்படும் ஒகரத்தைப் போன்றது. குடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் முறை பெரிதுங் கவனிக்கத்தக்கது. முப்பது அடிக்கு மேல் நீளமுள்ளதும், குழைந்த தன்மையதும், சிறுகுடல் பெருங்குடல் என இருபிரிவினதுமாகிய இப்பகுதி எவ்வாறேனும் குவிந்திருத்தல் கூடுமென்று நாம் நினைக்கலாம். ஆனால், அஃது உடலின் பிற்பகுதியில் ஒரு முறையைத் தழுவி நிறுவப்பட்டுள்ளது. ஒகரத்தின் சுழியையொப்பச் சிறு குடல்கள் திரண்டு நடுவிலிருக்கின்றன. பெருங்குடலில் மேலே செல்கின்ற பகுதியும், குறுக்கே போகின்ற பகுதியும், கீழிறங்கும் பகுதியும், உள்வளைந்து எருவாய்க்குச் செல்லும் பகுதியும், ஒகரவடிவத்தை முற்றுப்பெறச் செய்கின்றன.

அறிவியல் ஆராய்ச்சியாளர், மக்களுடைய உறுப்புக்களுக்கும், பிற உயிர்களின் உறுப்புக்களுக்குமுள்ள ஒற்றுமையை ஐயமற நிறுவியிருக்கின்றனர். மற்றுமவர்கள், உயிர்வகைகளின் வடிவம் மக்கள் உருவத்திற்கிசைய நெருங்கி வர வர, அவ்வொற்றுமை வளர்கின்றதென்று காட்டியிருக்கின்றனர். ஆதலின், மக்களுட்பட எல்லா விலங்குகளுடைய உறுப்புக்களின் அடிப்படையான வடிவம் ஒகரத்தை யொத்த தென்பதைக் கண்டுகொள்க. இவ்வொற்றுமை, உயிர்கள் மக்களுருவத்தை யணுகி வர வர அதிகப்படுமென்பதையு மறிந்துகொள்க.

இவ்வொற்றுமை இத்துடன் முடிவதன்று. கருக்கொண்டது முதல் பிறக்கும் வரையில் ஒரு மகள் வயிற்றிற் குழவி

பெறுகின்ற வளர்ச்சியை அடுத்த பக்கத்திற் காண்க. இவற்றில் ஒகர வடிவந்தோன்றிச் சிறிது சிறிதாய் முற்றுப்பெறுகின்ற வகை எவரது கருத்தையும் ஈர்க்குந் தகையது. காட்டியிருக்கின்ற ஏழு படங்களில், முதல் ஆறும் பார்க்கர் (Parker) என்பவர் எழுதியவற்றிலிருந்து எடுக்கப்பட்டன. கரு வளர வளர ஒகர வடிவந் தெற்றென விளங்குகின்றது. குழவியின் தலை ஒகரத்தின் சுழியோடுகூடிய வளைவிற்கும், தொப்பூழ்க் கொடியும் நஞ்சும் ஒகரத்தின் எஞ்சிய பகுதிகளுக்கும் ஒத்திருக்கின்றமை எளிதில் விளங்கும். முதற்படத்தில் தொப்பூழ்க் குழாய் இடம் முழுவதையும் அடைத்துக்கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று நான்காவது படங்களில் இது குறைந்துகொண்டே வருகிறது. ஐந்தாவது படத்தில் இஃதின்னுந் தெளிவாய்த் தோன்றுகின்றது. ஆறுவது படத்தில் தொப்பூழ்க் குழாயும் நஞ்சுமே மிகுந்து நிற்கின்றன.

இங்ஙனம், ஒகரவடிவத்தோடு கருப்பையில் வளர்கின்ற குழவி, பிறந்தபின் வளைவுநீங்கி நேராயிருப்பினும், நெடுநாள் வாழ்ந்து கிழத்தன்மை எய்திடின் மீண்டும் ஒகரவடிவம் அடையுந்தன்மையதாகின்றது. முதலில், வயது முதிர்ந்தவர்களுடைய உருவம் சிறிது வளைந்து, வரவர முதுகு கூனடைந்து, ஒகரவடிவந் தோன்றுவதை ஏழாவது படத்திற் பார்க்கலாம்.

கருவாராய்ச்சிக்காரர், மக்கள், விலங்கு முதலிய எல்லா உயிர்களின் கருக்களும் தொடக்கத்தில் ஒன்றுபோலவேயிருக்கின்றன என்ற உண்மையை நிலை நாட்டியிருக்கின்றனர். ஆதலின் அறிவியலார் எல்லா உயிர்களுக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டுவதற்கு எடுத்தாளும் காரணங்களெல்லாம் ஒகரத்தின் வடிவத்தோடு ஒன்றுபடுவதைக் காணுமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு பக்கத்தில் ஒரு பறவைக்கரு முட்டையில் வளர்ச்சிபெறும் வகை காட்டப்படுகின்றது. முதலாவது நிலையில் ஒகரவடிவம் அவ்வளவு தெளிவாகத் தோன்றாவிடினும், இரண்டாம், மூன்றாம் நிலைகளில் ஐயமற அவ்வடிவம் விளங்குவதைக் காணலாம்.

மற்றொரு பக்கத்தில் மீன், ஒந்தி, ஆமை, கோழிக் குஞ்சு, பன்றிக்குட்டி, பசுவின் கன்று, குழிமுயற் குட்டி, மக்கட்குழவி ஆகிய எட்டு முதிராக் கருக்களின் மூன்று வெவ்வேறு நிலைகளைக் காணலாம். இவற்றுள் அடியிலுள்ள மூன்றாவது நிலையில் உயிர் வகைகளின் வேற்றுமை நன்கு

புலப்படுகின்றது. முதலாவது இரண்டாவது நிலைகளில் தோற்றத்தைக்கொண்டு இஃதிவ்விலங்கென்று காட்டுதல் கூடாது. முதல் நிலையில் எல்லாம் ஒன்றுபோலவே தோன்றுகின்றன. அவைகளில் நாம் காணும் ஒகரவடிவமுந் தெளிவாய்த் தெரிகின்றது. தொப்பூழ்க்கொடியைப் படத்திற்காட்டாததினுல் ஒகரவடிவத்திற்கும் இவற்றிற்குமுள்ள ஒற்றுமை முற்றுப் பெறவில்லை.

ஈண்டு நாம் காணும் கருக்களின் கழுத்தில் தோன்றும் மடிப்புக்களின் தொகையும் பஞ்சாட்சரத்திலுள்ள எழுத்துக்களின் தொகையும் ஒன்றுபடுவது மற்றொரு ஒற்றுமையாகும். சாஸ்திரங்களுக் கிணங்க, உடல் ஆறு கூறுகளாக வகுக்கப்படுகின்றது. இவற்றிற்கு ஆதாரங்களென்று பெயர். இவ்வாறாதாரங்களும் ஒ நமசிவய என்ற மறை எழுத்துக்களால் ஆளப்படுகின்றன என்பது கொள்கை. நாம் கண்ட கருக்களின் கழுத்திலுள்ள ஐந்து மடிப்புக்களும் நமசிவய என்ற ஐந்தெழுத்துக்களால் ஆளப்படுகின்ற உடற்பகுதிகளாக விரிகின்றமை நோக்கத்தக்கது.

ஆண், பெண் என்ற பால் வகுப்புடையனவாய்ப் புணர்ச்சியின் துணைகொண்டு கருத்தரிக்கும் உயிர்களில் ஒகரவடிவமே மூலவடிவம் என்று நாம் சொல்வதை விலங்கு நூலார் ஏற்றுக்கொள்வது கூடுமாயினும், புணர்ச்சியின்றி ஒன்று இரண்டாகப் பிரிவதனுல் பெருகுகின்ற உயிர்வகைகளுக்கு இஃதொவ்வாதென்று அவர்கள் கூறினுங் கூறலாம். இத்தகைய உயிர்கள் பல விருக்கின்றன. இவற்றை ஒதுக்குதல் கூடாது.

ஒன்றிரண்டாகப் பிரிந்து பெருகுகின்ற உயிர்களினும், ஒருவாறு ஒகரவடிவந் தோன்றுகின்றதென்பதைக் காட்டுதல் கூடும். ஆண்பெண் ஆகிய இருதன்மையையுந் தம்மிலுடைய பூக்கள் முதலியவற்றில் ஒன்றிற்கொன்று எதிராயமைந்து நிற்கும் இரு ஒகர வடிவங்களைக் காணலாம். நிலைத்திணை யுயிர்களில் ஒகரவடிவந் தோன்றுவதைப்பற்றிய பல செய்திகளுள. காலமின்மை கருதி அவற்றை ஈண்டுக் கூற முடியவில்லை.

இதுகாறும் உயிருடையவை என்று நினைக்கப்படுகின்றவற்றையே கருதினேம். பிறவற்றையும் பற்றிக் கருதக் கடமைப்பட்டுள்ளோம். கோள்கள், (செவ்வாய், வியாழன், வெள்ளி முதலியவை) எங்ஙனந் தோன்றின வென்பதுபற்றிப் பற்பல கருத்துக்க ளிருக்கின்றன. இவை ஒன்றிற்கொன்று

வேறுபட்டிருப்பினும், இரண்டு செய்திகளில் ஒற்றுமையுடையனவாயிருக்கின்றன:—முதலாவது, ஞாயிறும் அதைச்சுற்றி வருங் கோள்களுந் தொடங்கற்கண் ஒரு பெருந்திரளா யிருந்தன. இரண்டாவது, கோள்கள் இதனின்றும் பிரிந்து பற்பல நூறுயிரமாண்டுகள் செல்லச்செல்லச் சுருங்கி, இறுகி, இப்பொழுதுள்ள வடிவங்களைப் பெற்றன. இங்ஙனமாயின் ஒவ்வொரு கோளும் பிரிந்துசெல்லும்போது ஒகரத்தின் சுழியையொத்த வடிவத்தோடு ஞாயிற்றை விட்டுப் பெயர்ந்திருக்க வேண்டுமென்று கணக்கியல் முறையில் நிறுவுதல் கூடும்.

இனி, பருப்பொருள்களிலுள்ள அணுக்களில், கோள்கள் ஞாயிற்றைச் சுற்றுவதுபோல் அணுக்கூறுகள் சுற்றுகின்றனவென்று அண்மையில் நிகழ்ந்த அறிவியலாராய்ச்சி நமக்கு விளம்புகின்றது. இதிலும் ஒகரவடிவம் ஒருவாறுண்டாகுமென்று நாம் கருதலாம்.

சுருங்கச்சொல்லின், ஆண் பெண் என்ற பகுப்புத் தனித்தனியே விளங்குகின்ற உயிர்களெல்லாம் ஒகரவடிவத்திலே உருவம் பெறுகின்றன; ஆண் பெண் என்ற இரு பகுப்பின் தன்மையையும் தம்பாற்கொண்ட உயிர்களில் மேலொன்று கீழொன்று எதிரெதிராய் நிற்கும் இரண்டு ஒகரவடிவங்கள் தோன்றுகின்றன; உயிரற்றவை என்று கருதப்படுகின்றவற்றிலெல்லாம் ஒகரவடிவத்தின் ஒரு கூறு வெளிப்படுகின்றது.

(தொடரும்)

குறிப்பு:—இக்கட்டுரையில் குறிக்கப்பெற்றிருக்கிற படங்கள் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

ஆராய்ச்சிப் பகுதி : Research

கால்டுவேல் ஒப்பிலக்கணம்

I

[காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி. ஏ., எழுதியது]

திராவிட மொழிகள் என்று ஒருமொழியினமாக வகுக்கப்பெறும் மொழிகளுள் தமிழ்மொழியே பண்டைநாள் தொட்டுத் திருத்தமுற் றமைந்ததும், செவ்விய முறையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளதுமாகும். சுருங்கக் கூறின், திராவிடமொழி யினத்தின் வகைக்குறி மொழி தமிழே என்று கூறலாம்.

"திராவிடம் என்பது ஒரு குறியீட்டுச் சொல்; அது தென்னிந்திய மக்களிற் பெரும் பகுதியினராற் பேசப்பட்டு வரும் உண்ணாட்டு மொழிகளைக் குறிப்பதாகும். குஜராத்தி மொழியும், மராத்தி மொழியும் வழங்கும் பகுதிகளொழிந்த மேற்கிந்தியப் பகுதியும், தக்கணப் பகுதியும், ஒரிஸா நாடும் நீங்கலாக, விந்தியமலைக்கும், நருமதை யாற்றிற்கும், குமரி முனைக்கும் இடைப்பட்ட தென்னிந்தியப் பெரும்பகுதியிற், பண்டைக்காலத்திலிருந்தே, ஒரேமொழியின் கிளைகளாகிய பல திருந்தாமொழிகளைப் பேசும் பல குழுக்களைக்கொண்ட மக்கட் பெருங்குழுவொன்று பரவி வாழ்ந்து வந்திருந்ததாகத் தோற்றுகிறது. விந்தியமலைக்கு வடக்கேயுங்கூட பலூச்சிஸ்தானம் வரையிலும், வங்காளத்தைச் சேர்ந்த இராஜ்மகால் மலைகள் வரையிலுங்கூட இம்மொழியினத்தைச் சேர்ந்ததாக எண்ணக்கிடக்கின்ற கிளைமொழிகள் சில வழங்கக் காணலாம்.

குஜராத்தியும், மராத்தியும், மராத்தியின் கிளைமொழியாகிய கோங்கணியும், ஓட்ரதேசம் அல்லது ஒரிஸா என்ற நாட்டார் பேசும் ஓரியாவும், வடமொழிச் சிதைவுகளும் ஆகிய இவை திராவிடமொழிகள் பேசுங் குழுவினரொழிந்த பிற இந்துமக்களால் ஆங்காங்குப் பேசப்பட்டுவரும் மொழிகளாம்.

இந்தியப் பெருநாட்டின் வட பகுதியிலேனும் தென் பகுதியிலேனும், எக்காலத்திலும் சமஸ்கிருதம் என்ற வட மொழி உண்ணாட்டு மொழியாக வழங்கி யிருக்கக்கூடும்

என்று நம்புவதற்கில்லை. இருந்தாலும், தென்னிந்தியப் பகுதியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு கூற்றத்திலுமுள்ள பார்ப்பனக் குழுவினருள் ஒரு சிலராலாவது, அது படிக்கப்பட்டும், பொருளுணரப்பட்டும் வருகின்றது என்பது மட்டும் உண்மை.

இப்பார்ப்பனக் குழுவினர் பன்னூறாண்டுகளுக்குமுன் இந்நாட்டிற் குடியேறிய பார்ப்பன வந்தேறிகளின் வழியினராகும். இவர்களுடைய கூட்டுறவினால் திராவிட மக்களின் நல்வாழ்க்கைக்குரிய கலைப்பகுதிகளும் இலக்கியத் துறையும் ஓரளவிற்குச் செப்பமுற்றுச் சீர்திருந்தி யுள்ளனவென ஒப்புக்கொள்ளல்வேண்டும். பார்ப்பனர்களாகப் பிறந்து அவர்கட்குரிய தொழிலாகிய வேதமோதுதல், கருமஞ்செய்தல் முதலியவற்றை மேற்கொண்டுள்ள சிற்சிலர், பொதுவாக, வடமொழி நூல்களைக் கற்றறிந்து அவற்றைத் தாந்தாம் உறையும் நாட்டிடை வழங்குவதான உண்ணாட்டு மொழியில் எடுத்து விளக்கும் ஆற்றல் வாய்ந்திருந்தனர். இத்தகையினர் அவரவர் வாழும் நாட்டுப் பகுதிக்கேற்ப திராவிடப் பார்ப்பனர், ஆந்திரப் பார்ப்பனர், கன்னடப் பார்ப்பனர் என்று அழைக்கப்பட்டனர். நாளாவட்டத்தில் அவரவர்கள் பேசிவரும் மொழி வேற்றுமைவாயிலாக இப்பார்ப்பனக் குழுவினர் தத்தமக்குள்ளேயே மாறுபாடு மிகுந்த இனவேற்றுமையை எய்தலாயினர். ஆயினும் இவர்களெல்லோரும் பண்டு ஒரே கிளையினராக இருந்தவர்களே யென்றும், அவர்களுடைய மொழி ஒருகாலத்தில் வடமொழியா யிருந்திருக்கக் கூடும் என்றுங் கூறலாம். இது நிற்க.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆப்கானியர்களும் பட்டாணியர்களும், ஏனைய வடவிந்திய முகம்மதியர்களும் தென்னிந்தியப் பகுதிகளில் வந்து குடியேறினர். அவர்கள் பேசிய தனிப்பட்ட மொழி இந்துஸ்தானியாகும். இன்றும் ஐதராபாக்கப் பகுதியில் இந்துஸ்தானி உண்ணாட்டு மொழியாகவே வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால், தென்னிந்தியப் பகுதியிலோ, முகம்மதியர்களுள் உயர்தர வாழ்க்கையுள்ளவர்கள் தவிர்ந்த நடுத்தர வாழ்க்கையினரும், ஏழை எளியவர்களும் எவ்வளவுக்குத் தம் இன மொழியாகிய இந்துஸ்தானியை வழங்கி வருகிறார்களோ அவ்வளவுக்கு உண்ணாட்டுமொழிகளையும் பேசி வருகிறார்கள். அதிலும், லப்பைகள் என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்படும் தென்னிந்திய முகம்மதியர்களுக்கு "இந்துஸ்தானி" எப்பொழுதுந் தாய்மொழியாக இருந்ததில்லை. இந்த "லப்பை

கள்'' கிழக்கிந்தியக் கரையோரங்களிலுள்ள இந்திய மக்களால் சோனகர்கள் (யவனர்கள்) என்றும் மேற்கிந்தியக் கரையோரங்களிலுள்ள மக்களால் மாப்பிள்ளைகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்களெல்லோரும் அராபியவணிகர்களையும் அவர்களால் மதமாற்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களையுஞ் சேர்ந்தவர்கள்; தமிழோ மலையாளமோ பேசுபவர்கள்.

கொச்சியிலும் அதன் சுற்று வட்டங்களிலுமுள்ள யூதர்களால் எபிரேயம் என்ற மொழி பேசப்பட்டு வருகிறது; பார்ப்பனர்களால் எந்த அளவுக்கு, எவ்வெக்காரியங்கட்கு வடமொழி கையாளப்பட்டு வருகிறதோ, அந்த அளவுக்கு அவ்வக்காரியங்கட்கு யூதர்களால் எபிரேயம் கையாளப்பட்டு வருகிறது. தென்னிந்தியப் பெரு நகரங்களில் வசிக்கும் குஜராத்தி வட்டிக்கடைக்காரர்களாலும் பார்ஸி வணிகர்களாலும் குஜராத்தியும் மராத்தியும் பேசப்பட்டு வருகின்றன. கோவாவிலுள்ள போர்த்துக்கேசியர்கள்மட்டும் போர்த்துக்கேசியமொழியைப் பேசி வருகிறார்கள்; ஏனைய இடங்களிலுள்ள போர்த்துக்கேசியர்கள் விரைவில் தம்மொழியை மறந்து ஆங்கிலத்தைப் பயின்று வருகிறார்கள். புதுச்சேரி, கரைக்கால், மாஹி என்ற பிரெஞ்சு நகரங்களிலுள்ள பிரெஞ்சு அரசியற் சிப்பந்திகளாலும், அவர்கள் வழிவந்தவர்களாலும் பிரெஞ்சுமொழியே பேசப்பட்டு வருகிறது.

ஆங்கிலேயருக்குச் சொந்தமான இந்தியப் பகுதிகளெங்கணுமுள்ள ஆங்கிலேயர்களாலும், ஆங்கிலோ இந்தியர்களாலும், யூரேஷியர்களாலும் பேசப்பட்டு வருவது ஆங்கிலமே. வாணிகத்துறையிலும் நீதிமன்றங்களிலும், அரசியற் பணித்துறைகளிலும் ஆங்கிலம் வரவர இந்தியர்களாலும் மிகுதியாகக் கையாளப்பட்டு வருகிறது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில், பண்டு வடமொழி எந்த உச்ச நிலையை எய்தியிருந்ததோ அந்த அளவிற்கு இப்பொழுது ஆங்கிலம் உயர்தரக் கல்வி பெறும் மொழிக் கருவியாக இருந்து வருகிறது. எனினும், இவ்வாங்கிலமோ, வேறெந்தப் புறமொழியோ எக்காலத்திலேனும் தென்னிந்திய உண்ணாட்டு மொழியாக மாறிவிடக்கூடும் என்று நம்புவதற்கு எட்டுணையும் வழியில்லை. ஆற்றலிலும் எண்ணிக்கையிலும் மிக்கவர்களாகக் கருதப்படும் ஓரினத்தாரின் மொழியாகிய வடமொழியைச் சென்ற 2,000 ஆண்டுகளாக எதிர்த்து நின்று போராடி வருவனவாய திராவிடமொழிகள், மற்றெந்த அயல் மொழியும் தம்மிடைத் தலைசிறவாதபடி எதிர்த்து நின்று தடுத்துக்கொள்ளும் என்று எளிதில் நம்பலாம்.

(தொடரும்.)

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

ஜப்பான் முன்னேற்றம்

[சென்னையிலிருந்து வெளிவரும் "இந்து" பத்திரிகையில் வரையப்பட்டிருக்கும் இவ்வியாசம் இந்தியாவுக்கு ஓர் பாடமென்றே சொல்லலாம்.]

ஜப்பான்

ஜப்பான் ஐம்பது ஆண்டுகளில் உலகமே வியக்கும்படி இந்தியாவை விட வெகுதூரம் முன்னேறிவிட்டது.

ஜப்பான் சாமான்கள்

ஜப்பானில் செய்யப்படாத பொருள்கள் என்ன இருக்கின்றன? சுருக்கமாக ஒன்றும் இல்லையென்றே கூறிவிடலாம். வானவூர்தி (ஆகாய விமானம்), மோட்டார் வண்டி, ரயில் என்ஜின், கப்பல்கள் முதலிய சிறிய பொருள்கள் வரையில் எல்லா வகையான சாமான்களும் ஜப்பானிலேயே செய்யப்படுகின்றன. நெசவுச்சாலைகளுக்கு வேண்டிய இயந்திரங்(பொறி)களும் அங்கேயே செய்யப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஜப்பான், துணி, மின்சார இயக்கி (Motor), சைக்கிள், பாத்திரங்கள்......, சங்கீதக் கருவிகள், பொம்மைகள் முதலியவைகளை ஏற்றுமதி செய்கிறது. அவை யாவும் ஜப்பான் கப்பல்களிலேயே எடுத்துச் செல்லப்படுகின்றன. வெளி நாடுகளிலும் ஜப்பான் சாமான்களின் விலையே மலிவாக இருக்கிறது.

இந்தியாவின் கதி யென்ன? குண்டூசிக்கும் இந்தியா வெளிநாட்டை எதிர்பார்க்கின்றது. சிறந்த மூலப்பொருள்கள் இந்தியாவில் இல்லையா? இருக்கின்றன, இருந்தும் பயனென்ன? தொழிலுக்கு ஊக்கமும் அளிப்பார் இலர். இந்தியாவின் செல்வம் வெளிநாடுகளுக்கு ஒரு விதத் தடையுமில்லாமல் சென்றுகொண்டே இருக்கின்றது.

பழையநிலை

ஜப்பான் இவ்வாறு முன்னேற்றமடைந்ததற்குக் காரணமென்ன? ஜப்பான் மக்களெல்லாரும் தேசப்பற்றுடன் ஒன்றுபட்டு உழைக்கின்றார்கள். அதனாலேயே அந்நாடு முன்னேறிற்று. ஒரு காலத்தில் அந்நாடும் நம்முடைய நாட்டைப்

போலவேயிருந்தது. 1868-ம் ஆண்டிற்குமுன் அந்நாட்டில் பல (ஜமீன்தாரர்கள்) பெருநிலக் கிழவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்து வந்தன, அதனால் நாடு சீர் கேடடைந்ததே தவிர முன்னேற முடிய வில்லை. ஆதலின், அப்போது ஜப்பான் மன்னராகவிருந்த மேய்ஜி மன்னர் ஜமீன்தாரி முறையை ஒழித்து அவர் களுடைய நிலங்களையெல்லாம் பறிமுதல் செய்துவிட்டார். ஜனப்பிரதிநிதிகளடங்கிய ஒரு (பார்லிமெண்டை)........... உண்டாக்கினர். அந்தப் பார்லிமேண்டே மன்னருக்கு யோசனைகூறும் அவையாக அமைந்தது. அவர் ஜப்பானை நாற்பத்தேழு மாகாணங்களாகப் பிரித்து விட்டார். ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு கவர்னரின் ஆளுகையிலிருக்கின்றது. பெரிய நகரங்களில் நகரசபைகள் ஏற்படுத்தப் பட்டன. நகர மேயர் தம் துணைவர்களுடன் நகர முன்னேற்றைத்தைக் கவனித்து வருகின்றார்.

கட்டாயப் படிப்பு

1872-ஆம் ஆண்டில் இலவசக் கட்டாயக்கல்வி முறை கோரப்பட்டது. ஆண் பெண் வித்தியாசமின்றிக் கல்வி போதிக்கப்பட்டது. கல்வியில்லாத குடும்பங்கள் இருத்தல் கூடாதென்றும், கல்வியறிவில்லா மூடன் குடும்பத்தில் வாழ்தல் கூடாதென்றும் மன்னர் விரும்பினர். 1889-ல் ஜப்பான் மன்னர் குடிக்கோனாட்சி மன்னராக இருக்க விரும்பினர். அவ்வண்ணமே ஜப்பானில் பொதுஜனப் பிரதிநிதிகளடங்கிய சட்டசபை அமைக்கப்பட்டது. பிரபுக்கள் சபை ஒன்றும் காணப்பட்டது. அது முதலே ஜப்பான் முன்னேறத் தலைப் பட்டது.

1890-ஆம் ஆண்டில் கல்வியைக் குறித்த அரசாங்க அறிக்கையொன்று வெளியாயிற்று. அவ்வறிக்கை இன்றும் ஜப்பான் பள்ளிக்கூடங்களில் விசேடகாலங்களில் படிக்கப்படுகின்றது.

ஜப்பானில் இருபத்தையாயிரம் (25,000) பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளில் ஆறு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலுள்ள சிறுவர்கள் படிக்கின்றார்கள். ஜப்பானில் படித்தவர் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதரை பேர். (இந்தியாவிலோ?) ஆரம்பப்படிப்பு முடிந்ததும் பிள்ளைகளில் நூற்றுக்குப் பத்துப்பேரும் பெண்களில் ஆறுபேருமே உயர் தரப்படிப்புக்குச் செல்கின்றார்கள். மீதிப்பேர் தொழிலை நாடிச்செல்கின்றார்கள். ஜப்பான் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள்,

ஆண்டுதோறும் இருபது இலட்சம் பிள்ளைகளைக் கல்வியிற் பயிற்றுவித்து வெளியில் அனுப்புகின்றன. அத்தேசத்தில் படித்தவர்களே விவசாயம், தொழில் முதலியவைகளைச் செய்கின்றார்கள். எவரும் சோம்பேறியாக இருப்பதில்லை.

சர்வகலாசாலைகள்

ஜப்பானில் உள்ள நாற்பத்தேழு (47) சர்வகலாசாலைகளில் நூலறிவு முதல் விஞ்ஞானம், தொழில், விவசாயம், வியாபாரம், மருத்துவம், போதுமராமத்து முதலிய பலவகைத் தொழில்களைப்பற்றிய படிப்புக்கள் சொல்லிக்கொடுக்கப் படுகின்றன.

மின்சாரம்

நீரோட்ட உதவியால் மின்சாரம் எடுப்பதற்காக 1891-ம் ஆண்டில் பீவா ஏரிக்கருகில் ஒரு மின்சார உற்பத்திச்சாலை அமைக்கப்பட்டது. அது முதல் படிப்படியாக நாடு முழுவதும் மின்சாரம் பரவலாயிற்று. ஜப்பானில் மின்சார வளர்ச்சியைக் கண்டு வெளிநாட்டாரும் வியப்படைகின்றனர்.

செம்படவக் குடிசைகள் உள்ள சிறு குக்கிராமங்களுக்கும் வழிகளுக்கும் மின்சாரம் சென்றுவிட்டது. இவையன்றி வீடுகளில் எல்லா வகையாலும் பயன்படுத்துவதற்கும் மின்சாரம் சிறு விலைக்குத் தரப்படுகின்றது.

தொழிற்சாலைகள்

தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்கள் மின்சார உதவியாலேயே இயக்கப்படுகின்றன. பெரிய நகரங்களிலும் சில பெரிய கிராமங்களிலும், சில யாத்திரைத் தலங்களிலும் மின்சார டிராம் வண்டிகள் ஓடுகின்றன. சாதாரண வண்டிகளோடு மின்சார ரயில்வண்டிகளும் ஓடுகின்றன. மோட்டார் வண்டிகளுக்கும் மற்றப்போக்குவரவு சாதனங்களுக்கும் வேண்டிய வசதிகள் செய்து தரப்படுகின்றன. நீராவியின் உதவியால் மின்சார உற்பத்திச்சாலையொன்று 1887-ம் ஆண்டு தொடங்கப்பெற்றது. கப்பல்கட்டுந் தொழில் 1895-ம் ஆண்டு தோன்றிற்று. இப்பொழுது ஜப்பானில் செய்யப்படாத பொருள் ஒன்றுமேயில்லை.

தமிழ் நன்றி

[புதுக் கவி]

(கோடுமுடி வித்துவான், பே. கோவிந்தன்)

மன்னவர் வெகுளிக் கஞ்சேன்.
வன்கணார் செயலுக் கஞ்சேன்.
கன்னலிற் பாலிற் றேனிற்
கனியினி லினிமை மிக்க
தென்மொழி யிடத்துஞ், சீர்சால்
செந்தமிழ் நாட்டின் கண்ணும்
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

வெறிமிகு களியர்க் கஞ்சேன்.
வேலெறி வீரர்க் கஞ்சேன்.
பிறமொழிப் பயிற்சி பெற்று,
பெற்றதாய் பேசு விக்கச்
சிறியவாய் திறந்து கற்ற
செந்தமிழ் மொழியை யாராய்ந்
தறியவெண் ணுரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

வளைவுறு தீக்கு மஞ்சேன்.
வன்மனப் பேய்க்கு மஞ்சேன்.
உளமகிழ்ந் தயலா ரார
வுதவி,யூ ணுடை செல்வம்
எளியசுற் றத்தா ருக்கும்
இன்றமிழ்ப் புலவோ ருக்கும்
அளியொடீ யாரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

தறிசுளி யானைக் கஞ்சேன்.
தறுகண்வெம் படைக்கு மஞ்சேன்.
வறியவர்க் கீவோன் அண்ணா
மலைவள்ளல் போல்தஞ் சொத்தால்
திறமிகு பள்ளி கட்டிச்
செந்தமிழ் நூல்கற் பிக்கும்
அறமியற் றுரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

விற்றலை யம்பிற் கஞ்சேன்·
வீசுவாட் படைக்கு மஞ்சேன்.
கற்றசெந் தமிழ்ம ருத்துக்
கலை, யிசை, கல்வி, மற்றும்
பிற்றைநாட் பெருகு மாறு,
பேணிய மாந்தர்க் கியா
அற்பரைக் கண்ணுற் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

கழுது:கொ ளுருவிற் கஞ்சேன்.
கடுமழை பொழிதற் கஞ்சேன்.
அழகினி லழக ராகி
அரசரா யாண்டா ரேனும்,
எழுதரு மணிகள் வாய்ந்த
இன்றமிழ்க் கல்வி யாலாம்
அழகிலா தவரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

நச்சுக்காற் றினுக்கு மஞ்சேன்·
நசிக்குந்துப் பாக்கிக் கஞ்சேன்.
பச்சிளந் தமிழை நூலைப்
பழிப்பிலாப் புலவர் தம்மை
மெச்சுத லின்றி வம்பில்
வெறுக்கின்ற தீயோ ரைக்கண்
டச்சங்கொள் ளாரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

இகழ்கின்ற பகைக்கு மஞ்சேன்.
எரிக்கின்ற பசிக்கு மஞ்சேன்.
புகழ்தமிழ் நூல்கள் கண்டும்,
பொருந்துபல் லறங்கள் கண்டும்,
திகழ்கின்ற வீரங் கண்டும்,
செந்தமிழ் நாடன் நானென்
றகமகி ழானைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

பொழிபெரு மழைக்கு மஞ்சேன்
புல்லியர் பிணக்கிற் கஞ்சேன்
வழிவழி பேசிப், பண்டை
மக்களா ராய்ந்து தந்த

எழுதுசெந் தமிழெ ழுத்தும்,
இன்சொ லும், பொருளும், நூலும்
அழியத்தீ தியற்று வாரை
அம்மநா னஞ்சு மாறே.

கருநிற அரவிற் கஞ்சேன்.
கடும்புயற் காற்றிற் கஞ்சேன்.
பெருமைவீண் சிறுமை யென்றும்,
பேதைமை யறிவா மென்றும்
திரிபுகொ ளிக்கா லத்தில்
செந்தமிழ்க் குறளை யாராய்ந்
தருமைகா ணுரைக் கண்டால்
அம்மநா னஞ்சு மாறே.

குறிப்பு :—இதுகாறும் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்த பத்துப் பத்துக்களும், வைப்பு முறையில் வைத்துத் தமிழ்ப் 'பதிற்றுப் பத்து' என்ற பெயரிட்டு வெளியிடப்படும்.

பெ. கோ.

தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம், திருநெல்வேலி

நாட்டில் தாய்மொழியாந் தமிழ்மொழிக் கேட்டுக்குக் காரணமான முறையில், தற்கால அரசியற்றலைவர் சூழ்செயலின் பயனாக இந்திமொழி நடுத்தரப்பள்ளி வகுப்புகட்குக் (I, II, III Form) கட்டாயபாடமாக வைக்கப்பட இருப்பதைத் தடுத்து, உயர்தனிச் செம்மொழியாகியதும், தென்னாட்டுக் கிளைமொழிகட்குத் தாய்மொழியா யிலங்குவதுமாகிய தமிழைப் பள்ளிக்கூட வகுப்புகட்கெல்லாம் கட்டாய பாடமாக்கவேண்டுமென்று வற்புறுத்தித் தமிழ்மொழியைக் காப்பாற்றும் நோக்கத்துடன், 29-8-37 மாலை, திருநெல்வேலி, தென்னிந்திய தமிழ்ச்சங்கச் சார்பிற் கூடிய தமிழ்மக்கள் பொதுக்கூட்டத்தில் ஷை பெயருடன் கூடிய சங்கம் நிறுவப் பெற்றது.

இச்சங்கத்தின் தலைவராக சிந்துபூந்துறை ரிட்டயர்டு தாசில்தார், திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A. அவர்களும் அமைச்சர்களாக, பாளையங்கோட்டை, திரு. வள்ளல்-சோ. சிவஞான தேசிகர், சாத்தூர்-வழக்கறிஞர் திரு. T. S. கந்தசாமி முதலியார், B. A., திருநெல்வேலி-தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர், திரு.

வ. திருவரங்கம்பிள்ளை ஆகிய மூன்றன்பர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

இச்சங்கத்தின் செயல்களை முடிபுசெய்ய 3-9-37 மாலை ஒரு கூட்டம் மந்திரமூர்த்தி ஹைஸ்கூல் மைதானத்தில் திரு. வள்ளல் சிவஞானதேசிகர் அவர்கள் தலைமையிற் கூடியது. அப்பொழுது, டாக்டர். R. V. சொக்கலிங்கம் பிள்ளை, வித்துவான், P. K. அருணாசலக் கவுண்டர், ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், சாவடி கூத்தநயினார் பிள்ளை, வித்துவான், பு. சி. புன்னைவனநாத முதலியார், இந்துகாலேஜ் உருது முன்ஷி குறைஷி, மா. வே. நெல்லையப்ப பிள்ளை ஆகிய அன்பர்கள் தங்கள் தங்கள் உட்கிடையை ஊக்கத்துடன் அறிவித்துத் தமிழ்த்தாயைப் போற்றி முன்னேற்றுவதற்கான முறைகளையெல்லாம் செய்ய முற்படவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். பின் தலைவரவர்களும் தங்கள் தலைமை முடிவுரையைத் தளர்ச்சியில்லா ஊக்க உரையுடன் பேசித் தங்கள் ஆண்டனுபவச் சிறப்பைத் தெரிவித்தார்கள்.

5-9-37 ஞாயிற்றுக்கிழமைக் காலையில் தமிழ்ப்பற்றுடையார் திரள்திரளாகக் கூடி ஊர்வலம்வந்து தமிழைக் கட்டாய பாடமாக்கவேண்டுமென்று வற்புறுத்திப் பேசிய த. பா. ச. உறுப்பினர் உரைகேட்டு ஊக்கங்கொண்டு மாலையில் நடக்கவிருக்கும் நகர்வலத்துக்கும் பொதுக்கூட்டத்துக்கும் பெருந்திரளாக வந்து பேசித் தீர்மானங்களும் செய்து அனுப்ப நாட்டமுற்றுச் சென்றுள்ளார்கள். துரைத்தனத்தார் தமிழ் மக்கள் மனங்குன்றாது தமிழ்நலங் குன்றாது தமிழை எல்லா வகுப்புகட்கும் கட்டாய பாடமாக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

பு. சி. புன்னைவனநாதன்,
அமைச்சர்,
தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.

சென்னை இந்தி எதிர்ப்புக்கூட்டம்

5-9-1937 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குச் சென்னை சௌந்தரிய மண்டபத்தின்கண் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் S. சோமசுந்தரப் பாரதியார் அவர்கள் தலைமையில், பள்ளிக்கூடங்களில் 1, 2, 3-ஆம் பாரங்களுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாக அரசாங்

கத்தார் வைக்கப்போவதைக் கண்டிக்கும் பொருட்டும், தமிழ் மொழியையும் தமிழர் நாகரிகத்தையும் பாதுகாக்கும் பொருட்டும் சென்னை நகரமக்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று.

வந்திருந்தவர்கள்

திருவாளர்கள் R. P. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., S. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., தூத்துக்குடி மாசிலாமணிப் பிள்ளை. செங்கற்பட்டு ஜில்லாப் போர்டு துணைத்தலைவர் சண்முகம் பிள்ளை, சுவாமி சகஜானந்தம், எம். எல். ஏ., R. மதனகோபால் நாயுடு, பி. ஏ., பி. எல்., ஜஸ்டிஸ் இதழாசிரியர் T. A. V. நாதன், மோசூர் கந்தசாமி முதலியார், பி. ஏ., பண்டிதை நாராயணியம்மாள், அருள் தங்கையா, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் முதலியோர்.

சென்னையிலுள்ள தமிழாசிரியர்களிற் பெரும்பான்மையோர் வந்திருந்தனர். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பாதிப்பேருக்குமேல் மண்டபத்தில் இடமின்மையால்வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். அதனால்,

சென்னைக் கடற்கரையில் மறுநாள் 6—9—'37 மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் போடப்பட்டது. அன்று பச்சையப்பன் காலேஜ் தமிழ் விரிவுரையாளர் மோசூர் கந்தசாமி முதலியாரவர்கள் தலைவராயமர்ந்தனர்.

முதல்நாட் கூட்டம்

தலைவர் திரு. சோமசுந்தர பாரதியாரவர்கள் இந்திமொழி இலக்கண இலக்கியச் சிறப்பில்லாத வெறுமொழியென்றும், அம்மொழி பயிலுவதால் தமிழ்மொழியும் தமிழர் நாகரிகமும் கெட்டுவிடுமென்றும் அதனை அரசாங்கத்தார் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்குவதைத் தமிழ்மக்கள் முழு வன்மையோடு கண்டித்து ஒழிக்க என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் உடனே தீவிரமாய்ச் செய்தல் வேண்டுமென்றும், அதுவே தமிழர் வீரமுடையவர் என்பதைக் காட்டுமென்றும் அவ்வெதிர்ப்பினால் ஏதாவது கேடு வருமானால் அதனைப் பெறத் தாம் முன்னணியில் இருப்பதாகவும், கேட்பார் இரத்தம் துடிதுடிப்பப் பேசினார்கள்.

பின்பு தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்களும், திரு. K. M. பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல். அவர்களும், மகமது சுல்தான் பாக்தாதி அவர்களும், C. N. அண்ணாத்துரை, எம். ஏ. அவர்களும்,

இந்திமொழியைக் கட்டாய பாடமாகத் தமிழ்நாட்டில் வைக்கப்போவதைக் கண்டித்துப் பேசியதோடு அதனை வைக்க விடாமல் தமிழ்நாடெங்கணும் உடனே கிளர்ச்சிசெய்து எடுத்த போரில் வெற்றிபெறுதல் வேண்டுமென்றும் பேசினார்கள். அதன்பின் அடியிற்கண்ட இரண்டு தீர்மானங்களும் எதிர்ப்பொன்றுமின்றி நிறைவேறின.

1. பள்ளிக்கூடங்களில் இந்திமொழியைக் கட்டாய பாடமாக அரசாங்கத்தார் வைக்கப்போவது தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும் கேடு செய்யுமாதலால் சென்னை நகரமக்கள் கூடிய இப்போதுக்கூட்டம் அதனை வன்மையோடு கண்டிக்கிறது.

2 சட்டசபைகளிலும், நீதிமன்றங்களிலும், கல்லூரிகளிலும், அரசியல் அலுவற் கூடங்களிலும் தாய்மொழியாய தமிழ் மொழியிலேயே எல்லாக் காரியங்களும் நடைபெறுதல் வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

இரண்டாம்நாட் கூட்டம்

கூட்டத்திற்குப் பெருந்திரளான மக்கள் ஆர்வத்தோடு வந்திருந்தனர்.

தலைவர் திரு. M. கந்தசாமி முதலியாரவர்கள் இந்திமொழியைத் தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் நுழைப்பதற்கு ஏதோ சூழ்ச்சியுளதென்றும், தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிகத்துக்கும் கேடுவருதலைத் தமிழ்மக்கள் பார்த்துக்கொண்டு வாளாவிருத்தல் கூடாதென்றும், பெருங்கிளர்ச்சி செய்து அதனைத் தகர்த்தெறிதல் வேண்டுமென்றும் உணர்ச்சி ததும்பப் பேசினார்கள். பின்பு திரு. S. சோமசுந்தரப் பாரதியாரவர்களும் திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. மகமது சுல்தான் பாக்தாதி யவர்களும், ஈழத்துச் சிவானந்த அடிகளும் முறையே இந்தி கட்டாய பாடமாதலை எதிர்த்து மக்கள் மனங்கவருமாறும் உண்மை தெளியுமாறும் பேசினார்கள்.

27—7—37-ல்
பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோவிலில்
எருமைக்கடாப் பலி நின்றுவிட்டது.



இப்படத்திலுள்ள எருமையே பலியினின்றும் பிழைத்தது.

மதிப்புரை:

' சோப்புச் செய்தல் '

இந்நூல் பெருந்தொகை செலவு செய்து நீண்டகால அநுபவ முறையில் எழுதப்பட்டதாகும். அதனால் 32 பக்கங்களடங்கிய இதன் விலை ரூபா 1 ஆகும். 'சாயத்தொழில் மாணவன்', 'தேனீ வளர்த்தலும் தேன் சேகரித்தலும்' என்ற நூல்களியற்றிய ஆசிரியர் திரு. M. சக்கரவர்த்தி நயினாரவர்களே இந்நூலியற்றியவராவர். இஃது ஆசிரியரிடத்திலும், நம் கழகத்திலும் கிடைக்கப்பெறும்.

'ஜோதி' என்ற திங்கள் வெளியீடு இரங்கூன் திரு. வே. சாமி நாத சர்மா அவர்களை ஆசிரியராகக்கொண்டு பொதுமக்களின் முன் னேற்றத்திற்கும், நாட்டுரிமைக்கும் பாடுபடும் வகையில் விளக்கப் படங்களுடன் 1937 ஆகஸ்டு மாதம் முதல் வெளிவருகின்றது. இது பர்மாவில் நடைபெறுவதால் பர்மா நாட்டைப்பற்றிய செய்தி கள் நிரம்பவும் அடங்கியிருக்கின்றது. இது தமிழ்மொழி முன்னேற் றத்திற்கும் தமிழ் மக்கள் ஆக்கத்திற்கும் சீரிய தொண்டுகளை யாற்று மென்று நம்புகின்றேம். பர்மா நாட்டுக் கையொப்பம் ரூபா 4.

இந்திய நாட்டுக்கு ஆண்டுக்கையொப்பம் ரூபா 6.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,

47, 31-வது வீதி, இரங்கூன்.

சிறப்புச் சொற்பொழிவு

திருநெல்வேலி


29-8-37 ஞாயிற்றுக்கிழமை மாலை, 6-30 மணிக்கு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் சார்பில், நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில், சாத்தூர் வக்கீல் T. S. கந்தசாமி முதலியார் (B. A.) அவர்கள் தலைமையின் கீழ், கொழும்பு சகிரா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திருவாளர் மு. நல்லதம்பி அவர்கள் 'தமிழும் தமிழ்த் தெய்வமும்' என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மனோன்மணியத்திலுள்ள தமிழ்த்தெய்வ வணக்கச் செய்யுளை அடிப்பொருளாகக் கொண்டு, மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து தமிழைப்பற்றிய அரிய கருத்துக்களும், திருக்கோவையார், தேவாரம் முதலிய நூல்களிலிருந்து தமிழ்த் தெய்வம் என்பது குறித்தும் எடுத்துக்கூறி, தமிழ் மக்களாகிய நாமெல்லோரும் தமிழ்த்தாயை உயிரினும் சிறந்ததாகக்கொண்டு, நம்முன்னோர்கள் தொகுத்து வைத்திருக்கும் அரும்பெருங் கருத்துக்களைப் படித்துணர்ந்து பயன்பெற வேண்டும் என்றும், தமிழன்னையின் தொண்டுகளில் ஈடுபட்டு எங்கும் தமிழ்மணம் வீசச்செய்யவேண்டியது நமது கடமையாகும் என்றும் பேசினார்கள்.

பின்னர், தலைவரவர்கள் பேசியபொழுது, தமிழன்னைக்குரிய எத்தனையோ அணிகலன்களுள் திருக்குறளுக்கு ஒப்பான உயரிய நூல் ஒன்றும் இல்லை. ஆதலினாற்றான், வள்ளுவர் பெருமானுக்குப் பிற்பட்ட ஏனைய ஆசிரியர்களெல்லாம் அவர்கள் செய்த குறளையோ அடியையோ, சொல்லையோ, தங்கள் நூலில் எடுத்தாண்டிருக்கிறார்கள். அன்றியும் பல நாட்டாரும் தங்கள் தாய் மொழிகளிலே திருக்குறளை மொழிபெயர்த்துப் படித்து வருகின்றார்கள்.

திருக்குறள்போல் ஓர் உயர்ந்த நூலை எந்நாட்டாரும் எம்மொழியாளரும் செய்யவே முடியாது, ஏன்? 'பண்பு' என்பதற்குப் பிறமொழிகளில் தக்க சொல் ஒன்றுமில்லை. 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்'; அது தானும் நம் தமிழ்மக்கட்கே உரிய சிறந்ததோர் அணியாகும். பண்புடைமையே பிற நாட்டார்களிடத்தில் வாய்க்கப் பெறவில்லையே, அவர்கள் எவ்வாறு திருக்குறள் போன்ற ஓர் ஒப்பற்றநூலை இயற்ற முடியும்! உண்மை, வாய்மை, மெய்மை என்னுஞ் சொற்களெல்லாம் உள்ளம், வாய், மெய் இவற்றினின்றும் உண்டாகும் பண்பு காரணமாகவே வந்தன. ஆதலின் தமிழ் மக்களாகிய நாம் தமிழை மிகவும் விரும்பிப் பயின்று பயனடைய வேண்டும். எத்துணைதான் பிறமொழி பயின்றாலும் அவையெல்லாம், அசுணப் பறவைக்குப் பறையொலி கொட்டியது போலாகுமேயன்றி நம் தமிழன்னையின் இனிமைக்கு ஒரு சிறிதும் ஒப்பாகா என்று கேட்டோர் யாவரும் மகிழும்படி பேசினார்கள். முடிவில், சங்கத் தலைவர் திருவாளர், M. V. நெல்லையப்ப பிள்ளையவர்களால் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் இரவு 9½ மணிக்கு முடிவடைந்தது.

S. G. மதுரைநாயகம்.



இரவீந்திரநாத தாகூர்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கக] ஈசுவர—புரட்டாசி [பரல்-உ

திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா

கோயில்

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

பதவுரை:—

இடர்கெடுத்து—எனது பிறவித்துன்பத்தை ஒழித்து.

என்னை ஆண்டுகொண்டு—என்னை உன் அடிமையாக ஆண்டுகொள்ள.

என்னுள் இருள் பிழம்பு அற எறிந்து—எனது உள்ளத்தினுள்ளே செறிந்திருந்த மலச்செறிவை முற்றிலு நீக்கி.

எழுந்த சுடர்மணி விளக்கினுள் ஒளி விளங்கும்—(அங்ஙனம் நீ மலச்செறிவை நீக்கியதனால்) உள்ளத்தில் விளங்கித் தோன்றிய தூவெளி ஒளியாகிய அழகிய விளக்கொளிபோலு முள்ள தூய ஆன்ம சிற்சத்தியின் ஒளியை வியாபித்து அதனை விளக்கும் உள்ளொளியாக இலங்கும்.

தூய நற்சோதி யுள்சோதீ—மலம் விரவாததும் உயிர்களுக்கு எப்பொழுதும் நலமே செய்வதுமாகிய அருட்சத்தியினொளியை

வியாபித்து அதற்கு உள்ளொளியாக விளங்கும் பேரின்ப ஒளிப் பொருளே.

அடல்விடைப் பாகா—விடையை ஊர்தியாக ஏறி வலிமையுடன் செலுத்துகின்றவனே.

அம்பலக்கூத்தா—தில்லைச் சிற்றம்பலத்திலே நடனஞ்செய்யும் கூத்தப் பெருமானே.

அயனொடுமால் அறியாமை—(நான்முகனும் மாலும், அகங்காரங் கொண்டு நான்பெரியன், நான்பெரியன், என்று தங்களுக்குள் பூசலிட்டபொழுது) அவர்கள் முடியும் அடியும் தேடிக் காணாத படி.

படர் ஒளி பரப்பி நின்றாயை—அவர்களின் நடுவே விரிந்த ஒளிப்பிழம் பாய்த்தோன்றி ஒளிபரப்பி நின்ற உன்னை.

தொண்டனேன் பணியுமா பணியே—நினக்குப் பணிசெய்யும் அடியேன் நின்னைப் பணியும் விதத்தை என்னோடுடனாய் நின்று பணிந்து நான் பணியும்படி செய்தருள்வாய்.

விளக்கவுரை:—

இடர்கெடுத்து—இடர்—பிறவித் துன்பம்.

என்னை ஆண்டுகொண்டு—'ஆண்டுகொள்ள' என்ற செய்ய என்னும் வாய்பாட்டு வருங்கால வினையெச்சம். ஆண்டுகொண்டு எனத் திரிந்து நின்றது. கொள்ள என்ற ஆண்டு வருங்கால வினை யெச்சம் எறிந்து என்ற இறந்தகால வினையெச்சத்தைத் தழுவி நின்றது.

என்னுள் இருள்பிழம்பு அற எறிந்து எழுந்த—என்உள்—எனது உள்ளம்: இருள் என்பது ஆணவம் வினை மாயை என்ற மும்மலங்களை யும் குறிக்கிறது. அம்மலங்கள் இருள்போலப் பொருள்களை மறைத்து அறியாமையைச் செய்தலால் இருள் எனப்பட்டன. பிழம்பு என்றது மலச்செறிவைக் குறிக்கிறது. எறிந்து ஓரிடத்தி லுள்ள தூயவல்லனவற்றைக் கூட்டிப் பிறிதோரிடத்தி லெறிந்து அவ்விடத்தைத் தூய்மை செய்தல் போல உள்ளத்தினுள்ளே செறிந்திருந்த மலக்குற்றங்களை நீக்கி அவ்வுள்ளத்தைத் தூய்மைப் படுத்தலை எறிந்து என்று உருவகப்படுத்திக் கூறினர்.

அற எறிந்து என்றது சிறிதும் உள்ளத்தில் மலக்குற்றமில் லாதபடி நீக்கி.

ஆண்டுகொள்ள—இருட்பிழம்பற எறிந்து என்றது நெல்விளைய மழைபெய்து என்றாற்போல நின்றது.

எறிந்து என்ற இறந்தகாலவினையெச்சம் பின்வருகிற எழுந்த என்பதி லுள்ள எழுதலுக்குக் காரணம் குறிக்கும் பொருளில் வந்தது.

எறிந்து எழுந்த என்றது எறிந்ததனால் எழுந்த என்று பொருள்படும்.

சுடர்மணி விளக்கின்—சுடர்மணிவிளக்கு—சுடர் ஆகிய மணி விளக்கு இருபெயரொட்டுப் பண்புத்தொகை, சுடர் என்பது தூவெளி ஒளியையும் மணிவிளக்கு என்பது தூய சிந்தையில் தூண்டா விளக்கொளிபோலும் விளங்குகிற ஆன்ம சிற்சத்தியினொளியை யும் குறிக்கின்றன. ஆன்மா, தத்துவங்களைக் கடந்து நிற்கிற நிலையில் தூவெளி ஒளியும் ஆன்ம சிற்சத்தியொளியும் ஒன்றெ னும்படி தூவெளி ஒளியானது ஆன்ம சிற்சத்தியொளிக்கு எடங்கி நிற்றலால் சுடர் (ஆகிய) மணிவிளக்கு என்றார்.

மணி—(அழகிய) விளக்கு என்பது தூயசிந்தையில் விளங்குகிற விளக்கொளிபோலுமுள்ள ஆன்ம சிற்சத்தி ஒளியைக் குறிக் கிறது. உவமை ஆகுபெயர்.

பொய்யா நாவதனாற் புகழ்வார் மனத்தினுள்ளே—மெய்யே நின்றெரி யும் விளக்கொத்த தேவர்பிரான் என்று சுந்தரமூர்த்தி அடிகள் திருக்கழிப்பாலைத் தேவாரம் 9-வது பாட்டில் தூய ஆன்ம சிற் சத்தியினொளியை மெய்யே நின்றெரியும் விளக்கு (தூண்டா விளக்கு) என்று கூறுதல் காண்க.

உள்ஒளி விளங்கும் தூயநற் சோதியுள் ஆன்ம சிற்சத்தியினொளிக்கு அருட்சத்தி ஒளியானது உள்ளொளியாக அதனோடொன்று பட்டு நின்று அதனை விளங்கச் செய்தலால் உள்ஒளி(யாக) விளங்கும் தூயநற்சோதி என்று அடிகள் அருட்சத்தியினொளி யைக் கூறினார். அருட்சத்தி ஒளியானது மலம் விரவாதிருத் தல்பற்றித் தூய என்றும் எப்பொழுதும் உயிர்களுக்கு இன்ப நலமே செய்தலால் நற்சோதி என்றும் இரண்டு அடைகள் கொடுத்துக் கூறினார்.

சோதீ—இது பேரின்ப ஒளியாய் (ஆனந்த ஒளியாய்) விளங்கும் சிவ பெருமானைக் குறிக்கிறது.

மாணிக்கவாசக அடிகள் திருவாசகம் கோயிற்றிருப்பதிகம் பாட்டில் "ஆநந்தமாக்கு மென்சோதி" என்றும், அதிசயப்பத்து எ-வது பாட்டில் "முழுச்சோதி" என்றும், சென்னிப்பத்து ௰-வது பாட்டில் "முத்தனை முதற்சோதியை" என்றும், பிரார்த்தனைப் பத்து க-வது பாட்டில் "உலவா இன்பச்சுடர் காண்பான் அலந்து போனேன்," என்றும் இந்தச் சோதியைக் கூறியிருத்தல் காண்க. அருட்சத்தியினொளியானது ஆன்ம சிற்சத்தி ஒளியை வியாபித்து நின்று அதற்கு உள்ளொளியாயிருத்தல்போல சிவ பெருமானது இன்ப ஒளியானது அருட்சத்தியினொளியை வியாபித்து அதனோடு கலந்து நின்று அதற்கு உள்ளொளியாயு மிருத்தலைக் கூறுவார் தூயநற்சோதியுட் சோதி என்றார்.

சோதீ—விளிப்பெயரானதால் ஈற்றுத்தகர இகரம் நீண்டது.

அடல்விடைப்பாகா—அடல் என்னும் அடைமொழி பாகா என்ற சொல்லைத் தழுவி நிற்கிறது.

விடை—என்பது பசுவாகிய ஆன்மாவைக் குறிக்கிறது.

ஆயபசுவுமடலேறென நிற்கும் என்றார் (திருமூலர் திருமந்திரம் 2411-அவது பாட்டு) சிவபெருமான் எல்லா உயிர்களையும் அவர்கள் இன்ப நலமடையுமாறு தன்வசம் ஆக்கவல்ல தலைவனாதலின் அடிகள் அவனை அடல்விடைப்பாகா என்றார். மாணிக்கவாசக அடிகள் இக்கருத்தை 'எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்—தானேயாகிய தயாபரனெம்மிறை' என்று கீர்த்தித் திருவகவலிற் கூறியருளினர்.

இதனால் ஆன்மாவுக்கு மலம் நீக்கி அறிவை விளங்கச் செய்யும் இறைவனது சிறப்பியல்பாகிய தூவெளி ஒளியானது அம்மல நீக்கமடைதற்கு உலகவாழ்வில் ஆன்மாவைப் பக்குவப்படுத்தி அத்தூவெளி ஒளியைக்கொண்டு தனது பொது இயல்பில் செய்யும் செயல் கூறப்பட்டது.

அம்பலக்கூத்தா—சிவபெருமான் தில்லை அம்பலத்தில் நடனஞ் செய்தல் உயிர்கள் பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறிக்கிறது. இதனால் ஆன்மாவினிடத்தில் அருளை விளங்கச் செய்யும் இறைவனது சிறப்பியல்பாகிய அருளொளியானது அவ்வருள் விளக்கத்தை ஆன்மா பெறும்படி உலகவாழ்வில் அவ்வருளொளியைக்கொண்டு பக்குவப்படுத்தற்கு வேண்டப்படும். அவனது பொது இயல்புச் செயல் கூறப்பட்டது.

அயனொடுமால் அறியாமை படர் ஒளிபரப்பி பரந்து நின்றாயை—நின்றாயை—நின்றவனாகிய உன்னை. தெரிநிலை முன்னிலை வினையாலணையும் பெயர்.

அறியாமை—அறியாமல். மை வினையெச்ச விகுதி. படர் ஒளியென்பது எங்கும் நிறைந்து நின்று விளங்கும் இன்ப ஒளி. ஒளியாய் நின்றாயை என்னாது ஒளிபரப்பி நின்றாயை என்றதனால் உலகில் வாழும் ஆன்மாக்கள் உலக இன்பம் நுகருமாறு இறைவனது சிறப்பியல்பாகிய இன்ப ஒளியானது பொது இயல்பிற் செயற்படுதல் கூறப்பட்டது. இங்ஙனம் இறைவன் தனது இன்ப ஒளியை உலகப்பொருள்களில் நிறையும்படி பரப்பாவிட்டால் ஆன்மாக்கள் அவ்வுலகப் பொருள்களினால் உலக இன்பநுகர்தல் முடியாது. நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை ஆகிய ஐந்து கலைகளில் ஒவ்வொரு கலையிலுமுள்ள கலாவிருத்திகளிலும் தூவெளி ஒளியும் கலாசத்திகளில் அருட்சத்தி ஒளியும் கலாதிபதிகளில் இன்ப ஒளியும் விரவி நிறைந்திருக்கின்றன. இவ்வொளிகள் மேலே சூக்குமமாயேறவேற மிகுத்தும் கீழே தூலமா யிறங்க விறங்கக் குறைந்தும் விளங்குகின்றன. ஆன்மாக்கள் கீழே நிவிர்த்திகலையிலிருந்து ஒவ்வொரு கலையிலும் பெறப்படு மின்ப நுகர்ந்து

ஒவ்வொன்றையும் நிலையிலதென உவர்த்துச் சென்று முடிவில் எல்லாக் கலைக்கு மப்பாற்பட்ட பேரின்ப நுகருகிறார்கள். ஆன்மாக்கள் முடிவில் பரமுத்தி இன்பம் நுகர்தற்கு நிவிர்த்திகலை முதலிய கலைகளின் சோபான இன்ப அனுபவங்கள் படிகளாயிருக்கின்றன. ஆன்மாக்கள் படிமுறையிற்றான் எந்த இன்பமும் நுகர்தல் முடியும்.

தொண்டனேன் பணியுமாபணி—பணியுமாறு என்பது பணியுமா எனக் கடைக் குறைந்து நின்றது.

பணியே என்பதிலுள்ள ஏ-அசை. இறைவன் உயிரோடு கலப்பினால் ஒன்றாய் நிற்கு நிலை. உயிருக்கு அறிவித்தலினால் வேறாய் நிற்கும் நிலை. உயிர் விடயத்தை நுகருமாறு அதனை விடயத்திற் செலுத்தி உடனாய் நிற்கும் நிலை என்ற மூவகை அத்துவித நிலைகளில் பணியுமாறு பணி என்று ஆசிரியர் இறைவனை வேண்டிக் கூறுதல் உடனாய்நிற்கும் நிலையைக் குறிக்கிறது. இறைவனை நான் உன்னைப் பணியும்படி நீ என்னோடு உடலுயிர் போல ஒன்றாய்க்கலந்து நிற்றலும் கண் அருக்கன்போல வேறாய் நின்று நான் உன்னைப் பணிதற்கு என்னை அறிவித்தலுமல்லாமல் உயிரறிவும் கண்ணொளியும் போல என்னோடு உடனாயும் நின்று நான் உன்னைப் பணியுமாறு என்னைச் செலுத்தி உன்னைப் பணியச்செய் என்பது இதன் பொருள்.

காரைக்கா லம்மையார் அற்புதத் திருவந்தாதியில் அறிவானுந் தானே, அறிவிப்பான் றானே, அறிவா யறிகின்றான் தானே என்று கூறும் மூவகை அத்துவித நிலைகளில் அறிவா யறிகின்றான்தானே என்றும் உடனாய்நிற்கு நிலை என்பது இங்கே கூறப்பட்ட பணியுமாறு பணி.

ஆசிரியர் திருமாளிகைத்தேவர் இந்தப் பாட்டின் முன்னிரண்டு அடிகளில் இறைவனது சிறப்பியலில் தூவெளி ஒளி, அருட்சத்தி ஒளி, இன்ப ஒளி ஆகிய மூன்று ஒளிகளும் ஆன்மா பேரின்பப்பேறு அடைதற்கு ஏதுக்களாயிருத்தலைக் கூறிப் பின் இரண்டு அடிகளில் பரந்து நின்றாயை என்பதுவரை அம்மூவகை ஒளிகளும் ஆன்மா அப்பேரின்பப் பேற்றைப் பெறுதற்கு உலக வாழ்வில் பக்குவ மடையுமாறு செய்ய இறைவன் தனது பொது இயல்பில் அம்மூவொளிகளையும்கொண்டு பெய்யுஞ் செயல்களைக் கூறுகின்றார். முடிவில் இவ்வாறு சிறப்பியலிலும் பொது இயலிலும் விளங்குகின்ற உன்னைப் பணியுஞ்செயலை நீயே என்னோடும் உடனாயும் நின்று உன்னிடத்தில் செலுத்திப் பணியும்படி செய்தருள்க என்று அவர் தமது வேண்டுகோளைக் கூறுகின்றார்.

சிவநேயர்கள் இந்த ஒளியிற்கண்ட உண்மையை 15-வது சிலம்பு 10, 11, 12 சிலம்புகளிற் கண்ட தேவாரங்களுடன் ஒத்துப்பார்த்து அறிக.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழ் நாடும் 'இந்தி'யும்

[திரு. இளவழகனுர் எழுதியது]

அயல்மொழி புகுதலைத் தடுக்காமல் விடுவது தீது.

இனி, ஆறு கடலிற் கலந்து கடல் நீர் என்று பெயர் கொள்ளுதல்போல நாமும் நமது பெயரும் மொழியுங் கெட்டு இந்திமொழியினரானபின், அப்புறம் இந்திமொழியினரோடு உறவாடுதல் என்ன இருக்கின்றது? அங்ஙனம் உரைத்தலில் ஏதேனும் பொருளிருக்கின்றதா? அப்போது நாமே இந்தி மொழியினர்தாமே!

> பிறமொழிச் சேர்க்கையால் நன்மை கோள்ளுதலென்பது அம் மொழியாளர்களின் அறிவைப் பயன் படுத்துதலேயல்லாமல் அவர் மொழிகளை அப்படி அப்படியே சேர்த்துக்கோள்ளுதலன்று; காண்மின்!

அற்றன்று, அவர்கள் அறிவு கலக்கும்போது அவர்கள் மொழியுங் கலப்பது இயற்கையெனின், அதற்குத்தான் அவற்றை அளவுபடுத்தி ஒழுங்குசெய்ய அணைகள் கோல வேண்டுவது அரசினர் கடமையாகுமென்பது. நிரம்பப் பெருகிவரும் ஆற்று நீரை ஓரிடத்தில் அணைகட்டி எப்போதும், அங்கே அதனை ஆராயுங் குழுவினரை நிறுத்தி அவ்வப்போதும், அவர்கள் ஆராய்ந்து ஆராய்ந்து இன்றியமையாத அளவுக்குத் தூய்தாக்கி உள்நாட்டில் விட இடஞ்செய்வது பொருந்துமேயல்லாமல், அது பெருகிவருமாறே விட்டுவிட்டு வாளா இருந்துவிட்டால் அவ் வெள்ளம் தாறுமாறுகப் பெருகப் பாய்ந்து ஊரையும் அழித்து ஊரில் உள்ள உயிர்களையும் அழித்து ஒழித்துவிடுமன்றி வேறென்ன செய்யும்?

இங்ஙனம் பிறமொழிச் சேர்க்கையால் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் எண்ணவுங் கொடிய அத்துணைப் பெருந் தீங்குகள் பயந்து அவற்றை இருக்குமிடமுந் தெரியாமல் துடைக்க இருக்கையில், இந்திமொழிப் பயிற்சியால் வட நாட்டாரோடு கலந்து பேசலாம் என்னும் ஒரே எளிய காரணம் சிறிதேனுங் கருதிப்பார்க்கத் தகுந்ததுதானு? இந்திமொழிச் சேர்க்கையால் தாய்மொழி ஊறுபாடு

அடையாது என்று சொல்லுகின்றவர்களெல்லாரும் சும்மா கிள்ளுகிரைபோல் நினைத்து எளிதாகச் சொல்லிவிடுகின்றார்களேயல்லாமல், அஃது எங்ஙனம் ஊறுபாடு அடையாது. அதற்கு மாறாக அஃது எங்ஙனம் வளர்ச்சியடையும்? இது வரையிற் கல்மன் தெரியாமற் பிறமொழிகளைச் சேர்த்து வந்தமையால் தமிழ்மொழி என்ன நிலைக்கு வந்திருக்கின்றது? என்று ஏதேனும் வரலாற்றுமுறை அளவைமுறை மொழியாராய்ச்சி முறை முதலியவற்றால் ஏதுக்கள் காட்டிச் சிறிதேனும் விளக்குகின்றார்களா? இல்லையே!

தமிழ்மொழிக்குப் பிறமோழி உதவி தேவையில்லை!

கிரீக்கு, இலத்தீன், பிரெஞ்சு முதலான அயல்மொழிகளையெல்லாந் தனவென்று அப்படி அப்படியே தொகுத்துக் கொண்டு ஒரு கலப்பு மொழியாகி ஆங்கிலம் வழங்கிவருகின்றமையினாலேயே அது சிறந்த நாகரிக மொழியாக ஆகிவிடுமா? அதனை மேன்மேலும் திருத்தி அழகாக்கி அதன்கண் ஏராளமான இனிய அறிவுநூல்களையெல்லாங் கவர்ச்சியாக எழுதிவருகின்றமைபற்றியே ஆங்கில மக்கள் நன்கு மதிக்கப் படுகின்றார்களல்லாமல் வேறென்னை? ஆங்கிலம் உலகமெங்கும் விரும்பப்படுவதற்குக் காரணம் அவர்கள் அதன்கண் தொகுத்துவைத்திருக்கும் அறிவு நூல்களுக்காகவும், செய்து வைத்திருக்கும் அழகிய மொழித் திருத்தங்களுக்காகவுமேயல்லாமல் வேறென்னை? மற்றப்படி, இன்னதென்று குறித்துக் கூற இயலாத அத்துணைப் பழைய காலத்திலிருந்தே தமிழ் மக்கள் தம்முடைய சிறந்த அறிவு உணர்வுகளின் பெரும் பழக்கத்தால் நல்ல பொருட்காரணங்களுடன் தாமே உண்டாக்கிச் சிறந்த இலக்கண வரம்புகளோடு இன்றுகாறும் உயிரோடு வளர்த்துவரும் இனிய தமிழ்மொழியுடன் ஆங்கிலம் மொழிவகையிற் சிறப்பாக ஒப்பிடத் தகுந்ததுதானா? பிறமொழிகளாலேயே ஆங்கிலமொழி ஆக்கப்படவேண்டுமானால் அதற்கு அப் பிறமொழிகள் சேர்க்கை தேவையே. அங்ஙனம் பிறமொழிகளிலிருந்து தோன்றாமல், அழகிய பொருட்காரணங்களோடு தெய்வச் செயலாய் நன்கமைந்து வந்த அருமைத் தமிழ்மொழிக்குப் பிற மொழிகளின் சொல் துணை எதற்கு? ஒரு வரம்பிற்படாத பிராகிருதக் கொச்சைச் சொற்களோடு அராபி பாரசீகச்சொற்கள் கலந்து உருவான உருது சொற்களும், அவற்றோடு வடமொழிச் சொற்களுஞ் சேர்ந்து பல வாறாய்த் திரிந்து திரிந்து வந்து 'இந்தி' என ஒரு மொழி ஒழுங்குபட வேண்டுமானால் அதற்கு அப் பிறமொழிகளின் உதவி வேண்டியதுதான்! தனித்த பேரழகால் தெய்வமே

போல் வளர்ச்சியுருக் கொண்டு காட்சியளிக்குந் தீந்தமிழ் மொழிக்குப் பிறமொழிகளின் சொற்சேர்க்கை எதற்கு? அயல் மொழியாளர்கள் புதுமை புதுமையாக உணர்ந்து வரும் கலைக் கருத்துகளுக்காகத் தமிழுக்குப் பிறமொழிச் சேர்க்கை தேவையே எனின், அவற்றைத் தமிழ்ச் சொற்களிலேயே எளிதாக ஆக்கிக்கொள்ளலாம்.

தமிழில் 'இளநீர்' என்று ஒரு சொல்லிருப்பதை நினைத்துப்பாருங்கள். இளந்தேங்காய்க்கு முதன் முதலாக இப்போது தான் நாம் அப்பெயரிடுவதாக வைத்துக்கொள்வோம். என்ன நடக்கும்? எல்லாரும் ஏளனம் செய்வார்கள். 'நீரிலாவது இளமையாவது; இளைய நீர் எப்படியிருக்கும், முதியநீர் எப்படியிருக்கும்? அல்லது நீரில் இளமையுள்ளது மெல்லிய நீரா? எப்படியோ நீரில் இளமையானதொன்று இருப்பதாகவே வைத்துக்கொண்டாலும், அது தேங்காயின் இளமையை உணர்த்துவது எப்படி? எனவெல்லாஞ் சொல்லாக்க மறுப்புக்காரர் பலவாறுஞ் சொற்போர் தொடுத்து இகழ்வர். ஆயினும் அச்சொல் அப்பொருளுக்கு என்றேனும் ஒரு நாளில் எவரேனும் ஒருவரால் எளிதாக உண்டானதேயல்லாமல் வேறில்லை. இன்று என்ன ஆற்றலோடு அச்சொல் இளந்தேங்காயை உணர்த்துகின்றது, பாருங்கள். ஒரு பொருளைக் குறிக்கும் சொல் அப்பொருளின் எல்லாத் தன்மைகளையும் ஒருங்கே உணர்த்தவேண்டுமென்னுங் கட்டாயமில்லை, காண்மின்! பிறமொழிச்சொற்களைப் பொதுமக்கள் இருவகை வழக்கிலும் வழங்கத்துவங்குமுன் அரசினர் அதற்கொரு நல்லெண்ணமுள்ள அறிஞர் குழாம் அமைத்து அவர்கள் வாயிலாக அச்சொற்களை அழகிய தாய்மொழிச் சொற்களாக உருவாக்கி வெளியிடுவிக்க, அவைகொண்டு நூல்களும் இதழ்களும் எழுதியும் பாடசாலைகளும் விரிவுரையவைகளும் பேசியும் இம்முறைமையை விருப்பத்தோடு மேற்கொண்டு வருமானால், எத்தகைய பிறமொழிக் குறியீட்டுச் சொற்களுக்கும் இனிய செந்தமிழ்ச் சொல்லாக்கங்கள் செய்து முடித்து அவற்றை எளிதாக வழங்கவிடலாம். தமிழுக்கு அவ்வாற்றல் நிரம்ப உளது. தமிழிற் சொல்லாக்க முறைகள் பல உள்ளன. ஒன்று காட்டலாம். தமிழ் என்னுஞ் சொல்லையே நினைவுகூர்மின்! 'தமி' என்பது 'தனி'; சிறப்பெழுத்தாகிய 'ழ'கரம் சேர்த்துத் 'தமிழ்' என்றனர். பிறிதொரு மொழியிலிருந்து தோன்றியதன்று என்பது கருத்து. மிக்க மொழிநூலறிவோடு சிறந்த பொருட்கருவுள்ளதாக எளிய முறையில் தமிழ்ச் சிறப்பியல்பு தோன்ற இச் சிறுசொல் எவ்வளவு நய

மாய் அமைக்கப்பட்டிருக்கின்றது பார்மின்! ஆதலின், பிற மொழிச்சொற்களை அப்படியே நமது செந்தமிழ்மொழியிற் சேர்க்க வேண்டிய கட்டாயம் சிறிது மில்லையென்க.

அப்படியல்லாமல், அவ்வம்மொழிகளின் வரலாற்றுண்மைகள் தெரியும்பொருட்டுச் சில பெயர்க்குறியீட்டுச் சொற்கள் மட்டுஞ் சேர்க்கவேண்டியது மிகவுங் கட்டாயமாயிருந்தால், அவ்வம்மொழி எழுத்துக்களை நீக்கி அவற்றைத் தீஞ்சுவைத் தமிழ் வடிவமாக்கியே சேர்க்கவேண்டும். அங்ஙனங் கட்டாயமாய்ச் சேர்க்கவேண்டிய சொற்கள் ஆயிரத்துக்கு ஒரு சொல்கூடத் தமிழுக்குத்தேறுமோ என்னவோ, அதுவே ஐயமானது. எதற்கும் பிறமொழிகளை அளவுபடுத்தித் தமிழை அழகாக வழங்கவைக்கும் பொறுப்புத் தேயத் தொண்டர்கட்கு முன்னுளிருக்க, அதனை விடுத்து வீணாக இந்திமொழியையுந் தமிழகத்தில் தெருவெலாம் முழங்கச் செய்ய இப்போது என்ன கட்டாயம் வந்துவிட்டது. கூறுமின்!

தமிழ் நாட்டுக்கு இந்திமொழி ஏற்றதன்று.

மேலும், நம் தமிழ்நாட்டு மக்கள் தாய்மொழி அன்பு மிக்கவர்களாயில்லை. அத்தகையோர் நடுவிற் பிறமொழிகள் சேர்ந்தால் அவர்கள் அவற்றைக் கட்டாயமுள்ள இடத்து மட்டும் அளவாக வழங்கித் தமது மொழியைப் பாதுகாத்துக் கொள்ளமாட்டார்கள். 'வடநாட்டு மக்கள் அயல்மொழியாகிய ஆங்கிலத்தைப் பேசுதற்கு முகஞ்சுளித்தலின், தென்னாட்டவரான நாம் அவர்களோடு அளவளாவும்பொருட்டு ஆங்கிலத்தைக் கையாள இயலவில்லை; ஆதலால், அவ்வடவர் மொழியாகிய இந்தியை நாம் கற்றுத்தான் ஆகவேண்டும்' என்றும் நம்மவரிற் சிலர் காரணங் காட்டுகின்றார்கள். வடநாட்டவர் தமக்கு அயல்மொழியாயிருப்பதைப் பேச விரும்பாதபோது நாம் மட்டும் நமக்கு அயல்மொழியாயிருப்பதைப் பேச விரும்பலாமோ? அப்படியல்ல. இந்திய நாகரிகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அதற்கு அயல்மொழியாயுள்ள ஆங்கில மொழியைப் பேசுவது முறையாகாது எனின், தமிழ் நாகரிகத்தைப் பாதுகாக்கும்பொருட்டு அதற்கு அயல்மொழியாயுள்ள இந்திமொழியை மட்டும் தமிழ்மக்கள் பேசுவது முறையாகுமோ? அற்றன்று, இந்திய மக்கள் எல்லாரும் ஒற்றுமையாய் ஓரினத்தவராய் விடுவது வலிவும் வசதியுந் தருமென்றால், அங்ஙனம் வலிவுவசதியையே கருதுவது நோக்கமாயின், எல்லாருமே ஆங்கிலமக்களாய் இனந்திரிந்து ஒற்றுமையாய்

ஒரே ஆங்கிலமொழியாளராய் மாறிவிட்டால் இன்னும் பெரிய வலிவும் பெரியவசதியுந் தருமல்லவா? என்பார்க்கு என்ன விடை தருவது. ஆதலின் அவரவர் நாகரிகங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகைக்கு ஊறுபாடாக எக்காரணங்கொண்டும் பிறமொழிகளைக் கொண்டுவந்து புகுத்துதலாகாது; அங்ஙனம் புகுத்துதன் மேலும் அவற்றைக் கற்கும்படி கட்டாயமுஞ் செய்தல் நாட்டின் நலம் விரும்பும் மேன்மக்களுக்குச் சிறிதும் அடாத செயலாம் என்க.

தமிழ்ச் சொற்களில் தமிழ் நாகரிகப் பதிவு!

ஒரு மொழி பேசுவோர் நாகரிகத்துக்கும் அவர் மொழிக்கும் மிக்க இயைபு உண்டு. அம் மொழியாளர்களின் கருத்துகளெல்லாம் அவர் மொழியில் அப்படியே பதிந்துவிடுகின்றன. பின்பு அம்மொழிகள் உள்ளவரையில் அக்கருத்துகளும் அழியமாட்டா. 'கண்டித்தல்' என்பது தமிழில் ஒரு சொல். கட்பார்வையினாலேயே பிறரைத் திருத்துதல் என்பது அதன் பொருள். தமிழ்மக்களின் பெருந்தன்மையான இந்நாகரிகச் செயல் அச்சொல்லிற் பதிந்துவிட்டது. அச்சொல் இருக்கும்வரையில் அப்பொருளும் இருக்குமன்றோ! எக்காலமுந் தமிழ் மக்களின் மேன்மையை விளக்கிக்கொண்டிருக்கும். பிறமொழிகளைவிடத் தமிழ்மொழிக்கு இம்மேம்பாடு மிகுதி. 'உண்மை', 'வாய்மை', 'மெய்மை' என்னுஞ் சொற்கள் மனமொழிமெய்கள் மூன்றாலும் மக்கள் உண்மையாய் நடக்கவேண்டும் என்னுஞ் சிறந்த நாகரிகத்தைக் காட்டுகின்றன. இங்ஙனம் பிறமொழிகளில் இருப்பதாயின் அவையுஞ் சிறப்பே. இயற்கைக்கு மாறாகாதபடி செய்தலை 'இயற்றுதல்' என்ப. இதனால் தமிழ்மக்களின் செய்கைத் திறமும் நோக்கமும் பெறப்படும். இங்ஙனந் தமிழ்ச் சொற்களால் வெளிப்படும் தமிழர் நாகரிகம் அளவில்லாதனவாம். நிலத்தை இழந்துவிடலாம்; பொருளை இழந்துவிடலாம். ஆனால், நாகரிக உணர்வுகள் பொதிந்த மொழிமட்டும் அவரவர் உயிரோடு பிணைந்திருந்து அவ்வுயிரைத் தூய்மை செய்வதாகலின், எஞ்ஞான்றும் அம்மொழியை இழந்துவிடுதல் ஆகாது. அஃது அவரவர் உயிரினும் மிகுதியாக ஓம்பப்படும் விழுப்பம் வாய்ந்தது. ஆதலால் அதனோடு பிறமொழிகளைக் கொண்டுவந்து மானவாரியாய்ப் புகுத்தித் தமிழ்ச்சொற்கள் இன்னவை பிறமொழிச் சொற்கள் இன்னவை என்று உருத்தெரியாதவாறு செய்து, தமிழ்மக்களின் நாகரிகம் இன்னது தான் என்று அறிந்துகொள்ள இயலாதபடி அதனைப் பாழாக்குதல் ஆகாது என்க.

வடநாட்டவர் உறவுக்காக
ஒரு வடநாட்டுமொழி கட்டாயமில்லை.

இனி, 'வடநாட்டவரோடு வாணிகம் முதலியன செய்வதற்கு இந்திமொழிப் பயிற்சி உதவிசெய்யும், அதனைக் கற்காவிட்டால் நமக்குத்தான் இழப்பு' என்றுங் கூறுகின்றனர். இவைபோல்வனவெல்லாம் அத்தனை முதன்மையான ஏதுக்களாகா. வாணிகம் செய்யும் பிறநாடுகளிலெல்லாம் ஒரு நாட்டுப் பொதுமக்கள் அவ்வளவுபேரும் மற்றொரு நாட்டுப் பெரும்பான்மை மொழியை அதற்காகக் கற்றுக்கொள்கின்றனரா? அதுவுங் கட்டாய பாடமாக வைத்தா கற்றுக்கொள்கின்றனர். அப்படிக் கற்றுக்கொள்வதானால் ஒவ்வொரு நாட்டாரும் எத்தனை மொழிகளைக் கட்டாயமாய்க் கற்றுத் தீரவேண்டும். தமிழ் நாட்டுப் பொதுமக்கள் அத்தனைபேருமா வடநாட்டாரோடு வாணிகஞ் செய்யப்போகின்றனர்! அத்தனைபேருமா வடநாட்டுச் சுற்றுப்பயணஞ் செய்யப்போகின்றனர். தென்னாட்டிலுள்ள புனிதத் திருப்பதிகளுக்கு மேலாகவா வடநாட்டிலிருக்கின்றன! பிறநாடுகளிலில்லாக் காட்சிகளா வடநாட்டில்! அப்படியானால் பிறநாடுகளெல்லாந் தமிழ் நாட்டுப் பொதுமக்கள் அத்தனைபேருஞ் சுற்றுப்பயணஞ் செய்யவேண்டுமா? தமிழ் நாட்டுக்கே கேடுபயப்பது இந்திமொழிச் சேர்க்கையெனின், அதனாற் பிறநலங்கள் எத்தனை வரினும் தமிழ் நாட்டுக்கு ஆவது என்ன உண்டு?

பசிக்கின்றது என்றால், திருவள்ளுவர் 'நிலத்தைப் பார்' என்றனர்.

> "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னு நல்லாள் நகும்"

என்பது அவர் திருமொழி. தமிழ்நாட்டில் ஏராளமான நிலம் செவ்வையாகப் பயிரிடப்படாமலிருக்கின்றது. அதற்கான ஏற்பாடுகள் நடந்தால் தமிழ் நிலமே தமிழர்க்குப் பசிதணிக்கும். உழுதுண்டு வாழ்வதே வாழ்வாம். பிறரோடு உறவு ஓர் அளவுக்கே வேண்டும்; அதுவும் பிறர்பால் தாம் ஒன்று எதிர்பார்ப்பதைவிடத் தாம் ஒன்று பிறர்க்கு உதவு நிலையில் அவ்வுறவிருத்தலே மேல். தமிழ்நாட்டார் பிறரை எதிர்பார்ப்பதினும் பார்க்கத் தமது நிலத்தையே விடாப்பிடியாய் நம்பவேண்டும். திருவள்ளுவர் வாணிக முயற்சியை உழவினும் மேலானதாக மிகுத்துப் பேசாமையை எண்ணிப்பார்க்க வேண்டும். தங் நிலை குலையாத முறையில் எவரோடும் ஏது செய்யினுந் தீங்கில்லை.

நிலத்திலிருந்து விளைந்து வந்ததையும் பிறவற்றையும் ஒரு சாரார் வாணிகம் செய்யப்போகின்றனர். உழவரினும் வாணிகஞ் செய்வார் எண்ணிக்கை குறைவு. அவருட் சிலரே பிறநாட்டாரோடு வாணிகஞ் செய்வர். இதற்கு அத்தனைபேரும் வடநாட்டு இந்திமொழியைக் கற்பது எதற்கு? அப்படிக் கற்றுக்கொண்டாலும் வடநாட்டவர் எல்லாரோடும் அவ் விந்திமொழி ஒன்றுகொண்டே அளவளாவ இயலுமா? மற்றநாட்டு வாணிபங்கட்கும் அவ்வம்மொழிகளையுங் கற்கவேண்டாமா? மேலும் பிறமொழிச் சேர்க்கைகளால் முன்னே காட்டியபடி தமிழுந் தமிழ் நாகரிகமுந் தொலைந்து தமிழ் மக்களும் நிலைகுலைந்து போவதானல் அப்புறம் யார் வாழ்வதற்காக இவ்வாணிப முயற்சி!

ஆங்கிலமே பொதுமொழியாதற் குரியது.

இனிப் பிறமொழி மக்களுடன் அளவளாவுதற்கும் உலகப் போக்கோடு ஒன்றுபடுவதற்கும் தாய்மொழி அறிவுக்கு வேருக ஒரு பொதுமொழியறிவு மக்கட்கு இருப்பது நல்லது தானே யென்றுல், நல்லதுதான்; விரும்புவார் கற்கலாம். விரும்பாதவரைக் கட்டாயப்படுத்துதலாகாது. ஏனெனில், விரும்பாதவரைக் கட்டாயப்படுத்திக் கற்பித்தாலும் அவர் வாழ்வு அம்மொழியினல் வளர்ச்சிபெறவில்லை. ஆங்கிலமொழி கற்றவர் அத்தனைபேரும் ஆங்கிலமொழியினல் ஆம் பயனைப் பெற்றவரல்லர். பெரிய பொருட்செலவுதான் கண்டபயன். விரும்புவார் தவிர ஏனையோர்க்கு அவர் வாழ்க்கை பயன் படும்படியான தொழிற் பயிற்சிகளைக் கட்டாயமாய் உண்டு பண்ணவேண்டுமென்னுங் கிளர்ச்சி மிகுந்து வரும் இக்காலத்தில், மாணவர்களுக்கு மற்ெருரு மொழிச்சுமை எதற்கு? எல்லாரையும் பிறமொழிகள் கற்கவிடுவது நாடு இப்போதிருக்கும் வறுமை நிலையில் வீண்பொருட்செலவும் வீண் முயற்சியுமாகவே முடியும். பிறமொழிகள் கற்று மக்கள் அடையவேண்டும் அறிவு நிலைகளைத் தமிழ்மொழியிலேயே சிறந்த நூல்கள் எழுதி அவற்றின் வாயிலாக அறியவைப்பின் மக்கள் அறிந்துகொள்கின்றனர். நாட்டுமொழியும் வளர்ச்சியடையும். தாய்மொழியிற் கற்பதை விடவா அறிவுநூற்கல்விகள பிறமொழியிற் கற்பது எளிது. இம்முயற்சிமட்டும் நன்கு நடந்தால் இருநூறு முந்நூறு ஆண்டுகளாக இப்போது ஆங்கிலமொழிகொண்டு நம் நாட்டவர் அடைந்த அறிவு நலங்களைவிட ஒரு நூற்றுண்டுக்குள்ளாகவே இன்னும் பன் மடங்கு மிகுதியான அறிவு நலங்களை இன்னும் பன்மடங்கு மிகுதியானபேர் எளிதிற் பெறக்கூடும். தமிழ்நாடு முழுமைச்

கும் தமிழ்மொழியே அரசுமொழியாய் வீற்றிருந்து மற்ற மொழிக்குத் தலைமை காட்டாதிருந்தால், பிறமொழிகள் அறியாமையாற் பொதுமக்கள் இடர்ப்படமாட்டார்கள். தாய்மொழியையும் மதிப்பாக விரும்புவர். ஆகவே நாடு இன்றுள்ள நிலையில், எதன்பொருட்டோ, விரும்புவோர் பிற மொழிகள் கற்றாற்போதும்.

ஆங்கிலமே இப்போது உலகமொழியாதலின், விரும்புவோர், அஃதொன்றுமே கற்பது நல்லது. இப்போதே அஃது இந்தியாவுக்கும் பொதுமொழியாயிருக்கின்றது. மேலும், நூற்செழிப்பில் ஆங்கிலமே தலைமை காட்டுகின்றது. ஆதலின் அதன் பெரும்பான்மையான நலங்கருதி அதனை இந்திய நாட்டவர் பொதுமொழியாகக் கொள்ளலாம். அவ்வகையில் அதனை அயல்மொழியென்று வேற்றுமை கருதாதிருப்பது நல்லது. மற்றப்படி வேறு மொழிகளைப் புகுத்துவது வீண்முயற்சிக்கும் வீண்செலவுக்கும் பிற அழிவுகட்குமே இடமாகும். அதுவுங் கட்டாயப்படுத்தப் பார்ப்பது கொடுஞ் செயலாம்.

மேலுந் தமிழ் நாட்டுக் கொள்கைகளுக்கு ஆங்கிலமொழி உதவி செய்வதுபோல் வடநாட்டுமொழிகள் உதவி செய்ய மாட்டா. ஆங்கிலம் வந்த பின்னரே தமிழ்மொழியுந் தமிழர் நாகரிகமுந் தலையெடுத்தன. ஆங்கில மக்கள் தமிழின் உயர்வை அறிந்து பாராட்டுகின்றனர். வடமொழிமக்கள் தமிழ்க்கு அங்ஙனம் ஆக்கந்தருகின்றாரில்லை. வடநாட்டுமொழிகளின் சேர்க்கையால், சில காலத்துக்கு முன் வரையில், தமிழ் அவ்வட நாட்டு மொழுகளிலிருந்து தோன்றியதாகக் கருதப்பட்டு வந்தது. ஆங்கிலமொழி வந்தபின்பே தமிழ் ஒரு தனிமொழி என்னும் உணர்ச்சி ஓங்கிற்று. ஆதலின் ஆங்கிலமொழியையே பொதுமொழியாகக் கொள்ளும்படி தமிழர் முயற்சி செய்தல் கட்டாயமாகும்.

இந்தியினும் வடமொழி கற்பதே நல்லது.

மற்றப்படி விரும்புவோர் எத்தனை மொழிகள் வேண்டுமானாலுங் கற்கட்டும். அஃது அவரவர்கள் அறிவு நிலையையும் பொருள் வசதியையும் பிற நலங்களையும் பொறுத்தது. பிற மொழிகளை அவர்கள் தமது சொந்தச் செலவிலேயே கற்கலாம். இந்நோக்கம் அறிவுவளர்த்துக்காதலின் தமிழ் மக்களில் அயல் மொழிகள் கற்க விரும்புவோர் முதலில் ஆங்கிலத்திலும் அதற்கடுத்தபடி வடமொழியிலுமே கருத்திருத்தல் நல்லது. இப்போது, அங்கங்கே பாடசாலை உயர்வகுப்புகளில் வட

மொழிக்கும் ஆசிரியர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனர். வடமொழி தொன்றுதொட்ட மொழியாதலோடு நூல் வளமும் உள்ளதாகும். ஏற்கெனவே தமிழ் நூல்களில் விரம்ப வடசொற்கள் கலந்திருத்தலின், அவற்றின் மொழிப்பொருள் தெளியவும், தமிழிலிருந்து அவற்றை அகற்றி அவற்றிற்கு நேரான தமிழ்ச்சொற்கள் ஆக்கிப் பெய்யவும் ஏதுவுண்டாகும். பிறவெல்லாம் அவற்றிற்கு அடுத்தபடியிலேயே வைத்துக் கருதுதல் அறிவுவளம் பெறவிரும்புவார்க்கு நன்மை பயப்பதாகும் என்க.

முடிவுரை.

என்று இதுகாறுங்கூறியவாற்ருல், நாட்டில் வறுமை நீங்கி மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கு மொழிக்கல்வியே முதன்மையானதென்பதும், தமிழ்நாட்டவர்க்குத் தமிழ்மொழிக்கல்வியே முதலிற் கருதுதற்குரியதென்பதும், எல்லாரும் எழுதப்படிக்கத் தெரிவதற்கு, முதலிற் கட்டாயக் கல்வித்திட்டங்கள் கையாளவேண்டும் என்பதும், பின்பு அம்மக்களை அறிவில் உயர்த்துதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதும், அதற்கான அறிவு நூல்களெல்லாம் தமிழ்மொழியிலேயே இயற்றுவிக்கவேண்டும் என்பதும், பிறமொழிச் சேர்க்கைகளால் தமிழ்மொழியுந் தமிழ் நாகரிகமுந் தமிழ்நாடும் நிலைகுலைந்துபோதல் வரலாற்று முறையிற் புலப்படுதலின், அம்மொழிகளும் அம்மொழிச்சொற்களும் தமிழிற் கலவாதபடி அணைகோலுதற்கும், அவற்றுட் கட்டாயமான பெயர்க்குறியீட்டுச் சொற்கள் மட்டும் தமிழ்வடிவாக்கிச் சேர்த்தற்பொருட்டும், சிறந்த பிறமொழிக்கருத்துகளைத் தமிழிற் கொண்டுவருதற்கும் ஓர் அறிஞர் குழாம் அரசினரால் கட்டாயம் அமைக்கப்படவேண்டும் என்பதும், அவ்வறிஞர் குழு அறியாமல், நாட்டுப் பொதுமக்களிடையில், முதன்மையாக நூல்வழக்கில், பிறமொழிச் சொற்கள் சிறிதும் வழங்கவிடலாகாதென்பதும், இவ்வளவும், தமிழ்நாட்டு வரிப்பணத்திற் கல்வித்திட்டத்துக்காக ஒதுக்கப்படும் பகுதியில் ஒரு பெருந்தொகை கொண்டு முதலிற் கட்டாயமுறையிற் செய்யவேண்டுவன வெல்லாஞ் செய்துவிட்டு, அதன் பின்னரே, பிறமொழிப் பயிற்சியை விரும்புவோர்க்காக அவர்க்கு அதற்காஞ் செலவில் அவர் கைப்பணமும் நாட்டுச் செல்வர்கள் உதவியும்போகப் பின்னுந் தேவையானுல் ஒரு நன்கொடைத்தொகையை அரசினர் உதவலாம் என்பதும், மக்கள் அனைவருந் தமது இளம்பருவமெல்லாம் நன்ருகத் தமிழ் கற்றபின் அப்புறமே, விரும்பினுற், பிறமொழிப் பயிற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்பதும்,

ஆங்கிலமொழியொன்றே அவர் விருப்பப்பாடமாகப்போதும்; மேலும் விரும்பினல் வடமொழி ஒன்று கற்கலாம்; அதற்கு மேல் அவரவர் விருப்பம்போற் கற்கலாம் என்பதும், தமிழ் மக்களுக்கு எக்காரணங்கொண்டும் இந்திமொழிப் பயிற்சி தேவையில்லையென்பதும், தேவையில்லாத தொன்றைக் கட்டாயப்படுத்துதல் கொடுஞ்செயலாம் என்பதும், தேயத் தலைவர்கள் மேற்காட்டியவாறு தமிழ்க்காவனவெல்லாஞ் செய்த பின்பே மற்றவை செய்யக் கருதுவார்களாக வென்பதும் பிறவும் நன்கு விளங்கும்.

அருமைத் தமிழ்மக்களே, தமிழ்மொழியைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் அதற்குத் தடையாயுள்ளவற்றைக் களையவும் வீறிட்டு எழுங்கள்! உலகத்தில் வாழ்க்கை செலுத்துவதற்குத் திருவள்ளுவர் அன்பும் அறனுந் தேவையென்றார். இவற்றுள் ஒன்று மட்டுமிருந்தால் இம்மை நலம் இல்லாமற்போம். இதனாலேதான் அவை 'வாழ்க்கையின் பண்பும் பயனும் எனப்பட்டன; அறியாமையியல்புகளை அறுத்தலாகிய பயனே அறம். மக்களுக்கு எப்போதும் அழிப்புவேலைமட்டும் உதவாது. ஆக்கவேலையும் வேண்டும்; ஆக்கவேலைதான் நிரம்பவும் வேண்டும்; ஆக்கவேலையின் மிகுதிப்பாடே ஏனைய அழிப்பு வேலையின் நோக்கத்துக்குப் பேருதவியாயிருக்கும்.

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்"

என்னுந் திருவள்ளுவர் கருத்தில் ஆக்கவேலையின் முனைப்பும் பயனும் என்ன ஒளிவீசுகின்றன உன்னுமின்! தமிழ் மக்கள்பால் ஆக்கவேலைகள் மிகவுங் குறைவு. அதற்காக அழிப்பு வேலையும் நெகிழவிடலாகாது. அதுவும் வேண்டும். அது குற்றமாகாது. பயிர்க்கு எரு ஊட்டவும் வேண்டும்; களை, களையவும் வேண்டும்.

நமக்கு எந்தமொழியினும் வெறுப்புத் தேவையில்லை. வெறுக்கும் இயல்பு உயிராற்றலை ஒடுக்கும். இந்திமொழியன்பர்களும் பிறரும் நமதன்புக்கு உரியவர்களே! ஆயினும் மொழிக்கும் அதற்குந் தொடர்பில்லை. கடமை பார்க்குங்காற் கண்ணோட்டம் வீழ்ச்சிதரும்; ஆதலால், தமிழ்க்குத் தடையாயுள்ளவற்றைக் களையவும் வேண்டும்; அதற்கு ஆக்கமான செயல்களைச் செய்யவும் வேண்டும். தமிழ்க்குத் தக்கது செய்மின்! மற்றவை பின்பு; முற்றும் திருவருள் உதவுக! தமிழ் மொழி வாழ்க!

குறுந்தொகை

மருதம்

பரத்தையை விட்டுப்பிரிந்த தலைவனுக்கு வாயிலாக வந்தோர் கட்குத் தலைவி தன் மெலிவைக் கூறிக் குறிப்பால் வாயில் நேர்ந்தது.

குன்றியனார் பாடியது

50. ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே; இறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

என்பது கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.

பதவுரை :—

ஐயவி அன்ன—வெண்சிறு கடுகைப்போன்ற, ஞாழல் சிறுவீ—புலிநகக் கொன்றையின் சிறிய மலர்கள், செவ்வி மருதின்—அழகிய மருதமலரின், செம்மலொடு தாஅய்—பழம் பூக்களுடன் கலந்து பரந்து, அவர் ஊர்த்துறை யணிந்தன்று—தலைவரது ஊரின் நீர்த்துறையை அழகு படுத்தியது; அவர் மணந்ததோள்—அத்தலைவரால் தழுவப்பட்ட என்னுடைய தோள்கள், இலங்குவளை—ஒளிக்கின்ற வளைகள், இறை இறந்து—முன்கையினின்றும் கழன்று, நெகிழச் சாஅய்—நழுவும்படி சரிதலினாலே, புலம்பு அணிந்தன்று—தனிமையுற்று பொலிவு அற்று வருந்துதலைத் தாங்கின. ஏ—அசை. ஐயவி—சிறுவெண்கடுகு. ஞாழல்—புலிநகக் கொன்றை—வீ—மலர். செவ்வி—அழகு. செம்மல்—பழம்பூ. அணிந்தன்று—அணியைச்செய்தது; முற்று. அன்—சாரியை. இறை—முன்கை. புலம்பு—தனிமை வருத்தம். அலம்பணிந்து அன்று—தனிமையுற்று அழகைச் செய்யவில்லை. தோள்—சாதி ஒருமை.

இறைச்சிப் பொருள் :—

புலிநகக் கொன்றையின் மலர்கள் மருதத்தின் பழம் பூக்களுடன் கலந்து பரந்து நீர்த்துறையை அழகு செய்தன என்பது

பரத்தையர் பலரொடுங்கூடிச் செவ்வியழிந்து நின்ற தலைவனைச் செவ்விகுலையாத தான் கூடிப்பொலிவுவதாகத் தலைவி குறிப்பித்த வாறும்.

மேற்கோள் விளக்கம் :—

1. ஐயவி

"ஐந்தின்மேலான வாண்டின் ஐயவிப் புகையுமாட்டி"

—(பெரியபுரா—கண்ணப்)

2. ஞாழல்

(அ) "தெரியிணர் ஞாழலும்" —(கலி. 127, 23)

ஞாழல்—நெய்தல் நிலத்துப் பூ மரம்.

"நீர்க்கால், கொழுநிழன் ஞாழல் முதிரிணர்" —(கலி. 56)

"நறுஞாழல் கையினேந்தி என்பதனுற் பூவும் கூறினர்"

—(சிலப்-விசேட-பதிக.)

இம்மரம் எக்கரில் செழித்து வளரும். இதற்குச் "ச்யாமா" என்பது வடமொழிப் பெயர்.

"செவ்விஞாழற் கருங்கோட்டிருஞ்சினை" —(அகம். 240)

"பொரியரை ஞாழல்" —(சீவக. 515)

"ஞாழன் மலரின் மகளிர்" —(ஐங். 147)

"கொய்குழை யரும்பிய குமரிஞாழல்" —(நற். 59)

"கானன் ஞாழல் கவின்பெறு தழையன்" —(ஐங். 191)

"இணர்ததை ஞாழல்" —(பதிற். 30-1)

"பசுநனை ஞாழல்" —(குறுந். 81)

"பொன்னிணர் ஞாழல்" —(ஐங். 169)

"நறுவீ ஞாழல்" —(நற். 96)

"ஞாழலோங்கு சினைதொடுத்த, தாழைவீழ் கயிற்றூசல்"

—(அகம். 20-56)

"கணங்கொள் வண்டார்த்து லாங்கன்னி நறுஞாழல்" என்பன வற்றாலறிக.

ஞாழல் என்பது குங்குமம், புலி நகக்கொன்றை, கோங்கு, பலினி முதலாய பல்வகை மரங்கட்குப் பொதுப் பெயர்.

"நெய்தற்கு, 'மரம் புன்னையும் ஞாழலும் கண்டலும்"

—(தொல். அகத் சூ. 18. உரை)

1. "எக்கர் ஞாழல் செருந்தியொடுகமழ"

2. "எக்கர் ஞாழ லிறங்கிணர்ப் படுசினை"
3. "எக்கர் ஞாழல் புள்ளிமி ழகன்றுறை"
4. "எக்கர் ஞாழல் இணர்படு பொதும்பர்"
5. "எக்கர் ஞாழற் சிறியிலைப் பெருஞ்சினை"
6. "எக்கர் ஞாழலரும் புமுதி ரவிழிணர்"
7. "எக்கர் ஞாழல் மலரின் மகளிர்"
8. "எக்கர் ஞாழ விகர்துபடு பெருஞ்சினை"
9. "எக்கர் ஞாழற் பூவி னன்ன சுணங்கு"
10. "எக்கர் ஞாழ னறுமலர்ப் பெருஞ்சினை"

—(ஐங்-ஞாழற்பத்து 141-150)

11. "புன்னையொடு,
ஞாழல் பூக்குந் தண்ணந் துறைவன்" —(ஐங். 103)
12. "பொன்னிணர் ஞாழன் முனையிற் பொதியவிழ்
புன்னையம் பூஞ்சினைச் சேக்குந் துறைவ" —(ஐங். 169)
13. "கானன் ஞாழற் கவின்பெறு தழையள்" —(ஐங். 191)
14. "கானற் கமழ்ஞாழல்வீ" —(கலி. நெய். 14-19)
15. "சிறுவீ ஞாழல்" —(நற். 191)

"இலங்குவளை நெகிழ"

"கோடீரிலங்குவளை ஞெகிழ்த்த" —(குறுந். 31)

"கோடீரிலங்குவளை நெகிழ" —(குறுந். 11)

மெய்ப்பாடு—அழுகை

பயன்—வாயினேர்தல்

ஞாழலுக்குச் சாமனை உவமை கூறுவர்.

"ஏனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்"

—(கலி. பாலை. 25-4)

"இனங்கொள் வாளராத் தொடையல் சூழ் செஞ்சடைக் கூத்தா, வணங்க வேளெனுந் தமையனுக் கணியுருத் தருகென், றினங்கொள் வான்றவ மியற்றுவா னவனுடை யிளவன், மனங்கொள் காதலின் வந்தெனத் திகழ்ந்தது ஞாழல்"

—(காஞ்சி, திருக்கண் 160)

வரலாற்றுப் பகுதி: History & Biography

பார்டு (T. L. Baird)

[திரு. N. குழந்தைவேலன் B. A. அவர்கள்]

பார்டு என்னும் பெரியார் டெலிவிஷன் (Television) தொலைவு நோக்கித் தந்தியைக் கண்டுபிடித்தவர். இதன் உதவியால் நாம் நம் வீடுகளில் இருந்தே பல்லாயிரங் கல்லுக்கு அப்பால் நடக்குஞ் செயல்களை நேரில் கண்டுகளிக்கலாம்.

இப்பேரறிஞர் ஸ்காட்லாந்து (Scotland) நாட்டில் ஹெலன்ஸ்பரோ (Helensburgh) என்னும் ஊரிற் பிறந்தார். இவர் மாணவராக இருக்கும்பொழுதே புதிய கருவிகள் இயற்றுவதில் எண்ணத்தைச் செலுத்திவந்தார். இவர் தாமாகவே ஒரு பேச்சுத்தந்தியை (Telephone) அமைத்து அதன் வழியாகத் தம் நண்பர்களுடன் பேசிவந்தார். இதன்பொருட்டு இவரால் அமைக்கப்பெற்றிருந்த தந்திக் கம்பிகளில் ஒன்று ஒரு நாள் அறுபட்டுத் தெருவில் தொங்கிக்கொண்டிருந்தது. அக் கம்பி தெருவிற்சென்ற ஒரு வண்டிக்காரனது கழுத்தில் மாட்டிக்கொண்டதால் அவன் வண்டியிலிருந்து கீழேவிழ நேர்ந்தது. இதனை அவ்வண்டிக்காரன் ஊர்க் காவலரிடம் தெரிவித்து அக்கம்பிகளைப் பிடுங்கி எறிந்துவிடும்படி செய்தான். இங்ஙனமாக இவர் அரும்பாடுபட்டுச் செய்த பேச்சுத்தந்தி பயன் படாது வீணாயிற்று.

இவர் கல்லூரியிற் படித்து முடிந்தநும் ஒரு மோட்டார் தொழிற்சாலையிற் சேர்ந்து வேலை பயின்றுவந்தார். இவர் நாடோறும் விடியற்காலைமுதல் இரவுவரை ஓயாது உழைப்பது வழக்கம். இதற்குப்பின் இவர் மின்சாரத் தொழிற்சாலை ஒன்றில் மேற்பார்வையாளராக நியமிக்கப்பெற்றார். இக்காலத்தில் ஜெர்மனி நாட்டுப் பெரும்போர் (Great War) துவங்கியதால் இவர் தாமும் போர் வீரராகச் சேருவதற்கு முயற்சி செய்தார். ஆயினும் இவருக்கு உடல்நலம் குன்றி இருந்ததால் இராணுவத்தில் இடம் கிடைக்கவில்லை. ஆகவே இவர் மீண்டும் மின்சாரத் தொழிற்சாலையில் சேர்ந்து வேலைபார்த்து வந்தார். சின்னாட்கழித்து இவர் நோய்வாய்ப்பட்டு அத் தொழிலைவிட்டு அகன்றார்.

இதன்பின்னர் பார்டு, டெலிவிஷன் என்னும் தொலைவு நோக்கியைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்துவந்தார். இவ்

ஆராய்ச்சிக்குத் தடை ஏற்படாதிருக்கும் பொருட்டு இவர் தமது உடலைக் கருத்துடன் பாதுகாத்துவந்தார். ஆயினும் இவற்றிற்கு வேண்டும் பொருள் இல்லாததால் மிகவும் வாட்ட முற்றிருந்தார். இவர் தேன், உரம், சோப்பு முதலியவற்றை விற்று அதனால் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு வயிறு வளர்த்துவந்தார். சில ஆண்டுகள் கழித்து இவர் இலண்டன் நகரைவிட்டு அகன்று ஹேஸ்ட்டிங்ஸ் (Hastings) என்னும் இடத்திற்குச் சென்றார். அங்கு இவர் ஒரு கடையின் மேடை மேல் குடி இருந்தார். எவ்வாறேனும் டெலிவிஷனைக் கண்டு பிடிக்கவேண்டுமென இவர் அல்லும் பகலும் இடைவிடாது உழைத்துவந்தார். சற்றேறக்குறைய அரை ஆண்டிற்குள் இவர்தம் எண்ணம் ஈடேறிற்று. தகரத்தினாலும் கண்ணாடி வில்லைகளாலும் மிகவும் குறைந்த செலவில் இவர் ஒரு கருவி யைச் செய்து முடித்தார். இதனை பார்டு மின்சார இயங்கி யோடு பொருத்திச் சுவருக்குப் பின்புறம் மறைந்திருக்கும் சிலுவையை (Cross) அடுத்த அறையிலுள்ள திரையின்மேல் காணும்படி செய்தார். இதனைக் கண்டோர் அனைவரும் இறும்பூதெய்தினர். புதினத்தாள்கள் இவ்வியத்தகு செயலைப் போற்றிப் புகழ்ந்தன.

சினிமா என்னும் அசைவுப்பட முதலாளி ஒருவர் இவ ருக்குப் பொருளுதவிசெய்ய முன்வந்தார். பார்டு அவரிடம் இருநூறு பவுன் பெற்றுக்கொண்டு தமது ஆராய்ச்சியை விரி வாக நடத்திவந்தார். தந்தியின் உதவியால் ஓரிடத்தினின் றும் பிறிதோரிடத்திற்கு இவரால் அனுப்பப்பெற்ற உருவங் கள் அவ்வளவு தெளிவாக விளங்கவில்லை. டெலிவிஷனை நடை முறையில் கொண்டுவரலாம் என்னும் நம்பிக்கை ஒருவருக்கும் இல்லாதுபோயிற்று. இவர் மீண்டும் இலண்டனுக்குச் சென்று கையிற் பொருளின்றி வருந்தினார். இவர் உடுக்க உடையின் றிக் கந்தையைக் கட்டிக்கொண்டு தெருத்தெருவாய்ச் சுற்றி அலைந்தார். வறுமையின் கொடுமைதான் என்னே! இவர் தாம் இயற்றிய கருவியைச் செம்மைப் படுத்துவதற்கும் நல்ல முறையில் அமைப்பதற்கும் வகையொன்றுந் தோன்றாது வாடினார். இவரது அருமையான ஆராய்ச்சியும் நின்று போயிற்று.

1925-ஆம் ஆண்டில் ஏதோ நல்வினைப் பயனால் (Gordon Selfridge) கார்டன் செல்ஃபிரிட்ஜ் என்னும் பிரபுவின் ஆதரவு இவருக்குக் கிடைத்தது. இதனால் பார்டு தமது ஆய்வுகளை மீண்டும் நடத்துவதற்கு ஏதுவாயிற்று. இவர் அட்டைகளா லும் தாள்களாலும் ஒரு பொம்மைசெய்து அதன் கண்களைச்

சிமிட்டும்படியும் வாய்திறந்து மூடும்படியும் பொறிகளை அமைத்திருந்தார். இப்பொம்மையைச் சுவருக்குப் பின்னால் மறைத்துவைத்து அடுத்த அறையிலுள்ள திரையின்மேல் அதன் நிழல் விழும்படி செய்தார். பொம்மையின் வாயும் கண்களும் அசைவது திரையில் நன்கு புலப்பட்டது. இந்த வேடிக்கை இலண்டன் நகரில் இரண்டுவாரம் காட்டப்பட்டது. மக்கள் யாவரும் இதனைக் கண்டு வியப்புற்றனர். ஆயினும் பார்டு செய்திருந்த டெலிவிஷன் கருவி கயிற்றினாலும், மெழுகினாலும் இணைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அனைவரும் நகையாடினர். இவர் மந்திரவாதி என்றும் மக்களை ஏமாற்ற வந்தவர் என்றும் பலர் எண்ணினர்.

1925-ஆம் ஆண்டில் வெளிவந்த டெலிவிஷன் கருவி மக்களின் பல்வேறு உறுப்புக் (அவயவங்)களையும் தெளிவாகக் காட்டக்கூடியதாக இல்லை. இதைச் சீர்திருத்த பார்டு ஓராண்டு வரை வருந்தி உழைத்து முடிவில் வெற்றிபெற்றார். மின் செலுத்தியின் முன்னால் பொம்மைக்குப் பதிலாக ஓர் உயிருள்ள பொருளையே நிறுத்திப்பார்க்க எண்ணி இவர் மேடையிலிருந்து கீழே இறங்கி ஓடினார். உவில்லியம் (William) என்னும் வேலைக்காரப்பையன் இவர் கண்ணில் அகப்பட்டான். பார்டு அவனைப் பிடித்து மேலே இழுத்துக்கொண்டு சென்றார். அவன் சிறிதும் விருப்பமின்றி மேலேபோய்ச் சேர்ந்தான். பார்டு அப்பையனை மின்செலுத்தியின் முன்னால் நிறுத்திவிட்டு அடுத்த அறைக்குச் சென்று அவனது உருவம் திரையில் படித்திருக்கிறதா என்று பார்த்தார். திரையில் ஒன்றையும் காணவில்லை. இவர் டெலிவிஷன் கருவிகளில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டிருக்கலாமோவென எண்ணிப் பன்முறையும் அவற்றை இயக்கிப்பார்த்தார். ஆயினும் இவர்தம் முயற்சி வீணாயிற்று. பார்டு மனச்சோர்வுற்று மீண்டும் மின்செலுத்திவைத்திருக்கும் அறைக்குச் சென்றார். தமது அரிய ஆராய்ச்சி தடைப்பட்டதன் காரணம் உடனே இவருக்கு விளங்கிற்று. வேலைக்காரப் பையன் மின்சாரக் கருவியின் பேரொளியின் முன்னால் நிற்பதற்கு அஞ்சி சற்றுத் தொலைவில் எட்டிநின்று கொண்டிருந்தான். அவனுக்குத் தீங்கு ஒன்றும் நேராதென்றும் அவன் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை என்றும் கூறி பார்டு அவனை ஊக்கப்படுத்தினார். அன்றியும் அவனுக்கு வேண்டிய பொருளும் கொடுத்தார். இதன் பின்னரே அவன் மின்வாங்கியின் அருகில்வந்து நின்றான். இம்முறை அவனது உருவம் அடுத்த அறையிலிருந்த திரையின்மீது நன்கு புலப்பட்டது. பார்டுவின் உள்ளமும் பூரித்தது.

இவர் தாம் அருமையாகக் கண்டுபிடித்த டெலிவிஷன் கருவியை அரசர் கழகத்தினர்க்குக் காட்ட எண்ணி அக்கழகத்தின் உறுப்பினர்களைத் தம் அறைக்கு வரவழைத்தார். அந்த அறையில் ஆறுபேர் மட்டும் நிற்பதற்கு இடம் இருந்தது. இதனால் கழகத்தைச் சார்ந்தோர் அனைவரும் ஏழெட்டுப் பிரிவாக அறைக்குள்வந்து டெலிவிஷன் கருவியின் அருஞ்செயல்களைக் கண்டு களித்தனர். பக்கத்துவீட்டில் உள்ளவர்களின் தலைகள் ஆடுவதும், உதடுகள் அசைவதும், சுருட்டிலிருந்து புகை கிளம்புவதும் திரையின்மேல் தெளிவாகத் தோன்றின. இதற்குப் பின்னரே மக்களுக்கு டெலிவிஷனில் நம்பிக்கை ஏற்பட்டது. பார்டுவிற்குப் பலர் பொருளுதவிசெய்ய முன் வந்தனர். பார்டு தமது சிறிய குடிசையை விட்டு ஒரு நல்ல வீட்டிற்குக் குடிபோனார். இவர் தொலைவிலுள்ளவர்களையும் டெலிவிஷன் உதவியால் படம் பிடித்துக்காட்ட வேண்டுமென்று பெருமுயற்சி செய்துவந்தார். 1926-ஆம் ஆண்டில் இரண்டு மூன்று வீடுகளுக்கு அப்பால் உள்ளவர்களை டெலிவிஷன் படத்தில் இவரால் காட்ட முடிந்தது. அடுத்த ஆண்டில் இலண்டன் நகரிலிருந்து நியூயார்க் (Newyork) வரை டெலிவிஷன் படங்கள் அனுப்பப்பட்டன. நடுக்கடலில் கப்பலுக்குள் இருந்துகொண்டே ஆயிரக்கணக்கான கல்லுக்கு அப்பால் நடக்கும் செயல்களைக் கண்டு மகிழ்ந்தனர். கடல் கொந்தளிப்பினால் கப்பல் ஊசலாடினாலும் டெலிவிஷன் கருவி சரிவர வேலை செய்தது.

இவ்வியத்தகு கருவி எங்ஙனம் இயக்கப்படுகின்றது? இதன் நுட்பம் யாது? படம் பிடிக்கப்படும் பொருள்களின் மேல் விழும் ஒளிக்கதிர் ஒரு கண்ணாடி வில்லையால் பிடிக்கப்பட்டுக் கண்போன்ற ஒரு மின்சாரக் கருவியினுள் செலுத்தப்படுகின்றது. கண்ணாடி வில்லைக்கும் மின்சாரக் கருவிக்கும் இடையில் மூன்று தட்டுகள் விரைவாகச் சுழல்கின்றன. முதல் தட்டு கண்ணாடி வில்லைகள் நிறைந்தது. இஃது ஓர் விநாடிக்கு எண்ணூறு முறை சுழன்று படம் பிடிக்கப்படும் பொருள்களின் நிழல்களைப் பல்வேறு துண்டுகளாக வெட்டிவிடுகின்றது. துளைகள் நிறைந்த இரண்டாவது தட்டு இங்ஙனமே மிக விரைவாகச் சுழன்று ஒளிக்கதிர்களை மேலும்மேலும் நறுக்கித் தள்ளுகின்றது. மூன்றாவது தட்டில் ஒரு வளைவான துளை போடப்பட்டிருக்கின்றது. இம்மூன்று தட்டுகளின் வழியாகச் செல்லும் ஒளிக்கதிர்கள் விநாடிக்குச் சற்றேறக் குறைய 600 துண்டுகளாக மின்சாரக் கருவியின் மேல் விழுகின்றன. அக்கருவி ஒளிக்கதிர்களை மின் ஆற்றலாக மாற்

றித் தொலைவிலுள்ள இடங்களுக்குச் செலுத்துகின்றது. மின் செலுத்தியைப்போன்று அமைக்கப்பட்டிருக்கும் மின்வாங்கிகள் அவற்றை ஏற்றுக்கொண்டு சுழலும் தட்டுகளின் உதவியால் மின்சார ஆற்றலை மீண்டும் ஒளிக்கதிர்களாக மாற்றித் திரைமேல் வீசுகின்றது. இங்ஙனமாகத் தொலைவிலுள்ள பொருள்களின் தோற்றம் திரைமேல் காணப்படுகின்றது. பார்டுவால் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வியத்தகு கருவியில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இக்கருவியின் உதவியால் இருட்டுக் காலங்களிலும் பனிமூடியிருக்கும் காலங்களிலும் கூடப் புகைப்படம் பிடிக்கலாம்.

டெலிவிஷன் உதவியால் ஒருவனது உருவத்தை நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்கு அனுப்பவேண்டுமானால் கண்ணைப்பறிக்கும் பேரொளியின் முன்னால் அவன் பொறுமையோடு இருக்கவேண்டும். ஒளி மட்டாக இருந்தால் திரையில் படம் தெளிவாக விழுவதில்லை. இக்குறையை நீக்க பார்டு அரும்பாடுபட்டார். முடிவில் கதிரோன் ஒளியின் உதவிகொண்டே டெலிவிஷன் அனுப்புவதற்கு ஒருவழி கண்டுபிடித்தார். இருட்டில் உட்கார்ந்திருக்கும் ஒருவனைக் கண்ணுக்குப் புலப்படாத (Infra Red Rays) சிகப்பு ஒளிக்கதிர்களின் உதவியால் படம்பிடிக்கக் கூடுமென்பதைக் கண்டுணர்ந்தார். இவ்வரிய சிகப்பு ஒளிக்கதிர்கள் நம் கண்ணுக்குப் புலப்படாவிடினும் ஆற்றல் நிறைந்த மின்சாரக் கருவியின் கண்ணுக்குத் தப்புவதில்லை.

1927-ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்களில் (Leeds) லீட்ஸ் நகரத்தில் நடந்த ஒரு கழகக் கூட்டத்தில் இவ் ஆராய்ச்சி பரிசோதிக்கப்பெற்றது. லீட்ஸ் நகரில் ஓர் இருட்டு அறைக்குள் உட்கார்ந்திருப்பவர்கள் இலண்டனில் உள்ள டெலிவிஷன் திரையில் காணப்பட்டார்கள். இதுவுமன்றி மூன்றுமைலுக்கு அப்பால் இருளில் வந்துகொண்டிருந்த மோட்டார் வண்டி டெலிவிஷன் திரையில் காணப்பட்டது. இஃது என்ன விந்தை? மோட்டாரின் விளக்குகள் (Ebonite) ஈபோனைட் என்னும் தகட்டினால் மூடப்படுகின்றன. இந்தக்கட்டை கண்ணுக்குப் புலப்படாத சிகப்பு ஒளிக்கதிர்கள் மட்டும் ஊடுருவிச் செல்கின்றன. ஏனைய ஒளிக்கதிர்கள் வெளியில் வரமுடியாது. இச்செங்கதிர்களைத் தொலைவிலுள்ள டெலிவிஷன் கருவி ஏற்றுக்கொண்டு திரைமேல் வீசும்போது மோட்டாரின் ஓட்டம் நன்குதெரிகின்றது.

கடலில் பனிமூடியிருக்கும் காலங்களில் எதிரில் வரும் கப்பல்களையும் தொலைவிலுள்ள விளக்குக் கூண்டுகளையும்

இக்கருவியின் உதவியால் எளிதில் கண்டுகொள்ளலாம். இதனால் கப்பல்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு உடைந்து போகாமல் காப்பாற்றப்படுகின்றன. பனிமூடி இருக்கும்போது கப்பல்கள் வழிதப்பிப்போய் பாறைகளின் மேல் மோதிக்கொள்ளாமல் இருப்பதற்கும் இஃது உதவுகின்றது. டெலிவிஷன் உதவியால்தான் 12-5-'37-ல் இலண்டன் மாநகரில் ஆறுவது ஜார்ஜ் அரசருக்கு நடந்த முடி சூட்டு விழாவை உலகின் பல்வேறு இடங்களிலும் மக்கள் நேரில் கண்டு இன்புற்றனர். இவ்வியத்தகு கருவியை உண்டாக்கிய பார்டுவிற்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

"தொட்டனைத் தூறும் மணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு".

திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை

[திரு C. V. சம்புலிங்கம் பிள்ளை அவர்கள்]

ஆடிமாதச் செல்வியில் வெளிவந்த ஷை யார் சரித்திரக் குறிப்பைக் கண்ணுற்றேன். அதிற் சில குறைபாடுகள் காணப்பட்டன. அவற்றைத் திருத்த முன்வந்துள்ளேன்.

யான் வித்துவானவர்கள் மாணவரில் ஒருவன். கடைசிக் காலத்தில் அவரோடு நெருங்கிப் பழகியவன். அவர் சரித்திரத்தை அவர் வாயிலாகவே அவ்வப்போது கேட்டறிந்தவன்.

வித்துவானவர்களின் பிரதம ஆசிரியர் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாராவார். இவரையே தாம் பாடிய நூல்களிலெல்லாம் குரு வணக்கத்தில் துதித்துள்ளார். திருவாவடுதுறைச் சிவஞான சுவாமிகள் மீது பேரன்பு வாய்ந்தவர். தம்முடைய புத்தகம் ஒவ்வொன்றிலும் மெய்கண்ட தேசிகர் திருவடி வாழ்க, சிவஞான யோகிசள் சேவடி வாழ்க, என்னும் வாக்கியங்களைத் தம் கைப்பட எழுதுவது இவர் வழக்கம்.

இயற்றமிழாசிரியர். கோ. இராஜகோபால பிள்ளையிடம் இராமாயணமும் நன்னூலும் பாடங் கேட்டதாகச் சொல்லுவார். இராஜகோபால பிள்ளை என்பவர் மகா சிவத் துவேஷ முடையவர். கோமளேசுரன்பேட்டை என்பதில் ஈசுவர சப்தம் இருப்பதால் அதனைக் கோமளபுரம்

என்று மாற்றியவர். இவர் அச்சிட்ட வில்லிபுத்தூரர் பாரதத்தில் சிவபரமான அநேக பாடல்களை நீக்கிவிட்டவர். இதனாலன்றோ மகாபாரதத்தை நாவலரவர்கள் அச்சிடலானார். இத்தகைய இராஜகோபால பிள்ளை தம் மாணவரை நாமம் போட்டுக் கொள்ளச் சொன்னது அதிசயமன்று. ஆனால் வித்துவான் பெயரை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.

தொண்டை மண்டல பாடசாலையை விட்ட பின்னர் வேப்பேரி S. P. G. High School-லில் தமிழ்ப் பண்டிதராக 1901-ஆம் வருடம் வரை இருந்துவந்தார். இவர் அப்பாடசாலையைவிட்டுத் திருமயிலை சென்தோம் காலேஜுக்கு வந்தபோது அவ் வேலையைத் தமது மாணவராகிய நமச்சிவாய முதலியாருக்கு வாங்கிக் கொடுத்தார்.

1904-ஆம் வருடம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரான பாண்டித்துரைத் தேவரவர்கள் வேண்டுகோளின்படி மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவிற்குச் சென்றார். அப்போது திரிசிரபுரத்தில் திருக்குருகூர் ஞானசித்தரைச் சந்தித்து அங்குள்ளார் பலர் விருப்பத்தின்படி அவர் மான்மியத்தைப் பாடினார். இதுவே வித்துவானவர்களின் கடைசிப் பிரபந்தம்.

1905-ஆம் ஆண்டில் இவர் இறந்தபோது ஈமக்கிரியை முதலியவற்றை இவருடைய தம்பி குமாரரே செய்தார். நமச்சிவாய முதலியார் செய்யவில்லை. முதலியார் வேண்டிய உதவிபுரிந்தார். இவர் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்த நூல்கள்.

1. மணிமேகலை மூலம்.

மகா மகோபாத்தியாய ஐயரவர்கள் அச்சிடுவதற்கு முன்னரே, இவர் மூலபாடத்தை மட்டும் அச்சிட்டுதவினார். இதனை ஐயரவர்கள் தாம் அச்சிட்ட மணிமேகலைப் பதிப்பில் குறிக்காமற் போனமை விசனிக்கற்பாலது.

2. நன்னூல் விருத்தியுரை.

3. தஞ்சைவாணன் கோவையுரை.

4. மச்ச புராணம்.

பதினென் புராணங்களில் ஒன்றாகிய இதனை அநவரத விநாயகம் பிள்ளையவர்கள் வேண்டுகோளின்படி பரிசோதித்து 1900-ஆம் ஆண்டில் அச்சிட்டனர்.

5. திருமயிலைக் கலம்பகம்.

6. திருமயிலை யுலா.

ஆன்றோரால் பாடப்பட்ட இவ்விரண்டு பிரபந்தங்களை 1902-ம் வருடம் அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

7. சிற்றம்பல நாடிகள் சாத்திரக் கொத்து.

(செல்வியில் குறிப்பிடாதவை)

நன்னூற் கருப்பை

1. சிற்றிலக்கண வினாவிடை
2. கந்தபுராண வசனம்
3. புரசைக் குசப்பேட்டை கந்தசாமி தோத்திரம்
4. மாணிக்கவாசக சுவாமிகள் மாலை
5. கபாலீசர் பஞ்சரத்தினம்
6. திருத்தொண்டர் கீர்த்தனம்
7. திருமயிலைக் கற்பகவல்லிமாலை
8. சென்னைச் சூளைச் சுப்பிரமணியர் நவமணிமாலை) உயிர்வருக்கக்கோவை
9. புவனம்பிகை சோடசயாகோத்பவமாலை
10. திருமயிலைக் கபாலீசர் கலி விண்ணப்பமாலை
11. சென்னைக் கச்சபேசர் பஞ்சரத்தினம் சவுந்தர நாயகிமாலை
12. சந்தானகுரவர், சேக்கிழார், திருவள்ளுவர் தோத்திரங்கள்
13. திருத்தணிகை ஆண்டவர் தெய்வயானை வள்ளியம்மை தோத்திரங்கள், கீர்த்தனங்கள்
14. ஆளுடைய அரசு தோத்திரமாலை
15. குருகூர்ச் சித்த மான்மியம்

உரை நூல்கள்

சேரமான் பெருமாள் நாயனர் அருளிச்செய்த பிரபந்தங்களாகிய

1. பொன்வண்ணத் தந்தாதியுரை
2. திருக்கைலாய ஞானவுலாவுரை
3. திருவாரூர் மும்மணிக் கோவையுரை

இவை மூன்றும் கையெழுத்துப் பிரதியாயுள்ளன. அச்சிடப் படவில்லை.

குணாதிசயம் முதலியன. வித்துவானவர்கள் மிகவும் மெதுவான சுபாவமுள்ளவர். ஆடம்பர முதலிய தீய

குணங்களில்லாதவர். வாதநோயால் அடிக்கடி பீடிக்கப் பட்டவர். உபாத்தியாயரும் உரையாளருமேயன்றி பிரசங்க ஆற்றல் சிறிதுமில்லாதவர். திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளையவர்கள் இவரை அழைப்பித்துப் பார்த்த பிறகு இவர் தம் கோழைத்தனத்தையும் திட சித்தமின்மையையும் கண்டு மருட்சியடைந்தாரென்ப. நன்னூற் றிட்பநுட்பங்களை நன்குய் அறிந்தவர். அவற்றைப் பிறருக்கும் எடுத்துப் புகட்டும் வன்மையடைந்தவர். வித்துவான் என்னும் பட்டம் இவருக்கு அறிவுடைத் தமிழுலகத்தினரால் வியந்து கொடுக்கப்பட்டது. இவர் ஆங்கிலமும் சிறிது தெரிந்தவர். கிறித்தவ கல்லூரியிற் படித்தவர். இவரோடு உடன் கற்றவர் பாரிஸ்டர் இராமசாமி இராஜு முதலியோர்.

ஓசளர் ஆட்சி (கி. பி. 1268—1296)

[வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார்]

மூன்றாவது இராசேந்திர சோழதேவனுடைய ஆட்சி கி. பி. 1268-ல் முடிவுபெற்றதும், சோழர்குடியின் வலி குன்றியது. அவரால் வெல்லப்பட்டு அவராட்சிக் குட்பட்டிருந்த ஓசளர் தலையெடுத்தனர். சோழரை வென்று தங்களுக்குட்பட்ட சிற்றரசர்களாகச் செய்தனர்.

கி. பி. 1296-ல் மதுரையில் அரசுகட்டிலேறிய வீரபாண்டியன், ஓசளரையும் அவருக்குட்பட்டிருந்த சோழரையும் வென்று பாண்டியராட்சியைச் சோழநாட்டில் ஏற்படுத்தினர். ஆகவே கி. பி. 1268 முதல் 1296 வரையில் ஓசளர் ஒருவாறு தங்கள் தலைமையைச் சோழநாட்டில் ஏற்படுத்தியிருந்தனர்.

பாண்டியர் ஆட்சி (கி. பி. 1296—1310)

மதுரையில் கி. பி. 1296-ல் கோல்கொண்ட வீரபாண்டியன், ஓசளரையும் சோழரையும் வென்று எய்திய வெற்றி காரணமாக, ஓசளர் அதிகாரத்துக்கு ஈடாகப் பாண்டியர் அதிகாரத்துக்குச் சோழர் கி. பி. 1296 முதல் உட்பட நேர்ந்தது. வீரபாண்டியன் முடிதாங்கியது முதல் அவருக்கு எதிரியாகச் சுந்தரபாண்டியன் என்பவர் கிளம்பி அடிக்கடி இடுக்கண் விளைத்துவந்தார். சுந்தரபாண்டியனை அடக்கக் கருதிய வீரபாண்டியன் தென்னாட்டில் தமக்குதவிசெய்வார் யாருமிலர் என உணர்ந்து டெல்லி நவாபைத் துணைவேண்டினர். டெல்லி

நவாபின் மேலதிகாரத்தை வீரபாண்டியன் ஒப்புக்கொண்டு அவருக்குட்பட்ட சிற்றரசனாக இருப்பது என்ற உடன்படிக் கையின்மேல் டெல்லி நவாப் தமது சேனையொன்றை மாலிக் காபூர் என்னும் படைவீரனுடைய தலைமையில் கி. பி. 1310-ல் தென்னாட்டுக்கு அனுப்பினார்.

டெல்லி நவாபின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு மாலிக்கா பூரை, வீரபாண்டியன் வரவேற்ற செய்கையால் கி. பி. 1296 முதல் சோழநாட்டை அடிப்படுத்தியிருந்த பாண்டியர் அதி காரம் கி. பி. 1310-ல் முடிவெய்தியது.

டேல்லி நவாப் ஆட்சி (கி. பி. 1310—1334)

வீரபாண்டியனுடைய வேண்டுகோளுக் கிணங்கிய டெல்லி நவாபால் அனுப்பப்பட்டு முதன் முதல் தென்னாட்டின்மேல் படையெடுத்து வந்த முகம்மதியப் படைவீரனாகிய மாலிக்கா பூர், ஔசளரையும் சுந்தரபாண்டியனையும் வென்று அடிப்படுத் தினார். சோழநாட்டின்மேற் படை எடுத்துச்சென்று திருச் சிராப்பள்ளி, திருவரங்கம், தஞ்சாவூர், தில்லைநகர், தீவுக் கோட்டை முதலிய ஊர்களிற் போர்செய்து சோழநாட்டை யும் வென்றார். தாம் வென்ற நாடுகளை ஆளும்படி வீரபாண் டியனை ஏற்படுத்தினார். டெல்லி நவாபுக்கு வீரபாண்டியன் கப்பஞ்செலுத்த ஏற்பாடுசெய்தார். டெல்லி நவாபின் அதி காரத்தை வீரபாண்டியன் மீறுதிருக்குமாறு பார்த்துக்கொள் வதற்காகத் தமது போர்விரரில் ஒருவனை ஒரு சேனையுடன் மதுரையில் இருத்திவிட்டு மாலிக்காபூர் கி. பி. 1312-ல் வெற்றி வீரராக டெல்லிக்குச் சென்றார்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்டு மதுரையிலிருந்த டெல்லி நவாபின் காரியக்காரருக் கடங்கியே வீரபாண்டியன், பாண்டி நாடு, ஔசளர்நாடு, சோழநாடு முதலியவற்றை ஆண்டாராகை யால் உண்மையில் கி. பி. 1310 முதல் சோழநாடு, டெல்லி நவாபின் ஆட்சிக் குட்பட்டே இருந்தது. மாலிக்காபூரால் ஏற்படுத்தப்பட்டு மதுரையில் இருந்த காரியக்காரரின் மரபில் வந்தவர் கி. பி. 1334-ல் தம்மை டெல்லி நவாபின் அதிகாரத்தி னின்றும் விடுவித்துக்கொண்டு தாமே தென்னாட்டின் தனியர சர் என அறிவித்துக்கொண்டார். அவரை அடக்கித் தமது அதிகாரத்தை வலியுறுத்த நினைந்து டெல்லி நவாப் கி. பி. 1335-ல் தெற்குநோக்கி வந்தார். ஆனால் வழியில் நோய்கண்டு டெல்லிக்குத் திரும்பினார்; அங்கு இறந்தார். கி. பி. 1325-ல் டெல்லியில் அரசுகட்டில் ஏறிய நவாப், பெரிய நாட்டை ஆளும் திறமையற்றவர். டெல்லி அரசாட்சி யுரிமை பற்றி

நடந்த பூசல்கள் காரணமாகத் தொலைவிலுள்ள தென்னாட்டின் மேல் தம் அதிகாரம் நிலைப்பதற்குக் கவலை செலுத்த முடியாதவர் ஆனார். ஆகவே டெல்லி நவாபின் ஆட்சி கி. பி. 1310-ல் தொடங்கி 1334-ல் முடிவுற்றது.

மதுரை சுல்தான் ஆட்சி (கி. பி. 1334—1358)

டெல்லி நவாபின் அதிகாரத்தினின்றும் விடுபட்டு மதுரையில் தனியரசாட்சி புரிந்த மதுரை சுல்தானுடைய ஆட்சி கி. பி. 1334 முதல் தொடங்கி நடந்துவந்தது. அப்போது நாட்டில் ஒருவிதப் புத்துணர்ச்சி ஏற்பட்டது. தென்னாட்டின் மேல் வடக்கிலிருந்து முகம்மதியர் மேலும் மேலும் படையெடுத்து வராதவாறும், தென்னிந்தியாவின் தனித்தன்மையை அழியவிடாதவாறும் பார்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் கி. பி. 1339-ல் தோன்றிய விசயநகர ஆட்சி சிறிது சிறிதாகத் தென்னாட்டில் பரவிவந்தது. விசயநகர ஆட்சியின் முதல் அரசரான முதலாவது புக்கனுடைய தம்பியும், விசயநகர ஆட்சியை ஏற்படுத்திய உடன்பிறந்தாரைவருள் மூன்றுமவரும் ஆகிய கம்பண்ண உடையார் தமது அண்ணனின் கட்டளைக்கிணங்கத் தென்னாட்டில் தமது வெற்றிக்கொடியை நிறுவிவந்தபோது சோழநாட்டிலிருந்த முகம்மதியரதிகாரத்தைப் பொன்றச்செய்து கி. பி. 1358-ல் சோழநாட்டை விசயநகர ஆட்சிக் குட்படுத்தினர். இங்ஙனமாக மதுரை சுல்தானுடைய ஆட்சி சோழநாட்டில் கி. பி. 1334 முதல் 1358 வரை இருந்தது.

கி. பி. 1358-ல் கம்பண்ண உடையார் சோழநாட்டை விசயநகர ஆட்சிக் குட்படுத்தித் தங் காரியக்காரரையும் தஞ்சாவூரில் ஏற்படுத்தினர். விசயநகர ஆட்சியின் காரியக்காரராகிய நாயக்கர் தஞ்சாவூரில் இருந்து விசயநகரத்தாரின் அதிகாரத்தை நடத்திவந்தார். கி. பி, 1310-ல் மாலிக்காபூர் படையெடுப்புக் கஞ்சித் திருவரங்கத்தினின்றும் அப்புறப்படுத்தப்பட்ட அழகிய மணவாளனுடைய தங்கப்படிமம் கி.பி. 1370-ல் திருவரங்கத்துக்குக் கொண்டுவரப்பட்டது. கி. பி. 1377-ல் முகம்மதியர் ஆட்சி அடியோடு தென்னாட்டினின்றும் பொன்றியது. கி. பி. 1377-ல் விசயநகர அரசராக இருந்த இரண்டாவது அரியரர் தம்மைத் தென்னிந்தியா முழுமைக்கும் மன்னர் மன்னன் என்று அறிவித்தார். இவ்வாறாக விசயநகர ஆட்சி, தஞ்சாவூர் நாட்டில் நடைபெற்றுவந்தது.

ஆராய்ச்சிப் பகுதி : Research

"நிகண்டனார், கலைக்கோட்டுத் தண்டனார்."

(ஓர் ஆராய்ச்சி)

மயிலை. சீனி. வேங்கடசாமி.

"நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்" என்பவர் கடைச்சங்க காலத்திருந்த ஒரு புலவர். இவர் இயற்றிய செய்யுள் நற்றிணையில் ௩௨௰௨-ம் பாட்டாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. நற்றிணையை அச்சிற்பதிப்பித்த திருவாளர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், "பாடினோர் வரலாறு" என்னும் தலைப்பின்கீழ் எழுதியுள்ள வரலாற்றில் இந்தப் புலவரைப்பற்றிக் கீழ்வருமாறு எழுதியிருக்கிறார்கள்.

"மான்கொம்பை நிமிர்த்திக் கைக்கோலாகக் கொண்டமையால் இவர் கலைக்கோட்டுத் தண்டனெனப்பட்டார். இவரது இயற்பெயர் புலப்படவில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது; அதுவே கலைக்கோட்டுத் தண்டெனப்படுவது. இதனை இடுகுறிப்பெயரெனக்கொண்டார் களவியலுரைகாரரும் நன்னூல் விருத்தியுரைகாரரும் (சூத்-சசு). அஃது இதுகாறும் வெளிவந்திலது"

இங்கு நாம் ஆராயத்தொடங்குவது "நிகண்டனார்" என்பதுபற்றியே. மேலே காட்டப்பட்டபடி, திரு. அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், இப்புலவர் நிகண்டு ஒன்று செய்தமையால் இவருக்கு நிகண்டனார் என்று பெயர் சூட்டப்பட்டது என்று எழுதுகிறார்கள். களவியலுரைகாரரும், "செய்தானாற் பெயர்பெற்றன அகத்தியம், தொல்காப்பியமென இவை; செய்வித்தானாற் பெயர்பெற்றன சாதவாகனம், இளந்திரையம் என இவை; இடுகுறியாற் பெயர்பெற்றன நிகண்டு, நால், கலைக்கோட்டுத்தண்டு என இவை" என்று எழுதியிருக்கிறார். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், "கலைக்கோட்டுத்தண்டு" ஒருநூல் என்பது களவியல் உரையாசிரியர் கருத்து என்பதே. திரு. நாராயணசாமி ஐயர் அவர்கள் "நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்"

என்னும் பெயரில் உள்ள "நிகண்டனார்" என்னும் அடைமொழியைக்கொண்டு களவியலுரைகாரர் குறிப்பிட்ட "கலைக்கோட்டுத்தண்டு" என்னும்நூல் நிகண்டு நூல், என்று முடிவு கட்டியிருக்கின்றார்கள். இனி, நன்னூல் விருத்தியுரைகாரராகிய சங்கரநமச்சிவாயரும், நூற்பெயர் வகையைக்குறிக்கும் நன்னூல் சகூ-ம் சூத்திரத்திற்கு எழுதிய உரையில் "இடுகுறியாற் பெயர்பெற்றன; நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலாயின" என்று களவியலுரைகாரர் கருத்தையே தழுவி எழுதியிருக்கிறார்.

எனவே, களவியலுரைகாரரும், நன்னூல் விருத்தியுரைகாரரும் "கலைக்கோட்டுத்தண்டு" என்னும் ஒரு நூல் உளது என்றும், அன்னூற்பெயர் இடுகுறிப்பெயர் என்றும் கூறியுள்ளார். திரு. நாராயணசாமி ஐயரவர்கள், மேற்படி இரண்டு உரையாசிரியர்களும் குறிப்பிட்ட "கலைக்கோட்டுத்தண்டு" என்னும் நூல், நற்றிணையில் உள்ள ௩அ௨-ம் பாட்டின் ஆசிரியராகிய கலைக்கோட்டுத்தண்டனார் என்பவரால் இயற்றப்பட்டதென்றும், "நிகண்டனார்" என்னும் அடைமொழியைக் கொண்டு, கலைக்கோட்டுத்தண்டு என்னும் நூல் நிகண்டு நூலாக இருக்கவேண்டும் என்றும் எழுதியுள்ளார்கள்.

இதில் சில ஐயங்கள் தோன்றுகின்றன. நிகண்டு நூல் செய்தவரை "நிகண்டனார்" என்று குறிப்பிட்டிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. அவர் நிகண்டு நூல் செய்திருந்தால் "நிகண்டாசிரியர்" என்றே கூறியிருப்பார்கள்; "நிகண்டனார்" என்று கூறியிருக்கமாட்டார்கள். ஆகையால், "நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்" என்று இருப்பதில் "நிகண்டனார்" என்னும் சொல்லுக்கு வேறுபொருள் இருக்கவேண்டும். அப்பொருள் யாது? அதனை ஆராய்வோம்.

சமணரில் "நிகண்டவாதிகள்" என்போர் ஒரு பிரிவினராவர். பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் சமணர்கள் இருந்திருக்கிறார்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மணிமேகலையில், உள-வது "சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட காதையில்", மணிமேகலை என்பவள் நிகண்டவாதியிடம் சென்று அவருடைய சமயக்கொள்கை யாது என வினவுகிறாள்.

"நிகண்டவாதியை நீயுரை; நின்னால்
புகழுந் தலைவன்யார்? நூற்பொருள் யாவை?
அப்பொரு ணிகழ்வுங் கட்டும் வீடும்
மெய்ப்பட விளம்பென......................" (167—170)

என்று வரும் மணிமேகலையடிகளால் நிகண்டவாதிகள் தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் இருந்தது நன்கு விளங்குகிறது. எனவே "நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார்" என்னும் பெயருக்குச் "சமணமதத்தைச் சேர்ந்த நிகண்டவாதி கலைக் கோட்டுத்தண்டனார்" என்று பொருள் கொள்வதுதான் பொருத்தமுடையது என்று தோன்றுகிறது. நிகண்டுநூல் செய்திருந்தாரானால், மேலே குறிப்பிட்டபடி, "நிகண்டாசிரியர்" என்று கூறியிருப்பார்களேயன்றி "நிகண்டனார்" என்று சொல்லியிருக்கமாட்டார்கள்.

அன்றியும், "கலைக்கோட்டுத்தண்டு" என்னும் நிகண்டு நூல் கடைச்சங்ககாலத்தில் இயற்றப்பட்டிருந்தால், அதனைப் பிற்காலத்து நூல்களாகிய திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களில் குறிப்பிட்டிருப்பார்களன்றோ? அவ்வாறு குறிப்பிடாததுபற்றி அவர் நிகண்டு செய்ததாகக் கொள்வதற்கில்லை. எனவே, "நிகண்டனார்" என்னும் சொல்லுக்கு "நிகண்டு நூல் இயற்றியவர்" என்று பொருள் கொள்வதைவிட "நிகண்டவாதி" என்று பொருள் கொள்வதுதான் ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் பொய்யா மொழியைப் பின்பற்றி பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தால் உண்மைப் பொருள் விளங்கும்.

புதிய உலகம்

சிவன் கோயில் (Shiva's Temple) என்று வழங்கப்படுகிற ஒரு திட்டு அமெரிக்கக் கானடாவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இஃது ஒரு நூறாயிர மாண்டுகட்கு முற்பட்டுள்ள தென ஆராய்ச்சியாளராற் கணக்கிடப்படுகிறது. இதில் பல புதுமையான விலங்கினங்களும், புற்பூண்டுகளும் காணப்படுகின்றனவெனவும் சொல்லுகிறார்கள். அமெரிக்கப் பல்பொருட் காட்சிச் சாலையார் இத்திட்டியிற் புகுந்து ஆராய முயற்சி செய்துவருகின்றனர்.

சிவன் கோயில் எனும் பெயர் ஆங்குள்ளமையால் தமிழர் நாகரிகம் பல்லாயிர மாண்டுகட்கு முன்பே அமெரிக்கா வரை பரவியிருந்ததென்பது புலப்படுகின்றது.

கட்டுக் கதை

மகிழ்நன் எழுதியது.

ஒன்று, இரண்டல்ல; கட்டுக் கட்டாய்க் கதை சொல்ல வேண்டுமென்று ஒரு கட்டுப்பாடு செய்துகொண்டு கட்டிலிற் படுத்திருந்தேன். சுவரில் தொங்கிய கடிகாரம் "கட், கட்; கட், கட்" என்று என்னை நோக்கிப் பேசினதுபோ லிருந்தது. "தெரியும் எனக்கு; நீ சொல்லவேண்டியதில்லை. கட்டத்தான் போகிறேன் கதையை," என்று அந்தக் கடிகாரத்தைப் பார்த்துக் கடிந்து கூறினேன். "கதையை எப்படித் தொடங்கி, எப்படிக் கொண்டுபோவது?" என்று நான் நினைத்து நினைத்துப் பார்த்தேன். ஒன்றும் இசைவுபட்டு வரவில்லை. "எளிதாக ஒரு கதையை முடித்து விடலாம்," என்று நான் எண்ணியது தவறென்று இப்பொழுது தோன்றிற்று. 'வீட்டைக் கட்டலாம், மாட்டைக் கட்டலாம், தாலியைக் கட்டலாம்; கதை கட்டுவதோ, அப்பாடா, அப்பா, கஷ்டம். 'கஷ்டம்!!' என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். "எப்படியாயினும் ஒரு கதை செய்யவேண்டும்" என்ற உறுதியுடன் நான் பின்வருமாறு தொடங்கினேன்.

"ஒரு ஊரிலே, ஒரு தெருவிலே, ஒரு வீட்டிலே, ஒரு பாட்டி இருந்தாள். அவள் கட்டுக்கட்டாய்ப் பத்துரூபா நோட்டுகளைத் தான் படுக்குந் தலையணைக்குள் வைத்திருந்தாள். உள்ளே வைத்து, மேலே உறைதைத்து, யாருக்குந் தெரியாமல் கதைபண்ணிக்கொண்டு வந்தாள். கதை பண்ணுகிறதிலே அந்தப்பாட்டி கெட்டிக்காரி—கதைக்காரி."

பார்த்தீர்களா கதையை? இந்தப் பாட்டியைப்போல் கதை செய்யத் தெரியாமல்தான் நான் விழிக்கிறேன்; எத்தனையோ பேர் விழிக்கிறார்கள். கதை வேண்டுமென்றால் அந்தப் பாட்டியிடங் கேட்கவேண்டும். "பனைமரத்தைப் பிடுங்கிப் பல்லை விளக்கினவன் கதை", "ஊசியின் காதிலே ஒட்டகத்தை நுழைத்தவன் கதை", "ஆளைக்கொண்டு வாளை வெட்டிய கதை" என்றிவைபோன்ற எண்ணிறந்த கதைகள் அவளுக்குத் தெரியும். இந்தப் பாட்டி கதைபண்ணிக் கொண்டு வாழ்ந்து வருகிற காலத்திலே—

கட்டிலிற் படுத்துக்கொண்டு இவ்வளவு தூரம் கதையை வளர்த்துக்கொண்டு போனபின் கட்டு அற்று விட்டது.

எப்படியென்றால், பக்கத்து வீட்டுப் பரசுராமன் என்ற பிள்ளையாண்டான் பாடும் கருவியில் (கிராமபோன்) பாட்டுக்கள் ஆரம்பித்து விட்டான். அதிலே "சேலத்திலே மாவிடிக்கிற காலத்திலே" என்ற சொற்கள் புறப்பட்டன. "பாட்டி வாழ்ந்து வருகின்ற காலத்திலே," என்று நான் நினைத்துக் கொண்டிருந்த காலத்திலே "மாவிடிக்கிற காலத்திலே" என்ற பாட்டு வந்து, என்னை முன்னும் பின்னும் போகவிடாது கட்டி விட்டது. என்ன கட்டு! என்ன கஷ்டம்!

அந்தப் பாழாய்ப்போன பரசுராமன், அவன் தொலைய மாட்டானா? அவனாலே நாள் தோறும் என்ன பாடு! என்ன பாட்டு! அவனைப் பெற்றவர்கள் எப்படித்தான் அவன் செய்கிறதை எல்லாம் பொறுத்துக்கொண்டு வாழ்கின்றார்களோ தெரியவில்லை. அவன் ஒரு பிள்ளையா? அவன் ஒரு பேய்.

இரண்டு நாளைக்குமுன் என்னுடைய மூக்குக் கண்ணாடி காணமற் போய்விட்டது. இதை நான் எதிர் வீட்டு இராஜகோபாலிடம் சொன்னேன். இந்த இராஜகோபாலுக்கு வயது நாற்பதாகியும் சிறியார் இணக்கமே பெரிதாயிருந்தது. பரசுராமனும் இராஜகோபாலும் நெருங்கிய நண்பர்கள். அன்று நடுப்பகல் சாப்பாட்டிற்குப் பின் நான் வெற்றிலை போட்டுக்கொண்டு வீட்டிலிருந்து வெளிக்கிளம்பினேன். இராஜகோபால் வீட்டிலிருந்து வெளியே வந்த பரசுராமன் என்னை நோக்கி, "உங்கள் கண்ணாட்டியை இழந்து விட்டீர்களாமே?" என்று கேட்டான். "கண்ணாட்டியாவது, கட்டழகியாவது; எனக்கு ஒருவருமில்லை" என்று நான் வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவிக்கொண்டே சொன்னேன். "ஓ, அப்படியா? உங்களுடைய கண்ணும், மூக்கும், காதும் கண்ணாட்டி தந்த குறிகளோடு விளங்குகின்றது. உங்களுக்குத் தெரியவில்லை போலும்" என்றான் அந்தப் பாவிப்பயல். அவனோடு மேலும் பேசினால் சொல் முற்றிப் பகை விளையுமென்று நான் என் அலுவலுக்குப் போய் விட்டேன்.

நேற்று, எனது வீட்டின் பெயராகிய "அயோத்தியா விலாசம்" என்பதை எழுதித் தொங்கவிட்டிருந்த பலகை காணமற் போய்விட்டது. "யார் எடுத்துக்கொண்டு போயிருப்பார்கள்?" என்று நான் எதிர்வீட்டு இராஜகோபாலை விசாரித்தேன். அவன், "யாராவது குறும்புக்காக எடுத்துக் கொண்டு போயிருப்பார்கள். கொஞ்சம் பொறுங்கள். நாளைக்கு அந்தப் பலகை வராவிட்டால், போலீசாருக்குத்

தெரியப்படுத்திவிடலாம்,'' என்று சொன்னான். "நல்லது, அப்படியே செய்யலாம்,'' என்று நான் வந்து விட்டேன்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. காலையில் வெளியேபோய்ப் பார்த்தேன். பலகை இல்லை. ஆகையால் அதைப்பற்றி இனி நினைப்பதில் பயனொன்றுமில்லை என்று எண்ணிக் கொண்டு, காலையுணவு ஆனபின் கதைகட்டத் தொடங் கினேன். கதை வளர்ந்து வரும்பொழுது, "சேலத்திலே, மாவிடிக்கிற காலத்திலே'' என்ற பாட்டைக் கிளப்பிவிட்டு, அந்தக் கதையைக் கெடுத்தான் பரசுராமன். "எவ்வளவு காலம் இந்தப் பரசுராமன் பாடும் பெட்டியை இயக்கிக்கொண் டிருப்பான்? பாட்டு நின்றவுடன் கதையைத் தொடங்கலாம்,'' என்று காத்துக்கொண்டிருந்தேன். ஒன்றன்பின் ஒன்றாய்ப் பாட்டுக்கள் வந்துகொண்டேயிருந்தன. எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது. மணியைப் பார்த்தேன். கிட்டத் தட்டப் பத்தரையாயிற்று. சற்றுநேரம் வெளியே போய்வரலா மென்று புறப்பட்டேன்.

வெளியே வந்தவுடன் என் கண்ணிற்பட்டது என்ன தெரியுமா? காணாமற்போன பலகைதான். அதைக் கண்ட எனக்கு நிரம்ப மகிழ்ச்சியுண்டாயிற்று; "இனிமேல் இரவில் இந்தப் பலகையை வெளியே வைக்கலாகாது,'' என்று நான் ஒரு தீர்மானஞ் செய்துகொண்டு, பலகையைப் பார்த்தேன். எதிர்வீட்டு இராஜகோபால் வந்து தெருவில் நின்றுகொண்டு, "நான் சொன்னேனே, யாராவது விளையாட்டுக்காகச் செய் திருப்பார்களென்று பார்த்தீர்களா? பலகை வந்துவிட்டது'' என்று பல்லை இளித்துக்கொண்டு பேசினான். இதற்கு நான் பதிலொன்றுஞ் சொல்லவில்லை. என் கண் சிவந்தது; என் மீசை துடித்தது; என் வயிறு எரிந்தது; என் இரத்தம் கொதித்தது. நான் பல்லைக் கடித்தேன்; சீறினேன்; குமுறி னேன். எனக்கு வந்த கோபத்துக்கு இணையுண்டா, எதி ருண்டா, நிகருண்டா?

நடந்த செய்தி தெரியுமா? அந்தப் பலகையில் எழுதி யிருந்த எழுத்துக்களில் சில மாறுதல்கள் தோன்றின. "அயோத்தியா'' என்ற சொல்லிலுள்ள "த், தி'' என்ற எழுத்துக்களின் கால்கள் வெட்டப்பட்டு, (கருப்பு மையால் மறைக்கப்பட்டு) அவை வேறு வடிவந் தாங்கி நின்றன. த், தி என்பதை முறையே, க், கி ஆக்கப்பட்டிருந்தன. என்ன கொடுமை! என்ன இடும்பை! தகர ஒற்றையும், தகர இகரத் தையும் முறையே ககர ஒற்றும், ககர இகரமு மாக்கியது

மன்றி, 'யா' என்ற எழுத்திலுள்ள 'ா' மேல் ஒரு புள்ளி வைத்திருந்தார்கள். என்ன தாறுமாறு! என்ன கெடுமதி!

இந்த மாறுதல்களினால், "அயோத்தியா விலாசம்" என்பது, "அயோக்கியர் விலாசம்" என்று தோன்றினது.

என்னுடைய உள்ளம் புழுங்கி, உடல் வெதும்பிக் கொண்டிருந்த இந்த நேரத்திலே பரசுராமன் வந்து, "என்ன செய்தி? பலகையை உற்று, உற்றுப் பார்க்கிறீர்களே. என்ன விசேஷம்?" என்று கேட்டான். இப்படிக் கேட்டுவிட்டு அவன் இராஜகோபாலைப் பார்த்துக் கண்சிமிட்டினான். நான் எனக்கு வந்த பெருஞ் சினத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "தம்பி, இஃது என்னுடைய வீட்டின்பெயர் பொறிக்கப்பெற்ற பலகையன்று; இஃது ஒருவேளை உங்களுடைய வீட்டுப் பெயராகவிருக்கலாம். தவறாக இதை யாரோ இங்கே கொண்டுவந்து தொங்கவிட்டிருக்கிறார்கள்" என்று சொன்னேன். இதைக் கேட்ட பரசுராமன் என்னருகில் வந்து "என்ன சார்? அதிக வருத்தப்பட்டுப் பேசுகிறீர்கள். என்ன சங்கதி?" என்று வினவிவிட்டு, 'டப்பாஸ்' வெடித்ததுபோல் சிரிக்கத் தொடங்கிவிட்டான். அவன் குனிந்து, பிறகு நிமிர்ந்து, மறுபடியுங் குனிந்து நிமிர்ந்து சிரித்த சிரிப்பு இவ்வளவென்று சொல்ல முடியாது. இந்தச் சிரிப்புச் சிறிது அடங்கியபின் அவன், "இராஜகோபால் அண்ணா! இங்கே வந்துபார்—" என்று கூப்பிட்டுத் திரும்பவுங் குதிரை கனைத்ததுபோல் நகைக்கலானான். அந்தத் திருட்டுப்பயல் இராஜகோபாலும் வந்து பலகையைப் பார்த்துவிட்டு அவனுடன் கூடச் சேர்ந்து வயிறு புண்ணாக நகைத்தான். தெருவிலே சென்ற இரண்டு மூன்றுபேர் இவர்கள் நகைப்பைக் கேட்டு என் வீட்டிற்கு முன்வந்து கூடிவிட்டார்கள். நான் அந்தப் பலகையை எடுத்து இராஜகோபால் வீட்டிற்குள் எறிந்துவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டேன்.

இதற்குமேல், கதையை வளர்க்க முடியுமா, பாருங்கள்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

புதுக்கவி

தமிழ்த் திருப்பாவை

[சுவாமி சுத்தானந்த பாரதி அவர்கள், புதுவை]

வெள்ளி நகைக்குதுபார்! வெண்சங் கொலிப்பதுகேள்!
கிள்ளை மொழிகளையுங் கீதக் குயிலிசையும்,
அள்ளிவருந் தென்ற லருந்தேன் மலர்களுடன்
றுள்ளிவிளை யாடுதுபார்! தும்பி ஒம் சக்தியெனக்
கள்ளுண் டலம்புதுபார்! காதற் களிப்பூறி,
யுள்ளங் குளிர, வுயிர் குளிர, வூன்குளிரத்
தெள்ளு தமிழென்னுந் திருவா ரமுதமய
வெள்ளத்தி லாட விரைந்தேலோ ரெம்பாவாய். 1

வெற்றிக் குழலூதி விரையார்பூங் காற்றுன்னை
முற்றத்தே வந்தெழுப்ப, மூடிப் படுப்பாயோ?
கற்றைக் கதிர்விரித்துக் காரிருளைக் கீண்டிரவி,
யுற்ற தறியாமல், ஊமைக் கனவுகளைப்
பற்றி மயங்கிப் படுக்கையிலே மெய்யுணர்வு
செற்றுக் கிடப்பாயோ, சிற்றிடையே, சீ வெட்கம்!
கற்றுக் கலையேறிக் கற்பகம்போ லேகனிகள்
முற்றி யுலகூட்ட வுவந்தேலோ ரெம்பாவாய். 2

முன்னை மொழிக்கெல்லா முன்மொழியை, முத்தமிழை,
இன்னர் மொழிக்கு மினிதா மிளந்தமிழைப்
பொன்னைப்போற் போற்றிப் புதுநயங்க ளேற்றிடுவோம்.
அன்னிய மாயத் தழுந்திக் கிடக்காதே
சொன்னச் சுரங்கங் கரந்திருக்க வுன்மனையில்
இன்னொருவர் வீட்டி. லிரந்துண்ணப் போவாயோ?
என்னேயுன் னேழைமைதான்! எம்மொழிக்குந் தாரகமாய்
அன்னைமொழி யோங்க வருட்பணிசெய் யெம்பாவாய். 3

தேவர் குறளாட்டித் திருவா சகஞ்சூட்டி
மூவர் தமிழ்பாடி, நாலாயி ரம்மொழிந்து,
தாவடங்க ளாகமுச் சங்கத் தமிழிணைத்துக்
காவிய மாமணியாங் கம்ப முடிகவிழ்த்துத்

தீவினை மாற்றுந் திருமந் திரஞ்சொல்லி,
ஆவி யுருக்கும் அருட்பாவா லர்ச்சித்துக்
கூவித் திருப்புகழைக் கூத்தாடித் தெண்டனிட்டுத்
தேவாதி தேவனருட் சேர்ந்திடுவோ மெம்பாவாய். 4

போற்றி தமிழரசி, பூவெல்லாந் தாள்பணியப்
போற்றி தமிழ்ச்செல்வம் பொன்ற நவநிதியாய்ப்
போற்றி தமிழர்குலம் பொய்யா மணிவிளக்காய்ப்
போற்றி தமிழுலகம் பொன்னுலக மந்திரமாய்!
ஆற்ற லறிவாண்மை யழகின்ப வூற்றாகக்
காற்றுங் கடலுங் கதிரும்போல் வாழ்வோங்கிக்
கூற்றையும் வென்று குறைவற்றுப் பூரணனைப்
போற்றி யவனருளைப் பூண்டுய்வோ மெம்பாவாய். 5

புதுப்பாட்டு

[திரு. வித்துவான் அ. மு. பரமசிவானந்தன்]

'வீரசுதந்திரம்' என்ற மெட்டு

1. செம்மை பயக்குமொரு செந்தமிழ் நன்மொழியே
சிறப்புடன் ஓங்கிடவே—என்றும்
உண்மை வழியில்நின்று உற்ற துணைபுரிவீர்
உயர்ந்திடு தமிழர்களே!

2. ஆதி முதலிருந்து அன்பர் பலர்புரக்க
ஆட்சியில் நின்றபின்பும்—அதன்
சீரிள மைகுறையா செல்வ நலமறிந்து
செம்மையைத் தேடிடுவீர்.

3. முத்தமி ழாம்மொழி முத்தி யளிக்குமென்றே
மொழிந்துமே அதைப்பயின்று—பண்டு
சத்திய வழிநின்று நித்திய வாழ்வுற்றோர்
சாற்றிடின் அளவிலம்மா!

4. புலவ ருடனெருங்கு புரவலர் களுங்கூடி
போற்றிப் புரந்தமொழி—நந்தம்
நலமிகு செந்தமிழை நாட்டினில் காத்திட
நாடொறும் துணைபுரிவீர்.

5. கன்னித்தன் டமிழ்மொழி கற்பகம் போன்றெவர்க்கும்
கருதியதைக் கொடுக்கும்—அதை
உன்னவும் இனித்திடும் உயர்ந்திடு நன்மொழி
உலகினில் ஓங்குகவே!

6. பண்டொரு நாள்தமிழர் தம்மைப் பழித்துரைத்த
பாதக ஆரியரைக்—கொண்டு
மண்டையில் கல்கொணர்ந்த மட்டிலா வீரம்நிறை
மாதமிழ் நாட்டினரே!

7. இன்பம் பயக்குமொழி இணையிலாத் தமிழ்மொழி
எங்களுக் கேற்றதென்றே—இதை
அன்புடன் ஆங்கியரும் ஆர்வமா யேற்றனர்
அளவதோ இதன்பெருமை.

8. போப்பெனும் பாதிரியும் பூமியை நீங்கிடும்
போதினில் தன்னையொரு—மிக
வாய்ப்புடைத் தீந்தமிழின் மாணவ னென்றுமே
வரைந்திடச் சொற்றனரே!

9. ஆயிர மாயிரம் ஆண்டுக ளாயினும்
அழகினில் குன்றலில்லா—இன்பம்
மேவிய தமிழ்மொழி மேதினி தன்னிலே
மேன்மையாம் எங்கள்மொழி.

10. இயலிசை நாடகம் என்ற பகுப்புடனே
இந்நிலத் தேநிலவி—என்றும்
மயலடை யாமலே மகிழ்வை நிரப்புவிக்கும்
மாதமிழ் நம்மொழியே!

11. இப்பெரும் புகழுடை இனியநற் றமிழையே
ஏனோ குலைத்திடலே—மனத்தை
ஒப்ப வழிப்படுத்தி உரைத்திடாத் துன்பங்கள்
உடற்றவும் உன்னுகிறார்.

12. அந்நியர் கூறினும் அவசிய மில்லையென
ஆக்கலாம் ஆனாலோ—இது
உன்னவும் இன்னலை உணர்த்திடும் தன்மையில்
உதித்தது நம்மிடையே.

13. ஆட்சி தனை அடைந்தார் ஆர்ப்பரித் தேதமிழை
அந்தோ புறக்கணித்து—ஒரு

மாட்சிமை அற்ற 'இந்தி' மனந்தொவ்வா மொழியினை
மாட்டிட நின்றுவிட்டார்.

14. ஆட்சியாளர் உரையை ஐயோ நம்தமிழரில்
அநேகரும் உன்னலாமோ—தமிழ்
வீழ்ச்சியின் வழியிது என்று அறிந்திருந்தும்
வீரமற் றிருக்கலாமோ.

15. பண்டைநல் வீரமே கொண்டு கிளம்பிடுவீர்
பண்புடைத் தமிழர்களே—அன்றேல்
கண்டவர் பேசுவர் கன்னித்தன் டமிழ்மொழி
காணரும் துயரடையும்.

16. வீரமே மிக்குடை மேன்மைநம் தாய்மொழியே
மேதினி தனில்பரப்பி—என்றும்
ஆதரவாகியே அனைவரும் வாழ்ந் திடுவோம்
அருந்தமிழ் வாணர்களே.

இந்தி எதிர்ப்புப் பா

(ஒப்பிலன்பன் இயற்றியது)

எங்கள்தமிழ் நாடதுதான் என்னுந்தமிழ் நாடாய்த்
தங்கமுற ஒங்கிடவே தொண்டுபல செய்வோம்
வங்கதேச இந்திமொழி வந்துதமிழ் நாட்டில்
பங்கெடுத்துக் கொள்ளயாங்கள் பார்த்திருக்க மாட்டோம்.

ஆரியர்தம் படைகடந்த அரும்பெயரைப் பூண்டோன்
நேரியநற் பாண்டியனும் நெடுஞ்செழியன் என்போன்
சீரியநற் புகழ்விளங்கு தென்னுதமிழ் நாட்டில்
பேரறியா இந்திதனைப் பெயரெடுக்க ஒட்டோம்.

சேரன்செங் குட்டுவனும் செந்தமிழ்நல் வீரன்
போரதனில் ஆரியரைப் புறங்கண்ட தீரன்
வீரமிகு புகழோங்கி விளங்குதமிழ் நாட்டில்
சாரவரும் இந்திதனைத் தலையெடுக்க ஒட்டோம்.

கங்கைவரை அரசாண்ட கங்கைகொண்ட சோழன்
தங்குபுகழ் எங்குமொளிர் தண்டமிழ்நன் னாட்டில்
எங்கள்தமிழ் அரசியவள் ஏக்கமுற யாங்கள்
சங்கைமிகும் இந்திதனைச் சாரவிட மாட்டோம்.

தமிழரசி புகழோங்கத் தமிழர்புகழ் ஓங்கத்
தமிழ்த்தொண்டு புரிகுவதே தமிழரது கடனும்
அமிழ்தனைய தமிழரசி அகங்களிக்க நாங்கள்
தமிழ்ப்பெருமை நிலைநாட்டித் தமிழ்முழக்கம் செய்வோம்

சொற்றிறம்பாத் தமிழரசி சோதிமணி முடியில்
வெற்றிமாலை சூட்டுவோம்பின் வெற்றிக்கொடி நாட்டுவோம்
வெற்றிமிகு தமிழரசி வீரமதைப் பாடுவோம்
வெற்றிவெற்றி வெற்றியென்று வெற்றிகூறி வாழ்குவோம்.

தமிழ்ப் புலவர் பெருமக்கட்கோர் வேண்டுகோள்

[கருவூர் ஈழத்துச் சிவானந்த அடிகள்]

"சைவ சமயமே சமயம்" என்ற மாறு உண்மையைப் பொய்யாக்குவான் வேண்டிப் பண்டு எண்டிசைப்பட்ட பொருளாரும் ஏத்தும் பெருந்தகைப்பா டுடைத்தான திருநீற்றையணியுஞ் செந்தண்மையுடையார் மேற்பட்ட காற்றுத்தானும் தம்மேற்பட ஒவ்வாத சமணர்களும், புத்தியே ஆன்மா என்று போதித்த மயக்க உணர்வுடைய புத்தர்களும் தங்கள் தங்கள் அரும்பெருஞ் சூழ்ச்சிகளினல் அயர்வறச் சென்னியில்வைத்து இராசாங்கத்தில் அமர்ந்த வைதிகச் சைவத்திற்குப் பெருங்கேடு சூழ்ந்து அதன் மாறு நிலைபேற்றுண்மையை மாசு படுத்திய ஞான்று, சைவ உலகம் செய்த தவப்பயனெல்லாம் ஒருங்கு திரண்டு, அன்பு நெறி வழாதொழுகும் திறத்தராய சைவத் திருநெறித் தலைவர்களாம் சமயாச்சாரியர்களைத் தோற்றுவித்துச் சமணர்ச் சழக்கும், புத்தர்ச்செருக்கும் தலைகாட்டாதொடச்செய்து, எல்லாச் சமயங்கட்கும் தாயகமாயுள்ள சைவ சமயத்தை நிலை நிறுத்திய உண்மையினைச் சிறப்பாகத் தமிழ் உலகமும் பொதுவாக எல்லா உலகமும் நன்கறியும். நிற்க,

இப்போது சில நூற்றாண்டுகளாக "என்றுமுள தென்றமிழ்" என்ற உண்மையைப் பொய்யாக்குவான், இடைக்காலத்துத் தோன்றியதும், இலக்கணச் சிதைவுள்ளதும், பொருணல மில்லதுமான அரிய மொழியாம் அல்லன்மொழி தென்றமிழ் நாட்டிற் புக்குத் தனித்தமிழ்மொழிக்கும், அதன் கடவுட்டன்மைக்கும், மொழியாக்க நுண்மைக்கும், பொருணலந் துறுமிய தொன்னூல்களின் செவ்விக்கும் மாபெருங்கேடு சூழ்ந்து, அதன் இனிமை இளமை பழமை முதலிய வற்றின் இயல்பையும் வனப்பையும் குன்றச்செய்து பொன்ற

வைத்து வந்ததும் வருவதும் கண்கூடு. அதனுடைமையாது ஆங்கில மொழியும் தமிழ்மொழியின் தனித்தியங்கும் வாய்ப்பிற்கு ஒரு சிறிது இடர் விளைத்ததென்றே சொல்ல வேண்டும். இந்த நிலைமையில் "பனை ஏறி விழுந்தவனை மாடேறி மிதித்தது" போல இந்தி எனுமோர் புதுமொழியை இந்தியா முழுவதற்குமே பொது மொழியாக்க வேண்டுமென்ற கிளர்ச்சியும் அக்கிளர்ச்சியின் பயனாக நந்தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இந்திமொழிப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களும் தோன்றியிருப்பது நந்தமிழ்ப் புலவர் பலர் நன்கறிந்தனவே.

இப்போது தமிழ்ப் புலவர்கள் தாங்கள் ஊன்றி நோக்க வேண்டிய பொருள்களுள் இஃதும் ஒன்றாகையால் இதனை அவர்கள் நினைவிற்குக் கொண்டுவருதல் எனது கடமையாயிற்று. அறிவுநூல் பல கற்று நுண்ணறிவு வாய்ந்த நுண்மாண் நுழை புலவர்களும், தம்மைப்பற்றிய சீர்மைகளையோ அன்றித் தமக்கு அன்புடைய தமிழ்மக்களைப்பற்றிய நன்மைகளையோ தாமே உய்த்துணரும் ஆற்றல் பெரிதும் உடையார் என்பது பெறக்கிடக்க, என்போன்ற சிற்றறிவுடையோர் இவைபற்றி எழுதுவதும் வேண்டிக்கொள்வதும் அறிவுடைமையன்றாயினும் நந்தெய்வ அணங்காம் தமிழன்னையின் புலம்பலோசையானது என் செவிகளை அடைத்து மனங்கொள்ளாக் கவலையை உண்டு பண்ணியதால் இங்ஙனம் எழுதி வேண்டிக் கொள்ள நேர்ந்தது.

எனவே, பண்டு நஞ்சைவத் திருநெறித் தலைவர்கள் நமது சமயத்தை நிலைபெறச்செய்வான் எடுத்துக்கொண்ட பெரும் பணிபோன்ற ஓர் அரும்பணி இன்று நந்தமிழ்ப் புலவர்கள்பா லேற்பட்டுளது. இவ்வரும்பணியை ஏற்று நடாத்துதல் தமிழ்ப்புலவர்தம் இன்றியமையாக் கடமையாம். ஆதலின், தமிழ்கற்ற அறிஞர்கள் பலர் ஒருங்குசேர்ந்து ஊர்கடோறும் சென்று ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி விரிவுரைகள் வாயிலாகவும், துண்டுவெளியீடுகள் வாயிலாகவும் தமிழ்மொழியின் அளப்பரும் பெருமையினையும், அதன்கணுள்ள பொருணலந் துறும்பிய தொன்னூல்களின் செவ்வியினையும், தமிழ்மொழியின் தனித்தியங்கும் பெருந்தகைப்பாட்டினையும் நன்கெடுத்துச் சொல்லியும் எழுதியும் தமிழ்மொழி உணர்ச்சியைத் தமிழ்மக்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போலப் பதியச் செய்தல் வேண்டும். தாய்மொழி பயிலாது வேறு மொழி பயின்று அதனால் நன்மைகள் அடையப் பெறலாமென்று கருதியிருக்கும் தமிழ்மக்கள் சிலரின் அறியாமையை அகற்றி அவர்களுக்குத் தாய்மொழியிற் பற்றுன்றச் செய்

வதும் தமிழ்ப்புலவர்தம் கடமையாகும். அன்றியும், தமிழ் மொழியின் அமைப்பும் அதன் இயற்கையும் சைவசமய உண்மையோடு ஒன்றுபட்டிருத்தலால் அதனைத் தமிழ்மக்கள் எல்லாரும் நன்றாகக் கற்றுப் பிறமொழிக் கலப்பில்லாமல் செவ்வையாகப் பேசவும் எழுதவும் கூடிய திறமையையும் ஆற்றலையும் உண்டு பண்ணுவதும், தமிழல்லாத மற்ற மொழிகளில் வருத்தப்பட்டுச் சொல்லும் சொற்களும், உரத்த ஓசைகளும், இளைத்த ஒலிகளும் நிரம்பிக் கிடத்தலால் அவையெல்லாம் செயற்கை மொழிகளென்றும், தமிழில் வருத்தமின்றிச் சொல்லும் சொற்களும் வெடிப்போசையும் இளைப்பொலியுமின்றி எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின் தமிழ் இறைவனோடொத்த தெய்வத் தனிமொழியாம் என்பதையும் தமிழ் மக்கள் எல்லாரும் எளிதிலுணர்ந்து கருத்திற் பதிக்குமாறு வேண்டிய முயற்சிகளெல்லாம் குறைவறச் செய்தலும் வேண்டும்.

இனிக், கடந்த 20-9-'36-ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடிய தமிழ்க்கலைச் சொல்லாக்கன் மாநாட்டில் தலைமை வகித்து விரிவுரை நிகழ்த்திய திருவாளர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் தமிழ்க்கலைச்சொல்லாக்கன் மாநாடு என்றதற்கு மாறாக அதனைத் தமிழ்க்கலைச் சொற்றாக்கன் மாநாடு என்ற முறையிற் சில சொற்றொடர்களைப் பேசியுள்ளார்கள்; அச்சொற்றொடர் பின் வருமாறு:—"வடமொழி தமிழ்மொழியெனு மிருமொழிக்கும் இலக்கணம் ஒன்றே யென்றே எண்ணுக என்னும் கூற்றினை நாம் முற்றிலும் ஒப்புக் கொள்ளாவிடினும், வடமொழியிலிருந் தெடுத்துத் தமிழான்றோரால் தமிழுருவாக்கி வழங்கப்பட்ட சொற்களைப் பிறமொழிச் சொற்களெனக் கடிந்தொதுக்குதல் மேற்கொள்ளாது அவை தம்மை ஆக்கத் தமிழ்மொழியாகத் தழுவிக் கொள்வதே முறையாகும்'' என்பதே. மேற்குறிப்பிட்ட சுவாமிகளின் சொற்றொடர்களை ஊன்றி நோக்குமிடத்துத் தமிழ்க்கலைச் சொல்லாக்கன் மாநாடு என்ற ஒன்று கூட்டியிருக்க வேண்டா என்றே கருத இடந்தருகின்றது. இக்காலத்திற் கிணங்க நம் தமிழ்மொழி வளர்ச்சியடைய வேண்டுமாயின், ஏராளமான வடசொற்களைத் தமிழிற்சேர்த்து எழுதுதலும் வழங்குதலும் வேண்டுமென்ற சுவாமிகளின் கருத்து வியப்பையே உண்டு பண்ணுகின்றது. ஏனெனில் நந்தமிழில் ஒரு பொருளை உணர்த்துதற்குப் பலசொற்களும், பல பொருள்களை உணர்த்துதற்கு ஒரு சொல்லும் உண்டென்பதைப் பழந்தமிழ் நூல்களை நன்குணர்ந்த மொழி ஆராய்ச்சி வல்லுனர் கூறுகின்

றனர். அஃதன்னமிருப்பவும் சுவாமிகள் வடமொழிச் சொற்களைத் தமிழில் விரித்துவழங்குதல் சால்புடைத்தென்று கூறியது அம்மாநாட்டுக்கு ஒரு பெருங்குறைவையே உண்டு பண்ணியதென்று கூறலாம். சென்னையில் கூடிய சொல்லாக்கன் மாநாட்டின் நோக்கம் தமிழ்க்கலைச் சொற்களை ஆக்குவதே அன்றித் தமிழ்ச்சொற்களைத் தாக்குவதன்றென்பதைச் சுவாமிகள் உணர்ந்திருந்தும் அன்னம் பேசியது வருந்தத் தக்கதே. இனிச் சுவாமிகள் கூறியதற்கேற்ப வடமொழிச் சொற்களைக் கடிந்தொதுக்காது தமிழ்மொழியில் எவ்வகைப்பட்ட பொருள்கட்கும் போதிய சொற்கள் இருக்கின்றனவென்ற உவகைப் பெருக்கால் அவைதம்மை எல்லாம் கடிந்தொதுக்குவோமாக.

எனவே, மேலே குறிப்பிட்ட அரும்பணியை நிறைவேற்றப் பொருள் பெரிது வேண்டுமேயென்ற கவலை வேண்டுவதின்று. பண்டு நந்தமிழரசர்களால் சமய வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்குமென ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பெருந்தொகைப் பொருள்களை யுடையவர்களான பெருநிலக்கிழவர்களாம் நம் சைவ மடத்தலைவர்களைத் தமிழ்ப் புலவர்கள் அணுகி அவர்களுக்கான முறையில் இப்போதைய தமிழ்மொழியின் நெருக்கடியான நிலையை நன்கெடுத் துணர்த்தி, அவர்களிடம் முடங்கிக்கிடக்கும் பெரும்பொருட்டிரளில் ஒரு சிறு பகுதியை மட்டும் தமக்கு எடுத்துக்கொண்டு, மற்றைப் பெரும் பகுதியைக் குறிப்பிட்ட நற்பணிக்குக் கொடுத்துதவுமாறு எந்தெந்த வகையில் முயல முடியுமோ அந்தந்த வகையாலெல்லாம் முயன்று, அவர்களிடமுள்ள பொருள்களைப்பெற்று இப் பணியை இனிது நடத்தலாம். அன்றியும், தமிழ் நாட்டில் இவ்வரும் பணியைத் துவங்கி நடத்துங்கால் ஆங்காங்குள்ள ஏனைய பொருட்செல்வர்கட்கும் இத்துறையில் தம் பொருளின் ஒரு பகுதியைச் செலவிடும் உணர்ச்சியைத் தமிழன்னை உண்டு பண்ணுவாளென்பதும் ஒருதலை. ஆதலால், தமிழ்ப்புலவர் பெருமக்களே! எழுமின்! விழிமின்! தமிழன்னையின் புலம்பலோசைக்குச் செவி சாய்மின்! நமக்கென்ன என்று வாளா இருக்கன்மின்! ஒன்றும் நன்றே! அதுவும் இன்றே செய்ய வேண்டுமென்ற பொன்மொழியை நினைமின்!

கவி தாகூரின் தாய்மொழிப் பற்று

சீமைக்குச் சென்று ஆங்கிலம் படித்தவனே மனிதன் என்று செருக்காடிய மாயத்தைத் தாகூர் ஒழித்தார். அக்காலம் ஆங்கிலம் கலந்தே வாலிபர் பேசிக்கொண்டிருந்தனர்.

தாகூர் சுத்தமான வங்காளமே பேசுவார்; பிறரையும் பேசச் சொல்லுவார்; பிறருக்கும் தம் தாய்மொழிகளை உயிர் போலப் போற்றச் சொல்லுவார். ஐம்பது வயதிற்குப் பிறகு தான் தாகூர் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினர்; 1911-ல் தான் முதன் முதல் தமது பாட்டொன்றை மொழிபெயர்த் தார். அதை மாடேண்ரிவ்யூ ஆசிரியர் ராமானந்த சட்டர்ஜி வெளியிட்டார். இன்றும் தாகூர் பெரும்பாலும் வங்காளத் திலேயே பேசுகிறுர்; எழுதுகிறுர். அவர் வங்கவாக்கை ஐரோப்பியரும் மெச்சுகின்றனர். நோபல் வெகுமதி கிடைத்த பிறகுதான் தாகூர் பிறநாடுகளில் ஆங்கிலச் சொற்பொழிவு கள் நிகழ்த்தத்தொடங்கினர். தாகூரின் தாய்மொழிப் பற்றுத் தமிழன் இரத்தத்தில் ஊறிப்போகவேண்டும். இவ் வாண்டு (1937) நடந்த கல்கத்தா சர்வகலாசாலை பட்ட மளிப்பு விழாவிற்குத் தாகூர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுர். இதுகாறும் அக்கிராசனம் வகித்தவர் ஆங்கிலத் திலேயே சொற்பொழிவாற்றி வந்தனர். நம் வரகவிஞர் தமது தாய்மொழியாகிய வங்காளத்திலேயே பேசினர்; நமது சொந்த நா, பல், குடல்களைக்கொண்டே உணவைச் சீரணிப் பதுபோல, தாய்மொழியைக் கொண்டே எல்லா அறிவும் வளர்க்கவேண்டும் என்று வற்புறுத்தினர். இஃதோர் அரிய உதாரணம்!

—சுவாமி சுத்தானந்த பாரதி.

இந்திமொழி எதற்காக?

(செல்லூர் சே. ரே. இராமசாமி பிள்ளை)

தொல்காப்பியர் காலத்தில் வடக்கே வேங்கடமலையை யும், தெற்கே கன்னியாகுமரியையும் நிலவெல்லையாக்கிக் கொண்டு உயரிய நிலையெய்தியிருந்தது நமது தமிழ்மொழி. இது பண்டைய இலக்கியங்களால் காணக்கிடக்கின்றது. இத்தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் சேர, சோழ, பாண்டி யர்கள். இவர்கள் காலத்துத் தமிழ்மொழி உலகமொழியாகப் பரவியிருந்தது. அக்காலத்தில் மதுரையில் முதல், இடை, கடையென மூன்று சங்கங்கள் திகழ்ந்திருந்தன. அச்சங்கங் களில் தமிழ்மொழியை இயல், இசை, நாடகமென முப்பிரி வாகப் பிரிக்கப்பட்டு வளர்த்து வந்தனர். சங்கம் இரீஇய புலவர்கள் பல நூல்கள் இயற்றியிருந்தனர். பிற்காலத்து நிகழ்ந்த கடற்பெருக்கால் அச்சங்கங்களும், அவைகளிற் றோன்றிய நூல்களும் அழிந்தொழிந்தன. இதனைச் சிலப் பதிகாரம் வேனிற்காதைக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய

உரையானும், இறையனாரகப்பொருட்குக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் வரைந்த உரையானும், பிறவாற்றானும் அறியலாம். பிற்காலத்து ஏற்பட்ட மகம்மதிய ஆட்சி, ஆங்கில ஆட்சிகளால் தமிழ்மொழி பிறமொழிக் கலப்பால் தனது இயற்கை குன்றிவருகின்றது. இஃது அறிஞர் யாவருக்கும் ஒப்பமுடிந்த உண்மை.

தற்கால அரசியலார்களின் சூழ்ச்சியால் பள்ளிக்கூடங்களில் இந்திமொழி கட்டாயபாடமாகப் புகுத்தப்பட ஆங்காங்கே பள்ளிகளும், சங்கங்களும் திறக்கப்பெற்றுப் புற்றீசல்போல் வருகின்றன. கட்டாய பாடமாக இந்திமொழி வருமாயின் இப்போதுள்ள நிலையினும் மிகத்தாழ்ந்த நிலைக்குத் தமிழ் மொழி வந்துவிடும்.

ஆங்கில ஆட்சியின் பயனால் உலகவழக்கினும், செய்யுள் வழக்கினும் ஆங்கிலமொழிகலந்து, இது தமிழ், இஃது ஆங்கிலம் என்னும் பாகுபாடின்றி வழங்கி வருகின்றது. உதாரணமாக விளக்கை லைட்டு என்றும், தண்ணீரை வாட்டர் என்றும், குழாயைப் பைப்பு என்றும், மருத்துவரை டாக்டர் என்றும், மருந்தை மெடிஷன் என்றும் இன்னும் பலவாறாகத் தமிழ் மொழி கொள்ளை கொள்ளப்பட்டு, ஆங்கிலமொழி மேலோங்கி நிற்கின்றது. இது தான் மொழிவளரும் இயற்கை யென்றும் யாவர்க்கும் தெரியும் சொற்கள் என்றும் சிலர் வாய்கூசாது கூறுகின்றனர். நிற்க இச்சொற்களை நாளடைவிற் களையாது விட்டுவிடுவோமானால் மேலும், மேலும் கலந்து தமிழுருமாறி வேறொரு புதுமொழியாகிவிடும். இவ்வாறு தமிழ் திரிந்த மொழிகளே மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலியன. "கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையாளமுந் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும், ஆரியம் போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத்திறம் நினைந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்று ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் கூறியதும் இதனை வலியுறுத்தும்,

நான் சில ஆண்டுகளுக்கு முன்னர்ப் பர்மாவில் இருந்த பொழுது மலையாள நண்பரொருவர் இருந்தார். அவர் அம்மொழியிற் புலமை வாய்ந்தவர். அவருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று. அவர் அம்மொழியில் சில நூல்கள் இயற்றியிருந்தார். அவைகளிலுள்ள பாட்டுகளையும் என்னிடம் சொல்லுவார். நானும் தமிழ்ப்பாட்டுகளைச் சொல்லுவேன். நாங்கள் இருவர்களும் ஒருவருக்கொருவர் பொருள் சொல்லாமலே பெரும்பாலும் தெரிந்து

கொள்வோம். காரணம் மலையாளமொழியில் முக்காற்பாகம் தூயதமிழ்ச் சொற்கள் இருப்பதுதான். முன்னர் நந்தமிழ் நாடாண்ட சேரமன்னனும் மலையாளியே, அக்காலத் தமிழ் மொழியே அங்குத் தாய்மொழியாக இருந்தது. சிலப்பதி காரம் இயற்றிய இளங்கோவடிகளும் ஒரு மலையாளியே யென்பதும் உன்னற்பாலது. இதுகாலை நந்தமிழ்மொழி எந்நிலையிலிருக்கிறது? இரங்கும் நிலையிலிருக்கிறது காலத்தின் கோலம்!

ஆகவே இந்திமொழி கட்டாய பாடமாக வருமானல் வழக்கச் சொற்களெல்லாம் இந்தியாகவே மாறி, தமிழ்வளங் குன்றும். இப்போது இந்திமொழி வருமுன்னரே நாட்டு விடுதலை விரும்பும் நண்பர்கள், திரு என்ற தூய அரிய தமிழ்ச் சொல் வழக்காற்றிலிருப்ப அதற்கு நேர்மாருக ஸ்ரீயுத ஸ்ரீஜத் முதலிய சொற்களை வழங்குகின்றனர். வடநாட்டார் இவ் வாறு மொழியிரவலா வாங்குகின்றனர். நாளாக நாளாகத் தமிழில் அருவருப்பும் இந்தியில் மயக்கமும் உண்டாகித் தமிழ் சீர்குலைந்துவிடும். இப்பொழுதே இந்தியை யெதிர்த்துத் தடுக்காவிட்டால் ஒண்டவந்த பிடாரிக்கு ஊர்ப்பிடாரி இடங் கொடுத்த கதையாக முடியும்.

இந்தி கட்டாயமானல் தமிழ்மொழியிலுள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, சிந்தாமணி, கம்ப ராமாயணம் முதலிய நுணுக்கம் வாய்ந்த அரும்பெரும் இலக் கிய நூல்களையும், தொல்காப்பியம், இறையனாரகப் பொருள் முதலிய இலக்கண நூல்களையும் கற்பாரற்றுப்போம். இறுதி யில் தமிழர் பிறசெல்வங்களை இழந்ததுபோல் கலைச்செல்வத் தையும் இழக்க நேரும் பார்மின்கள்.

தேசவிடுதலை விரும்பும் அன்பர்களே! பால்மணமாறுப் பச்சிளங் குழந்தைப் பருவத்தில் சீராட்டிப் பாராட்டி அம்மே, அப்பா, என்னும் இயற்கை மொழியில் உங்களுக்குச் சொற் பழக்கம் உண்டாகுமாறு செய்த தாய்மொழியை நீங்கள் மறக்கலாமோ? அயல்மொழிப்பித்து உங்களைவிட்டு அகன்ற பாடில்லை. இந்தி, இந்தியென்பதுவே உங்கள் ஏக்கமாயிற்று.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்—பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை, வெறும்புகழ்ச்சியில்லை—ஊமையராய்ச் செவிடர் களாய்க் குருடர்களாய் வாழ்கின்ருேம் ஒரு சொற்கேளீர் சேமமுறவேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்னும் நம்பாரதியாரின் தெய்வ மொழியையேனும் நினைந்தீர்களா? வள்ளுவன் வாய்மொழி

கற்றீர்களா? கம்பன் கவிநயம் கண்டீர்களா? இளங்கோ இன்னுரை யேற்றீர்களா?

பாரதிவிழாக் கொண்டாடுகிறீர்கள். போட்டிப்பந்தயம் காட்டுகிறீர்கள். பாரதி படத்துக்குப் பூமாலைசூட்டுகிறீர்கள். ஊர்வலம் காட்டுகிறீர்கள். என்னென்னவோ ஆரவாரம் செய்கின்றீர்கள். பாரதிசொல்லைமட்டும் காற்றிற் பறக்கவிடுகின்றீர்கள். நீங்கள் தமிழ்த்தாயின் உண்மை மக்கள் ஆனல் தமிழ்ச்செந்நீர் (இரத்தம்) உங்கள் உடலில் ஓடுமானல் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் என்னும் இவ்வொருசொல்லை மறப்பீர்காளா? தெருவெல்லாம் இந்திமொழிபரப்ப முந்திவந்தீர்களே! வெட்கம், வெட்கம்!

காட்டில் முன்பின் அறியாத இராமனேடு நட்புரிமை பூண்ட குகனென்னும் வேடனெருவன் தோழமையென் றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ! என எண்ணி யெண்ணிச் செயலினும் நட்புரிமை காத்து நின்றனென்று காண்கின்றோம். நீங்கள் நாட்டுக்கு விழிப்பூட்டிய புலவன் சொல்லைப் பாட்டில் பாடிவிட்டு நீட்டிவிடுகிறீர்கள் தம்பி! என்னே உங்கள் அறிவுடைமை! நன்று, நன்று.

இந்திமொழி கட்டாய பாடமாகவைக்கப்பட்டு மூலை முடுக்குகளெல்லாம் இந்திப் பள்ளிக்கூடம் வரப்போகின்றது. அது காலை அப்பள்ளிக்கூடங்களைப் புறக்கணித்து ஒதுக்க வேண்டும். அப்பொழுதான் நீங்கள் உண்மைத் தமிழ்மக்களாவீர்கள். உங்கள் பண்டையதாய் முதல்நாள் போருக்குச் சென்று போராற்றிய தன் கணவன் மறுநாட் போரில் இறந்து பட்டனன். அச்செய்தியறிந்து தனது ஒரேமகனை அழைத்து, 'அப்பா, கண்மணி, உன் தந்தை போருக்குச் சென்று இறந்தார். அவர் கான்முளையாகிய நீ இன்று போருக்குப்போ என்று கூறிக் கையில் வேலெடுத்துக் கொடுத்து வெள்ளிய வேட்டியெடுத்து உடுத்தித் தலையை வாரிச் சடைப்பின்னி மகிழ்ச்சியுடன் சென்றுவா' என அனுப்பினள். மற்றெரு தாய் தன் மகன் போருக்குச்சென்று புறமுதுகிட் டோடி இறந்தானென்று சிலர்கூற ஆற்றளாய் என்மகன் புறமுதுகிட்டோடி மாண்டிருந்தானனல் அவனுக்குப் பால்கொடுத்த மார்பை அறுத்தெறிவேன் என்று வஞ்சினங்கூறி, மனங்கொதித்தெழுந்து, ஓடிப் போர்க்களம்புக்கு வாளொன்றெடுத்துப் பிணக்குவியல்களைப் புரட்டிப், புரட்டிப் பார்த்து இறுதியில் தன் மகன் உடலையும், தலையையும் கண்டெடுத்து, நேரில் போர்செய்து, மார்பில் அம்புதைத்து மாண்டுகிடந்ததைக் கண்டு பெற்றகாலத்தினும் பெரிதுவந்தனள். இது கதை

யன்று. முற்காலத்தில் நிகழ்ந்த வரலாறு புறநானூற்றில் இவ்வாறு காணப்படுகின்றது. அங்கே காண்க. அத்தாய் வழியில் வந்தவர்கள் நீங்களானால் இந்தி விருப்பப்பாடமாக்கினால் யாருக்கும் கவலையில்லை. அது கட்டாயபாடமாகி மாணவர்கட்குப் பெருஞ்சுமையாக வருமானால். இந்தியெதிர்ப்புச் சங்கங்கள் நிறுவி, அச்சங்கங்கள் வாயிலாகத் தொண்டர் படை சேர்த்து எதிர்த்து விரட்டுங்கள்! சிறைச்சாலைக்குப் போகவும் அஞ்சாதீர்கள், தாய்மொழியை உங்கள் உயிரைக் கொடுத்தும் காக்க முந்தி நில்லுங்கள், முந்தி நில்லுங்கள்.

"பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு—நாமமது தமிழரெனக்கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்—தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்.

சென்னையில் ஹிந்தி எதிர்ப்பு

மாபெருங்கூட்டம்

எல்லாக் கோள்கையினரும் கலத்தல்

ஹிந்தி எதிர்ப்புக்கூட்டம் ஒன்று சென்னைத் தமிழ்ப்பாதுகாப்புக் கழகச்சார்பில் சென்னை கோகலே மண்டபத்தில் 4-10-'37 மாலை நடந்தது. பல பத்திரிகைகளுக்கும் முன்னதாகவே கூட்டம் நடைபெறுஞ் செய்தியை அனுப்பியிருந்தும் 'தினமணி, சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளும் வெளியிடா திருந்துவிட்டன. இருப்பினும் மண்டபம் கொள்ளாத கூட்டம் வந்ததுதான் பெருவியப்பு. கூட்டத்திற்குக் காங்கிரஸ்காரர்களும், ஜஸ்டிஸ்காரர்களும், ஜனநாயகக் கட்சிக்காரர்களும் ஆக சுமார் 2000 பேருக்குமேல் ஏராளமாக வந்திருந்து கூட்ட நடவடிக்கையில் கலந்துகொண்டது மிகவும் பாராட்டத்தக்கது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களிற் குறிப்பிடக் கூடியவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம், திருவாளர், சோமசுந்தர பாரதியார், மாஜிமந்திரி திரு. எஸ். முத்தைய முதலியார், செங்கற்பட்டு ஜில்லா உதவித் தலைவர் திரு. எஸ். சண்முகம் பிள்ளை, சைவசித்தாந்த சமாஜக் காரியதரிசி திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார், லோகோபகாரி பத்திராதிபர் திரு. பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை, திரு. சற்குணர், திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, திரு. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. வேங்கடராயலு ரெட்டியார், மாஜி நீதிபதி திரு. இரத்னவேல் பிள்ளை, டாக்டர் திரு. சின்னசாமி பிள்ளை, வக்கீல்கள் திரு. நல்லசிவன் பிள்ளை, திரு. சீனிவாசம் பிள்ளை, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், திரு. அருள்தங்கையா, திரு. கண்ணப்ப முதலியார், திரு. நெல்லையப்ப முதலியார், திரு. வா. தி. மாசிலாமணி முதலியார், திரு. தண்டபாணிப் பிள்ளை, திரு. மோ. கந்தசாமி முதலியார், திரு. வச்சிரவேல் முதலியார், திரு. C. N. அண்ணாத்துரை, பச்சையப்

பன் கல்லூரி ஆசிரியர் திரு. முத்தையபிள்ளை, திரு. வீரையன், திரு. ஷேய்க் இப்ராகிம், திரு. கோவிந்தராஜ முதலியார், திரு. புருடோத்தம முதலியார்.

பெண்கள் சுமார் 30 பேர் வரை வந்திருந்தனர். இப்பெருங் கூட்டத்திற்குப் பல்லாவரம் மறைமலை அடிகள் (சுவாமி வேதாசலம்) தலைமை வகித்தார்கள். கூட்டம் 4 மணிக்கு ஆரம்பமாயிற்று. அடிகளைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளும்போது 'லோகோபகாரி' ஆசிரியர் பரலி சு. நெல்லையப்ப பிள்ளையவர்கள் பேசியதாவது:—சுவாமி அவர்களைத் தமிழ்நாடு நன்கு அறியும். இப் பேரவைக்கு இதுபோது தலைமைவகித்து நடாத்தத் தகுதியுள்ளவர்கள் சுவாமிகளைத் தவிர வேறு எவருமிலர். சுவாமிகளோ தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் வல்லுநர். ஹிந்தி பரப்புவதை எவரும் மறுக்க இல்லை. ஆனல் பள்ளிக்கூடங்களிற் கட்டாய பாடமாக்குவதையும், அச்சுமையைச் சிறுவர்கள்மீது சுமத்துவதையுமே கண்டிக்கிறோம். மூன்று மொழிகளைக் கட்டாயபாடமாக்குவதால் பிள்ளைகள் துன்பப்படுவதுமல்லாமல் தமிழ் வளர்ச்சியும் மட்டுப்படும்.

இத்தீர்மானத்தைத் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் பி. ஏ., எல். டி. ஆமோதித்தனர்.

பின்னர்ப் பலத்த கரகோஷத்தினிடையே சுவாமி வேதாசலம் அவர்கள் தலைமை வகித்தனர். பின்னர் சுவாமி அவர்கள் முன்னுரையாகச் சுமார் 1-30 மணி நேரம் பேசினர்கள். அவர்கள் கூறியதாவது: "தமிழ் மிகத்தொன்மையானது. தமிழருடைய நாகரிகமே உலகிலுள்ள எல்லா நாகரிகங்களுக்கும் தாயகமாயிருந்தது. தமிழ் மொழியில் உள நூல், உயிர் நூல், மருத்துவ நூல், கணித நூல், இலக்கியம், அரசியல் நூல், பயிர்நூல் முதலிய பல துறை நூல்களும் இருக்கின்றன. எவ்வாற்றானும் இஃது எம்மொழிக்கும் இளைத்ததன்று. ஆதிகாலத்தில் வழங்கிய வடமொழி, இலத்தீன், கிரீக், ஹீப்ரு, பாலி மொழிகளெல்லாம் பேச்சற்றுப் புலவர்கள் வாயில் மட்டும் விளங்கத் தமிழ்மொழியோ இன்னும் 2 கோடி மக்களால் பேசப்படும் ஒரு சிறந்த தொன்மொழியாக விளங்குகிறது. இத்தகைய தமிழையும், தமிழர்களையும், தமிழர் நாகரிகத்தையும் இது சமயம் அரசியல் ஆதிக்கம்பெற்றிருக்கும் சிறு கூட்டத்தார் அழித்து, ஒழித்துவிடப் பார்க்கிறார்கள். அவர்கள் தங்களைத் தமிழர் என்று சில இடங்களில் கூறிக்கொண்டாலும் பெரும்பாலார் தங்களை ஆரியரின் வழிவந்தோரெனவே கருதுகின்றனர். பழைய ஆரியர்கள் செய்த வேதங்களும், அறநூல்களும் (அல்ல மறநூல்களும்) கட்குடியையும் ஊன் உண்ணலையும் சிறிய பல தெய்வ வழிபாட்டையும் பற்றியே மிகுதியும் கூறுகின்றன. தமிழ் நாட்டில் வந்து சேர்ந்த ஆரியர்களில் கபிலர் போன்றவரும் ஊன் தின்றனர். அதற்குச் சான்று புறநானூற்றில் காணக்கிடக்கின்றது. ஆரியரின் பின் வந்தவர் என்று சொல்லும் பார்ப்பனர்கள் எவ்வாறு ஆரியரின் வழிவந்தோர் ஆவர்? நான் வடநாட்டுக்குச் சென்றிருந்தபோது கல்கத்தாவில் தங்கினேன். அங்கு ஒரு பார்ப்பனர் விடுதியில் தங்கினேன். அப்பார்ப்பனர் ஒரு பெரிய மீனை அறுத்தார். அப்போது அவரிடம், நான்

சைவன், எனக்குக் கொஞ்சம் கீரையும் ஆவின்பாலும் கொடுத்தால் போதுமானது என்றேன். அது கேட்ட அவர் மிக ஆச்சரியமடைந்தார். பின் அவரைச் சில கேள்விகள் கேட்டேன். அவைகளுக்கெல்லாம் அவர் தான் பார்ப்பனன் என்றும், தங்கள் நூல்களில் ஊன் உணவு நீக்கல் கிடையாதென்றும், காயத்திரி மந்திரம் தெரியுமென்றும், தென்னாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் இனத்தவரல்லர் என்றும் கூறினர். ஆகவே தென்னாட்டுப் பார்ப்பனர்கள் தமிழரும் அல்லாமல், ஆரியரும் அல்லாமல் திரிசங்கு சுவர்க்கத்தில் இருக்கிறார்கள். போலி ஆரியர்கள் தமிழ்நாட்டில் புகுந்து ஒவ்வொரு ஊருக்குந் தலபுராணம் செய்து தமிழ் மக்களை அடிமைப்படுத்தி விட்டார்கள். அப்படியிருந்தும் தமிழ்மட்டும் அவர்கள் வழிச்செல்லாது நின்றுவிட்டது.

இதுபோது பல காரணங்களைக் கூறி, ஹிந்தி மொழியைத் தமிழ் நாட்டில் புகுத்தத் தொடங்கிவிட்டார்கள். ஹிந்தி மொழி தென்னாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்திலேயே நான் அதை எதிர்த்து 'ஹிந்தி பொதுமொழி யாகுமா' என்ற நூலை வெளியிட்டேன். ஹிந்தி தோன்றி சுமார் 400 ஆண்டுகள் இருக்கும். அதில் எத்துறையிலும் சிறந்த நூல்கள் கிடையா. 'ஹிந்தி பொது மொழியாகத்தான் இருக்கவேண்டும்'; அதனால் தமிழர் அனைவரும் அதனைப் படித்துத்தான் தீரவேண்டு மென்பதில் அர்த்தம் ஏதும் இல்லை. வட நாட்டில் ஹிந்தி மட்டுமல்லாமல் வங்காளி, பஞ்சாபி, மகாராட்டிரம் போன்ற பலமொழிக ளிருக்கின்றன. இவைகளில் எம்மொழியைப் பயிலுவது? இன்னும் வடநாட்டிலுள்ளவர்களே ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக வைக்காதபோது, ஒரு சிறிதும் தமிழுக்கும் தமிழருக்கும் தொடர்பில்லாததைத் தமிழரிடம் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் என்ன?

பின்னர் மாஜி மந்திரியும், ஜனநாயகக் கட்சித் தலைவர்களுள் ஒருவருமாகிய திரு. எஸ். முத்தைய முதலியாரவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களைக் கொண்டுவந்து பேசினர்கள்:—"பள்ளிக் கூடங்களில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக அரசாங்கத்தார் வைக்கப் போவது தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும் கேடு செய்யுமாதலால் சென்னை நகரமக்கள் கூடிய இப்பொதுக்கூட்டம் அதனை வன்மையோடு கண்டிக்கிறது".

"சட்டசபைகளிலும், நீதி மன்றங்களிலும், கல்லூரிகளிலும், அரசியல் அலுவற் கூடங்களிலும் தாய் மொழியாய தமிழ்மொழியிலேயே எல்லாக் காரியங்களும் நடைபெறுதல் வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது".

இத்தீர்மானங்களைக் கொண்டுவந்து பேசும்போது திரு. முதலியாரவர்கள் கூறியதாவது :—

ஹிந்தி மொழியை மேலும் ஒரு பாடமாக மாணவர்களுக்கு வைப்பது தமிழின் வளர்ச்சியைத் தடைப்படுத்தும். வட இந்தியாவிற்குச் செல்லுபவர்களுக்கும், அங்கேயே குடியேறி வியாபாரம் முதலிய தொழில் செய்பவர்களுக்கும் ஹிந்தி வேண்டுமென்பதற்காக ஹிந்தி கொண்டு வரப்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியாது.

நானே பல தடவை வடநாடு சென்றிருக்கிறேன். ஹிந்தியோ எனக்குத் தெரியாது. நானும் காங்கிரஸ் அங்கத்தினர்களுடன் வாதாடியிருக்கிறேன். அதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அப்படி வடநாட்டுக்குச் செல்பவர்கள் தங்களுக்கு அவசியம் என்று தெரிந்தால் ஹிந்தியைக் கற்றுக் கொள்வார்கள்.

பின்னர்க் கரகோஷத்தினிடையே அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியாரவர்கள், M. A., B. L., எழுந்து பேசினர். அவர்கள் பேசியதாவது:—

ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டியதற்காகக் கூறும் காரணங்கள் ஒன்றும் சரியாயில்லை. தேசிய ஒற்றுமைக்காக என்று கூறுவதும் பொருந்துவதாயில்லை. சரித்திரம் கற்றவர்களுக்கு இச் சமாதானம் சரியல்ல வென்பது நன்கு விளங்கும். முற்காலத்தில் உரோம ஏகாதிபத்தியம் 400, 500 ஆண்டுகளாக நின்று நிலவியது. அவ்வரசாங்கத்தை நோக்கும்போது ஆங்கில அரசாங்கம் இன்னும் 500 ஆண்டுகள் சென்றாலும் அந்நிலையை யடையுமோ என்பது ஐயந்தான் இதே போன்று பாரசீக ஏகாதிபத்தியமும் பல நூற்றாண்டுகள் நின்று நிலவியது. அந்த ஏகாதிபத்தியங்களிலெல்லாம் பல்வேறு நாட்டினரும் வெவ்வேறு மொழிகளையே பேசி வந்தனர். உரோமர்களும் பாரசீகர்களும் தேச ஒற்றுமைக்குத் தங்கள் மொழிகளையே பேசவேண்டும் என்று கூறினார்களில்லை. மேலும் ஒரே மொழியைப் பேசும் மக்களும் ஒற்றுமையாக வாழவில்லை. உதாரணமாக அமெரிக்காவையும், ஆங்கில நாட்டையும் பார்த்துக் கொள்ளலாம். தமிழ் நாட்டிலேயும் தமிழ் பேசுகின்றவர்களுக்குள் வேற்றுமைகள் இல்லாமலில்லை. அகில இந்திய மொழி வேண்டுமென்றால் மகமதியர்களைமட்டும் விலக்கி வைப்பானேன்? ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை வேண்டுமென்றால் இருவருக்கும் ஒரே பொது மொழியிருத்தல் நல்லதல்லவா? ஆனால் முதல் மந்திரியார் சட்டசபையில் பேசும்போது முஸ்லீம்கள் உருது எழுத்துக்களையே வைத்துக் கொள்ளலாமென்றும் அவர்கள் மதவிஷயங்களிலும் மற்றவைகளிலும் தாம் தலையிடுவதில்லை யென்றுங் கூறினார். இஃது அவர்களுக்குப் பயந்து கூறியதல்லவா? தமிழர்கள் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள்வார்கள் என்ற இறுமாப்பால் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கத் துணிந்து விட்டார் போலும்.

அரசியல் முன்னேற்றத்துக்கும் ஹிந்தி அவசியமில்லை. ஹிந்தியில் போதிய திறமையில்லாமலேயே முதன் மந்திரியார் அகில இந்தியத் தலைவராகிவிட்டார். மாகாண முதன் மந்திரியாராகவும் ஆகிவிட்டார். ஹிந்தியில் சிறந்த ஞானமில்லாமலே முதன் மந்திரியார் அரசியலில் ஆக்கந் தேடமுடியுமானல், பிற்காலத்தவர்களுக்கு ஹிந்தி வேண்டிய அவசியம் என்ன? முதன் மந்திரியாரே ஓரிடத்தில் பேசும்போது அவ்வவ் நாட்டினர் கடைகளிலும், வீடுகளிலும் மற்றிடங்களிலும் பேசும்போது அவரவர்கள் தாய்மொழியிலேயே பேச வேண்டுமென்று கூறினர். உதாரணமாக ஒரு தமிழன் வடநாடு சென்று ஹிந்தியில் பேச, அந்நாட்டான் அவன் தாய்மொழியில் பேசினால் ஹிந்தி பயன்படுமோ என்பது கவனிக்கத்தக்கது.

மேலும் முதன் மந்திரியாரே சிலகாலத்திற்கு முன்னர்ப் பேசும் போது ஹிந்தி தமிழருக்கு அயல் மொழி யென்று கூறினார். ஆகையினால் தமிழருக்கு முற்றும் அயல் மொழியாகிய அதை அவர்கள் தலையில் சுமத்தலாமா?

ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதற்குக்குரிய காரணங்களைச் சிறிது சிறிது மாற்றிக்கொண்டே வருகிறார் முதன் மந்திரியார். இப்பொழுது அவர் வெளியிட்ட காரணம் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சிலரின் அந்தரங்கக் கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் சென்னையில் அதிகாரத்தில் வந்தால் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டதாகவும் அதையே இப்பொழுது நிறைவேற்றவேண்டு மென்றும் கூறுகிறார். முதன் மந்திரியாருக்குத் தமிழ் மக்களுக்காக இந்த வாக்குறுதி யளிக்க யாதொரு உரிமையும் இல்லை. மேலும் மதுவிலக்குப் பிரசாரத்துக்குப் போனவர் சேலத்தில் ஹிந்தி ஆதரவுக்குக் கை தூக்கும்படி கேட்டது ஒரு பெருந் தந்திரமேயாகும்.

முதன் மந்திரியார் தமிழ் நாடு ஒன்று தவிர மற்றைய நாடுகளிலெல்லாம் ஹிந்தி இருக்கிறதென்று கூறுகிறார். இஃது ஒரு காரணமா? தமிழ் நாட்டுக்குத் தனி நாகரிகம் இருக்கும்போது அதை ஒழித்துவிடவா? அதனாலேயே தமிழர்கள் தங்கள் ஒப்புயர்வற்ற நாகரிகத்தை நிலைநாட்டப் பாடுபடவேண்டும். காங்கிரஸ்காரர்கள் மக்கள் உரிமைக்கே பாடுபடுகிறவர்கள் என்றும், மக்களுடைய கருத்துக்கு மாறுதலாக அரசாங்கத்தார் எதுவும் செய்ய உரிமையுடையவர்களல்லர் என்றும் பறை சாற்றினார்கள். இப்பேச்சுக்கு மாறுதலையாகக் காங்கிரஸ்காரர் நடந்து கொள்வது நியாயமா? இது சர்வாதிகாரமல்லவா? இதில் ஜனநாயகக் கொள்கையேயில்லை. அரசாங்கத்தார் ஹிந்தியைப் புகுத்துவார்களேயானால் தமிழர்கள் அதை எதிர்த்து மந்திரி சபையையே மாற்ற முயலல் வேண்டும்.

இதற்குப் பின் சைவ சித்தாந்த சமாஜக் காரியதரிசி திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினார்கள். அவர்கள் கூறியதாவது: நானும் காங்கிரஸ் சார்பான கொள்கையுடையவன். ஆனால் முழுமனதுடன் இத்தீர்மானத்தை ஆதரித்து ஹிந்தி கட்டாய பாடமாதலை எதிர்க்கிறேன்.

பின்னர் திரு. ஷேய்க் இப்ராகிம் அவர்கள், ஸ்ரீமதி. அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் அவர்கள், திரு ரெவரண்டு அருள் தங்கையா அவர்கள், திரு. சற்குணர் B. A., அவர்கள், அகில இந்திய தாழ்த்தப்பட்டார் சபை அங்கத்தினர் திரு. பழனிசாமிப் பிள்ளையவர்கள், திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள், திரு. அன்னுத்துரை, M. A., அவர்கள் ஆகிய இவர்களெல்லோரும் மிக அழகாகவும், தெளிவாகவும் பேசி வன்மையாகக் கண்டித்தனர்.

தலைவர் பின்னுரையாகச் சிறிது நேரம் பேசினார். பின்னர்த் தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டதில் முதல் பகுதிக்கு ஏழு பேரும் இரண்டாம் பகுதிக்கு மூவரும் எதிரிடையாகக் கைதூக்க மற்றையோர் எல்லோரும் ஆதரித்தனர்.

பின்னர்ப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. எம். கந்தசாமி முதலியார் B. A. அவர்கள் வந்தனோபசாரங் கூறக் கூட்டம் இரவு 9-30 மணிக்குக் கலைந்தது.

குளித்தலை, கம்பர் செந்தமிழ்ச் சங்கம்
13-ம் ஆண்டு நிறைவு விழா

திரு. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தலைமையில் 25, 26—9—37 இரண்டு நாட்களிலும் குளித்தலை உயர்தரப் பள்ளிக் கூடத்தில் நடைபெற்றது. திருவாளர்கள் பு. மீனாட்சிசுந்தரம் நாயுடு, எம். ஏ., ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை, ஈழத்துச் சிவானந்த அடிகள், செந்தமிழ்ப் புரவலர் இராவ் சாகிப் த. வே. உமா மகேசுவரம் பிள்ளை, C. K. சுப்பிரமணிய முதலியார், உ. வே. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் முதலியோர் விரிவுரை யாற்றினார்கள். இந்தி கட்டாய பாடமாதலை எதிர்த்து ஒரு தீர்மானமும் நிறைவேறியது.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
32-ஆம் ஆண்டு சைவர் மகாநாடு.

இம் மாநாடு பெங்களூர் கணபதி விலாச சபையின் பேராதரவில் திரு. திவான் பகதூர் K. தெய்வ சிகாமணி முதலியார் அவர்கள் தலைமையில் பெங்களூரில் 17, 18, 19—9—37 மூன்று நாட்களிலும் நடைபெற்றன. திரு. வி. கலியாணசுந்தர முதலியார், புரிசை. முருகேச முதலியார், நீலாவதியம்மையார், வித்துவான் வேணுகோபால் முதலியார், க. வச்சிரவேல் முதலியார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், தணிகை. வேதாசலசுவாமிகள், S. சோமசுந்தர பாரதியார், இராவ் சாஹிப் B. G. இராசகோபால் முதலியார், S. சச்சிதானந்தம் பிள்ளை முதலியோர் பேசினார்கள்.

இந்தி கட்டாய பாடமாதலை எதிர்த்து ஒரு தீர்மானமும் நிறைவேறியது.

நெல்லைத்தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம்
ஹிந்தியை எதிர்க்க வேண்டுகோள்
காரியதரிசிகள் அறிக்கை

திருநெல்வேலி 15-9-37

ஐயா,

இம்மாகாணத்தில் உள்ள உயர்தரக் கலாசாலைகளிலும் லோயர் செக்கண்டரி ஸ்கூல்களிலும், ஒன்று, இரண்டு, மூன்றும் பாரங்களில் ஹிந்திமொழியை அவசர அவசரமாக இந்த சர்க்கார் கட்டாயபாடமாகப் புகுத்தப்போவதை உடனே ஆக்ஷேபித்து அந்த ஆக்ஷேபனைகளை சர்க்காருக்குத் தெரிவிக்கும்படி ஒவ்வொரு கல்லூரி, ஹைஸ்கூல் தலைவர்களையும், தென்னாட்டிலுள்ள தமிழ்ச்சங்கங்களையும் நாங்கள்

கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு ஆக்ஷேபனை தெரிவிக்கக் கேட்டுக்கொண்டதற்குப் பலகாரணங்களுள் முக்கியமானவை கீழ்வருபவைகளாகும்:—

1. வடநாட்டிலே அங்கொருவர் இங்கொருவராக வியாபாரிகளால் பேசப்பட்டு வந்தாலும் கட்டாயபாடமாக வட இந்தியாவில் இல்லை.

2. தென்னாட்டவர்களின் அறிவு வளர்ச்சிக்கோ அல்லது வியாபாரத்திற்கோ அது தேவையுமில்லை.

3. தற்காலத்தில் ஆங்கில மொழியிலுள்ள சரித்திரம், சைன்ஸ் முதலிய பாடங்களைத் தாய்மொழியிலேயே கற்பிக்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி தோன்றி அதற்காக மொழி பெயர்ப்புகள் ஏராளமாக நடைபெற்றுவருவதை இது கண்டிப்பாகப் பாதிக்கும்.

4. மாணவர்கள் கற்கவேண்டிய பாடங்களை அதிகப்படுத்துவதோடு பொதுவாக சிறுவர்களின் அறிவு வளர்ச்சியை மழுங்கச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

5. அம்மொழி இந்நாட்டவரின் கலைத்திறமையையோ கைத்தொழில் திறமையையோ, வியாபாரத்திறமையையோ, விஞ்ஞான வளர்ச்சியையோ விருத்தி பண்ண முடியாது. இத்தகைய ஒன்றுக்கும் உதவாத ஒருமொழியை மக்கள் வயிற்றுக்குக் கஞ்சியில்லாமல் துடித்துக் கொண்டிருக்கிற நிலைமையை நிவர்த்திபண்ண வருமானம் இடங்கொடுக்காமலிருக்கையில் இதற்காகப் பொதுப்பணத்தைப் பாழ்படுத்துவது நேர்மையா?

6. இந்துக்களையும் மகமதியர்களையும் ஒற்றுமைப்படுத்தித் தேசிய ஐக்கியம் இது உண்டுபண்ணும் என்பது ஒருநாளும் முடியாத காரியமாகும். ஏனெனில் இருவகுப்பாரும் தனித்தனி எழுத்துக்களைக்கொண்ட மொழியை வழங்கிவருகின்றனர்.

7. தென்னாட்டினரில் ஒரு சிலர் இதை ஒரு பிரேமையாகக் கொண்டாதரிக்கிறார்களே ஒழிய இஃது ஒருநாளும் தேசீயமொழியாக வரமுடியாது. அகில உலக தேசீயபாஷையாயும் இந்தியாவெங்கும் வயிற்றுப்பிழைப்புப் பாஷையாகவும், நவீன அறிவு வளர்ச்சிக்கும் நாகரிகத்திற்கும், சுதந்தரதாகம், சுதந்தர உணர்ச்சி ஆகியவை கொளுந்துவிட்டெரிவதற்கும் உலகத்திற்கே பொக்கிஷமாகத் தாராளமாக உபயோகிப்பதற்கும் உதவியாயிருக்கிற ஆங்கிலமொழி ஒன்று இருக்கையில் இம்மொழியின் அவசியமென்ன?

8. மகா ஜனங்களுடைய விருப்பத்திற்கு மாறாக எந்தக் காரியத்தையும் செய்யமாட்டோம் என்று சொல்லி உறுதியளித்து இன்று அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் மந்திரி சபை இது மாதிரி செய்யத் துணிந்திருப்பது யதேச்சாதிகாரமாகச் செய்வது என்பதேயாகும்.

9. தேசிய நலனுக்காகவும், சகோதரத்துவத்திற்காகவும் தங்களது முழு ஜீவனையும் தியாகம் செய்து வருகிற இந்தியப் பெரியோர்களில் 'மகாத்மா காந்தி,' டாக்டர் ரவீந்திர நாத் தாகூர் போன்றவர்கள் இதைக் கட்டாய பாடமாக்க ஆதரவளிக்க வில்லை.

10. ஒரு பொறுப்பான சர்க்கார் அதிலும் காங்கிரஸ் கட்சி மந்திரி சபை சர்க்கார் தென்னிந்தியர்களின் நலனையே பெரிதும் பாதிக்கக்

கூடியதான ஒரு விஷயத்தில் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை அலட்சியப்படுத்தி சர்வாதிகாரத்தனமாக நடந்துகொள்வது அழகாகுமா?

இராஜாராம் மோகனராய் அவர்களின்
104-வது ஆண்டுவிழா
திருநெல்வேலி

இவ்வூர் பிரமசமாஜத்தின் ஆதரவில் 27-9-37 மாலை 6-மணிக்குத் தாயம்மையம்மாள் பெண் கல்விச்சாலையில் "இராஜாராம் மோகனராய்" அவர்களின் 104-வது ஆண்டுவிழா திருவாளர். C. D. நாயகம் அவர்கள் தலைமையின்கீழ்ச் சிறப்பாக நடைபெற்றது.

சமாஜத் தலைவர் திருவாளர். S. J. சச்சிதானந்தா, M. A, அவர்கள் பேசியபின்பு திருவாளர்கள். A. அப்பாத்துரைப் பிள்ளை. B. A. (Hons.) அ. பிச்சையா பிள்ளை, வள்ளல் சிவஞான தேசிகர் முதலியோர் ராய் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், அவர் மக்கட்குச் செய்த பெருந் தொண்டுகளையும் எடுத்துக் கூறினார்கள்.

தலைவரவர்கள் முடிவுரையில் கூறியதன் சாரமாவது:—நம் மோகன்ராய் அவர்கள் 100 ஆண்டுகட்கு முன்னமேயே மக்களிடத்திற் பெருகிக்கிடந்த மூடப் பழக்கவழக்கங்களை அறவே ஒழிக்கப் பாடுபட்டவர். உடன்கட்டையேறல் என்ற கொடிய வழக்கத்தை ஒழித்துச் சட்ட மியற்றும்படிசெய்து பெண்கள் உலகிற்கும் பெருந் தொண்டாற்றியவர். ஒவ்வொரு சமயங்களிலுள்ள சமய மூலநூல்கள் அவ்வம்மொழியின் வாயிலாகப் பயின்று அவைகளிலுள்ள சிக்கல்களை எடுத்துக்காட்டி அவைகளைப் போக்க முற்பட்டவர். மக்களெல்லோரும் அன்புடனும் நேசமுடனும் வாழவேண்டுமென்ற பெருநோக்கங்கொண்டு ஆங்காங்கே 'பிரம்சமாஜம்' என்ற பெயருடன் சங்கங்களைத் தோற்றுவித்தார். அவர் பழக்கவழக்கம் என்ற காரணத்தாலோ, வேதம் உபநிஷத் முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன என்பது பற்றியோ எதனையும் அப்படியே நம்புவதில்லை. தன்னறிவுகொண்டு ஆராய்ந்து நல்லன கடைப்பிடித்துத் தீயன விலக்குந் துணிபுடையவர். நம் இந்திய நாட்டில் ஆங்கிலக்கல்வி பரவி அறிவியற்றுறையில் மக்கள் முன்னேற்ற மடையச்செய்த பெருஞ்செயல் அவர் முயற்சியால் முதன்முதல் ஏற்பட்டதாகும். அவர்கள் முயன்று முற்றும் முடிவுபெறாத செயல் பலவுள. அவைகளை நாம் நடைமுறையிற்செய்து முடிக்கப் பாடுபடவேண்டும். தற்காலத்திற்கு ஏற்ற முறையில் சிறந்த கொள்கைகளைக் கைக்கொண்டு நம் நாட்டுக்கு நலம் பயக்குந் தொண்டு செய்வதே அவர்களிடத்தில் நாம் காட்டும் அன்பிற்குரிய செயலாகும் என்று பேசி முடித்தார்கள். கூட்டம் 9 மணிக்கு முடிந்தது.



சென்னை, கிறித்தவ கலாசாலை தமிழ் விரிவுரையாளராயிருந்த

திரு. ச. தருமராஜ சற்குணர், பி.ஏ.,

1877

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] ஈசுவர—ஐப்பசி [பரல்-ரு

திருவாசகம்

திருச்சதகம்

சதகம் என்ற சொல் வடமொழிச்சொல். அது நூறு என்று பொருள்படும் சதகம் என்ற சொல்லிலிருந்து உண்டாகியது. சதகம் என்ற சொல் நூறு பாட்டுக்களாகிய தொகுதியைக் குறிக்கிறது. (A Collection of one hundred stanzas, Apte's Sanskrit Dictionary) சதகம் என்ற சொல்லின் முன், அருள் என்று பொருள்படும் திரு என்ற தமிழ்ச்சொல்லைச் சேர்த்து அருள்விளங்கு பாடல்கள் என்பதை உணர்த்த திருச்சதகம் எனப்பட்டது. இவ்வாறே இந்நூலிலுள்ள வேறுபல அருட்பாடல்களுக்கும், திரு என்ற சொல்லை முன்னேவைத்து, திருத்தெள்ளேணம், திருச்சாழல் முதலிய பல அருட்பாடல்களும் கூறப்பட்டிருக்கின்றன.

பத்திவைராக்கிய விசித்திரம்

பத்திவைராக்கியவிசித்திரம் என்ற கூட்டுச்சொல் பத்தி, வைராக்கியம், விசித்திரம் என்ற மூன்று வடமொழிச் சொற்களாலாகியது. பத்தி என்பது இங்கே இறைவனிடத்தில் மக்கள் வைக்கும் அன்பையும், வைராக்கியம் என்பது உலகவாழ்வில் வெறுப்பையும், விசித்திரம் என்பது பலவகை நிறத்தையும் உணர்த்தும். (Variegated Colours) பலவகை நிறம் என்பது இங்கே மக்கள் இறைவனிடத்தில் வைக்கும் மெய்யன்பு காரணமாக அவர்களிடத்தில் விளங்குகிற பலவகை அருட்குணம். மக்களுயிர்களுக்கு இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய இவை அவர்களறிவிலுண்டாகிற பக்குவம் வந்தபொழுது என்றும் மாறுத நிலையான பேரின்பத்தை அருளு

கின்ற இறைவனிடத்தில் அன்புண்டாகும். அன்புண்டாகவே அவர்களுக்கு உலகவாழ்வில் பற்றின்மையாகிய வெறுப்பு உண்டாகும். அவர்களுக்கு உலகவாழ்வில் பற்றிலாது போகவே இறைவனுடைய அருட்குணங்கள் உயிர்களிடத்திலே பதியும். பத்திவைராக்கிய விசித்திரம் என்ற சொற்றொடர், பத்தியினால் உண்டாகிற வைராக்கியத்தினாலுண்டாகிற விசித்திரம் என விரியும். ஆகவே அச்சொற்றொடர் இறைவனிட முளதாகிய மெய்யன்பு காரணமாக உண்டாகும் வெறுப்புப் பற்றி அவ்வாறு பக்குவப்பட்ட அடியார்களிடம் விளங்குவதாகிய பலவகை அருட்குணங்கள் என்று பொருள்படும். இந்த அருட்குணங்கள் மெய்யுணர்தல் முதல் ஆநந்தாதிதம் ஈருகப் பத்துவகை என்று திருச்சதகம் என்ற தலைப்பின்கீழ் கூறப்பட்டிருக்கின்றன. இப்பத்து அருட்குணங்களில் முதலாவது அருட்குணமாகிய மெய்யுணர்தலின்கீழ் பத்துப்பாட்டுக்கள் கூறப்பட்டிருக்கின்றன. மெய்யுணர்தல் என்ற தமிழ் மொழிச் சொற்றொடர் மெய்யை உணர்தல் என விரியும். மெய் என்பது மெய்ப்பொருளாகிய இறைவன். முப்பொருள்களில் இறைவன் ஒருவனே பற்றலாவதோர் பற்றில்லாப் பரம் பொருள் ஆகலின் அவனைச் சிறப்பாக மெய் என்றும் மெய்ப் பொருள் என்றும் தமிழ்மறை நூல்கள் கூறுகின்றன. உணர்தல் என்பது அறிதல். அதாவது உலக வாழ்வின் வெறுப்புக் காரணமாக மெய்ப்பொருளை அறிதல்.

திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது.

கட்டளைக் கலித்துறை

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக்
கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப்
போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழவிடே னுடையா
யென்னைக் கண்டுகொள்ளே.

பதவுரை :—

உள்ளம்பொய் தவிர்ந்து வெதும்பி—எனது உள்ளம் நிலையில்லாத உலகவாழ்வை வெறுத்து விலக்கி (உன்னை அடைதற்கு) வாடிக் கொண்டும்

மெய் அரும்பி விதிர்விதிர்த்தும்—உன்னிடத்தில் எனக்குள்ள (மெய் யன்பினாலே) உடலானது வியர்வை தோன்றி நடுநடுங்கியும்

கைதலை வைத்து—இரண்டு கைகளையும் எனது தலைமேலே அஞ்சலியாக வைத்துக்கொண்டும்

கண்ணீர்ததும்பி—இரண்டு கண்களிலிருந்தும் நீர் (நிரம்பி) வழிந்து கொண்டும்

உன் விரையார் கழற்கு—நினது மணம் பொருந்திய திருவடிகளுக்கு

போற்றி போற்றி சயசய என்னும் கை—வணக்கம் வணக்கம் வெற்றி வெற்றி, என்று (வாயாலே) சொல்லும் செயலை.

நெகிழவிடேன்—தளர விடமாட்டேன். (அதாவது) எப்பொழுதும் செய்துகொண்டேயிருப்பேன்

உடையாய்—என்னை அடிமையாக வுடைய ஆண்டவனே

என்னைக் கண்டுகொள்—எனது நிலையைப் பார்த்து என்னை யேற்றுக் கொண்டு அருள் செய்வாயாக.

விளக்க உரை :—

உள்ளம் பொய் தவிர்ந்து வெதும்பி—பொய் என்பது நிலையில்லாமை; அதாவது நிலையில்லாத உலகவாழ்வு. உலக வாழ்க்கையை நிலையில்லாதது என அறிந்து வெறுத்து அன்றி அதனை விலக்குதல் கூடாமையின் தவிர்ந்து என்பதற்கு வெறுத்து விலக்கி என்று உரை செய்யப்பட்டது. உலகவாழ்க்கையை நிலையில்லாதது என வெறுத்து விலக்கியபொழுது ஒருவருக்கு இறைவனிடத்தில் நாட்டம் உண்டாய் அவனை அடைதற்கு ஆர்வம் உண்டாகின்றது. இவ்வாறு அடைதல் கைகூடாதபொழுது உடல் ஆர்வத்தினாலே வெதும்புகின்றது. ஆதலின் பொய்தான் தவிர்ந்து வெதும்பி என்றார்.

மெய் அரும்பி விதிர் விதிர்த்தும்—அரும்புதல்-தோன்றல். அதாவது வியர்வை தோன்றுதல். உடல் நடுக்கத்தினாலே உடலில் வியர்வை தோன்றுதலின் மெய் அரும்பி விதிர்விதிர்த்து என்றார். இந்த அடியில் வருகிற தானும் பின் மூன்று அடிகளில் வருகிற தான்களும் அசை நிலைகள்.

கைதலைவைத்து—இரண்டு கைகளையும் சேர்த்து தலையின் மேல் அஞ்சலியாகக் குவித்து வைத்தல் 'உன்னையல்லால் எனக்கு வேறு துணை இல்லை' என்று வணங்குதலைக் குறிக்கிறது.

கண்ணீர் ததும்பி—ததும்புதல்-வழிதல். கண்களில் நீர் நிரம்பியன்றிக் கீழே வழிதல் கூடாமையின், ததும்பி என்பதற்கு நிரம்பி வழிந்து என்று உரை செய்யப்பட்டது. கழல் தானியாகு பெயர்.

உன் விரையார் கழற்கு—கழல் என்பது வீரத்தைக் குறிப்பதற்காக அணிந்துகொள்ளப்படுகிற கால் அணி. அஃது இங்கே இரண்டு கால்களையும் குறிக்கிறது.

போற்றி போற்றி சயசய என்னும் கை—போற்றி-வணக்கம்; சய-வெற்றி. போற்றி போற்றி, சயசய என்பன அடுக்குச் சொற்கள். ஒருவன் இறைவனுக்கு அன்பினாலே செய்கிற வணக்கத்தினாலே அருளுண்டாய் மலம் வெல்லப்படுதலின் 'போற்றி' யென்பதற்குப் பின் சய என்று கூறினர். கை-செயல்-அதாவது வாயினாலே சொல்லுஞ் செயல், உள்ளம், பொய் தவிர்தல் என்னும் மெய் அறிவு நிகழ்ச்சி பற்றி இறைவனிடத்தில் உண்டாகும் மெய்யன்பு காரணமாக உடல் வியர்வையரும்பி விதிர்விதிர்த்தல், கை தலைமேலே வைத்து வணங்குதல், கண்களிலிருந்து நீர் வழிதல், போற்றி சயசய என்று வாயாற் சொல்லுதல் ஆகிய இந்நான்கும் உடலின்கண்ணும் வாயின்கண்ணும் வெளிப்படுஞ் செயல்கள், முன்னைய மூன்றும் உடலினிடத்தும் பின்னைய ஒன்றும் அவ்வுடலினுள்ள வாயிடத்தும் நிகழ்வன.

உடையாய் என்னைக் கண்டுகொள். ஏ-அசை-அடிகள் சிவபெருமான் தன்னை யேற்றுக்கொள்ளுதற்கு அவனிடத்திலுள்ள மெய்யன்புபற்றித் தம் உள்ளத்தின் கண்ணும் உடலின் கண்ணும் வெளிப்படுஞ் செயல்களைக் கூறியபின் உடையாய் என்று கூறியது. அவன் ஆண்டவன், தான் அடிமை என்னும் இயைபு பற்றி அவன் தன்னை ஏற்றுக்கொண்டு காக்கக் கடமைப்பட்டிருக்கிறாரென்பதைக் குறிப்பித்தார். 'தன்கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் திருநாவுக்கரசு அடிகள் தேவாரக் கூற்றை ஒப்பிட்டு நோக்குக.

உள்ளத்தின் நிகழ்ச்சிக்குப்பின் உடலின் நிகழும் செயல்கள் நிகழ்தலால் உள்ளம் பொய்தான் தவிர்ந்து வெதும்பி என்பதை முதலாவது வைத்து உரைநடை செய்து பொருளுரைக்கப்பட்டது.

வெதும்பி, விதிர் விதிர்த்து, வைத்து, ததும்பி, என்னும் நான்கு வினை எச்சங்களுக்குப்பின் தொக்கி நிற்கின்ற உம்மை விரித்துப் பொருள் செய்யப்பட்டது.

வெதும்பியும் விதிர் விதிர்த்தும் வைத்தும் ததும்பியும் போற்றி போற்றி சயசய என்னும் கை நெகிழவிடேன் என்று இயைத்தும் பொருள் முடிவு செய்க.

நான்—தோன்று எழுவாய்; நெகிழவிடேன்-பயனிலை. நீ-தோன்று எழுவாய்; கண்டு கொள்-பயனிலை.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

மோரியர் படையெடுப்பின் காலம்
(கி. மு. 297—கி. மு. 274)

[வித்வான் மா. இராசமாணிக்கம், P. O. L.]

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 15, பரல் 11-ல் 'மோரியர் படையெடுப்பு' என்னுந் தலைப்பின்கீழ் யாம் விடுத்த செய்தி கட்டு இறுதியில் 'மோரியர் படையெடுப்பின் காலம் யாது? என்பதை அடுத்த இதழில் ஆராய்வோம்' என அறிவித்ததைத் தொடர்ந்து இக்கட்டுரை வரையப்பட்டுள்ளதாகும்.

மோரிய அரசருட் சிறப்புற்றிருந்தவர், முதல் மூவராவர்; சந்திரகுப்தன், பிந்துசாரன், அசோகன். சந்திரகுப்தனே மோரிய ராச்சியத்தை ஏற்படுத்தினவன். வட இந்தியா முழுவதும் அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவன் விந்தியமலையைத் தாண்டித் தென் இந்தியாமீது படையெடுத்து வந்ததாகவே கூறச் சரித்திரச் சான்றில்லை. மேலும் தென் இந்தியாவுக்கு வர அவற்கு அவகாசம் இல்லை எனவே கூறலாம். என்னை? அவன் திடீரெனத் தோன்றி மௌரிய ராச்சியத்தை ஏற்படுத்தினன்; அங்ஙனம் ஏற்படுத்துதல் எளிதான செயல் அன்று; வட இந்திய அரசர் பலரை வென்று வட இந்தியா முழுவதையும் கைப்படுத்தி யாளவே பல வருடங்கள் சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. கிரேக்கரை வென்று உறவு கொண்டாடினவன் சந்திரகுப்தன். இவ்வாறு பல கடுமையான வேலைகளைச் செய்து முடிக்க வேண்டிய யிருந்தமையால், அவன் விந்தமலைக்குத் தெற்கேயும் வந்து நாடு பிடித்தான் என்பது நம்ப இயலாததெதான்றும். [1] சந்திரகுப்தன் மகன் மகனுன அசோகன் கலிங்கத்தை மட்டுமே வென்றனன் என்பதும், ஆனல் மைசூரின் வடபகுதி உட்பட (தமிழகம் நீங்கலாக) முழு இந்தியாவையும் ஆண்டான் என்பதும் அவனுடைய சாஸனங்களால் அறியக்கிடக்கின்றன. இவற்றால், சந்திரகுப்தன் மகனும் அசோகன் தந்தையுமான பிந்துசாரன் காலத்திற்றான் விந்தமலைக்குத் தென்பாற்பட்ட நாடு வெல்லப்பட்டதாதல் வேண்டும். "பிந்துசாரன் பதினறு அரசரைக் கொன்று கீழ்க்கடலுக்கும் மேல் கடலுக்கும் இடைப்பட்ட நாட்டை வென்றான்; அவன் 'அமித்ரகதா'

1. V. A. Smith's 'Early History of India', p. 156 (ed. 4).

இந்தி மொழியும் அதன் பிரிவுகளும்

[கருவூர், ஈழத்துச் சிவானந்த அடிகள்]

- இந்தி
  - மேல்நாட்டு இந்தி
    - பாங்காரு
    - பிரஜ்பாஷா
    - கனோஜ்
    - பத்தேலி
    - உருது
  - கிழ் நாட்டு இந்தி
    - அவதி
    - பகேலி
    - சத்தீஸ்கரி
  - பிகாரி
    - மைதிலி
    - போஜ்புரி
    - மகதி

N. B.—வடநாட்டில் 11 வித இந்திமொழிகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விதமாய்ப் பேசப்பட்டு வருகின்றன. இஃதல்லாமல்:—இந்தி—லந்தி—பஞ்சாபி—குஜராத்தி—ராஜபுதானி—குமோனி-கடுவாலி—உரியா—பங்காளி—மராட்டி—சிணு—காஸ்மீரி—கோகிஸ்தானி-சித்ராலி—திராகி பஷை—கலாஷா—கவர்படி--இந்துஸ்—தானி—பார்சி—ஆங்கிலம் முதலிய இருபத்திரண்டுக்கு மேற்பட்ட தனித்தனி பெரியமொழிகள் வடநாட்டில் பேசப்படுகின்றன.

இப்போது, தென்னிந்தியாவில் "பிகாரி"யின் பிரிவின் ஒன்றாகிய "மைதிலி" மொழியையே "இந்தி" என்ற பெயரால் நுழைத்துக் கட்டாய பாடமாக்க முயல்கின்றனர். அதனையே 25 கோடி மக்கள் பேசுகிறதாகப் பாமரமக்களிடம் கூறி ஏமாற்றுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள மக்களின் தொகையே 35 கோடி, அதில் "மைதிலி" மொழிக்குமட்டும் 25 கோடி என்றால், மற்றப் பெரும்மொழிகளுக்கு எத்தனை கோடி என்பதைச் சிறிது ஆழ்ந்து யோசித்தால், இங்ஙனங் கூறி ஏமாற்றுகிறவர்களுடைய புளுகு வெளியாகும்.

ஒரு இலட்சம் மக்களுங்கூடப் பேசாத ஒரு சிறுமொழியைத் தென்னாட்டில் நுழைக்கப் பார்ப்பதில் ஏதோ ஒரு சூழ்ச்சி வைத்துக்கொண்டு வேலைசெய்கிறார்களேயொழிய வேறில்லை.

இவர்கள் கூறும் இந்திமொழியைத் தமிழ்நாட்டவர் படித்தால், வடநாட்டவர் எல்லரோடும் பேச இயலாதென்பது வெளிப்படையாக அறியக்கிடக்கின்றது. மக்களின் அறிவுவிளக்கத்திற்கும், இந்தியப் பொதுமொழியாய் வைத்து வழங்குதற்கும் ஆங்கிலமே சிறந்தமொழி என்று கடைப்பிடிக்க.

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—திரு. க. ப. சந்தோஷம்]

(முன் சஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈண்டு யானெடுத்துக்காட்டிய பல்வேறு ஒற்றுமைகளின் பயனுக, அறிவியல் வகையில் மட்டும் யாவற்றையு முற்று நோக்குந் தன்மையுடையாரின் உளத்தில் சில ஐயங்கள் எழுமென்றும், யான் கூறியவற்றின் உண்மையைத் தெளிவாக்குதற் பொருட்டுக் குறுக்குக் கேள்விகள் அத்தகையோர் பாலிருந்து வருமென்றும் நம்புகின்றேன். எனது பேரெண்ணமிதுவே. யான் ஆராய்ந்து காட்டியவற்றில் பிறர் தங்கள் கருத்தைப் புகுத்தத் தூண்டப்படுவாராயின், இத்துறையில் யான் உழைத்தமைக்குக் கைம்மாறும் களிப்பாற்றுதலும் அதுவேயாம்.

தமிழ்மொழியின் மறைத்தன்மையின் பாலதாகிய உண்மை இயலைப்பற்றிய பல செய்திகளை எடுத்துக்கூறினேன். இவை நமது இலக்கிய முறைகளுக்கு ஒத்திருப்பினும் யாண்டும் வெளிப்படையாய்க் கூறப்படவில்லை. அற்றாதலின், மறைத் தன்மையின் பாலதாகிய உண்மையியலைத் தழுவித் தமிழ் மொழி வகுக்கப்பட்டதென்ற உண்மையைத் தமிழர் அறிந்திருந்தார்கொல்? எனும் இவ்வியைபுடைய கேள்வியை நான் எதிர்பார்க்கலாமன்றோ?

இவ்வுண்மையைத் தமிழர் அறிந்திருந்தார் என்பதற்கு அழிக்கொணுச் சான்றுகள் உள. மறைப்பாலன பெரிதுந் தூய்மையுடையனவாகக் கருதப்பட்டமையின் நம் தமிழ்ப் பெரியார் அவற்றைத் தகுதியுடைய மாணவர் சிலருக்கு அருகிருத்தியுரைக்கும் (உபதேசம்) வாயிலானன்றி வேறு வகையிற் கூறாது போந்தார். இம்முறை இன்றும் இந்தியர்க்குள்ளுண்டென்பதை யாவருமறிவர். ஒருவர் மற்றொருவர்க்கு மொழி வாயிலான் மட்டும் வெளிப்படுத்தும் உண்மைகள், ஒரு காலத்தில் ஒரு குரவன் மாணவற்கு உண்மையை எடுத்துக்கூறு முன் எதிர்பாராத வகையி லிறக்க நேரின், உலகிலில்லாதொழியும். இங்ஙனமிருக்க, தமிழ்மொழியில் மறைத்தன்மையின் பாலதாகிய உண்மையியலைப்பற்றிய சான்றுகள் உலப்பிலாவகையில் காணக்கிடக்கின்றமைபற்றியும், அவற்றின் துணைகொண்டு

அவ்வுண்மைகளைப் பெரும்பாலும் கைப்பற்ற முடியுமென்பது கருதியும் நாம் பெருமகிழ்வெய்தல் வேண்டும்.

அகரவெழுத்தைக் குறித்துத் தாயுமானவர் 'பொருள் வணக்கம்' என்னும் பகுதியிற் பின்வருமாறு கூறுகின்றார்.

"அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்லதாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளருசங் கற்பவிகற் பங்க ளெல்லாம்
தோயாத வறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்"

ஈண்டுத் தாயுமானவர் யாவற்றினுமுயர்ந்த பொருளை, அதனெல்லாத் தன்மையுடனும் அகர உயிருக்கொப்பிட்டு, அவ்வுயிர் எல்லாவெழுத்தையுமாக்கி, அவற்றினின்றும் வேறுபட்டு நிற்குமென்று பகர்கின்றார். மற்றும், எந்நாட் கண்ணியில்,

"அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரான் றன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி யாம்செய்வ தெந்நாளோ"

என்றெழுதுகின்றார். பலருமறிந்த நூலாகிய சிவஞானசித்தியாரில், அகரம் சிவனுக்குவமையாக்கப்படுகின்றது:

"அக்கரங்க டோறுஞ் சென்றிடு மகரம்போல நின்றனன்
சிவனுஞ் சேர்ந்தே."

இதில் எல்லா உயிர்கட்குஞ் சிவனுக்கு முள்ள தொடர்பு அகரத்திற்கும் மற்றைய வெழுத்துக்களுக்குமுள்ள தொடர்பை யொக்குமென்பது விளம்பப்படுகின்றது.

திருவருட்பயனிலும் ஆண்டவனுக்கு அகரவுயிர் உவமையாகின்றது:

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து."

ஈண்டும், தன்னொப்பிலா இறைவன் யாவற்றினும் புகுந்து நின்றும், தனிப்பட்டுயர்ந்தும் அகர உயிர்போல் நிற்பானென்பது கூறப்பட்டது.

திருவள்ளுவருந் தமது புகழ்கெழுமிய குறளில் கடவுள் வாழ்த்துரைக்கும் முதற் செய்யுளில்

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றார். ஈண்டுக் காட்டிய மேற்கோள்களைக் கவனிப்பின், தொன்மைத் திருவள்ளுவர் முதல், அண்மைத் தாயுமானவர் வரை நம் புலவர்களிற் சிறந்தோர் இறைவனுக்குரிய தன்மையனைத்தையும் அகரத்திற் களித்தாரென்பது விளங்கும்.

மேற்காட்டிய மேற்கோள்களின் பொருளைக் கூறுங்கால், "எவ்வெழுத்தைக் கூட்டுவதாயினும் அதற்கு வாயை அங்காத்தல் வேண்டும்; அங்காத்தல் அகரத்தைப் பிறப்பிக்கும். இது பற்றியே அகரம் இறைவனுக் கொப்பிடப்படுகின்றது," என்று சொல்வதுண்டு. ஒலியிலக்கணத்தை ஊன்றிப்பார்த்தால் தமிழ் எழுத்துக்களில் ஐந்தில் மூன்றுபங்கு கொண்ட மெய்யெழுத்துக்களெல்லாம் அகரவெழுத்து முழுமையையும் தாம் பிறப்பதற்கு வழங்கமுடியாதென்பது தெரியும். இங்ஙனமாயின், அகரத்திற்கும் இறைவனுக்குமுள்ள பொருத்தம் பழுதுபடாதிருக்குமாறு அகரத்தை எடுத்தல், நலிதல், படுத்தல் என்ற முத்தொழிலுக்கேற்ப மூன்று பகுதியாய்ப் பிரிக்க வேண்டும். எடுத்தல், நலிதல், படுத்தல் என்பவை சிருஷ்டி, திதி, சங்காரமாம். இம்மூன்றும் முறையே அகரத்திலுள்ள பிரணவத்தின் முக்கூறுகளாய் அ, உ, ம் என்பவற்றால் குறிக்கப்பெறுகின்றன. இவற்றுள் மகரமெய்யை மாத்திரமெடுத்து ஒற்றெழுத்துக்கள் பிறப்பதற்கு வழங்குகின்றோம். அகரத்தை முதற்பொருளுக் குவமையாய்க்கூற, ஈண்டுக் குறிக்கப்பட்ட முக்கூறும் இன்றியமையாது வேண்டப்படுகின்றமையானும் இம்முக்கூறும் எனதாராய்ச்சியிலிருந்து பெற்ற பல்வேறு முடிவுகளுக்கு நிலைக்களனாயுளவாதலானும், மேலே யாம் கூறிய புலவர்கள் அகரத்தை யாம் காட்டியவாறு கருதினார்களென்பது ஒக்கும்.

சித்தாந்திகளி லொருவரென்பதைவிடச் சித்தர்களி லொருவரென்று கூறுவதற்குரிய திருமூலர் ஓகரம் பஞ்சாட்சரமாகும், ஓகரம் எல்லா வெழுத்துமாகும்; சுருங்கச்சொல்லின் ஓகரம் உலகமேயாகும் என்று பகர்கின்றார். பின்வருந் திருமந்திரச் செய்யுள்களால் இது விளங்கும்:—

"ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே.

ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
ஓங்காரம் சீவ பரசிவ ரூபமே.

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறிவா ரில்லை
யெழுத்தறி வோமென் றுரைப்பர் களேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே.

அங்கமு மாகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த வருங்கல மாமே.''

சித்தாந்திகளின் பதினுறு சாத்திரங்களும் இம்முறையே ஓகரம் எல்லாமாகுமென்று விளம்புகின்றன. திருவருட்பயனில்:-

"இறைசத்தி பாசமெழின் மாயையாவி
புறநிற்கு மோங்காரத்துள்'' என வருவது காண்க.

மிக அண்மையில் வந்த தாயுமானவரும் இங்ஙனமே கருதுகின்றார் :—

''நீங்கா துயிருக் குயிராகி நின்ற நினையறிந்தே
தூங்காமற் றூங்கினல் லாதே யெனக்குச் சுகமுமுண்டோ
வோங்காரமா மைந்தெழுத்தாற் புவனத்தை யுண்பெண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே யகண்ட பரசிவமே''

ஆனாலிவை சங்க காலத்திலும் அதற்கு முந்தியும் எழுதப்பட்ட நூல்களுடன் ஒப்ப நோக்கின் புதிய நூல்களென்றே கருதப்படவேண்டும். சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் எழுதப்பட்ட நூல்களுள் தமிழர்களின் கொள்கைகளைப்பற்றி விரிக்கும் ஒன்றேனும் தீயூழால் நமக்குக் கிட்டிலது. இதன் பயனாக முற்காலத்து எழுதப்பட்ட நூல்களுள் ஆங்காங்குத் தோன்றும் கொள்கைபற்றிய சில குறிப்புக்களை யொட்டியே நாம் ஆராய்ச்சி நிகழ்த்த வேண்டியதாயிருக்கிறது.

முருகனைப் புகழும் திருமுருகாற்றுப்படை என்ற நக்கீரரது நூல் சங்ககாலத்திலிருந்து நமக்குக் கிடைத்திருக்கின்றது. இதன் பழமையை மறுப்பாரிலர். இந்நாலில் அகர ஒகரங்களின் உட்பொருள் விளக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கலாகாது. ஆனால், இந்நாலோடு சேர்த்து அடியில் எழுதப்பட்டிருப்பவையும், நக்கீரர் செய்தவை என்று

கருதப்படுபவையுமாகிய வெண்பாக்களொன்றில் சிவனுடைய ஐந்துமுகங்களும் முருகனுடைய ஆறுமுகங்களோடு ஒன்றாகக் கருதப்படுகின்றனவென்று தெரிகிறது.

"அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சி
லொருகா லினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்"

இதன் பொருளைப்பற்றிக் கருத்து வேறுபாடிருக்கலாம். ஆதலின், இதை விடுத்து நூலிலேயே யுள்ள ஒன்றைக் கவனிப்பாம். பின்வருமிரண்டடிகளும் நூலிலுள்ளன. இவை சங்க காலத்தில் தென்னிந்தியாவில் இறை வணக்கம் இங்கிலயிலிருந்த தென்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

"மந்திர விதியின் மரபுழி வழா
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே யொருமுகம்"

இங்கே மந்திர விதிகளிருந்தனவென்றும், அவை மரபிற்கியைந்திருந்தனவென்றும் அம்மரபு தழுவி அந்தணர் வேள்விக ளியற்றினரென்றும் பார்க்கின்றோம்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

இக்குறளில் மறைமொழி என்பது பிறரறியாமல் பேணப்படு மந்திரமாம்.

இவைகொண்டு மறைமொழி, வேள்வி முதலியவை அக்காலத்திலிருந்தனவென்றும், பொது மக்கள் அறிவிற்கெட்டா வண்ணம் இவை பாதுகாக்கப்பட்டனவென்றும் நாமறியலாம். வேறு சங்க நூல்களிலும் இவைபோன்ற குறிப்புக்களை நாம் காட்டலாம். பழமை ஆராய்ச்சியும் ஈண்டு நாம் கண்டவற்றை உறுதிப் படுத்துகின்றது. பல்சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றொரு பாண்டியன் கிறிஸ்து பிறப்பதற்குமுன் முதல் நூற்றாண்டிலிருந்தானென்று தெரிகின்றது. இவன் யாகங்கள் பலவியற்றி இப்பெயர் பெற்றானென்று காணக்கிடக்கின்றது.

கடைச் சங்கத்திற்கு முற்பட்டதென்று ஏற்றுக்கொள்ளப்படுந் தொல்காப்பியத்திலும் மறைப்பாலவாய குறிப்புக்களிருத்தலின் அந்நாளிலும் மறையோர் இந்நாளிலிருந்தவாறே ஆட்சிபெற்று விளங்கினரென்று நாம் உய்த்துணர்தல் கூடும். மரபியலில் பின்வருஞ் செய்யுளைக் காண்க:—

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்க முலகமா தலின்
இருதிணை யைம்பா லியனெறிவழா அமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"

இதில் பஞ்ச பூதங்களின் கூட்டம் மாயை என்று ஐயமறக் கூறியிருக்கின்றது. இஃது ஈண்டு விரிக்கப்பெற்ற மறைப்பால தாகிய உண்மையியலுக் கொத்திருப்பதை யறிக.

எழுத்துக்களின் ஒலியைச் சொல்வதாகிய பிறப்பியலைத் தொல்காப்பியர் பின்வருஞ் சூத்திரங்கொண்டு முடிக்கின்றார்.

"எல்லா வெழுத்தும் வெளிப்ப டக்கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே
யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளவு நுவன் றிசினே"

இவண் தொல்காப்பியர் தாம் கூறுகின்ற ஒலியியல்பு பொது மக்களால் எளிதி னுணரக்கூடிய ஒலிகளைப் பற்றியதென்றும், கடவுளைப்பற்றிக் கூறும் மறை (அந்தணர் மறை)யில் வயிற்றின் கீழ்ப்பகுதி (மூலாதாரம்)யிலிருந் தெழுகின்ற காற்றினோசையை நாடிக் காணல் மரபாமென்றும் ஐயமறக் கூறுகின்றார்.

(தொடரும்).

நீர் மூழ்குதல் (Diving)

[திரு. N. குழந்தை வேலன், B. A.]

நாம் தண்ணீரில் நீந்தும்பொழுது சிறிது பொழுதிற்கு மேல் நீரின் உள்ளே மூழ்கி இருத்தல் இயலாததாகின்றது. கடலின் உள்ளே 300 அல்லது 400 அடி ஆழத்தில் இறங்கி நீண்டநேரம் வேலை செய்வது எங்ஙனம் இயலும்? கடலின் உள்ளே வேலை செய்பவன் மூச்சுவிடுவது எப்படி? அவன் தலைக்கு மேல் உள்ள ஏராளமான தண்ணீர் அவனை அமிழ்த்தி நசுக்கிவிடாமல் எங்ஙனம் தப்புவிக்க முடியும்? அவன் எவ்வளவுக்கெவ்வளவு கீழே இறங்குகிறானோ அவ்வளவுக்கவ்வளவு உறுதியான உடுப்புப் போட்டுக்கொள்ளாவிடில் அவன் நீரினால் நசுக்குண்டு இறப்பது திண்ணம்.

குறைந்த ஆழமுள்ள இடங்களில் நீரில் மூழ்குபவன் நீர் நுழையாத உடுப்பு அணிந்து கொண்டால் போதும். தலைக்கு மட்டும் உறுதியான கவசம் அணிந்துகொள்ளவேண்டும். இவ் உடுப்பு இரட்டை மெழுகு துணியால் ஆகியது. இரண்டு துணிகளுக்கும் இடையில் ரப்பர் வைக்கப்பட்டிருக்கிறது. பாதங்களில் தோலாலும் மரக்கட்டையாலும் ஆகிய உறுதியான பூட்ஸ் போட்டிருக்கிறான். இஃது ஒவ்வொன்றும் சற்றேறக்குறைய 17 அல்லது 18 பவுண்டு எடை உள்ளது. இவையுமன்றி அவன் முதுகிலும் நெஞ்சிலும் 40 பவுண்டு எடையுள்ள இரண்டு ஈயக்குண்டுகளைக் கட்டித் தொங்கவிட்டிருப்பான். கடலிற்குள் நின்று வேலைசெய்வதற்கு இவைகள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. சுழல்கள் மிகுதியான இடங்களில் போகும்போது ஈயக்குண்டுகள் நிறைந்த கச்சைகளையும் இடுப்பில் அணிந்து கொள்வதுண்டு. அப்பொழுதுதான் கடலுக்குள் நிலைத்து நிற்கமுடியும்.

நீர்மூழ்கியின் உடுப்பில் முக்கியமானது தலையில் அணியும் கவசம். இஃது உறுதியான தாமிரத்தால் செய்யப்பட்டது. உள்ளே இருப்பவன் பார்ப்பதற்குக் கண்ணாடிச் சாளரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கவசம் உடுப்போடு நன்கு இணைக்கப்பட்டிருப்பதால் தண்ணீர் உள்ளே கசிவதற்குச் சிறிதும் இடம் இராது.

கடலிற்குள் மூழ்கி வேலை செய்பவர்கள் மூச்சு விடுவதற்கு இரண்டு வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று மேலே நீர் மட்டத்திலிருந்து குழாய் வழியாக அவன் தலைக் கவசத்திற்குள் காற்று அனுப்பப்படும். அல்லது அவன் தனக்கு வேண்டிய காற்றைப் போகும்பொழுதே கொண்டுபோவான். அவன் மூச்சினால் வெளிவிடும் காற்று உடையின் பின்புறம் இணைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்குப் போய்ச்சேருகின்றது. அப்பெட்டியிலுள்ள மருந்துகள் காற்றிலுள்ள கரிவளியைப் பிடித்து வைத்துக்கொண்டு உயிர்வளியை மட்டும் மீண்டும் தலைக்கவசத்திற்கு அனுப்புகின்றன. இதனால் அவன் மீண்டும் மீண்டும் அதே காற்றை ஏற்றுக்கொண்டு மூச்சுவிட முடிகின்றது. இவையுமன்றி முன் எச்சரிக்கையாக நல்ல காற்றையும் உயிர்வளியையும் சிசாக்களில் அடைத்து வைத்துக்கொண்டு போவான். வேண்டும்போது அவற்றைச் சிறிது சிறிதாகத் திறந்து மூச்சுவிடும் காற்றைப் புதுப்பித்துக்கொள்வான். கவசத்தில் காற்றை உள்ளே விடுவதற்கும் வெளியே தள்ளுவதற்கும் இரண்டு வாயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் உதவியால் உடுப்பின் உள்ளிருக்கும் காற்றை மிகுதிப்

படுத்தவோ குறைத்துக்கொள்ளவோ முடியும். இவ்வுடுப்பி லேயே டெலிபோன் என்னும் பேச்சுத் தந்தி வைக்கப்பட்டிருப் பதால் பாதாளத்திலிருந்தே நீர்மட்டத்திற்கு மேல் இருப்ப வர்களுடன் பேசிக்கொள்ளலாம். கடலிற்குள் ஆழத்தில் இருட்டாய் இருக்கும். ஆதலால் மேலிருந்து மின்சாரவிளக்கு களைத் தண்ணீருக்குள் தொங்கவிடுவது வழக்கம். விளக்கு வெளிச்சத்தின் உதவியால்தான் உள்ளே வேலை செய்யப் படுகின்றது.

மிக்க ஆழமான இடங்களில் இந்தத் துணி உடுப்பு பயன் படாதுபோகின்றது. கடலில் 400 அடி ஆழத்தில் ஒருவன் வேலை செய்யும்போது அவன் உடல் சற்றேறக்குறைய 150 டன் எடையுள்ள நீரினால் அமிழ்த்தப்படுகின்றது. இந்த நிலைமையில் துணியாலும் ரப்பராலும் செய்த உடுப்பு எங்ஙனம் தாங்கும்? ஆழமான இடங்களுக்குப் போகிறவர்கள் தங்களை எஃகினால் ஆகிய அங்கியால் போர்த்துக்கொள்கின்றனர். அவ்வுடை ஓர் இரும்புக் கோட்டைபோல் இருக்கின்றது. ஒருவன் இரும்பு உடை அணிந்திருக்கும்போது பார்த்தால் பிசாசுபோல் காணப்படுகின்றான். இவ்வுடுப்பின் உடல், கை, கால் முதலியன எஃகுக் குழாய்களால் ஆகியவை. கைகளை மூடிக்கொண்டிருக்கும் குழாய்களின் நுனியில் இருப்புக் குறடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் உதவியால் ஆயுதங்களைப் பிடித்து வேலை செய்யவும் கடலின்கீழே கிடக் கும் பொருள்களைப் பொறுக்கி எடுக்கவும் முடியும். தலையும் உருண்டைவடிவமான இரும்புக் கவசத்தால் மூடப்படும்: கண்களுக்கு முன்னால் கண்ணாடி வைக்கப்பட்டிருப்பதால் உள்ளே இருப்பவன் தான் செய்யும் வேலையை நன்றாய்ப் பார்த்துச் செய்ய முடியும்.

தன் உடுப்பில் எவ்வளவு காற்று நிறைந்திருக்கிறது என் பதை எளிதில் உணர்ந்து கொள்வதற்குரிய அளவைக் கருவி ஒன்று அதற்குள் அமைக்கப்பட்டிருக்கிறது. வாய்க்குப் பக்கத்திலிருக்கும் பேச்சுச் செலுத்தி (Microphone)யின் உதவியால் நீர் மட்டத்திற்குமேல் இருப்பவர்களுடன் பேச லாம். அவர்கள் அனுப்பும் செய்தியை அறிந்துகொள்வதற்குக் காதுகளின் பக்கங்களில் பேச்சுவாங்கிகள் (Earphones) அமைக்கப்பட்டிருக்கின்றன.

உயிர்வளியை அடைத்து வைத்திருக்கும் பெட்டி இன்றிய மையாதது. இதன் உதவியால் நீர்மூழ்கி வேலைக்காரன் தன் எடையை வேண்டும்போது மாற்றிக்கொள்வான். தன் எடையை மிகுதிப்படுத்திக்கொள்வதால் முன் இருந்ததைத்

விட இன்னும் ஆழத்திற்குச் செல்கிறான். இதன் பொருட்டு காற்றுப் பெட்டிக்குள் தண்ணீரை நிரப்பி அதன் எடையை ஏற்றுவான். மேலே போக வேண்டுமானால் காற்றுப் பையைத் திறந்து பெட்டிக்குள் விடுவான். உயிர்வளி பெட்டிக்குள் பரவிச் சென்று அங்குள்ள நீரை வெளிப்படுத்துகின்றது. இதனால் அவன் எடை குறைந்து மேலே கிளம்புவான். நீர் மூழ்கி சில வேலைகளில் மின்சாரத் திவட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு கடலின் உள்ளே செல்வான். இருப்பு உடையணிந்த நீர்மூழ்கியைச் சுமைதூக்கிப் பொறியின் உதவி யால் கப்பலிலிருந்து கடலில் இறக்கி விடுவார்கள். அவன் அலுவல் முடிந்தவுடன் அப்பொறியின் உதவியாலேயே மேலே தூக்கிவிடுவார்கள். ஆட்களால் அவ்வரக்கனைத் தூக்க வும் வைக்கவும் இயலாது.

நீர்மூழ்கி கடலுக்குள் இறங்கிப் பல திறப்பட்ட வேலை கள் செய்வான். கடலில் உடைந்து மூழ்கிக்கிடக்கும் கப்பல் களின் உள்ளே சென்று பரிசோதனை செய்வான். துறை முகங்கள் கட்டும்போது கடலுக்குள் சுவர் முதலியன வைப்ப தற்கு இவன் உதவிசெய்வான். கடலுக்குள் மூழ்கிக்கிடக்கும் இரும்புக்கப்பலின் ஓரங்களை ஆற்றல் மிகுந்த மின்சாரத்தீயி னால் சுட்டு எரித்து அதனுள் போவான். உள்ளே இருக்கும் மிக உறுதியான அறைகளை உடைத்து ஆங்குள்ள விலையுயர்ந்த பொருள்களை மேலே கொண்டுவருவான். கோடிக்கணக்கான பொருள்கள் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆயினும் நீர்மூழ்கியின் வேலை மிகவும் கடுமையானது. இஃது உயிருக்குத் தீங்கு விளைக்கக்கூடியது. இவ்வேலையை நல்ல உடல்வலிமையுள்ளவர்களே செய்யக்கூடும். தற்செயலாக ஏதாவது கெடுதி நேரிட்டாலும் நேரிடும். சில வேளைகளில் திமிங்கிலம், கடல் நண்டு முதலியவைகளிடம் அகப்பட்டுக் கொண்டால் அவற்றினின்றும் தப்பவே முடியாது. காற்றுக் குழாய்கள் சரிவர வேலை செய்யாவிடில் அவன் உயிருக்குத் தீங்கு நேரிடும். அதனால் நீர்மூழ்கி எப்பொழுதும் அக்குழாய் களின் மேலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். அக்குழாய்கள் கடலிற்குள் இருக்கும் பாறைகளிலும் செடி கொடிகளிலும் மாட்டி அறுந்து போகாமலும் கெட்டுப் போகாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

நீர்மூழ்கி திடீரென்று நீர் மட்டத்திற்கு மேலே வந்து விடக்கூடாது. ஆழத்தில் வேலை செய்யும்போது தலைக்கு மேல் இருக்கும் ஏராளமான நீரைத் தாங்கிக்கொண்டிருக் கிறான். இதுவுமன்றித் தண்ணீருக்குள் இருக்கும்போது பெட்

டியில் அடைத்து வைத்திருக்கும் இறுகிய காற்றினால் மூச்சு விடுகிறான். இதனால் அவன் மார்பிலுள்ள குருதிக் குழாய்களும், மூச்சுப்பைகளும் மிகவும் களைத்துப்போயிருக்கும். இவன் திடீரென்று மேலே வந்து இயற்கைக் காற்றினால் மூச்சு விட்டால் அவன் உடனே உயிரிழக்க நேரிடும். இதனால் தான் அவன் சிறிது சிறிதாக மேலே வருவான். நீர் மட்டத்திற்கு வருவதற்குள் பல இடங்களில் தங்கி இளைப்பாறுவான். இங்ஙனமாக அவன் மேலே வந்து சேர்வதற்குள் அங்குள்ள காற்றின் அழுத்தும் நிலைமைக்குத் தகுந்தபடி தன் உடம்பைப் பழக்கப்படுத்திக்கொள்கிறான். நின்று நின்று வருவதால் காற்றின் அழுத்தலும் அவ்வளவாக உடலைத் தாக்குவதில்லை. சில விநாடிக்குள் 150 அல்லது 200 அடி ஆழம் இறங்கிய ஒருவன் உடனே திரும்பினாலும் மேலே வந்து சேர 3 அல்லது நான்கு மணி நேரம் செல்லும்.

1915-ஆம் ஆண்டில் லூசிடானியா (Lusitania) என்னும் கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கிவிட்டது. இதன் உள்ளே இருக்கும் விலையுயர்ந்த பொருள்களை மேலே கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகள் இப்பொழுது நடந்து வருகின்றன. கடலின் உள்ளே நடக்கும் வேலையை அசைவு ஒலிப்படமாகப் பிடிக்கப்படுகின்றது. கிரெய்க் (Dr. Craig), மேக்ஸ் ஈ. நாகல் (Max E. Nohl) என்னும் இரண்டு அமெரிக்க வீரர்கள் இவ்வேலைக்குத் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய உடுப்புகளில் நீரின் ஆழம் முதலியவற்றைக் காட்டும் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடலின் உள்ளே படம் பிடிப்பவர்களுக்கு உதவியாகப் பெரிய மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

நீர்மூழ்கி உடுப்புகளுக்குள்ளேயே உணவுப்பொருள்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உடுப்புகளை அணிந்து கொண்டும் 2400 அடி ஆழம் வரை மூழ்கிச்செல்லலாம். மூழ்கிக்கிடக்கும் கப்பலில் 1½ கோடி பவுன் பெறுமானமுள்ள பொருள்கள் இருப்பதாகத் தெரிகின்றது. உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு நீராக அமைந்திருக்கிறது. இந்நீர்ப்பரப்பு முழுவதையும் ஆராய்ந்து பார்த்தவர் எவரும் இல்லை. கடலிற்குள் தரைமட்டத்தில் தங்கச்சுரங்கங்களும், எண்ணெய்க்கிணறுகளும் இன்னும் நமக்குத் தெரியாத பலதிறப்பட்ட விலைபொருள்களும் நிறைந்து கிடக்கின்றன.

கடலின் உள்ளே ½ கல் ஆழம் இறங்கியவர்கள் தாங்கள் அங்கே கண்ட வியத்தகு தோற்றங்களை வெளியிட்டிருக்கின்றனர். நீர்வாழும் உயிர்களில் எத்தனையோ வகைகள் உண்டு.

சில மீன்கள் வாயிலும் சிறகிலும் ஒளிவிடுகின்றன. பொன் நிறமான மீன்களும் வட்டமான ஒளியைக் காட்டும் மீன்களும் உள. சில மீன்கள் பளிச்சுப் பளிச்சென்று மின்னுகின்றன. இன்னும் சில மீன்கள் கண்ணைப்பறிக்கும் பெரிய மின்சார ஒளியைக் காட்டி மறைக்கின்றன. இவற்றின் தன்மை அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் எட்டாததாக இருக்கின்றது.

டாக்டர் பீபி (Dr. Beebe) என்னும் பேரறிஞர் இவ்வரிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். வானநூல் ஆராய்ச்சிக்கு எங்ஙனம் மலைபுச்சியில் நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவோ அங்ஙனமே கடல் உலக ஆராய்ச்சிக்கும் நீரின் உள்ளே கட்டிடங்கள் அமைப்பதற்கு இவர் முயற்சி செய்து வருகிறார். படிகளின் உதவியால் இக்கட்டிடத்திற்குள் இறங்கிச்செல்லவேண்டும். இதற்குள்ளே அறிவியல் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும். வேடிக்கை பார்க்க விருப்பமுடையவர்கள் உள்ளே சென்று கண்ணாடிச் சாளரங்களின் வழியாகப் பார்க்கலாம். நீர்வாழும் உயிர்கள் பவழக்காடுகளில் நீந்தி விளையாடுவதை நாம் நேரில் காணலாம்.

ரெஜினல்டு (Prof. Reginald) என்னும் புலவரும் இந்த ஆராய்ச்சி செய்துவருகிறார். ஆறு அடி உயரமுள்ள இரும்புப் பெட்டியில் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் கடலுக்குள் சென்று ஆராய்ச்சி செய்வது வழக்கம். இங்ஙனமாக இவர்கள் பகற்காலங்களிலும் இராக்காலங்களிலும் பன்முறை சென்றிருக்கின்றனர். இவர்கள் ஒருநாள் சூரிய உதயத்திற்கு முன் கடலில் இறங்கினர். சூரியன் விடியற்காலையில் மீன்களுக்கு எவ்வாறு தோன்றும் என்பதைக் காண இவர்கள் ஆவல் கொண்டனர். கடல் நீர் சூரிய ஒளியினால் கறுப்பு நிறத்திலிருந்து நீல நிறமடைந்து பின்னர் சிகப்பாகி இறுதியில் பசுமை நிறமாய்த் தோன்றியது. தலைக்குமேல் உள்ள கண்ணாடியின் வழியாய் நோக்கியபோது இவர்கள் ஓர் அழகிய தோற்றத்தைக் கண்டு வியப்புற்றனர். சிவந்த நிறமுடைய பெரிய நெருப்புக்கோளங்கள் நீருக்குள் உருண்டு ஓடுவது போல் இவர்களுக்குத் தோன்றின. சூரியனுடைய நிழல்களே அலைகளிற் பட்டு அங்ஙனம் தோன்றின.

கடலிற்குள் ஆழ்ந்து கிடக்கும் மலைகளும், பாறைகளும் ஆராய்ச்சிக்குரியவை. டாக்டர் சார்ல்ஸ் (Dr. Charles) என்னும் அறிஞர் கடலிற்குள் 7,200 அடி ஆழத்திலுள்ள பாறைகளை வெடிமருந்தின் உதவியால் உடைத்து வெளியில் எடுத்து ஆராய்ச்சி செய்து வருகிறார். இவ்வாண்டு பூமியின் வடகோடிக்குச் சென்ற ரஷ்ஷிய நாட்டு ஆராய்ச்சியாளர்

அண்டரும் புகழ் துண்டீரன் ஆண்டு துண்டீர நாடாய்த்
தண்டகன் பின்னராண்டு தண்டக நாடாய்ப் பின்னர்த்
தொண்டை மானுண்டு தொண்டை நாடெனத் துலங்கிற் றென்ப
பண்டயன் படைப்புத் தொட்டுப் பயிலுமித் தொண்டை நாடு.

—கச்சியப்ப முனிவர்.

தொண்டை நாடானது சோழர்களுடைய ஆளுகைக்கு வந்த பிற்பாடு தொண்டை நாடெனப் பேர்பெற்றதே யொழிய, அதற்கு முன் அப்பெயர் அதற்கு இல்லை.

துண்டீரனுக்குப் பின் தண்டகன் ஆண்டான். தண்டகனிடமிருந்து குறும்பர்கள் (பல்லவர்கள்) அந்நாட்டைக் கைப்பற்றி, நாட்டை 24 கோட்டங்களாகவும், 79 நாடுகளாகவும், 1900 நத்தங்களாகவும் பகுத்து அரசாண்டு வந்தார்கள். அக்காலத்தில் அது குறும்பர் நாடு அல்லது பல்லவர் நாடு என்ற பெயரை அடைந்திருந்தது.

அக்குறும்பரையெல்லாம் வென்று அடக்கித்தான் சோழர்கள் நாட்டைக் கைப்பற்றி, கோட்டம், நாடு, நத்தங்களை அழிக்காமல் அப்படியே வைத்துக்கொண்டு, சோழ தேசத்தினின்றும், பாண்டிய தேசத்தினின்றும் பன்னீராயிரம் கோத்திர முள்ளவர்களாகிய நாற்பத்தெண்ணாயிரம் சைவக் குடிகளை அந்நாட்டில் குடியேற்றி, அந்நாடு பூராவும் அவர்களுக்கு விடுத்து, செப்பேட்டில் சாசனம் செய்து கொடுத்தார்கள். அச்சாசனம் இன்னும் காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் மடாலயத்தில் இருக்கிறது.

பின், முதலாங் குலோத்துங்கன் காலத்தில் (1070—1120 A. D.) தொண்டைநாட்டுக்குச் "சயங்கொண்ட சோழ மண்டலம்" என்றபெயர் உண்டாயிற்று. இப் பெயர் தான் மேலே காட்டிய சாசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

முன்னம், தொண்டைநாடு என்று அழைக்கப்பட்ட பகுதியானது, தற்காலம், செங்கற்பட்டு, தென் ஆற்காட்டின் வடபகுதி, வட ஆற்காடு, சித்தூர், நெல்லூர் ஜில்லாவின் தென் பகுதி முதலிய ஜில்லாக்களை அடக்கிக் கொண்டு இருக்கிறது.

III. ஊர்

நெற்குன்றவாணர் பிறந்த நாடு தொண்டை நாடு எனக் கண்டாம். அவர் பிறந்த ஊர் எது என விசாரிப்பாம்.

"ஆமூர் முதலி அரசர் பிரானிங்கிருக்கப்
போமூர் அறியாமற் போயீ"

என்று காளமேகப்புலவர் பாடிய பாட்டால் அவர் பிறந்த ஊர் "ஆமூர்" என்று அறிகிறோம்.

இந்த ஆமூருக்கு "நெற்குன்றம்" என்ற வேறு ஒரு பெயரும் உண்டு. இப்பெயர் அவ்வூருக்குத் தானிய வளப்பத்தால் உண்டான ஒரு காரணப்பெயர்.

இவ்வூரார் நெல்லை மலைகள் போலக் குவித்துச் சேர் கட்டிப் புலவர்களுக்கும், பாணர்களுக்கும், கூத்தர்களுக்கும், சிவனடியார்களுக்கும் வழங்கி வந்ததால் அப்பெயர் அவ்வூருக்கு அமைந்தது.

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை" (குறள்)

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை" (,,)

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை." (,,)

என்ற நீதிநூற் பிரகாரம் துறவிகளையும், வறியவர்களையும், அதிதிகளையும், சுற்றத்தாரையும், இயற்றமிழ்வல்லோரையும் (புலவர்), இசைத்தமிழ் வல்லோரையும் (பாணர்), நாடகத் தமிழ் வல்லோரையும் (கூத்தர்) காப்பாற்றுதல் இல்வாழ்வோர் கடமையாதலால், அவ்வூரிலுள்ளார் தானியங்களைச் சேர் கட்டி வைத்துக்கொண்டு எல்லோரையும் ஆதரித்து வந்தார்கள்.

தற்காலம் அவ்வூரானது செங்கற்பட்டு ஜில்லா, சைதாப்பேட்டைத் தாலுகாவில் 165-ம் நெம்பர் கிராமமாயிருக்கிறது.

கரிகாலன் காலத்தில் அவன் கொடுத்த செப்பேட்டுச் சாசனப்படி புலியூர்க் கோட்டத்துக் கோட்டூர் நாட்டில் சேர்ந்திருந்தது.

பின், முதலாங் குலோத்துங்கன் காலத்தில் ஜயங்கொண்ட சோழமண்டலத்து, புலியூர்க் கோட்டத்து, போரூர் நாட்டில் சேர்ந்திருந்தது என்பது மேலேகாட்டிய கல்வெட்டால் அறிகிறோம்.

அவ்வூரானது மிகவும் வளப்பம் பொருந்திய ஊர். அவ்வூருக்கு நெற்குன்றவாணர் அரசராவார். அவர் அரசர் என்ற சங்கதியை மேலே காட்டிய காளமேகப் புலவர் கூறிய "அரசர்பிரானிங் கிருக்க" என்ற அடிகளால் அறியலாம். அவர்

ஆமூர் அரசராய் இருந்தபோதிலும் பேரரசர்களாகிய சோழர்களுக்குக் கப்பங்கட்டுபவர் அல்ல. சுய அதிகாரத்தோடுங் கூடிய அரசராவர்.

அதனால் இவருக்கு வாணர்—இராஜா என்ற பட்டங்களும் உண்டு.

வாணர் என்னும் பட்டம் அக்காலத்தில் சுய ஆட்சியோடுங்கூடிய தொண்டை நாட்டு வேளாளருக்கு உண்டான ஒரு பட்டம். உதாரணமாக, நின்றைக் காளத்திவாணர்—ஏகம்பவாணர் முதலியோருடைய பட்டங்களைக் கவனித்தால் அறியலாம்.

IV. பெயர்

நெற்குன்றவாணருடைய நாடு தொண்டை நாடென்றும், ஊர் ஆமூர் என்கிற நெற்குன்றம் என்றும் கண்டாம். ஆனால் அவருடைய பெயர் என்னவென்று விசாரிப்பாம்.

மேலே காட்டிய கல்வெட்டுச் சாசனப் பகுதியால் அவருடைய இயற்பெயர் "களப்பாளர்" என்று அறிகிறோம். அவர் நெற்குன்றம் என்ற ஊருக்கு அரசரானபடியால் வாணர் என்றும், இராஜா என்றும், இராயர் என்றும், அரசர்கோன் என்றும் அழைக்கப்பட்டார்.

நெற்குன்றவாணர், ஆமூர் முதலியார், களப்பாளராயர், களப்பாளராஜா என்பன அவருடைய மறுபெயர்கள்.

V. மரபு

இனி நெற்குன்றவாணருடைய மரபு எது வெனச் சிறிது விசாரிப்பாம்.

மேலேகாட்டிய கல்வெட்டால் இவர் தொண்டை நாட்டுப் புலியூர்க் கோட்டத்துப் போரூர் நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றங்கிழான் களப்பாளராஜா என அறிகிறோம்.

ஆகையால், தொண்டைநாட்டுக் கொண்டைகட்டி வேளாளராகிய பரம்பரைச் சைவ மரபே நம்நெற்குன்றவாணருடையே மரபாகும்.

இவருடைய கோத்திரம் நெற்குன்றங்கிழார் என்பதாகும்.

இவருக்கு வாணர் என்ற பட்டம் இருப்பதால் இவரைச் சில புலவர் "மாவலிவாணர்" பரம்புரையைச் சேர்ந்தவர்

என்று தப்பாகக் கூறுகின்றார்கள். அதனைச் சிறிது ஈண்டு விளக்குவாம் :—

தொண்டைநாட்டுக் கொண்டைகட்டிப் பரம்பரைச் சைவ வேளாளர்கள் அக்காலத்தில் அரசாண்ட சோழ பாண்டிய அரசர்களுடைய பந்துக்களாயிருந்தாலும், தொண்டைநாட்டில் தனிப்பட்ட சுய ஆட்சியுடன் சோழபாண்டியர்களுக்குப் பெண்கொள்ளக் கொடுக்க சமநிலையுடன் வாழ்ந்துவந்தவர்கள் ஆவார்கள்.

மாவலிவாணர் என்போர் தொண்டைநாட்டு வேளாள வம்சம் அன்று. இரணியன், இரணியாக்கன் வழிவந்த மகா பலிச் சக்கரவர்த்தியினுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மாவலிவாணர்கள். அதனாலேதான், சங்க இலக்கியங்களில் எல்லாம் மகாபலி வம்சத்தாரைக் கூறும்போது 'மாவலி வாணர்' என்றும், தொண்டைநாட்டு வேளிர்களைக் குறிக்கும் போது அடையில்லாமல் "வாணர்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாவலிவாணர்கள் வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள 'திருவல்லத்தை' அரசிருக்கையாகக் கொண்டு "வாணகப்பாடி"யை அரசாண்டவர்கள். பாணாசுரன் முதலியோர் அம்மரபைச் சேர்ந்தவர்.

அக்காலத்தில் தொண்டைநாட்டுக்கு மேற்கேயும் வடக்கேயும் வாணகப்பாடி, கங்கைபாடி, நுளம்பர்பாடி முதலியன இருந்தன வென்பதை கல்வெட்டுச் சாசனங்களால் அறிகிறோம்.

சோழன் கிள்ளிவளவன் என்பான்; தனக்குத் தன்குலத்திலேயே பட்டமகிஷி இருந்தும், அரசாங்கத் தந்திரம் காரணமாக, நாகநாட்டரசன் வளைவணன் என்பானுடைய மகள் பீலிவளை என்பாளையும், மாவலிவம்சத்து வாண அரசனின் மகள் கீர்த்தி என்பாளையும் சாதாரண மனைவிகளாகக் கட்டிக் கொண்டான். இதனை,

"நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
அடியிற் படியை அடக்கிய அந்நாள்
நீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி என்னும் திருத்தகு தேவியொடு" (மணிமேகலை)

என்னும் மணிமேகலை அடிகளால் அறியலாம்.

(இ-ள்) "மகாபலிச் சக்ரவர்த்தி வம்சத்தில் வந்த ஒரு மகாபலியினுடைய தங்கை மகனுடைய மகள் சீர்த்தி என்கிற சீர்த்தி என்பாளுடன்" என்பது பொருளாகும்.

இவளைத்தான் சோழன் கிள்ளிவளவன் வேட்டது. அதனாலேயே மாவலிவாணர்கள் வேளாள வம்சத்தைச் சேர்ந்தவர் ஆகார்.

ஆனால், கிள்ளிவளவன் தன் குலமல்லாத வேறொரு குலக் கன்னியைக் கேட்டது அரசதந்திரம் காரணமாக.

அர்ச்சுனன் ஆந்திரனாயிருந்தும், சுபத்திராதேவி பட்ட மகிஷீயாயிருந்தும், துரோபதை முதலிய பலகுலத்து அரச கன்னிகைகள் சாதாரண மனைவிகளாயிருந்தும் இராஜ தந்திரம் (Political cause) காரணமாக சோழன் மகள் அல்லி என்னும் சித்திராங்கதையை மணந்தான் அன்றோ? அதனாலேயே அர்ச்சுனன் வேளாளன் ஆய்விட மாட்டான்.

அதுபோல, கிள்ளிவளவனும் ஓர் அரசன். வேறுகுலக் கன்னிகைகளை இராஜ தந்திரம் காரணமாக மணக்க உரிமை பெற்றவன்.

கிள்ளிவளவனை இஃது ஒரு காரணத்தைக்கொண்டு மாவலி வாணர் வம்சம் என்று கூறினால், அதேமாதிரி நாக நாட்டரசி பீலிவளையை அதே அரசன் கலியாணம் செய்து கொண்டதற்கு அவளை நாகசாதியைச் சேர்ந்தவள் என்று கூறலாமே? ஆகையால், அது கருத்தன்று என்று விடுக்க.

வாணர் = வாழ் + நர்

இப்பெயர் வேளாளருக்கு, உழுதுண்டும் உழுவித்துண்டும் வாழ்தலால் ஏற்பட்டபெயர் vide.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" —குறள்

உலகத்தில் வாழ்நர் அதாவது சுகமாய் வாழ்பவர் என்று சொன்னால் அது வேளாளரையே குறிக்கும்.

ஆகையால், நெற்குன்றவாணர் தொண்டை நாட்டுக் கொண்டைகட்டி பரம்பரைச் சைவ வேளாளர் மரபு என்று தெரிந்தாம்.

(தொடரும்)

கால்டுவேல் ஒப்பிலக்கணம்

II

[காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி. ஏ., எழுதியது]

"திராவிட மொழிகள்" என்று வகுத்துக்கொண்டதேன்?

தென்னிந்தியாவில் வழங்கும் மொழிகள் பலவுந் தமக்கெனத் தனித்தனி ஒரு பெயருடையனவேனும் அவையனைத்தையும் ஓரினப்படுத்தி, அவ்வினத்திற்குக் குறியீடொன்று கொடுத்து, அக்குறியீட்டை யெடுத்தாளுதல் ஒப்பிலக்கண முறைக்கு இன்றியமையாத தொன்றாகும். தென்னிந்திய மொழிகளை இலக்கண வகையானோக்குமிடத்து அவையனைத்திற்கும் தனிப்பட்ட பொது அமைப்பொன்று அடிப்படையாக இருப்பது காணப்படும். இப்பொதுச் சிறப்பினாலும், மொழிக்கு இன்றியமையாத வேர்ச்சொற்கள் பலவற்றைப் பொதுப்படையாகவும் பெருவாரியாகவும் தம்முள்ளே இம்மொழிகள் கொண்டுள்ளமையாலும் இம்மொழிகளெல்லாம் ஓரின மொழிகளே யென்பது எளிதிற் பெறப்படும்.

மேனாட்டு மொழியாராய்ச்சியாளர்கள் தொடக்கத்தில் இத்தென்னிந்திய மொழிகளைத் "தமிழ்" என்றே இன மொழிக் குறியீடுகொடுத்து வழங்கிவந்தார்கள். ஒரு வகையில் இதுசரியே. தென்னிந்திய மொழிகளுள் தொன்மை மிகுந்ததும், திருத்தம் பெற்றதுமாகிய மொழி தமிழ்மொழியே; தென்னிந்திய மொழியினத்திற்குரிய தனிச்சிறப்புக்களையும் அடிப்படை யமைப்பையும் உரிமையோடு கொண்டிலங்குவது தமிழ்மொழியே. ஆகவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு மொழியை அதன் இனத்தைச் சுட்டும் வகைக் குறிமொழியாகக் கொள்வதில் தவறேது மில்லையாயினும், தெளிவு கருதி, தமிழ் மொழியையும் அம்மொழி பேசும் தமிழ் மக்களையுங் குறிப்பதற்குமட்டும் "தமிழ்" என்னும் குறியீட்டை வழங்குவதே சால்புடைத்தாம். அற்றாயின், இத் தமிழ்மொழியை யுள்ளிட்ட தென்னிந்திய மொழிகள் பலவற்றையுங் குறிப்பதற்குக் குறியீடொன்று இன்றியமையாது வேண்டப்படுமாதலின் "திராவிடம்" என்று அதனை வகுத்துக்கோடல் எடுத்துக்கொண்ட ஒப்பிலக்கண முறைக்குப் பொருத்தமாம்.

"திராவிடம்" என்று கொண்டதேன் என்பது பின் வருமவற்றால் இனிது விளங்கும். வடமொழியில் தென்னிந்திய

மொழியினத்தைக் குறிப்பதற்குப் பண்டை நாளில் வழங்கப் பட்டதாகத் தெரியக்கிடப்பது "ஆந்திர—திராவிட பாஷா" என்ற சொற்றொடரேயாம். "தெலுங்கு—தமிழ் மொழி" என்பது அச்சொற்றொடராற்போந்த பொருள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சிறந்த வடமொழி வாணரான குமாரில பட்டர் என்பார் இக்சொற்றொடரை முதன்முதலாக எடுத்தாண்டுள்ளார். தென்னிந்தியாவில் வழங்கும் மொழிகள் இரண்டிற்கு மேற்பட்டிருக்க தெலுங்கு தமிழ் என்ற இரண்டைமட்டுங் குறித்தெடுத்துக்கொண்டது மேம்போக்கான தொன்றாகத் தோற்றலாம். ஆனால், தென் னிந்திய மக்கட்டொகுதியினரிற் பெரும் பாலோராற் பேசப் படுவது தமிழுந் தெலுங்குமே யாதலின், பெருவழக்கு நோக்கி அவ்விரண்டை மட்டுமே தேர்ந்துகொண்டது ஒரு வகையில் ஏற்புடைத்தேயாகும். மலையாள மொழியைத் தமிழிலும், கன்னடத்தைத் தெலுங்கிலும் அக்காலத்தினர் அடக்கிக் கொண்டனர்போலும்!

இனி, மனுஸ்மிருதியில் பத்தாவது பிரிவில், "கீழ்வரும் க்ஷத்திரியக் குடிகள் படிப்படியாக (ஆரிய) சம்ஸ்காரங்களி லிருந்து வழுவி, பார்ப்பனர்களுடன் சகவாசமிழந்து விருஷ ளர்கள் (ஜாதிப் பிரஷ்டர்கள்) ஆனார்கள் :—பௌண்ட்ரகர், ஒட்ரர், திராவிடர், காம்போஜர், யவனர், சாகர், பாரதர், பஹ்லவர், சினர், கிராதர், தரதர், கசர்" என்று கூறப்பட் டுள்ளது. மேற்குறித்த குடிகளில் தென்னிந்தியாவிற் குரி யாராவர் திராவிடர் என்று குறிக்கப்பட்டவர்களே. இதனால் தென்னிந்தியப் பகுதியிலுள்ள பலதிறப்பட்ட மக்களையும் பொதுப்படையாகக் குறிப்பதற்கு "திராவிடம்" என்ற குறியீடு எடுத்தாளப்பட்டுள்ளமை தெளியலாகும். ஒருகால் திராவிடப் பெருங்குழுவைச் சேர்ந்த பெருங் குடிகளில் யாதாயொரு பெருங்குடி மேற்குறித்த பட்டியில் சேர்க்கப் படாமல் விலக்கப் பட்டிருத்தல் வேண்டுமானால் அஃது "ஆந்திரர்" என்ற பெருங்குடியே யாதல் வேண்டும். ஏனெ னிற் கூறுதும். ஐத்ரேய பிராமணத்தில் விசுவாமித்திரரின் வழித்தோன்றல்களாய் வந்து விருஷளர்களானவர்களைக் குறிக்குமிடத்து, புண்டரர், சபரர், புளிந்தர் என்பவரோடு "ஆந்திரர்" என்னும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர்களை ஒருவாறு விலக்கியதாகக் கொண்டாலும், மனு ஸ்மிருதியில் குறிக்கப்பட்ட திராவிடர் என்ற சொல் ஆந்திர ரொழிந்த ஏனைய தென்னிந்தியமக்களனைவரையுங் குறித்து நிற்பது பெறப்படும்.

இனி, இந்தியப்பெரு மூதாதைகளில் ஒருவரான சத்திய விரதர் என்பவரைக் குறிக்குமிடத்து, பாகவத புராணம் "திராவிட மன்னர்" என்றே குறிக்கின்றது.

இனி, ஸ்மிருதிகாலத்திற்குப் பின்னர் வந்த மொழியாராய்ச்சியாளர்களும் "திராவிடம்" என்ற சொல்லைத் தென்னாட்டு மொழியினத்தைக் குறிப்பதற்கே எடுத்தாண்டுள்ளனர். இந்தியப் பாகதமொழிகளைத் தொகைப்படுத்தி இனம் பிரித்த பண்டையாராய்ச்சியாளர் மூலபாகதங்கள் மூன்றென்றும், அவை, மகாராஷ்ட்ரி, சௌரசேனி, மாகதி என்றும் பிரித்தனர். இம் மூலபாகதங்களுக்கு அடுத்தபடியாக வைத்துக் கருதப்பட்ட பாகதமொழித் தொகுதியில் "திராவிடி" என்னும் பெயரால் திராவிட மொழியினஞ் சேர்க்கப்பட்டுள்ளது. வடமொழி மூலநூல்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் "வெளியிட்ட ஜே. மூர் என்னும் பேராசிரியர், *சமஸ்கிருத மூலங்கள்" "என்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ள மேற்கோளொன்றில், "திராவிடம்" என்பது "விபாஷை" (சிறுபாகதம்) என்று வடமொழிவானரொருவராற் குறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு வடமொழிவாணர் திராவிடர்களுடையமொழி திராவிடி" என்று கூறியுள்ளார். எனவே பண்டைநாட்களில் வடநாட்டாரால் "திராவிடமொழிகள்" என்று குறிக்கப்பட்டது தமிழையோ, தெலுங்கையோ அன்றி அவைபோன்ற தனிமொழியேயன்று என்பதும், தமிழையுந் தெலுங்கையும் மற்றுந் தென்னிந்திய மொழிகளனைத்தையு முட்கொண்ட ஒரு மொழியினத்தையே என்பதும், அவையாவற்றையும் ஓரின மொழியாகவே வடவர் கருதியிருந்தார்கள் என்பதும் எளிதில் விளங்கும்.

திராவிடர்களுடைய மொழியை வடநாட்டார் "பைசாச பாகதம்" என்ற வகுப்பினுள் அடக்கிவிட்டமை ஈண்டுக் குறிக்கற்பாற்று. இந்தியாவில் அக்காலை வழங்கின பல உண்ணாட்டு மொழிகளையும் பைசாச பாகதத்தொகுதியிலேயே சேர்த்து விடுவது வடவர் வழக்கம்போலும்! இன்றேல், பாண்டியன் மடியிற்றவழ்ந்தபண்பார் செந்தமிழும், †போட்டர்கள் என்ற திபேத்தியர் மொழியும் பைசாசபாகதத்துள் சேர்க்கப்பட்டிருப்பானேன்? பல்லாற்றானும் வேறுபட்ட பல பண்டைப் பாகத மொழிகளையும் "பைசாச பாகதம்" என்ற ஒரு தொகுப்பிற் சேர்த்ததற்குப் பொதுப்படையான காரணம் ஏதேனும் இருந்திருக்கக் கூடுமென்றால், அது பார்ப்பன மொழி நூலறிஞர் அம்மொழிகளின்பாற் காட்டிய ஒருபடித்தான

* "Mur's Sanskrite Texts" † Bhotas.

வெறுப்பெயராகும். ஆதலாலேயேயன்றோ அப்பண்டை மொழிகள் பைசாசம் அல்லது பேய்கள் என்பவராற் பேசப்படும் மொழியாகிய "பைசாச்சி" என்றே அழைக்கப்படுவவாயின. இது கிடக்க.

இனி, அண்மையிலிருந்த வடநாட்டு அறிஞர் பலரும் தென்னிந்திய மொழிகளைத் திராவிடமொழிகள் என்றே குறிப்பிட்டு வந்துள்ளார். இந்திமொழிநூலறிஞரான பாபு இராஜேந்திரலால் மித்ரா என்பார், 1854-ஆம் ஆண்டில், "திராவிடி" என்பது மூலபாகதங்களில் ஒன்றே யென்றும், சௌரசேனியுடன் அஃது ஒருங்கு சேர்த்தெண்ணற் குரியதென்றும், அது சௌரசேனியைப்போன்றே பிற பல உண்ணாட்டு மொழிகளுக்குத் தாய்மொழியென்றும், நன்கெடுத்து நவின்றுள்ளார்.

இதுகாறுங் கூறியவற்றால் "தமிழ்" என்பதைத் தமிழ் மொழியொன்றிற்கே சிறப்பாக அமைந்த பெயராகக்கொண்டு தென்னாட்டில் வழங்கும் தமிழுந் தெலுங்குமுள்ளிட்ட பல மொழிகளையுங் குறிக்கும் இனமொழியாக "திராவிடம்" என்பது பரந்துபட்டபொருளில் கொள்ளக்கிடப்பது காலங் கண்டதொன்றாகும் என்பது ஒருவாறு விளக்கப்பட்டது.

(தொடரும்)

1942-ம் ஆண்டில் ஆறாவது, அல்லது, ஏழாவது வகுப்பிற் படிக்குந் தமிழ் மாணவர் இருவர் பேச்சு

"தில்குஷ்" எழுதுவது

தங்கவேல் எனும் பெயருடைய மாணவன் ஒருநாள் காலையிலெழுந்து குளித்து உணவருந்தியபின், ஒவ்வொன்றாகத் தன் பாடங்களைப் படிக்கிறான். ஹிந்திப் பாடம் படிக்கத் தொடங்கும்பொழுது, அடுத்த தெருவிலே ஒருநாள் தான் கேட்ட பாட்டு ஒன்று அவனுடைய நினைவிற்கு வருகிறது. பாடுகிறான் :—

"க்யா கர்ணு வாலா
என்ன செய்யப் போறேன்
க்யா கர்ணு வாலா—

யானைப் பேர் ஹாத்தி—குதிரைப் பேர் கோடா
தல்வார்ப் பேர் வாள்—இந்த-பூனைப் பேர் பில்லி,

—க்யா கர்ணு வாலா"

பாடியபின் நினைவிலாழ்ந்து, "இது என்னடா சங்கடம்? யானைக்கு ஹாத்தி. குதிரைக்குக் கோடா, வாளுக்குத் தல்வார், பூனைக்குப் பில்லி, இதை எல்லாம் திருப்பித் திருப்பிப் படித்தாலும் ஞாபகம் இருக்கிறதில்லை. ஞாபகத்துக்கு என்ன ஹிந்தி? (தலையைச் சொரிகிறான்) நேற்றுத் தான் பார்த்தேன், இன்று மறந்து விட்டேன். (ஹிந்திப் புஸ்தகத்தைப் பார்க்கிறான்). இதோ இருக்கிறது. ஞாபகத்திற்கு ஹிந்தி. 'யாத்' "யாத் ரக்' என்றால் 'ஞாபகம் வை'. இந்த இழவை எல்லாம் எப்படி 'யாத் ரக்'கிறது?"

'யாத் ரக்' என்று தங்கவேல் சொல்லிக்கொள்ளும் பொழுது அவனுடைய தோழனான கார்த்திகேயன், "யாத்ரக், புல்மத், தங்கவேல்".

தங்கவேல் "ஓ கார்த்திகேயா, ஆவ், பைட்டோ (வா, உட்கார்)" 'புல்மத்' என்றால் என்ன? நீ சொல்ல வேண்டாம். நானே கண்டுபிடிக்கிறேன். தெரியும் இப்பொழுது யாத் வருகிறது. 'புல்மத்' என்றால், மறந்துவிடாதே. ஆமா, 'யாத்ரக், புல்மத்'; அச்சா—நல்லது."

கார்த்திகேயன், "பஹுத் அச்சா—ரொம்ப நல்லது—வெரி குட் (Very good)"

தங்கவேல், "இங்கிலிஷ் மேம்பாத்மத்கர் (இங்கிலிஷில் பேசாதே) நேற்று ஒருசங்கதி நடந்தது—சுனோ—கேள். நீ வரவில்லையே கல் (நேற்று). ஹிந்தியில் 'பாட்சாலா' என்று வாசிக்கவேண்டியதைத் தமிழ் ஞாபகத்தால் 'பாட சாலா' என்று படித்துவிட்டேன். அந்த அத்யாபக்குக்கு (உபாத்தியாயருக்கு) Anger—no—கோபம் வந்தது. இந்த இங்கிலிஷ் ஒரு இழவு—தமிழிலே பேசப் போனால் ஹிந்தி—ஹிந்தியிலே சொல்லப்போனால் இங்கிலிஷ், பெரிய சனியனாய்ப் போய்விட்டது."

கார்த்திகேயன், "(ட்) டீக் பாத் ஹை (சரியான பேச்சு). கல்க்யா? (நேற்று என்ன?)"

தங்கவேல், 'பாட சாலா' என்று படித்ததும் அத்யாபக் என்னைச் சீறிப் பார்த்து, 'க்யா தமில் பட்தா?' (என்ன தமிழ் படிக்கிறாயா? என்றுகேட்டார். நான் அவரைப் பார்த்து, (தமில் என்று சொல்லுகிறீர்களே, அது தவறு. இவ்வளவு எங்களோடு பழகியும் தமிழ் என்று தங்களுக்குச் சொல்ல முடியவில்லையே,' என்றேன். அவருக்குக்

கோபம் இன்னும் அதிகமாகி, ‘சுவர், பைட், (பன்றியே, உட்கார்) என்றார். ‘நானா சுவர்?’ என்று கேட்டேன். ‘நீனா சுவர்’ என்றார். பிள்ளைகள் சிறிது சிரித்து விட்டார்கள். எல்லாம் ‘குட்டிச்சுவர்’ என்று நான் சொல்லி விட்டு உட்கார்ந்தேன். அவருக்கு அப்பொழுதுவந்த க்ரோத் (கோபம்) சொல்ல முடியாது. என்னை அடிக்க வந்துவிட்டார். நான் ஓடிப்போய்த் தலைமை உபாத்தியாயருக்குச் சொல்லி விட்டேன். ஆஜ் (இன்று) அது விசாரணை. பள்ளிக்கூடத்திற்கு முன்னதாகவே போக வேண்டும் ஆவ், (ச்) சலேங்கே (வா, போகலாம்)”

கார்த்திகேயன், “அரே, அரே, க்யா தமாஷா?”

தங்கவேலும் கார்த்திகேயனும் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்கள். தங்கவேல் பாடுகிறான் :—

“வீட்டுப் பேர் கர்
திருடன் பேர் சோர்
முட்டைப் பேர் அண்டா
இது வென்னடா தண்டா.

—க்யா கர்னா வாலா”

கொடிது! கொடிது!!

நம் தாய்மொழிப் பயிற்சி சிறிதுஞ் செவ்வனே நடைபெறா இக்காளில், அரசினர் உதவியால் ஆங்கில மொழிப் பயிற்சி எங்கும் பரவிக்கிடக்கும் இந்நாளில், இறந்துபட்ட வடமொழியினையும் வடநாட்டவர் வழங்கும் இந்தி மொழியினையும் பயில்கவென்று கூக்குரலிடுவோர் தொகை பெருகும் இந்நாளில், வங்காளம் தெலுங்கு மலையாளம் முதலான மொழிகட்கு உரியோர் புகழத்தக்க முறையில் தத்தம் மொழிப்பயிற்சியினைப் பெருகச் செய்தற் பொருட்டு அவ்வம் மொழிகளிற் பல்கலைக் கழகங்கள் நிறப்பித்தவரும் இந்நாளில், நம் தமிழ்நாட்டுச் செல்வர்கள் மட்டும் நம் தமிழ்நாட்டவர் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததான தமிழ்மொழிப் பயிற்சிக்குச் செலவிடாமற் பிறமொழிப் பயிற்சிக்குச் செலவிடுதல் ஐயகோ! கொடிது! கொடிது!!

—மறைமலையடிகள்.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

புதுக்கவி

என்னருமைத் தமிழர்களே!

1. எழுந்து வாரீர்

என்னருமைத் தமிழர்களே, யினிது வாரீர்!
எல்லாரும் ஒருகுலமா யிணைந்து வாழ்வோம்!
புன்னினைவும், புல்லடிமைத் தொண்டுஞ் சூது
பொறாமைகளுஞ் சாதிமதப் பொருபொருப்பும்
தன்னலமுந் தவிர்த்தெல்லா மனமுமொன்றித்
தன்னறிவுக் கடவுளையே சார்ந்து வாழ்வோம்!
முன்னேறு முலகின்முன் னணி வகிப்போம்,
முயற்சியணிந் தெழுந்திருமின், உறுதிகொண்டே!

2. செல்வத் தமிழீர்

என்னில்லம் விளக்கெரியத் தீயிரந்தால்,
'ஏன்மூடா' வென்னாரோ வுலகோர்? சொக்குப்
பொன்னிருக்கப் புதைந்துள்ளே, பிறர்பால் ஐயம்
புகுவாரோ? புகலிருக்கப் புறம்போவாரோ?
அன்னையுமை யழைக்கின்றாள் அமுதமேந்தி;
அருளடியார் இசைக்கின்றார் ஆர்வங்கூறி;
உன்னரிய நாகரிகம் ஒளிரப் பெற்றும்
உறங்குதிரோ தமிழர்களே, யுண்மை காணீர்!

3. தமிழர் பழம்புகழ்

முன்னாளில் உலகமெலாங் கப்ப லூர்ந்தோம்;
முச்சங்கக் கலை வளர்த்தோம்; தொழில்வளத்தாற்
பொன்னாறு நாட்டினிலே பொங்க வைத்தோம்;
புவியரசர், கவியரசர், புலனை வென்ற
தன்மயமாந் தவத்தரசர், தறுகண் வீரர்,
தனையுங்கற் பரசிகளுந் தழைக்க வாழ்ந்தோம்!
அன்னபுகழ் இந்நாளும் அடைய வல்லோம்;
அயராம லெழுந்திடுமின் அருட்பணிக்கே!

4. தமிழ்ச் செல்வம்

தங்கமணிப் படுகையிலே முத்திறைத்துத்
தவழமுத வெள்ளமென நடைகுலுங்குஞ்
சங்கமணிச் செல்வங்கள் மல்கு நாட்டீர்,
தமிழ்மறையைப் புலிக்கிந்த செந்நாப் போதர்,
துங்கமணிக் கவியரசன் கம்பன், செவ்வி
துலங்குமிளங் கோவடிகள் சொல்லை யுண்ட
சிங்கமணித் தமிழர்காள், கலைபினுச்சிச்
சிகரத்திற் செயக்கொடியை நாட்ட வாரீர்!

5. தமிழ்ப் புரவலர் இசை

வீரமுர சணை யுறங்கு மோசுகிரன்
விழிக்கும்வரை வெண்கவரி வீசிநின்றான்
சேரலிரும் பொறை, யரிசிற் கிழார்வாய் வந்த
செழுந்தமிழுக் கரியணையைப் பரிசி லீந்தான்!
பாரியொரு முல்லைக்குத் தேரை யீந்தான்
பரிசிலீந் திளந்திரையன் பாடல் பெற்றான்.
கோரிவந்த புலவனுக்குத் தலைகொடுக்கக்
குறித்தகும ணன்கொடையின் கொற்ற மென்னே?

6. இளஞ்சிங்கங்காள்!

முக்கனியின் முத்தமிழைச் சுவைத்தறிந்து,
மூவேந்தர் முற்காலம் போற்றி னார்கள்.
இத்ததிநந் தமிழ்வருந்து மிடர்கள் கோடி.
எழுந்திருங்கள் விரைவுடனே யிளஞ்சிங் கங்காள்!
புத்தமுத வெள்ளம்போல் அன்பு பாய்ச்சிப்
புகழேறிப் புதுமலர்கள் பூத்துக் காய்க்க
நித்தமிந்த தமிழ்ப்பயிரை நினைவாய்க் காப்போம்!
நீடோங்கித் தமிழ்மரபு நிலவ மாதோ!

7. தமிழர் போர் வீரம்

கடற்படைகொண் டிலங்கைவென்று, தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரைவென்று,
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை யிமயமேற்றி,
அடற்கரிய தமிழ்வீரப் படையான், பொன்னி
யணைகட்ட மன்னர்பணி கொண்ட மன்னன்
சுடர்மணிப்பூம் புகாராண்ட கரிகாற் சோழன்
றுலங்கியநன் னுடிதித்த சூரச் சேய்காள்!

8. தமிழர் வெற்றி

கன்னகிக்குப் பத்தினிக்கற் கொணரப் போந்தோன்
　　கனகவிச யர்செருக்கைக் கடிந்து போரில்,
விண்ணெட்ட வெற்றிமுர சொலித்த நாட்டீர்,
　　வியன்கடாரப் படையூர்ந் திராசராசன்
கண்ணெட்டு நாடெல்லாங் கைக்கொண்டான்.
　　கலைச்சாலை, அறச்சாலை, கவின்செய்கோயில்
விண்ணெட்டப் புகழ்விளங்கச் செய்தான்; அன்னான்
　　வெற்றிநினைந் தாவேசம் பெற்றுவாரீர்!

9. தமிழ் வேந்தர்

தொக்கெழுவர் பெரும்படைப்போர் தொடுக்க நக்குத்
　　துரும்பென்ன மதித்தவரைத் தலையாலங் கான்,
எக்கிமடித் தெமனுக்கே விருந்தளித்தான்,
　　இளம்வீர னெடுஞ் செழியன். இமயமீதே,
உக்கிரபாண் டியன்மீனக் கொடியுயர்த்தான்.
　　உலகுபுகழ் அனிபாலன், அகுஸ்தன், ஸீஸர்
சிக்கந்தர், செமிராமி, தெரயஸ் தம்மிற்
　　சிறந்திடுநல் லறவேந்தர் செழித்த நாட்டீர்!

10. வேந்தர் அறவுணர்ச்சி

குற்றமிலாக் கோவலனைக் கொன்றேன், செங்கோல்
　　கோடியதென் றுயிர்விட்டான் செழியர்கோமான்!
கற்றறிபார்ப் பான்மனையைக் காத்த மாறன்
　　கதவிடித்த பிழைக்காகக் கைகுறைத்தான்,
கொற்றத்தேர்க் காலிலொரு கன்று சாகக்
　　குமரனையே அனபாயன் பலிகொடுத்தான்.
பொற்றிருவா ராய்ச்சிமணி புலம்ப நீதி
　　புரிந்ததமிழ் வேந்தர்புகழ் புகலப் போமோ?

11. தமிழ்ப் பெண்டிர்

கண்ணனலால் வேளெரித்தான் கையிலை யாளி.
　　கற்பனலாற் கண்ணகியோர் நகரெரித்தாள்;
ஒண்மணிச்சேய் போர்க்குடைந்தால், உண்டமார்பை
　　உடனறுப்பே னென்றுளோர் தமிழ்வீரத் தாய்!
கண்ணனைக்கா தற்கனலாற் கலந்தாள் கோதை;
　　காசினிக்கே யறமளித்தாள் கலைதேர் ஔவை.
அண்ணமுருக் கிசைபிழிந்தாள் காரை யம்மை
　　இனியதமிழ்ப் பெண்ணமுதின் இயல்பைக்கேளீர்!

12. தமிழர் பொதுநோக்கு

நந்தனார், திருப்பாணர், நம்பு சாம்பன்,
நன்முத்தி பெற்றகதை நாடுசொல்லும்.
அந்தணார் அறவோரே யென்னுங் கொள்கை
அன்புசிவம், அன்பு மத மென்னு முண்மை,
தந்ததமிழ் மரபினரே, தவழ்ந் தருட்பா
சமதருமப் பயிர்வளர்க்குந் தவநாட்டீரே,
எந்தமதச் சாதியிறு மாப்பு மிங்கே
இல்லாமல் உள்ளொன்றி யினிது வாழ்வோம்!

13. தமிழர் அஞ்சாநெஞ்சம்

நெற்றிக்கண் காட்டிடினுங் குற்ற மென்ற,
நிகரில்லா நக்கீரர் நிலவு நாட்டீர்!
கொற்றசிவ னடிக்கல்லாற் குனியோ மியார்க்குங்
குடியல்லோம் கூற்றஞ்சோம் எனுஞ்சொற்கோனைப்
பெற்றதமிழ் நாட்டீர்காள், பிள்ளை ஞானப்
பெரியமறை பாடி-தமிழ்ப் பெருமை நாட்டக்
கற்றதமிழ் நாட்டீர்காள், கலங்கா துள்ளம்
கடமையினைப் போற்றிடுவோம். கடவுள் காப்பே!

14. தமிழர், ஆண்மை

இன்னமுதத் தமிழர்களே யிசைந்து வாரீர்,
ஏங்காம லேமாந்து தூங்கிடாமல்,
உன்னதமாய்த் தலைநிமிர்ந்து நடப்போ மிந்த
வுலகினிலே பிறநாட்டார் உழைப்பா லுற்ற
மன்னிசையை நாமடைய மயக்கமேனோ?
மனிதனியற் றியதையொரு மனிதன் செய்வான்.
அன்னைவெறி பிடித்திடுமின் ஆண்மை கொண்டோர்
அடைவார்கள் வெற்றியிதி லைய முண்டோ?

15. வேற்றுமை யொழிமின்

சாதிமதச் சச்சரவை யொழித்தி டுங்கள்!
சகிப்புடனே சமரசமும் போற்றிடுங்கள்!
பேதபுத்தி விலக்கிடுங்கள். பெண்ணாண் கண்போற்
பிரியாது நல்லறிவைப் பெற்றிடுங்கள்!
ஆதிபரா பரன்கோயில் அவனியெல்லாம்.
அவன்சக்தி விளையாட்டே யகில வாழ்க்கை.
வேதமெலாந் தன்னறிவின் விளக்க மென்றே,
விஞ்ஞானத் தாலறிந்து விளங்கீர் மாதோ!

16. தமிழீர், ஒற்றுமை!

கயிர்திரித்துத் தன்கழுத்தில் மாட்டிக்கொண்டே,
　　கதறுகின்ற பேதையைப்போற் காயவாழ்வின்
உயர்நலத்தை யுணராம லுமக்கே கேடாம்
　　ஊறுகளைச் செய்யாதீர்; உலகனேகம்;
பெயர்வடிவச் சாயத்தைப் பெரிது பண்ணிப்
　　பிரிவினையாம் வஞ்சப்பேய்க் கிடந்தராதீர்!
உயிர்க்குயிரா மொருபொருளை யுள்ளுணர்ந்தே.
　　ஒற்றுமையாய் வாழ்ந்திடவே கற்றார் மேலோர்!

17. தமிழகம்—கோயில்

பண்பரவுந் தமிழகமே நமது கோயில்.
　　பார்க்குமுயிர் நம்முயிராம்; பார்வாழ் வெல்லாம்
விண்பரவத் தமிழ்வெற்றிக் கொடிபிடித்து,
　　வினைவேள்வி செய்திடவே விளைந்த தென்போம்!
கண்பரவுந் திசையெல்லாங் கல்வி, செல்வங்
　　கலை, தொழில், வாணிபம்பெருகக் கருத்துவைப்போம்.
தன்கடந்து தமிழ்வேத முரசமார்க்கத்
　　தலைநிமிர்ந்து வாருமினோ தமிழ்நாட்டீரே!

18. வாழும் வகை!

தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில்,
　　தாய்நாட்டுத் தொழில்களெலாந் தனயர்கையில்;
தமிழர்வாணிபமெல்லாந் தமிழர் கையில்;
　　தமிழ்த்துறையி லியங்குவது தமிழர் கப்பல்;
தமிழ்ச்சமு தாயப்பணியுந் தமிழர் கூட்டால்;
　　தமிழ்நாடு தமிழர்க்கே; தமிழர் சேமந்
தமிழர்களின் ஒற்றுமையே; தமிழர் பேச்சு
　　தனித்தமிழே யெனில் வாழ்வு தழைப்பதாமே!

19. பிறநாட்டைப்போல் முன்னேறுக!

சப்பானுஞ் செர்மனியு மிங்கிலாந்தும்,
　　சமதர்ம ரஷியாவும், அமெரிக்காவும்
இப்படியே முயற்சியினால் இசைபெற்றோங்கும்
　　இயல்பறிந்தும் இழிநிலையி லுறங்குவீரோ,
ஒப்பில்லாக் கலைபயில்வோம்; புலவரோங்க
　　வுரிமைதொழில் வாணிபத்தாற் குபேர ராவோம்;
இப்பாரி லிணையில்லா நாட்டா ரென்றே
　　யிசைபெறுவோந் தமிழர்களே யிசைந்து வாரீர்!

20. தமிழ்த்தவ சக்தி

ஆவியினு மரியதமி ழன்பீர், வாரீர்
ஆர்வத்தா லற்புதங்க ளுலகிற் செய்வோம்!
தேவாதி தேவர்களுந் தமிழே பேசச்
செய்திடுவோம்; விண்ணரசைத் திகழவைப்போம்!
சிவனிலே பேரின்பச் சிலிர்ப்பைக் காண்போம்;
செந்தமிழே முத்தினில சேர்க்குமென்போம்,
யாவர்க்கு மரியதவ சக்திக் காந்தம்
அனல்வீசுந் தமிழகத்தைப் போற்றி செய்வாம்!

21. தமிழர் பெருமை

தனக்கியல்பாம் பெருமையினைத் தானறிந்து,
தன்னகத்துத் தவக்கனலைத் தான் வளர்த்தே,
எனக்குனக்கென் றில்லாம லெல்லாம் மொன்றாய்
இயல்வளத்தைப் பகுத்துண்ணும் இல்லந் தாங்கி,
மனக்கினிய கல்விசெல்வ மல்கி வாழ்வு
வளமோங்கி யுலகிற்கு வன்றொண்டாற்றி,
இனிக்குமொழி தமிழென்னு மேற்ற மோங்கி
யின்புறுவோ மன்பிறைவ னருள்க மாதோ!

—புதுவை சுத்தானந்த பாரதி

தாயைப் போற்றுங்கள்!

[ராகம்—நாதநாமக்கிரியை; ஆதி தாளம்]

தாயைப் போற்றுங்கள்—நந்தமிழ்த்
தாயைப் போற்றுங்கள்—பைந்தமிழ்த்—தாயைப்

தூய தொன் மொழி தொட்டிலில் யாம் கற்ற
நேய நன் மொழி நித்திய வான் மொழித்—தாயைப்

1. மண்ணிற் றலைசிறந்த வான்கவி கம்பர்
மக்களறம் வகுத்த வள்ளுவத் தேவர்
ஒண்மணி வாசகர் கண்மணி வள்ளலார்
உத்தமராகிய இத்தகை யோர்க் குற்ற—தாயைப்

2. தேவர் விருப்புறு மூவர் மெய்ஞ் ஞானத்
தேற்றந் தருந்தாயு மானவர் தொண்டர் ;
யாவருக்குந் தலையாய கிழார், சங்கம்
ஏவிய கீரர்இப் பாவலரைத் தந்த—தாயைப்

3. பொய் கொண்ட பூமியில் மெய்கண்ட தேசிகர்
புங்கவர் வான்திரு மந்திரந் தந்தவர்
வைகுண்டங் காட்டிய வான்சட கோபர்
மன்குல சேகரர், இன்னவரைப் பெற்ற—தாயைப்

4. மற்றை மொழிகளைப் போல் மாள்வதோ நம் மொழி
மற்றெம் மொழிகட்கும் ஆதியாம் பொன் மொழி
இற்றைக்கும் பேசுவார்க் கின்பந் தருந் தமிழை
இந்தி மொழி யுதைந்து பிந்தித் தள்ளாமல்—தாயைப்.

—தி. இலக்குமண பிள்ளை, பி.ஏ.,

[கிளிக்கண்ணி மெட்டு]

1. தந்தி முகக் கடவுள் தம்பி குகக் கடவுள்
முந்திடும் மந்திரத்தைச்—சிவன் பால்
மொழிந்த சொல் பசுந்தமிழே.

2. பலன் பெற்றவர் சரிதம் பாடிடுஞ் சேக்கிழார்க்கு
உலகெலா மென வெடுத்தர்—சிவனர்
உதவிய சொல் தமிழே.

3. கற்பு நடன மிடுங் காரைக்கா லம்மை யாரின்
அற்புதப் பாடலெல்லாம்—சிவனர்
அணியும்பூந் தமிழ் மொழியே.

4. வருடத்துக் கோர் கவி வழுத்திய திருமூலர்
திருமந்திரம் மூவாயிரம்—அதுவும்
தீஞ்சுவைத் தமிழ் மொழியே.

5. தொழுதிடுஞ் சேரனுக்குத்தொண்டனிடங் கொடுக்க
வழுவிலாத் திருமுகமும்—சிவனர்
வரைந்ததுந் தமிழ் மொழியே.

6. நாடிய பொருள்பெற நல்லதருமி யிடம்
பாடியே தானீந்த—சிவனர்
பாசுரம் பசுந் தமிழே.

7. சுகப்படும் அறுபது சூத்திரமாகவே
அகப்பொருளிலக்கணத்தை—சிவனர்
அருளின மொழி தமிழே.

8. வளம் பெறும் வாதவூர் மாணிக்க வாசகர்
விளம்பினர் தமிழ்க் கோவை—சிவனர்
விரும்பினர் தானெழுதத்.

9. அவனிபுகழ் தென்னாட்டுக் காதரவாய், மெய் கண்டார்
சிவஞான போதமெனும்—ஒருநூல்
செய்ததுந் தமிழ் மொழியே.

10. மடத்தினுமாபதியார் மதித்திடப் பெற்று விடங்
கொடுத்த மெய்ச் சிட்டுக் கவி—சிவனர்
குறித்ததுந் தமிழ் மொழியே.

11. வற்றிய இந்தி மொழி வாய்க்கா லசுத்தப் புனல்
நற்றமிழ்ச் சுவை நீர் போல்—நமது
நாவினி லினியாதே.

[தேயிலைத் தோட்டத்திலே என்றமெட்டு]

1. செந்தமிழ்த் தொண்டர்களே! நமது
தேசத்துக்கே பெரு மோசத்தைச் செய்திட
வந்திடும் இந்தியுடன்—நேரில்
வாது செய்விர்களே தீது வராமலே—செந்தமிழ்

2. சுகம் பெறும் மக்கட் கெல்லாம்—தமிழ்ச்
சொன்னயச் சோறூட்டும் அன்னை வருந்தாமல்
பகையை யொழிப்பீர்களே—சோம்பிப்
படுத்துறங் காது விழித்தெழுவீர்களே—செந்தமிழ்

3. தக்க பெருங் கதையை—மதத்
தந்தி முகன் கொம்பால் முந்தி வரைந்ததும்
அக்கரையோ டானர்—அன்பா
யமுதவர் பாசுரம் எழுதிடப் பெற்றதும்,

4. அருள் நிறை சம்பந்தரால்—எலும்
பானது பெண்ணுரு வானதுவும் முன்னம்
திருமறைக் காட்டினிலே—மிகச்
சிறந்த கதவந் திறந்ததுவும், அஞ்சும்.

தமிழர் கழகம்

இதன் தலைமை யாட்சிக்குழு சென்னையில் பவளக்காரத் தெரு 147 எண்ணுள்ள கட்டிடத்தில் நிறுவப்பெற்றுள்ளது. இதற்குத் தலைவர் திருவாளர் S. சோமசுந்தர பாரதியாரவர்கள், எம்.ஏ., பி.எல். இதன் அமைச்சர்கள் (க) திரு. P. S. மாணிக்கவாசக முதலியாரவர்கள் (2) திரு. சங்கரலிங்க முதலியாரவர்கள்.

இதற்கு உறுப்பினர் ஆண்டுக் கட்டணம் அணா 4.

தத்தம் ஊர்களில் "தமிழர் கழகம்" அமைக்க விரும்புகிறவர்கள் சென்னைத் தலைமையாட்சிக் குழுவுக்கு எழுதி விதிப்புத்தகம், பணப்பற்றுச் சீட்டு, உறுதிமொழிச் சீட்டு இவற்றைப் பெற்றுக் கழகங்களை நிறுவுவார்களாக.

தமிழ்மொழி யாக்கத்திற்கும், இந்தி எதிர்ப்புக்கும், தமிழர் முன்னேற்றத்துக்கும் வெவ்வேறு பெயர்களில் அமைக்கப்பெற்ற சங்கத்தினர்களெல்லாம், 'தமிழர் கழகம்' என அமைத்து இதன் நோக்கங்களைப் பரப்பித் தொண்டு புரிவார்களாக!

கழக நோக்கங்கள் வருமாறு:—

(1) பிறப்பு, கொள்கை முதலிய எத்தகைய வேறுபாடும் பாராமல் தமிழர்களுடைய பொதுநல முன்னேற்றம் ஒன்றே கருதியுழைத்தல்,

(2) தமிழ்நாட்டைத் தனி மாகாணமாகப் பிரிக்கச்செய்தல்,

(3) தமிழ்நாட்டில் அரசியற்றுறை முதலிய பொதுத்துறைகள் எல்லாவற்றிலும் தமிழே வழங்கிவருமாறு செய்தல்,

(4) எல்லாத் துறைகளிலும் தமிழர் தம் உரிமைகள் யாவற்றையும் ஏற்றவாறு பெற உழைத்தல்,

(5) தமிழ் மொழியின் தூய்மை வளர்ச்சிக்கு நேரும் இடையூறுகள் யாவற்றையும் அவ்வப்போது கண்டெரிந்து மொழிப் பெருமையைப் பாதுகாக்க உழைத்தல்.

(6) தமிழ்நாட்டில் தொடக்கக் கல்விமுதல் பல்கலைக் கழகக் கல்வி முடிய தமிழ் மொழியைக் கட்டாய பாடமாக்கி அம்மொழியிலேயே பாடங்கள் அமைத்துப் பயிற்சிபெறச் செய்தல்,

(7) தமிழில் இக்காலத்துக்கு வேண்டிய உலகியல், அறிவியல் நூல்களை எழுதுவிக்கச் செய்வதாலும் பிறமொழியிலுள்ள உயரிய நூல்களை மொழி பெயர்ப்பதாலும் மொழியின் தூய்மை நிலைத்து அதன் பெருமை மேலும் மேலும் ஓங்கி விளங்கச்செய்தல்,

(8) தமிழ்நாட்டில் தமிழைத்தவிர ஏனைய மொழிகளைக் கட்டாய பாடமாக்குதலைத் தடுத்தல்,

(9) ஊர்கள்தோறும் தமிழ்த் தொண்டர் படை ஒன்றுதிரட்டல்.

அருட்பெருஞ்ஜோதி

சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் சார்பில் 5-10-'37-ல் தொண்டமண்டலம் கல்விச்சாலையில் நடைபெற்ற ஸ்ரீமத் இராமலிங்க

சுவாமிகள் 115-வது பிறந்தநாள் விழாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் S. சோமசுந்தர பாரதியார், M. A., B. L., அவர்கள் தலைமையில் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மோசூர். கந்தசாமி முதலியார் B. A., M. R. A. S. அவர்கள் 'வள்ளலாரது தமிழ்ப்பற்று' என்பது பொருளாகப் பேசியபின்பு சபையினரால் அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப் பட்டன. வந்திருந்தவர்கள் 2000-க்கு மேல் இருக்கும்.

1. இந்தப் பொதுக்கூட்டமானது தெய்வங்கள் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கும் கொடிய பழக்கம் நாகரிக மதத்தின் அடிப் படையான கொள்கைக்கு மாறாக இருத்தலின் அதனை நிறுத்தவேண்டு மென்று கோயில் தருமகர்த்தர்களையும் அந்தத் தெய்வங்களை வழிபடு வோர்களையும் கேட்டுக்கொள்கின்றது.

2. உயிரிரக்கம் என்னும் சீரியகொள்கையினைத் தினசரி வாழ்க் கையில் பழகுவதற்கு உதவியாக இருக்கும்படி வட இந்தியாவிலுள்ள மச்சப் பிராமணர்களும் தென்னிந்தியாவில் சில பாகங்களில் தேவி உபாசனை செய்யும் பார்ப்பனர்களும் மரக்கறி உணவல்லாதனவற்றை விலக்கிவிடும்படி கேட்டுக்கொள்கின்றது.

3. கடவுள் உண்மையாகவே உண்டு என்ற கொள்கையை யுடைய மதங்களின் அறிவுக்குப்' பொருந்துகின்ற கருத்துக்களுக்கு மாறாக இருத்தலின் 'யாகங்கள் என்று கூறப்படுவனவற்றின் பெய ரால் உயிர்க்கொலை செய்துவந்த பழைய வழக்கத்தை இப்போது புதுப்பித்துவரும் பார்ப்பனர் செய்கையதனைப் பெரிதும் கண்டிக் கிறது.

4. பொதுமக்களை மரக்கறி உணவுப் பழக்க வாழ்க்கையில் மேலிடச்செய்யும் நோக்கத்துடன் சென்னை முனிசிபாலிடியார்கள் வாரத்தில் சில நாட்களாவது 'மரக்கறி உணவு நாட்கள்' என்று கொள்ளவேண்டும் என்றும், ஆட்டுத்தொட்டிகளில் உயிர்களைக் கொல் லுவதைத் தடுக்கவேண்டும் என்றும் வேண்டுகிறது.

5 கடைசியாக இந்தப் பொதுக்கூட்டமானது இந்திமொழி யைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாகப் புகுத்துவது திரா விடருடைய பாஷைகளுக்கும், அறிவுநூல் வளர்ச்சிக்கும் கேடுறி விளைக்குமாதலின் மிக்கவல்லமையுடன் கண்டிக்கிறது.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி

தனித்தமிழ்த் தேர்வுகளின் தேர்ச்சி அறிக்கை

1924-ம் யாண்டு நிறுவப்பெற்று ஆண்டுதோறும் தமிழ்த் தேர்வு கள் நடத்தித் தேர்ச்சியிதழ் பரிசு முதலியன வழங்கும் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வுகள், நானது 1937-ம் யாண்டு ஜூலை 28, 29, 30 (மெய்கண்டான் யாண்டு ஆடித் திங்கள் ௰௩, ௰௪, ௰௫) புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் திருநெல்வேலி, ஆரணி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று தலைநகர்களிலும் நடைபெற்றன. இளந்தமிழ்ப் புலவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் நால்வர், எழுதிய

வர் நால்வர், தேர்ந்தவர் இருவர். தமிழ்த் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் நால்வர், எழுதியவர் நால்வர். தேர்ந்தவர் மூவர், விபரம் அடியிற் காட்டப்பட்டுள்ளது. தமிழ்த் தேர்வுகட்கு எழுதுகின்ற மாணவர்கள் தங்கள் பாட நூல்களிற் குறையாத பயிற்சி யுடையவராயிருந்தாலே நல்ல தேர்ச்சி யமிசம் பெற்றுப் பரிசு முதலியன பெறுதற்குரியராவர். தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப்பயிற்சி விருப்புடையார் யாவரும் பாடமுறைகளைப் பயின்று தேர்ச்சிபெற்றுச் சிறக்க வேண்டுகின்றோம். குறித்த தேர்வுகளை நடத்தித்தந்த பெரியார்கட்கும் வினாத்தாள் குறித்தும் விடைத்தாள் திருத்தும் உதவிபுரிந்த இச்சங்கப் புலவர் குழு உறுப்பினர்கள் முதலிய அறிஞர்கட்கும் இச்சங்கத்தின் நன்றி யறிதலை யறிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ்த்தேர்வு

மூன்றும் வகுப்பு

1. திரு. D. மாணிக்கம், திரு. K. தெய்வசிகாமணி உடையார் மகன், பதிவெண் 145, குண்ணத்தூர், ஆரணி, வடஆற்காடு ஜில்லா.

2. திரு. இ. வே. கோவிந்தராஜு முதலியார், திரு. வேலாயுத முதலியார் மகன், பதிவெண் 144, காமக்கூர், களம்பூர் போஸ்டு, ஆரணி, வடஆற்காடு ஜில்லா.

3. திரு. அனந்தகிருஷ்ணப் பெருமாள், திரு. பாவநாச நாடார் மகன். பதிவெண் 150, புங்கம்பட்டி, கடையம் போஸ்டு, அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி ஜில்லா.

இளந்தமிழ்ப் புலவர்

மூன்றும் வகுப்பு

4. திரு. க. ச. ஆனந்தம், திரு. ச. முத்தையா மகன். பதிவெண் 147, ஆசிரியர் இணுவில் கிழக்கு, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

5. திரு. க. சிற்றம்பலம், திரு. க. சந்திரசேகரப் பிள்ளை (காப்பாளர்) பதிவெண் 148, ஆசிரியர், இணுவில் கிழக்கு, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி,
7—11—1937

பு. சி. புன்னைவனநாதன்,
அமைச்சர்.

சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மாநாடு

திருச்சியில் மாகாண தமிழர் மாநாடு நடத்துவது பற்றி முடிவு செய்வதற்காகத் திருச்சி இராம மந்திரம் கட்டிடத்தில் 31-10-'37 மாலை 7 மணிக்குத் தமிழ்மக்கள் பொதுக்கூட்டம் திருவாளர் ராவ் சாஹிப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்தது. கூட்டத்திற்கு மதுரை மீனாட்சி மில் மானேஜிங் டைரெக்டர்

திரு. கரு. முத்து. தியாகராய செட்டியாரவர்கள், டாக்டர். சொக்க லிங்கம், ஈ. வே. இராமசாமி நாயக்கர் முதலிய நூறு பெருமக்கள் வந்திருந்தனர்.

சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மாநாட்டை 1937 டிசம்பர் கடைசிக் கிழமையில், திருச்சியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் திரு S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையில் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

இறையருளால் மாநாடு சிறப்பாக நடைபெற்றுத் தமிழ்மொழிக்கும் தமிழ் மக்கட்கும் ஆக்க முண்டாகுக.

காலஞ்சென்ற T. B. கிருஷ்ணசாமி முதலியா ரவர்கள், எம். ஏ., பி. எல்.

திரு. முதலியா ரவர்கள் 16-10-37-ல் அனந்தபூரில் நெஞ்சு நோயினால் காலஞ்சென்ற துயரமான செய்தியினைக் கேட்டுப் பெரிதும் வருந்தினோம். சென்னை மாகாணம் சிறந்த அறிஞர் ஒருவரை இழந்தது; தமிழ்த்தாய் சிறந்த ஒரு தமிழ்ப்புதல்வனை இழந்தனள். திரு. முதலியா ரவர்கள் ஆங்கில இலக்கியங்களைத் துறைபோகக் கற்றவர். ஆங்கிலத்தில் எதைப்பற்றி எழுதினாலும் பேசினாலும் தட்டுத் தடையில்லாமல் எழுதவும் பேசவும் செய்வர். ஆங்கிலத்தில் பல அரிய செய்யுட்கள் இயற்றியுள்ளார்கள். தமிழ், ஆங்கிலம், இலத்தின், கிரீக், பிரஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் பயின்றவர். இவர்களிடம் அரிய நூல்களடங்கிய பெரிய நூல்நிலைய மொன்றுண்டு. இவர்கள் தமது அரிய நேரத்தை நூல்களை ஆராய்வதிலேயே கழித்துவந்தனர்.

இவர்கள் சென்னைக் கிறித்தவ கலாசாலையில் கற்றுப் பட்டம் பெற்றுப் பின் பி. எல். தேர்வுபற்று நெல்லையில் வழக்கறிஞராய்ச் சிலகால மிருந்துவந்தனர். ஆனால் அஃது இவர்கட்குப் பிடிக்கவில்லை. பின்னர், பச்சையப்பன் கலாசாலையில் ஆங்கில விரிவுரையாளராக அமர்த்தப்பட்டார். சில ஆண்டுகட்குப் பின் அரசினர் கல்வி இலாகாவில் இவர்கட்கு அலுவல் கிடைக்கவே சென்னை பிரசிடென்சி காலேஜிலும், பாலகாடு, கும்பகோணம் காலேஜுகளிலும் விரிவுரையாளராகச் சில ஆண்டுகள் வேலைபார்த்தனர். அதன்பின் ஜில்லாக் கல்வி அதிகாரியாக இருந்துவந்தனர். 1936ல் அனந்தபூரிலுள்ள அரசினர் காலேஜுக்குத் தலைவராக அமர்த்தப்பட்டார்.

இவர் எழுதிய ஆங்கிலச் செய்யுட்களும் கட்டுரைகளும் நூல்களாக வெளிவந்திருக்கின்றன. தமிழ் நீதிநூல்களையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும், சங்க இலக்கியங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகெங்கும் பரப்பவேண்டுமென்று அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. அங்ஙனமே 'நீதி நூல்கள் பத்து' (Ten Tamil Ethics) என்ற நூலை அவர்கள் மொழிபெயர்ப்புடன் வெளியிட்டிருக்கிறோம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலும் சில நூல்கள் மொழிபெயர்த்து வைத்திருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் குறுந்தொகையில் முதல் 32 பாட்டுக்கட்கு நம் செல்வியில் இவர்கள்

எழுதிய மொழிபெயர்ப்பு வந்திருக்கின்றது. தேவாரம், திருவாசகம் முதலிய புகழ் நூல்களிலிருந்து சில அரிய பாட்டுக்களைத் திரட்டி மொழிபெயர்ப்புடன் 2 பகுதிகளாக வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழ்ப் புத்தகங்கள் ஆங்கில நூல்களைப்போல உயர்ந்த முறையில் கண்ணைக்கவரும் வகையில் அச்சிட்டுக் கட்டடஞ் செய்யப்பெறுதல் வேண்டுமென்று இவர்கள் எங்களிடம் அடிக்கடி சொல்வதுண்டு. அம்முறையைக் கையாண்டுவரும் எங்கள் கழகத்தின்மீது இவர்கட்குத் தனித்த மதிப்புண்டு.

'நீதி நூல்கள் பத்து' வெளியிட்டதன்பின் பதினெண் கீழ்க்கணக்குநூல்களை வெளியிடவேண்டுமென்று எங்களைத் தூண்டியவர்கள். அவற்றை முடித்து வெளியிடுதற்குமுன் இவர்கள் இறைவனடி சேர்ந்தமையை நினைக்க நினைக்க எங்கள் நெஞ்சம் நீராயுருகுகின்றது.

திரு. ச. தருமராஜ சற்குணர் பி. ஏ., அவர்கள் அறுபதாண்டு நிறைவு விழா

நிகழும் 1937 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 25 ஆம் நாள் மாலை 6 மணிக்குத் திரு. ச. த. சற்குணர் பி. ஏ., அவர்கள் அறுபதாவது ஆண்டுவிழா சென்னை கோகலே மண்டபத்தில் திரு டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அறுநூறுக்கு மேற்பட்ட தமிழறிஞர்கள் மிகவும் ஆர்வத்தோடு வந்து குழுமியிருந்தனர்.

கடவுள் வாழ்த்துப்பாடவே, தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்கத்தாரும், சென்னைப் பண்டித சங்கத்தாரும், திருப்பவுற் கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தாரும், சூளை நகர் வாலிபர் கழகத்தாரும், கிறித்தவக் கல்லூரி மாணவர்களும் வாழ்த்துறை படித்துக் கொடுத்தார்கள். பின்பு தலைவரவர்கள் முன்னுரையாகச் சில புகழுரைகள் பேசியபின் திருவாளர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களும், ஜனாப் தாவுத் ஷா அவர்களும், R. P. சேதுப்பிள்ளை அவர்களும், K. ஆலால சுந்தரஞ் செட்டியாரவர்களும், பண்டிதை கிருஷ்ணவேணியம்மையாரவர்களும் திரு சற்குணரவர்களின் கல்வி அறிவு ஒழுக்கங்களைப் பற்றிச் சிறந்தெடுத்துப் பேசினார்கள். பின்பு முகவுரையாகத் தலைவரவர்கள் முடிவுரை கூறியதும் திரு. சற்குணரவர்கள் தம்மைப் பாராட்டியவர்கட்கு நன்றி கூறினார்கள். அதன்பின் சற்குண மலர் என்னும் புத்தகம் ஒன்று வந்திருந்தவர்கட்கு இனமாக வழங்கப்பட்டது. அத்துடன் இரவு 8-30 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

திருவாளர் ச. த. சற்குணர் அவர்கள் சென்னைக் கிறித்தவ கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராயிருந்து ஓய்வு பெற்றவர், இவர் ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் அழுத்தமான கல்வியுடையவர். மாணவர்கட்குக் கல்வி பயிற்றுவதில் மிகவும் திறமையுடையவர், தம்மிடம் பயிலும் மாணவர்களை மிகவும் அன்பாய் நடத்துவார்கள்; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் இயல்பினரல்லர். தூய பளிங்குபோன்ற நெஞ்சுடையவர்கள். ஒருவர் குற்றங்களை நேருக்கு

நேர் எடுத்துக்காட்டிக் கண்டிக்கும் உறுதிப்பாடுடையவர். கைமாறு கருதாமல் மாணவர்கட்குக் கல்வி பயிற்றிவந்தனர்.

இவர்கள் பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றுவார்களாக!

திரு. மு. போ. ஈசுவரமூர்த்தியா பிள்ளை அவர்கள் திருமண அறுபதாம் ஆண்டு விழா திருநெல்வேலி

22-8-'37 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, நெல்லை தாயம்மையம்மாள் பெண் கல்விச்சாலையில், முன்னீர்ப்பள்ளம் தமிழாசிரியர் திருவாளர். மு. பொ. ஈசுரமூர்த்தியாபிள்ளை அவர்கட்கும். அவர்கள் மனைவியார் திருமதி அறம் வளர்த்த அம்மாளுக்கும் திருமணம் நடந்தது முதல் அறுபதாண்டு நிறைந்திருப்பதை முன்னிட்டு, ஒருவிழாக் கொண்டாடப் பெற்றது.

அவ்விழாவுக்கு. திருவாளர். T. K. சிதம்பரநாத முதலியார். B. A. B. L. அவர்கள் தலைவராயிருந்தார்கள்.

தாயம்மையம்மாள் பெண் கல்விச்சாலை மாணவிகளால் கடவுள் வாழ்த்து பாடப்பட்டபின், தலைவர் அவர்கள் முன்னுரையில் ஆசிரியர் அவர்களின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்கள்.

பின்னர் விழாவுக்கு வந்திருந்தவர்களில், திருவாளர்கள் முன்னீர்ப்பள்ளம், M. S. பூர்ணலிங்கம்பிள்ளை அவர்கள், மா. வே. நெல்லையப்பபிள்ளை யவர்கள், A. அப்பாதுரைப்பிள்ளை, B. A. Hons, அ. பிச்சையாபிள்ளை, வித்துவான். பு. சி. புன்னைவனநாத முதலியார், வள்ளல் சிவஞான தேசிகர், வித்துவான் P. K. அருணாசலக் கௌண்டர் முதலியோர், பிள்ளையவர்களின் குணங்களையும், தமிழ்ப்பற்று, அவர்களியற்றிய தமிழ்ப்பாடல் முதலியவற்றின் சிறப்புக்களையும் எடுத்துக் கூறினர்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், தென்னிந்திய ஆசிரியர் சங்கம், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், பிரமசமாஜம் இவற்றின் சார்பில் வாழ்த்துரைகள் படித்துக் கொடுக்கப்பட்டன.

முன்னீர்ப்பள்ளம், தமிழாசிரியர். திருவாளர் மு. பொ. ஈசுவரமூர்த்தியாபிள்ளை அவர்கள் திருமண அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் காலத்து, திருநெல்வேலி ஜில்லா, தமிழாசிரியசங்கம், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் படித்தளித்த

வாழ்த்துப்பா

குஞ்சரப் புலவர் நெஞ்சம் குறிகொளச் செல்லும் நற்சொற்
செஞ்சரம் விடுக்கு மேரும் ஈஸ்வர மூர்த்திச் செல்வன்
அஞ்சொ லார் போற்றும் நங்கை அறம்வளர்த் தாளை வாழ்வின்
றஞ்சநற் றுணையாய்க் கொண்டோர் தகைமைசால் மகிழ்த் தந்தான்.

தந்தவன் மணந்தி நாளில் அறுபதா மாண்டைச் சாரச்
செந்தமிழ்ப் புலவர் மக்கள் யாவரும் சேர்ந்து வாழ்த்தி

நந்தமி லின்னோர் போல நல்லறம் புரிந்து வாழ்வோர்
சிந்தையிற் றூய ராகி தெய்வநற் பணியி னிற்போர்.
தென்னவ ஞட்டி னெல்லை யில்லையென் சிறப்பி னுழ்ந்தார்
நன்னய நூல்கள் செய்து நங்கையர் நலத்துக் கான
துன்னுபன் னெறியுஞ் சூழ்ந்தாய் துணையுட னின்று மீசன்
முன்னவ னருளா லாயுள் நூற்றின்மேல் முற்றிவாழி.

புு சி. புன்னைவனநாத முதலியார்

வாரி கிருபானந்த வள்ளல்பால் சொல்லின்ப
மாரிஅளித்த வான்மாப் பயிர்கள்—சீரியரே
கண்டோம் தெளிந்தோம் கடவுள் அருள்நலத்தைக்
கொண்டோம் ஒழித்தோம் கொலை.

பாளையங்கோட்டை, பலிவிலக்குச் சங்கச் சார்பில் நடந்து முடிவடைந்த பிரசங்கத் திறுதியில் (26-7-37-ல்) திருவாளர். வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்களால் பாடப்பெற்றது.

"சிவஞான முனிவர் நூல் நிலையம், இலவச வாசக சாலை"
திறப்பு விழா

மேற்குறித்த நூல் நிலையமும் வாசக சாலையும் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில், நிகழும் மெய்கண்டான் யாண்டு எாயஉ ஐப்பசித்திங்கள் 25-ஆம் நாள் (10-11-1937) புதன்கிழமை மாலை 6 மணிக்கு திருநெல்வேலி, கீழரதவீதி, ஷை சங்கக் கட்டிடத்தின் கீழிடத்தில், கோயமுத்தூர், வழக்கறிஞர், சைவத்திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்களால், திறந்து வைக்கப்பெறும்.

(2) 6½-மணிக்கு வெள்ளகால், ராவ்சாகிப். V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் (G. B., V. C.) தெ. இ. தமிழ்ச்சங்கத் தலைவராயிருந்து காலஞ்சென்ற சர். தி. செ. சிவஞானம் பிள்ளை அவர்கள் (B. A) உருவப்படத்தைத் திறந்து வைப்பார்கள்.

(3) 7 மணிக்குத் தெ. இ. தமிழ்சங்கத்தலைவர். தென்காசி, திருவிதாங்கூர் ரிட்டையர்ட் ஜட்ஜ், T. S. குத்தாலிங்கம் பிள்ளையவர்கள் (B. A., B. L.) சைவசித்தாந்த சங்கத்தலைவராயிருந்து வரும் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் (B. A.) உருவப்படத்தைத் திறந்து வைப்பார்கள். சொற்பொழிவுகளும் நடைபெறும்.

மதிப்புரை:

வழிகாட்டும் வான்பொருள்

இந் நூலின்கண் திருவாளர் கீ. இராமலிங்க முதலியாரவர்கள் பி. ஏ. எழுதிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாறும், சுவாமிகள் அருளிய பாக்களிற் பலவும் அடங்கியன. இந்நூலின் பெருமையைப் பற்றித் திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளை,

பி. ஏ., எல். டி. அவர்கள் முன்னுரை யொன் றெழுதியிருக்கின்றார்கள். சுவாமிகள் வரலாறு பல பகுதிகளாகப் பிரிக்கப் பெற்று எளிய தமிழ்நடையில் மிகவும் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றது. சுவாமிகள் அருளிய சட்டதிட்டப்படி நடப்பவர்கள் நோயின்றி நலமாய் வாழலாம். குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீரையே பயன்படுத்தல் வேண்டும். மருந்துண்பது இயற்கைக்கு மாறு மென்பதை சுவாமிகள் நன்கு வற்புறுத்தியிருக்கின்றனர். சுவாமிகள் திருவுருவப்பட மடங்கியது. இந்நூல் வெளியிட்டவர் திரு ஆ. நரசிம்மலு நாயுடு அவர்கள். இது கழகத்திலும், காஞ்சிபுரம் குமரன் அச்சுக்கூடத்திலுங் கிடைக்கப்பெறும். இதன் விலை ரூ. 1-8

திருவாசக மணிகள்

இந்நூல் புலோலி திரு சு. சிவபாதசுந்தரம், பி. ஏ. அவர்கள் திருவாசகத்திலிருந்து பொறுக்கி எடுத்த அருமணிகளைக் கொண்டது. இந்நூலாசிரியரே இவ்வருமணிகட்கு உரை எழுதியிருக்கின்றனர். இதனைப் பதித்து வெளியிட்டவர் கொழும்பு விவேகானந்த சபையார். இதன் விலை அணு 4.

பாரதி விளக்கம்

வரகவி. சுப்பிரமணிய பாரதியா ரவர்களின் புலமையைப் பாகுபடுத்தி விளக்குவது திரு. பாரதியா ரவர்களோடு நெருங்கிப் பழகிய உயர்திரு சுவாமி சுத்தானந்த பாரதியா ரவர்களால் எழுதப்பட்டது. இது கழகத்திலும், பாரதி பிரசுராலயத்திலும் கிடைக்கப்பெறும்.
இதன் விலை அணு 4

வரகவி தாகூர்

இது கவி தாகூர் அவர்களின் வரலாற்றுச் சுருக்கமும், அவர்கள் அருமொழிகளின் விளக்கமும் கொண்டது. இதுவும் சுவாமி சுத்தானந்த பாரதியா ரவர்களால எழுதப்பட்டது. இதன் விலை அணு 3.

இது கழகத்திலும், இராமச்சந்திரபுரம் (திருச்சி), அன்பு நிலையத்திலும் கிடைக்கப்பெறும்.


பதிற்றுப்பத்து வசனம்

இஃது எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய பதிற்றுப்பத்தை உரைநடைப் படுத்தியதாகும். பதிற்றுப்பத்தைக் கற்க விரும்புபவர் முதற்கண் இவ்வுரை நடை நூலைப் பயின்றால் செய்யுளின் பொருளை. எளிதிற் விளங்கிக் கொள்ளுதற்கு உதவியாயிருக்கும், உரை நடைபடுத்தியவர், யாழ்ப்பாணம் நவாலியூர் திரு. ந. சி. கந்தையா அவர்களாவார். இது கழகத்திலும், இதனைப்பதித்து வெளியிட்ட தியாகராயநகர் ஒற்றுமை யாபிசிலும், கிடைக்கப்பெறும். இதன் விலை ரூ. 1

தமிழ் சமஸ்கிருத அகராதி

இது தமிழ்ச்சொற்களும் எதிராகத் தேவநாகரியில் சமஸ்கிருதச் சொற்களு மடங்கியது.

இது கழகத்திலும், வில்லிபாக்கம் திரு. N. E. துரைசாமி ஐயங்கா ரவர்களிடமும் கிடைக்கப்பெறும். இதன் விலை ரூ. 1.


சுவாமி சுத்தானந்த பாரதி

ஸ்ரீ
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] ஈசுவர—கார்த்திகை [பரல்-ச

திருவாசகம்

திருச்சதகம் ச-வது பாட்டு

சாவமுன் னாட்டக்கன் வேள்வித்
    தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா
    விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு
    மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்,
றேவரென் றேயிறு மாந்தென்ன
    பாவந் திரிதவரே.

பதவுரை :—

முன்நாள்—முன் ஒரு காலத்திலே.

தக்கன்வேள்வித் தகர்தின்று—தக்கனாற் செய்யப்பட்ட யாக ஆட்டின் ஊனை அவியாகத் தின்று.

சாவ அஞ்சி (26)—(வீரபத்திரக் கடவுள் தக்கனை ஒறுக்க வந்த பொழுது) சாவ அஞ்சியும்.

நஞ்சம் அஞ்சி (26)—(பாற்கடலைத் தேவர் கடைந்தபொழுது அதினின்றும் எழுந்த) நஞ்சினைக் கண்டு அஞ்சியும்.

ஆவ எந்தாய் என்று—ஐயோ எமக்குத் தந்தையே (காப்பாற்று) என்று.

அவிதா இடும் நம்மவரே—முறையிடு செய்த நம் இனத்தவர்களாகிய நான்முகனு மாலுமாகிய இவர்களா?

மூவர் என்று எம்பிரானொடும் எண்ணி—எங்கள் முழுமுதற் றலைவனாகிய சிவபெருமானோடு தாங்களிருவரையும் சேர்த்து மும்மூர்த்திகள் என்று கணக்கிட்டு.

விண் ஆண்டு—தத்தமக்குரிய சத்திய உலகையும் வைகுந்த உலகையும் முறையே ஆளுகை செய்தலுமன்றி.

மண்மேல்—நிலவுலகத்திலும்.

தேவர் என்று இறுமாந்து திரிதவர்—சில சமய மக்களால் வணங்கப் பட்ட கடவுளர் என்று தருக்கித் திரிகின்ற தவமுடையவர்?

அவர் என்ன பாவம் (செய்தனர்)—இங்ஙனம் நான்முகனும் மாலும் என்ன கொடிய பாவம் (செய்தனர்).

விளக்க உரை :—

தக்கன் வேள்வித் தகர்தின்ற—தகர்—ஆடு.

சாவ அஞ்சி (26)—நஞ்சம் என்ற சொல்லோடு சேர்ந்து வருகிற அஞ்சி என்ற வினை எச்சத்தை சாவ என்ற சொல்லோடும் சேர்க்க. தொக்கி நிற்கிற உம் என்பதனைச் சாவ அஞ்சியும் நஞ்சம் அஞ்சியும் என விரித்துரைக்க.

ஆவ எந்தாய்—'ஆவர்' என்பது 'ஆவ' எனக் குறுகி நின்றது. இஃது இரக்கக் குறிப்பு. எந்தை—எமது தந்தை. விளிப்பெயராகுங் கால் 'எந்தை' ஈற்றிலுள்ள 'ஐகாரம்' 'ஆய்' எனத் திரிந்து எந்தாய் என வந்தது.

அவிதா இடும் நம்மவரே—அவிதா என்ற சொல் ஒருவர் தமக்கு ஓர் ஆபத்து நேர்ந்த காலத்தில் அதனைத் தீர்க்கவல்ல பிறரொரு வரை நோக்கிச் செய்யும் முறையீடு. நம்மவர் என்பது நான் முகன் மால்களைக் குறிக்கிறது. நில வுலக மக்களாகிய நம்மைப் போல அவர்கள் சகல வர்க்க ஆன்மாக்கள் ஆதலின், அடிகள் அவரை நம்மவர் என்றார். இங்கே கூறப்பட்ட நான்முகனும் மா லும் பிரகிருதி மாயையில் வைகுவோர், சுத்த மாயையில் வைகும் பிரமன் மால்கள் அன்று. நம்மவரவரே என்ற தொடரை நம்மவர் அவர் எனப் பிரித்து ஈற்றில்வரும் ஏகாரத்தை நம்மவர் என்பதனோடு சேர்க்க. அந்த ஏகாரம் வினாப் பொருளில் வந்தது. அவிதா இடும் நம்மவர் என்பது முதல் வரியிலுள்ள முன்னாள் என்ற சொற்களைத் தழுவுதலால் அவிதா இட்ட நம்மவர் என்று இறந்த காலத்தில் பொருள் உரைக்கப்பட்டது.

"தேவா அரனே சரணென் றிமையோர் திசைதோறும்
காவாயென்று வந்தடையக்கார் விடமுண்டு"

என்று திருஞான சம்பந்தஅடிகள் திருப்புறவம் தேவாரம் 5-வது பாட்டில் கூறுதல் காண்க.

மூவர் என்று எம்பிரானொடும் எண்ணி—"தேவரிலொருவனென் பர் திருவுருச் சிவனைத் தேவர் மூவராய் நின்றதோரார்" என்று சிவஞான சித்தியாரில் கூறப்பட்டிருத்தலை நோக்குக. நான்முகன் மால் உருத்திரன் ஆகிய மூன்று மூர்த்திகளும் சிவ பெருமானது அருளைத் துணைக்கொண்டு அவனால் அதிட்டிக்கப்

பெற்று முறையே படைப்பு, காப்பு, அழிப்புத் தொழில்களைச் செய்வோர், சிவபெருமான் எல்லா உலகங்களையும் மகா சங்கார காலத்தில் அழித்தல் செய்யும் மகா சங்கார ருத்திரர். சிவபெருமானை உலகி லிப்பொழுதும் பலர் அறியாமையால் உருத்திரன் என்ற பெயரினுல் மயங்கி குணருத்திரனேடு ஒற்றுமைப்படுத்தி மும்மூர்த்திகளிலொருவன் என்று கூறுகின்றனர்.

மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிதவர்—தவர் என்பது தவமுடையவர். பிரமன் மால்களாகிய சகல வர்க்க ஆன்மாக்கள் தாங்கள் செய்த தவத்தின்பயனுக படைப்புத் தொழிலையும் காப்புத் தொழிலையும் முறையே செய்து வருவதால் அடிகள் அவர்களைத் தவர் என்றூர். அவர்கள் தம்மை மாறுபட மயங்கி அறிதலால் திரிதவர் என்றூர்.

அவர் என்ன பாவம் செய்தனர்—நம்மவரவரே என்பதின் ஈற்றிலுள்ள அவர் என்பதை என்ன பாவம் என்ற தொடரோடு சேர்த்துப் பொருளுரைக்க, அவர் நம்மவர் ஆகிய நான்முகன் மால்களைக் குறிக்கிறது. செய்தனர் என்ற வினைமுற்றுச் சொல் சொல்லெச்சமாக என்ன பாவம் என்பதின் பின்தொக்கி நிற்கிறது. நான்முகன், மால்கள் தாங்கள் சிவபெருமானு லதிட்டிக்கப் பெற்று அவனது அருளால் தங்கள் தொழில்களைச் செய்தலைத் தங்கள் அகங்காரத்தால் மறந்து முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானேடு ஒப்பவைத்துத் தங்களை மதித்தலை அடிகள் என்ன பாவம் செய்தனர் என்று கூறினர். "காண்பா னுளியிருளிற் காட்டிடவுந்தான் கண்ட—வீண்பாவ மெந்நாள் விழும்" என்று உமாபதிசிவாச்சாரியார் அ-வது அதிகாரம் ௲-வது பாட்டிற் கூறிய கருத்தை நோக்குக.

இப்பாட்டில் இரண்டு எழுவாய்களும் இரண்டு பயனிலைகளுமுள. நம்மவரே எழுவாய், தவர் பயனிலை. அவர் எழுவாய், செய்தனர் தோன்றூத பயனிலை. மெய்யுணர்தல் என்ற தலைப்பின் கீழ் பிரமன் மால் தேவர்கள் தங்களை சிவபெருமானேடு சேர்த்து மூவராக எண்ணுதல். இந்தப் பாட்டிற் கூறுதல் எவ்வாறு பொருத்தமெனின் பேரின்பத்துக்கு ஏதுவாயுள்ள மெய்யுணர்தலாகிய அருட்குணத்தை அடைய விரும்புகிற அடியார்கள் தங்கள் மனதில் சிறிதும் யான் எனது என்னும் செருக்கு வருவதற்கு இடங்கொடுக்கக் கூடாது என்று அவர்களை எச்சரித்து அவர்கள் தன் முனைப்பின்றி அருளி லடங்கியிருத்தலை வலியுறுத்தலினுல் பொருத்தமுடையது. பிரமன் மால் தேவர்களுக்கே ஒருகால் செருக்கு வருமானுல் அடியார்களாகிய நம்மிடத்தில் செருக்கு நம்மை அறியாமலே நமது உள்ளத்தில் வருதல் எவ்வளவு எளிது என்று எண்ணி அதனைத் தங்கள் உள்ளத்தில் வரவிடா திருக்க மிக்க விழிப்புடனிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

வேளாளர் பெயர்கள்

[பண்டித ஞா. தேவநேயப் பாவாணன்.]

எம்மொழியினும் சொற்களின் மூலப்பொருளை யுணர்
தற்கு மொழி நூலறிவு இன்றியமையாததாகும். ஒருவர்
எத்துணைப் பெரிய புலவராயிருப்பினும் மொழிநூ லறிவின்றி
எல்லாச் சொற்கட்கும் உண்மைப் பொருள் கூறவொண்ணாது.

தமிழில் வேளாண் குலத்திற்குரிய பெயர்களிற் சில
வற்றிற்குப் போலிப் பொருள்கள் கூறப்பட்டு வருகின்றன.
அவற்றை விலக்குவதுடன் பிற பெயர்களையும் விளக்குவதற்
கெழுந்த திக்கட்டுரை.

மக்கள் முதன்முதற் குறிஞ்சி நிலத்தினின்றே பிற நிலங்
கட்கெல்லாஞ் சென்று பரவினர். அவருள் மருதநிலத்திற்கு
வந்தவர் முல்லை வழியாய் வந்தனர். குறிஞ்சி கன்னிலமாத
லின் அதையடுத்து மென்னிலமாகிய மருத மிருத்தல் இய
லாது; வன்னிலமாகிய முல்லையிடையிட்டே யிருக்கும். உழவுத்
தொழில் குறிஞ்சி நிலத்தில் தினை விளைத்தலாகிய சிற்றளவில்
தோன்றி, முல்லை நிலத்தில் புன்செய்க் கூலங்கள் விளைத்தலாக
வளர்ந்து, மருத நிலத்தில் நன்செய்ப் பயிர்கள் விளைத்தலாக
முதிர்ந்தது.

மருத நிலத்தில் வந்து உழவுத்தொழில் ஒன்றையே சிறப்
பாகச் செய்தவர்கள் உழவரென்றும், களத்தில் வேலை செய்த
மையால் களமரென்றும், பிற நிலத்தார் போலாது நிலையாய்க்
குடியிருந்தமையால் குடியானவரென்றும் கூறப்பட்டனர்.
பின்பு நிலமிகுந்தவர்கள் பிறரைக்கொண்டு உழுவித்துண்டும்,
நிலங் குறைந்தவர்களும் அற்றவர்களும் தாமே உழுதுண்டும்
வந்தனர். இவர் முறையே இற்றைப் பண்ணையாரும் (மிராஸ்
தார்) பண்ணையாட்களும் போல்வர். இவர் பிற்காலத்தில்
இருவேறு குலமாய்ப் பிரிந்தனர். இவரையே இருவகை
வேளாளரென்று தொல்காப்பிய அகத்திணையியல் 30-ஆம்
சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறுவர்.

இவருள் உழுதுண்பார் வெளியே சென்று வெயிலிற்
காய்ந்து வேலை செய்து, கருத்திருந்தமையின் கருங்களம

ரெனப்பட்டார். உழுவித்துண்பார் வீட்டில் அல்லது நிழலிலிருந்து வெளுத்திருந்தமையின் வெண்களமரெனப்பட்டார். மக்கள் பல்வேறு குலங்களாய்ப் பகுக்கப்பட்டமைக்குத் தொழிலும் நிறமும் முக்கிய காரணங்களாகும். மேலைக் குல நூல் வல்லார் உலக மக்களை ஐவகுப்பாய் வகுத்ததும் நிறம்பற்றியே.

கைத்தொழிலிற் பயின்று கருத்த அல்லது உரத்த கைகளைக் கருங்கையென்று சொல்வது பண்டை வழக்கு. 'கருங்கை வினைஞர்', 'கருங்கைக் கொல்லன்' என்னும் நூல் வழக்குகளை நோக்குக.

வெண்களமர் என்னுமிடத்து, வெண்மை என்பது மேனாட்டார் நிறம்போல மிகு வெண்மையைக் குறியாது பொன்மையை அல்லது வெளிறின செம்மையையே குறிப்பதாகும். ஆரியப் பிராமணர் வேளாளரினும் வெளிறியிருப்பினும், அவர் (வட நாட்டினின்று) பிந்தி வந்தமையாலும், இக்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள ஐரோப்பியர் போலத் தமிழரோடு கலவா திருந்தமையாலும், உழுவித் துண்ணும் வேளாளரை வெண்களமர் என்ற வழக்கு வீழ்ந்திலது.

கருங்களமர், வெண்களமர் என்ற பெயர்கள் போன்றே, காராளர், வெள்ளாளர் என்ற பெயர்களும் நிறம்பற்றி முறையே இருவகை வேளாளர்க்கும் ஏற்பட்டன. இவற்றிற்குக் காரை (மேகத்தை) யாள்பவரென்றும், வெள்ளத்தை யாள்பவரென்றும் முறையே பொருள் கூறுவது பொருந்தாது. இவை பார்த்தமட்டில் அல்லது கேட்டமட்டில் பொருத்தமாய்த் தோன்றலாம். ஆனால் மொழிநூல் முறையில் ஆராய்ந்து பார்ப்பின் அவை போலி யென்பது புலனாம்.

காராளர் என்ற பெயர்ப்பொருளை அறிதற்கு, அதை அதன் எதிரான வெள்ளாளர் என்னும் பெயரோடு ஒப்பு நோக்குதல் வேண்டும். மீண்டும், அவ்விரண்டையும் கருங்களமர், வெண்களமர் என்னும் பெயர்களுடன் ஒப்பு நோக்குதல் வேண்டும்.

கருமை + ஆளர் = காராளர்.

இத்தொடரைக் காரா (கரும்பசு), காரரிசி, காரகில், காராடு முதலிய தொடர்களுடன் வைத்து நோக்குக.

வெண்மை + ஆள்ர் = வெள்ளாளர்.

இத்தொடரை வெள்ளாடு, வெள்ளெருக்கு, வெள்ளானை, வெள்ளோலை முதலிய தொடர்களுடன் வைத்து நோக்குக.

வெள்ளாளரை வெள்ளாம் பிள்ளை யென்பதும், அவர் குடியை வெள்ளாங்குடி யென்பதும் உலக வழக்கு. வெள்ளை என்னும் பெயர் இங்ஙனம் ஈறுகெட்டு 'ஆம்' சாரியை பெற்றுச் சில தொடர் மொழிகளில் நிலைமொழியாவதை 'வெள்ளாங் குருகின்பிள்ளை' என ஐங்குறு நூற்றிற் (16-ம் பத்து) கொக்குக் குஞ்சியைக் கூறியதினின்றுங் கண்டு கொள்க. வேளாளர் என்னும் பெயர் வேறு. அது பின்னர்க் கூறப்படும்.

வெள்ளாண் மரபு, வேளாண் குலம் என்பவற்றில் ஆண் என்பது ஆள், என்பதன் திரிபு. ஆகையால், வெள்ளாம் பிள்ளை, வெள்ளாண் பிள்ளை என்னும் பெயர்கள் வெவ்வேறு இடைமொழியைப் பெற்றனவாகும்.

மருதநிலத்தில் மக்கள் குடியேறி நிலையாய் வாழ்ந்து, சிற்றூர் பேரூராகி நாகரிக மிக்கபின், உழவர் வகுப்பினின்றே அந்தணரும் அரசரும் வணிகரும் பல்வகைத் தொழிலாளரும் தோன்றினர். முதன் முதல் தமிழ்நாட்டில் அந்தணரென்றது, அறிவுமிக்கு உலகவாழ்வை வெறுத்து வீட்டுநெறியில் நின்ற துறவிகளை. "அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லான்" என்று திருக்குறளில் நீத்தார் பெருமையிற் கூறியது காண்க.

அரசர் என்றது, வீரமும் நடுவு நிலையும் அறிவுஞ் சிறந்து அரசராய் நியமிக்கப்பட்டாரையும் அவர் குடும்பத்தினரையும். தமிழ்நாட்டில் அந்தணர், அரசர் என்னும் பகுப்பு, நிலையும் பதவியும் பற்றியதேயன்றி, பிராமணர், க்ஷத்திரியர், என்னும் ஆரியப் பகுப்புப் போலக் குலம்பற்றியதன்று. ஆரியப் பிராமணர் சிறிது தொழிலொப்புமை பற்றியே பிற்காலத்தில் இனவிலக்கணை (உபலக்ஷணை)மாய் அந்தணரெனப் பட்டனர்.

தமிழ்நாட்டில், (பிராமணரல்லாத) தமிழரெல்லாரும் ஒரு வகுப்பினின்று தோன்றினமை பற்றியே, 'வெள்ளாண் மரபுக்கு வேதம்' என நாலடியார்ச் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்று தமிழரெல்லாரையும் வெள்ளாண் மரபில் அடக்கிக் கூறுகின்றது. இனி, தலைமைபற்றி எனினுமாம்.

அந்தணர் அரசரென்னும் நால்வகைக் குலங்களுந் தோன்றியபின், அவற்றின் பெயர் வரிசையிற் கடையிற் கூறப் படுவது பற்றி, உழவர் கடையரென்றும் பின்னரென்றுங் கூறப்பட்டனர். கடையர் என்பது பின்பு உழுதுண்பார்க்கே வழங்கிவந்தது.

பலவகைத் தொழிலாளருள், உழவரே தொழிலும் தன்மையும் பற்றிச் சிறந்த பிள்ளைகளாய் (மக்களாய்) இருந்தமையின் பிள்ளைமார் என்றும், சிறந்த வினை செய்தமையின் வினைஞரென்றும், பிறர்க்கு வேளாண்மை (உபசாரம்) செய்தமையின் வேளாளரென்றும் கூறப்பட்டனர். பிள்ளை என்பது மக்களொருமைப் பொதுப் பெயராதலை, 'என்ன பிள்ளை!,' 'மறப்பிள்ளை', 'ஆண்பிள்ளை' என்னும் உலகவழக்குக்களால் உணர்க. உழவு சிறந்த வினையாதலின், திருவள்ளுவர் உழவரைக் 'கை செய்தூண் மாலையவர்' என்றார். கை செய்கை. வேளாளர் என்னும் பெயர் வேள் ஆளர் என்னும் இருசொல்லாய்ப் பிரிந்து, பிறரை விரும்பி உபசரிக்கும் மக்கள் எனப் பொருள்படுவதாகும். வேட்டல், விரும்பல். வேளாளரின் தன்மை வேளாண்மை. 'வேளாளன் என்பான் விருந்திருக்க வுண்ணாதான்' என்றார் நல்லாதனார்.

'காப்பாரே வேளாளர்காண்' என்றார் கம்பர். வேளாண்மை என்னுஞ் சொல் ஆகுபெயராய் வேளாளர் தொழிலாகிய பயிர்த்தொழிலையுங் குறிக்கும். வெள்ளாண்மை, வெள்ளாமை என்பனவும் இங்ஙனமே. வெள்ளாளரின் தொழில் வெள்ளாண்மை. இச்சொல்லின் திரிபு வெள்ளாமை.

வெள்ளாளன் வேளாளன் என்னும் பெயர்கட்கு மூலத்தில் யாதோர் இயைபுமின்று. வெள்ளாளன் என்னும் பெயர் வெள்ளாட்டி, வெள்ளாடிச்சி என்றும், வேளாளன் என்னும் பெயர் வேளாட்டி, வேளாடிச்சி என்றும் பெண்பால் கொள்ளும். அரசர் மனைகளிலும் பெருமக்கள் வீடுகளிலும், துப்புரவும் ஒழுக்கமும் பற்றிச் சில வேளாள வகுப்புப் பெண்கள் வேலைக்கு நியமிக்கப்பட்டமையின், வெள்ளாட்டி வேளாட்டி என்னும் பெயர்கள் பணிப்பெண் எனவும் பொருள்படத் தலைப்பட்டன. 'கம்பர் வீட்டு வெள்ளாட்டி' என்னுந் தொடரைக் காண்க. பண்டைத் தமிழரசர் போரிற் சிறைபிடித்த பகையரசர் மகளிரை விட்டு வைத்த சிறைக்களத்திற்குப் பணிப்பெண்களிருக்குமிடம் என்னும் பொருளிலேயே வேளம் எனப் பெயரிட்டனர்.

உழவுக்கு எருதுகள் வேண்டியிருத்தலின், அதன் பொருட்டுச் சிறுபான்மை ஆநிரைகளைத் தொழுவங்களிற் காத்தமை பற்றி உழவர்க்குத் தொழுவர் என்னும் பெயரும் உண்டாவதாயிற்று.

உழவர் உழவுத்தொழிலாலும் அரசர்க்கு அவ்வப் போது நிகழ்த்திய போர்த்தொழிலாலும் வலிமையும் வீரமும் பெற்றிருந்தமையின் மள்ளர் என்றுங் கூறப்பட்டார். மள்ளர் வீரர்.

மல்லர் என்பது மள்ளர் எனத் திரிந்தது. மல் என்பது வலிமை அல்லது போர்: "மல்லல் வளனே" என்றார் தொல்காப்பியர். வ்ளன் என்றது வலிமை மிகுதியை.

வேளாளர்க்கு உழவு, போர் என்னும் இருதொழிலு மிருந்தமை,

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

"வேந்து விடுதொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன வென்ப அவர்பெறும் பொருளே"

என்னும் தொல்காப்பிய மரபியற் சூத்திரங்களா னறியப்படும்.

மள்ளர் என்னும் பெயர், களம் புகு மள்ளர் (கலித்தொகை, 106), 'பொரு விறன் மள்ள' (முருகாற்றுப் படை) என்னுமிடத்து வீரரையும், 'மள்ளருழு பகடுரப்புவார்' (கம்பராமாயணம், நாட். 18) என்னுமிடத்து உழவரையுங் குறித்தது. உழுவித்துண்ணும் வேளாளருட் சிலர் முற்காலத்தில் மிக உயர்நிலையி லிருந்தனர். அவருள்! ஓர் ஊர் முழுதுமுடையவர் கிழார் என்றும், பல வூர்களையுடைய குறுநில மன்னர் வேளிர் என்றும் கூறப்பட்டார். சேவூர்க்கிழார் (சேக்கிழார்), கோவூர்க்கிழார், வேள்பாரி, வேள் ஆய் முதலிய பெயர்களை நோக்குக. கிழார் என்பது கிழவர் என்பதன் மரூஉ. கிழவர் தலைவர். கிழமை உரிமை. கிழவர் என்பது இக்காலத்திம் ஜமீன்தார் என்னும் பெயர்க்குச் சமமாகும். கிழான் என்னுல் ஆண்பாற்பெயர் ஓர் ஊர்க்கிழாரின் குடியினருள் ஒவ்வொருவனுக்கும் வேளாளன் என்னும் பொதுப்பொருளில் வழங்கினதுமுண்டு. அதே பொருளில்தான் அஃது இன்று ஹிந்தியிற் கிஸான் என்று வழங்குகின்றது.

சில பேரூர்க் கிழார்கள் அமைச்சரும் படைத்தலைவருமாகியும், அரசர்க்கு மகட்கொடை நேர்ந்தும் வேள் என்னும் பட்டம் பெற்றனர். அழுந்தூர் வேளும் நாங்கூர் வேளும் இதற்குதாரணமாவர்.

உழுவித்துண்ணும் வேளாளர்க்கு வணிகத் தொழிலுஞ் சிறு பான்மையுண்டு. வணிகஞ்செய்வார் தொழில் பற்றி வணிகர் எனப்படினும் வேளாண்மரபைச் சேர்ந்தவராயின், அம்மரபிற்குரிய சிறப்புப் பெயர்களைப் பெறுதற் குரியர். மதுரையில் உருத்திர சன்மனரின் தந்தையார் கிழார்ப் பட்டம் பெற்றதும், காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடர் பிள்ளைப்பட்டம் பெற்றதும் இவ்வுரிமை பற்றியே.

வேள் என்னும் பெயர் விரும்பப்படத் தக்கவன் என்னும் பொருளில் ஒரு தலைவனை அல்லது சிற்றரசனைக் குறிக்கும். நம்பன் என்னும் பெயரும் இதே பொருளில் ஒரு தலைவனைக் குறித்தல் காண்க.

"நம்பு மேவு நசையா கும்மே" என்றார் தொல்காப்பியர்.

சில கல்வெட்டுக்களில் வேளான் என்னும் பெயர் படைத் தலைவர்க்குச் சிறப்புப்பெயராக வந்துள்ளது. அஃது ஆண் விகுதிபெற்ற வேள் என்னும் வேளான் குடிப்பெயரேயாகும்.

"மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப" என்னுந் தொல் காப்பிய அகத்திணையியற் சூத்திரத்தானும் அதற்கு நச்சினார்க் கினிய ருரைத்த வுரையானும், வேளாளர், அமைச்சர், படைத் தலைவர் முதலிய அரசியல் வினைஞராதல் பெறப்படும்.

முற்காலத்தில் உழுதுண்பார் உழுவித்துண்பார் என்று கூறப்பட்ட இருவகை வேளாளரும் பிற்காலத்தில் பற்பல குலத்தினராகப் பிரிந்து போயினர். இதுபோதுள்ள வெள்ளாளரும் முதலிமாரும் உழுவித்துண்ணும் வேளான் வகுப்பையும், குடியானவர், அகமுடையார், கவுண்டர், பள்ளியார், படையாட்சியர், பள்ளர் முதலியோர் உழுதுண் ணும் வேளான் வகுப்பையுஞ் சேர்ந்தவராவர். இவருள் ஒழுக்கத்திற் கடைப்பட்டவர் பள்ளர். இவரே முற்காலத் தில் மள்ளர் எனப்பட்டவர் என்பர் ஒரு சாரார். இதை மறுத் துப் பள்ளத்தில் வேலை செய்பவர் பள்ளர் என்பர் மற்றோர் சாரார். மலையாள நாட்டிலுள்ள செறுமர் என்னும் வகுப் பாரும் உழுதுண்ணும் வேளான் வகுப்பைச் சேர்ந்தவரே. செறுமர் வயலில் வேலை செய்வார்; செறு-வயல்.

சில வேளான் குடியினர்க்குக் கார்காத்த வேளாளர், கங்கை குலத்தார், துளுவ வேளாளர் முதலிய பெயர்கள் கதையும், ஐதிகமும் பற்றிப் பிற்காலத் தெழுந்தவை.

திவாகரம், பிங்கலம் முதலிய நிகண்டுகளில் வேளா ளரைச் சூத்திரரெனத் திரிபுணர்ச்சியாற் கூறியது, ஆரியக் கொள்கைகள் தென்னாட்டில் வேரூன்றிய பிற்காலத்ததாகும். ஆரிய வருணப் பாகுபாடு வேறே, தமிழ் வருணப் பாகுபாடு வேறே. இவற்றைத் தொகையொப்புமை பற்றி ஒன்றெனக் கொள்வது திரிபுணர்ச்சியாகும். இதை அடுத்த கட்டுரையில் வெள்ளிடை விலங்கலாய் விளக்குதும்.

ஆராய்ச்சிப் பகுதி : Research

நெற்குன்றவாணர் சரித்திரம்

[துடிசைகிழார் அ. சிதம்பரனார்]

(முன் கஙஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

VI. பாடிய புலவர்கள்

நெற்குன்றவாணர் கொடையிற் சிறந்தவர். வள்ளல்களில் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தகுந்தவர். சிவனடியார்களிடத்தும், தமிழ்ப் புலவர்களிடத்தும் அளவு கடந்த அன்பை உடையவர். கல்வி கேள்விகளில் சிறந்தவர். சிறந்த புலவர். சொற்பொலிவும் பொருட்செறிவும் உள்ள அன்பு ததும்பும் பாடல்கள் இயற்றவல்லவர்.

புலவர்களைத் தாமே நேரில் கண்டு, அளவளாவி, அவர்களுடைய தரம் அறிந்து, பரிசில் வழங்கும் தன்மையுடையவர். தற்காலத்தில் நடக்கிறது போல், பிற புலவர்களுடைய சொற்களைக் கேட்டு, பரிசு அளிப்பவர் அல்ல.

இவரைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர்கள் கணக்கில் அடங்கார். ஆனால் இரண்டு புலவர்களுடைய பெயர்களே நமக்குத் தற்காலம் கிடைக்கின்றன.

அவர்களாவர்: (1) காளமேகமும் (2) காளிப்புலவரும். இவரைப் பாடிய வேறு புலவர்களின் பெயர்களைத் தெரிந்தவர்கள் வெளியிட்டால் நலமாயிருக்கும்.

VII. கொடைச் சிறப்பு

காளமேகப்புலவர் தொண்டைநாட்டு யாத்திரையில் ஒரு நாள் நெற்குன்றம் சென்றார். சென்று, முதலியார் அவர்களைக் கண்டதும்,

> "உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒரு கோடி
> வெள்ளங்காலந் திரிந்து விட்டோமே"

என்ற வெண்பாவில் இரண்டு அடிகளை மாத்திரம் பாடினார். அவ்விரண்டு அடிகள் முடிவதற்கு முன்னேயே முதலியார் அவர்கள் காளமேகப் புலவருக்கு வேண்டும் பரிசளித்துப் புலவரை மகிழச் செய்தார். பிறகு, காளமேகம்,

"தெள்ளுதமிழ்
ஆழர் முதலி அரசர் பிரானிங்கிருக்கப்
போழர் அறியாமாற் போய்"

என்ற பின்னிரண்டடிகளையும் பூர்த்தி செய்து விடைபெற்று மீண்டார். இதனை,

"மோதிச் சிவந்த கவிகாளமேக மொழிந்த வெண்பா
பாதிக்கு முந்திப் பரிசளித்தோன் களப்பாளன் என்னும்
ஆதிக்கம் பெற்றவ னூழர் முதலி அரசிருப்பாம்
மாதிக்கெலாம் புகழ்கின்ற தொல்சீர்த் தொண்டைமண்டலமே"

என்ற சதகச் செய்யுளால் அறியலாம்.

பின் ஒரு நாள், தொண்டைநாட்டைச் சேர்ந்த வல்லம் (வல்லை) என்னும் ஊரில் இருந்த இடையர் குலத் தலைவனாகிய, ஆடவருட் சிறந்த காளி என்னும் புலவர் இவரிடம் பரிசில் பெற விழைந்து நெற்குன்றம் போந்தார்.

காளிப்புலவர் கவிபாடுவதில் இணையற்றவர். புலவர்கள் மெச்சும் புலமை வாய்ந்தவர். இவரை யாதவர்கோன் நம்பி காளி என்று அழைப்பது வழக்கம்.

இப்புலவர் நெற்குன்றம் சென்று, முதலியாருடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, முதலியார் வீட்டுக்குள் இருக்கிறதாக எண்ணிக்கொண்டு, முதலியார் பேரில் சரமாரியாகப் பாட ஆரம்பித்தார்.

ஆனால், உண்மையில் முதலியார் அப்போது வீட்டில் இல்லை: வெளியே சென்றிருந்தார்.

ஆனால், முதலியார் வீட்டுத் தாதியானவள், புலவருடைய பாடல்கள் முடிந்ததும், அப்புலவருடைய பாட்டுக்கு ஏற்பப் பரிசில் வழங்கினாள். முதலியாரைப்பற்றி "இருக்கிறார்", "இல்லை" என்று யாதொன்றும் அத் தாதியானவள் சொல்லவில்லை.

"கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" என்ற பழமொழிக் கிணங்க, முதலியார் வீட்டுத் தாதியும் புலவர்களுடைய பாடல்களை அளந்தறிய ஆற்றல் வாய்ந்தவளாயிருந்தாள். தாதியே அம்மாதிரி அறிவு பெற்றவளாயிருந்தால் தலைவியின் மாட்சியைக் குறித்துக் கூறவும் வேண்டுங் கொல்? இதனானே, நெற்குன்றவாணருடைய மனைவி, மக்கள், தாதிகள் எல்லோரும் கல்வி அறிவும் புலமையும் செறிந்தவர்களாய்த் திகழ்ந்தார்கள் என்று காண்கிறோம்.

இதே மாதிரியாக, ஏகம்பவாணரும், அவர் மனைவியும், தாதியும் புலமை பெற்றிருந்ததைச் சரிதங்களால் அறிகிறோம்.

இதனால், அக்காலத்தில் தமிழ்மொழி அதிக மேன்மை பெற்றிருந்ததென்றும், பெண்களும் தமிழ்மொழியில் புலமை பெற்றிருந்தார்களென்றும் தெரிகின்றோம்.

பரிசில்பெற்ற காளிப்புலவர், புறப்படத் தயாராயிருக்கும் பொழுது, வெளியிற் சென்றிருந்த முதலியார் வீடு வந்தார். வந்ததும் நடந்த சங்கதிகளைத் தாதியின் மூலம் அறிந்து, முதலியார் காளிப்புலவரைச் சிலநாள் தங்கிப் போகும்படி வேண்டிக்கொள்ள, அப்புலவரும் அதற்கு உடன்பட்டார்.

நாடோறும் முதலியார் அவர்களும் காளிப்புலவரும் அளவளாவி, நூற்களை ஆராய்ந்து, தமிழின் சுவையைச் சுவைக்கலாயினர். முதலியாரும் தமிழ்மொழியில் பெரும் புலமை பெற்றவர். ஆனால், காளிப்புலவருடைய புலமை முதலியாருடைய புலமையை மிஞ்சி இருந்தது.

இதனைக் கண்டு முதலியார் நனி மகிழ்வடைந்து, காளிப் புலவருக்கு வேண்டிய பொன் முதலிய பரிசுகளை நிறையக் கொடுத்ததுடன், அப்புலவருடைய புலமைக்குப் பரிசுகள் ஒன்றும் தகுந்ததாயில்லை எனக் கருதி, தன் ஊரையும், மற்ற சொத்துக்களையும், அப்புலவருக்குத் தானமாகக் கொடுத்து, தாமும் தம் பரிசனங்களுடன் அப்புலவருக்கு அடிமையானார். இதனை,

பன்னு தமிழ்க்கவன், 'மாமனை தாதி பரிசளிப்ப",
முன் "நம்பி காளிக்கு நெற்குன்றவாண முதலியென்போன்
பின்னும் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன் பேர்சிறுத்த
மன்னுந் தமிழு முரைத்தானவன் தொண்டை மண்டலமே"

—(சதகம்—83)

கற்குங்கவி "வல்லையாதவர் கோன் நம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசனமாகி விட்டோம்" வடவேங்கடமும்
பொற்குன்றமும் புகழ் கங்கா நதியும் பொதியமும்போல்
நெற்குன்றமும் நம் மரபுமெந்நாளு நிலைநிற்கவே.

—(நெற்குன்றவாணர்)

சற்குமியற் றமிழறி வாகரனுகி வந்த நம்பி
காளிக்கின்றியான்
விற்குமொரு பாத்திரமாய் விலையானேன்
வேங்கடமாம் வெற்பும் வீரர்

பொற்குவடெங் கயிலையுந் தென் பொதியையும்
போல் நம்மரபும் பூண்ட
நெற்குன்ற மெனும் பெயரு நிலைபெற வென்றதனை
யவனியினைப் புற்றோர்ந்தே.

—(புலவர் புராணம்)

என்னும் பாக்களால் அறியலாம்.

இக்கொடையானது, மாபலிச் சக்கரவர்த்தி வாமன ருக்கு அளித்த கொடையைப்போன்ற தென்றாலும், அதனை விடச் சிறந்ததென்றே கூறவேண்டும். ஏனென்றால், இக் கொடையானது காளிப்புலவர் கேட்காமலே அளித்தது. அந்தக் கொடையோ வாமனர் கேட்டுக் கொடுத்தது.

பாட்டுக்காகத் தலைதனைக் கொடுக்க உடன்பட்ட குமண னினும், உயிரைக்கொடுத்த நந்தியினும் நம் களப்பாளர் சிறந்த வராகின்றார்.

ஈதல்லோ கொடை! என்னே அவர் தமிழ்மொழியிடத்து வைத்திருந்த அன்பு!!

முதலியாருடைய தமிழ்மொழி அன்பு சொல்லும் தரத்த தன்று. இவருடைய கொடைச்சிறப்பை வியந்து சதகக் காரர் :—

" தேர்கொடுத் தோனும் பரிகொடுத்தும் திரு மனையில்
தார்கொடுத் தோனும் தலைகொடுத் தோனும் தமிழினுக்கா
வூர்கொடுத் தோனும் உயிர்கொடுத் தோனும் உதை கொடுக்க
மார் கொடுத் தோனும் அனைவோ ருளார் தொண்டை
மண்டலமே "

—(சதகம்-93)

அன்பர்களே! தமிழ் மொழியை நம் முன்னோர்கள் எவ்வளவு பாடுபட்டுக் காப்பாற்றியிருக்கின்றார்கள், பாருங்கள். ஊர் கொடுத்தும், உயிர் கொடுத்தும், தலை கொடுத்தும், தன் மனைவியைக் கொடுத்தும், தேர் கொடுத்தும், பரி கொடுத்தும், புலவர் உதைக்க மார்கொடுத்தும் தமிழ்மொழியை வளரச் செய்தார்கள்.

அவர்கள் மரபில் வந்த நாம் தற்காலம் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள இன்னலைக் கண்டும், அம்மொழியைக் காப்பாற்ற முன்னுக்கு வரவேண்டாமா?

தமிழர்களும், தமிழ் அன்பர்களும், தமிழ் அபிமானி களும், தமிழ்ப் புலவர்களும், தமிழ் ஆசிரியர்களும் வாளா விற் றிருப்பதேன்? விழிகொண்டு எழுந்து வேண்டுவன செய்து தமிழ் மொழியைக் கல்லூரிகளில் எல்லாம் கட்டாயப் பாடமாக வைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டாமா?

தமிழ் மொழிக்குப் பின்னிட்டு ஏற்பட்ட மொழிகளுக்கு எல்லாம் தனித் தனியாகப் பல்கலைக் கழகங்கள் இருக்க, நம் தேனினுமினிய செந்தமிழ் மொழிக்கு ஒரு பல்கலைக் கழகமாவது வேண்டாமா? அஃது இல்லாததினால் அன்றோ இந்திமொழியைக் கட்டாயப் பாடமாகத் தமிழ் நாட்டில் ஏற் படுத்துகிறார்கள்.

தமிழ் மக்களே! உங்களுடைய மொழி, கல்வி, நாக ரிகம் காப்பாற்றப் படவேண்டுமானால், இந்தி மொழியைக் கட் டாயப் பாடமாக என்றும் தமிழ் நாட்டில் வைக்கக் கூடாதென் றும், தனித் தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றும் கிளர்ச்சி செய்து அந்நோக்கங்கள் முற்றுப்பெற முயற்சிசெய் யுங்கள்.

நமக்குத் தேசியம் அவசியம் வேண்டும். தேசியம் வளர மொழி அவசியம். அவரவர் நாட்டு மொழியை விட்டுவிட் டால் தேசியம் ஏது? ஆகையால், அன்பர்களே! நெற்குன்ற வாணரைப் பின்பற்றி எப்படியாகிலும் மொழியைக் காப் பாற்ற முன் வாருங்கள்.

திருக்குறட் கண்டன உரைக்கு எதிர் உரை

[கருவூர் ஈழத்துச் சிவானந்த அடிகள்.]

"ஆழ மறியாமல் காலை யிடாதே" என்பது நமது பைந் தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று. இக்கொன்மொழிக்கு இலக்கானவர்களில் மைலாப்பூரில் இருந்து வெளிவரும் "இராமகிருஷ்ண விஜயம்" என்னும் பத்திரிகையின் ஆசிரி யரும் ஒருவராவர். இவர் ஈசுவர ஆண்டு வைகாசித் திங்களில் வெளிவந்த "இராம கிருஷ்ண விஜயம்" என்னும் ப்த்திரிகை யில் "திருக்குறளும் உபநிடதங்களும்" என்ற தலைப்பின்கீழ் உபநிடதங்களை உயர்த்தியும் திருக்குறளைத் தாழ்த்தியும் எழுதப்பட்ட ஓர் ஆராய்ச்சியற்ற புனைவுரையைப் பொறித்தி ருக்கிறார். இவர் தாம் ஒரு பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்திருத்தல்பற்றித் தாம் பெறும் ஊதியத்திற்காக ஏதா வது ஒன்று எழுதித் திர வேண்டுமென்ற கடப்பாட்டின் பேரி லேயே அதை எழுதியதாகத் தெரிகிறது. மக்கட்கு உண் மையை உணர்த்தும் முறையில் எழுதப்பட்ட ஓர் ஆராய்ச்சிக்

கட்டுரையாக அது பொலியவில்லை. மற்று, அதை அவர் எழுதப் புகுந்ததன் நோக்கம் தமிழையும், தமிழரையும், தமிழ் நூல்களையும் இழித்துப் பேசவும், ஆரியத்தையும், ஆரியரை யும், ஆரிய நூல்களையும் உயர்த்திப் பேசவுமே ஆசிரியர் தம் அழுக்கறிவைப் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவு.

இனி, ஆசிரியர் தாம் ஒரு பத்திரிகையை நடாத்தும் பொறுப்பை ஏற்றிருந்தும், அப்பொறுப்பையும் அதனால் மக்கள் எய்தும் பயனையும் ஒரு சிறிதும் நோக்கினாரில்லை. உலகறிய எழுதி வெளியிடும் ஒன்றன்கண் யாதாமொரு குற்ற மும் படாதொழிதல் நன்றாம் என்பதையும் உணர்ந்தாரில்லை. குற்றம் பெரிதும் விரவ எழுதப்படும் போலி உண்மைகளினால் தாம் உயர்ந்தவராகக் கருதப்படலாமென்ற நோக்கத்துடன் அதனை எழுதி வெளியிட்டிருப்பாராயின், அவர் நோக்கம் இன்றைய விழிப்படைந்த ஆராய்ச்சி உலகால் எள்ளி நகை யாடப்படுமேயன்றித் தழுவிக் கொள்ளப்படாததென்பதை யாவது அவர் அறிந்தாரில்லை. நிற்க.

ஆசிரியர் அவர்கள் திருக்குறள் ஒன்று மட்டுமே பொது மறையாகக் கருதப்படுகிறதென்றும், உபநிடதங்கள் அங் ஙனம் கருதப்படுவதில்லை என்றும் அழுக்காறடைகிறார்; உண்மை. சாதி, நிறம், வகுப்பு, மதம் என்ற எல்லாப் பிரி வினைகளையுங் கடந்து அன்புருவாய் நின்று, அறம் வளர்த்து அருளாட்சி புரிந்த எம் பொய்யில் புலவரால் ஆக்கப்பெற்ற திருக்குறள் என்னும் சிறந்த நூலானது, தான் தோன்றிய நாள்தொட்டு இந்நாள் வரை பல்கோடி மக்கள் மனத்தைப் பண்படுத்துதலாஞ் செயற்கரு முதவியைச் செய்து வருவ தாலும், இனியும் அங்ஙனம் செய்யும் இயல்பும் எழிலும் உடையதாலும், நிறப்பிணக்கு, சாதிப்பிணக்கு, சமயப்பிணக்கு முதலிய பிணக்குகளால் அன்பும் ஒற்றுமையும் இழந்து துன் புறும் மன்பதைகட்கு எப்பொருளுள்ளும் மெய்ப்பொருளை இனிது புலப்படுத்தி, அதன் வாயிலாக அன்பையும் இன்பை யும் பெருக்கும் அருட்பெருங் களஞ்சியமென யாவராலும் யாண்டும் கருதப்பட்டு இலகுவதாலும், எந்நெறி நிற்போருங் கொள்ளத்தக்க குறிக்கோளைக் காட்டுவதுடன் அதனை அடை தற்குரிய ஒழுகலாற்றையும், சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் இனிமையும் எளிமையும் செறிய எழுதப் பலவகை யாலும் இடந்தரும் இயற்கை மொழியாஞ் செந்தமிழால் ஆக் கப்பெற்று, ஐயந்திரிபற விளக்கும் ஆற்றலுடைமையாலும் உலகியல், நீதி, அரசியல், நால்வகைப் பொருளாதிய அனைத் தும் ஒரு சிறிதும் எஞ்சுதலின்றி விளக்கி, எல்லாச் சமயத்தார்

களும் ஒப்பும்படியாகத் தன்னிகரில்லாத் தனித் தலைமை பெற்றுத் திகழ்வதாலும், பொதுவாய் உலக மக்கள் அனைவரும் ஓதியுணர்ந்து, அவ்வுணர்வின்வழி ஒழுகவல்ல செம்மைகளே அந்நூலின்கணுள்ள 9310 சீர்களிலும் அமைந்து கிடப்பதாலும் திருக்குறள் ஒன்று மட்டுமே பொதுமறை எனக் கொள்ளத் தகும். இன்னும் திருக்குறள் பொதுமறையாதல் யாங்ஙனம் என்பதுபற்றிச் சான்றுகள் காட்டப் புகின் இது மிக விரியுமென்றஞ்சி விடுத்தாம்.

இனி, ஆரியர்கள் கையாண்டுவந்த கொடுஞ்செயல்களாகிய வெறியாட்டு வேள்விகளையும், சிறு தெய்வ வணக்கத்தையும் தவிர்க்கும் பொருட்டுத் தமிழ்ச் சான்றோர்களால் இயற்றப்பட்ட ஈச, கேந, பிரசின, முண்டக, மாண்டுக்கிய, தைத்திரீய, பிருகதாரணியக, சாந்தோக்கியம் முதலான மிகப் பழைய அறிவு நூல்களும், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், யோகம், வேதாந்தம் முதலான மெய்ப்பொருள் ஆராய்ச்சி நூல்களும் முறையே உலகு, உயிர், கடவுள் என்னும் மூன்றன் இயல்புகளை உள்ளவாறு ஆராய்ந்து மெய்யுணர்வு வரப்பெற்று, இன்ப வடிவினதாகிய சிவத்தை அடைதலே மக்கட் பிறப்பெடுத்த தன் பயனுமென்று இங்ஙனம் உண்மையையே எடுத்தோதினும், அவை தம்மில் எல்லாம் குற்றங் காணுதல் இயலாதாயினும், அந்நூல்கள் பெரிதும் ஒரு சமயத்தைச் சார்ந்து அச்சமயநெறி நிற்போர்க்கே உறுதிப்பயன் அளிக்கும் என்பதாகக் கூறப்படும் முடிபுகளோடு காணப்படுவதால், அவை எல்லாச் சமயத்தவர்க்கும் ஒப்பமுடிந்த கொள்கைகளோடு கூடிய உரிய பொதுமறை எனக் கொள்ளுதல் சாலாது.

ஆரிய மொழியிலுள்ள உபநிடத முதலிய தூய நெறி கற்பிக்கும் அந்நூல்களைத் தமிழர்தாம் இயற்றினர் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள. யாம் கூறுவது உண்மையா அல்லவா என்று அறிய விரும்புவோர், அவர்கள் தாந்தாமே அந்நூல்களையும் ஆரியர்களால் இயற்றப்பட்ட ஏனைய வேதோபநிடதம் முதலான நூல்களையும் நேர்முகமாக ஒப்புநோக்கிப் பார்த்து ஓர் ஐயமுமற்ற முடிபுக்கு வருதலே நலம். அவை தம்மை எல்லாம் ஈண்டெடுத்துக் காட்டப்புகின் இது மிக விரியும்.

இனித், திருக்குறள், மேலே கூறப்பட்ட உபநிடதங்கள் தேவாரம், வேதாந்த சூத்திரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் ஆகிய எழு நூல்களும் ஒரே முடிவை இலக்காகக் கொண்டிருக்கும்போது, அவைகளுள் ஒன்றை

மட்டும் பொதுமறை என்பது முறையன்று என அவ்வாசிரியப் பெருந்தகை கரவாகக் கரைகின்றார். ஈண்டு எடுத்துக் காட்டாக அவ்வேழு நூல்களுள் வேதவியாசரால் இயற்றப்பட்ட வேதாந்த சூத்திரத்தை எடுத்துக் கொள்வோம். இவ் வேதாந்த சூத்திரத்தின் முடிபும் திருக்குறளின் முடிபும் ஓரோர் வகையில் ஒத்திருப்பினும், அந்நூலுக்குப் பாடியஞ் செய்தோரின் திரிபுகளால் அது பொதுமறையென்று கொள்ளுதற்கு ஏலாதாயிற்று. அந்நூலுக்குப் பாடியங்கள் செய்தோர் நீலகண்ட சிவாசாரியர், சங்கராசாரியர், இராமானுசாசாரியர், மத்துவாசாரியர் ஆகிய நால்வர் ஆவார். இந்நால்வர் பாடியங்களுள்ளும் சைவர்களாற் கொள்ளப் படுவது நீலகண்ட பாடியம்; சுமார்த்தர்களாற் கொள்ளப் படுவது சங்கர பாடியம்; வைணவர்களாற் கொள்ளப்படுவது இராமானுச பாடியம்; மாத்துவர்களாற் கொள்ளப்படுவது மத்துவ பாடியம்.

இங்ஙனம் பொதுவகையில் ஒரு சமயத்தைச் சார்ந்த இவர்களே சிறப்புவகையில் தாம் வழிபடு கடவுட்கும் ஏற்புடைக் கடவுட்கும் ஏற்றவாறு ஒரு பொருளையே குறிக்கும் ஓர் உண்மையைப் பல வகையில் திரித்துப் பொருள் கூறி, ஒருவரின் கொள்கை இன்னொருவரின் கொள்கைக்கு ஒவ்வாத தாகப் பேசிக் கலாம்விளைப்பார்களென்றால், இந் நூல்கட்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கைளோடுகூடிய ஏனைச் சமயத்த வர்க்கும் நாட்டவர்க்கும் அந்நூல்கள் ஒப்பமுடிந்த பொது மறைகளாக வைத்து வழங்கப்படுதல் யாங்ஙனம் இயலு மென்பதை அவ்வாசிரியர் உணராது இங்ஙனம் கரைவது பெரிதும் வருந்தத்தக்கதே.

> "சமயக் கணக்கர் மதிவழி கூறா
> துலகியல் கூறிப் பொருளிதுவென்ற வள்ளுவர்"

என்று கல்லாடத்திற் கூறப்பட்டுள்ள உண்மையும் ஈண்டு நோக்கி உணர்தற்பாலது.

இனி, மேலே கூறப்பட்ட ஏழு நூல்கட்கும் மற்றுஞ் சில பழந்தமிழ்க் காவியங்கட்கும் மேனாட்டுப் பேரறிஞரான ரெவரெண்ட் ஜி. யு. போப் போன்ற துரைமக்கள் தக்க பெருமை அளித்து அவற்றுட் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் விரிவுரைகள் எழுதியும் உலகறியச் செய்தனராயினும், அவை எல்லாம் திருக்குறளோடொப்ப உச்ச நிலையைப் பெற முடியாது போயின. காரணம்: அவற்றுட் பெரும்பான்மை சாதிப் பிளவுகளும், சமயப் பாகு

வரலாற்றுப் பகுதி: History & Biography

மூன்றாவது இராசேந்திர சோழதேவன்
(கி. பி. 1246—1268)

[வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார்]

தோற்றுவாய் :—மூன்றும் இராசேந்திர சோழதேவன். பிற்காலச் சோழர் குடியின் இருபத்து நான்காவது அரசர், விசயாலயனால், பல்லவரதிகாரத்தினின்றும் மீட்கப்பட்டு உரிமையோடு தனியரசு செலுத்திவந்த பிற்காலச் சோழர் குடியின் கடைசி அரசர் இவரே. இவர் மூன்றும் இராசராச சோழ தேவனுக்கு மகன்.

வரலாறு :—மூன்றும் இராசராச சோழதேவன் விண்ணுட்டுக் கேகலும், அவருக்கு மகனாகிய இவர் கி. பி. 1246-ல் அரசெய்தினர். இவர் தம் மாமனாகிய வீரசோமீசுவரனோடு பகைத்து, அவனைத் தம் காலில் விரக்கழலைப் பூட்டும்படியான தாழ்ந்த நிலைக்குக் கொணர்ந்தார். சேர, பாண்டிய வேந்தர்களை வென்றார். இவர் கி. பி. 1268-ல் இறந்தார்.

இறைமாட்சி :—சேரன், பாண்டியன், ஒசளவீர சோமீசுவரன் ஆகியவர்களை வென்று வாகை மிலைந்தார்.

கல்வி நிலை :—தமிழ்ப் புலவர் பலரைத் தம் அவைக்கு அணியெனக் கொண்டிருந்தார்.

கடவுட் கோட்பாடு:—இவர் சைவர். பிற சமயத்தவரைத் துன்புறுத்தாத நற்கொள்கையினர்.

காலம் :—தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய கோட்டங்களில் காணும் இவருடைய கல்வெட்டுக்களிலிருந்து இவர் கி. பி. 1246 முதல் 1268 முடியவுள்ள இருபத்திரண்டு யாண்டுகள் செங்கோலோச்சினர் என்பது தெரிகிறது.

நாட்டினளவு :—கிழக்கில் கடலுக்கும் மேற்கில் கோட்டைக் கரைக்கும், தெற்கில் இராமேசுரத்திற்கும், வடக்கில் வடவெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நாடு இவராட்சியிலிருந்தது.

முடிவுரை :—இவர் மிக்க பொறுமையாளர். பரந்த நோக்கம் உடையவர். தம் மாமனைப் பகைத்துக் கொண்டதால் இவரது வலி விரைவில் குறையத் தொடங்கியது. இவரோடு சோழர் குடியின் மேம்பாடு ஒழிந்தது.

காரைக்காலம்மையார் புராணம்

[வித்துவான் S. G. மதுரை நாயகம்]

[இது, சென்னை, திருப்புகழாமிர்தம் ஆசிரியர் துகஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களால் 29-9-37-ம் தேதியில் திருநெல்வேலியில் நிகழ்த்திய சொற்பொழிவை யொட்டி எழுதப்பெற்றது.]

முன்னுரை

ஆதியும் அந்தமும் இல்லாதவனும், தனக்கென ஒன்று வேண்டுதல் வேண்டாமை யில்லாதவனும், எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து அருள்புரிந்து வருபவனும், வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுக்கும் பேரருள் வாய்ந்தவனுமாகிய சிவபெருமான் உலகிற்கு முதற்கடவுள் ஆவன். அப்பெருமான் தனக்கொரு தாய் இல்லையே என்று எண்ணினன். நம் காரைக்காலம்மை அவருக்கு ஓர் ஒப்பற்ற தாயாரானள். தாயில்லாக் குழந்தைக்கு இவ்வுலகவாழ்வில் இன்பம் கிடைப்பதில்லை. தாயில்லாக் குழந்தைகளை அடித்தால் அவர்களைத் தேற்றி, நல்லுரை கூறுவதற்கு வேறு யாருளர்? நம்பெருமான் தாய் தந்தையில்லாத காரணத்தால் பல துன்பங்கள் பட்டார். வில்லால் அடிபட்டார், கல்லால் அடிபட்டார், செருப்புதை பட்டார், பிரம்படிபட்டார். இவ்வித துன்பம் அடைந்தபடியால் நாம் அம்மா என்றழைக்க ஒரு தாயைப் பெற்றிலோமே, நமக்கொரு தாயார் இருந்தால் இங்ஙனம் துன்பப் படுவோமா என்று எண்ணிய பெருமானுக்கு, நம் காரைக் காலம்மையார் தாயாராக ஆனது சால்புடையதேயாகும். இதுநிற்க.

சோழவளநாட்டில் காரைக்கால் என்னும் பதி ஒன்று உண்டு. அது கடலோரத்தில் அமைந்து, பல்வளங்களும் நிறையப்பெற்று விளங்குவதாகும். அதில் வாழும் மக்களெல்லாம் செல்வப் பொலிவால் வறுமையின்றி வாழ்ந்துவந்தார்கள். ஆலயங்கள் தோறும் விழாவும் பூசையும் செம்மையாய் நடைபெற்றுவந்தன. அறச்சாலைகள் பல வந்தவர்களுக்கெல்லாம் உணவளித்துவந்தன. இல்லறமே நல்லறமாகக் கொண்டோர், அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல் முதலிய தருமங்களை வழுவாது செய்துவந்தார்கள். இங்ஙனம் மக்களெல்லாம் மகிழ்வோடு வாழ்ந்துவந்ததால் அப்பதியினல் அந்நாடு பொன்னுடென விளங்கிற்று. அப்பதியில் வணிகர் குலத்திற்கெல்லாம் தலைவனுக ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் பெயர் தனதத்தன். அவன் எல்லாப் பேறுகளையும் பெற்று அந்நகரில் தன் மனையாளுடன் இனிது வாழ்ந்துவருங்கால்,

அவர்களிருவர்க்கும் நெடுநாளாக ஒரே ஒரு குறைவுமட்டும் இருந்துவந்தது. அது தங்கட்கு என ஒரு மகவும் இல்லாததே ஆகும். ஆதலால் ஆண்டவன் எல்லாப்பேறுகளையும் நமக்குக் கொடுத்துவைத்தும் புத்திரப்பேறு ஒன்று அருளவில்லையே! அப்பேறு இல்லையானல் இவ்வுலகில் என்ன இன்பம் இருக்கின்றது. உலகில் இல்லறத்தில் நிற்போர் புத்திரபாக்கியத்தினாலன்றோ மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்று எப்பொழுதும் சிந்தித்தவர்களாய், ஆண்டவனை நோக்கி,

எம்பெருமானே! கருணைமூர்த்தியே! உன்னை வேண்டுவார்க்கு வேண்டுவன நீ அளிப்பவனல்லவோ! நாங்கள் உன்னையே இரவுபகலாக நினைந்து வாழ்த்தி வழிபட்டுவருகின்றோமே! எங்கள் குறைகளை நீ என்று நீக்குவாயோ, இனிய குதலைமொழியால், தேன்கலந்தாற் போன்று கொஞ்சிக் குலாவி விளையாடி மகிழூட்டும் அருமை மகவினைப் பெறுதார்க்கு இல்வாழ்க்கையில் யாதொரு இன்பமுங் கிடையாதே! ஆதலாலன்றோ,

> "கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
> சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்துபற்றி
> மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்த
> ரில்லாத வர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்."

—(பாரதம்)

என்று பெரியோர்கள் கூறி இருக்கின்றார்கள். அம்மட்டோ,

செல்வம் பலவற்றையும் படைத்துப் பலருடனே கூட உண்ணும் உடைமை மிக்க செல்வ முடையோராயினும், குறுகக் குறுக நடந்துசென்று, சிறிய கையை நீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலே யிட்டும், கூடப்பிசைந்து தோண்டியும், வாயாற் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யையுடைய சோற்றை உடம்பின்கட்படச் சிதறியும், இங்ஙனம் அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வரைப் பெறுதார்க்கு இவ்வுலகில் பயனாகிய முடிக்கப்படும் பொருளில்லையன்றோ! இதுபற்றியன்றோ நம்முன்னோர்கள்,

> " படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணு
> முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
> குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
> யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
> நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
> மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
> பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளே "

—(புறநானூறு 188)

என்று தம் அனுபவத்தாற் கண்டதை எடுத்து உரைத்திருக்கின்றார்கள். ஆனால்,

"மதலையைப் பெறுநாட் டுன்பம் வளர்த்திடு நாளுந்துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம் வியன்பரு வத்துந் துன்பங்
கதமுறு காலர் வந்து கைப்பற்றிற் கணக்கி றுன்பம்
இதமுற லென்னாள் சேயால் எற்றைக்குந் துன்பமானல்"

—(குசேலோபாக்கியானம் 118)

என்றபடி, குழந்தைகளைப் பெற்றுப் பல துன்பங்கள் அடையவினும், அக்குழந்தையைப் பெருதிருத்தலே சால்புடைமையாகாதோவெனின், அற்றன்று. பழியொடுபடாத நன்மகாரையடைந்தோர் எழுபிறவியினும் துன்பம் அடையமாட்டார் என்றல்லவா தமிழ்மறை கூறுகின்றது.

'எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்'.　　— (திருக்குறள்)

ஆதலால் எங்கட்கொரு நன்மகவு தேவரீர் அளித்தருள வேண்டும், "அம்மா அப்பா என்றுகந்தழைக்கும் மதலையின் மழலைச்சொல் கேட்கும்" பாக்கியத்தை அளித்தருளவேண்டும்,

"தென்புல வாழ்நர்க் கறுங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறுநீர்"

என்ற நவைமொழி எங்கட்கு உண்டாகாதிருக்க வேண்டும் என்று சிவபெருமானிடத்தில் அவர்கள் குறையிரந்து நின்றூர்கள். ஆண்டவனும் அவர்களிடத்தில் அருள் பாலிக்க, தனதத்தன் மனைவியார் வயிறு வாய்க்கப்பெற்று நற்கோள் வாய்ந்த நன்னளில் ஒரு பெண்மகவை யீன்றாள்.

ஆண்டவனருளால், வணிகர் பெருங்குலம் விளங்க, வந்து பிறந்தருளிய அம்மகவினைக் கண்ட தாயும் தந்தையும் இன்றே நாம் இவ்வாழ்க்கையின் பயனைப் பெற்றேம்; இன்றே நமது பிறவி பயனுடையதாயது எனப் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். அக்குழந்தையைக் கண்ட உற்றாரும் உறவினரும் நங்குலத் தலைவனது அறச்செயல் இன்றே பயனுடையதானது; அவர்கள் செய்த தவமே நற்றவம் என்று புகழ்ந்து கூறி, மகிழ்ந்தார்கள். அக்குழந்தைக்குப் புனிதவதியார் என்று பெயரிட்டு அழைத்தார்கள். புனிதவதியாரும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து, மதலைமொழி பயின்று தளர்நடையுற்றுப் பெற்றோர்க்கு மகிழ்வூட்டினள். குழலினும் யாழினும் இனிய மழலைச்சொற் பேசும் பருவம் நீங்கி, அவ்வம்மையார் அழகின் கொழுந்து தளிர்விட்டு வளர்

றதும், நிதிபதி தனது மகனையும் மருகியையும் தம்மூர் அழைத்தேக வேண்டுமென்றும், அதற்குத் தாங்கள் விடையளித்தருளவேண்டுமென்றும் அம்மையாரின் தந்தையாராகிய தனதத்தரிடம் தெரிவித்தார். இவ்வார்த்தையைக் கேட்ட தனதத்தரது மனம் அம்மையாரை விட்டுப்பிரிய நேர்ந்ததைக் குறித்துப் பெரிதும் வருத்தமுற்றது. அவர் எனதருமையான இவ்வொரு புதல்வியையும் விட்டுப்பிரிய நான் எவ்வாறு சகிப்பேன் என்று எண்ணினர். ஆதலின் தனதத்தனர், எனது மகள் புனிதவதியார் எம்குடிக்கொரு அரும்புதல்வி யாவள். அவளை விட்டுப் பிரிய எனக்கு மனம் வரவில்லை. அவர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்துத் தனி மனையில் வாழ்க்கை நடத்தும்படி செய்ய எண்ணியுள்ளேன். தாங்கள் அதற்கு அநுமதியளித்தல் வேண்டுமென நிதிபதியை வேண்டிக்கொண்டார். அவரும் சம்மதித்தார். உடனே தனதத்தர், தனி மனை ஒன்று கட்டுவித்து வேண்டிய செல்வங்களும் கொடுத்து, மகளைக் கணவனுடனிருந்து இல்லறம் நடத்தச் செய்தார்.

பரமதத்தன் தன் மனைவியாரோடு இல்லறத்திலிருந்துகொண்டு தன்குலத் தொழிலாகிய வாணிகஞ்செய்து பொருள் தேடிவந்தான். புனிதவதியார், பரமதத்தனது வாழ்க்கையருந்துணையாக இருந்து இல்லறமே நல்லறமாகக்கொண்டு இனிதுற வாழ்க்கையை நடத்தி வந்தார். சிவபெருமானிடத்திற் பெருகிய அன்புடையராதலின், நாடோறும் அவர் புகழைப் பாடி மகிழ்வார். அன்றியும்,

நம்பரடி யாரணைந்தா னல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுநாள்.

இவ்வாறு அம்மையார் தன்கணவனுடன் இல்வாழ்க்கையிலிருந்து அடியார் பத்தியிலும், அடியவர்க்கு அமுதூட்டி வேண்டுவன கொடுத்து உபசரித்தலிலும், சிவபெருமானை வழிபட்டு,

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்'

ஆகிய மனையறத்தின் பண்புகள் குன்றாது செய்துவந்தார்.

'யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே' —(திருமூலர்)

என்ற அருங்கருத்தை உணர்ந்தவராதலின், யாவரேனும் துன்பத்தால் வருந்துவதைப் பார்க்க மனங்கொள்ளார். அவர்கள் துன்பத்தை நீக்கி அன்புரையாடி ஆதரிப்பார். இவ்வாறிருக்க,

ஒருநாள், பரமதத்தனது நண்பர் இருவர் இரு மாங் கனிகளுடன் அவனைக் காணவந்தார்கள். அவர்கள் அவனிடம் அக்கனிகளைக் கொடுத்து, தம் குறைமுடித்துச் சென்றனர். பரமதத்தன் அக் கனிகளிரண்டையும் தம் இல்லத்துக்கு அனுப்பினான். கணவனால் அனுப்பப்பட்ட அக்கனிகளிரண் டையும் அம்மையார் வீட்டில் வாங்கி வைத்தார். சிறிது பொழுதில், அம்மையார் அரவம்புனைந்தருளும் அண்ணல் தன் தொண்டர் ஒருவர், பசியால் களைப்படைந்து, மனம் சோர்ந்து கால்தள்ளாடியவராய், உணவின்மிகு வேட்கையோடு தன்மனை புகுவதைக் கண்டார். கண்டதும், அம்மையார், வேதங்கள்மொழிந்த பிரான் மெய்த்தொண்டரன்றோ இவர்; இவரது பசியை நான் தீர்ப்பேன் என எழுந்தார். விரைந்து ஓடி வரவேற்றார். இன்னுரை கூறினார். பாதங்கழுவ நீரளித் தார். பரிகலம் அமைத்தார்.

அப்பொழுது கறியமுது ஒன்றும் கைகூடாது திருவமுது மட்டும் கைகூடியிருந்தது. அம்மையார், அடியாரின் பசி மிகுதி யைக்கண்டு பொறுதவராய்,

> 'விடையவன்றன் அடியாரே
> பெறலரிய விருந்தானாற் பேறிதன் மேலில்லையெனு
> மறிவினராயவர் அமுது செய்வதனுக்கு ஆதரித்து'

திருவமுது படைத்து ஆடைத் தயிரிட்டு, தன் கணவனால் முன்னே அனுப்பிவைத்த மாங்கனிகளிரண்டில் ஒன்றைக் கொடுவந்து படைத்து, மனமகிழ்ச்சியோடு அருகிலிருந்து இன்மொழி புகன்று அமுது செய்வித்தார். அம்மையார் படைத்த இன்னடிசிலையும் அம்மாங்கனியையும் அருந்திய தொண்டனார் களைதீர்ந்தார். அம்மையார் அடியாரிடம் கொண்ட அன்பையும் பக்தியையும் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்திச் சென்றார்.

(தொடரும்)

அறிவியற் பகுதி - Science

இந்தியும், இந்திய தேசியமும்

[ரேவரண்டு அருள்தங்கையா மொழிபெயர்த்தது]

இன்று இந்தியாவில் பல்வித மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. இந்நாளில் எல்லாவற்றிலும் பொது மொழி பற்றியே சிறிதும் தெளிவற்ற கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இந்நிலைக்கு மற்றைய தலைவர்களினும் காந்தியடிகளே பொறுப்புடையராவார். அவரே தேசிய விடுதலையோடு இந்தியையும் ஒரு நிலைப்படுத்திப் பேசத் தொடங்கினர். எனவே இந்தி பரப்பும் முயற்சி காந்தியடிகளின் துணைபெறுவதாயிற்று. 'இந்தி' நாட்டுப்பொதுமொழியென்றும், அம்மொழி பயில்வதால் மற்ற மொழிகள் வளம் அடைவனவாகும் என்றும் சொல்லப்படுவவாயிற்று. துளசிதாசரின் இந்தி இராமாயணத்தால் தென் இந்திய மொழிகள் வளர்ச்சியுறும் என்று சொல்வது பொருந்தாது. அவ்வாறாயின் வங்காள மொழியாலும், ஜப்பான் மொழியாலும், டச்சு மொழியாலும் தென் இந்திய மொழிகள் நலமடையக்கூடும். இந்தியிலுள்ள இலக்கியங்களேனும் அவற்றுள் இருக்கக்கூடுமன்றோ? இந்தியால் ஏற்படும் கலைவளம் அவற்றாலும் ஏற்படாதோ?

சென்னையில் கூடிய இந்தி மாநாட்டில் இந்தியைப் பரப்புவதுபற்றிப் பல்வேறு வியப்பூட்டும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. திரு. பஜாஜ், "வட நாட்டில் சிலர், தென் இந்தியர் இந்தி கற்றுவிட்டால் வட நாட்டில் வேலை பெற முயல்வர்; வட நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகும் என்று சொல்லிக் கிளர்ச்சி செய்கின்றனர். எனக்கு அது பற்றி அச்சம் ஒன்றும் இல்லை" என்று சொல்லியுள்ளார்; திரு. இராஜகோபாலாச்சாரியார் இந்திப் படிப்பால் தென் இந்தியரது வேலைத்திண்டாட்டம் தீரும் என்று சொல்லியுள்ளார். எனவே துளசிதாசர் இராமாயணத்தைப் படிப்பதற்காகவன்று; வேலைத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக இந்தி படிக்கவேண்டும் போலும்.

தலைவர்கள் அரசியல் நோக்கம் ஒன்றே கருதித் தென் இந்தியாவில் இந்தியைப் பரவச் செய்தல் வேண்டும்; இல்லாவிடில் இதைப்பற்றிப் பேசுதல் ஆகாது.

திரு. பஜாஜ் "தென் இந்தியர் கூர்த்தமதி படைத்தவர்கள்; வட நாட்டார் போர் செய்யும் இயல்பு வாய்ந்தவர்கள்; 'இந்தி' பொது மொழியாயின் இவ்விரு இயல்புகளும் ஒன்று சேரப்பெறும்" என்றும் சொல்லியுள்ளார். சென்னையிலுள்ள நாட் செய்தித்தாள் ஒன்றில் தென் இந்தியத் தலைவர்கள் வட இந்தியாவில் தலைமையும் சிறப்பும் பெறுமைக்குக் காரணம் இந்தி பேசக் கூடாதிருந்ததலே என்னும் கருத்து உரைக்கப் பட்டுள்ளது. அவ்வாறாயின் தமிழேனும் தெலுங்கேனும் அறியாத காந்தியடிகளுக்கும் ஜவஹர்லால் நேருக்கும் தென் நாட்டில் தலைமையும் சிறப்பும் எப்படி ஏற்பட்டது?

திரு. முன்ஷி திராவிட மொழிகளில் வட மொழி இயல்களை வலியுறுத்துதலால் அம்மொழிகளை இந்தியாக்கி விடலாம் என்று கருதுகிறார். "கன்னடமும், தெலுங்கும் மலையாளமும் பெரிதும் வடமொழி இயல்களை உடையனவாக இருத்தலால் அம்மொழிகள் தேவநாகரி எழுத்தில் எழுதப்பெற்றால் வடமொழியின் இனமொழிகளைப் பேசுவோர் சிறிது அறிந்துகொள்ள முடியும். இவற்றில் காணக் கிடக்கும் பொதுவான வடமொழி இயல்களால் இம்மொழிகளின் அடிப்படையான ஒருமைப்பாட்டை ஏற்படுத்திவிடலாம். பொதுவான வடமொழி இயல்களை வலியுறுத்துவதற்கு நாம் ஏன் தயங்கவேண்டும்? நமது மாகாண மொழிகள் வடமொழி இயல்கள் நீங்கப்பெற்றால் வளமும் அழகும் குன்றப்பெறும்" என்றும் திரு. முன்ஷி கூறியுள்ளார். திரு. முன்ஷி தமது குஜராத்தி மொழியில் எத்தகைய நடை எழுதுகின்றார் என்று நம்மால் சொல்லமுடியாது. எனினும் அவருக்கு ஒன்று உறுதியாகக் கூறமுடியும். கன்னடமும், மலையாளமும், தெலுங்கும் வடமொழி இயல்களை வலியுறுத்த விரும்பவில்லை; வடமொழியினின்றும் விடுதலை பெறவே விழைகின்றன.

திரு. புருடோத்தம தாசும், மற்றும் சிலரும் இந்தி மொழியை மிக எளிதாக்கும்படி அதன் இலக்கணத்தில் சில மாற்றங்கள் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். திரு. ஆச்சாரியாரோ இந்தி அறியாத சிலர் பொருட்டு அத்தகைய மாற்றங்கள் செய்துவிடல் ஆகாது என்று சொல்லிவிட்டார்.

சிலர் இந்தியமொழிகளுக்கு எல்லாம் ஒரே எழுத்து ஏற்படுதல் வேண்டும் என்று சொல்கின்றனர். சிறுபான்மை வகுப்பினர் பல்வேறு மொழியாளர் இவர்களின் நலன்களும்,

மொழிகளும், எழுத்துக்களும் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்னும் அடிப்படையான உரிமை பற்றிய காங்கிரஸ் தீர்மானம் இன்றும் இருக்கின்றது. அவ்வாறிருப்ப, இந்திக் கிளர்ச்சியாளரின் நோக்கத்தையும் கருத்துக்களையும் நாம் பாராட்டமுடியாது. இந்திக் கிளர்ச்சியின் அடிப்படைக் கொள்கைகளில் குழப்பம் காணப்படுகின்றது; தெளிவு இல்லை. அது காலத்துக்கு ஏற்றதும் அன்று; அதன் முறை ஒழுங்கானதும் அன்று.

ஆங்கிலத்தைப் பற்றிய வெறுப்பால் மாத்திரம் இக் கிளர்ச்சி செய்தல் தவறு. ஆங்கிலம் பொதுமக்களுக்கு விளங்காது என்பது உண்மையே. பல்வேறு மொழிகள் வழங்கும் நாட்டில் வடநாட்டுத் தலைவர் தென்நாடு வரும் போதும் தென்நாட்டுத் தலைவர் வடநாடு செல்லும் போதும் மொழிபெயர்ப்புச் செய்யத்தான் வேண்டும். மிக முக்கிய செயல்கள் செய்யவேண்டிய இக்காலத்தில் இந்திப் பயிற்சியில் பொழுதுபோக்குவானேன்? தென் இந்தியத் தலைவர்கள் ஆங்கிலத்தில் பேசுங்கால் ஆங்கிலமுணர்ந்த வடநாட்டாரால் ஏன் தேசிய உணர்ச்சி இல்லாராகக் கருதப்படல் வேண்டும்? வட நாட்டில் பேசுதற்கு இந்தி வேண்டுமோ? அவர்களுக்கு ஆங்கிலம் விளங்காவிடினும் மொழிபெயர்ப்பாளரை வைத்துக் கொள்ளலாமே. திரு. பிரகாசத்தையும் திரு. சத்தியமூர்த்தியையும் இந்தியில் உளறச் செய்வதினும் ஆங்கிலத்தில் பேசச் சொல்லலாமே.

தென் இந்தியத் தலைவர்கள் இத்தகைய பொறுப்பற்ற சர்வாதிகார முறைகளுக்கு ஏன் தலைவணங்குதல் வேண்டும்? காங்கிரசில் அரசியல் பேச்சு நிகழவேண்டியதே முதன்மையான நோக்கம். அஃது எம்மொழியில் நிகழ்ந்தாலும் நோக்கம் நிறைவேறினல் போதும். காங்கிரஸ் மகாசபை இந்தி பிரசார சபையின் பிழ்த்தரமான உறுப்பன்று. இவ்வுண்மையைத் தென்னாட்டுத் தலைவர்கள் ஏன் அழுத்தமாகக் கூறுதல் ஆகாது? ஏன் இந்தியைப் பற்றி வரம்பு கடந்து அழுத்திக்கொண்டு இருத்தல்வேண்டும்? ஆங்கில மொழி இன்றும் இருக்கிறது. இக்காலக் கலைகளுக்கும், அரசியல், பொருளியல் ஆராய்ச்சிக்கும் இன்றும் ஆங்கிலம் உதவுகிறது. சிலர் மேல்நாட்டுக் கலையினின்று இந்நாட்டுக் கலைகளை விடுவித்தல் வேண்டும் என்று சொல்லுகின்றனர். அவ்வாறுபின் இந்தி எதற்கு? தாய் மொழியே நாட்டுக் கலை வளர்ச்சிக்குத் துணைசெய்யக் கூடியது. அத்தகையோர் தாய்மொழியையே பாதுகாக்க வேண்டும்.

இந்திக் கிளர்ச்சித் தலைவர்கள் முப்பத்தைந்து கோடி மக்களும் இந்தி பேசச் செய்துவிடலாம் என்று கருதுகிறார்களோ? "யாவரும் இந்தி மனப்பான்மை உடையோராகச் செய்ய வேண்டுவதே இந்தி பிரசார சபையின் நோக்கமாகும் என தட்சண பாரத இந்தி பிரசார சபையின் அமைப்பாளர் (இந்துப் பத்திரிகை 1937 ஆகஸ்டு 20) எழுதியுள்ளார். இன்று இந்தியர்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு மேற்பட்ட மக்கள் எழுத்தறியாதவர்கள். இந்திப் பிரசார சபையார் முதலில் தென்னிந்தியாவில் எழுத்தறியாதார் இந்தி எழுத்தை அறியுமாறு செய்யப் போகின்றார்களா? இல்லாவிடில் பள்ளிக்கூடங்களுக்குப் போகும் பிள்ளைகள் தொடக்கப் பள்ளிக்கூடத்திலேயே இந்தியையும் தாய் மொழியையும் சேர்த்துப் படிக்கச் செய்யப் போகிறார்களா? தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகள் தேவநாகரி எழுத்திலேயே பிள்ளைக்குச் சொல்லிக்கொடுக்கப்படல் வேண்டும் என்று நினைக்கிறார்களா? தென் நாட்டில் படையெடுக்குமுன் இந்தி பிரசார சபையார் இக்கேள்விகளுக்கு விடையிறுத்தல் வேண்டும். ஒரு மொழியால் இந்திய ஒற்றுமையை நிலைநாட்டி விட முடியாது. அத்தகைய மொழிஒற்றுமை நடைபெறக்கூடியது மன்று. அது வேண்டியதுமன்று. மொழி வரலாற்றில் ஒரு மொழி பல மொழிகளாக வளர்ந்து இருக்கிறதைக் கண்டிருக்கின்றோமேயன்றி, பல மொழிகள் ஒன்றானதைக் கண்டிருக்கின்றோமில்லை; இந்தியைப் போலவே வங்காளி, மராத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், ஒரியா, குஜராத்திமுதலிய பல்வேறு மொழிகளுக்கும் உயிர் வாழும் உரிமையில்லையோ? கலைக்கும் அறிவுக்கும் உரிய மொழிகளாக வளரும் உரிமையில்லையோ? மொழிவழி மாகாணங்களைப் பிரிக்க வேண்டுவதும், ஒவ்வொரு மாகாணத்தில் உள்ள தாய் மொழியே சட்டப்பேரவையிலும், வழக்கு மன்றங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், ஆட்சித்துறையிலும் வழங்கப்படும் அரசியல் மொழியாதலும் முதலில் ஏற்பட வேண்டுவனவாகும். இந்தி ஒரு நாளும் மாகாண மொழிகளின் நிலையை அடைந்துவிட முடியாது. தென் இந்தியர் யாவரும் இந்தி படிக்கும்படி செய்துவிட முடியாது; அவ்வாறு படித்தல் கேடு விளைப்பதும் ஆகும்.

இந்தி நடுச்சட்டப் பேரவையில் வழங்கப்படும் மொழியாகும் காலத்திலும் அந்த அவைக்குப் போவாரும் தத்தம் தாய்மொழியில் பேச உரிமையிருத்தல் வேண்டும். இந்தி வழங்காத மாகாணங்களில் உள்ளார் யாவரும் இரு மொழி

கள் பயின்றவர்களாய் இருத்தல்வேண்டும் என்பது இந்திய தேசியம் என்று சொல்ல முடியாது. இந்தி பொது மொழியாக நேரினும் ஒவ்வொரு மாகாணத்திலும் நூற்றுக்குப் பதின்மருக்குமேல் அம்மொழி பயில வேண்டியது இராது; எல்லாரும் இரு மொழிகள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுவதில்லை? காங்கிரஸ் இந்தி பிரசார சபையின் கொள்கைகளுக்கு அடிமைப்பட்டு, யாவரும் இந்தி படிக்கும்படி கட்டாயப் படுத்தவும், சென்னை, பம்பாய், மாகாணங்களின் சட்டப் பேரவையில் இந்தியை வழங்கவும் துணிந்தால் காங்கிரஸ் ஆந்திரருக்கும் கன்னடத்தாருக்கும் சொல்லிய வாக்குறுதியை மீறியதாகும். மொழிவழி மாகாணங்களைப் பிரிக்கவேண்டும். மற்றக் கொள்கையுள்ள உண்மைக் காங்கிரஸ்காரர் சட்டப்பேரவைகளில் இந்தி வழங்கப்படல்வேண்டும் என்று சொல்மாட்டார்கள். எனினும் அத்தகைய அறியாமை நிறைந்த கருத்துக்கள் நாள்தோறும் வலிமைபெற்று வருகின்றன. நாம் இந்திக் கிளர்ச்சித் தலைவர்களின் நோக்கங்களைப்பற்றி ஐயங்கொள்ளவில்லை; எனினும் அவர்களின் அறிவுப் போக்கையும் அரசியல் நெறியையும் பற்றி ஐயுறுகின்றோம்.

—திருவேணி

கால கணிதம்

[டாக்டர் கே. வேலன், சென்னை.]

அம்பலத்தாடும் அலகில் சோதியின் அருள் வெளி ஒளி மயமாம் தேவி வாலாம்பிகை, திரு முருகனார், சங்கரனார், அகத்தியனார் முதலிய ஆதி பதினெண் சித்தர்கள் இன்றும் உலவும் நம் செந்தமிழ் நாட்டில், நடைபெறும் காலக் கணக்கு எப்படி ஏற்பட்டதென்பதை ஆராய்வோம். நாம் வதியும் இப்பூவுலகின்கண், காலையில் எழுந்து வெட்ட வெளியை நோக்குவார்க்கு, ஒளி மயமாம் கதிரவன் எழுதல் கண்படாமல் போகாது. கதிரெழுதலைக் கண்ட மனிதன், கதிர் மறைதலையும் கண்டான். கதிர் உதித்தல், கிழக்கு திசையே ஆயினும், ஒவ்வொரு நாளும் அக்கதிரோன், இடமாறித் தோன்றுதலையும் கண்டான். அம்மட்டோ! மதி, சில நாட்கள் கிழக்கில் எழுதலும், மேற்கில் மறைதலும், சில நாட்கள் மேற்கில் தோன்றி மறைதலும், சில நாட்கள் இடை வெளியில் தோன்றி

மேற்கே மறைதலும், கிழக்கில் உதிக்கும் நாட்களில் இடம் மாறி உதித்தலும் மேற்குத் திசையில் மறைதலின், நாளுக்கு நாள் இடம் மாறுதலையும் கண்டான். இஃதன்றி, மதி வளர்ந்தோ, குறைந்தோ தோன்றுவதையும் கண்டான். கதிரோன் தோன்றுமுன், ஒளி எழுதலும், தோன்றலின், ஒளி மிகுதலும், கதிரோன் விண்ணில் ஊறும்போது, ஒளி பரவுதலையும், கதிரோன் மேற்கே மறைதலின் ஒளி மறைந்து குறைதலையும் கண்டான். மதி ஒளிரும் காலத்தில், தண்ணொளி தோன்றி, விரிந்து, பரந்து, மதி மறைதலின், உடன் ஒளி மறைதலையும், கண்டான். இக்கதிர் மதிர், ஒளிராத காலத்தில், இருள் கப்புதலையும், கண்டான்—கதிர் ஒருநாளும் மறையாமல் எழுதலால், அப்படி அவன் எழுங் காலத்தில், ஒளி பரவுதலைக் குறிப்பான் பொருட்டு (கால்+ஐ) காலை, அதாவது ஐ=ஒளி, கால்= பரவியது என்றான்—கதிர் மேற்கில் விழுங்கால், இருள் கப்புதலால், மாலை (மால்+ஐ)=(மா+அல்+ஐ) அதாவது ஐ= ஒளியானது, மா=பெரிய, அல்=இருட்டாய் விட்டது என்றான். அல்=இருட்டானது, பகு=பிரிந்தது என்பதைக் குறிக்கும். ஒளிமிகுந்த காலத்தை பகல் என்றான் அதாவது (பகு+அல்) என்பதாம். உ, அல்லது வு, என்பது உயிர்கள், இர=அயர்ந்தன என்பதைக் குறிக்கும், (இர+உ) இரவு என ஒளிபடாக் காலத்தை, குறித்தான்—உ, என்பதற்கு உயிர்கள் எனப் பொருள்படுமாறு, நமது சிவவாக்கியனார், தாம் கூறிய சிவ வாக்கியம் என்னும் நூலில், “உகார காரணத்துளே உயிர் தரித்து நின்றன”, எனக் கூறுகிற்பர். பகலும் இரவும் கொண்ட ஒரு பகுதியை நாள் என்றனர்—நாள் என்பது நாள் என மாறிற்று. நள் என்பது நடு என உரைகோடல் பொருந்தும். இருட்டுக்கும் பகலுக்கும் இடையே சூரியன் எழுதலால் நள் என்றனர். இப்படியே ஆராய்வோமானால், நாள்+இரு, என்பது ஞாயிறு என மாறி இருக்கலாமென ஊகிக்க இடந் தருகிறது. ஒரு முழு நாள் மறைந்து கதிரோன் தோன்றலும், மறுநாள் உதித்தலால், இருநாட்களுக்கும் நடு என்னும் பொருள் கொள்ளும் ஞாயிறு அல்லது நாயிறு எனுஞ் சொல் தோன்றியிருக்கும்—இதோடு மதி பதினான்கு நாள் வளர்ந்து, ஒரு நாள் முழுமதியாகி மீண்டும், பதினான்கு நாள் குறைந்து ஒருநாள் இருண் மதியாகி, தோன்றுமையையும் கண்டறினால், அம்மதியைக் கொண்டு மதி வட்டமாகிய முப்பது நாட்களைத் திங்கள் என்றனர் தமிழர்—கதிரோன் இவ்வகை ஆறு திங்கட்களுக் கொருதரம் வடக்கே போதலையும், மறு ஆறு திங்களில் தெற்கே போதலையும் கண்டு, வடகோடு மாறல், தென்கோடு மாறல் என அவ்வாறு திங்கட்களைப்,

பிரித்தனர்—இவ்வகை இருமாறுதல்களையும் சேர்த்து ஒரு ஆண்டு எனக் கணிக்கப்பட்டது. இஃதன்றி இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன் பனி, பின் பனி ஆகிய மாறுதல்கள் இரு இரு திங்கட்களை, தமக்குரிமையாகக் கொள்ளலால் அப்பருவங்கள் முடியும் பன்னிரண்டு திங்கட்களை ஒரு ஆண்டு என்றனர்.

நாள் + இழி + கை = நாழிகை என்பதாக ஒவ்வொரு நாளும் குறைந்து சிறுமை உற்றலால் அவ்வகைக் குறைதலை சந்திர வட்டத்தைக்கொண்டே முற்பகலையும், இரவையும் முப்பது, முப்பது நாழிகைகளாகப் பிரித்தனர்—இத் திங்களின் ஆட்டத்தைக் கொண்டே, யாமங்கள் (ஜாமம்) கணிக்கப்பட்டன. கதிரோன் வடகோடு போதலும், மீண்டும் நடுகோடு திரும்பலும், தென்கோடு போதலும் மீண்டும் நடுகோடு திரும்பலும், ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்டு, பகலும், இரவும் நன்னான்கு யாமங்களாகக் கணிக்கப்பட்டன. யாமம் எனின் கழிவு என்பதாம். யாமம் என்பது ஜாமம் என மாறிற்று. முப்பதில் நான்கில் ஒரு பகுதியாகிய, ஏழரை நாழிகை ஒரு ஜாமம் ஆயிற்று. அறுபது நாழிகை ஒரு நாளை அளத்தலினால் அறுபது விநாடி ஒரு நாழிகையை அளக்கும். விநாடி என்பது வின் + ஆடி, அல்லது விழி + நாடி எனப் பிரியும். முற்கூறியதே பொருந்தும். அதாவது மூச்சு இயற்கையாக மூக்கின் உள்புகும் காலமாம்—சந்திர வட்டமாகிய முப்பது நாள் வளர்பிறை, தேய்பிறை என இரு வட்டங்களாகப் பிரிந்தது—அறுபது நாட்கள், ஒரு பருவத்தை அளத்தலால் அறுபது ஆண்டுகள் ஒரு வட்டமெனக் கொண்டனர். வின் + ஆடி எனும் மூச்சு ஒரு நாளைக்கு மனிதனுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு தரம் நடத்தலால் அப்படி நடப்பதில், இருகலைகள் நடத்தலால், அப்படி நடப்பதிலும் பஞ்ச பூதங்களில் நடத்தலால், அவைகளைக் கொண்டே யுகங்கள் ஏற்பட்டிருக்கும். ஓகம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து யோகம் என்ற சொல் தோன்றியதைப்போல் உகம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து யுகம் என்ற சொல் தோன்றியிருக்கும். உ என்றால், உயிர்கள் அல்லது உலகம்; கம் என்றால், ஜலமாக மாறுதல்; அதாவது பெரு வெள்ளத்தால், உலகம் அழிதல் என்பது அல்லது ஒரு கால வரை அடைதலாம்—(21,600 × 2 × 10 = 4,32,000). இது கல்வி யுக மென்ப, இது கலியுக மெனக் கூறுவர். இங்குப் பத்து என்பது இருகலைகளில் ஓடும் பஞ்ச பூதமாம்—(5 × 2 = 10) எனத் தெரிந்துகொள்க. (21,600 × 10 × 4 = 8,64,000). இது துப்புரவு யுகமென்ப, இது துவாபர யுக மென்று கூறுவர்.

(21,600 × 10 × 6 = 12,96,000) இது திருத்த யுகமென்ப. இது திரேதாயுகமெனக் கூறுவர். (21,600 × 10 × 8 = 17,28,000). இதைக் கருத்தயுகமென்ப. இதை த்ரேதாயுகமெனக் கூறுவர். இவ்வாறாய் ஆராய்ச்சி, முதல் முதல் தெற்கே, அல்லது, சூரிய மத்யரேகையிலாவது, அல்லது சூரிய மத்யரேகைக்கு வடக்கே 20 பாகைக்குள்ளும், தெற்கே 24 பாகைக்குள்ளுமே, நிறுவப்பட்டிருக்கவேண்டும்—ஏனெனில், திருப்பதி மலைக்கும் சுமேருவாகிய ஆல்டாய் மலைக்கும் இடையே ஏற்பட்ட நெருப்பு மலைகளின் கோளாறுகள் ஒழிந்த பிறகு, மதி வடக்கே காணப்பட்டிருக்கிறது. தவிர துருவங்களில் மதி, பதினைந்து நாட்கள் முழு மதியால் தோன்றி, பதினைந்து நாட்கள் காணப்படாத தொன்றாகும்—ஆதலின் இவ்வகை கணிதம் ஆரியரால் ஏற்படவில்லை என்பது, வெள்ளிடை. இக் கால கணிதமும், நம் தமிழர்களுக்கே உரிமையாதலாலும், சிறப்பின்பாற்படுவதில் ஒன்றாம். கண் + இதம் எனில், கண்கண்ட உண்மையைத் தெரிந்து எழுதுதல் என உரைகோடலால் கணிதம் என்பது தமிழமொழியேயாகும்.

சர் ஜகதீச சந்திர போஸ் என்னும் இந்திய அறிவியற் பெரியார் மறைந்தார்

ஒளியின் இயக்கத்திற்கும் மின்சார இயக்கத்திற்கும் ஒற்றுமையுண்டென்பதையும் செடி கொடி மரங்களும், மக்களையும் விலங்குகளையும் போலவே. உயிருடையன வென்பதையும், எல்லா உயிர்களுக்குந் தொடர்பு உண்டென்பதையும், கம்பிகளின் உதவியின்றியும் மின்சாரம் வேலைசெய்யும் என்பதையும் இவர் கருவிகள் மூலம் கண்கூடாகச் செய்து காட்டியவர். மின்சார வாங்கியென்னுங் கருவியை இவர் மற்றவர்கள் செய்ததைவிடச் சிறக்கச் செய்தவர். மின்சாரத்தைக் கொண்டே இவர் இரும்பு பொன் போன்ற கனிப் பொருள் முதல் மக்கள் ஈறாகவுள்ள எல்லா வற்றிற்கும் ஒரே விதமான உணர்ச்சியுண்டென்று காட்டியவர். மக்கள், விலங்கு, பறவை, மரஞ்செடி கொடிகள் ஆகிய இவையெல்லாம் ஒரே வகையில் உயிர் வாழ்வனவென்றும், மரஞ்செடி கொடிகளுக்கும் உறக்கமும் விழிப்பும் உண்டென்றும் கருவிகள் மூலம் காட்டியிருக்கின்றார். இவ்விந்தியப் பேரறிவியல் அறிஞர் தம் 79-ஆம் ஆண்டில் 22-11-1937-ல் புகழுடம்பு நிறுத்தி விண்ணுறு புகுந்தனர். இவர்தம் வரலாற்று நூலொன்று கழகவழி முன்னரே வெளியிடப்பெற்று 1938-ஆம் ஆண்டு பி.ஏ. தேர்வுக்குப் பாடமாக வைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

புதுக்கவி

தாயைப் போற்றுங்கள்!

(முன் கூ௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெயிலைத் தோட்டத்திலே என்ற மெட்டு

5. இருட்டினிலே சிவனைத் தன்
இட்டம் போலே தூது விட்டதுவும், நீரில்
மருவு முதலையினால்—முன்பு
மாண்டநற் பாலகன் மீண்டதுவும், பழந்

6. தமிழ்மொழி, யாலல்லவோ? அதைச்
சற்றேனுஞ் சிந்தையில் உற்றுநோக்கா தென்னே
சமயந் தமிழ் கெடுக்க வருந்
தந்திர இந்தியை வந்தவழி யோட்டும்—செந்தமிழ்

7. மின்னுந் தொல் காப்பியமும்—எங்கும்
மெய்ப்புகழுள்ள சிலப்பதி காரமும்
தன்னிகர் நன்னூலாம்—தென்சொல்
சாகர மாமணி மேகலையும்—பொதுப்

8. பலன் முறை நாலடியார்—குறள்
பத்துப் பாட்டோடு கலித்தொகையும், சைவத்
தலைமை பெற்ற மூவர்—இசைச்
சாரங் கலந்த தேவாரங்களும், திரு

9. வாதவூ ரன்ப ரெனும்—மணி
வாசகரின் திருவாசகம் கோவையும்
வேதமொழிச் சேக்கிழார்—அன்பு
விரியுந் திருத்தொண்டர் சரிதங்களும், புகழ்

10. விளங், கருணை கிரியார்—வேலன்
விருப்புற வோதிய திருப்புகழும், தொழுந்
தலங்களில் ஆழ்வார்கள் பாடிய
தாய் மொழியாந் திருவாய் மொழியும், ஆதி

11. மெய்யாந் தமிழாலன்றோ—அன்றி
வேற்று மொழியாலோ? சாற்றுவீர்! சாற்றுவீர்!
தெய்வத் தமிழ் மொழிபோல்—நெஞ்சம்
தேறு மொழியது வேறுண்டோ கூறுவீர்—செந்தமிழ்

—அடுக்குமொழி பி. ஆவுடையப்பன்.

தமிழ் வீறு

[இந்த விருத்தங்களை இந்துஸ்தான் தோடி, கல்யாணி, மோகனம், காம்போதி, பைரவி, தோடி, தன்யாசி, ஆரபி முதலிய ராகங்களில், ஆதிதாளம் போட்டுப் பாடலாம்.]

1. தொன்மொழியரசி

இன்னிசை யணிந்த பொன்னிளஞ் செல்வி,
இனிமையே தன்பெய ராளுள்!
மன்னுல கெல்லாம் வணங்கிடத் தக்க
பொதுமறை யருளிய வாணி!
பன்மொழிக் குயர்ந்த தொன்மொழி யரசி,
பரமனின் வரம்பெற்ற புதல்வி,
தன்னிக ரற்ற தமிழெனும் அமுதத்
தாய்மல ரடிபணிந் துய்வாம்!

2. தமிழன்பு

அன்புளே தமிழாம், ஆர்வமுந் தமிழாம்,
ஆருயிர்த் துடிப்பெலாந் தமிழாம்,
என்புளே தமிழாம், 'இருக்கிறேன்' என்னுள்
இதயத்திற் பேசிடுங் கடவுள்
இன்புளே தமிழாம், இரத்தமுந் தமிழாம்,
இசைப்பதும் புரிவதுந் தமிழாம்,
நண்புளே தமிழாம், செந்தமிழென்னு
நறவினை யருந்திய நமர்க்கே!

3. அருட்பணிக் கெழுமின்!

சிங்கம்போ லெழுந்து வாருங்கள், அன்புச்
செல்வர்காள் அன்னையின் பணிக்கே,
தங்கம்போற் பொலியுந் தளரிள முதியாள்
புகழினைச் சகமெலா முழைப்போம்!

செங்கதிர் பரவுந் திசையெலாந் தமிழின்
சீர்முர சொலித்திடச் செய்வோம் !
அங்கையில் உழைப்பும், ஆண்மையை மனத்தும்
அணிந்துடன் அருட்பணிக் கெழுமின் !

4. தமிழுறுதி

என்றுறும் போது, தமிழையே யெண்ணீர்,
இசைத்துழித் தமிழையே யிசைப்பீர் !
பண்ணுறும் போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர் !
உண்ணும் போதும், உறங்கிடும் போதும்,
உயிருளந் துடித்திடும் போதும்,
கண்ணினு மரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுமின் !

5. தமிழ் நலம் புரிமின்

செல்வர்க ளெல்லாந் தமிழ்ச்செல்வம் வளர்மின் !
திறங்கொண்ட விரவா லிபர்கள்
அல்லொடும் பகலும் அருந்தமி ழாசிக்
கற்புதக் கோயில்க ளமைமின் !
கல்வியுந் தொழிலுங் கைவந்த புலவர்
கவினுறுங் கலைபணி செய்மின் !
நல்லன புரிய நாடுவோர் தமிழின்
புகழையே நலமெனப் புரிமின் !

6. தலைநிமிர் தமிழா!

எத்தனை சித்தர்; எத்தனை வேந்தர்,
எத்தனை யருச்சுடர்க் கவிகள்,
எத்தனைக் கலைஞர் இலங்கினர் இங்கே ;
எங்கவர் உலகிசை முன்னே ?
தத்தம நிசையே முழக்குனர் அயலார் ;
தனிப்புகழ் பலப்பல படைத்தும்,
செத்தவர் போல விருப்பது நலமோ ?
சிரமுயர்ந் தெழுந்திரு தமிழா !

7. கவியணி

வள்ளுவர், கம்பர், வள்ளலார், தாயு
மானவர், வியாசர், வான்மீகி,

ஒள்ளிய காளி தாஸன், வர்க் கிலியன் [1],
ஓமர் [2], மாசேக்ஸ்பியர் [3], தாந்தே [4]
தெள்ளிய தாகூர், திருவெலாங் கூட்டித்
தேவரி னமுதினும் உள்ளம்
அள்ளூறுங் கவிதை யனிகளைச் சூட்டி
யன்னையைப் பணிகுவோம் தமிழா!

8. தமிழர் பொதுநெறி

உயிர்க்குல மெல்லாம் உலவிடுங் கோயில்;
உலகெலாந் திருவினை யாடல்;
அயர்விலா தன்பு செய்தலே கடமை;
யாதினுங் கடவுளை யுணர்ந்தே,
துயர்கெட யாங்கும் இன்பமே தளிர்க்கத்
தொண்டுகள் புரிதலே தொழுகை;
இயற்கையோ டிசைந்த வாழ்க்கையே வாழ்க்கை,
இதுவுன்றன் பொதுநெறி தமிழா!

9. ஒரு குலவுணர்வு

சள்ளைகள் பெருக்குஞ் சாதியுஞ் சமய
வேற்றுமைச் சண்டையும் வேண்டாம்.
கள்ளமில் உள்ளம் கடவுளின் இருக்கை;
கருணையே வேதத்தின் எல்லை;
தெள்ளறி வுடனே சிரிய மேலோர்
செப்பிய சுத்தசன் மார்க்கம்
ஒள்ளிய ராகப் பயின்றொரு குலமாய்
ஓங்குவோம் சமரஸத் தமிழா!

10. சேர்ந்து வாழுவோம்

இந்திய ரேனுங் கிறிஸ்தவ ரேனும்,
சைனர், இஸ்லாமியர், பௌத்தர்,
எந்தநற் சமயம் வந்தவ ரேனும்,
எங்கெங்குந் தமிழரோர் குடும்பம்.
அந்தமில் வெவ்வே றுடைக ளணிந்தும்,
ஆண்பெண்ணின் அகத்துப் பொன்றே;
நந்தமிழ் இரத்தங் கலந்தவ ரெல்லாம்
ஞாலத்திற் சேர்ந்துமுன் செல்வோம்!

---

1. Virgile. 2. Homer. 3. Shakespear. 4. Dante.

11. தமிழ்க்கொடி யுயர்க!

தமிழரின் சாதிப் பூசல்கள் ஒழிக!
சமரச வுணர்ச்சிமே லெழுக!
தமிழரின் வீரத் தகைசுடர்ந் தொளிர்க!
தமிழகச் சரிதைமாண் புறுக!
தமிழிசை கேட்ட வுலகெலாம் இன்பத்
தாண்டவம் புரிக! நற்றமிழர்
தமிழுக்கே யுயிர்ப்போம்! தமிழ்முர சார்ப்போம்!
தமிழ்க்கொடி யுயர்ந்திடத் தழைப்போம்!

12. விடுதலைக் கதிர்

ஆண்களின் ஆண்மை மலையென வளர்க!
பெண்களின் கற்பனல் ஒளிர்க!
விண்மடப் பழக்கம் வீழுக! வாழ்வில்
விளங்குக விடுதலைக் கதிரே!
பூண்களிற் பொருந்தும் பொன்னென வுண்மைப்
பொருளினிற் பொருந்துக மாந்தர்!
காண்புவி யுயிர்கள் அனைத்தையும் உலவுங்
கோயிலாய்க் கண்கள்கா ணுகவே!

13. பொதுமை

மனிதர்க்கு மனிதர் இல்லையுங் கடிமை;
மாநில வளமைகள் பொதுமை;
சனியெனப் புகுந்த வேறுபா டெல்லாஞ்
சாம்பிட வொற்றுமை தனல்க!
இனிதுள மொன்றி யனைவரும் அன்னைக்
கின்னுயி ருடலென வாழ்வோம்!
கனிபல வேனுங் கனிமர மொன்றே!
கடம்பல, காற்றென்றே யன்றோ!

14. எழுமின்

தமிழகங் கண்ட தத்துவப் பெரியார்,
தரைவளர் விண்ணென வேண்டும்!
தமிழரைச் சுற்றித் தவத்திருக் காந்தம்
தகவெனக் காந்திட வேண்டும்!
தமிண் மொழி கேட்டோர் அமுதமும் இதன்முன்
சப்பெனச் செப்பிட வேண்டும்!
தமிழிளஞ் சிங்க வீரர்காள் எழுமின்!
தமிழ்மணிக் கொடியினைத் தாங்கி!

15. தமிழ்ப்பற்று

சுற்றிலும் வடுகர், கன்னடர், வங்கர்,
கூர்ச்சரர், கேரளர், நாட்டுப்
பற்றுக ளுடனே பிந்திசையைப் பரப்பும்
பண்பினர் உறைப்பினைப் பார்மின் !
பெற்றதாய் தன்னைப் பெருமைசெய் யாத
பேதையும் உலகினில் உண்டோ ?
கற்றதன் பயனுந் தமிழ்மொழி யான
கடவுளைப் பணிதலே தமிழா !

16. தமிழ் வெற்றி

வாலுற வளருந் தமிழிசை முன்னே
மாநிலம் வணங்கிட வேண்டும்,
தேனுறுந் தமிழர் திருவிசை முழங்கித்
தேவர்கள் நடமிட வேண்டும்.
மாறுறு பாகன் மகள்கொலு விருக்க,
மன்னர்கள் பணிசெய வேண்டும்.
யாறுறும் பிறவி மகிழுமக் கணமே ;
அன்னையின் வெற்றியோங் குகவே !

எந்தாய் வாழ்க !

—புதுவை சுத்தானந்த பாரதி.

[‘கல்லார்க்கும் கற்றவர்க்கும்’ என்ற மெட்டு]

1. தள்ள வொண்ணாத் தமிழ் மொழியே
சபையிற் பேசும் மொழியே
சகத்தி லுள்ள மொழிகட் கெல்லாம்
தலைசிறந்த மொழியே
கள்ள மில்லா மொழியே இன்பங்
காட்டுந் தமிழ் மொழியே
கல்வியிலே சிறந்த கம்பர்
கவிபுந் தமிழ் மொழியே
உள்ளபடி விள்ளுந மதிப்
பாவலர்க ளெல்லாம்
உலகி லென்று பிறந்ததென
வுணர்ந்திடாத மொழியே
தென்னு தமிழ்த் தாய் மொழியே
சீர் கொடுக்கும் மொழியே
நீட்டு தமிழ் முனிவரின் தென்
றெட்டி-லுற்ற மொழியே.

2. உன்னதமாம் ஆதிமொழி
உயர்ந்த தமிழ் மொழியே
உறுதி மொழி நமது நாட்டுக்
குரிய தமிழ் மொழியே
சென்னை முதல் குமரிவரை
திருநடன மொழியே
தெட்சணைத்துக் கிசைமொழி
தெய்வத் தமிழ் மொழியே
நன்னய மிகுந்த மொழி
நமது தமிழ் மொழியே
நால்வர் வாக்கி னெழுந்த மொழி
ஞானத் தமிழ் மொழியே
தன்னுடைமைத் தாய் மொழியே
தனித்தியங்கும் மொழியே
தமிழ் மொழியின் பெருமையை யான்
சாற்றிடவுந் தரமோ.

[மாயப்ர பஞ்சத்தில் என்ற 'சிந்தாமணி' மெட்டு]

தேசத்திலே யுயர் வானதாய் மொழி
செந்தமிழே நமக்கேற்ற நற்சீர் மொழி
சிறுவர்கள் நாடிப் படித்திடில் வாழ்வாம்
தினமதா மொழி யோகிடில் தாழ்வாம்
தினந்தொறும் யாரு மறக்க லாகாதே
சிரிதழ்ப் பூமலர் மேவிடுந் தாயார்
செய்ய திருவடிச் சேவை செய்வோம் கனிச்—செந்தமிழே
செம்மை யிலங்கிடும் இன்மொழி யோர்ந்து
உண்மையா யாவரும அம்மையென் றோதும்
தென்மொழி மாதா நன்மை யாகச்
சிந்துடன் நாங் கும்மிச் சந்தமும் பாடிச்
சித்தங் களித்து வாழ்த்தே கூறுவோம் கனிச்—செந்தமிழே

---

5 தமிழ் நாட்டுக் கும்மி.

1. நற்புனிதத் தமிழ் நேயர்களே! பாடும்
நாற்கவியில் வல்ல வாணர்களே!
சற்புமிகு மட மாளிகளே! சொந்தம்
காட்டுந் தமிழபி மானிகளே!

2. ஆசையுட னிந்தத் தேசத்தைப் பார்க்க
அயல்மொழி தான் வந்துலா விடினும்
நேசமிகுந்திடுந் தாய்மொழிக்குச் சற்று
நேரா யொரு போதும் மாகாதே

3. இன்ப நிறைந்த தமிழ் நாடு—வளம்
என்றுஞ் சிறந்த தமிழ் நாடு
தென் பொதியமலை வாழுங் குறுமுனிச்
செந்தமி ழோங்குந் தமிழ் நாடு.

4. சாறுக்கள் கூடுந் தமிழ்நாடு—நல்ல
தண்ணீ,ர ளிக்குந் தமிழ் நாடு
காறுக் கினிமை புகட்டியே நல்வழி
காட்டும் பெருமைத் தமிழ்நாடு.

5. தமிழ்த் தென்றல் வீசும் வளநாடு—மணி
தமனிய மேவும் புகழ்நாடு
இமயமலை முதல் குமரிநகர் வரை
இன்சொ லிலங்குந் தமிழ் நாடு.

6. தண்டமிழ் வாய்ந்த திருஞான சம்பந்தர்
சைவம் வளர்த்த தமிழ்நாடு
தொண்டர்தந் நாதனை யாலால சுந்தரர்
தோழமை கொண்ட தமிழ் நாடு.

7. தேவியாஞ் சீதையைத் தேடி வரும்படி
தென்னிலங் காபுரி மன்ன னிடம்
ஏவிடம் போதநு மானிடம் ராகவன்
ஏற்றமா யோதிய தாய்நாடு.

8. தீவினையை நீக்குந் தாய் நாடு—என்றும்
சிவனுள்ளத் தமிழ்த் தாய்நாடு.
தேவி மீனும்பிகை நீதி தவறாது
செங்கோல் செலுத்திய தென்னாடு.

9. தேவரும் யாவருஞ் சேவைசெய்யு, முமா
தேவியு மீசனும் வேலவனும்
மூவருந் தோன்றிச்செங் கோல்கொண்ட கூடலை
முதன்மையாய்ப் பெற்ற தமிழ் நாடு.

10. மச்சக்கொடியும் புலிக்கொடியு முள்ள
மாறனுஞ் சோழனும் வீரமுடன்
மெச்சுந் திசையெங்கு மேகிப் புகழ்பெற்ற
மேன்மை வளருந் தமிழ் நாடு.

11. நிலச்செயல் வைகைநதிச் செயலின் சொற்
கலைச்செய லோங்கு நகர்ச் சுழகன்
குலச்சிறை யென்னும் அமைச்சர் புகழ்ச்செயல்
கொண்டிசை யேற்ற தமிழ்நாடு.

12. நன்னய மாக்கவி பாடிப் பிரானடி
நாடிய சங்கப் புலவர்களை
தன்னிடந் தாங்கிய தெய்வப் பலகையின்
தன்மை விளங்குந் தமிழ்நாடு.

13. நாசர்க ளாங்கவி வாணர்கள் வாக்கினில்
தங்கி யிலங்குந் தமிழரசி
தேச மெங்கும் ஏகச் சக்ராதி பத்தியஞ்
செலுத்திடு மேன்மைத் திருநாடு.

14. ஆதரவாகும் இயலிசை நாடக
மாகிய முத்தமிழின் னியல்பை
மூதறிவாளர்கள் விதிகொளுஞ் சொல்லும்
முழக்கம் செழிக்குந் தமிழ் நாடு.

15. வள்ளுவ ரில்லற மெய்நாடு—கவி
வாணர்க்குப் பொன்மழை பெய்நாடு.
அள்ளிக் கொடுத்த சடையப்ப வள்ளலின்
அன்பு பாராட்டுந் தமிழ் நாடு.

16. வெற்றியாம் வீரஞ் செறி நாடிழ
வேந்தர்க ளாண்ட தமிழ் நாடு
முற்றுந் துறந்திட்ட பட்டினத்தார் கவி
முழுதும் மணக்குந் தமிழ் நாடு. (தொடரும்).

கருவூரில் இந்தி எதிர்ப்புக் கூட்டமும் ஊர்வலமும்

கருவூர், 22-11-37

கடந்த 20-11-'37 சனிக்கிழமை மாலை 5 மணிக்குக் கருவூர் அறிவுசயக் கழகத்தின் சார்பில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர் திருவாளர் **எஸ். சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.,** அவர்கள் தலைமையின்கீழ் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. வெளியூர்களிலிருந்து தமிழறிஞர் பலரும் பொதுமக்களும் திரளாக வந்திருந்தனர். கருவூரிலுள்ள தமிழ்மக்களும் காங்கிரஸ்காரர் பெரும்பாலோரும் பைந்தமிழ் காக்கும் பாரதியார்

அவர்களைத் திரு: ஈழத்துச் சிவானந்த அடிகளின் தலைமையிற் சென்று வரவேற்று மாலைசூட்டி மோட்டாரில் ஊர்வலமாகக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர். ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் இவ்வூர்ப் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டு "தமிழ் வாழ்க", "இந்தி ஒழிக", "தமிழராட்சி நிலவுக", "ஆரியராட்சி ஒழிக" என்ற ஒலிகள் வானத்தைப் பிளக்க, தமிழ் மூவேந்தர்களின் அடையாளங்களைக் குறிக்கும் தமிழ்க் கொடிகளுடனும், இந்தி மறுப்பு அச்சிடப்பெற்ற பல அட்டைகளுடனும், மேள தாளத்துடனும் தலைவர் அவர்களை அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்தை அடைந்த பொழுது சுமார் 3000 மக்களுக்குமேல் கூடிவிட்டனர். இடையிடையே "பைந்தமிழ் காக்கும் பாரதியார் நீடு வாழ்க" என்ற ஆயிரக்கணக்கான மக்களின் வீர முழக்கம் வானைப் பிளந்தது. இவ்வூரில் இத்தகைய ஒரு பெரிய கூட்டம் இதுவரை கூடவில்லையென எல்லாரும் சொல்லிக் கொண்டு, தமிழுக்கும் தமிழருக்கும் நற்காலம் பிறந்துவிட்டதென்று இடையறு ஆரவாரஞ் செய்தனர்.

பின்னர் வரவேற்புக்கழகத் தலைவர் உயர்திரு: கஸ்தூரி ரெங்கக் கோனார் அவர்கள் (காங்கிரஸ்) திரு. பாரதியாரவர்களை வரவேற்றுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டதற் கிணங்கித் தலைவரவர்கள் பேசியதின் சுருக்கமாவது:— இப்போதைய சென்னை மாகாண முதன்மந்திரியார் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் இந்திமொழியைக் காந்தியடிகளின் தீர்மானத்தையும் பொருட்படுத்தாது கட்டாயப் பாடமாக்குவதாகக் கங்கணங்கட்டி நிற்பதை மிக வன்மையாகக் கண்டித்தும், தாய்மொழியாகிய தமிழையே கட்டாய பாடமாக்குதல் வேண்டுமென்று வற்புறுத்தியும், தமிழ்நாடு தனிமாகாணமாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற இன்றியமையாமையை விளக்கிக் காட்டியும் மூன்று மணி நேரம் பேசினார்கள். இடையிடையே சில போலிகளால் ஏற்பட்ட சில்லரைக் குழப்பங்களை எல்லாம் தமது சொல்லாற்றலால் அடக்கி முதன் மந்திரியாரின் ஒரு பட்சமான பிடிவாதத்தைப் பொதுமக்கள் நன்குணரும் முறையில் தெளிவாக விளக்கிக்காட்டினார்கள். கடைசியாகக் கீழ்க்காணும் தீர்மானங்கள் பெருவாரியான ஓட்டுகளால் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறுதலுடன் இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. குறிப்பு:—இங்கு நடைபெற்ற இந்தி எதிர்ப்புக்கூட்டத்தில் திரு: பாரதியார் அவர்களால் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவு முழுதும் ஒரு புத்தக வடிவமாக அச்சிடப்பெற்று மிக விரைவில் வெளியிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் :—

1. தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாகச் செய்தால் தமிழுக்கும், தமிழ்க்கலைக்கும், தமிழர் நாகரிகத்திற்கும் ஊறுவிளைக்குமாதலால் அரசியலார் அங்ஙனம் செய்யப் போவதை இக்கூட்டம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. ஒரு நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாயுள்ளதும் இன்றியமையாததும் தாய்மொழிக் கல்வியாதலால், தமிழ் நாட்டிற்குத் தமிழையே கட்டாயப் பாடமாக்குதல் வேண்டுமென்று அரசியற்றலைவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

3. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணமும் தனித் தனி பிரிக்கப்பட்டு இயல்பாகவுள்ள அவரவர்களின் உரிமைகளையும் வழங்கவேண்டு மென்பது காங்கிரசின் திட்டமாகையால், காங்கிரசின் ஆதிக்கத்துடன் அரசியலை நடாத்தும் தலைவர்கள் தமிழ்நாட்டைத் தனி மாகாணமாகப் பிரித்துத் தமிழர்களின் உரிமைகளைத் தமிழருக்கே விட்டுவிடும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

—சிவானந்தம்

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 54-ஆம் ஆண்டு நிறைவு விழா

இவ்விழா வரும் டிசம்பர் 25. 26-ஆம் நாட்களில் நடாத்தப் பெறும். வித்வான் புரிசை உயர்திரு சு. முருகேச முதலியாரவர்கள் விழாப் பேரவையின் தலைமை தாங்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். அன்பர்கள் தமருடன்போந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள். விபரமான நிகழ்ச்சிக் குறிப்பு அமைச்சர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

1937-ம் ஆு நவம்பர் மீ 21வ ஞாயிற்றுக்கிழமையன்று தூத்துக்குடி சப்கோர்ட்டு கினர்க்கு சைவத் ருவாளர் சுவர்ணவேலுப் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்ற சபையின் பொதுக்கூட்டத் தீர்மானங்கள்.

(1) திருவாவடுதுறை யாதீன ஞானாசிரிய பீடத்தில் 19-வது மகா சன்னிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக சுவாமிகள் பரிபூரணம் அடைந்தமை குறித்து சபையார் தங்கட் குண்டான ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றார்கள்.

(2) மேல்படி ஆதீனத்தின் 20-வது மகா சன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் பேறு

பெற்றமை அறிந்து சபையார் தங்கள் அளப்பிலா மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள். மகா சந்நிதானம் அவர்கள் நோயின்றியன்ற திருமேனியுடன் பல்லாண்டு இனிது வாழும் வண்ணம் திருவருள் பாலிக்க எல்லாம்வல்ல சிவனார் திருவடிக் கமலங்களைப் போற்றுகின்றார்கள்.

(8) முந்திய மகா சன்னிதானங்களைப் போலவே நமது சைவ சித்தாந்த சபையை ஆதரித்து வர வேண்டுமென்றும் மகா சன்னிதானம் அவர்களைத் தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்கின்றது. அன்றியும் வழி மழுங்கிக் கிடக்கும் சைவத்தையும் தமிழையும் பண்டைய நிலையினும் மிக்கு ஆக்குப்படி செய்வதற்கு வேண்டும் முயற்சிகளையும் உபாயங்களையும் செய்வதற்குத் தாயகமாய் விளங்குவது திருவாவடுதுறை ஆதீனமாதலின் ஆதீனத்தின் கட்டுப்பாட்டை ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானமவர்கள் நன்கு செய்து ஆதீனத்தின் புகழ் ஒளி உலக முற்றும் விளங்கும்படி செய்தருள வேண்டுமென்று தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்கின்றது.

சுப்பையா வேலுப்பிள்ளை,
தலைவர்.

"சிவஞானமுனிவர் நூல்நிலையம் இலவசவாசகசாலை" திறப்புவிழா, திருநெல்வேலி

10-11-'37 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மேற்குறித்த நூல் நிலையம் வாசகசாலையும், தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் கீழரத வீதி ஷை சங்கக்கட்டிடத்தில், கோயமுத்தூர் வழக்கறிஞர் சைவத்திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் (பி. ஏ.) அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அவ்வமயம் உள்ளூர் வெளியூர்களிலிருந்து தமிழறிஞர்களும், மாணவர்களும் ஏராளமாக வந்திருந்தனர். ஷை சங்கத்தாரால் தலைவரவர்கட்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பெற்றது.

பின்னர், வெள்ளகால் இராவ்சாகிப். திருவாளர் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தலைவராயிருந்து காலஞ்சென்ற திருவாளர். கா. தி. நெ. சிவஞானம் பிள்ளை. பி. ஏ. அவர்களின் திருவுருவப் படத்தையும், தெ. இ. தமிழ்ச் சங்கத்தலைவர், தென்காசி, திருவிதாங்கூர் ரிட்டயர்டு ஜட்ஜ் திருவாளர் T. S. குத்தாலிங்கம் பிள்ளை (பி. ஏ., பி. எல்.) அவர்கள், சைவசித்தாந்த சங்கத்தலைவராக இருந்துவரும் திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி ஏ. அவர்கள் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்தார்கள்.

பின்னர் தலைவர் திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பேசியதாவது:—

சிவஞான முனிவர் பெயரால் இந்த நூல்நிலையமும் வாசகசாலையும் தாபிப்பது மிகவும் பொருத்தமானதாகும். என்ன காரண

மெனின், அவர்கள் வாழ்க்கையை அறிவதாலும், அவர்கள் இயற்றியருளிய நூல்களைப் பயில்வதாலும் நம்மனோர்க்குப் பெரும்பயனுண்டாகும். அவர்கள் பெருமையை என்னுடைய பதினைந்து பதினாறுவது வயதில் என்னுடைய தமிழாசிரியர்மூலம் கேட்டறிந்ததால் தான், எனக்கு அவரிடத்தில் மிகுந்த பக்தி வாய்க்கப் பெற்றதாகும். ஆசிரியர் சிவஞான முனிவர் காட்டிய வழி மிகவும் அழுத்தமும் திருத்தமும் வாய்ந்ததாகும். அவர் சைவத்திற்கும் தமிழுக்கும் செய்ததொண்டு அளவிடற் கரியது. அவர் ஐந்துமுதல் மூப்பத்திரண்டு வயது வரை ஆக இருபத்தேழு ஆண்டுகள்தான் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்திருக்கின்றார். அவ்வளவு குறுகிய காலத்தில் பல நூல்களை வெளியிட்டது அவருடைய பெருமைக்கு ஒரு சான்றாகும்.

நாம் இன்னும் பல பிறவிகளெடுத்துப் பயின்றாலும் அவைகளை அறியமுடியாத அவ்வளவு பெரிய விஷயங்களை அவர் நமக்கு வழங்கியிருக்கின்றார். அவர், பாட்டு, உரைநடை, மொழிபெயர்ப்பு, கட்டுரை, பேருரை, தருக்கமாகிய பல வழிகளிலும் நமக்கு நூல் வழங்கியுள்ளார். அவர்கள் எந்த நூல் செய்தாலும், அஃது ஒரு புதிய வழி காட்டியாய், அந்நூல் பொருள்களை முதலடியிலேயே திரட்டிக் கூறுவதாய் அமைத்துக்கூறுதலைக் காணலாகும். அன்றியும் எந்த விஷயங்களையும் புதிய கருத்துக்களுடன் வெளியிடுந் திட்பம் அவருக்கே உரியதாகும். ஆங்கிலத்தில் இதனை (Original) ஒர்ஜினல் என்று கூறுவார்கள். உதாரணமாகக் 'கம்பரந்தாதி' என்ற நூல் ஏகாம்பரநாதர் பேரில் பாடப்பட்டதாகும். அப்பெயரிலேயே ஒரு புதுமை பாருங்கள். அந்நூல் முழுவதும் யமகம் திரிபுகளுடன் பாடப்பெற்றதாகும். அதில் அவ்வூரிலுள்ள தீர்த்தம், ஆண்டவன் பெயர் முதலிய பெயர்களை யுணர்த்தும் சொற்களையே பெய்து அவைகளை நாம் என்றும் மறவாவண்ணம் ஓதியதும் ஒரு சிறப்பாகும். திருமுல்லைவாயிலந்தாதி என்பது இம்முறையிலேயே மோனை யமகங்களுடன் பாடப்பெற்றது.

பிறருக்கு உதவி புரிவதிலும் சுவாமிகள் செய்தவழி புதிதாகத் தான் காணப்படுகின்றது. "கரையேற விட்ட முதல்வாவுன்னை யன்றியுமோர் கதியில்லையே" என்ற ஈற்றடி கொடுத்து இப்பாட்டைப் பாடி முடிப்போருக்கு ஆயிரம் பொற்காசு கொண்ட ஒரு பொற்கிழி, பரிசளிக்கப்படும் என்ற செய்தியைக் கேட்ட அந்தணர் ஒருவர் சுவாமிகளிடம் சென்று முறையிட, அவர் உடனே ஒரு பாட்டெழுதிக் கொடுத்து அவரை அப்பரிசு பெற்றுச் செல்ல விடுத்தார் என்றால், அது சுவாமிகளின் பரோபகார சிந்தையைக் காட்டுகின்றதன்றோ! சுவாமிகள் திருவாவடு துறையிலிருக்கும் பொழுது அங்குள்ள நாகேஸ்வரக் கோட்டத்தில் தங்கியிருந்ததாகவும், மாணவர்கட்குப் பாடம் சொல்லுமிடம் தனியாக விருந்ததென்றும் அறிகின்றோம். சுவாமிகள் சமாதி, சமாதித் தோப்பிலுள்ள, தம்பிரான்களின் சமாதிகளிடையே ஒரு தனி மாடம்போற் கட்டப்பட்டுக் காணப்படுகின்றது.

இதனை ஒரு மண்டலம் அரை மண்டலம் சுற்றி வணங்கி வருவோர்க்குக் கல்வி நன்றாக வருகின்றதென்றும், அங்ஙனம் பலர் வழிபட்டு சிறந்த புலமையுடையவர்களாக ஆனார்கள் என்றும், அவ்வூரில் சில பெரியார் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அப்பீடமானது சுப்பிரமணிய தேசிகரால் அமைக்கப் பெற்றதாகத் தெரிகிறது. அஃது இப்பொழுது பழுதுபட்டுக் காணப்படுகின்றது. அதனைச் செப்பனிட்டுப் பயன் பெறுவார் ஒருவருங் காணவில்லையே யென நினைக்க மனம் வருந்தாமலிருக்க முடியவில்லை. அவர் சமாதியை வணங்கினால் நன்மை உண்டாகும். அவர் நூல்களைப் பயின்றால் அம்மை நலமுங் கிடைக்கப்பெறும். ஆனால் யார் அவ்வண்ணம் செய்கின்றார்கள். மேல்நாடாக விருந்தால் அவ்விடத்தை அந்நாட்டு மக்கள் பொன்னால் வேய்ந்திருப்பார்கள். நாமோ, குழந்தை கையிற் கொடுத்த பொற்கிண்ணம்போன்று ஒருபயனும் பெறாமல் வீணே நாளைக் கழிக்கின்றோம்.

இப்பெரியார் பெயர் விளங்கவும், அவர்கள் அருளிச் செய்த நூல்களைப் பயிலும் மக்கள் பெரும்பயனடையவும் காரணமாகவிருக்கும் இந்நூல்நிலையமும் வாசகசாலையும் பெருஞ்சிறப்புற்று விளங்க வேண்டுவதுடன் இதில் வந்து பயில்வார்க்கு இப்பெருமானின் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

இனி, இங்கே படத்திறப்புச் செய்யப் பெற்றிருக்கும் இரண்டு பெருமக்களையும் பலவருடங்களாக அறிவேன் என்றும், அவர்கள் தமிழ் மக்கட்கும் சைவத் திருநெறிக்கும் உள்ளன்புடன் தொண்டாற்றியவர்களென்றும், அவர்களின் சிறந்த குணங்களைப் பின்பற்றி நாம் வாழ்வோமாயின் வாழ்க்கையில் இன்பமடையலாம் என்றும் சிறப்பாக எடுத்துக்கூறி, அவர்கள் இருவருக்கும் வாழ்த்துக்கூறினார்கள்.

பின்னர், வண்ணார்பேட்டை வழக்கறிஞர், திருவாளர் V. M. கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள் பேசியபொழுது கூறியதாவது:—திருவாளர் சர். தி. நெ. சிவஞானம் பிள்ளையவர்களுடன் தான் நெருங்கிப் பழகியவர்களில் ஒருவர் என்றும், அவர் யாரிடமும் அன்புடன் நடந்துகொள்வதுடன், எவரும் தன் கருத்தை எடுத்துக் கூறும் உரிமையுடையவரென்ற கொள்கையுடையவரென்றும், அவரிடம் சிறிய உத்தியோகத்திலிருந்து பின்னால் மந்திரியாகியும் ஒரே படித்தான குணமே காணப்பெற்றதென்றும், தன் கடமையில் நடுநிலைமையுடன் நடந்து பிறருக்கும் வழி காட்டியாக இருந்தவரென்றும், திருவாளர், மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்களும், நடுவு நிலைமை, தமிழ்ப்பற்றுச் சைவப்பற்று முதலியவைகளில் சிறந்தவர் என்றும், ஒருசமயம் அவர்களுடன் நான் திருச்செந்தூர் சென்றிருந்தபொழுது, அங்கு சந்தித்த ஓய்வுபெற்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவர் அய்யா அவர்களிடம் மிகவும் அன்பு பாராட்டி, அவர்கள் உத்தியோகத்திலிருக்கும்போது என்னிடம் "வாழ்க்கையில் உண்மையாக நடந்து கொண்டால் எக்காலத்தும் நன்மையடையலாம்" என்று அடிக்கடி நல்லுரைகூறி யிருக்கிறார்களென்றும், அதனைக் கைக்கொண்டு நடந்ததால்தான் நான் இப்பொழுது நல்லநிலையிலிருந்து வருகிறே

னென்றும்கூறி, அவர் செய்த உபசாரத்தைக்கண்டு நான் பெரிதும் வியப்படைந்தேன்; ஆதலின், இந்த இரண்டு பெரியார்களும் நம் நெல்லை நகரின் பெருமைக்கு ஒரு நல்ல சான்றாக ஆவார்கள் என்றும் கூறினார்கள்.

பின்னர், திருவாளர்கள் வெள்ளகால், V. P. சுப்பிரமணிய முதலியார், T.S. குத்தாலிங்கம் பிள்ளை, T. K. சிதம்பரநாத முதலியார், M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, வித்வான் P. K. அருணசலக் கௌண்டர், டாக்டர் R. V. சொக்கலிங்கம் பிள்ளை, A. இராமசாமியா பிள்ளை முதலியோர் படத்திறப்புச் செய்யப்பெற்றிருக்கும் இரண்டு பெரியார்களைப்பற்றியும் அவர்களின் குணங்களைப்பற்றியும் சிறப்பித்துப்பேசினார்கள்.

தலைவரவர்கள் முடிவுரைக்குப் பிறகு, திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்களால் நன்றிகூறப்பட்டு, விழா இரவு 9 மணிக்கு இனிது முடிவுபெற்றது.

'தமிழர்கழகம்' நிறுவப் பெற்றது.

திருநெல்வேலி
பொதுக் கூட்டம்

3-12-'37 மாலை 7 மணிக்குத் திருநெல்வேலித் தமிழ்ப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் சிவஞான முனிவர் நூல்நிலைய இலவச வாசகசாலைக் கட்டிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமிழறிஞர்களும் மாணவர்கள் பலரும் வந்திருந்தனர்.

பாளையங்கோட்டை வழக்கறிஞரும் பிரபல தேசிய வாதியுமான திருவாளர் P. S. சுப்பிரமணிய பிள்ளை, B.A., B.L. அவர்களின் தலைமையின்கீழ், 'தமிழின் பெருமையும் தமிழர் கடமையும்' என்னும் பொருள்பற்றி வித்வான் P. K. அருணசலக் கௌண்டரவர்கள் பேசிய பொழுது, சரித்திர மூலமாகவும் தக்க சான்றுகளுடனும் தமிழின் பெருமை தமிழர் பெருமைகளை எடுத்துக்கூறி, தமிழர்களின் நாகரீகம், கலை, தொழில் முதலியன பற்றிய உண்மையான வரலாறு எழுதப்பட வேண்டுமெனவும், மேலைநாட்டு ஆசிரியர்களால் எழுதப் பெற்ற இந்திய சரித்திரங்களில் அவை செம்மையாகக் கூறப்படவில்லை யெனவும், சிலர் தமிழைப் போற்றுவதற்கும் சிலர் அதனைக் கைவிடுவதற்கும் தமிழைப்பற்றிய உண்மை வரலாறு இன்மையே காரணமாகும் எனவும், இந்திய சரித்திரம் தெற்கேயிருந்து எழுதப்படவேண்டும்; தென் பகுதியினின்றே மக்கள் தோன்றி உலகத்தின் பல பாகங்கட்கும் பரவிச் சென்றிருக்கின்றார்களெனவும் விரிவாக எடுத்துக் கூறியதுடன், இனித் தமிழர் செய்யவேண்டிய கடமையையும் நன்கு விளக்கிக் கூறினார்கள்.

பின்னர், திரு. டாக்டர் R. V. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் பேசிய பொழுது தமிழுக்கு இப்பொழுது உண்டான நெருக்கடியை எண்ணி, தமிழ்மொழியின் சிறப்புக் குன்றாவாறு எந்தெந்த வகையில்

தொண்டாற்ற வேண்டுமோ, அவைகளை ஆராய்ந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு முகமாக வேலைசெய்ய வேண்டுமெனவும், அதற்கு இளைஞர்களும் மாணவர்களும் ஊக்கமுடன் முன்வர வேண்டுமெனவும், நன்கு எடுத்துக் கூறினார்கள்.

பிறகு, திரு. M. V. நெல்லையப்ப பிள்ளை அவர்களும், கல்லூரி மாணவர் கலியாணசுந்தரம் என்பவரும் பேசிய பிறகு, தலைவரவர்கள் கூறியதாவது:— தமிழ்மொழியின் பெருமையும் அதன் சிறப்பும் அளவிடற்கரியது; எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக, தமிழ்ப் புலவர் பலரைப்பெற்று நின்று நிலவுவது, சமீபத்தில் தோன்றிய பாரதியார் நாட்டில் ஒரு புதிய வுணர்ச்சி ததும்பப் பல பாடல்களை பாடிய பெரியாராவர். அவர் தமிழைப்பற்றிக் கூறியன பலவாகும். அவற்றில் ஒரு பாடலில் எங்ஙனம் தமது கருத்தை வெளியிட்டிருக்கின்றாரென்று பாருங்கள். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போலினிதாவதெங்கும் காணோம்' என்று அதன் சிறப்பினை எடுத்துக்கூறி, இப்பொழுது எந்நிலையில் நம்மொழி இருக்கின்றது என்பதனை உன்னி, தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று கூறுகின்றார். அதனைக் கைக்கொண்டு நாம் யாவரும் ஒன்றுசேர்ந்து பெருமுயற்சிகள் செய்தால்தான் நம் தமிழன்னைக்கு ஏதாவது தொண்டு செய்தவர்களாவோம். இப்பொழுது நாம் இருப்பதா, அல்லது இறப்பதா என்ற நிலையில் இருக்கிறோம். அடிமை நாட்டில் அதனின்றும் மீள நமக்குள் ஒற்றுமையே வேண்டும். இப்பொழுது நம் மாகாணத்தில் முன்னிருந்த ஒற்றுமையும் குறைந்து வருகிறது. நாட்டில் அரசியலில் தலைமை வகிப்போர் ஒற்றுமைக்குப் பங்கம் வராமல் பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இந்தி கட்டயப்பாடத்தால் நம் மாகாணத்தில் ஆங்காங்குப் பெருங்கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. பிரபல அறிஞர்களெல்லாம் இந்தி கட்டாயப்பாடத்தால் நாட்டில் ஒற்றுமைக் குறைவும், தாய்மொழிக்குப் பாதகமும் ஏற்படுமென்று கூறுகின்றார்கள். ஆதலின் நாம் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்தப்படுவதைத் தடுத்துத் தமிழ் மொழிக்குக் கட்டாயப் பாடம் செய்ய வேண்டும். நமக்கு எவ்விதத்திலும் காங்கிரஸ் ஸ்தாபனம் பெரியது. அதற்குப் பங்கம் வராமல் பார்த்துக்கொள்வது தேசமக்களின் கடமையாகும். தனிப்பட்ட ஒருவர் கொள்கையைப் புகுத்தி அதனால் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கே பிளவு உண்டாகுமானால் அதனைப் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது. ஆதலின் நாம் ஒன்றுபட்டு நம் தாய் மொழிக்கும், தமிழர்களின் மேன்மைக்கும் தொண்டாற்றுங் கடமை பூண்டுள்ளோம் என்று மிகஉருக்கமாகவும் தெளிவாகவும் பேசினார்கள்.

பின்னர் 'தமிழர் கழகம்' ஒன்று நிறுவி அதற்குரிய விதிகள் படிக்கப் பெற்றன. பலர் உறுப்பினர்களானார்கள். முடிவில் நன்றி கூறப்பெற்று இரவு 9½ மணிக்குக் கூட்டம் முடிவடைந்தது.

S. G. மதுரை நாயகம்,
தெற்குப் புதுத்தெரு, திருநெல்வேலி.

ஓம்

பல்லாவரம் பொது நிலைக்கழக 26-ம் ஆண்டு நிறைவு விழாப் பேரவை

1937 டிசம்பர் 24, 25, 26, 27, 28 நாட்களில்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும்
மறைமலை அடிகளின்
தலைமையில்

பல்லாவரம் பொதுநிலைக்கழக மாளிகையில் நடைபெறும். தமிழ் ஆங்கிலம் வல்ல திருவாளர்கள்.

கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., எஸ். சோமசுந்தர பாரதி, எம். ஏ., பி. எல்., பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்., ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., ஈ. வே. ராமசாமி நாய்க்கர்., பி. கோபாலரத்தினம், சென்னை. வித்வான். நயினர் மகம்மது., ரெவரெண்ட் அருள்தங்கை யா. சுந்தர ஓதுவாமூர்த்தி, (இசையரங்கு.) டி. இலட்சுமணப் பிள்ளை பி.ஏ., (இசையரங்கு.) முதலான முப்பத்து இருவர் ஆராய்ச்சி முறையில் மக்கள் வாழ்க்கைக்குரிய பலதுறைப் பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

நுழைவு உணவுச் சீட்டு	-	-	ரூ. 6.
நுழைவுச் சீட்டுமட்டும்	-	-	ரூ. 1.

அன்பர்கள் டிசம்பர் 19-க்குள் சீட்டுக்களைக் கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட நாட்களில் பேரவைக்கு வருக. நேரில் சீட்டுகள் வாங்குவார் உடனே அடிகட்குத் தெரிவித்தல் வேண்டும்.

இப்படிக்கு,

பல்லாவரம், 6-12-'37.

அ. கனகராயன். வே. மாணிக்கவாசம்.
வை. குஞ்சிதபாதம். மறை. திருநாவுக்கரசு.

நுழைவு உணவுச் சீட்டும், நுழைவுச் சீட்டும்,
விரிவான அறிக்கையும், நிகழ்ச்சியும் கிடைக்குமிடங்கள் :

(1) மறைமலை அடிகள், பல்லாவரம்.
(2) அ. கனகராயன், கிரீன் அண்டு கோ.,
583, பெரியசாலை, திருவல்லிக்கேணி, சென்னை.

சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மகாநாடு

1937, டிசம்பர், 26உ ஞாயிற்றுக்கிழமை

திருச்சிராப்பள்ளி முனிசிபல் பப்ளிக் ஹாலில் நடைபெறும்.

அன்று காலை 8 மணி முதல் 9 மணிவரை நகரத்தின் தெற்குக் கோட்டைவாசலாகிய மணிக்கூண்டிலிருந்து வடக்குக்கோட்டை வாசல் வழியாக மகாநாட்டுக் கொட்டகைவரை ஹிந்தி கட்டாயப் படிப்பை எதிர்க்கும் அறிகுறியாக மாகாண முழுதுமுள்ள மக்கள் அடங்கிய ஒரு பெரிய ஊர்வலம் நடைபெறும்.

மகாநாட்டுத்தலைவர்:

திருவாளர் S. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L.,
பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைநகர்.



டாக்டர் சர் சி. வி. இராமன்,

நைட்., எம்.ஏ., பிஎச்.டி., டி.எஸ்ஸி., எல்எல்.டி.,

எப்.ஆர்.எஸ்., என்.எல்.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கக] ஈசுவர—மார்கழி [பரல்-ரு

திருவாசகம்

திருச்சதகம் அ-வது பாட்டு

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணு
மிழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பி
னுழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே.

பதவுரை:

உழிதருகாலும் கனலும்—(அடியார்களாகிய எங்களுக்கு) பரந்து சுழல்கின்ற காற்றும் தீயும்

புனலொடு மண்ணும் விண்ணும்—நீரும், மண்ணும், வெளியும், ஆகிய ஐம்பூதங்களும்

இழிதருகாலம்—(செயற்படும் தத்தம் நிலையினின்று நீங்கி) ஒடுங்குங் காலம்

எக்காலம் வருவது—எப்பொழுது வரும்?

வந்ததற்பின்—அந்த ஒடுங்குகிற காலம் வந்த பின்னும்

உழிதருகால் அத்த—என்றும் நிலையாயுள்ள காலத்தை யுடையவனே. (எக்காலமும் தோற்றமும் அழிவு மில்லாமலிருக்கிறவனே என்றபடி)

உன் அடியேன் செய்த வல்வினையை—உனது அடிமையாகிய நான் செய்த பிராரத்துவ வினைப்பயன்களை.

கழிதரு காலமும் ஆய்—கழியச் செய்கின்ற கால தத்துவமுமாய்

அவை காத்து—அவ்வினைப்பயன்கள் எங்களை வந்து தாக்காமல் தடுத்து உடலூழாய்க் கழியுமாறு செய்து.

எம்மைக் காப்பவனே—அடியார்களாகிய எங்களை எங்கள் உடல் நீங்கும்பொழுது வீட்டின்பத்தை அடைகிறதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்து காத்து அருள்கின்றவனே.

விளக்க உரை :—

உழிதரல்—உழிதரு என்பது உழிதா என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயரெச்சம். உழிதரல்—சுழலல். அதாவது நிலையில்லாது மாறி மாறி வருதல். இந்த அடைமொழி பின்னே வருகிற ஐந்து பூதங்களையுந் தழுவுகிறது. இங்கே ஐந்து பூதங்களென்பன, நிவிர்த்தி கலைக்குச் சேர்ந்த மண்ணையும், பிரதிட்டா கலைக்குச் சேர்ந்த நீரையும், வித்தியாகலைக்குச் சேர்ந்த தீயையும், சாந்திகலைக்குச் சேர்ந்த காற்றையும், சாந்தியாதீத கலைக்குச் சேர்ந்த வெளியையும் (ஆகாயத்தையும்), குறிக்கின்றன. இந்த ஐந்து பூதங்களும் உலகந் தோன்றும்போது விரிந்தும் அழியும்போது ஒடுங்கியும் மாறிமாறி வருதலால், "உழிதருகாலுங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்" என்றார்.

இழிதருகாலம்—இழிகின்ற காலம். இழிதல்—இறங்குதல். அஃது இங்கே ஐந்து பூதங்களும் செயற்படும் நிலையினின்றும் நீங்கி ஒடுங்குதலைக் குறிக்கிறது. இங்கே ஐந்து பூதங்கள் ஒடுங்குதல் என்பது நிவிர்த்திகலைமுதல் சாந்தியாதீத கலை ஈறாக உள்ள கலைகளும் அவற்றி லடங்குவனவாயுள்ள ௩௬ தத்துவங்களும், உ௨௪ புவனங்களும் ஒடுங்குதல். ஒருவர் முதற்கண், இந்த ஐந்து பூதங்களுடைய கட்டுகளிலிருந்து நீங்கிப் பின் தன்முனைப்பினின்றும் நீங்கி அருளிலொடுங்கினாலொழிய அவருக்கு வீடுபேறு உண்டாகாதாதலின், 'இழிதருகால மெக்காலம்' என்றார். இழிதருகாலம் என்றதனாலும் முடிவில் எம்மைக் காப்பவன் என்றதனாலும் இங்கே அடிகள் தமக்கும் தம்மைப்போன்ற அடியார்களுக்கும் பிறவிக்கட்டு நீங்கி வீடுபேறு அடைகிற காலத்தைக் குறிக்கிறார். அடிகள் பெரும்பாலும் திருவாசகப் பாட்டில் தம்மைப் பிற அடியார்களோடு சேர்த்தே கூறுகின்ற முறைபோல, இந்தப் பாட்டிலுங் கூறுகின்றார். இங்கே காலம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவாக நிகழ்கிற உலக ஒடுக்கத்தைக் குறிக்குமென்றல், ௩. ௪ வரிகளிற் கூறப்படுவதனை நோக்குமிடத்து, பொருந்தாததாகும். அதனை அடிகள் இங்கே கூறுவதற்குக் காரணமுமில்லை.

வந்ததற்பின்—இழிதருகாலம் அடியார்களுக்கு வந்தபின் உள்ளகாலம். அவர்கள் பிராரத்துவ வினையினாலே எடுத்த உடம்பு நீங்கும்வரை உலகில் சிவன்முத்தர்களாயிருக்கிற காலம்.

உழிதருகால் அத்த—உழிதரு என்பது இங்கே இரண்டு சொற்களாலாகிய சொற்றொடர். உழி—இடம், உழிதரு காலத்த—மேலே கூறப்பட்ட ஐந்து பூதங்களும் தோன்றி ஒடுங்குதற்கு இடமாயிருக்கிற நிலையாயுள்ள காலப்பொருளா யிருப்பவனே.

ஐந்து பூதங்களும் தோன்றுதலும் ஒடுங்குதலும் நிகழ்தல் போலல்லாமல் சிவபெருமான் அவை தோன்றுதலும் ஒடுக்குதலும் செய்தற்கு இடம்தந்து எப்பொழுதும் இருந்து ஐம்பூதக் கட்டு நீங்கின அடியார்களுக்கு வீடுபேற்றை அளித்தலால் அடிகள் அவனை உழிதருகாலத்த என்று இவ்விடத்துக் கேற்ப விளித்தார்.

உன் அடியேன் செய்த வல்வினையை—வல்வினை என்பது இங்கே கட்டு நீங்கிய சிவன் முத்தர்களுக்கு அவர்கள் உடல் நீங்கும்வரை உடலூழாயிருந்து கழிவதாயுள்ள பிராரத்துவ வினைப்பயன்கள். எம்மைக் காப்பவனே என்று அடிகள் தம்மோடு பிற அடியார்களையுஞ் சேர்த்துச் சொன்னாலும் அடியேலன்றிப் செய்த வல்வினை என்று இங்கே தமக்கு மாத்திரம் கூறுதலன்றிப் பிற அடியார்களுக்கு அதனைச் சொல்லப்படாதென்ற மரியாதைபற்றி.

அவை கழிதருகாலமும் ஆய்காத்து—அவை—பிராரத்துவ வினைப் பயன்கள். பயன்கள் பலவாயிருத்தலின் அவை என்று பன்மையிற் கூறினர். கழிதரு காலமும் ஆய்—காலம் என்பது இங்கே படைப்புக்காலத்தில் தோன்றி அழிப்புக்காலத்தில் ஒடுங்குவதாகிய கால தத்துவத்தைக் குறிக்கிறது. மெய்யுணர்வு பெற்ற சிவன் முத்தர்களுக்கு அவர்கள் உடல்நீங்கும் வரையுள்ள காலம். அவர்களுடைய பிராரத்துவ வினைப்பயன்கள் உடல் நீங்குகிற காலம்வரை இருத்தலாலும், அக்காலதத்துவத்தைத் தோற்றினவன் சிவபெருமானா யிருத்தலாலும், கழிதரு காலமுமாய் என்று சிவபெருமானைக் கூறினர். காத்தல்—அப்பிராரத்துவ வினைப்பயன் வந்து தாக்காமல் தடுத்தல். கழிதருகாலமும் என்பதிலுள்ள உம் உழிதருகாலமு மல்லாது என்று பொருள்படும். இறந்தது தழீஇய எச்சம். கழிதருகாலமும் என்றதனாலே மேலே உழிதருகால் அத்த என்பதற்கு என்றும் நிலையாயுள்ள காலத்தை யுடையவனே என்று பொருள் கூறியிருத்தல் பொருத்தமாயிருத்தலை அறிக.

எம்மைக் காப்பவனே—எம்மை என்பது அடிகளையும் பிற அடியார்களையுங் குறிக்கிறது. எம்மை என்று இங்கே சொன்னதினால் ௨-வது வரியில் 'இழிதருகாலம்' என்பது அடியார்களுக்குப் பொருந்துமாறு உரைக்கப்பட்டது. காத்தலாவது சிவஞானபோதம் ௧0-வது சூத்திரம் 'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்' என்ற முதற் குறிப்பு வெண்பாவிற் கூறியிருக்கிறபடி "சார்ந்தடியார் தான் தானுச் செய்து பிறர் தங்கள் வினைதான் கொடுத்தல்" ஆகும்.

அடிகள் இந்தப் பாட்டில் மெய்யுணர்வுபெற்ற தமக்கும் தம்மைப்போன்ற சிவன் முத்த அடியார்களுக்கும் அவர்கள் உடல் நீங்குங்காலம்வரை சிவபெருமான் பிராரத்துவ வினைப்பயன்கள் அவர்களைத் தாக்கவொட்டாமல் தடுத்து உடல்நீங்கும் காலத்து வீடுபேறு அளிக்கின்றான் என்பதைக் கூறுகின்றார்.

குறிப்பு :—இதனை ஓதுஞ் சிவநேயர்கள் இப்பாட்டில் எந்தப் பாகத்துக்காயினும் இதில் எழுதப்பட்ட உரை பொருத்தமில்லை என்று காணின் அதனைப்பற்றிக் காரணங்காட்டி எனக்கு எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

தெய்வமுளதென
எண்ண வருஞ் சமயம் எது ?

சில மூடர் ஆணவமல முறுக்கால் 'தெய்வம்
எது ? பூதம் எது ? யாவும் போய்' என வாய்
மதம் பேசுவர். இத்தகையோரும் தெய்வமுள
தெனத் திண்ணமாய் எண்ணும் சமயம் யாது ?

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

கண்ணகி

(வித்வான் மா. இராசமாணிக்கம், P. O. L.)

[இது சிவபுரம் ஜமீந்தார் காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயகர் அவர்களின் 6-ஆம் ஆண்டு நிறைவுவிழாவில் திரு, கா. சுப்பிர மணிய பிள்ளை அவர்கள், M. A., M. L., தலைமையின்கீழ் ஆற்றிய சொற்பொழிவு.]

1. கண்ணகியின் மணம்

பண்டைத் தமிழர் மணம் களவு—கற்பு என்னும் இரு பிரிவுகளைப் பெற்றது. தொல்காப்பியர்க்கு முன்னர்த் தோன்றிய ஆசிரியர்க்கு முன்னர் இத்தமிழரிடை இருந்த மணம் 'களவு மணம்' ஒன்றேயாம். அக்களவில் சில குறைபாடுகள் நேர்ந்த காரணமாகத் தமிழ்ப் பெரியோர் (ஐயர்; ஒழுக்கங்களால் வியக்கத் தக்கவர்) சில சடங்குகளை (கரணங்களை) ஏற்படுத்தினர். இதனைத் தொல்காப்பியர் கற்பியலில்

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்றார். எனவே, தொல்காப்பியர்க்கு முன்னரே 'களவு—கற்பு' என்னும் இருமணமும் ஒரு மணமாய்த் தமிழகத்தே திகழ்ந்தன என்பதறிதல் அவசியமாகும். இக்களவு மணம் தமிழகத்தே பெருவழக்குடையதாக இருந்ததென்பதும், களவு நடந்த பிறகே கற்பு மணம் பெரும்பான்மை நிகழும் என்பதும் பண்டைநூல்களைப் பழுதறப்படித்தவர் உணரக்கூடும். இக் களவு மணம் கடைச்சங்க காலத்தோடு—ஏன்? சிலப்பதிகார காலத்தோடு இறந்துவிட்டதென்னல் மிகையாகாது. அதன் பின்னர் எழுந்த கோவை நூல்கள் ஏட்டளவில் களவு மணத்தை இயம்பப் புறப்பட்டனவே அன்றி வேறல்ல. இதற்குப் பௌத்த—சமண—வைதிக மதங்கள் தமிழகத்தே பரவியதே காரணம் என்க. இது நிற்க.

மேற் கூறப்பெற்ற களவு—கற்பு என்னும் இருவகைக் கைகோளும் கண்ணகி மணத்தில் நடைபெற்றன என்பது ஈண்டறியத் தகுவது.

"உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்
கள்ளப் புணர்ச்சியும் காதலர்க் குரிய"

என்பது அகப்பொருள் இலக்கணம். இம்முறையில் உள்ளப் புணர்ச்சி கண்ணகிக்கும் கோவலற்கும் உண்டாயிருந்ததென் பது உணரத்தக்கது. கண்ணகியுடனிருந்த ஆயத்தார் கோவலனது பெருமையையும் அருமையையும் பலபடப் பாராட்டிப் பேசிவந்தனர் என்பதே இதற்குப் போதிய சான்று.

"அவனுந்தான்,

மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலனென் பான்மன்னோ"

—மங்கல வாழ்த்துக் காதை

என வரும் இளங்கோ அடிகளின் இன்னுரை நோக்குக. மேலும் கண்ணகி, கோவலனையே மனத்துட் கொண்டிருந்தாள் என்பது கண்ணகியை மணத்திற்கு முன் வாழ்த்திய மாதர் வாய்மொழியினின்றும் அடிகளின் அன்புரையினின்றும் தெளிவாதல் காணத்தக்கது:

"அவளுந்தான்,

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்று
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள்; பெயர்மன்னும் கண்ணகியென் பாள்மன்னோ"

—மங்கல வாழ்த்துக் காதை.

இவற்றால் இருவரும் கற்பு மணத்துக்கு முன்னே 'கனிந்த காதலர்' ஆக—'உள்ளப் புணர்ச்சி' உற்ற மெய்க்காதலர் ஆக விளங்கினர் என்பது தேற்றம்.

இனி, 'இக்காதலர்க்கு வயதிவ்வளவு இருத்தல் வேண்டும்' என்பது தொல்காப்பியம் கூறிற்றிலது. அதன் உரையாளரே காதலர் வயதை நிறுவுதல் காண்கிறோம். அவர்கள் சிலப்பதி காரத்தையே ஆதாரமாகக் கொண்டு வயதை நிர்ணயம் செய் தனர் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. சிலப்பதிகாரம் கண்ணகிக்கு 12 வயதும் கோவலற்கு 16 வயதும் எனக் கூறுகிறது. அக்கால ஆடவர் பெண்டிர் 12 வயதில் நல்ல உடற் கட்டுடன் இருந்திருக்கலாமெனத் துணிதல் வேண்டும். அவள் சிறுவயதினளே என்பதை அடிகள் நாடுகாண் காதை

வரி 40-ல் "முதிராக் கிளவியள்" என வற்புறுத்துக் கூறுதலும் காணத்தக்கது. மேலும், அழற்படு காதை ஈற்று வெண்பாவில் அடிகள் "முதிரா முலை குறைத்தாள்" எனக் கூறுதலும் கண்ணகியின் இளமையை நன்குணர்த்துகிறதன்றோ?

இக்காலத்தும் தமிழகத்தே பன்னிரண்டு வயதுடைய பெண்கள் பெரிய பெண்களாக இருப்பதைக் கண்டோர் 2000 ஆண்டுகட்குமுன் பன்னிரண்டு வயதில் மணம் செய்து கோடல் இருந்திருக்கலாம் எனத் துணிவர் என்பதில் ஐயமில்லை. இது நிற்க.

களவு மணம் நடைபெற்ற பின்னர்க் 'கற்பு மணம்' நடைபெறுதல் பண்டை வழக்கமென முற்கூறப்பட்டதன்றோ? அஃதேபோல ஈண்டுக் கண்ணகிக்கும் கோவலற்கும் கற்பு மணம் கவினுற நடைபெற்றது: மணச் செய்தி மாநகரத்தார்க்கு அறிவிக்கப்பட்டது. இங்ஙனம் அறிவிக்கப்பட்ட செய்தி வேறெந் நூலுள்ளும் காணப்பெறாத புதுமைவாய்ந்ததாகக் காணப்படுதல் கவனிக்கத்தக்கது. அஃதாவது, யானை மீது பெண்கள் பவனி போந்து, 'மாநகர்க் கீந்தார் மணம்.' இங்ஙனம் பெண்கள் யானைமீதமர்ந்து மணச் செய்தியை மாநகர்க்கறிவித்தல் வேறு தமிழ்நூல்களில் யாம் கண்டிலேம்.

இனித் திருமணச் சடங்குகளைக் காண்போம்:—அகநானூற்றுச் சடங்குகட்கும் இச்சடங்குகட்கும் வேறுபாடு காணப்படுகிறது. பண்டைத் தமிழர் மணத்துள் பார்ப்பான் இல்லை. இங்கோ, (1) 'மாமுது பார்ப்பான்' காட்சியளிக்கிறான்; 'தீவலம்' காணப்படுகிறது; (3) 'பாலிகைகள்' தோன்றுகின்றன. இம்மூன்றும் அகநானூற்றில் காணப்பெற்றில. அங்குச் செய்யுள் 86 கூறுவது: "உளவுக் குவியல் கிடந்தது. நல்லோரையிற் பெண்டிர் சிலர் (புதல்வரைப் பெற்றவர்) அலரி கலந்த நீரால்

"கற்பின் வழாது நற்பல வுதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகென"

வாழ்த்தி மண மகளை நீராட்டிப் புத்தாடை உடுத்துப், பழைய மணல் நீக்கப் பெற்றுப் புதுமணல் பரப்பப்பெற்ற மணப் பந்தரில் (மணமகனுக் கருகில்) அமரச் செய்தனர். தலைவியின் பெற்றோர் கொளற்குரி மரபின் கொடுப்பத் தலைவன் பெற்றோர் ஏற்றனர். இதனையே குறித்து 136-ஆம் செய்யுளும் செப்புகின்றது. இதுகொண்டே காலஞ்சென்ற சரித்திரப்பேராசிரியரான பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் தமது 'பழங்காலத் தமிழர்' என்னும் மாண்புமிக்க நூலில்,

"இப்பண்டைத் தமிழ் மணமுறையில் ஆரியக் கலப்புடையது ஒன்றுமில்லை; எரி வளர்த்தல் இல்லை; தீவலம் வருதல் இல்லை; தட்சிணை பெறப் புரோகிதன் இல்லை. இது முற்றும் தமிழர்க்கே உரிய தமிழ்மணம்" என அழகாக (பக்கம் 80-ல்) அறைந் துள்ளமை அறியற்பாலது. இது நிற்க.

இக்கண்ணகி—கோவலன் திருமணத்தில் 'தாலி' இல்லை என்பது நன்கறியத்தக்கது. 'அகலுள் மங்கல அணி எழுந்தது' என வரும் அடியைக் கொண்டும், 'மங்கல அணி—மங்கலிய சூத்திரம் * வலஞ் செய்தது' என வரும் அரும்பத வுரையும் கொண்டு சிலர் 'தாலி உண்டு' என்கின்றனர். அவர் நூல் முழுதும் நன்கு ஆய்ந்து கூறுதவர் ஆவர்; 'மங்கல அணி' என்பது மாங்கலிய சூத்திரம் ஆயின், 'மண அணி' காண மகிழ்ந்தனர்' என வருவதில் உள்ள 'மண அணிக்'குப் பொருள் யாது கூறுவர்? 'மண அணி' என்பது 'திருமண வைபவம்;' அதனைக் காணப் பெற்றோர் விழைந்தனர் என்பதே பொருள். எனவே 'அணி, அழகு, வைபவம், சிறப்பு' என்பதே கடைந் தெடுத்த பொருளாகும். அரும்பதவுரையாசிரியரே மனை யறம் படுத்த காதையுள் வரி 63-ல் "மறுவின் மங்கல அணியே அன்றியும்" என வருவதில் உள்ள 'மங்கல அணி'க்கு 'இயற்கை அழகு' எனப் பொருள் கூறுதலும் நோக்கத் தக்கது. இதற்கே அடியார்க்கு நல்லார் 'இயற்கை அழகு' எனப் பொருள் கூறிப் பின்னர், 'மங்கல அணி—மாங்கலியம் என் பாரும் உளர்' எனக் கூறுதலும் கவனிக்கத்தக்கது. இஃ தொன்றே 'மங்கல அணி—மாங்கலியம் அன்று' என்பது அடியார்க்குநல்லாரது கருத்தென்பதை விளக்கப் போது மன்றோ? பின்னும், அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில், வரி 50-ல் மங்கல "அணியிற் பிறிதணி மகிழாள்" என வரு மிடத்து, "மங்கல அணி—இயற்கை யழகு" என அரும்பத வுரையாளரே கூறுதலும் காண்க. மேலும் 'அணியாள்; என அடிகள் கூறுது 'மகிழாள்' எனக் கூறியிருத்தலும் கூர்ந்து நோக்கத்தக்கது.

'பலவகை வாத்தியங்கள் எழுந்தன; அதனல் ஊரில் மங்கல அணி (திருமண வைபவம்) எழுந்தது (பொலிவுற்று விளங்கியது)' என்பதே இதன் கருத்து. இன்றேல், அடியார்க்கு நல்லார் தமக்கு முன்னவரான அரும்பதவுரையாளர் கூற்றைத் தழுவாமல், "மங்கல அணி ஊரெங்கும் எழுந்தது என்க" எனக் கூறி வாளா விட்டிருப்பரோ? தாலி வலம் வந்ததாயின், அஃது அடியார்க்குநல்லார்க்கு ஒப்பமுடிந்த ஒன்றுயின், அவர் கூறுதிருப்பரோ? அரும்பதவுரையாளர் தம் கால வழக்

கத்தினைச் சிலப்பதிகாரத் தொடர்க்கு ஏற்றினர் என்பதை அறிந்தேபோலும் அடியார்க்கு நல்லார், 'மாங்கலிய சூத்திரம்' என்னும் தொடரையே விட்டுவிட்டனர்! அரும்பதவுரையாசிரியர் கூற்றுப்படி 'மங்கல நாண்' வலம் வந்தது உண்மை ஆயின், திருமணச் சடங்குகள் யாவற்றையும் விடாமற் கூறும் இளங்கோவடிகள் 'தாலிகட்டுதலைக்' கூறுது விடுவரோ? எண்ணிப் பாருங்கள். 'மங்கல அணி' என வருமிடத்தெல்லாம் 'இயற்கை அழகு' எனப் பொருள் கூறிச்செல்லும் உரையாசிரியர் முதலில் மட்டும் 'தாலி' கூறினர் எனக்கோடல் பொருந்துவதாக இல்லை. அஃது 'இடைச்செருகல்' அல்லது ஏடெழுதினோர் செய்த தவறெனக் கோடலே பொருத்தமெனத் தோன்றுகிறது.

அவர் காலத்தில் 'தாலி கட்டுதல்' வழக்கமாக இருந்திருக்குமாயின், அச்சிறப்புடை வழக்கத்தை அவர் விட்டிருத்தல் இயலாதன்றோ? அங்கு அவர் விட்டுவிட்டதாகக் கொண்டாலும், கோவலன் கொலையுண்டபோது அவன் புலம்பியதாகக் கூறும் அடிகளிலேனும் 'தாலி'யைப்பற்றிய குறிப்பு வந்திருக்க வேண்டுமே! கண்ணகி 'தாலி'யைக் கூறிப் புலம்பியதாகவும் தெரியவில்லையே! தாலி இருந்திருக்குமாயின், அவள் அதனையன்றோ அறுத்து மதுரைமீது எறிந்திருப்பாள்! இடமுலையைத் திருக வேண்டிய அவசியம் ஏற்பட்டிராதன்றோ? அவள் கணவனை உயிர்ப்பித்த இடத்தும் 'தாலி' பற்றிய பேச்சே இல்லை. மதுரையை அழல் கொண்டபின் புறப்பட்ட கண்ணகி மதுரை எல்லையில் கொற்றவை (துர்க்காதேவி) கோயில்முன் தன் வளையல்களைத் தூளாக்கி நடந்தாள் என்பதிலிருந்தேனும் உண்மை உணரலாமன்றோ? 'தாலி' இருந்திருக்குமாயின் அதனை அவள் கழற்றினாள் என இளங்கோவடிகள் கூறுதிருப்பரோ?

"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்எனக்
கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்தும்"

—கட்டுரை காதை

போயினாள் என வருவது காண்க. இறுதியில் அவள் சேர நாடு சென்று வேங்கை மரத்தடியில் இருந்த போதும் 'தாலி' பற்றிய பேச்சே எழவில்லை. இதுகாறும் கூறியவற்றால் இளங்கோவடிகள் காலத்தில்—கண்ணகி—கோவலன் திருமணத்தில் 'தாலி கட்டும் வழக்கம்' இல்லை என்பதே வலியுறுத்தப்படுகிறது காண்க. இதனைச் சங்கச் செய்யுட்களைக் கொண்டும் நிறுவலாம். இதனை விரிப்பிற் பெருகும். இது நிற்க.

கண்ணகி மணவினை நடந்த அன்றே அவளை "மங்கல நல்லமளி ஏற்றினர்" என்பது சிலப்பதிகாரம். இதுவே பண்டைய முறை என்பதை அகநானூற்று 86, 136-ஆம் பாக்களால் பாங்குற உணரலாம். இதனை விரிப்பிற் பெருகும்.

2. கண்ணகி இல்லறம்

கண்ணகியும் கோவலனும் நுகர்ந்த இல்லற இன்பம் அருகிருந்து கண்டவர்போல முற்றும் துறந்த இளங்கோவடிகள் மனமுருகக் கூறுந்திறம் படித்துப் படித்து இன்புறற்பாலது. மனையறம் படுத்த காதையுள் அகப்பொருட் செறிவனைத்தும் வரி தோறும்—சீர் தோறும்—எழுத்துக்கள் தோறும் இலங்கக் காணலாம்; இருவரும் 'கனிந்த காதலர்' என்னும் உண்மையையும் உணர்ந்து இன்புறலாம்.

> "வண்டுவாய் திறப்ப நெடுநிலா விரிந்த
> வெண்தோட்டு மல்லிகை விரியல் மாலையொடு
> கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழத்
> தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத்
> தீராக் காதலில்" திளைத்தனர் இருவர்

எனவரும் அடிகளின் பொருள் நுட்பமும் இவ்வடிகளைக் கூறிய ஆசிரியரது புலமைப் பண்பும் பொன்னே போலப் போற்றத்தக்கவை. அக்காதையின் அடியில் வரும் அடிகளது வெண்பாவினால் காதலரது ஒன்றுகலந்த வாழ்க்கை நன்கு வெளியாதல் காண்க :

> "தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனஒருவார்
> காமர் மனைவியெனக் கைகலந்து—காமம்
> தொலையாத இன்பமெலாம் துன்னினர் மண்மேல்
> நிலையாமை கண்டவர்போல் நின்று."

3. தனித்திருந்த தையல்

கோவலன் மாதவிபால் பேரன்புகொண்டு மனைவியை அறவே மறந்து, மாதவியின் சேர்க்கையில் ஈடுபட்டிருந்தான். கணவனைப் பிரிந்த காரிகையோ அக்கால வழக்கப்படி— உண்மைத் தன்மை வாய்ந்தவள் ஆதலின்—துயில் கொண்டிலள்; அஞ்செஞ்சீறடி அணி சிலம்பு ஒழிந்தாள்; கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்; மங்கல அணி (இயற்கை அழகு) அன்றிப் பிறிதணி அணிந்திலள்; காதணி தனது இருக்கையில் இராது தாழ்ந்து கிடந்தது; செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறந்தன; பவளவாள் நுதல் திலகம் இழந்தது; அவளது

தவளவாள் நகையைக் கோவலன் இழந்தான். மையிருங் கூந்தல் நெய்யணி மறந்தது. இப்பரிதாப நிலைமை உண்மைக் காதலியிடம் இன்றும் காணப்படுதல் கண்கூடு. இப்பரிதாப நிலை—தனித்த தையல் நிலை—பரிதபிக்கத்தக்க காட்சி ஆகும்.

இங்ஙனம் கண்ணகி தனித்திருந்த பொழுது இந்திரவிழா நடந்தது. அதுபோது கோவலன்—மாதவி இருவரும் இன்பக்கடலுள் திளைத்தனர். கண்ணகியோ தனித்துயர் உற்று உருவழிந்து வருந்தினள். மாதவி கண்கள் கூட்டத்தால் செந்நிறமடைந்து நீர் உகுத்தன; கண்ணகியின் கண்கள் கலுழ்ந்தன. இந்நிலை நினைந்து நெக்குருகத் தக்கது.

இந்நிலையில் கண்ணகி தீக்கனு ஒன்றைக் கண்டாள்; கண்டு நடுநடுங்கித் 'தேவந்தி' என்னும் பார்ப்பனத் தோழியிடம் கூறி மதுரையில் இனி நடைபெறப்போகும் செயல்களை விளக்கி வருந்தினள். அந்நிலையில் தேவந்தி, கோயிலுக்குச் சென்று வழிபட்டுத் தோஷ நிவர்த்தி செய்துகொள்ள அழைத்தாள். ஆனால், உண்மைத் தமிழ் உதிரம் ஓடப்பெற்ற தமிழரசியாகிய கண்ணகி "பீடன்று" (குலத்திற் பிறந்தார்க்குப் பெருமையன்று) எனக் கூறி மறுத்தாள். இவ்விடம் உன்னி உன்னிச் சுவைத்தற்குரியது.

சிரித்த முல்லை

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.
சோலை நடுவில் சோக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண்டேனே!

—பாரதி தாசன்.

திருப்புகலூர் நாதரை வழிபட்டு அப்பர் சுவாமிகள் முத்தியெய்தினர். அவரையே வழிபட்டுச் சுந்தர மூர்த்திகள் செங்கற்கள் பொன்னுகப் பெற்ருர்.

வர்த்தமானீச்சரரை வழிபட்டு முருகநாயனர் முத்தி எய்தினர்.

இத்தலத்தில் முருகநாயனர் முத்திபெற்றதை

"தொண்டர்தான் கயமூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டுகொண்டடி பரவிக் குறிப்பறி முருகன் செய்கோலம்"

என்றும்,

"மூசுவண்டறை கொன்றை முருகன் முப்போதும் செய்முடிமேல்
வாசமாமல ருடையார் வர்த்தமானீச் சரத்தாரே.

என்றும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் பாடிச் சிறப்பித்துள்ளார்.

கோணப்பிரானை வழிபட்டுப் பாணுசூரன் பேறு பெற்றுள்ளான்.

பாணுசூரன் கோணப்பிரானுக்குத் திருப்புகலூரில் குளந் தொட்டுத் திருமதில்கள் எடுப்பித்துள்ளார். இதனைத் திருப் புகலூர் புராணம் கூறும்.

"ஓணப்பிரானும் ஒளிர்மா மலர்மிசை யுத்தமனும்
காணப் பராவியுங் காண்கின்றிலர் கரநாலைந்துடைத்
தோணற் பிரானை வலிதொலைத்தோன் தொல்லை நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே"

என்று அப்பர் சுவாமிகளும் பாடியுள்ளார். இன்னும், "புன்னைக்கானற் பொழிற் புகலூரன்" என்றும், "பொய்யில்லாத மனத்தார் பிரியாது பொருந்தும் புகலூர்" என்றும், "வயலின் விளைவால் வளமல்கு புகலூர்" என்றும், "பூமியெல்லாம் புகழ் செல்வ மல்கும் புகலூர்" என்றும், "மண்ணிலாயும் அடியார் குடிமைத்தொழில் மல்கும் புகலூர்" என்றும் சமயாசாரிகள் பாடியுள்ளார்கள். ஆதலினல், திருப்புகலூரானது மிகவும் வளப்பம் பொருந்திய ஊர் என்றும், அடியார்கள் நிறைந்துள்ள ஊர் என்றும் அறிகிறோம்.

இத்தகைய சிறப்புக்கள் பெற்ற புகலூருக்கு நெற்குன்றவாண முதலியார் வந்து சேர்ந்தார் என்பதை முதலாங் குலோத்துங்கன் ஒற்றர்களால் அறிந்தான்.

"யாறு ளடங்கும் குளமுள, வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள, தொன்மரபின்
வேதமுறு வனபாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள" —நான்மணிக்கடிகை

என்ற பாட்டுப்படி சக்கரவர்த்திகள் விழையும் குடியைச் சேர்ந்தவர் ஆனபடியால், சோழ அரசன் நெற்குன்ற வாணருக்குச் சிவபூசை, சிவனடியார் பூசை, பரணர், கூத்தர், புலவர் முதலியோரை ஆதரித்தல் முதலியவைகளுக்கு உபயோகமாகும் பொருட்டு இறையிலியாகச் சில நிலங்களை விடுத்தான்.

தொண்டைநாட்டில் உள்ள ஆமூர் என்கிற நெற்குன்றம் என்னும் கிராமம் நெற்குன்றவாணரால் காளிப்புலவருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டு, பிறகு, காளிப்புலவர் திருப்பி நெற்குன்றவாணருக்குக் கொடுத்துவிட, தானமாகக் கொடுத்ததைத் திருப்பி வாங்கமாட்டேன் என்றும், அந்த ஊரில் கூட இருக்கமாட்டேன் என்றும் நெற்குன்றவாணர் வந்த பிற்பாடு, சோழ அரசன் அந்த ஊரைச் சர்க்காருக்குச் சேர்த்துக் கொண்டான்.

சோழ அரசன் நிலங்களை நெற்குன்றவாணருக்கு இறையிலியாக விடுத்தது மல்லாமல் திருப்புகலூரில் இருக்க விடும், வேண்டும் நிதியும் அளித்து, உபசரித்து வந்தான்.

இதனால், முதலாங் குலோத்துங்கன் நெற்குன்றவாண முதலியாருடைய வள்ளற்றன்மையிலும், குணாதிசயங்களிலும், பத்திவைராக்கியத்திலும் ஈடுபட்டு மிகவும் போற்றிவந்தான். என்று தெரிகிறது.

IX. முதலியார் அந்தாதி பாடியது

இவ்வண்ணம் முதலியார் அவர்கள் நாடோறும் சிவபூசை, அடியார் பூசைகளைச் செய்துகொண்டு இருக்கும்பொழுது, சிவபெருமான்மீது அந்தாதி என்னும் நூல் ஒன்று பாடிக் கோணப் பிரானுக்குச் சமர்ப்பித்தார். இதனை:—

"வளப்பாடிலாத எருக்கு மிதழி மலருமன்பர்
உளப்பாடுறை புகலூரருக் காதலின் ஓதி மிக்கோர்
தளப்பாடிது தமிழ்க் கென்னினும் சாற்றுவன் சந்திரன்சொற்
களப்பாளன் நெற்குன்றை வாணனந்தாதிக் கலித்துறையே"

என்ற பாட்டால் அறியலாம்.

நெற்குன்றவாணர் பாடிய அந்தாதியானது, சொல்வளம், பொருள்வளம் செறிந்து இருப்பதுடன் அடிமடக்காக அமைந்து மதுரங் கனிந்து திகழ்வதாகும். இதனை:—

"கிளப்பார் கிளப்ப அடிமடக்காகக் கெழுமிய சொல்
வளப்பா மதுரத்துடன் பூக்கமலம் என்றுய்ந்தெடுத்த
களப்பாள னெற்குன்ற வாணனந்தாதிக் கலித்துறையே
வளப்பார்புகழை வளர்ப்பிக்குமாற் றொண்டை மண்டலமே"

—சதகம்

படிக்காசுப்புலவர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். இவ்வந்தாதி ஒன்றே, நெற்குன்றவாணருடைய புலமையை யும், கடவுளிடத்து அவருக்கு இருந்த அன்பையும், சிவனடியார்களிடத்து அவர் வைத்திருந்த மதிப்பையும், வள்ளற் றன்மையையும், அவருடைய மரபின் பெருமையையும் எடுத்து விளக்கப் போதுமானது.

அந்தாதியில் 27-வது பாட்டில் சிறுத்தொண்ட நாயனரைப் பற்றியும், 73-வது பாட்டில் திருஞான சம்பந்தரைப் பற்றியும், 78-ஆம் பாட்டில் சுந்தரமூர்த்திகளைப் பற்றியும் கூறியுள்ளார்.

நெற்குன்றவாணருடைய அந்தாதியானது மந்திரம் போன்றது, பாராயணத்திற்கு இனிமை வாய்ந்தது, நூலின் பயனாகிய வீட்டைக் கொடுக்கக்கூடியது என்பது அந்நூலின் 83-வது பாட்டால் அறியலாம். அப்பாட்டாவது:—

"மற்றிலை ஆவிதளரும் பொழுது முன்வந்து நிற்பார்
சுற்றிலை யாடக மன்றுடையாரன்றி நாமவரைப்
புற்றிலையா புகலூரிலையா எனப் போற்றியின்றே
சற்றிலையாயினும் தூவு நெஞ்சேயினிச் சாவிலையே"

அன்பர்களே! இந்த ஒரு பாட்டே ஒருவனுக்குப் பிறவிப் பிணிக்கு மருந்தாகும் என்பதில் தடையொன்றும் இல்லை. ஆவி தளரும்பொழுது முன்வந்து நிற்பவர் அவரையன்றி வேறு ஒருவரும் இல்லை. ஆகையால், அவரை நாம் தோத்தரித்து நாடோறும் கிடைக்கும் பத்திரம் பூக்களைக் கொண்டு அருச்சனை செய்யவேண்டும். செய்தால் சாவில்லை, முத்தியே என்பதாம்.

X. நெற்குன்றவாணர் காலம்

சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கச் சோழ தேவர்க்கு யாண்டு 19-வது ஆட்சிக்காலத்தில், ஆனி மாதம், ஞாயிற்றுக் கிழமை, பூர்வபட்சத்து, அத்த நாள் கூடிய சுப தினத்தில், நெற்குன்றவாணர் தமக்கு அரையனால் இறையிலியாகக் கொடுக்கப்பட்ட நிலத்தை பிராமண போசனத்திற்காக சாசனம் செய்திருக்கிறார். ஆகையால், இவர் குலோத்துங்கன் காலத்தவர் என்பது உறுதியாகிறது.

ஆனால், குலோத்துங்கன் என்ற பட்டம் பெற்றவர் மூவர் :-

குலோத்துங்கன்	I	1070—1120	A. D.
Do	II	1136—1146	A. D.
Do	III	1178—1216	A. D.

இவர்களில், சேர, பாண்டிய, ஈழ, கொங்கு மண்டலங்களையும், தொண்டை நாடு, வேங்கி நாடு, கங்கைநாடு, வடுக நாடு, கலிங்க நாடு, முதலிய நாடுகளையும் செயித்து சக்கரவர்த்தியென்று பேர் கொண்டவனும், நான்காம் கரிகாலன் என்று பட்டம் பெற்றவனும், 50 வருடகாலம் கீர்த்தியுடன் அரசாண்டவனும், முதலாம் குலோத்துங்கனே யாவன்.

மேலும், இவ்வரசன் தன் இராச்சியத்தைப் பல மண்டலங்களாகப் பிரித்தான். அதாவது:—

(1) சோழ மண்டலம் (தஞ்சை—திருச்சி)

(2) ஜயங் கொண்ட சோழ மண்டலம் (தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர்)

(3) இராசராச பாண்டி மண்டலம்—(மதுரை—இராமநாதபுரம்—நெல்வேலி)

(4) மும்முடிச் சோழமண்டலம் (இலங்கை)

(5) வேங்கை மண்டலம் (நெல்லூர்—கடப்பை—கர்நூல்)

(6) மலை மண்டலம் (திருவாங்கூர்—மலையாளம்)

(7) அதிராசராச மண்டலம் (கொங்கு அதாவது கோயமுத்தூர்—சேலம்)

இவ்விதமான பிரிவுகள் இவ்வரசன் காலத்தில்தான் ஏற்பட்டன. ஆகையால், முன்னே காட்டிய சாசனப் பகுதியால், தொண்டைநாட்டை ஜயங்கொண்ட சோழ மண்டலம் என்று கூறப்படுவதாலும் குலோத்துங்கனுடைய ஆண்டு 19-வது ஆட்சிக்காலம் என்று வரையப்பட்டிருப்பதாலும், நெற்குன்றவாணர் முதலாங் குலோத்துங்கர் காலத்தவரே.

ஆகையால், மேலே கூறிய சாசனம் கி. பி. 1089-ல் செய்யப்பட்டது ஆகும்.

ஆகையால், நெற்குன்றவாணர் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் நடுப்பகுதி கடைப்பகுதிகளில் வாழ்ந்த வள்ளல் ஆவர்.

இவர் திருப்புகலூரிலேயே இருந்து, சிவனடியைச் சேர்ந்தார் என்பது.

"அடைக்கல னுனன்னடித்தாமரை யிணைக்கைந் தெழுத்தாம், படைக்கலம் நாவினுண்டு அஞ்சேல் எவர்க்கும்"

என்ற அந்தாதி அடிகளால் அறியலாம். இவர் தம்முடைய அந்திய காலத்தில் தமக்கு என்று இருந்த இறையிலியாகக் கொடுக்கப்பட்ட நிலத்தையும் ஏனைய சொத்துக்களையும் தானமாக வழங்கியபின் சிவத்தோடு கலந்தார் என்பது உலகறிந்தது.

நெற்குன்றவாணருக்குத் தமிழ்மொழிமீதிருந்த அளவு கடந்த அன்பை நோக்கி, அவருடைய சரித்திரத்தை உலகத்தவர் அறிந்து அவரைப் பின்பற்றி, தற்காலம் தமிழ்மொழிக்கு ஏற்பட்டிருக்கும் இன்னலைத் தவிர்ப்பார்களென்று கருதி இந்நூல் எழுதப்பட்டது.

தண்டமிழ் நாடு வாழ்கத் தமிழரும் வாழ்க வாழ்க
கண்டையும் கைக்கச் செய்து கனியினும் மிக வினிக்கும்
ஒண்டமிழ் என்னும் செய்ய உயர்தனி மொழியும் வாழ்க
அண்டரும் போற்றுகின்ற அரும் சைவசமயம் வாழ்க

முற்றும்.

வரலாற்றுப் பகுதி: History & Biography

காரைக்காலம்மையார் புராணம்

(வித்துவான் S. G. மதுரைநாயகம்.)

(கஅக-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

அடியார் சென்றபின்னர் பரமதத்தன் பகலுணவுகொள்ள தன் இல்லம் அடைந்தான். ஆங்கு அவன் நீராடி வழிபாடு இயற்றியதும், அம்மையார் தன் கணவனுக்குப் பரிகலம் அமைத்து இன்னடிசில் கறிகளுடன் முறையாகப் படைத்து முன் அப்பரமதத்தன் அனுப்பிய கனிகளில் அடியவர்க்கு இட்டதொன்று போக மற்றொரு மாங்கனியைக் கொண்டு வந்து கலத்தில் இட்டான்.

"மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனை நுகர்ந்த இனியசுவை யாராமைத் தார்வணிகன்
இனையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
வனையதுதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார்".

அம்மையார் படைத்த அக்கனியையுண்ட பரமதத்தன் இதன்சுவை மிக நன்றாகவிருக்கின்றது. இனையதொரு கனி மற்றொன்று உள்ளதல்லவா! அதனையும் கொண்டுவந்து இடுக எனக் கூற, அம்மையார் கொண்டுவருவார் போன்று அவ்விடம் விட்டு அகன்றார். உணவுச்சாலையை அடைந்தார். செய்வ தென்னென்று திகைத்தார்; ஒன்றும் புலப்படவில்லை. கணவனோ, பெண்ணே! என்ன இன்னும் வரவில்லையே! கனி வைத்த இடத்தைத் தேடுகின்றாயோ! என அம்மையாரை அழைத்தான். அம்மையார் வருகிறேனென்று மறுமொழி கூறி, "அம்மருங்கு நின்று அயர்வார். அருங்கனிக்கு அங்கு என்செய்வார். மெய்ம்மறந்தார். தன்னை நினைந்தோர்க்கு உற்றவிடத்தில் உறுதுணையாகும் விடையவர் தாள் தம்மனங் கொண்டார்".

கருணாமூர்த்தியே! இந்த ஆபத்திலிருந்து என்னை நீயே காப்பாற்றியருள்புரியவேண்டும். என் பதியினது ஆணையில்லாமல் செய்த செயலால் இப்பொழுது நான் துன்புறுகின்றேன்.

அவரோ அம்மாங்கனி வேண்டுமென்கின்றாரே! நான் இல்லை என்று கூறுவது அழகல்லவே! அதனை நான் உமது அடியார்பசி தீர்ப்பதற்கன்றோ பயன்படுத்தினேன். உனதடியார்கட்குச் செய்யும் பணிகளெல்லாம் உன்பணியன்றோ!

"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோயிற் பகவற்க தாமே"

என்றல்லவா முழுதுணர்ந்த முனிவர் திருமூலர் கூறி யிருக்கின்றார். அன்றியும் நான் உனது அடியாள் அல்லவோ! அடியார்கள் செய்த பிழையைப் பொறுத்தருள்வது உலகுக் கெல்லாம் தந்தையாகிய உமது செயலன்றோ?

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே."

"புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையா யாண்ட
வீசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்த நற்சோதி
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என்று இவ்வாறு,

"மெய்ம் மறந்து நினைந்துற்ற விடத்ததவும் விடையவர்தாள்
தம்மனக்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று"

அம்மையார் தன்கையில் கனியைக்கண்டார்; மகிழ்ந்தார்: ஆடினார்: ஓடினார்: அதனைக் கொண்டுவந்து தம் கணவனரது பரிகலத்திலிடலும், அதனை உண்டு அமுதினும் மேம்பட்ட சுவையுடையதா யிருந்ததைக் கண்ட அவன், இது முன் கொடுத்த மாங்கனிபோன்றதன்று; இம்மூவுலகினும் கிடைத்தற்கரிது. நீ இதனைப் பெற்றதெங்கு என்று அம்மையாரை வினவினன். அவ்வுரைகேட்ட அம்மையார் என்னுவார். பேரருளுடையனாகிய எம்பெருமான் அளித்தருளும் செவ்விய அருட்டிறமையோ பிறருக்குக் கூறத்தக்கதன்று. கற்புடைமணிவியர் தங்கணவர்க்கு எதனையும் மறைத்துக்கூறுந் தகைமையுடையா ரல்லர். ஆதலின் இவ்விடர்ப்பாட்டில் யான் யாது செய்வேன் என்று மனத்துட்கொண்டு, ஆலமுண்டகண்டனாகிய பரமனது திருவடிகளை நினைந்து, "செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தால்" கனிபெற்ற வரலாற்றை அவர் தங் கணவர்க்கு எடுத்து மொழிந்தார்.

அம்மையார் அக்கனி ஈசனருளால் கிடைக்கப்பெற்ற தென்று கூறியதைப் பரமதத்தன் தெளிந்தானில்லை. அவன் இக்கனி பரமனருளால் கிடைக்கப்பெற்றதாயின் இன்னு மொரு கனிபெற்று எனக்களிப்பாய் என்று பதிலிறுத்தான்.

ஈண்டு அம்மையாருக்கு முன்னையினும் பெரியதொரு இடர்ப்பாடான நிலைவந்துளது என்று கூறவும் வேண்டுமோ! தான் கனிபெற்ற வரலாற்றைக் கணவனுருக்கு எடுத்துக்கூறியும் அதனை நம்பவில்லையானல்; அவனை எப்படித்தெளிவிப்பது? தெளிவிக்காவிடில் அம்மையார்பேரில் அவனுக்கு ஒருவித ஐயப்பாடு உண்டாகும். கற்புடைமனைவியர் தன் கணவன் கலவரமடைய அதனைப் பார்த்திராரன்ரே! ஆதலின் அம்மையார் தம்கணவனுரை உள்ளபடி தெளிவித்தலே தகுதியாகு மெனக் கருதினர். முன்போலவே சமையலறையி னுட்புகுந்தார். எல்லாம்வல்ல பரமனை மனங்கசிந்து வேண்டினர்.

ஐயனே! அருட்பெரும் அண்ணல்! தேவரீருடைய திருவிளையாடல்களை இப்பாருளோர் அறிதற்கு முடியாதல்லவா! தேவரீர் அருள்கூர்ந்து எனக்களித்த கனியின் வரலாற்றைக் கூறியும், நான் என்கணவரைத் தெளிவிக்கும் வகையறியேன். அவர் கேட்டவாறு பிறிதொரு பழமும் நீர் அளித்தருளல் வேண்டும். அன்றேல் உனது அருட்டன்மைக்குப் பழுது நேரிடும். என்னுரைபொய்படின் அஃது உன் பெருங்கருணைக்கு இழுக்காகுமன்றே! உன்னை நான்,

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். —அற்புதத் திருவந்தாதி

என்றுகூறிப் பலவாறுக வேண்டி நின்றனர். அம்மையாரின் அன்பின் பெருக்கிற் கிரங்கிய ஆண்டவன் அருளால், முன்போலவே மாங்கனி ஒன்று தன் கையில் வந்து சேர்ந்தது. அதனை அம்மையார் மகிழ்வோடு கொண்டு தன் கணவனிடம் சென்று அவன் கையிற் கொடுத்து நின்ருர். பரமதத்தன் வியப்புடன் அதனை வாங்கினன். உடனே அப்பழம் திருவருளால் மறைந்து போயிற்று. இவ்வியத்தகு செயலைக் கண்டதும் பரமதத்தனது மனதில் அச்சம் தோன்றியது. அவன் உள்ளம் தடுமாறெய்தியது. அவன் அம்மையாரை ஒரு தெய்வமகளென எண்ணினன். அவருடன் வாழ்தலினின்றும் நீங்குந் துணிபு கொண்டான். அன்று முதல் அவன் அம்மையாரின் தொடர்பின்றி வாழ்ந்து வந்தான்.

இனி, அம்மையார் தான் இளமை முதல் சிவபெருமானிடத்திற் பேரன்புடனிருந்து வந்ததை;

"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும்—சுடருருவில்

என்பருக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பரு தென்னெஞ் சவர்க்கு.'' —அற்புதத் திருவந்தாதி

என்னும் அவரது திருவாக்கால் நன்கு உணரலாகும், ஆதலின் அடியார்க்கெளியனாகிய எம்மிறைவன், அம்மையாருக்கு அவர் வேண்டியவுடனே கனிகொடுத்தருளியது வியப்பாமோ!

ஈண்டு நாம் அறியவேண்டுவ தென்னெனின்; தான் என்ற தன் முனைப்பற்று நமக்கு இறைவனே பெருந்துணைவன்; எல்லாம் அவனது அருளின் வழியே நடைபெற்று வருகின்றன என்ற பெருநம்பிக்கையுடன், நாம் ஆண்டவனை வேண்டுவோமானால் உடனே அவனருள்கூடும் என்பதேயாம். இதனை துரௌபதையின் வாயிலாக நாம் நன்கு உணரலாகும்.

பாண்டவர் ஐவரும் தன் இராச்சிய முதலியவைகளைச் சூதிற்றோற்று அவை துரியோதனர்களால் கைப்பற்றப் பெற்றவுடன் தருமர் முதலிய ஐவரும் அத்துரியோதனன் முதலிய பலரும் அவையில் வீற்றிருந்தார்கள். துரியோதனன் கெடுமதியால் துரௌபதைக்கு மானபங்கம் செய்யக்கருதினான். உடனே அவன் துச்சாசனனை விட்டு அவளைக் கொண்டுவரும்படி செய்து, அவ்வவையில் வைத்துத் துகிலுரியச் செய்தான். இம்மானக் கேடான செயலைத் தன் கணவன் முதலியோர் பார்த்திருக்கச் செய்தகாலத்து அவள் என்னசெய்தாள். ஒரு வகையினும் அதிலிருந்து அவள் தப்பும்வழியைக் காணாள். உள்ளம் கலங்கினாள்; உடல் நடுங்கினாள்; மெய்சோர்ந்தாள்; உயிரினும் ஒருவருக்கு மானம் சிறந்ததன்றோ! மானம் நீங்கி உயிர்வாழ்தலை அக்கற்புடையரசி சகிப்பளோ! தன்னாலான செயல் அவ்வேளையில் வேறொன்றும் கிடையாது எனக் கண்டாள். உடனே தன்னுணர்வற்று,

''ஆருயிரு தடங்கண் அஞ்சன வெம்புனல் சோர அளகஞ்சோர
வேறனதுகில் தகைத்தகை சோர மெய்சோர வேறோர் சொல்லுங்
கூறுமற் கோவிந்தா கோவிந்தா வென்றரற்றிக் குளிர்ந்துநாவி
லூறுத வமிழ்தூற வுடல்புளகித் துள்ளமெலா முருகினாளே.
—பாரதர் சூதுபோர்ச்சருக்கம்

இந்நிலையைக் கண்ட பரந்தாமன் அவள்பால் அருள் சுரந்தான். உடனே அவள் தரித்திருந்த துகில் வளர்ந்து கொண்டே போனது. துச்சாசனனும் கை சலித்தான். துரோபதையும் போற்றப்பட்டாள். ஆதலால் தன்னுணர்வற்று இறைவனையே தஞ்சமென் றடைந்தோர்க்கு அவனருள் கிடைக்கப்பெற்றுப் பேரின்பம் அடைவர் என்பதில் யாதும் ஐயமின்று.

அன்றியும், எம்பெருமானது திருவருள் கூடப் பெற்றவர் அவ்வருளின்பத்திற் றிளைத்து மகிழ்வர். அவர்களை இவ்வுலக

இன்ப துன்பங்களொன்றும் தாக்காது. காலனும் அவர்களிடம் நணுக அஞ்சுவன். கால காலனாகிய பெருமானுக்கு ஆட்பட்டார் அக்காலனையும் வெருட்டி மருட்டுவர். எனக்கு இறவாத இன்பமளித்த பெருமானை என்சொல்லி வாழ்த்துகேன் என்று ஆனந்தக் கூத்தாடுவர். சைவசமயம் வந்துற்ற நம் அப்பர் பெருமானை அரசன் ஆணையால் ஏவலாளர் வந்தழைத்தபொழுது அவர் யாது கூறினர் என்று ஓர்மின்கள்.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை"

என்று தன் உட்கிடையை யெடுத்து வெளியிட்டாரன்றே?

நம் அம்மையாரும் எம்பெருமானது திருவடி சார்ந்து இன்புற்றேன். அவ்வின்பப் பெருக்கில் மூழ்கியிருக்கின்ற நான் காலனையும் வென்றேன். கொடிய நரகவாசமும் எனக்குக் கிடையாது. அதற்குக் காரணமாகிய என்னைத்தொடர்ந்து பற்றி வருகின்ற இருவினைகளையும் வேரற அறுத்தொழிந்தேன் என்று கூறுவது காண்க.

"காலனையும் வென்றோங் கடுநரகங் கைகழன்றோ
மேலை யிருவினையும் வேரறுத்தோம்—கோல
வரணார விந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து" —அற்புதத் திருவந்தாதி

இனி, என்றும் பதினாறு ஆண்டாக இருக்க வரம்பெற்றுப் பேரின்ப வாழ்வடைந்த மார்க்கண்டன் என்பான் தன்னைப் பற்றவந்த கூற்றுவனிடத்திற் கூறிய ஆற்றல் சான்றமொழிகளைக் காணுங்கள்.

உன்னையும் உம்பரையும் மாமலர்ப் பங்கயன்றன்னையும் எம்பெருமானுக் காட்பட்டார் ஒரு பொருளாக மதியாரன்றே! ஆதலின் நான் சிவபெருமானிடத்திற் பேரன்புகொண்டு அவரை வணங்கி வழிபாடுசெய்து அவ்வின்பத்தில் மகிழ்ந்திருக்கின்றேன். என்னிடம் நீ கூறவேண்டிய தொன்றுமின்று. நீ மீறி ஏதாகிலும் கூறுவாயானால் நீ அடையுந் துன்பத்தை என்னுதவனுகின்றாய்.

"தீதாகின்ற வாசகமென்றன் செவிகேட்க
வோதாநின்றாய் மேல்வரு மூற்ற முணர்கில்லாய்
பேதாய் பேதாய் நீயிவணிற்கப் பெறுவாயோ
போதாய் போதா யென்றுரைசெய்தான் புகரில்லான்.

கந்தபுரா—மார்க்கண்ட—248

இவ்வாறு வீரச்சொல் புகன்ற மார்க்கண்டரது பீடும் பெருமையும் நம்மால் அளவிடற்கரியதாம்.

குமரவேளிடத்துப் பேரன்பு பூண்டு அவரையே பாடி மகிழ்ந்துருகும் நம் அருணகிரிநாதர், அம்முருகப் பெருமானருள்பெற்ற எனக்கு இனிக் கிடைத்தற்கரியபேறு என்னுளது? இனி என்னிடத்தில் பிரமதேவனுக்கும் எமனுக்கும் வேலை கிடையாது. அவர்கள் பண்டு முருகப் பெருமானிடத்திற் பட்ட துன்பங்களை மறப்பரோ!

"பங்கே ருகனெனைப் பட்டோலையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னேதனிவே லெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரு
மெங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே.

—கந்தாலங்காரம்

எனவும், எமனை விளித்து,

"பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாடிரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்படடாசத்தி வாளென்றன் கையதுவே.

—கந்தாலங்காரம்

எனவும் கூறும் பகுதிகள் அருணகிரிநாதரின் மனத்திண்மையைப் புலப்படுத்துவனவாம். இவற்றால் பெருமானருள் வரப்பெற்றார் பெருமை அளவிடற்பாலதன்று என்று அறிக.

இனி, அம்மை புனிதவதியாரது தொடர்பின்றி ஒழுகிய பரமதத்தன் அவரை விட்டுப்பிரிய மனங்கொண்டான். ஆதலின் அவன் தன் மாமனிடம் சென்று, யான் மரக்கலமேறி அயல்நாடு சென்று பொருள் தேடிவர எண்ணியுள்ளேன். தாங்கள் விடைதரல் வேண்டுமென அவரை வேண்டினன். அவரும் அதற்குச் சம்மதித்து மரக்கலம் ஒன்று சமைப்பித்து அதில் அவன் செல்லும் புலங்களிலுள்ளார் விரும்பி வாங்கும் பண்டங்களை நிரப்பி, நலந்தரு நாளிற் செல்ல விடை கொடுத்தார். பரமதத்தனும் மகிழ்வொடு புறப்பட்டான். தான் கருதிய தேயங்களிற் சென்று தான் கொண்டுபோன பொருள்களை விற்றான். பெரும் பொருள் பெற்றான். மீண்டும் அவன் கலமேறிச் சென்று பாண்டிநாட்டிலுள்ள பட்டினமொன்றை அடைந்தான். ஆங்கு தான் கொண்டுவந்த பல்வகைப் பொருள்களையும் கொண்டு பொருள் பெருக்கிப் பெருஞ் செல்வன் ஆனான்.

இவ்வாறு அவன் வாழ்வதைக் கண்ட வணிகர் குலமக்களில் ஒருவர் மகட்கொடுக்க மணந்து அவளுடன் அவன் இல்லறத்தில் வாழ்ந்து வந்தான். அவர்கட்கு ஒரு பெண் மகவு பிறந்தது. தான் குலதெய்வமாகக் கருதி விட்டு நீங்கிய அம்மையார் புனிதவதியாரது பெயரையே அப்பெண் மகவுக்கு இட்டு மங்கலமாக மனையறம் நடாத்தி வரும்பொழுது, காரைக்காலிலிருந்து அப்பட்டணத்திற்கு வந்த ஒரு சிலரை அவன் கண்டான். அவர்களை அவன் வரவேற்று அழைத்துச் சென்று உணவளித்துத் தனது வரலாற்றினையும் அவர்கட்குக் கூறினான். திரும்பிக் காரைக்காற் சென்ற அவர்கள் தனதத்தனிடம் இந்நிகழ்ச்சியைக் கூறினார்கள். நீண்ட நாட்களாகத் தன் மருமகன் வரவில்லையே யெனக் கவற்சியுற்றிருந்த தனதத்தனும் இனித் தம் மகளை ஆங்கு அனுப்புவதே தக்கதென்று எண்ணினான். அவ்வாறே அவன் சுற்றத்தார் பலருஞ்சூழ அம்மையாரைச் சிவிகையிலேற்றி அப்பட்டின மருங்கு சார்ந்து ஓரிடத்திலிருந்து கொண்டு பரமதத்தனுக்குச் செய்தியனுப்பினன்.

தான் குலதெய்வமாகக் கருதிய தன் மனைவியாரும் சுற்றத்தாரும் வந்திருப்பதைக் கேட்ட பரமதத்தன் என்ன செய்வதென்று திகைத்தான். நாம் அவர்களை எதிர்கொண்டழைத்தலே தகுதியென எண்ணினன். உடனே அவன் ஆங்கு மணஞ் செய்துகொண்ட மனைவியையும் பெண் மகவையும் தன்னுடன் அழைத்துச் சென்று அவர்கள் இருப்பிடம் சார்ந்தான். இளமான்பிணைபோன்று நின்ற அம்மையாரை அவன் கண்டான். அவரடியில் வீழ்ந்து வணங்கினன். தன் மனைவியையும் மகளையும் அம்மையாரடியில் வணங்கச்செய்தான். உமதருளால் யாங்கள் வாழ்ந்து வருகின்றோம். இவ்விளங் குழவிக்கும் நினது திருப்பெயரே இட்டுப் போற்றி வருகின்றோம் என்று அம்மையினிடம் அவன் தெரிவித்துநின்றான்.

தம் கணவனார் தம்மடியில் வணங்கப்பொருத அம்மையார் அச்சுற்றுச் சுற்றத்தாருடன் ஒதுங்கி நின்றனர். அவன் செயலைக்கண்ட கிளைஞர் உன்மனைவியை வணங்குவது என்கொல் என்று வினவினர். அதற்கு அவன்,

"மற்றவர் தம்மை நோக்கி மானுடமிவர் தாமல்லர்
நற்பெருந்தெய்வ மாதல் நானறிந்தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னாதலாலே
பொற்பதம் பணிந்தே னீரும் போற்றுதல் செய்மினென்றான்.

அம்மையாரின் பெருமையைக் கூறி அவர்களையும் வணங்கச் செய்தான்.

இவ்வாறு அம்மையார் தன் கணவனாரது செயலைக்கண்டு அவர் குறிப்பினையும் உணர்ந்தார். இவருக்காகவன்றே இவ் வழுகியவுடலை நான் இதுகாறும் தாங்கிநின்றேன். இனி இவ் வுடல் வேண்டேன் என்று கூறி, இறைவா! உன்னை இடைய ருது போற்றும் வடிவம் வேண்டும். இவ்வுடற்றசை கழிதல் வேண்டும். நினைப்பாடும் பேய்வடிவு அடியேனுக்கு அருளல் வேண்டும் என்று அம்மையார் இறைவனை வேண்டிநின்றார். அம்மையார் வேண்டியபடியே தசைப்பொதி கழிந்து பேய் வடிவு எய்தினள்.

உடனே விண்ணினின்று தேவர்கள் பூமாரி சொரிந்தனர்; விண்முரசு திசையெங்கும் ஆர்த்தன. தேவர்களும், முனிவர் களும் மகிழ்கூர்ந்தனர். பேய்க்கணங்கள் மகிழ்ந்து ஆடிப் பாடிக் கூத்தாடின.

இந்நிகழ்ச்சியைக் கண்ட சுற்றத்தாரும் பிறரும் பெரு வியப்பெய்தி அஞ்சி அகன்றனர். பரமதத்தனோ தன் மனைவி யுடனும் மகவுடனும் அம்மையாரைக் குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வந்தான்.

அம்மையார் எம்பிரான் தனக்கு இவ்வடிவங் கொடுத் தமைக்கு அவரை வாயாரப்பாடித் துதித்தனர்; குதித்துக் கூத்தாடினர். அன்றியும் எம்பெருமானது சிறப்புக்களையும் தனக் கருள்புரிந்த தன்மையையும் குறித்து அற்புதத் திருவந் தாதி பாடி மகிழ்ந்தார். திருவிரட்டை மணிமாலை முதலிய நூல்களும் அவரால் அருளிச் செய்யப்பெற்றன.

பின்னர், இறைவன் உமாதேவியாரோடும் பலகணங்க ளோடும் மற்ற முனிவர் தேவர் முதலியவர்களோடும் கைலை யில் வீற்றிருக்குங் காட்சியை நேரிற் காணவேண்டு மென்றும் ஆவல் அம்மையாருக்கு மேலிட்டது. உடனே அவர் வட திசை நோக்கிப் புறப்பட்டு, மனத்தினுங் கடிய வேகமாகச் சென்று கைலை வெற்பின்பாங்கர் அணைந்தார். எம்பிரான் உறைந்தருளும் இம்மலைமீது நாம் காலால் நடந்து செல்வது முறையல்லவென்று தலையால் நடந்து சென்றார்.

எங்கு நம் அடியார்கள் நம்மை வணங்கி வழிபடுகின்றார்க ளென்றும், நம் அடியார்களை எவரெவர் பூசித்து வருகின்றார்க ளென்றும், நம் பக்தர்கள் எப்பொழுது எவ்வகையான உத வியை நாடுகின்றார்க ளென்றும் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்து அருள்புரிந்து வரும் பெருமான் கைலையில் உமா தேவியாரோடும் வீற்றிருந்தார். அம்பிகை தொலைவில் வரு கின்ற நம் அம்மையாரைப் பார்த்து வியப்பெய்தி, இதோ எற்

புடம்புதாங்கி இவண் வரும் உருவத்தின் அன்பைப்பாருங்கள் என்று பெருமானுக்குச் சுட்டிக்காட்டினள். அண்ணலும் தேவியை நோக்கி, "ஈண்டுவருமிவள் நம்மைப்பேணும் அம்மை காண்! மற்று இவள் இப்பெருமை சேர்வடிவும் வேண்டிப் பெற்றனள்" என்று பதிலிறுத்தார். அவ்வளவில் அம்மையாரும் அருகில் வந்தணைய, அண்ணல் பார்த்து 'அம்மையே' யென்று அழைக்க, அம்மையும் 'அப்பா' என்று பெருமான் திருவடியில் விழுந்து வணங்கினர். உடனே பெருமான் அம்மையாரை நோக்கி, 'இங்கு நீ நம்பால் வேண்டுவது என்'? என்று வினவினர். அம்மையார் இறைஞ்சிநின்று,

> "இறவாத வின்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
> பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்று
> மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
> யறவாநீ யாடும்போ துன்னடியின் கீழிருக்க வென்றார்."

எனக்கு உன்னிடத்தில் என்றும் மாறாத அன்பு வேண்டும். இனி இவ்வுலகிற் பிறவாமை வேண்டும். அங்ஙனம் பிறக்க நேரின் உன்னை மறவாதிருக்க வேண்டும். அறவா! நீ ஆடும் போது உன்னடியின்கீழிருந்து நான் மகிழ்ந்து பாடிக்கொண்டிருக்கவேண்டும் என்று இவ்வாறு அம்மையார் பெருமானை வேண்டி நின்றார்.

பரமபதியும் அவ்வாறே அருள்செய்து, தென்றிசையில் நிலைபெற்றுள்ள திருவாலங்காடு போந்து, ஆங்கு நமது மா நடனங்கண்டு மகிழ்ந்து பாடிக் கொண்டிருப்பாயாக என்று அம்மையாருக்கு விடைகொடுத் தனுப்பினர்.

அம்மையார் விடைபெற்றுத் திருவாலங்காடு போந்து அதனைக் காலால் மிதித்தற்கஞ்சி தலையால் நடந்து சென்றார். ஆங்குப் பெருமானது அண்டமுற நிமிர்ந்தாடும் மாநடனங் காணப்பெற்று மகிழ்ந்தார்; வாயார வாழ்த்திப் புகழ்ந்தார்; அவனது திருவடிக் கீழிருந்து என்றும் மாறாப்பேரின்ப மருந்தினர்.

முடிவுரை :—அம்மையார் ஆண்டவனிடத்திலும் அடியாரிடத்திலும் இடையறாப் பேரன்புடன் ஒழுகி வந்ததால், முடிவில் பேரின்பநிலை யடையப் பெற்றார். இதனால் அடியார் பக்தி அளவிடற்கரிய பெருமைவாய்ந்தது என்பதும், உள்ளன்புடன் பக்தி செய்யப்பெற்றோர் திருவருட்பேறு வாய்க்கப் பெறுவர் என்பதும் அறியலாம். நாமும் இதனைக் கைக்கொண்டு கடனாற்றிவரின் அண்ணலாரின் திருவடிப்பேறு பெற்று உய்வோம் என்றறிக.

வாழ்க எம் அம்மை! வாழ்க எம் அண்ணல்!!

அறிவியற் பகுதி - Science

எக்ஸ்-ரே (X—Ray)

(N. குழந்தை வேலன், பி. ஏ.)

பகலில் சூரியனது ஒளியும் இராக்காலங்களில் விளக்கு வெளிச்சமும் நமக்கு இன்றியமையாதனவாக இருக்கின்றன. ஒளியின் உதவியினாலேயே உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் நாம் காணுகின்றோம். ஒளி மக்களுக்கு எத்தனையோ வகைகளிற் பயன்படுகின்றது. ஒளியின் தன்மைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அஃது ஓர் வியத்தகு பொருளாக இருக்கின்றது.

ஒளியானது மிக நுண்ணிய அலைகளால் ஆகியது. இந்த அலைகளை நீரலைகளுக்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஒளியலைகள் ஒரே அளவுடையன அல்ல. இவற்றுட் சில நீண்டும், மற்றும் சில குறுகியும் உள்ளன. ஒளியலைகளின் அளவுக்குத் தகுந்தவாறு நிறங்கள் தோன்றுகின்றன. வானவில்லில் சிவப்பு முதல் நீலம் ஈறாக ஏழு நிறங்களைக் காணலாம். சிவப்பு ஒளியின் அலைகள் நீண்டும், நீல வொளியின் அலைகள் குறுகியும் இருக்கின்றன. இவற்றின் இடையில் உள்ள நிறங்களின் அலைகள் நடுத்தரமான அளவுடையவை. நாம் காணும் இவ்வேழு நிறங்களைத் தவிர ஏனைய ஒளிக்கதிர்கள் நம் கண்ணுக்குப் புலப்படாதனவாக இருக்கின்றன. சிவப்பு ஒளிக்கு மேலுள்ள அலைகள் மிகப் பெரியவை யாதலாலும் நீல வொளிக்குக் கீழுள்ள அலைகள் மிகச் சிறியவை யாதலாலும் அவை நம் கண்ணிற் படுவதில்லை. கண்ணுக்கு எட்டாத இவ்வொளிக் கதிர்கள் மிகுந்த ஆற்றல் உடையனவாக இருக்கின்றன.

குறுகிய அலைகளை உடையதும், நிறைந்த ஆற்றல் உடையதுமான நிலவொளிக் கதிர் எக்ஸ்-ரே எனப்படும். இவ்வொளியை 1895-ஆம் ஆண்டில் ராண்ட்ஜன் (Rontgen) என்னும் பேரறிஞர் கண்டுபிடித்தார். இவர் ஒரு நாள் காற்று நீக்கப்பட்ட கண்ணாடிக் குழாயொன்றில் மின்சாரத்தைப்பாய்ச்சி ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தார். அக்குழாய் ஒரு கறுப்பு மூடியால் மறைக்கப்பட்டிருந்தது. அதனுள் மின்சாரத்தைப் பாய்ச்சியவுடன் திடீரென்று அருகில் இருந்த பொருள்கள் எல்லாம் நீல நிறத்துடன் மின்னத் தொடங்கின.

இதனைக் கண்டு அப்பண்டிதர் மிகவும் வியப்புற்றார். சுற்றிலும் இருந்த பொருள்களை மிளிரும்படி செய்தது கண்ணுக்குப் புலப்படாத நீலவொளி என்பதையும், அவ்வொளி கண்ணாடிக் குழாயி னுள்ளேயிருந்து கறுப்பு மூடியைத் துளைத்துக் கொண்டு வெளியே வந்திருத்தல் வேண்டுமென்பதையும் அவர் கண்டறிந்தார்.

எக்ஸ்-ரே என்னும் இவ்வரிய நீலவொளி கல், மரம் முதலிய எல்லாக் கெட்டிப் பொருள்களையும் தங்கு தடையின்றி ஊடுருவிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. இந்த ஒளியின் உதவியால் நமது உடலைப் படம் பிடித்துப் பார்க்கும் பொழுது உள்ளே இருக்கும் எலும்பு முதலியன நன்கு புலப்படுகின்றன. எக்ஸ்-ரே படத்தில், தசைகளின் நிழல் மெல்லியதாகவும், எலும்புகளின் நிழல் தடிப்பாகவும் தெரிகின்றன. இந் நிழற்படங்களுக்கு எக்ஸ்-ரேடியோகிராஃப்ஸ் என்று பெயர். உடலின் உள்ளே எலும்புகள் ஏதேனும் முறிந்து போய்விடில் எக்ஸ்-ரேயின் உதவியால் படம் பிடித்து அதிலிருந்து எலும்பு நொறுங்கிய இடத்தைக் கண்டு பிடித்து அதனை எளிதிற் செம்மைப் படுத்திவிடலாம். இதுவுமன்றி நோயுள்ள இடங்களில் இவ்வொளியைப் படும்படி செய்வதால் பல கொடிய நோய்கள் நீங்கிவிடுகின்றன.

எக்ஸ்-ரே என்னும் இவ்வியத்தகு ஒளி கல், மரம், தசை முதலியவற்றை எங்ஙனம் தாண்டிச் செல்கின்றது? ஏனைய ஒளிக்கதிர்கள் ஏன் இங்ஙனம் செல்வதில்லை? எக்ஸ்-ரே என்னும் நீல வொளியின் அலைகள் மிகச் சிறியவை. ஒவ்வொரு அலையும் ஓர் அங்குலத்தில் (உருயயயஎயயய) இருபத்தைந்து கோடியில் ஒரு பங்கு இருக்குமென அறிவியற் புலவர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். இதனால்தான் நுண்ணிய நீல அலைகள் கல், மரம் முதலிய எல்லாப் பொருள்களையும் எளிதில் துளைத்துச் செல்கின்றன.

சூரிய வெளிச்சத்தில் நம் கண்ணுக்கு எட்டாது மறைந்து நிற்கும் இந்நீலவொளி மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது. நாம் வெயிலிற் காய்வதால் நம் உடல் நீலவொளியை உறிஞ்சி உரம்பெறுகின்றது. இதனால்தான் பனிமிகுந்த ஆங்கில நாடுகளில் வெயிலிற்காயும் வழக்கம் மிகுதியாக இருக்கின்றது. சூரியவெளிச்சம் இயற்கையாகவே பல நோய்களைப் போக்குகின்றது. சூரிய வெளிச்சம் இல்லாத காலங்களில் நீல வொளியைச் செயற்கை முறையிலும் உண்டாக்கி நோயாளிகளுக்குக் கொடுப்பதுமுண்டு. நாம் உட்கொள்ளும் உணவிலும் இவ்

வொளியைப் பாய்ச்சி அதனை உரம் உடையதாகச்செய்யலாம். இங்ஙனம் உரம் ஏற்றிய உணவைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் எலும்புகளும் பற்களும் நன்கு வளர்ச்சி யடையும்.

கண்ணுக்குத் தெரியாத சிவப்பு ஒளியும் (Infra-Red Rays) பலதிறப்பட்ட நோய்களைப் போக்கப் பயன்படுகின்றது. 1929-ஆம் ஆண்டில் ஐந்தாவது ஜார்ஜ் அரசர் நோய் வாய்ப்பட்டிருந்தபொழுது இவ்வொளிதான் மிகவும் பயன் பட்டது. இதன் உதவியால் இருட்டுக் காலங்களிலும்,பனிமூடி இருக்கும் வேளைகளிலும் புகைப்படம் பிடிக்கலாம். எதிரிலுள்ள பொருள் பனியினாலோ புகையினாலோ முழுவதும் மறைந்து கிடக்கும்போது அதனை எங்ஙனம் படம் பிடிப்பது? நம் கண்ணுக்குப் புலனாகும் ஒளியலைகளை மட்டும் பனியும் புகையும் தடுத்துவிடக்கூடும். ஆயினும் நம் கண்ணுக்குப் புலப்படாத சிவப்பு அலைகளோ மறைக்கும் பொருள்கள் யாவற்றையும் ஊடுருவிக்கொண்டு வெளியில் வருகின்றன. இவ்வொளிக் கதிர்கள் படம் பிடிக்கும் கருவியின்மேல் பட்டதும் பனியினால் மறைந்திருக்கும் பொருள்களும் படத்தில் பதிகின்றன.

இத்தகைய படம்பிடிக்கும் கருவிகள் கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. கடலில் பனி மூடியிருக்கும் காலங்களில் கப்பலுக்கு எதிரில் மறைந்திருக்கும் பனிமலைகளும் பாறைகளும் இக்கருவிகளிற் பதிகின்றன. மாலுமி படத்தைப் பார்த்துக்கொண்டு பனி மலைகளிலும் பாறைகளிலும் கப்பலை மோதவிடாமல் காத்துக் கொள்வான். இக் கருவிகள் எதிரில் வருங் கப்பல்களையும் படம்பிடித்துக் காட்டுவதால், மாலுமி தன் கப்பலை ஒரு புறமாக விலக்கிக்கொண்டு அவை போவதற்கு வழிவிடுவான். சிவப்பு ஒளிப்படம் இல்லாவிடில் பனிக்காலங்களில் கப்பல்கள் ஒன்றோடொன்று மோதி உடைந்துபோக நேரிடும்.

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—திரு. க. ப. சந்தோஷம்]

(முன் கஉகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர்க் கண்டவாறு எழுத்துக்களின் எண், பெயர், உருவம், வகை முதலியவற்றைக் கூறும் பகுதிக்கு நூல் மரபு என்று தொல்காப்பியர் பெயரிடுகின்றார். இப்பகுதிக்கு இப் பெயரிட்டது குறித்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதல் அரசஞ் சண்முகனார் வரையிலுள்ள எல்லா உரைகாரரும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றை யெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். ஆயின், அவர் தங்கருத்துக்கள் ஒன்றிற்கொன்று பெரிதும் வேறுபடுவன வென்பதை நினைவில் வைக்கவேண்டும்.

'நூல்' என்பதன் பொருள்கள் பல:—

1. பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூல்
2. தச்சன் வழங்கும் அளவு நூல்
3. பார்ப்பனர் பூணூல்
4. மண நிகழும்போது அணியு நூல்
5. ஆராய்தல்
6. இலக்கியம்
7. அறிவியல்
8. ஞானப்பயிற்சி
9. வேதங்கள்

"அருணூ லு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூல் தெரியப் புகும்"

இவண் அருணூலென்பது வேதமென்ற பொருளில் வந்தமை காண்க. மரபென்பது 1. பழமை; 2. இயற்கை; 3. வழக்கம் என்ற முப்பொருளுடையது.

நூல் என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்ற பொருளைப் பற்றிய மரபு அல்லது வழக்கை, நூல்மரபு என்ற பகுதி விளம்புகின்ற தென்பதில் ஐயமின்று. நூல் என்ற கிளவிக்கு நாம் கண்ட ஒன்பது பொருள்களுள் எப்பொருளின் மரபு கூறப்படுகின்ற தென்பதுதான் கேள்வி. நாம் கண்ட ஒன்பது பொருள்களுள் முதற்கணுள்ள ஐந்து பொருள்கள் மரபு என்ற கிளவியோடு பொருந்திப் பயன்படு பொருள்தரா. ஆறுவது, ஏழாவது பொருள்களாகிய இலக்கியம், அறிவியல் என்பவற்றோடு 'மரபு' பொருந்திப் பொருள் தருமாயினும், தொல்காப்

பியத்தின் பிற பகுதிகளாகிய சொல் பொருள் முதலியவற்றிற்கும் இஃதொக்குமாதலால் எழுத்தைப்பற்றிக்கூறும் பகுதிக்கு மட்டில் நூல்மரபென்ற பெயர் வருதல் சாலாது. ஆதலின், எஞ்சிநிற்கின்ற எட்டாவது ஒன்பதாவது பொருள்களிலேயே நாமிதற்குக் காரணங் காட்டல் வேண்டும்.

ஒகர எழுத்தை இயற்கையில் தோன்றும் வடிவங்களோடு ஒற்றுமை செய்து காட்டினேன். ஒகரம் அகரமாவதையும், அகரம் ஒகரமாவதையும் விளக்கினேன். அகரத்திலிருந்து மூல மந்திரங்கள் பிறக்கும் முறையையுஞ் சொன்னேன். மற்றும், எழுத்துக்களின் வடிவிலிருந்து இந்தியர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற மறைப்பாலதாகிய உண்மையியல் பெறப்படுமாறு காட்டினேன். இதற்கு மேல் பிரணவ எழுத்துக்களாகிய அகர உகரங்களின் வடிவத்தைத் தென்னிந்தியர்களால் வழங்கப்படுந் தெய்வத்தின் உருவங்களோடு ஒற்றுமைப் படுத்தக் கூடுமாயின், 'நூல் மரபு' என்ற சொற்றொடரை 'வேத வழக்கு' என்று பொருள் செய்வது பொருந்துவதாகும். இதற்குச் சார்பாக எழுத்துக்களை மாற்றி யமைக்கு முறையில் நான்கு அகர அல்லது ஒகர வெழுத்துக்களிலிருந்து 'நூல் மரபு' என்ற சொற்றொடர் பிறப்பதை முன்னர் விளக்கி யிருக்கின்றேன். வேதங்கள் நான்கு ஒகர எழுத்துக்களிலிருந்து பிறந்தனவென்பது மரபு.

அரிசுவடி என்ற தமிழ் நெடுங்கணக்கின் பெயரும், நூல் மரபு போலவே எழுத்துக்களின் எண் பெயர் உருவம் முதலியவற்றைக் கூறுவதாகும். அரிசுவடி என்ற தொடரும் நான்கு அகர அல்லது ஒகர வெழுத்துக்களிலிருந்து வெளிப்படுவதை விளக்கியிருக்கின்றேன். தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் குறித்த ஒரு தொகையினவாகிய அகரங்களிலிருந்து பெறப்படுகின்ற பற்பல பகுதிகளையும், ஒன்றுங் குறையாமல் வழங்குந் தன்மை உடையனவல்லவாதலின், இத்தன்மை யுடைய ஈண்டு நாமெடுத்துக்கொண்ட சொற்களை மிகக் கருத்துடன் நாமாராய்தல் வேண்டும். ஈண்டு நாமெடுத்துக்கொண்ட சொற்கள் இயல்புப் புணர்ச்சியாக அரிசுவடி, நூல்மரபு என நின்றால் மாத்திரமே அவை நான்கு அகர வெழுத்துக்களினின்றும் பெறப்படும். அஃதன்றி அவை விகாரப் புணர்ச்சி எய்தி 'அரிச்சுவடி', 'நூன் மரபு' என நின்றால் அவ்வாறு பெறப்படா.


"நான்கு பிரணவங்களிலிருந்து நான்கு வேதங்களையுந் தோற்றுவித்தேன்" என்று பெருமை பேசிய பிரம்மனின் நான்கு தலைகளிலும் அவனைச் சிறையிடுங்கால் முருகன் குட்டி

ணென்று கூறும் புராணக்கதை 'அரிசுவடி', 'நால் மரபு' என்பவற்றுடன் பொருத்த முடையதென் றிறுனிக்கக் கிடக்கின்றது. ஏனெனின் நால் மரபும், அரிசுவடியுங் கூறுகின்ற எழுத்துக்களின் உருவம் முதலியவற்றிலிருந்து வேதத்திலும் அறிவியலிலுமுள்ள உண்மைகள் பலவும் பெறப்படும். 'அரி சுவடி' என்பது அரியும் சுவடியும் ஆகிய இருசொற்களாலாயது. அரிசுவடியில் முதற்கட்டோன்றும் அரி ஓம், நன்றாக, குரு வாழ்க, குருவே துணை என்ற சொற்களில் முதலிலிருக்கும் அரி என்ற சொல்லிலிருந்து, ஆத்திச்சூடி என்ற பெயர்க்கிணங்க அரிச்சுவடி என்ற பெயருண்டாயிற்றென்று சிலர் தவறாக முடிக்கின்றார்கள். அரி என்ற கிளவி தமிழிலுள்ள வேறெச் சொல்லைக் காட்டிலும் பெருகிய பொருளை யுடையது. அதனாற் குறிக்கப்படும் பல்வேறு பொருள்களுள் சிவன், விஷ்ணு முதலிய தலையாய கடவுளர்களும், தலையாய பருப்பொருள்களும், இயற்கை யாற்றுகின்ற வினைகளும் சிலவாம். இவைபற்றிய அறிவு பெரிதும் வேண்டற்பால தென்பது பற்றியும் தமிழ் எழுத்துக்கள் வாயிலாய் இவ்வறிவு கைவரப்பெறல் கூடுமென்பது பற்றியும், தமிழ் எழுத்துக்களின் தன்மை கூறும் நூலுக்கு 'அரிசுவடி' என்பது பெயராயிற்று. இதனால் தமிழ் எழுத்துக்களின் வடிவினுந் தன்மையினும் எல்லா அறிவும் உண்டென்று 'அரிசுவடி' என்ற தலைப்பு அறிவிப்பதுபோல் காண்கின்றது. இந்நூலின்கண் விநாயகர் வணக்கமாகக் கூறப்படும்.

> "அரிவரி இரகசியம் அறிந்து கூறவே
> கரிமுக னிருபதங் கருத்து ளிருத்துவாம்"

என்ற அடிகள் எழுத்துக்களின் வரியில் அல்லது வடிவில் இரகசியங்களிருக்கின்றனவென்று வெளிப்படையாய்க் கூறுகின்றன. இங்ஙனமாதலின் எழுத்துக்களில் மறைந்து கிடக்கும் பொருளை வெளிப்பட வெடுத்துரைக்கச் செய்யும் இம் முயற்சி புனைந்துரையாமெனல் பொருந்தாது. அரிசுவடியிலும் நூன்மரபிலும் கூறப்படுவனவாகிய எழுத்துக்கள் மறைப்பாலதாகிய உண்மையியலைக் குறித்து யான் விரிந்த ஆராய்ச்சிகள் நிகழ்த்தியுள்ளேன். அவற்றை வெளியிட இஃதமைய மன்று.

எனது சொற்பொழிவி னிப்பகுதியை அடுத்தபக்கத்திலுள்ள படத்தைப்பற்றிக் கூறி முடிக்கின்றேன். இதைப் பார்த்தவுடன் இஃதொரு சாலப் பெரிய ஓகாரம் என்று நீங்கள் சொல்வீர்களென்பது உறுதி. படத்தின் நின்னிய வரிகளோடு நுண்ணிய வரிகளை ஊன்றி நோக்கினால் சிவனின் தட்சணாமூர்த்த வடிவந்தோன்றுகின்றது. ஓகாரத்தின் வடிவம் பார்க்கின்றவர்களின் கண்ணைக் கவருமாறு



இப்படம் வரையப்பட்டதாயினும், இக்கடவுளின் உருவம் மரபாக வரும் வடிவினின்றும் சிறிதும் வேறுபட்டதன்று. இக்காலத்து ஓவியவல்லா னொருவன் ஈண்டு வரையப்பெற்ற இவ்வுருவத்தைக் கண்டு "இஃதோவியத்திற்குப் பொருந்தா நிலை," என்று இதைக் கடிவான். கைகால் முதலிய உறுப்புக்கள் இவ்வடிவத்தில் யாராலும் வைத்துக் கொண்டிருக்க முடியாத நிலையில் அமைந்துள்ளன. இம்முறையில் தன்னுறுப்புக்களை வைத்துக்கொண் டொருவன் அமர்ந்திருக்க முயல்வானாயின், அவனுடைய கை கால்கள் உணர்ச்சியற்றுப் போம். இங்ஙனம் யான் பகர்வதால் இறைவன்பாலன்பில்லாத ஒருவன், இறைவனது நிலையில் அமரமுயலுங்கால் அவன் துன்புறுகின்றானென்று யான் கூறுகின்றேனென்று நினைக்கலாகாது. யான் மொழிவதெல்லாம் இந்நிலையி

லமர்வது கூடாதென்பதேதான். ஒருகால் உடலைப் பலவாறு வளைத்துக் காட்சி வழங்குங் குழுவினரைப்போல் ஒருவன் பன்முறை இந்நிலையி லிருந்து பயில்வானாயின் அது கூடும். ஒகரத்தின் கீழ்ப்பகுதி மேலே வரும்படி திருப்பி எழுதினால், அஃது அகரமாகுமென்பதை முன்னரேகாட்டியுளேன். ஒக ரத்தி னிந்தக் கீழ்ப்பகுதி சிவனது இடக்காலுக் கொப்பாவது. ஒகரத்தை அகரமாக்குவதற் கிணங்க சிவனது இடக்கால் செங்குத்தாய் மேலே தூக்கப்பட்டு நிற்குமாயின், அஃது ஊர்த் தவ நர்த்தன மூர்த்தமாகும்.

இந்த ஊர்த்தவ நர்த்தன மூர்த்தமென்பது தட்சணு மூர்த்த நிலையினும் மிக அரிய நிலையாகும். பொதுவாக மக்கள் அமரவும் நிற்கவுங்கூடிய நிலைக்கு முறையே இவ்விரு வடிவங் களும், முறையே இயற்கை ஒடுங்கியிருத்தலையும், இயங்கி நிற்றலையும் சுட்டுவனவாகி ஒகர அகரங்களாற் குறிப்பிடப் பட்டு மக்கள் உணர்ந்து வணங்குமாறு கடவுளினுருவிற் கலந்து விளங்குகின்றன. ஈண்டுக் குழவி நிலையில் நாம் பார்க்கு மொன்று கருதத்தக்கது. கருப்பையிலுள்ள குழவி ஒகர அல்லது தட்சணுமூர்த்த வடிவத்துடனிருக்க, பிறந்தபின் முதுகு தரையிற் பொருந்தப் படுத்திருக்கும் நிலையில் அது தன் காலை மேலே தூக்கி, ஊர்த்தவ நர்த்தன அல்லது அகர வடி வத்தோடு பெருவிரலை வாயில்வைத்து மெல்கின்றது.

தட்சணுமூர்த்த அல்லது ஒகரவடிவத்தில், சிவம் அமைதி நிலைமையிலிருப்பதாகக் கருதப்படுகின்றது. இதற்கொப்ப மந்திரங்களில் அமைதி அல்லது விடுதலையை நாடி ஒகரம் வழங்கப்படுகின்றது.

ஊர்த்தவ நர்த்தன அல்லது அகர வடிவத்தில் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்ற ஐந்தொழி லாற்றுவதாகச் சிவம் கருதப்படுகின்றது.

படத்தில் நாம் காணும் ஒகரவடிவத்தோடு கூடிய தட்சணு மூர்த்தத்தில் கடவுள் வடிவின் தலைப்பகுதி விடப்படுகின்ற தென்பதைக் கவனிக்கவேண்டும். அதாவது, சிவத்தின் தலை ஒகரத்தி லடங்கவில்லை. ஈண்டு, நீங்கள் தமிழிலக்கணத்திற் கிசைய ஒகரம் புள்ளிபெற வேண்டுமென்பதை நினைவிற்குக் கொண்டு வருவீர்களாயின், அப்புள்ளி சிவத்தின் தலையைக் குறிப்பிடுவதாகு மென்பது கண்டு தமிழை வகுத்தவர்கள் ஒகரத்துக்குப் புள்ளிவைக்க வேண்டுமென்று கட்டளையிட்ட தன் காரணத்தை யறிவீர்கள். மற்றும், புள்ளியின் வடிவம் கடவுளின் தலையி னுருவத்தைக்கொண்டு தெளியப்படும். அப்

புள்ளி மேலே விரிந்தும் அடியிற் குறுகியும் நீண்டிருக்க வேண்டும். மண்டையோட்டு ஆராய்ச்சியில் மேலே விரிந்துங் கீழே குறுகியுமுள்ள வடிவங்கொண்ட தலையோடு குறித்த ஒரு வகைத் தன்மையுடைய மக்களுக் குறிகுறியாமென்று கூறப்படுகிறது. ஒருவேளை, சிவன் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவனுவனே என்ற ஆராய்ச்சிக்காரர் கேட்கலாம். இதையும் இதுபோன்ற பிற கேள்விகளையும் இன்னொருபொழுது ஆராய்ந்து விடையளிக்கலாமென்று நினைக்கின்றேன்.

கடவுளின் வலக்கை அபயாஸ்தமென்று சொல்லப்படுகின்றது. எழுத்துக்களை வகுக்கும் இரண்டாம் முறையில் உயிரெழுத்துக்களின் முதலாகிய அகரம் அபயாஸ்தத்தில் அடங்குமென்பது காட்டலாம். இம்முறையில் ஔகாரம் வலத்தோளின் முடிவில் வரும். இதன்பிறகு ஆய்த அல்லது திரிநேத்திர எழுத்தாகிய ஃ வருகின்றது. எழுத்து முறையில் இஃது உயிர்களுக்குப் பின்னும் மெய்களுக்கு முன்னுமுளது. மெய்யெழுத்துக்கள் இடத் தோளில் தொடங்கி இடக் கையாகிய வாதாஸ்தத்தில் வகர ஒற்றில் முடிவுபெறுகின்றன.

மிகுந்து நிற்பனவாகிய ழ்,ள், ற், ன், என்பவை கடவுளின் இடக் காலி லமைகின்றன. இடத் தொடையில் இடக் கையாலணைக்கப்பட்டு, கருமை நிறங்கொண்டு திட்டப்பெற்ற பார்வதி அமர்ந்திருக்கின்முள். மாயையைக் காட்டும் மெய்யெழுத்துக்களெல்லாம் இப்பகுதியிலேயே யுள.

இவைகொண்டு, யாண்டும் நாம் காணும் ஒகர வடிவத்தின் பற்பல பகுதிகளாற் குறிக்கப்படுகின்ற ஆற்றல்களை உய்த்துணர்தல் கூடும். மக்கள், விலங்கு முதலியவற்றி னுடம்பினுள்ள பற்பல கருவிகளியற்றுந் தொழில்களை ஒகர வடிவத்தில் வெவ்வேறு எழுத்துக்கள் பெறும் நிலைகளைக்கொண்டு ஆராயப் புகுந்தால் அதிலிருந்து நாம் காணும் உண்மைகள் அறிவியல் வகையில் மேல்நாட்டினர் நிகழ்த்திய ஆராய்ச்சிகளின் முடிபிற்கு வியத்தகு வண்ணம் ஒத்திருக்கின்றன. மேலும் இது கொண்டு அறிவியல் வகையில் செய்யப்படும் ஆராய்ச்சிக் கெட்டாத சில கருவிகளின் தொழிலையுஞ் சற்றுக் காணலாம்.

"தமிழ் எழுத்துக்களின் மறைத்தன்மை என்ற பொருள் பற்றி இதுகாறும் யான் கூறியவற்றோடு பொருத்தமுடைய பற்பல அறிவிற்பகுதிகளிற் கருத்துடையவருக்குச் சில கூறி இப்பொழுதைக் கிச்சொற்பொழிவை முடிக்கிறேன்."

(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

புதுக்கவி :

சிவசிந்தனை

சுவாமி சுத்தானந்த பாரதியார்

[எல்லாரும் இன்பம் வேண்டுகின்றனர். மாசற்ற, முற்றின்பமே சிவம். "சிவம், சிவம்" என்று எப்போதும் நினைத்தால் உள்ளும் புறமும் பேரின்பம் பொங்கும். காலை மாலை சிவசிந்தனையில் மனம் ஈடுபட்டிருக்க இந்தப்பாடல் ஒரு பயிற்சி யளிக்கும். சிவாத்துவிதப் பொருள் இதில் அடங்கும். இதை ஆரபியிற் பாடுக.]

சிவசிவ, சிவவெனச் சிந்தைசெய் மனமே
சிவமயங் காணாய் சீவரு ளெல்லாம்!
தோன்றிய உலகெலாந் தோற்றிய முதல்வன்,
ஈன்றளித் தருளால், இன்னுயிர்க் குயிராய்
அணுவினு மணுவா யவனியிற் பெரிதாய்
*குணு * முதலிமையவர் குழுவரை யெங்கும்*
அவனவ ளவையெனு மனைத்துந் தானாய்
எவற்றிலுந் தாக்கற் றிருந்தவா றிருக்கும்
தற்பரம் பொருளைத் தரணியாய் விரிந்த
சிற்பரஞ் சுடரைச் சிந்தைசெய் மனமே!
அவனரு ளின்றி யாதுமிங் கில்லை.
அவன்வினை யாட்டே யகிலவாழ் வெல்லாம்!
"இதயமா மன்றில் இருக்கிறேன்" காணெனப்
பொதுநடம் புரியும் புண்ணியன் அவனே !
அன்பைப் பெருக்கி யாணவஞ் சுருக்கி,
இன்பக் கடவுளோ டீரறக் கலத்தலே
வாழ்வின் பயனென வகுத்தனர் மேலோர்.
சூழ்வினைக் கட்டறச் சுதந்திரம் பெறவும்,
கவலை நெஞ்சக் கல்லைக் கரைக்கவும்,
அவமய மாய மனத்திரை யடங்கிப்
படிகம் போன்றுட் பரமனைக் காட்டவும்,
பிடிவிடா தவனடி பேணுவாய் மனமே!
திருவடி மலரிற் செழிதே னுண்ணாய்

---

* குணு=புழு.

மருட்குல நீங்குங் கருக்கனைக் கொழியும்.
கான்விழிக் கவனே கதிரொன் றறிவாய்!
பூறுடற் கவனைப் பூதமென் றுணர்வாய்!
உயிருக் கவனே யுயிர்ப்பெனக் காணுய்!
வயிற்றிற் சிரஎரி வன்னியு மவனே!
ஓடு நாடியி னுணர்ச்சியு மவனே!
ஆடுஞ் சிவரின் அசைகயி றவனே!
அருவே யானேன், அருளுருக் கொண்டு,
குருவே யாகவுங் குணங்குறி யின்றியும்,
முன்னே வந்தும், பின்னே மறைந்தும்,
தன்னையே கூவுந் தமியரைக் காப்பான்!
எவ்வடி விளிலே யெங்கெவர் வழுத்தினும்
அவ்வடி விளிலே யாங்கவர்க் கருள்வான்!
முறையிடு மனமே முறையிடு மனமே
முறையிட் டிவ்வா றுட்குவி மனமே!
இறைவா போற்றி, யென்னவா போற்றி,
மறைமுடி காணு வாய்மையே போற்றி!
உன்னை யன்றிப் பின்னெது மில்லை;
மன்னனு நீயே; மக்களு நீயே;
உள்ளு நீயே; யுலகெலா நீயே!
கள்ளார் மலரின் கவின்மண நீயே!
அப்பனு மன்னையு மொப்பறு நட்பும்
முப்பெரு முலகை முற்றினு நீயே!
பெரிதிற் பெரிய பெரியனு நீயே!
சிறிதிற் சிறிய சிறியனே னுன்றன்
பதமலால் வேறு கதியிலேன் ஏழை ....
துதித்துத் தொண்டுசெய் மதியெனக் கருளாய்!
பணியும் பத்தியும் பனுவலுன் னருளால்
அணிந்த சொற் கோவின் அன்பெனக் கீவாய்!
பந்தத் தளையறப் பரிந்துமுன் வந்து,
சுந்தரத் தோழனைத் தொண்டுகொண் டதுபோல்,
வினைவழி வருந்தும் எனைத்தடுத் தாண்டுனை
நினைவழி செலுத்தி நின்னடி சேர்ப்பாய்!
பாலறு வாயர் பைந்தமிழ்ப் பண்ணால்
ஆலவாய்* தன்னில் அற்புதம் புரிந்து,
சமயமுந் தமிழுந் தழைத்திடச் செய்தாய்!
இமயமீ தேறி யிளைத்தவா கீசர்
கைலை ஐயாற்றிற் கண்டிடச் செய்து,
வையக மெல்லாந் தையலோ டமர்ந்த

* மதுரை.

வாய்மை காட்டினை. வரதநான் காணத்
தூய்மையும் உன்னருட் சுடருமெற் கருளாய்!
குருந்தின் கீழே குருவாய் விற்று
மருந்தென வுதவியோர் மந்திர மணியை
வாதவூ ரடிகளை மணிவாக் கமுதால்
ஓதியுன் புகழை யுய்திடச் செய்தாய்!
அன்பனுக் கேபிரம் படியும் வாங்கினாய்!
அன்ப னருந்தமிழ் அமுதென வுவந்து,
திருச்சிற் றம்பலம் விருத்தனாய் வந்து,
திருவா சகத்தைத் தீட்டி யருளினை!
அப்பனே யுன்ற னற்புத மறிந்தேன்.
ஒப்பறு முன்கழ லொன்றே பற்றி,
சாற்றுவ துன்னையென் சரியை கிரியையும்.
போற்றுவ துன்னையென் பொய்யறு யோகம்.
அனைத்துநீ யென்பதென் னளப்பறு ஞானம்!
தினைத்துணை யேனுன் சேவடிக் காளாய்
உய்யக் கருதி யுருகிநிற் கின்றேன்!
பையக் கொண்டென் பாசம் போக்கி!
இருவினைக் கட்டறுத் திருளழுக் ககற்றி,
வருவினை மாற்றி, வரவினி யின்றியுன்
அருட்கடல் விரிவில் ஆறெனச் சேர்த்து,
மருட்பிறப் பின்றியுன் மாசறு சுடரின்
காந்தியிற் கரைத்துக் கற்பூ ரம்போல்,
ஈந்தனை யென்னை யிழத்துனுட் கலப்பாய்!
அகமெலா மடங்கிச் சகமுதி யாத.
சுகநிலை தருவாய் தூயனே போற்றி!
ஆலடி மௌனத் தாழ்ந்தசற் குருவே,
காலடி நின்றுன் கருணையை வேண்டினேன்!
அரனே திருச்சிற் றம்பலக் கூத்தா,
பரனே கங்கா தரனே போற்றி!
வஞ்சக நமனை யஞ்சிட வுதைத்தாய்!
நஞ்சினை யமுதென நயந்துவா னவரைக்
காத்தனை; நெஞ்சக் கவலை தீர்ப்பாய்!
பூத்த மலரின் புன்னகை நீயே,
வான்வளைந் தணையும் வையக நீயே;
ஊனுயிர்க் கோயிலுள் ஞான நடஞ்செய்
பொதுநிலைப் பொருளே, போற்றி, போற்றி!
ஆர்கலி முழங்கும் அரசே போற்றி!
பேர்வடி வடங்காப் பெருமையே போற்றி!
இயற்கையி லுள்ளத் திலகிடும் அழகா!

சயசய போற்றி, சயசய போற்றி,
இன்பப் பிழம்பே, யின்னறி வொளியே,
அன்புவானமுதே யடியார்க் கெளியா, 105
பவவினை தீர்க்கும் பசுபதி போற்றி,
சிவசிவ சிவவெனச் சிந்தைசெய் மனமே!

ஓம்சிவம்!

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 54-ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி.

இவ்விழா 1937 டிசம்பர்மீ 25. 26, 27-ஆம் நாட்களில் அடியிற் கண்டவாறு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாப் பேரவையின் தலைவர்: சைவத்திருவாளர் புரிசை 'பெருஞ் சோற்கொண்டல்' சு. முருகேச முதலியாரவர்கள்.

25-12-'37 சனிக்கிழமை காலையில் சபையின் உறுப்பினர்கள் திருமுறைப் பாராயணத்துடன் திருவீதி வலம்வந்து ஸ்ரீ சுந்தரபாண்டிய விநாயகர் ஆலயத்திலும், சிவாலயத்திலும், சபையின் நிலையமான திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடாலயத்திலும் வழிபாடு செய்தன்ளார்கள். மாலை 3. மணிக்கு அவைத் தலைவரவர்களை மேள வாத்திய முதலிய சிறப்புகளுடன் விழாப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப் பெற்றது. உயர் திரு சுந்திரஓதுவா மூர்த்திகளால் தமிழ்மறை ஓதலும், மா. கிருஷ்ணபிள்ளை பெண்பாடசாலை மாணவிகளால் மன்னர் வாழ்த்தும் பாடப்பெற்றது. சாத்தூர் வழக்கறிஞர் திரு T. S. கந்தசாமி முதலியாரவர்கள் பி. ஏ. பேரவையைத் திறந்து வைத்தார்கள். வரவேற்புக் கழகத் தலைவர் திருவாளர் E. வென்றி மாலைப் பிள்ளை பி. ஏ., பி. எல் அவர்களின் வரவேற்புரைக்குப் பின்னர் அவைத் தலைவர் திருவாளர் பெருஞ்சொற் கொண்டல் சு. முருகேச முதலியாரவர்கள் அரகாம முழக்கத்தினிடையே தமது தலைமை இருக்கையில் அமர்ந்தன்ளார்கள். திருவாளர் S. மீனாட்சி சுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்களால் தலைவருக்கு வரவேற்புப் பா வாசித்துக் கொடுக்கப்பெற்றது. அமைச்சர் திருவாளர் A. S. தெய்வநாயகம் பிள்ளையவர்களால் சபையின் 54-ஆம் ஆண்டறிக்கை வாசிக்கப்பெற்றது. பின்னர் அவைத் தலைவ ரவர்கள் அச்சிடப் பெற்றுள்ள தமது தலைமைப் பேருரையை கேட்போர்க்கு ஆர்வம் பெருகும்வண்ணம் மிக விளக்கமாக வாசித்துள்ளார்கள். அதன் பின்னர் திருவாளர்கள் ப. சண்முக வேலாயுத ஓதுவாமூர்த்தி (திருநெல்வேலி), ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் (அமைச்சர், சைவசித்தாந்த மகா சமாசம்), க. வச்சிரவேலு முதலியாரவர்கள் பி. ஏ., எல். டி. (ஆசிரியர், பச்சையப்பன் கலாசாலை, காஞ்சிபுரம்), கே ஆறுமுகம் பிள்ளையவர்கள் (தலைவர், திரு

நெறித்தொண்டர் குழாம், நாகர் கோவில்) இவர்களால் முறையே "இலக்கிய இன்பம்," "சைவத்தின் வியாபகம்," "திருமுறைப் பெருமை," "சமய உண்மைகள்" என்னும் சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்கும் தகையனவாய்ச் செய்யப்பெற்றுள்ளன. அவைத் தலைவரவர்கள் ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் நுண்பொருள் பொதுள முடிவுரை கூறியுள்ளார்கள். திருமுறை யோதுதலுடனும், சிவநாம முழக்கத்துடனும் அன்று பேரவை முடிவுற்றது.

26-12-'37 ஞாயிற்றுக்கிழமை காலையில் திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், பி. ஏ. (ரிட்டையர்டு தாசில்தார், சிந்துபூந்துறை) "ஒளி" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு செய்ததுடன் சித்தாந்த சம்பந்தமாய்ப் பல ஐயப்பாடுகட்குத் தெளிவுரையும் கூறியுள்ளார்கள். மா. கிருஷ்ண பிள்ளை பெண்பாடசாலை மாணவிகளால் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் நாடகரூபமாக இனிது நடிக்கப்பெற்றது. மீண்டும் பேரவை மாலை 3-30-க்குத் தொடங்கப்பெற்றது. தமிழ் மறையோதலின் பின்னர் திருவாளர்கள். தொ. மு. பாஸ்கரத்தொண்டைமானவர்கள் (ஹெட் கிளார்க், சப்கலெக்டர் ஆபீஸ், தூத்துக்குடி), க. வச்சிரவேலு முதலியாரவர்கள் பி. ஏ., எல். டி., ஒ. பதுமநாப பிள்ளையவர்கள், (தலைமையாசிரியர், மிடில் ஸ்கூல், தாழக்குடி), அவைத்தலைவரவர்கள், ச. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்கள் (தமிழகம், குலசை), கே. ஆறுமுகம் பிள்ளையவர்கள் இவர்களால் முறையே "திருநெல்வேலித் தமிழ்", "உலகப் பொதுச்சமயம்," "ஆண்டாளும் அடிமையும்" "ஸ்ரீசேக்கிழார் செய்யுட் சிறப்பு," "தமிழர் ஒழுக்கம்," "சமயப்பணி" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் கேளாரும் வேட்பமொழியுந் தகையனவாய்ச் செய்யப்பெற்றன. அவைத் தலைவரவர்களால் ஒவ்வொரு சொற்பொழிவுக்கும் சொற்சுருங்கப் பொருள் விளங்க முடிவுரை கூறப்பெற்றது. இன்றைய விழாப் பேரவையில் நாகர்கோவில் திருநெறித் தொண்டர்குழாம் தலைவர் திருவாளர் கே. ஆறுமுகம் பிள்ளையவர்கட்கு 'பண்டித பூஷணம்' என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. வரவேற்புக் கழகத் தலைவர் திருவாளர் E. வென்றிமாலைப் பிள்ளையவர்களால் அவைத் தலைவரவர்கட்கும், சொற்பொழிவாளர் முதலியவர்கட்கும் நன்றியறிதலுரை கூறிய பின்னர் திருமுறைப் பாராயணத்துடனும் சிவநாம முழக்கத்துடனும் விழாப் பேரவை இனிது முற்றுப்பெற்றது. ஷை விழாவின் சார்பாக

27-12-'37 திங்கட்கிழமையன்று மாலையில் திருநெல்வேலி கோகிலம் சித்திரபுத்திர அம்மாளவர்கள் தலைமையில் சைவ மங்கையர் மகாநாடு நடைபெற்றது. அவைத் தலைவியரால் சைவ சமய உண்மைகளைப் பற்றியும், சைவ மங்கையர்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ள தலைமைப் பேருரையைப் படிக்கப்பெற்றதின் பின்னர் சில பெண்மணிகளாலும், "பண்டித பூஷணம்" கே. ஆறுமுகம் பிள்ளையவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. அவைத் தலைவியாரின் முடிவுரையுடன் இம்மகாநாடு இனிது முடிவுற்றது. அன்றிரவு 8 மணி முதல்

திருப்புகழாமிர்தம் ஆசிரியர் குக ஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களால் ஆறுமுகம் என்னும் பொருள்பற்றி முருகன் பெருமை இனிது விளங்க அரியதோர் தனிச்சொற்பொழிவு செய்யப்பெற்றது இங்ஙனமாக மூன்று நாட்களிலும் எல்லாம்வல்ல சிவபிரான் திருவருட் டுணையால் சைவசித்தாந்த சபையின் 54-ஆம் ஆண்டு நிறைவுவிழா இனிது நிறைவேறிற்று. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பல ஊர்களிலிருந்தும் திரளான அன்பர்கள் போந்திருந்தனர். அயலூர் அன்பர்கட்கு நல்ல வசதியான இடமும் உணவும் அளிக்கப்பெற்றன. பல சைவத் தொண்டர்கள் விழாவில் மிக அன்புடன் உழைத்தமை பாராட்டற்குரியது.

ந. சிவகுருநாதன்

உயிர்ப்பலி நின்று விட்டது

கருவூர், 1-1-38

கருவூரிலுள்ள வஞ்சியம்மன், மாரியம்மன், முனியப்பசாமி' வலங்கியம்மன், மாவடியான் முதலான கிராம தேவதைகளுக்கு ஆடு' கோழி முதலிய ஆதரவற்ற உயிர்களைப் பலியிடும் வழக்கம், இவ்வூரிலும் இதனையடுத்த ஊர்களிலுமுள்ள சிலரால் நெடுங்காலமாகப் பழக்கத்தில் வந்துகொண்டிருப்பதைக் கண்ட கருவூர் அறிவுநயக் கழகத் தலைவர் திரு. ஈழத்துச் சிவானந்த அடிகள் பி. ஏ. அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் பயனாய், இவ்வூர் வஞ்சியம்மன் கோயில் தெருவிலுள்ள தமிழ்ப் பெருமக்களும் மற்றுஞ் சில அன்பர்களும் மேற்படி கிராம தேவதைகளுக்கு ஆண்டுதோறுஞ் செய்துவந்த உயிர்ப்பலியை இனிமேற் செய்வதில்லையென ஒப்புக்கொண்டு நிறுத்தி விட்டார்கள்.

இப்பெருஞ்செயலை எல்லாத் தமிழ்மக்களும் மேற்கொண்டு கடவுள் பேரால் வாயற்ற உயிர்களைப் பலியிட்டு, அதனால் தாம் நற்பயன் அடையலாம் என்ற அறியாமையை அகற்றி, "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்ற தமிழ் முதுமொழியைக் கடைப்பிடித்துக் "கொல்லாமை" ஆகிய நன்னெறியை மேற்கொண் டொழுகுவார்களென இறைவனைப் பன்முறை வாழ்த்துகின்றோம்.

—ஈழத்துச் சிவானந்த அடிகள்

சற்குணர் சிறுகதைப் பரிசு

(Sargunar Short Story Competition)

தாய்மொழியாகிய தமிழ்மொழியைப் பல்லோருக்கும் பாடஞ் சொல்லுவதிலேயே தமது காலத்தைக் கழித்துவருகிற தமிழ்ப் பேராசிரியர் திரு. ச. த. சற்குணர் அவர்களின் அறுபதாவது ஆண்டு

பொன்விழாவைச் சென்னையில் கொண்டாடியது தமிழுலகம் அறிந்த தொன்றே. பேராசிரியர் அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துவரும் தமிழ்த் தொண்டினைப் பாராட்டுமுகத்தான் இந்தப் பரிசு வழங்கப் படுகிறது. பேராசிரியர் அவர்கள் தெளிவான எளிய பிழையற்ற வசன நடையை விரும்புகிறவராதலின், அவ்விதமான வசன நடையில் எழுதப்படும் முதல்தரமான சிறந்த சிறுகதைக்கு இரண்டு சவரனுக்குக் குறையாத கெட்டித்தங்கப் பதக்கம் பரிசிலாக வழங்கப்படும். கதை எழுத விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதித் திட்டக் குறிப்பினைப் பெறுதல் வேண்டும். கதை 1-7-'38-க்குள் அனுப்பப்படல்வேண்டும்.

குறிப்பு: தமிழ்ச் சங்கங்களும், கழகங்களும், பண்டிதர்களும், மாணவர்களும், பத்திராசிரியர்களும், ஏனைய தமிழ் அன்பர்களும் இப்பரிசு விவரத்தைப் பலர்க்கும் எடுத்துக்கூறி உதவியருளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

சற்குணர் சிறுகதைப் பரிசுக் கழகம்,
59, காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை.

---

* இந்தி வழிபாடு

(சென்னை V. P. ஆச்சாரியா—காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை)

இந்தியாவிலுள்ள பதினொரு மாகாணங்களுள் எழில் காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைக்கப்பட்டு ஆட்சி புரிந்து வருகின்ற ஒரு காரணத்தினால் தான் போலும் இந்தியாவிற்குப் பொது மொழியொன்று வேண்டும் என்ற கேள்வி இக்காலை பிறந்துள்ளது. கதர் திட்டத்தையும், கோவில் நுழைவுத்திட்டத்தையும் காந்தியடிகள் எவ்வளவுஆர்வத்துடன் ஆதரித்து வருகின்றாரோ அவ்வளவு ஆர்வத்துடனேயே அடிகள் இந்தியைப் பொதுமொழியாக்கும் கொள்கைக்கும் ஆதரவளித்து வருகிறார். இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டும் என்ற தங்கள் நோக்கத்தைச் சென்னை முதன்மந்திரியாரும் பம்பாய் முதன்மந்திரியாரும் வெளிப்படையாகப் பன்முறை அறிவித்துள்ளார்கள். ஆகவே இந்தியாவின் கல்வி வளர்ச்சிக்கு இந்தியோ, இந்துஸ்தானியோ ஒரு படித்தாகப் பின்பற்றப்படுவது ஏற்புடைத்தாகுமா என்பதை ஆராய்ந்து பார்க்காமலே வலிந்து அதனை நுழைத்துவிட முயலுங் காலம் நெருங்கிவிட்டது போலவே தோன்றுகிறது.

---

* இக்கட்டுரை "தி மாடெர்ன் ரெவ்யூ" என்ற ஆங்கிலத் திங்கட்டாளின் 1938-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இதழில் வெளிவந்த கட்டுரை யொன்றின் மொழி பெயர்ப்பாகும்.

இந்தி மொழியை ஆதரிப்பவர்கள் அம்மொழியை இந்தியப் பொதுமொழியாக்குவதால் பல மாகாண மக்களும் ஒன்றுபட்டு விடுவார்கள் என்று கூறுகின்றனர். இக்கூற்று இந்தியாவிலுள்ள மாகாணங்கள் எல்லாவற்றிலும் இந்திமொழி கட்டாய பாடமாக்கப்பட்டு விட்டதென்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். காந்தியடிகள் கூட்டிவைத்த வார்தா கல்விமா நாட்டிற்குச் சென்றிருந்த காங்கிரஸ் தலைவர்களும் மந்திரிகளும் அவ்வாறே கருதியிருந்தனர் என்று எண்ணக்கிடக்கின்றது.

வங்காளமோ தன் தாய்மொழியாகிய வங்காளி மொழியை வளர்ப்பதையே சிறந்த தொண்டாகக் கருதிச் செய்து வருகின்றது. தாகூர், பங்கிம் சந்திரர் போன்ற சிறந்த கவிஞர்களின் இலக்கியங்கள் வங்காள மொழியில் திகழ்கின்றன. ஆகவே இந்தி வழிபாட்டிற்கு ஆதரவளிக்க வங்காளம் முற்படவில்லை. சென்னை மாகாணத்திலோ, இந்தி வழிபாட்டைத் தடுப்பதற்கு எங்கணும் பெருங்கிளர்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. முகம்மதியர்களிற் பெரும்பான்மையானவர் உருது மொழிக்கு ஆதிக்கம் குறைந்துவிடும் என்று கருதுவதனால் இந்தி வழிபாட்டை எதிர்த்து வெறுக்கிறார்கள். பம்பாய் மாகாணத்திலுள்ள மராட்டிய கன்னடப் பெருமக்கள் வன்மையாகக் கண்டித்து வருகின்றனர். சிந்து, அஸ்ஸாம், பஞ்சாப் முதலிய மாகாண மக்களோ இந்தி நுழைப்பை வரவேற்குங் கருத்துடையவர்களாக இருப்பவர்கள் போலத் தோற்றவில்லை. உண்மை இவ்வாறிருக்க இந்தி மொழி இந்திய மக்களிற் பெரும்பகுதியினரால் பேசப்பட்டோ அறியப்பட்டோ வருகிறதென்று கூறுவது பொருளில் கூற்றேயாகும்.

இனி, நூற்றைம்பதாண்டுகளாக இந்திய அரசியல் மொழியாக இருந்து வருவதும், பயிற்சி முறைக் கருவியாகவும் இருந்து வருவதாகவுமுள்ள ஆங்கில மொழியுடன் இந்திமொழி போட்டியிட்டு வெற்றி பெறவுங் கூடுமோ? இன்று, உலக மக்களிற் பெரும்பான்மையோரால் பொருளுணரப்பட்டும், பேசப்பட்டும் வருகிற மொழி ஆங்கிலம் ஒன்றுதான். வட அமெரிக்கப் பெருநாடு முழுவதும் ஆங்கிலமே; ஐரோப்பியப் பெருநாட்டிலுள்ள பெருபான்மையான நாடுகளில் ஆங்கிலமே; கீழ்க்கோடியிலுள்ள சீனாவிலும் ஐப்பானிலுங்கூட ஆங்கிலம் பரவியுள்ளது என்றால், ஆங்கிலத்தின் பரந்துபட்ட தன்மையைக் கூறவும் வேண்டுமோ? இத்தகைய மொழியாகிய ஆங்கிலத்திலுள்ள அறிவுப் பெருக்கத் தொகுதியும், பயிற்சி முறையின் பயனும் இந்தியாவிலுள்ள நமக்குக் கிடைத்துள்ளமை நல்வினையேயாகும். நம் நாட்டுமக்கள் முன்னேற வேண்டுமென்று கருதித் தொண்டாற்ற முன்வரும் இளைஞர்கள் இதனை நன்கு பயின்று வந்தாற்போதும். நம் நாட்டில் ஆங்கிலம் இக்காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்று வந்துள்ளது. தேசிய முன்னேற்ற வேலை ஒருவாறு பண்படுத்தபட்டுச் செம்மையுற்று வரும் இந்நிலையில் "ஆங்கிலமொழி எனேவந்து நுழைந்தது?" என்று

வருந்துதற்கில்லாத வகையில் அம்மொழி செல்வாக்குப் பெற்றுள்ளது. பொதுமுறைக் கல்வித்திட்டம் என்று ஒன்று வகுத்து அத்திட்டத்தில் ஆங்கிலத்தை யொழித்து இந்தியைப் புகுத்தக் கருதுவது தற்கொலை செய்து கொள்வதையே யொக்கும்.

நீக்குப்போக்கு உணரமாட்டாத நாட்டுப்பற்றுக் காரணமாக இந்திமொழியை நாடெங்கும் பரப்ப முயல்வதனாலும், உலகத்திலுள்ள சிறந்த அறிவியல் நூல்களில் இந்தி மொழியில் எழுதுவிக்க முயல்வதனாலும் நேரிடக்கூடிய வீண் செலவையும் வீணுழைப்பையும் தடுக்க வேண்டிய தலையாய பொறுப்பு நம்நாட்டுத் தலைவர்களையே சார்ந்ததாகும். ஆழத்திற்காலை விடுவதற்கும், ஆய்ந்தோய்ந்து பார்த்து ஆவன புரியும் பொறுப்பு அவர்களுடையதே. நம் நாடோ இன்னும் பல துறைகளில் முன்னேற வேண்டியதாக உள்ளது. இந்நிலையில் இந்தியைப் பொதுமொழியாக ஏற்றுக்கொள்ளத் தகுதியில்லாத மாகாணங்களில் அதனை வலிந்து நுழைக்க முன்வருவதனால் நேரிடும் உழைப்பும் செலவும் வீணல்லவோ? இவ்வாறு வீணுக்குழைக்காமல் நாட்டுக்கு நலம் பயக்கும் பிற இன்றியமையாத துறைகளில் கருத்தையும் பொருளையுஞ் செலவிடக் கருதுவதே சிறந்ததாகும்.

சென்னை மாகாண மூன்றாவது தமிழர் மாநாடு

இம்மாநாடு திருச்சி முனிசிபல் நகர மண்டபத்தில் 26-12-'37-ல் நடந்தது. மாநாட்டிற்குச் சென்னை மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 2,500 பேர்கள் வந்திருந்தனர். அன்று காலை 8 மணிக்குத் திருச்சி மணிக்கூண்டிலிருந்து ஒரு பெரிய இந்தி எதிர்ப்பு ஊர்வலம் துவங்கி நகரமண்டபத்துக்குப் போயிற்று ஊர்வலத்தில் 10,000 மக்கள் கலந்து கொண்டனர். 'தமிழ் வாழ்க,' 'இந்தி ஒழிக' என்ற முழக்கத்துடனும் நான்கு யானைகள் முன்னணியிற் செல்லவும் மாநாட்டுத் தலைவர் முதலியோரை ஏற்றிக்கொண்டு ஏழு நெய்யாவி வண்டிகள் பின்னே நகர்ந்து சென்றன. திருச்சி இத்தகைய உணர்ச்சி மிக்க ஊர்வலத்தை இதுவரை கண்டதே இலையாம். ஊர்வலம் காலை 10 மணிக்கு மண்டபம் சென்றது. மண்டபத்தில் சுமார் 5000 பேர்கள் நிறைந்திருந்தனர். மண்டபத்துக்கு வெளியே 3000 பேர்கட்கு மேல் நின்று ஒலிபரப்பிவழி மாநாட்டுப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தனர். மாநாட்டுக்குத் திருவாளர்கள் S. முத்தைய முதலியார், பி. ஏ., பி, எல்., A. T. பன்னீர்ச்செல்வம், S சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்., கா சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., T. V. உமாமகேசுவரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., C. D. நாயகம், ஈழத்துச் சிவானந்த அடிகள், E. V. இராமசாமி, கரு. முத்து தியாகராஜன், டாக்டர் சொக்கலிங்கம், டாக்டர் பாலகிருஷ்ணன், இராஜகோபாலாச்சாரியர், ஆழ்வார் இராமநுஜ நாயகியார் முதலியோர் வந்திருந்தனர்

பின்னர் ஆறு வயதுள்ள செயலட்சுமி என்ற பெண் குழந்தை இனிய குரலுடன் தமிழ் வாழ்த்துப்பாடவும், திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

அவர்கள் திறப்புரை இவ்விதழின்கண் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றிருக்கின்றது.

அதன் பின்னர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த உறுப்பினர்களை வரவேற்றுத் தமது வரவேற்புரையைப் படித்தார்கள்.

அதன்பின் திருவாளர் S. சோமசுந்தர பாரதியாரவர்களை மாநாட்டுத் தலைவராக இருக்கும்படி அன்பர் பலர் வேண்டவே அவர்களும் தலைவராய் அமர்ந்து தமது தலைமைப் பேருரையை இரண்டு மணிநேரம் பேசினார்கள்.

பின் பிற்பகல் 3½ மணிக்குக் கூட்டங்கூடிப் பல தீர்மானங்களை நிறைவேற்றியது. இரவு 10 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

தீர்மானங்கள்

க. தமிழ்க் கலையைக் காக்கவும் தமிழர் நலனைப் பாதுகாக்கவும் 'தமிழர் சங்கம்' என்ற பெயரால் ஒரு சங்கம் நிறுவுதல் வேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

உ. இந்தியைக் கட்டாய பாடமாக்குவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு அதனால் தமிழ்க்கலை அழிந்து விடும் என இம்மாநாடு கருதுகிறது.

ந. தமிழ் மாகாணத்தைத் தனியே பிரிக்க வேண்டுமென்று அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ச. தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காகத் தனியே ஒரு பல்கலைக் கழகம் நிறுவுதல் வேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

ரு. வார்தா கல்வித் திட்டம் நாட்டின் முன்னேற்றத்திற்கோ கல்வி வளர்ச்சிக்கோ விரும்பத்தக்கதும் பயன்தரத்தக்கது மல்லவென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

சு. தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களை விளக்குவதற்காகத் தமிழ் நாள் தாள் ஒன்று வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

எ. இந்தியைக் கட்டாய பாடமாக்குவதால் தமிழர்களுக்கு ஏற்படும் கேடுகளை சென்னைக் கவர்னரிடம் நேரில் எடுத்துரைப்பதற்கு இம்மாநாட்டுத் தலைவர், திருவாளர் E. V. இராமசாமி, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை முதலியவர்களைக் கொண்ட ஒரு தூதுக் கூட்டத்தை இம்மாநாடு அமைக்கிறது.

எல்லாத் தீர்மானங்களும் எல்லாராலும் ஒரே மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சைவசித்தாந்தசங்கம்' திருச்சிராப்பள்ளி.

5-12-37 மாலை மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் திருவாளர். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமையில் பேரவை கூடிற்று. திருத்தவத்துறை (லால்குடி) உயர்தரப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் திருச்சி. சைவசித்தாந்த சபையில் இரண்டாண்டுகளாகப் பெரிய புராண முற்றும் விரிவுரை ஆற்றி முற்றுவித்தமை கருதி அவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு இக்கூட்டம் கூடியது. புலவர் அவர்களின் புலமைத் திறனும், கைம்மாறு வேண்டாத தொண்டின் சிறப்பும், சைவப்பற்றும், சொல்லின்வளமும் ஆகிய பலதிறப்பட்ட குண நலங்களையும் தலைவர் அவர்களும், சபையின் உரிமையாளர்களாகிய திருவாளர்கள் பெரிசாமிப் பிள்ளை, ந மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும், அண்ணமலைப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியார் M. A,. B. L., அவர்களும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர் செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகேப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B. A,. B. L., அவர்களும் யோசப் கல்லூரி தலைமைத் தமிழாசிரியர், திரு. நடேச முதலியார் அவர்களும் மற்றும் பல புலவர்களும் புரவலர்களும் பாராட்டிப் புகழ்ந்தனர். முதலியார் அவர்களின் அரிய தொண்டின் நலங்களை மிகுதியும் பெற்ற சபையினர் 'பெருஞ்சொல் விளக்கனர்' என்ற பட்டத்தாலும், பொற் பதக்கத்தாலும் முதலியார் அவர்களை அணிசெய்தனர்,

எவ்வகையிலும் தகுதியில்லாத மக்கள் அரசியலாரிடத்தும், பல்கலைக் கழகத்திடத்தும், ஆரவாரம் மிகுந்த அரசியல் கட்சியினரிடத்தும், குறுகிய மனப்பான்மையுடைய வெள்ளறிவினரிடத்தும் பட்டம் பெறுவது பெருவழக்கிற்றாகிய இந்நாளில், தகுதியொன்றையே கருதிப் புகழும் பொருளும் பொலிவுற்றுத் திகழும் இவ்வரிய பட்டத்தை அறிவுடை நன்மக்கள் குழுமிய இச்சபையினர் வழங்கியது யாமனைவரும் நன்றியுடன் போற்றுதற்குரிய அருஞ் செயலாகும்.

குறிப்பு: திரு. முதலியாரவர்களின் உருவப்படம் அடுத்த இதழில் வெளியிடப் பெறும்.

சர். சி. வி. இராமன்

அறிவிய லாராய்ச்சித்துறை மேனாட்டாருக்கே யுரியது என்னுங் கோட்பாட்டினை மறுத்து, அதில் கீழ் நாட்டினராகிய இந்தியருக்கும் பங்குண்டு என வெடுத்துக்காட்டிய அறிவிய லறிஞர்களில் சர். சி. வி. இராமனும் ஒருவராவர். இவர் திரிசிரபுரத்தில் 1888-ஆம் ஆண்டிற் பிறந்து வளர்ந்து தமது பதினெட்டா மாண்டிலேயே பல்கலைக் கழகத்திற் சிறந்த பட்டம் பெற்றவர். இவர் மாணவரா யிருந்த போதே பொருளியல் நூல்களில் தனிப் பற்றுடையவராகக் காணப்பட்டார். இவர் ஒளிகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடாத்திக்கண்ட உண்மைகளை அவ்வப்போது நம் நாட்டுச் செய்தித் தாள்களினும் பிறநாட்டுத் தாள்களினும் வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் அரசாங்க அலுவல் பெற்றுக் கல்கத்தாவில் உதவிக் கருவூலக் கணக்கதிகாரியாக வேலை பார்த்திருந்தபோது மூக்கர்ஜி கல்லூரியிற் பொருணூலாசிரியராக அழைக்கப்பட்டார்; அவ்வழைப்பிற் கிணங்கி மிக்க மேம்பாடும் ஊதியமும் பெறக்கூடிய அரசியற்றுறை யலுவலை விடுத்தார். அதனானே பொருளாராய்ச்சியில் இவருக்கிருந்த பேராவல் நன்கு புலப்படுகின்றதன்றோ! கல்லூரியிலிருந்து கொண்டே இவர் விளம்பரப்படுத்திய ஆராய்ச்சிகளைப் பேருவகையோடேற்று மதித்து மேனாட்டு அறிவியற் கழகத்தினர் பலர் மிக உயர்ந்த பட்டம் பரிசுகளை இவருக்கு வழங்கலாயினர். உலகத்தாரால் பெரிதும் மதிக்கப்பட்டுவரும் நோபெல் பரிசும் இவருக்கு அளிக்கப்பட்டது.

அப்பரிசு பெற்ற இவர்தம் ஆராய்ச்சிகள் 'இராமன் விளைவு' என்ற பெயருடன் இவரால் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் பொருளணுக்களின் உண்மைத் தன்மைகளை யறிந்து கொள்வதற்கு மிகவும் பயன்படுவதாக இருக்கக்கண்டு மேனாட்டு அறிவியற் புலவர் அதனை மெச்சிக் கொள்கின்றனர். இக்காலை இப்பெரியார் பெங்களூரிலுள்ள இந்திய அறிவியற் கல்லூரியில் பேராசிரியராக இருந்து நற்றொண்டு புரிந்துவிடுகின்றனர்.



பரிதிமாற்கலைஞன் என்னும்

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

ௐ
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] ஈசுவர—தை [பரல்-சு

திருவாசகம்

திருச்சதகம் உசு-வது பாட்டு

சிந்தனை நின்றனக் காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் றிருப்பா தப்போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி யைம்புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

பதவுரை :

செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே—மிகுதியான சிவந்த தாமரைமலர்கள்போன்ற சிவந்தநிறமுடைய திருமேனியை யுடைய ஒப்பற்ற பேரொளிப் பொருளே

நாயினேன்தன்—நாய்போன்ற இழிவான என்னுடைய

கண் இணை நின் திருப்பாதப்போதுக்கு ஆக்கி (உம்)—இரண்டு கண்களின் ஒளியையும் இணைப்பதாயுள்ள நெற்றிக் கண்ணாகிய அகக் கண்ணானது உன் வயப்பட்டு உன்னையே அறியும்படி செய்வித்தும்

சிந்தனை நின்தனக்கு ஆக்கி (உம்)—உள்ளமானது உன்வயப்பட்டு உன்னையே நினைந்து அன்பினால் உருகும்படி செய்வித்தும்

வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி (உம்)—அவ்வுள்ளம் இன்புறும்படி உன்னுடைய திருவடிகளையே சார்ந்து வழிபடும்படி செய்வித்தும்

வாக்கு உன்மணி வார்த்தைக்கு ஆக்கி (உம்)—இங்ஙனம் உணர்வின் கண்வரும் இன்பத்திற் கேதுவாகிய உனது ஒளிபொருந்திய புகழை நாக்கினாலே புகழும்படி செய்வித்தும்

ஐம்புலன்கள் ஆர வந்தனை—உடல் உருவின்கண் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளாலும் நான் உன்னை நேரே அறிந்து அனுபவிக்கும்படி (திருப்பெருந்துறையில் அந்தணனுருவில்) நீ எனக்கு முன்னே வலியவந்தாய்

உள்ளேபுகுந்து—எனது உள்ளத்தினுள்ளே புகுந்து (மலமறுத்துச் சிவமாக்கி)

ஆட்கொண்ட—(என்னுடைய தலைமேலே உன்னுடைய திருவடிகளை வைத்துத் தீக்கைசெய்து) ஆண்டருளிய

பெரும்விச்சைமால் அமுதம் கடலே—பேரறிவு பேரன்பு பேரின்ப வடிவங்களாயுள்ள கடலே

மலையே—மலைபோல எதனாலும் மாறுதலடையாது என்றும் ஒருதன்மைத்தான நிலையிலிருக்கின்றவனே

இரண்டும் இலித் தனியனேற்கே—சத்துத் தன்மையாவது அசத்துத் தன்மையாவது தனியே உரியதல்லதாய் உள்ள எனக்கு

உன்னைத் தந்தனை—உனக்குரியனவாகிய எண் குணங்களையும் என்னிடத்திலே பதியும்படி செய்தருளினாய்.

விளக்க உரை :

செந்தாமரைக் காடனைய மேனி—காடு என்பது மிகுதியைக் குறிக்கிறது. சிவபெருமானைச் செந்தாமரை வண்ணன் என்று திருமந்திரம் ச0கு-வது பாட்டிலும், செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம் என்று சஉ0-வது பாட்டிலும் திருமூலர் கூறுதல் காண்க.

தனிச்சுடரே—சிவபெருமான் ஞாயிறு, திங்கள், தீ, முதலிய ஒளிப்பொருள்களை எல்லாம் ஒளிரும்படி செய்து தான் பிறிதொரு பொருளாலும் ஒளிரப்படாத பொருளாதலின் தனிச்சுடரே என்றார். இதற்குச் சரியான வடமொழிச் சொற்றொடர் "சுயஞ்ஜோதி" என்பது. அடிகளுக்கு தீக்கைசெய்து வீடுபேறு அளித்தலுக்கு இச்சிறப்பியல் உருவமே தக்கதாதலின் அடிகள் தனிச்சுடரே என்று விளித்தார். "தானந்தமாமென நின்ற தனிச்சுடர்" என்று திருமூலர் திருமந்திரம் உ0அக-வது பாட்டில் கூறியிருத்தல் காண்க. இதனாலே அடிகளுக்கு அந்தணர் கோலத்தில் வந்த சிவபெருமான் பேரொளியாய் விளங்கினாரென்பது குறிக்கப்படுகின்றது. அடிகள் ஆநந்தாதீதம் க-வது பாட்டில் "ஒளி செய்மானுடமாக நோக்கியும்" என்று சிவபெருமானது ஒளி உருவத்தைக் கூறியிருத்தல் காண்க.

கண் இணை நின்திருப்பாதப் போதுக்கு ஆக்கி (உம்)—கண் இணை என்பது இரண்டு கண்களிலுள்ள ஒளியும் வந்து ஒன்றுசேர்கின்ற சுழுமுனை நாடியிலுள்ள நெற்றிக்கண்ணாகிய அகக்கண்ணைக் குறிக்கிறது. இது உலகப்பற்றுடைய மக்களுக்கு விளங்கித் தோன்றாத மூன்றாவது கண் என்றும், அருட்கண் என்றும், அகக்கண் என்றும். ஞானக்கண் என்றும் சொல்லப்படும். "அருட்கண்ணுளோர்க் கெதிர்தோன்றும் அரனே...தெருட் கண்ணினோர்க் கெங்குஞ்சி ரொளியாமே" என்று திருமந்திரம் ௧௮௦௮-வது பாட்டிலும் ' அருட்கண் விழிப்பித்து" என்று ௧௧௪-வது பாட்டிலும் திருமூலர் கூறுதலால் இங்கே கூறப்பட்ட 'கண் இணை' அருட்கண்ணைக் குறிக்கிறதென அறிக. மேலும் பின்னே வருகிற ஐம்புலன்களிலே புறக்கண்கள் இரண்டும் அடங்குதலால் இங்கேயும் புறக்கண்களைக் கூற வேண்டுவதற்குக் காரணமில்லை. இந்த அகக்கண் மெய்யறிவுக்குக் காரணமா யிருக்கிறது. ஏனைய நான்கு பொறிகளின் அறிவும் இந்த அகக் கண்ணில் அடங்கியுள்ளது. சேக்கிழார் அடிகள் பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணம், ௧௦௬-வது பாட்டில் ' ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள" என்று சொன்னது இக்கருத் துப்பற்றி. கண் இணை நின் திருப்பாதப்போதுக்கு ஆக்கி என்பது அடிகள் சிவபெருமான் திருவடிகளையே அறிந்துகொண்டிருத் தலைக் குறிக்கிறது.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி (உம்)—சிந்தனை என்பது அன்பினாலே சிவபெருமானையே நினைந்துகொண்டிருக்கும் உள்ளத்தின் நினை வைக் குறிக்கிறது. மேலே கூறப்பட்ட பெரியபுராணப் பாட் டில் "அளப்பருங் கரணங்கள் நான்குஞ் சிந்தையே ஆக" என்று கூறப்பட்டிருத்தல் காண்க.

வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி (உம்)—இது சிந்தனைசெய்த உள் ளத்தினாலே திருவடிகளைச் சார்ந்து இன்புறுஞ் செயலைக் குறிக் கிறது. கட்டு நிலையிலுள்ளவர்களுக்குப் புறத்தே உலகபோகப் பொருள்களைச் சார்ந்து இன்புறுதல் அறிவினாலும் இச்சை அல் லது அன்பினாலும் வெளிப்படுகிற செயலாயிருத்தல்போல வீட்டு நிலையிலுள்ளவர்களுக்கு அகத்தே அவர்கள் சிவபெருமானுடைய திருவடிகளின்கண் வைத்த அறிவாலும் அன்பாலும் உண்டாகி அவனுடைய திருவடிகளைச் சார்ந்து இன்புறுதல் செயலாகின் றது. "அயராவன்பி னரன்கழல் செலுமே" என்று சிவஞான போதம் ௧௧-வது சூத்திரம் கூறுதலை நோக்குக. இந்தச் செயல், செயலற்ற தன்மையாகும். "சேவடிசேரல் செயலறுநே" என்று திருமந்திரம் ௧௮௪௧-வது பாட்டுக் கூறுதல் காண்க.

வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி (உம்)—மணி என்பது இங்கே மணியின் கண்ணுள்ள ஒளியைக் குறிக்கிறது. ஆகுபெயர். வார்த்தை—புகழ். சிவபெருமானுடைய மெய்ப் புகழானது எங் கும் நிலைபெற்றிருக்கிற ஒளியோடு கூடியதாதலின் 'மணிவார்த்தை'

என்றார். திருஞானசம்பந்த அடிகள் திரு இடும்பாவனம் தேவாரம் உ-வது பாட்டில் "நிலையார்தரு நிமலன் வலிநிலவும் புகழொளி" என்று கூறியது காண்க. திருநாவுக்கரசு அடிகள் திருக்கருகாவூர் தேவாரம் க-வது பாட்டில் சிவபெருமானை "உண்ணின்ற நாவிற் குரையாடியாம்" என்று கூறியிருக்கின்றார். அடிகள் சிவபெருமானது புகழைப்பற்றித் திருவாசகத்தில் கூறியதை இங்கே குறிப்பாலுணர்த்துகிறார். அடிகள் பண்டாய நான்மறை எ-வது பாட்டில் "பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த—மாசின் மணியின் மணிவார்த்தை" என்று இதனைக் கூறியிருத்தலும் காண்க. அடிகள், சிவபெருமானை 'தனிச்சுடரே' என்று விளித்து பின் அவன்வயப்பட்டதம்முடைய அறிவு, அன்பு, செயல், நா உரைகளாகிய இவற்றைக் கூறுதலால் சிவபெருமானுடைய வியாபகமான ஒளியில் தன் ஆன்ம ஒளி வியாப்பியமாய் அடங்கி அறிவு, அன்பு, செயல்களும், நா உரைகளும் நிகழ்தன என்பதைக் குறிப்பிடுகின்றார். கண் இணை, சிந்தனை, வந்தனை, மணிவார்த்தை, இந்த நான்கு சொற்களுக்கும் உம் தொக்கி நிற்கின்றன.

ஐம்புலன்கள் ஆரவந்தனை—ஐம்புலன் என்பது ஐம்பொறிகளைக் குறிக்கிறது ஆகுபெயர். ஆர்தல்—நுகர்தல், அநுபவித்தல். ஐம்புலன்கள் ஆர என்றதனாலே உடல், பொறிகள், கரணங்கள், எல்லாம் ஒளிமயமாகி சிவகரணம் ஆயின என்பது குறிப்பிடப்பட்டது. "தெள்ளத் தெளிந்தார்க்குச சிவன் சிவலிங்கம்—கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே" என்று திருமூலர் திருமந்திரம் கஅஉங-வது பாட்டில் கூறியிருத்தல் காண்க. இக்கருத்தைச் சேக்கிழார் அடிகள் திருஞானசம்பந்த அடிகள் புராணம் கஃக-வது பாட்டில் "உணர்வினேர் பெறவருஞ் சிவபோதத்தை யொழிவின்றி யுருவின்க—ணணைபுமைம் பொறியளவினுமெளிவர வருளினை யெனப் போற்றி" என்று கூறியருளினர்.

உள்ளேபுகுந்து ஆட்கொண்ட—உள்ளே புகுந்தபின் ஆட்கொள்ளுதல் நிகழ்தலின் ஆட்கொண்டு உள்ளே புகுந்த என்பதனை உள்ளே புகுந்து ஆட்கொண்ட என மாற்றி உரை கூறப்பட்டது. உள்—உள்ளம். உள்ளே புகுதல் என்பது உள்ளத்திலே ஒளிமயமாய் நிறைந்து மலமறுத்துச் சிவத்தன்மையுடையதாக்குதல். "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்று அடிகள் அச்சோப்பதிகம் ௩-வது பாட்டில் கூறியிருத்தல் காண்க.

பெரும்விச்சை மால் அமுதம் கடலே—இது முறையே சிவபெருமானுடைய சிறப்பிலக்கணங்களாகிய சத்து, சித்து, ஆனந்தத்தைக் குறிக்கிறது. இவை அளவுபடாதாதலின் அவற்றிற்கு அடிகள் பெரும் என்று முன் அடைகொடுத்துக் கூறியதனோடு கடலே என்றும் அவற்றின்பின் சேர்த்துக் கூறினார்.

மலையே—மலையே என்பது சிவபெருமான் எல்லாப் பொருள்களுக்கும் பற்றுக்கோடாயிருந்தும் சிறிதும் விகாரம் அடையாதிருத்தலைக் குறிக்கிறது.

இரண்டுமே இலித் தனியனேற்கு—இரண்டும் இலி—ஆன்மா சத்தாயாவது அசத்தாயாவது தனியே இல்லாத பொருளாய் சத்தைச் சார்ந்து சத்தாயும அசத்தைச்சார்ந்து அசத்தாயும் உள்ள சதசத்துப் பொருளாதலின் அடிகள் தம்மை 'இரண்டுமிலித் தனியன்' என்றார். தனியன் + என் + கு = தனியனேற்கு—என்—ஒருமைத் தன்மை ஆண்பால் விகுதி. கு. நான்காம் வேற்றுமை உருபு. ஏ—ஈற்றசை.

உன்னைத் தந்தனை—அடிகள் சிவபெருமானைப் பெரும் விச்சை மால் அமுதம் கடலே என்று விளித்தபின் 'உன்னைத் தந்தனை' என்று கூறுதலால் உனக்குரியனவான சத்து சித்து ஆனந்தத்தையும் எனக்குத் தந்தருளினாய் என்று பொருள் உரைக்கப்பட்டது. எண்குணங்களும் சத்து, சித்து, ஆநந்தம் என்ற மூன்றினு மடங்கும். எங்ஙனம் எண் குணங்களும் சத்து, சித்து, ஆநந்தத்தி லடங்குமென்பதை விளக்கப்புகின் உரை விரியுமாதலின் இதனை அறிய விரும்புகிறவர்கள் சிவஞானபோதக் கருத்து ஆறுஞ் சூத்திர உரை செந்தமிழ்ச் செல்வி சிலம்பு கஃ பரல் கக பக்கம் உஉ௬-ல் வெளியிட்டிருப்பதை ஓதி அறிக. திருநாவுக்கரசு அடிகள் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் க0-வது பாட்டில் "எண்குணத்துளோமே" என்று கூறியிருத்தல் காண்க. உன்னைத் தருதல் என்பது சீவபோதத்தைப் போக்கிச் சிவபோதத்தைக் கொடுத்தல், அதாவது சிவமாம் பேரின்ப வாழ்வு அடையும்படி செய்தல். இந்த உண்மையை அடிகள் "தந்ததுன் றன்னை கொண்ட தென்றன்னை" என்று கோயிற்றிருப்பதிகம் க0-வது பாட்டிலுங் கூறியருளினார். தன்னையே தந்தானென் றுந்தீபற என்று திருவுந்தியார் கூ-வது பாட்டு இந்த உண்மையைக் கூறுகின்றது.

இந்தப் பாட்டு திருவாசகத்தில் நடுநாயகமாயுள்ள பாட்டு. அடிகள் இந்தப் பாட்டில் சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு அந்தணர் கோலத்தில் அடியார்களோடு வந்து தமது சிந்தை மல மறுத்துச் சிவமாக்கி ஆண்டருளியதை நிகழ்ந்தவாறே உலக மறிந்து உய்யும்படி கூறுகின்றார்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

குறிப்பு. இதனை ஓதுஞ் சிவநேயர்கள் இப்பாட்டி லெந்தப் பாகத்துக்காயினு மிநிலெழுதப்பட்ட உரை பொருத்தமில்லை என்று காணின், அதனைப்பற்றிக் காரணங்காட்டி எனக்கு எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

கண்ணகி

[வித்வான் மா. இராசமாணிக்கம், P. O. L.]

(முன் உஉகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. உடன் போக்கு

இங்ஙனம் கண்ணகி கூறியிருந்த போழ்து கோவலன்—வெறுப்பால் மாதவியை விட்டு நீங்கிய கோவலன்—கண்ணகி பள்ளியறையுட் புகுந்து, அவளது வாடிய மேனியைக் கண்டு வருந்தி,

" • • • யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தருமெ"னக்கு

—கனாத்திறமுரைத்த காதை

என நன்முறையில் நவில, அப்பதிவிரதா சிரோமணி "முறுவல் நகைமுகம் காட்டி, சிலம்புள கோள்க" என்றாள். இஃதொன்றால், அப்பெண்மணியின் பெருந்தகைமை இற்றென இனிது விளங்குகிறதன்றோ?

பின் அவன் விருப்பப்படி கண்ணகி தன் தொன்முது நகரைப் பிரிந்து—தாய் தந்தையாரைப் பிரிந்து—உறவினரைப் பிரிந்து—யாவர்க்கும் தன் பிரிவை அறிவியாமல் கணவனுடனே கங்குற்போதில் புறப்பட்டாள் எனின், அவளது கற்பின் சிறப்பினை என்னென்பேம்! அம்மம்ம! கற்பின் கவினே கவின்! இக்கண்ணகி போன்றதொரு கற்பரசியை இத்தமிழகம் என்றும் கண்டதில்லை என்னல் பிழையாமோ? கூறுங்கள்.

வழிநடக்குங்கால் வெகுதூரம் நடந்தறியாப் பாவையாதலின், கண்ணகி அடிகள் வருந்தின. அதனால், "முதிராக் கிளவியின் முள்ளெயிறு இலங்க"க் கணவனை நோக்கி, "மதுரை மூதூர் யாது?" என நயமாக வினவினாள் என்பது அவளது ஒழுக்க நிலைமையைக் குன்றின்மீதிட்ட விளக்கென ஒளிரச் செய்தல் ஒர்தற்பாலது.

வழியில் இக்காதலரைக் கண்ட பற்றற்ற கவுந்தியடிகளும் கண்ணகிபால் பற்றுக்கொண்டனர் எனின், கண்ணகியின் ஒழுக்க நலனையும் குண நலனையும் எண்ணிப் பார்மின்!

ஐயைக் கோட்டத்துள் சாலினி தெய்வமாடுங்கால், கற்பரசியாய கண்ணகி,

> "அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
> விருந்தின் மூரல் அரும்பினள்" ஆகிக்

கணவன் நிழல்போலப் பின்புறத் தொடுங்கி நின்றாள் என்பதிலிருந்து, "கணவன் நிழலே மனைவி" என்னும் உயரிய இல்வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறுது, தன் செயலால் உணர்த்துகிறாள் என்பதை மறுப்பாரும் உளரோ?

அதுபோழ்து தெய்வமாடிய சாலினி அவளை மட்டும் குறிப்பிட்டு,

> "இவளோ,
> கொங்கச் செல்வி குடமலை யாட்டி
> தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
> ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
> திருமா மணி"

—வேட்டுவ வரி

எனப் பாராட்டுரை புகன்றாள் எனின், கண்ணகியின் பெருமை யாதெனப் புகழ்வேம்!

5. பிரிவுறு காட்சி

இக்காட்சி ஒன்றே கண்ணகி வாழ்வில் இரண்டாங் கரத்தது. இதுவே நினைந்து நினைந்து இன்புறத் தக்கது; கோவலன் உள்ளக்கிடக்கையும் கண்ணகியின் கற்பு நெறியும் விளக்கமுறச் செய்யும் இன்பப் பகுதியாகும். கோவலன் சிலம்பு கொண்டு புறப்பட ஆயத்தமானவன், தனது தவற்றை உணர்ந்து உருகுந்திறம் உணரத் தக்கது: "நல்ல ஒழுக்கத்தைக் கெடுத்த எனக்கு இனித் திக்கதியன்றி நற்கதி உண்டாமோ? அது தானுமன்றி இருமுது குரவர்க்குச் செய்யும் ஏவலையும் பிழைத்தேன்; நினக்கும் சிறுமை செய்தேன்; இவ்வழு வொழுக்கம் தவறானது என்பதைச் சிறிதும் எண்ணிலேன்; இத்தகைய கொடிய யான் உன்னிடம் வந்து 'எழுக' என்றதும் மறுமொழி யொன்று முரையாமல் என்னுடன் வந்தனையே!" என இரங்கிக் கூறினான். அப்போது அம்மடவாள், "உமது பிரிவால் வருந்திய என்னை நும் பெற்றோர்

வந்து கண்டனர்; யான் எனது அக வருத்தத்தைப் புறத்தே காட்டாது புன்முறுவல் பூத்தேன்; அது வறிதே தோற்றிய முறுவல் என்பதை அவர்கள் உணர்ந்து வருந்தினர். யான் உமது வார்த்தையைச் சிறிதும் மாற்றாத உள்ள வாழ்க்கையை உடையேன் ஆதலின் உம்முடன் உடன்பட்டுப் பெருவிருப் போடு வந்தேன்" என இன்முறுவல் தோன்ற இயம்பினாள்.

அவ்வளவில் அவன் மனம் அடைந்த மகிழ்ச்சிக்களவுண்டோ? அவன், உள்ளத்தில் ஒருவராலும் கரைசெய்ய அரியதொரு பேருவகைக் கடல் பெருக,

"அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்தீங்கு என்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!"

எனப் பலபடப் பாராட்டிச் சீராட்டி, "நின் சீறடிச் சிலம்பில் ஒன்றுகொண்டு யான் விலைகூறி வருவேன். மயங்காதொழிக" என மலர்முகத்துடன் கூறி, அவளை ஒருங்குடன் தழுவி, துணைவர் இல்லா அவளது தனிமைக்கு வருந்தியவனாய்க் கண்ணீர் தோன்றவிடாது கரந்தவனாய்ப் புறப்பட்டான்.

இக்காட்சியில் உண்மைக்காதலர் உள்ளக்கிடக்கை உள்ளவா றுரைக்கிடத்தல் காண்க. இதனை விரிப்பிற் பெருகும்.

6. வீர பத்தினி

சிலப்பதிகாரத்தில் 'துன்ப மாலை' என்னும் பகுதியில், கற்பின் அமைதிக்கு நிலையாய கண்ணகி வீரக் கற்பரசியாக வெகுண்டெழுதலைக் காண்கிறோம்: தன் கணவன் 'கள்வன்' என நினைக்கப்பட்டுக் கொலையுண்டான் என்ற செய்தி கேட்டதும், பொங்கி எழுந்தாள்; திங்கள் மேகத்தோடும் சேர்ந்து நிலத்தில் வீழ்ந்தாற்போல முகமும் கூந்தலும் மண்மேற்பட வீழ்ந்தாள்; பலபடப் புலம்பினாள்; தென்னவன் தவற்றை இழித்துரைத்துப் பிடிபிக்க மாட மதுரைத் தெருக்கள்தோறும் தலைவிரி கோலமாகப் புலம்பிக்கொண்டே சென்றாள். "கணவனைக் காண்பேன்; எனது ஒற்றைச் சிலம்பைப் பாருங்கள்; மற்றொரு சிலம்பு விலைகூறச் சென்ற என் கணவனைக் 'கள்வன்' என்று காவலன் கொலைபுரிந்தானாம்! என்ன அநீதி!" என்று அலறியவளாய்ச் சென்ற கோலத்தை 'ஊர் சூழ்வரி' என்னும்

பகுதி செவ்வையாகச் செப்புதல் காணத்தக்கது. அவளது துன்ப நிலையைக் கண்டு ஊரார் அழுது புலம்பினர் எனின், அவளது துன்பநிலை இத்தகையதென யாம் அறைதல் இயல்வதோ? நீங்களே படித்து நுகருங்கள்.

இறுதியில் கண்ணகி, கணவன் உடலைத் தழுவ, அவன் உயிர்பெற் றெழுந்தான்; எழுந்தவன், "நிறைமதி வாள்முகம் கன்றியது" என்று கூறி அவள் கண்ணீரைக் கையால் துடைத்தான். அவளோ அழுதேங்கி, நிலத்தில் விழ்ந்து அவன் பாதங்களைத் தன் வளைக்கைகளால் பற்றினள். அவன் "நீ இவண் இரு" எனக்கூறி மறைந்தான். ஈண்டு அவனது உள்ளப் பெருமையும் இவளது கற்பின் சுவினும் நுனுகி ஆராயத்தக்கது: இறந்தெழுந்தவன் அவளது மதிமுகத்தைத் துடைத்ததும், அவள் தன்னுயிரனையான் பாதங்களை பற்றெனக் கொண்டமையும் எண்ணி எண்ணி நயம் நுகரத்தக்கன.

கணவன் மறைந்ததும் மருண்ட கண்ணகி, பின்னர்த் தெளிவுற்று,

"காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்;
தீவேந்தன் தனைக்கண்டித் திறம்கேட்பல் யான்"

என்று கூறியவளாய், நெடுங்கயற்கண் நீர்சோரப் பாண்டியன் கோயிலை அண்மினள்; அண்மி, வாயிலோனிடம் பகரும் மாற்றத்தில் அநீதியை அறவே வெறுத்த அவளது உள்ளப் பான்மையை உள்ளவாறு உணரக்கூடும்.

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணைஅரிச் சிலம்பொன் றேந்திய கையள்........
அறிவிப் பாயே அறிவிப் பாயே"

என அறைந்தனள். அவ்வளவில் அலறிய காவலன் பாண்டியனை வாழ்த்திப் பணிந்து, கண்ணகி வந்தமையைக் கூறினன். அவன் கூற்றிலிருந்து கண்ணகியின் 'காளிஸ்வரூபம்' இற்றென இனிது காணலாம்:

"வந்திருப்பவள், அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;
அறுவர்க் கிளைய நங்கை, இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்;

செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழில் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே
கணவனை இழந்தாள் கடையகத் தாளே!"

—வழக்குரை காதை

இனி அரிவைக்கும் அரசற்கும் அங்கு நடைபெற்ற சம்பாஷணை கவனிக்கத் தக்கது. கண்ணகியின் சொல்லாற்றல்—வீரம்—உண்மை உணர்த்த அஞ்சாமை போன்ற அருங்குணங்கள்—பெண்ணுக்கமைய வேண்டும் பெருங் குணங்கள் தெளிவுற விளங்கக் காணலாம். அவளைக் கண்டதும் பாண்டியன், "நீருடைக் கண்களோடு வந்த நீ யாவள்?" என, அவள், "தேரா மன்னா!" எனச் சினத்துடன் விளித்துத் தான்பிறந்த சோணாட்டுப் பெருமையை முதற்கண் கூறிப்பின் தனது குடிப் பெருமை கூறி அதன்பின்,

"மாசாத்து வாணிகன் மகனை யாகி......நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி"

எனத்தன்னை அறிவிக்குந் திறம் காண்க. இக்காலப் பெண்டிர் உயிர் போவதாயினும் மாமனார் பெயர், கணவன் பெயர் கூறாமடைமை அக்காலக் கண்ணகியிடம் அமைந்திருக்கவில்லை என்பதை அறிக. இவ்விருவகைப் பெண்டிர் காலங்களில் எக்காலம் நாகரிகம் உடைத்தென்பதை நீங்களே நினைத்துப் பாருங்கள். இதனை விரிப்பிற் பெருகும். கண்ணகி, "மாசாத்து வாணிகன் மகனை ஆகி—நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி" எனத் தன்னை அறிவிப்பதில், தன் மாமனார் பெயர்—கணவன் பெயர் இவற்றை அழுத்தந்திருத்தமாக அறைந்துள்ளமை அறிக.

"கள்வனைக் கொன்றமை நியாயமன்றோ?" என்று அரசன் கேட்க, அதற்கு விடையளிக்காமல், கண்ணகி, "என் காற் சிலம்பு முத்துடை அரியே" எனக் கூறியது உன்னத் தக்கது. பாண்டியன் கூறிய சொல், 'உண்மை உணர்ந்த பின்னரே சொல்லத் தகுவது' என்பதே கண்ணகியின் கருத்து. ஆதலால் அவள் "முதலில் உன் சிலம்புதானா என் கணவனிடம் காணப்பட்டதென்பதைத் துணிந்தனையோ?" என்று கேட்பதற்குப் பதிலாக, இங்ஙனம் நயமாய்க்கூறி விஷயத்திற்கு (to the point) வந்து பாண்டியனை மடக்கினது என்னிக் களிக்கற்பாலது.

உண்மையை இங்ஙனம் உணர்த்தித் தன் கணவன் தவறிலன் என்பதை மெய்ப்பித்த அமயம் மன்னன் மனம்

நொந்து மாண்டான்; தன் உயிர்கொண்டு அவன் உயிர் தேடு பவளைப்போலக் கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கி அவ் விடத்தே உயிர் விட்டாள். சிற்றம் தணியாச் சிறுடி அரிவை கோப்பெருந் தேவியை நோக்கி,

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்:
பட்டாங்கு யானுமோர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையும்"

என்று சீறியவளாய்த் தனது இடமார்பத்தைத் திருகி மதுரை மீதெறிந்தாள். அவ்வளவில் மதுரை எரிவாய்ப்பட்டது. மதுரையைக் கண்ணகியின் 'கற்பு' உண்டது என்னும் இளங் கோவடிகளின் இன்னுரை இன்பம் தருவதாகும். மதுரைப் பத்தினிப் பெண்டிர் அனைவரும் கண்ணகியைச் 'சிலம்பில் வென்ற சேயிழை' எனப் புகழ்ந்தனர்.

இந்நிலையிலும் கண்ணகியின் சிற்றம் தணிந்திலது. 'மதுரா பதி' என்னும் தெய்வம் கண்ணகிமுன் நிற்கமாட்டாது பின் னின்று பேசியதெனில், அவளது வீரஸ்வருபம் விளம்பற் பாலதோ? அத்தெய்வம் கோவலனது முன்னை வினையைக் கூறிப் பதினான்காம்நாள் நீலியைப் போலக் கண்ணகியும் மலையுச்சியிற் கணவனைக் காண்பாள் எனக்கூறியது. அது சென்றபின் கண்ணகி,

"கருத்துறு கணவன் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்"

எனக் கூறிக் கொற்றவை வாயிலிற் பொற்றொடி தகர்த்து மீண் டும் வருந்தி,

"கீழ்த்திசை வாயிற் கணவனோடு புகுந்தேன்;
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்வேன்"

என்று துன்புற்றவளாய் வழிநடந்தாள். இந்நிலை எண்ணி யெண்ணி இரங்கற்குரியது. அவளது மனநிலையில் ஒவ்வொரு வரும் இருந்து நினைப்பின், இத்துன்ப எல்லையின் முகட்டினைச் சிறிது உய்த்துணரலாம். இது மனத்தை உருக்கும் இட மாகும்.

இங்ஙனம் மயங்கி மயங்கி வழிநடந்தவள் திருச்செங் கோட்டு மலையுச்சி அடைந்தாள்; ஆங்கிருந்த குறவர் இவள் யாவள் என வினவ, "தீத்தொழிலாட்டியேன் யான்" என்று கூறி ஏக்கமுற்று நின்றிருந்தாள். பதினான்காம் நாள் கோவ லன் வந்து விண்ணக விமானத்தில் அம் மாபத்தினியை அழைத்தேகினன். கட்டுரை காதை ஈற்று வெண்பா ஒன்றில்

இளங்கோ அடிகள் இவ்வீர பத்தினியின் கற்பின் பெட்பினைக் கழறல் கவனிக்கத் தக்கது :

> "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்
> தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
> மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
> விண்ணக மாதர்க்கு விருந்து."

7. கண்ணகி விழா

மலைபுச்சியிலிருந்து மாண்புறு கணவனைக் கலந்த காரிகையைக் கொண்டாடி குன்ற மக்கள் குரவைக் கூத்தாடினர். அவர் கூற, தன்னுடைந்த பத்தினிக்குப் பெருமைபுரிய விழைந்தான் சேரன் செங்குட்டுவன்; அவன் மாபத்தினியான இருங்கோ வேண்மாள், "நம் அகல் நாடு அடைந்த இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என்று கூறினள். செங்குட்டுவன் இமயஞ்சென்று கல் கொணர்ந்து, கண்ணகி உருவந் திட்டிக் கோயில் கட்டி விழாச் செய்தான். அங்கு, கண்ணகி தெய்வம் விண்ணிடைத் தோன்றி,

> 'தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
> நல்விருந் தாயினன் நானவன் தன்மகள்;
> வென்வேலன் குன்றில் விளையாட்டு யானகலேன்"

என உரைத்து விழா முடிவில், "செங்குட்டுவன் வாழ்க!" என்று ஆசிர்வதித்தது.

அவ்வெல்லை, ஆரிய மன்னரும் சிறை நீக்கப் பெற்ற வேந்தரும் கொங்கரும் மாளுவரும் இலங்கைக் கயவாகு வேந்தனும் தத்தம் ஊர்களில் கோயில் கொண்டருள வேண்டுமெனப் பத்தினிக் கடவுளைப் பரவ, "தந்தேன் வரம்" என அத்தெய்வம் வரம் தந்தது.

இத்துணைப் பெருமையுற்ற தெய்வம் இத்தமிழகத்து வேறுண்டெனக் கேட்டிலேம். கண்ணகி—தன் கற்பின் கனிவால் கடவுள் தன்மை எய்தினள். கற்பின் உயர்வே உயர்வு!

8. புலமையும் பெருமையும்

இப்பத்தினி கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தாள் என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் 'பத்தினிச் செய்யுள் இது' என இரண்டோரிடங்களிற் சுட்டிக் காட்டுதலும், 'பத்தினி' என்னும் சொல் வழக்கு இன்றளவும் கண்ணகியையே குறித்து வருதலாலும்,

அச்செய்யுட்கள் இப்பெண் தெய்வத்தால் பாடப்பெற்றனவே எனத் துணிதலில் தவறில்லை.

இனி, இப்பெரியாளை மதுரை மருதன் இளநாகனார் என்னும் புலவர் நற்றிணையில் 216-ம் பாடலில் புகழ்ந்துள்ளார்:

“எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத் தாங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி”

என வருதல் காண்க.

‘திருமாவுண்ணி’ எனப் பெயர்வருதல் கொண்டு இவள் வேறு எனக் கூறவேண்டுவதோர் அவசியம் இல்லை. என்னை? “திருமா மணி” (வேட்டுவவரி, வரி-50) எனவும், “திருமா பத்தினி,” (கட்டுரை காதை, வரி-14) எனவும் வரும் தொடர்களைக்கொண்டு, ‘திருமா வுண்ணி’ என வருவதில் பொதுவாகிய ‘திருமா’ என்னும் அடைமொழிகளை நீக்கின், எஞ்சி நிற்பது ‘உண்ணி’ என்பதொன்றே. அது கண்ணகிக்குப் பிறிதொருபெயராகவோ, விட்டு (செல்ல) ப் பெயராகவோ கொள்க.

இன்றளவும் இம்மாபத்தினியின் ‘பத்தினி’ என்னும் நாமம் தமிழகத்துச் சர்வ மாதரிடமும் வழக்குப் பெற்றுள்ளது. என்னை? “இவள் பத்தினியோ? சொன்னவுடனே பலித்து விடுமோ?” என ஏசுதலிலிருந்தே “பத்தினி—கண்ணகி: அவள் சொன்ன சொல் பலித்தது” என்பது பொருளாதலின் என்க. அறிவுடையோர்—தமிழ்ப் பற்றுடையோர் ‘நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்’ என்னும் செந்தமிழ்ச் செல்வத் திரட்டினை நுகர்ந்து இன்புறுவாராக!

ஆராய்ச்சிப் பகுதி : Research

கந்தியார்

[மயிலை. சீனி. வேங்கடசாமி]

(ஆசிரியர் உரிமை)

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிவக சிந்தாமணி புலத்துறை முற்றிய பேரறிஞர்களால் போற்றப்படும் சிரிய நூல் என்பது தமிழுலகம் அறிந்ததொன்றே. பல்லோரா லும் பாராட்டப்படும் இச் சிந்தாமணியில் 445 பாடல்கள் இடைச் செருகலாகப் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. புதிதாகப் புகுத்தப்பட்ட இடைச்செருகற் பாக்கள், நூலா சிரியராகிய திருத்தக்க தேவரின் நடையினின்று வேறுபிரிக் கக் கூடாதனவாய் இரண்டறக் கலந்து தோன்றும் சிறப்பு வாய்ந்தனவாக விருத்தலின், இன்ன பாக்கள்தாம் இடைச் செருகல் இன்னபாக்கள்தாம் பண்டைய முதல்பாக்கள் என்று பிரித்தறியக் கூடாதனவாய் இருக்கின்றன. இவ்வளவு திறமையுடன் இடைச்செருகற்பாக்களை இயற்றி நுழைத் தவர் கந்தியார் என்னும் பெரியார் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கந்தியாரைப்பற்றி யாதொரு செய்தியும் தெரிய வில்லை. ஆகவே, இந்தக் கந்தியார் என்பவர் யார்? எந்தச் சமயத்தவர்? ஆண்பாலரா, பெண்பாலரா? என்பனவற்றை ஆராய்வோம்.

கந்தியார் என்பது ஆர் விகுதிபெற்ற கந்தி என்னும் சொல். இது கௌந்தி என்னும் சொல்லின் திரிபு என்று தோற்றுகிறது. அன்றியும் கௌந்தி அல்லது கந்தி என்பது சமணரில் பெண்துறவிகளுக்குப் பெயர் என்றும் தெரிகிறது. நிகண்டு நூல்கள் இதனை வலியுறுத்துகின்றன.

" நந்திய பிண்டிவாமன் நன்னெறி வழாது நோற்பாள்
கந்தியே அவ்வை அம்மை கன்னியே கௌந்தி என்ப "

(சூடாமணி நிகண்டு—2-வது: மக்கட்பெயர்த் தொகுதி)

இதனால் கந்தி, கௌந்தி என்னும் சொற்களும் அவ்வை, அம்மை, கன்னி என்னும் சொற்களும் அருகக்கடவுளைத் தொழும் அருந்தவப் பெண்பெயர் என்பது தெரிகிறது.

இனி, சூடாமணி நிகண்டிற்கும் முற்பட்ட பிங்கல நிகண்டும் இதையே கூறுகிறது :

"பைம்மையும் கௌந்தியும் அருந்தவப் பெண்பெயர்"
(பிங்கலம்—ங-வது: ஆடவர் வகை.)

இதற்கும் முற்பட்ட சேந்தன் திவாகரமும் இதனையே வற்புறுத்துகிறது :

"பைம்மையும் கௌந்தியும் அருந்தவப் பெண்பெயர்"
(திவாகரம் மக்கட்பெயர்த் தொகுதி)

சூடாமணி நிகண்டிலும், ஏனைய பிங்கலம், திவாகரம் என்னும் நிகண்டுகளிலும் இச்சொல்லைப் பற்றிக் காணப்படும் வேற்றுமை என்னவென்றால், முற்கூறப்பட்ட சூடாமணி நிகண்டில் கந்தி, கௌந்தி என்னும் இரண்டு சொற்கள் கூறப்படுகின்றன; பிற்கூறப்பட்ட பிங்கலம் திவாகரங்கள் கௌந்தி என்னும் ஒரு சொல்லைமட்டும் கூறுகின்றன ; கந்தி என்னும் சொல்லைக் கூறவில்லை. இதனால் நாம் அறியக்கிடப்பது என்னவென்றால் கௌந்தி என்னும் சொல் முற்காலத்தில் வழங்கி வந்தது என்பதும், பிற்காலத்து அச்சொல் கந்தி என்று மருவி வழங்கப்பட்டது என்பதுமேயாம். சிலப்பதிகாரக் காப்பியத்திலும் கௌந்தியடிகள் என்னும் சமண சமயத்துறவியாகிய ஓர் அம்மையாரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது இங்கு நினைவு கூரற்பாலது. அந்தக் காப்பியத்தில் கௌந்தியடிகள் என்று கூறியிருப்பதும் கந்தி என்று ஓரிடத்தும் கூறுதிருப்பதும் கருதத்தக்கது. எனவே, கௌந்தி என்னும் சொல்லிலிருந்து தான் கந்தி என்னும் சொல் பிற்காலத்தில் மருவி வழங்கப்பட்டதென்று அறியக்கிடக்கின்றது. நிற்க.

கௌந்தி, கந்தி என்னும் சொற்கள் சமணசமயப் பெண்பாற்றுறவிகளுக்கு மட்டுந்தான் பொருந்துமோ? ஏனைய சமயப் பெண்பாற் றுறவிகளுக்குப் பொருந்தாதோ ?

இந்த வினாவுக்கு விடை என்னவென்றால், இப்பெயர்கள் சமணசமயத்துப் பெண்பாற்றுறவிகளுக்கு மட்டுந்தான் பொருந்துமேயன்றி, ஏனைய சமயப் பெண்பாற்றுறவிகளுக்குப் பொருந்ாது என்பதே. ஏனென்றால், இந்து மதத்தைச் சேர்ந்த சைவ வைணவ சமயங்களில் பெண்பாற்றுறவிகள் இல்லை. ஆனால், பௌத்த சமயத்தில் பெண்பாற்றுறவிகள் உண்டு. தமிழ் நாட்டிலும், பண்டைக்காலத்தில் பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்தபோது, பௌத்த சமயப் பெண்பாற்றுறவிகள் இருந்தார்கள் என்று மணிமேகலை என்னும் காவியத்தினால் அறிகிறோம். எனினும், அவர்களுக்

குப் பிக்குணிகள் (பிக்ஷுணிகள்) என்ற பெயர் வழங்கப்பட்டிருந்ததேயன்றி கௌந்தி அல்லது கந்தி என்னும் பெயர்கள் வழங்கப்படவில்லை.

"நந்திய பிண்டிவாமன் நன்னெறிவழாது நோற்பாள்
கந்தியே அவ்வை அம்மை கன்னியே கௌந்தி என்ப"

என்று, சூடாமணி நிகண்டில் அவ்வை, அம்மை, கன்னி என்னும் சொற்களும் சமண சமயப் பெண்பால் துறவிகளைக் குறிக்கும் என்று கூறியிருப்பதை ஒப்புச்சொள்வதற்கில்லை. ஏனென்றால், சங்க காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் இருந்த அவ்வையார்கள் சமணசமயத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். வயது முதிர்ந்த பெண்பாலர் எந்தச் சமயத்தவராயிருந்தாலும் அவர்கள் அவ்வையார் என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர் அதுபோலவே, அம்மை, கன்னி என்னும் சொற்களும் பொதுவாக எல்லாப் பெண் பாலரையும் குறிக்கும் சொற்கள். ஆகையால், அவ்வை, அம்மை, கன்னி என்னும் சொற்களையும் சமணசமயப் பெண் பால் துறவிகளுக்குப் பெயராகச் சொல்லியிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால், கௌந்தி அல்லது கந்தி என்னும் சொற்கள் சமண சமயத்தில் துறவுபூண்ட பெண் பாலரைக் குறிக்கும் என்பதை அறிந்தோம். எனவே, சீவக சிந்தாமணியில் இடைச்செருகற் பாக்களை இயற்றி நுழைத்த கந்தியார் என்பவர் சமண சமயத்தவர் என்றும், பெண்பாலார் என்றும் அங்கை நெல்லிக்கனியென விளங்குகின்றது. இவரது வரலாறு வேறொன்றும் தெரியாதபடியால், இவரது காலத்தை ஆராய்ச்சிசெய்து முடிவுசொல்ல இயலவில்லை. இது நிற்க.

"பைம்மையும் கௌந்தியும் அருந்தவப் பெண்பெயர்" என்னும் திவாகரம், பிங்கலந்தைச் சூத்திரங்களில் பைம்மை என்னும் சொல்லும் துறவுபூண்ட பெண்பாற் பெயரென்று கூறப்பட்டிருக்கின்றது. கணவனை இழந்து தாபதநிலையடைந்த பெண்கள் மறுமைப் பயனை நோக்கி நோற்கும்நோன்பிற்குக் கைம்மை நோன்பு என்று தமிழ நூல்கள் கூறுவது போல, மணம் செய்துகொள்ளாமலே துறவுபூண்ட பெண் பாலார் மறுமைப் பயனைக் குறியாக நோற்கும் நோன்பிற்குப் பைம்மை நோன்பு என்று பண்டைக்காலத்தில் வழங்கி வந்திருக்கக்கூடுமோ என்று எண்ண இடமுண்டாகிறது. அதாவது கைம்மை, பைம்மை என்னும் சொற்கள் உண்டா

வதற்கு ஏதோ காரணம் இருந்திருக்கவேண்டும். இதைப் பற்றி ஆராய்ந்து முடிவுசொல்வது கற்றறிந்த அறிஞர்களின் கடனாகும்.

திருக்குறள் கண்டன உரைக்கு எதிர் உரை

[ஈழத்துச் சிவானந்த அடிகள்]

(முன் ௨௭௧-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறளின் ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்பைப் பற்றிப் புகழ்ந்து போற்றிய பன்னூற்றுக் கணக்கான பேரறிஞர்களின் கருத்துக்கள் எல்லாம் ஒருபுற மிருக்க, இன்றைக்கு உலகம் போற்றும் பெரியாராகிய காந்தி அடிகள், தாம் திருக்குறளைப்பற்றி மதிப்புக் கூறுமிடத்துத் திருக்குறளிலுள்ள 1330 அருங் குறட்பாக்களுள்ளும் தெரிந்தெடுத்துக் காட்டியது இக்குறள் வெண்பா தான் என்றால், அதன் ஆழ்ந்த கருத்தும் ஒப்புயர்வற்ற சிறப்பும் எத்தன்மைத்தாய் இருக்குமென்பதை அறிவுடை உலகமே ஆராய்ந்து பார்க்குமாக.

இனி, 'வீட்டைப் பற்றிக் குறள் ஒன்றும் கூறவில்லை. வள்ளுவர் அதை ஏன் புறக்கணித்துவிட்டாரோ தெரியவில்லை' என்று அவ்வாசிரியப் பெருந்தகை பெருமூச்சு விடுகிறார். அதற்கு, 'திருக்குறளைப்பற்றி அவ்வாசிரியர் ஒன்றும் படிக்கவில்லை. அதை அவர் ஏன் கல்லாது புறக்கணித்து விட்டாரோ தெரியவில்லை' என்று நாமும் பெருமூச்சு விடுவதைவிட இதற்கு மேல் ஒன்றும் கூறுதற்கில்லை. என்னே! ஆசிரியர் அவர்களின்பேதைமை இருந்தவாறு! ஒரு பொறுப்பு வாய்ந்த பத்திரிகை நடாத்தும் ஆசிரியர் ஒருவர் இங்ஙனம் தம்முடைய எழுதுமாற்றலைப் பயன் படுத்தியதானது தமிழுலகுக்கே ஒரு பெரும்வெட்கமான செயலாகும்

இனி, 'அறம்' என்ற உபதலைப்பின் கீழ்க் 'கொல்லுவது அறமா அல்லது மறமா என்று திட்டங் கட்ட முடியாது. அவ்வினைக்கு ஏதுவாயுள்ள காலத்தையும் சந்தர்ப்பத்தையும் தழுவி அது நல்லது அல்லது கெட்டது ஆகின்றது. பொது நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் கர்மம் எதுவாயினும் அது தர்மமாகின்றது' என்று தமது மரபின் மாண்பை அவ்வாசிரியர் தாமாகவே கபடற்று விளக்குகிறார். இம்மேலே கூறப்பட்ட சொற்றொடர்களை ஊன்றி நோக்குமிடத்து, அவ்வாசிரியர் ஒரு ஆரியப் பார்ப்பனர் என்றும், வெறியாட்டு வேள்விகளையே வியந்து கூறும் ஆரியர் வேதங்களாகிய இருக்கு

முதலான கற்பனை நூல்களையே பின்பற்றுவோரின் வழிவந்த ஒருவர் என்றும் தெள்ளிதில் அறியக் கிடக்கின்றது. எங்ஙன மெனின், ஆரியர் சமக்கு ஒப்புயர்வற்ற நூலாகக் கருதிப் போற்றும் மநுஸ்மிருதியில் 5-வது அத்தியாயம் 28-வது சுலோகத்தில்,

> "ஏனென்றால், பிரமன் இவ்வுலக முழுவதும் உயிர்களுக்கு உணவாகவே உண்டுபண்ணினார். ஆகையால் நெல் முதலிய நிலையியற் பொருள்களும், விலங்கு முதலிய இயங்கியற் பொருள்களும் மனிதனுக்கு உணவாகவே இருக்கின்றன."

என்றும், அதே அத்தியாயம் 39-வது சுலோகத்தில்,

> "எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரமனால் படைக்கப் பட்டிருக்கின்றன. அந்த எக்கியஞ் செய்தால் உலகமெல்லாம் நன்மையை அடைகின்றது. ஆகையால், எக்கியத்திற் செய்யும் உயிர்க்கொலை கொலையாகமாட்டாது."

என்றும் கூறப்படும் சட்டங்களே பெரும்பாலும் திட்டஞ் செய்யப்பட்டிருப்பதால், அவ்வாசிரியர் அங்ஙனம் கூறுவதிலும் குற்றம் ஒன்றும் இல்லை. என்றாலும், கொலை, புலை முதலான கொடுஞ் செயல்கள் தவிர்ந்த தூய நெறிக்கு வழிகாட்டியாகவுள்ள திருக்குறளைப்பற்றிப் பேசுமிடத்து இத்தகைய அழுக்குரைகளை—தீய ஒழுக்கங்களைக் கற்பிப்பனவான தீய சொற்களை—பாவத்தை விளைவிப்பனவான கொடிய மொழிகளைப் பயன்படுத்தியதற்காக அவ்வாசிரியரைக் கண்டிக்கத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளதென்பதைக் கூறாமல் இருக்க முடியவில்லை. அவர் பொது நன்மையின் பொருட்டுச் செய்யும் எதுவும் பாவமாகாது என்று குறிப்பிட்டது, மழையை வருவித்தற்பொருட்டும், வாந்திபேதி முதலிய நோய்களைப் போக்குதற் பொருட்டும், இன்ன பிறவற்றின் பொருட்டும் இறந்து பட்டொழியுஞ் சிறு தெய்வங்களின் முன்னிலையில் அறிவாராய்ச்சியற்ற பாமர மக்களால் செய்யப் படும் கொலையைப் பற்றிப் போலும்! அங்ஙனமாயின் அன்னாரின் அரும்பெரும் ஆராய்ச்சிக்காக அவருக்கு ஒரு 'டாக்டர்' பட்டமோ அல்லது 'நோபெல்பரிசோ' அளிக்க வேண்டியது ஆராய்ச்சிநூற் கழகத்தாரின் கடமையாகும்.

இனிப், 'பொருள்' என்னும் உபதலைப்பின் கீழ் 'உடலைப் பேணுதற்கு மட்டும் பொருள் பயன்படும். ஆக்கையை வளர்ப்பது இவ்வுலக வாழ்வின் முடிவான நோக்கமன்று

என்று சில பொருணலமற்ற புன்னுரைகளைப் பொறித்திருக்கிறார்கள். உடலைப் பேணுதற்கு மட்டுமே பொருள் பயன்படுகின்றதென்பது உலகறிந்த உண்மைதான். ஆனால், உடலை எதன் பொருட்டாகப் பேணுதல் வேண்டுமென்பதே கேள்வி. உடம்பைப் பேணுதல் வழிதே நிலையற்ற சிற்றின்பங்களை நுகர்தற் பொருட்டன்றென்பதும், உடம்பைப் பேணு வழி உணர்வைப் பெற முடியாதாகையால், ஒருவன் உடம்பைப் பேணுதலினின்றும் அவனுடைய உணர்வு கல்வி கேள்விகளினால் சிறிது சிறிதாக வளரப்பெற்று, அதன் வாயிலாகத் திடம் பெறு ஞானத்தைப் பெறுகின்றான் என்பதும், அவனுடைய நோக்கம் ஞானத்தைப் பெறுவதிலேயே முழுவதும் செலுத்தப் பட்டிருப்பினும், அந்த ஞானத்தை அடைவதற்குக் கருவியாகவுள்ள உடம்பையும் (ஒரு கரையில் இருந்து மற்றொரு கரைக்குப் போய்ச் சேருவதே ஒருவனுடைய நோக்கமாயினும், அங்ஙனம் அவன் செல்வதற்குக் கருவியாகவுள்ள மரக்கலத்துக்கும் யாதொரு கெடுதலும் நேராதவாறு பார்த்துக் கொள்ளுதல் போலக்) கருத்தாய்ப் பாதுகாத்தல் வேண்டுமென்பதும், அங்ஙனம் உடம்பைப் பாதுகாத்தற்குப் பொருள் பெரிதும் இன்றியமையாததென்பதுமே,

> "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லை பொருள்."

> "அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
> செல்வச் செவிலியா லுண்டு."

என்றாங்கு கூறிப்போந்த திருவள்ளுவர் போன்ற தமிழ்ச் சான்றோரின் முடிவு. ஆனால், ஒருசாரார் உலகத்தை முற்றும் வெறுத்துக் காட்டிற் சென்று கண்மூடித் தவம் என்னும் பெயரால் அவங் கிடத்தலையே தம் வாழ்க்கையின் முடிவான நோக்கமாகக் கொண்டு மயங்குவர். இம்மயக்கம் தமிழ்ச் சான்றோர்களைப் பெரும்பாலும் பிடிப்பதில்லை. வள்ளுவர் பெருமானின் வாழ்க்கை நடைமுறையே யாம் கூறும் இவ்வுண்மைக்கு உறுபெருஞ் சான்றும் என்க.

இனி, 'இன்பம்' என்னும் உபதலைப்பின் கீழ்த்தான் அவ்வாசிரியர் தமக்கிருக்கும் பெரும்பான்மை இயல்பான பேதைமையையும், குறுகிய மனப் பான்மையையும், அருகிய அறிவாராய்ச்சியையும் தெளிவாகக் காட்டுகிறார். அவர் திருக்குறளின் இறுதிப் பகுதியாகிய இன்பத்துப்பாலை எடுத்துக் கொண்டு, அதற்கு ஏதேதோ குழறுபடைகளை உளறிக் கொண்டு போகிறார். இன்பத்துப் பாலில் விளக்கப்பட்டுள்ள

பொருள்களே மக்களின் கடைசியான, அழிவற்ற பேரின்பம் என்று சொல்லப்படும் நெறிக்குட் கொண்டு சேர்ப்பதென் பதை அவர் உணரவில்லை. அஃது அவரின் குற்றமன்று. "வேத உபநிடதங்களின் பொருள்களைப் பாடியங்களைக் கொண்டு உணர்ந்தாலும் உணரலாம்; குறளின் உட்கருத்தறிதல் கடின மாம். அதன் வழியிலிறங்கி மனப் பூர்வமாய் உழைப் பார்க்கே இவ்வுண்மை புலப்படும்" என்று 'ஜனவிநோதினி'ப் பத்திராசிரியர் திவான்பஹதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும்," தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் அரு ளிச் செய்த 'திருக்குறள்' நூலின் இறுதிப் பகுதியாகிய 'இன் பத்துப் பால்' செந்தமிழ் மொழிக்குச் சிறப்பாய் உரிய அகப் பொருள் நாடக வழக்குப் பற்றிச் செய்யப்பட்ட தொன்றா கலின், அது, தொல்காப்பியப் பொருளிலக்கணம், நக்கீரனர் அருளிச் செய்த 'இறையனரகப் பொருளுரை,' மாணிக்க வாசகப் பெருமான் அருளிச்செய்த 'திருச்சிற்றம்பலக் கோவை' முதலான நூல்களைப் பயின்றார்க்கன்றி ஏனை யோர்க்கு எளிதிற் பொருள் விளங்குவதன்று. பரிமேலழகி யார் அதற்கெழுதியிருக்கும் உரையுஞ் சுருக்கமாகவே இருத் தலால் அவ்வுரைகொண்டும் அதன் பொருளை எல்லாரும் விளங்கல் ஏலாது என்று தமிழறி பெரியாராகிய மறைமலை அடிகள் அவர்களும் நன்காராய்ந்து நடுவுநிலைமையுடன் கூறி யிருப்பதால், திருக்குறள் என்னும் நூல் ஒன்று உண்டென்று, அதை, அதன் பெயரளவில் மட்டும் அறிந்த அவ்வாசிரியர் போன்றவர்கட்கு அதன் உட்பொருளை உணர்ந்துரைக்க யாங்ஙனம் இயலும்! இன்பத்துப்பாலைப் பற்றிச் சிறப்பாகவும் ஏனைய இரு பால்களையும் பற்றிப் பொதுவாகவும் விளக்கிய அவ்வாசிரியரின் விளக்கத்திற்கும், குருடர் ஐவர் ஒரு யானை யின் அவயவங்களைத் தொட்டுத் தொட்டு விளக்கிய விளக் கத்திற்கும் யாம் ஒரு சிறிதும் வேறுபாடு காண்கின்றிலம்.

இன்னும், காமத்துப் பாலைப் பற்றி ஆசிரியர் மாணவர் களுக்குக் கற்பிப்பது முறையன்று என்றும், சகோதர சகோ தரிகள் ஆராயத்தகுந்ததன்று என்றும், தாயின் முன்னிலை யில் பிள்ளை ஒருவன் அதைப் படிக்கவும் ஒண்ணாது என்றும் அவ்வாசிரியர் அஞ்சி அல்லற்படுகின்றார். ஆனல், நாம் கீழே தரும் ஆரியப் பாட்டுகளை மட்டும் ஆசிரியன் மாணவனுக்குக் கற்பிக்கலாமென்றும், குரு சீடனுக்கு உபதேசிக்கலாம் என் றும், சகோதர சகோதரிகள் கூடி ஆராய்ந்து மகிழலாமென் றும், தாயின் முன்னிலையில் பிள்ளை ஒருவன் கூச்சமற்றுப் படிக்கலாமென்றும் அவர் கருதுகிறார் போலும்! அவற்றுட் சில பின்வருமாறு :—

I

"அபுத்ரா குர்வனுஜ் ஞாத தேவரம் புத்ரகாம் யயா,
ஸபிண்டம்வா ஸகோத்ரம் வாக்ரு தாப்யக்தம் ருதாவியாத்."

(யாஞ்ஞவல்கியர்)

(இதன் பொருள்) "தனது கணவன் இறந்து விட்டால் அல்லது புதல்வர்களை உண்டுபண்ணத் தகுதி யில்லாவிட்டால், புதல்வர்ப் பேற்றை விரும்புகிற பெண்ணானவள் பெரியோர்களின் அனுமதியைப் பெற்று, ருது காலத்தில் உடம்பில்நெய்யைப் பூசிக்கொண்டு தன் கணவனது சகோதரன் அல்லது அந்தக் குலத்தில் எவரையேனும் புணர்ந்து கொள்ளலாம். இவ்விதம் கருத்தரிக்கும் வரை செய்யலாம். இதனால் கற்புக்குப் பங்கம் ஏற்படாது."

II

"ஸுத்ருசோ மதனுவாசம் பஸ்யன் ய: ப்ரஜபேன் மனும்;
அயுதம் ஸோசிராத்தேவக் வாபதே: ஸமதாமியாத்,"

(மந்திர மகோததி)

(இதன் பொருள்) "ஒரு அழகு வாய்ந்த பெண்ணின் யோனியைப் பார்த்த வண்ணம் பதினாயிரம் மந்திர செபம் பண்ணுகின்றவன் தேவ குருவுக்கு ஒப்பாவன்."

III

"ரஜ: கீர்ணபகம் நார்யா த்யாயன்யோயுத மாஜபேத்;
ஸ கவித்வேனரம் யேண ஜனுன் மோஹயதி த்ருவம்,"

(மஹோததி)

(இதன் பொருள்) "மாத விடாயான பெண்ணின் இரத்தத்தோடு கூடிய யோனியை நினைத்துக் கொண்டு பதினாயிரம் மந்திர உருப் போடுகிறவன் மதுரமான செய்யுட்களால் உலகத்தை மயக்குவன்."

IV

"பீத்வா பீத்வா புன: பீத்வா யாவத்பததி பூதலே;
உத்தாயச புன: பீத்வா புனர் ஜன்ம நவித்யதே"

—(மஹா நிர்வாண தந்திரம்)

(இதன் பொருள்) "கள்ளைக் குடித்துக் குடித்து மெய்ம் மறந்து தரையில் விழுமளவும் குடிக்கவேண்டும். வெறி தெளிந்தபின் எழுந்து மறுபடியும் குடிக்க வேண்டும். அப்படிச் செய்யும் ஒருவனுக்கு மறுபடியும் பிறவியில்லை."

V

"சிறிதளவு உண்ணப்படும் கள் மதி நுட்பத்தைத்
தருவதாகும்" (சுக்ரநீதி, அத். 1. சு: 109—111)

VI

"மாத்ரு யோனிம் பரித்யஜ்ய விஹரேத்ஸர்வ யோனிஷு
வேத சாஸ்திர புராணானி ஸாமான்ய கனிகா இவ:
ஏகைவ சாம்பவீ முத்ரா குப்தா குலவதூரிவ:"

(ருத்ரயாமள தந்திரம்)

(இதன் பொருள்) "பெற்ற தாய் ஒருத்தி நீங்கலாக ஏனைய பெண்கள் எல்லாரையும் புணரலாம். வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் முதலியவைகளை விலைமகளைப் போலவும், இந்தச் சாம்பவீ முத்திரை (மேலே சொல்லப்பட்ட அநுட்டான முறை) ஒன்று மட்டும் குலமகளைப் போலக் கருத வேண்டும்."

VII

"ரஜஸ்வாலா புஷ்கரம் தீர்த்தம் சாண்டலீ துஸ்வயம் காசி
சர்மகாரீ ப்ரயாகாஸ்யாத் ரஜகீ மதுராமதா
அயோத்யா புக்கஸீ ப்ரோக்தா." (ருத்ரயாமள தந்திரம்)

(இதன் பொருள்) "திட்டுள்ள (மாத விடாயான) பெண்ணைப் புணருதலால் புட்கர திர்த்தத்தில் முழுகிய பலனும், சண்டாள (புலைச்சி)ப் பெண்ணைப் புணர்தலால் காசியாத்திரைப் பலனும் கங்கையில் முழுகிய பலனும், சக்கிலிச்சியைப் புணர்தலால் மதுரையைத் தரிசித்த பலனும், குறத்தியைப் புணர்தலால் அயோத்தியைத் தரிசித்த பலனும் முறையே உண்டாகும்"

குறிப்பு—(இவைகளுக்கு வேறாக அயோத்தி, மதுரை, மாயா, காசி முதலான புண்ணிய தலங்கள் இருப்பதாகக் கூறுவது பகுத்தறிவற்ற பாமரர்களின் கூற்றாகையால் நம்பத் தகுந்ததன்று என்பது இவர்களின் (ஆரியர்களின்) கொள்கை.

எனவே, இன்னும் இவைபோன்ற வாயினாற் சொல்லுதற்கும், செவியினாற் கேட்பதற்கும், மனத்தினால் நினைப்பதற்கும் தகாத அருவருப்பான அழுக்குரைகள் ஆயிரக் கணக்கானவை ஆரியர் வேதங்களில் காணப்படுகின்றன. அவை தம்மை எல்லாம் ஈண்டெடுத்துக் காட்டுவதாயின் ஏடு இடந்தராது. அன்றியும் கள்ளஉள்ள மிருக்கக் கடந்த ஞானம் பேசுங் கயவராகிய ஆரியரின் புரட்டுக்களை இன்னும் விரித்துக்கொண்டு போனால்,

சீரிய நற்றமிழ்க் கொள்கைகளை விட்டு
ஆரியப் புரட் டளந்தது போதும் பராபரமே.

டின்று 'செந்தமிழ்ச் செல்வி' நேயர் பலருக்கு உவர்ப்பு ஏற்படலாம் என்ற அச்சத்தால் இவ்வளவில் இவ்வுரையை முடிக்க நேர்ந்தது. செல்வி நேயருட் பலர் உயர்வான பொருள்களிற் கருத்தைச் செலுத்துகிறவர்களாகையால் இத்தகைய இழி மொழிகளை இகழ்ந்து தள்ளுவார்களாயினும், திருக்குறள் போன்ற செந்தமிழ் நூல்களின் உயர்வையும், வெறியாட்டு வேள்விகளையே செங்கரும்பெனத் தித்திக்க விளக்கி விரிக்கும் ஆரிய வேதங்களின் இழிதன்மையையும் அவர்கள் எளிதி லறிந்து உண்மையை உணரலாம் என்ற எண்ணத்துடனேயே ஈண்டுச் சில எடுத்துக்காட்ட நேர்ந்தது.

இனி, 'நூல் அமைப்பு' என்ற கடைசியான உபதலைப் பின் கீழ் 'முனிவர்கள் எத்தகைய மனநிலையினின்று உபநிட தங்களை உரைத்தருளினார்களோ அத்தகைய மன நிலையி னின்றே திருக்குறளும் உதிப்பதாயிற்று என்று நிச்சயிப்பதற் கில்லை. மாற்றி அமைப்பதற்கு இடந்தராத அருள் மொழி யன்று முப்பானூல். சிந்தித்துத் திட்டம்போட்டுக் கொண்டு இயற்றிய நூல் அது' என்றும், 'வீடுபேறு என்னும் முடிவான பொருளில் தமது திருவுளத்தைத் தெய்வப் புலவர் செலுத் தாததன் காரணம் நமக்கு விளங்கவில்லை' என்றும் கூறி அவ் வாசிரியப் பெருந்தகை தமது புல்லிய அறிவின் முடிபுகளோடு "திருக்குறளும் உபநிடதங்களும்" என்ற விரிவுரையை எழுதி முடித்திருக்கிறார்.


சில உபநிடதங்களை இயற்றிய ஆரிய முனிவர்களின் குறுகிய மன நிலையினின்று தமிழ்முனிவராகிய திருவள்ளுவரும் தமது நூலை இயற்றியிருப்பரேல், அது (குறள்) இன்றைக்கு உலகம் போற்றும் ஒரு உண்மை நூலாய் இல்லாது, ஆரிய உப நிடதங்கள் போலவே உயிரிழந்த நூலாயன்றோ அறிஞர்கள் கருதி ஒதுக்கியிருப்பார்கள் என்பதை அவ்வாசிரியரும் அவர் போன்றவர்களும் கருத்திற் பதித்துக் கொள்வார்களாக. இனித் திருக்குறள் மாற்றி அமைப்பதற்கு இடந்தராத அருள் மொழியன்று என்னுங் கூற்றுக்கு, "The Kural cannot be improved nor its plan made more perfect. It is a perfect mosaic in itself. The slightest change in the size, shape or colour of a single stone would mar the beauty of the whole." அதாவது, "குறளைத் திருத்தஞ் செய்ய முயல்வது முடியாததொன்றும் அதன் அமைப்பைச் செம்மைப் படுத்துவ தென்பதும் அப்படியே. அஃது ஓர் ஒப்பற்ற இழைப்புச் சித்திர மாகும். அதில் இழைக்கப்பட்டுள்ள மணிகளில் ஏதாவது ஒன்றின் பருமனையோ, வடிவையோ, இன்றேல் நிறத்தையோ

ஒருசிறிது மாற்றினும் அழகனைத்தும் சிதைந்து விடும்'' என்று (Rev. Dr. J. Lazarus) டாக்டர் ஜெ. லாசரஸ் என்ற பேரறிஞரும், எந்தக் குறட்பாவிலும் யாதமொரு சிறிய சொல்லுங் கூட 'நின்று பயனின்மை' என்னுங் குற்றத்திற்கு உட்படாததாயுள்ளது. "பல குறட்பாக்களில் ஒரு சிறிய சொல் ஆணிச் சொல்லாய் அமைந்திருத்தலினால் அதனை நீக்கிவிட்டால் அவற்றின் பொருள் முற்றிலும் மாறிவிடுந் தன்மையாயுள்ளது'' என்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவரும், 'செந்தமிழ்ச்செல்வி'யின் தலைமை ஆசிரியருமான உயர்திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B.A , அவர்களும் இன்னும் பேரறிஞர்பலரும் *திருக்குறளானது அதன் இயற்கை அமைப்பினின்றும் ஒருசிறிதும் மாற்ற இடந்தராத அருணூல் என்று அதனை உள்ளவாறு உணர்ந்து உரைத்திருப்பவும், அவ்வாசிரியருக்கு மட்டும் அது (குறள்) மாற்றி அமைக்கக்கூடியதென்று தோன்றுமானால், அதை அவர் அங்ஙனம் செய்து உலகுக்குப் பயன்படுத்துவதை விட்டு, அதை அப்படிச் செய்யலாம், இதை இப்படிச் செய்ய முடியாதென்று வறிதே வாய்வேதாந்தம் பேசுவதும், தம் அறியாமைகளைப் பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டு இகழுரைகட்கு ஆளாவதும், பத்திரிகைகளின் மதிப்பைக் குறைப்பதும் அழகன்று.

இனி, வீடுபேறு என்னும் முடிவான பொருளைத் திருவள்ளுவர் கூறவில்லை என்னும் பொய்யுரைக்கும், மெய்யுரையாகச் சுருக்கமான விடையொன்று இக்கட்டுரைக்கு முடிவு காண்போம். அஃதாவது, அறம், பொருள், இன்பம், வீடு முதலிய இந்நாற்பொருளின் இயல்புகளையும் மக்கட் பரப்புக்கு அக்காலத்திலேயே அறியும் வண்ணம் சொல்லப்பட்ட பழந் தமிழ் வேதங்களானவை ஓதி உணர்தற்கு இல்லாது வெள்ளப் பெருக்கில் மறைந்து போனமையின், திருவள்ளுவர் அவற்றை உலகத்தார் எளிதிலுணரும்படி, அந்நான்கு பொருள்களின் இயல்புகளையும் அழுத்தந் திருத்தமாகத் தெளிவுபடத் திருக்குறளின் வாயிலாகக் கூறியிருப்பவும், அதனை அவ்வாசிரியர் ஒரு தக்க ஆசிரியரிடமிருந்து என் முறையாகக் கற்றுத் தெரிந்து கொள்ளவில்லையோ, அது நமக்கும் விளங்கவில்லை.

---

* குறிப்பு: திருக்குறளின் அருமை பெருமைகளை நந்நாட்டுப் புலவர் பாராட்டுரைகளாலும் மேனாட்டுப் புலவர் புகழுரைகளாலும் அறிந்துணர விரும்புவோர் ''திருவள்ளுவர் நினைவுமலர்'' விலை ரூ. 0-6-0 என்ற அழகிய வெளியீட்டைப்பெற்றுக் கற்றறிக. (எம்மிடம் கிடைக்கும்.



சைவசித்தாந்தம் கற்றுணர்ந்த சிவநேயர்களுடைய ஆராய்ச்சிக்கு உரியனவாயுள்ள சைவசித்தாந்த உண்மைகள்

I

சைவசித்தாந்த ஆராய்ச்சி ஒப்பற்றது. அது படிமுறையில் விளங்கும் அறிவுவிளக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுளது.

1. தத்துவ அமைப்பு. 2. தத்துவ இயக்கம். 3. ஆறு அத்துவாக்கள் அமைப்பு	இவை ஆன்மாவினது கருவி அறிவு படிமுறையில் விளங்கிப் பெருகி அருள் அறிவிலே சேர்தற்கு ஏற்றனவாயுள்ளன.

4. கருவி அறிவும் (பாச ஞானமும்) அதன் வளர்ச்சியும்.

5. கருவி அறிவு பெருகிப் பெருகி முடிவில் ஆன்மாவை அருள் அறிவிற் செலுத்துவதாயுள்ளது.

6. சனற்குமார மாமுனிவர் மரபினுள்ள மெய்கண்டதேவர் முதலிய சைவப் பெரியார்கள் கூறிய உண்மைகளெல்லாம் அவர்கள் அருள் அறிவில் வெளிப்பட்ட உண்மைகள். அவர்கள் இறைவனே உண்மை என்று கூறுகிறார்கள்.

7. சைவசித்தாந்த ஆராய்ச்சிக்கு ஆன்ம சிற்சத்தியே பிரமாணம். தார்க்கிகர் கூறுகிற காண்டல் கருதல் உரைப் பிரமாணங்கள் அச்சிற்சத்திக்குக் கருவிகளாயுள்ளன.

8. மேலை நாட்டு ஆரிய அறிஞர் ஆராய்ச்சிக் குறைபாடுகள். உதாரணங்கள்:—

சைவசித்தாந்தமும் சைவசமயமும் பிரிக்க முடியாததாயொன்றுபட்டுள்ளன. சைவசித்தாந்தத்தில் உளநூலறிவும் தத்துவ நூலறிவும் சமய நூலறிவும் அடங்கியுள்ளன. தத்துவ நூலைச் சமயத்திலிருந்து பிரித்து வேறாகக்கூறும் மேலை நாட்டு முறை சமயவிளக்கக் குறைபாடுடையது.

II

1. சைவசித்தாந்த உண்மைகளைக் கூறுகிற சைவ சமயமானது உலோகாயத சமய முன்னிட்ட பிறசமயங்களை யெல்லாம் தனக்கு அங்கங்களாக வுடையது. இதற்குக் காரணம், சைவ சமயக்கடவுள், முடிந்தநிலையில் சமயங்களை யெல்லாம் கடந்த அதீதநிலையில் உரைப்படுவதாயுள்ளவன். சைவ சமயமானது சமயாதிதப் பழம்பொருளை மன்றுள் வெளியிலே காட்டுவதாயுள்ளது.

2. சைவ சமயத்தில் மக்களுக்குள் வெறுப்பையும் பகைமையையும் உண்டுபண்ணுகிற சமயப்பிணக்கு, சாதிப்பிணக்கு, குலப்பிணக்கு, நாட்டுப்பிணக்கு, நிறப்பிணக்கு முதலிய பிணக்குகளில்லை. இப்பிணக்குக ளில்லாமைக்குக் காரணம். இப்பிணக்குகளில்லாமை பலதிறப்பட்டு உலகில் வாழும் எல்லா மக்களையும் வேற்றுமை உணர்ச்சியின்றி அன்போடு கூடிய ஒற்றுமையுணர்ச்சியுடன் வாழச் செய்வதாயுள்ளது.

3. சகச மலமாகிய ஆணவமலமும் ஆகந்துவ மலங்களாகிய மாயை கன்மமலங்களும்.

4. ஆன்மாக்கள் மலக்கட்டினின்று நீங்கி பேரின்பமடைவதற்கு இறைவன் செய்யும் ஐந்தொழில்கள்.

திரோதான சத்தியால் செய்யப்படும் மறைப்புத் தொழிலும் அதிலடங்குவனவாகிய படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களும் திரோதான சத்தியால் பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு அருளல் ஆகிய தொழிலும்.

5. சுத்தமாயையிலே சிவபெருமான் ஐந்தொழில்களை நேராய் சதாசிவமூர்த்தியோடு அங்கி அங்கம் நிலையினின்று ஆன்மாக்களின் பொருட்டுச் செய்கின்றான்; அசுத்தமாயையிலே சிவபெருமான் ஐந்தொழில்களை அநந்த தேவரை அதிட்டித்து நின்று ஆன்மாக்களின் பொருட்டுச் செய்கின்றான்; பிரகிருதிமாயையிலே சிவபெருமான் ஐந்தொழில்களை அநந்த தேவர்வாயிலாக சிகண்டருத்திரரை அதிட்டித்துநின்றும் அநந்த தேவர் சிகண்ட தேவர் இவர்கள் வாயிலாக உருத்திரன் மால் நான்முகன் ஆகியமும்மூர்த்திகளை அதிட்டித்து நின்றும் ஆன்மாக்களின் பொருட்டுச் செய்கின்றான்.

6. இறைவனது பொது இயல் சிறப்பியல் என்னும் பாகுபாடு. இது பிறசமயங்களிலும் பிறதத்துவக் கொள்கைகளிலுமில்லை. (சத்து) மெய் (அசத்து) பொய் என்னும் பாகுபாடு

பாசம் காரிய நிலையில் அசத்தும் காரண நிலையில் சத்தும் என்பது. சதசத்து ஆகிய ஆன்மா இறைவனைச் சார்ந்தபொழுது சத்து என்பது. இறைவன் எவ்வாற்றானும் சத்து என்பது.

7. சைவ சமயங்கூறுகிற உருவ வழிபாடே இறைவனுக்கு உருவ உலகில் வாழுமக்களாற் செய்யத்தகும் இயல்பு முறையான வழிபாடு ஆகும். அருவம், அருஉருவம், உருவம் இல்லாத இறைவன் அம்மூன்றினையும் ஐந்தொழில் செய்யும் பொருட்டுக் கொள்கின்றான் என்பது.

8. கடவுள் உண்மைக்குச் சைவ சமயத்தில் புறச்சான்றுகள் அகச்சான்றுகள் நமது தென்இந்தியா நாட்டில் பொது அறிவு (Common sense) உடைய எவரும் மறுக்க முடியாதபடி அமைந்திருத்தல் போல வைணவ சமயம் ஒழிந்தபிற கடவுட் கொள்கைச் சமயங்களினும பிற விடங்களினுமில்லை.

9. அஞ்செழுத்து உண்மை. அஞ்செழுத்தில் பதிபசு பாச உண்மைகளெல்லாம் அடங்கியிருக்கின்றன என்பது. தூல அஞ்செழுத்து, சூக்கும அஞ்செழுத்து, அதிசூக்கும அஞ்செழுத்து வேறுபாடுகளும் அவை ஒவ்வொன்றையும் ஓதுமுறையும் அதனாலுண்டாகும் பயனும்.

10. பிரணவ மந்திரம் அதன் பகுதி தொகுதி வேறுபாடுகளும் அதனை ஓதும் முறையும்.

III

இச்சை அறிவு செயல்களாலேயே உலக வாழ்வில் எல்லா நிகழ்ச்சிகளும் நிகழ்கின்றன என்பது,

1. ஆன்மா மலத்தாற் றடைப்பட்ட இச்சை, அறிவு, செயல்களின் சொரூபன். இறைவன் மலத்தாற் றடைப்படாத வியாபகமான இச்சை, அறிவு, செயல்களின் சொரூபன்.

2. உலக வாழ்வில் இச்சை, அறிவு, செயல்களின் திருந்தங்களே ஆன்மாவின் வளர்ச்சி (Soul evolution)' ஆகும்.

3. ஆன்மாவின் வளர்ச்சிக்காகவே ஆன்மாவுக்கு உலக வாழ்வும் அவ்வுலகவாழ்வுக்கு வேண்டப்படும் மாயையினாலாகிய தனுகரணபுவன போகங்களும் அப்போகங்களை நியமித்தற்கு ஏதுக்களாகிய பல பிறப்புண்மையும் வினைச்சட்டமும் அமைவனவாயின. இங்ஙனம் சைவ சமயமே உயிர் வளர்ச்சியுமாற்குக் கருவியாக உருவ வளர்ச்சியும் கூறுகின்றது. மேல்நாட்டுக் கலைஅறிஞர் உருவவளர்ச்சி ஒன்றே கூறுகின்றனர்.

4. இச்சை, அறிவு, செயல்களே உலகபோகத்துக்கு ஏதுக்களாயுள்ளன. முற்றிலும் திருந்திய இச்சை அறிவுசெயல்களே வீட்டின்பத்துக்கும் ஏதுக்களாயுள்ளன.

5. இச்சை, அறிவு, செயல்கள் மூன்றும் அருளிலிருந்து பிரிந்து தோன்றி அவ்வருளிலே ஒடுங்குவதாயுள்ளன.

6. உலக வாழ்வில் விளங்கும் இச்சை அறிவு செயல்களில் ஒன்றுக்கொன்று உளதாகிய தொடர்புகளும் அவற்றின் நேர்மையான அளவுகளும்.

7. இச்சையும் செயலும் அறிவின் விசேடங்கள் என்பது. இச்சை அறிவால் திருந்தி அறிவாதலும், அறிவு திருந்தி அன்பாதலும் அறிவினாலும் அன்பினாலும் செயலுண்டாதலும்.

IV

சைவசித்தாந்த சுத்தாத்துவிதம் ஒப்பற்றதாயுள்ளது.

1. பரஞானத்தை (மெய்யுணர்வைத்) தாரகமாகக் கொண்டு மெய்கண்டதேவர் திருமூலமுனிவர் முதலிய சைவப் பெரியார்கள் கூறுகிற சுத்தாத்துவிதமானது அபரஞானத்தை (கருவி அறிவைத்) தாரகமாகக் கொண்டு விளங்கும் கேவலாத்துவிதமும் துவிதமும் விசிட்டாத்துவிதமும் தன் கீழடங்கி நிற்க, அவை மூன்றும் ஒருங்கே சேர்ந்த நிலைக்குமே மேற்பட்டு விளங்குவதாயுள்ளது.

2. ஆண்டான் அடிமைத் தொடர்பு.

3. தற்பதம், தொம்பதம், அசிபதம் ஆகிய மகாவாக்கிய உண்மைகள்.

V

சைவசமய ஒழுக்கம் ஒப்பற்றது.

சைவசமய ஒழுக்கம் இம்மை மறுமை வாழ்வுகளை நேர்மை செய்து முடிவில் பேரின்ப வாழ்விலே செலுத்துகின்ற குறிக்கோளையுடையது.

1. சைவ சமய ஒழுக்கமானது அன்பை ஆதாரமாகக் கொண்டு எல்லா உயிர்களுக்கும் நலந்தரும் வலியுடையது. மக்கள் ஒருவர்க்கு ஒருவர் செய்யும் நலமும் தீமையும் இறைவனுக்குச் செய்யப்படுவதாகக் கருதப்படுகின்றது. "எவ்வுயிரு நீங்காதுறையு மிறை சிவனென்—றெவ்வுயிர்க்கு மன்பாயிரு" என்பது சைவசமயக் குறிக்கோள்.

(2) ஒழுக்கமே இறைவனை யடைதற்கு வழிபாடாயு மமைந்துள்ளது. ஒழுக்கமின்றிச் சமய அநுட்டானங்கள் பயனிலவாய் முடியும். ஒழுக்கம் உயிரைப் பார்க்கிலும் மேன்மையாக ஓம்பத் தக்கதாயுள்ளது.

3. இறைவனிடத்திற் செய்யப்படும் அன்பொழுக்கமும் உயிர்களிடத்திற் செய்யப்படும் அன்பொழுக்கமும் ஒரு தன்மைத்தாயுள்ளன. அவை கருத்தால் வேறுபடுவன அன்றிச் செயலால் வேறுபடுவன அல்ல.

VI

சைவசித்தாந்தம் கூறுகிற ஆட்சி முறைமை ஒப்பற்றது. மன்னன் குடிகளிடம் செய்யும் ஆட்சி முறைமை இறைவன் உயிர்களிடத்திற் செய்யும் ஆட்சி முறையைப் பின்பற்றியதா யிருத்தல் வேண்டும் என்பது.

1. மேலைநாட்டு ஆட்சி முறைமை பிழைபாடாயுள்ளது.
2. மக்கள் ஒருவருக் கொருவர் செய்யும் ஆட்சி முறைமை எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது.

VII

ஆண் பெண் தொடர்பு (Sex relation) உண்மை ஒப்பற்றது. இந்த உண்மை சைவசித்தாந்தத்திற் கூறப்படுதல் போலப் பிறசமயங்களிலாவது மேலைநாட்டுத் தத்துவ நூல்களிலாவது கூறப்படவில்லை.

1. இம்மை, மறுமை வீடு என்னும் மூவகை நற்பயன்களை அடைதற்கு ஏற்றதாயுள்ள இல்வாழ்க்கை அமைப்பு. இல்வாழ்விலிருந்தே இம்மை, மறுமை, வீடு. ஆகிய மூவகை வாழ்வுகள் நடைபெறுதற்கு இன்றி அமையாது வேண்டப்படுவதாயுள்ள அன்புபிறந்து வளர்ந்து விரிகின்றது. அன்புக் குறைவு உலகிலெங்கு மிப்பொழுது காணப்படுகின்றது.

VIII

பதிபசுபாசத் தோற்ற ஒடுக்கங்களும் ஒவ்வொன்றிலும் அவை விளங்கித் தோன்றும் வேறுபாடுகளும். உண்மையில் பாசத்துக்கே தோற்ற வொடுக்கங்களுள. ஆன்மாவுக்குச் சகல நிலையில் பாச நீக்கத்துக்காகத் தோற்ற வொடுக்கங்களுள. பதிக்குச் சுத்த மாயையில் ஆன்மாக்கள் பொருட்டு அதிட்டானமின்றி ஐந்தொழில் செய்தற்கு இலயம், போகம், அதிகாரம், நிலைகள் உபசாரமாகக் கூறப்படுகின்றன.

1. ஆன்மாவுக்கு உளவாகிய கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று காரண அவத்தைகள்.

3. ஆன்மாவுக்கு உளவாகிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து காரிய அவத்தைகள்.

IX

இறைவனது அருளைப்பற்றிக் கூறுதலில் சைவசித்தாந்தம் ஒப்பற்றது. பிறகடவுட் கொள்கைச் சமயங்கள் அருளைப் பற்றிக் கூறினும் சைவசித்தாந்தம் கூறுகிறபடி அருள் விளக்கத்தையும் அருள் விளக்க வழிகளையும் அருள் விளக்க வேறுபாடுபற்றி அறியப்படும் உண்மைகளையும் அருள் விளக்க வேறுபாடு பற்றி உண்டாகும் முத்தி வேறுபாடுகளையும் பிறவற்றையும் கூறுவன அன்று. அச்சமயங்கள் ஆணவமல உண்மையை அறியாமையே அதற்குக் காரணம். உலகம் கடவுளுடைய அருள் வெளிப்பாடு (The world is the expression of god's energy) இந்த அருளைப் புறக்கணித்துச் செல்வப் பொருளில் மிகுதியான பற்றுவைத்து மக்கள் ஒழுகுதலினாலேயே இக்கால உலகிலெங்கும் பெருந்துயருண்டாயிருக்கிறது. இத்துயர் நீங்குதற்கு மக்கள் அருளைப்பேணி ஒழுகுதலே வழியாகும்.

1. ஆன்மாவுக்குப் படிமுறையில் அருள் விளங்கும் வழிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் முறைகள் சாதனத்தாலநுட்டிக்கப்படும். இம் முறைகள் அவற்றை அநுட்டிக்கிறவர்களுக்கு பதிபசுபாச உண்மைகளை அநுபவத்தில் விளங்கச் செய்து மல நீக்கத்தையும் சிவப் பேற்றையுமளிக்கத்தக்கதாயுள்ளன.

2. அருள் விளக்கத்தால் ஆன்மாவினது அறிவு நிலையிலுண்டாவனவாகிய இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் நிலைகள். இவை பிற சமயங்களிற் கூறப்படவில்லை.

3. மல நீக்கத்தாலும் அருள் விளக்கத்தாலும் உண்டாகிற வேறுபாடுகள்பற்றி விஞ்ஞானகலர் பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களின் வேறுபாடுகள். இவை பிற சமயங்களிற் கூறப்படவில்லை.

4. ஆன்மாவினது அறிவு நிலைக்குத் தக்கவாறு உண்டாகும் முத்தி வேறுபாடுகள். பிற சமயத்தாருக்கும் அவரவர் அறிவுநிலைக்குத் தக்கவாறு முத்தி நிலைகளுண்டு. சைவ சமய முத்தி வேறுபாடுகள் பிற சமயங்களுக்கு இல்லை.

5. திருநீறு தரித்தல், அக்குமணி அணிதல் ஆகிய குறியீடுகள் இறைவனது அருளைக் குறிப்பனவாயுள்ளன என்பதை விளக்குதல்.

X

இறைவன் பேரொளி ஒருவன். இறைவன் மலங்கலவாத ஒளியன். ஆன்மா மலங் கலந்த ஒளியன்.

1. ஒளியும், உருவமும்.

2. மூவகை ஒளி: இன்பஒளி, அருள்ஒளி, பெருவெளி ஒளி. இவை ஒன்றினொன்று அடங்கும் என்பது.

3. அகஒளி, புறஒளி. ஒருவன் அகவொளி அல்லது உள்ளொளியைத் தன்னிடம் எவ்வாறு பெருக்கல் வேண்டும் என்பது.

4. ஒளியும் இருளும்.

5. நாத ஒளியும் அதன் வேறுபாடுகளும்.

6. விந்து ஒளியும் அதன் வேறுபாடுகளும். அவை தத்துவங்களில் விளங்கும் தன்மை.

7. ஒளி: ஓசை. ஒலி. இவை ஒன்றினுக் கொன்றுள்ள தொடர்பு.

8. மந்திர ஒளி பிரணவ மந்திரம்: அஞ்செழுத்து மந்திரம்.

9. சொல் ஒளி தேவாரம் முதலிய திருமுறைகள் ஓதல் எங்ஙனம் ஓதுகிறவரிடம் அருள் ஒளியைப் பெருக்கும் என்பது.

மேலே பத்துப் பகுதிகளும் ஒவ்வொரு பகுதியிலும் பல உட்பகுதிகளும் கூறப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளும் உட் பகுதிகளும் தேர்வு முறையாக (tentative method) கூறப்பட்டுள்ளன. இன்னும் இவற்றை நாம் மிகுதிப் படுத்தலாம். இவை சிறிது மாறுதலும் செய்யப்படலாம். ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு சிவ நேயர் எழுதத் தொடங்கி முடித்தால் பத்துப் பகுதிகளும் எழுதி முடிந்து விடும்: முடிந்த பின்பு அவற்றை எல்லாம் ஒன்று சேர்த்துப் புத்தகருபமாக நாம் உலகுக்குப் பயன் படும்படி வெளிப் படுத்தலாம். அல்லது பலர் ஓரிடத்தில் சேர்ந்திருந்து அனைத் தையும் எழுதி முடித்தல் வேண்டும். எவ்வாறு செய்தல் வேண்டும் என்பதுபற்றி எழுதும்படி சிவநேயர்களைக் கேட் டுக் கொள்கிறேன்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை

அறிவியற் பகுதி - Science

மின்காந்தம் (Electro—Magnet)

[திரு. N. குழந்தைவேலன், B. A. எழுதியது]

இக்காலத்தில் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் பொருள்கள் யாவற்றிலும் மிகச் சிறந்தது மின்காந்தமே. கம்பியில்லாத் தந்தி, ஒலிப்பதிவு செய்யும் கருவி முதலியவற்றிற்கு இஃது இன்றியமையாதது ஆகும். இவ் அரிய மின்காந்தமில்லாவிடில் நமது மின்சாரப் பொறிகள் ஒரு வேலைக்கும் உதவாமற் போய்விடும்.

மின்காந்தம் என்பது யாது? ஓர் உருக்குத் துண்டைக் குதிரைலாடத்தின் வடிவமாக அமைத்து அதில் காந்தத்தைத் தேய்ப்பதால் அதற்கு இரும்புத் துகள்களை இழுக்கும் ஆற்றல் உண்டாகின்றது. ஆயினும் இத்தகைய காந்தம் தொழில் முறையிற் சிறிதும் பயன் தருவதன்று. ஏனெனில் அஃது உருக்கினால் செய்யப்பட்டிருப்பதால் எப்பொழுதும் காந்தமுடையதாகவே இருக்கின்றது. இரும்பில் வேண்டும்போது காந்தத்தை ஏற்றவும் மற்ற வேளைகளில் அதனை அகற்றவும் அறிஞர் பலர் வழிதேடினர். மைக்கேல் பாரடே (Michael Faraday) என்னும் பேரறிஞர் மின்சார ஆற்றலின் உதவியால் உருக்கு அல்லாத ஏனைய இரும்புத்துண்டுகளில் நினைத்தபோது காந்தத்தை உண்டாக்கவோ அல்லது அதனைப் போக்கவோ முடியும் என்பதைக் கண்டுபிடித்தார். இதற்குப் பின்னரே காந்தத்தின் அருமை மக்களுக்கு நன்கு தெரிந்தது.

ஓர் இரும்புத்துண்டின்மேல் தாமிரக்கம்பியைச் சுற்றி அக்கம்பியின் வழியாய் மின்சாரத்தைப் பாய்ச்சினால் உள்ளே இருக்கும் இரும்பில் காந்தம் உண்டாகிறது. மின்சார ஓட்டத்தை நிறுத்தியதும் இரும்பில் உண்டான காந்தம் சிறிதும் இல்லாமல் போய்விடுகிறது.

மணியடிக்கும் கருவியில் (Electric Bell) வைக்கப்பட்டிருக்கும் மின்காந்தம் மிகச்சிறியது. பொத்தானை விரலால் அழுத்தியதும் இரும்பில் மின்சாரம் பாய்கின்றது. உடனே அது காந்தமாகி அருகிலுள்ள மற்றோர் இரும்புத்துண்டை இழுத்து மணி அடிக்கச் செய்கின்றது. விரலை எடுத்தவுடன் மின்சார ஓட்டம் நின்றுவிடும். இதனால் இரும்பிலுள்ள காந்தமும் போய் மணி ஓசையும் நின்று விடுகின்றது.

இச்சிறிய மின்காந்தத்திலுள்ள நுட்பங்களை ஆராய்ந்து இதைப்போலவே பெரிய காந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள இரும்புக் குண்டுகளை எளிதில் தூக்கும் ஆற்றல் உடையனவாக இருக்கின்றன.

சற்றேறக்குறைய 6 அடி குறுக்களவு உள்ள மின்காந்தங்கள் இரும்புத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றன. இப்பெரிய காந்தம் ஒவ்வொன்றும் ஒரே வேளையில் 30 அல்லது 40 டன் எடையுள்ள சுமைகளைத் தூக்குகின்றன. தூக்க வேண்டிய பொருள்களைச் சங்கிலிபோட்டுக் கட்டவேண்டியதில்லை. தூக்கும்பொழுது பிடித்துக்கொள்வதற்குக் கொக்கியும் வேண்டுவதில்லை. மின்சாரப் பொத்தானைத் தட்டிய அளவில் அக்காந்தம் மலைபோன்ற இரும்புகளையும் ஒரு குண்டூசியை எடுப்பதுபோன்று மிகவும் எளிதாய்த் தூக்கிவிடுகின்றது. இஃது என்ன விந்தை!

பெரிய தொழிற்சாலைகளில் தேய்ந்து கெட்டுப்போன பழைய நீராவிப் பொறிகளை உடைத்துத் தூளாக்கி அந்த இரும்பை மீண்டும் உருக்கிப் புதிய பொறிகள் செய்வார்கள். சில ஆண்டுகளுக்கு முன் இவ்வேலை மிகவும் கடுமையானதாக இருந்தது. ஏனெனில் இப்பொறிகளை எளிதில் உடைக்க முடிவதில்லை. ஆனால் இக்காலத்தில் மின்காந்தத்தின் உதவியால் இவ்வேலை நொடிப்பொழுதில் செய்யப்படுகின்றது.

மின்காந்தத்தின் உதவியால் 6-டன் எடையுள்ள ஒரு பெரிய இரும்புக் குண்டை உயரத்திற்குக் கொண்டுபோய் அங்கிருந்து கீழே இருக்கும் பொருள்களின்மேல் விழும்படி செய்வார்கள். இங்ஙனமாக அப்பொருள்கள் தூளாக்கப்படுகின்றன. மின்சாரப் பொத்தானைத் திருகியவுடன் மின்காந்தம் இரும்புக் குண்டை இறுகப் பிடித்துக்கொள்ளும். பின்னர் மின்காந்தம் மேலே உயர்த்தப்படும்பொழுது இரும்புக் குண்டும் அதனோடு செல்கின்றது. மேலே சென்றதும் மின்சார ஓட்டம் நிறுத்தப்படும். இதனால் மின்காந்தம் தன் ஆற்றலை இழந்து தான் கவ்விக் கொண்டிருக்கும் இரும்புக் குண்டை நழுவவிடுகின்றது. அக்குண்டு இடிவிழுந்தாற்போன்று ஊத்த ஓசையுடன் கீழே குவித்திருக்கும் பொருள்களின்மேல் விழுந்து அவற்றைத் தவிடுபொடி ஆக்கிவிடும். இவ்வேலையை வேறு வழிகளால் இவ்வளவு எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிக்க இயலாது.

மிகவும் சூடாக இருக்கும் இரும்புகளை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குத் தூக்கிச் செல்வதற்கும் மின்காந்தம்

பயன்படுகின்றது. புகைவண்டியில் பளுவான இரும்புகளை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் மின்காந்தம் உதவுகிறது.

கடலின் உள்ளே வேலைசெய்வதற்கு என்றே சில மின் காந்தங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவற்றின் உதவியால் கடலில் மூழ்கிக்கிடக்கும் கப்பல்களினுள்ள பொருள்கள் மேலே கொண்டுவரப்படுகின்றன. சில வேளைகளில் இரும்புப் பட்டறைகளில் வேலை செய்பவர்களது கண்களில் இரும்பு ஊசிகள் ஏறிவிடுவதுண்டு. மின்காந்தத்தின் உதவியால் தான் அவ் ஊசிகள் எடுக்கப்படுகின்றன. இதன்பொருட்டு மருத்துவச் சாலைகளிலும் மின்காந்தம் வைக்கப்பட்டிருக்கும்.

இவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து காந்தம் ஒரு விளையாட்டுக் கருவியாக இருந்து அரும்பெருஞ் செயல் களை இயற்றும் உயர்ந்த நிலைமைக்கு வந்திருப்பது நன்கு புலப் படும். மின்காந்தம் இல்லையேல் மின்சாரச் சாலைகளில் ஒரு வேலையும் நடைபெறாது. பேச்சுத் தந்தி (Telephone) முதலிய கருவிகள் வேலை செய்யமாட்டா. புகைவண்டி நிலையங்களி லுள்ள மின்சாரக் கைகாட்டிகள் இயங்காது நின்றுவிடும். கம்பி யில்லாத் தந்தியிலும் மணியடிக்கும் கருவியிலும் ஓசை உண்டா காது. அசைவு ஒலிப்படங்களையும் (Talkies) நாம் பார்த்து இன்புறமுடியாது. மின்காந்தம் இல்லாவிடில் உலகத்திலேயே ஒரு பெரிய குழப்பம் உண்டாய்விடும் எனக்கூறினும் மிகையா காது. எல்லாம்வல்ல இறைவன் படைப்பின் ஒவ்வொரு பகுதி யிலும் நிறைந்து நின்று அதனை இயக்குகின்றான். காந்தம் இரும்பைத் தன்னிடம் இழுத்துக்கொள்வது ஆண்டவன் உயிர் களைத் தன் வயப்படுத்துவதுபோன்று காணப்படுகின்றது.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

உ

26-12-37ல் திருச்சியில் கூடிய

மூன்றாவது சென்னை மாகாணத் தமிழர் மாநாடு

வரவேற்புத் தலைவர்

திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின்

முன்னுரை

தமிழன்பர்களே,

உங்கள் வருகை நல்வரவாகுக. நுண்மாண் நுழை புலனும், ஆண்மையும், பெருந்திறலும் வாய்ந்த திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்களே! வெல்க நின் கொற்றம்! சிறக்க நின் ஆயுள்! 'தமிழ்ப் பெண்மணிகள் கற்பின் திறனை அறியாதார்; வடவாரியரே அதனை அவர்க்குக் கற்பித்தவர்' எனுங் கருத்துப்பட ஒரு ஐயங்கார் எழுதி வெளியிட்டிருந்த தமிழ் நூல் தவறுபட்டது என்ற உண்மையை நாடறியச் செய்து தமிழ் மக்களின் மானத்தை முன்னொருகால் காத்தனை! இதுபோது முதன் மந்திரியாராக வாய்ந்திருக்கும் ஆச்சாரியார் அவர்கள் இந்திமொழியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக்கும் திட்டத்தைத் தொடங்குவே மென்பதற்குள் அதனால் விளைய விருக்கும் தீமைகளை நன்கு விளக்கி, நாடெங்கும் பரந்து, பரந்து சென்று, வீரமுழக்கம் செய்து போர்முனையின் முன்னணியில் வெற்றியுடன் முனைந்து நிற்கின்றனை! உத்தியோக வேட்கையால் விழுங்கப்பட்டு அரசியலாரின் அதிகாரப் பதவிகளில் அமர்ந்திருக்கும் தலைவர்களைப் போலாது என்றும் நிலைதிரியாது கொள்கையில் உறைந்து நின்று ஊதியங் கருதாது தமிழ்ப்பணி ஆற்றிவரும் உத்தமத் தலைவரே! தமிழ் நாட்டின் பல பகுதிகளினின்றும் தமிழ்த்தாயின் தவப் புதல்வர்களாய், தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பவர்களாய், இந்திப் படை எடுப்பினால் தமிழ்மொழிக்கும், தமிழர் நாகரிகத்திற்கும், தமிழ் மக்கட்கும் விளைய இருக்கும் கேடுகளைத் தவிர்ப்பவர்களாய், உடுக்கை இழந்தவர் கைபோல எங்கள் இடுக்கண் களையும் பெருநோக்குடன் ஈண்டுக் குழுமியிருக்கும் தமிழன்பர்களே! உங்கள் பொன்னடிகட்கு எனது வணக்கம் உரியதாகுக.

தமிழ்நாட்டின் தலைவர்கள் செல்வத்தாலும் செல்வாக்காலும் உயர்நிலையில் இருப்பவர்கள், குறுநில மன்னர்கள், நிலக்கிழவர்கள் ஆகிய பெரியோர்கள் பேரவையில் நின்று தமிழ்ச் செல்வர்களாகிய உங்களை வரவேற்று, தமது பெருவளத்தால் வசதிகள் அளித்து, ஆவனசெய்யும் கடப்பாடுடையார். அவர்கள் பகலவன் முன்ன

ஒளிமழுங்கி நிற்கும் வெண்மதிபோல செயலற்று மறைந்திருக்கின்றனர். எளியேனாகிய யான் செயற்பாலது யாது? வரவேற்புக் கழகத்தினர் அமைத்திருக்கும் வசதிகளில் நேர்ந்துள்ள குறைபாடுகளை உங்கள் நிறைகுணத்தால் போற்றுமாறு விண்ணப்பிக்கின்றேன்.

சரித காலத்திற்கும் மிகமிக முற்பட்ட காலந்தொட்டு தமிழ் மக்கள் தலைசிறந்த நாகரிகமும் கொற்றமும் வெற்றியு முடையராய் தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் குடிமக்கள்; தமிழர் நாகரிகம் என்றால் தமிழர் அருளும் இரக்கமும் உடையவர்கள் என்பதே பொருள். யவனர், அசிரியர், மூர்க்காரர், ஆரியர் ஆதிய அயலவர், எவர் வரினும் ஒரிவில்லாது அவர்களை வரவேற்று உண்டி, உறையுள் முதலியன தந்து நட்புரிமையுடன் போற்றும் பெற்றியினர். தமிழ் மக்களின் கொடைமடம், படைமடம் பற்றிய செய்திகள் புறநானூறு முதலிய நூல்களில் பரக்கக் காணலாம். தமிழ் நாட்டின் எல்லையிலே குடியேறிய ஒருசாரர், தமிழ் மக்களிடம் பொருளும் பூசனையும் பெற்று வாழ்பவராயிருந்தும், தாங்கள் பூமியில்வதியும் தேவர்களெனக் கருதித் தாமே உயர்ந்த இனத்தவரென்றும், ஏனையோரெல்லாம் இழிந்தோர் என்றும் கொள்கைபற்றி இருந்து வருகின்றனர். இவர்கள் சுய நலக் கருத்தே உடையவர். தம்மினத்தவரே உண்ணவும், தம்மவரே நூல் பயிலவும், அறநிலயங்களைப் பிறர் பொருளால் தமக்கே அமைத்துக் கொள்ளவும் வழிகளைத் தேடிக்கொள்பவர். தீண்டாமை என்னும் கருத்துக்கு உறைவிடமாயுள்ளவர். கோயில், குளம், வீதி முதலிய பொதுவிடங்களிலெல்லாம் தமக்கெனத் தனியிடம் வைத்துக் கொள்பவர். ஒருகுலத்திற் கொருநீதி மனு முதலிய மிருதிகளில் வகுத்துக் கொண்டவர். இத்தகையினர் நம்மிடையே வதிந்து தமிழ்மக்களின் வளமனைத்தையும் தம்மதாக்கிக் கொண்டாலும், நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாது, உடனிருந்தும் தனித்த பிரிவினராய், இருந்து வருவது கண்கூடு. அவர்கள் அதிவருணாசிரமியாகிய துறவி ஆகலாம், மத மாற்றத்தால் கிறித்தவர் முதலியோராகலாம், சீர்திருத்தக் காரராகலாம், கதரணியலாம், கொழுத்த தேசிய வாதியாகலாம்! அவர்கள் குருதியில் உறைந்தோடும் சுயநலத்தை விடுவதோ அரிது. தமிழ் மக்களோ வெனின் தன்னலமே அறியாதவர்—பிறர் நலத்தையே தன்னலமாப் பேணுபவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உறுதியைப் பலநூறு ஆண்டுகட்கு முன்னரே கூறியவர். யான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் எனுங்கொள்கையினர். இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தோர் எனும் இரண்டு சாதி யல்லது பிறிதொரு சாதி அறியாதவர். "சிவனெனு மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடி னவனுட னுறைக, அவனொடு கலந்துபேசுக அவனொடருகிருந் துண்ணுக," எனுங் கொள்கையில் உறைத்தவர். திருக்குறள் போன்ற அறநூலுக்குரியவர். ஊன்பயில் வேள்விகளை மறுத்தவர். இத்தகைய சீரிய கொள்கைகள் யாவையும் ஆரிய மக்களின் நீடிய தொடர்பால் யாம் மறந்துவருகின்றோம். சாதியைச் சமய மாக்கியும், சமயத்தைச் சாதி ஆக்கியும், பெண் மக்களின் உரிமைகளைக் கவர்ந்தும், சாதிப்பெயரால் மக்களை இழிவு படுத்தும்,

எண்ணிறந்த பிளவுகளையும், உண்டுபண்ணி அவற்றால் யாங்கள் அல்லற்பட, அவர்கள் இறுமாந்திருக்கின்றனர். இற்றை நாளில் மக்கள் சற்று அறிவு விளக்கம் பெற்று சமயக்கட்டுகளை ஆய்ந்து உண்மை காண முற்படுவதை அறிந்து, சமயத்துறையில் பணிசெய்வார் ஒரு பகுதியும் அரசியற் றுறையிற் பணிசெய்வார் ஒரு பகுதியும் ஆக அணிவகுத்துக்கொண்டு தாம் ஆளவும், நம்மை அடிப்படுத்தவும், முனைந்து நிற்கின்றனர். இவர்கள் சார்ந்திருக்கும் அரசியற் கட்சியில் தமிழ்மக்கள் மிகுதொகையினரா யிருந்தும், மதிநுட்பமும், தன்னம்பிக்கையும் இல்லாத காரணத்தால் பார்ப்பனர் தலைமையி லிருக்கவும், நம்மவர் அடிமை செய்யவும் நேர்ந்து விட்டது. இந்நிலை ஏற்பட்டு நாற்றைம்பது நாட்கள் கூட ஆகவில்லை. இதற்குள்ளாக ஏற்பட்டிருக்கும் குழப்பங்களையும், ஆட்சிமுறையையும் பார்க்க நெஞ்சம் நடுங்குகின்றது. விடுதலையையும், குடியாட்சியையும் விழைந்த நாடு அவற்றை முற்றுமே யிழந்து ஒரு மனிதனுடைய எதேச்சை அதிகாரத்தில் அகப்பட்டு அலங்கோலப் படுகிறது. இத்தகைய ஆட்சிமுறையால் கிளைவிருக்கும் தீங்குகளை அறிந்து, நமது பிறப்புரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கான வழிதுறைகளைத் தேடுதற்கெனவே யாம் கூடியிருக்கின்றோம்.

அரசியல் ஆட்சியைத் தமது இணையற்ற வெற்றியால் கைக்கொண்ட தலைவர்கள், செய்வன, தவிர்வன, யாவையெனத் தெரியாது, அரசியலைக் கைக்கொண்டால் தாம் செய்வேமெனக் கூறிய உறுதிகளை அறவே மறந்து, மக்களுள் எப்பகுதியினரும் வேண்டாத கருமத்தை வன்கண்மையால் நிறுவ முற்படுவது குடியாட்சி முறைக்கும், தாம் மேற்கொண்டொழுகுவதாகக் கூறிவரும் மக்கள் ஊழியத்திற்கும் முற்றும் முரண்பட்டதாகும். அயன்மொழியாகிய இந்தியைத் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளின் 1, 2, 3 பாரங்களில் கட்டாய பாடமாக்கத் துணிந்தது கொடுங்கோன்மையாகும். இத்தீய செயலால் தமிழ்நாடு எவ்வித நலனும் அடைவதற்கில்லை என்பது சரதம். மக்களின் கல்வி முன்னேற்றமும், அதனை அடிப்பட்ட பிற நலன்களும் பாழ்பட்டொழியும். வடவாரியரின் தன்னலக் கொள்கைகளாகிய இருப்பு விலங்கில் தமிழ் மக்கள் பிணிக்கப்பெற்று மீளா அடிமைகளாக்கப் பெறுவர். இத்தகைய தீமைகளை விளைக்கும் இந்திப் படையெடுப்பின் வரலாற்றினை தமிழ்மக்கள் நன்கு ஆராயவேண்டும். இந்திமொழியானது தமிழ் நாட்டில் செலவாணியற்றது; ஒருவரும், ஒருபோதும் வேண்டாதது. இந்திமொழியைத் தமிழ் நாட்டில் ஆட்சியில் கொணருவேன் என வடநாட்டினரிடம் தான் கூறிய காரணத்தால் இந்தத் திட்டத்தை வகுத்தேன் என முதன் மந்திரியார் சொல்லுகிறார். இது அரசியல் முறையா? தக்கதொரு காரணமா?

குடிமக்கள் தேர்ந்துகொள்ளும் தலைவர்கள், மக்களூழியர்களாய் மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை முடித்துத் தருவது குடியாட்சியின் சிறந்த பண்பாகும். இதற்கு முற்றும் மாறாக, மக்களுக்குத் தேவையில்லாததும், மக்கள் ஒருபோதும் வேண்டாததும், அரசியற் றலைமையைப் பெற்ற பின்னர் தானே விரும்புவதும் ஆகிய இந்தி

மொழிப் பயிற்சியை இளஞ்சிறுர்கள் மூன்றுண்டுகள் படித்தே தீர வேண்டுமெனக் கட்டாயப்படுத்துவது குடியாட்சியா? நாடெங்கும் தமிழ் மக்கள் தமிழ்ச் சங்கங்களின் வாயிலாகவும், பொதுக்கூட்டங்க ளின் வாயிலாகவும் இந்திமொழிப் பயிற்சியைக் கண்டனஞ் செய்து அனுப்பிவரும் முடிபுகளைக் கருதமாட்டேன்; குப்பைத் தொட்டியில் எறிவேனென்பது என்ன செருக்கு? கல்வித் துறையிலும், உலகியல் நிலையிலும் உயர்பதவியிலிருக்கும் பெருந் தலைவர்களாகிய திருவாளர் கள் C. R. ரெட்டி, Sir. K. V. ரெட்டி, Sir. M. கிருஷ்ணன் நாயர், T. R. வேங்கடராம சாஸ்திரியார் முதலிய பெரியோர்களும், தமிழ்ப் புலமை சான்ற மூதறிஞர்களும், நிறைமதியுள்ள பிறரும் இந்திமொழி யின் கட்டாயப் படிப்பைத் தக்க ஏதுக்களால் மறுக்க, இவற்றைச் செவியில் ஏற்காது தன்னுடன் மாறுபடுவோர் அனைவரும் அறிவிலி கள் எனக்கூறுவது என்ன மதியுடைமை? ஓட்டுரிமை பெற்ற மக்க ளிற் பெரும்பாலார் கல்வியில்லாதவர், எழுத்தறியாதவர், வறுமை யில் ஆழ்ந்தவர்; நலந் தீங்குகளைத் தாமே ஆய்ந்து தெளிவதற்கான நன்மதியில்லாதவர். வறுமையை ஒழிப்பேம், வரியைக் குறைப்பே மென ஆசைகூறியும், காந்தி அடிகள், வந்தேமாதரம் என்ற மந்திர மொழிகளால் அவர்களை மயக்கியும், யாங்கள் நியமித்த அபேட்சகர் (Candidate) கழுதையாயிருக்கலாம், கம்பமாயிருக்கலாம், நீங்கள் கொடுக்கும் வாக்கு (Vote) காங்கிரசுக்கே, என்றெல்லாம் பறை சாற்றி கல்லாமக்களின் உரிமைகளைப் பறிகொண்டு தேர்தலில் வெற்றியடைந்தனர். ஆராயாது தேரப்பட்ட அங்கத்தினர்கள் இப் பெற்றியினராகவே அமைந்து, ஒருவேலையும் செய்யாதிருக்க ரூபா 75 மாதக்கூலியும் பெருவாழ்வும் பெற்றுவிட்டனர். சட்டசபையில் மௌனிகளாய் இருந்து மந்திரிகளின் செயல்களை ஆராயாது ஆத ரிக்க வேண்டியது இவர்கள் செய்கடன். இதுதானு குடி அரசு? முதன் மந்திரியார் ஒருவரே எண்ணி விதிக்கும் கட்டளைகள் எத் தகையனவாய் இருந்தாலும் அவற்றை ஆதரிப்பதே கருமமென அடிமைவாழ்வில் அடிப்பட்டு நிற்கும் ஆட்சி முறையில் விளையும் தீமைகளை அளவிடவுங் கூடுமோ? அயல்நாட்டவரின் ஆளுகையிலிருந்து இந்திய மக்களை விடுவித்து வாக்குரிமை, செயலுரிமைகளைத் தருவோ மென உறுதிகூறி ஆட்சியைக் கைக்கொண்டவுடன், ஒரு மனிதனு டைய முறை திறம்பிய ஆளுகைக்கு அடிமை ஆக்குவது விதிதலை யாகுமா? ஆங்கிலேயர்கூட இம்முறையைக் கையாண்டதில்லையே? தமிழ் மக்களாவார் இனியும் உறங்காது, மந்திரிவகையினரின் செயல் களால் விளையும் நலந் தீங்குகளை ஆராயவும், அடிமை மனப்பான்மை யை அகற்றித் தாமே ஆராய்ந்து காணும் முடிபுகளைத் துணிவுடன் கூறவும் தலைப்பட்டு, மந்திரிவகையினரின் தளைகளை அவிழ்த்து, அடிமைவாழ்வை ஒழித்து, உயிரினுஞ் சிறந்த உரிமைகளைக் காத்துக் கொள்ள முற்படவேண்டும்.

இந்திமொழி கட்டாய பாடமாக்கப்படும் என்ற முடிபினுல் ஒரு நன்மை விளைந்திருப்பது கண்கூடு. உறங்கிக்கிடந்த தமிழ் மக்களை விழிக்கச் செய்தது. நாடெங்கும் மிகுந்த பரபரப்பையும் கிளர்ச்சி

யையும் விளைத்தது. ஊர்தோறும் எண்ணிறந்த பொதுக்கூட்டங்கள் கூடிப் பல்லாயிரக்கணக்கான கண்டனத் தீர்மானங்கள் அனுப்பச் செய்தது. தமிழ்ப் பாதுகாப்புக்கென ஆங்காங்குச் சங்கங்கள் நிறுவப் பெறுகின்றன. சாதி,சமயப் பிணக்கங்களாலும், அரசியற் கொள்கைகளாலும் பிளவுபட்ட தமிழ் மக்கள் இந்திமொழிச் சூழ்ச்சியால் நிகழவிருக்கும் கேடுகளைத் தடுத்து, தமிழ் மக்களின் உரிமைகளையும், தமிழரின் நாகரிகத்தையும், தமிழ்மொழியின் தனிச்சிறப்பையும் பேணி வளர்க்க ஒருமுகமாய் அரண்வகுத்து நிற்கின்றனர். மொழிச்செல்வமும், மொழி மதுகையும் செழித்து வளரும் மக்கட் பகுதியினரே கொற்றத்துடன் உலகெங்கும் வாழ்கின்றனர். மொழி மதுகையில்லாத மக்களினத்தவர் மிகமிகக் கீழ்நிலையில் தாழ்ந்து கிடக்கின்றனர்.

நமது நாட்டில் கல்வியறிவில்லாத மக்கள் நூற்றிற்குத் தொண்ணூறினும் மேற்பட்டிருக்கின்றனர். இவர்கள் யாவரும் கல்வியறிவுடையரானாலன்றி குடியாட்சி செம்மையுறாது என்றும், அனைவரையும் கண்ணுங் கருத்தும் உடையாராக்குதல் அரசியலார் இன்னே தொடங்கவேண்டிய கருமம் என்றும், பேரறிஞர்கள் ஒப்புகின்றனர். கல்லா மாந்தர் அனைவருக்கும் கட்டாயக் கல்வியை வழங்குதல் அரசியலாரின் முதன்மையான கடமையாயிருப்பதை அறிந்துவைத்தும் அதனைத் தொடங்காததன் பொருட்டு என்னை? மதுவிலக்கைத் தொடங்கிக் கைப்பொருளையும் இழந்திருக்கின்றோம். பாடசாலைகள் ஏற்படுத்தவோ, கட்டாயக் கல்வி வழங்கவோ வகையில்லை என்பது என்ன மதி? மக்களை அறிவுடையராக்கிக் கொள்ளவேண்டிய முதற் கருமத்தைச் செய்யத் தவிர்ந்திருப்பதன் கருத்து, அறியாமக்களை ஆட்டுமந்தைபோல் வெருட்டிச் சென்று நயவஞ்சக மொழிகளால் ஏமாற்றி மஞ்சட் பெட்டியில் வாக்குகளைப் போடச்செய்வது எளிதெனக் கருதியா? இன்றியமையாது செய்யவேண்டிய கருமத்தைச் செய்யாதொழிந்த தவறோடு நில்லாது செய்யவொண்ணாத தீச்செயலாகிய இந்திவளர்ப்பை மேற்கொண்டது மலையினும் பெரியதவறு. உயர்தரத் தொடக்கக் கல்லூரிகளில் தமிழ் வித்துவான்கள் மிக மிக அவசியமாய் வேண்டப்பட்டும் கூடாதென ஒதுக்கப் படுகின்றனர். உயர்தரப்பள்ளிகளில் இரண்டிற்குக் குறையாத புலவர்கட்கு வேலையிருந்தும் அவர்கட்கு இடந்தராது பள்ளிஇறுதி, நடுத்தரத் தேர்வு, B. A. முதலிய தேர்வு பெற்றவர்களைக் கொண்டு வித்துவான்களுக்குரிய இடங்களை நிரப்பிக் கொள்ளுகின்றனர். கல்லூரிப்பாடசாலை, உயர்தரப்பள்ளி. ஆகிய எல்லாப் பாடசாலைகளிலும் தமிழ்ப் புலவர்கட்கு, மற்ற ஆசிரியர்களுடன் ஒத்த மதிப்பும் உரிமையும் வழங்கப் படுவதில்லை. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் வடமொழியாளர் தமிழ் மொழிக்கும் உண்மைத் தமிழ்ப்புலவர்கட்கும் இழைத்துவரும் கேடுகள் கணக்கிறந்தன. இஃது இவ்வாறிருப்பதை அறிந்தும் இக்குறைபாடுகளை அகற்றமுற்படாது, இந்தியை வளர்க்கவும், இந்தி ஆசிரியர்களை நியமித்துப் பேணவும் தலைப்பட்டு, இலட்சக் கணக்கான பணங்களை இத்துறையில் செலவிடத் துணிவது மதியீனமல்லவா? இதனைச் சிந்திக்கும்போது 'ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்

பேதை, பெருஞ்செல்வ முற்றக்கடை" என்ற முதுமொழி இனை விற்கு வருகின்றது.

இந்திமொழி கட்டாய பாடமாக்குவதன் காரணம் மனதிற்குத் தோன்றியவாறெல்லாம் பேசப்பட்டு வருகின்றது. அவை பொரு ளற்ற வெற்றுரைகளெனத் தலைவராகிய மூதறிஞர்களால் தக்க ஏதுக் களுடன் மறுக்கப்பட் டிருக்கின்றன. இந்தியப் பொதுமொழி யொன்று வேண்டுமென்பது மந்திரிமார் கூறிவரும் காரணங்களுள் ஒன்று: ஒவ்வொரு மொழியினரும், தத்தம் தாய்மொழியிலே தமது கருத்தைவிளக்கும் உரிமையானது மறுக்கப்படலாகாது என்பதே எமது முடிந்த கொள்கை. பொதுமொழி வேண்டுமென வைத்துக் கொண்டாலும் பொதுமொழியாதற்குரிய சிறப்புடைய மொழி யாது? அரசியலாரின் பேரவைகளிலும், ஆட்சிக் கழகங்களிலும் வாதத்திற்கு வரும் பொருள்கள். அரசியல், பொருளியல், அறநெறி. ஆகிய அறிவு நூல்பற்றிய செய்திகளாகும். அவைபற்றிய வாதங்களை இடர்ப்பா டின்றி நிகழ்த்துதற்கு சொற்செல்வமும். தலைநூல் வழக்கும் இல்லாத இந்திமொழி ஏற்ற கருவியே அல்ல. அரசியற்கட்சிகளின் தலைமை யில் இருக்கும் மூதறிஞர்கட்குத் தேசிய உணர்ச்சியையும், நல்லறிவை யும் வளர்த்த ஆங்கிலமொழி சொற்செல்வம் நிரம்பிய இந்தியப் பொதுமொழியாய் இருந்து வருகின்றதே! அதனையே பயில்வதால் விளையுங்கேடுதான் என்னையோ? 'Government of India Act' எனும் இந்திய அரசியல் சட்டம் மாற்றப்பட்டாலன்றி ஆங்கிலமொழி தானே அரசியல் மொழியாய் இருக்கப் போகின்றது? ஆங்கில மொழியின் இன்றியமையாமையை உணர்ந்துதானே அதுவும் கட் டாய பாடமாக இருந்து தீரவேண்டுமென மந்திரி வகையினரும் உடன்பட்டிருக்கின்றனர். இந்தியப் பொதுமொழியாகவும் உலகப் பொதுமொழியாகவும் இருந்து நம்மவர்க்கு நல்லறிவை நல்கிவரும் ஆங்கிலமிருக்க, அதனோடமையாது எவராலும் வேண்டப்படாத இந்தி மொழியை வலிந்து நுழைப்பது பயனில் உழவாகும். பருவம் நிரம்பாத சிறுவர்கள் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு அயன் மொழி களைப் பயிலுவது முடியாத கருமமாகும். தமிழ்மொழி, ஆங்கில மொழி. அறிவுநூல் ஆகிய பாடங்கள் மாணவர்க்கு மிகவும் பயன்படு வன. அவற்றிற்குரிய நேரங்களினின்றும் காலத்தைத் திருடி அதனை இந்திப் பயிற்சிக்கு ஒதுக்குவதால் தமிழ்மொழிப் பயிற்சிக்குரிய நேரம் குறைந்து கேடுறுவதோ டமையாது. மாணவர்களின் கல்வி முன்னேற்றமுட கெட்டுவிடும். மனிதனுடைய உடலினின்றும் பிரிக்க முடியாது ஒன்றியிருந்து அவன் உடலைக் காத்துவரும் தோலைப் போன்றது தமிழ் மொழி என்றும், அவன் விரும்பினால் அணியவும் வெறுத்தால் கழற்றி எறியவும் கூடிய செருப்பையும், சட்டையும்போன்றது இந்திமொழி என்றும் ஒப்புக்கொள்ளும் முதன் மந்திரியார் இதனைக் கட்டாயப் படுத்துவது எதன்பொருட்டு? வட மொழி மாணவர் எழுத்தும் சொல்லும் பொதுவாயிருக்கும் இந்தியை எளிதே பயின்று கல்வியில் முன்னேறவும், கல்வித்துறையில் முன் னேற்றமடையாதும், வடமொழிப் பயிற்சி இல்லாதும் இருக்கின்ற

தமிழர்கள் இந்திச் சுமையினால் இடர்ப்பட்டு 3-வது பாரத்துக்குமேல் ஏறுது நின்றுபடவும் செய்யுங் கருத்தா? வார்தா கல்வித் திருத்தத்தைப் பார்க்க இதனினும் பெருங்கேடுகள் விளையுமோ வென அஞ்ச வேண்டியிருக்கின்றது. ஒன்று முதல் ஏழுவகுப்புவரை கற்பிக்கும் தொடக்கக் கல்லூரிகளின் செலவிற்காகும் தொகைகளை ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து விவசாயமோ, கைத்தொழிலோ செய்து தேடிக்கொள்ளவேண்டுமாம்! இது விந்தையினும் விந்தையாக இருக்கின்றது! மாணவர் படிக்க நேரமா? தொழில் செய்து உழைக்க நேரமா? பத்துப் பன்னிரண்டு வயதுப் பிள்ளைகள் செய்வினையும், கைத்திறனும் எங்ஙனம் பெறுதல் கூடும்? தொழில் செய்வதற்கான இடமும் பொருளும் பெறுவது எங்ஙனம்? பெரும்பாலார் கல்வி நிரம்பாது அறிவிலிகளாய் இருக்கச்செய்வதே இதுபோது அரசியலில் தலைமை பெற்றிருக்கும் பெரியோர்களின் கருத்துப்போலும்! உலகத்தின் முற்போக்கினையும், நாகரிக மக்களின் கலைத்திறன், பொருளாக்கம், வாணிகப் பெருக்கம் ஆகியவற்றையும், வல்லரசுகளின் மனப்பான்மையினையும், நமது வலியற்ற நிலையினையும், அறிவற்ற செயல்களையும் ஒப்புநோக்க அரசியல் ஆட்சியில் இருப்பவர் செய்யக்கருதும் கல்விநெறித் திருத்தங்கள் கல்வியைச் சீரழித்து நாட்டையும், மக்களையுங் கீழ்நிலையில் கொண்டுய்க்குமெனும் அச்சத்தை விளைக்கின்றது. பொதுமக்களின் ஆதரவால் அரசியலில் தலைமைபெற்ற ஒருசிலர் எதேச்சாதிகாரம் செய்யத் தலைப்பட்டு, தம் மனம் போனவாறெல்லாம் செய்யத் துணியும் மாண்பற்ற செயல்களுக்கு அடங்கி, மக்கள் அடிமைப்படவேண்டு மென்பது குடியாட்சியின் பண்பா?

காரணம் எதுவானாலும், புதுவதான ஆட்சிமுறை சென்னை மாகாணத்தில் நிலைத்துவிட்டது. ஆட்சியின் தலைமையிலிருக்கும் முதன்மந்திரியார் வடநாட்டினரின் நன்மதிப்பைப் பெறுவதில் கருத்துடையரா யிருக்கின்றார். தன்னை உயர்நிலையில் வைத்த பொது மக்கள் செய்கின்ற முடிபுகளைப் புறக்கணித்து உதாசீனமாகப் பேசுகின்றார். அவருடனிருந்து பணியாற்றத் தலைப்பட்டிருக்கும் மந்திரிகளோ முதன் மந்திரியாரின் குறிவழிநின்று குற்றேவல் செய்வதே தமது கடனெனக் கருதி இருக்கின்றனர். இம்மந்திரிக் கூட்டத்தினைத் தாங்கி நிற்கும் சட்டசபையினர் தாமே சிந்திக்கவோ, தம் மனச்சான்றிற்குத் தோன்றியகருத்தை வெளிப்படையாய்ப் பேசவோ வொண்ணாத மரப்பாவைகளாய் அமருங் கதியை அடைந்துவிட்டனர். சுய ஆட்சி தேடிய குடிமக்கள் முதன் மந்திரியாரின் அடிமைகள் ஆயினர். தமிழ் மக்களே! இந்த அடிமை வாழ்வினின்றும் விடுதலை உண்டா? விடுதலை பெறுவது எப்படி? தமிழர்களாகிய யாம் இனிச்செய்ய வேண்டுவது என்ன? என்றெல்லாம் கருதி முடிப்பதற்கே இங்குக் குழுமியிருக்கின்றோம்.

மக்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியும் அறிவுமே அடிப்படை. நம்மவரிற் பெரும்பாலர், மடங்கொன்றறிவகற்றுதற்கான கல்வியைத் தொடங்கவும், வேண்டிய அளவு கல்வியைப் பயிலவும் தனித்

தமிழ்க் கலாசாலைகள் நாடெங்கும் நிறுவப்படவேண்டும். அரசியலார் செலவில் தொடக்கக்கல்லூரிகள் நிறுவவும், ஆங்கெல்லாம் தாய் மொழியில் கல்விபயிலவும் கல்லாமாக்கள் அனைவரையும் கட்டாயப் படுத்துமாறு அரசியலாரைத் தூண்டவேண்டும். உயர்தரத் தமிழ்க் கல்வியேயன்றி, அறிவுக்கலை, கவின்கலை, மருத்துவம், சிற்பம், ஓவிய மாதிய தொழிற் கலைகள் அனைத்தையும் தமிழ்மொழியில் பயிலுதற் கான பல்கலைக்கழகம் ஒன்றேனும் நிறவி தமிழ்மக்களால் பேணி வளர்க்கப் பெறவேண்டும். தெலுங்கர், கன்னடர், மலையாளர், ஆகிய பெருமக்கள் தனித்தும் ஒருங்குசேர்ந்தும் தத்தம் மொழியையும், இனத்தவரையும் வளர்த்துவரும் பெற்றிமைகளை யாம் கருதினோ மில்லை. தமிழ்நாட்டின் எல்லையில் தனித்த தமிழ்மொழிக் கல்லூரி ஒன்று தானும் காண்பதற்கில்லை. இந்திமொழியின் வளர்ச்சி தமிழர் உதவியில் வளம்பெற்று வருகின்றது. பிணமொழியெனக் (Classical) குறிக்கப்படும் வடமொழியையும், பயனற்ற இந்தி மொழியையும் வளர்க்கும் பொருட்டுத் தமதுசெல்வங்களை வரையாது கொடுக்கும் தமிழ்மக்கள் தமது உயிரினுஞ் சிறந்த தாய்மொழியைப் போற்றாதிருப்பது ஏனோ?

தமிழ் வளர்ச்சியிலும், தமிழ்மக்களின் நலப்பாட்டிலும் கருத்துடைய அறிஞர்கள் ஊரெங்கும் கிளர்ச்சிசெய்து, தமிழ்மக்களை அறைகூவி எழுப்பித் தமிழ்ச்சங்கங்கள் நிறுவியும், பெருந்தொகைகள் திரட்டியும், தனித்தமிழ்க் கல்லூரிகளும், படிப்பிடங்களும், உடற் பயிற்சிக் களரிகளும், தொழில் நிலையங்களும், தமிழ்மக்களின் அறிவு செயல் ஆக்கங்களை வளர்க்கும் வசதிகளும் அமைக்க முற்பட வேண்டும். இக்கூறியவாறு பெருநோக்கங்களுடன் பணிபுரியத் தலைப் படும் சங்கங்கள் யாவும் நடுவிடத்திலுள்ள ஒரு சங்கத்துடன் இணைத் துக் கொள்ளவும், ஆக்கவேலைகளைத் தொடங்கி நடத்த ஐந்தாண்டு திட்டம் வகுத்து, தொடர்புகொண்ட சங்கங்கள்யாவும் தோட்கோப் புக்கொண்டு அதனை நிறைவேற்றவும் வேண்டும்.

இத்தகைய நற்கருமங்கள் முட்டின்றி முடிதற்கான உதவிகளைப் புரிந்து துணைநிற்கும்படி தமிழ்நாட்டுத் தலைவர்களை நெருங்கிப் பணி கொள்ளவேண்டும். பஞ்சாயத்து, சில்லா, நகராதிய கழகங்களிலும் சட்டசபைகளிலும் நம்முடைய உதவியால் பதவிகள் பெற்றிருக்கும் உறுப்பினர் தமிழ் நாட்டில் இந்திமொழிக் கட்டாய பாடமாக்கப் படாமல் தடுக்கவும், தமிழ்மொழியைக் கட்டாய பாடமாக்கவும், முனைந்து வேலைசெய்யுமாறு தூண்டவேண்டும். 1, 2, 3 பாரங்களில் இந்தியைக் கட்டாயபாடமாக அமைக்கும் பள்ளிக்கூடங்கட்கு மாண வர்களை அனுப்பாது நிறுத்தவேண்டும்; அப்பள்ளிக்கூடங்களில் அமர்ந்து கல்விபயிலமாட்டோம் எனும் நல்லுணர்ச்சியையும், உறுதிப் பாட்டையும் மாணவர்கள் அடையுமாறு முறையான நெறிகளிலெல் லாம் அவர்களைத் தெருட்டுதல்வேண்டும். இவ்வாறெல்லாம் அரும் பணிகளை ஆற்றுதற்கு செவ்வியமனமும், சிறந்த குறிக்கோளும், மன வுறுதியும், தாய்மொழிப்பற்றும் ஆள்வினை யுடைமையும் உடைய தொண்டர் படைகள் நாடெங்கும் பணிசெய்யத் தொடங்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்மக்கள் ஒருங்குசேர்ந்து தம் அறிவையும் ஆக்கத்தையும் வளர்க்கவும், தம் உரிமைகளைக் காத்துக்கொள்ளவும் தலைப்படுதல் முடிந்த நோக்கம் என்றாலும், இவை முற்றுப் பெறாது இடைமுறிக்கும் தீயகொள்கைகளும், செயல்களும் நம நாடே பரவி நிற்கின்றன. 'ஒன்றேகுலம், ஒருவனே தெய்வம்' என்ற தமிழ்மக்களின் சிறந்த கொள்கை இதுபோது வழக்கு வீழ்ந்திருக்கின்றது. நல்லபயிர்கள் தலையெடுக்க வொண்ணாது அவற்றினிடையே கொழுமையுடன் வளரும் களைகளை யொப்ப சாதிசமயக் கொள்கைகள் வீறுடன் வளர்கின்றன. அவற்றை நமநிடை பரவச் செய்து வளர்த்து ஊதியங்கொள்ளும் ஆரியக்கொள்கையினர் இத் தீய கொள்கைகளை நிலைநிறுத்தும் கருத்தையே முக்கிய நோக்காகக் கொண்டு சமயம், சமூகம், அரசியல் ஆகிய எல்லாத்துறைகளிலும் அமயத்துக்குத் தக்க வேடங்களைப் புனைந்து, தமது நயவஞ்சகங்களால் நம்மவரை ஏமாற்றியும், பகைமைகளை மூட்டியும், நம்மைப் படுகுழியில் ஆழ்த்தி, அல்லது நம்மவரைப் பொம்மைகளாக அமர்த்தி, எல்லாத்துறைகளிலும் ஆட்சியைத் தாமேபுரிந்து வருகின்றனர். கூர்த்தமதியுடன் நாம் ஆராய்ந்து இவற்றின் உண்மை காணவேண்டும். உடன்பிறந்தே உடலைக் கொல்லுகின்ற நோய்களைப்போன்று, நம்முடனிருந்து தீங்குகள் புரிந்துவரும் இனத்தவர் துணையை நாடாமலும், அவர்கட்குத் தலைமையை நல்காமலும், விழிப்புடனிருந்து தமிழ்மக்களின் ஒற்றுமை நலங்களைப்பேணி, உரிமைகளைக் காத்து, தமிழர் அறநெறியையும், தமிழர் நாகரிகத்தையும் கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும். இக்கூறிய நோக்கங்கள் நிறைவேறுதற்கு, உண்மைத் தமிழர் பல்லாயிரவரின் உழைப்பும், பெரும் பொருட் செலவும் இன்றியமையாது வேண்டப்படும். சீலமும், நோன்பும் உடைய தொண்டர்களும், நன்மதியும், வினைத்திறனும் உடைய தலைவர்களும் முற்பட்டால் இவ்வெண்ணங்கள் அனைத்தும் எளிதே நிறைவேறும்.

இந்தியப் பொதுமொழி என்ற புனை பெயரால் இந்தி எனும் வடமொழி தமிழ் நிலத்தில் நுழைந்து ஆரியக்கொள்கைகளை வளர்த்து தமிழர் நாகரிகமெனும் வான்பயிரை அழிக்காது காக்கும் பொருட்டு, தமிழர் அறநெறி ஆகிய கொழு கொம்புகளில் தமிழ் மொழியாகிய வேலியிட்டு அயலவராகிய பட்டிகள் நுழையாது அரண்செய்து தமிழ் மாகாணத்தைத் தனியே பிரித்துப் பொது நலத்தையே பேணும் தமிழரசு ஆட்சி செய்தல் வேண்டும். மெய்யன்பர்களே! மாட்சிமிக்க தலைவர் அவர்களும், நன்மதியும், மன உறுதியும்கொண்ட உண்மைத் தமிழ் மக்களாகிய நீங்களும், தமிழ் நிலத்தில் விரவியிருக்கும் தீமைகளை அகற்றவும், ஒற்றுமைப் பண்பை வளர்க்கவும், நமது சமுதாய நிலையை மேன்மேலுயர்த்தவும் இன்றியமையாத சாதனம் மற்றொன்று உளது. அது நாட்டின் நிகழ்ச்சிகளை உள்ளவாறு உணர்த்தும் 'தினசரி' எனப்பெறும் "நாளிதழ்" ஆகும். மாண்டொழிந்த 'Justice', இருப்பதா இறப்பதா என இயங்கும் "விடுதலை" போன்ற தாள்கள் மிகமிகத் தேவை. இவை நமக்கு

உயிர்நாடி போன்றவை. இவற்றின் வாழ்வில் நமது வாழ்வு; இவற்றின் தாழ்வில் நமது தாழ்வு என்று உறுதியாக மனதிற் கொள்ள வேண்டும். இதுபோது தமிழ் உலகில் உலவிவரும் தாள்கள் நமக்குக் கேடு சூழ்வன. பார்ப்பனச் சார்புடையன. தமிழரின் அரிய செயல்களைப் புறம் பழிப்பன; இச்செதி எதிர்ப்புகளும், மறுப்புகளும் கோடிக் கணக்கினவாய் நாடெங்கும் நிகழ்ந்தவர அவைமுற்றும் மறைக்கப் படுகின்றன. புத்தம் புதுவதாகவும், சின்னஞ்சிறு முயற்சிகளாகவும், பல தாள்கள் தோற்றுதல் நலமல்ல. ஒன்றேனும் வளனுறப் போற்றி வளர்க்கப்பெறவேண்டும்.

தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்ப் பணி புரிந்து எம்மைப்புரந்தருள ஈண்டுக் குழுமியிருக்குந் தமிழ்மக்களை மனதார வரவேற்கின்றேன். அமைதியுடனும், பொறுமையுடனுமிருந்து நம்முடைய நோக்கங்கள் நிறைவேறுதற்கு இன்றியமையாதனவாகிய தீர்மானங்களை நிறைவேற்றுமாறு வேண்டுகின்றேன். பிறர் செய்து முடிக்கக்கூடிய செயல்கள்பற்றிய தீர்மானங்கள் மிகச் சிலவாகவும், நாமே முயன்று முடித்தற் குரியனவாகிய தீர்மானங்கள் பெரும்பாலனவாகவும் இருத்தலே நலமென்பது எனது கருத்து. மேற்கொண்டொழுகவேண்டிய வேலைத் திட்டத்தை இன்றே அமைத்து வீழ்நாள் படாமல், தன்னம்பிக்கையும், ஊக்கமும், முயற்சியுங்கொண்டு உழைப்போமாக!

> "நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
> நிலைகலக்கிக் கீழிடுவானும், நிலையினும்
> மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
> தலையாகச் செய்வானுந் தான்."

வட ஆர்க்காடு ஜில்லா தமிழர் மகாநாடு
திருவத்திபுரம்
பிப்ரவரி, 19, 20 நாட்களில்

தற்கால அரசியல் நெருக்கடியால் நம் தமிழ் மொழிக்கேற்பட்டிருக்கும் இடையூறுகளைப் போக்குவதற்கும், தமிழ் நாட்டைத் தனி மாகாணமாகப் பிரித்தற்கும், தமிழரிடையே ஒற்றுமையினை வளர்த்தற்கும், தமிழின் கலை வளர்ச்சிக்கும் உரிய தொண்டுகளை ஆராய்ந்து மேற்கொள்ளுதற் பொருட்டு இம்மகாநாடு நடைபெறுகின்றது.

ஆதலின், ஆங்காங்குள்ள தமிழர் கழகங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்புதலும், பொருளீட்டி அனுப்புதலும் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகின்றன. தமிழன்பர்களும், தமிழ்நாட்டு மக்களும், ஒற்றுமையுடன் கூடி மகாநாட்டினைச் சிறப்

புற நடத்தி வைப்பதுடன், தங்களால் இயன்ற பொருளுதவி புரியுமாறுவேண்டப்படுகின்றார்கள்.

இம் மகா நாட்டிற்குத் தலைமைதாங்க அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு. S. S. சோமசுந்தர பாரதியார் M A., B L., அவர்கள் இசைந்துள்ளார்கள். வைக்கம் வீரர் ஈ. வே. ராமசாமிப் பெரியார் அவர்களும், செந்தமிழ்ப் புரவலர் உயர் திரு. த. வே. உமா மகேசுவரம் பிள்ளை B. A., B. L., அவர்களும், Sir. A. T. பன்னீர் செல்வம் M. L. A. அவர்களும், திரு. கே. ஏ. பி. விஸ்வநாதம் அவர்களும் விஜயம் செய்ய இசைந்துள்ளார்கள்.

நாகர் பெருமை

ஜெர்மன் பேரறிஞர் விளக்கம்

இம்மாதம் 20-ந் தேதி திருவாங்கூர் விக்டோரியா ஜூபிலி மண்டபத்தில் திவான் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் தலைமையில் ஜெர்மன் தேசத்துப் பேரறிஞர் வான் எய்க்ஸ்டெட் 'இந்தியாவில் நாகர்கள்' என்னும் அரிய பொருள் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினார்.

"முக்கியமும் பழைமையும் வாய்ந்த இந்திய தேசத்துப் பழங்குடி மக்களுள் ஒருவர் நாகர்கள். மலையாளம், திருவாங்கூர் முதலிய இடங்களிலே அவர்கள் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தார்கள். மோஹன்ஜோ—தாரோவும் மற்றும் இதனை ஒத்த நகரங்களும் அசாதாரணமான ஆச்சரியமும், கலை இன்பமும் தரக்கூடிய இடங்கள். மோஹான்ஜோ தாரோவில் இந்தியாவின் மிகமிகப் பழைய கலையின் பெருமையை விளக்கிக் காட்டும் இடங்களையும் காணுகிறார்கள். இவ்விடங்கள் அனைத்தும் முற்றும் திராவிடர்களுடையதே என்பதை நாம் ஒத்துக்கொண்டே தீரவேண்டும். மோஹன்ஜோ—தாரோ மிகவும் செழிப்புடன் விளங்கியிருந்த வெகு நீண்ட காலத்திற்குப் பின்னரே ஆரியர்கள் இவ்விடத்திற்கு வந்தார்கள். ஒருசிறு பாகங்களை ஓரளவுக்கு வட இந்தியாவில் ஆரியர்கள் கைப்பற்றினார்கள். தென்னாட்டிலுள்ள நாகர்களைக் கண்டு அஞ்சி நடுங்கியே வந்திருக்கிறார்கள். திருவாங்கூர், மலையாளம், முதலிய இப்பகுதிகளில் மிகப் பெரிய அளவுள்ள கொடிய விஷமுள்ள பாம்புகள் அளவிலாமல் இருந்தன. பரசுராமர் இந்நாட்டை ஆட்சி புரிய முயன்றார். இது கிருஸ்துபெருமான் தோன்றுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகும் சிலகாலம்சென்றபின்பு இவ்விடத்திலுள்ள நம்பூத்திரிகளின் உதயால் இவ்விடத்தில் குடியேறி, வசித்து வந்தார்களேயன்றி. அரசு புரியவில்லை. நாகர் பெருமையை இன்றும் இந்நாட்டில் காணலாம். இன்னும் திருவாங்கூர் மக்கள் "நாக பூஜை" இயற்றி வருவதை எல்லோருமே அறிவர். நாகரின் பண்டைய பெருமை இன்றும் இந்நாட்டில் செழிப்புடன் இருக்கிறது" என்று அறிஞர் எய்க்ஸ்டெட் கூறினார்.

—"நம் நாடு"

NAGA CIVILIZATION

TRIVANDRUM, Jan. 21.

Baron Eickstedt said the Nagas in fact formed one of the most important peoples of India and were linked up especially with Malabar and Travancore. The Mohenjo-Daro and similar ancient towns were places of extraordinary interest. In Mohenjo-Daro they saw the oldest Indian spirit and culture, and that culture, they had to agree, must have been only Dravidian. The Aryan invasion from the North was only at a later stage, long after the time when Mohenjo-Daro was flourishing.

In those ancient days the Naga capital, Kaveripatnam was the most beautiful city with the most beautiful population. Though the Aryans conquered and influenced people in certain parts of upper India to a certain extent, it was not easy for them to face the Nagas in the South. There were large snakes in every large numbers here. It was Parasurama who tried to conquer this country but it was impossible for him. This was about a thousand years before Christ. Later they succeeded with the help of Nambudri Brahmins in remaining in this but not in conquering this country.

The Naga influence in these parts was still evident. Even to-day Nayars worshipped snakes. In Travancore the great tradition of the Nagas still thrived. It was only in the South, especially the Malabar Coast, that the pre-Aryan tradition was still preserved.

—“ Madras Mail” (24-1-1938)

மதிப்புரை

(1) கலித்தொகை (பாலைக்கலி) மூலமும் விளக்கவுரையும் :—

திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள் பதிப்பு. 140-பக்கங்கள் விலை ரூ. 1-4-0. பன்னூற் கழகம். 6 வேங்கடாத் திரி நாயக்கன் வீதி, குயப்பேட்டை, பிரம்பூர் பாரக்ஸ், சென்னை என்ற விலாசத்திற் கிடைக்கும்.

“கற்றறிந்தா ரேத்துங் கலி” யென்னும் தலைசிறந்த அகப் பொருட் சித்திரமாகிய கலித்தொகைக்கு முன் உரைகண்டார் உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர். அவருரைதானும் மிகுதிற னுடையதாயும் வளமுடையதாயு மிருப்பினும் அக்காலத் தமிழ்நாட் டின் கல்விநிலை யிருந்ததற்கேற்ப எழுதப்பட்ட தொன்றாகலின். சீர் கெட்டு நிலைகுலைந்து நிற்கும் இற்றைநாள் நிலைக்குச் சற்றுக் கடுமை யான தொன்றாகவே கருதப்பட்டு வருகின்றது. அதனாலேயே அரும் பெறற் கருவூலமாகிய கலித்தொகைப் பெருநூலைக் கற்போர் தொகை

யும் சுருங்கியே யுள்ளது. இக்குறையை நீக்கித் தமிழ்நாடு நற்பயன் பெறும் நோக்கத்துடன் கலித்தொகையின் முதற்பகுதியாகிய பாலைக் கலிக்கு திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள் ஒரு புதிய விளக்க உரை வகுத்துள்ளார்கள். செம்பாகமாகவும் நேருக்கு நேராகவும் எழுதப்பட்டுள்ள இச்சிறந்த புத்துரை இந்நாட்டுத் தேவைக்கேற்ற உரைகளுக்கு எடுத்துக்காட்டாக இலங்குவ தொன்றெனவே கூறலாம். மூலத்திற்கண்ட சில சிக்கலான பகுதிகளுக்கு இவ்வுரையாசிரியர் மிகவுந் தெளிவுடனும் எளிமையுடனும் நலஞ்சிறக்க உரை கண்டு செல்லும் ஆற்றல் வியக்கற்பாலது. புத்துரை நலத்திற் கேற்பப் புத்தகமும் சிறந்த முறையில் கண்கவர் வனப்புடையதாய்ப் பதிப்பிக்கப்பட்டுள்ளது போற்றுதற் குரியதாம். ஆண்டிற் சிறியரேனும் அறிவில் முதியராய் விளங்கும் உரையாசிரியர் திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள் விரைவில் ஏனைய பகுதிகளுக்கும், விளக்கவுரை கண்டு வெளியிடுவாரென எதிர்பார்க்கிறோம்.

(2) விவசாயிகளின் கடன் தொல்லையும் புதிய மசோதாவும்:—

திரு. A. முத்தையா அவர்கள் எழுதியது. 139 பக்கங்கள். விலை அணா 6. குருவிலாஸ், சிங்கார முதலியார் தெரு தியாகராய நகர், சென்னை என்ற விலாசத்திற் கிடைக்கும்.

பொருளாதார ஆராய்ச்சித்துறையில் நன்கு தேர்ந்தவர் ஆசிரியர் A. முத்தையா அவர்கள். அத்தேர்ந்த அறிவை எல்லாம் பயன்படுத்தி ஆசிரியர் அவர்கள் இக்கால அரசியற் கிளர்ச்சித் தொடர்புடைய "கடன் நிவாரண மசோதா" என்ற ஒரு மசோதாவை ஆதரிப்பதே கடனாகக்கொண்டு எழுதியதே இந்நூல். இதிற்காணப்படும் சித்திரங்கள் நூற்போக்கிற் கேற்றனவாகவே அமைந்துள்ளன. சென்னை மாகாணக் காங்கிரஸ் மந்திரி சபையாரின் வேலைச் சிறப்புந் தெள்ளிதிற் புலனாகவேண்டும். என்ற உயர்ந்த தேசிய நோக்கத்துடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

இரமணோபாக்கியானம்:—முதற் பாகம். 146 பக்கங்கள். விலை ரூ. 1. ஸ்ரீ இரமண மகரிஷியவர்களின் வரலாற்றை நன்கு விளக்கும் இந்நூல் கௌமாரநாடி ஜோதிஷநிலயத் தலைவர் திரு. செ. தங்கவேல் நாடார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

ராஷ்ட்ரபதி சுபாஷ் சந்திர போஸ்:—திரு. அரு. காந்தி அண்ணாமலை அவர்கள் இயற்றியது. விலை அணா 4. இவ்வாண்டிற் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் விடுதலை வீரர் சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்.

பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள்:—23 பக்கங்கள் கொண்ட அழகிய சிறுநூல். லோகோபகாரி பத்திராசிரியர் பரலி. சு. நெல்லையப்பர் அவர்கள் பதிப்பித்தது.

நீதி வினோதக் கதைகள்:—பண்டித திரு T. K. ராமபத்திர சர்மா எழுதியது. 155 பக்கங்கள். விலை அணா 6. நல்ல நீதிகளைப் புகட்டும் 104 சிறு கதைகள் கொண்டதொரு நூல்.

இந்தி*

2,48,000 சதுர மைற் பரப்புள்ள பகுதியிலுள்ள மக்களால் அது பேசப்பட்டு வருகிறது; ஏறக்குறைய ஏழேகாற் கோடி இந்தியர்களால் அது பேசப்பட்டு வருகிறது. நாடோறும் வளர்ச்சியுற்றுப் பிறமொழிகளையும் தன் மயமாக்கிக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது இம் மொழி. இதற்குப் பல கிளை மொழிகள் உள—கஸ்ட் என்னும் பெரியார் 58 கிளை மொழிகள் உள என்று கூறுவர். குஜராத்தி, பஞ்சாபி, நேபாலீஸ் என்ற மூன்று மொழிகளையும் இதன் கிளை மொழிகள் எனக் கூறும் மொழியாராய்ச்சியாளரும் உளர். பீமீஸ் என்ற அறிஞர் இதன் கிளை மொழிகளுட் சிறந்தவை, மைதிலி, மாகதி, போஜ்புரி, கோசலி, பிருஜ் பாஷா, கன்னோசி, இராஜபுதானி, பண்டெல்கண்டி எனக் கூறுவர். ஸர் கிரியர்ஸன் என்பார் இம் மொழி கீழை இந்தி, மேலை இந்தி யென இரு பிரிவுபடும் எனக் கூறுவர்.

இந்தியை இண்டோ—ஆரிய மொழி வகையைச் சேர்ந்ததென்று கூறலாம். ஆனாலும் அதில் துரானிய மொழிச் சொற்களும் அரேபிய பாரசிக மொழிச் சொற்களும் பல கலந்துள்ளன. இந்தியைப் பொதுவாக தேவநாகரி எழுத்தில்தான் எழுதுவது வழக்கம். எழுநூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய இவ்விந்தி புராதன இந்தி யென்றும் மத்தியகால இந்தி யென்றும் இக்கால இந்தி யென்றும் அதற்குள் முப்பிரிவு பட்டுள்ளது.

---

*இது "செயிக்வாடு கீழ் நாட்டு வரிசை" யென்னும் வரிசையுள் ஒன்றாக வெளியிடப்பட்டுள்ள 'ஆசிய மொழிகளில் போர்த்துக்கேசிய ஒலிகள்" என்ற நூலினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது.

இந்தி மொழி பேசுவோர் 16 கோடி, 20 கோடி, 27 கோடி என்று மனம் போனவாறு அளக்கும் இக்கால அரசியல் வாதிகள் கூற்றெல்லாம் பொய்க் கூற்றென்பது இதனால் நன்கு விளங்கும்.



திரு. V. கனகசபைப்பிள்ளை

ஆசிரியர் "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்"

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௧] ஈசுவர—மாசி [பரல்-௭

திருவாசகம்

(௫௪௰-வது பாட்டு)

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

பதவுரை :—

நினைந்து பால் ஊட்டும் தாயினும்—[உன்னை நான் அறியாதிருக்கும் கட்டு நிலையில்; (பெத்த நிலையில்)] தனது அறிவிலா இளங் குழந்தை பசியினால் அழுதற்குமுன் தானாகவே அதற்குப் பசி உண்டாயிருக்குமென்று எண்ணித் தனது முலைப்பாலை உண் பிக்கும் தாயைப்பார்க்கிலும்

சாலப்பரிந்து—(எனக்கு உன்னை அடையும் அருள்நாட்ட முண்டாகு முன்னே அவ்வருள் நாட்டம் என்னிடம் உண்டாதல் வேண்டு மென்று எண்ணி) அன்பினால் மிக இரங்கி

பாவியேனுடைய—தீவினையாளனாகிய என்னுடைய

ஊனினை உருக்கி (உம்)—எனது உடலினுள்ளொளியாய் விளங்காது மறைந்திருக்கும் நீ உடலை உருகும்படி செய்வித்தலாலும் (உட லோடு கூடிய உயிரையும் அவ்வுயிருக்கு அறிகருவியாயிருக்கும் உள்ளத்தையும் உருகும்படி செய்வித்தலாலும்)

உள் ஒளிபெருக்கி (உம்)—அவ்வுடலினு முள்ளத்தினு முயிரினுமுள்ள மல இருளைச் சிதைக்கும் வண்ணம் அவற்றினுள் மறைந்திருக்கும் உள் ஒளியை விளக்கிப் பெருக்குதலாலும்

உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து (சொரிய)—என்றும் கெடாத பேரின்பமாகிய தேனினை நான் நுகரும்வண்ணம் நீ நினைந்து முயன்ற பொழுது

புறம் புறம் திரிந்த—(உன்னுடைய அருட்செயலை அறியாமையினாலே மறந்து நான் உலக நுகர்வுப் பொருள்களை இடங்கடோறும் நாடித்தேடி நுகர்ந்து திரியவும்) நான் அவ்வாறு உலகநுகர்வு நுகர்ந்து திரியுமிடங்கள் பலவற்றிலும் நீயும் என்னுடனாய்த் திரிந்த

செல்வமே—அருட்செல்வமே

சிவபெருமானே—சிவபெருமானே

யான் உனைத்தொடர்ந்து—உன்னை நான் அடைந்து இன்புறுதற்கு நீ என் பொருட்டு இடைவிடாது செய்துவரும் அருட்செயல்கள் இன்ன என அறியும்பருவம் வந்த வீட்டுநிலையில் (முத்தி நிலையில்) கட்டு நிலையில் நீ என்னைப் பின்தொடர்ந்து என் பின்னே சென்றதுபோல உன்னை நான் பின்தொடர்ந்து

சிக்கெனப்பிடித்தேன்—உன்னை விடாதபடி இறுகப்பற்றிப் பிடித்துக் கொண்டேன்

இனி நீ எங்கு எழுந்து அருளுவது—இங்ஙனம் நான் உன்னை இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டபின் என்னை விட்டு நீ எங்கே செல்வாய்! (நீ என்னை விட்டுப்போக முடியாது என்றபடி).

விளக்கவுரை :—

நினைந்துபால் ஊட்டும் தாயினும்—உலகில் ஒன்றினையும் வேண்டாது செய்யும் மேலான அன்புக்குத் தாய் ஒருத்தி தனது இளங்குழவியினிடத்து வைக்கும் அன்பு எவருமறியும் எடுத்துக்காட்டாயிருத்தலின், 'பாலினைநூட்டுந் தாயினும்' என்றார். இஃது ஏகதேச உவமை. உவமையை இதன் பதவுரையிலும், உவமை விளக்கும் பொருளை 'சாலப்பரிந்து' என்பதற்கு எழுதிய பதவுரையிலும் விரித்து விளக்கப்பட்டது. 'தாயினும் நல்ல சங்கரனுக் கன்பர்' என்று திருநாவுக்கரசு அடிகள் ஆதிபுராணத் திருக்குறுந்தொகை க-வது பாட்டில் இந்த உவமையைக்கூறியிருத்தல் காண்க.

சாலப்பரிந்து—சால-மிகவும்; உரிச்சொல். பரிதல்—இரங்குதல்.

பாவியேனுடைய—சிவபெருமான் தமக்குச் செய்துவந்த அருட்செயலை அறியாது மறுத்தலின், அடிகள் தம்மைப் 'பாவியேன்'

என்றார். "மறுத்தனன் யானின்னரு ளறியாமையின்" என்று நீத்தல் விண்ணப்பம் ௬-வது பாட்டிலும், "மாறு பட்டஞ் சென்னே வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள் வேறுபட்டேனே" என்று ஷ௸ ௧௧-வது பாட்டிலும் அடிகள் கூறியிருத்தல் காண்க.

ஊனினே உருக்கி (உம்)—ஊன் இங்கே உடலைக் குறிக்கின்றது; ஆகுபெயர்.

உள் ஒளி பெருக்கி (உம்)—பேரொளிப் பொருளாயிருக்கிற சிவபெருமான், உயிரின்மேல் வைத்த தனது பேரருளால் உயிர் தன்னை அறிந்து உணர்ந்து உய்யும் பொருட்டு உயிரினுடலையும் அவ்வுயிருடனாய் நின்று அறிதற்குக் கருவியாயிருக்கிற உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டெழுந்தருளி யிருக்கின்றான் என்றும், உள்ளத்தையும் உயிரையும் சிவலிங்கமாகவும் கொண்டெழுந்தருளி யிருக்கின்றான் என்றும், அன்பினால் தன்னை நினைக்கிறவர்களுடைய உள்ளத்தில் நீங்காது விளங்கித் தோன்றுகின்றான் என்றும், அங்ஙனம் அவன் உயிரிலும் உடலிலும் உள்ளத்திலும் எழுந்தருளி தூண்டிக்கொண்டே யிருத்தலால் அவ்வுயிரையும் உயிரிருக்கிற உடலையும் உள்ளத்தையும் மறைத்துக் கொண்டிருக்கிற மல இருளை நீக்கி வெளியாக்கி உயிர் தன்னை அறிந்து பேரின்பமடையும்படி செய்கின்றான் என்றும் சைவ நூல்கள் கூறுகின்றன. இந்த உண்மை இங்கே மிகச்சுருங்கிய சில சொற்களாற் கூறப்பட்டிருக்கின்றது. திருநாவுக்கரசு அடிகள் "காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக—மனமணி யிலிங்கமாக (தனித்திரு நேரிசை. தேவாரம் ௪-வது பாட்டு) என்றும், "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" (கோயில் திருக்குறுந்தொகை ௧-வது பாட்டு) என்றும், "உள்ள மாயுள்ளத்தே நின்றாய் போற்றி" (ஷ௸ திரு ஆரூர் போற்றித் திருத்தாண்டகம் ௮-வது பாட்டு) என்றும் "சிந்தைதனை மயக்கந் தீர்க்குஞ்சோதி" (கோயிற் திருத்தாண்டகம் ௧௧-வது பாட்டு,) என்றும் கூறியனவும், "உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம் தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" (திருமந்திரம் ௧௮௨௩-வது பாட்டு என்றும், "உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்" (திருமந்திரம் எ௨௫-வது பாட்டு) "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்" (திருமந்திரம் எ௨௫-வது பாட்டு) என்றும், "உண்ணின்ற சோதியுறநின்ற வோருடல்" (திருமந்திரம் ௪௪௩-வது பாட்டு) என்றும் கூறியனவும், திருமாளிகைத்தேவர் "இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு ளிருட்பிழம் பறவெறிந்து எழுந்த— சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந் தூயநற் சோதியுட் சோதி!" (திருவிசைப்பா ௨-வது பாட்டு) என்றும் கூறியனவும் காண்க. அடிகளும் "உடலிடங் கொண்டாய்" என்றும் "உடல் புகுந்தாளுளம் பிரியான்" என்றும், "உடலுமெனதுயிரும் புகுந்தொழியா வண்ணம் நிறைந்தான்" என்றும் "உள்ளத்தி

னுள்ளே ஒளிதிகழ" என்றும், "உளத்து ஒளி ஓங்கிவளர" என்றும், "உள்ளொளி உத்தமன்வந்து உளம் புகலும்" என்றும், "புன்புலால் யாக்கை புரை புரைகனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து என் என்பெலா முருக்கி" என்றும் இவ்வுண்மையைப் பிறவிடங்களிற் கூறியருளினர். 'ஊனினையுருக்கி' என்று உடல் மட்டும் கூறப்பட்டமையால் இனம்பற்றி உள்ளத்தையுருக்கி உயிரையுருக்கி என்பனவற்றிற்கும் சேர்த்துப் பதவுரையிற் பொருள் கூறப்பட்டது. உருக்கி என்பதற்குப் பின்னும் பெருக்கி என்பதற்குப் பின்னும் உம்கள் தொக்கு நிற்கின்றன. உள் ஒளி என்பது கதிரவன்; திங்கள் தீ ஆகிய புற ஒளிகளுக்கு ஒளிதந்து உதவும் அக ஒளியாகிய அருட்சத்தியின் ஒளி. புற ஒளிகள் உலகிலுள்ள புற இருளை நீக்குதல்போல இந்த அருட்சத்தியினொளி உயிரினிடத்து மலத்தினாலுளதாகிய அக இருளை நீக்குதலால் உள் ஒளி என்று அதனை அடிகள் கூறினர். இந்த உள்ளொளியைத் திருமந்திரம் கஉ௬க-வது பாட்டில் "நின்றனர் நேரிழையாளொடு நேர்பட ஒன்றிய உள்ளொளியாலே புணர்ந்தது சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய—துன்றிய ஞானங்கள் தோன்றிடும் தானே," என்று கூறியருளினர். இதனை உரையற்ற பிரணவத்தின் உள்ளொளி என்று அவர் "உரையற்ற தாரத்தி னுள்ளொளியாமே" என்று திருமந்திரம் உ௮உ-வது பாட்டிற் கூறியருளினர். இந்த உள்ளொளி பெருகுதலாலே உயிருக்கு மல இருள் நீங்கி எனது என்னும் புறப்பற்றும் நான் என்னும் அகப்பற்றும் நீங்கி மேலான அருள் அறிவு அல்லது மெய்யுணர்வு உண்டாகின்றது.

'ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி' என்ற சொற்றொடரில் உருக்கி என்ற வினையெச்சமும் பெருக்கி என்ற வினையெச்சமும் ஒன்றுக்கொன்று முறையே காரணகாரியப் பொருளில் வந்தன. உடலையும், உள்ளத்தையும், உயிரையும் உருக்குதலே உள் ஒளி பெருக்குதற்கு இடமாகியது. உடலும், உள்ளமும், உயிரும் உருகாவிட்டால் அவற்றில் அருள்ஒளி விளங்கித் தோன்றிப் பெருகாது—உடல் முதலியன உருகுதலும், உள்ளொளி விளங்கிப் பெருகுதலும் பின்வருகிற உலப்பிலா ஆனந்தம் உண்டாதற்குக் காரணமாயிருத்தலால் உடல் உருகும்படி செய்வித்தலாலும், உள்ளொளியை விளக்கிப் பெருக்குதலாலும் என்று பதவுரையிற் பொருள் கூறப்பட்டது.

உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து (சொரிய)—பேரின்பமானது உலக இன்பம்போலல்லாது என்றும் பேரா இயற்கையதாதலின் அதனை அடிகள் 'உலப்பிலா ஆனந்தத் தேன்' என்றார். உலக வழக்கில் தேனானது நோய்க்கு மருந்தாயும் நாவுக்கு மிக்க சுவையின்பந் தரத்தக்கதாயு மிருத்தல்போல, பேரின்பமானது பிறவி நோய்க்கு மருந்தாயும், முடிவிலாது நுகரப்படும் சிவபோகமுமாயிருத்தல் பற்றி 'ஆனந்தமாய தேன்' என்றார். "தேனார்ந்தூய் நின்ற சிற்றின்பம் நீயொழி" என்றார் திருமூலரும் (திரு

மந்திரம் உ0அக-வது பாட்டு). அப்பேரின்ப உணர்வானது உள்ளத்திலிருந்து ஊற்றுநீர்போல மிகுதியாய்ப் பொழிதலால் சொரிந்து என்றார். சொரிய என்பது சொரிந்து எனத்திரிந்து நின்றது. இங்ஙனம் கொள்ளாக்கால் பின்னேவருகிற 'புறம் புறம் திரிந்த' என்ற சொற்றொடரின் பொருளுக்கும், 'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்' என்ற வசனத்தின் பொருளுக்கும் மாறுபாடான பொருள் விளங்குகின்றது.

புறம் புறம் திரிந்த செல்வமே—புறம்=இடம். புறம் புறம்=இடங்கடோறும். அதாவது நான் உலகநுகர்வின் பொருட்டு எந்த எந்த விடயத்தை நாடித்தேடி எந்த எந்த இடத்துக்குச் செல்வேனோ அந்த அந்த இடத்தி லெல்லாம். அங்ஙனம் உலகவிடயங்கள் பலவற்றிலும் உயிர் செல்லுதலால் அதற்கு அமைதி (Satisfaction) உண்டாகாது ஆதலின், திரிந்த' என்றார். உயிருக்கு முடிவில் பேரின்பமடைதலிலே அமைதி உண்டாகி அதனாலே திரிதலாகிய செயலும் நிகழாமல் நிற்கின்றது. உயிர் உலக விடயங்களை நுகருதற்கு இறைவன் உயிருக்குக் காட்டு முதவியாகிய உலக விடயங்களை அறிவித்தலோடு அவற்றோடுடனாய் நின்று காணு முதவியாகிய அவற்றைப் பற்றச்செய்தலும் இன்றியமையாது வேண்டப்படுதலின் அடிகள் இறைவனைப் 'புறம்புறம் திரிந்த செல்வமே' என்றார். செல்வம் என்பது இங்கே அருளாகிய செல்வத்தைக் குறிக்கிறது. பொருட் செல்வமானது உலக இன்பத்திற்கு ஏதுவாயிருத்தல்போல இறைவனது அருட்செல்வமானது உயிர் பேரின்பம் நுகர்தற்கு ஏதுவாயிருத்தலின் (அருட்) செல்வமே', என்று இறைவனை விளித்தார்.

உயிர் இறைவனை அறியாத கட்டு நிலையில் இறைவன், உயிர் உலக விடயம் நுகருமிடங்களெல்லாஞ் சென்று அதனுடனாய் நின்று காணு முதவி செய்தலை அருணந்தி சிவாசாரியார் பாடியருளிய இருபாவிருபது கஅ-வது பாட்டில் "என்னுட்கரந் தென்பின் வந்தருளிட என்னையுந்தன்னையு மறிவின்றியற்றும்—என்னதி யானெனு மடந்தையுங் கண்டு—யாவரி யாவையு மியாங்கணுஞ் சென்று—புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்த்து—மிக்க போகம் விதியால் விளைத்திங்—கெற்பணியார் யெனைப்பிரி யாதே—ஓடிமீள்கென வாடல் பார்த்திட்டு கின்றனனெந்தை என்வழி,'' என்று கூறியிருத்தல் காண்க. இதுவரையும் உயிருக்கு அதன் கட்டுநிலையில் நிகழும் நிகழ்ச்சிகள் கூறப்பட்டன.

யான் உனைத்தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்—உயிர், இறைவனை அறியும் பருவம் வந்த வீட்டு நிலையில் உயிர் இறைவனைப் பின் தொடர்ந்து பற்றல் நிகழ்கின்றது, இந்த நிகழ்ச்சி மேலே கூறப்பட்ட இருபாவிருபது பாட்டில் கச-வது வரி முதல் உக-வது வரி வரை கூறப்பட்டிருத்தல் காண்க. இதனைத் திருநாவுக்கரசு அடிகள் தனித்திருத்தாண்டகம் ௬-வது பாட்டில் "நிற்ப தொத்து நிலையிலா நெஞ்சந்தன்னுள்—நிலாவாத புலாலுடம்பே

புகுந்து நின்ற—கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன் கனகமாமணி நிறத்தெங் கடவுளானே" என்று கூறியருளினார்.

இனி நீ எங்கு எழுந்து அருளுவது.—உண்மையில் இறைவன் உயிரோடு பிரிக்கமுடியாத வண்ணம் கலந்திருக்கிறான். கட்டு நிலையில் உயிர் இந்த உண்மையை மல மறைப்பினாலே அறியாது உலக விடயங்களைத் தொடர்ந்து நுகருகின்றது. உயிர் தனது மல மறைப்பு நீங்கி இந்த உண்மையை அறிந்து இறைவனைப் பிரியாதிருக்கின்ற உணர்வோடு பேரின்ப வாழ்வடைகின்றது. இந்த உண்மையை அடிகள் இனி நீ எங்கு எழுந்தருளுவது என்று கூறுகின்றார். இனி—நான் உனக்கும் எனக்கு முளதாகிய அத்துவிதத் தொடர்பை அறிந்தபின். இனியே என்பதிலுள்ள ஏ, அசை.

அடிகள் இந்தப்பாட்டில் முன் மூன்றுவரிகளில் உயிருக்கு அதன் கட்டு நிலையில் அது தன்னையடையும்படி இறைவன் செய்யுமருட் செயல்களையும் பின் ஒருவரியில் வீட்டு நிலையில் உயிர் இறைவனை அறிந்து செய்யுஞ் செயலையும் உலகரறியும் வண்ணம் தன் அநுபவத்தின்மேல் வைத்துக் கூறுகின்றார். அடிகளுக்குத் தமது வியாபக அருளறிவில் முன்னேயுள்ள பலபிறப்பு அநுபவ நிகழ்ச்சிகளும் விளங்கித் தோன்றுதலின் அவர் இங்ஙனங் கூறுகின்றார்.

நம்மனோர்க்கு ஒருபுடைக் கருவிஅறிவில் விளங்கித்தோன்றுதல் போல அடிகளுக்குத் தமது வியாபக அருளறிவில் அவர் தம் கடைசிப் பிறவியிலுள்ள அநுபவ உண்மைகளே விளங்கித் தோன்றுகின்றன என்றும் அவர் அவ்வநுபவ உண்மைகளை மட்டுமே திருவாசகப்பாட்டுக்களிற் கூறுகின்றார் என்றும் கூறுதல் பொருந்தாதென அறிக. ஊனினை (உடலினை) உருக்கி என்றதனால் உடலில் தூவெளி ஒளி விளங்கும் தன்மையும் உள் ஒளியைப் பெருக்குதலினால் உயிரில் அருள் ஒளி விளங்கும் தன்மையும் உலப்பிலா ஆனந்தமாயதேனினைச் சொரிய என்றதனால் இன்பவொளி விளங்கும் தன்மையும் கூறப்பட்டன.

:—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

வரலாற்றுப் பதிகு: History & Biography

விசயாலய சோழன் (கி. பி. 846—880)

[வித்துவான் கி. சாமிக்கண்ணு, அவர்கள்]

தோற்றுவாய் :—சோழர், பல்லவருடைய அதிகாரத்துக் குட்பட்ட சிற்றரசர்களாக இருந்து சோழநாட்டை ஆண்டு வந்தனர் என்ற செய்தியை முன்னதிகாரத்திற் கண்டோம். அவ்வாறு இருந்துவருங் காலத்தில் கி. பி. 846-ல் விசயாலய சோழன் என்னும் மன்னர் சோணாட் டரசாட்சியை யேற்றுக் கொண்டார்.

பல்லவ ரதிகாரத்துக்குட்பட்டிருந்த காலத்தில் பல்லவருக் குச் சோழ சிற்றரசர்கள் செலுத்திவந்த திறையை இவர் செலுத்தவில்லை. பல்லவரதிகாரத்தை ஒப்புக் கொள்ளாமல் சோழ நாட்டுக்குத் தாமே மன்னர் என்று அறிவித்தார். இவ் வாருகப் பல்லவர் அதிகாரத்தினின்றும் சோழநாட்டை மீட்ட தனிவீரனுகிய விசயாலய சோழன் முதலாக மூன்ருவது இராசேந்திர சோழதேவன் ஈருக விளங்கிய சோழர்களை வரலாற்ருசிரியர்கள் பிற்சோழர் அல்லது பிற்காலச் சோழர் என்று குறித்தல் வழக்கம்.

எனவே விசயாலய சோழன் பிற்சோழர் குடிக்குத் தலை வர் ; பிற்சோழர் குடியின் முதல் மன்னர். இவர், 'மேன்மை பொருந்திய அரியேறு' எனப் பொருள்படும் பரகேசரி என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டார். இவருக்கு வழங்கிய மறு பெயர் கோப்பரகேசரிவன்மர் என்பதாகும். இவருக்கு ஆதித் தன் என ஒரு மகன் இருந்தான்.

இறைமாட்சி :—விசயாலய சோழன் கி. பி. 846-ல் அர செய்தினர். வாலியோன் வடிவை நினைவூட்டத் தோன்றிய வையோ இவையென மருட்டும், வெள்ளை வண்ணம் தீட்டப் பெற்ற, உயர்ந்த மாளிகை பலவற்றையும், அரண்மனையையும் அழகுற இவர் தஞ்சாவூரில் கட்டினர் ; தஞ்சாவூரைத் தமது நாட்டுக்குத் தலைநகராக்கிக் கொண்டார். நித்த விநோத வள நாட்டுக் காந்தாரநாட்டில், இவர் தம் பெயரால் விசயாலயச் சருப்பேதி மங்கலம் என ஓர் ஊரை அமைத்தார். [இவ்விச யாலயச் சருப்பேதி மங்கலம், தஞ்சாவூர்ப் பெரிய கோவிலுக் குக் காரியக்காரர்களை யளிக்கக் கடமைப்பட்ட ஊர்களின் னின்ன என்று முதலாவது இராசராச சோழதேவன் அருளிய

செய்தியைத் தெரிவிக்கின்றதாக இராசராசேச்சுவ ரத்திலுள்ள கல்வெட்டில் "நித்தவிநோத வளநாட்டு........ந்தாரநாட்டு விசையாலயச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் இடக்கடவ" என்றும், அக்கோவிலுக்கு நாடோறும் நெய் அளக்க வேண்டியோரிவராவார் என அவ்வரசன் பணித்தமையைக் கூறுவதாக அக்கற்றளியிலுள்ள கல்வெட்டில் "நித்தவிநோத வளநாட்டுக் காந்தாரநாட்டு விசையாலயச் சருப்பேதி மங்கலத்து இருக்கும் இடையன் சாத்தன் கொலனும் ஆடவல்லானால் நிசதம் அளக்கக்கடவ நெய் உழக்கு", "நித்தவிநோத வளநாட்டுக் காந்தாரநாட்டு விசையாலயச் சதுர்வேதி மங்கலத்து இருக்கும் இடையன் கம்பன்" என்றும் (South Indian Inscriptions, Volume II, Part III, Number 69, Line 139; Part IV, No. 94, Iines 54 & 69) குறிக்கப்பட்டுள்ளது.]

இவர், சோழநாடு முழுவதையும் தம் அதிகாரத்துக்குட் படுத்திய பின், பல்லவனை வெல்லக் கருதினர்; திரண்ட படையுடன் வஞ்சிசூடிப் பல்லவர் தலைநகராக இருந்த கச்சிமா நகரைக் குறுகினர்; இவருடன் எதிர்த்துப் போரிட்ட நந்திவர்ம பல்லவன் என்னும் மூன்றாவது நந்திப் போத்தரையனை* எளிதில் வென்று தமக்குட்பட்டுவாழுமாறு செய்தார். இவராட்சியின் நாலாவது யாண்டின் கல்வெட்டொன்று திருவல்லிக்கேணியிலும் மற்றொன்று காஞ்சிபுரத்திலும் இருக்

---

* கி. பி. 830 முதல் 854 வரை ஆண்டவன். தொண்டை நாட்டில் ஒரு பகுதியை கைப்பற்றிப் பெண்ணையாற்றங் கரையிலுள்ள அரைசூரில், முதலாவது வரகுணபாண்டியன் (கி. பி. 800—830) வீற்றிருந்தபோது அவனை எதிர்த்துச் சென்று வந்தவாசி தாலுகாவில் உள்ள தெள்ளாறு என்னும் ஊரில் தோற்கடித்ததால் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்ற பெயர்பெற்றவன். தமிழ்க் கவிகளை மிகவும் ஆதரித்தவன். நந்திக்கலம்பகம் என்னும் பிரபந்தம் பெற்றவன். இவன்மேல் பாடப்பட்ட நந்திக் கலம்பகத்தில் "பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தி" என்று புகழப்பட்டவன். பாரத வெண்பாப் பாடியவரும் சங்கநூல்கள் பலவற்றுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவருமாகிய பாரதம்பாடிய பெருந்தேவனாரை ஆதரித்தவன்; அவரால் பாரத வெண்பா உத்யோக பருவத்தின் முதலில்,

"வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாரா ளுரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே,
டியார்வேந்த ரேற்பா டெதிர்"

என்று புகழ்ப்பட்டவன்.

கின்றன ; பதினைவது யாண்டின் கல்வெட்டிரண்டு திருவோத்தூரிலிருக்கின்றன ; பதினைந்தாவது யாண்டின் கல்வெட்டொன்று காவாந்தண்டலத்திலிருக்கிறது ; பதினாறுவது யாண்டின் கல்வெட்டொன்று உக்கலில் உள்ளது. [காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பெருவழியிலுள்ள மாமண்டூருக்குத் தென்கிழக்கிலுள்ளது உக்கல் என்ற ஊர்.]

பல்லவனை வென்று தம் அதிகாரத்துக்கு வடக்கினின்றும் யாதொரு இடுக்கணும் விளையாதபடி அரண்செய்த பின்னர்ப் பாண்டியனை வெல்ல விரும்பினார் விசயாலயர்; பாண்டி நாட்டின் மேற் படையெடுத்துச் சென்றார் ; ஸ்ரீமாறன் பரசக்ரகோலாகலன் என்னும் பாண்டியனை (கி. பி. 830—862) வென்று வாகை மிலைந்தார் ; பாண்டி நாட்டிலும் தம் அதிகாரத்தை நிறுவினார், பாண்டிநாட்டின்கண்ணுள்ள சுசிந்திரத்தில் இவருடைய கல்வெட்டொன்றிருக்கிறது ; இது வட்டெழுத்தினல் எழுதப் பட்டுள்ளது ; இது இவருடைய ஆட்சியின் முப்பத்து நாலாவது யாண்டினது (Epigraphia Indica, Volume V, page 42, A.)

நிலை குலைந்திருந்த சோழர் குடியைப் புகழுடன் நிலை நிறுத்தி, வெற்றி நிலையமாக வாழ்ந்து, நாட்டை அமைதியுற ஆண்டு வந்தார். தமது ஆட்சியின் முப்பத்துநாலாவது யாண்டாகிய கி. பி. 880-ல் இறந்தார்.

கல்விநிலை :—இவர், தம் பெயரால மைத்த விசையாலயச் சருப்பேதி மங்கலத்தில் பல அறிஞர்களைக் குடியேற்றிப் போற்றினார்.

கடவுட்கோட்பாடு :—இவர் தஞ்சாவூரில் துர்க்கைக்கு ஓர் கோவில் கட்டினார்.

காலம் :—இவராட்சியின் பல்வேறு யாண்டுகளில் பொறிக்கப்பட்டனவாக இதுவரை வெளியிடப் பெற்றுள்ள கல் வெட்டுக்களில் (South Indian Inscriptions, Volume I, part II, Numler 85 ; Part II, No. 148 ; Vol II, Part I, No. 11, Vol VI, Nos 64, 73, 112, 114, 151, 153, 424, 502, 516; 742, 868, 893, 900, 910, 930 & 999 ; Vol. VII, Nos. 58, 60 to 62, 184, 239, 241, 533, 545, 549 to 551, 554 to 556, 558, 563, 565, 570, 572, 576, 601 to 605, 608, 614, to 621, 623, 624, 627, 630, 632, 639 to 641, 645, 646, 657 to 659, 664 to 666, 668, 669, 672, 682, 687, 690, 692, 719, 720, 723, 724, 727 to 729, 733, 739 & 740 ; Epigraphia Indica, Volume V, page 42, A) முப்பத்து நாலாவதி யாண்டினதுங் காணப்படுதல் கொண்டு இவர் முப்பத்து

நான்கு யாண்டுகள் ஆண்டார் என்பது தெரிகின்றமையாலும், இவர் மகன் கி. பி. 880-ல் அரியணை யேறினார் என்பது தெரிகின்றமையாலும், இவர் கி. பி. 846 முதல் 880 முடியவுள்ள முப்பத்து நான்கு யாண்டுகள் செங்கோலோச்சினராதல் வேண்டும்.

நாட்டினளவு :—திருச்சென்னம்பூண்டி, திருமீயச்சூர் [இவ்வூர்கள் இப்போது தஞ்சாவூர்க் கோட்டத்துள் அடங்கியிருக்கின்றன.], கீழூர், திருப்பாதிரிப்புலியூர், திருநாமநல்லூர், திருமுதுகுன்றம், திருவாமாத்தூர் [இவ்வூர்கள் இஞ்ஞான்று தென்னார்க்காட்டுக் கோட்டத்துள்ளிருக்கின்றன.] சியமங்கலம், திருவோத்தூர், திருவண்ணாமலை [இவ்வூர்கள் இப்போது வட ஆர்க்காட்டுக் கோட்டத்தில் சேர்ந்திருக்கின்றன.], காஞ்சிபுரம், காவாந்தண்டலம் [இவ்வூர்கள் செங்கற்பட்டுக் கோட்டத்திலடங்கியிருக்கின்றன.], திருவல்லிக்கேணி [இவ்வூர் சென்னைக் கோட்டத்திலிருக்கிறது.], திருப்பராய்த்துறை, திருச்செந்துறை, அள்ளூர், நங்கவரம், அன்பில், அந்தவநல்லூர் [இவ்வூர்கள் இதுகாலை திருச்சிராப்பள்ளிக் கோட்டத்திலுள்ளன.], சுசிந்திரம் [திருவாங்கூர் நாட்டிலுள்ள கோட்டாற்றுக்கும் குமரிமுனைக்கும் இடையிலிப்போதிவ்வூருளது] ஆகிய இடங்களில் இவருடைய கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்விடங்கள் இவராட்சியிலடங்கியிருந்தன என்பது திண்ணம். ஆகவே, சேர சோழ பாண்டியர் நாடு, அதாவது வடக்கில் திருவேங்கடத்துக்கும், தெற்கில் குமரிமுனைக்கும், மேற்கிலும் கிழக்கிலும் கடலுக்கும் இடைப்பட்ட தமிழ்நாடு முழுவதும் இவரது ஆட்சிக்குட் பட்டிருந்தது.

முடிவுரை :—பல நூற்றாண்டுகளாக உண்ணாட்டாராலும், வெளிநாட்டாராலும் இடர்ப்பட்டுவந்த சோழநாடு, விசயாலய சோழ மன்னரால் தலை நிமிர்ந்து ஓங்கி வளரத் தொடங்கிற்று. விறன்மிகு வேந்தர் விரக்கழல் பணியப் புகழுடன் விசயாலய சோழர் விளங்கினார்.

கந்தவேள் கண்ட கருங்கடல்

[திரு. N. குழந்தைவேலன் B. A.]

பல நாட்களாய் அல்லும் பகலும் ஆராய்ந்து அறிந்து இயற்றிய அரிய நூல்களும் கூட சில வேளைகளில் படிப்போருக்கு உறக்கத்தை உண்டுபண்ணக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இத்தகைய நூல் ஒன்றை யான் படித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருநாள் என்னையறியாமல் உறங்கி விட்டேன். இங்ஙனம் உறங்கியபோது யான் ஒரு புதுமையான கனவு கண்டேன். அக்கனவின் தோற்றத்தை இங்கு அறிவிக்கப் புகுகின்றேன் :—

யான் ஒரு பெருங்கடலின் கரை ஓரத்தில் ஒதுங்கிக் கிடப்பதுபோல் எனக்குத் தோன்றிற்று அக்கடலில் எண்ணிறந்த கப்பல்கள் நிறைந்து கிடந்தன. ஒவ்வொரு விநாடியும் பல கப்பல்கள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. கடலின் நீர், மைக்குழம்பெனக் கன்னங்கரேலென்று இருண்டு இருந்தது. எனது கண்களில் தொலைவிலுள்ளவற்றையும் நன்கு பார்க்கக்கூடிய ஓர் ஆற்றல் எங்ஙனமோ உண்டாயிற்று. யான் இவ்வியத்தகு காட்சியைக் கண்டு திகைத்து நிற்கையில் ஒரு முனிவனது ஆவி அக்கரிய நீரோட்டத்தினின்றும் வெளிக்கிளம்பி என் அருகே வந்தது. அதன் உடல் முழுவதும் கறுப்பு நிறமாயும், அச்சுப்பொறியில் வேலைசெய்பவனைப் போன்றும் இருந்தது. அதன் மீசை மைபூசுவதற்கு உதவும் திட்டுகோல் போன்று இருந்தது. அதன் தலையில் உயர்ந்த தாளினால் ஆகிய குல்லாய் அணிந்திருந்தது. அதன் அழகிய அங்கியில் செந்தமிழ்ப் புலவர்களின் பெயர்கள் பொன் எழுத்துக்களால் பொறித்திருந்தன. அதன் இடதுகையில் ஒரு அச்சுத்தாளும், வலதுகையில் ஒரு பேனாவும் வைத்திருந்தது.

அஃது என்னை நோக்கி "அன்பனே யான் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இவ் அலைகளின் உள்ளே உன்னை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன். நீ இப்போது காண்பது மையினாலாகிய எழுத்துக்கடல். நெடுந்தொலைவிற் காணும் கோபுரங்கள் 'புகழ்' என்னும் நீவிற் கற்பாறைகளால் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றின் உச்சி மேக மண்டிலங்களை எல்லாம் தாண்டிச் செல்கின்றது. அதற்கு அடுத்தாற்போல் தோன்றுவது 'ஊதியம்' என்னும் தீவு ஆகும். ஆங்கு, பொன்னாலாகிய மணல் மின்னுவதை நீ காணலாம். இத்தீவு மிகவும் செழிப்பானது. கடலின் நடுவில்

ஆடாமலும் அசையாமலும் செல்லும் கப்பல்கள் எல்லாம் இத் தீவுகளை நோக்கிச் செல்கின்றன. ஆயினும் அவைகள் புறப் படும்பொழுது சுழல்காற்றில் அகப்பட்டு அரும்பாடு படுகின் றன. அவை மேலுங்கீழும் கடுமையாக ஆட்டப்படுகின்றன. இதனுல் சில கப்பல்கள் உடனே நீரில் மூழ்கிப்போகின்றன. மற்றும் சில சிறிதுபொழுது எதிர்த்து நின்றும் பின்னர் தகர்த்தெறியப்படுகின்றன. நல்ல பொருள்களால் உறுதியா கச் செய்யப்பட்ட கப்பல்களே இறுதியில் புயற்காற்றிலிருந்து தப்புவிக்கின்றன." என்று கூறிற்று.

இவற்றைக்கண்டு யான் நடுநடுங்கினேன். அவ்வுணர்ச்சி இன்னும் என்னை விட்டு அகன்றிலது. மீண்டும் அந்த ஆவி என்னைப்பார்த்து "சற்றுத்தொலைவிற்காணும் இரண்டு பெரிய கட்டிடங்களைக் கூர்ந்து, நோக்குவாயாக. இவை 'செய்யுள் நடை', 'உரை நடை' என்னும் இரு வானவர்களால் கட்டப் பட்டவை. திசைகாட்டும் கருவியேனும், நாட்டின் அமைப் பைக்காட்டும் படமேனும் (Map) கையில் இல்லாது எத்துணை பேர் அங்குச்செல்ல முயல்கின்றனர் என்று பார்! பாய்மரங் களை அளவுக்குமிஞ்சி விரிப்பதனுல் பல கப்பல்கள் கவிழ்ந்து போகின்றன. மற்றும் சில, எடைமிகுந்த நங்கூரங்களைப் பாய்ச்சுவதால் கடலில் அமிழ்ந்து போகின்றன. பெரிய கப்பலும்கூட ஒரு நொடிப்பொழுதில் அழிந்து போகின்றது. நடுவில் பெருந்தன்மையுடன் வீற்றிருக்கும் கப்பற்படைகளைப் பார்! ஏனைய கப்பல்கள் அவற்றின் கொடிகளுக்கு வணங்கி நிற்கின்றன. அப்பெருங்கப்பல்கள் பண்டைக்காலத்தில் 'கம் பர், திருவள்ளுவர், சேக்கிழார்' போன்ற அறிவாளிகளால் மிகவும் திறமையாகக் கட்டப்பட்டவை. அவை எக்காலத்தி லும் எழுத்துக் கடலுக்குப் பெருமையும் சிறப்பும் அளிக்கக் கூடியனவாக இருக்கின்றன," எனக் கூறிற்று.

பின்னர் அம்முனிவனது ஆவி ஓயாது பொங்கிக்கொண் டிருக்கும் நீர்ப்பெருக்கின் பக்கம் என் பார்வையைச் செலுத் தும்படி கட்டளையிட்டது. "அதுதான் அரசியல் (Politics) என்னும் நீரோட்டம். அதன் ஊடே செல்லவிரும்புகிறவர் களுக்குப் பல இடையூறுகள் உண்டாகும்," என்று அது கூறிற்று. எதிரில் கரையோரமாய் ஒருவனைக் கைகளிலும் கால் களிலும் விலங்கிட்டு இருப்புச்சங்கிலியால் பாறையோடு சேர்த் துக் கட்டியிருந்தது. ஏனைய மாலுமிகள் அப்பாறையில் மோதிக் கொள்ளாமல் எச்சரிக்கையாக இருக்கும்பொருட்டு அவனை அங்கே கட்டிவைத்திருப்பதாக அந்த ஆவி கூறிற்று.

இத்துன்பக் கடலுக்கு அப்பால் எனக்குச் சிறிது ஆறுதல் அளிக்கவல்ல நல்ல காட்சிகள் தென்பட்டன. கண்ணைக் கவருந் தன்மையனவாகிய பல அழகிய படகுகளை யான் கண்டேன். அவை மலர்கள் நிறைந்ததும், குளிர்ந்த நிழல்களுடையதுமான பூங்காவின் ஓரமாய் இன்னிசையுடன் சென்றுகொண்டிருந்தன. அப்படகுகள் வெள்ளித் துடுப்புகளால் தள்ளப்பட்டன. கரைஓரமாய் அன்பர்கள் 'தேவாரம்,' 'திருவாசகம்' முதலியவற்றை இன்னிசையுடன் பாடிச்சென்றனர். அவ்வாசகத்தைக் கேட்ட விலங்குகளும் பறவைகளும் கூட அப்படியே மெய்மறந்து நின்றுபோயின. படகுகள் 'இசை,' 'பண்' என்னும் நீரோடைகளின் வழியாய் அழகாக மிதந்து சென்றன. பாய்மரங்களில் கட்டியிருந்த பட்டுத்துணிகள் மெல்லிய பூங்காற்றிலே பெருமூச்சு விடுவதுபோன்று தோன்றின. அத்துணிகள் 'அன்பு' என்னும் பட்டுக்கயிற்றினால் பிணிக்கப்பட்டிருந்தன.

இப்பேரின்பக் காட்சியிலே ஈடுபட்டு யான் மனங்குழைந்து உருகிநிற்கும்பொழுது அம்முனிவனது ஆவி என் எண்ணத்தை மற்றொருபக்கம் திருப்பியது. அங்குப் பெருங்குழப்பமாக இருந்தது. கப்பற்படைகள் ஒன்றோடொன்று கடும்போர் புரிந்தன. சில மக்கள் நெற்றியில் நாமத்தைத் தீட்டியும், மற்றும் சிலர் திருநீறு பூசியும், இன்னும் சிலர் சிலுவை அணிந்தும், வேறு சிலர் கையை ஏந்தியும் போராடினர். "இவர்கள் மதத்தின் பெயரால் சண்டையிடும் அறிவாளிகள்" என்று அந்த ஆவி புன்னகையுடன் கூறிற்று. ஆங்குள்ள நீர்மூழ்கிக் கப்பல்களையும் அந்த ஆவி எனக்குக் காட்டிற்று. சமயத்திற்குத் தகுந்தபடி இடம் விட்டு இடம் மாறுவதே இக்கப்பல்களின் வழக்கமாக இருந்தது. இதனால் மேலும் மேலும் குழப்பம் மிகுதியாக ஏற்பட்டதேயன்றிச் சிறிதும் குறையவில்லை.

மைக்கடலிற் சில இடங்களில் மரக்கலங்களை அடிமைகள் தள்ளிச்சென்றனர். "அவை அனைத்தும் பேராசைபிடித்த வணிகர்களால் கட்டப்பட்டவை. அவை 'ஊதியம்' என்னும் தீவின் கரையை நோக்கிச் செல்கின்றன. அவ்வடிமைகளது உழைப்பின் பலன் முழுவதும் முதலாளிகளுக்கே போய்ச் சேருகின்றது," என்று ஆவி கூறியது. ஒரு சிலர் பிறர் உதவியின்றி, தாங்களே தங்களுடைய சொந்தக் கப்பல்களில் ஏறிக் கடலைத் தாண்ட முயன்றனர். இவர்கள் அடிக்கடி வழி தப்பிப்போய்க் கடலில் அலைந்தாலும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்துகொண்டே இருந்தனர்.

இன்னும் யான் கண்ட எண்ணிறந்த காட்சிகளைப் பற்றி விரித்துக் கூற இங்கு இடமில்லை. ஏனையவற்றுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவை உரையாசிரியர்கள் நிரம்பிய கப்பல்கள் ஆகும். இவற்றில் பலதிறப்பட்ட பொருள்களையும் திணித்திருந்ததால் கப்பல்களின் எடை மிகுந்து அவை ஆமைகளைப் போல் மெய்ய நகர்ந்து சென்றன. அப்பெருஞ் சுமையைத் தாங்கமாட்டாது அவை அடிக்கடி மணலிற் புதைந்து கொண்டன. இதனால் அவற்றின் போக்குப் பெரிதும் தடைப்பட்டுக் கொண்டே இருந்தது. இவையுமன்றி அக்கப்பல்கள் இடைவிடாமல் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. எழுத்துக் கடலில் எங்கே பார்த்தாலும் கள்வர்கள் நிறைந்திருந்தனர். செல்வம் நிறைந்த கப்பல்கள் ஏதாவது வந்து அகப்பட்டுக் கொண்டால் அவற்றைக் கொள்ளையடிப்பதே இவர்களது நோக்கமாக இருந்தது. இக்கொள்ளைக் கூட்டத்தினர் தாங்கள் ஏறிச் சென்ற கப்பல்களில் அயலாரது கொடிகளைப் பறக்கவிட்டும், அவற்றின் பெயர்களை மாற்றியும் இனம் தெரியாமல் செய்து கொண்டனர். இவர்கள் அனைவரும் பணம் பறிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர்.

எனது கண்கள் முடிவில் ஏதோ ஓர் இடத்தில் நிலைத்து நின்றன. ஒரு பெரிய பட்டினத்தின் நடுவில் அகன்ற கால்வாய் ஒன்றை யான் கண்டேன். அதனைக் குறித்து அந்த ஆவியைக் கேட்கலாம் என யான் வாய் திறப்பதன் முன் அஃது என்னை இருகரங்களாலும் பற்றி அக்கருங் கடலின் உள்ளே தலைகீழாக வீசி எறிந்தது. யான் அலைகளின் நடுவில் மூச்சுவிடக் கூடாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கும் பொழுது எனக்குப் பழக்கமான குரல் என்னைப் பெயரிட்டு அழைப்பது போன்று இருந்தது. யான் கண்ணைத்திறந்து பார்த்தேன். எனது நண்பர் ஒருவர் முகமலர்ச்சியுடன் என் அருகில் நிற்பதைக் கண்டேன். யான் கண்டன வெல்லாம் கனவெனத்துணிந்து நிகழ்ந்தனவற்றை அவ் அன்பரிடம் விரித்துக் கூறினேன். " கல்வி கரையில கற்பவர் நாள்சில "

குறிப்பு :—[கருங்கடல் = மைக்கடல். எழுத்துக்கடல் = கல்விக் கடல். கப்பல்கள் = நூல்கள். சுழல்காற்று = குற்றங் காணுதல். திசைகாட்டும் கருவி = இலக்கணம். பாய்மரங்கள் = நகைச்சுவை. நங்கூரங்கள் = துன்பப் பகுதிகள். மாலுமிகள் = நூலாசிரியர்கள். படகுகள் = பேரின்பப் பாடல்கள். கால்வாய் = கழகம்.]

ஆராய்ச்சிப் பகுதி : Research

தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்*

[வித்வான் மா. இராசமாணிக்கம், P. O. L.]

தமிழ்த் தோற்றத்தினை அறிய வேண்டுமாயின், தமிழ் நாட்டுப் பழைய வரலாற்றினை நன்கு ஆராய்தல் வேண்டும். அவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாதவை களவியல் உரை, சிலப்பதிகார உரை, இலங்கைச் சரிதங்களாகிய மஹாவம்சம், தீபவம்சம், சர் எமர்ஸன் டென்னெனட் என்பார் வரைந்துள்ள 'இலங்கை வரலாறு' W. ஸ்காட் எலியட் என்பார் வரைந்த 'அழிந்த லெமூரியா' முதலிய ஆராய்ச்சி நூல்களாம்.

அகத்தியர்

களவியல் உரை ஒன்றே முதன் முதல் அகத்தியரைக் குறிப்பிட்டது. அதன் பின்னரே அகத்தியர் பற்றிய செய்திகள் பல தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளன. வான்மீகி இராமாயணத்தில் அகத்தியர் குறிப்பிடப்பட்டுள்ளார். "அகத்தியர் மதாச்சாரியாகவும் இருந்தார் என்பதை ஜாவாத்தீவில் அகப்பட்ட கி. பி. 654-ஆம் வருடத்திய சாஸனம் கூறுகிறது. ஜாவாவில் அகஸ்திய மதம் பரவி இருப்பது தென்னிந்திய நாகரிகம் அத்தேசங்களில் பரவி இருந்ததென்பதற்கோர் சான்றாகும். அகஸ்தியர் கோயில் மலேயாவில் காணப்படுகிறது. அகஸ்தியர் தென் இந்தியாவினின்று ஜாவா, மலேயா முதலிய நிலப் பகுதிகட்குச் சென்றார் என்ற கூற்றுக்கு ஆதாரம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. இந்து மதத்தைப் பின்பற்றும் பாலி தீவில் அகஸ்தியரைக்கும்பிடுகிறார்கள்," என்று 1935-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந்தேதி பச்சையப்பன் மண்டபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சரித்திரப் பேராசிரியர் சீனிவாசாச்சாரியார் சொற்பொழிவாற்றியது கவனிக்கத்தக்கது.

அகத்தியரைப் பற்றிய பிற வரலாறுகளையும் மேற்கூறப்பெற்ற சாஸன சரித்திர சம்பந்தமான செய்திகளையும் அவர் முதற் சங்கத்தைக் கூட்டியவர் என்னும் தமிழ்ச்செய்தியையும் நடுநிலையினின்றும் ஆராய்தல் அவசியம். இறையனார் களவியல் அகத்தியர் காலத்துக் கடல்கோளைக் குறிக்கிறது. அதே நூல்

---

* இது மறைமலையடிகள் முன்னிலையில் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் (27-12-'37) பேசப்பட்டது.

தொல்காப்பியர் காலத்துக் கடல்கோளையும் குறிப்பிடுகிறது. இந்நூல் போலவே இரண்டு பெரிய கடல் கோளைப்பற்றி நம் தமிழகத்தை ஒட்டியுள்ள இலங்கைச் சரிதம் கூறுகிறது. இதனை நன்கு ஆராய்தல் வேண்டும். மஹாவம்சம், இராஜாவளி என்னும் இரு நூல்களிலும் இவ்விரு கடல்கோள் கூறப்பட்டுள. அவை, முதற் கடல்கோளின் காலம் கி. மு. 2387 என்றும், இரண்டாம் கடல்கோள் கி. மு. 504-ல் நடந்தது என்றும், மூன்றும் (சிறிய) கடல்கோள் கி. மு. 306-ல் நடந்தது என்றும் (அது இலங்கையின் கிழக்குப் பாகத்தில் மிகச் சிறிய அளவில் ஏற்பட்டதெனக் கூறப்படுதலின் நமதாராய்ச்சிக்குப் பயன் படாதது.) கூறப்பட்டுள. களவியலில் தென் மதுரை யுட்பட்ட மிகப்பெரிய நிலப்பிரதேசம் அகத்தியர் காலத்தே கடலால் கொள்ளப்பட்ட தென்று கூறப்பட்டுள்ளது. மஹாவம்சமோ, முதல் கடல்கோள் இலங்கையை இந்தியாவினின்றும் பிரித்தது எனக் கூறுகிறது. இனி, ஸ்காட் எலியட் என்பார் வரைந்த 'அழிந்த லெமூரியா' என்னும் நூலில் படமொன்றுள்ளது. அதனைப் பார்வையிடின், இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே இமயம் போன்ற பெருமலைத் தொடர்ச்சி ஒன்று தெற்கு வடக்காக நெடுந்தூரம் செல்வதைக் காணலாம். இப்போதைய குமரி முனைக்கும் இம்மலைத் தொடர்க்கும் இடையே வேறு மலைத்தொடர் இருந்ததாகத் தெரியவில்லை. இதனால், சிலப்பதிகாரம் கூறும் "பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடு" இம்மலைத் தொடரின் ஒரு பகுதி என்னலாம். அக்குமரிக் கோடு நீங்கலாக எஞ்சிய மலைத்தொடரும் அதன் தென்பாற் பட்ட நிலப் பகுதியும் இலட்சக் கணக்கான ஆண்டுகட்கு முன் பெருங் கடல்கோளால் மூழ்கடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனவே, இப்போதைய குமரி முனைக்குத் தெற்கே இருந்த நிலப்பகுதியும் அதன் தெற்கெல்லையாகிய 'குமரிக்கோடும்' அப்பேரழிவில் நிலைபெற்றிருந்தன. அங்ஙனம் நிலைபெற்ற பகுதியையே அகத்தியர் காலத்துக் கடல்கோள்—இலங்கையை இந்தியாவினின்றும் பிரித்த கடல்கோள்—அழித்திருத்தல் வேண்டும்.

இந்தியாவினின்றும் இலங்கையைப் பிரித்த கடல்கோள் பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோட்டையும் இவற்றுக்கு இடைப்பட்ட நாட்டையும் அழித்ததென்பதில் வியப்பில்லை அல்லவா? இத்தகைய பேரழிவில் பாண்டியன் 'தென்மதுரை' (முதற்சங்க காலத்திய மதுரை இப்போதைய மதுரைக்குத் தெற்கே இருந்து அழிந்தமையால், அதனைத் 'தென் மதுரை' என்றும் இப்போது மதுரையை 'வடமதுரை' என்றும் பின்னாளில் கூறலாயினர் என்பது உண

ரத் தக்கது) யும் ஆங்கிருந்த முதற்சங்க நூல்களும் அழிந்து பட்டன என்பதில் ஐயமென்ன? மேலும், 'ஆரியர் இந்தியா நுழைந்தகாலம் கி. மு. 2500-க்கு மேற்படாது. அதற்கு முன்னரே தமிழர் சிறந்த நாகரிக நிலையில் இருந்தனர்' எனப் பற்பல ஆதாரங்களுடன் மேனாட்டாராய்ச்சியாளர் கூறியிருப்ப, யாம் அகத்தியர் காலம் எனக் கூறிய 'காலம்' எவ்வாற்றானும் தவறாகாதன்றோ? கி. மு. 2387-ல் முதற் கடல்கோள் நடந்ததெனின், அப்பொழுது முதற்சங்கம் இருந்ததெனின், தமிழ் நூல்கள் இருந்தன எனின், தமிழ்மொழியின் தோற்றம் அதற்குமுன் எத்துணை ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென்பதை நீங்களே கவனித்தறியுங்கள். மேலும், 'தமிழ்ச் சமூகமே இந்நிலவுலகில் முதன் முதலாகத் தோன்றியது; அது பரிணாம வாதத்தின் முறையே. இன்றைக்கு 50 லட்சம் ஆண்டுகட்கு முன்னர்த் திகழ்ந்த 'டேஷயரி' (Age) காலம் என்னும் திருதிய கல்பத்தினர் இவ்வைம்பது லட்சம் வருடங்களாக முயன்று சாதித்த நாகரிகத்தின் வளர்ச்சியை நன்கு தெரிவிக்க ஏற்ற சாதனங்கள் இதுபோது இராது போயினும், நவசிலாயுகத்து இவர்கள் வழங்கிய பண்டங்கள் ஒரு சில-புதைந்தவை, தூர்ந்தவை ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும் அரசாங்கத்து ஆராய்ச்சிப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன," என்று 1932-ம் வருடம் டிஸம்பர் மாதம் 26-ந் தேதி "புதுச்சேரி இளைஞர் சங்கத்தில்" திருச்சி தேசிய கல்லூரிப் பேராசிரியர் திரு. R. வாசுதேவ சர்மா, M. A., B. L. அவர்கள் கூறியதும் இங்கு கவனிக்கத் தக்கது.

சிந்துப் பிரதேச—திராவிடர் நாகரிகம்

நாம் மேற்கூறிய அகத்தியர் காலம் 'உண்மையானதா?' என்னும் ஐயம் சிலர்க்கு எழுதல்கூடும். அவ்வையம் கீழ்வரும் செய்திகளால் பரிதியைக் கண்ட பனிபோல் நீங்கும். கி. பி. 1922 முதல் 1927 முடிய பஞ்சாபில் மோஹஞ்சோ-தாரோ என்னும் இடத்திலும், சிந்து மாகாணத்தில் "ஹரப்பா" என்னும் இடத்திலும் ஆராய்ச்சி நடந்ததன் பயனாகத் தமிழர் நாகரிகம் மிகவும் தொன்மையுடையது என்பது மறுக்க முடியாத உண்மையாகி விட்டது. இந்திய ஆராய்ச்சி இலாகாத் தலைவரும் 'சிந்துப் பிரதேச திராவிடர் நாகரிகம்' என்னும் ஆராய்ச்சி நூலின் பதிப்பாசிரியருமான சர் ஜான் மார்ஷல் தமது முகவுரைத் தொடக்கத்தை வரைந்திருப்பது கவனிக்கத் தக்கது:—

"Never for a moment was it imagined that 5000 years ago, before the Aryans were heard of, the Punjab

and Sindh, if not other parts of India as well, were enjoying an advanced and singularly uniform civilization of their own, closely akin to but in some respects even superior to that of contemporary Mesopotamia and Egypt, yet this is what the discoveries at Harappa and Mohenjo-Daro have now placed beyond question. They exhibit the Indus peoples of the third and fourth millenia B. C. in possession of a highly developed culture in which no vestige of Indo-Aryan influence is to be found ".

"இச்சிந்துப் பிரதேச திராவிட மக்கள் மிகவுயர்ந்த நாகரிக நிலையில் இருந்தனர் என்பது தெளிவு. அக்கால ஈஜிப்டியர்—மெஸொபொடாமியர் வரலாறுகளில் கோயில்கள், சமாதிகள் முதலியவை கட்டப்பட்ட பெருமையே காணப்படுகிறதன்றி இச்சிந்துப் பிரதேச மக்களைப்போல வாழ்க்கைக்குரிய எல்லா வசதிகளையும் பெற்று வாழ்ந்தனர் என அந்நாடுகளின் மக்களைப் பற்றிக் கூறல் இயலாது. காற்றோட்டமுள்ள அறைகளைக்கொண்ட வீடுகள், நீராடுங் கட்டங்கள், நீராடும் அறையும் கிணறும் கொண்ட வீடுகள், பெரிய அகன்ற கழிநீர்ப் பாதை முதலியன சிந்துப் பிரதேச மக்களது—அதே காலத்தில் உலகில் வேறெந்த நாகரிக நாட்டு மக்களும் பெற்றிராத—உயரிய நாகரிகத்தைக் காட்டுவனவாகும்," என அவ்வாசிரியரே கூறுதல் சுவைத்தற்குரியது.

மோஹென்ஜொ—தாரோ, ஹரப்பா என்னும் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நகரங்களில் அமைந்த தெருக்களின் அகலம் சில இடங்களில் முப்பதடி; சந்துகளின் அகலம் சுமார் நான்கடி. அம்மக்கள் பயன்படுத்திய செங்கற்கள் பல அளவைகளை உடையன; சிறிய செங்கல் 9·5 அங்குல நீளம். பெரிய செங்கல் 2 அடி நீளம். "இச்சிந்துப் பிரதேச மக்கள் பயிர்த்தொழிலிலும் வாணிபமும் நடத்தி வந்தனர்; கோதுமை, பார்லி முதலியவற்றைப் பயிரிட்டனர்; எருமை, எருது, பசு, பன்றி, நாய், யானை, ஒட்டகம் முதலியவற்றை வளர்த்து வந்தனர்; மாட்டுவண்டிகள் வைத்திருந்தனர்; பொன், வெள்ளி, செம்பு இவற்றைப் பெருவாரியாகப் பயன்படுத்தினர்; நூல் நூற்றல், நெசவுத் தொழில் இவற்றில் வல்லுநராக விளங்கினர்; வாள், வில், அம்பு, ஈட்டி, கோடரி முதலியன அவர்கள் கையாண்ட ஆயுதங்கள். இப்பண்டை மக்கள் வாழ்ந்த காலம் உத்தேசமாகக் கி. மு. 3250—கி. மு. 2750 எனக் கூறலாம். ஆரியர் கி. மு. 2600-க்கு முன் இந்தியாவில் இல்லை.

எனவே, அதற்கு முற்பட்டவர் இத்திராவிட மக்கள்,"[1] என்று சர் ஜான் மார்ஷல் கூறுதல் ஊன்றிக் கவனிக்கத் தக்கது.

இனி, இச்சிந்துப் பிரதேச திராவிடர் நாகரிகத்தைப் பற்றிப் பத்தாண்டுகளாக அரிய முறையில் ஆராய்ச்சி செய்து வரும் பம்பாய்—செயின்ட் சேவியர் கல்லூரி ஆராய்ச்சிக் கழகத் தலைவராகிய "ஹிராஸ்" (Heras) பாதிரியார் சென்ற அக்டோபர் மாத இறுதியில் புதுக்கோட்டை அரசர் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக் கழக ஆதரவிலும் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவர் கூறுவன வருமாறு:

"மோஹெஞ்ஜோ—தாரோவில் வாழ்ந்த மக்களும், தென் இந்திய திராவிடரும் ஓரினத்தவரே; அவர்கள் இருபிரிவினரும் பேசியமொழி ஒன்றே"[2] ...."இவ்வாராய்ச்சியிற் காணப் பெறும் எழுத்துக்கள் வலப்புறமிருந்து இடப்புறமாக எழுதப் பட்டவை; இவை திராவிட எழுத்து முறையாகிய 'உருவெழுத்து' ஆகும். சங்க நூற்களிற் கூறப்பெறும் இம்முறை பண்டைத் தமிழரது. இவ்வெழுத்து முறையே எல்லாத் திராவிடமொழிகட்கும் பிறப்பிடமாகும்."[3] இவ்வுரு எழுத்து ஒவ்வொன்றும் ஒரு பொருளைக் குறிப்பது. தமிழர் தொல்லை நாட்களில் கையாண்ட எழுத்து முறைகளில் இஃதொன்றாகும். சில உரு எழுத்துக்களை ஒன்று சேர்த்தபோது 'தன்கதிர் எழலார்' என வாசிக்க முடிந்தது. இத் தொடர்ப் பொருள் ஏறக்குறைய ஒப்பிலா மணிப்புலவரது பாடல் அடிகளில் பயின்றுவரல் காணத் தக்கது. ஓர் உரு எழுத்துக்குப் பக்கத்தில் இரு புறத்தும் இரண்டு சிறிய நேர்க்கோடுகள் இடுதல் பன்மையைக் குறிப்பதாகும். இரண்டு உரு எழுத்துக்களை (அவை தனித் தனியே வேறு வேறு பொருளைக் குறிப்பன.) ஒன்று சேர்ப்பின் புதிய பொருள் தரும். ஈஜிப்டியர் சித்திர எழுத்துக்களோடு இவற்றை முற்றிலும் ஒப்பிட்டுப் பார்க்க முடியவில்லை. ஈஜிப்டியர் முதலிற் பலவகையாகத் தங்கள் எண்ணங்களைத் தெளிவிக்க இம்முறையே கையாண்டனர்; பின்னரே எழுத்துக்களைக் கண்டுபிடித்து எழுதலாயினர். சிந்துப் பிரதேச திராவிடர் உரு எழுத்தளவிலே (இப்போதறிந்த ஆராய்ச்சி அளவில்) இருந்தவர் என்று தெரிகிறது. முறைப்படி எழுத்துக்கள் எழுதப்பட்ட காலம் மிகப் பிற்பட்ட காலமாகும்; அது இப்போது காணப்படும் பிராமிய எழுத்துக்

---

1. Mohenjo—daro & the Indus Civilization, Vol. II, P. 414

2. புதக்கோட்டையிற் செய்த சொற்பொழிவு (18-10-'37); Hindu 19-10-'37.

3. சென்னையிற் செய்த சொற்பொழிவு (20-10-'37); Hindu 21-10-'37,

களைக் கொண்ட சாஸனங்களே ஆகும். அங்குக் காணக் கிடைக்கும் சாஸனங்களில் உள்ள ஒற்றை வரிகளை வலப்புற மிருந்து இடப்புறமாகவும், இரட்டை வரிகளை இடப்புற மிருந்து வலப்புறமாகவும் வாசித்தல் வேண்டும். (இம்முறையில் பிரா மிய சாஸனங்கள் சில உள்ளன.) இங்ஙனம் எழுதும் முறை கிரேக்கரும் அறிந்திருந்தனர்.

"சிந்துப் பிரதேச திராவிடர் இராசி மண்டலத்தை நன் கறிந்தவர்கள்; அம்மண்டலத்தில் எட்டு இராசிகளே அவர்கள் காலத்தில் இருந்தன என்று தெரிகிறது. சுமேரியர் காலத் தில் பன்னிரண்டு இராசிகள் கணக்கிடப்பட்டன. இம்மக்களது இராசி மண்டலக் குறிப்பைக் கணக்கிட்டுப் பார்க்கையில் இத் திராவிடர் வானசாஸ்திர வல்லுநராக இருந்த காலம் கி. மு. 5610 எனக் கூறலாம். இக்காலம் சுமேரியர் நாகரிகமே ஏற் படாத காலம் என்பதை நினைவிற்கொள்க. இவ்வுண்மையை அவர்கம் எழுத்து முறையைக் கொண்டும் உறுதிப்படுத்தலாம்.

"அன் (An), அனில் (Anil), அமா (Ama) என்பன சிந் துப் பிரதேச மக்கள் வழிபட்டு வந்த சிறந்த மூன்று தெய்வங் களாகும். இத்தெய்வங்களையே பிற்காலச் சுமேரியரும் வழி பட்டனர்; ஆனால் முதல் தெய்வமாகிய 'அன்' சரித்திர காலத் திற்கு முற்பட்ட தெய்வமெனத் தள்ளிவிட்டு, அதன் பிள்ளை யாகிய 'அனிலைச்' சிறந்த கடவுளாக வழிபட்டனர். இதிலி ருந்தும் சுமேரியர்க்கு முற்பட்டவர் சிந்துப் பிரதேச திரா விடர் என்பது உறுதிப் படுதல் காண்க. ('அன்' என்பதே 'சிவன்' என மாறியதோ?)

"சுருங்கக் கூறின், பைபிளில் கூறியபடி கீழ்நாட்டு (இந்திய) மக்கள் சுமேரிய நாட்டை அடைந்து அங்கிருந்த அநாகரிக மக்கட்கு எழுத்து முறை, நாகரிகம் இவற்றைக் கற் பித்தனர்; இதுவே மேல் நாடுகளிற் பரவலாயிற்று. அத் திரா விட மக்கள் சுமேரியாவிலிருந்து ஈஜிப்ட், ஸ்பெயின் முதலிய இடங்களில் உலகம் புகழ்தற்குரிய நாகரிகத்தைத் தோற்று வித்தனர்; இங்கிலாந்து, ஐயர்லாந்து, ஸ்காண்டிநேவியா முதலிய இடங்களிலும் பரவித் தங்கள் நாகரிகச் சின்னங்களை ஏற்படுத்தினர். அவ்விடங்களில், ஈழம், புதுக்கோட்டை, பழனி மலைத்தொடர் இவ்விடங்களில் காணப்பெறும் கல்மேசைகளைக் (Dolmens or chromlechs) காணலே போதிய சான்றாகும்."

ஈண்டுத், திராவிடமொழி உலகமெங்கும் பரவியுள்ள பொதுப் பண்பினைக் கண்டு வியந்த கால்ட்வெல் பாதிரியார்

---

4. சென்னையிற்செய்த சொற்பொழிவு, (20-10-'37) Madras Mail, 21-10-'37.

தம்மை மறந்தவராய்க் கூறுதல் கவனிக்கத் தக்கது: "How remarkable that distinct affinities to the speech of the Dravidians of inter-tropical India should be discoverable in the language of the Fins of Northern Europe, and of the Ostiaks and other Ugrians of Siberia; and consequently, that the Pre-Aryan inhabitants of the Dekkhan should appear, from the evidence furnished by their language alone, in the silence of history, in the absence of all ordinary probabalities, to be allied to the tribes that appear to have overspread Europe before the arrival of the Teutons and the Hellenes, and even before the arrival of the Celts! What a confirmation of the statement that 'God has made of one blood all nations of men to dwell upon the face of the whole earth!"[1]

இக் கடைத் தொடரது சிறப்பாற் போலும் புறநானூற்றுத் தமிழர் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" எனக் கூறலாயினர்.

இப் புத்தம்புதிய ஆராய்ச்சி இங்ஙனமாக, சர் ஜான் மார்ஷல் என்பார், "One of the most striking facts revealed by the excavations at Mohenjo-daro and Harappa is the complete uniformity of their culture. Though these two spots are some 400 miles apart, their monuments and antiquities are to all intents and purposes identical"[2] Writing was in use in the first-half of the third mellinium B. C.[3] என உரைத்திருப்பது உவகை அளிப்பதாகும். என்னை? "அவ்விடங்களில் கிடைத்துள்ள குறிகளைப் போன்றவற்றைக்கொண்ட மட்பாண்டங்கள் ஹைதராபாத் சமஸ்தானத்திலும் (ஹைதராபாத் ஆர்க்கியலாஜிகல் சொஸைட்டி ஜர்னல், 1918-ம் ஆண்டு), நாணயங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் (மைசூர் ஆர்க்கியலாஜிகல் இலாகாவின் 1935-ம் ஆண்டு அறிக்கை) கிடைத்துள்ளன"[4] எனவே, இந்தியா முழுவதும் அப்புராதன காலத்தே ஒரேவகைப்பட்ட திராவிடர் நாகரிகம் பரவி இருந்ததெனத் துணிதலில் தவறில்லை அன்றோ?

---

1. Vide his comparative Grammar, Int. P. 68.
2. Vide his book, vol. i, p. 91.
3. " " " , vol. ii, p. 415.
4. Vide Kalaimagal, vol. 12, part 70, p. 299.

மேலும் டெக்கான் பிரதேசத்தில் சிறப்புற்ற இடங்களிலும் தமிழகத்தே கொற்கை, காயல், முசிறி, காவிரிப்பூம் பட்டினம், வஞ்சி, கோழி முதலிய இடங்களையும் ஆராய்ச்சி செய்தால் அதே நாகரிகத்தை இங்கும் காணக்கூடும். இதில் ஐயமில்லை.

இச்சிந்துப் பிரதேச திராவிடர் நாகரிகம் இங்ஙனம் இருக்க, இனித் தென் இந்தியர் நாகரிகம் எப்படி இருந்தது என்பதை கவனிப்போம்.

திராவிடர் நாகரிகம்

பாரசிகத்தை அடுத்திருக்கும் நிலப்பரப்பில் யூப்ரடிஸ், டைக்ரிஸ் (புராத், திஜ்லா) என்னும் இரு நதிகளும் பாய்கின்ற சமவெளிப் பிரதேசத்தில் கி. மு. 4000-க்குச் சிறிதுமுன் பின்னுகச் 'சுமேரியர்' (ஸாமிரி) என்னும் வகுப்பார் இராச்சியத்தை ஏற்படுத்தி ஆண்டுவந்தனர். அவர்கள் துறைமுகப் பட்டினம் 'ஊர்' ('முகெய்ர்' என்பது இப்போழ்தைய பெயர்) என்பது. அவ்வூரைத் தோண்டி ஆராய்ச்சி செய்த போது தேக்கமரத்துண்டு ஒன்று அகப்பட்டது. அதன் காலம் கி. மு. 4000 எனக் கூறப்படுகிறது. அது தமிழகத்தே மலையாள நாட்டுக் கடற்கரையிலிருந்தே கடல் வழியாகச் சென்றிருத்தல் வேண்டும். ஏனெனில் அப்புராதன காலத்தில் உலகத்தில் வேறெங்கும் தேக்கமரம் பயிராக்கப் படவில்லை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.[1]

சுமேரியரைப் பற்றிக் கூறுகையில் டாக்டர் 'ஹால்' என்பவர், "சுமேரியர் எல்லா அம்சங்களிலும் தென் இந்திய திராவிடரை ஒத்துள்ளனர். சுமேரியர் திராவிடர் என்பதில் ஐயமில்லை. அவருள் ஒரு பிரிவினர் சிந்துப் பிரதேசத்தை விட்டு மெஸெப்பொட்டாமியா நோக்கிச் செல்லுமுன் 'ஏலம்' முதலிய இடங்களில் தங்கள் கலையை விதைத்துச் சென்றனர்; பலுசிஸ்தானத்தில் உள்ள ப்ராஹிரும் தென் பாரசிகத்தினரும் திராவிடர் வழியினரே என்பது கவனிக்கத்தக்கது" எனக் கூறியுள்ளார்.[2]

டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவர், "ஆரியர் இந்தியாவிற் புகுந்தபோது திராவிடர் மிகவுயர்ந்த நாகரிக நிலையில் இருந்தனர்; ஆரியர்க்கு 'நாகரிகம்' என ஒன்று இருந்ததாகக் கூறப்படின், அதைவிட உயர்ந்த அளவில் திராவிட

---

1. Ragozin's Vedic India, p. 305.
2. History of the Near East, pp. 173–176.

நாகரிகம் இருந்ததெனத் துணிவுடன் கூறலாம். திராவிடர் மிகப்பழைய காலத்திருந்தே கடலோடிகள்," எனப் புகன்றுள்ளார்.[1]

"சிந்துப் பிரதேச ஆராய்ச்சியில் சிவலிங்கங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. எனவே அப்பிரதேச திராவிடர் சைவ சமயத்தினர் என்பது தெளிவு. இச்சைவ சமயம் உலகில் மிகப் பழையதென்பது இதனுல் விளக்கமாகிறது.[2]" ஆப்பர்ட் என்பார் நைல் நதிக்கரை ஓரம் பெரிய சிவலிங்கம் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டதாகக்கூறியுள்ளார்; முஹம்மது காலத்தில் அரேபியர் சிவலிங்கங்களை வழிபட்டதாகத் தெரிகிறது. இவற்றுல் சைவ சமயம் பரவியிருந்த நிலைமை விளக்கமன்றோ?

அறிஞர்களே! இதுகாறும் கூறியவற்றுல் இந்தியாவின் புராதன மக்கள் 'தமிழரே' என்பதும், இந்தியாவின் பழைய மொழி 'தமிழே' என்பதும் ஐயமற உணரலாம். இனி, இப் பண்டை மொழியின் குறிகள் உலகிடை எவ்வெப் பாகங்களிற் காணப்படுகின்றன என்பதைக் காண்போம்.

வையகம் எங்கும் தெய்வத் தமிழ்

(1) ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடபாகமாகிய எகிப்தில் 'வேள்' என்ற சொல் வழங்கப்படுகிறது. அது மண்குடம், மண்சட்டி முதலிய பொருள்களில் வழங்கப்படுகிறது. அம் மண் தொழில் செய்பவர் 'வேட்கோவர்' எனப் புறநானூறு கூறுதல் காண்க. (2) மத்திய ஆப்பிரிக்காவில் 'போர்நு' அல்லது 'கனுரி' என்னும் மொழி ஏனைய ஆப்பிரிக்க மொழிகளைப் போலன்றி முற்றும் திராவிடத் தொடர்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளது வியக்கத்தக்கது. முன்னிலை ஒருமையாகிய 'நீ' அங்கு அப்படியே வழங்கப்படுகிறது. திராவிட இலக்கண அமைதிக்குரிய பல அம்சங்களும் அம்மொழியில் பொருந்தியுள்ளன.[3] (3) இதே நிலைமை ஆஸ்ட்ரேலியர் சுதேச பாஷையிலும் உண்டு.[4] (4) இதே நிலைமை சீன பாஷையிலும் உண்டு; "சீனத்துப் புராதன அரசர் மூவராம். அவர்கள் பெயர் கூஹி, ஹொஙடி, சோஹா என்பன. தமிழ் மூவேந்தர்க்குச் சேரன், பாண்டியன், சோழன் என்பன மர

1. Vide his 'Dravidian Element in Indian Culture.'
2. Vide his Mohenjo-daro and the Indus Civilization.'
3. Vide Caldwell's Comparative Grammar (ed. 3), p. 77
4. Ibid, p. 76
5. Ibid, p. 75

புப் பெயர்கள். 'கூஷி, என்னும் சின அரசன் வில்தொழிலில் வல்லவன்; (சேரன் வில் தொழிலில் வல்லவன்; விற்பொறி உடையவன்). 'ஹாண்டி' என்பவன் கல்வி கேள்விகளில் வல்லவன்; அவன் மனைவி இசையை வளர்த்தவள்; (பாண்டியன் 'வியாத் தமிழ்' போற்றியவன்; சங்கீதத்துக்கு எல்லை கண்டவன்). 'சோஹரா' என்பவன் உழவுத்தொழில் வளர்த்தவன்; (சோழன் உழவுத் தொழிலை நடத்தி வந்தான்). இவ் விருநாட்டு மன்னர் பெயர் ஒற்றுமையும் செயல் ஒற்றுமையும் ஆராய்ச்சிக்கு உரியன.[1]"

(5) சிந்துப் பிரதேச திராவிடர் நகரங்களில் காணப் பெற்ற எழுத்துக் குறிகள் சுமேரியா, கிரீட், மினோவா முதலிய இடங்களினின்றும் கிடைத்துள்ள எழுத்துக்குறிகளோடு ஒற்றுமை உடையன. இத்தகைய குறிகள் தென் அமெரிக்காவுக்குப் பக்கத்தில் உள்ள 'ஈஸ்டர்' தீவுகளிலும் கிடைத்துள்ளன.[2] (6) இந்திய மொழிகள் அனைத்திலும் திராவிட பாஷைச் சொற்களோ, பகுதிகளோ பயில்கின்றன; வட இந்திய பாஷைகளில் அவை செய்துள்ள மாறுதல் பலவாகும்;[3] (7) வேத காலத்திய வடமொழியின் உச்சரிப்புத் திராவிடச் சொற்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அம்மொழி, ஆரியர் முன் அறியாத பொருள்களின் பெயர்களைக் கடன் வாங்கியதோடு அமையாது, எண்ணங்கள் சிலவற்றைப் பற்றிய சொற்களையும் கடன் வாங்கியது ?[4]

(8) "இனிச் சிந்துப் பிரதேசத்தை யடுத்த பலுசிஸ்தானத்தில் பேசப்படும் ப்ராஹுி பாஷையில் தமிழே பேரளவு இடம் கொண்டுள்ளது. திராவிட பாஷைகளில் தமிழுக்கே சிறப்பாகவுள்ள பால்பகா அஃறிணைப் பெயர் ப்ராஹுிமொழியில் இடம் பெற்றுள்ளது கூர்ந்து கவனிக்கத்தக்கது. இம் மொழியில் இத்திராவிட உயிர் நாடி இருப்பதற்கு—இந்நில மக்களுடன் பேரிதும் சம்பந்தம் கொண்டிருந்த மிகப் பழைய திராவிடரது பாஷையே காரணமாகும்" என்று கால்ட்வெல் பாதிரியார் 1875-ல் கூறினர்.[5] 'அவர் சொன்னது உண்மை' என்பதை இன்று சிந்துப்பிரதேச ஆராய்ச்சி பறையறைந்து பகர்

1. R. Raghava Iyengar's University Lecture on 21-11-1933 ("India")
2. Vide Kalaimagal, part 70, pp. 299, 300.
3. Vide Beames's 'Comparative Grammar of the Modern Non-Aryan Languages of India.'—p. 128.
4 Sunithi Kumar Chatterji's 'Origin & Development of the Bengali Language'—pp. 41-45.
5. Vide his Grammar, p. 633.

கின்றது. இன்னும் இதனைப்பற்றி விளக்கமாக, டாக்டர் 'பேல்லேவ்' என்பார் எழுதிய 'சிந்து நதியிலிருந்து டைக்ரிஸ் நதிவரை' என்னும் நூலும் கூறுவது கவனிக்கத்தக்கது.[1] இதனை மேலும் விரிப்பின் பெருகும்.

முடிபு :

இதுகாறும் கூறியவற்றால் தமிழ்மொழி குறைந்தது ஏழாயிரம் ஆண்டு வயதுடைய தெனச் சிறிதும் அஞ்சாது கூற லாம்; லெமூரியாக் கண்டமே உலக மக்களின் உற்பத்திஸ்தா னம் (ஸ்காட் எலியட் கருத்தும் இதுவே) என்பதும் அறிய லாம்; நம்முடைய பழைய பனுவல்கள் அழிந்து நாம் ஆதர வற்று ஏக்குற்று வாடுங்காலை, தமிழ்த்தெய்வம் சிந்துப்பிரதேச திராவிடர் நாகரிகத்தை உலகிற்குக் காட்டி, அதனையே பற்றுக் கோடாகக் கொள்ளுமாறு நம்மைத் தூண்டிய தென்பதும் உணரலாம். இவற்றால், நாம் முற்கூறிய 'அகத்தியர்' வட மொழி வல்லார் அல்லர் என்பதும், அவர் பைந்தமிழைப் பாங் குறப் படித்த பாவலரே என்பதும், தமிழுக்கு அவரது இன்றி யமையாமை நோக்கியே அவருக்கு 'அகத்தியர்' (இன்றி யமை யாதவர்) எனப் பெயர் வழங்கலாயிற்று என்பதும், அவரை 'அகஸ்தியர்' எனக்கூறுதல் தவறு என்பதும், அவர் இலக் கணம் செய்ததுண்மை என்பதும், அவ்விலக்கணத்துக்கு முன் இலக்கிய நூல்கள் பல இருந்திருத்தல் வேண்டும் என்பதும், இன்றேல் 'அகத்தியம்' அமையாதென்பதும், அப்புராதன காலத்தில் இலக்கண இலக்கிய நூல்கள் இருந்தன என்பதில் (சிந்துப் பிரதேச திராவிடர் ஆராய்ச்சியாற் புலனாய உண்மை சுனோக்க வியப்பில்லை, என்பதும் இங்குக் சுருக்கூன்றி அறி யத்தகும் செய்திகளாகும். சிறப்பாக ஈண்டு மற்றொன்று கூறல் தகும்: அஃதாவது 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே' தோன்றிய தமிழர்—அக்காலமுதலே சிவபெரு மானை வழிபட்ட சைவ சமயத்தினர் என்பதே.

(தொடரும்)

---

1. Dr. Bellew's 'From the Indus to the Tigris', (1878.)

தமிழ்

கலைப்பெருக்கம், சொற்பெருக்கம், இலக்கியத் தொன்மை வளம் ஆகியவற்றை நோக்கினல், தமிழ்மொழியே திராவிட மொழியினத்திற் றலைசிறந்த மொழியாகும். தமிழைப்போன்று "வேறெம்மொழியும் சுருங்கிய சொல்லாற் பேராற்றல் வாய்ந்த கருத்துக்களை விளக்கும் வன்மையும், திருத்தமும் மெய் யறிவும் வாய்ந்த சொல்வளமும் படைத்ததாயில்லை" என்று ரைஸ் என்னும் அறிஞர் கூறுகிறுர்.

தமிழ் வழங்குமிடம் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையிலும், கோழிக்கூடு என்னுமூர் கள்ளிக்கோட்டை முதல் கன்னியாகுமரி வரையிலுமாம். திரு வாங்கூரின் தென்பகுதியிலும் ஈழம் என்னும் இலங்கையின் வடபகுதியிலும் இன்னும் சில பகுதிகளிலும் அது பேசப்படு கிறது. ஏறக்குறைய ஒன்றரைக் கோடி மக்கள் அதனைப் பேசி வருகின்றனர். அதற்கென ஒரு நெடுங் கணக்கு உண்டு. 30 எழுத்துத் தமிழெழுத்தும் நான்கெழுத்துக்கள் கிரந்தம் என் னும் வட சொல்லும் சேர்ந்தது அந்நெடுங் கணக்கு. அது செந்தமிழ் என்றும் கொடுந்தமிழ் என்றும் இரு பிரிவினதாகும். இவ்விரண்டிற்கு மிடையே யுள்ள வேற்றுமைவிரிவை நோக்க இவையிரண்டும் இரண்டு தனி மொழிகள் என்றே கூறலாம்.

தமிழ் தன் தூய்மை நலங்கெட விடுவதில்லை. அது பிற மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதல் என்பது அரிதினு மரிது. அதன் கண் வட மொழிச் சொற் கலப்பு மிகவும் சுருங் கிய அளவினதாகும். அதிலும் பண்டை யிலக்கியங்களில் அச் சொற்கள் மிகச்சிலவே எடுத்தாளப் பட்டுள்ளன. தமிழின் பண்டைய இலக்கியம் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முற் பட்ட தென்று உறுதியாய்க் கூறலாம்.

குறிப்பு :—இது "செயிக்வாட் கீழ்நாட்டு வரிசை" யென்னும் நூல் வரிசையுள் ஒன்ருக வெளியிடப்பட்டுள்ள "ஆசிய மொழிகளில் போர்த்துக்கேசிய ஒலிகள்" என்ற நூலினின்றும் மொழிபெயர்க் கப்பட்டதாகும். அந்நூலாசிரியர் ஸெபாஸ்டியோ ரோடால் ஃபோ டல்காடோ என்பவர்.

—(கா. சிவ. க.)

அறிவியற் பகுதி - Science

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

[திரு பா. வே. மாணிக்க நாயக்கர்—திரு. க. ப. சந்தோஷம்]

கருத்துடையோர் கவனிக்க வேண்டியது

எனது ஆராய்ச்சியில் முன்னணியிலுள்ளவற்றை மேற்போந்தவாறு எடுத்துரைத்தபின், இதிற் கருத்துடையோர்க்குச் சில சொல்ல வேண்டியது எனது கடமையாகின்றது. மறையில் நம்பிக்கை யுடையார்க்கு யான் தெரிவிக்க வேண்டியதென்ன வெனின், ஈண்டு யான் காட்டிய உண்மை, 'கடவுளிடமிருந்து யான் பெற்றதொன்று,' என்று சொல்ல எத்தகை உரிமையு மெனக்கில்லை. மற்றும், யான் கூறியவை வேதாந்தம், சித்தாந்தம், விசிஷ்டாத்வைதம், (அறியாவந்தம்—கடவுளைப் பற்றி நாமொன்று மறியலாகாது என்ற கொள்கை) என்ற கொள்கைகளுள் ஒன்றை அரண்செய்ய, அல்லது பரப்ப எழுந்தவையல்ல. எனது நோக்கமெல்லாம், தமிழ்மொழியின் அமைப்பிலும் இலக்கணத்திலும், வரையறுக்கப்பட்ட அல்லது தெளிவாக விளங்குகின்ற ஓர் உண்மையியல் உண்டென்பதை நிறுவுவதற்குப் போதிய அடிப்படையான, அழிவில்லாத சான்றுகளுண்டென்பதைக் காட்டுவதுதான். இவ்வுண்மை இயலைக் கண்டுபிடிக்க நமது பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்தை ஆராய்ச்சி முறையில் கற்பது பயன்படும். இவ்வாறு கூறுவது புதிதன்று. வடமொழியாளரும் தமது இலக்கணங்களைப் பற்றி இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றனர். இதற்கோர் எடுத்துக்காட்டுச் சாலும். சாந்தோக்கிய உபநிஷத்தில் சநத்குமாரருக்கு நாரதர் பின்வருமாறு விளம்புகின்றார். "எனக்கு இருக்கு வேதந்தெரியும்; யஜுர்வேதமும், சாமவேதமும், நான்காவதாகிய அதர்வணமும் எனக்குத் தெரியும்; ஐந்தாவதாகிய இதிகாச புராணங்கள், வேதவேதமாகிய இலக்கணம்; பித்ரியா, ரசி—இவை எனக்குத்தெரியும்."

எனது, ஆராய்ச்சிக் கெட்டிய அளவில் தமிழ்மொழியின்கண் அமைந்த உண்மை இயல், கபிலரின் சாங்கியம், பதஞ்சலியின் யோகம் உள்ளிட்ட இந்துக்களின் ஆறுசாஸ்திரங்களையுந் தன்னகத்தே யடக்கி, அவைகளின் நிலைகளையும் ஒற்றுமையையும் நன்கெடுத்துக் காட்டுகிறது. எனது இம்முடிபு குற்றமுடையதாயிருக்கலாம். இதுபற்றி யாம் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியின் பாலுள்ள ஆவல் குன்ற வேண்டியதில்லை. தமிழ்

மொழியிலமைந்த உண்மையியல், இஸ்லாம், சொரோஸ்தர் கொள்கை (பழைய பாரசீகமதம்), கிறிஸ்தவம் ஆகிய எக் கொள்கையினைத் தழுவியதாயினுமாக; அது இத்தன்மைய தென்று கண்டுபிடிப்பது உளத்தைப் பிணிக்குமொரு முயற்சி யாகும். இவ்வாராய்ச்சி வரலாற்று நூலார்க்கும் பழமை யாராய்ச்சி யாளர்க்கும் பெரிதும் பயன்படுவதொன்றாகும். ஏனெனின் இதுகாறுமவர்களறியாத ஒரு பழைய உண்மை இதனால் வெளிப்படும். யான் சொன்னவற்றில் தமிழ் உண்மை யியலுக்கும் பிறவற்றிற்குமுள்ள ஒற்றுமையைக் காட்டுவதற்கு எக்கொள்கையிலிருந்தாவது ஓர் எடுத்துக் காட்டைக் கூறி யிருப்பின் அதுபற்றி அக்கொள்கையின் பல பகுதிகளும் தமிழ் உண்மையியலுக் கொத்திருக்குமென்று கருதுவது பொருந்தாது. எடுத்துக் காட்டாகக் கூறிய ஒன்றில் மாத் திரமே ஒற்றுமையுண்டென்று கொள்க. அவ்வக் கொள்கை யைத் தழுவியவர்கள் தமிழின்பாலமைந்த உண்மையியல் தங்களுக்குரியதோ அன்றோ வென்று ஆராய்ந்தறிவதிற் கருத் துடையராதல் வேண்டும்.

தமிழின்பாலுந் தமிழர்பாலும் மெய்யன்புடையுவர்க்கு, இவ்வாராய்ச்சி தலைசிறந்ததாக வேண்டும். வட இந்திய வர லாற்றுப் புலவராகிய தத்தர் (Dutt) என்பவர் 3000 ஆண்டு களுக்கு முன் சிந்துநதிப் பள்ளத்தாக்கிற் குடிபுகுந்த ஒரு சிறு ஆரியக் கூட்டத்தினரைப் பற்றியும், இக்காலத்திலுள்ள சாதி பாகுபாடின்றி, பெருமிதத்தை அவர்கள் வளர்க்கும் வழக்க முள்ளவர்களாயிருந்ததைப் பற்றியும், அவர்கள் பிறகு கங்கை நதி பாய்கின்ற நாட்டிற் புகுந்து அங்குள்ள பழைய குடிகளை ஆரியராக்கினமை பற்றியும், இறுதியில் தென்னிந்திய மக்களை ஆரியப்படுத்தினமை பற்றியும் பேசுகின்றார். தென்னிந்தியா வில் ஆரியர் புகுந்த ஞான்று சாதிகளை வெவ்வேறாகப் பிரிக் கின்ற இருப்புச் சுவர்கள் இருக்கவில்லை என்பதும், ஒவ்வொரு மகனுடைய அறிவொழுக்கங்களே அவன் இன்ன வகுப்பைச் சேர்ந்தவனென்று துணியக் காரணமாயிருந்தன வென்பதும், திராவிடர்கள் தங்களுக்கே யுரிய ஒரு நாகரிகத்தை யுடையரா யிருந்தன ரென்பதும் தத்தருடை முடிபு. இங்ஙனம் ஆரியம் பரவியதைப் பற்றி தத்தர் கூறுவதுண்மையா யிருப்பினும், தென்னிந்தியாவில் ஆரியக்குருதியுந் தன்மையு முடையவர்கள் மிகமிகச் சிலரே என்று சொல்லவேண்டும். இக்காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள பற்பல வகுப்பினரின் மண்டை யோட்டு வடிவத்தை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை வெளிப்படும். நானொரு பிராமணனல்லாதானாகையால் இது பற்றி யான்கூறுவதில் எவ்வகை ஐயப்பாடும் எழாமலிருக்க

வேண்டுமென்று விரும்புகின்றேன். எனது நண்பர்களுள் சிறந்தவர்களுந் தவறாது நின்றவர்களும் பிராமணர்கள்தான். அவர்களை நான் பெரிதும் போற்றுகின்றேன். இக்காலத்து பிராமணர்களின் மூதாதையர், ஆரிய ரிங்கு வந்த பொழுது, தென்னிந்தியருள் கல்வியொழுக்கங்களிற் சிறந்தவராய் விளங்கியிருத்தல்வேண்டும். இதனுலிவர்கள் பொதுமக்களால் பெரிதும் போற்றப்பட்ட ஒரு தனி வகுப்பினராயினர். தமிழன்னையின் சிறந்த மக்களாகிய இவர்கள் அவ் வன்னையின்பால் தோன்றிய பிறமக்களைத் தம்முடையவரென்று ஏற்றுக்கொண்டு அவர்களை உயர்த்தக் கடமைப் பட்டவரல்லரோ? உண்மையாயிவர்களுக்குத் தாய்நாட்டி லன்புண்டாயின் இது செய்யாரோ? பெரும்பாலான பிராமணர் பிறகு தமிழருடன் தமக்கு உறவில்லை என்று சொல்லும் பான்மையுடையவர்களும், தமிழன்னையையே ஏற்றுக் கொள்ளாதவர்களும், உண்மையில்லாத கலப்பற்ற ஆரியப் பிறப்புத் தமக்குண்டென்று கருதுகின்றவர்களு மாயிருக்கின்றுர்கள். ஆரியன் மாத்திரந்தான் துறக்கத்திலிருந்து வந்தவன் போலும்! மேலை நாட்டு ஆராய்ச்சியாளரெல்லாம் ஆரியர்கள் முதன் முதல் தோன்றியவிடம் பாபிலன் அல்லது (Babylon) பால்டிக் கடற் கரையருகேயுள்ள ஒரு நாடு என்று சொல்ல ஆர்வமுடையவர்களாயிருக்கிறுர்களென்பது குறித்து தத்தர் தாமே சிறிதுவருந்திக் கூறுகின்றுர். தென்னிந்தியாவிலுள்ள வரலாற்றுசிரியர், எழுத்து, கோவில், கட்டிடம் முதலிய கொண்டு பழமை ஆராய்வோர் யாவரும் பிராமணர்களே. திறமை பொருந்திய இவர்களது ஆராய்ச்சி குறித்து நாம் பெருமையடைய வேண்டும். ஆயினும், இவர்கள் பெரும்பாலும் தங்களைத் தமிழரல்லாத ஆரியரென்று கொள்ளும் மனப்பான்மையுடையராயிருப்பதுமன்றித் தமிழும் தமிழரும் சமஸ்கிருதத்திலிருந்தே எல்லாவற்றையும் பெற்றனரென்பதை நிறுவவேண்டா உண்மையாகக் கருதுகின்றனர். இவர்களிலொருவர் தாமெழுதிய நூலொன்றில் (Tamil Studies) ஒவ்வொரு பக்கத்திலும் அதிகாரத்திலும் தென்னிந்தியாவிலுள்ளவர்களில் பிராமணர்களுக்கு மாத்திரம் ஆரியப் பிறப்புண்டென்பதைத் தெளிவாக நிலைநிறுத்த முயல்கின்றுர். இப்பெற்றியராதலின் இவர், தமிழர் தமக்கே யுரியதென்று கூறக்கூடிய பெருமை வாய்ந்ததொன்றுமில்லை என்று கூசாமற் பேசுகின்றுர். தமிழர் பெற்றவற்றுள் இழிந்தவையெல்லாம் அவர்களது முன்னேரிடமிருந்து வந்தவை. சிறந்தவெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்து பெற்றனவே என்பதிவர் கொள்கை. டாக்டர் கால்ட்வெல் தாமெழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் தமிழரைப் புகழ்ந்து

"ஒழுக்கம் பற்றிச் சுருங்கக் கூறும் வகையில், தமிழ் சமஸ்கிரு தத்தை வென்றது எனப் பெரும்பாலோர் நினைக்கின்றனர்," என்று கூறியுள்ளார். இதற்கு விடையிறுக்கப்புகுந்த பிராமண நூலாசிரியர் "வாழ்க்கையில் ஒழுக வேண்டிய முறையைப் பற்றி எடுத்துரைக்குந் தமிழ் நூல்கள் தொகையில் பெருகி யிருப்பதே பண்டைத் தமிழர்கள் ஒழுக்கத்திற் குறைந்தவர்கள் என்பதற்குச் சான்றாகும்," என்றெழுதுகின்றார். இதை அவர் விளங்கும் வகையைப் பார்ப்போம்.

திராவிடனுடைய பல் ஊன் தின்று தேய்ந்து போயிற் றென்பதைக் காட்ட பொருநராற்றுப்படையில்

"கொல்லை யுழுகொழு வேய்ப்பப்பல்லே
யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி"

என்று வரும் அடிகளை எடுத்துக்கூறி, இத்தகைய வாழ்க்கை யுடையார்க்கே,

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்"

என்ற அறிவுரை வேண்டிதாயிருந்ததென்று பகர்கின்றார். இங்ஙன மிவர் கூறுவதால் திருவள்ளுவரது பெரியநூலின் மாட்சி குன்றி விடவில்லை. ஆனால், தமிழர்க்குள் இவ்வகுப் பைச் சேர்ந்தவரென்று கூறலாகாத (பொருநர்) ஒருவர், ஊன் உண்பதுபற்றிக் கூறியதை எல்லார்க்கும் பொதுவெனக் கொண்டு தமிழரனைவோரையு மிவர் தாக்குகின்றார். இவர் செம்மை கடைப்பிடித்தாராயின் மேற்கூறியவற்றோடு,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று"

என்ற குறளையுங் காட்டி, மேல் வகுப்பினராகிய பிராமணர்கள் வேதத்திற்கூறிய யாகங்கள் இயற்றுவதன் பெயரால் ஆயிரக் கணக்கான விலங்குகளின் இறைச்சியைத் தின்றதைக் கண்டிப் பதன் பொருட்டு, தமிழருள் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவர் குறளிலிவ்வாறு கூறவேண்டியதாயிற்றென்பதையும் விளக்கியிருக்க வேண்டும். இவர் தம்மைத் தமிழரென்று கூறிற் தமிழைத் தமதன்னையாக ஏற்றுக் கொண்டிருப்பின் மேற் போந்தவாறு இவர் மொழிந்தது தங் குற்றத்தைத் தானே யுணர்ந்ததாகும். அக்குற்றமும் ஒரு தவறான கருத் தாற் பிறந்ததாகும்.

அறிவுத்துறையிலேயே எல்லாவற்றையும் ஆராய விரும்பு வோர், முற்காலத்தின் தன்மை இக்காலத்தில் நாம் காண்

பதைக் கண்டு துணியப்படவேண்டும்; அறியப்படாததை அறியப்பட்டதன் துணைகொண்டு முடிவு கட்டவேண்டும் என்ற கொள்கையைத் தழுவியவர்கள். இரத்தக்கலப்பால் ஆரியத் தன்மையைத் தென்னாட்டினர் பெற்றனர் என்பதுண்மையாயின், அஃதெங்ஙனம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதை இக்காலத்தில் நாம் காணக்கூடிய நிகழ்ச்சியின் துணைகொண்டு தான் நாமறியலாம். இந்தியர்களுள் மிகத்தாழ்ந்தவர்களே இந்த வகையில் தம்மை உயர்த்திக்கொள்ள உடன்படுகிறார்கள். இதன் பயனாக இக்காலத்தில் ஆரிய, இந்திய அல்லது யூரேஷிய மக்கள் தோன்றியுளார். அருவறுக்கத் தகுந்ததென்பது பற்றியும், வரலாற்றோடு இசையாதென்பது பற்றியும், இரத்தக் கலப்பால் ஆரியர் தென்னாட்டில் பரவினரென்பதை நாம் நீக்கி, கல்வி யொழுக்கங்களால் ஆரியம் பரவிற்றென்று கோடலே நலம். இதனால் பிராமனர் பிராமணரல்லாதாரென்ற இருவகுப்பினரின் தூய்மையும் போற்றப்படும். ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து முதல் முதல் சிந்து நதிக்கரையினும், பிறகு இந்தியாவின் வேறு பகுதிகளினும் பரவினார்க ளென்பதையான் மறுக்கவில்லை. அவர்கள் மத்திய இந்தியாவின் பழைய குடிகளாவென்பது தான் கேள்வி. இந்த ஞாலத்து வரலாற்றின் மூன்றும் ஊழியில் (Tertiary Epoch) சீனதேசத்தின் கீழ்க் கரையிலிருந்து இங்கிலாந்து வரையினுள்ள மத்திய ஆசியாவை உள்ளிட்ட பெரு நிலப்பகுதி ஒரே கடலாயிருந்ததென்றும், தமிழகமும் தென்னிந்தியாவும் நிலமாய் விளங்கிய பன்னெடுங் காலத்திற்குப்பின் மத்திய ஆசியாவும், இமயமும் கடலினின் றுங் கிளம்பின வென்று மண்ணின் கூறறிவார் துணிந்து கூறுகின்றனர். வட இந்தியாவும், மத்திய ஆசியாவும் வாழ்க்கைக் குரிய இடங்களாக மாறுவதற்குப் பல்லூழிகளுக்கு முன்னே தென்னிந்தியா அங்ஙிலைபெற்று விளங்கிய தென்பதை மண்ணின் கூறறியாரும், காவிரி, கிருஷ்ணா, கோதாவரி, கங்கை, என்ற ஆறுகள் கடலொடு கலக்குமிடத்திலுள்ள திட்டுகளின் உயரத்தைக் கொண்டறியலாம். காவிரி என்பது ஒருசிறிய ஆறேயாயினும், அதன் முகத்திலுள்ள திட்டு, கடல் மட்டத் திற்குமேல் 250-அடி உயர்ந்திருக்கின்றது; மற்ற மூன்று ஆறுகளிலுள்ள திட்டுகளோ 36-முதல் 60-அடி உயரமே யுடையன. இஃதொன்று கொண்டு தென்னிந்தியாவின் இறப்ப மிக்க தொன்மையை அறிதல் கூடும். உயிர்நூல் புலவரும், ஒருகாலிருந்து மறைந்த பறவை விலங்குகளை ஆராய்வோரும், உயிர் வகைகளின் பெருக்கமும் வளர்ச்சியும் தென்னிந்தியாவில் முதன் முதல் செவ்வனே நடைபெற்றன வென்று விளம்புகின் றன. மற்றும், முதன் முதல் மனிதன் தோன்றிய விடம் கடல்

கொண்ட தமிழகமாயிருக்கலா மென்று அவர்கள் கருதுகின்றனர். பறவை விலங்கு வகைகள் பெருகி வளர்தற்கு மிகவும் பொருத்தமான தட்ப வெப்ப நிலையில், முதலூழிக்கண்ணே தென்னிந்தியாவில் உயிர்தோன்றி வையக அதிர்ச்சிகள் முதலாகிய பேரிடையூறின்றி இதுகாறும் வளர்ந்து கொண்டே வந்ததெனின், உயிர் வகைகளின் வளர்ச்சிக்குப் பொருத்தமில்லாத நிலையையுடைய மத்திய ஆசியாவில் உயிர் முதல் முதல் தோன்றியது நான்காம் ஊழியில் எனின், ஆரியர்கள் மத்திய ஆசியாவின் பழைய குடிகளென்று நினைப்பதற்கிடமியாதுளது? மூன்றும் ஊழியின் இறுதியில் நிகழ்ந்த பெரிய ஞாலக் குழப்பத்தினல் மத்திய ஆசியா கடலினின்றும் வெளிவந்து பன்னெடுங்காலஞ் சென்றபின், நாலாமூழியிலிருந்த மக்கள் சிறிது சிறிதாகத் தென்னிந்தியாவிலிருந்து மத்திய ஆசியாவிற்குக் குடிபோயிருக்க வேண்டும். வரலாற்றிற்குட்பட்ட காலத்தில் மற்ெருரு சிறிய குழப்பத்தின் பயனுக தென்னிந்தியாவில் மற்ெருரு பகுதி கடலாற் கொள்ளப்பட்டு இந்தியாவின் மத்தியிலுள்ள நிலம் முன்னினு முயர்வதாயிற்று.

இறுதியிற் கூறிய இக்குழப்பம் நேர்ந்தபின் இந்தியாவில் வாழ்ந்த மக்கள் ஒருவரோடொருவர் அளவளாவி யிருந்தது நின்றுபோய் வடக்கிலிருந்தவர்கள் ஆரிய நாகரிகத்தையும் தெற்கிலிருந்தவர்கள் தமிழர் நாகரிகத்தையும் தனித்தனியே வளர்த்திருக்க வேண்டும். இதன் பிறகு வடக்கிலிருந்தவர்கள் மேற்கு முகமாகவுந் தெற்கு முகமாகவும் பரவியிருக்க வேண்டும்.

இது பற்றியுந் தனியாக யான் எடுத்துரைக்க வேண்டிய சில மொழிகுறித்த உண்மைகள் பற்றியும், தென்னிந்தியாவிலிருந்து மக்கள் மத்திய ஆசியாவிற்குச்சென்ற பின்னரே, அங்கிருந்து அவர்கள் தெற்கே வந்தனர் என்று கருதக்கிடக்கின்றது. இதை ஏற்றுக்கொண்டால் ஆரியர்களைப்பற்றிய வெவ்வேறு வரலாறுகளுக்குள்ளிருக்கும் முரண்பாடு எளிதில் நீங்கும்.

நற்குணப் பயிற்சி

[தென்னாப்பிரிகா - டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை]

மக்கட்கு நற்குணமானது பெருஞ் சிறப்பை விளைவிப்பதால் அதனைத் தம்முயிரினும் அதிகமாகப் பாராட்டி மக்கட் கூட்டத்தில் மலிந்து பரவச்செய்தல் அவசியமாகும். அங்ஙனம் அது எங்கும் பரவி ஜனசமூகத்துக்குப் பெரியதோர் நன்மையைப் பயக்க வேண்டுமானால் அதனைப் பயிலும் வழியினைக் குறித்துப் பலவிடத்தும் சான்றோர்கள் கூறியுள்ளவற்றை அறிந்தொழுகுதல் சாலவும் நன்றாம்.

நற்குணப் பயிற்சி முக்கியமாக மூன்று பிரிவுகளாக வகுத்தற்குரியதா யுள்ளது. அவை,

(க) குழந்தைகள் இளமைதொட்டே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பபடும் வரை நற்குணங்களிற் பயிலுதல்.

(உ) பாடசாலைகளில் மாணவர்கள் நற்குணப் பயிற்சியைப் பெறுதல்.

(௩) கல்விகற்று முடிந்த பின்னர் உலக வாழ்க்கையுட் பட்டவர்கள் நற்குண நற்செய்கை யுடையராய் விளங்கல் என்பனவாம்.

இனி, இப்பிரிவுகள் ஒவ்வொன்றினைக் குறித்துஞ் சுருக்கமாகக் கூறுவோம்.

பள்ளிக்கூடத்துக்குப் போகும் பருவத்திற்கு முன் குழந்தைகள் தம் பெற்றோரிடத்து மிக்க பற்றும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். ஆனால், அப்பிள்ளைகளை எவ்வாறு வளர்த்து வந்தால் தமக்குப் பிற்காலத்தில் அவர்கள் பெரிதும் பயன்படுவர் என்பதைப் பெற்றோர்கள் பலர் நன்கு அறிந்திலர். பிள்ளைகளை வளர்த்தல் எளிதான விஷயமன்று; அது மிகவும், அருமையும் மேன்மையுமான காரியமென்றே கூறலாம். அந்தோ! பிள்ளைகளை முறையாகப் பயிற்றும் விஷயத்தில் நாம் மிக்க குறைபாடுடையவர்களா யிருக்கிறோம். நம்மாட்டுள்ள குறைகளை நாமுணர்ந்து அவற்றை நீக்க முயலுவதில் எவ்வித சிறுமையுமில்லை. அதனால் நமக்குப் பெருமையே விளையும். பொதுவாகப் பெற்றோர்கள் தமக்குக் குற்றமெனத் தோன்றுவனவற்றை யெல்லாம் சிறுவர் மேலேற்றித் தாம் செய்வதெல்லாம் சரியென நினைக்கிறார்கள். அங்ஙனம் கருதுவது சாதாரண மனிதர்களின் இயல்பென்றாலும், பிள்ளைகளோடு பழகும்போது பெரியோர்கள் பிள்ளைகளின் செய

லில் குற்றமுளதா, இலதா என்பதை உணர்ந்து, குற்ற மிருப்பின் அதனை மறுமுறை அப்பிள்ளைகள் செய்யாதிருப் பதற்கு நாம் யாது செய்தல் வேண்டும் என்று கருதுதல் வேண்டும். அங்ஙனமின்றிக் குற்றம் ஒன்று கண்டவுடனே கோபங்கொண்டு சிறுவர்களை ஒறுப்பது முறையன்று.

தாய்மாரிட மிருந்து குழந்தைகள் அறிந்து கொள்ளக் கூடிய பண்புகள் பல. அத்தாய்மார்கள் கல்விகற்று, உண்மை யறிவுடைய உத்தம மாதர்களா யிருப்பார்களானுல் அவர் களால் சிறுவர்கள் அடையும் பலன் அளவற்றது. இதனு லன்றோ ஒரு பெரியவர், 'ஒரு ஆடவனுக்குக் கல்வி பயிற்றினுல் கற்றவனுகிருன். ஒரு பெண்மணியானவள் கற்றுணர்ந்து விளங்குவாளானுல் ஒரு குடும்பமுழுவதும் அதன் பயனை யடைகிறது; குடும்பம் மட்டுமா? அவள் மூலமாக அக்குடும் பத்தின் மக்கட் கூட்டமனைத்தும் நன்மையுறுகின்றன' என்று வெகு அழகாகக் கூறியிருக்கிருர்.

ஆகையால், நாம், நம் சிறுவர்கள் நற்குண சம்பன்னராய் விளங்கவேண்டுமென்று விரும்புவோமானுல் மேற்கூறிய வாக்கியத்துள் பொதிந்துள்ள நுண்பொருளை யுணர்ந்து நமது பெண்களுக்கும் கல்வி பயிற்றுதல் வேண்டும்.

பள்ளிக் கூடத்திற்குச் செல்லத் தொடங்கியது முதல் உயர்தரப் படிப்பு முடியும்வரை மாணுக்கர்களுக்கு உபாத்தி யாயர்களால் நற்குணம் வளர்த்தல் கூடுமாயினும், அவர்கள் தமது முயற்சியினுல் மனத்தை அப்போதைக் கப்போது நல் வழியில் திருப்பிக் கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகளுக் காசிரியரா யிருப்பவர்கள் மாணவர்கள் அறிவு வளர்தற்கு வேண்டியவற்றை மாத்திரம் போதித்தல் போதாது; ஒழுக்கம் ஓங்கி வளர்வதற்கானவற்றையும் போதித்தல் வேண்டும்; மாண வர்களோடு தம்மாலியலுமளவு உபாத்தியாயர்கள் நெருங்கிப் பழகவேண்டும்; தமது மாணவர்கள் நல்ல புத்தகங்களை எடுத் துப் படிப்பதில் அவா வுண்டாகும்படி தூண்டவும் வேண்டும். அதனுல் பொதுவாகப் படிப்பினிடத்து ஆவல்கொண்ட மாண வர்கள் பற்பல தேசச் சரித்திரங்களையும் படித்து அவற்றிலிருக் கும் உண்மை, ஒழுக்கமுறை முதலியவைகளை உணர்ந்து நல் வழிப்படுவதல்லாமல், எதாவதொன்றில் ஐயப்பாடு நிகழும் போது பல நண்பர்களுடன் கலந்து அளவளாவி நாளடைவில் நல்லொழுக்கத்தையு மடைவர்.

இவ்வாறு திருந்திய கல்வியைப் பெற்றுள்ள மாணவர்கள் பின்னர் தொழிலில் அமர்ந்ததும் தம் வாணுளைக் கழிக்கும்

போது அவர்கள் கற்றதன் பயனாக அதற்குத் தகவே ஒழுகி நிற்றல் வேண்டும். கல்விநலம் மிக்கா னொருவனுக்கு நற்குண மில்லாது ஒழியுமாயின் அவனைப்போன்ற பேதையினும் பேதை இவ்வுலகில் யாருமிரார் என்பது பெரியோர் கருத்தாகும். கல்வியறிவினை இயற்கையிலேயே நுண்ணறிவுடையவன் தான் எளிதிற் பெறலாகும். நற்குணமோ யாவராலும் பயிலுதற்குரியது. நற்குணத்தோடு கூடிய கல்வியே பிறரால் மதிக்கத்தக்கது, மதிப்புடையது.

நற்குணங்களெல்லாம் தொடங்குங்கால் துன்பம் போல் தோன்றி இறுதியில் இன்பம் பயக்கும். தீக்குணங்களோ எளிதாய்த் தோன்றிப் பின்னர்ப் பெருந் துன்பத்தை விளைவிக்கும். ஆகவே மக்களாகப் பிறந்த யாவராலும், எக்காலத்தும், எவ்விடத்தும், எந்நிலையினும் போற்றப்படுவதும், போற்றற் குரியதும், போற்றிற் பெரும்பயன் விளைவிப்பதும் நல்லொழுக்கமே யன்றிப் பிறிதில்லை. அறிவுடையோர் பாராட்டும் கல்வியறிவும் அதற்கு அடுத்தபடியாகுமே யன்றி அதினினும் உயர்ந்ததெனக் கொள்ள இயலாதெனின் ஒழுக்கத்தின் விழுப்பத்தைப்பற்றி இனி உரைப்பதென்னே!

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

எப்படி யுய்குவேன் ?

சிறியனேன் உனக்கே சேவகன், உன்றன்
சேவடிக் கமலத்தி னின்றும்
பிரிகிலேன் என்னாம் பிறிதிலேன், உன்பின்
பெட்புடன் றொடருவ தல்லால்
அறிகிலேன். பூவி லனைத்துநீ யென்றே
யறிகுவேன். நெறிபிறி தில்லேன்.
இறைவனே யென்னை யின்முகம் பாரேல்
எப்படி யுய்குவேன் எளியேன்? 1.

உன்னலு முனதே ; யுயிர்த்தலு முனதே ;
யுடலுயிர் மனமெலா முனதே ;
என்னலு முனதே ; யிச்சையு முனதே ;
யென்செய லியாவையு முனதே ;
கண்ணொடு கதிருங் காட்சியு முனதே ;
கற்பதுங் கேட்பது முனதே ;
மண்புவி வாழ்வின் பயனெனச் சிறியேன்
மதிப்பதுந் துதிப்பதுன் னடியே ! 2

பிடிப்பிலேன் வேறு பிழைப்பிலேன், போற்றும்
பெற்றவர் சுற்றமும் பற்றேன்.
படிப்பிலே கேள்விப் பயனிலே யொன்றும்
பார்த்திலேன் ; பாடியே கண்ணீர்
வடிப்பதல் லாலோர் வகையிலேன் ; உனக்கே
வாழ்வலால் வாழ்விலேன் ; கையை
எடுக்கிலேன் ; நஞ்சாம் விடுக்கிலேன் ; பாரேல்
எப்படி யுய்குவேன் எளியேன் ! 3

பெற்றவள் வெறுத்தாற் பிஞ்சிளஞ் சேய்க்குப்
பிழைப்புண்டோ ? வள்ளலே, யென்னை
முற்றுநீ யுள்ளம் ஊன்றிநன் கறிவாய் ;
முதிர்ந்தவுள் ளன்பனேன் செய்த
குற்றங்க ளெல்லாம் குணமெனப் பொறுத்தாய்.
குளிர்மனக் கருணையி னாலே,

சற்றெனை முகம்பார்த் தருளலை யாகிற்
றனியனேன் எவ்வகை யுய்வேன் ? 4

வான்கண்ட மயில்போல், மழைகண்ட பயிர்போல்,
மதுவனங் கண்டவண் டினம்போல்,
யான்கண்ட போதுன்னருள்வடி வதனை
யளப்பருங் களிப்பினிற் குளிப்பேன்.
தேன்கண்ட மொழியே, சேண்விரி யன்பே,
தெவிட்டரும் பாகினுந் தித்திப்பே,
ஏன்கண்டுன் சேய்க்கோர் இதமொழி கூறாய்
எப்படி யுய்குவேன் எளியேன் ! 5

—சுவாமி சுத்தானந்தபாரதியார்.

காஞ்சிபுரம் ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாடு (27-2-38)

சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களின் தலைமைப் பேருரை

வரவேற்புக்கழகத் தலைவரே ! பிரதிநிதிகளே ! நண்பர்களே !

நன்றி கூறல்

இப்பெரும் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்தமைக்காக என் மனப்பூர்வமான வந்தனத்தை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய அன்பான அழைப்பை ஏற்றுக்கொள்ள முதலில் நான் தயக்கமடைந்தேன். எனினும், இந்தியைக் கட்டாய பாடமாக்குவது ஒரு மகத்தான பிரச்னைமட்டு மல்லாமல், நமது பாஷை, கலை, நாகரிகம் ஆகியவைகளைப் பாதிப்பதாக இருப்பதை உணர்ந்த பிறகு, உங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டேன். மேலும், என்னை இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்வதன்மூலம், இந்தப் பிரச்னை தமிழர்களை பாதிக்கக் கூடியதோடு, இந்த மாகாணத்திலுள்ள நான்கு பாஷா பிரதேசங்களையும் பாதிப்பது என்பதை அரசாள்வோர் அறியட்டும் என எண்ணுகிறீர்கள் என நம்புகிறேன். அது முற்றிலும் உண்மையேயாகும். இவ்விஷயத்தில் உங்களுடன் ஒத்த கருத்துடைய பல ஆந்திரர் இருக்கிறார்களென உறுதி கூறுகிறேன். திராவிட ரத்தம் ஓடும் ஒருவனாவது, இந்த வேண்டாத இந்தி பாஷை ஏற்கனவே பாரத்தைச் சுமந்துள்ள நமது சிறுவர்களிடமும் சாந்தத்தோடு இருக்கும் நம் வீட்டினுள்ளும் புகுத்தப்படுவதை சகித்துக்கொண்டிருக்கமாட்டான்.

முதலிலேயே ஒன்று கூறிவிடுவோம். பிள்ளைகளும் பெற்றோரும் விரும்பினால் இந்தியைப் படிக்கலாம். அதை நாம் கண்டிக்கப் போவதில்லை. கிரேக்க பாஷையானாலுஞ் சரி, அன்றி சீன பாஷையானாலுஞ் சரி, யார் வேண்டுமானாலும் தமக்குப் பிரியமான பாஷையைப் படிக்க உரிமை இருக்கிறது. கட்டாயப்படுத்தி இந்தியைத் திணிக்கும் செயலையே நாம் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம்.

பாரதியாருக்குப் பாராட்டு

சர்க்கார் (காங்கரஸ் சர்க்கார்) கொண்டுவரும் இத்திட்டத்தை எந்தக் காரணங்களுக்காக எதிர்க்கிறோம் என்பதை மிகத் திறமையாக, தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் முதன்மந்திரி, கனம் ராஜகோபாலாச்சாரியாருக்கு விடுத்த ஒரு பகிரங்கக் கடிதத்தில் விளக்கிக் கூறியுள்ளார். தமிழ் நாட்டின் திலகமெனத் திகழும் அண்ணாமலை சர்வகலாசாலையிலே, தோழர் பாரதியார், தமிழ்ப்பேராசிரியராக உள்ளார். அவர் கலைபலகற்றவர். ஆகவே இவ்விஷயமாக, திடமான அபிப்பிராயங்கூற மிகத் தகுதி வாய்ந்தவர். அவர் காங்கரஸ் வாதி. சென்ற தேர்தலின்போது தன்னால் கூடுமான அளவு காங்கரஸ் கட்சியையே ஆதரித்து ஓட்டுகள் வாங்கித் தந்தவர். ஆகவே அவருடைய அபிப்பிராயங்களைக் கட்சிச் சண்டை, மனமாச்சரியக் காரணமாக எழும்பியவை, எனப் புறக்கணிக்கவும் முடியாது.

அந்த பகிரங்கக் கடிதத்திலே, அவர் காட்டியுள்ள வாதங்களை விரித்துக் கூறவேண்டிய அவசிய மில்லை. இவ்விஷயத்தில், அதிகாரத்தை உபயோகித்துத் திணிக்கமுயல்வது, "வேண்டப் படாதது, அவசியமற்றது, புத்திசாலித்தனமு மகாது," என்று அவர் கூறியுள்ளார். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பிரஜா உரிமை பாதிக்கப்படுவதோடு, தமிழின் தனிப்பெருமை குன்றும்; திராவிட நாகரிகம் சிதையும். அவர் எடுத்துக் காட்டியுள்ளபடி, இந்தப் போக்கிற்கு இரண்டு காரணங்களுண்டு.

ஏன் இந்த பேரம்?

ஒன்று சில வடநாட்டுத் தலைவர்கள் கூடிய ஒரு இரகசிய கூட்டத்திலே, தோழர் ராஜகோபாலாச்சாரியார், காங்கரஸ் பதவி ஏற்றால் தான், இந்தியைக் கட்டாய பாடமாக்கிப் பரப்புவதாக ஒப்புக்கொண்டு வாக்களித்தது. இரண்டாவது, சமஷ்டி ஏற்பட்டால், அகில இந்தியாவிற்கும் ஒரு பொதுப் பாஷை தேவையாக இருக்குமென்பது. தோழர் பாரதியார் இந்த இரண்டு காரணங்களும் பொருத்தமற்றன, வாதத்தின் முன்பு நிற்காதன என்பதைக் கூறியுள்ளார். இந்த மாகாண மக்களைக் கலந்து ஆலோசிக்காமல், சொந்த முறையிலே வாக்களிக்க, தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கு உரிமை இல்லை. இது காங்கரசை மட்டும் சேர்ந்த விஷயமல்ல. காங்கரசிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கட்டாய இந்திப் பிரவேசத்தை எதிர்க்கிறார்கள். எவ்வளவு பெரியவராயினும், ஒருவர் தானாக ஒரு ஏற்பாடு செய்துகொண்டால் அது மற்றவர்களையும் கட்டுப்படுத்தக் கூடியதாகாது.

ஹிந்தி நமக்கு அன்னிய மொழியே!

இரண்டாவது காரணத்தையும் கண்டித்து, தோழர் பாரதியார் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு இந்தியைக் கட்டாயப்படுத்துவதின் தவறைப் பல காரணங்களுடன் விளக்கியுள்ளார். அவைகளை நேயர்கள் அறிவீர்கள். நான் மறுபடி அவைகளைக் கூற ஆசைப்படவில்லை. மனிதனுடைய கருத்துக்களை, பாஷை எவ்வளவு தூரம் உருவாக்குகிறது என்பதை இன்றைய (காங்கரஸ்) சர்க்கார் உணரவில்லை. மக்களுடைய பாஷையை ஒட்டியே மனோ வளர்ச்சி இருக்கிறது. குழந்தைகளின் கருத்து வளர்வதும், பிறகு வாழ்க்கையிலே இலட்சியங்கள் ஏற்படுவதும், பாஷை, கலை, ஞானம் ஆகியவைகளினாலேயேயாகும். காங்கரஸ் தலைவர்கள் பழைய காலத்திய கலைகளிலே பற்றுக்கொண்டவர்கள். அவர்களுடைய தேசீய வாழ்க்கைத் தத்துவங்களும், கருத்துக்களும் நம்மைத் துவாபர யுகத்திற்கோ, கிரேதா யுகமதிற்கோ அழைத்துப்போகக்கூடியன. அப்படிப்பட்ட இவர்கள் அன்னிய பாஷையை நம்மிடையே புகுத்துவானேன்? திராவிடர்களாகிய நமக்கு, ஆங்கிலம் எப்படி அன்னிய பாஷையோ, அப்படியே ஹிந்தியும் அன்னிய பாஷைதான். அதிலும், ஹிந்தி பாஷை பழைய நாளைய பாஷையுமல்ல, பூரண வளர்ச்சி அடைந்ததுமல்ல.

தமிழெங்கே இந்தி யெங்கே!

நான் ஹிந்தி பாஷையைக் கற்றறிந்தேனில்லை; எனினும், எனக்குத் தெரிந்தவரை, 13-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான், ஹிந்திபாஷையின் ஆதி கவி எனப்படும் "சண்ட்பார்டி" என்பவ ரிருந்தாரென அறிகிறேன். அவர், "பிரிதிவிராஜராஸ்யூ" என்ற நூலை எழுதினார். அந்தப் பாஷையிலே அதற்கு முன்னால், வேறெந்த கலையும் இருந்ததாக நாமறியோம். ஆனால் தமிழ் இந்தியாவின் ஆதி காலபாஷை. தமிழ் இலக்கணமாம் 'தொல்காப்பியம்' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது. தமிழெங்கே? ஹிந்தி எங்கே? இரண்டிற்குமா ஒப்பிட்டுப்பார்ப்பது! தொல்காப்பியம் என்பது ஒரு இலக்கண நூல். ஒரு பாஷை, நல்ல வளர்ச்சி அடைந்த பிறகு தான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும். ஆகவே இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழ்மொழி ஒரு உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது விளங்கும். தமிழ் மொழி, பண்டைக்கால மொழி என்பதோடு, கவர்ச்சி, வனப்பு நிரம்பியமொழி. அதன் அடிகளை நெருங்கவும் ஹிந்தியினால் முடியவே முடியாது. "கவிதை இயற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில், சமஸ்கிருதத்தைவிட தமிழே சிறந்தது," என டாக்டர் பர்னல் கூறுகிறார். "திராவிட மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்," என்ற புத்தகத்தை எழுதிய ஆசிரியர் கால்ட்வெல் "தமிழில் கலைச் சொற்களை, ஒருகவி திடீரென இயற்றி இருக்க முடியாது. நீண்ட நாட்களாக, அவைகள் உற்பத்தி செய்யப்பட்டு, வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்பதைக் கவனிக்கும்போது, தமிழ் மிகப்புராதன காலத்திலிருந்தே உன்னதமாக வளர்க்கப்பட்டு உச்சநிலை அடைந்தது," எனக் கூறுகிறார்.

இத்தகைய ஆதிமொழி என ஹிந்தியைக்கூற முடியுமோ? குறள், தேவாரம், திருவாசகம், போன்ற ஒரு மணிக்கு ஒப்பான எந்த நூலேனும் ஹிந்தியில் காட்ட முடியுமா? ஒழியட்டும். ஹிந்தி, நன்றாக வளர்ச்சி அடைந்த பாஷை என்றுகூட வைத்துக்கொள்வோம். அதற்காக, அதை நமது மாகாணத்தில் கட்டாயப் படுத்திப் புகுத்த வேண்டுமோ?

வீணுக்கு ஏன் இந்த உழைப்பு?

10, 12 வயதுள்ள முதல் மூன்று பாரங்களில் வாசிக்கும் மாணவர்களுக்குத் திணிக்கப்படவேண்டுமென பிரயத்தனம் நடக்கிறது. ஏற்கனவே, இந்த மாணவர்களின் அறிவுத் திறனுக்கு அதிகமான பாடவகைகள் உள்ளன. இந்தப் புது மொழியைப் பரப்ப ஏராளமான பணச்செலவாகும், ஏராளமான உழைப்பும் தேவையாக இருக்கும். காலம், பணம் இவற்றைக் கட்டாய ஹிந்தித் திட்டத்திற்கு விரயமாக்காது, மாணவர்களின் நன்மைக்கேற்ற வேறு எதற்கேனும் உபயோகித்தால் மிக இலாபகரமாக இருக்கும். இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள்மீது மேலும் சுமையை ஏற்றுவது அடாது.

கோமாளிக்காரணங்கள்

எந்தக் காரணத்திற்காக ஹிந்தி கற்பிக்கப்படவேண்டும்? அதனால் என்ன பயன் விளையும்? மூன்று ஆண்டுகளுக்குக் கட்டாயப்படுத்தப்படுவதால் ஹிந்தியை மாணவர்கள் படிப்பதால், அவர்களுக்கு அந்த பாஷாஞானம் அப்படியே இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது? சிறுபிராயத்தில் ஹிந்தியைப் படிப்பதால் இவர்கள் பெரியவர்களாகி, வேலை தேடிக்கொண்டு வடநாட்டிற்குச் செல்லும்போது, ஹிந்தி பாஷா ஞானம் உதவியாக இருக்குமெனக்கூறுவது வெறும் கோமாளிக் கூத்தாகும். தலைமுறை தலைமுறையாக நமது மக்கள் யாத்திரை, வியாபாரம் முதலியவற்றின் பொருட்டு வடநாடு சென்று வருகிறார்கள். ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கிக் கற்கவேண்டுமென்ற அவசியம் என்றும் ஏற்படவேயில்லை. ஏதோ கொஞ்சம் பேசத் தெரிந்தால்போதும். வடநாடு சென்று திரும்ப ஹிந்தியைப் படித்துவிட்டால் நமது வாலிபர்களுக்கு வடநாட்டிலே வேலை கிடைக்குமெனக் கூறப்படுவது மற்றொரு கேலிக்கூத்து. வடநாட்டிலே படித்தவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டமில்லையா? முதல் மூன்று பாரங்களில் ஹிந்தியைக் கற்றுக்கொண்டதற்காக "மதராசிகளை" சுலபத்திலே, வடநாட்டு மாகாணங்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ளவா போகின்றன? இவைகள் சுத்த அபத்தம்; ஆகவே, இவைகளைப் பொருட்படுத்துவதற்கேயில்லை.

மர்மம் இதுதானே!

ஹிந்தியை வைத்தே தீருவோம் என காங்கரஸ் மந்திரிகள் பிடிவாதமாக இருப்பதன் காரணந்தான் என்ன? இம் மாகாணத்துப் பார்ப்பனர் தங்கள் மூதாதைகள் சரிதை, அவர்கள் பாஷையாம் சமஸ்கிருதம் இவைகளிடம் உள்ள பற்றை மறந்து விடவில்லை என்று

கூறப்படுகிறது. கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக ஹிந்தியைப் படித்துவிட்டு இருப்பவர்களுக்கு, காங்கரஸ்காரர் வேலை தேடிக் கொடுக்கவே இப்பிரயத்தனம் செய்கிறார்கள் எனவும் கூறப் படுகிறது. இவர்களை ஆசிரியர்களாக ஏற்படுத்திவிட்டால், அவர் களும் வயிறு வளர்க்கமுடியும். காங்கரஸ் பிரசாரத்திற்கும் அவர் களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆக இவ்விரண்டு காரியங்களுக் காகவுமே திட்டம் போடப்பட்டிருக்கிறது எனவும் சொல்லப் படுகிறது. இதைப்போன்ற ஏதாவதொரு காரணத்தை தவிர, இவ் வளவு அவசர அவசரமாக ஹிந்தித் திட்டத்தைக்கொண்டுவரப் பதை பதைத்து நிர்பதற்கு, வேறு என்னகாரணத்தைக்கூறுவது? ஒரு வேளை இவைகளே சரியான காரணங்களாக இருக்கக்கூடும். ஆனால் இவைகளேதான் காரணங்களாக இருக்கவேண்டுமெனக் கூறவும் தேவையில்லை. இந்திய ஒற்றுமைக்கு ஒரு பொதுமொழி அத்தியா வசியம் என அவர்கள் மனப்பூர்வமாக எண்ணியுமிருக்கலாம். அது தான் அவர்களுடைய எண்ணம் என்பதை வேண்டுமானாலும் ஒப்புக் கொண்டே பார்ப்போம்.

பொதுமொழி தேவையா?

உண்மையிலேயே, ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கு ஏதாவதொரு காரணத்தைக் கூறவேண்டுமானால், சமஷ்டி ஏற்பட்டு, மாகாணங்களும், சுதேச சமஸ்தானங்களும் ஒன்றாகவும், பொது மக்களிடை ஒரு ஐக்கிய உணர்ச்சி ஏற்பட யாவரும் ஒரு தேசமக்கள் என்ற உணர்ச்சிவளர, ஒரு பொதுமொழி தேவை என்பதைத்தான் கூறமுடியும். அந்த ஒரு காரணந்தான் ஏதோ, பார்வைக்காவது காரணம்போல் தோற்றக்கூடும். இவ்விதம் பார்த்தால், இது அரசியல் நோக்கத்துடன் வரும் திட்டமென ஏற்படுமே தவிர கல்வித்துறையிலுள்ள கொள்கை, இலட்சியங்களுடன் சம்பந்தப்பட்ட தல்ல என்பதும் விளங்கும். ஆனால் சமஷ்டி ஏற்படின். தேசபக்தி வளரவோ, தேசிய ஒற்றுமை பலப்படவோ, மக்கள் ஒன்று கூடவோ, ஒரு பொதுமொழி அத்யாவசியந்தானா? சரித்திரம், மாறுபட்ட உண்மையையே சாற்றுகிறது.

கானடாவைக் காண்போம்!

கானடாவைப் பார்ப்போம். அங்கு சமஷ்டி அரசியல் இருக் கிறது. அங்கு இப்போதும். பிரேஞ்சு இங்கிலீஷ் ஆகிய இருமொழி களும் பேசப்பட்டு வருகின்றன. 1791-ஆம் ஆண்டு சட்டம் ஏற்பட்ட திலிருந்து, குயூபெக் சட்டசபையில். பிரேஞ்சு, இங்கிலீஷ் ஆகிய இரு மொழிகளும், உபயோகிக்கப்படுகின்றன. இருமொழிகளும் உபயோகிக்கப்படவேண்டும் என்பது அரசியல் அமைப்பில் திருத் தங்கள் ஏற்பட்ட நாள் தொட்டு. நடைமுறையிலே காட்டப்பட்டே வருகிறது. இதற்காகத் தனியாக யாதொரு தீர்மானமும் சட்ட சபைகளிலே இயற்றப்படவுமில்லை. [பிரைம்னர் எழுதியுள்ள கானடா சரித்திரம், 1891-ம் ஆண்டு விஷயத்தைப் பார்க்கவும்.] லார்டு டல்ஹவுசி, லார்டு டர்காம் இருவரும், இரண்டு வெவ்வேறான

மொழிகள் நிலவுவதை விரும்பவில்லை. லார்டு டர்காம் இயற்றிய 1840-ம் ஆண்டு "யூனியன் சட்டம்", 41 செக்ஷன்படி சட்டசபை நடவடிக்கைகள் இங்கிலீஷ் மொழியிலேயே இருக்கவேண்டுமெனவும், தேவையானல் மொழிபெயர்த்துக் கொள்ளலாமெனவும், சட்டசபை விவாதங்களின்போது இரு மொழிகளையும் உபயோகிக்கலாமென வும், சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் லார்டு எல்ஜின் வேறு முடிவுக்கு வந்தார். கானடா நாட்டு பிரென்சு மக்கள் தங்கள் மொழியை உபயோகிக்கும் சௌகரியத்தைப் பெறவேண்டுமென்ருர். அதன் படியே, 1848-ம் ஆண்டு, யூனியன் சட்டம் திருத்தப்பட்டு, பழய சட்டத்தின் 41-வது செக்ஷன் எடுக்கப்பட்டதுடன், 1867-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் 133-வது செக்ஷன்படி, சட்ட சபைகளிலும், நீதிமன்றங்களிலும், இங்கிலீஷ், பிரென்சு ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து தரப்பட்டது இதுவே இன்று அமுலில் இருந்து வருகிறது. பிரென்சு கனடியர்களுக்குத் தங்கள் மொழிமீது இருந்தபற்றின் காரணமாக இங்கிலீஷ்தான் கானடாவில் பொது மொழியாக இருக்கவேண்டுமென வற்புறுத்த பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கே துணிவு ஏற்படவில்லை. கானடாவின் தேசியத்திற்கு ஒரு பொதுமொழி இருந்தே தீரவேண்டும், அதுவே இன்றியமையாதது என்றும் கருதப்படவில்லை.

ஆப்பிரிக்கா—மற்ருெரு உதாரணம்

தென் ஆப்பிரிக்காவை எடுத்துக்கொள்வோம். அங்கு இரு ஜாதியினர் இருக்கின்றனர். இருமொழிகள் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு இங்லிஷ், போயர் எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சு மொழி இன்றும் இருந்துவருகிறது. 1909-ம் வருஷத்திய தென் ஆப்பிரிக்கா சட்டத்தில், இங்கிலீஷ் டச்சு ஆகிய இருமொழிகளும் சர்க்கார் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், இரண்டிற்கும் சம உரிமை, சம சந்தர்ப்பம், சம அந்தஸ்து தரப்பட வேண்டுமெனவும், சட்டசபை நிகழ்ச்சிகள், குறிப்புகள் யாவும் இருமொழிகளிலும் எழுதப்படவேண்டுமெனவும், செக்ஷன் 137 கூறுகிறது. மேலும், இரு மொழிகளில் ஏதேனும் ஒன்று தெரியவில்லை என்ற காரணத்திற்காக எந்த சர்க்கார் உத்தியோகஸ்தரையும் நீக்கக்கூடாது என செக்ஷன் 145-ல் கண்டிருக்கிறது ஆகவே, தென் ஆப்பிரிக்காவிற்கு, ஒரு பொது மொழி அவசியம் என்று கருதப்படவில்லை. ஷை யூனியன் சட்டம், பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இயற்றப்பட்டதென்ருலும், அதனைத் தயாரித்தவர்கள், தென் ஆப்பிரிக்கா வாசிகளான ஆங்கிலேயரும், டச்சுக்காரருமே யாகும். இருசாராருக்கும் தத்தமது மொழியை விட்டுவிட மனமில்லை. இருவரும், ஒன்றுபட ஒருமொழி அவசியம் எனக் கருதவுமில்லை என்பது இதனல் நன்கு விளங்குகிறது.

இயற்கையையும் மீறிய நாடு

சுவிட்ஜர்லாண்டு தேசத்திலே மூன்று வித ஜாதியினர் உள்ளனர். மூன்று வித பாஷைகள் பேசப்படுகின்றன. ஆனல் தேசம்

ஒன்றுதான். தேசிய ஒற்றுமையும் உள்ளது. 1874-வது ஆண்டு நிறைவேறிய சமஷ்டி சட்டத்தின்படி ஜெர்மன், பிரெஞ்சு, இதாலியன், ஆகிய மூன்று மொழிகளும் தேசீய பாஷைகளாக ஏற்படுத்தப்பட்டன! அங்கு 100-க்கு 71 பேர் ஜெர்மன் மொழியும், 23 பேர் பிரெஞ்சு மொழியும், 5 அல்லது 6 பேர் இத்தாலிய மொழியும் பேசுபவர்கள் என்ற போதிலுங்கூட, மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன. இந்த மூன்று மொழிகளும் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வந்தன. ஆகவே இவைகளில் எதையும் குறைபடுத்தாத வகையிலே சமஷ்டி அரசியலிலே ஏற்பாடு செய்யப்பட்டதுடன், சட்டங்கள் இம்மூன்று மொழிகளிலும் இயற்றப்பட்டுள்ளன. இப்போது பின்லாண்டு சுயேச்சையாகிவிட்டதாகக் கூறிவிட்டு, தீவுகளும் தனக்குச் சொந்தமென்று கூறிவிட்டது. தீவு வாசிகள் தாம் யாருக்குச் சொந்தமென்பதைத் தாமாகவே தீர்மானஞ் செய்யவேண்டுமென்றனர். 1920-ம் ஆண்டு. அத்திவுகளுக்கு பின்லாண்டு சுயாட்சி தந்தது. ஆனால், தன்னை விட்டுப்பிரியும் உரிமை அளிக்க மறுத்தது. பின்னிஷ் மொழியை, அத்தீவுகளில் திணிக்க பின்லாந்து முற்பட்டது. அவர்கள் அதனை எதிர்த்தனர். அப்போது சர்வதேச சங்கம் குறுக்கிட்டு. அததீவுகளுக்கு மொழி உரிமை வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது. ஷை தீவுகள், ஸ்வீடிஷ் மொழி கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்கே சர்க்கார் செலவில் பணந்தந்து போஷிக்கும். சர்க்கார் கல்விச்சாலைகளிலெல்லாம் ஸ்வீடிஷ் மொழியே கற்றுக்கொடுக்கப்படும். சர்க்கார் செலவில் நடக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதரவில் நடைபெறும் பள்ளிக்கூடங்களிலும் பின்னிஷ் மொழி. சர்க்காரோ, ஸ்தலஸ்தாபனமோ சம்மதித்தாலொழிய கற்றுத்தர வேண்டிய அவசியமில்லை—என சர்வதேச சங்கம் கூறிற்று. பின்லாண்டு சம்மதித்தது.

தேசீய சர்வாதிகாரம் இனி கிடையாது

இந்த (மைனாரிடிகள்) சிறுபான்மையினர் பிரச்சினையை பற்றி, பர்மிங்காம் சர்வகலாசாலையின், சர்வதேச சரித்திரப் போசிரியர், திரு. ஜான் ஸ்டீபன்ஸ், M. A. என்பவர் கூறுவதாவது:—

"இந்த சிறுபான்மையினரின் கல்விச் சாலைகள் விஷயம், சிறுபான்மையருக்கும், பெரும்பான்மை வகுப்பினருக்கும் இடையே பெருத்த விவாதத்தை உண்டாக்குகிறது. இந்த பள்ளிக்கூட பிரச்சினை மிக முக்கியமானதென எங்கும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினை இதை ஒட்டியே நடைபெறுகிறது. அந்தந்த சர்க்காரின் போக்கு எப்படி இருக்கிறது. என்பதைப்பற்றிப் பரிசோதிக்க இந்தப் பள்ளிக்கூடப் பிரச்சினையே முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. புதிய நாடுகளிலே இணைக்கப்பட்ட சிறுபான்மையினர்களுக்கு, சர்க்கார் பள்ளிக்கூடங்களிலே சேரும் உரிமை தரப்பட்டது மிக முக்கியமான ஒரு கொள்கையாகும். ஒரு நாடு, ஒரேவிதமான தேசிய மொழி ஞானத்தை

அங்குள்ள எல்லார்மேலும் சுமத்தியே தீருவது என்பது கூடாது என்பதே இக்கொள்கையின் கருத்து. எல்லோரையும் ஆதரிக்கும் ஒரு நாட்டு அமைப்பிலே, பலப்பல நாகரிகம் மொழி ஞானப்பற்றுள்ளவர்கள் இருக்கலாம். அவரவர்கள் கலைகளை அவரவர்களே அனுபவித்துக்கொண்டு, நாடு என்ற ஒரு கொள்கைக்காக மட்டும், நாட்டினிடம் பக்தி செலுத்தி வாழ முடியுமென்பது இதன் கருத்தாகும்.

ஒரு நாட்டு அரசியலுக்கு சர்வ அதிகாரமும் உண்டு என்ற அரசியல் வைதிகத்தில், மாறுதல் ஏற்பட்டிருப்பதை, இந்த சிறுபான்மையினர்களின் உடன்படிக்கை காட்டுகிறது. ஸ்டீபன்ஸ் எடுத்துக் காட்டியுள்ளபடி: எல்லோரும் ஒரே தேசியக் கலைக்கு அடிபணிய வேண்டுமென்று கூறும் அதிகாரம் ஒரு நாட்டு அரசியல் அமைப்பிற்கு இல்லை என்பதை மேற்படி உடன்படிக்கைகள் விளக்குகின்றன.

ஜெர்மனி சம்பவம்

1919-ம் ஆண்டு நிகழ்ந்த புரட்சிக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஜெர்மன் அரசியல் அமைப்புத் திட்டமும், மொழிப்பிரச்சினை எவ்வளவு முக்கியமானதாகக் கருதப்பட்டது என்பதை விளக்குகிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் இரண்டாம் பகுதியிலே, ஜெர்மனியர்களின் ஜீவாதார உரிமைகள் 113-வது செக்ஷனில் கூறப்பட்டுள்ளது. அதன்படி ஜெர்மன் சமஷ்டியிலே, பல திறப்பட்டவரின் மொழி உரிமையிலே, சட்ட பூர்வமாகவோ, நடைமுறை மூலமாகவோ, சர்க்கார் கைவைக்கக் கூடாதெனக் கண்டிருக்கிறார்கள். தாய்மொழிப் பாதுகாப்பு ஜீவாதார உரிமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது என்பது கவனத்திலிருக்க வேண்டுகிறேன். சர்வதேச சங்கத்தாராலும், ஐரோப்பிய தேசங்களாலும் தாய்மொழிப் பயிற்சி விஷயம் எவ்வளவு முக்கியமானதாகக் கருதப்பட்டது என்பதை எடுத்துக்காட்டவே சிறுபான்மையினரின் உடன்படிக்கைகளை விளக்கிக் கூறினேன். இந்த உடன்படிக்கைகளைக் கவனித்தால் தாய்மொழி பயிலத் தடைகள் விதிக்கப்படவில்லை என்பதே தெரிய வருகிறது. அதைப்போலவே, இப்போது தமிழ் பயில யாதொரு தடையும் போடப்படவில்லை; ஆகவே ஏன் இந்தப் புகார் என்று கூறுவது நமக்குத் திருப்தி அளிக்காது. நாம் என்ன கூறுகிறோமென வெளியிடப்பட வேண்டுமெனவும், சர்க்கார் அதிகாரிகள் நியமனத்தின்போது எந்த மொழிக்காரரிடை அவர் ஊழியம் செய்யபோகிறாரோ, அம்மொழி அவருக்குத் தெரிந்ததுதானா என்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டுமெனவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மூன்று ஜாதியினரும், பெயரளவில் வேறானவர்கள். ஆனால், மிக ஒற்றுமையுடன் கூடிக் கலந்தே வாழ்ந்து வருகின்றனர். இயற்கை, ஏதேனும் பிரிவினைகள் உண்டாக்கினாலும், அதையுங் கடந்து அந்நாட்டினர் ஒன்றுபட்டு வாழ்கின்றனர்.

டிசிநோ என்ற பிரதேசம், மற்ற இடங்களிலிருந்து பிரிந்து நிற்கிறது. பிரம்மாண்டமான மலை குறுக்கே நிற்கிறது. ஷாப்காசன் என்ற பிரதேசத்தை ரைன் நதி பிரித்து வைத்திருக்கிறது. எனினும், தேசபக்தியும், சமஷ்டியில் பற்றும் இங்கு உச்சநிலையில் இருக்கிறது.

கனவே காணலாம்

இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவிற்கு ஒரு பொது மொழி அவசியமில்லை என்பது நன்கு விளங்கும். பல நூற்றுக்கணக்கான மொழிகள் பரவி உள்ள மாகாணங்களிலும், சுதேச சமஸ்தானங்களிலும் ஒரு புது பொதுமொழியைப் பரப்பி நிர்ப்பந்தப் படுத்துவதென்பதும் சாத்தியமான காரியமாகாது. மொழிகளிலேயே பல சிதைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஒன்றுக்கொன்று வித்தியாச மாகி விடுகின்றன. கோடிக்கணக்கான மக்களுள்ள, பரந்த இந்தியாவிலே இது சாதாரணமாக நிகழக்கூடியதே. நிரந்தரமான ஒரு அகில இந்தியப் பொதுமொழி சொப்பன உலகில்தான் இருக்கமுடியும். சர்க்கார் மொழியாகவும், கோர்ட்டு வியவகாரங்களுக்கு மொழியாகவும் இருக்கும் இங்கிலீஷ் மொழியே, 100 ஆண்டுகளாக வெள்ளைக்கார ஆட்சி இருந்தும், நமது நாட்டில் பேசப்படும் எந்த ஒரு மொழியையும் தள்ளிவிட்டு, அதன் ஸ்தானத்தில் தான் அமர முடியவில்லை.

சிறுபான்மையினர் மொழிப் பிரச்சினை

ஐரோப்பாவிலே சிறுபான்மையினரின் மொழிப்பிரச்சினை பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. ஒரே நாட்டிலே, அன்னியர் படையெடுப்பு, தேசத்தைப் பங்குபோடுதல் ஆகிய காரணங்களால் மக்கள் ஒரு கதம்பமாக இருக்கிறார்கள். பல காலமாக மொழி, மதம், இவைகளில் முற்றிலும் மாறுபட்ட பல வகையான மக்கள், மத்திய ஐரோப்பிய பிரதேசங்களிலே ஒன்றுகூட்டி வைக்கப்பட்டுள்ளனர். பெரும்பான்மையினரின், மொழி, நாகரிகம் இவைகளிலே சிறுபான்மையினரைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் யாவும் அடியுடன் தோற்றன. (ஜர்மன்) சண்டைக்குப் பிறகு, இந்தப் பிரச்சினை மிக சிக்கலாகிவிட்டது. சண்டைக்குப் பிறகு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை, ஐரோப்பிய தேசபடத்தையே உருமாறும்படி செய்துவிட்டது. பழய பிரதேசங்கள் துண்டிக்கப்பட்டு, மற்றைய பிரதேசங்களுடன் ஒட்டுவிக்கப்பட்டன. ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, போலந்து, யுகோஸ்லேவியா, ஜெக்கோஸ்லோவேக்கியா, ருமேனியா, கிரீஸ், பல்கேரியா, துருக்கி முதலிய பல நாடுகள் சண்டையின் பலனாக இத்தகைய மாறுதல்களை அடைந்தன. சமாதான உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டபோது வேறு நாடுகளுடன் சேர்க்கப்பட்ட சிறுபான்மையினரின் மொழிப்பிரச்சினை, அமோகமாக எழும்பிற்று. இதனைத் தீர்க்க சிறுபான்மையினரின் உடன்படிக்கை 1919ல், போலந்துடன் ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைகளில் சிறுபான்மையினரின் மொழிகளுக்குப் பாதுகாப்புத் தரப்பட்டது. சர்வதேச சங்க முன்பாக இவைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த உடன்படிக்கையின்படி போலந்து மொழியை வியாபாரம், மதம், பத்திரிகா உலகம், பிரசங்கமேடை முதலிய துறைகளில் உபயோகிப்பதற்கு யாதொரு விதமான தடையும் விதிக்கப்படக் கூடாதென்றும், போலந்து மொழி தவிர வேறு 'தாய்மொழி' பயிலுவோருக்கு, சௌகரியஞ் செய்துதர வேண்டுமென்றும் பண உதவி அளிக்கப்பட வேண்டுமெனவும் ஏற்பாடாகி இருக்கிறது.

சர்வதேச சங்கத்தின் தீர்ப்பு

பின்லாந்து (Finland) தன்னுடன் இணைக்கப்பட்ட ஆலந்து தீவு வாசிகளுக்கு மொழிப் பாதுகாப்பை அளித்தது. இந்தத்தீவு வாசிகள், ஸ்வீடன் நாட்டு வம்சத்தினர். இத்தீவுகள் ஸ்வீடனுக்குச் சொந்தமானவைகளாக இருந்தன. 1809-ம் ஆண்டு இத்தீவுகளும், பின்லாண்டும், ரஷ்யாவிற்குத் தரப்பட்டன. 1917-ம் ஆண்டுவரை இவைகள் ரஷியாவின் ஆட்சியின் கீழ் இருந்தன. ரஷியாவிலே புரட்சி ஏற்பட்டதால், மாணவர்களைப் புதுமொழி பயிலவேண்டுமென நிர்ப்பந்தித்தால் அது அவர்களுக்குச் சுமையாக இருக்கும்; அதனால் சொந்தமொழி வளர்ச்சி தடைப்படும்; இளம் பிராயத்திலே வேறு புதுமொழி பயின்றால், சொந்தமொழி வளர்ச்சி குன்றும். இது நேரடியான முட்டுக்கட்டையாக இல்லாதிருப்பினும் இது முட்டுக்கட்டையாகவே இருக்கும் என்று எண்ணுகிறோம்.

எந்த அன்னியனுக்கும் இந்தத் துணிச்சல் ஏற்படவில்லை

சரித்திரம் தெரிந்த நாளாக, இந்தியா அன்னியருக்கு இரையாகியே வந்திருக்கிறது. முதலிலே துரானியரும், மங்கோலியரும், பிறகு ஆரியர், கிரேக்கர், அராபியர், பெர்ஷியன் தேசத்தவர், மொகலாயர், இறுதியிலே ஐரோப்பியர்களான, போர்சுகீசர், பிரன்ச்சுக்காரர், ஆங்கிலேயர் என, இத்தனை நாட்டினர் இந்தியாவைப் பிடித்தனர். ஆரியர்கள், மொகலாயர்களைப் போன்றவர்கள் இங்கேயே தங்கியும் விட்டனர். ஆனால் இந்த அன்னியர்கள் எவரும் எப்போதும், தங்களுடைய மொழியை இந்தியர்கள்மீது திணிக்கப் பிரயத்தனப்பட்டதாகத் தெரியவரவில்லை. கூட்டங் கூட்டமாக வந்த ஆரியர்கள் ஆதிகுடிகள் வசித்து வந்த வளப்பமான பிரதேசத்திலே குடியேறினார்கள். அந்தப் பிரதேசங்களிலே அவர்கள் மொழி பரவிற்று. மொகலாயர் ஆண்டபோது, இந்தியர்கள் அரபி, உருது, பெர்ஷியன் முதலிய மொழிகளைப் பயின்றனர். மொகலாயர்கள் இம்மொழிகளைப் படித்தே தீரவேண்டுமெனத் திணிக்கவில்லை. தாமாகவே, சர்க்காரில் செல்வாக்குப் பெற, அம்மொழிகளைப் பயின்றனர். பிரிட்டிஷார் தமது மொழியை நம் நாட்டிலே திணித்ததாகச் சில சமயங்களிலே கூறப்படுகிறது. இது தவறு.

ஆர்த்தர் மேஹ்யூ என்பவர் கூறுகிறதுபோல், ஆரம்பப்பள்ளிக்கூடங்களிலில்லாது உயர்தர வகுப்புகளிலே இங்கிலீஷ் பாஷை மூலம் பாடங்கள் போதிக்கப்படவேண்டுமென்ற தீர்மானம், வெறும் கல்வி முறையை ஒட்டிவந்த முடிவாகும். கலை சம்பந்தமான முடிவல்ல. பாடபோதனை ஆங்கிலத்திலே என்ற முடிவு தற்கால சாந்தியாக ஏற்படுத்தப்பட்டது. மேனாட்டுக் கருத்துக்களையும், விஷயங்களையும் போதிக்கும் வகைக்கு அந்தந்த சுதேசமொழிகள் சீர்திருத்தப்படும் வரையில்தான் ஆங்கிலமொழிமூலம் பாடபோதனை இருக்கவேண்டுமெனவும் அதிகாரிகள் கருதினார்கள். இந்திய சர்க்கார், பிரிட்டிஷ் சர்க்கார் ஆகியவைகளின் ஒத்தாசையுடன் மாகாண சர்க்காரும் இதற்கான வழிகளிலே உழைத்தன. துரதிஷ்டவசமாக அம்முறைகள்

பலிக்காமற் போய்விட்டன. குறை நம்முடையதே தவிர அன்னியருடையதல்ல. ஆங்கிலங் கற்றவர்களுக்கு உயர்தரமான உத்தியோகங்கள் கிடைத்தன. ஆங்கிலமொழியிலே உள்ள கலைஞானமும், விஞ்ஞானமும் அவர்களை வசிகரப்படுத்திற்று. ஆகவே அவர்கள் தாய்மொழியை உதாசீனம் செய்யலாயினர். திராவிடருடைய தென் இந்தியாவிற்கு ஆரியர்கள் வந்தபோதுங் கூட, தங்கள் மொழியை நம்மீது திணிக்கவில்லை. 1847-ம் வருஷத்திய பிரிட்டிஷ் சங்கத்தில், ஆசிரியர் மாக்ஸ் மூல்லர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடுவதை இனித் தருகிறேன். மாக்ஸ் மூல்லர் சமஸ்கிருதத்தில் வல்லவர். அம்மொழியிலே பற்றுக்கொண்டவர். ஆனால் திராவிடமொழி, நாகரிகம் இவைகளை நன்கு உணராதவர் என்றே கூறவேண்டும். "பார்ப்பனர்கள் வட இந்தியாவை வென்ற முறைக்கு முற்றிலும் மாறான முறையையே, விந்திய மலைக்குக் கீழே உள்ள தென்னாட்டைப் பற்றிய காலத்தில் கையாண்டார்கள். பெரும்படைகளாக, ஆயுதந் தாங்கி அவர்கள் தென்னாடு வரவில்லை. வடக்கே பல சாம்ராஜ்யங்கள் இருந்தன; அவற்றின் ஆதரவைப்பெற்று, சாந்தமான முறையிலே, தென்னாட்டில் நுழைந்து குடியேறினார்கள். சிற்சில சமயங்களில் தமது அண்டை அயல் ஜாதியருடன் போராடினரெனினும், பெரிதும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் விதத்திலேயே அவர்கள் போக்கு இருந்துவந்தது. கடற்கரைப்பிரதேசங்களில், அவர்கள் தங்கள் அமைப்பு, சட்டம், மதம் முதலியவற்றைப் புகுத்தினார்கள். ஆனால் பெருவாரியாக இருந்த திராவிடரிடம் தங்கள் மொழியைத் திணிக்கமுடியாதது கண்டு கொண்டு, புத்திசாலித்தனமாக திராவிட மொழியைத் தாங்கள் கற்றுக்கொண்டு, அம்மொழி மூலம் தங்கள் போதனைகளை நாகரிகமடையாதவருக்குச் செய்துவந்தனர். ஆதிகுடிகளின் மொழியை அவர்கள் சீர்திருத்தி, சமஸ்கிருதத்துடன் போட்டியிடக் கூடிய அளவு வளர்ச்சி அடையச் செய்தனர். இந்த பரஸ்பர உதவிகாரணமாக ஆரியருக்கும் ஆதிகுடிகளுக்குமிடையே ஒற்றுமை நிலவிற்று. வடக்கே முகம்மதியர் அழிக்க முற்பட்டபோது, தென்னாட்டில்தான், பிராம்மணியம் தஞ்சம் புகுந்தது. சொந்த மொழியைப்புறக்கணிக்கவோ அல்லது விட்டுவிடவோ செய்யாமலேயே, ஒரு உயர்தரமான நாகரிகத்தை மக்களிடைப் புகுத்தமுடியும் என்பதற்கு இது ருசிகரமான சான்றாகும்.

தோல்விப் படலம்

சாம்பால்பூர் ஜில்லாவிலே நடந்த சம்பவமொன்றைக் கவனிப்போம். இதிலே, தாய்மொழி ஒன்று உள்ள ஜனசமுகத்தின் மீது, ஒரு புதுமொழியை வலுக்கட்டாயத்திலே புகுத்துவது எவ்வளவு ஆயாசமானது, காரியத்திற் கேற்றதாகாதது என்பது விளக்கமாகத் தெரியவருகிறது. சாம்பால்பூர் ஒரு காலத்திலே, மத்திய மாகாணத்தில் ஒரு பகுதியாக இருந்தது. இந்த ஒரு பிரதேசம் தவிர வேறு எங்கும் ஒரியா மொழி இல்லை. ஆகவே, சாம்பல்பூர் நிர்வாகம் மிகக் கஷ்டத்தை விளைவித்தது. ஒரியா மொழி பயின்ற சில்லரை அதிகாரிகள் கிடைப்பதும் கஷ்டமாயிற்று. அந்தக் காரணத்தாலே, மற்

றெல்லா இடங்களைவிட சாம்பல்பூரில் தான் நிர்வாகத்திலே ஊழல் மலிந்திருந்தது. இக்காரணத்தை முன்னிட்டு, மத்திய மாகாணத்து பிரதம கமிஷனர் ஒருவர், சாம்பால்பூரில் ஒரியாவிற்குப் பதிலாக ஹிந்தி மொழி இருக்கவேண்டுமென உத்தரவிட்டார். ஒரியா ஒன்றே தெரிந்த அம்மக்கள் ஹிந்தி புகுத்தப்படுவதை பலமாக எதிர்த்தார்கள். ஆகவே சர். ஆன்ட்ரு பிரேசர் என்ற கமிஷனர், இந்திய சர்க்கார் அனுமதிபெற்று பழயபடி ஒரியா மொழியை சாம்பால்பூரில் நிலவச்செய்தார். 1905-ம் ஆண்டு, சாண்டேல்பூர், பதாம்பூர், புஸ்ஜ ஹார், பிரதேசந்தவிர, மற்றைய பாகங்கள், புதிதாக நிருவப்பட்ட பீகார்-ஒரிஸ்ஸா மாகாணத்துடன் இணைக்கப்பட்டன. இப்போது சாம்பால்பூர் புதிதாக நிருவப்பட்டுள்ள ஓரிஸா மாகாணத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

சாது மிரண்டால்?

மிக மகத்தான ஹிந்திமொழிப் பிரச்சினை விஷயமாக பொது ஜனங்கள் காங்கரசுக்கு ஒருவித அதிகாரமும் அளிக்கவில்லை. காங்கரஸ் தேர்தல் அறிக்கையில் இதைப்பற்றி ஒரு வார்த்தையுங் கூறப்படவில்லை. நான் படித்துப்பார்த்த அளவிலே, எந்தக் காங்கரஸ் வாதியும் தேர்தல் பிரசாரத்தின்போது, காங்கரஸ்காரர் அதிகாரத்திற்கு வந்தால் ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கப் போவதாகப் பேசவுமில்லை. ஆகவே, அதிக பாதகத்தைத் தரும்படியான இந்த மாற்றத்தை காங்கரஸ் மந்திரிகள் பொதுஜன ஆதரவான அதிகாரத்தைப் பெறமலேயே செய்கிறார்கள். ஆதரவிற்குப் பதிலாக பொதுஜன எதிர்ப்புத்தான் உருவாகி இருக்கிறது. நூற்றுக்கணக்கான கூட்டங்களிலே பொதுஜனப் பிரமுகர்கள், கட்டாய ஹிந்தித்திட்டத்தை எதிர்த்தார்கள். "இந்தத் திட்டத்தை சர்க்கார் சுலபத்தில் நிறைவேற்ற முடியாதெனவும், பொதுமக்கள் விருப்பத்திற்கிணங்க காங்கரஸ் சர்க்கார் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்" என கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களே ஒருபொதுக் கூட்டத்தில் கூறியுள்ளார். அரசியல் அனுபவமுடையவர் இந்த மந்திரிசபையிலே அவர் ஒருவர்தான். அவர் கூறிய இந்தப் பொன்மொழியை சர்க்கார் புறக்கணித்துவிட்டு, ஈவு இரக்கமின்றி சிறுவர்களின்மீது, ஹிந்தி படிப்பைக் கட்டாயமாகத் திணிக்க விரும்புகிறது. பொதுமக்கள் இவ்வளவு எதிர்க்கும் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், அது முழுத் தோல்வியாக முடியும் என்பதுடன், ஆபத்தான நிலைமையை உண்டாக்கும் என்பதை இந்த மந்திரிகள் உணரவில்லை. மதராஸிகள் பரம சாதுக்கள். ஆனல் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற முதுமொழி, மந்திரிகளுக்குத் தெரியாததல்ல.

ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தினல் இந்த மாகாணத்திற்கு மற்றைய மாகாணத்துடன் சம்பந்தப்படுவதால் உண்டாகும் நிலைமையை இனிக்கவனிப்போம். மத்திய சர்க்கார் (இந்திய சர்க்கார்) கல்கத்தாவில் இருந்தபோது, சர்க்கார் உத்தியோக மண்டலம் பூராவும் வங்காளிகளிடம் இருந்தது. இருபத்தைந்து வருஷத்

களுக்கு முன்பு சர்க்கார் தலைமை ஸ்தானத்தை டில்லிக்கு மாற்றிய பிறகு, உத்தியோக மண்டலம் பஞ்சாபிகள், ஐக்கிய மாகாண வாசிகளின்வசமாயிற்று. ஆனால் மதராசுக்கு என்றும் போக்கிடமில்லாதிருந்தது. சென்னை மாகாணத்தைக் கண்டாலே வட நாட்டாருக்கு அலட்சியம். சென்னைக்குப் பல அநீதிகளையும் இழைத்திருக்கிறார்கள். உதாரணமாக, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டகாலத்தின்போது, ஆண்டுதோறும் 350 லட்ச ரூபாய் மேஸ்டன் தீர்ப்பு என்ற திட்டத்திற் கிணங்க, சென்னை மாகாணம் மத்திய சர்க்காருக்குக் கொட்டிக் கொடுத்துக்கொண்டுவந்தது. டில்லியிலே நமக்கு (சென்னை மாகாணத்தினருக்கு) செல்வாக்கே கிடையாது. நமது உணர்ச்சியை மதிப்பதில்லை. முன்பு வங்காளம், இப்போது பஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகியவைகள், நம்மைத் தமது அடிமைகளெனவே கருதி வருகின்றன. நாம் நமது சம உரிமைக்காக எழவேண்டும். இதர மாகாணங்களுக்கு இருப்பதைப்போலவே, இந்திய சர்க்கார் நிர்வாகத்திலே நமக்கும் உரிமையும் பங்கும் இருக்கவேண்டும். ஹிந்தி மொழிக்கு விட்டுக்கொடுத்தால், அது, வடநாட்டு மகாணங்களுக்கு அடங்கி நடக்கும் சாதுக்கள் நாம் என்பதற்கு மற்றொரு உதாரணம் என்றுதான் கருதமுடியும்.

இந்தியர்களில் பெரும் பான்மையினர் (மெஜாரிடி) ஹிந்தி மொழி பேசுகிறார்கள் என்று கூறுவது ஆதாரமற்றது. சுத்த அபத்தம். வங்காளிகள் ஹிந்திமொழியை சட்டைசெய்வதில்லை. முஸ்லிம்கள் கட்டாய ஹிந்தித் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்கள் என்றும் விரும்புவது உருதுமொழியாகும். ஹிந்தி திணிக்கப்படுவதை பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னடமொழி பேசுபவர்களும், மராட்டியரும், கடுமையாக எதிர்க்கிறார்கள். சிந்து, அஸ்ஸாம், பஞ்சாப், ஆகியவைகளும் இத்தகைய முறையை எதிர்த்தே தீரும். நமது பிள்ளைகளின் குரவளையை அழுத்தியேனும் ஹிந்தியைப் புகுத்த வேண்டுமெனக் காங்கிரஸ் மந்திரிகளை எதுதான் தூண்டுகிறது? அதிகாரபீடத்திலே இடங்கிடைத்து விட்டதாலும், திட்டத்திற்கு எதிரிடையாக பலாத்காரமான எதிர்ப்பு வந்தால், தங்கள் உதவிக்குவர பிரிட்டிஷ் துப்பாக்கிப்படை இருக்கிறதென்ற நம்பிக்கையினாலுமே, நமது பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க, காங்கிரஸ் மந்திரிகள் முயல்கிறார்கள். புதிதாகச் சம்பாதித்துக்கொண்ட அதிகார வெறிமட்டுமன்றி அவர்களுக்கு தேசியக் காய்ச்சல் கடுமையாக இன்று இருக்கிறது. அந்தக் காய்ச்சல் குறைந்து நிதானமானால்தான், அவர்களுக்கு உள்ளது உள்ளபடி தெரியும். தேசீயம், கலை இவைகளையே அழிக்கக்கூடிய வேலைகளிலும் அவர்கள் ஈடுபடாதிருப்பார்கள். தேசியம் நல்லது தான். தேசியம் அவசியந்தான். ஆனால், அந்த தேசத்தின் ஒருபகுதியினரின் மொழிகலை, இவற்றை அழித்து, வேறு பகுதியினரின் ஆதிக்கத்தை வளர்க்க, இந்தத் தேசியம் உபயோகப்படுத்தப்பட்டால், அதனை எதிர்க்கவேண்டுவது அதிக அவசியமாகிறது. எது காரியத்திற்கொத்த உண்மை என்பதைப்பற்றியோ தேசத்திற்கும் தேசமக்களுக்கும்

உள்ள வித்தியாசத்தையோ, கலைஞானத்திற்கும், அரசியலுக்கும் உள்ள தாரதம்மியத்தைப்பற்றியோ, அவர்களுக்கு கவலை இருக்கக் காணோம். இந்தியாவின் பல பாகங்களிலே பலவித மொழிகள், நாகரிகம், கலைகள், சமுதாய நிலைகள் இருப்பதன் காரணமாகத்தான் சமஷ்டி ஏற்பட வேண்டி இருக்கிறதென்பதையும் அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சமுதாயநிலை, கலை நிலைமை இவைகள் அகில இந்தியாவிற்கும் ஒரேவிதமாக இருப்பின், அகில இந்தியாவிலும் ஒரே மொழிபேசப்பட்டு, அல்லது பேசுவதற்கானவழி கோலப்படுவதாகவுமிருப்பின், இந்தியாவிற்கு சமஷ்டி எதற்கு, ஒரே ஐக்கிய சர்க்காரன்றோ ஏற்படவேண்டும்?

கலைஞான உரிமை நமது உரிய இலட்சியம். அதை ஹிந்தி அரக்கன் தன் இருப்புக் காலின் கீழ் போட்டுத் துவைப்பதை நாம் சகியோம். நமது பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு ஏற்கனவே இருக்கும் சுமையே அதிகம். இந்த ஹிந்தியைப்படிக்க, சக்தியையோ, நேரத்தையோ அவர்களால் செலவிட முடியாது. ஆங்கிலமிருக்கிறது; அதை வேறு கற்கவேண்டும். அதிலே கலைகள், விஞ்ஞானம் இவைகளைப் பயிலவேண்டும். இப்போதே திராவிடமொழிவளர்ச்சியை ஆங்கிலம் கெடுத்திருக்கிறது. ஒரு பள்ளிக்கூடமாணவன், கலாசாலை மாணவன், அல்லது ஒரு பெரியவர் யார் பேசுவதைக் கேட்டாலும், அவர்களுடைய சம்பாஷணைகளிலே எவ்வளவு இங்கிலீஷ் வார்த்தைகள் புகுந்துவிடுகின்றன என்பதைப் பார்க்கலாம். பி. எ. பட்டதாரிகளுக்குக்கூட தமிழிலோ, தெலுங்கிலோ, ஒரு ஒழுங்கான பிரசங்கம் புரிய முடிவதில்லை. நமது எண்ணத்தின் போக்குக்கூட நமது மொழிக்கலைக்கு மாறானதாகவே இருக்கக்காண்கிறோம். இன்னமும் இந்த "அற்புதமான" ஹிந்தியை மனவளர்ச்சிக்குப் பக்குவமான சிறு பிராயத்திலே நமது பிள்ளைகள் படித்தால், மேலும் இதைப்போன்ற கோளாறுகள் ஏற்படாது என்று யாரால்தான் உறுதி கூறமுடியும்? அன்னியக்கலையை, அன்னிய மொழியின் மூலம் கற்பது மிகக்கேடு பயப்பது. இதனாலேயே நமது சிறுவர்கள் நசுக்கப்பட்டுவிட்டார்கள், என்று ஆங்கிலப்படிப்பைக் குறைகூறும்போது சொல்லப்படுகிறதே, அதேவிதமாக ஹிந்திக்கும் கூறவேண்டி இருக்கிறது. ஆங்கிலத்திலாவது சில சௌகரியங்களுண்டு. அந்த மொழி அறிந்தால், சர்வ கலாசாலைகள் ஏற்பாடு செய்யும் பரீட்சைகளில் தேறி நமது வாலிபர்கள் பட்டம் பெற்றால் நல்ல வேலையாவது கிடைக்கும். அது சர்க்கார்மொழி. நீதிமன்றத்தில் நிலவுவதும் அதுவே. வியாபார சம்பந்தமாக அத்தியாவசியமான மொழியாக அது இருக்கிறது, அதிலே, எவ்வளவோ நூல்கள் நயங்கள், வனப்பு, சொல்லமைப்பு உள்ளன. பிரிட்டிஷ் தொடர்பு இருக்கும் வரையிலே ஆங்கிலத்தைப் படித்தே தீரவேண்டி இருக்கிறது. நாம் யாவரும் வரவேண்டுமென விரும்பும் சுயாட்சி வரப் பன்னெடு நாட்களாகுமென்பதைக்கூறவேண்டியவனாக இருக்கிறேன். இன்று சுயாட்சி கிடைத்தால் ஒரு நாளைக்குக்கூட அதை நிலைத்திருக்கச் செய்யமுடியாது. நம்மிடம் ஆகாயக் கப்பல்கள் இல்லை, கடற்படைகள் கிடையாது. சேனைகள், சேனைத்தலைவர்கள்

இல்லை. இன்று இந்தியாவை விட்டு பிரிட்டன் சென்று விட்டால், நாளை அன்னியர் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்தால், பிரிட்டிஷார் உதவி கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது. நமது தேசத்தை நாமே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய பக்குவத்திற்கு நாம் வரும் வரையிலே, நாம் பொறுத்துத் தீரவேண்டும். இங்கிலாந்திடமிருந்து விடுபட்ட பிறகுங்கூட, நாம் தனித்திருந்து சுதந்திர நாடாக வாழ இயலாது. இந்தக்காலம், பல நாடுகள் ஒன்றாகக்கூடி பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் காலம். காலஞ் செல்லச் செல்ல மற்ற நாடுகளின் நட்பு, ஒப்பந்த உடன்படிக்கை, உதவி, நமக்குத் தேவையாக இருக்கும். பூரண சுயாட்சியைப் பெற்று, பிறகு ஆங்கிலம் பேசும் பல நாட்டினர் அடங்கிய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே சம அந்தஸ்துடைய ஒரு அம்சமாக நாமிருப்பது சுலபமல்லவா? ஆபத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடிய மார்க்கமாகாதா? ஆனால் இது அரசியல் விஷயம். இதிலே நான் பிரவேசித்துவிட்டேன். இன்று யாதொரு அரசியல் வியவகாரத்தையும் பேசவேண்டுமென்பது என்நோக்கமல்ல. இந்தக் கூட்டத்திலே, என் அரசியற் கருத்திற் கொத்தவர்களேயன்றி, வேறு பல அரசியல் கட்சியினர், காங்கிரஸ்காரர்கள் பலர் மிதவாதிகள், முஸ்லீம் லீக் கட்சியினர், ஆகியோர் இங்கு விஜயஞ் செய்திருக்கிறார்கள், ஆகவே நான் இங்கு எந்த அரசியல் விஷயமாகவும் பேசப்போவதில்லை. இந்த பிரக்கியாதி பெற்ற ஊரிலே நாம் அனைவரும், கட்டாய ஹிந்தியை வெறுப்பதைக் காட்டவும், நமது பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கத் தற்போது நடந்துகொண்டுவரும் முயற்சிகளை எதிர்க்கவுமே கூடியுள்ளோம்.

ஏதோ மனஎழுச்சி காரணமாக நாம் ஹிந்தியை எதிர்ப்பதாகச் சில சமயங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் மன எழுச்சியின் உண்மையான மதிப்பை என் குறைக்கிறார்கள் என்பது தான் எனக்கு விளங்கவில்லை. சுதேச மனஎழுச்சி, அல்லது ஜாதிய உணர்ச்சி (அந்த ஜாதிய உணர்ச்சி காரணமாகவே நாம் ஹிந்தியை எதிர்ப்பதாகக் கூறப்படுவதாயினுஞ்சரியே) இவைகளை சட்டை செய்யாது, காரியங்களை சாதித்துக் கொள்ளத் தொடங்கினால் ஆபத்தும் கேடும் விளைந்து, அதிகாரத்தை அகம்பாவமாகச் செலுத்தியவர்கள் தங்கள் தவற்றைத் தாமாகவே உணர்ந்தனர் என்பதைச் சரித்திரம் எடுத்துக்காட்டுகிறது. நாம் என் கட்டாய ஹிந்தித் திட்டத்தை எதிர்க்கிறோம் என்பதற்கான காரணங்களை நான் எடுத்துக்காட்டினேன். இதுவரை ஒருவராவது பதில்கூற முடியாதபடி ஆணித்தரமாக, அசைக்கமுடியாத காரணங்களைக் காட்டி, கட்டாய ஹிந்தித் திட்டத்தைக் கண்டித்துத் திருவாளர் பாரதியார் அவர்கள் பகிரங்கக் கடிதம் விடுத்துள்ளார். ஆகவே வெறும் மன எழுச்சி காரணமாகத்தான் நாம் ஹிந்தியை எதிர்க்கிறோம், என்று கூறுவது ஆபாசக் கூற்றேயாகும். கட்டாய ஹிந்தித் திட்டத்தினால் மக்களிடை மனக்கொதிப்பு நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. பார்க்கக் கண்களும் கேட்க செவிகளும் படைத்தவர்களாக நமது மந்திரிமார்கள் இருப்பின், அந்த எதிர்ப்பு எவ்வளவு பிரமாண்டமான உருவுடன் இருக்கிறதென்பதை அறிவர். அவர்கள்

விவேகிகளாக இருந்தால், வங்காளத்திலே பிரிவினை காரணமாக எவ்வளவு தொந்தரவு நேரிட்டதோ அவ்வளவு தொல்லைகள் ஹிந்தி காரணமாக இந்த மகாணத்தில் ஏற்படும் என்று நாம் எச்சரிக்கை செய்வதை ஏற்று நடப்பர். தன்னைப்பெற்ற தாய், தாய்நாடு, தாய் மொழி ஆக ஒருவனுக்கு மூன்று தாய்மார் என்று நமது முதுமொழி கூறுவதுண்டு. தாயைக் கவனியாதவன் மாதாவிற்குத் துரோகம் செய்தவனாகிறான். தாய்நாட்டை நேசியாதவன் தேசத்துரோகியாகி றான். தாய்மொழியைப் பாராட்டாதவன் தாய்மொழியைக் காட்டிக் கொடுத்த துரோகியாவன். ஏசுநாதரைக் கொஞ்சம் பணத்துக்காகக் காட்டிக் கொடுத்த ஜூடாஸ் என்று தாய் மொழியை காட்டிக் கொடுப்பவனை நாம் கூறுவோமாக. ஜூடாஸ் செய்த சதி காரண மாக ஏசுநாதர் கொல்லப்பட்டார். ஆனால் கிருஸ்து மார்க்கம் நிலை த்து நிற்கிறது. அதுபோன்றே திராவிடமொழிகளும் நிலைத்து நிற்குமாக.

காஞ்சிபுரம் ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாடு (27-2-38)

காஞ்சிபுரம் மகாநாட்டில் சர். எம். கிருஷ்ண நாயர் அவர்களின் சொற்பொழிவு

நண்பர்களே!

இந்த முக்கியமான மகாநாட்டைத் திறந்துவைக்கும் பெரு மையை எனக்கு அளித்தமைக்காக வரவேற்புக் கமிட்டியாருக்கு நான் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது சென்னை மாகாணத்திலே உள்ள எல்லா ஆங்கிலப் பள்ளிக் கூடங்களிலேயும் முதல் மூன்று பாரங்களிலே (5, 6, 7-வது வகுப்பு களிலே) ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்ற சென்னை (காங்கரஸ்) சர்க்காரின் யோசனையை, நாம் முழுபலத்துடனும் கண் டிக்கும் பொருட்டு நாம் இந்தப் பழம் பெரும் சரித்திர சம்பந்தமான புண்ணியஸ்தலமென்னும் காஞ்சியில் கூடியுள்ளோம்.

பல பாஷைகளின் சிக்கலான நுட்பங்களைக் கற்றுத் தெளியக் கூடிய மேதாவிகள் இருக்கிறார்கள்; என்றாலும் அப்படிப்பட்டவர்கள் தொகை மிகக்குறைவானதாகும். சாதாரண புத்தியுள்ள ஆண், பெண், அதிலும் பள்ளிச்சிறுவர்கள் ஆகிய இவர்களைக் குறித்தே நாம் இந்த பிரச்சினையைக் கவனிக்கிறோம்.

நம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களிலே, இங்கிலீஷ், கணக்கு சரித்திரம், பூகோளம், தாய்மொழி ஆகியவைகளை இலக்கண சுத்த மாய் கற்கவேண்டி இருக்கிறது. இவ்வளவு விஷயங்களுடன் ஹிந்தி யையும் சேர்த்து அக்குழந்தைகள் படிக்கவேண்டுமெனக் கட்டாயப் படுத்துவது, கொடுமையாகும்.

இந்தக்கொடுமை காரணமாக, கண்டிப்பாய் நம் குழந்தைகளின் பள்ளிவாழ்க்கை ஒருசுமை போலாவதுடன், அவர்களின் அறிவு வளர்ச்சியும் மழுங்கிவிடும்.

முதல் மூன்று பாரங்களிலே, கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் ஹிந்திபாஷையைச் சீக்கிரத்திலே குழந்தைகள் மறந்தேவிடும். ஆணையினும் பெண்ணுயினும், 15-வது வயது பூர்த்தியான பிறகே, எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குப்போக அனுமதிக்கப்படுவர்.

ஆகவே, ஆருவது பாரத்தில் படிக்கும் பிள்ளைகள் சராசரி 15-வயது கொண்டவர்களாகவே இருப்பர். ஆதலால் முதல், இரண்டு, மூன்ருவது பாரங்களிலே படிக்கும் பிள்ளைகளுக்கு முறையே, 10, 11, 12, வயதுதான் இருக்கும். தாய்மொழியையும், மேலே குறிப்பிட்டுள்ள வயதுள்ள மக்களுக்குக் கட்டாயத்தின் பேரில் கற்றுக்கொடுத்த பிறகு, அவர்களின் பெற்ருேர் ஏழைத் தொழிலாளிகளாக இருப்பின், இக்குழந்தைகள், பெற்ருேரின் உதவிக்காக பணம் சம்பாதிக்க ஏதேனும் வேலை செய்யவேண்டி நேரிடுகிறது.

அத்தகைய பிள்ளைகளைக் கவனிப்போருக்கு, அவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு விலகிய பிறகு, படிப்புவாசனை அற்றுப் போவது நன்கு தெரியும்.

தாங்களே பேசும் மொழி, வீட்டுமொழி, எங்கும் பேசப்படும் மொழியாகிய தம் தாய்மொழிக்கே இக்கதி என்ருல் முதல் மூன்று பாரங்களில் கிர்ப்பந்தத்தின் பேரில் திணிக்கப்படும் ஹிந்தியை— வீட்டிலோ வெளியிலோ சாதாரணமாகப் பேசப்படாத ஹிந்தியை, சடுதியிலே மறந்தேவிடுவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஹிந்திபொதுமொழி என்ருல்?

ஹிந்தியை, அகில இந்தியப் பொதுமொழியாக்கப் பிரயத்தனம் நடக்கும்போது கண்டிப்பாக, சிக்கல் நிறைந்த வகுப்பு, மத, விவாதங்கள் எழும்பியே தீரும். இடைக்கால மந்திரிகளில் ஒருவரும், சென்னை மாகாண முஸ்லீம் பிரமுகருமான கான்பகதூர் தீ. கலிபுல்லாசாகிப் அவர்கள், ஏற்கனவே இந்தப்பிரச்சினையைக் கிளப்பி விட்டார்.

பத்திரிகைள் வாயிலாகவும், பிரசார மூலமாகவும் அவர், அகில இந்திய பொதுபாஷையாக உருது இருக்கவேண்டுமே யொழிய ஹிந்தி இருக்கக்கூடாதெனக் கிளர்ச்சியும் செய்து வருகிருர். எனக்கு உருது, ஹிந்தி இரண்டும் தெரியாது.

ஆனல் ஹிந்தியில், அமோகமான சமஸ்கிருதவார்த்தைகளும், உருதுவில், பெர்சியன் பதங்களும் இருப்பதாக அறிகிறேன். திராவிட மொழிகளைப்போன்றே இந்தியும் இடப்புறமிருந்து வலப்புறமாக எழுதப்படுகிற தெனவும், அதன் எழுத்துக்கள், நாகரி லிபிகள் எனவும் தெரிய வருகிறது.

உருது, வலமிருந்து இடமாக எழுதப்படுவதெனவும், அராபி எழுத்துக்கள் கொண்டதெனவும், இந்துக்களில் சிலர் சமஸ்கிருதத்தை தேவபாஷையெனக் கருதுவதாகவும், முஸ்லீம்கள் அராபி மொழியை அங்ஙனமே கருதுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஹிந்திபடித்தால் வடநாட்டில் வேலை கிடைக்குமா ?

தென்னாட்டிலுள்ள படித்து வேலையில்லா வாலிபர்கள், வடநாடு சென்று வேலைபெற இந்தி உதவும் எனக்கூறப்படுகிறது. முன்னே கூறியுள்ளபடி பள்ளிக்கூடங்களிலே இளம்பிராயத்திலே கிர்ப்பந்தமாகப் புகுத்தப்பட்ட ஹிந்திமொழியைத், தென்னாட்டு வாலிபர்கள், வேலையைத் தேடிக்கொண்டு வடநாடு செல்லும் பிராயம் வந்ததும், மறந்தே விட்டிருப்பார்கள்.

இந்தியை அவர்கள் மறந்துவிடவில்லை என்று வைத்துக்கொண்டாலும், வடநாட்டிலே ஹிந்தி படித்த பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்குமென்ற நிச்சயமுமில்லை. ஹிந்தி தெரிந்திருந்தால் தென்னாட்டு பி ஏ. க்களுக்கு வடநாட்டில் வேலை கிடைக்கும் என்ற இந்தக் கூற்று சுத்த அபத்தமென்பது 1937-ம் ஆண்டு, மே மாதம் 31-ந் தேதி இலண்டன் கிழக்கிந்திய சங்கத்திலே, லார்டு லோதியன் தலைமையிலே கூடிய கூட்டத்திலே, சர். டேஜ் பகதூர் சாப்ரு அவர்கள் வாசித்த "இந்தியாவிலே கல்வியும் வேலையில்லாத்திண்டாட்டமும்" என்ற பிரசங்கத்தைப் பார்ப்போர் நன்கு உணர்வர்.

ஐக்கிய மாகாண சர்க்காரால் "கல்வியும் வேலையில்லாத் திண்டாட்டமும்" என்ற விஷயமாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியில் தாமே தலைவராக இருந்ததாகவும், நீண்ட சுற்றுப் பிராயணம் செய்து, உத்தியோகஸ்தர்கள், மற்றைய பிரமுகர்கள், ஆங்கிலேயர், இந்தியர், வர்த்தகர்கள், கலாசாலை ஆசிரியர்கள், மற்றும் பல துறைகளிலுமுள்ளவர்களை விசாரித்து ஏராளமான சாட்சியங்களைச் சேகரித்ததாகவும், அந்தப் பிரசங்கத்திலே, சர். டேஜ் பகதூர் சாப்ரு குறிப்பிடுகிறார்.

அப்படி விசாரணை நடத்தியபோது ஐக்கிய மண்டல போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், திரு. ஹாலின்ஸ் (Mr. Hollins) என்பவரும் சாட்சி கூறினாராம் அவரைப்பற்றி சர். டேஜ் பகதூர் சாப்ரு, புகழ்ச்சியாகவே கூறுகிறார். திரு. ஹாலின்ஸ் விசாரணைக் கமிட்டி முன் சாட்சியம் கொடுப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பு பல பி. ஏ. பட்டதாரிகளை போலீஸ் கான்ஸ்டேபிள் உத்தியோகத்திற்கு நியமித்ததாகக் கூறினாரென, சர் டேஜ் பகதூர் சாப்ரு தமது லண்டன் பிரசங்கத்தில் கூறியுள்ளார்.

ஐக்கியமாகாணத்திலே போலீஸ்காரருக்கு, 13 விருந்து 15 ரூ. வரை சம்பளம். சிற்சில இடங்களில், ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் அலவன்சு கிடைக்கும். வேறு ஒரு தொழிலும் கிடைக்காததால், பி. ஏ. பட்டதாரிகள், கான்பூர் முதலிய இடங்களிலே, தெருக்களில்

பால் விற்பதாக, மற்றொரு சர்க்கார் உத்தியோகஸ்தர், சாப்ரூ கமிட்டியாரிடம் கூறியுள்ளார். சர்க்காருக்கு, சாப்ரு சமர்ப்பித்த அறிக்கையில் இவைகளைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளதாகவும் சொல்கிறார். ஹிந்தியையே தாய்மொழியாகக் கொண்ட, ஐக்கிய மாகாணத்துப் பட்டதாரிகளான வாலிபர்களுக்கு, இவ்வளவு குறைந்த சம்பளத்தில் தங்கள் சொந்த பிரதேசத்தில் வேலை கிடைப்பதே திண்டாட்டமாக இருக்கிறதென்றால், தென்னாட்டுப் பட்டதாரிகளான வாலிபர்கள், ஹிந்தி கற்றுக்கொள்வதால் மட்டும், வடநாட்டிலே வேலை தேடிக்கொள்ள முடியும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறதா? திராவிட வாலிபர் நிலை மோசமாகத்தான் இருக்கிறது. ஆனால், வடநாட்டிலுள்ள ஹிந்தி பயின்ற பட்டதாரிகளின் நிலைமையோவென்றால், படுமோசமாகவே இருக்கிறது.

ஹிந்தியில் போத ஞானமுண்டா?

இந்தியாவிற்கு ஒரு பொதுபாஷை வேண்டுமானால், இங்கிலீஷ் தயாரில் இருக்கிறது. சுமார் 75 வருஷங்களாகப் படித்த இந்திய உலகிற்கு இங்கிலீஷே பொது பாஷையாக இருந்து வந்திருக்கிறது. தினந், தினந் அதன் வளர்ச்சி விரிந்து ஊன்றி வருகிறது. 1885-ம் ஆண்டு பம்பாயிலே, பல மாகாண பிரமுகர்கள் கூடி அகில இந்திய தேசிய காங்கரஸைத் துவக்கியதற்குக் காரணம், ஆங்கிலபாஷை ஞானமேயாகும்.

அடுத்தடுத்துக் காங்கரஸ் பல இடங்களில் கூடினதற்கும், சமுதாயத் தொழிலாராய்ச்சி சம்பந்தமான பற்பல மகாநாடுகள் பல சமயங்களில் இந்தியாவிலே பல முக்கியமான இடங்களிலே, நடைபெற்றதற்கும் ஆங்கில பாஷா ஞானமேதான் காரணம். காங்கரஸ் அரசாட்சி செலுத்தும் பல மாகாணங்களிலும், சட்டசபைகளில் நடவடிக்கைகள் தாய்மொழியில் நடைபெறவில்லை ஆங்கில பாஷையில்தான் நடைபெறுகிறது.

பல்வேறு காரணங்களால், இங்கிலீஷ் பாஷை நம் நாட்டிலே மதிக்கப்படும் விருந்தாளியாக வந்தாகிவிட்டது. அது நிரந்தரமாக, நிலைத்து நிற்கும் தகைமைத்து. வளர்ச்சி கவர்ச்சி நிரம்பிய மொழி, எவ்வளவு நுட்பமான, புலப்படுத்துவதற்கரிய எண்ணங்களாயினும் அந்த ஆங்கிலபாஷையிலே அழகுபெற விளக்கமுடியும். விஞ்ஞானம். தத்துவம், ஞானம் கலைஞானம் போன்ற விலைமதிக்கொணா விதவிதமான பல மணிகள் ஜொலிக்கும் பாஷை.

ஷேக்ஸ்பியர், மில்டன், போன்ற கவிதாசிரேஷ்டர்கள் பாடிய பாஷை. பாரடே போன்றவிஞ்ஞானிகளின் போதனைக்கு உகந்ததான இங்கிலீஷ்பாஷை மதிப்பிற்குரியதேயன்றோ! மேனாட்டுக் கொள்கைகள் எண்ணங்களுடன் நம்நாடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமானால் ஆங்கிலபாஷாஞானம் அத்யாவசியமாகிறது. [வேறு பிரெஞ்சு போன்ற ஐரோப்பிய மொழியேனும் தேவையாக இருக்கும்.] நாகரீக உலகிலே பெரும் பகுதியிலே உலவி வருவது ஆங்கிலம்.

வியாபார உலகில் உன்னத ஸ்தானம் பெற்றிருப்பதும் ஆங்கிலமே. இவற்றுடன், ஆங்கிலம், தேவபாஷையல்ல; மதத்தகாறுகளைக் கிண்டி விடுவதல்ல. இந்தியா பூராவிற்கும் பொதுபாஷையாக ஒன்றுமில்லை. இப்போது படித்த இந்தியருக்கு, இங்கிலீஷே பொது பாஷையாக இருக்கிறது.

இங்கிலிஷால் தேசபக்தி போய் விட்டதா?

இங்லீஷால் தேசபக்தி போய் விட்டதாகக் கூறுகிறார்கள். தேசபக்தி என்ற தத்துவத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளாமல், "ஆங்கிலம், அன்னிய மொழி, அதை உதறித் தள்ளுவோம்" எனக்கூறி பொதுமக்கள் விருப்பத்திற்கு மாறாக, தேசத்தின் ஒரு பாகத்திலே மட்டும் நிலவிவரும் ஹிந்தியை, அகில இந்தியப் பொதுமொழியாக்க வேண்டுமெனக் கூறுவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. அக்காரியமும் பலிக்காது. கிரிக்கட் (Cricket) விளையாட்டை தேசிய விளையாட்டாகக் கொள்ளலாமா என்ற விஷயத்திலே சென்னை மந்திரிகளுள் அபிப்பிராய பேதமிருந்தது.

கிரிக்கட் அன்னிய தேசத்தாரின் விளையாட்டு, ஆகவே அதை நாம் வெறுத்து விலக்கவேண்டுமென, சில மந்திரிகள் கருதுகிறார்கள். என் நண்பர், கனம் டாக்டர் சுப்பராயன் தமது சகாக்களுடன் இவ்விஷயமாகப் பலமாக மாறுபடுகிறார். கிரிக்கட் விளையாட்டை இந்திய தேசிய விளையாட்டாகக் கொள்ளவேண்டுமென ஆதரித்துக் கூறுகிறார். டாக்டர் சுப்பராயன் கூறுவதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். அதைப்போலவே, அன்னிய பாஷையாக இருப்பினும், இங்கிலீஷையே இந்தியாவிற்குப் பொதுபாஷையாக்க வேண்டுமென நான் கூறுவதை அவர் சம்மதித்து ஏற்றுக்கொள்வார் என நம்புகிறேன்.

ஆங்கிலம் நமது மதிப்பிற்குரிய விருந்தாளி. தாய் மொழி நமது அன்னையிலும் இனியது. எப்படிப்பட்ட அன்னிய மொழியானாலும் அது எவ்வளவு வளர்ச்சி, கவர்ச்சி, வனப்பு பொருந்தியதாக இருப்பினும் அது சாதாரண மக்களின் மொழியாக முடியாது. இம் மாகாணத்தில் பேசப்படும் தமிழினுடையவும் மற்றைய திராவிட மொழிகளினுடையவும் ஸ்தானத்தை, ஆங்கிலமும் பெறமுடியாது, ஹிந்தியும் பெறமுடியாது. தாய்மொழி நம் தாய்மார் நம்மைத் தாலாட்டி வளர்த்தமொழி, சிறு குழவிகளாக நாமிருந்தபோது கொஞ்சிய மொழி. நமது மழலைப் பருவமொழி. சிறுவர்களாக இருந்தபோது, கருத்துக்கள் தெளிவடையாதிருந்தபோது எண்ணங்களை உருவாக்கி வெளியிட ஏதுவாக இருந்தமொழி. அன்னிய பாஷையிலே எவ்வளவுதான் பாண்டித்யம் பெற்றிருந்தபோதிலும் பிற்காலத்திலே காதல், அன்பு, கோபம், சோகம் மனோபாவங்களைச் சித்தரித்துக் காட்ட உதவும் மொழி. நமது மரணப் படுக்கையிலே நமது மரண வேதனையைத் தெரிவிக்க உபயோகிக்கும் மொழி. அப்படிப்பட்ட தாய்மொழிக்கீடானது வேறொன்றுமில்லை.

உலகிலுள்ள எல்லா பாஷைகளிலும் நமது உயிர் போன்றது தாய்மொழி யொன்றே. அன்னிய பாஷையிலே எவ்வளவு வல்லமை பெற்றிருந்தபோதிலும் காலமுழுதும் கீர்த்திப் பிரதாபந்தரக்கூடிய ஒரு கிரந்தம் இயற்றுவதென்றால் அது தன் தாய்மொழியில் எழுதப் பட்டதாகவே இருந்தாக வேண்டும். இச்சமயம் எனக்கு ஆசிரியர் கிப்பன் (Gibbon) வாழ்க்கையில் ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது.

கிப்பன், பிரென்சு பாஷையிலே அதிக பாண்டித்யம் பெற்ற வர்; ஆகவே அவர் தமது "ரோம சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற காப்பியத்தை, பிரென்சு பாஷையிலே எழுத வேண்டுமென முதலில் தீர்மானித்தார்.

அதன்படியே முதல் அத்தியாயத்தை பிரென்ச் பாஷையில் எழுதி ஒரு நண்பரிடம் காட்டினார். அதனை ஊன்றிப்படித்துவிட்டு, அந் நண்பர் கூறினார்: "இது மிக அருமையானதே. ஆயினும் ஆசிரியர், சரித்திர கிரந்த கர்த்தா என்ற பெயர் என்றென்றும் உலகத்தில் நிலைத்து நிற்கவேண்டுமானால், இந்தக் காப்பியத்தை அன்னிய பாஷை யாகிய பிரெஞ்சிலே எழுதுவதில் பயனில்லை. உனது தாய்மொழி யாகிய ஆங்கிலத்திலே எழுதவேண்டும்" என்றாராம்.

கிப்பன் இந்த போதனையை ஏற்றுக்கொண்டு அக்காப்பியத்தை 27 ஆண்டுகளில் எழுதி முடித்தார். ஆசிரியர் கிப்பனின் பெயர், ஆங்கிலபாஷை உள்ளளவும் அழியாது! அவரது புகழ் நிலைத்து நிற் கிறது!

தமிழ் இலக்கியங்கள்

என்றும் அழியாப் பெரும் புகழ்படைத்த, குறள், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களை, தமிழைத் தாய்மொழியாகக் கொண் டவரே யன்றி வேறு எவரே எழுதுவர்! நமது தாய்மொழிகளாகிய தமிழ் முதலிய திராவிட மொழிகளைக் காத்து, வளர்த்து, பரிபாலிப் பது நமது கடமையாகும். ஆங்கிலத்திலுள்ள கலைகளைச் சிறப்பாக விஞ்ஞான நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்தல் நமது தாய் மொழி வளர்ச்சிக்கு, ஆக்கமும், வளர்ச்சியும் தேடுதற்கு சாலச்சிறந்த தொரு மார்க்கமாகும்.

விஞ்ஞான நூற்களைத் தமிழிலே மொழிபெயர்க்கும்போது, ஆங்கில மொழியிலே காணப்படும் பதத்தின் கருத்தைத் தெள்ளத் தெளிய எடுத்துக் கூறும் தகைமையுடைய தமிழ்ச்சொற்கள் கிடைக் காத கஷ்டம் நேரிடக்கூடும். அச்சமயங்களிலே, புதிய சொற்களை சிருஷ்டிசெய்யவோ, அதே ஆங்கிலப் பதங்களை எடுத்து உபயோகித் துக்கொள்ளவோ தயங்க வேண்டாம்.

உதாரணமாக, வழக்காடும் மக்கள் அனைவருக்கும் இப்போது "நோட்டீஸ்" "சம்மன்" போன்ற பதங்கள் சர்வ சாதாரணமாகத் தெரியும். அவைகள் ஆங்கிலப் பதங்களே எனினும், தமிழ்மொழி யிலேயே காணப்படும் பதங்கள் போலாகிவிட்டது இன்று தற்கால

ஆங்கிலமே, ஆங்கில—சாக்சன், நார்மன்—பிரன்சு, கிரீக், லத்தின் முதலிய பல பாஷைகளின் கலப்பே என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதரபாஷைகளிலிருந்து புதிய வார்த்தைகளை எடுத்து உபயோகித்து, தமது பாஷையில் புகுத்தும் பணி இன்றும் தொடர்ந்து நடந்தே வருகிறது. இம்மாகாண மொழிக்கு ஆக்கந்தேட, திரவிய சகாயம் முதலிய உதவிகளைச் செய்யவேண்டியது சென்னை சர்க்காரின் கடமையாகும். வீணுக்கு, பணத்தையும், பலத்தையும், ஹிந்தியைக் கட்டாயப்பாடமாக்குதல் போன்ற திட்டங்களுக்காக விரயமாக்காமல், திராவிட மொழி வளர்ச்சிக்காக, பண்டிதர்களுக்கு பண உதவி செய்து, திராவிட மொழி வளர்ச்சிக்குச் சென்னை சர்க்கார் உதவி அளித்தால், நாட்டிற்கு நிரந்தரமான நன்மை அளித்தவராவர்.

ஐக்கிய மண்டலத்திலே, முதல் மூன்று பாரங்களிலே, தமிழைக் கட்டாய பாடமாக்க வேண்டுமெனத் திட்டம் வகுத்தால், அந்த மாகாணத்து மந்திரிகளும், மக்களும், எப்படி அதை "வரவேற்பார்கள்" என்பதை நாம் சிந்தித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்

அப்படி இருந்தும், சென்னை மாகாண மந்திரிகளே, ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் நமது சிறு பிள்ளைகளுக்கு கட்டாயமாக்கத் துணிந்து நிற்பதைக் காண்கிறோம். இது ஒரு பெருந்துர்அதிர்ஷ்ட வசமான சம்பவமாகும். இதிலிருந்து நாம் மீளுவோமாக.

ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்காக இது காலை உங்களிடையே வந்ததற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். என் நண்பர், சர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் தலைமையில் இம்மகாநாடு வெற்றிகரமாக நடக்குமாக. இவ்வார்த்தைகளுடன், நான் இம்மகாநாட்டைத் துவக்கி வைக்கிறேன்.

அறிக்கை

திராவிடக் கலை

("DRAVIDIAN CULTURE")

ஆங்கில முத்திங்கள் வெளியீடு

நம் நாட்டில் எத்தனையோ செய்தித்தாள்களும் வாரத்தாள்களும், திங்கட்டாள்களும் வெளியிடப்படுகின்றன. அவற்றுள் ஒன்றேனும் திராவிடக்கலையையோ, திராவிட நாகரிகத்தையோ அவற்றோடு தொடர்புடையவற்றைப்பற்றியோ சிறப்பாக எடுத்துக்காட்டும் தனிப்பட்ட நோக்கமுடையதாக இருக்கவில்லை. பண்டைத் தலையாய நாகரிகங்கள் என்று கருதப்படும் ஒருசிலவற்றுள் திராவிட நாகரிகம் தலைசிறந்தொன்று என்று கொள்ளப்படாவிடினும் மிகச் சிறந்தொன்று என்பதற்கு ஐயமில்லை; எனவே, திராவிடப் பெருங்குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரும், அவர் தமிழராயினுஞ் சரியே, தெலுங்கராயினுஞ் சரியே, கன்னடராயினுஞ் சரியே, மலையாளியாயினுஞ் சரியே அதைக் குறித்துப் பெருமை பாராட்டிக்கொள்வது முறையேயாகும். இவைகருதி, பொது மக்கள் வேண்டுகோட்கிணங்கியும், திராவிடப்பேரறிஞர்கள் ஒருசிலரின் விருப்பத்திற்கேற்பவும் ஆங்கிலத்தில் "திராவிடக் கலை" என்ற பெயருடன் மூன்று திங்கட்கொருமுறை வெளிவரும் ஓர் ஆங்கிலத்தாளை வெளியிடத் தீர்மானித்துள்ளோம். திராவிடக்கலை வளர்ச்சி கருதியுழைப்பதே அதன் முதன்மையான நோக்கமாகும். திராவிடக்கலை, திராவிட நாகரிகம், திராவிட மெய்ந்நெறி, திராவிடர் வரலாறு, திராவிட மொழிகள் போன்ற பலதுறைகளிலும் உயர்ந்த உண்மைப் பொருள்களைத்தேடித் துருவியறிந்து வெளியிட்டுதவுவதே அதன்

மெய்ப்பணியாகும். பொதுமக்கள் நாம் தொடங்கியுள்ள இப் பெருமுயற்சிக்கு நல்லாதரவு அளிக்க முன்வருவார்களானால் மிகத்திறம்பட யாம் பணியாற்றிவருவோம் என உறுதி கூறுகிறோம். திராவிடர்கள் தமக்கெனச் சிறந்த நாகரிகத்தையும், கலையையும் தனிப்பட வகுத்துக்கொண்டுள்ளார்கள் என்பதும், இந்தியவரலாற் றாராய்ச்சியாளர்கள் அவற்றைப் புறக்கணித்தல் ஒல்லாது என்பதும் யாவரும் அறிந்தனவே. ஆகவே, நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் நன்கு வாய்ந்த நம் நாட்டு மக்கள் இம்முயற்சியில் எங்களுக்கு நிறைந்த ஆதரவை யளித்துப் பெரிதும் ஊக்குமாறு வேண்டுகின்றோம்.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

முதல் வெளியீடு ஏப்ரல் திங்கள் வெளிவரும்

தனிப்படி அணா 10. ஆண்டுக்கட்டணம்: உள்நாடு ரூ. 2.
வெளிநாடு ரூ. 3.


பாரதிதாஸன் கவிதைகள்

புதுவை கனக—சுப்புரத்தினம் என்னும் பாரதிதாஸன் எழுதிய தமிழின்னிசைப் பாடல்கள். சொல் வளமும் பொருள் வளமுஞ் செறிந்து மிளிரும் பாடல்கள். படிக்கப் படிக்க ஆராவின்ப மளிப்பன; தமிழர் தனிப் பெருமையைத் தெள்ளத் தெளிய விளக்குவன; ஆற்றொழுக்குப்போல் அழகுடன் நடப்பன; புதுமுறையில் யாக்கப்பட்டு கிளர்ச்சியையும் உவகையையும் உண்டுபண்ணுவன. தமிழ் மக்கட்கோர் பாவிருந்தாய்த் திகழ்வன. விலை அணா 8.

கிடைக்கு மிடம்:—

திரு. T. S. குஞ்சிதம்

வேணுகோபாலபுரம், கூடலூர், N. T.



[illegible]



வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
காப்பாளர்,
தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம், பாகனேரி.

ஶ்ரீ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] ஈசுவர—பங்குனி [பரல்-௮

திருவாசகம்

திருச்சதகம் : உ-வது பாட்டு

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல்லா னரகம் புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல்லா தெங்க ளுத்தமனே.

பதவுரை :—

எங்கள் உத்தமனே—அடியார்களாகிய எங்களுக்கு இன்பநலமருளும் சிறந்தவனே

புரந்தரன் மால் அயன் வாழ்வு கொள்ளேன்—மேல் உலகங்களிலுள்ள வானவர்கோன் திருமால் நான்முகன் ஆகிய இவர்கள் செல்வ வாழ்வை (நீ தரினும்) நான் விரும்பி ஏற்றுக்கொள்ளமாட்டேன்

நினது அடியாரோடு அல்லால் குடிகெடினும் நள்ளேன்—எனது உடல்வாழ்வுக்கு முடிவு வரினும் நின்னிடத்தில் அன்பு செய்யும் அடியார்களோடல்லாமல் வேறு ஒருவரோடும் சேர்ந்து நட்புக் கொள்ளமாட்டேன்

இறைவா திருவருளாலே இருக்கப் பெறின் நரகம்புகினும் எள்ளேன்—தலைவனே நினது திருவருளாணையால் நான் துன்ப வாழ்விடமாகிய நரகம் புகுவதாயிருக்கப் பெறினும் அந்த நரகம் புகுந்திருப்பதற்குச் சிறிதும் இகழமாட்டேன்.

உன்னையல்லாது பிறதெய்வம் உள்ளேன்—முழுமுதற் கடவுளாகிய உன்னையன்றி உனது ஆணைவழி நின்று ஏவற்பணி செய்யும் பிறகடவுளரை வணங்குவதற்கு உள்ளத்திலும் ஒருசிறிதும் நினைக்கமாட்டேன்.

விளக்க உரை :—

எங்கள் உத்தமனே—அடிகள், அடியார்களைத் தம்மோடு உளப்படுத்தி 'எங்கள் உத்தமனே' என்றார். உத்தமன்-சிவபெருமான்; தன்னைப் போல எல்லா உயிர்களும் இன்பநலம் அடைதல் வேண்டுமெனும் கருத்துடன் இடைவிடாது ஐந்தொழில் செய்துவருதலால் அவனை அடிகள் 'உத்தமன்' என்று விளித்தார். உத்தமன்—சிரேட்டன், சிறந்தவன்.

புரந்தரன் மால் அயன் வாழ்வு கொள்ளேன்—இவர்கள் வாழ்வு உலக வாழ்வை நோக்க மிகச் சிறந்த வாழ்வாயிருப்பினும் பேரின்ப வாழ்வு போல நிலையுள்ளதாயிராது கால எல்லைக்குட்பட்டு அழிவு பாடுடையனவாயிருத்தல்பற்றி அடிகள் 'கொள்ளேன்' என்றார்.

நினது அடியாரோடு அல்லால் குடிகெடினும் நள்ளேன்—சிவஞான போதம் 12-ம் சூத்திரம் 2-வது அதிகரணத்தில் சிவபக்தர்களோடு இணங்குக என்று கூறப்பட்ட உண்மையை அடிகள் இங்கே குறித்தருளினார். குடி—உடல் வாழ்வு.

இறைவா திருவருளாலே இருக்கப்பெறின் நரகம்புகினும் எள்ளேன்—அழிவுபாடுடைய திருமால் முதலிய கடவுளர்களின் உலக இன்பவாழ்வை நான் விரும்பேனாயினும் நினது ஆணையால் நான் இத்துன்ப வாழ்விடமாகிய நரகம் புகுந்திருத்தல் வேண்டும் என்று நினது திருவருள் ஆணை எனக்குக் கிடைக்குமாயின் நான் நரகில் மகிழ்வுடன் புகுந்திருப்பேன் என்பது கருத்து. தலைவனாகிய நீ எனக்கு வேண்டுவதென்று எதனை நினைப்பாயோ நான் அதனையே வேண்டுவதன்றி வேறொன்றையும் வேண்டேன் என்பதைக் குறிப்பிட அடிகள் இங்கே 'இறைவா' என்று விளித்தார். அடிகள் பணிவுடன் தாம் சிவபெருமானுடைய திருவுளக்குறிப்பின்படி நடப்பதன்றி அதற்குமாறாகத் தமக்கு தனியே உள்ளக் குறிப்பில்லை என்று கூறுகின்றார்.

உன்னையல்லாது பிறதெய்வம் உள்ளேன்—"வம்பறா வரிவண்டு மணநாற மலரு மதுமலர் நற்கொன்றையா னடியலாற்பேணா வெம்பிரான் சம்பந்தன்" என்று சுந்தரமூர்த்தி அடிகள் திருஞான சம்பந்த அடிகளைப்பற்றி திருத்தொண்டத் தொகையில் கூறியதை நோக்குக. மெய்யுணர்வுடைய அடியார்கள் சிவபெருமானையும் அவன் திருவருளையும் ஒருமை மனதோடு எப்பொழுதும் எந்த நிலையிலும் நினைந்துகொண்டிருத்தல் வேண்டுமென்பது இப் பாட்டின் கருத்து.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

தமிழின் இயற்கையமைப்பும், அதனை வளர்க்கும் நெறியும்

[திரு. சே. ரே. இராமசாமி பிள்ளை அவர்கள்]

உலகம் தோன்றிய நாள்தொட்டுப் பல்லாயிரம்மொழிகள் வழங்கி வந்திருக்கின்றன. உலக வழக்கினும், செய்யுள் வழக்கினும், வழங்கிவந்த மொழிகள் இதுபோழ்து பேச்சு வழக்கற்றுச் செய்யுள் வழக்கில் மட்டும் இருந்து வருகின்றன: அவை சமஸ்கிருதம், அராபி, கிரீக், இலத்தீன் முதலியன. உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டினும் வழங்கி வருவன ஒருசில மொழிகளே. அவைகளுள் நமது தமிழ்மொழியும் ஒன்று.

அம்மொழிகள் யாவும் உலகவழக்கு அழிந்தமைக்கு அம் மொழிகளின் உரத்த ஓசை, அளவுக்குமீறிய முயற்சியால் ஒலித்தல், ஒரே எழுத்துக்குப் பல ஒலிக்குறிப்பு, ஒரே எழுத்தை ஒலி வேறுபடுத்திப் பல எழுத்தாக ஆக்கல், எழுத்துக்களைத் தாள் தலையில்லாமல் எண்ணுதல், தேவபாடையெனப் பிற ரெவரும் படிக்கவும், கேட்கவும் கூடாதவாறு தடுத்து வைத் திருந்தமை முதலிய காரணங்களேயாம்.

நமது தமிழ் மொழி ஒன்று மட்டும், பண்டைக்காலத் தண்டமிழ் வரம்பிகவாது யாத்த தொல்காப்பிய இலக்கண மரபு பிழையாது இதுகாறும் வழங்கி வருதற்குக் காரணம், அதன் இயற்கையொலி, முயற்சி மிகுதியின்றி ஒலித்தல், வல் லோசை, மெல்லோசை, இடையோசை, நெட்டொலி, குற் றொலிகள் சரிநிகராக இருத்தல்; சொற்கள் யாவும் ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்துச் சொற்களாகவே பெரும்பான்மையும் இருத்தல், பேசற்கும், பாடற்கும் எளிமை, இனிமை பயத்தல், முதன்மையாக உயர்ந்த பொருள்களை முதன் முயற்சியிற் பிறக்கும் எழுத்துக்களைக் கொண்டே குறித்தல், குறிப்பிடும் பெயர்கள்யாவும் காரணம் பற்றியே ஆக்கப்பட்டிருத்தல், கருத்துக்கள் யாவும்தெளிவு விளக்கமா யிருத்தல் முதலியனவும் அதன் நற்பண்புகள் பிறவுமேயாம்.

ஓரெழுத்துச் சொற்கள், ஆ, ஈ, ஓ, ஏ, கா, தா, நா, பா, மா, முதலியன. இவைகளுள் ஆ, என்பது பாவர்க்கும் பயனும்

தன்மையுடையது என்னும் காரணமாய்ப் பசுமாட்டையும், ஈ, என்பது 'ஈ' என்னும் ஒலிக் குறிப்போடு செல்லுதலையுடையது என்னும் காரணமாய் ஒரு சிறு பறவையையும், கா, என்பது மக்களையும், பிறவுயிர்வகைகளையும் அதன், இலை, பூ, காய், பழம் விதை முதலியவற்றால் காப்பாற்றுதலை யுடையது என்னும் காரணமாய் மரங்கள், செடி, கொடிகள் நெருங்கிய காட்டையும் உணர்த்துகின்றது. மற்றைய சொற்களும் இவ்வாறே. இவ்வோரெழுத்தொரு மொழிகளிலேயே எத்தனை நுணுக்கம் வாய்ந்த கருத்துக்களும், சொல்லுதற் கெளிமையும் பிறவும் அமைந்திருக்கின்றன.

தமிழ் முதுமக்கள் மிக வுயர்ந்தபொருள்களாகக் கருதுபவைகளை உயிரெழுத்தில் அங்காந்தவுடன் பிறக்கும் முதலொலி எழுத்தாகிய அகரத்தையே அதனதன் முதலெழுத்தாகக் கொண்டு குறியிட்டு செய்திருப்பதன் அருமை மற்றையெம் மொழி வல்லுநர்கட்கும் இசையாத தொன்றாம்.

தாயை அம்மை, அன்னை, அஞ்ஞை, ஆய், யாய், ஆத்தாள் எனவும், தந்தையை அப்பன், அச்சன், ஐயன், எனவும், தன்னின் மூத்தோர்களை அண்ணன், அக்காள், அம்மான், அத்தை எனவும், கடவுளை அரன், அரி, எனவும், உயிரை ஆவி ஆன்மா எனவும், உடலை யாக்கை எனவும், உலகை அண்டம் எனவும், பிறவும் உயர்ந்தபொருள்களை அன்பு, அறம், அழகு, அமைதி, அருள், அறிவு எனவும் முதலிற்றோன்றிய அகரவுயிரெழுத்தையே அவ்வப்பொருள்களின் முதலெழுத்தாகக்கொண்டு அமைந்த நம் பழந் தமிழ்ப் பெரியார்களின் அறிவாற்றலை என்னென்பேம்! என்னென்பேம்!

இத்துணை நுணுக்கம் வாய்ந்த நம் தமிழ் மொழியில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் இயற்றப்பெற்ற திருக்குறள் என்னும் அறநூல் ஏனைய எம்மொழியினும் காணப் பெறாத அரும்பெறற் கருத்துக்களையும், சில எழுத்துக்களில் பல வகைப் பொருளை உள்ளடக்கித் திட்ப நுட்ப மிக்கதாய்த் தனக்கு ஒப்புயர் வில்லாச் செப்ப முடையதாய்த் திகழ்கின்றது. அந்நூலினும் "அகரமுதல" என்ற அகரவொலியை இயற்கையிலேயே இவ்வாசிரியர் துவங்குகின்றார். இந்நூலில் எவ்வறத்தைக் கூறினும் வரையறுத்துக் கூறும் பெற்றி மற்றையெம் மொழியாசிரியர்க்கும் புலனாகாது.

கல்வி, கல்லாமை, ஈகை முதலிய எல்லா அறங்களையும் இவர் கூறுமாப்போல் யாருங் கூறலரிது. கல்வியைக் கூறும்போது "கற்க கசடறக் கற்பவை கற்றபின்—நிற்க அதற்குத்

தக" என்று கூறுகின்றார். இப்பாட்டின் பொருள் ஒருவன் கற்கவேண்டிய நூல்களை நன்றாகக் கற்கவேண்டும். கற்றபின் அக்கற்ற நூல்களிற் சொல்லியவாறு நடத்தல் வேண்டும் என்பது. கற்க, நிற்க என்ற இரண்டு பயனில்லகளை நிறுத்தி எவ்வளவு சுருக்கமாகப் படித்தால் அதன்படி நடக்கவேண்டும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். கற்பவை கசடறக் கற்க என்பதில் கற்க வேண்டாதன பலவுள. அவைகளை விலக்கக் கற்க வேண்டாம். அவைகளைக் கற்றும் பயனில்லை. உங்கள் வாழ்நாளும் போதா என்று இன்னவெல்லாம் உள்ளடக்கியே 'கற்க கசடறக் கற்பவை யென்றார்.' அப்படிக் கற்றும் பயனில்லை யென்பார் அதன்படி நடக்காவிட்டால் 'அதற்குத்தக நிற்க,' என்றார். இன்னும் இவ்வாசிரியர் இந்நூல் முழுதும் இவ்வாறே நயம்படக் கூறுவர்.

ஆதலால் இத்திருக்குறளே உயிர் நூல், உள நூல், நில நூல், விலங்கு நூல், பொருள் நூல், அறநூல், இன்ப நூல், வீட்டு நூல் பிற யாவுமாகும். இந்நூல்போல் வேறெம் மொழியினும் காணப்படவில்லை யென்று மேல்நாட்டு ஆசிரியர்கள் நடுநிலை பிறழாது வாயாரப் புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள். இது போழ்து இந்நூலின் பெயர்கூட எத்தனைத் தமிழ்மக்கட்குத் தெரியும் என்பதுவே ஐயப்பாடாக இருக்கிறது.

இத்திருக்குறள் நூலொன்றன்றிப் போர் முறை, பண்டைக் காலத் தமிழ்நாட்டு வரலாறு, பெண்கல்வி, பெண் மக்கள் வீரம், புரவலர், புலவர் வரலாறு முதலியவற்றைக் கூறும் புறப்பாட்டும், இன்பத்தையே குறிக்கோளாகக் கூறும் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலிய நூல்களும் தமிழ்மக்கள் அகநாகரிகம், புற நாகரிகம்யாவையும் ஒருங்கே எடுத்து முற்றுமுடிய விளக்கும் தொல்காப்பியமும், இன்ப அன்பைப் பெருக்கும், தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், பெரிய புராணம் முதலிய நூல்களும், இயற்கைப் பொருள்களையும், பிற அழகிய பொருள்களையும் நன்கெடுத்துப் புனைந்துரைக்கும் கவின்பெரு முழு மாணிக்கங்களாய மற்றை யெல்லா வகை நூல்களும், மனவொடுக்கக் காட்சியளிக்கும் சித்தர் நூல்களும், வைத்திய நூல்களும் எண்ணிறந்து "எல்லாப் பொருளு மிதன்பாலுள இதன்பால் இல்லாத எப் பொருளுமில்லை." என்பதற்கேற்ப மொழிவளம், பொருள் வளம், நூல்வளஞ் சிறந்தே தங்கன்னித் தண்டமிழ் மொழி விளங்குகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நந் தமிழ் மொழியை மேலும் மேலும் வளம்பெறச் செய்யும் வழியாது? எற்றால் வளரும்

என்ன ஆயுங்கால் தற்கால உலக மொழியாகப் பரவியுள்ள ஆங்கில மொழியின் அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். மொழிபெயர்க்கு முன் அக்கலைச் சொற்களுக்கேற்ற தூய தமிழ்ச் சொற்களை இருமொழியினும் புலமை வாய்ந்த சான்றோர்கள் ஆக்கிக்கொடுத்து உதவல் வேண்டும். பொய்யும், புளுகும் புனைந்து கட்டிய புராணக் கதைகளுக்கு ஆக்கந்தேடாது இவ்வழியில் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். சொற்செட்டு, உயிர்ப்புச்செட்டு இல்லை தமிழ் மொழிக்கென வாய்ப்பறை சாற்றிப் பிறமொழி மயக்கில் கட்டுண்டு கிடக்கும் போலித் தமிழ் மக்கட்கு உணர்ச்சி யுண்டாகுமாறு தெளிவாக உரைநடை யெழுதல்வேண்டும். பிற மொழிகளிலுள்ள சொற்களை அப்படியே யெடுத்துத் தமிழின் வளர்ச்சிக்குத் தடையாக உரை நடைகளில் எழுதாது தூயதமிழ்ச் சொற்களையே ஆய்ந்து எழுதல் வேண்டும். பழந்தமிழ் நூல்களில் உரையில்லாதவைகட்கு உரை யெழுதுதல் வேண்டும். உரையெழுதுங்கால் அவ்வவர்கள் கொள்கைக் கேற்றவாறும், ஆராய்ச்சிப் போக்குக்கு ஏற்றவாறும் மூலபாடத்தைச் சிதைத்துப் பாடவேறுபாடாக்காது உள்ளதை உள்ளவாறேவைத்து அதற்குப் பொருள் கண்டெழுதுதல் வேண்டும். இன்னும் இவைபோன்ற மற்றைய ஆக்கவேலைகளைக் கண்காணிப்போடு செய்து வந்தால் தமிழ்மொழி தலைசிறந்து விளங்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தமிழ்ப் பெரியோர்களே! இத்தொண்டு செய்தற்கு எழுமின்! எழுமின்!

இச்செய்தி பற்றியே நம் பாரதியார் சொல்வதைக் கேண்மின், காண்மின்!

"புத்தம் புதியகலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்தவளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந்திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச்சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதையுரைத்தான்—ஆ!
இந்தவசை யெனக் கெய்திடலாமோ
சென்றிடு வீரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்,
தந்தையருள் வலியாலும்—இன்று
சார்ந்த புலவர் தவ வலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்றுமிருப்பேன்."

எனத் தமிழ்த்தாய் வாயிலாகப் பாரதியார் எவ்வளவு கருத்துக்களை வெளியிட்டுக் காட்டுகின்றார்! அவரின் தமிழ்ப் பற்று மலையினும் மாணப் பெரிதாகவன்றோ வளர்ந்திருக்கின்றது! நமக்கும் அப்பற்றுதல் வேண்டாமா? பற்றுக் கொண்டு ஆவன செய்தற்கு வம்மின்! விரைந்துவல்லே, இத் தொண்டிற்கு

“ நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்,
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்.”

என உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

பொருள் படைத்த பெரியோர்களே, நீவிர் களியாட்டங் கட்கும், மஞ்சு விரட்டு, கரகம் எடுப்பு, பேயாட்டு முதலியவை கட்கும் பெரும் பொருள்களைக் கொட்டி விணாக்குகின்றீர் கள். அந்த வழியைக் கட்டுப் படுத்தி ஆங்காங்கே கலைச் செல் வம் ஓங்குதற்குச் சங்கங்கள், பள்ளிகள், வாசகசாலைகள் திறவுங்கள்.

“ பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்,
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம் ”

எனக் கல்வியிற் பெரிய கம்பன் கண்டகண்ட இடங்களிலும், விளையாட் டிடங்களிலும் பள்ளிகளுமே, வாசகசாலைகளுமே பல்கியிருந்தன அயோத்தியில் எனக்காட்டும் கலைவளரும் கனவை உண்மையாக்கிக் காட்டுங்கள்! நாடு செழிக்க, நலம் வளரத் தமிழ் வரைகேடு ஒழியக் கிளர்ந்திவைகள் செய்ய வேண்டுகிறேன்.

சங்கீதம்

[தோல்புரம் நா. சிவபாதசுந்தரம் அவர்கள்]

நம் ஆன்றோரின் வழக்கப்படி அமிழ்தினுமினிய, நம் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளையுடையது. இயற்றமிழ்; அதாவது வசனம்; வசனத்தில் எழுதுங் காலத்துப் புணர்ச்சி விதிகளையொட்டிச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு தக்க பதங்களை உபயோகித்து, நன்குவரையக் கற்றுக் கொள்ளவும், வசன ரூபமாயிருக்கும் புராண இதிகாசங்களைப் படித்தால் பின் இசையில் வரும் பண்களை எளிதில் உணரவுமே உண்டானது. இசைத்தமிழ்:—இசைத்தமிழ் என்ற மட்டிலேயே கீதமுடன் பாடத்தக்கது என்பது வெளிப்படை. செய்யுள்களில் வெண்பா என்றால், சங்கராபரண இராகம் என்பது வெளிப்படை. இஃது மிகவும் கடினமானதே. ஏனெனில் நாம் வசனம் எழுதுவதுபோல் இதை எழுத முடியாது. உதாரணமாக, அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம் என எடுத்துக் கொண்டால் முதலில் ஒவ்வொரு அடியும் அறுசீர்களையுடைத்து. அஃதேபோல் நான்கு அடிகளெழுதவேண்டும். அம்மட்டோ, இவைகளில் எதுகை மோனைகள் அமையப் பெற்றிருக்க வேண்டும். காலத்தையுமனுசரித்தல் வேண்டும். பத்தழகு, முப்பத்திரண்டு உத்திகளையொட்டியிருத்தல் வேண்டும். செய்யுள் என்பதினிலக்கணத்தைக் கூறுமிடத்து,

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினில்
வல்லோரணி பெறச் செய்வன செய்யுள்"

என்றமை விளங்கும். இத்தன்மை பொருந்தியது இசைத்தமிழ். நாடகத்தமிழ்:—இதைப்பற்றிக் கூறுதலவசியம். நாடகத் தமிழ் என்றால், இதிகாச புராண சரிதைகளை, பாமரர்களுக்குப் புகட்ட, தான் கசடறக்கற்று நடித்துக் காட்டலே. ஒருவன் நாடகத் தமிழ் பயில்வானேல் அவன் முத்தமிழ் நாற்கவியிற் றேர்ச்சியுடையோனாய், சங்கீத விற்பன்னனாய், வனப்புடையோனாக இருத்தல் வேண்டும். அவன் பெரு நூல்களினின்றும் தலைவன் தலைவியரது கூற்றை நன்குணர்ந்து பின்பு நவரசங்களுடன் நடித்துக்காட்டல் வேண்டும். இஃதெல்லாம் இக்கால நிலைமைக்கு ஏற்புடைத்தன்று. அப்படிக்கற்று அறிந்த பெரியோர்களுமிலர். அப்படியிருந்து நடித்தாலும் பார்ப்பாருமிலர். அந்தோ என்னகாலக் கொடுமை! எல்லாம் கலியின் விளைவு அன்றோ!

இனிச் சங்கீதம் என்ற சொல்லைச் சம்+கீதம் என்று பிரிக்கலாம். சம் என்பது சுகம்; கீதம் என்பது இசைப்பாட்டு; எனவே சங்கீதம் என்பது சுகத்தைக் கொடுக்கும் இசைப் பாட்டெனப் பொருள்படும்.

தற்காலத்தில் இவ்வித சங்கீதத்தை மேல்நாட்டுச் சங்கீதம், பரதசங்கீதம் என இரு பெரும் பிரிவுகளாக்கலாம். மேலைத் தேச சங்கீதம், கருவிகளில் வாசிப்பதையே முக்கிய அம்சங்களாகக் கொண்டது. பரதசங்கீதம் வாய்ப்பாட்டையே முக்கிய அம்சமாகக் கொண்டது.

ஒரு குழந்தை பிறக்கவேண்டுமானால் அதற்குத் தாயும் தந்தையும் இன்றியமையாது வேண்டப்படுகின்றனர். தாய் தந்தையர் எப்போது இல்லையோ அப்பொழுது குழந்தையுமில்லை என்பதைச் சிறுருமறிவர். சங்கீதம் என்னும் குழந்தை பிறப்பதற்குஞ் சுருதி என்னும் தாயும், இலயம் என்னும் தந்தையும் வேண்டும். சுருதி இலயம் என்னுமிரண்டில் ஒன்றின்றேல் சங்கீதமின்றாகும். இக்காலத்தே நம்மனோருட் பெரும்பாலார் மெச்சி உரையாடும் சங்கீதத்திற்கு ஒன்றில் சுருதியோ, அன்றி இலயமோ, அல்லது இரண்டுமோ இல்லாதிருக்கவும் சாரீரவளம் மாத்திரம் சற்று உண்டேயானால் அதைச் சங்கீதம் என்று சந்தோஷிக்கின்றனர். வெட்கம்! வெட்கம்!!

சங்கீத உற்பத்திக்கு 'நாதம்' ஆதாரமானது. இந்த நாதம் என்ற சொல்லை நா+தம் எனப் பிரிக்கலாம் "நா" என்பதின் பொருள் பிராணன். "தம்" என்பதின் பொருள் அக்கினி என்று சொல்லப்படும். ஆன்மாவானது தனக்கு இயற்கையாயிருக்கும் நாதத்தினால் அதற்கு வேண்டிய விஷயத்தைப் பேசத் தொடங்கித் தனது காரிய கருத்தாவாகிய மனத்தைத் தூண்டுகிறது. அப்பொழுது மனமானது தேவாக்கினியை எழுப்ப அந்த அக்கினியானது தேகவாயுவைப் பிரிட்டு எழச் செய்ய அந்த வாயு குய்யத்திலிருந்து குழியைத்தாண்டி பின மார்பு முதலான பாகங்களிற் சென்று மேல் நோக்க மந்தர சத்தம் உண்டாகிறது. இந்த சத்தம் முதல் புலி உறுமுவது போலிருந்து பின் வாயைத்திறக்க நாதம் வெளிவருகிறது. இதுவே "நாதம்" எனப்படும்.

இவ்விதமான நாதம் இருதயத்திலிருந்து இடைகலை வழியாக மந்தியமும் மூர்த்தினியிலிருந்து சுசிசசு வழியாக நாதமும் பிறக்கும். இவ்வித நாதங்களுக்கு சப்த சுரங்களே ஆதாரமானவை. அவையாவன:—"ச, ரி, க, ம, ப, த, நி," என்பன.

சுரங்களின் இசைவான சேர்க்கைக்கு கமகங்கள் என்று பெயர். அவை பத்துவகைப்படும் அவையாவன :—ஆரோகணம், அவரோகணம், டாலு, ஸ்புரிதம், கம்பிதம், ஆகதம், பிரத்தியாகதம், திரிபுச்சம், ஆந்தோளம், மூர்ச்சனை என்பனவாம்.

மேலே சொல்லப்பட்ட சப்த சுரங்கள் ச, மயிலின் ஓசையும்; ரி, எருதின் ஓசையும்; க, ஆட்டின் ஓசையும்; ம, கொக்கு அல்லது சக்கரவாகப் பட்சியின் ஓசையும்; ப, குயிலின் ஓசையும்; த, குதிரை தவளைகளின் ஓசையும்; நி, யானையின் ஓசையும் உடையன. இனி சுவை உவமையில் ச, பாலைப் போன்றும், ரி தேனைப் போன்றும், க, கிழாஞ் போன்றும், ம, நெய்யைப் போன்றும், ப, ஏலம் போன்றும், த, வாழைப்பழத்தைப் போன்றும், நி, மாதுளங்கனி போன்று மிருக்கும். வாசனை உவமையில் முறையே :—மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை ஆகவு மிருக்கும்.

இனி, மேல்காட்டிய சப்த சுரங்களை இருபத்திரண்டு சுருதிகளாகவும், பிற்காலத்தில் பதினாறு சுருதிகளாகவும் அதன்பின் பன்னிரண்டு சுருதிகளாகவும் பிரித்துக் காட்டியுள்ளார் இசைவல்லார். இப்போது வழங்கும் சங்கீதமுறை முன் கூறப்பட்ட பன்னிரண்டு சுர பேதங்களை கொண்டதாக வழங்கி வருகிறது. தற்காலத்துத் துளைக்கருவி நரம்புக்கருவி, முதலியன பன்னிரண்டு சுரங்கள் கொண்டனவாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

சாதாரண சங்கீதம் குழந்தைகள், பெரியோர், சங்கீத ஞானமுள்ளவர்கள் அஃதில்லாதவர்கள் ஆகிய எத்திறத்தாருக்கும் ஒருசேர ஆனந்தம் அளிக்கிறது. அவ்வாறாயின் உண்மையான சங்கீதத்தின் பெருமை இத்தன்மையது எனக் கூறுதல் எளிதாமோ!

எனினும் ஆனயநாயனாரது சங்கீதத்தைக் கேட்டவுடன் “ஆடுகின்ற மயில் கூட்டங்கள் ஆடுதலை ஒழிந்து அவர் பக்கம் வந்தன. விஞ்சையர்களும் சாரணர்களும், கின்னரர்களும் தேவர்களும் மெய்மறந்து விமானங்களில் ஏறிக்கொண்டு வந்தார்கள். வருந்துகின்ற உயிர்களும் வருத்தப்படுகின்ற உயிர்களும் அவ்விசையைக் கேட்டு அதன் வசமானபடியால் பாம்புகள் மயங்கிப் பயமின்றி மயில்கள்மேல் விழுந்தன. சிங்கமும் யானையும் ஒருங்கே கூடிவந்தன. மான்கள் புலிகளின் பக்கத்திலே சென்றன. மரக்கொம்பர்களும் அசையாதிருந்தன.” என்னே சங்கீதத்தின் மகத்துவம்!

மந்தரசத்தம் காலையில் புலியின் கண்டம் போலவும், மத்தியானத்தில் சக்கரவாகப் பட்சியினுடைய ஓசை போலவும் மாலையில் மயிலின் கண்டம்போலவுமிருக்கும்.

ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வோரிராகமும் பிறக்கும். உதயகாலத்தில் பூபாளம், தன்னியாசி முதலிய இராகங்களும், இடைக்காலத்தில் பிலகரி, முகாரி முதலிய ராகங்களும், மத்தியானத்தில் மத்தியமாவதி, ஸ்ரீராகம், நீலாம்புரி முதலிய இராகங்களும், மாலைக்காலத்தில் தோடி, பந்துவராளி முதலிய ராகங்களும் பிறக்கும். சாமத்தில் கேதாரகவுளம், காபி முதலிய இராகங்களும், பிற்சாமத்தில் வசந்தா முதலிய இராகங்களும் பிறக்கும். நாம் இதுவரையில் சங்கீதம் என்றால் சங்கீத உற்பத்திக்கு எது ஆதாரம், இராகங்களுக்கு எது ஆதாரம், எக்காலத்தில் எந்த இராகங்கள் எனவும் கூறினோம். இனி தாளத்தைப்பற்றிப் பார்ப்போம்.

இனி ஸ்வரங்கள் ஏழாக அமைந்ததுபோலத் தாளங்களும் ஏழுவகைப்படும், அவையாவன:—த்ருவதாளம், மாட்டிய தாளம், ரூபகதாளம், ஜம்பைத்தாளம், திரிபுடைத்தாளம், அடதாளம், ஏகதாளம் என்பனவாம். இவை சதுரச்சரம், திச்ரம், மிச்ரம், கண்டம், ஸங்கிர்ணம் என ஐந்து சாதிகளையுடையன. ஏழுதாளங்களும் ஐந்து சாதி பேதத்தினால் முப்பத்தைந்து தாளங்களாகவும், இன்னும் ஐந்து சாதி பேதத்தால் நூற்று எழுபத்தைந்து தாளங்களாகவும் தோன்றும் என்க.

வாழ்க்கைக்கு உயிராய் உள்ளது சங்கீதம் என்பதனை அது பல துறைகளிலும் பலவகையில் உடனிகழ்வதன் மூலம் அறியலாம். இங்ஙனம் பல துறைகளிலும் பலவகையிலுடனிகழ்தலை அருவி வெட்டுவோர், நீர் இறைப்போர், வள்ளம் ஓட்டுவோர், பிரயாணம் செய்வோர் ஆகிய இவர்கள் சங்கீதத்தைப்பாடி அதன் மூலம் தமது கஷ்டங்களை அவ்வப்பொழுது குறைத்துக் கொள்ளுதலில் அறியலாம்.

சங்கீதம் உயிர் உள்ள பொருட்களை மாத்திரம் தன் வசமாக்குவதன்றி அஃதில்லாத சடப்பொருட்களையும் தன்வசமாக்குகின்றது. இதனை, அநுமார் மலையுருக்கி இராகத்தைத் தமது வீணையில் வாசித்தபோது அவ்விருந்தமலை உருகித் ததும்பி, வாசித்தலொழிந்தபோது பழைமை போலாகியது என்ற சரித்திரம் உணர்த்தும்.

இம்மட்டா! நள்ளிருளுறி என்ற ஒரு மலர் உண்டு. அது நடுச்சாமத்தில்தான் மலரும். இடைநேரங்களில் இதில் வண்டுகள் வந்து ரீங்காரம் பாட மலரும்,

"முல்லைவரி வண்டுதே வாய் நெகிழ்ந்தனவே"

என்பது குறுந்தொகை. இவ்வளவா! இல்லை!! இல்லை!!! அகநானூற்றில் குறிஞ்சி நிலத்தில் தினைக் கொல்லையைக் காக்கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பாறைமீது நின்று மந்த மாருதத்தில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப்பாடி நிற்கையில் அடங்காப் பசியால் விராவேசத்தோடு தினைக் கதிரை உண்பதற்காக அங்கே வந்த ஒரு யானை அந்தப் பெண்ணின் இசையில் மயங்கி அடங்காப் பசி அடங்கி விராவேசம் குறைந்து தினைக் கதிரை உண்ணாமல் நின்றதாக ஒரு செய்தி காணப்படுகிறது. இக்காட்சியே

"ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது
பாடாஅப் பைங்கண் படுபெற் றெய்பென
மரபுசுன் மழகளி றுறங்கும் நாடன்"

என்ற அடிகள்காட்டுகின்றன. பசுக்கள் இசையின் வாய்படும் என்பதனை கண்ணபிரான் கதை விளக்கும். பசுக்களைப் பல விடங்களிலும் மேயவிட்டு விளையாடிக் கொண்டிருந்த நிலவர்ணனர் மாலைக்காலத்தில் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிக் கொண்டு செல்லும் பொருட்டுக் குழலை எடுத்து ஊதுவார். உடனே பல விடங்களிலும் மேய்ந்த பசுக்கள் அவ்விசையின் வழி வந்து ஒருங்கு நிற்கும். இதனையே

"ஆக்கு வித்தார் குழலா லரங்கேசர்"

என்று திவ்விய கவிஞர் ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார்.

சிவக சிந்தாமணியின் கதாநாயகனை சிவகன் ஆண்மகளைப் பார்ப்பதில்லை என்ற விரதத்துடன் இருந்த "சுரமஞ்சரி" என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று இசைபாடி அவளை வசப்படுத்தி விவாகம் செய்தான். என்னே இசையின் மாண்பு! ஆகா!

ஈசுவரனே இசையின் வடிவமாயிருப்பவர் என்றும், இசையிற்பிரிய முடையவர் என்றும் பல பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். "ஏழிசையா யிசைப்பயனாய்" "இயல்வன் இசையான்" எனவரும் பகுதிகள் சிவபெருமான் இசையுருவினரென்பதைத் தெரிவிக்கின்றது. இசையிலுள்ள விருப்பத்தினால்

அனவரதமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபிரான் காதிற் குழையாக வைத்தருளியிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். "இசையில் விரும்பும் கூத்தனார்," என்பது இறைவருடைய இசைவிருப்பத்தை வெளியிடும். இன்னும் திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் கொடுத்ததாலும், மருணீக்கியாருக்கு நாவுக்கரசு என்ற பெயர் கொடுத்ததாலும் அறியலாம்.

அதனால் நேயர்களே! இசையின் மேல் விருப்பமுள்ளவர்களே! இது வரையிற் கூறப்பட்டன வெல்லாம் சங்கீதம் என்னும் எல்லையில்லாச் சமுத்திரத்தின் ஓர் சிறு திவலையளவெனக் கூறினும் பொருந்தாது. ஆகலால் இசை வல்லார் மாட்டுக் கேட்டும், இசை நூல்களை வாசித்தும் ஈடேற்றம் அடைவீர்களாக.

தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்

[வித்துவான் மா. இராசமாணிக்கம், P. O. L]

'மொழி' என்பதைப்பற்றி விரிவாக எழுதப் புகுந்த ஜெஸ்பேர்ஸன் (Gesperson) என்பார், "மொழி முதலில் மனிதர்க்குள் அமைவதில்லை. மனிதன் முதலில் தான் கண்ட பொருட்குப் பெயர் வைக்க இயலாத விலங்கு நிலையில் இருந்தான்; தானும் தன் இனத்தவருடன் பேச இயலாதவனாக இருந்தான்; (a) பின்னர் நாளடைவில் அறிவும் அநுபவமும் கைவரப்பெற்றுத் தனக்கு வேண்டியவற்றைப் பிறரிடம் சொல்லுங்கால் அப்பொருள்களின் உருவத்தினைச் சித்தரித்துக் காட்டினான்; (b) அதன் பிறகு பொருளின் குணம் தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்றுவந்தான்; (c) இது இப்பொழுதைய குறுக்கெழுத்து (short hand)ப் போன்றது; ஒரு பொருளுக்கு ஓர் எழுத்திடல்; (d) எழுத முடியாமல் பேச்சு வகையால் சொற்றொடர்களைக் குறித்த அடையாளம். இங்ஙனமே பாஷையானது உருப்பெறுகிறது" எனத் தமது அரிய ஆராய்ச்சி நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார். இவை நான்கும் முறையே (a) உருவெழுத்து (b) தன்மை எழுத்து (c) உணர்வெழுத்து (d) ஒலி எழுத்து எனப்படும். இவை விளக்கமாக நன்னூல் மயிலைநாதர் எழுத்தியல் ஈற்றுச் சூத்திரவுரையில் கூறியிருத்தல்

நோக்கத்தக்கது. இதனைச் சிற்சில வேறுபாட்டுடன் யாப்பருங்கல விருத்தி உரையாளர் விளக்கமாகக் கூறுவர். அவர் அஃதுடன் வேறுபல எழுத்துவகைகளையும் "பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும்............கட்டுரை எழுத்தும், வச்சிரம் முதலிய வடிவெழுத்தும் மற்றும் பலவகையாற் காட்டப்பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்டுணர்க" (பக். 568, 569) எனக் கூறியிருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கது. மேற்கூறிய நால்வகை எழுத்துக்களில் உருவெழுத்து (சித்திர எழுத்து)ச் சிந்துப்பிரதேச திராவிடரிடம் காணப்பட்டதென ஹீராஸ் பாதிரியார் கூறியது இங்கு நினைவிற்கொள்வற்பாலது. இவ்வெழுத்துக்களைப் பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் வழங்கி வந்தனர். உணர்வெழுத்து என்பது சீனர்பால் காணப்பட்டவை; 'தன்மை எழுத்து' எகிப்தியரிடம் காணப்பட்டவை; "அறிவு நுட்பத்துக்குக் கன்றும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன் பாம்பும், வெற்றிக்குக் கருடனும் பிறவுமாம்!"............ஆகவே, சீனர், எகிப்தியர், பாபிலோனியர் முதலிய தொல்லை நாகரிகமுடைய மக்கள் வழங்கியவை போன்ற எழுத்துக்கள்—சிந்துப் பிரதேச திராவிடர் வழங்கியவை போன்ற எழுத்துக்கள்—அத்தொல்லை நாள் தொட்டே இத்தமிழகத்தும் வழங்கிவந்தன என்பதும், அவற்றுள் சில யாப்பருங்கல விருத்தியுரையார் காலத்தும் (சுமார் கி. பி. 11-ம் நூற்றாண்டில்) வழக்கில் இருந்திருக்கலாம், அல்லது அவைபற்றிய நூல்கள் இருந்திருக்கலாம் என்பதும் இங்கு அறியத்தக்கன.

இவையன்றிச் சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் 'இறக்குமதி' ஆன மூட்டைகட்கும் பண்டமேற்றிய வண்டிகட்கும் கண்ணெழுத்துக்கள் இடப்பட்டிருந்தனவாம்.

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி" 2.

"இருபதி னாயிரம் கண்ணெழுத்துப் படுத்தன
கைபுனை சகடமும்" 1

அரசாங்கத்தாருக்குத் திருமுகம் எழுதுவோர் கண்ணெழுத்தாளர் எனப்பட்டனர்:

"கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கல் மன்னவர்க் களித்து" 3

1. Vide M. Raghava Iyengar's 'இலக்கிய சாசன வழக்காறுகள்,' p. 4. 1. Vide silap. K.5, li. 112 2. Ibid K. 26, li. 136 3. Ibid K. 25, li. 170-1

இவற்றால் 'கண்ணெழுத்து' என்பது கடைச்சங்க காலத்தில் (கி. மு. 300—கி. பி. 200) வழங்கிய ஒருவகை எழுத்தின் பெயர் என்பதும், வெளிநாட்டு வணிகர் (வம்பமாக்கள்) தம் பெயர் முதலியவற்றை இவ்வெழுத்துக்களிலேயே பொறித்து வந்தனர் என்பதும், இவ்வெழுத்திலேயே அக்கால அரசர் திருமுகம் முதலியன எழுதப்பட்டு வந்தன என்பதும் அறியத் தக்கன. "கண்ணெழுத்து—சித்திர எழுத்து; கண்ணுள் வினைஞர்—சித்திரகாரிகள், இதற்கு 'நோக்கினோர் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். இவ்வாறே கண்ணெழுத்தும் 'பார்ப்பவர் கண்ணில் தொழில் திறமைகாட்டி நிற்கும் எழுத்து' என்பது பொருள். 'எழுதுதல்' என்பதற்கு 'சித்திரித்தல்' என்பது பழைய பொருள். இவ்வெழுத்துக்கள் முற்காலத்தே தமிழில் வழங்கியவை என்பதற்குக் கண்கூடாகக் கண்ட பிரமாணமும் உண்டு. சாஸன இலாகாவினின்றும் வெளிவந்த புத்தகத் தொகுதிகளை நோக்குமிடத்து, தமிழில் முன்னாளில் வழங்கி வந்த குறியீட்டெழுத்துக்களைக் காணலாம். இச்சங்கேத எழுத்துக்களை 'கரந்தெழுத்து' என்றும் வழங்கப்பட்டன. காந்தருவதத்தை சீவகனுக்குக் கரந்தெழுத்தில் கடிதம் வரைந்ததாகத் தம்காலத்து வழங்கிய இக்குறியீட்டெழுத்துக்களை உள்ளத்துக்கொண்டு திருத்தக்கதேவர் பாடுதல் இங்கறியத்தக்கது. (சிந்தாமணி, செ. 1767). 'தமிழாசிரியன் ஒருவன் நாட்டில் வழங்கும் இத்தகைய எழுத்துக்களை எல்லாம் உணர்ந்தவனாதல் வேண்டும்' என முன்னோர் நியமித்திருத்தலால், பழைய வடிவு, பெயர், தன்மை, முடிவு முதலிய சங்கேத எழுத்துக்கள் நாட்டில் பெருவழக்குப் பெற்றிருந்தன என்பதும், அவை யாவும் முன்னோரால் முறையாகக் கற்கவும், கற்பிக்கவும் பெற்று வந்தன என்பதும் நாம் நன்கறியக்கூடும்.

ஸிந்து பாஞ்சால தேசங்களில் உள்ள ஹரப்பா, மோஹஞ்சோ தாரோ என்ற ஊர்களிலே சமீபத்தில் கண்டறியப்பட்ட ஸுமேரியன் எழுத்துக்களாகக் கூறப்படுபவை இச்சித்திர சங்கேதக் குறிகளாகவும், 5000, 6000 ஆண்டுகட்கு முற்பட்டவைகளாகவும் உள்ளன என்பர். இதனால், அக்குறி எழுத்துக்கள் நம் தேசத்துப் புராதன மக்கட்குப் புறம்பானவை அல்ல என்பது தெளிவாகின்றது. அம்முறையில், நான் மேலேகூறிய எழுத்து வகைகளை நோக்குமிடத்து, அப் புராதன மக்களில் தமிழரும் விலக்கப்பட்டவர் அல்லர் என்று கொள்ளக்கூடியதாம். *"எழுத்துக்கள் நெடுங்கணக்கின் நிலையை அடைவதற்கு முந்திய காலங்களில் பெற்றிருந்த உரு

* Vide Raghava Iyengar's 'சிலாசாஸன வழக்காறுகள்' pp. 1 & 8.

வங்களைப்பற்றிய குறிப்புகள் தமிழைத் தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் காணப்படவில்லை.'' *இது நன்கு கவனித்து மகிழ்தற்குரியது.

இனி, தமிழ் இலக்கங்கள் காணத்தக்கவை: ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட பின்னங்கள் அளவில. கடைசிப் பின்னம் 'கீழ் முந்திரி' என்பது;

1/320 x 1/320 = 7/1,02,400.
1/320 x 1/21 = இம்மி;
1/320 x 1/21 x 1/7 = அணு;
1/320 x 1/21 x 1/7 x 1/11 = மும்மி;
1/320 x 1/21 x 1/7 x 1/11 x 1/9 = குணம்.

இவற்றைக் 'கீழ்வாயிலக்கம். என்பர் தமிழர். இவ்வளவைகளே தமிழரது வாலிபச் சிறப்பைவிளக்கப் போதுமானவை அல்லவா? வேறு சான்றுகள் வேண்டுவதே இல்லை அன்றோ? இக்கீழ்வாயிலக்கம் இந்தக்கீழ்ப்பின்ன அளவைகள் தமிழ் ஒன்றிலேயே அன்றி வேறெந்த திராவிட பாஷைகளிலும் பிற இந்திய பாஷைகளிலும் இல்லை என்பது நன்கறியத் தக்கது. மேலும் இவற்றைக் குறிக்கத் தமிழர் தமிழ் எழுத்துக் களையே பயன்படுத்தி வந்தனர். இங்ஙனம் எழுத்தே எண்ணுதல் (யாமறிந்தவரை) உலகில் வேறெப்பாஷையிலும் இல்லை என்பதும் இங்குரைத் தக்கது.

இதுகாறும் கூறியவற்றால், தமிழ் மொழி 'தனிமொழி' என்பதும், அதன் இலக்கம் தமிழுக்கே உரிய 'தனி இலக்கம்' என்பதும், தமிழ் ஒன்றே மோஹெஞ்சோ தாரோ—ஹரப்பா நகரங்கள் செழிப்புற்ற பழைய காலத்தும் அதற்கு முன்னும் இந்தியா முழுவதும் பரவி இருந்தது என்பதும் ஐயமற வுணரப் பெற்ற செய்திகளாம்.

தொல்காப்பியம்

மேற் கூறப்பெற்ற மிகப் பழைய காலத்திய தமிழ் நிலைக்குப் பின் இரண்டாம் சங்க நூலாகிய தொல்காப்பியமே நாம் காணகிற்பது. அதன் காலத்தை நாம் கணித்தறிதல் அவசியம். களவியல் கூற்றுப்படி கபாட புரத்தில் இரண்டாம் சங்கம் நடந்தது; தொல்காப்பியம் செய்யப் பெற்றது. இதனுடன் அண்மையில் உள்ள இலங்கையின் இரண்டாம் கடல் கோளின் எடுத்துக் கொள்ளின் கபாடபுரம் கடலால் கொள்ளப்பட்ட செய்தி இக்காலமெனக் கூறலாம்: இதனை வலியுறுத்

* Vide P. N. Subramanian's 'Ancient Tamil letters', Kalaimagal, part 70, p. 299.

தப் பல்வேறு இலக்கண இலக்கியச் சான்றுகளையும் சுட்டலாம். கடைச்சங்க காலத்தில் தொல்காப்பியமே மறந்துவிடப்பட்ட தெனக் கூறினும் தவறுகாது. எனவே, தொல்காப்பியத்தின் பழமை இதனால் நன்கு புலனும். மேலும், பாணினீயத்தை அறியாதவர் தொல்காப்பியர் என்பது பாயிரத்தால் உணரலாம். பாணினியின் காலம் கி. மு. 7-ஆம் நூற்றுண்டெனச் சரித்திர நிபுணர் துணிவுடன் கூறுகின்றனர். வடநாட்டிலிருந்து அப்புராதன காலத்தே பாணினீயம் தமிழகத்துக்கு விரைவில் வந்திருத்தல் இயலாது; ஒன்றிரண்டு நூற்றுண்டுகளேனும் கழிந்திருத்தல் வேண்டும். மேற்கூறப்பெற்ற இலங்கைக் கடல்கோள் காலம் கி. மு. 504 என மஹாவம்சம் கூறுகிறது. எனவே, உத்தேசமாகத் தொல்காப்பியர் கி. மு. ஆறும் நூற்றுண்டினர் எனத்துணிவுடன் கூறலாம்! இங்ஙனம் இவர் ஆறும் நூற்றுண்டினர் என யாம் கடல்கோளைக் கொண்டும் பிற சான்றுகளைக் கொண்டும் கூறியது பல ஆராய்ச்சியாளர் கருத்துக்கு ஒப்ப முடிந்ததாக இருத்தல் நோக்கத்தக்கது.

இங்ஙனம் அகத்தியனர் முதலிய தொல்லாசிரியர்க்கு மிகவும் பிற்பட்டவராதலாற்றன் தொல்காப்பியர் முன்னையோரைக் குறிக்குமிடத்தெல்லாம் 'என்ப', 'என்மனர் புலவர்', 'என்றிசினோர்' எனப் பலவாறு சூத்திரங்களிற் சுட்டிப் போந்தார். இந்நூலை நன்முறையில் ஆராய்பவர், ஈடும் எடுப்பும் அற்ற இந்நூற்குமுன்னர் எண்ணிறந்த இலக்கண இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டுமென்பதை நன்குணரக்கூடும். "தொல்காப்பியம் ஏற்பட்டு இன்றைக்கு 2500 ஆண்டுகள் ஆயின. தொல்காப்பியம் முற்ற முடிந்த இலக்கண நூலாகும். அப்பரிபூரண நிலையில் ஓர் இலக்கணம் அமைவதெனின், 2 x 2500 = 5000 ஆண்டுகளேனும் கழிந்திருத்தல் வேண்டும் முதல் தமிழ் நூல் உண்டாகியிருக்க' என டாக்டர் சாமிநாதையர் அவர்கள் ஒருமுறை எம்மிடம் கூறினர்கள். அவர்கள் கூறியது மிகையன்றென்பது பாஷைப் பண்பறிந்தவர் அறிவர். எனவே, இற்றைக்கு 7500 ஆண்டுகட்கு முன் அதாவது சுமார் கி. மு. 5500-ல் முதல் தமிழ் இலக்கியம் உண்டாயிற்றெனக் கோடலில் தவறில்லை. இதனுடன் "சிந்துப் பிரதேச திராவிடர் கி. மு. 5610-ல் இராசிமண்டலம் கண்டுபிடித்தவர்" எனக்கூறும் ஹீராஸ் பாதிரியார் கூற்றையும் ஒப்பு நோக்குக.

இங்ஙனம் கூறுதல் சிலரைத் தலைமயக்கத்துக் குள்ளாக்கும்; சிலர் இது 'பொய்' என்பர். ஆயினும் பாஷை அமைதியையும் பண்பினையும் இலக்கிய இலக்கண அறிவையும் சரித்திர அறிவையும் ஆராய்ச்சி அறிவினையும் பண்பட்ட பகுத்தறிவினை

யும் உடைய பெருமக்கள் இதனை உண்மை என ஒப்புவர். சரித்திர ஆரம்பம் அலெக்ஸாண்டர் படையெடுப்பிலிருந்தும் பாஷை என்பது அசோகன் கல்வெட்டுகளி லிருந்துமே ஆரம்பம் என நம்பும் பயித்தியக்காரர்க்கு இவை ஆச்சரியத்தையே விளைப்பன. இது நிற்க.

தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டதான இராமாயண—பாரத காலத்தில் (கி. மு. 1400-கி. மு. 750) வடமொழியாளர் தமிழகத்தே சிறிய கூட்டங் கூட்டமாக நுழைந்து நிலை பெறலாயினர். அவர் தம் வடமொழி தமிழில் சிறிதளவு கலக்கவும் பெற்றது. இராமாயண-பாரத காலத்தில் வேங்கடத்துக்கு வடக்கிருக்கும் நாடு (டெக்கான்) வடமொழி வயப்பட்டு நாளடைவில் மாறி தெலுங்கு, கன்னட மொழிகள் பெற்றதாக மாறிவிட்டது. இவ்வுண்மை வால்மீகி இராமாயணத்தாலும் வியாஸ பாரதத்தாலும் நன்குணரலாம். எனவே, தொல்காப்பியர் காலத்தே "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" எனத் தமிழகம் எல்லை பெற்றது. "வேங்கடத்தும்பர் மொழிபெயர் தேயம்" ஆதலின் அங்கு வழங்கப் பெற்ற வடமொழியும் வடமொழிக் கலப்புடைய தெலுங்கு-கன்னட மொழிகளும் தமிழகத்தே வழக்காறுகொண்ட வடமொழியும் கண்ட தொல்காப்பியர்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என வடசொல் தமிழிற் கலத்தற்கு இலக்கணங் கூறலாயினர். தொல்காப்பியத்தை நன்கு ஆராயின் வடமொழியாளர் தமிழகத்தே நிலைபெற்றிருந்த அளவு நன்கு புலனாகும். அவ்வடமொழியாளர் தம்மொடு தென்னாடு கொணர்ந்திருந்த "ஐந்திரம்" என்னும் வேதகால வடமொழி இலக்கண நூலையே தொல்காப்பியர் பயின்றவராதல் வேண்டும். இக்காலத்தே தான் தமிழகத்தில் வடமொழியாளரால் கிரந்த எழுத்துக்கள் எழுதப்பட்டு வந்தனவாதல் வேண்டும்; தமிழ்மக்களால் தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டு வந்தன என்பதில் ஐயமே இல்லை. இங்ஙனம் தமிழகத்தே தமிழ் எழுத்துக்கள் பேரளவிலும், கிரந்த எழுத்துக்கள் சிறிய அளவிலும் எழுதப்பட்டு வந்தன; ஆனால் டெக்கான் பிரதேசத்திலும் வட இந்தியாவிலும் பிராமி எழுத்துக்களே பயிலலாயின. ஆயினும், இவை எழுதப்பட்ட காலம், அசோகன் காலத்தில் எனக் கூறப்பட்டது. இப்பொழுது, "சிந்துப் பிரதேசக் குறிகட்கும் அசோகன் காலத்திய பிராமிக்கும் மத்திய நிலையில் உள்ளன என்று கூறப்படும் குறிகளால் எழுதப்பட்டுள்ள சாஸனம் ஒன்று மத்திய இந்தி

யாவில் "விக்ரமகோல்' என்னுமிடத்தே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (Idian Antiquary, Vol. 62)" 1. என்று கூறப்படுகிறது. எனவே, அசோகன் காலத்துக்கு முன்னும் சாஸனங்கள் இருந்தமை—எழுத்துக்கள் எழுதப்பட்டமை எளிதிற் புலனாகும்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் அசோகன் கல்வெட்டுகள் தமிழகத்து எல்லைப்புறத்தில் குத்தியிலும், மைசூர் ராஜ்யத்தில் ஸித்தபுரத்திலும் கிடைத்துள்ளன. அவை பிராமி எழுத்துக்கள் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அதே நூற்றாண்டில் தமிழ் நாடு புகுந்த சமண—பௌத்தரால் எழுதப்பட்ட சாஸனங்கள் அசோக சாஸனங்களைப் போன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்டவையே. என்னை? சமண—பௌத்தர் வடநாட்டிலிருந்து வந்தவராதலின் தம் மொழியிலேயே வரைந்தனர். இதில் வியப்பில்லை அல்லவா? அதற்குப் பின்னர் காலம் குறிப்பிடாமற் கிடைக்கப் பெற்றுள்ள 'திருநாதர் குன்று' என்னும் இடத்தில் கிடைக்கும் சாஸனம் வட்டெழுத்தில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இதற்குப் பிற்பட்ட சாஸனங்கள் கிடைத்தில; கி. பி. 7-ம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து இயற்றப்பட்ட சாஸனங்களே இதுகாறும் கிடைத்துள்ளன. இவற்றைப் பார்க்கையில், தமிழகத்தில் கிரந்தம், வட்டம், தமிழ் என்று வழங்கப்பெறும் மூவகை எழுத்துக்கள் உள்ளன. (நாகரலிபியிலும் சில சாஸனங்கள் உண்டு; ஆனால் அவை மிகப் பிற்பட்டவை; அவற்றைப்பற்றி நாம் கவலையுற வேண்டா.)

கிரந்த எழுத்துக்கள் வடமொழிச் சாஸனங்களையும் தமிழ் மொழிச் சாஸனங்களில் வரும் வடமொழிச் சொற்களையும் எழுதப் பயன்பட்டன. தமிழ் மொழியில் உள்ள சாஸனங்கள் வட்டம், தமிழ் என்னும் இருவகை எழுத்துக்களிலும் எழுதப்பட்டன.

தமிழகத்தில் காணப்பட்ட பிராமிலிபிகளும் அசோகன் பொறித்த தென் கல்வெட்டு லிபிகளும் ஏறக்குறைய ஒத்தே உள்ளன. அவை தமிழ் எழுத்துக்களின் அமைப்பையே அஸ்திவாரமாகக் கொண்டவை. என்னை? அவற்றுள் க, ச, ட, த, ப ஆகிய வல்லெழுத்துக்கள் மட்டுமே காணப்படுகின்றன. வடமொழியில் உள்ள அவற்றின் வர்க்க எழுத்துக்கள் பெரும்பான்மை காணப்படவில்லை. வடநாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்பெறாத சில எழுத்துக்கள் கிடைக்கின்றன.

---

1. Vide Kalaimagal, part 70, p. 297

வட்டெழுத்து முறை எப்போது தொடங்கப்பெற்றதென் பதை உறுதியாகக்கூற முடியாதாயினும் அவை ஒருகாலத்துத் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்திருத்தல்வேண்டும். வட்ட எழுத்துக்கள் கி. பி. 8-ம் நூற்றாண்டின் மிகவும் வளர்ச்சியுள்ள நிலையில் ஒரு தனி வடிவத்தைப் பெற்றிருந்தன எனச் சாஸனங் கொண்டு கூறலாம். இவ்வட்டெழுத்துக்களுக்கும் பிராமி எழுத் துக்கட்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உண்டு. வட்டெழுத்துச் சாஸனங்கள் பாண்டிய நாட்டிலும் மலையாள நாட்டிலுமே பெரும்பாலான சாஸனங்களில் காணப்படுகின்றன. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் கி. பி. 7-லிருந்து பொறிக் கப்பட்ட சாஸனங்கள் தமிழ் எழுத்துக்களில் உள்ளன. 10-ம் நூற்றாண்டுக்குப் பின் பாண்டிய மண்டலம் சோழர் கைப்பட் டதும், அங்கும் இவற்றிலேயே சாஸனங்கள் பொறிக்கப்பட் டன. 11-ம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாடு முழுவதும் இவ் வகை எழுத்துக்களே வழங்கி வருகின்றன. சில சாஸனங்களில் இருவகை எழுத்துக்களும் கலந்து காணப்படுகின்றன.

இதுகாறும் கூறியவற்றால் தமிழைக் குறிக்கவே தமிழகம் முழுவதும் வட்டெழுத்து இருந்ததென்றும் பின்னரே வட் டெழுத்து முறையும் தமிழ் எழுத்து முறையும் தனித்தனியே தமிழகத்தில் இருந்தன எனவும் கருதவேண்டியிருக்கிறது. வட்டெழுத்து மலையாளத்தில் சோழர் ஆதிக்கத்தால் வழக்கு வீழ்ந்தபின், அதன் கிளையாகக் 'கோல் எழுத்துக்கள்' தோன் றின. அவை மலையாள மாப்பிள்ளைகளிடம் சமீப காலம்வரை வழக்கில் இருந்து வந்தன. டாக்டர் பிலர், 'வட்டெழுத்துக்கள் பிராமியினின்றும் வந்தவை; இவை தமிழ் எழுத்துக்களின் திரிபு' என்கிறார். 1. "வட்டெழுத்துக்கள் பிராமிக்கு மூலா தாரமான பினீஷிய எழுத்துக்களினின்று தமிழரால் கொள்ளப் பட்டன" என்பர் டாக்டர் பர்நேல். 2. சாஸனங்களை நன்கு ஆராயின், தமிழ் எழுத்துக்கள் தனி வளர்ச்சி யுடையன; வட் டெழுத்துக்கள் தனி வளர்ச்சி யுடையன; இரண்டும் பிராமி யினின்றே வந்தன என்னும் செய்திகள் அறியலாம். 3. பிராமி எழுத்துக்களுக்கும் வட்டெழுத்துக்கும் ஒரே வழி ஒற்றுமை இருப்பினும், பிராமியிலிருந்து வட்டெழுத்து வந்ததெனக் கோடல் சரியன்று. என்னை? தமிழைக் குறிக்கும் வட் டெழுத்தும் கிரந்தத் தமிழ் எழுத்தும் ஒரே வகை லிபியான பிராமியிலிருந்து வளர்ச்சி யடைந்ததெனக் கூறல் அத்துணைப்

---

1. 'Ancient Indian letter', p. 73.
2. Vide his ' South Indian Paleagraphy, p. 49.
3. Vide Kalaimagal, part 67, pp. 22, 23.

பொருத்தமாகத் தோன்றவில்லை. பிராமி வருவதற்கு முன்னரே தமிழகம் முழுவதும் பரவியிருந்ததும் தொல்லை உரு, தன்மை, உணர்வு, ஒலி, கண் முதலிய எழுத்துக்களின் வாயிலாக வளர்ச்சி அடைந்ததே 'வட்டெழுத்து' எனக் கோடலே தமிழ் சரித்திரத்துக்கும் பகுத்தறிவினுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துவதாகத் தெரிகிறது. கிரந்தத் தமிழ் எழுத்து பிராமியினின்றும் வட்டெழுத்தினின்றும் வளர்ச்சி பெற்றதெனத் தோற்றுகிறது. என்னை? வட்டெழுத்தே தமிழகம் முழுவதும் பரவி இருக்கிறதென்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. அவ்வெழுத்துக்கள் பிராமியின் தொடர்பால் நாளடைவில் மாறுதல் அடைந்து சோணாடு முழுவதும் கிரந்தத் தமிழாக விளங்கியதென்பது சாஸனங்களால் விளக்கமாகிறது. மேலும், "வட்டெழுத்துக்கும் பிராமிக்கும் தொடர்பே இல்லை. முன்னது பின்னதினின்றும் வந்ததெனக் கூறுதல் பொருந்தாது." * என டாக்டர் பர்நெல் கூறுதல நமது முடிவுக்கு அரண்செய்தல் காண்க. மேலும், வட்டெழுத்துச் சாஸனங்களில் கிரந்த எழுத்துக்கள் காணப்படல் அரிது. ஆயின், கிரந்த எழுத்துக்கள், கிரந்தத் தமிழ் எழுத்துச் சாஸனங்களிலும், இப்பின்னவை கிரந்தச் சாஸனங்களிலும் காணப்படல் கவனிக்கத் தகும் இவையன்றி, கோலார், சேலம் ,வடஆர்க்காடு முதலிய ஜில்லாக்களில் உள்ள சில சாஸனங்களில் தமிழ்—வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களும் காணப்படுகின்றன. இவை கி. பி. 900-க்கு முற்பட்டவை. இதனாலும், இருவகைத் தமிழ் எழுத்துக்களும் வேறு வேறு என்பதை அறிக. இவற்றுடன், "தென் இந்தியாவில் காணப்பெறுவது வட்டெழுத்து ஒன்றே. பின்னரே பிராமணரும் பௌத்தரும் தத்தம் எழுத்துக்களோடு (கிரந்தம், பிராமி) தமிழகம் புக்கனர்" † எனப் பர்நெல் கூறுதலும் காண்க.

மேனாட்டாராய்ச்சியாளர் பலர் வேறு நாட்டு மொழியினின்றும் பிராமி எழுத்துக்கள் தோன்றியிருத்தல் வேண்டும் என முடிவுகட்டினர். (ஆனால் இவ்விருதிறத்தார் காலத்திலும் சிந்துப்பிரதேச திராவிடர் நாகரிகம் கண்டறியப்படவில்லை—என்பது கவனிக்கத் தக்கது. ஆயினும், பிராமி இந்தியாவில் தோன்றிய எழுத்தே என்பதை லாசன் (Lassan) கன்னிங்ஹாம் என்னும் ஆராய்ச்சியாளர் துணிந்தனர்.) நிற்க.

"பிராமி எழுத்துக்களை நன்கு கவனித்து ஆராயின், அவை முதலில் வடமொழிக்காக ஏற்படவில்லை என்பதும்,

---

* Vide his 'South Indian Paleagraphy pp. 50, 130.
† Ibid, p. 4.

உயிர் எழுத்துக்களுள் 'அ, இ, உ' ஆகிய மூன்றுக்கும் மிக்க சிறப்பை அளிப்பதும் மெய்யெழுத்துக்களில் வர்க்க எழுத்துக்களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக்கப்பட்டுப் பின்னால் வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. இந்தியாவில் உள்ள மொழிகளுள் இவ்விதம் உள்ளது தமிழ் ஒன்றுதான். சிந்துப் பிரதேச ஆராய்ச்சி திராவிட மக்களின் நாகரிகத்தை விளக்குவதாம். தமிழ்மக்கள் பண்டைக் காலத்தில் உயர்ந்த நாகரிகமுடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறிவோம். மோஹெஞ்சோ தாரோ அதனையே விளக்குகின்றதாம். அவ்விடங்களில் கிடைத்துள்ள குறிகளைப் போன்றவற்றைக் கொண்ட மட்பாண்டங்கள் ஹைதராபாத் சமஸ்தானத்திலும், நாணயங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலும் கிடைத்துள்ளன. இவ்விதக் குறிகள் இந்தியாவின் பிற பாகங்களில் கிடைக்கவில்லை. அன்றி, எழுத்துக்கள் நெடுங்கணக்கு நிலையை அடைவதற்கு முந்திய காலங்களில் பெற்றிருந்த உருவங்களைப்பற்றிய குறிப்புகள் தமிழைத் தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் காணப்படவில்லை."

அறிஞர்களே, இதுகாறும் கூறியவற்றால், கி. மு. 5000 ஆண்டுகட்கு முற்பட்ட சிந்துப்பிரதேச திராவிடமக்கள் கொண்டிருந்த மொழியே தென் இந்தியத் தமிழரும் கொண்டிருந்தனர் என்பதும்: முழு இந்தியாவிலும் ஆரியர் வருகைக்குமுன் தமிழ்மொழி ஒரே வகையில் வளர்ச்சி அடைந்து வந்தது என்பதும்: சிந்துப் பிரதேசத்தில் காணப்பெற்ற சங்கேதக் குறிகளே நாளடைவில் 'விக்ரமகோல்' சாஸனத்திற் கண்ட வடிவம் பெற்றன என்பதும்: அவையே பின்னர்ப் பிராமிலிபியாக மாறின என்றும்: அப்பிராமி லிபியினின்றே வேறு மாறுதல்களுடன் வடமொழிக் குறிகள் ஏற்படுத்தப்பட்டன என்பதும்; அப்பிராமி லிபியினின்றே கிரந்தம், கிரந்தத் தமிழ் வளர்ச்சியடைந்தன என்பதும்: ஆதியில் சிந்துப் பிரதேசத்தில் காணப்பெறும் சித்திர சங்கேதக் குறிகள் தமிழ்நாட்டுப் பழைய நாணயங்களில் காணப்படுதலாலும் தமிழ் நூல்களே எழுத்துக்களின் தோற்றங்களை மேற்கூறியவாறு பலவகையாக விளக்குதலாலும் சித்திர சங்கேத எழுத்துக்களினின்றும் தமிழகத்தில் எழுத்துக்கள் தனிமுறையில் தோற்றமாகி வளர்ச்சிபெற்று 'வட்டெழுத்து' நிலைமையை அடைந்தன என்பதும்; அதுவே, பிராமியின் வட்டெழுத்தின் வழிவந்த தமிழ் பரவுமுன் தமிழகம் முழுவதும் பரவி இருந்ததென்பதும்; அதுவே கி. பி. 10-ம் நூற்றாண்டு வரை பாண்டியநாடு மலையாள நாடுகளில் நிலைபெற்றிருந்ததென்பதும்; சோழர்களால் வளர்க்கப்பட்ட

கிரந்தத் தமிழ், சோழர் ஆதிக்கம்பெற்ற கி. பி. 11-ம் நூற்றுண்டுக்குப்பின் தமிழ்நாடு முழுவதும் பரவலாயிற்று என்பதும்; கிரந்தம் பல்லவ அரசர்களால் போற்றப்பட்ட தென்பதும் நன்குணரலாம்.

மேலும், தமிழகத்தில் பழைமை வாய்ந்த நகரங்களான கோற்கை, காயல், முசிரி, வஞ்சி, புகார், உறையூர் முதலிய இடங்களில் ஆராய்ச்சி செய்தால் மேலும் பல சான்றுகளும் தமிழகத்து எழுத்து வளர்ச்சி முறையும் விளக்கமாக அறிய வழியுண்டாகும். அண்மையில் மத்ய மாகாணத்தில் ஆராய்ச்சியாளர் வேயின் கங்காப் பிரதேசத்தில் உள்ள மேடுகளைத் தோண்டிப் பார்க்கிருர்கள். அவற்றில் கி. மு. 3-ம் நூற்றுண்டில் வெட்டப்பட்ட ஓர் ஏரியின் சாஸனம் அகப்பட்டதாம். இவ்வாறு புதிய புதிதாக, ஆராய்ச்சியில் கிடைக்கும் சாஸனங்கள் நாளடைவில் வெளிப்படும். அதன் பின்னரே, திராவிடர் சரித்திரமும் தமிழின் தொன்மையும் குன்றின்மீதிட்ட ஒளிபென ஒளிரும். இறுதியாக ஒன்று கூறுவல்: சாஸனங்களை நன்முறையில் ஆராய்ச்சி செய்வோர் எழுத்துக்கள் அடைந்துள்ள அற்புத மாறுதல்களைத் தெளிவாக அறியலாம். உதாரணமாக இப்பொழுது எழுதப்படும் 'லை' என்னும் உயிர்மெய்யெழுத்துப் பண்டைக்காலத்தில் 'லை' என்றே எழுதப்பட்டதாகத் தெரிகிறது. கி. பி. 900-க்கு முற்பட்ட சாஸனமொன்றில் இங்ஙனமே காணப்படுகிறது. அது பின்னர் ஒன்ருக இணைக்கப்பட்டுப் பன்னிரண்டு மாறுதல்களைப் பெற்றுப் பின்னரே இன்றுள்ள 'லை' உருவத்தில் வந்ததெனத் தெரிகிறது. இதன் முதலிலேயே சரி என்பதும், எழுதுவோர், ஏடுகளில் எழுத்தாணிகொண்டு விரைவாக எழுதினர் ஆதலின் இரண்டும் ஒன்று சேர்க்கப்பட்டு நாளடைவில் இன்றைய நிலைமை எய்தியதென்பதும் சாஸன உணர்ச்சியுடையார் நன்கறிவர். எனவே, முற்றும் பகுத்தறிவுக்கு ஒப்ப முடிந்த நிலையிலேயே—மனித இயற்கை அறிவின் வழியிலேயே, பண்டையோர் எழுதிவந்தனர். நெடிற்குறிகள் தொல்லைநாட்களில் குறிற்குறிகளுடன் தனியே சேர்க்கப்பட்டே வந்திருத்தல் வேண்டும். பின்னரே அவை சாஸனங்களிற்காணப்பெறும் மாறுதல்களைப் பெற்று, நாளடைவில் இன்றைய மாறுதல்களைப்பெற்றன என்பது நன்கறியத்தக்கது. பகுத்தறிவுக்கு ஒப்பமுடிந்த நிலையில் சில எழுத்துக்களைப் பண்டைமுறையில் மாற்றுதலால் குடிகெட்டுப் போவதொன்றுமில்லை என்பதும் இங்குணர்தல் அவசியம்.

தமிழ்மொழி வாழ்க! தமிழர் வாழ்க!! தமிழ் நாடு வாழ்க!!!

மலையாள மொழி

[மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள்]

[கேரள பாணினீயம், பாஷா பூஷணம், விருத்த மஞ்சரி முதலான நூல்களை மலையாள மொழியில் இயற்றிய ஏ. ஆர். ராஜராஜ வர்மா, எம். ஏ., எம். ஆர். ஏ. எஸ்., கோயித்தம்புரான் அவர்கள் எழுதிய "பாஷாஸ்வரூபம்" என்னும் கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

மனிதர்களுள் சாதிப்பிரிவுகள் காணப்படுவதுபோல, பாஷைகளிலும் பிரிவுகள் உண்டு. நாம் மலையாளிகள் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்களல்லவா? நம்முடைய மொழி திராவிட வகுப்பைச் சேர்ந்தது. இந்தத் திராவிட வகுப்பில் மலையாளத்தைத் தவிர, தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு என்னும் நான்கு பிரிவுகள் உண்டு. இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. தமிழ்மொழி முதல் தமக்கையும், மலையாளம் கடைசித் தங்கையும் ஆகும். பண்டைக்காலத்தில் மலையாள மொழியானது பெரிய தமக்கையான தமிழ்மொழியின் பாதுகாப்பில் இருந்தது. அக்காலத்து தமிழ் எழுத்துக்களல்லாமல், தனக்கென சொந்த எழுத்துக்கள் மலையாளமொழிக்கு இருந்ததில்லை. நெடுங்காலத்துக்குப் பிறகு, வட்டெழுத்தென்றும் கோலெழுத்தென்றும் பெயருள்ளவையும் தமிழினின்று அதிக மாறுபாடில்லாதவையுமான எழுத்துக்கள் மலையாள மொழிக்கு உண்டாயிருந்தன. மலையாள மொழி குழந்தைப் பருவத்திலிருந்த அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் இப்பொழுது இல்லையென்றே சொல்ல வேண்டும். வைதிகத்தொடர்பான சில பாட்டுக்கள் மாத்திரம் அங்கும் இங்கும் காணப்படுகின்றன. பின்னர், குழந்தைப் பருவம் கழிந்தபிறகும், மலையாள மொழியைப் பாதுகாக்கும் பொறுப்பு தமிழ்மொழிக்கேயிருந்தபடியால், மலையாள மொழி தனித்து நின்று இயங்கமுடியவில்லை. நடை உடை பாவனை பழக்க வழக்கங்கள் எல்லாம் தமிழ்மக்களுக்கிருந்ததுபோலவே மலையாளப் பெண்ணுக்கும் இருந்தது. பாட்டுக்கள் முதலிய செய்யுள்களும் தமிழ்ப்பாட்டினைப் பின்பற்றியே மலையாளத்தில் இயற்றப்பட்டன. பாவாணர்கள் தங்களுக்கு வேண்டிய சொற்றொடர்களையும் கருத்துக்களையும் தமிழிலிருந்தே எடுத்துக் கையாண்டார்கள். குழந்தைப் பருவம் நீங்கி வாலிபப் பருவம் அடைந்த பிற்காலத்தில் இயற்றப்பட்ட சில நூல்கள் இப்போதும் வழக்காற்றில் உள்ளன. இந்த மலையாளத்தைப் "பழைய மலையாளம்" என்னலாம். முன் சொன்ன குழந்தைப் பருவத்து மலையாளத்தை "ஆதி மலையாளம்" என்று கூறலாம். "ராமசரிதம்" என்னும் நூல் பழைய மலையாள

காலத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டதும், "கண்ணஸ்ஸ ராமாயணம்" என்னும் நூல் அக்காலத்தின் கடைப்பகுதியில் இயற்றப்பட்டதும் ஆகும்.

கண்ணஸ்ஸப் பணிக்கருக்குப் பிறகுள்ள மலையாளந்தான் இப்போதைய மலையாளம். இப்போதும் இதை நாம் பேசிவருகிறபடியால், இந்த மலையாளத்துக்கு வேறுபெயர் கூறவேண்டியதில்லை. இப்போதைய மலையாளம், பண்டைக்கால நிலையிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது. இதற்குக் காரணம், சம்ஸ்கிருதத்தின் கூட்டுறவு ஆகும். பழைய மலையாளம் வழக்காற்றிலிருந்த காலத்திலேயே ஆரியராகிய நம்பூதிரிமார் கேரள நாட்டில் வந்து வாழ்ந்திருந்தார்கள்; என்றாலும் நாட்டு மொழியை அவர் போற்றவில்லை. காலப்போக்கில், சம்ஸ்கிருதம் பேசியிருந்த நம்பூதிரிகளும், பழைய மலையாளம் பேசிவந்த கேரள நாட்டு மக்களும் தம்மில் ஒருவரோடொருவர் கலந்து உறவாடத்தொடங்கிய பிறகு, இருதிறத்தாருடைய மொழிகளும் கலந்து உண்டாகிய ஒரு கலப்புப் பாஷையாகும் இப்போதைய மலையாள மொழி. மலையாள மொழி வயதடைகிறவரையில், அதாவது குழந்தைப் பருவத்திலும் வாலிபப் பருவத்திலும் தமிழ்மொழியின்பாதுகாப்பிலும், தொடர்பிலும் இருந்ததென்று சொன்னோமல்லவா? அதன் பிறகுதான் அது சம்ஸ்கிருதத்தின் சம்பந்தத்தைப் பெற்றது. சம்பந்தம் என்றால் உண்மையான சம்பந்தந்தான். அதாவது மணமக்களுக்கும் மணமகனுக்கும் உள்ள தொடர்புதான். (மலையாளமொழியில் சம்பந்தம் என்றால் திருமணம் என்பது பொருள்) அன்று முதல் மலையாளமொழி, பெரிய தமக்கையாகிய தமிழின் பாதுகாப்பிலிருந்து விலகிப்போய்விட்டது. என்ன வேண்டும் என்றாலும் கணவனை (சம்ஸ்கிருதத்திலிருந்து) கேட்டுவாங்கிக் கொள்வதேயல்லாமல், "தரவாட்டி"லிருந்து (உடன் பிறந்த தமிழிலிருந்து) வாங்குகிற வழக்கம் இல்லாமற் போய்விட்டது. சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், விருத்தம் முதலிய பாட்டுக்கள் என்பனவற்றை மட்டுமல்ல; எழுத்துக்களையுங் கூட சமஸ்கிருதத்திலிருந்தே பெற்றுக்கொண்டது. சமஸ்கிருதத்திலிருந்து எழுத்துக்களைப் பெற்றுக்கொண்ட பிறகு, தமிழரைக் குறித்து "அக்ஷரவியக்தி இல்லாதவர்" என்று ஏளனம் செய்யவும் தொடங்கிவிட்டது. சம்ஸ்கிருதத்தின் செல்வாக்கு இவ்வளவு அதிகமாக முதிர்ந்து விட்டதென்றாலும், தொடர்பு (சம்பந்தம்) மருமக்கத்தாய முறையாகையால், கோத்திரத்தை மாற்றிக்கொள்வதற்கு முடியவில்லை. மலையாள மொழி இன்றும் திராவிட கோத்திரத்தில் தான் இருக்கிறது. வேண்டாத

வைகளும், வேண்டியவைகளுமான அனேக சொற்களைச் சம்ஸ்கிருதத்திலிருந்து எடுத்துக்கொண்டபோதிலும், விருத்தம், அலங்காரம் முதலான ஆடம்பரங்களையெல்லாம் சம்ஸ்கிருதத்திலிருந்து வாங்கிக்கொண்டபோதிலும், மலையாளமொழியின் இலக்கணத்தை இன்றுவரையில் சம்ஸ்கிருத முறைப்படி அமைத்துக்கொள்ளமுடியவில்லை. அன்வயக்கிரமம், வேற்றுமைத் தொடர்புகள் (வியக்தி சம்பந்தம்), விசேஷண விசேஷியங்களின் நிலை, ரூபபேதம் இவையெல்லாம் தமிழ் இலக்கணத்தையொட்டித்தான் மலையாளத்திலும் காணப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்வதென்றால், தமிழ் இலக்கணத்திலே கூறப்பட்டுள்ள இலக்கண விதிகளை, இன்னின்ன பாகத்தில் இன்னின்ன விதமாகச் சிறிது மாறுதல் செய்துவிட்டால், அதுவாக இருக்கும் மலையாள மொழியின் இலக்கணநூல் என்று சொல்வது அமையும். இதை எப்பொழுதும் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இனி, தேச வேறுபாட்டினால் மலையாள மொழியில் சில வேறுபாடுகள் (நாட்டுவழக்கு) உண்டு. ஆனால், அந்த வேறுபாடுகள் பேச்சளவில் உள்ள நாடோடிப்பாஷையையன்றி, இலக்கியங்களை அதிகமாய்ப் பற்றமாட்டா. (க) வடக்கன் மலையாளம் (வடமலையாளம்) (உ) தெக்கன் மலையாளம் (தென் மலையாளம், (௩) மத்திய மலையாளம் (நடு மலையாளம்) எனத் தேசத்தின் மூன்று பகுதிகளைக்கொண்டு இந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது அவரவர்களின் சுவையைப் பொறுத்ததாகலின், ஒரு நாட்டு வழக்கு இன்னொரு நாட்டு வழக்கைப் பார்க்கிலும் சிறந்ததென்று சொல்வதற்கில்லை. என்றாலும், மத்திய நாட்டு மலையாளந்தான் சிறந்ததென்பது பண்டைக்கால முதல் அனைவருக்கும் ஒப்ப முடிந்த கருத்து. இதற்குக் காரணந்தேடத் தொலைதூரம் போகவேண்டியதில்லை. தென் மலையாளம் தமிழின் செல்வாக்கினாலும், வடமலையாளம் கன்னடத்தின் செல்வாக்கினாலும் மாறிப்போயிருக்கின்றன. வேறுமொழிகளின் தொடர்பின்மையால் மத்தியமலையாளம் அதிகத் தூய்மையுடையதாகும். இந்த மத்திய மலையாளந்தான் எல்லாத் தேசத்தவர்களாலும் முக்கியமாகக் கையாளப் படுகிறது. எனினும், அந்தந்த நாட்டில் வழக்காற்றிலுள்ள விசேஷச் சொற்களும் (திசைச் சொற்கள்) சிறுபான்மை உபயோகப்படுத்தப்படுகின்றன. பேர்பெற்ற குஞ்சன் நம்பியார் தம் மொழியின் தூய்மையைப்பற்றி அதிகமாகக் கருத்து வைக்கவில்லை. அவருடைய நூல்களில் தேசியப் பிரயோகங்கள் (திசைச்சொற்கள்) அதிகம் உண்டு.

[குறிப்பு:—தமிழராகிய நாம் மலையாள மொழியைத் தமிழின் புதல்வி என்று சொல்லுகிறோம். அதாவது, தமிழ் மொழியிலிருந்து மலையாளம் உண்டாயிற்று என்று கூறுகிறோம். ஆனால், இந்தக் கட்டுரையின் ஆசிரியர் மலையாள மொழியைத் தமிழின் தங்கையாகச் சொல்லுகிறார். எல்லா மலையாளிகளும் இவ்வாறுதான் தமிழையும் மலையாளத்தையும் சகோதரிகள் என்று சொல்வர்.]

செந்தமிழின் சிறப்பு

[சச்சிதாநந்தம் அவர்கள்]

பாரதநாட்டில் பாடைகள் பதினெட்டே என்று பண்டைப் பரதகண்ட சாத்திரங்களில் கூறப்படுகிறது. இஞ்ஞான்று எத்தனையோ பாடைகள் காணப்படுகின்றன. 1914-ம் ஆண்டு வரைக்கும் வழங்கப்பட்ட பாடைகள் 3500 என்று கணக்கிடப் பெற்றிருக்கின்றது. இன்னும் எத்தனை பாடைகள் தோன்றுமோ !

பதினெட்டுப் பாடைகளிலும் சிறப்பு வாய்ந்தன தமிழும், ஆரியமுமேயாகும். ஆரியமும், தமிழுமே ஆதியில் இறைவனால் உண்டாக்கப்பட்ட பாடைகள்.

இதைத் திருப்புக ழாசிரியரும்,

"இனிதான, முத்தமிழை யாயும்" வரிசைக்காரா"—(சத்தமிகு)

"செஞ்சுடர்வேல் வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை"
(அலங்காரம்—சேந்தனை)

"செந்தமிழ் நூலோன் குமரன்"—(வகுப்பு—தாணியில்)

"ஆரியமும் தமிழும் முடனே சொலிக்
காரிகை யார்க்கும் கருணைசெய்தானே"—(திருமந்திரம்)

"அவிழ்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலை பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும் அவனை யுணர்தலு மாமே"—(திருமந்திரம்)

எனவும் கூறியிருத்தல் காண்க.

இவை யுணராதார் தமிழ் பொதிய முனிவரால் உண்டாக்கப்பட்டதென்று கூறுகின்றனர். அகஸ்தியர் தமிழைப்

பூவுலகத்தில் பரவச்செய்தவரேயன்றித் தண்டமிழை யுண்டாக்கினவரல்லர். இக்கருத்தமைந்த தொல்காப்பியப் பாயிர முகத்தில்,

"ஆதியிற் றமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்து தூஉம்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே"

என்னும் திருவாக்கா லுணர்க.

நந்தெய்வச் செந்தமிழ் தென்மொழியெனவும், ஆரியம் வடமொழியெனவும் கூறப்படுகிறது. வடமொழி சத்தி பிசமனைய மந்திர செபத்திற்கும், பிற மந்திரங்கட்கும், உத்தர கிரியைக்கும் முக்கிய உதவியாகும்; தனிமயிலேறும் வள்ளி தேவசேனை காந்தனது திருச்செவி திருவுள்ளங்களை இனிது மகிழ்விக்குமாறு இன்னுரையும் உருக்கமாகப் பாடும் நயப்பிற்குத் தமிழே உரியதாகும். படைத் தளித் தழிக்கும் மூவர்க்கும் முதல்வனும் முருகப்பெருமானே தமிழுக்கு அதிதேவதையாகும்.

"செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே"—(சங்குபோல்)

"மணிராடக வெயில் வீசிய அழகா தமிழ்ப்பெருமாளே"—
(மதனேவிய)

"குமரா முத்தமிழோனே"—(பரிவுற)

"வானவர்காண் வானவர்க்கு மேலானான்காண்
வடமொழியும் தென்றமிழு மறைக ணான்கும்
ஆனவன் காண்"—

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"

"முத்தமிழும் நான்மறையு மானான் கண்டாய்"

என்னும் திருப்புகழ், தேவாரம் வலியுறுத்துகின்றன.

அப் பரமேஸ்வரன் செந்தமிழின்மேல் அதிக பிரிய முடையவர். தண்டமிழைப் பாடுவோர்க் கெளியவர். புகலரியதான தமிழ்ப்பாடல் உகந்து கேட்டருளுகின்றனர்.

"தண்டமிழின் மிகுநேய—முருகேச"—(அண்டர்பதி)

"எத்திடார்க் கரிய முத்த பாத் தமிழ்கேச
எத்தினார்க் கெளிய—பெருமாளே"—(தொக்கறுத்)

"குறநற்பாவை தாட்பணி—கருணைய தமிழிற்பாடல்
கேட்டருள்—பெருமாளே"—(அளிகுழ)

எனுந் திருவாக்கால் அறிக.

இவ்வரிய தமிழின் பெருமையை யாரே கூறவல்லார்! பற்பல பாடைகள் தோன்றி அழிந்தாலும் தமிழ்மொழியின் வளர்ச்சி வலிகுன்றச் செய்கின்றது. ஆங்கிலம் பதினாறு கோடி மக்களால் பேசப்படுகிறது. நஞ் செந்தமிழோ ஏறக்குறைய ஒன்றரைக்கோடி மக்களால்தான் பேசப்படுகின்றது. இங்ஙனம் இந்த நிலையில் தாழ்மைக் கொண்டுவந்துவிட்டோம். இதைக் காட்டிலும் நந்தமிழ் நாட்டிற்கு வேறென்ன இழிவு வேண்டும்?

அந்தோ! இந்நிலையில் வடநாடர் நஞ் செந்தமிழ் நாட்டகத்து இந்தி பாடையை விருத்தி செய்யவேண்டுமென துணிந்து வந்திருக்கின்றனர். தமிழின் பெருமையை யறியாமல் இந்திமொழியைத் தென்தமிழ்நாட்டில் பரவச்செய்ய விழையும் வடநாடரது சுயநலத்தினை யாதரிக்க நந் தமிழ்மக்களும் முன்வந்து நின்றனர். இந்நிலவுலகத்தில் கிறிஸ்தவர் கூட்டமே அதிகம். மற்ற பௌத்தர், முகம்மதியர் முதலிய கூட்டங்களெல்லாம் கிறிஸ்தவர் கூட்டத்தில் குறைந்ததே. இக்கூட்டத்திலுங் குறைந்தது நம் சைவமதக் கூட்டம். ஏன் கிறிஸ்தவமதம் மட்டும் யாண்டும் பரவுகிறதென்றால் ஆங்கிலமொழி விருத்தியாவதினாலேயேயாகும். ஆங்கிலமொழிச் சொற்கள் கி. பி. 1657-ல் ௧௩,000 மொழிகள். இஞ்ஞான்று ௪,௫0,000 சொற்களுக்குமேல் அச்சிடப்பட்டிருக்கின்றன. சைவர்கள் ஆங்கில பாடையைப் பயின்று கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து விடுகின்றனர். ஆதலால் கிறிஸ்தவ மதம் கூடி வருதலையும் நஞ் சைவ மதம் குறைந்து வருதலையுங் காண்கின்றோம். இத்தகைய நிலையில் இந்தி பாடையும் நந்தமிழ்நாட்டில் எஞ்ஞான்றும் பரவுமேயாகில் இன்னும் சைவமதங் குன்றித் தமிழ் பேசுமாந்தர்கள் குறைந்தே விடுவார்கள் என்பது நிச்சயம். இவை யாராயாமல் வடநாடரது கொள்கையைப் பூர்த்திசெய்யத் தமிழ்மக்களாகிய பேதைச் சைவர்கள் பெருமுயற்சி யெடுத்திருக்கின்றனர். தமிழன்னையின் வயிற்றிற் பிறந்து தாய்மொழியாகிய தமிழ்மொழியை யாதரிக்காமல் தோன்றி மறைகின்ற பிறமொழியை யாதரிப்பது பெரும் பேதைமையே யாகும். இதுவா தமிழ்மக்கள் கடமை? இவர்களா தமிழன்னையின் மக்கள்? பெற்ற தாய்க்கு விழுமம் விளைவிக்கலாமா? நஞ் செந்தமிழ் நாட்டிற்கு இழிவைத் தேடலாமா?

மடமோட்டுங் கருணைதனை மறவே
னெஞ்சுள வளவுமாற்றார் நூலைத்
தொடமாட்டே னவருரைக்கு முறைகேளே
னணியாய தொடக்கர் கோட்குட்

படமாட்டே னருள்சுரந்து வினையவொரு
மொழிப்பயனிற் படருநோக்கம்
விடமாட்டே னினிதளித்தி யெனது
குகப்பிரமமென விளங்கெம்மானே —(திருப்பா)

என்னும் ஆன்றோர் திருவாக்கைச் சிந்திக்க வேண்டாமா? நம் பெரியோராகிய அருணகிரிநாதர், தாயுமானூர், இராமலிங்கர், நக்கிரர், நால்வராதிகள் முதலிய ஆன்றோர்கள் தமிழையே மிக மிகச் சிறப்பித்துப் பாடினர். தெய்வத் திருப்புகழில்,

"அடிமைசொலுஞ் சொற்றமிழ்ப் பனிரொடு—பரிமள மிஞ்சக்
கடப்ப மாலையும் —அணிவோனே"—(மலரணி)

என்று தமிழைச் சிறப்பித்துள்ளனர். மறைகளுக்கு மெட்டா முத்தமிழாகரனை தமிழினல் பாடுவோர் குற்றஞ்செயினும் குணமாகக் கொள்வானென்றார்:

பற்றுஞ் செந்தமிழாற் பாடுகின்றோர் செய்த பெருங்
குற்றங் குணமாகக் கொள்ளும் குணக்கடலே
—இராமலிங்கர்.

நம் அருணகிரிநாதரோ—உருவன்று அருவன்று—உளதன்று இலதன்று இருளன்று ஒளியன்று வென நின்ற தமிழ்த்ரிய பர்பாலனை தமிழினல் வைதாலும் உடனே காப்பான். வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன் (மொய்தா—அலங்காரம்) என்றனர். சுந்தரமூர்த்தி பெருமான் 'பித்தா' என்றதும், அவரை உடனே ஆட்கொள்ளப்பட்டதே இதற்குப் போதிய சான்று. மாலொடு விதியறியாத மயில் வீரன் குடமுனிக்குத் தமிழினல் உபதேசித்தாரே தவிர இந்தியினும் மற்ற பாடையினும் உபதேசிக்கவில்லை.

"குடமுனி கற்க வன்று தமிழ் செவியிற் பகர்ந்த
குமர குறத்தி நம்பு'......பெருமாளே"—(மடவிய)

"பொதியவரை முனிவ னகமகிழ இரு
செவி குளிர இனியதமிழ்—பகர்வோனே"—(அறிவழிய)

மாதொரு பாகனுக்கும் தமிழ் மொழியிலேயே பாவலர்க்கெளியோன் உபதேசித்தனர்.

"கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப்—பகர்வோனே"—(அம்பொத்)

எனவே ஆன்றோர்களெல்லாம் நம துளத்திலுறை வள்ளிகாந்தனை தமிழினல் பாடினர்களே யன்றி இந்திமொழியினல் பாடவில்லை.

"சிந்தை மகிழ் புலவோர்கள் வந்து வந்தனைசெய் சரணாரவிந்த
செந்தமிழினுனையே வணங்கு—குருநாதர்"—(மந்தரம்)

"செந்தமிழ் பாணர்ப் பாவலர் சங்கிதயாழைப் பாடிய
தென் திருவானைக்காவுறை—பெருமாளே"—(அம்புலி)

என்று கூறியிருத்தலைக் காண்க.

நமது சற்குருமூர்த்தியாகிய அருணகிரிநாதருக்குத் தமிழினல் அடியெடுத்துத் தந்தாரே தவிர இந்திமொழியினல் அடியெடுத்து தரவில்லை. நக்கீரருக்கும் தமிழினலேயே அடியெடுத்துத் தந்தார்.

"முத்தைத்தரு பத்தித்திரு நகை அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர—னெனவோதும்"

"வளவாய்மை சொற்பிரபந்த முளகீரனுக்குகந்து
மலர் வாயிலக் கணங்க—ளியல் போதி
அடிமோனை சொற் கிணங்க உலகா முவப்ப என்று
அருளா ளளிக்குகந்த—பெரியோனே"—(கடிமாமலர்க்கு)

எனவரும் திருப்புகழைக் காண்க.

இத்தகைய பெருமை வாய்ந்த நற்றமிழைத் தவிர்த்து அன்னிய மொழியைக் கற்போர் குருடருக்குச் சமமாவார். திருஞானசம்பந்தப் பெருமான்:

"மந்திபோற் றிரிந்தாரியத்தொடு
செந்தமிழ்ப்பயனறிகிலா அந்தகர்"

என்று வழுத்தியுள்ளார்.

நம் பெரியோர்களெல்லாம் தமிழ்மொழியையே கற்க வேண்டும்; முத்தமிழினலேயே நற்றமிழ்த் தெய்வத்தை வழிபடவேண்டுமென்று வழுத்தியுள்ளனர்.

"அருட் செறிர் தவிஞசியில் மேவிய—பெருமாளே
கனத்த செந்தமிழால் நினையே தினம் நினைக்கவுந் தருவாய்"
(மனத்திரைந்தெழும்)

"அம்புவி தனக்குள் வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்க மனம்—அருள்வாயே"—(ஐங்கரனை)

"பகர்தற் கரிதான செந்தமிழ் மிசையிற் பல பாடலன்பொடு
பயிலப் பல காவியங்களை—யுணராதே"

"தமிழாலுன் நாமத்தைக் கற்றுப் புகழ் கைக்குப்
புரிவாயே"—(வானப்புக்கு)

என்றனரே தவிர "கனத்த இந்தியால் நினையே தினம் நினைக் கவுந் தருவாய்" என்று கூறவில்லையே. இவையெல்லாம் ஆய்ந் துணராமல் அன்னிய பாடையைத் தமிழ்நாட்டகத்து எஞ் ஞான்றும் பரவச் செய்யவேண்டுமெனக் கூறுவது அறிவின மாகும். நம் பெரியோர்களுடைய அறிவைக் காட்டிலுமா இவர் கள் அறிவு உயர்ந்தது? பிறமொழியாகிய இந்தியை விரும்பி நந்தாய்மொழியாம் செந்தமிழை விரும்பாது வாழும் மக்களிற் சிறந்த மடவாரும் உண்டோ?

தமிழ் நாடும், தமிழ் மொழியும்

[ரா. ஆதிகேசவுலு, சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சென்னை.]

1. பிறவிக் குருடர்களும், பெண்மணிகள் பலரும் கவி வாணர்களாயிருந்த இத்தமிழ் நாட்டில் தற்காலமிருக்கும் தமிழின் நிலைமையை நினைக்கத் துக்கம் பிறக்கின்றது.

2. தெருப் பள்ளிக்கூடமென்று சொல்லப்படுகிற திண் ணைப் பள்ளிக்கூடங்களில் பயின்ற பழைய காலத்தவர்கள் வசன நூல்களையும், செய்யுள் நூல்களையும் பதப்பிரிவு செய்து அழகாக வாசிக்கும் திறமை யுடையவர்களாகவும், பொருளு ணரும் ஆற்றலுடையவர்களாகவும் இருந்தார்கள். இருந்ததால் திருக்குறள், திருப்புகழ், திருமந்திரம், திருவருட்பா, திருவாச கம், தேவாரம் முதலான தெய்வத்தமிழ்ப் பாடல்களைக் கையாண்டு வந்தார்கள். வந்ததால் அடக்கம், அன்பு, இரக்கம், உண்மை, தெய்வ பக்தி, ஜீவகாருண்யம் முதலான நற்குணங் களுடையவர்களா யிருக்கநேர்ந்தது.

3. இக்காலத்துப் பிள்ளைகள் வசன நூல்களையே வாசிக் கத் திறமையற்றவர்களாகவும், சந்திகளைப் பிரித்துச் சரியாய் வாசிக்க முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இருப்பதால், செய்யுள் நூல்களாயிருக்கிற மேற்சொன்ன திருக்குறள் முத லான தேய்வத் தமிழ்ப் பாடல்களைப் பார்க்கவும், படிக்கவும் சக்தியற்று அடக்கம் முதலான நற்குணங்கள் அடைய முடியா தவர்களாயிருக்கிறார்கள்.

4. அதற்காக என்பதற்கு அதற்கோசரமென்றும், வெந்நீ ரென்பதற்கு வெந்நி தண்ணி என்றும், பிறந்த குழந்தையானது ஆணா பெண்ணா என்பதற்குப் பிள்ளையா பெண்ணா என்றும்

பேசுகின்றவர்களாகவும் இருக்கிறார்கள். "எங்கே போனானோ தெரியாது" என்னும் இச்சிறு வாக்கியத்தை "எங்கே—போனா—னோ—தெரியாது" என்று அர்த்தமில்லாமல் வாசிக்கின்றவர்களாகவும் இருக்கிறார்கள். "திருவருட்பா" என்கிற பதத்தில் திரு என்கிற எழுத்துக்களுக்குப் பின்னால் "அ" என்னும் எழுத்தானது வகரமாகத் திரிந்த காரணத்தை அறியாமலே அருட்பா என்பதற்கு வருட்பா என்று அச்சிடப்பட்டிருக்கிற காரணம் என்ன என்று வினவுகின்ற பிள்ளைகளுமிருக்கின்றனர்.

5. பத்தாவது வகுப்பு வாசித்த பிள்ளைகள்கூட அழகாகத் தமிழ் பேசுவது கிடையாது. பணச்செலவு செய்து பிள்ளைகளைப் படிக்கவைத்து என்ன பயன்? சென்னை நகரிலிருக்கும் பிள்ளைகள் பலரும் ஒவ்வொரு தமிழ் வாக்கியத்திலும் ஆங்கிலப்பதங்களைக் கலந்தே பேசுகின்றனர். ஆங்கிலம் கலவாது பேசுகின்ற பிள்ளைகளைப் பார்ப்பதே அரிதாயிருக்கிறது. இந்திய துர்ப்பழக்கமானது கிராம வாசிகளிடத்திலும் முளைத்திருக்கிறது. ஆங்கிலேயர் தமது பாஷையாகிய ஆங்கிலத்தில் தமிழ் கலந்து கலந்து பேசுகின்றார்களா என்பதைத் தமிழ் மக்கள் எண்ணிப் பார்ப்பார்களாக.

6. "குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டியனிங்கில்லை, குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி, எட்டின மட்டறுப்பதற்கோ வில்லியில்லை, இரண்டொன்றாய் முடிந்து தலைபிறங்கப் போட்டு, வெட்டுதற்கோ கவி ஒட்டக்கூத்தனில்லை" என்று புலவர்களால் புகழப்பட்ட பிள்ளைப் பாண்டியரும் வில்லிபுத்தூராழ்வாரும், ஒட்டக்கூத்தக் கவிராயருமில்லாத குறையிருக்க, பள்ளிக்கூடங்களில் இத்தனை வகுப்புக்குப் பின்னால்தான் ஆங்கிலம் கற்பிக்கப்படவேண்டும் என்கிற சட்டம் பிறவாமலிருப்பதும் பெருங்குறையேயாகும். மேலே சொன்ன முறையில் ஓர் புதுச்சட்டம் பிறந்தால்தான் பிள்ளைகள் தமிழில் தேர்ச்சியடைய முடியும்.

7. பாஷைகள் பல கற்றுக்கொள்ளுவது நல்லதுதான். ஆனால் தாய்மொழியை நன்றாய்ப்படிக்க எழுதப்பேசத் தெரிந்துகொள்ளாமல் வேறொன்றில் நுழைவோமானால் இரவற் சேலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்த கதைபோலாகுமன்றோ? தற்காலம் தமிழ்மக்கள் தமிழ்ப்பாஷையில் இங்கிலீஷையும், இந்துஸ்தானியும், ஸம்ஸ்கிருதத்தையும் கலந்து பேசுகின்றார்கள். தனித்தமிழ் பேசுவது கிடையாது. இதை நோக்குங்கால் தமிழ்ப் பாஷையில் இன்னும் என்னென்ன

பாஷைகள் கலந்துகொள்ளுமோ என்று நினைக்கவும் இடந் தருகிறது. நூற்றுக்குப் பத்துபேர்கூட ஒழுங்காகத் தமிழ் பேசாதவர்களாகவும், படிக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குத் தாய்ப் பாஷையை நன்றாய்ப் படிக்கவும், எழுதவும், பேசவும் கற்றுக்கொடுத்த பிறகே மற்றைய பாஷைகளைக் கற்பிக்க முயலவேண்டும்.

8. இக்காலத்தில் தனித்தமிழ்ப் பள்ளிக்கூடங்களைப் பார்ப்பது மிகவும் துர்லபமாயிருப்பதால், வாலாஜாபாத் என்றும் சிவரம் என்றும் சொல்லப்படுகிற ஊரிலிருக்கும், தமிழை வளர்க்கின்ற இந்துமத பாடசாலையிலும், இவைபோன்ற பாடசாலைகளிலும் பிள்ளைகளைப் பயிலவிடவேண்டும். தமிழை வளர்க்கின்ற செந்தமிழ்ச் செல்வியெனும் பத்திரிகைகளையும், இவைபோன்ற பத்திரிகைகளையும் அடிக்கடி வாசிக்கச் செய்ய வேண்டும். அருட்பாப் பாடல்களைப் பாடச்செய்யவும் வேண்டும். நாம் நமது தாய்ப்பாஷையைச் சரியாய்ப் படிக்கவும், எழுதவும், பேசவும் தெரிந்துகொள்ளாமல் இருந்துவிட்டால், இதைவிடக் குறைவு நமக்கு வேறென்னவேண்டும் ?

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்,
திருநெல்வேலி

சென்ற பதினொராண்டுகளாக நடத்தப் பெற்றுவரும் தென்னிந்திய தமிழ்ச் சங்கத் தனித் தமிழ்த் தேர்வுகள் 1938-ம் வருடத்தில் ஜூன் ௴ 30௳ முதல் மூன்று நாட்கள் அதாவது மெய்கண்டான் யாண்டு எாகரு ஆனித்திங்கள் யசு, யஎ, யஅ வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் ஆரணி, சென்னை, யாழ்ப்பாணம், திருவனந்தபுரம், திருநெல்வேலி ஆகிய தலைநகர்களில் நடைபெறும். தமிழ்த்தேர்வு, இளந்தமிழ்ப்புலவர், தமிழ்ப்புலவர் பொது, தமிழ்ப் புலவர் சிறப்பு ஆகிய தேர்வுகட்கு விண்ணப்பிக்கும் அறிஞர்கள் 1938 மே௴ 10௳க்குள் சங்க அமைச்சர்க்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

அன்புள்ள,
புன்னைவனநாதன்
அமைச்சர்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்,
திருநெல்வேலி

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

புதுக்கவி

துயிலெழுச்சி

[வித்துவான் பெ. கோவிந்தன் அவர்கள்]

எழுமின் தொண்டீர்! எழுமின் தொண்டீர்!
அழகும் அணியும் அன்பும் மிகுந்த
இன்றமிழ்த் தொண்டீர்! எழுமின், எழுமின்!
நன்றும் அன்றும் நாடி அவற்றுள்
அன்று கடிந்து நன்று புரிந்து
பொன்றும் உடம்பால் பொன்றா மெய்ப்புகழ்
கொண்டு வாழும் கொள்கை விடுத்துக்
கண்டுயில் கொண்டு காலம் போக்கும்
தொண்டீர்! எழுமின்; தொண்டீர்! எழுமின்!
முன்னை வாழ்க்கை முதன்மை மறந்தும்,
நன்னெறிச் செல்லும் நாட்டம் மறந்தும்,
இன்மொழி கூறும் இயல்பு மறந்தும்,
மன்னுயிர்க் குதவும் வாழ்க்கை மறந்தும்,
அன்பும் அருளும் பண்பும் மறந்தும்,
நல்லிசை பயக்கும் கல்வி மறந்தும்,
வல்லமை நல்கும் செல்வம் மறந்தும்,
நல்லார் பாற்கொளும் நண்பு மறந்தும்,
காலினும் கலத்தும் வேலையும் மலையும்
சோலையும் நாடும் பாலையும் கடந்து,
பொருந்தார் நாடு வருந்தச் செற்றே
அருந்திறல் வாகை பெருந்தோள் மிலைந்து,
கயலும் வில்லும் புலியும் பொறித்த
அயலவ ருட்கும் வலிமை மறந்தும்,
ஊனினும் உயிரினும் உலகினும் பொருளினும்
வானினுஞ் சிறந்த மானம் மறந்தும்,
கேள் போலக் கேண்மை கொண்டு
வாள் போல நாளுங் கெடுக்கும்
கொடியவர் பக்க லடிமை யாகிக்
கண்டதே காட்சி; கொண்டதே கோலம்;
உண்டதே அமிழ்தம்; சென்றதே நன்னெறி

என்றென் றெண்ணி இதுகட லெனநீர்
நின்ற குழியில் நிலவுந் தேரைபோல்
புன்மகிழ் வெய்திப் புறம்பழி கூறத்
தென்வள நாடு தொன்னிலை யழிய
மேலுடை யெடுத்துக் கீழ்வயின் விரித்துக்
கையணை யாகக் கால்துணை யாக
மெய்வயின் எறும்பும் மொய்சிறு கொசுகும்
குருதி கொள்ள மருள்மிக வெய்தித்
தூங்குந் தொண்டர் நீங்கி யெழுமின்!
படைபல வுடைய வடபுலத் தரசன்
அடல்கெழு படைநெடுஞ் செழியற் கஞ்சிக்
கடுகி நடந்த காட்சி மான
ஞாயிறு கண்டு நடுக்கம் எய்திப்
பாயிருள் வானில் பன்மீன் நடுவண்
வெள்ளி கடுநடை கொள்ளல் காண்மின்!
தலைவன் ஒட்டம் தானை கண்டு
நிலையில் மாறிக் குலைந்திரிந் தாங்கு
விண்ணில் இயங்கும் எண்ணில் மீனும்
மருள்செய் இருளும் இரிதல் காண்மின்!
கொழுந ரழிவு கூறக் கேட்டுத்
தழலுறு மெழுகி னுருகிக் குழல்விரித்
தழுதிமை குவிந்த அரிவையர் கண்போல்
பாசி யிடையில் பசுங்காட் குவளை
விசலை மடியில் மெல்லிதழ் குவிந்து
வாடி நின்றசைந் தாடல் காண்மின்!
தென்னவர் பெருமான் திறல்நெடுஞ் செழியன்
மன்னர் மன்னன் மாற்றார் கூற்று
தென்மொழிப் புலவன் இன்னிசைச் செல்வன்
முன்னடி வைக்கும் தன்படை நாப்பண்
ஒடுங்காச் சினத்தோ டடல்கண் சிவந்தே
அடங்கா ரஞ்ச உடன்றெழுந் தாங்கு
மிக்கெழுந் தலறும் விரிகடல் நடுவண்
செக்கர் சிவந்த செறிகதிர்ச் செல்வன்
கூரிருள் ஒட்டுஞ் சீரினைக் காண்மின்!
காவலன் புகழைக் கட்டியங் கூறல்போல்
சேவல் எழுந்து கூவல் காண்மின்!
வாகை சூடி ஓகை கூற
ஆண்டகை வீரர் மீண்ட வரவறிந்
தீண்டி யெதிர்க்க ஏரிளம் பெண்டிர்
வாண்முகம் பாதல வண்டிதே னுண்டு

பாண்செய் வாவிப் பாசிலைத் தாமரை
மென்மலர் விரிந்து விளங்கல் காண்மின்!
மடவீர் நம்போல் வாழ்நரு முளரோ?
கொடியீர் நம்போல் கொடியரு முளரோ?
மடியீர் நம்போல் வறிஞரு முளரோ?
விழிமின்; எழுமின்; துயிலினை யொழிமின்!
தொழுவம் வம்மின்; தொண்டீர்! வம்மின்!
இன்றமிழ் நாட்டையும் எழில்தமிழ் அணங்கையும்
நின்று தொழுவம்; நினைந்து தொழுவம்.
வம்மின் தொண்டீர்! வம்மின் தொண்டீர்!
மரங்கள் மலர்தூய் வணங்கல் காண்மின்!
அரும்பர் முரன்று தொழுதல் காண்மின்!
குயில்கள் பாடிக் குனிதல் காண்மின்!
மயில்கள் ஆடி வணங்கல் காண்மின்!
காக்கை காவெனக் கரைதல் காண்மின்!
ஆக்களம் மாவென் றழைத்தல் காண்மின்!
கடல்முழக் கேந்தியிங் கடியுறல் காண்மின்!
பௌத்திர்! துலுக்கிர்! பார்ப்பிர்! கிறித்தவிர்!
சைவ வைணவ சமண மதத்திர்!
யாதும் ஊரே; யாவருங் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்! சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமைத் திறனா லென்னும்
மெய்ம்மொழி தமிழ்த்தாய் விளம்பிய தன்றோ?
வேற்றா ரோநீர்? மாற்றா ரோநீர்?
பிறந்த நாடும் பிறநா டேயோ?
உறைந்த நாடும் உளதோ வேறொன்று?
அறுசுவை யுண்டி அளிக்கும் நாடெது?
உறவினர் பெற்றார் உறைவதெந் நாடு?
ஆடையும் அணியும் அளிப்பதெந் நாடு?
நாடும் பொருளை நல்கும் நாடெது?
வசையொடு வறுமையும் இசைதமக் கெய்தக்
கண்ணகி முதலாம் கற்பிற் சிறந்த
பெண்ணர சியரைப் பெற்றதெந் நாடு?
தொன்னூற் புலவன் தொல்காப் பியன்முதற்
பன்னூற் புலவரைப் பயந்ததெந் நாடு?
பழுதில் சீர்த்திப் பாரி முதலாம்
எழுவர் வள்ளலை யீன்றதெந் நாடு?
ஆரியப் படைகளை அழித்தர சாண்ட
பேரிசை வேந்தரைப் பெற்றதெந் நாடு?

தப்பர் வளஞ்சால் தமிழ்நா டன்றோ?
அப்பெரு நாட்டில் அன்பு செலுத்தி
வாழ்த்தலும் வணங்கலும் வழுச்செயலாமோ?
தாய ரனைத்துத் தருதீம் பாலொடு
வாயுஞ் செவியும் மணக்க வூட்டிய
தூமொழி எது? நீர் சொல்லியன் னோர்க்கு
மாமகிழ் வூட்டி மகிழ்ந்ததும் எம்மொழி?
வீட்டிலும் வெளியிலும் விளம்புவ தெம்மொழி?
பாட்டும் உரையும் பயிற்றிப் பல்வகை
அழகும் பொருளும் அணியும் சுவையும்
வழுவில் லறமும் பழுதில் பொருளும்
உழுவ லன்பும் உணர்த்துவ தெம்மொழி?
முந்தை மன்னர் முறையையும், வலியையும்,
அந்தண் ணளியையும், அவர்தம் கொடையையும்,
புலவ ரறிவையும், புகழ்ந்த முறையையும்,
நிலவள னியல்பையும், குலநடை வாழ்வையும்,
காணா தார்க்குக் கைவண் மையினால்
நாவில் புலவன் ஆவிசேர்த் தெழுதிய
ஓவியம் போல உணர்த்துவ தெம்மொழி?
ஈன்ற அன்னை இகழ்ந்து பிரியினும்,
சான்றோ னாக்கிய தந்தை பிரியினும்,
முன்னோர் பிரியினும், பின்னோர் பிரியினும்,
அன்பு பிரியினும், நண்பு பிரியினும்,
மக்கள் பிரியினும், ஒக்கல் பிரியினும்,
புக்க வீடும் பொருளும் பிரியினும்,
உயிரொடு தொடர்ந்திங் குற்றுழி யுதவிப்,
பயில்தொறும் பயில்தொறும் இன்பம் பயந்து,
நவில்தொறும் நவில்தொறும் நறுஞ்சுவை யளித்துச்
சிறுமை கெடுத்துப், பெருமை கொடுத்து,
வறுமை யொழித்து, வாழ்விப்ப தெம்மொழி?
ஆரியம் தோன்றுமுன் தோன்றி அருங்கலை
சீரியல் இசைநா டகத்திற் சிறந்ததற்
கெழுத்தும் சொல்லும் பொருளுங் காட்டி
வளர்த்துஅது மாய்ந்தபின் வடுகு கன்னடம்
துளுவுமலை யாளம் தோற்றி மாயா
இளநலங் காட்டி இயங்குவ தெம்மொழி?
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி யன்றோ?
தமிழ்மொழி யணங்கைத் தலையால் மொழியால்
வணங்கலும் வாழ்த்தலும் வழுச்செயலாமோ?
தண்டமிழ் நாட்டையும் தமிழ்த்தெய் வத்தையும்

தொண்டீர் ! வம்மின் ; தொழுவம் ; பாடுவம்.
இயலும் பாடி, இசையும் பாடி,
மயல்தீர் அறிவும், வாழ்வும் பாடி,
அறமும் பாடிக், திறமும் பாடிக்,
தொன்மையும் பாடி, நன்மையும் பாடி,
வன்மையும் பாடி, வணங்குவம் ; வம்மின்!
நன்மை யனைத்தும் நம்மை யடையும்.
தீமை யனைத்தும் செம்மையி னீங்கும்.
பண்டைச் சிறப்பும் புகழும்
கொண்டு வாழ்வம் குலவி மகிழ்ந்தே.

புதுக்கோட்டை "தமிழாலயம்" முதலாவது மா நாடு

மா நாட்டுத் தலைவர், கருவூர்
உயர் திரு. ஈழத்துச் சிவானந்த அடிகள், B. A., அவர்களின்

தலைமைப் பேருரை

அன்பும் அறிவும் நிறைந்த தமிழ்ப் பெருமக்களே !

நமது அமிழ்தினுமினிய அருந்தமிழைப் போற்றி வளர்ப்பான் வேண்டி ஈண்டு நிறுவப்பெறும் "தமிழ் வளர் நிலையம்" எனும் பேரவையின் முதலாவது மா நாட்டுக் கொண்டாட்டத்திற்கு என்னைத் தலைவராக இருக்குமாறு கேட்டுக்கொண்ட வரவேற்புக் கழகத்தினர்கட்கும், மற்றும் அதன் உறுப்பினர்கட்கும் என் நன்றி உரியதாகும்.

தொடக்க மீறற்ற தொன்மொழியாந் தமிழ்மொழியைப் பற்றிச் சொற்பொழி வொன்று நிகழ்த்த வேண்டுமென்று இக்கழக அன்பர்களால் இடப்பெற்ற பெரும் பணியை மேற்கொண்டு, என் அறிவிற்கும் ஆற்றலுக்கும் எட்டிய அளவிற்குச் சிறிது நேரம் பேச விழைகின்றேன்.

அன்பர்களே ! எல்லாம் வல்ல இறைவனின் அருட்டுணைகொண்டு, வேற்றுமை மலிந்துள்ள நந் தமிழ் மக்கள் அனைவரையும் கல்வி, அறிவு, கேள்விகளால் மேன்மையுறச்செய்து, இன்ப வாழ்க்கையிற் றிளைத்திருக்கச் செய்ய வேண்டுமென்பதே இந் நிலயத்தை நிறுவப் புகுவதன் நோக்கமாகும். அங்ஙனம் ஒன்றுபடச் செய்வதற்குக் கருவியாய் உள்ளது யாது என்பதை முதற்கண் ஆராய்வாம்.

தமிழ் மக்களாகிய நாம் பலப்பல சாதியினராய், பலப்பல சமயத்தவராய், பலப்பல கொள்கையினராய்ப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கிறோம். ஒருமைப் பாட்டுக்கு வழியுமுண்டோ என்று சிலர் வினவலாம்; சிலர் கருதலாம். இவ் வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து நின்று, நம் அனைவரையும் ஒருமைப்படுத்த வல்ல கருவி ஒன்றுளது. அதன் மீது நாம் நமது கருத்தைச் செலுத்துவமேல், எல்லா வேறுபாடுகளையும் வீழ்த்தி, நம் அனைவரையும் உடன்பிறந்தார் போன்று வாழச் செய்யும். அஃது யாது? அதுவே நமது தெய்வச் செந்தமிழாகும்.

பண்டு அரியணையில் இருந்து தனியரசு புரிந்த நம் தமிழன்னை இன்று தன்னைப் புரப்பார் இன்மையாலும், இடைக்காலத்துத் தோன்றி வந்த அயல் மொழிகளின் கலப்பாலும் தன் வளர்ச்சி குன்றி, ஒளி மழுங்கி, மாசுற்றுக் கிடக்கின்றது. தாய்மொழி உணர்ச்சி என்பதே சிறிதுமில்லாத இக்காலத்துத் தமிழ் இளைஞர் பலர், பிறமொழி பயின்று மேன்மையுறலாம் என்ற தப்பான எண்ணத்தைத் தலைசிறந்த எண்ணமாகக் கருதி யிடர்ப்படுவதுமன்றித், தாய்மொழிப் பற்றுக்கொண்டு, அதனை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஆர்வமுடையாரையும் தமக்குப் பகைவர்களாக எண்ணியும் விடுகின்றனர். என்னே, இவர்களது அறிவுடைமை! "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற செந்தமிழ்ப் பாரதியாரின் அழுத்தந் திருத்தமான கட்டளையை இவர்கள் அறிந்திலர் போலும்!

உலகம் முன்னோக்கி மிக விரைவாக இயங்கிக்கொண்டு வரும் இக்காலத்தில்—தமிழரல்லாத பிறநாட்டவரெல்லாம், ஆண் பெண், இளைஞர், முதிஞர் அனைவரும் தத்தமுள் வீறு கொண்டு, விழிப்புற்று, தத்தம் நாட்டின் நலங் கருதி, மொழி வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும், நாட்டு முன்னேற்றத்திலும் முனைந்து நிற்கும் இக்காலத்தில்—நந்தமிழ்மக்கள் மட்டும் எடுப்பார் கைப்பிள்ளைகளாய்—எழுத்தறியாதவர்களாய் இருக்கிறார்கள் என்றால், இவ் இரங்கத்தக்க நிலையை என்னென்றியம்புவது! தமிழ் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தம் தாய்மொழியாகிய தமிழையே நன்கு படிக்கவில்லை என்பதும், சிறப்பாகத் தமிழ் நாட்டிலும் பொதுவாக இந்தியாவிலும் படித்தவர்கள் நூற்றுக்குப் பத்துப்பேர் என்பதும், மேனாடுகளில் படியாதவர்கள் நூற்றுக்குப் பத்துப்பேர் தானும் காணுதல் முடியாதென்பதும் யாவரும் அறிந்தனவே. இந்த நிலைமையில் தமிழறி பெரியார்களும், தமிழ் வளர் கழகத்தினர்களும் இன்றி

யமையாது செயற்பாலதான பணியாகெனில், தமிழறியா மக்கட்குத் தமிழுணர்ச்சியை உண்டுபண்ணுவதேயாகும்.

"என்றுமுள தென்றமிழ்" என்ற கம்பர் வாய்மொழிக் கிணங்க, இப்போது உலகின்கண் உள்ள மொழிகள் எல்லாவற்றினும் நஞ் செந்தமிழ்மொழி முந்திய பெருமையுடைத்தென்பதற்கு, அம்மொழிக்கண் என்றும் நின்று நிலவும் தோல்காப்பியம், திருக்குறள் போன்ற இலக்கண இலக்கிய நூல்களே போதிய சான்றும். பலப்பல நாட்டுப் பலப்பல கொள்கையினரும் விரும்பி மேற்கொள்ளும் ஒரு நூலை (திருக்குறளை)த் தந்துதவியது தமிழ்மொழியே. "நிறைமோழி மாந்தர் பெருமை நிலத்து, மறை மோழி காட்டிவிடும்" என்ற பொய்யா மொழியின்படி, தமிழ்மக்களின் மாட்சியினை உலகறியும்படி செய்ததும் நந் தமிழ்மொழியே யன்றோ! திரும்பத் திரும்ப ஒருவனைத் தன்னிடத்து இழுக்கும் பெற்றி வாய்ந்த மொழி எதுவோ, அது (தமிழ்) உலகம் போற்றும் உயர் மொழியாம் என்று மேனாட்டு மேதக்க ஆசிரியர் பலர் விளம்புகின்றனர். "நவில் தோறும் நூல் நயம் போலும் பயில் தோறும், பண்புடையாளர் தோடர்பு" என்று வள்ளுவர் பெருமான் கூறியதும் இக்கருத்துப் பற்றியே. இப்பொழுது உலகம் பல வகையில் பிரிந்து பிணங்கி இடருற்று வருவது கண்கூடு. இதற்குக் காரணங்கள் பல சொல்லப்படுகின்றன. அவைகளுள் ஒன்று: பிணக்குகளைப் போதித்து உலகைக் கூறுபடுத்தும் பொருள் செறியப்பெற்ற நூல்கள் பரவுவதாகும். உலகைக் கூறுபடுத்தும் நூல்கள் தமிழ் மொழியில் காணப்படா. ஆகவே, தமிழோடொத்த மிகப் பழமை வாய்ந்த மொழிகளாயுள்ள எகுபதியம், கிரேக்கம், ஆரியம் முதலான மொழிகளெல்லாம் இஞ்ஞான்றுள்ள எந்த மக்கட் குழுவினராலும் பேசப்படாமல் இறந்து போகவும், நந் தமிழ்மொழி மட்டும் சிறந்த பல இலக்கண இலக்கிய நூல்களையுடைத்தாய் எக்காலத்தும் தம்மைப் பயில்வார்க்கு அறிவையும் இன்பத்தையும் மேன்மேற் பெருக்கும் பெரும் பயன் வாய்ந்த விழுமிய மொழியாய்த், தன் இளமை குன்றுப் பொன்மொழியாய், உயிருடை மொழியாய் நின்று, பல்கோடி மக்களால் பேசவும் எழுதவும் பட்டு வருகிறதென்றால், அதன் உயர் தனிச்சிறப்பை என்போன்றரால் அளந்து கூறுதலும் இயலுங் கொல்!

தமிழ்மக்களாகிய நாம் மேன்மையுடையதோர் இனத்தைச் சார்ந்தவர்களென்று பிறரால் எண்ணப்படுவதற்கு இடந்தந்து நிற்பது தமிழ்மொழியே. ஒரு சமயத்தையும் சாராது பொது நூலாய் மூன்று உறுதிப் பொருள்களையும் (புருடார்த்

களையுடைய பொன்னெல்லாம் செல்வர் முன் வறியர் நிற்பது போலவும்; திங்களின் (சந்திரன்) முன் உடுக் கூட்டங்கள் (நட்சத்திரங்கள்) நிற்பது போலவும் நின்று தமிழ் மக்கள்மீது அழுக்காறு கொள்ளும்படி அத்துணைப் பெருமை தமிழ் மொழிக்கே உரியது.

இனிக், திருக்குறளைப்பற்றி நன் மதிப்புக்கூற வந்த மேனாட்டுப் பேரறிஞரான ரெவரண்டு டாக்டர் ஜே. லாசரஸ் (Rev. Dr. J. Lazarus) அவர்கள், தமிழ் மொழியைப்பற்றியும், தமிழ் நாட்டைப் பற்றியும் எவ்வளவு அழகாக எடுத்துரைக்கின்றார்:—"It is refreshing to think that a nation which has produced so great a man and so unique a work cannot be a hopeless despicable race. The morality he preached could not have grown except on an essentially moral soil." அஃதாவது, "இத்தகைய ஒரு பெரியாரையும், ஒப்பரிய நூலையும் பயந்த ஒரு நாடு இகழ்ந்தோதுக்கக்கூடிய இழிதன்மை வாய்ந்த ஒரு நாடாக இருத்தல் முடியாதென்பதை நினைக்க, அந் நினைவு ஆறுதலை அளிக்கின்றது. பெரியார் எடுத்தோதும் நீதிகள் நல்லொழுக்கமே விளை நிலமாய் அமையக்கூடிய ஒரு நாட்டிலன்றி விளையா" என்று கூறியிருத்தலை நோக்குமிடத்து, தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழிக்காகச் செய்த நற்பணியும் உண்டு கொல்! என்றே எண்ண வேண்டியிருக்கின்றது. இன்னும், நந் தமிழ்மொழியின் பெருமையை ரெவரண்டு பர்சிவல் (Rev. Percival) என்ற மற்றொரு மேனாட்டுப் பேரறிஞர் கூறியிருப்பதும் நோக்கி மகிழ்தற் பாலது:—"Nothing certainly in the whole compass of human language can equal the force and terseness of the sententious distitches in which the author conveys the lesson of wisdom he utters." அஃதாவது, "இந் நூலாசிரியர் (திருவள்ளுவர்) தாம் கூற வந்த நீதியுரைகளை அழுத்தந் திருத்தமாகச் செய்யுள் நடையில் கூறுவதை யோப்ப உள்ள மற்றொரு நூலை மக்களாய்ப் பிறந்தோர் பேசும் வேறு எந்த மோழியிலும் காணல் முடியாது" என்கின்றார்.* இப் பெரியாருக்குத் தமிழ் மொழியினிடத்தும், தமிழ் நூல்களிடத்தும் உள்ள ஆர்வத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குதானும் நம் தமிழ் மக்கள் பலரிடத்துக் காணப்படவில்லையே! இன்னும் நம் செந்தமிழின் பெருமையையும், உயர்வையும், ஒப்பற்ற பண்பையும், மாசற்ற

---

* இன்னும் திருக்குறளைப் பற்றிய பேரறிஞர் கருத்துக்களைத் "திருவள்ளுவர் திருநாள் மலர்" என்ற தொகுப்பு நூலிற் பரக்கக் காணலாம். விலை அணா 5

தன்மையையும் பற்றி மிகு நலம்மிக்க உலகப் பெரியாரெல்லாம் புகழ்ந்து போற்றும் பொன்னுரைகள் அனைத்தையும் ஈண்டு இச் சொற்ப காலத்துள் எடுத்துக்காட்டிப் பேசுவது இயலாததாகும். தமிழ்! தமிழ்! தமிழ்! என்று ஓத, ஓத, ஓத, அதன் ஓசையும் பொருளும் அளிக்கும் ஆறுதலே—ஊட்டும் இன்பத்தை எம்மொழியால் கூறுவது! எவ்வெழுத்தால் எழுதுவது! சொல்லாற் சொல்லவொண்ணாத—எழுத்தால் எழுதவொண்ணாத ஒரு பெரும் பொலிவு தோன்றுகிறது. தமிழ் மொழியின் ஆழம் ஆழ்ந்துகொண்டே போகிறது. நீளம் நீண்டுகொண்டே போகிறது. அகலம் அகன்றுகொண்டே போகிறது. சுருங்கச் சொல்லின், தமிழ் மொழியானது உருக்கிய பொன்னில் செதுக்கிய மணிகளை ஒடுக்கி அடுக்கிய அணிகலனை யொத்து, ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களை பொருத்தமான சொற்களில் சுருக்கமாக கூறி விளக்கும் ஒப்பற்ற நூல்களை யாத்தற்கும், விரிவுரைகள் நிகழ்த்துவதற்கும் பல வகையாலும் இடந்தரும் ஓர் ஒப்புயர்வற்ற தனி மொழி என்று கூறுதலே சாலும்.

எனவே, தமிழ் மக்களாய்ப் பிறந்தோர் அனைவரும் நம் தாய்மொழியைக் கட்டாயமாகக் கற்கவேண்டும். பிறமொழியினர் எவரும் தம் தாய்மொழியைத் தள்ளி வேறு மொழி கற்க விரும்புவதில்லை. தமிழரல்லாத ஒவ்வொருவரும் தத்தம் மொழியில் தேர்ச்சி பெற்ற பின்னும், நம் தமிழ் மொழியைக் கற்கவோ, அல்லது அம்மொழி பயந்த நூல்களிற் காணப்படும் விழுமிய பொருள்களை அறியவோ பெரிதும் அவாவி நிற்கின்றனர். அத்தகைய சிறப்புத் தமிழ் மொழி ஒன்றுக்கே உரியது. தமிழ்மொழி ஒன்றுதான் உலகம் போற்றும் நூல்களைத் தனக்குரிமையாய்க் கொண்டுள்ளது. தமிழ்மொழியை ஒரு காந்தக் கல்லாகவும், பிறமொழிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இரும்புத் துண்டுகளாகவும் வைத்து ஒப்பிட்டுக் கூறினால், அது மிகையாகாது. யான் இங்ஙனம் கூறுவதினின்றும் பிறமொழிகட்குரிய பெருமையைக் குறைத்து விட்டதாகவோ, அல்லது இகழ்ந்து தள்ளி விட்டதாகவோ கருதிவிடலாகாது. தமிழ்மொழியின் தனிப் பெருஞ் சிறப்பும், அதனை யாவரும் விரும்பிக் கற்றுக்கொள்ளும் தகுதியுமே பிறமொழிகட்குப் பெரிதும் இல்லை என்பது எமது கருத்து.

இனித் தமிழ்மொழி வளர்ச்சி ஒன்றையே சிறந்த குறிக்கோளாகக்கொண்டு, இன்று இங்கு நிறுவப்பெறும் தமிழ் வளர் நிலையமானது, அதன் அமைப்பினர்களால் சிறந்த முறையில் நடத்தப்படும் என்னும் துணிபுடையேன். பண்டு

அறிவுத் துறையில் முதற்படியில் வைத்து எண்ணப்பட்ட தமிழ் மக்கள், இன்று அதன் கடைசிப்படியில்வைத்து எண்ணக் கூடிய நிலையை அடைந்துள்ளார்கள். இதற்குக் காரணம், இத்தகைய அறிவு நிலையங்கள் இல்லாததே. பண்டு நமது மன்னர்கள் தமிழ்வளர் கழகங்கள் பலவற்றை நிறுவியும், அவை தம்மில் எல்லாம் அறிவு நூல்கள் பலவற்றைத் தொகுத்தும், தக்க அறிவிற் சிறந்த புலவர் பெருமக்களை அத்தகைய கழகங்களின் தலைவர்களாக அமர்த்தியும், தமிழையும் தமிழ் மக்களையும் பாதுகாத்து வந்த உண்மையையும் நாம் பண்டைய வரலாறுகளிலிருந்து அறிகின்றோம். தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றென்பதை நன்குணர்ந்து, அதனை போற்றி வளர்த்த தமிழ் மன்னர் இங்கு இப்போது இல்லையே! என் செய்வது? என்ற கவலைக்கே இடம் இல்லாமல், தமிழ் நாட்டில் ஒரே ஒரு தமிழ் மன்னரை நாம் இன்றுங் காணக் கூடிய பேறு பெற்ற இத் தலைநகரில், இத்தகைய ஒரு நிலயம் நிறுவப் பெறுமானால், அதன் வளர்ச்சிக்கு யாதாயினும் தளர்வு ஏற்படுமோ என்ற ஐயமே நமக்கு உண்டாகக் காரணமில்லை. எனவே, இந்நிலையமானது நமது மேன்மை தங்கிய அரசர் பெருமானின் ஆதரவுடனும், பொது மக்களின் இன்றியமையாப் பெருமுயற்சிகளுடனும் நன்கு வளர்ச்சியுற்றுப், பல துறைகளிலும் மக்களைப் பண்படுத்துதலாம் செயற்கரும் பெருந் தொண்டைச் செய்துவரும் என்னுந் துணிபுடையேன்.

ஆகவே, இத்தகைய பொது நிலயங்களில் நாம் கையாள வேண்டியன சில கூறி, எனது முன்னுரையை ஒருவாறு முடிக்க நினைக்கிறேன்.

மக்களின் அறிவு விளக்கத்திற்கும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாப் பெருந்துணைக் கருவிகளாய் உள்ளன கல்வி கேள்வி என இரண்டேயாம். இவற்றுள் எது சிறந்தது என்று ஆராயப்புகின், இரண்டு கல்வியையும் முறையாகக் கற்றால் இரண்டாலும் சிறந்த பயனே விளையும் என்பது திண்ணம். என்றாலும் கல்வி கற்பதெனின் இக்காலத்தில் எல்லார்க்கும் இயலாது. "கல்வி கரையில கற்பவர் நாட் சில" என்ற ஆன்றோர் மொழியின்படி கல்வியென்னுங் கடலை நீந்தி அதன் கரையை எளிதில் காண முடியாதபடி மக்களின் வாழ்நாள் மிகவும் சுருங்கியிருப்பதால்,

"உணற்கினிய இன்னீர் பிறிதுளி இல்லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று"

என்று பழமொழி நானூற்றில் கூறியபடி, ஒவ்வொரு நூலாகக் கற்பதைவிடப் பொது நிலயங்களுக்குச் சென்று, அங்குப் பல நூல்களையும் கற்றுணர்ந்த அறிவுடையோர் கூறும் நன்மொழிகளைக் கேட்டறிதலே சிறந்த முறையாகும். கல்வியை முறையாகக் கற்பதற்குப் போதிய பொருள் வசதியும், நீண்ட ஆயுளும், உடல் வன்மையும் இன்றியமையாது வேண்டப்படும். இனி, அறிவுடையோர் இத்தகைய பொது நிலயங்களுக்கு வந்து நிகழ்த்தும் அறிவுரைகளைச் செவியினாற் கேட்டறிதலாகிய 'கேள்வி' என்னுங் கல்விக்குச் சிறிது காலமும், சிறிது முயற்சியும், சிறிது பொருளும் போதும். பள்ளிக்கூடங்களிற் கல்வி பயிலும் மாணவர்களும் இத்தகைய கழகங்களில் வந்து அறிவுடையோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டால், அவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்வனவாகும். எனவே, ஆண் பெண், முதியோர் இளைஞர், கற்றவர் கல்லாதவர், வறியர் செல்வர் ஆகிய எல்லாருக்கும் ஒத்த பயன் தருவதாயுள்ள அறிவு வளர்ச்சிக்கான பொது நிலயங்கள் ஒவ்வொரு ஊர்களிலும் நிறுவுதல் முதன்மையினும் முதன்மையாம். இத்தகைய நிலயங்களில் அறிவாராய்ச்சி மிக்க பெரியார்களை வரவழைத்துத் திங்கள் தோறும் விரிவுரைகள் நிகழ்த்தச் செய்தல் வேண்டும். அதோடு,

"ஒண்ணுதற் செவ்வாயுமையவள் பங்க னுலகளிக்குங்
கண்ணுதற பெம்மான் கழலிணை போற்றிக் களிப்புறவே
எண்ணுவோர்க் கின்பம தீந்திடு கல்வியு மின்னருள்சேர்
நுண்ணறிவும் பெற நூல் நிலயம் பல நோக்குவீரே"

என்ற கலித்துறைப்படி, மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவான ஒழுக்கமுறைகளையும், இயற்கைப் பொருள் இயல்புகளையும், நாகரிக மேம்பாடுகளையும், உழவு, வாணிகம், கைத்தொழில் செய்யும் முறைகளையும், கடவுட் கொள்கையினின்றும் பிறழா நெறி முறைகளையும் கற்பிப்பனவான அறிவு நூல்கள் பலகொண்ட ஒருநூல் நிலயமும் இன்றியமையாது அமைக்கப்பட வேண்டும். அன்றியும், தமிழ் மக்களின் நலங்கருதி வெளிவரும் செய்தித் தாள்களை வரவழைத்து, அவற்றினைப் படிக்கச்செய்வதாலும் தமிழ் மக்களை முன்னேற்றமடையச் செய்தலும் வேண்டும். எல்லாவகையினும் தமிழ் மொழியின் வளர்ச்சியும், அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றமும் ஓங்கி வளர்தற்கு ஆவன சூழ்ந்து துணிதலே இப்பெரு நிலயத்தின் நோக்கமாய் இருத்தல் வேண்டும். இங்கே நாம் எடுத்துக்கூறிய நோக்கங்கள் இனிது நிறைவேறுதற்கு உண்மைத் தமிழர் பலரின் ஓயா உழைப்பும், பெரும் பொருட்

செல்வம் இன்றியமையாது வேண்டப்படும். இக்காலத்தில் பொருளின்றேல் எச்செயலும் இனிது நிறைவேறாது. ஆகவே, பொருட்செல்வமுள்ள தக்கார் இத்தகைய பொதுப்பணியில் ஈடுபடுவார்களானல், இவ்வெண்ணங்கள் அனைத்தும் முட்டின்றி நிறைவேறும்.

மெய்யன்பர்களே!


அளவிட்டுக்கூற இயலாத தமிழ்க்கடலின் தீஞ்சுவை பொருந்திய தெவிட்டாத அமிழ்தத்தையும், அத்தகைய ஒப்புயர்வற்ற தமிழ்மொழியின் பெருமையையும், அதனை நாம் எவ்வாறு போற்றி வளர்த்தல் வேண்டும் என்பதையும், அங்ஙனம் வளர்ப்பதற்கு நாம் கையாள வேண்டிய முறைகளையும் ஒருவாறு என் சிற்றறிவுக்கு எட்டிய அளவுக்கு எடுத்துக் கூறியுள்ளேன். இனி, இது குறித்துச் செய்ய வேண்டிய நற்பெருஞ் செயல்களை ஆராய்ந்து முடிவு செய்தற்குப் பெரியோர்களாகிய நீங்களும் இங்கு குழுமியிருக்கிறீர்கள். எனவே நான் இங்கு எடுத்துப் பேசிய நோக்கங்களை ஆராய்ந்து முடிவு செய்வதோடு, அவற்றைச் செயல்முறையில் கொண்டுவர வேண்டுமென்று தங்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு, இதுகாறும் அமைதியோடு கேட்டிருந்த உங்கட்கு என் நன்றியறிதலை உரித்தாக்கி, யான் இங்ஙனம் ஒரு சொற்பொழிவினைத் தங்கள் முன்னிலையில் நிகழ்த்தி அனைவரையும் மகிழ்வித்தற்கு வசதி கிடைத்தமைக்காக இறைவனைப் பெரிதும் வழுத்தி, இம்மட்டில் என் முன்னுரையை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கம்

வெள்ளி விழாத் திருநாள்

இவ்விழா வருகின்ற வெகுதானிய ஆண்டு, சித்திரை கூ, ச, டு (15, 16, 17—4—1938)ஆம் நாட்களாகும் வெள்ளி-சனி ஞாயிறுகளில் திருப்பாதிரிப்புலியூர் சைவத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாச்சாரிய தேசிக சுவாமிகளது சீரிய தலைமையில் கொண்டாடப்பெறும்.

அப்போது, தமிழ் அறிஞர்களால் சிறந்த சொற்பொழிவுகள் நிகழும்.



செந்தமிழ்ப்புரவலர், தமிழ்வேள், இராவ்சாகிபு,

த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள், B.A.,B.L.,

தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.

ஶ்ரீ செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] ஈசுவர—சித்திரை [பரல்-கூ

திருவாசகம்

ரு-வது பாட்டு

உத்த மனத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே.

பதவுரை :—

உத்தமன்—எல்லா உயிர்களுக்கு மேலானவனும்

அத்தன்—எனது தந்தையும்

உடையான்—(திருப்பெருந்துறையில்) என்னை அடிமையாக ஆண்டருளியவனும் ஆகிய சிவபெருமானுடைய

அடியே நினைந்து உருகி—இரண்டு திருவடிகளை மாத்திரம் எனது மனதில் நினைந்து நினைந்து அவ்வாறு நினைத்ததாலுருகி

மத்தமனத்தொடு—களிப்புப் பொருந்திய மனதோடு கூடிய

மால் இவன் என்ன—பித்துடையவன் இவன் என்று

மனநினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட—உள்ளூரிலுள்ளவர் என்னைக் கண்டபொழுது தங்கள்தங்கள் மனதுக்கு இணங்கின கருத்துக்களைச் சொல்லவும்

ஊர் ஊர் திரிந்து—நான் பல ஊர்களிலுஞ் செல்ல

எவரும் தத்தம் மனத்தன பேசவும்—(அவ்வூர்களிலுள்ளவர்கள் என்னைக் கண்டபொழுது) தங்கள் தங்கள் மனதில் அப்பொழுது தோன்றிய கருத்துக்களைப் பேசவும்

சாவது என்றுகொல்—அக்கருத்துக்களை எல்லாம் கேட்ட நான், சிறிதும் தன்முனைப்பு உணர்ச்சியின்றி மனம் செத்து என்றுன் அடங்கியிருத்தல் எந்தக்காலம் நிகழுமோ? (அறியேன்.)

விளக்க உரை :—

உத்தமன்—எல்லா உயிர்களுடைய இன்பநலத்தையும் நாடி ஐந் தொழில் செய்கின்றவன் ஆதலின் அடிகள் சிவபெருமானை உத் தமன் என்று கூறினர்.

அடியே நினைந்து உருகி—ஏ, பிரிநிலை குறித்து நின்றது. நினைந்து, காரணப்பொருள் குறிக்கும் வினையெச்சம்; நினைந்த காரணத் தாலுருகி.

மத்தம்—மயக்கம், வெறி.

மால்—பித்து. இங்கே ஆகுபெயராய்ப் பித்து உடையவனைக் குறிக் கிறது. பாண்டியனுடைய அமைச்சர் நிலையிலிருந்த அடிகள் அச்செல்வ நிலையைவிட்டு ஏழையொருவன் கோலங்கொண் டிருத்தலைக் கண்டவர்கள் தம்மைப் பித்துடையவனெனக் கூறுதல் இங்கே கூறப்பட்டது. உலகப் பற்றுடையவர்கள் உண்மைத் துறவிகளைக் கடவுட் பித்தரென்று கூறுவதும் உண் மைத்துறவிகள் உலகப் பற்றுடையவர்களை உலகப் பித்த ரென்று கூறுவதும் இயல்பு. உலகப் பற்றுடையவர்கள் துறவி களின் நிலையை அறியமாட்டார்கள்.

மனநினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட—தம்மைக் கண்ட மக்கள் ஒன்றுபடக் கூருமல் தங்கள் தங்கள் மனநிலைக்குத் தக்கபடி வேற்றுமைப்படக் கூறுவரென்று அடிகள் கூறினுர். கீழே வருகிற 'தத்த மனத்தன' என்பதற்கும் இதுவே கருத்து.

சொல்லிட என்பதற்குப் பின்னுலே உம் தொக்கி நின்றது. பின்னுலே வருகிற பேச என்பதற்கு பின்னும் உம் தொக்கி நிற்கின்றது.

ஊர் ஊர் திரிந்து—பல ஊர்களிலுந் திரிந்து. திரிய என்பது திரிந்து என நின்றது.

என்றுகொல்—கொல் என்பது ஐயங்குறித்து நிற்கின்றது.

சாவது—தன்முனைப்பின்றிச் சிவபெருமானுடைய திருவடிகளி லடங் கிச் செயலற்றிருத்தல். ஏ—அசை.

இந்தப் பாட்டில் அடிகள் உலகினர் தம்மைப்பற்றிச் சொல்லு வதைச் சிறிதும் உணராமல் யான் எனது என்னும் செருக்கற்றுச் சிவபெருமானுடைய திருவடிகளிலேயே அடங்கியிருத்தல் தமது விருப்பமென்று கூறுகின்றுர்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

அறிவியற் பகுதி - Science

அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி

[திரு. N. குழந்தைவேலன் அவர்கள் B. A.]

நம்மைத் தாங்கிக்கொண்டிருக்கும் இவ்வுலகமும் இன்னும் கோடிக்கணக்கான பல்வேறு உலகங்களும் பற்றுக்கோடு ஒன்றுமின்றி அந்தரத்தில் அசைந்து ஆடிக்கொண்டிருக்கின்றன. வான வூர்தியின் உதவியால் பூமியைச்சுற்றி எல்லாப் பக்கங்களிலும் பன்முறை பறந்து சென்று பார்த்தும் உலகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் பொருள் யாதும் தட்டுப்படவில்லை; ஆயிரந்தலைகொண்ட ஆதிசேடனும் முட்டுப்படவில்லை. ஆகவே பூமியும் ஏனைய அண்டங்களும் வான வெளியிலே ஆதரவு ஏதுமின்றித் தாமாகவே இயங்கிக்கொண்டிருப்பது நன்கு புலப்படும். படைப்பின் வியத்தகு தோற்றங்களைக் காணுந்தொறும் காணுந்தொறும் இறைவன்றன் முழுமுதற்றன்மையும் பேராற்றலும் வெளிப்படுகின்றன. வானத்திலே தோன்றும் ஞாயிறு, திங்கள் முதலியவற்றின் தன்மைகளை ஆராயப்புகுங்கால் ஒன்றனுக்கொன்று எழில் மிகுந்ததாய் காணப்படுவதுடன், அதனை முற்றிலும் அளவிட்டு உரைக்க முடியாததாக இருக்கின்றது. மணிமொழிப் பெருமானும்,

> "அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம்
> அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
> ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின்
> நூற்றொருகோடியின் மேற்பட விரிந்தன"
>
> —(திருவண்டப்பகுதி)

என வியந்து கூறினர்.

வானத்தின் வியத்தகு தோற்றங்களைப்பற்றி நாம் ஒரு சிறிதும் ஆராய்ச்சி செய்வதில்லை. அந்திப்பொழுதிலே ஞாயிறு மேற்றிசையில் சென்று மறைவதும், திங்கள் மெள்ள மெள்ள எட்டிப்பார்ப்பதும், உடுக்கள் ஒன்றின்பின் ஒன்றாய்க் கண்ணைச் சிமிட்டுவதும் நமக்கு எத்துணை இன்பம் பயக்கின்றன! இக்காட்சியில் ஈடுபடுவோர் எவரும் மனங்கசிந்து உருகாமல் இரார். இவ் அரிய காட்சிகளைத் தொலைநோக்காடியின் உதவியால் பார்க்கும்பொழுது நம் கண்ணுக்கு எளிதில் புலப்படாத பல புதிய பொருள்கள் நமக்குத் தெரிகின்றன. இக்கண்ணாடி

சேய்மையிலுள்ள பொருள்களை அண்மையில் இருப்பன போன்று பெரிதாக்கிக் காட்டுகின்றது. இதன் உதவியால் விண்மீன்களையும், ஏனைய கோள்களையும் இரவிலும், பகலிலும், எந்த நேரத்திலும் காணலாம். உடுக்கள் இரவில் மட்டும் தோன்றுவதாகப் பலர் எண்ணியிருக்கலாம். இஃது உண்மை யன்று. அவை எக்காலமும் இடைவிடாது வானத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. பகற்காலங்களில் ஞாயிற்றின் பேரொளியால் நம் கண்கள் மங்கிப்போவதால் விண்மீன்களைக் கண்ணாடியின் உதவியின்றி நம்மால் காண முடிவதில்லை.

ஞாயிற்றினைத் தொலைநோக்காடியின் (Telescope) உதவி கொண்டு நோக்கும்பொழுது அஃது ஓர் அனற்பிழம்புபோல் எரிந்துகொண்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. அதனுள் ஒரு வகை எரியும் வளி நிறைந்து கிடக்கின்றது. அதன் மேற்புறங்களில் பல உடைப்புகள் காணப்படுகின்றன. இவ் உடைப்புகள் கருமை நிறமாய்த் தோன்றுகின்றன. ஞாயிற்றின் உள்ளே இருக்கும் தீக்குழம்பில் ஓயாது ஏற்படும் கொந்தளிப்பினாலேயே இங்ஙனம் வெடிப்புகள் உண்டாவதாகக் கூறப்படுகின்றது. ஞாயிறு பூமியைக்காட்டிலும் பல்லாயிரம் மடங்கு பெரியது. மிக விரைவாகச் செல்லும் புகைவண்டி பூமியை ஒரு முறை சுற்றிவர மூன்று வாரங்கள் செல்லுமெனில் அதே புகைவண்டி ஞாயிற்றினை ஒரு முறை சுற்றிவரக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் செல்லும். ஞாயிறு நெடுந்தொலைவில் இருப்பதால் நம் கண்ணுக்குச் சிறியதாய்த் தோன்றுகின்றது. ஒரு புகைவண்டி ஞாயிறு இருக்குமிடம் நோக்கி இரவும் பகலும் விரைந்து ஓடுவதாக வைத்துக்கொள்வோம். அவ்வண்டி ஞாயிறு மண்டிலத்தை அடைவதற்கு இருநூற்று எழுபத்தைந்து ஆண்டுகள் செல்லும். ஞாயிறு நம் கண்ணுக்கு வட்ட வடிவமாகத் தோன்றினும் கண்ணாடியில் பார்க்கும்பொழுது அதன் ஓரங்களிலுள்ள தீ ஈட்டிகளைப்போன்று கொழுந்து விட்டு எரிவதைக்காணலாம். ஞாயிற்றின் உள்ளே எரிகின்ற தீயின் தன்மை சொல்லுக்கு அடங்காததாக இருக்கின்றது. ஓரங்களில் எரியும் தீக்கொழுந்தின் ஒரு பகுதிக்குள் இடறிவிழ நேரிட்டாலும் இப்பூமி பொசுங்கி ஆவியாகப் போய்விடும். ஆயினும் ஞாயிறு நெடுந்தொலைவில் இருப்பதால் இதைக் குறித்து நாம் அஞ்சவேண்டுவதில்லை.

அடுத்தாற்போல் திங்கள் மண்டிலத்தைச் சிறிது ஆராய்வோம். அதனுள் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்திருக்கின்றன. அவற்றுள் எரிமலைகளும் உண்டு. திங்களும் பூமியைப்போன்ற ஒரு சிறிய உலகமேயாகும். அதனை இறந்து

போன உலகமெனக் கூறலாம். அதிலுள்ள கடல்களெல்லாம் வறண்டுபோய்விட்டன. ஆங்குள்ள எரிமலைகள் இப்பொழுது நெருப்பைக் கக்குவதில்லை. அவ் உலகில் காற்று இன்மையால் மக்கள் உயிர் வாழமுடியாது. செடிகொடிகளும் வளர மாட்டா.

செவ்வாய் மண்டிலத்தை பூமிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். அதன் வடக்கு முனையில் வெண்மையான பனிமலைகள் தெரி கின்றன. வேனிற்காலத்தில் இவ்வெண்மையான பகுதி சிறிது சிறிதாகத் தேய்ந்து குறைந்து போகின்றது. பனிக்கட்டி வெயிலால் உருகிப்போவதனாலேயே இத்தோற்றம் காணப்படு வதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

சனி மண்டிலத்தின் தோற்றம் கண்ணைக் கவருந் தன்மை யதாக இருக்கின்றது. அதனைச்சுற்றிலும் அழகிய ஒளிவட்டங் கள் காணப்படுகின்றன. எண்ணுதற்கரிய சிறு திங்கள்கள் சனி மண்டிலத்தைச் சுற்றிவருவதனாலேயே இவ் அரிய ஒளிவட்டங் கள் உண்டாகின்றன. அவற்றின் உள்ளே சுழன்று கொண்டி ருக்கும் திங்களைத் தனித்தனியாக நம்மால் காணமுடிவதில்லை. நாம் பூமியில் காண்பது ஒரு நிலவு. ஏனைய உலகங்களோ வெனில் பல்வேறு நிறங்களையுடைய பல நிலவுகளைப் படைத் திருக்கின்றன. செவ்வாய்க்கு இருநிலவுகளும், வியாழனுக்கு நான்கு நிலவுகளும், சனிக்கு எண்ணிறந்த நிலவுகளும் அமைந் திருக்கின்றன. இங்ஙனம் பல நிலவுகளையுடைய விண்ணுலகங் களை அமரர் உறையுள் எனக்கூறுவது முற்றிலும் பொருந்தும்.

வானத்திலே கோடிக்கணக்கான மீன்கள் வைரங்களைப் போன்று மின்னுகின்றன. அவற்றிற் சில மீன்கள் பெரிதாயும், மற்றும் சில சிறிதாயும் காணப்படுகின்றன. சில மீன்கள் ஒளி மிகுந்தும், இன்னுஞ் சில ஒளிமங்கியும் தெரிகின்றன. நாகரிகம் மிகுந்த நந்தமிழ்மக்கள் பண்டைக்காலத்திலேயே உடுக்களின் கூட்டங்களைக் கூர்ந்து நோக்கி அவற்றின் உருவங் களுக்கு ஏற்றவாறு பல்வேறு பெயர்களைச் சூட்டி இருக்கின்ற னர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம்முன்னோர்கள் வானத்திற்கண்ட உருவங்களைச் சிறிதும் மாறுபாடின்றி நாம் இற்றைக்கும் காண்கின்றோம். இதனை எண்ணிப்பார்க் கும்பொழுது நமக்குப் பெருவியப்பு உண்டாகின்றது. விண்மீன்களின் தொகுதிகள் எக்காலத்தும் நிலை பிறழாது வான வெளியில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

நாம் வான வெளியில் பல ஆண்டுகள் வரை ஓயாது பறந்து செல்வதாக வைத்துக்கொள்வோம். இங்ஙனம் செல்கையில்

பின்னுல் திருப்பிப் பார்ப்போமானுல் நமது ஞாயிறு ஒரு சிறிய விண்மீனைப் போன்று தோன்றும். இன்னும் நெடுந் தொலைவு சென்றுல் அது நம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும். இங்ஙனமே வானத்தில் காணும் விண்மீன் கள் நெடுந்தொலைவில் இருத்தலால் அவை நம் கண்ணுக்கு மிகச் சிறியனவாய்த் தோன்றுகின்றன. உண்மையில் ஒவ் வொரு மீனும் ஞாயிற்றினைக்காட்டினும் மிகப் பெரியதாக இருக்கின்றது. விண்மீன்கள் ஒளியினும் நிறத்தினும் ஒன்றுக் கொன்று மாறுபடுகின்றன. இம்மீன்கள் நீல நிறமாயும், பொன் நிறமாயும், வெண்மை நிறமாயும், செந்நிறமாயும் பலவாறு ஒளி வீசுகின்றன. ஒவ்வொரு மீனும் இளமையில் நீல நிறமா யிருந்து நாளடைவில் முதிர்ச்சியுற்றுச் செந்நிறம் அடைகின் றது. ஆயினும் ஒரு மீனின் நிறம் மாறுதல் அடைவதற்குக் கோடிக்கணக்கான ஆண்டுகள் செல்லும்.

ஞாயிற்று மண்டிலத்தைச் சார்ந்த செவ்வாய் முதலிய கோள்களும் விண்மீன்களைப் போன்று வானத்தில் தோன்று கின்றன. ஆயினும் இக்கோள்கள் பூமியைப்போன்று ஞாயிற் றினைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகலின் இவை இடம்விட்டு இடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஏனைய விண்மீன்கள் அங்ஙனம் இடம் பெயர்வதில்லை. விண் மீன் ஒவ்வொன்றும் தனித்தனி ஞாயிறு ஆகலின் அஃது இயற் கையாகவே சுடர்விட்டு மின்னுகின்றது. கோள்களோவெனில் தமக்கு இயற்கை ஒளி இன்மையால் இங்ஙனம் மின்னுவதில்லை. இவ் இருதன்மைகளால் மீனுக்கும், கோளுக்கும் உள்ள வேற் றுமை எளிதில் உணரப்படும்.

இரவில் வானத்தைக் கூர்மையாகப் பார்க்கும்பொழுது இருண்ட வானத்தின் இடையிடையே ஒளி மிகுந்த இடங்கள் காணப்படும். இவற்றைக் கண்ணுடியின் உதவியால் நோக்கு வோமானுல் நமக்கு ஓர் அரிய காட்சி தென்படும். இவை நீரிற் காணும் சுழல்களைப்போன்று தோன்றுகின்றன. இங்கு முழு உருவம் அடையாதனவும், முற்றுப் பெறுதனவுமான கோடிக்கணக்கான மீன்களைக் காணலாம். இவ் ஒளிப்பகுதியே உலகங்களைப் படைக்கும் இடம்போல் காணப்படுகின்றது. இதனை "ஆண்டவனது தொழிற்சாலை" (Workshop of the Creator) என அறிஞர் கூறியுள்ளனர். எவ்வகைப் பொரு ளாயினும் அதனைச் செய்வதற்கு ஏதேனும் முதற்பொருள் ஒன்று வேண்டும். நீராவிப் பொறியைச் செய்யவேண்டு மெனில் அதற்கு இரும்பு வேண்டும். அதேபோன்று கோடிக் கணக்கான அண்டங்களையும், உலகங்களையும் செய்வதற்கு

ஏதேனும், ஒரு பொருள் வேண்டும். உலகங்களின் பிறப்பிடமாகிய அவ் ஒளிப்பரப்பினை ஆராய்ந்து பார்க்கும்பொழுது எல்லாம் நெருப்பு வடிவமாகவும் ஆவி வடிவமாகவுமே இருக்கின்றன.

இத்தகைய ஒளிக் கூட்டங்கள் வானத்தில் சற்றேறக் குறைய இருபதினாயிரம் வரை காணப்படுகின்றன. இவ் ஒளிப் பகுதிகள் விண்மீன்களைக் காட்டிலும் நெடுந் தொலைவில் உள்ளன. விநாடிக்கு 186,000 கல் விரைந்து செல்லும் ஒளி அலைகள் திங்கள் மண்டிலத்திலிருந்து பூமிக்கு வந்துசேர ஒன்றே கால் விநாடி செல்லுகின்றது. இங்ஙனமே ஞாயிற்றின் ஒளி இங்கு வந்துசேர எட்டு விநாடிகள் செல்லுமெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆயினும் பூமிக்கு அண்மையி லுள்ளதெனக் கருதப்படும் ஒரு விண்மீனின் ஒளி நமக்கு வந்துசேர நான்கு ஆண்டுகளுக்கு மேல் செல்லும். இஃது ஒன்றினாலேயே விண்மீன்களும், ஏனைய அண்டப்பகுதிகளும் எத்துணைச் சேய்மையில் உள்ளன என்பது உணரப்படும்.

சில வேளைகளில் வானத்திற் பால்போன்று வெண்மையான நீண்ட ஒளிப்பரப்பினைக் காணலாம். இதனை "அரம்பையர் பாதை" (The Fairies' Path) எனக் கூறுவதுண்டு. இது வெளித் தோற்றத்திற்கு ஒரே ஒளிப்பரப்பினைப் போன்று தோன்றினாலும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதனுள் கோடிக்கணக்கான மீன்கள் காணப்படுகின்றன. அம்மீன்கள் நெடுந்தொலைவில் இருத்தலால் அவை நம் கண்ணுக்குத் தனித் தனியாகத் தெரிவதில்லை. எல்லாம் ஒன்றுபட்டு ஒரே ஒளியாகக் காணப்படுகின்றது. உண்மையில் ஆங்கு எண்ணிறந்த பல கோடிக்கணக்கான மீன்கள் குவிந்து கிடக்கின்றன. இடையிடையே இருண்ட பகுதிகள் தெரிகின்றன. ஒவ்வொரு மீனும் தனித்தனி ஞாயிறும் என்பதும், அஃது ஒவ்வொன்றும் நம் ஞாயிற்றினைப்போன்று பன்மடங்கு பெரியது என்பதும் நினைவிற் பதிக்கற் பாலது. அவ் ஒளிப்பரப்பினைப் படம் பிடித்துப் பார்க்கும்பொழுது படம் முழுவதும் ஆற்றுமணலைப் போன்று விண்மீன்கள் குவிந்து கிடப்பது காணப்படும். சிற்சில இடங்களில் அவற்றை மண்வெட்டியால் பெயர்த்து எடுத்து வேறு பக்கங்களில் குவித்து வைத்திருப்பதைப் போன்று தோன்றும். இவற்றின் இடையில் காணப்படும் இருள் உலகங்கள் மைக்குழம்பென இருண்டு கிடக்கின்றன. இவற்றின் உள்ளே ஏதேனும் உளதோ என்பதை இதுகாறும் எவரும் கண்டிலர். வானவெளி எல்லையற்றதாக இருக்கின்றது. இறைவன்றன் பேரருட்டிறத்தினாலேதான், எல்லா உலகங்களும் அந்தரத்திலே நிலைத்து நிற்கின்றன, என்பதை வலியுறுத்தும் பொருட்டு

"அந்தரத்து அகிலகோடி தாழாமல் நிலைநிற்க வில்லையோ"

என்றும்,

"தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச் சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தது"

என்றும் தாயுமானுர் அருளிச்செய்தனர்.

பூமியும், திங்களும் ஏனைய கோள்களும் ஞாயிற்றினை ஓயாது சுற்றிவருகின்றன. இக்கோள்கள் எக்காலமும் இங்ஙனமே சுழன்று கொண்டிருத்தல் இயலுமா? அற்றன்று உலகம் நிலையற்றது. நீர்மேல் குமிழிபோன்றது. இஃது ஏதாயினும் ஒருநாள் அழிந்தே தீரும். அங்ஙனம் அழியுமெனில் உலகத்தின் முடிவு எத்தகையது? வானவெளியில் எங்கு பார்த்தாலும் சுழன்றுகொண்டிருக்கும் கோளங்கள் ஒன்றின்மேல் பூமி மோதுண்டால் உடனே அதற்கு அழிவு நேரிடும். இல்லையேல் திங்கள், செவ்வாய் முதலிய கோள்களைப்போன்று பூமியும் குளிர்ந்து விறைத்துப்போய்த் தன்னிடமுள்ள காற்றையும், நீரையும் இழந்து உயிர்கள் வாழமுடியாததாக ஆய்விடக் கூடும் எனினும் பூமி இந்நிலைமைக்கு வர எத்துணைக் காலம் செல்லுமென வரையறுத்துக் கூற முடியாது.

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட் டுடையாரவர்
தலைவர்"

என்றபடி, உலகங்களை யெல்லாம் "படைத்து அளித்துத் துடைக்கும் எல்லையறு பரம்பொருளுக்கு" இஃது ஒரு விளையாட்டாகவே இருக்கின்றது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது ஆன்றோரின் அருள்வாக்கு.

பறவைகளின் கூடுகள்

[திரு. ம. பாலசுப்பிரமணியம் அவர்கள் M. A.]

இயற்கையில் அமைந்துள்ள விந்தைகள் பற்பல. அவற்றுள் பெருமையால் காண்பார்க்கு வியப்பினைத் தருவன சில; சிறுமையால் வியப்பினைத் தருவன சில; அழகினுல் வியப்பினைத் தருவன சில; சிற்பவகைப்பட்ட அமைப்பினுல் வியப்பினைத் தருவன சில; நீண்டு பருத்த மரங்களும் யானை,

[1]யானைப்போலி முதலிய விலங்குகளும் பெருமையால் வியப்பினைப் பயப்பன. கொசுகு, தேனீ முதலியன சிறுமையால் வியப்பினைப் பயப்பன. பன்னிறக் குருவி, மயில், சிறுத்தை முதலியன அழகினால் வியப்பினைப் பயப்பன. சிலந்திக்கூடு, பறவைக்கூடு, அலர்ந்த மலர் முதலியன சிற்ப வகைப்பட்ட அமைப்பினால் வியப்பினைப் பயப்பன. அவை தம்முள் ஈண்டு நாம் பறவைக்கூடுகளைப் பற்றிய உண்மைகளை அறியத் தொடங்குவோம்.

பறவைகளுக்குக் கூடுகள் இன்றியமையாது வேண்டப்படுவனவா? என்னும் கேள்வி முதற்கண் இயற்கையாகவே எழுகின்றது. இக் கேள்விக்கு விடையிறுத்தல் எளிதன்று. என்னை? சில பறவைகள் முட்டையிடும் பருவம் தோன்றுதற்கு முன்னரே கூடுகளை அமைத்துக் கொள்ளுகின்றன. அன்றியும் அக்கூடுகளில் முட்டைகளை இட்டு அம்முட்டைகளை அடைகாத்துக் குஞ்சுகளைத் தோற்றுவிக்கின்றன. எனவே, அப்பறவைகளுக்குக் கூடுகள் இன்றியமையாதன என்பது விளங்குகின்றது. ஆயினும் பருவத்துக் கொருமுறை தனி முட்டையிடும் [2]கடற்புலம்பி என்னும் பறவை தன் முட்டையை யாதானுமொரு குன்றின் பாறையின்மேல் இட்டுச் செல்வதைக் காணுங்கால் அப் பறவைக்குக் கூடு இன்றியமையாது வேண்டப்படுவது என்று கூறுதல் இயலாது. [3]கடற்குருவிகளும், வேறு சில பறவைகளும் தம் முட்டைகளைச் சில தொளைகளில் இட்டுச் செல்வதைக் காணின் அவையிற்றுக்கும் கூடுகள் இன்றியமையாதனவல்ல எனத் தோன்றுகின்றது. எனவே மேற் கேள்விக்கு ஒரு விடை தருதல் இயலாது.

இனிப் பறவைக்கூடு அமைப்பு முறையில் உயர்வுபெற்ற வரலாற்றை ஆராய்வாம். பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பறவைகளால் அமைக்கப்பட்ட கூடுகள் யாதொரு பிணையுமின்றி வெறுந்தரையில் திரட்டப்பட்ட சிற்சில வளார்களும் உலர்ந்த புற்றண்டுகளும் சேர்ந்த ஈட்டங்களாக இருந்திருக்கலாம் என அறிஞர் கருதுகின்றனர். இக்கூடுகளை அப் பறவைகள், முதன்முதலில், தம் முட்டைகளைச் சேமித்து வைக்கத்தக்க இடங்களாகக் கருதியிரா என்றே நினைக்க வேண்டி யிருக்கின்றது. வெறுந்தரையில் தங்குங்கால் தம் உடல் ஈரத்தால் நிமையுறுவதா கண்டு அவை இம் முறையை மேற்கொண்டிருக்கலாம் என எண்ணவேண்டி யிருக்கின்றது. நாளடைவில் பறவைகள் நிலத்தின் மேல் கூடு கட்டுதலை விட்டுக்

1. The Elephant-seal 2. Guillemot. 3. Terns or Sea-Swallows.

கொடி, செடி, மரம் முதலியவற்றில் தங்கள் கூடுகளை அமைக்கத் தொடங்கின. அக் கூடுகளும் தொடக்கத்தில் நல்முறையினவாக இல்லை. முதன்முதல் சில கணுக்களைச் சிறுகிளைகளினிடைப் பொருத்திவைத்து மேடையாக அமைத்து அதனையே கூடாகக் கொண்டு வாழ்ந்துவந்த பறவைகள் பின்னர் தம் முட்டைகளைச் செவ்வே சேமிக்க அம் மேடைமீது மென்மையும் வளைவும் உள்ள ஒரு இருக்கையை அமைக்கலாயின. வெறும் மேடைமீது பலகாலும் இட்ட முட்டைகள் பல சார்புகளால் உடைந்து ஒழிவன கண்டு அப்பறவைகள் இம்முறையைக் கையாளத் தொடங்கின போலும்! நாளடைவில் மேடைமீது குடைவுள்ள இருக்கையை அமைக்கும் பழக்கம் நீங்கி, மேடையின்றியே கூடுகட்டும் பழக்கம் தலைப்பட்டது.

இன்று, நாம் காணக்கிடக்கும் பறவைக்கூடுகள் பற்பல வகையினவாக இருக்கின்றன. ஆக்கப்பொருளாலும் வடிவத்தாலுமே கூடுகள் பல்வகையவாகின்றன. வெறும் வளார்களை அழகிய முறைகளில் பொருத்திக் கூடு கட்டுவதில் சிறந்தன [1]கருவேண் காகம், வன்றலை நாரை முதலியன. [3]வயற்பாடி என்னும் ஆங்கிலப் பறவையின் கூடு மிகவும் அழகியதாக இருக்கின்றது. ஆட்டுமயிர், பாசி, காளான் முதலிய பொருள்களைக் கொண்டு இப் பறவை வன்மையாகப் பின்னப்பட்ட கூட்டினை அமைக்கின்றது. அன்றியும் கூட்டின் உட்பரப்பைப் பன்னிறப் பாசித்தாள்களாலும் மெல்லிய இறகுகளாலும் அழகுற அமைக்கின்றது. கூட்டின் வெளிப்பரப்பைப் பல மரப்பட்டைகளால் சிலந்திவலைகளைக் கொண்டு பிணைத்து அழகுபடுத்துகின்றது. பகை விலங்குகளுக்குப் புலப்படா வண்ணம் சூழ்ந்துள்ள மர முதலியவற்றின் நிறங்களுடன் இயைய, இப் பறவை தன் கூட்டின் புறத்தோற்றத்தை அமைக்கின்றது. நீண்ட வாலையுடைய [4]சிற்றேலிப்போலி என்னும் பறவையின் கூடும் மிகுந்த வியப்பினைத் தருவதாம். ஒருகால் [5]மாக்கில்லிவ்ரே என்னும் இயற்கை யாராய்ச்சி யாசிரியர் இப் பறவையின் கூடுகளில் ஒன்றிலிருந்து 2379 இறகுத்துண்டுகளைப் பிரித்தெடுத்தாரெனின், இப் பறவை எவ்வளவு விடாமுயற்சியுடன் தன் கூட்டினை அமைத்திருக்கும் என்பது புலனாகும். ஆப்பிரிக்காவிலுள்ள மற்றொரு வகையான சிற்றெலிப்போலியின் கூடு மிக மிக வியப்பினைத் தருவதொன்றாம். இப்பறவை வெறும் பருத்திநார்த் துண்டுகளாலும் பருத்தி விதையின் ஓடுகளாலும் எவ்வாறு தன் கூட்டினை மிகு அழகுற அமைக்கின்றது என்பது இறைவனுக்கே விளக்கம். நம் நாட்டிலுள்ள சில பூக்குத்திப்

1. Magpie. 2. A stork named "Hammer-head" 3. Chaffinch. 4. Titmouse. 5. Mac Gillivray.

பறவைகளின் கூடுகளைப்போல இப்பறவையின் கூடு ஒரு சுரைக் குடுக்கை வடிவத்தில் அமைந்திருக்கும்.

மேனாட்டிலுள்ள சில [1]ஒத்திசைப் பறவைகளின் கூடு களும் பார்வைக்கு மிகு அழகாக விருக்கின்றன. இவ்வினப் பறவை தன் குஞ்சு வளர வளர அது தவறி விழாமற்பொருட்டு தன் கூட்டை அவ்வப்போது பெரிதாக்கிக் கொண்டே வரும்.

[2]தையற் பறவை என்றொரு பறவை மேனாட்டில் உண்டு. இது தன் கூட்டினை அமைக்கும் வகை வியப்பினைத் தருவதாம். ஒரு கிளையின் முனையில் உள்ள இரு நீண்ட இலைகளைத் தேர்ந்து அவையிற்றின் ஓரங்களில் நெருக்கமாகப் பல தொளைகளைச் செய்து பின்னர் நீண்ட நாரினைக்கொண்டு அத்தொளைகளின் வழியாகத் தைத்து அவ்விரு இலைகளையும் பிணைத்த பின்னர், அப் பறவை, இலைகளின் நடுவண் பருத்தியால் ஒரு மெல்லிய இருக்கையை அமைக்கும்.

ஆப்பிரிக்காவிலுள்ள [3]நெய்தற் பறவைகள் தம் கூடுகளை யமைக்கும் முறையும் விந்தையதாம். யாதானுமொரு நீர் நிலைக்கு அருகுள்ள ஒரு மரத்தின் கிளையிலிருந்து ஒரு நீண்ட வன்மையுள்ள கயிற்றினை இப் பறவைகள் பின்னி யமைக்கும். போதுமான அளவிற்கு இக்கயிற்றைப் பின்னியமைத்த பின்னர் இப்பறவைகள் அக்கயிற்றைத் தளர்வித்து உட்டுளையுடையதா கச்செய்கின்றன. பின்னர் இறுதியில் சில அங்குலம் நீளமுள்ள ஒரு குழையையும் பின்னிச் சேர்க்கின்றன. இத்தகைய ஒரு கூட்டினுள் பல நெய்தற் பறவைகள் கூடி வாழ்கின்றன. பாம்பு கள் உட்புகாவண்ணமே இப்பறவைகள் தம் கூடுகளை இவ்வாறு அமைக்கின்றன.

இங்கிலாந்தில் [4]நாணல்வாழ் இசைப்பறவை என்றொரு பறவை உண்டு. இது தன் கூட்டினை நாணற்கூட்டத்தில் அமைக்கும். நான்கு அல்லது ஐந்து நாணல் தண்டுகளின் இலைகளைப்பற்றி அத்தண்டுகளைச் சுற்றிப்பின்னி, ஒரு வளைவான ஆழமுள்ள கூட்டை அத்தண்டுகளுக் கிடையில் தரைமட்டத் துக்குச் சற்றே உயர்வாக இப்பறவை மிகவும் திறமையாக அமைக்கும். மிகுந்த வன்மையுடன் காற்று வீசினும் இக் கூட்டினுக்கும் இதனுள் கிடக்கும் முட்டைகளுக்கும் பறவை களுக்கும் ஒருசிறிதும் தீங்கு உண்டாகாது. காற்றினால் நாணல் தண்டுகள் தரைமட்டத்துக்குச் சாய்ந்தாலும், இக்கூடு தரைக்குச் சற்றுமட்டுமே உயர்வாக அமைக்கப்பட்டிருப்ப

1. Humming-birds. 2. Tailor-bird. 3. Weaver-birds. 4. Reed-warbler.

தாலும், வளைவும் ஆழமும் கொண்டிருப்பதாலும், கூட்டினுக் கும் அதனுள் கிடப்பனவற்றிற்கும் யாதொரு தீங்கும் நேர்வ தில்லை.

சில பறவைகள் மண்ணினால் தம் கூடுகளை அமைக் கின்றன. அவைபிற்றுள், [1] செங்நாரை, [2] இல்லக்குருகு முதலி யன சில மிகவும் விடாமுயற்சியுடன் சிறிது சிறிதாக மண்ணைத் தம் வாயால் கவ்விச்சென்று தம் கூடுகளை அமைத்தல் வியக்கத்தக்கதே. தென் அமெரிக்காவிலுள்ள [3] அடுப்புப் பறவை என்னும் ஒரு சிறு பறவையின் விடாமுயற்சி மிகவும் வியத்தற்பாலது. அஃது உருவத்தாற் சிறிதாயினும், மிகப் பெரிய மண் கூட்டினையே அது தன் ஊக்கங் குன்றுமல் அமைத்து முடிக்கின்றது. அக்கூட்டினுள் ஒரு நீண்ட சுனை போன்ற வழியும் ஓர் அகன்ற கூடம்போன்ற உறைவிடமும் உள. ஆங்கிலப்பறவைகளுள், [4]"தூக்கணங்குருவி"யும், இல்லக் குருகும் தம் கூடுகளை மண் ஒன்றினாலேயே அமைக்கின்றன. மண்கூடு கட்டும் பறவைகள் ஒவ்வொரு வாயளவு மண்ணையும் தம் உமிழ் நீரால் பக்குவப்படுத்திப் பயன்படுத்துவதால்தான் கட்டப்பட்ட கூடு உதிர்ந்து விழாமல் கட்டுப்பாட்டுடன் நிற்கின்றது. வெறும் மண்ணைப் பக்குவப்படுத்தாமல் பயன் படுத்தினால் கூடு நல்ல பிணைப்புடன் அமையாது.

மலேயா நாட்டிலுள்ள, தூக்கணங்குருவி யினத்தைச் சார்ந்த [5] விரைவுக்குருகு என்னும் பறவை தன் கூட்டை வெறும் உமிழ் நீராலேயே அமைக்கின்றது. இக்கூடுகளைச் சமைத்துச்செய்த [6] காரச்சாற்றினைச் சீனர்கள் மிகு விருப் பத்துடன் உட்கொள்ளுகின்றனர். இஃதுணர்ந்த வணிகர் சிலர் இக்கூட்டினை வணிகப் பொருளாக மதித்து வாணிகஞ் செய்கின்றனர்.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா என்னும் நாடுகளில் [7] சோலைப்பறவை என்றொரு இனத்தைச்சார்ந்த பறவைகள் வாழ்கின்றன. இப்பறவைகளின் கூடுகள் பல நிற இலைகளையும், மலர்களையும் கொண்டிருத்தலின் இவை சோலைப்பறவைகள் எனப்படுகின்றன. சோலைப் பறவைகளுள் பலவகைகள் உள. ஒருவகைப் பறவை தரையில் கொடிகளையும், வளார்களையும், பல நிற இலைகளையும், பல நிற அரும்புகளையும், மலர்களையும் கொண்டு நன்கு பின்னப்பட்ட கூட்டினை அமைக்கும். இக் கூடு அப்பறவையினத்தின் கணவன் மனைவியருக்கு உரிய

1. Flamingo. 2. House-martin. 3. Oven-bird. 4. Swallow. 5. Swift. 6. Soup. 7. Bower-bird.

ஒரு பள்ளியறை போல்வது. ஊடுதற்கும் கூடுதற்கும் ஏற்ற இட அமைதியும், நறுமணக் காற்றும், கண்கவர் காட்சியும் இக்கூட்டகத்தே மிகுதியும் பெறப்படுகின்றன. பிறிதொரு வகைப்பட்ட சோலைப் பறவை, யாதானுமொரு மரத்தின் கீழ் இரண்டு அல்லது மூன்று அடி உயரமுள்ள ஒரு சிறிய குடிசை போன்ற கூட்டினை அமைத்து, அதற்கெதிரில் சில சதுர அடிகள் பரப்புள்ள ஒரு பூமேடையை அமைக்கின்றது. ஊர்ப் புறங்களில் ஏழைக்குடியானவர்கள் கட்டிக்கொள்ளும் குடிசையைப்போலவே, ஒரு நடுத் தண்டையும் அதிலிருந்து இரு புறமும் சரியும் பல வளைவுகளையும் அமைத்துப் பிணைத்து, இலையாதிய பொருள்களால் கூரையையும் அமைத்து, முப்புறச் சுவரினையும் பாசி முதலியவற்றால் அமைத்து, ஒரு புறம் மட்டும் வாயிலாகக் கிடக்க, இப்பறவை தன் கூட்டினை அமைக்கும் முறை நனிவியப்பினைத் தருவதொன்றும். வீட்டிற்கெதிரில் அமைக்கப்பட்ட பூமேடையில் மலர்களாதல், அரும்புகளாதல், பசுந்தளிர்களாதல் வாடினால் அவைகளை இப்பறவை அவ்வப்போது நீக்கித் தன் கூட்டினுக்குப் புறத்துள்ள ஒரு குவியலிற் சேர்த்துவிட்டுப் புதிய மலர் முதலியவற்றைக் கொணர்ந்து அம்மேடையைப் புதுப்பிக்கும்.

மற்றொரு வகைப்பட்ட சோலைப் பறவையின் கூடு மிகுந்த சித்திர அமைப்பும், அழகும் கொண்டதாக இருக்கின்றது. இப்பறவை ஆஸ்திரேலியாவில் பெரும்பாலும் உண்டு. இதனை அந்நாட்டார் [1] பொற்சோலைப் பறவை என்பர். தம்முள் நான்கு அல்லது ஐந்து அடிகளே இடைவெளியுள்ளதாக வளர்ந்துள்ள இரு மரங்களினிடையே, இப்பொற் சோலைப் பறவை ஏழு அல்லது எட்டு அடிகள் உயரமுள்ள ஒரு சோலையை (கூட்டினை) அமைக்கும். இத்தகைய ஒரு சோலையைக் கட்டி முடித்தற்குச் சில ஆண்டுகள் செல்லும். எனினும் அப்பறவை தளர்வதில்லை. இலை, கொடி, வளார், தளிர் முதலியவற்றால் பின்னப்பட்ட கூட்டினை மேலும் அழகுபடுத்த இப்பறவை பல நிறப்பட்ட பழங்களையும், மலர்களையும் பயன்படுத்துகின்றது. அன்றியும் இப்பெரிய கூடேயன்றிப் பல சிறுசிறு கூடுகளையும் பெரிய கூட்டினைச் சுற்றி இப்பறவை அழகுற அமைக்கின்றது.

---

1. The Golden Bower-bird.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

இந்திமொழி கட்டாயப் பாடமா?

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

இந்திமொழிப் படிப்பை நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் (Lower secondary schools) ஒன்று, இரண்டு, மூன்று பாரங்களில் கற்கும் மாணவ மாணவிகளுக்குக் கட்டாயப் பாடமாக வைத்தல் ஏற்புடைத்தாகுமா?

இந்திமொழியை ஒன்று, இரண்டு, மூன்று பாரங்களிற் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்குக் கட்டாயப் பாடமாக வைக்கக்கூடாது என்பதற்குப் பல காரணங்களுண்டு. அக் காரணங்களுளொன்று மாத்திரம் உளநூலின் (Psychology) தொடர்புபற்றி இங்கே கூறப்படும்.

2. ஒன்று, இரண்டு, மூன்று பார வகுப்புகளிற் கல்வி பயிலு மாணவ மாணவிகள் ஏறக்குறைய பத்து, பதினொன்று, பன்னிரண்டு வயதுடைய பிள்ளைகளாயிருப்பார்கள். அவர்கள் பிறந்தபின் முதற்கண் தாய்மடியிலே வைத்து அம்மா, அப்பா, அய்யா, அக்கா என்றும் தங்கள் கண்ணுக்கு நேரே தோன்றும் பொருள்களுடைய பெயர்களையும் இருத்தல், நடத்தல், பேசுதல், உண்ணுதல், பால்குடித்தல், முதலிய செயல்களின் பெயர்களையும் தங்கள் தாய், தகப்பன், அண்ணன், அக்காள் முதலியவர்கள் கற்பித்துக் கொடுக்க தங்கள் தாய்மொழியிலேயே கல்வி பயின்று வருகிறார்கள். இங்ஙனம் தமிழ்நாட்டுப் பிள்ளைகள் பள்ளிக்கூடக்காலத்துக்கு முன் பயின்றுவருவது தமிழ்மொழி ஒன்றே. ஐந்து ஆண்டுவரையும் அவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியிலேயே தாங்கள் அறியக் கூடிய எளிமையான பொருள்களின் பெயர்களையும், எளிமையான செயல்களின் பெயர்களையும் கற்றுக்கொண்டு வருகிறார்கள். மக்கள் கற்றுக்கொள்கிற கருத்துக்களெல்லாம் பெயர்ச்சொற்களிலேயும், வினைச்சொற்களிலேயும் அடங்கியுள்ளன. ஐந்து அல்லது ஆறு ஆண்டுப்பருவத்தில் அவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்பொழுது அவர்கள் பொதுவாயுள்ள எளிமையான பெயர்ச்சொற் கருத்துக்களையும், வினைச்சொற் கருத்துக்களையு மொருவாறு மேலீடாகவாவது தமிழ்மொழியில் அறிந்தவர்களாயிருக்கிறார்கள்.

3. கல்வி என்பது அதன் வேர்ப்பொருளால் நாம் அறிகிறபடி மக்கள் மனதிலே மறைந்து கிடப்பனவாயுள்ள கருத்துக்களை மெல்லமெல்லப் படிமுறையில் வெளிப்பாடு செய்தலன்றி, வெளியேயுள்ள பொருள்களின் பெயர்களையும், செயல்களின் பெயர்களையும் மனதிலுள்ளே திணித்துப் புகுப்பதன்று. Education என்ற ஆங்கிலச் சொல்லின் வேர்ப்பொருளின் கருத்துமிதுவே. "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறுமறிவு," என்ற திருவள்ளுவ நாயனார் குறட்கருத்து மிதுவே.

4. பிள்ளைகளுடைய மனதில் எங்ஙனம் அறிவு விளங்கிப் புலப்படுகின்றது என்பதுபற்றிக் கருதுவாம். பிள்ளைகள் மனதிலே மறைந்து கிடக்குங் கருத்துக்கள் மெல்ல மெல்லப் புலப்பட்டுத் தோன்றுதற்குப் புறத்திலுள்ள பொருள்களும் செயல்களும் தூண்டுதற் காரணங்களாயிருப்பனவன்றி அப்பொருள்களின் பெயர்களையும், செயல்களின் பெயர்களையும் நெட்டுருப் பண்ணிக் கற்றுக்கொள்ளுதல் கல்வியாகாது. இதனால் பிள்ளைகளுக்கு இயல்பாய் மனதிலடங்கியிருக்கும் அறிவாற்றலைப் படிமுறையில் விளங்கச் செய்தலே கல்வி என்பது பெறப்படுகின்றது. இங்ஙனம் மனதில் விளங்கி அறியப்படும் கருத்துக்களை வெளிப்படுத்தற்கு மொழிச் சொற்களும், அமைப்புகளும் கருவிகளாயிருக்கின்றன. அக்கருத்துக்கள் மொழியைக் கருவியாகக்கொண்டு தூலமாக வெளிப்படுதற்கு மூளையும், வாய், மூக்கு, தொண்டை முதலியனவும் வாயில்களாயுமிருக்கின்றன. ஆகவே பிள்ளைகளிடம் அறிவு விளங்குதற்குக் கருத்துக்கள் ஆதாரமாயும், மொழியானது கருவியாயும் உதவுகின்றன. கருத்துக்கள் மொழிச்சொற்களுடன் முற்றிலுந் தொடர்புடையனவாயும் அதற்கு அப்பாற்பட்டும் எம்மட்டும் பிள்ளைகளுடைய மனதிலழுத்தமாய்ப் பதிந்து விளங்குமோ அம்மட்டும் கல்வி சிறப்புடையதாகும். அவ்வகைக் கல்விதான் பின்வாழ்வில் ஆராய்ச்சி அறிவுக்கருத்துக்களும் இதுவரை தோன்றாத புதுக் கருத்துக்களும் (orignal ideas) மனதிலே தோன்றுதற்கு இடமாயுள்ளது. கருத்துக்களுடன் சிறிதளவு தொடர்புள்ள சொற்களால் வருமறிவு சொல்லளவிலே யுளதாகிய குருட்டுப்பாடப் படிப்பாய் முடியும். அப்படிக் கல்வி பயிலும் பிள்ளைகள் அறிவு விளக்கத்திலுண்மையான தேர்ச்சி அடையமாட்டார்கள். இத்தகைய மொழிக் கல்வியுடையவர்கள் செய்யும் சொற்பொழிவுகளும் ஒலிப்பதிவுக்கருவி (phonograph) களிடமிருந்து வெளிப்படும் சொற்கள் போலாம். கருத்துக் கல்வியாளர்கள் செய்யுஞ் சொற்பொழிவுக் கருத்துக்களோ அவர்கள் மனதிலுள்ளூறைந்து பதிந்து கிடப்பனவாதலின் ஊற்றிலிருந்து நீர்

கிளம்பி வெளியே வந்துகொண்டிருத்தல்போல அவர்களுடைய மனதிலிருந்தும் விரைவாயும், உறுதியாயும் வந்துகொண்டே யிருந்து கேட்பாருள்ளத்தைத் தெளிவுபடுத்தி வயப்படுத்துவனவாயிருக்கும்.

5. இனிப் பள்ளியிற் பயிலும் மாணவ மாணவிகளின் கல்வியானது அவர்களுக்கு நற்பய னளித்தற்கு எம்முறையிற் பயிற்றப்படல் வேண்டும் என்பதுபற்றி நாம் கருதுவாம். முன் கூறப்பட்ட வண்ணம் பள்ளிக்குக் கல்வி பயிலவரும் பிள்ளைகள் தங்கள் தாய்மடியிலும், மனையிலும், மனைக்குப் புறத்திலும் இயல்பு முறையிற் பயின்ற தாய்மொழிக் கல்வியுடன் வருகிறார்கள். அதாவது அவர்க ளியல்பாகப் பயின்ற தாய்மொழிக் கல்வியானது அவர்களுடைய பள்ளிக் கல்விக்கு அடிப்படையா யுதவுகின்றது. அதனால் பள்ளிக் கல்வியானது நற்பயனளித்தற்குப் பள்ளிக்கு வருமுன் பயின்ற தாய்மொழிக் கல்விக்குத் தொடர்ச்சி யுடையதா யிருத்தல் வேண்டும். இங்ஙனம் பள்ளிக் கல்வி தொடர்ச்சி யுடையதா யிருக்காவிட்டால் பிள்ளைகளுடைய மனதில் முன்னே சொல்லப்பட்ட காரணங்களால் அறிவு சிறந்து விளங்கி அறியுமாற்றல் படிமுறையில் வளராது.

6. இனி, பிள்ளைகளுடைய பள்ளிக்கல்வி அவர்கள் முன் இயல்பு முறையில் தாய்மொழியிற் பயின்றுவந்த கல்விக்குத் தொடர்ச்சி யுடையதா யிருத்தல் வேண்டுமென்றால் எந்தனை வயதுவரையும் அது தொடர்புடையதா யிருத்தல் வேண்டும் என்பது பற்றிக் கருதுவாம். பிள்ளைகள் பொதுவாகத் தங்களுடைய ஐந்து அல்லது ஆறுவது வயதில் பள்ளிக் கல்வி பயிலத் தொடங்குகிறார்கள். இங்ஙனம் தொடங்கப்படும் தாய்மொழிக் கல்வியானது தவக்கக் கல்விப் பள்ளியிலுள்ள ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை இடைவிட்டுப் போகாது தொடர்ந்து பயிலப்படுதல் வேண்டும். இந்தக் காலத்தில் ஆங்கில முதலிய பிறமொழிக் கல்வி பயிலுதல் தாய்மொழிக் கல்விக்குத் தடை விளைப்பதாகும். இந்தப் பருவத்தில் பிள்ளைகளுக்கு அறிவு மனத்திறன் (intellectual faculty) ஓரளவில் வளர்ந்து இனிமேலும் பெருகி வளருவதாயுள்ளது. பிள்ளைகளுக்கு அறிவு மனத்திறனை, அவர்கள் தாய்மொழி கருவியைக் கொண்டு வளர்த்தலே எளிது. அறிவுத்திறனைப் படிமுறையில் வளர்த்தற்குத் தாய்மொழியாகிய தமிழ்மொழிக் கல்வியானது போதுமானது. அறிவுத்திறனுடன் ஒழுக்கத்திறனும் (moral faculty) இணைந்து பிள்ளைகளுடைய மனதில் படிமுறையில் வளர்தற்குச் செந்தமிழ்மொழியிலேயே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை முதலிய போதுமான நூல்களுள்ளன. அவற்றைப் பிள்ளைகளுக்கு இந்தக் காலத்தில் பயிற்று

வித்தலே கற்பயனை அளிப்பதாகும். இந்தக் காலம் பிள்ளைகளுக்கு. உடல்வளர்ந்து பலமடையும் பருவம். பிறிதொரு மொழி பயிலுவதற்கு அவர்களுக்கு நேர மிருக்காது. உடற்பயிற்சி போதுமானபடியிருந்தாலொழிய அதனுடன் தொடர்பு பட்ட மனப்பயிற்சி விளங்கிப் பலமடையாது. (Sound mind in a sound body.) பிள்ளைகளுக்கு உடற் பயிற்சியும், அறிவு விளங்கும் மனப்பயிற்சியும் ஒன்றுக்கொன்றுள்ள நேர்மையான நிலை(balanced condition) குறையாமல் படிமுறையில் வளர்ந்து வந்தாலன்றி அறிவுவிளக்கம் நன்முறையி லுண்டாகாது. உடற்பயிற்சி மனப்பயிற்சியைப் பார்க்கிலு மிகுமாயினும், மனப்பயிற்சி உடற்பயிற்சியைப் பார்க்கிலு மிகுமாயினும் பிள்ளைகளுடைய முன்னேற்றத்துக்குக் கேடுண்டாகும். ஆகலின் இந்தப் பருவத்தில் ஆங்கிலமொழியானது பள்ளியிற் பயிலப்பட்டு வருதல் அறிவை வளர்ப்பதாகிய கருத்துக் கல்விக்குத் தடையாகும். அது 14, 15 வயதிற்கு மேல் அவர்கட்குப் பயிற்றப்படல் வேண்டும். பிள்ளைகளிந்தக்காலத்தில் பிறிதொரு மொழியைப் பயிலுவதானல் அவர்கள் தாங்கள் முன்னே தாய்மொழியிலே அறிந்த பெயர்க் கருத்துக்களுக்கும், செயற் கருத்துக்களுக்குமுரிய சொற்களை நெட்டுருப்பண்ணி மனதிலே நிறைப்பதுடன் அம்மொழியி னிலக்கண அமைப்பையும் கற்று வருதல் வேண்டும். இஃது இளைஞர்களுடைய எளிமை மனதுக்கு ஒரு பெரிய சுமையாயிருந்து, இயல்பாய் விளங்கி வளர்ந்து வருகிற அறிவு வளர்ச்சியைத் தடுப்பதுடன் உடல் வலியையுங் குறைப்பதாகும்.

7. இனிப் பிள்ளைகள் ஒன்றுமுதல் மூன்றுவது பாரம் அதாவது 6, 7, 8-வது வகுப்புகளில் கல்விபயிலுங் காலத்தில் இந்திமொழியைக் கட்டாயப் பாடப் படிப்பாக வைக்கலாமா? என்பதுபற்றிக் கருதுவாம். இந்தக்காலத்தில் பிள்ளைகள் 10 முதல் 12 வயதுள்ளவர்களா யிருப்பார்கள். அப்பொழுது பிள்ளைகளுடைய மனது தங்கள் தாய்மொழியன்றிப் பிறிதொன்று இரண்டு மொழிகளைப் பயிலுதற்குத்தக்க உடற்பலமு மனப்பலமு மடைந்துவிட்டதாக நாம் சொல்ல முடியாது. பிள்ளைகளுக்கு அறிவு சரியான அளவில் விளங்கி மனது பலமடைகிறவரை அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு இன்றி அமையாது வேண்டப்படுங் கருவியாகிய தாய்மொழிக் கல்வியன்றிப் பிற மொழிகளையுங் கருவிகளாக வைத்துப் படிக்கும்படி அவர்கள்மேற் சுமத்தல் உடல் வளர்ச்சியோடு அறிவு வளர்ச்சியைத் தடுக்கும் சுமையாகவிருக்கும். நான் மேலே கூறியபடி முதலாவது பாரம் வகுப்புக்கு முந்திய காலத்தில் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியையும் தாய்மொழிக்

கல்வியுடன் சேர்த்துப் படித்தல் அவர்களுடைய அறிவு வளர்ச்சியைத் தடுப்பதாயுள்ளது. தாய்மொழியை முதன் மொழியாக வைத்து இரண்டாவது மொழிக் கல்வியாக ஆங்கில மொழியைப் பிள்ளைகள் படிப்பது அவர்கள் தக்க உடல்வலியுடையவர்களாய் வளர்ந்து அறிவு மொருவாறு பல மடைந்தபிற்பாடு தக்கதாகும். ஆதலின் புதிய கல்வி முறையில் ஆங்கிலமொழியை முதன்மொழியாக வைத்துக் கட்டாயப் பாடமாக வைத்திருத்தலை எடுத்துவிடல் வேண்டும். ஆங்கில மொழியை முதன்மொழியாகவும், தமிழ்மொழியை விருப்பப் பாடமாகவும் ஆங்கிலக் கல்விபயின்று பல்கலைக் கழகத்தேர்வு களிற்றேறிப் பட்டம்பெற்றவர்களும் தமிழ் நாட்டில் தாங்கள் பிழைக்கிறதற்குக் காரணமாயுள்ள தமிழ்மொழியை நன்கு கல் லாதிருத்தலா லதனைப் பிழையற எழுதவும், பேசவும், தெரி யாமல் பேச்சிடையிலும், எழுத்திடையிலும் ஆங்கிலச்சொற்களை வழங்கி வருதலையும் நாம் மன வருத்தத்துடன் காண்கின்றோம். தமிழ்மொழிக் கல்வியை அவர்கள் பெயரளவில் மாத்திரம் கற்றிருப்பதனாலன்றோ பெரும்பாலார் நாட்டுப்பற்றும் பொது நலக் கருத்துமில்லாதவர்களா யிருக்கிறார்கள். இந்தப் பரு வத்தில் தாய்மொழியாகிய தமிழ்மொழியுடனும் ஆங்கில மொழியுடனும் தமிழ் மக்களுக்கு அயல்மொழியாகிய இந்தி மொழியைக் கட்டாயப் பாடப் படிப்பாக வைத்தல் நான் மேலே கூறியவண்ணம் அவர்கள் அறிவு வளர்ச்சிக்குத் தடையா யிருத்தலுடன் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தாய்மொழிப் பற்றுக்கும் இடையூறா யிருக்கும். உடல் வளர்ச்சியும், உடல் வலியும் தக்கபடி அடையாத இந்தப் பருவத்துப் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியுடன் இன்னும் இரண்டுமொழிக் கல்விப்பாடங்களையும் படிப்பதற்கு நேர மிருக்குமா? நேரமில்லையானு லிருக்கிற நேரத்தைத் தானே மூன்றுமொழிக் கல்விப் பாடங்களுக்கும் பங்காக வைத்து அவர்கள் படிக்கவேண்டும்? மிக்க வருத்தத்துடன் மூன்று மொழிப் பாடங்களையும் அவர்கள் படிப்பார்களானல் அவர் களுக்கு உடல்வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் குன்றாமலிருக் குமா? போதுமான நேரமில்லாதபொழுது கட்டாயப் பாடப்படிப்பாக வைத்திருக்கிற இந்திமொழிப் பாடங்களை அவர்கள் படிப்பார்களா? விருப்பப் பாடமாயுள்ள தமிழ் மொழிப் பாடங்களைப் படிப்பார்களா? தமிழ்மொழிக் கல்விக் கட்டாயப் பாடமாக பிள்ளைகளுக்கு வைக்கப்படவில்லையானல் அவர்கள் 4-வது பாரத்துக்கு மேலுள்ள வகுப்புகளில் தமிழ் மொழிக் கல்வியைப் படிப்பார்களா? கட்டாயப் பாடமாக வைக்கப்படும் இந்திமொழியை இப்பொழுதிருக்கிறபடி ஆங்

கில மொழிக்கு இரண்டாவது மொழிப் படிப்பாக வைத்து அவர்கள் படிப்பதற்கு என்ன தடை யிருக்கிறது? தமிழ் மொழிக் கல்விக் குறைவினல் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் நாட்டுப்பற்றும், பொதுமக்கள் நலக் கருத்துமில்லாமலிருத்தலை நாம் அநுபவத்திலுள்ளபடி அறிந்திருந்தும் அத் தமிழ்மொழிக் கல்விக் குறைவுக்கு மறுபடியும் வழி தேடுதல் அறிவுடைமை யாகுமா ? இந்திமொழியை இந்தியப் பொதுமொழியாக்கும் தீவிர ஆத்திரத்துடன் அரசியலார் மேலே கூறப்பட்ட காரணங்களொன்றையும் பின்விளைவுகளையும் கருதாமலும், கல்வி முறை வல்லுநருடைய அபிப்பிராயத்தைத் தழுவாமலும் ஒன்று முதல் மூன்று பாரம் வரையுள்ள பள்ளிப் பிள்ளைகளுக்கு அதனைக் கட்டாயப் பாடமாக வைத்தல் தமிழ்மக்களைத் தழுவிச் செய்யும் அரசியல் முறையாகுமா? ஆதலின் தமிழ் நாட்டில் தாய் மொழியாகிய தமிழ் மொழியையே கட்டாயப் பாடமாக இன்னம் வைக்கப்படாம லிருக்கும்பொழுது இந்தி மொழியைக் கட்டாயப் பாடப்படிப்பாக அரசியலார் அமைப்பது பிள்ளைகளுடைய அறிவு வளர்ச்சிக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும், நாட்டு நலத்துக்கும் பொருந்தாத முறையாகும்.

8. இந்திமொழியை ஒன்று முதல் மூன்று பாரம் வரை கல்விபயிலும் பிள்ளைகளுக்குப் பள்ளியில் கட்டாயப் பாடப் படிப்பாக வைப்பது பிள்ளைகளுக்குப் பெருஞ்சுமையா யிருத்தல் பற்றித் தக்க கல்விமுறையாகாதென்று இலண்டன் கல்விக் கழகம் கல்விமுறை வல்லுநர் (உட் Wood) துரை அவர்களும் கூறுகின்றார்கள்.* ஆங்கிலக் கல்விமுதன் மொழியாகக் கற்றுக் கொடுக்கப்படும் இங்கிலாந்திலுங்கூட பள்ளிப் பிள்ளைகளுக்கு அவர்களுடைய பள்ளிப்படிப்பு முடிவிலுள்ள நான்கு ஆண்டு களிலேதான் இலத்தின், கிரீக்கு, பிரஞ்சு மொழிகள் கற்றுக் கொடுக்கப் படுகின்றன என்றும், அங்ஙனங் கற்றுக்கொடுக்கப் படுகிற இலத்தின், கிரீக் மொழிக்கல்வியும் சிறிய அளவினதென் றும், பிரஞ்சு மொழிக் கல்வி ஒன்றுமில்லையென்று சொல்லத் தக்கவாறு பெயரளவில் மாத்திரமிருந்து வருவதாகவு மவர் கூறுகின்றார். கல்விமுறை வல்லுநர் உட் (Wood) துரை அவர்கள் அபிப்பிராயப்படி இந்திமொழியை ஒன்று முதல் மூன்று பாரம் வரை படிக்கிற பள்ளிப் பிள்ளைகளுக்குக் கட்டாயப் பாடப் படிப்பாக வைத்தல் அவர்கள் அறிவு விளக்கத்துக்கு ஏற்றமுறை அல்ல என்பது தெளிவு.

---

* Vide, the Editor's leader in the Hindu of 18th August, 1937,

வேண்டாம் இந்தி; தமிழ் வாழ்க!

[திரு. ஆ. அருள்தங்கையா அவர்கள் B. A.]

தமிழ்மக்கள் தெருவெல்லாம் இம்முழக்கஞ் செய்வார்களாக. நந் தாய்மொழிக்கு இதுகாறும் பலவித இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. அவை யாவற்றையும் வென்று தமிழன்னை என்றுங் கன்னியெனத் திகழ்ந்து வருகின்றாள். இறைவன் அருட்டிறமும், தமிழ்மொழிக்கு இயல்பாக உள்ள ஆற்றலும், தமிழ்மக்களின் தாய்மொழிப்பற்றும் தமிழ்மொழி அழியாத வாறு இன்றுவரை காத்தன. இன்று மிக வலிமை வாய்ந்த இடுக்கண் தமிழுக்கு ஏற்பட்டுள்ளது. அஃது விடுதலை, நாட்டுப்பற்று என்னும் போர்வை தாங்கி நமது மொழியை விழுங்கப் பார்க்கின்றது. நாம் முடியிழந்து வாழலாம், கொடியிழந்து வாழலாம்; கண்ணிழந்து வாழலாம்; காலிழந்து வாழலாம்; பொன்னிழந்து வாழலாம்; பொருளிழந்து வாழலாம்; நாடிழந்து வாழலாம்; வீடிழந்து வாழலாம்; மற்றெல்லாம் இழந்து வாழினும் நந் தாய்மொழியை இழந்து வாழ முடியுமோ? வேறுமொழி வரின் இறந்து போவோம் என்று கேட்பார் உளரோ? நாய் வாழ்வதும் வாழ்க்கையே யன்றோ? அத்தகைய வாழ்க்கை நமக்கு வேண்டாம். வாழ்ந்தால் மக்களாவன்றோ வாழ்தல் வேண்டும்! இன்று தமிழர் தமிழ் மக்களாக வாழக் கருதினால் இந்தியை எதிர்த்தே தீரல் வேண்டும்.

இந்தியை அரசியல் மொழியாக்க வேண்டுமென்பதே 'இந்தியன்பர்' கருத்து. மாகாண சட்டப் பேரவையினும் அம்மொழியில் பேச்சு நிகழ்தல் வேண்டுமென்பதுவே அவர்களது உள்ளக்கிடக்கை. அரசியல் பதிவுகளும், நீதிமன்ற நிகழ்ச்சிகளும் இந்தியிலே நடைபெறுதல் வேண்டுமென்பதுவே அவர்களது கொள்கை. ஆதலின் இன்று தமிழர் இணங்குவரேல், இந்திப் படிப்பே அரசியல் அலுவலுக்குரிய கல்வியாகும். அரசியல் மொழியல்லாத எம்மொழியும் நெடுங்காலம் வாழாதொழியும். ஆங்கிலம் அரசியல் மொழியாயிருத்தலால் தமிழ்க் கல்வி உற்றுள்ள நிலை நமக்குத் தெரியும். இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தமிழ் இன்னும் ஒதுக்கப்படுமாயின் அழிவுற நேரும்.

சென்னை மாகாணம் மிகப் பெரிய மாகாணம். இம்மாகாணத்திலுள்ள மக்களுள் நூற்றுக்கு நாற்பது மக்களுக்கு மேற்பட்டார் தமிழைத் தாய்மொழியாகக்கொண்டுள்ளோரே. மிக விரைவில் தமிழ்நாடு தனி மாகாணமாகப் பிரிக்கப்பட

வேண்டும். அதற்குத் தமிழ்மக்கள் ஆங்காங்குக் கிளர்ச்சி செய்வார்களாக. தமிழ் தன்னிலையடைவதற்கும், வளர்ச்சியுறுவதற்கும் முதன்முதல் செய்யப்படவேண்டுவது அதுவே. நூற்றுக்கு முப்பத்தெழுவரே தெலுங்கு பேசுபவர்கள். அவர்கள் தனி மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றனர். கன்னடம் பேசுவோர் நூற்றுக்கு மூன்றரை மக்களே. அவர்களும் தனி மாகாணப்பேச்சு பேசத்தொடங்கி விட்டனர்.

தமிழர்களே விழித்தெழுங்கள் !

இனியாதல் தமிழ் மக்கள் செய்யவேண்டுவன செய்தற்கு எழுதல் வேண்டும். தமிழர் வாழவேண்டுமாயின்—தமிழ்மொழி வளர வேண்டுமாயின்—தமிழ்நாடு சிறப்பெய்தவேண்டுமாயின்—தமிழ்மொழியின் தனிப் பெருமையை உலகறிய வேண்டுமாயின் இன்று தமிழ்மக்கள் பெருங்கிளர்ச்சி செய்தேதீரல் வேண்டும். உலகில் எந்நாட்டிலும் 'சங்கம்' என்னுங் கருத்தே மக்கள் உள்ளத்தில் தோன்றுமுன் கலைவளர்ச்சியும், மொழிவளர்ச்சியுங் கருதிச் சங்கங் கண்ட பெருமக்கள் நமது முன்னோரே யன்றோ! தமிழ்நாடு முழுவதும் ஊர்கள் தோறும் தமிழர் பெருங்கழகங்கள் தோற்றுவித்தல் பழந் தமிழர் வழித்தோன்றிய தமிழ் மக்கள் செயற்கரிய செயலன்று. இக்காலத்தில் ஒழுங்கு நெறிக்குட்பட்ட கிளர்ச்சியே ஆற்றல் வாய்ந்ததாக விளங்கும். எனவே, ஒவ்வொரு ஊரிலும் தமிழர் பெருங்கழகம் உடனே நிறுவப்படுதல் வேண்டும். ஒவ்வொரு 'தாலுகாவிலும்' அத்தாலுகாவுக்கு உரியதோர் பொதுக்கழகமும், கழக-நிலையமும் இருத்தல் வேண்டும். ஜில்லாத் தலைநகரில் 'ஜில்லாப்' பொதுக் கழக நிலையம் இருந்து செயலாற்றுதல் வேண்டும். ஜில்லாக் கழகங்களெல்லாம் நாட்டுப்பொதுக் கழகத்தோடு இணைக்கப்பெறுதல் வேண்டும். இன்று தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வினையாற்றிலன்றி தமிழ்மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும், இந்திப் படையெடுப்பையும் எதிர்த்து வெற்றிபெற முடியாது.

தமிழர் பெருங் கழகத்தின் நோக்கங்கள்.

1. தமிழ் நாட்டில் தமிழே அரசியல் மொழியாக்கப்படுமாறு முயலுதல்.—அவ்வாறு ஆகவேண்டுமாயின் தமிழ்நாடு தனி மாகாணமாகப் பிரிக்கப்படல் வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்டால் நீதிமன்றநிகழ்ச்சிகள், அரசியல் பதிவுகள், சட்டப் பேரவைப் பேச்சுகள்யாவும் தமிழில் நடைபெறும்.

2. தமிழ் எல்லாப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயப் பாடமாக்கப்படுதல். மாணவர் சிறந்த தமிழறிவு பெறும்

முறையில் தமிழ்ப் பாட அட்டவணை அமைக்கப்படுதல் வேண்டும். ஆங்கிலம் இரண்டாவது, மூன்ருவது வகுப்புகளிலேயே கற்பிக்கப்படுதல் தாய்மொழிக் கல்விக்குக் கேடுவிளைப்பதாகும். ஆங்கிலமொழி உலகப் பொதுமொழியாயிருத்தலால் முதலாம் பாரம் முதல் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்படலாம்.

3. தமிழ் வழி மிகமிக உயர்ந்த வகுப்பு முடியக் கலைப் பயிற்சி நிகழ்தல்.—இது எல்லா நாடுகளிலும் நடைபெறுவதே யாகும். தாய்மொழிகளே கலைப்பயிற்சிக்குரிய மொழிகளாகக் கொள்ளப்படுதலால் பிறநாடுகளில், மாணவர் அறிவு விரைவில் வளர்கின்றது. ஆராய்ச்சிப்புலன் நுண்மை பெறுகின்றது, தாய்மொழிகளும் சிறப்பெய்துகின்றன.

4. தமிழ் மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தமிழையே வழங்குதல்.—நமது பேச்சையும், எழுத்தையும் செந்தமிழிலேயே ஆற்றல்வேண்டும். வீட்டிலும் வெளியிலும் கூட்டங்களிலும் தமிழே பேசுதல் வேண்டும்.

5. தமிழ்மக்களுக்கும் தமிழ்மொழிக்கும் ஏற்படும் இடையூறுகளைப் போக்க முயலுதல். இடையூறுகள் ஏற்படுங்கால் தமிழர் பெருங்கழகங்கள் கூட்டி, அவற்றைப் போக்கும் முறைகளை ஆராய்ந்து முடிவு செய்து, செயல் நிகழ்த்தல் வேண்டும். இன்று இந்திப் படையெடுப்பே முதன்மையான இடையூருக இருத்தலால் அதனை யொழித்தல் நமது முதற் பெருங்கடமை யாகும்.

இந்நோக்கங்கள் அமையப்பெற்ற கழகங்கள் நாடெங்கும் தோன்றுமாறு தமிழ்ப்புலவரும், தமிழ் மக்கள் யாவரும் முயல்வார்களாக. இவற்றைப்பற்றிய செய்திகளை வெளியிடுவதற்குத் தமிழ் மக்களுக்கு ஓர் செய்தித்தாள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்செய்திகளும் வெளியிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு 'இல்லாவி'லும் கிளர்ச்சிக் குழூஉக்கள் தோன்றி, ஊர்கள் தோறும் சென்று கிளர்ச்சி செய்து கழகங்கள் நிறுவுதல் வேண்டும். ஊர்வலங்களும், கூட்டங்களும் நாள்தோறும் நூற்றுக்கணக்காக நடைபெறுதல் வேண்டும். 'வேண்டாம் இந்தி, வாழ்க தமிழ்மொழி!' என்னும் முழக்கம் எங்கும் பரவுக! தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!

வரலாற்றுப் பகுதி: History & Biography

லூதர் பர்பாங்க் (Luther Burbank)

[திரு. குழந்தைவேலன் அவர்கள் B. A.]

லூதர் பர்பாங்க் என்னும் பெரியார் இயற்கை என்னும் அழகுக்கே அழகு செய்தவர். இயற்கையில் காணப்படும் பழங்கள், மலர்கள், காய்கறிகள் ஆகியவற்றின் தோற்றம், நிறம், மணம், சுவை முதலியவற்றைக் கூட்டியும் திருத்தியும் சீர்படுத்தியவர். உலகிற் காணப்படாத பல புதிய செடி, கொடி, மரம் முதலியவற்றை உண்டுபண்ணியவர். இவ்வறிஞர் அமெரிக்க நாட்டில் லங்காஸ்ட்டர் என்னும் நகரத்தில் 1849-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஏழாம் நாள் பிறந்தார். இவர் இளமையிலேயே இயற்கைப் பொருள்களிடம் மிக்க ஆர்வம் உடையவராக இருந்தார். இவர் சிறு பிள்ளையாக இருக்கும்பொழுது அழத் தொடங்கினால் இவர்தம் அன்னையார் இவருக்கு மலர்களைப் பறித்துக் கொடுப்பார். உடனே இவரது அழுகை நின்றுவிடும். ஒருமுறை இவர் கையில் வைத்திருந்த அழகிய மலரிலிருந்து ஓர் இதழ் உதிர்ந்து போயிற்று. பர்பாங்க் அதனை எடுத்து முன்போல் ஒட்ட வைக்கப் பன்முறை முயன்றும் இவரது எண்ணம் நிறைவேறாது போகவே நெடுநேரம் அழுதார். இவருக்கு மூன்று ஆண்டுகள் நிரம்புவதன்முன் ஒரு தொட்டியில் சிறிய செடி ஒன்றை வளர்த்து வந்தார். அதனை இவர் எங்குச் சென்றாலும் கையிலேயே எடுத்துச் செல்வது வழக்கம்.

இவருக்கு உடன் பிறந்தோர் பதினன்குபேர் இருந்தனர். இவர் முதன் முதலில் ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்று வந்தார். இயற்கைப் பொருட்பாடங்களில் இவருக்கு இருந்த ஊக்கத்தைக் கண்டு ஆசிரியர்கள் வியப்பெய்தினர். இதற்குப் பின் பர்பாங்க் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்றுவந்தார். இவர் தமது ஓய்வு நேரங்களில் தம் ஊரிலிருந்த பெரிய நூல்நிலயத்திற்குச் சென்று பல நூல்களையும் படித்துவந்தார். இவரது பெற்றோர்கள் இவரை ஒரு பொறிச்சாலையில் வேலைக்கு அமர்த்தினர். ஆயினும் செடி கொடி முதலிய இயற்கைப் பொருள்களை ஆராய்வதிலேயே இவரது மனம் விழைந்து நின்றது. இவர் தமது விடுமுறை நாட்களில் அருகிலுள்ள தோட்டத்திற்குச் சென்று பயிர்தொழில்

செய்துவந்தார். இவர் நுட்பமாக ஆராய்ந்து தொழிற்சாலையின் கருவிகளைச் சிறந்தமுறையில் மாற்றி அமைத்தார். இதுவுமன்றி ஐந்தாறு தொழிலாளர்களின் வேலையை விரைவிற் செய்து முடிக்கவல்ல பொறி ஒன்றைத் தாமாகவே கண்டு பிடித்தார். இதனைக்கண்ட முதலாளிகள் பர்பாங்கின் சம்பளத்தை உயர்த்தினர்.

ஆயினும் பர்பாங்கிற்குத் தொழிற்சாலையில் வேலை பார்ப்பதைக் காட்டிலும் தோட்டவேலையே சிறந்ததெனத் தோன்றிற்று. இரும்பினால் பொறிகளை அமைப்பதைக் காட்டிலும் எவரும் கண்டிராத புதிய மலர்களையும் பழங்களையும் கண்டு பிடிக்க வேண்டுமென்பதே இவரது சிறந்த நோக்கமாக இருந்தது. இதையறிந்த பெற்றோர்கள் முதலில் சிறிது மனம் நொந்தபோதிலும் பின்னர் பர்பாங்கின் விருப்பப்படியே தோட்டவேலைக்கு அனுப்பினர். பர்பாங்க் தமது இருபதாம் ஆண்டிலிருந்து தொழிற்சாலையை விட்டு அகன்று காய்கறிகளைப் பயிரிட்டு விற்பனை செய்துவந்தார். இவர் ஒரு புதிய வகையான உருளைக்கிழங்கைப் பயிரிட்டு அதனை மிகவும் செழிப்பாய் வளரும்படி செய்தார். இவர் உருளைக்கிழங்குச் செடியின் பூவிலுள்ள தாதை எடுத்து மற்றொருவகைச் செடியின் மலரில் செலுத்தி அதனால் உண்டாகும் விதைகளைப் பயிரிட்டுவந்தார். இஃது எளிதன்று. இங்ஙனம் விதைத்துப் பயிரிடுவதால் உண்டாகும் உருளைக்கிழங்கு முதலில் பட்டாணிக்கடலையளவே இருக்கும். இக் கிழங்கைப் பெரிதாகவளர்ப்பதற்குக் குறைந்தது மூன்று ஆண்டுகள் செல்லும். இவ்வாறு பயிர்செய்த உருளைக்கிழங்கு மிகவும் பெரியதாகவும், வெண்மையாகவும் சுவையுள்ளதாகவும் இருந்தது. அதனால் இக் கிழங்கையே மக்கள் பெரிதும் விரும்பி வாங்கிவந்தனர். இதற்கு "பர்பாங்க் உருளைக்கிழங்கு" என்னும் பெயர் உண்டாயிற்று. இக் கிழங்கை நடுவதால் உருளைக்கிழங்கு ஏராளமாகப் பயிராயிற்று. இப் புதிய உருளைக்கிழங்கு பயிரிடும் உரிமையை பர்பாங்க் மற்றொரு தோட்டக்காரருக்கு நூற்றைம்பது டாலருக்கு விற்றுவிட்டார். அமெரிக்க நாட்டில் இக் கிழங்கின் விற்பனையால் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி டாலர்கள் வருவாய் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

இவர் புதிய பழங்களையும் செடிகளையும் உண்டுபண்ணு வதிலேயே தமது கருத்தைச் செலுத்திவந்ததால் வருமானமுள்ள எளிய தொழில்முறைகளைக் கைவிட நேர்ந்தது. இதனால் நாளடைவில் இவர் கையிலிருந்த பொருளையும் இழந்து

மிகுந்த வறுமை நிலையை அடைந்தார். லங்காஸ்ட்டர்(Lancaster) நகரில் வெப்பம் கடுமையாக இருந்ததால் அதனைத் தாங்கமாட்டாது 1875-ஆம் ஆண்டில் இவர் கடற்கரையை அடுத்த காலிஃபோர்னியா (California) என்னும் இடத்திற்குச் சென்றார். அங்குச் செல்லும்பொழுது இவர் கையில் பத்து டாலர்களே இருந்தன. இவர் சான்ஃபிரான்ஸிஸ்கோ (San Francisco) என்னுமிடத்திலிருந்து 50 கல் தொலைவிலுள்ள ஒரு பள்ளத்தாக்கை அடைந்து ஏதேனும் வேலை கிடைக்குமென்று தேடி அலைந்தார். இவர் கையிலிருந்த சொற்பத் தொகையும் செலவழிந்து போயிற்று. இக்காலத்தில் பர்பாங்க் வறுமையால் மிகவும் வருந்தினர். இவர் கூலிவேலை செய்து வயிறு வளர்க்க வேண்டியதாயிற்று. ஒரு முறை இவர் நோய்வாய்ப்பட்டுக் குடிக்கவும் கஞ்சியின்றி இறக்குந்தருவாயிற் கிடந்தார் எனக் கூறப்படுகின்றது.

இங்ஙனம் இவர் பல ஆண்டுகளாய்த் துன்பப்பட்டு முடிவில் தாம் கூலிவேலையில் மீத்து வைத்த ஒரு சிறு தொகையைக் கொண்டு சாந்தரோஸா (Santa Rosa) என்னுமிடத்தில் ஒரு நிலப் பகுதியை விலைக்கு வாங்கிப் பயிர்த் தொழில் செய்து வந்தார். பர்பாங்கின் உடல்நலம் குன்றியதுடன் கையிலும் பொருளில்லாது மிகவும் துன்பப்பட்டார். ஆயினும் இவர் ஊக்கத்தைக் கைவிடாது உழைத்து வந்தார். இவர் தமது அரிய ஆராய்ச்சியினால் காய்க்காமல் இருக்கும் மரங்களையெல்லாம் வளம்பெறக் காய்க்கும்படி செய்தார். இவர் பயன் குறைந்து வரும் செடியினங்களைத் தாம் கண்டு பிடித்த ஒட்டு முறையினால் பயன்பெறச் செய்தார். பர்பாங்க் தமது புதிய முறையினால் செடிகளையும் மரங்களையும் விரைவாக வளரும்படி செய்தார். இவரது திறமை ஊரெங்கும் பரவலாயிற்று. இதற்குப் பின் பர்பாங்கின் தொழில் மிகவும் செழிப்பாக நடைபெற்று வந்தது.

1893-ஆம் ஆண்டில் இவர் செபாஸ்டபோல் (Sebastapol) என்னுமிடத்தில் ஓர் ஆராய்வுப் புலத்தை அமைத்தார். ஆங்கு நுட்பமாக ஆராய்ந்து இவர் பலதிறப்பட்ட புதிய பொருள்களைக் கண்டு பிடித்தார். இயற்கையில் தோன்றும் மலர்கள், இலைகள் முதலியவற்றில் பல்வேறு மாறுதல்கள் செய்து காட்டினர். 1899-ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டு அறிவியற் கழகத்தினர் சான்பிரான்ஸிஸ்கோவில் கூடியபோது கழக உறுப்பினர் பலர் பர்பாங்கின் தோட்டங்களைச் சுற்றிப் பார்த்தனர். பர்பாங்க் உண்டுபண்ணிய புதுமைகளைக் கண்டு இறும்பூது எய்தினர். பர்பாங்கின் செடிகளைப் படம் பிடித்து

அவற்றைப் பல செய்தித்தாள்களில் இக்கழகத்தினர் வெளியிட்டனர். பர்பாங்கின் புகழ் உலகமெங்கணும் பரவியது. கார்னிஜி (Cornegie) அறநிலையத்தினர் இவரது ஆராய்ச்சி செவ்வனே நடைபெறும் வண்ணம் ஆண்டு ஒன்றுக்கு 10,000 டாலர்கள் விதம் 10 ஆண்டுகளுக்குப் பொருளுதவி செய்ய முன்வந்தனர். இதனால் பர்பாங்கின் வேலை எத்தகைய இடையூறுமின்றி நன்கு நடைபெற்று வந்தது.

பர்பாங்கின் ஆராய்ச்சி முறைகளையும் அதனால் மக்களுக்கு விளைந்த பெரு நன்மைகளையும் அளவிட்டுக்கூற முடியாது. இதற்கு முன் எவரும் கண்டறியாத இரண்டாயிரம் வகையான புதிய பழங்களையும், மலர்களையும், காய்கறிகளையும் இவர் உண்டாக்கினர். இவற்றை எங்ஙனம் செய்திருக்கக்கூடும்? இவர் கையாண்ட முறை மிகவும் எளிது. ஆயினும் இவர்தம் அறிவும், ஆற்றலும், பொறுமையுமே இவருக்கு உறுதுணையாக இருந்தன. ஒட்டகத்தின் மயிரினல் ஒரு மரத்தின் பூந்தாதை எடுத்து மற்றொரு மரத்தின் மலர்க்கருவிற் செலுத்தி அதனால் உண்டாகும் விதையினால் புதிய செடிவகைகளை இவர் உண்டாக்கினர். இரண்டு வகைச் செடிகளை ஒன்று சேர்ப்பதால் புதியவகைச் செடி ஒன்று தோன்றும். இஃது அவ் இரண்டு செடிகளில் ஏதாவது ஒன்றைப்போல் இருக்கும். அல்லது இதுவரை எவரும் கண்டிராத புதிய வகையாக இருப்பினும் இருக்கும். இவற்றை பர்பாங்க் கூர்மையாக ஆராய்ந்து பயனளிக்கக்கூடிய ஒன்றிரண்டு வகைகளை மட்டும் தேர்ந்தெடுத்து மிகச்சிறந்த முறையில் வளர்த்து வந்தார். நூற்றுக்கு ஒன்றாய்த் தேர்ந்தெடுத்த செடியை வேறொரு வகைச் செடியுடன் ஒட்டவைத்து அதனால் உண்டாகும் புதிய வகைச் செடியினையும் இவர் ஆராய்ச்சி செய்தார். இங்ஙனம் இடைவிடாது மீண்டும் மீண்டும் ஆராய்ச்சி செய்த பின்னரே இவர் நினைத்ததைச் செய்துமுடிப்பார்.

பர்பாங்கின் ஆற்றலும் பொறையும் வியக்கற் பாலனவாக இருக்கின்றன. இவர் ஒரு செடியின் வளர்ச்சியைப் பற்றி ஆராயத் தொடங்கினல் குறைந்தது 2000 அல்லது 3000 செடிகளைப் பயிர் செய்ய ஆராய்ச்சி செய்வது வழக்கம். இச் செடிகள் இவர் எண்ணிய அளவிற்குப் பயன் தராவிடில் அவற்றை உடனே தீக்கிரையாக்கிவிடுவார். இவர் ஆயிரக்கணக்கான செடிகளைப் பயிரிடுவதையும் மீண்டும் அவற்றைத் தீயினல் கொளுத்தி விடுவதையும் கண்ட ஊரார் இவருக்கு மூளை கலங்கி விட்டதென எண்ணினர். பயனற்ற செடிகளை இவர் ஒரு கணமேனும் வைத்திருக்கவே மாட்டார். இவர்

பல திங்கள்களும் ஆண்டுகளும் வருந்தி உழைத்த பின்னரும் இவரது எண்ணம் ஈடேருது போய்விடுவதுண்டு. இவர் ஒன்பது இலட்சம் பேரிக்காய்ச் செடிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து அவை தகுதியற்றனவாகத் தோன்றியதால் அவை யனைத்தையும் ஒரே சமயத்தில் கொளுத்தி விட்டார்.

இவர் (Shasta Daisy) சாஸ்தா டெய்ஸி என்னும் மலரைப் பெரிதாயும் அழகாயும் ஆக்குவதற்கு ஒரே மரத்தின் கிளைகளில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பல்வேறு கிளைகளை ஒட்ட வைத்து ஆராய்ச்சி செய்ததாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க நாட்டுச் செடியையும் ஆங்கிலேய நாட்டுச் செடியையும் ஒன்றுபடுத்தி அதனுல் விளைந்த கலப்புச் செடியை மீண்டும் ஜப்பானியச் செடியுடன் சேர்ப்பதனுல் இவ் அரிய மலர் தோன்றியது. இங்ஙனம் புதிதாய் உண்டாகும் மலர் ஆறு அல்லது ஏழு அங்குலம் குறுக்களவுடையதா இருக்கின்றது. பர்பாங்க் பாப்பி (Poppy) என்னும் மலரின் பல்வேறுவகைகளை ஒன்ருய்த் திரட்டி ஒரு புதுவகையான மலரை உண்டாக்கினுர். இது பத்து அங்குலம் குறுக்களவு உடையதாகவும், அழகுள்ளதாயும் விளங்கிற்று.

செடி கொடிகளை ஆடு மாடுகள் தின்று விடாமலும் சேதப் படுத்தாமலும் இருத்தற்பொருட்டே அவற்றில் முட்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. முள் நிறைந்த செடிகளைத் தோட்டத்திற்குள் வைத்துச் சுற்றிலும் வேலியிட்டு அவற்றிற்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் பாதுகாத்து வந்தால் அம்முட்கள் பயனற்றனவாகப் போய் விடுமென்றும், இங்ஙனம் பாதுகாக்கப்பட்ட செடிகளைச் சிர்திருத்தம் செய்து முள்ளற்றனவாக ஆக்கி விடலாமென்றும் பர்பாங்கிற்குத் தோன்றிற்று. முட்செடிகளின் முட்களைப் போக்குவதால் அவற்றின் பழங்கள் பருமனுகவும் மிகுந்த மணமும் சுவையும் உள்ளனவாயும் ஆகின்றன. பர்பாங்க் நெடுநாட்களாய் ஆராய்ச்சி செய்து நாகதாளியின் முள்ளை அகற்றி அதன் இலைகளையும் பழங்களையும் சுவையுள்ளனவாக மாற்றியமைத்தார். முள்ளற்ற நாகதாளியின் பழங்கள் அன்னுசிப் பழத்திற்கு ஒப்பாய் இருக்கின்றன. பர்பாங்க் இம்முறையினுலேயே ரோஜாச் செடியின் முட்களையும் அகற்றினுர்

இவர் அமெரிக்க நாட்டுப் பழங்களையும் ஜப்பான் தேயத்துப் பழங்களையும் ஒன்று சேர்த்து (Plumcot) பிளம்காட் என்னும் ஒரு புதிய வகைப் பழத்தை உண்டுபண்ணினுர். இது நல்ல மணமும் மிகுந்த சுவையும் உடையதாக இருந்தது இப் பழம் இதற்கு முன் இருந்த பழங்களைப்போல் நான்கு மடங்கு

பெரிதாக இருந்ததுமன்றிப் பல நாட்கள்வரை கெட்டுப்போகா மலும் அழுகிப் போகாமலும் இருந்தது. பர்பாங்க் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து இப்பழத்தைக் கொட்டையில்லாத தாக மாற்றி அமைத்தார். அதனால் இப்பழத்திற்கு இன்னும் மிகுதியான சுவை ஏற்பட்டது. இப்பழ வகையைத் திருத்தி அமைத்ததன்பின் இதன் விற்பனை பெருகத் தொடங்கிற்று. இதைப் பயிரிடும் முறையை பர்பாங்க் தமக்கே உரிமையாக்கிக் கொண்டிருந்தால் இவருக்கு அஃது ஒன்றினால் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் டாலர்கள் கிடைத்திருக்கும்.

செடி வளர்ப்பில் பர்பாங்க் இன்னும் எத்தனையோ விந்தைகளை நிகழ்த்தியுள்ளார். இவர் தாம் கண்டுபிடித்த ஒட்டு முறையினால் இரண்டரை ஆண்டுகளில் வளரும் வாதுமை நாற்றுகளை ஒன்பது திங்கள்களில் வளரும்படி செய்தார். இவர் வால்நட் (Walnut) என்னும் மரத்தையும் மிக விரைவாக வளரும்படி செய்தார். இஃது ஏனைய மரங்களைப்போல் ஆறு மடங்கு உயரமுள்ளதாக இருந்தது. இவர் மற்றொருவகை மரத்தை மூன்று அடி உயரத்திலேயே பயன்தரும்படி செய் தார். வால்நட் என்னும் மரத்தின் கொட்டை மிகவும் மெல் லிய தோல் உடையதாக இருந்தது. இதனால் பறவைகள் அவற்றைக் கொத்திச் சேதப்படுத்தின. பர்பாங்க் இதனைக் கூர்மையாக ஆராய்ந்து அக்கொட்டையின்மேல் உறுதியான ஒடு உண்டாகும்படி செய்தார். இவர் டாலியா (Dhalia) என் னும் பூவின் அருவருக்கத்தக்க நாற்றத்தை அகற்றி அதற்கு நல்ல மணத்தை ஊட்டினார். ஈர வெங்காயத்தை அறுக்கும் பொழுது அதன் எரியும் தன்மையால் நம் கண்களில் நீர் பெருகுகின்றது. இதனைப் போக்குவதற்கு பர்பாங்க் ஐந்து ஆண்டுகளாக முயற்சிசெய்து முடிவில் மணமற்ற வெங்கா யத்தை உண்டுபண்ணினார். இது பெரிதாகவும், மென்மை யாகவும் சுவையுள்ளதாகவும் இருந்தது. ஆயினும் இப்புதிய வெங்காயம் சாரமற்றதாக இருந்ததால் சிறிதும் பயன்படாது போயிற்று.

பர்பாங்க் அல்லும் பகலும் ஓயாது உழைத்து வந்தார். இவர் தமது எழுபதாம் ஆண்டிலும்கூட நாள் ஒன்றுக்குப் பதினொன்கு மணி நேரம் வேலை செய்துவந்தார். இவர் கண்டு பிடித்த புதிய பொருள்களை விற்பதால் இவருக்கு ஏராளமாகப் பொருள் கிடைத்தது. ஆயினும் அப்பொருளனைத்தையும் இவர் தமது ஆராய்ச்சியிலேயே செலவிட்டு வந்தார். இவர் 250 ஆயிரம் டாலர்கள்வரை சம்பாதித்து அதை எல்லாம் தோட்டவேலைக்கே செலவிட்டார். ஏழாவது எட்வார்டு

(Edward VII) அரசர் இவரை அன்புடன் ஆதரித்து வந்தார். இம் மன்னர், பழங்கள் விதைகள் முதலியவற்றை பர்பாங்கின் தோட்டங்களிலிருந்தே வாங்கி வந்தார். 1905 ஆம் ஆண்டில் காலிஃபோர்னியா அறிவியற் கழகத்தினர். பர்பாங்கிற்கு ஒரு பொற்பதக்கம் அளித்தனர். இதற்குப் பின் இவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் கானடா (United States of Canada) செடி வளர்ப்புக் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டஃப்ட்ஸ் கல்லூரியார் (Tufts College) இவருக்கு "அறிவியற் புல்வர்" என்னும் பட்டத்தை அளித்தனர்.

1904-ஆம் ஆண்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இவரது தோட்டங்களைப் பார்க்கவந்தனர். கடிதப் போக்குவரத்தும் மிகுதியாக ஏற்பட்டது. இவருக்கு ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் கூட ஓய்வு கிடைப்பதில்லை. பர்பாங்கிற்கு உண்பதற்கும் உறங்குவதற்கும் நேரமில்லாது போயிற்று. இவர் வேலை மிகுதியினால் பல நாட்கள் நின்றுகொண்டே உணவு அருந்தினாரெனக் கூறப்படுகின்றது. தந்திச் செய்திகளும் வந்து குவிந்துகொண்டே இருந்ததால் அவற்றைப் பிரித்துப் பார்ப்பதற்கும் நேரமில்லாது போயிற்று. ஆகவே அவர் தமது ஆராய்ச்சி வேலைகள் தடைபடாதிருக்கும் பொருட்டும் பல கட்டுத்திட்டங்கள் ஏற்படுத்த வேண்டியதாயிற்று. செபாஸ்டபோல் ஆய்வுப் புலம் மிகப் பெரிதாக இருந்தது. இதனை ஒரு முறை சுற்றி வருவதனாலும் பல மணி நேரங்கள் செல்லும். பல்லாயிரக்கணக்கான மரங்களும் செடிகளும் அங்கு வளர்க்கப்பட்டுவந்தன. பர்பாங்க் தமது அரிய ஆராய்ச்சிகளால் கண்டுபிடித்த முறைகளையும், மரஞ்செடிகளையும் வளர்க்கும் விதங்களையும்பற்றி, நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

பர்பாங்க் நன்றாகப் பேசும் ஆற்றல் படைத்தவர். இவர் குழந்தைகளிடம் பேரன்பு பூண்டிருந்தார். இவர் உலவச் செல்லும் பொழுதும் தம்ஊரிலுள்ள சிறுவர்களை உடனழைத்துச் செல்வார். இயற்கைத் தோற்றங்களைக் காணும்பொழுதெல்லாம் இவர் மனங்கரைந்து உருகுவார். எல்லாப் பொருள்களையும் அழகுபெறச் செய்யும் அரிய பண்பினை இவர் தமது அன்னையாரிடமிருந்தே கற்றுக் கொண்டார். இவர் இளகிய மனமுடையவர்; இன்சொல் வழங்குபவர். வேலையாட்கள் ஏதேனும் தவறுகள் செய்து விட்டாலும் பர்பாங்க் அவர்களைக் கடிந்துரையாமல் பிழைகளை எடுத்துக் காட்டி சீர்திருத்தஞ் செய்வார். மதச்செருக்கு உடையவர்களையும் குறுகிய நோக்கமுடையவர்களையும் இவருக்குச் சிறிதும் பிடிக்காது. மதத்

தின் பெயரால் நடைபெறும் நிச்செயல்களை இவர் மிகவும் அழுத்தமாகக் கண்டிப்பது வழக்கம். தாமஸ் ஆல்வா எடிசன் என்னும் மின்சாரப் பேரறிஞரும் ஏனைய உலகப் பெரியார்களும் இவர்தம் பேராற்றலையும் அரிய பண்பு நலங்களையும் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர்.

இப்பெரியார் 1926-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11-ஆம் நாள் தமது 77-வது அகவையில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அடுத்த ஆண்டில் இவரது நினைவு விழாக் கொண்டாடப் பட்டது. பர்பாங்கின் நினைவிற்கு அறிகுறியாக இவரது கல்லறையின் அருகில் இவரது கையினாலேயே பயிரிடப்பட்ட ஒரு மரத்தை அன்பர்கள் பெயர்த்து வந்து நாட்டினர். செடி கொடி ஆராய்ச்சியில் எவரும் இதுகாறும் செய்து முடிக்காத அரும்பெருஞ் செயல்களைச் செய்து காட்டியதால் பர்பாங்கிற்குச் "செடி கொடிச் சித்தர்"* என்னும் பெயர் வழங்கிவருகின்றது.

பந்து

[இராவ்சாஹிப். ஸி. எம். இராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள்]

பந்து என்பது உருண்டை வடிவமானதும் எல்லாருக்கும் சாதாரணமாகத் தெரிந்ததுமான ஒரு விளையாட்டுப் பொருள். தற்காலத்தில் எந்த நாட்டிலும் ஆண்களும் பெண்களும் பந்து விளையாட்டினை மேற்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக பாடசாலைகளில் பந்தாட்டம் அவசியமாகப் பாராட்டப்பட்டு வருகிறது. பந்தாட்டங்கள் பலவகை உண்டு. பந்துகளும் பல வகையாக உண்டு. அவைகளின் வேறுபாடுகளை பின்னால் விவரிப்போம்.

பந்து வெகு பழமையான பொருள் என்றும், பந்தாட்டம் பண்டைக்காலத்திலிருந்து வழங்கிவருகிறதென்றும் நாம் அறிய வேண்டும். பண்டைய தமிழ் நூல்களில் பந்தைக் குறித்துப் பல புலவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பந்தாட்டத்தைக் குறித்தும் விவரித்திருக்கின்றார்கள். வடமொழியிலும் பந்தைப்பற்றிய விவரங்கள் இருக்கின்றன. தமிழ் மொழியிலுள்ள அபிப்பிராயங்களும் உவமைகளும் வடமொழி

* லூதர் பர்பாங்க் என்பாரைப்பற்றிய விரிந்த நூலொன்று "செடிகொடிச் சித்தர், லூதர் பர்பாங்க்" என்னும் பெயருடன் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

யிலும் காணப்படுகின்றன. மேற்கத்திய மொழிகளிலும் பந்தைப்பற்றிய விவரங்கள் உண்டு. ஆனால் அதைப்பற்றிய வழக்கங்கள் சிறிது மாறுபட்டிருக்கும்.

பந்தாட்டம் பெண்களுக்குரியதென்று பண்டைக்காலத்தாருடைய அபிப்பிராயம். பந்து என்ற வார்த்தை வரும் போதெல்லாம் பெண்களைப்பற்றியே பண்டைக்காலத்துக் கவிகள் கூறியிருக்கின்றார்கள். அக்காலத்தில் பந்தாட்டமானது ஆண்களுக்கு ஏற்ற வீரத்தன்மை வாய்ந்தது அல்ல என்ற கொள்கையை பண்டைக்காலத்தார்கள் கொண்டிருந்தார்கள் எனலாம். ஆனால் ஆண்கள் பந்தாட்டத்தைக்கொண்டிருக்கவில்லையோ என்று கேட்கலாம். அக்காலத்தில் ஆண் பிள்ளைகள் கொண்ட பந்தாட்டமானது பெண்கள் கொண்டதைப் பார்க்கிலும் முற்றும் மாறுபட்டது. அவர்களுடைய ஆட்டம் ஆண்மைத்தன்மை கொண்டதாக இருந்தது. அவர்கள் ஆடின பொருளைப் பந்து என்று சொல்வதில்லை. அதனைச் செண்டு என்ற பதத்தில் பண்டைக்காலத்துக் கவிகள் சொல்லி இருக்கின்றார்கள். செண்டு என்பது தற்காலத் தமிழ் வழக்கில் அதிகமாய் உபயோகிக்கப்படுவதில்லை. ஆனால் தெலுங்கில் அது உபயோகப்படுவதுண்டு. பூச்செண்டு என்பது மாத்திரம் தமிழில் உபயோகமாவதுண்டு. ஆனால் அப்பூச்செண்டு ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவில் ஆடும்படியான ஆட்டத்தில் உபயோகிக்கும் ஒரு பொருளாகும். இனி, பண்டைக் காலத்தாருடைய வழக்கத்தைச் சிறிது அதிகமாக ஆராய்வோம்.

நாம் முன்னமே கூறியபடி பந்தாட்டம் பழைய காலத்தில் பெண்களுக்கே உரியது. போர்வீரராகிய ஒரு மன்னன் தான் ஆண்மையுள்ள ஆண்மகன் என்றும், எதிரிகள் பெண்மைகொண்ட மக்கள் என்றும் ஏளனம் செய்வதற்காக எதிரிகள் பார்க்கும்படியான இடத்தில் பந்தையும், வளையலையும் கட்டிவிடுவது பண்டைக்காலத்து வழக்கம். பெரிய கோட்டைகளிலே அது பகைவரால் வெல்லமுடியாதது என்று காட்டுவதற்காக நூலால் வரியப்பட்ட ஒரு பந்தையும் பாவையையும் அக்கோட்டைவாயிலிலே கட்டித் தொங்கவிடுவார்கள். எதிரிகள் வீரர்களானால் அப்பந்தையும் பாவையையும் அறுத்து விட்டுப் போருக்கு வரவேண்டும். இல்லையெனில் நாம் தோற்றதாகப் புறஞ்செல்லல் வேண்டும். இவ்விதமான பொருள்கள் பேர்பெற்ற கோட்டையான மதுரையின் வாயிலே கட்டப்பட்டிருந்தன, என்று “திருமுருகாற்றுப்படை” என்ற தெய்வ நூலில் அடியில் கண்டபடி நக்கீரதேவர் பாடியிருக்கின்றார்:—

"செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவைதூங்கப்
பொருநர்த்தேய்த்த போரருவாயிற்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்"

இவ்வடிகளில் மதுரைக் கோட்டையை வருணித்த நக்கீரதேவர் அது பகைவரால் வெல்லமுடியாத நிலைமையில் இருப்பதைக் காட்டுமாறு கோட்டையின் வாயிலிலே நெடிய கொடிக்கருகே நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பார் இன்மையில் தூங்கிவரும் என்று உரைத்திருக்கிறார். 'இதனால் பகைவரை மகளிர் ஆக்கி அவர் கொண்டு விளையாடுவதற்குத் தூக்கினது பந்து' என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் சொல்லி இருக்கின்றார். ஆகவே, அக்காலத்திலே பந்தாட்டம் பெண்களுடையது என்பது வெளிப்படை.

இவ்விதம் திருமுருகாற்றுப்படை ஏற்பட்ட சங்கத்தார் காலம் முதல் நாளதுவரை தமிழ்ப் புலவர்களுடைய கூற்று இவ்விதமேயாகும். உதாரணமாக, சூளாமணியில்,

"பந்தணையும் மெல்விரலி பாடக மொடுக்கி
வந்தணையு மெல்லையுள் மயங்கி ஒருமாற்றம்" என்றும்,

பெருங்கதையில் 'பந்தடி' என்ற முழு அகவலும்

திருவாசகம் :

'பந்தணை விரலாள் பங்க நீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்"—வாழாப்பத்தும்,

தேவாரம் :

"பந்தார்விரல் மடவார்பாகமா நாகம்பூண் டெருதேறி"
—திருநணுப்பதிகமும்

வாசுதேவ முதலியார்,

'பச்சைநாயகியம்மன் பந்தடி" என்ற பிரபந்தமும் காண்க.

மேற் சொல்லிய மேற் கோள்களையும் இன்னும் இவை போன்ற மற்றவைகளையும் ஆராய்ந்து பார்த்தால் பந்தடித்தல் மகளிர்க்கே இயற்கையாக உரியது என்ற கொள்கையை நம் முன்னோர்கள் கொண்டிருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இனி அக்காலத்தில் பந்தை எவ்வித முறையில் செய்தார்கள் என்பதற்குக் கொங்குவேள் மாக்கதையில் ஒரு அழகிய வருணனை காண்கிறோம். அது வருமாறு;—

……………………அறிவோர் புனைந்த
இடையும் பூளையு மிடைவரி யுலண்டு
மடையப் பிடித்தவை யமைதியிற் றிரட்டிப்
பீலியு மயிரும் வாலதின் வலந்து
நூலினுங் கயிற்றினு நுண்ணிதிற் சுற்றிக்
கோலமாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் றோலும் பீலிக் கண்ணும்
பூம்புன லுரையும் புரையக் குத்திப்
பற்றிய நொய்ம்மையிற் பல்வினைப் பந்துகள்
வேறுவே றியற்கைய கூறுகூ றமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையு முடையன
தண்வளி யெறியினுந் தாமெழுந் தாடுவ
கண்கவ ரழகொடு நெஞ்சகலாதன
வொண் பந்து…………

முற்காலத்தில் பந்துகளை அறிவோர்கள் செய்தார்கள். அவைகளைச் செய்ய நெட்டி, பஞ்சு, பட்டு முதலியவைகளை உருண்டையாகக் கட்டி மயில் பீலி, மயிர் இவைகளாலும், நூல்களினாலும், கயிற்றினாலும் மெல்லியதாகச் சுற்றி, பாம்பின்தோலும் பீலிக்கண்களும் அதனிடை புகுத்துவார்கள். இவ்விதம் செய்யும் பந்துகள் மிகவும் இலேசாக இருக்கும். காற்றடித்தால் எழுந்து ஆடும்படியான அவ்வளவு மெல்லியதாக இருக்கும். வெண்மை, செம்மை, கருமை என்ற நிறங்களைக் கொண்டிருக்கும். நிலத்தில் அவைகளை அடித்தால் திரும்பி எழும்பும்படியாக அமைக்கப்பட்டிருக்கும். கண்ணைக் கவரும்படியான அழகோடும் செய்யப்பட்டிருக்கும். இவ்விதமாய்ச் செய்த பந்துகளைப் பெண்கள் அவைகளுக்குரிய இலக்கணத்தோடு ஆடுவார்கள்.

பெருங்கதையில் அக்காலத்தில் நடந்த பந்தாட்டப்போட்டியைக் குறித்து அதனாசிரியர் வெகு அழகாக வருணித்திருக்கின்றார். உதயண அரசன் தன் தேவியர் இருவருக்கும் தான் பாஞ்சால அரசனிடமிருந்து பற்றிக்கொண்டுவந்த அரங்கு மகளிர் 1008 பேர்களையும் இரண்டு கூறுகப்பங்கிட்டு இருவருக்கும் அளித்தனர். ஒருநாள் தேவியர்கள் இருவரும் அரசன் வெளியே சென்ற காலம் அறிந்து தமது முற்றத்து வெளியில் பந்து அடிப்பதற்கு எண்ணினார்கள். இரு தேவிமார்களும் தம்தம் தோழிமார்களுடன் பந்தடிப்பதில் யார் வல்லார்கள் என்று பந்தயம் போட்டுக்கொண்டார்கள். அப்பொழுது பதுமாவதிதேவியின் தோழியாகிய இராசனை என்பவள் 7 பந்து

களை எடுத்து 1000 கை அடித்துச் சென்றனள். அப்பால் மற்றொரு தேவியாகிய வாசவதத்தையின் தோழி காஞ்சனமாலை என்பவள் அப்பந்துகளை எடுத்துக்கொண்டு 1500 கை அடித்தனள். பின்னர் பதுமாவதியின் மற்றொரு தோழி லாவதி என்னும் கூனி ஈராயிரம் கை அடித்தாள். வாசவதத்தையின் மற்றொரு தோழியாகிய விச்வரேகை கோலை எடுத்துக்கொண்டு பந்துகளை ஈராயிரத்து ஐந்நூறு கை அடித்தாள். அப்போது பதுமாவதியின் உயிர்த்தோழியாகிய ஆரியை அதிவிசித்ரமாக மூவாயிரம் கை அடித்துச்சென்றனள். அதனைக்கண்டு வாசவதத்தை விசனப்பட்டுத் தன் தோழிமார்களைப் பார்த்தாள். அப்போது கோசலநாட்டு மானனீகை என்ற ஒரு மங்கை எதிரில்வந்து மற்றவருடைய ஆட்டத்தை இகழ்ந்து பேசி, உயர்ந்த பந்தாட்டத்தினுடைய இலக்கணங்களை எல்லாம் வரிசையாக எடுத்துச்சொல்லி இருபத்தொரு பந்துகளை எடுத்து எல்லாரும் வியக்குமாறு ஆடத்தொடங்கினள். அவ்விதம் ஆடுகையில் அவள் அடைந்த நிலைமையும், செய்த செய்கையும் பார்த்தவர் கொண்ட வியப்பையும் வெகு அழகாக கொங்கு வேளிர் வர்ணிக்கின்றார். பந்துகளைக் காலிலும், கையிலும், தொடையிலும் முதலிய பல இடங்களிலும் அடித்துக் காண்பித்தும் அப்பந்தாட்டத்துக்குத் தகுந்தபடி வாயினால் பாடியும் தன் தலைவியை வாழி என்றும், வெல்க என்றும் வாழ்த்துப் பாடியும் எண்ணாயிரம் கை அடித்தனள். இவ்விதமாக அக்காலத்தைய பந்தாட்டமானது நடைபெற்றுவந்தது. இதை ஆராயும் போது தற்காலத்தில் சர்க்கஸ் ஆட்டங்களில் நான்கு, ஐந்து பந்துக்களை வைத்துக்கொண்டு ஆட்டிக் காண்பிக்கும் ஆட்டமானது சிறிதேனும் வியக்கத்தக்கதல்ல என்று கூறலாம்.

மேலும் தமிழ் நூல்களில் எல்லாம் பெண்கள் பந்தடிக்கும்போது பாடல்களை அழகாகப் பாடிக்கொண்டு அப்பாடல்களுக்குத்தகுந்தபடி பந்து ஆடுவதுண்டு என்பதைக் காணலாம். தேவாரத்தில் திருக்கழுமலப் பதிகத்தில் இறைவனது தன்மை பாடி கழல் பந்து அம்மானை ஆடினார்கள், என்று கண்டிருக்கிறது. பவானிப்பதிகத்திலும் 'பந்தார் விரல் மடவார்,' என்று அவரே பாடியிருக்கின்றார். ஆகவே பந்தாட்டத்தினால் கைக்கு அப்பியாசம் வருவது தவிர சங்கீத அபிவிருத்தியும் ஏற்படுகிறது. ஈசனைத் துதிப்பதற்கும் இது ஒரு காரணமாக வைத்திருந்தார்கள்.

தற்காலத்தைப் போலவே அக்காலத்தில் பந்தாட்டங்களில் பந்தயங்களும் போட்டிகளும் கொண்டிருந்தார்கள். அதற்கு மேற்சொல்லிய பெருங்கதையே உதாரணமாகும்.

அவ்விதம் நடந்த போட்டிகளில் ஆடும்படியான பெண் தன்னுடைய தலைவியை அபிமானித்துப் பாடுவதுண்டு. மானனிகை தன் தலைவியாகிய வாசவதத்தை வெல்லவேண்டு மென்று எண்ணி,

'வாழி என வாழ்த்தியும்
அந்தளிர்க் கண்ணி அவந்திகை வெல்கென
பயிர் தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணுயிரம் கை எற்றனள்'

என்றபடி வாசவதத்தையாகிய அவந்திகை வெல்க என்று போற்றிக்கொண்டு ஆடினள். அக்காலத்து மாந்தர்களுக்குத் தலைவர்களிடத்திலும், அரசர்களிடத்திலும் பேரன்பு இருந்தது என்பது தெரியவரும். இதனையே சிலப்பதிகாரத்தில்,

'பொன்னிலங்கும் பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிடம்
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே'

என்ற செய்யுளில் பந்தாட்டத்திலும் இராஜ வாழ்த்து அக்காலத்தில் பாடிக் கொண்டிருந்தனர் என்பது தெரியவரும்.

மேலும் பெண்கள் பந்தடித்தலையே ஒரு பிரபந்தமாகவும் கொண்டு முற்காலத்துப் புலவர்கள் துதிப்பாடல்களைப் பாடுவதுண்டு. இவ்விதப் பிரபந்தத்தை பந்தடி என்பார்கள். உதாரணம் வாசுதேவ முதலியார் இயற்றிய 'பேரூர் பச்சை நாயகி யம்மன் பந்தடி,' 'மீனுக்ஷியம்மன் பந்தடி' முதலியன. பச்சை நாயகி யம்மன் பந்தடியில் மரகதவல்லியம்மன் பத்துப் பந்துகள் வரைஆடினதாகவும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆசிரியப்பாவும், கலிப்பாவுமாக 20 செய்யுளால் ஆனது இப்பிரபந்தமாகும்.

பந்து என்பது பெண்கள் விளையாடும் ஒரு பொருளாக நம் முன்னோர் கொண்டிருக்க, செண்டு என்பதனை ஆண்கள் விளையாடும் ஒரு பொருளாக அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சில உதாரணங்கள் கூறுவோம்.

சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார் சரித்திரத்தில்

"நிலச் செண்டும் பரிச் செண்டும் வீசிமிக மகிழ்வெய்தி
விலக் கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி வென்றிபெற

மலைக்கு நெடு முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
உலக்குமறப் பலபுள்ளி னமர்விரும்பி யமர்கின்றார்"

என்று சொல்லுகிறார். இதனால் அக்காலத்தில் வாலிபர்கள் நிலத்தின் பேரில் செண்டுகளை அடித்து விளையாடினார்கள் என்றும், குதிரையின் பேரில் ஏறிக்கொண்டு செண்டுகளை விசி விளையாடினார்கள் என்றும் தெரிகிறோம். இந்தக் காலத்திலும் நீலகிரியிலும், சென்னையிலும், பூனாவிலும் மன்னர்களும், அரசியலில் உயர்ந்த மக்களும், ராணுவ அதிகாரிகளும் குதிரை மேல் ஏறிக்கொண்டு போலோ (Polo) என்னும் பந்து விளையாட்டை விளையாடுவதை காண்கிறோம். இவ்விளையாட்டு ஆதிகாலத்தில் நமது இந்துநாட்டில் தான் உண்டாயிற்றாம். வடநாட்டில் இராஜபுத்திர வீரர்கள் அடிக்கடி தம் தேகாப்பியாசத்திற்காக இவ்விளையாட்டினைக் கொண்டிருந்தார்களாம். நமது நாட்டிலிருந்து தான் இவ்விளையாட்டு மேற்கு நாடுகளுக்கு ஏகிற்று. இக் கொள்கைக்குச் சரியான சான்று சேக்கிழார் அருளிச் செய்த மேல்காட்டிய செய்யுளே ஆகும்.

இனி கலிங்கத்துப் பரணி என்ற சிறந்த நூலில், ஒரு சோழன் இமயமலையைச் செண்டினால் அடித்தது தெரிய வரும். திருவிளையாடற் புராணத்திலும் ஒரு பாண்டியன் மேருவைச் செண்டால் அடித்தான் என்ற விவரம் கண்டிருக்கிறது. மேலும், அதே புராணத்தில் வாதவூரர் சரிதத்தில் நரியைப் பரியாக்கின படலத்தில் குதிரை விற்க வந்த தலைவன் பாண்டியனிடம் தன் கையிலிருந்த செண்டினால் குதிரையின் கடிவாளவாரை வாங்கினான் என்று கண்டிருக்கிறது. இந்த உதாரணங்களினால் ஆண்மக்கள் உபயோகித்து வந்த செண்டானது வெறும் பந்து போன்றதன்றி ஒரு ஆயுதமாகவும், உபயோகப்பட்டு வந்தது என்று தெரியவரும்.

ஆனால் பூக்களால் செய்த பந்துகள் பூச்செண்டு என்ற பெயரினால் வழங்கி வந்து அதனை ஆண்களும் பெண்களும் கல்யாணம் முதலிய மகிழ்ச்சி காலங்களில் விளையாடிக் கொண்டு வந்தார்கள். இப்போதும் விளையாடி வருகிறார்கள். இது பொதுவாக ஏற்பட்ட ஒரு விளையாட்டுப் பொருளாக கருத வேண்டும்.

இனி, தற்காலத்தில் நம் பிள்ளைகள் விளையாடும் பந்தாட்ட விகர்ப்பங்களைச் சிறிது ஆராய்வோம். நமது நாட்டுப்புறங்களில் துணிகளைச் சுருட்டிப் பந்துகள் செய்வார்கள். அவைகளை நான்கு விதமான ஆட்டங்களில் உபயோகிப்பார்கள். 1. மசப் பந்து அல்லது பேப்பப்பந்து:—பல பிள்ளைகள் சேர்ந்து ஊர்

வெளியில் நிற்பார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்துக் கொண்டு அடிப்பான். அவன் பந்தின் அடிக்குத் தப்பி ஓட வேண்டும். இதனால் தேகாப்பியாசம் பன்மடங்கு ஏற்படும்.
2. தடுப்புப் பந்து: இவ்வாட்டத்தில் பந்து மிகவும் கெட்டியாக இருக்கும். ஒரு பையன் தடுப்பைக்கொண்டு பந்தை அடிப்பான். மற்ற பிள்ளைகள் சிறிது தூரமாகச் சுற்றிலும் நின்று கொண்டு அடித்த பந்தைப் பிடிப்பார்கள். பிடித்தவன் உடனே அடித்தவன் நிற்கும் இடத்தில் பந்தை எறிவான்.
3. பிள்ளையார் பந்து: செங்கல் ஒன்றைக் குத்துக் கல்லாக நிறுத்தி வைத்து அதனைப் பந்து கொண்டு எறிந்து விழ்த்துவது; விழ்த்தியவன் அப்பந்தினால் தன் எதிரியை அடிப்பது
4. குழிப்பந்து: பந்தை ஒரு குழியில் உருட்டுவார்கள். ஒரு கட்சியார் பந்தை எடுத்து ஒளித்து வைப்பார்கள். எதிர்க் கட்சியார் அதனைப் பிடிக்க வருவார்கள். அப்போது வருகிறவர்களைப் பந்தால் அடிப்பார்கள். இவ்விதமாக நமது நாட்டுப் புறங்களில் நால்வகைப் பந்தாட்டங்கள் உண்டு.

தற்காலத்தில் மேற்கு நாடுகளிலிருந்து பலவகைப் பந்தாட்டங்கள் நமது நாட்டில் பிரவேசித்திருக்கின்றன. அவ்வாட்டங்களோடு பந்துகளும் பலவிதமான உருவத்தையும் செயற்கையும் கொண்டிருக்கின்றன. அவைகளின் பெயர்களை மாத்திரம் இங்கே குறிப்போம்.

பெயர்	பந்தின் தன்மை
1. கால் பந்து (Foot ball)	காற்று நிறைந்த இரப்பரும் தோலும் கொண்ட பெரிய பந்து.
2. வாலி பால் (Volley ball)	ஷை
3. கூடைப் பந்து (Basket ball)	ஷை
4. மைதானப் பந்து (Tennis ball)	காற்று நிறைந்த சிறிய பந்து. இதற்குப் பெரிய தடுப்பு அவசியம்.
5. ஹாக்கி (Hockey ball)	கெட்டியான சிறு பந்து. இதற்குக் குச்சி அவசியம்.
6. குதிரைப் பந்து (Polo)	ஷை
7. கிரிக்கட்டு (Cricket ball)	கெட்டியான நடுத்தரமான பந்து. இதற்கு பலமான தடுப்பு வேண்டும்.
8. கால்ப் (Golf)	கெட்டியான சிறு பந்து. இதற்கு நீளக் குச்சி வேண்டும்.

9. பேட்மிண்டன் (Badminton ball) — கம்பளி நூலினால் செய்த இலேசான சிறிய பந்து. இதற்குத் துடுப்பு வேண்டும்.

10. மேஜை டென்னிஸ் (Ping Pong) — செல்லுலாய்ட் என்று சொல்லும்படியான பொருளால் செய்த சிறு பந்து.

11. ஹைதராபாத் பந்து (Hyderabad ball) — சிறு பந்து

12. Rugby — முட்டை வடிவமானதும் கால் பந்தைப் போன்றதுமான தொன்று.

மேற்சொல்லிய விளையாட்டுகள் எல்லாம் நம் நாட்டிற்குப் புதிதாக வந்தவைகள். அவைகளில் சிலவற்றைப் பெண்கள் ஆடுவார்கள். ஆனால் பெரும்பான்மையானவைகள் ஆண் பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுகளே ஆகும்.

ஒரு நாட்டினர் பேசும் மொழிக்கு வரிவடிவென்று ஒன்று அமைந்து விட்டால், அம்மொழியின் பேச்சுவடிவிற்கும் எழுத்து வடிவிற்குமிடையே வேறுபாடுகள் சில இருந்தே தீரும். இவ்வேறுபாடுகள் தாமும் அம்மொழியின் வளர்ச்சிக்கும் திருத்தப்பாட்டிற்கும் ஏற்றவாறு மிகுந்தோ குறைந்தோ காணப்படுவது இயற்கை. தமிழ்மக்களோ பண்டைக் காலத்திலிருந்தே இலக்கிய வளர்ச்சியிற் கருத்தூன்றி வந்துள்ளவர்கள். அவர்களுடைய மொழியாகிய தமிழ்மொழியின் இலக்கண இயல் மிகவும் சீரிய முறையில் ஆய்ந்து தேர்ந்து அமைக்கப்பட்டுள்ளது; ஆகவே, எழுத்து வடிவினதாகிய இலக்கியத் தமிழ் பேச்சு வழக்கிலுள்ள தமிழிலும் மிகமிகச் சிறந்தோங்கிய தொன்றாகக் காணப்படுகின்றது.

—எச். ஸ்டோக்ஸ்.

(கா. சிவ. க.)

செய்திகளும் குறிப்புகளும் :
News and Notes

புதுக்கவி :

தமிழ் முழக்கம்

க

வைய மெங்குந் தமிழ்முழக் கஞ்செய்ய
வாருங்கள்—ஒன்ருய்ச்—சேருங்கள் !
கைகள் செந்தமி ழாலயங் கட்டிடக்
காணுங்கள்—வெற்றி—பூணுங்கள் !
மெய்ய றிந்து விழித்தெழுந் தோமினி
வீழ்ந்திலோம்—யார்க்குந்—தாழ்ந்திலோம் !
தெய்வ சக்தியை—நம்பித்—திருப்பணி
செய்குவோம்—திற—லெய்துவோம் !

உ

நாட்டி லெங்குந் தமிழ்க்கொடி வானுற
நாட்டுவோம்—அச்ச—மோட்டுவோம் !
வீட்டி லெங்குந் தமிழ்விளக் கோங்கிட
வேண்டுவோம்—ஒளி—தூண்டுவோம் !
ஆட்டி வைத்திடும் பாவைகள் போற்பிறர்க்
காட்படோம்—வீ—ணுட்படோம் !
போட்டி செய்திடும் அன்னிய மாயத்தைப்
போக்குவோம்—தமி—ழூக்குவோம் !

ரு

எங்கள் தாய்மொழி யின்பத் தமிழ்மொழி
யேற்றமே—யெங்க—ளேற்றமாம்
எங்கள் நாட்டிலோ ரன்னிய பின்மொழி
யேற்றமே—யே—மாற்றமாம் !
துங்கமான தமிழ்மொழி யாவிற்குந்
தொன்மொழி—பூவின்—முன்மொழி
தங்கமான தமிழ்மொழி பாரதத்
தாய்மொழி—தேவர்—வாய்மொழி !

ரு

வண்ட மிழர் ஒருகுலத் தோழராய்
வாழுவோம்—அன்பு—சூழுவோம்
தொண்டு செய்து புதுத்தமிழ் நாட்டினைத்
தோற்றுவோம்—தாயைப்—போற்றுவோம்!
எண்டிசையுந் தமிழணங் கின்புகழ்
எட்டவே—பேரி—கொட்டுவோம்!
மண்டலத்தி லெங் தாய்நீடு வாழ்கென
மங்கல—வொலி—பொங்கவே!

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
வெள்ளி விழாக் கொண்டாட்டம்

(" சுதேசமித்திரன் ")

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்குத் தலைமை வகித்த திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீமான் சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் நேற்று காலை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவ் வெள்ளி விழாவை முன்னிட்டு இச்சங்க அதிகாரிகள் ஓர் தமிழ்க் கல்லூரியையும் ஸ்தாபித்தனர். இக்கல்லூரியில் தமிழ் வித்வான்களுக்கு வேண்டிய பயிற்சியளிப்பதுடன், விவசாயம், நாட்டு வைத்தியம், பின்னும் பலவிதத் தொழில்களும் கற்பிக்கப்படும். இவ்விழாவில் மேற்படி சங்கத் தலைவர் ஸ்ரீமான் உமாமகேஸ்வரம் பிள்ளை, காரியதரிசி ஸ்ரீமான் வேங்கடாசலம் பிள்ளை இவர்கள் இருவரும் சுமார் 25 வருஷ காலமாகச் செய்து வந்த அரிய சேவையைப் பாராட்டி, தலைவருக்கு "தமிழ் வேள்" என்ற பட்டமும், காரியதரிசிக்கு "கரந்தைக் கவியரசு" என்ற பட்டமும் அளித்தனர். இவர்களைப் பாராட்டிப் பலர் பேசினர்.

வெள்ளி விழாவுக்கு மேலத்தஞ்சை ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் பி. ராமலிங்கம், அவர் மனைவி, திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, பண்டிதமணி கதிரேசம் செட்டியார், ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார், ஸ்ரீமான் சச்சிதானந்தம் பிள்ளை மற்றும் அநேகர் வந்திருந்தனர். தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 5000 மக்கள்கள் குழுமியிருந்தனர்.

வெள்ளிவிழாவை முன்னிட்டு 450 பக்கங்களடங்கிய "கரந்தைக் கட்டுரை" என்னும் நினைவு மலர் வெளியிடப்பட்டிருக்கிறது. விழாவிற்கு ரூ. 5-க்குக் குறையாமல் நன்கொடை யளிப்பவர்க

ளுக்கு விலையின்றி மேற்படி மலர் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ அழகண்ணன் செட்டியார் நன்கொடை ரூ. 1,000 அளித்திருக்கின்றார். தஞ்சை ஸ்ரீமான் ராமநாதம் செட்டியார் ரூ. 1,000 நன்கொடை கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்.

கடவுள் வணக்கம் தமிழ்த் தெய்வ வணக்கம் இவற்றுடன் விழா ஆரம்பிக்கப்பட்டு, சங்கத் தலைவர் ஸ்ரீமான் உமாமகேஸ்வரம் பிள்ளை பிரதிநிதிகளை ஓர் விரிவுரையுடன் வரவேற்றார். விழா அறிக்கை படிக்கப்பட்டது. தலைவர் பின்பு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கம் :—

தலைவர் உரை

இப்பொழுது தமிழானது ஒரு மொழியா? அல்லது தெய்வமா? என்பதைப்பற்றிப் பேச விரும்புகிறேன். உலகத்திலே எத்தனையோ கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பேசும் மொழிகள் எத்தனையோ. ஆனால், எந்த மொழியைப் பேசுவோரும் தமது மொழியைத் தெய்வமெனக் கருதியதாகத் தெரியவில்லை. தங்கள் மொழியை எல்லா மக்கட் கூட்டத்தாரும் புகழ்ந்தாலும் அதைத் தெய்வமென்று யாருஞ் சொல்லவில்லை. ஆனால், தமிழையோ தெய்வமென்று கூறியுள்ளார்கள். இதை நான் சொல்லவில்லை. பெரியோர்கள் சொல்லியுள்ளார்கள். அவர்கள் பற்றுள்ளத்தினால் சொல்லவுமில்லை. நிச்சயித்தும் காட்டியுள்ளார்கள். திருநாவுக்கரசர் என்னும் அப்பர் பெருமானைச் சொல்லுறுதியுடையவர் என்று சொல்வதுண்டு. அவர்கள் ஆண்டவனை 'முத்தமிழும் ஆனான் கண்டாய்' என்று பாடியருளியிருக்கிறார். கருணைப் பிரகாச வள்ளலார் "தமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து ஏத்தல் செய்வாம்" என்று மிகவுந் தெளிவாகக் கூறியிருக்கின்றார். அருணகிரிநாதர் திருப்புகழ் என்னும் நூலைப் பாடியவர். அவர் தமிழின் பெருமை யாராலும் சொல்லமுடியாத அளவையுடையது என்று கூறுகிறார். அவர் தமிழைப் 'புகலரியதான தமிழ்'' என்று பாடுகின்றனர். தமிழ்ப் பெருமையை யாரறிவார்? என்று குமரகுருபரர் வினாவின் வாயிலாக நமது தமிழின் பெருமையைத் தெளிவுபடுத்துகிறார். இவற்றால் தமிழே தெய்வம் என்னும் முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இனி, இவ்வுலகில் யாவரும் விரும்புவது மகிழ்ச்சி. இதனைப் பெறுவதற்குக் கல்வியறிவு பெறுதல் வேண்டும். கல்வி ஒரு மொழி வாயிலாகவே பெற முடியும். எல்லா மொழிகளிலும் தமிழ் சிறந்தது. எவ்வாறெனில், இன்பம் தருவதற்கே மொழிகள் இருக்கின்றன வென்று சொன்னோம். 'தமிழ்' என்ற சொல்லுக்கே 'இன்பம்' என்று பொருள் இருக்கின்றது. சிலர் 'தமிழ்' என்ற சொல்லே தமிழ்ச் சொல்லல்ல என்று சொல்லுவது ஆதாரமற்ற செய்தியாகும். சிந்தாமணியில் சுரமஞ்சரியார் இலம்பகத்தில் 'இன்தமிழ் இயற்கை இன்பம்' என்று வருவதை நாம் அறியவேண்டும்.

இவ்வுலகில் அன்பைவிடச் சிறந்தது இல்லை. தமிழ் அன்புமயமாக இருக்கிறது. சிறப்புவாய்ந்த தமிழைப் பேணுதல் செய்வது

தமிழர்களாகிய உங்கள் கடமை. நற்செயல்களைச்செய்தால் புண்ணியம் என்றும், தீய செயல்களைச் செய்தால் பாவமென்றும் உலகில் சொல்லுகிறார்கள். நல்ல செயல்களைச் செய்யாவிட்டால் பாவமுமில்லை; புண்ணியமுமில்லை. ஆனால், தமிழைக் காப்பாற்றாதுவிட்டால் புண்ணியமில்லாது போவதுமட்டும் அல்ல. பாவமும் நமக்கு வந்து சேர்ந்துவிடும். சோலை வைக்காமல் போவதால் பாவம் ஒன்றுமில்லை. ஆனால், தாயைக் காப்பாற்றாதுவிட்டால் நமக்குப் பாவம் வந்து சேரும். தாயைப்போலவே தாய்மொழியையும் கவனித்து அன்புசெய்யவேண்டும். தமிழைச் சிவபெருமானே போற்றினர் என்கிறார்கள். அதனை நாம் போற்றுவது எவ்வளவு கடமை பாருங்கள்! தமிழைப் போற்றுவது எப்படி? முதலாவது தமிழாசிரியர்களை மதிக்கவேண்டும். அவர்கள் நல்ல நிலையில் இருப்பதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும், தமிழ் நூல்களை விருப்போடு கற்கவேண்டும். இன்னும் வெளிவராத நூல்களைப் பதிப்பிக்கவேண்டும். தமிழாசிரியர்களையும், நூல்களையும் போற்றுவது தமிழைப் போற்றுவதாகும். தமிழ்த்தாய் நலனடைவது தமிழர்கள் நலமுறுவதாகும். அப்போது தமிழ்நாடும் உய்யும். இவையனைத்தும் செவ்விதின் நடைபெற இன்று தொடங்கும் வெள்ளிவிழாவுக்கு வெற்றிவேல் பெருமான் அருள் புரிவானாக! எனக் கூறி முடித்தார்.

மாலையில் கல்லூரி மாணவர்கட்குப் பரிசு வழங்கப்பட்டு, பிரசங்கங்கள் செய்யப்பட்டன. திருவனந்தபுரம் ஸ்ரீமான் பன்னிருகைப் பெருமாள் முதலியார் "தமிழ்மொழியை வளர்த்தற்குரிய வழிகள்" என்றதைப்பற்றியும், அண்ணாமலை பல்கலைக் கழகப் பேராசிரியர் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் "தமிழர் ஒழுக்க அடிப்படையறங்கள்" என்ற விஷயத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தனர். இரவில் தஞ்சை குமாரகான சபையார் "திருநாளைப்போவார்" என்ற தமிழ் நாடகத்தை நடித்தனர். அதைப் பாராட்டி இச்சபையோருக்கு ஓர் வெள்ளிக்கோப்பை பரிசளிக்கப்பட்டது.

கல்லூரித் திறப்பு

கரந்தைக் கல்லூரியைத் தென்னாற்காடு கல்வித் தலைவர் ஸ்ரீமான் சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் திறந்துவைத்தார்கள். அவ்விதம் செய்யும்போது அவர் பேசியதன் சாராம்சம்:—தமிழ்நாட்டில் தமிழ்ப் பாஷையை மேலான வழிகளில் கற்பிக்கும்படியான இவ்விதக் கலாசாலை ஒன்றிரண்டுதா னிருக்கின்றன. உண்மையாகவே வித்வான் போக்குக்கு மாணவர்களைத் தயாரிக்கும்படியானது இரண்டு கலாசாலைகள்தான். தமிழ் இலக்கியத்தை விருத்தி செய்யவும், தமிழர்களின் நாகரிகங்களை வளர்க்கவும், தேச முன்னேற்றத்தில் தமிழ்நாடு ஓர் பங்கு எடுத்துக்கொள்ளும்படி செய்யவும் பல விசேஷ நோக்கங்களுடன ஓர் தமிழ்க் கல்லூரி வேண்டுவது அவசியமே. மேற்கண்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்யும்படியான சக்தி இக்கல்லூரிக்கு ஏற்படும் என்று நினைக்கிறேன். இக்கலாசாலையின் மற்றொரு முக்கிய குறிப்பு என்னவெனில், இதில் பயிற்சியடை

யும் மாணவர்களுக்குச் சில உதவியான தொழில்கள் கற்பிக்கப்படும். அதிலிருந்து தனிப்பட்ட முறையில் ஜீவனத்தை யுண்டுபண்ணும்படி வழிகள் ஏற்படும். தவிர இக்கல்லூரியின்நோக்கம் மாணவர்களை உயர்தரப் பாடசாலைகளிலும், கலாசாலைகளிலும் வித்வான் வேலைகளுக்குத் தயார் செய்வதுமட்டுமல்ல, இவர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்கே தங்கியிருந்து கிராமமுன்னேற்றத்திற்கான வழிகளைச் செய்வதும் இதன் நோக்கமாகும். இம்மாகாணத்தில் மத்தியமாகாணத்தில் இருப்பதுபோல் 'வித்தியாமந்திர்' ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டியது மிக்க அவசியம். இக்கல்லூரியில் சேரும் மாணவர்கள் குறைந்த பட்சம் ஸ்கூல்பைனல் பரீட்சையில் தேறினவர்களாக இருக்கவேண்டும் எனச்சொல்லி, இக்கல்லூரிக்கு எல்லோரும் உதவி புரியும்படி கேட்டுக்கொண்டு தன் பிரசங்கத்தை முடித்துக்கொண்டார்.

மாலையில் அண்ணாமலை பல்கலைக்கழகம் பண்டித வேங்கடசாமி நாட்டார் 'சுந்தரர் செந்தமிழ்' என்பதைப்பற்றியும், ஆழ்வார் ராமானுஜநாயகியார் "திருநாவுடைய பிரானும், தெய்வத் தமிழ்மறையும்" என்பதைப்பற்றியும், பண்டிதமணி கதிரேசம் செட்டியார் "சிலப்பதிகாரச் சுவை" என்பது பற்றியும் பிரசங்கங்கள் செய்தனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்—தஞ்சை

தமிழ்க் கல்லூரிக்குரிய மாணவர்கள்

இச்சங்கத்தில் தனித்தமிழ்க் கல்லூரியின் தொடக்கம் அண்மையில் நடந்த வெள்ளிவிழாவில் ஏற்பட்டது தமிழன்பர்கள் அறிவார்கள். இதுபோது சென்னைப் பல்கலைக் கழகத்திற்குரிய வித்துவான் பயிற்சியின் புகுமுகவகுப்பாகிய Entrance வகுப்பு தொடங்கப் பெற்றுளது. இவ்வகுப்பிற்கு இவ்வாண்டில் முப்பது மாணவர்கட்கு உணவு உதவி ஏற்பட்டுளது. மாணவர்கள் S. S. L. C. அல்லது அதற்கொப்பான அங்கில அறிவுடையர்களாக இருத்தல் வேண்டும். தமிழில் சிறந்த பயிற்சியுளதேல் அங்கில அறிவு சற்றுக் குறைந்திருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். மே மீ இறுதிக்குள் விண்ணப்பங்கள் சங்க அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். ஒப்புக்கொள்ளப் பெற்ற மாணவர்கட்கு விபரம் உடன் அறிவிக்கப்படும். அவர்கள் ஜூன் மீ முதல் வாரத்தில் வந்து சேரல்வேண்டும்.

த. வே. உமாமகேசுவரன்,
தலைவர்

சோழவந்தான் இந்தி எதிர்ப்பு மகாநாடு 10-5-38

("விடுதலை")

காலை 9 மணிக்குத் தோழர் தானப்ப முதலியார் வீட்டிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. தோழர்கள் மேடை தளவாய் எம். டி. குமாரசாமி முதலியார், சர். பி. டி. ராஜன், ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், ஈ. வெ. ராமசாமி, குஞ்சிதம், ஈழத்துச் சிவானந்த அடிகள் எஸ். எஸ். சோமசுந்தர பாரதியார், சாத்தூர் கந்தசாமி முதலியார்,

திருநெல்வேலி டாக்டர் சொக்கலிங்கம், மதுரை வக்கீல் நாராயணன், சித்தயங்கோட்டை மணி, உடுமலை கனகராஜன். ராமசாமி நாடார், அ. பொன்னம்பலம், மதுரை எ. வேணு, மதுரை முஸ்லிம் லீக் செகரட்டரி அப்துல் லத்திப்கான் சாயபு, மதுரை ஷண்முகம் பிள்ளை, திண்டுக்கல் மத்திரன். எ. வி. செல்லையாச்சாரியார், எ. ஜே. கிருஷ்ணபிள்ளை, வி. எஸ். கோவிந்தசாமி செட்டியார், மதுரை என். பி. முத்திருளாண்டி, சங்கரலிங்கம், விநாயக மூர்த்தி. சசிவர்ணன், வி. டி. பொன்னம்மா, எ. எஸ். அருணாசலம், டி. பால்சாமி டேவிட் தம்பதிகள், கணபதி, அறுப்புக்கோட்டை வீரப்பா, விருதுநகர் மகாலிங்கம், அருணசலம் முதலிய மதுரை, ராமநாதபுரம் ஜில்லா வாசிகளும் மற்றும் பிற ஜில்லாக்களில் இருந்துவந்த ஏராளமான பேர்களுமாக பெருங்கூட்டம் தோழர் ஆவிடையப்பன் அவர்கள் வீட்டில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு சரியாய் 11 மணிக்கு மகாநாடு பந்தலை அடைந்தது. அங்கு சுமார் 300 பெண்களும் 1500 ஆண்களும் கூடி இருந்தார்கள். சுவாமி ஈழத்துச்சிவானந்த அடிகள் கொடியேற்றுவித்தார். பின் திண்டுக்கல் தோழர் மத்திரன் முதலியவர்களால் பாட்டுகள் பாடப்பட்டபின் தோழர் குஞ்சிதம் அம்மாள் ஒரு உபன்யாசம் செய்து மகாநாட்டைத் திறந்து வைத்தார். பின் வரவேற்புக்கழகத் தலைவர் வரவேற்பு உபன்யாசம் வாசித்தார்.

பின் தலைவரைத் தோழர்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், சாத்தூர் வக்கீல் கந்தசாமி முதலியார், எஸ். எஸ். பாரதியார் முதலியவர்கள் பிரேரேபித்து ஆமோதித்தபின் தோழர் தளவாய் M. D. T. குமாரசாமி முதலியார் M. L. C. தலைமைவகித்துத் தலைமை உபன்யாசம் செய்தார்.

நிறைவேறிய தீர்மானங்கள்

1. (அ) சென்னை மாகாணத்தில் இந்தி பாஷையைக்கட்டாய பாடமாக பள்ளிகளில் வைக்கக்கூடாதென்று இம் மாகாணத் தமிழ் மக்கள் எவ்வளவோ தக்ககாரணம் சொல்லி ஆட்சேபித்தும் லட்சியம் செய்யாமல் 125 பள்ளிகளில் இந்தியைக் கட்டாயபாடமாக வைத்திருக்கும் மந்திரி சபையின் செய்கையை இம்மகாநாடு கண்டித்து தமிழ் மக்களின் அதிருப்தியை சர்க்காருக்குத் தெரிவிக்கிறது.

(ஆ) சர்க்காரின் செயலை வெற்றி பெறாமல் செய்ய பயனளிக்கத்தக்க முறையில் பலமான முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு திருச்சி தமிழர் மகாநாட்டில் நிறுவப்பட்ட கமிட்டியாரையும் காஞ்சிபுரத்தில் கூடிய சென்னை மாகாண இந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டாரால் நிறுவப்பட்ட கமிட்டியாரையும் இந்தி கட்டாய பாடமாவதை எதிர்க்கும் இதர பிரமுகர்களையும் கேட்டுக்கொள்கிறது.

பிரரேபித்தவர்:—எஸ். எஸ். பாரதியார்.

ஆமோதித்தவர்:—ஈ. வெ. இராமசாமி.

2. மதுரை ஜில்லா சம்பந்தப்பட்டவரை இந்தியைக் கட்டாய பாடமாக வைத்திருக்கிற கலாசாலைகளில் மாணுக்கர்கள் வாசியாமல்

வேறு பள்ளிகளில் வாசிக்குமாறு பெற்றோர்களைக் கேட்கும்படி தூண்டவும், அவசியமானால் மறியல் செய்வது போன்ற இதர துறைகளில் வேலை செய்யவும் கீழ்க்கண்டவர்களடங்கிய தோழர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

1 டபிள்யு பி. எ. சௌந்திர பாண்டியன், 2. டி. ஆவுடையப்பன், 3. ப. வ. விநாயக மூர்த்தி, 4. எம். ஆர். மத்திரன் 5. எஸ். பாதர்பாரி முதலியார், 6 சரவணை, 7. டி. சோமு நாடார்: அவசிய மேற்பட்டால் கைமிட்டியார் வேண்டியவர்களையும் சேர்த்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கிறது.

பிரே:—டி. நாராயணன்.

ஆமோ:—வி. எஸ். எஸ். மணி.

(3) ஹிந்தி கட்டாய பாடமாவதைத் தடுக்க ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியாரால் செய்யப்படுகிற வேலைத் திட்டங்களை இந்த ஜில்லா வாசிகள் முழுமனதுடன் வரவேற்பதுடன் கூடிய விரைவில் கமிட்டியார்கள் கூடி ஹிந்தி எதிர்ப்பு வேலை முறைகளை செய்யுமாறு இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

பிரேபித்தவர் கான்சாகிப் என். கே. பி. பி. இராவுத்தர்.

ஆமோ:—எ. வேணுகோபால்.

(4) மதுரையில் நடந்த மதுரை ஜில்லா சு. ம. மகாநாட்டில் மீதியான பணத்தையும் இந்த மகாநாட்டில் மீதியான பணத்தையும் ஹிந்தி எதிர்ப்புநிதிக்கு வைத்துக்கொண்டு வேலைகள் ஆரம்பிக்குமாறு கமிட்டியாரைக் கேட்டுக்கொள்கிறது.

பிரே:—எம். சுப்ரமண்யம், திண்டுக்கல்.

ஆமோ:—எஸ். சுப்பையா, வாடிப்பட்டி

மதிப்புரை:

பாரத ஜோதி அல்லது பகவான் இராமகிருஷ்ணர்:—

கண்டனூர் சோம. நாச்சியப்பன் அவர்கள் எழுதிய 16 பக்கங்கள் கொண்ட இலவச வெளியீடு. இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கைச் சுருக்கமும் அவர் திருவாக்குகளிற் சில பொறுக்கு மணிகளும் இதன்கண் அடங்கியுள்ளன. "கண்ணுதற் கடவுளாகிய கதாதரர்," "சிலவு" என்பனபோன்ற பிழைகள் இந்நூலிற் காணப்படுகின்றமை வருந்தத்தக்கது.

இந்து தியலாஜிகல் ஐஸ்கூல் மாகஸின்—1938 மார்ச்சு வெளியீடு:— 160 பக்கங்கள் கொண்ட அழகிய வெளியீடு. ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும் எழுதப்பட்ட கட்டுரைகள் கொண்டது. நிழற் படங்கள் பல நிறைந்துள்ளது. இலக்கியச்

சுவை நகைச்சுவை விளக்குவது. கட்டுரைகளிற் பெரும்பாலன பள்ளி மாணவர்களாலேயே எழுதப்பட்டுள்ளமை. இதன் தனிச்சிறப் பாடும் இத்தகையவெளியீட்டினால் மாணவர்களுக்குக் கட்டுரை யெழு தும் ஆற்றல் எளிதிற் கைவரும் என்பது கண்கூடு. இம்முயற்சிக்கு அடிப்படையாயுள்ள இதழாசிரியர் கூட்டத்தினரைப் போற்று கிறேம்.

காந்தைக் கட்டுரை :— காரைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா வெளியீடு—௨௫௦ பக்கங்கள் கொண்டது. தமிழ்நாட்டிற் சிறந்து விளங்கும் பல பெரியார்களின் சீரிய கட்டுரைகள் அடங்கியது. தமிழ்நாட்டின் தொன்மையையும், தமிழ்மக்களின் பெருமையையும், தமிழ் மொழியின் செம்மையையும் அறிய விரும்புவோர் ஒவ்வொரு வரும் கற்கவேண்டியதொரு கட்டுரைக்களஞ்சியம். இதன் விலை ரூ. 3

நாவலர் நினைவுமலர் (1938). பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்களால் தொகுத்தியற்றப்பட்டு, "ஈழகேசரி"த் தலைவர் நா. பொன்னையா அவர்களால் வெளியிடப்பட்டது. 160 பக்கங்கள் கொண்டு அழகுடன் மிளிர்வது. நாவலர் பெருமான் அவர்களைப் பற்றி இக்கால அறிஞர்களும், அவர்காலத்தும், பின்னருமிருந்த அறிஞர்கள் பலரும் எழுதிய கட்டுரைகள், பாக்கள், புகழுரைகள் முதலிய பல இதழ்களைச் சேர்த்துத் தொகுத்த நற்றமிழ்த் தனிமலர். நாவலரிசையெனும் நறுமணத்தை நானிலமெங்கும் பரப்பும் இந்நன் மலரின் விலை ரூபா ஒன்றுதான். இம்மலர் ஒவ்வொரு தமிழ்ச்சேயின் திருக்கைகளையும் அலங்கரிக்கும் என்ற நம்பிக்கையுடையேம். மலர்ப் படிகள் எம்மிடங் கிடைக்கும்.

தொல்காப்பியம்—அகத்திணையியல் விளக்கம் :— ஆசிரியர் இள வழகனார். சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தமிழ் நெறி விளக்கப் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டது. அக்கழக நிறுவிய பெரியார் செவ்வைக் கிழார் ஆ. மாணிக்கம் என்பவரால் அவர்தம் அரும்பெறற் புதல்வன் திருநீலகண்டன் என்பான் அண்மையிற் பிரிந்து விண் ணுலகெய்தியதன் நினைவுக்குறியாக இஃது அச்சியற்றப்பட்டு வரு வதாகும். இதனாலேயே இச்சிறுநூல் "திருநீலகண்டன் இன்ப மாலை" என்ற தொகைப்பெயரும் பெற்றுள்ளது.

இஃது ஓர் இனிய ஆராய்ச்சி உரை நடை நூல்; தொல்காப்பி யப் பெருநூலின் கண் பொதுளிக் கிடக்கும் நுண்பொருள்களைத் தெள்ளத் தெளிய விளக்கும் கையடக்கமான கண்கவர் நூல்; இனிய எளிய நடையாலியலும் தேர்ந்த ஆராய்ச்சி நூல். தமிழ் மக்கட்கும், தமிழாராய்ச்சிக்கும் பயன்படும் சிறந்த நூல். இதன் விலை ரூ. 1. நம் கழகத்திற் கிடைக்கும்.

இந்தி எதிர்ப்பின் இறுதிப்போர்

தமிழ் மக்களிடம் வேண்டுகோள்

தமிழ்ப் பெருமக்களே!

இந்திக் கட்டாயக் கல்வியினால் தமிழ் மக்களின் மொழி-கலை-நாகரிகம் முதலியன வளர்ச்சி குன்றிச்-சீர்குலைந்து-மறைந்து விடுமெனவும், அதனால் தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றம் தடைப்படுமெனவும், ஆகவே அந்நிய மொழியாகிய இந்தியைத் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களிடம் கட்டாய முறையில் நுழைப்பது ஜனநாயக ஆட்சியிலுள்ள அதிகார வர்க்கத்தாருக்கு அடாதெனவும் எத்தனையோ நூற்றுக்கணக்கான வேண்டுகோள்களும், கண்டனத்தீர்மானங்களும், மன்றாட்டக் கடிதங்களும் அனுப்பியும் அவை எல்லாவற்றையும் ஒரு சிறிதும் மதியாது, இந்தி எதிர்ப்புக்காரர்களையெல்லாம் "அறிவிலிகள்" என்று வாய்கூசாது கூறியதுமன்றிச் சென்னை முதன் மந்திரியார் தமக்கிருக்கும் அதிகார இறுமாப்பினால் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்கள் அறுபதில் இந்தியைக் கட்டாய பாடமாக்கும் அறிக்கையைத் துணிந்து வெளியிட்டுவிட்டார். "நான் செய்வதைத் தடுப்பது யார்" என்ற ஆணவத்தோடு கூடிய முதன் மந்திரியாரின் இக்கொடுஞ் செயலைப் பார்த்துக் கொண்டு தமிழ் இரத்தம் தன் உடம்பில் ஓடும் எந்தத் தமிழ் மகனும் இனி வாளா இருத்தல் முடியாது.

இனி, இந்தி எதிர்ப்புக்காக மகாநாடுகள் கூட்டிப் பேசுவதினாலோ, அல்லது தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்புவதினாலோ எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்ற முடிவுக்குத் தமிழ்த் தலைவர்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள்.

ஆகவே, இனி தமது எதிர்ப்பைச் செயலளவிற் செய்து காட்டினாலொழியத் தமிழ் மொழியைப் பாதுகாக்கவும், தமிழ் மக்களின் அடிமை வாழ்க்கையை ஒழிக்கவும் முடியாதென்பது உறுதியாய்விட்டது. ஆகவே, நாம் இறுதியாகச் செய்து பார்க்கும் சத்தியாக்கிரகப் போர்முனையில் தமிழ் மக்கள் எல்லாரும் ஒன்றுபட்டு இறங்கவேண்டும். மேற்படி சத்தியாக்கிரகமும் சென்னையில் முதல் மந்திரி இல்லத்திலும், சட்டசபை வாசலிலும் நின்று செய்யப்பட்டால்தான் வெற்றி கிடைக்குமென்பது தமிழ்த் தலைவர்களின் முடிவான நம்பிக்கையாகும். மேற்படி சத்தியாக்கிரகத்தை இந்தி கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் செய்வதனால் அதிக பயன் விளையாதென்றும், எதிர்ப்பின் கிளர்ச்சி அரசாங்கத்தாருக்கு விரைவில் எட்டாதென்றும், அப்படி எட்டினாலும் தமிழ் மக்களை அடியோடு கவிழ்க்கக் கங்கணங் கட்டிப் பாடுபடும் சில பத்திரிகைக்காரரின் உண்மைக்கு மாறான விளம்பரங்களினால் அரசாங்கத்தார் நேரான உண்மையை அறியமுடி

யாது போகுமென்றும் தமிழ்த் தலைவர்கள் கருதுவதால், மேற்படி சத்தியாக்கிரகத்தைச் சென்னையிலேயே நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, மேற்படி சத்தியாக்கிரகத்திற்கு வருவதாக இதுவரை 200 தொண்டர்களுக்கு மேல் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆனால், மேற்படி தொண்டர்களுள் பெரும்பாலாருக்கு உண்மையான உணர்ச்சியும், ஆர்வமும் இருக்கிறதே ஒழிய, அவர்களிடம் போதிய பொருள் வசதியில்லாததால் தங்களுடைய உணர்ச்சியைச் செயலளவில் செய்துகாட்ட முடியாத நிலைமையில் நின்று தவிக்கிறார்கள். இத் தீவினையை ஒழித்துத் தமிழ் மக்களின் மானத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இது சமயம் பொருட்செல்வம் மிக்க தமிழ் மக்களிடமும், தமிழர் நலங்கருதி உழைக்கும் சங்கங்களின் தலைவர்களிடமுமே தங்கியிருக்கிறது. ஆகவே, பொருள் வளம் நிறைந்த தமிழ்ப் பெருமக்களும், சங்கங்களின் தலைவர்களும் முன்வந்து தக்க பொருள் தந்து உதவவேண்டும். மேற்படி சத்தியாக்கிரகப் போரைத் துவக்கி நடத்துவதற்கு முதலில் குறைந்தது ரூபாய் 2,000 இல்லாமல் முடியாதென்பது தமிழ்த் தலைவர்களின் கருத்தாகையால், தமிழ் மக்களின் பேரால் வெளியிடப்படும் இவ்வேண்டுகோளைக் கண்ணுறும் ஒவ்வொரு தமிழ் மகனும் தன்னால் இயன்றளவு தொகையைத்தந்து உதவவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு, திருச்சியில் நடைபெற்ற மூன்றாவது தமிழர் மகாநாட்டில் மிச்சப்பட்டிருக்கும் தொகையையும், மதுரைச் சுயமரியாதை மகாநாட்டில் மிச்சப்பட்டிருக்கும் தொகையையும், சோழவந்தான் இந்தி எதிர்ப்பாளர் மகா நாட்டில் மிச்சப்பட்டிருக்கும் தொகையையும், இராமநாதபுரம் ஜில்லா தமிழர் மகா நாட்டுக்காக வசூல் செய்து வைத்திருக்கும் தொகையையும், தமிழ் மொழி ஒன்றன் வளர்ச்சியை மட்டும் கருதித் திருநெல்வேலியில் சிறவப் பெற்றிருக்கும் தமிழ்ப் பேணும் சங்கத்தார் இது சமயம் தங்கள் சங்கத்திலிருந்து ஒரு தக்க தொகையையும் மேற்படி தமிழைப் பாதுகாக்கச் செய்யப்பெறும் சத்தியாக்கிரகப்போரின் செலவுக்காகத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேற்படி சத்தியாக்கிரகம் வருகிற 1—6—1938 ல் துவங்குவதாக முடிவு செய்யப்பட்டிருப்பதால் எல்லா விதமான ஏற்பாடுகளும் 25—5—1938-க்குள் முடிவாகித் தொண்டர்கள் எல்லாரும் 1—6—38 ல் சென்னையில் இருக்கவேண்டுமாகையால், அன்பர்கள் எல்லாரும் மிகவிரைந்து மேற்படி பொருளுதவியைச் செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈழத்துச் சிவானந்த அடிகள், பி. ஏ.,

அறிவுநயக் கழகம்,

கரூர்; S. I. R.



திருப்பாதிரிப்புலியூர் மறைத்திரு,
சிவசண்முக
மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கசு] வெகுதானிய—வைகாசி [பரல்-கo

திருவாசகம்

(திருச்சதகம்: கக-வது பாட்டு)

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னூடகச்சீர் மணிக்குன்றே யிடையறு வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

பதவுரை :—

எம்உடையானே—அடியார்களாகிய எங்களை அடிமைகளாகவுடைய ஆண்டவனே

நாடு அகத்துஉன் அடியார்போல்—தமிழ்நாட்டிலுள்ள உன்னுடைய உண்மை அடியார்கள் போல

நான் நடித்து—நான் (பிறரறிய) தோற்றம் (பாவனை) செய்து காட்டி

நடுவே வீடு அகத்தே புகுந்திடுவான்—அவ்வடியார்கள் நடுவில் ஒருவனாய்ப் பேரின்ப வீட்டை அடைதற்பொருட்டு

மிகப்பெரிதும் விரைகின்றேன்—மிக்க பரபரப்புடையவனாய்ச் செல்லுகின்றேன். (அவ்வாறு செல்வதற்கு எனக்குத் தகுதியில்லையாதலால்)

சீர்ஆடகக்குன்றே—சிறப்புப் பொருந்திய பொன்மலையே

மணிக்குன்றே—சிறப்புப்பொருந்திய மாணிக்கமலையே

உனக்கு என் அகத்தூடே நின்று உருக—உன்னை எனது மனதிலே எப்பொழுதும் நினைந்து நிலையாக உருகும்படியாய்

இடையறு அன்பு தந்தருள்—ஆற்றுநீர்போல இடைவிடாது ஒழுகும் மெய்யன்பை நல்கி அருள் செய்வாயாக.

விளக்க உரை :—

நாடு அகத்து ஆல்—ஆல்—அசை. நாட்டகத்து என்பது எதுகை நோக்கி நாடகத்து எனக் குறுகிநின்றது.

நடித்து—நடித்தல் என்பது உண்மையிலில்லாமல் பிறரறியும்படி (பாவனை) செய்தல்.

வீடு அகத்தே—ஏ—அசை. வீட்டகத்தே என்பது வீடகத்தே என எதுகை நோக்கிக் குறுகிநின்றது.

ஆடகச்சீர் மணிக்குன்றே என்பதை, சீர் ஆடகக்குன்று என்றும் சீர் மணிக்குன்று என்றும் இயைத்து உரைநடை செய்க.

சீர் ஆடகம் என்பது நால்வகைப் பொன்களில் சிறப்பான ஆடகப்பொன்னைக் குறிக்கிறது. சீர்மணிக்குன்று என்பது ஒன்பது மணிகளில் சிறப்பான மாணிக்கத்தைக் குறிக்கிறது. பொன்னானது சிவபெருமானுடைய நிறத்தையும் மணியானது அவன் பெறுதற்கு அரிய பொருளென்பதையும் குறிக்கின்றன. குன்று என்பது சிவ பெருமானுடைய என்றும் மாறாத ஒருதன்மைத்தான நிலையைக் குறிக்கிறது.

இடையறு அன்பு—பிறிதொரு பொருளிலும் பற்று வையாது சிவ பெருமான் ஒருவனிடத்திலேயே நிலையான பற்றுவைத்திருக்கும் மெய்யன்பு. இத்தகைய மெய்யன்பானது அதனையுடைய வரைப் பேரின்பவீட்டினிடத்துத் தப்பாது சேர்ப்பிக்குமாதலால் "இடையறு அன்புனக்கென் னூடகத்தே நின்றுருகத்தந்தருள்" என்றார்.

என் னூடகத்தே—ஏ—அசை. இதனை என் அகத்தூடே என மாறுக.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

நன்மக்கட் பேறு

[திரு. ஜி. சுந்தரம் ஐயர் அவர்கள்]

இவ்வதிகாரத்துக்கு உரையாசிரியர்கள் மூன்று விதமாய்ப் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். பரிமேலழகர் 'புதல்வரைப் பெறுதல்' என்றும், நச்சரும் மணக்குடவரும், "மக்கட் பேறு" என்றும், பருதியார், "நன் மக்கட்பேறு," என்றும் அதிகாரத்துக்குப் பெயர் இட்டிருக்கிறார்கள். எப்பெயர் வள்ளுவர் இவ்வதிகாரத்துக்கு வைத்தார் என்கிற வினா உரையாசிரியர்கள் இம்மாதிரி மூன்று விதமாய்ப் பெயர் கொண்டதால் தானே எழுவதாயிருக்கிறது.

முந்திய அதிகாரத்தில் பத்தாவது குறளில்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன், நன்கலம் நன்மக்கட் பேறு" என்று மிகத் தெளிவாயும், எவ்விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமலுந் தோற்றுவாய் காட்டப்பட்டிருப்பதால் எவ்வித மாறுட்டமும் செய்யாமல் அப் பெயரையே அதிகாரத்திற்கு அமைப்பது சரியான முறையாகும். தோற்றுவாய் அதாவது முன்பின் அதிகார சம்பந்தத்தையோ அல்லது தொடக்கத்தையோ உரையாசிரியர்கள் ஒப்புக் கொண்டிருப்பினும் அதைக் குறைக்கவோ அல்லது முற்றிலும் வேறுபடுத்தவோ உரையாசிரியர்களுக்கு உரிமையுண்டு என்னும் கொள்கையைக் கண்டிப்பது நலம்.

'மக்கள்' என்பது பொதுப் பெயராய் மகனையும், மகளையும் குறிக்கும். புதல்வரை மாத்திரம் குறிக்கும் என்று யாவராலும் ஒப்புக் கொள்ள இயலாது. பரிமேலழகர் கூறும் காரணம் யாதெனில் இருபிறப்பாளர் இயல்பாக முக்கடனைச் செய்யவேண்டியிருப்பதில் தென்புலத்தார் கடனைப் புதல்வர் தான் செய்யவேண்டியிருப்பதால் நன்மக்களைப் பெறுதல் புதல்வரைப் பெறுவதாகும் என்ற கருத்துத் தோன்றும் காரணத்தைக் காட்டியிருக்கிறார். தென்புலத்தாருக்குச் செய்யவேண்டிய கடன்கள் புதல்வரால் செய்யப்படவேண்டுமென்பது வடநூல் துணிபு. தம்முடைய வடநூல் கல்வித் திறத்தைத் பொருந்தாவிடத்திற் புகுத்தி அதற்கு இயையக் குறள்மூல பாடத்தில் மூன்று இடத்தில் 'மக்கள்' என்பதற்கு

பதிலாக 'மகன்' என்று மாற்றிவிட்டாரே என்றும் சிற்றம் கொள்ளவேண்டியதா யிருக்கிறது. அன்புடைமை, விருந் தோம்பல் என்று இதற்குப்பின் வரும் அதிகாரங்களில் வள்ளுவனர் அன்பு, விருந்து என்னும் சொற்களை ஒவ்வொரு குறளிலும் சொல்லி யிருப்பதைப் பரிமேலழகர் காண மறந்து விட்டனரோ? அதுபோல இவ்வதிகாரத்தில் மக்கள் என்ற பதத்தை ஒவ்வொரு குறளிலும் வைத்து விட்டால் அழகு குன்றிவிடும் என்று அஞ்சி விட்டாரோ? இத்தகைய கையாட லுக்கு வரம்பு மிலதோ!

ஆண்மக்களைப் பெறுதல் தான் பேருே? பெண்மக்களைப் பெற்ற இல்வாழ்வான் பதரோ! ஆண் மக்களை உயர்த்திப் பெண்மக்களைத் தாழ்த்த வள்ளுவனர் கனவிலும் கருதியிருக்க மாட்டார். புறநானூற்றில் பெண்கள் பெற்றோருக்கும் கணவ னுக்கும் திதி செய்வார் என்ற தமிழர் கொள்கையை அறி யாதவர்போற் புதிதாய் ஒரு பொருந்தாச்சிறப்பை இக்குறளதி காரத்திற்கு அமைத்தார் போலும்!

அதிகார அமைதியைச் சற்றுக் கவனித்தால் பரிமேலழகர் கொண்ட அதிகாரப் பெயர் சிரிப்புக் கிடமாயிருக்கிறது. பெண் மக்கள் சிறுகை யளாவிய கூழ் இனியாது போலும்! அன்னர் மெய் தீண்டல் இன்பம் தராது போலும்! அன்னர் மழலைச் சொல் செவிக்கின்பம் அளிக்காது போலும்!

ஆகவே புதல்வரைப் பெறுதல், என்று மாற்றியிருப்பது எவ்விதத்திலும் பொருந்தாது. வடநூல் சம்பிரதாயத்தை அனுசரிக்கும் ஆரிய மக்கள் குடியிலும் ஆண்சந்ததி திதி செய்ய இயலாமற்போனுல் பெண்மக்கள் செய்வதை நாம் இப் போதும் பார்த்து வருகிறோம். மேலும் முக்கடன் என்பதற்கு குறளில் யாதொரு மேற்கோளும் கிடையாது. இல் வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் இல்வாழ்வானுக்குத் தன்னை ஒழித்து பத்துக் கடமைகளை விதித்திருக்கிறது. துறந்தார், துவ்வாத வர், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், இயல்புடைய மூவர், ஆகிய பத்துக் கடன்களையல்லவா காட் டப்பட்டிருக்கிறது?

மேலும் இருபிறப்பல்லாதார் மக்கள் பெறுதலை மக்கட் பேறல்ல என மதித்துக் குறள் கருதாமல் விட்டதாகும். புதல் வர்தான் நன் மக்களெனக் கொண்டால் புதல்வியைப் புன் மக்களென ஒதுக்கவேண்டியதாகும். இஃது எந்நாட்டார் கொள்கையாயிருந்திருக்குமென்றும் இக்காலத்தில் ஒப்புக் கொள்ள முடியாத விஷயம்.

அறிவென்பது பெண்ணுக்கில்லை என்று சாதிக்கவோ அல்லது மதிக்கவோ முடியுமோ? வள்ளுவனார் தமக்கையான ஔவை கல்வியறிவில் குறைந்தவளோ? இதையுமா குறளுக்கு உரை செய்யப் புகுந்த பரிமேலழகர் மறந்திருப்பார்? கல்வி கேள்விகளில் சிறந்த பெண்ணரசிகளெல்லாம் மக்கட்பேற்றில் அடங்காரா? பேதைமை என்பது பெண்ணுக்குச் சிறப்பைக் கொடுக்க ஏற்பட்டதேயொழிய அறிவில்லாதார் என்று உரை எழுத ஏற்பட்ட இலட்சணமோ? பேதைமை என்பது மாதர்க்கணிகலமாவது நிர்மல மனத்தோடு இரக்கமுடையதாயிருப்பதே.

இனி, நல் என்பதை நீக்கி மக்கட்பேறு என்று பெயர் அமைத்ததைச் சற்றுக் கவனிப்போம். வள்ளுவர் காட்டிய தோற்றுவாய்ச் சொற்றொடரைத் தலைக்குறை செய்யவேண்டிய அவசியமென்னவோ புரியவில்லை. மக்களைப் பெறுதலையே பேறென மதிக்கப்படுமா? மக்கள் நன் மக்களாயிருக்க வேண்டாமோ? நமது பண்டைய கதைகளில் நூறு கெட்ட பிள்ளைகள் கிடைப்பதைக் காட்டிலும் பதினாறு வருஷம் உயிரோடு வாழ்ந்தாலும் போதுமென ஒரு நல்ல பிள்ளை கிடைத்தால் நலமெனக் கருதி வரம் கேட்கவில்லையா? தண்டலையார் சதகத்தில் "நன்றி தரு பிள்ளையொன்று பெற்றாலும் குலமுழுதும் நன்மையுண்டாம்," "நன்றி அறிவில்லாத பிள்ளையொரு நூறு பெற்றுமாவதுண்டோ.....வருடந்தோறும் பன்றி பலவீன்றுமென்ன? குஞ்சரமொன்றீன்றதனால் பலனுண்டாமே," என்று மக்கட்பேற்றைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அருணகிரியார் மனிதர்களில் மூடர் வகையை மூன்றாகப் பிரித்து ஒருவகையை "அறிவு நூல்கலாமூடர்" என்று பிரித்தார். ஆகவே அறிவு நூல்களில் முதன்மையான தமிழ் வேதத்தில் சாதாரண மக்களையோ பேறெனக் கருதி வள்ளுவர் அதிகாரப் பெயரை இட்டிருப்பார்? மணக்குடவர் மக்கட்பேறு என்பதற்கு மக்களைப் பெறுவதனாலாயபலன் கூறுதல் என்று விருத்தியுரை செய்திருக்கிறார். இல்வாழ்க்கை என்றாலே தந்தை, தாய், தாரம், மக்கள் அடங்கிய தொகுதியைக் குறிக்குமென்றால் மக்கட் பேற்றைத் தனிப்பட அதிகாரம் வகுத்துப் பேச வேண்டியதில்லையே என்ற ஆக்ஷேபனையை எழுப்புவதாயிருக்கிறது. அசமஞ்சனைப்பெற்ற அரசன் குழந்தையின் மழலைச் சொல்லைக்கேட்டு இன்புற்றிருப்பினும் பிறகு மிகவும் மனக்கிலேசப்பட் டிருப்பானல்லவா? நன்மக்களைப் பெறாத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் மகிழ்வது உலகியல்பானபோதிலும் இது கேவலம் சம்சாரமயக்கக் கடலில் ஏற்படும் போலியின்பமே.

நன்மக்களுக்கே தனியாய்க் குறளில் அதிகாரம் ஏற்பட்டிருக்கு மேயொழிய பொதுவாய்க் குழந்தைகளைப்பற்றிக் கூற அதிகாரம் வகுக்கப்பட்டிராது. தாய், தந்தை இவர்களைப்பற்றியும் அதிகாரமிருக்கவேண்டாமா? ஆதலால் பருதியார் குறளில் கண்ட நன் மக்கட்பேறு என்னும் பெயரைக் கொண்டு அறிவுடைய மக்களைப் பெறுதல் என்று பொருள் கொண்டதே பொருத்தமாய் இருக்கிறது.

இதற்குத் தமிழில் சிறந்த கல்விப் பயிற்சியுள்ள எனது நண்பர் ஒருவர் வள்ளுவனார் அதிகாரப் பெயர்கள் கொடுத்திருப்பதைச் சோதித்தால் ஒன்றுக்கும் அடைமொழி கொடுக்காமல் இவ்வதிகாரத்திற்கு 'நல்' என்ற அடைமொழி புகுத்தல் பொருந்ாது என்ற வாதத்தைக் கிளப்பினார். இவ்வாதம் தவறெனத் தோற்றுகின்றது. பொருளியலில் 'கொடுங்கோன்மை, செங்கோன்மை' என்று வகுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 'கூடா ஒழுக்கம்' செய்ந்நன்றி அறிதல்; என்றபெயர் வகுப்புகளைக் காண்கின்றோம். பகையின் இனத்தைச் சார்ந்த உட்பகையெனும் தனிப்பிரிவைப் பற்றியும் குறள் பேசுவதால் மக்கட்பேறாகிய வர்க்கத்தில் நன்மக்கட்பேற்றைக் குறள் போதித்தது என்று கொண்டால் எவ்விதத்தில் தவறோ என்று புலப்படவில்லை.

வள்ளுவர் கருத்து எப்படியிருந்தபோதிலும் பரிமேலழகர் கொண்டபெயர் சற்றும் பொருந்தாது. துரியோதனாதிகள் போன்ற நூறு புதல்வர்களைக் காட்டிலும் ஒரு துரோபதையைப் பெற்றவன் குலம் மிகவும் மாண்புடைத்து என்பதை யாவரும் ஒப்புக்கொள்வதில் சிறிதேனும் தடையிருக்க நியாயமில்லை. பெண்களை அடியோடு விட்டுவிட்டு மகனை மாத்திரம் சிறப்பித்த காரணம் என்னே! அவர் கற்ற கல்வியே அவருக்கு இம்மாதிரி மயக்கத்தைக் கொடுத்தது போலும்!

ஆகவே நன் மக்கட்பேறு என்ற பெயரே மிகவும் பொருத்தமாகும். அறிவுடைய மக்களே நன்மக்களென்று முதல் குறளிலும் அதனால் அடையும் பயனை இரண்டாவது குறளிலும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்க. இவ்வதிகாரத்தில் முதல் மூன்று குறளே முக்கியமானவை. பரிமேலழகர் அவைகளுக்கு உரை சொல்லியிருப்பதில் தெளிவுமில்லை, அழகு மில்லை, பொருத்தமுமில்லை.

தமிழ்மரமுதிர்க்கும் காதற்கனிகள்

[" இளவற்சேய் " வருமானவரி நிலயம், கோழும்பு]

பண்பும் பான்மையும் படைத்து, படிப்போர் உளத்தில் பாசம் பதிக்கும், பாகினும் பாலினும் இனித்திடும் பசுந்தமிழ் அன்னையின் பாரிய பண்புகளை உன்னுந்தோறும் உவகை ததும்பும். கற்றோர் உளத்தில் கழிபேருவகை தருஉம் கன்னித் தண்டமிழின் கட்டழகு விரித்துரைக்குந் திறனன்று. தமிழ் என்னும் பதமே இனிமை யென்னும் பொருள் தந்து நிற்குமாயின், அதனைச் சுவைப்பார்க்கு எத்துணைப் பேரின்பச் சுவை பயக்குமென்பது சுவைப்பார்க்கே புலப்படுமென்க.

இளமையும் நலனும், இங்கிதப் பொற்பும், ஈர்க்கிடை புகா இளமுலைச் செறிவும், கடைமட்டோடுங் கண்ணிற் பிறழ்ச்சியும், தரைமட்டோடுந் தருகுழற்பற்றையும், குயில் மென்மொழியும் மயில் மென்னடையும் கொண்டு, உருவிலாள் (தன் எழில் நலமெலாஞ் செறிந்திலங்கும் மடவரலொருத்தியையும் அவ டன்) தன்மைகளையும், ஓவியக்காரன் துகிலிகை கைப்பிடித்து, உள்ளங் கவரும் உன்னத சித்திரங்கள் தீட்டுமாறுபோல, சீர்மிகச் சித்திரிக்கும் ஆற்றல் சிற்சில புலவர்மாட்டேயுடைத் தாமென்க.

சிறந்த தமிழ்நூற்களிலெல்லாம் காதல் மணம் கனிந் திலங்கக் காணலாம். மும்மலங்களின் முயற்சியால் மூண் டெழுந்து, முடுகி வளர்ந்து முழுமுதலிறைவனின் முன்னிய வருளை முடுகவிடாமல், மூண்டு முன்னின்று தடுக்கும், முதிர்ந்த இச்சிற்றின்ப மணத்தை, தெய்வமுமுவக்குந் தேன் றமிழ்ப் பாடையுள் செறிந்தமைக்குக் காரணம் யாதுகொல் எனக் கடாவுவார்க்கு, ஒன்றினைச் சுவைத்து அதன் நன்மை தீமைகளை நன்கு உற்றறிந்தார் மனம், பின் அதன் கண்ணே தினைத்து நிலைகலங்காதென்றும், முத்தி வேண்டித் தவத்தில் முனைந்து நிற்பார்க்கு நிலைகலங்கச் செய்வனவற்றுள் சிற்றின் பமே தலையாயதென்றும், தலையாயவதனால் அவ்வண்ணம் நிலை கலங்காமையை நிறுத்தவே, சிற்றின்பங்களுள் வலியுடைத் தாகிய காதற் சுவையிற் களித்துக், கழித்திடவேண்டுமென்றும், அதன் பின்னரே தவத்திற்கேற்ற பக்குவம் பலித்திடுமென்றும், பன்னூற் புலவரும் பல பேரறிஞரும் பகர்ந்து போந்தனரென விடைபகர்வேம். இதனானன்றே, தெய்வப் புலமைத் திருவள் ளுவரும், தமது திருக்குறு நாலில் " காமத்துப்பால் " எனு மோர் துறையினை வகுத்து, வீடுபேற்றினை அவாவுவான் அறம் பொருள் இன்பம் எனுந் துறைகளைப் படிப்படியாகக் கடந்து

பக்குவமெய்திடின், விடுவேட்டுத் தவத்தில் முனைந்து நிற்கும் காலை, நிலைகலங்காது தொடுத்த காரியம் கடிதில் முடிப்ப னென்னும் மறுக்கொணு வுண்மையை நிலைநிறுத்தினரெனக.

இனி, இத்தன்மைத்தாய இக்காதலின் திண்மையையும், அதன் சுழற்சியிலகப்பட்டுழல்வார் தன்மையையும் சிறிது ஆராய்வேம்.

“பரணிக்கோர் சயங்கொண்டான்” எனப் பன்னூற் புலவரும் பாடிக்கொண்டாடும் பசுந்தமிழ்ப் புலவன், சொன் னயம், பொருணயம் செறிந்து திகழும் “கலிங்கத்துப்பரணி” யென்னும் நூலில், ஒருவழிச் சேறலில்லாது மாறிமாறிக்கொண் டிருக்கும் மங்கையர்தம் மனத்தின் பண்பையும், அன்னார் தங் காதற் கணவரைக் கனவிலுந் தங்கருத்தினின்றும் நீங்கார் எனும் உண்மையையும்,

“பேணுங்கொழுநர் பிழைகளெல்லாம் பிரிந்தபொழுது நினைந்
காணும்பொழுது மறந்திருப்பீர் ....” [தவரைக்

எனக் கற்றோருளம் களிக்கும் வண்ணம் கவின்பெற எடுத் துரைக்கின்றார்.

நீலவான் முகட்டில் வெண்மதியம் தண்ணிலாப் பரப்பி வீசும் மாலைக் காலத்தில, மாந்தளிர் நிறைந்த மாமலர்ச் சோலை யில், மயிலினம் அகவ, குயிலினம் கூவ, ஒல்கிய நடையில் ஒதுங்கிவந்த ஒண்டொடி ஒருத்தியின் உந்திச்சுழியின் முனைத் தெழுந்த உரோமப் பசுந்தாளொன்றில் ஒன்றிய அந்திக் கமல மிரண்டன் மேலும் பாய்ந்த தன் வண்டோர் விழிகளை வாங்க மாட்டாது, மயக்குற்று நின்றானொருவனை, வால்வளை திருத்தி, கடைக்கண் செறித்து, கருத்ததுவுணர்த்தி, கபத்திடைக் கிடந்த கழுநீர்க் கிள்ளி, விடாக்களிவண்டுண விரிந்த கோதையிற் செருகி நின்றாளை, அவனதுயிரையும் ஒக்கச்செருகினாளெனும் பான்மையாக இப்பாவலன் பாடும் பாக்கள் பாலினும் இனித் திடும் பண்புடையதாகும்.

அகநூல் முதலாம் அருங்கலைகளில் ஆழ்ந்த அறிவுடைய அருந்தமிழ்ப் புலவர்கள், இயற்கையிலிலங்கும் பொருட்களை யும் அவற்றின் தன்மைகளையுமே உபமான உபமேயங்களாகத் தமது பாக்களில் பெய்யும் வழக்கினையுடையராயினர். மங் கையரின் ஊசலாடும் மனப்போக்கை விளக்கவந்த சீவக சிந்தாமணி ஆசிரியர்,

“மங்கை நல்லார் கண்ணும் மனமும்போன்
றெங்கு மோடி யிடறும் சுரும்புகாள்!”

என அழகுற அமைக்கின்றமை அழியாவின்பம் அளிப்ப தாகும்.

இளங்காதலரிருவர் ஒருவரையொருவர் கண்டபொழுது அவர்தம்மிடையே யேற்படும் காதலுணர்ச்சியை, அவர்தங் கண்களே யுணர்த்திவிடும் வன்மையுடைத் தென்பதை வலி யுறுத்தவந்த பொய்யாமொழிப் புலவர்,

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனுமில"

என்றும், நாவிடை நின்று தடுத்தலால் வாய்திறவாது நின்றார் தம்மகத்திடையே யிடறும் உணர்ச்சியலைகளை வெளிப்படுத்தும் வாயாக வமைவன கண்களே யென்பதையும், காதனைக் கண்ட காமவல்லியர்மாட்டே விளங்குவதோர் சிறப்பாய இயல்பையும்,

"யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்"

என்றும் நயம்பட நவில்கின்றார்.

உறைகழித் திலங்குவா ளுடற்றுங் கண்ணினார்தம், நுண் ணிடை நைந்துக, தெண்கடலமிர்தம் பெய்த செப்பெனச் செறிந்து விங்கிப் பெண்டிருமாண்மை வெஃகிப் பேதுறும் முலையினாரைப் புல்லினார்தங் கலவியின்பத்திற்குக் கரையில தென்பதைக் கற்றார் களிக்கும் வண்ணம்,

"புணர்ந்தவர் பிரிதலாற்றாப் போகமீன்றளிக்கும் சாயல்
அணங்கினுக் கணங்கனார்."

எனச் சிறப்புறத் தொகுத்த சிந்தாமணியாசிரியரைக் கற்றா ருலகம் போற்றாதிருக்காது.

பல்வேறுகோடி யுயிர்கட்கும் பொதுவாய இக்காதலின் ஆற்றல் இத்தன்மைத்தென்று வரையறுத்துரைத்தல் ஆகாது. பிறவியெனும் பெருங்கடலுள், மலங்களெனும் அலைகளாலலைப் புண்டு, முத்தியெனும் கரைகாணாது கலங்கிநிற்கும் ஆன்மா விற்கு, அக்கரையை அடைவதற்குக் காதல்வாழ்க்கை ஓர் ஏமப் புணையாய் அமையுமென்பர் கற்றறிந்தோர். பன்னூற்களிலும் இன்புலவோர் இடித்துரைப்பது இவ்வுண்மையையே.

கருத்தொருமித்த காதலரின் அகமும் புறமும் பூரித்துப் புத்துயிர் பெற்றோங்குமாறுபோலக் காதலெனுங் கடலிற் றிளைத்து, என்றுங் குன்றா விளமையும் நலனும் பெற்றுத் திகழ் கின்றாள் தமிழ்மகள். மக்களினது இயற்கையையொட்டி

தமிழ்ப்புலவோர் நூல்கள் செய்திருக்காதுவிடின், வழக்கழிந்து ஒழிந்து கிடக்கும் ஆரியம்போன்ற பாடைகளின் கதியே நந்திந்தமிழுக்கும் வந்திருக்கும் என்பதை நிறுவுமுகத்தான், "மனோன்மணீயம்" என்னும் நாடகநூலினைக் கற்றாரும் மற்றாரும் களிக்கும் வண்ணம் தீந்தமிழ் கொண்டு ஆக்கிய திருவளர் செல்வன் சுந்தரம்பிள்ளையவர்கள், அந்நூலில் தமிழ் வணக்கத்தில், "ஆரியம்போல் அழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத்திறம் வியந்து போற்றுதும்மே" என அழகுற அமைக்கின்றனர்.

அமுதம் புரையும் இவ்வருந் தமிழ்த்துறையுள் அலர்ந்து கிடக்கும் அருமைசான்ற அணிநலன்கள், அவற்றினை அலசிப் பார்ப்பார்க்கு அரிதிற் புலப்படும். விரிக்கிற் பெருகு மென்றஞ்சி விடுத்தனம்.

கம்பராமாயணப் புதையல்

[ஐயா. பா. வே .பொன்னுசாமி நாய்க்கர், செவ்வாய்ப்பேட்டை]

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

ஆரணியகாண்டம்—மாரீசன் வதைப்படலம்
67-ஆவது செய்யுள்

என்வயினுற்ற குற்றம் யாவர்க்கு மெழுதொணாத
தன்மைய னிராமனோடுந் தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள் வேய்வயின் மென்றோள் கொண்டாள்
பொன்வயின் மேனிகொண்டாள்பொருட்டினுற்புகுந்ததென்றாள்.

(இ - ள்.) என் வயின் உற்ற குற்றம் - என்னிடத்தில் ஏற்பட்ட குற்றம், யாவர்க்கும் எழுத ஒண்ணாத தன்மையன் - எவராலும் சித்திரிக்க இயலாத அழகுடையவனான, இராமனோடு(டும்) - இராமனுடன், தாமரை தவிரப் போந்தாள் - தாமரை இருக்கையைவிட்டு வந்தவளும், மின்வயின் மருங்குல் கொண்டாள் - மின்னலிடத்தே இடையைப் பெற்றவளும், வேய்வயின் மென்தோள் கொண்டாள் - மூங்கிலிடத்தே மெல்லிய தோளைப்பெற்றவளும், (ஆகிய) பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினால் - தங்கத்தினிடத்தே மேனி பெற்

றவள் காரணத்தால், புகுந்தது என்றாள் - நேர்ந்தது என்று சொன்னாள்.

விளக்கம்:—சூர்ப்பநகை இராமன் அழகில் ஈடுபட்டுச் சொக்கி அவனை வசப்படுத்தத் தன் சமர்த்தெல்லாம் காட்டியும் பயன்படவில்லை. முடிவாக ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அதாவது சீதையை எடுத்துப்போய்த் தன் தமயன் இராவணனிடம் விட்டுவிட்டால் இராமன் நாயகியில்லாமல் தவிப்பான். அத்தருணம் தான் அவனிடம் போனால் தன்னிடம் இணங்கி வருவானென்று கருதி எடுக்கப்போனாள். மறைந்து காவலிலிருந்த இலக்குவன் இவளை அங்கபங்கம் செய்துவிட்டான். இவள் சுயநலங்கருதி எடுக்கப்போனதை மறைத்து ஏதோ தன் தமயனுக்குச் சேர்ப்பிக்க ஒரு பெண்ணை எடுக்கப்போய் இப்பங்கம் நேர்ந்ததென்று பிறர்டம் சொல்லிக்கொள்ளுகிறாள். "ஆடு மழையில் நனைகிறதென்று ஓநாய் குறுங்கிக் குறுங்கி அழுகிறதாம்!" இதுபோன்றது இவள் நடத்தை. இவள் விரும்பிய காரியம் இராமனிடம் நிறைவேறாது பங்கம் அடைந்தும், இலக்குவனிடம் அங்கபங்கமடைந்தும், கரன் முதலான அரக்கர்களைப் பலிகொடுத்தும் காட்டைவிட்டு இலங்கைக்கு வந்து தன் தமயனிடம் முறையிடுகிறாள். அப்பொழுது இராவணன் "அவர்களுக்கு நீ செய்த குற்றம் யாது" என்று வினவினான். "நீயிடை யிழைத்த குற்றம் என்னை" என இவன் தோற்றுவாய் சொன்னதை இச்செய்யுளில் ஆரம்பிக்கிறாள். "என்வயினுற்ற குற்றம்" என்று தொடங்கி, நேர் விடையாக குற்றம் இன்னது சம்பவம் இன்னது என்று முடிக்கவில்லை. பின் என்ன சொன்னாள்? இராவணன் வாயில் வந்த "குற்றம்" என்பதை இவள் வாயினும் உச்சரித்தாள். ஆனால் இராமன் அழகும் இராமனும் இவளுக்குமுன் உருவெளித்தோற்றமாய் இடைவிடாது நிற்றலால் "யாவர்க்கு மெழுதொணாத தன்மையன் இராமன்" என்று தன்னையுமறியாது "உடுக்கை யிழந்தவன் கைபோல" வாய் சொல்லிவிட்டது. உடனே திடுக்கிட்டுத் தான் இராமன் மேல் காமங்கொண்டு ஏதோ இடக்குச் செய்திருக்கவேண்டும்; அதனால் அங்கபங்கம் செய்திருப்பார்கள் என்று தன் தமயன் நினைத்துக் கோபிப்பானென்று உடனிகழ்ச்சிப் பொருளைத்தரும் மூன்றும் வேற்றுமை உருபு ஒடு என்பதைச் சேர்த்தாள். தன்பேரில் சந்தேகமும் சினமுங்கொள்ளாது யாரோ இராமனோடு வந்திருக்கவேண்டுமென்னும் எண்ணம் தன் தமயனுக்குத் தோன்றச்செய்து தான் தப்பித்துக்கொண்டு அடுத்த சொற்றொடர் "தாமரை தவிரப் போந்தாள்" என்கிறாள். "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே", "பூவிற்

குத் தாமரையே". பூவென்றபொதுமொழி சிறப்புவகையால் தாமரையைக் குறிக்கக் காரணம் இலக்குமி குடியிருத்தல்—தன்னால் சிறப்புப்பெயர் மகிமைபெற்ற அழகும் குளிர்ச்சியும் வாய்ந்த தாமரையை விடுத்து இலக்குமி இராமன் எழுதொணாத அழகில் ஈடுபட்டுக் காமங்கொண்டு அவனோடு பின்தொடர்ந்து வந்துவிட்டாளென்று சொல்லித் தன் காமத்தை மறைத்துவிட்டாள். மிகக் கட்டழகுவாய்ந்த ஒருவனை மிக அழகற்ற ஒருத்தியும் மோகிக்கலாம். இவள் இராமனிடத்தில் மோகங்கொள்ளவில்லையா? தன்னை அழகற்ற அரக்கி என்று எண்ணினளா? இல்லை—ஆதலின் ஒரு பெண் இராமனோடு வந்தாள் என்றால் இராவணனுக்குத் தோன்றியிருக்கும் சீற்றம் போய் மோகங் கதித்துவாராதென்று தான் மற்றப் பெண்களுக்கு உவமானமாய் நின்று தனக்குவமை யில்லாத இலக்குமியே வந்துவிட்டாள் என்கிறாள். இராமனுக்கு ஒவ்வோரங்கமும் தனிச்சிறப்பு வாய்ந்ததால் எவ்வுலகத்தும் சித்திரம் எழுதுவதில் எவ்வாற்றலுடையார்க்கும் எழுத முடியாதென்பதைக் குறிக்க பொதுப்பட பால்உருபு மயக்கத்தில் யாவருமென்கிறாள். வனத்திற்குத் தவவேடம் பூண்டுவந்த இராமன் "வேறொருவருடனிருப்பு வேண்டா தவத்திற்கு" என்றதற்கு மாறாகத் தன் சொந்த நாயகியைக் கூட்டி வாரான்; தாமரை மலரை விட்டு நீங்கி இலக்குமி இவனழகில் ஈடுபட்டு வந்திருக்க வேண்டுமென்றும், "அன்னைப்போ லிடையே வந்தாள்" என்றும் இவள் நினைத்ததாக சூர்ப்பநகைப் படலம் 59—62 செய்யுள்களில் முறையே கம்பர் கூறுகிறார். இக்கூற்றை இச்செய்யுளில் அரிமா நோக்கில் சொன்னாள் என்கிறார். இலக்குமி தன் நாயகனைவிடுத்து இந்நாயக னிடத்தில் வந்துவிட்டாளென்று சொல்லாது, "தாமரை தவிரப்போந்தாள்" என்று கூறியது எற்றுக்கென்னின் தன் நாயகனைவிட அழகுவாய்ந்த நாயகனிடம் வந்துசேர்ந்தது இலக்குமிக்கு ஊதியமாம் (இலாபம்). மற்றோர்வகையில் இழப்பு (நஷ்டம்) மேற்குறித்த தன்மை வாய்ந்த தாமரையைவிட்டு வந்ததாம். இந்நாயகனிடத்தில் அத்தகைய தவசில்லாக் குறைதானும். ஆதலின் இச்சொற்றொடர் கூறினனென்க. ஒரு நாயகன்மேல் காமுற்ற ஒரு பெண், நாயகன் பெயரைச் சொல்லியும் அழகை நினைத்தும் மகிழ்வது இயற்கை என்பதற்கு எடுத்துக்காட்டாக, பிரபுலிங்க லீலையில் பிரபுதேவர் வந்தகதி செய்யுள் 31 "அள்ளிக்கொளும் பேரழக னருணமம் புகலுமவாவாலும்" என்ற தொடக்கத்தைக் காண்க.

மேற்குறித்தபடி இராமனைப் பின்பற்றி வந்தவளை உனக்காக (இராவணன்) எடுக்கப்போன குற்றந்தான் என்று

சொல்லி மீதி குற்ற நிகழ்ச்சியை முடித்தாளா? இல்லை—சீதையின் வர்ணிப்பில் ஆரம்பித்தாள். ஏன், வர்ணிக்க வர்ணிக்கத் தமயனுக்குப் படிப்படியாகக் காமம் உச்சநிலைக்கு வரும்; உடனே சீதையை இராமனைவிட்டுப் பிரித்துக் கொண்டு வந்து விடுவான், இராமன் தனியனானால் தான் போய்ச் சேர்ந்து கொள்ளலாமென்ற எண்ணம்.

இச்செய்யுள் முதலடியில் "வயின்" என்ற சொல்லுக்கு இடமென்று பொருள். மற்ற மூன்று இடங்களில் வரும் "வயின்" போல என்ற பொருளில் இருக்கிறது—ஒப்புக் கூற போல ஒப்ப நேரமுதலிய ஒருபொருள் குறிக்கும் பல சொற்களிருக்க இதைக் கூறுவானேனென்னின், உபமானப் பொருள்களிடத்துள்ள பொலிவை இவள் கவர்ந்துகொண்டாளாம், அதனால் அப்பொருள்கள் தத்தமக்குள்ள பொலிவை இழந்துவிட்டனவென்னும் பொருள் தோன்ற "வயின்" என்று கூறினாள். இக்கருத்துப் பின்வரும் செய்யுள்களில் விளங்கும். "மின்வயின் மருங்குல் கொண்டாள்", "பொன் வயின் மேனிகொண்டாள்." என்று சொன்னவள், வேய் வயின் தோள் கொண்டாள் என்னாது "மென்றோள் கொண்டாள்" என்கிறாள். தோளுக்கு மெல் என்ற அடைமொழி எற்றுக்கென்னின் வேய்க்கு மென்மையில்லாமை பற்றி. மின் நுடக்கத்திற்கும் பொன் நிறத்திற்கும் காந்திக்கும் உபமானங்கள். நான்குவகைப் பொன்னிருப்பதால் பொன் என்பது நான்கிற்கும் பொதுமொழியாகும். அப்போது மொழியை இங்கு சிறப்புவகையில் பொருள்படுத்தவேண்டும். "பொன்னுக்குச் சாம்புநதம்". சாம்புநதம் போன்ற நிறமும் காந்தியும் என்ற பொருள் கொள்ளவேண்டும். ஆகையால் "பொன்வயின் மேனிகொண்டாள்" என்கிறாள்.

"தாமரை தவிரப்போந்தாள்" என்று சொன்னவள், மற்றும் நினைத்து இலக்குமி முத்தேவரில் ஒருவர் நாயகி. ஒரு மனிதன் என்ன கட்டழகு வாய்ந்திருப்பினும் அவனை விரும்பி காமங்கொண்டு வருவாளா? ஒரு போதும் வராள். இவள் கூறுவது பொய் என்று தன் தமயன் கருதுவானென்று இலக்குமி யன்று இலக்குமியின் நிறத்தையும் காந்தியையும் கவர்ந்து கொண்டு அல்லிலக்குமியைப் பொலிவு குறையச் செய்தவள் என்பது தோன்ற "பொன் (இலக்குமி) வயின் மேனிகொண்டாள்" என்கிறாள். தங்கம் என்றும் இலக்குமி என்றும் இருபொருள் பட "பொன்வயின்" என்று கம்பர் கூறியிருப்பது வியக்கத் தக்கது. இவ்விரு பொருள்களும் பின் செய்யுள்களில் விளங்கும். (சூர்ப்பநகைப் படலம் செய்யுள் 59) சூர்ப்பநகை சீதையை

இலக்குமியென்று நினைத்து பின்சந்தேகிக்கிறாள். "திருவிங்கு வருவாள் கொல்லோ யென்றகந் திகைத்து நின்றாள்." இவள் நினைத்ததை இங்கு கம்பர் "சொன்னாள்" என்கிறார். இப் பொருட் கிணங்க இராவணனும் அடுத்த கவியில் "ஆரவள்" என்று கேட்கிறான். இலக்குமி என்று எண்ணி இருப்பானேல் இக்கேள்விக் கிடமில்லை.

சூர்ப்பநகை தன்னிடம் ஏற்பட்ட குற்றம், தான் இருவரை வர்ணித்த பெண் காரணமாய்ப் புகுந்ததென்றாள். நேர்ந்தது, சம்பவித்தது, ஏற்பட்டது முதலிய சொற்களில் ஒன்றைச் சொல்லாது புகுந்த தென்கிறாள். நாயனார் குற்றங்கடிதல் என்ற அதிகாரத்தில் குற்றத்தைப் பகையாகக் கூறுகிறார். ஒரு அரசன்பேரில் மற்றோரரசன் பகைமை பாராட்டிப் படை யெடுத்து வருவானேல், படையெடுத்த அரசன் படையெடாத அரசனது நாடு அரண் முதலியவைகளுக்குள் புகாவண்ணம் காப்புச் செய்துகொள்ளுவது முதல் முறையும் யுத்ததந்திரமு மாகும் (defensive). இது கூடாதாயின், இவனும் அவனைப் போலவே படையெடுத்து போர்புரிந்து வெல்லப் பார்ப்பது இரண்டா முறையாகும் (offensive). இச்சூர்ப்பநகை மேற் குறித்த முதன் முறைப்படி குற்றமாகிய பகையைத் தன்னுட் புகாமல் பாதுகாக்க முயன்றும் புகுந்துவிட்ட தென்கிறாள். இவ் வொரு சொல்லால் "குற்றமே காக்க பொருளாகக் குற்றமே யற்றம் தரூஉம் பகை" என்ற குறளைக் கம்பர் அமைத்துள் ளார். அறத்தைக் காக்க வென்று ஏனைய ஆசிரியர்கள் கூறு வார்கள். நாயனார் குற்றமே காக்கவென்று ஏகாரமும் போட் டுச் சொல்லுகிறார். அறத்தை யாரும் தம்மிடம் விட்டு நீங்காது காக்கவேணும். குற்றத்தை யாரும் தம்மிடம் புகாது காக்கவேணும்; பொருளைப் போகாது காப்பதுபோல் குற்றத் தைப் பொருளாக்கொண்டு அப்பொருள் வாராது காக்க வேண்டும் என்கிறார். இதன் பொருளை விரிக்கிற் பெருகும்.

தமிழ்க் கவிதை

[திரு. எம். எஸ். இராமாநுஜம், பி. ஏ. ஆனர்ஸ்.]

தமிழ்மொழியின் சிறந்த பண்புகளைக் கற்றோரும் மற்றோ ரும் பலவாற்றாற் புகழ்ந்து போந்தனர். மொழிநூற் புலமை சான்ற கால்டுவெல் ஐயரவர்கள், தமிழ் மொழியையும் தமிழ்ச் சாதியினரையும் நாகரிக வுலகிற் றலைசிறந்து நனிவிளங்கிய

காரணத்தான் பல்லாற்றானும் போற்றினர். தமிழ் நாகரிகத்தின் சிறப்பியல்புகளையும், புறநானூறு, திருக்குறள், திருவாசகம்போன்ற தமிழ்மணிகளையும் மேற்புலத்தார் கற்று உளத்தின் புறலேயல்லால் தெளிந்த சொற்களால் தமிழைப் போற்றுமாறும் பேருதவிபுரிந்த மேனாட்டுப் புலவர் பெருந்தகை டாக்டர் போப் ஐயரவர்களும் தமிழ் மொழியைத் தகவொடு புகழ வழியறியாது திகைத்தனரெனின், தமிழ்மொழியின் ஒண்மையும் பண்பும்தானென்னே !

மொழிநூல் வழி நந்திந் தமிழ்மொழியை ஆராயப் புகுவமேல், இம்மொழி ஒட்டுமொழி (Agglutinative) எனுங் கூட்டத்தைச் சார்ந்ததாகும். ஓரிரண்டு நூற்றாண்டுகட்கு முன்னர் மொழிநூற் புலவோர் ஒட்டுமொழிகளை யெல்லாம் இடைச்சாதியி னடக்குவர். அப்பொழுது அவர்கள் கொண்ட மொழிநூற் கருத்தாவது : மொழிகள், அமைதியும் ஆக்கமும் நோக்க, முக்கூறு படுமென்பதும், அவை அசைமொழி, ஒட்டுமொழி, கூட்டுமொழி என்பதும், அவை ஒன்றினொன்று முறைசிறந்து விளங்குமென்பதுமே, மொழிநூற் கல்வி மக்களறிவையும் கருத்தையும் தெளிவுபடுத்தாத காலம் இக்கருத்துலவிய காலம். இக்கொள்கை இந்நூற்றாண்டில் முற்றிலும் மறுக்கப்பட்டு ஒதுக்கவும்பட்டது. மொழிநூற் புலமையிற் சிறந்த ஜெஸ்பர்ஸன் முதலான அறிவர்கள் இக்கொள்கையைக் காழ்த்த ஒருதலைப்பற்று கருவியாகப் பிறந்ததென்று இழித்தொழித்தனர். உலகில் வழங்கும் மொழிகள் பலவும் இயல்பாலே அமைந்தவென்றும், அவை அமைவியல் நோக்கி முக்கூறு பட்டவென்றும், ஒவ்வொன்றும் தம் வகையில் தலைசிறந்ததே யன்றி, ஒன்றினொன் றிழிவெனக் கோடல் அறிவுடைமைக் கழகன்றென்றுங் கூறுவர். இக்கொள்கையே இற்றைநாள் அறிவுடை வுலகம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

தமிழ்மொழி ஒட்டுமொழியினத்தைச் சார்ந்ததென்றேம். உலகில் வழங்கும் மொழிகளுள் பல இவ்வினத்த. மற்று, பிறவிரண்டினும் ஒட்டினத்திற்குரிய சிறப்பியல்பென்னவெனின், மக்களுள்ளத்தில் தோன்றுங் கருத்துக்களை இயல்பினில் வழாது தெள்ளிதிற் தெரிக்க எளிதின் முடியும். இதுவும் மொழிநூற் புலவர்க்குகந்த கருத்தேயாமென்க. இப்பெற்றியமைந்து இயற்கை வளமியல்பாய்ச் செறிந்து மிளிரும் நந்தமிழ்மொழி நுண்மையும் செம்மையும் செயிர்தீர வறிந்தன்றே பண்டைப் புலவர் பெருந்தகைகளும் 'தமிழெனின் இனிமை, நேர்மை' என்ற பொருள்தந்து போந்தனர்.

தமிழ்க்கடலுக் கெல்லைகண்ட தென்தமிழ் வான்மீகியாம் கம்பன் தமிழ் மொழியின் ஒலியிசை நுட்பங் கண்டன்றே 'வண்டு தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே' என்றும், 'தமிழ் தழிஇய சாயலவர்' எனச் சிந்தாமணியாரும், கூறிச் சென்றனர். சிலர் இக்கருத்துச் சொல்வாராயினும் தமிழினிசை நுண்மை பலராலும் போற்றப்படுவதுண்மை. ஒரு மொழி செவிக்கினிமை பயப்பதாயிருப்பின் அவ்விசையின்பம் அம்மொழி யமைப்பின் காரணமாகத் தோன்றிற்றும். இவையிற்றான் நந்திந் தமிழ் மொழி 'உயர்தனிச் செம்மொழி' எனவழைத்தல் பொருந்துவதன்றன்று.

இனித் தமிழ்க் கவிதையைப்பற்றிச் சிறிதாராய்வாம். கவிதை என்பது வடமொழி. பாட்டு அப்பொருள்தரும் தூய தமிழ்ச்சொல். உள்ளத்துணர்வுகளைக் கள்ளங் கரவொன்றின்றி இனிமையும் கனிவும் நிறைந்த சொற்கள் கருவியாக, செவிக்கும் அறிவுக்கும் ஒருங்கே இன்பம் பயக்குமாறு யாக்கப்படும் செய்யுட்களே சிறந்த பாட்டெனப்படும். சிறந்த பாட்டுக்களைப் பயிலுங்கால் நாமெய்துமின்பம் வரையிறந்தது. எதிர்முகமாகக் கிடக்கும் பாட்டின் சொற்களிடை மறை வெய்தியிருக்கும் கனிவெய்திய கவிஞன், பயில்வோனுள்ளம் யாழாக, ஆண்டுள்ள உயிர் நரம்புகள் தந்தியாக, இனிமையுங் கனிவும் நிறை விழுமிய இசையை எழுப்புகின்றான். இவ்வின்பம் சிறந்த பாட்டினன்றி பிறவற்றி னெய்தலரிது. இவ்வாறு இழுமென் மொழியான் விழுமிய இசையெழுப்பும் பேராற்றல் தமிழ்க் கவிகளிடை யுண்மைச் சங்கச் சான்றோர் செய்யுட்பயின்றோர்க் கெளிதிற் புலனும். சொற்செட்டும், பொருட் செறிவும் அவர் சீரிய செய்யுட்களின் சிறப்பியல்புகள். சங்கச் செய்யுட்களின் வழக்கொழிந்த ஒரு சில சொற்களைக் கண்டு மதிமயங்கி அறிவொழியப் பெறும் இக்காலப் போலிப் புலவோர் சங்கச் செய்யுட்களின் உண்மைப் பண்புகளைப் பல்லாற்றானும் இழித்துரைத்தலை நான் பலமுறை கேட்க நேர்ந்து எல்லையில்லாத் தொல்லை நுகர்ந்தேன். வழக்கொழிந்த சொற்களாண்டிருத்தல்—பலவாயிரமாண்டுகட்கு முன்னராக்கப்பட்டவை—சங்கக்கவிகள் குற்றமன்று. தமிழ்மொழிபால் நாம் இற்றைநாள்வரைக் காட்டி வந்த, வரும், ஊக்கமின்மையன்றோ காரணம்? எனவே அச்சங்கச் சான்றோர் யாத்த ஓரிரண்டு கவிகளை மேற்கோள் காட்டி, அவையிற்றின் தகவொடு பண்பும் விளக்கிச் செல்வல்.

ஐங்குறுநூறு' என்ற தமிழ்ப்பேழை யொன்றினின்று மணி யொன்றெண்டு காட்டுவல். நாங்காணப்போம் காட்சி

மருதத்திணையின்பாற்படும். மருதமாவது இக்கால நகர வாழ்வென்று கூறின் ஒரோவழிப் பொருத்தமுடைத்து. இத்திணை தலைவன் தலைவியர் ஊடித் திளைக்கும் பகுதித்தென்பர் பண்டைத் தமிழ்வல்லோர். எவ்வாறோவெனின், மக்கட்செறிவுடைய பட்டின வாழ்க்கையினன்றோ மனையைப் பிரிந்து பரத்தையிற்சேரல் நிகழ ஏதுவாகுமென்க. இத்தகைய காட்சியொன்று நாம் கூறப்புகும் பாட்டினுள் பொதிந்து கிடக்கின்றது. பாட்டினை நோக்குவாம்:—

கரைசேர் வேழங் கரும்பிற் பூக்கும்
துறை கேழூரன் கொடுமை நாணி
நல்ல னென்னும் யாமே
அல்ல னென்னு மென்றட மென்றோளே. (ஐங். 12)

"இதனுள் தலைமகன் கொடுமைகூறிய தல்லது அக்கொடுமைக் கேதுவாகிய தொன்று விளங்கக்கூறியதில ளாயினும், இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்குமெனவே, அவற்றிற்கும் இழிவு உயர்வா மென்பதென்றில்லை. எல்லாரும் இன்பம் கோடற்குரியர் தலைமகற் கென்றமையின், யாமும் பரத்தையரும் அவற்கு ஒத்தமென்றமையின் அவை கூறினாள்." இவ்வாறு வெளிப்படையாகக் கூறுதலமையாது புலப்படக் கூறும் இவ்வுவமத்தோடே புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாகவென்று புலவரையிறந்த நலங்கெழு பாவலர் தன்னுள்ளத்தே கருதி, அவ்வாறு தன்னுளங்கொண்டனவற்றைக் கேட்போர் மனத்தினு மெழுப்புமாறு சில சொற்பெய்து போவார். இதனையே தொல்காப்பியர் முதலாய பல் காப்பியனாரும் உள்ளுறையுவமம், அல்லது உவமப்போலி என்றும் இறைச்சி என்றும் பெயரிட் டழைப்பதாயினர். இவையிற்றி னிலக்கணங்களைத் தொல்காப்பியம் போன்ற முடிந்த நூற்களிற் கண்டுகொள்க.

இங்ஙனம் பொருள் பொதிந்து பாடல்கள் யாத்தலிற் றனியின்பம் எல்லையிறந்ததென்றே கூறல் வேண்டும். உள்ளுறை, இறைச்சி முதலாயவற்றிற்குரியோரும், அமைந்த நிலனும் கூறுந் தொல்காப்பியச் சூத்திரங்களினின்றும் அவர் காலத் தமிழர் நாகரிகமும் வாழ்க்கை முறையும் ஒருவாறு அறியக் கிடக்கின்றன. இவையிற்றைப் பின்னொருமுறை காலம் வாய்ப்பின் ஆராய்வாம்.

இனி, தமிழ்ச்செய்யுட்களில் மிகைச்சொற் பயிற்சி மிக்குக் காண்கின்றமை ஒரு பழியாகக் கூறுவாரு முளராலோ வெனின், அன்னார் சங்கச் சான்றோர் சிறிய செய்யுட்களின்

சிறந்த பண்பினை அறியாதார் என்பதொருதலை. சொற்சுருக்கம் என்ற பண்பமைபெட்பு சங்கச் செய்யுட்களினன்றிப் பிறவெங் குங் காண்டலரிது. அவர்களடைகொடுத்தோதின், அவ்வடை யால் ஓதப்பெறும் பொருள் சிறப்பொன்றெய்தவேண்டும் என்பது துணிபு. சிறப்பிலாப் பொருட்குச் சிரியஅடையோ அல்லது மிகைச் சொல்லோ தந்தோதினர் என்ற குறை அன்னார்பால் காண்பதெளிமையன்று. ஒல்காப் புல மைத் தொல்காப்பியனாரே "விதப்புக் கிளவி வேண்டுவது கிளக்கும்" என்ற சூத்திரமொன்றோதிப் போந்தமை இத னைத் தெளிவுறுத்தும். இனி, உவமையும் கூறப்பெறும பொருள்களைத் தெளிவுறுத்தற்குக் கருவி செய்கின்றமையா னும் உவமையும் உயர்ந்த பாட்டுக்களிற் றனிச்சிறப்புடைத் தென்பது மறுக்கவொண்ணாததொரு வுண்மை. "உவமப் பொருளி னுற்றறுணருந் தெளிமருங்குளவே திறத்தியலான" (தொல். உவ. 295.) என்பது தொல்காப்பியம்.

உவமை என்ற பெயரான் உளத்திற்கொண்ட தெல்லாம் பெய்து போந்து, பெருமிட்டு, அணியிலக்கண மென்னும் பெரியதொரு நூலாக்கி தமிழின் தூய்மைக்கும் இனிமைக்கும் கேடு சூழ்ந்தனர் பிற்காலத்துத் தோன்றிய பலர். தொல் காப்பியத்தில் நாம் காண்பதெல்லாம் உவமவியல் என்ற ஒரு சிறு பகுதியும் ஆண்டு கூறப்பெறும் உவமை ஒன்றுமேதான். தொல்காப்பியம் தலைசிறந்த தமிழிலக்கணமென்பதும், சங்கச் சான்றோரதனை யடுத்தூர்ந்து நூல்கள் யாத்தனர் என்பதூம் ஈண்டுக் கூறவேண்டா. உவமையெனுந் தாய் வயிற்றுச் சேய் களே பிற அணிகள் பலவும் என்ற உண்மை முதனூல் கண்டு தெளிக. நிற்க,

பேராசிரியர் பி. தி. ஸ்ரீநிவாசய்யங்காரவர்களை அறியாத் தமிழர் இல்லை என்ற கூற்று உண்மை. அன்னார் சிறந்த மதிவன்மையும், காழ்ந்த கல்வித் திறனும், செஞ்சொல்லாற்ற லும்கண்டார் உவகை பெரிதும் கொள்வர். தமிழுக்கும் தமிழ் வழித் தமிழருக்கும் அவர் ஆற்றிய அரும்பணி தமிழர் மறப் பினும் தமிழ் மறவாத் தகவிற்றும். தமிழும் தமிழருமே அவர் உளக்கோயில் உறைந்திருந்தன. அன்னார்க்கு நாம் பெரிதும் கடப்பாடுடையேம். அவர் செய்த பெருநூற்களிற் சிறந்தது 'தமிழர் வரலாறு' (The History of the Tamils). இது பல ஆண்டுகளாக எஞ்சாதாற்றிய ஆராய்ச்சியிற் கனிந்த நன்னூல். அன்னார் தமிழ்ப் பாட்டின் தோற்றத்தையும் விரி வையும் கூறப்புகுங்கால் கூறுமிரண்டொரு சொற்களீண்டு நினைவுகூர்தல் பயனுடைத்து. "தமிழ்ப் பாட்டுகளில் ஒவ்

வொரு பெயர்ச்சொல்லும் அடைகொடுத்தோதப் பெறுகின்றது. இவ்வாறு யாக்கப்பெறும் செய்யுட்கள் நங்கோவிற்புற கோபுரவாயில்களாகக் காணப்படுகின்றன. கிரேக்க சிற்பத்தில் தேர்ந்த அறிவாளருக்கிது பெரும் வெறுப்புத் தருவதோடன்றி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தலும் இடையறவுபடுகின்றது. வெயின் மிக்க காடுகளில் இலையும் பூவும் பொதுளித் தோன்றும் காட்சியில் ஈனிப்பட்டுக் கிடந்தனர் தமிழர் என்ற உண்மை இதனால் வெளிப்படுகின்றது." என்றனர்.*


முன்னர் நாம் கூறியதிங்கு நினைவு கூர்தல் நலம். தமிழ்ச் செய்யுட்களடைகொடுத் தோதப்படுதல் மறைத்துமொழி கிளவியாக உள்ளவற்றை உள்ளுறுத்தறிவது காரணமாக வென்பது கண்டாமின்றே? எனவே, தமிழின் பண்பும் அமைவும் அறியாதவர்களுக்கு அவையிற்றின் சீர்மையும் புலனும் கண்டறிதல் அரிதரிது. உவமையானும், அடையானும் அறிய வேண்டுவன இருக்கின்றமையின் அவை வேண்டற் பாலன வல்லவென் றொதுக்குதலியலாதென்ப தொருதலை. கோவில்களுக்கு அழகுதரும் வானோக்கியுயர் கோபுரங்கள் போன்றன வல்ல அடையும் உவமையும் சீரிய வான்தமிழ்ச் செய்யுட்கு. அவை இன்றியமையா உறுப்புகள். அவை குன்றின் குறையுடலேயன்றி அழகும் பொலிவுந் திகழும் நிறையுடல் என்று கூறுதலியலாது.

இனி, ஆங்கில மொழிபெயர்ப்பு இடையறவு படுகின்றமைக்கு இவ்வாறடுக்கிய உவமை காரணம் என்று கூறிய தாராயற்பாற்று. மொழிநூல் நோக்காக ஆராய்வமேல் ஆங்கிலமும் தமிழும் இருவேறு குடும்பங்களைச் சார்ந்தன. ஆங்கிலம் ஆரிய இனமாகிய கூட்டுமொழியையும், தமிழ் திராவிட இனமாகிய ஒட்டு மொழியையும் சார்ந்தது. எனவே ஒன்றன் கருத்துகளைப் பிறிதொன்றிற் றிருத்தி அமைத்தல் எளிதன்று. கருத்துச் சிதைவும், அமைத்தற்றிருத்தமும் நிகழ்தல் இயல்பு. எனவே அவ்விடர்ப்பாடு அடுக்கிய தோற்றத்தான் பிறந்தது என்று ஐயங்காரவர்கள் கூறினமை பொருத்துமுடைத்தாகத் தோன்றவில்லை.

இதுகாறும் கூறிவந்தவாற்றான் தமிழின் சிறப்பியல்பு ஒருவாற்றான் விளக்கினும். இனியும் அவற்றை விளக்குமவாப் பெரிதுமுடையேம். காலமும் கடவுளருளும் நோக்கித் தமிழ் தெய்வத்தை வழுத்துகின்றேம்.

---

* Prof. P. T. S's "History of The Tamils" Chap. XVII. pp 299—300.



கீதாஞ்சலி

[திரு. க. ப. சந்தோஷம் B, A., L. T.]

கீதாஞ்சலியிலுள்ள பாடல்களைப் பயில்வோர் அறியற்பாலன சில உள. இவை பெரும்பாலும் தமிழிலுள்ள அகத்திணைப் பாடல்களை யொத்தன. அகத்திணைப் பாடல்கள், கூடுதல் பிரிதல் முதலியவற்றாற் பிறக்கும் இன்ப துன்பங்களைக் கூறுகின்றமைபோன்றே இவையும் உள்ளத்திற் பிறக்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவனவா யிருக்கின்றன.

மற்றும், உயிருக்கும் இறைவனுக்கு முள்ள இயைபை, இவை காதலி காதலனுக்குரைக்கும் முறையிற் கூறுகின்றன. இங்ஙனம் கூறுங்கால் 'நான்' என்பது உயிரையும், 'நீ' என்பது கடவுளையுங் குறிக்குமென் றறிதல்வேண்டும்.

1

என்றும் அழியா அமைப்பை எனக்களித்தாய், அது உன் திருவுளம். எளிதில் உடைந்துபோம் தன்மையதாகிய இக்கலத்தைத் (பாத்திரம், தேகம்) திரும்பத் திரும்பக் கவிழ்த்து வெறுமையாக்கி, எப்பொழுதும் அதைப் புத்துயிரால் நிரப்புகின்றாய்.

இச்சிறு நாணற்குழலை நீ குன்றுகள்மீதும் பள்ளத்தாக்குகளூடுங் கொண்டுதிரிந்து முடிவிலாப் புதுமையுள்ள இன்னிசையை அதிலெழுப்பி யிருக்கின்றாய். சாவாமை தரும் நின் கரங்கள் வந்தென்னைத் தீண்டுதலால், சிறிய என் நெஞ்சு இன்பத்தில் மூழ்கி எல்லைகடந்து சொல்லொணா உரை பயக்கின்றது.

அளவற்ற உன் கொடைகள் என் சிறு கைகளில் அடங்கின அளவே என்பாற் சேர்கின்றன. பன்னெடுங் காலங்கள் கழிகின்றன. நீ உன் ஈகையைச் சொரிந்துகொண்டே யிருக்கின்றாய். ஆயினும், இன்னும் நிரப்புவதற் கிடமுளது.

2

'பாடு' என்று நீ எனைப் பணிக்குங்கால் பெருமையால் விங்கி என்னுள்ளம் உடைந்துபோம்போல் இருக்கிறது ; நான் உன் முகத்தைப் பார்க்கிறேன். என் கண்களில் நீர் பெருகுகின்றது.

என் வாழ்க்கையில் இசைவற்றனவும் பொருந்தாதனவுமாகிய யாவும் உருகி ஒரே இனிய பண்ணுயமைகின்றன—எனது வணக்கம் உவகையோடு கடலைக்கடக்க எழும் பறவையைப்போல் சிறகெடுத்துக் கிளம்புகின்றது.

எனது பாடலில் நீ மகிழ்வுறுகின்றுயென்று நானறிவேன். உன்முன் நானொரு பாணனாகவே (பாடுபவன்) வருகின்றேனென்பதையும் நானறிவேன்.

என் பாடல்களின் நீண்டு விரிந்த இறக்கைகளின் நுனியைக்கொண்டு என்னுற் சேரவொண்ணுத உன் திருவடியைத் தீண்டுகின்றேன்.

பாடுவதாற் பிறக்கின்ற மகிழ்ச்சியால் மயங்கி, என்னை நான் மறந்து, எனதாண்டவனுகிய உன்னை நண்பனே என்றும் பேசுகின்றேன்.

3

எனதையனே! நீ பாடுகின்ற தெவ்வாறே? நானறியேன், பேச்சற்று வியப்பு மேலிட்டு நானெப்பொழுதும் (பாடலை) கேட்டுக்கொண்டிட யிருக்கின்றேன்.

உனது சங்கீதத்தின் ஒளி வையகத்தை வெளிச்சம் பெறச் செய்கின்றது; அதன் உயிர்ப்பு வானை எல்லாம் நிரப்புகின்றது; உனது பாடலாகிய தூய ஓடை, கற்போலிறுகிய தடைகளை யுடைத்தெறிந்து பாய்ந்து செல்கின்றது.

உன்னோடிசைந்து பாட என்னுள்ளம் அவாவுகின்றது. ஆனல், அதற்கேற்ற குரலை அதுபெற முயன்றும் முடியவில்லை. பேச விழைகின்றேன். ஆனல், பேச்சுப் பாட்டாய்ப் புரளவில்லை. ஏமாற்றமடைந்து அழுகின்றேன். எனதையனே! எண்ணிற் கடங்காத கண்ணிகளையுடைய உனதிசையில் என்னை அகப்படுத்தி, ஓகோ! என்னை நீ அடிமை கொண்டாய்.

4

உயிரினுக்குயிரே! உயிர்ப்பிக்கு முனது தொடர்பு என

தங்கமெல்லா முளதென்பதை யானறிந்து எனதுடலை நான் என்றுந் தூய்மையாய் வைத்திருக்க முயல்வேன்.

என் மனத்திலுள்ள அறிவாகிய ஒளியைத் தோற்றுவித்த மெய்ப்பொருள் நீயே என்பதைக் கருத்திற்கொண்டு உண்மை யல்லாதவற்றை என் எண்ணங்களை விட்டகற்ற எக்காலு முயல் வேன்.

எனதுள்ளத்திற்குள்ளே நீ கோயில்கொண் டெழுந்தருள் வதை நினைந்து என்னிலுள்ள தீமை யாவற்றையும் ஒட்டி, என தன்மைப் பூப்பில் வைத்திருக்க நாளும் முயல்வேன்.

நானெதைச் செய்வதற்கும் உறுதிதருவது நின் ஆற்றலே என்பதை யுட்கொண்டு என் செய்கைகளில் உன்னை வெளிப் படுத்துவதை என் முயற்சியாகக் கொள்வேன்.

5

சிறிதுநேரம் நான் ஒய்ந்திருந்து உனதருகே அமர்ந்திருக்க இடந்தர வேண்டுகின்றேன். இப்பொழுது நான் செய்யவிருக் கும் வேலைகளைப் பின்னால் முடித்துக்கொள்வேன்.

உனது முகத்தைக் காணுதிருக்கும்போது எனதுள்ளத் திற்கு ஒய்வும் அமைதியுமில்லை; கரையில்லாத உழைப்பாகிய கடலிலே எனது வேலை முடிவிலா உழைப்பாய்ப் போகின்றது. என்னுடைய பலகணியிலே இன்று பெருமூச்சுடனும் சிற்றொலி களுடனும் வேனிற்காலம் வந்து நிற்கின்றது. பூவெடுத்து விளங்கும் தோப்பாகிய வேந்தனவையிலே தேனீக்களாகிய பாணர்கள் இன்னிசையை எழுப்புகின்றனர்.

அமைதியுள்ள பெரிய ஒய்வு கிடைத்திருக்கு மிந்த வேளையே, முகமுகமாய் உனக்கெதிரே யமர்ந்து வாழ்க்கையை உனக்கு அர்ப்பணஞ் செய்வதுகுறித்துப் பாட ஏற்ற கால மாகும்.

6

இச்சிறிய மலரைப் பறித்தெடுத்துக்கொள், தாமதஞ் செய் யற்க!

நீ யணிந்திருக்கும் மாலையில் இது ஒரு மலராய் இடம் பெறுது போகலாம்; ஆனல், நோவு தோன்றும் வண்ணம் உன் கைகளால் அதைத்தொட்டுப் பறித்து அதைப்பெருமைப் படுத்து. நானறியாமலே பகற்பொழுது கழிந்துபோய், உன்னை வணங்கும் காலமும் கடந்துவிடுமென்று அஞ்சுகின்றேன்.

நிறத்திலும் மணத்திலும் இது சிறந்திலதாயினும் கால மிருக்கையிலே உன் பணிவிடைக்குப் பயன்படும்படி, இம்மல ரைப் பறித்தெடுத்துக் கொள்.

7

எனது பாடலென்ற நங்கை தன் அணிகளை எல்லாம் கழற்றிவிட்டாள். ஆடையிலு மலங்கரிப்பிலுமவள் பெருமை கொள்ளவில்லை. அணிகள் நமது கூட்டத்தைக் கெடுக்கும்; அவைகள் உனக்குமெனக்கு மிடையிலே தடையாயிருக்கும்; அவைகள் செய்யும் ஒலி, நீ என் காதிலோதுகின்றதைக் கேட்க விடாது.

உன்னை நான் காணுங்கால் நான் ஒரு பாவாணனென்ற வின்பெருமை யழிந்து வெட்கமாய் மாறுகின்றது. பாவலர் பெருமானே! உன் திருவடியில் நானமர்ந்தேன். நீ இசை யால் நிரப்பத்தக்க ஒரு நாணற்குழல்போல் நான் ஆகும் வண்ணம் என் வாழ்க்கையைச் சிறுமையும் செம்மையு மாக்கிக் கொள்வேணுக.

8

அரச உடையணிந்து, கழுத்திற் கல்லிழைத்த சரப்பணி கள் பூண்ட குழந்தை, விளையாடுவதால் வரும் மகிழ்ச்சியைப் பெறுது; அது அடியெடுத்து வைக்கையில் உடை அதைத் தடுக்கின்றது.

ஆடை கிழிந்துவிடுமென்றும் அழுக்கால் அது கறைப்படு மென்றும் அஞ்சி குழந்தை பிறருடன் கூடி விளையாடும் இன் பத்தை இழந்து நகர்வதற்கு மஞ்சுகின்றது.

அன்னையே! உன் குழந்தையின் ஆடையும் அணிகளும் நலந்தருகின்ற மண்ணின் புழுதியை அது தொடவொட்டாமல தடுத்து, மக்களின் பொதுவாழ்க்கையாகிய பெரிய சந்தையி லது புகுந்துபார்க்கு மதன் உரிமையைப் பிடுங்குமாயின் அத ஞற் பெற்றதென்ன? ஒன்றுமில்லையே.

(தொடரும்)

பழிக்குப் பழி *

[வித்வான் மா. இராசமாணிக்கம், P. O. L.]

மனிதன் தன் மதிப்புக்குக் கேடு நேருங்கால் பொறுமை இழக்கிறான். தன் மதிப்பும் பிறரால் கெடுக்கப்பட்டது—அவமதிக்கப்பட்டது என்ற எண்ணம் தோன்றத் தோன்ற அவன் உள்ளம் உடைகிறது; பொறுமை தவறுகிறது; ஆவேசம் கொண்டவனைப்போல அவன் காணப்படுகிறான்; தன்னை அவமதித்தோரை அவமதித்துத் தன் சிறப்பினைத் தனிக்க முயல்கிறான்; அஃதாவது 'பழிக்குப் பழி' வாங்கத் துணிகிறான். தன்மதிப்பு இழத்தலைப் பொறாத அவன் தன்னிலை இழந்து, இறைவன் அருளிய 'மன்னிப்பு' என்பதை மறந்து, மதங் கொள்கிறான். மன்னித்தலைக் கையாளாத அவன், நிலைத்த துன்ப நிலைக்கே நிலைக்களனாகிறான். தனக்கு வரும் கேட்டை அறிந்தும் அவன் பழிவாங்க அவாவி நிற்றல், மன்னித்தலின் மாண்பறியா மனக்குறையே ஆகும்.

அவன் சிறிதுநேரம் ஆழ்ந்து அமைதியாக யோசிப்பானாயின், 'பழிவாங்க நினைத்தல்' என்னும் தீய நினைவு, தன்னை மமதை கொண்டவனாகவும் தன்னலங் கருதுபவனாகவும் செய்வதை நன்கு உணர்வான்; அக்கொடிய எண்ணம் அவனது வாழ்க்கை இன்பத்தை வதைக்கும் நச்சென்பதை உணர்வான்; மன அமைதியைக் குலைக்கும் மறு என்பதை அறிவான்; 'மன்னித்தல்' ஒன்றே மாண்புறு செயல் எனத் துணிவான்.

'பழிக்குப் பழி' என்பது சரியாகவேனும் நிறைவேற்றக் கூடியதோ? எனின், அன்று. தனக்குப் பிறன் இழைத்த தீமையின் அளவை அறிந்து அவ்வளவுடைய தீமையையே செய்வது 'பழிக்குப் பழி' யாகும். அங்ஙனம் ஆற்றல் ஆகுந் தரத்ததோ? ஆகுந் தரத்ததெனக் கொள்ளினும், இப் 'பழிக்குப் பழி'யால் முன்னரே ஏற்பட்டுள்ள பகைமை மீட்டும் வளர ஏதுவாகுமே யன்றிக் குறைதல் இயலாதன்றோ? எனவே, எம்முறையிற் பார்ப்பினும் 'பழிக்குப் பழி' பாவம் பயக்கும் செயலே ஆகும். ஆதலின், அதன் தீமையை உணர்ந்து 'மன்னித்தல்' என்னும் அருஞ்செயலைக் கைக்கோடல் நன்று; அதனை இன்றே கைப்பற்றல் அதனினும் நன்று; ஏனெனின், 'பழக்கம்' கொடிது. தீயதெனக் காணப்படுவதை உடனே அகற்றாது பழக்கமாகக் கொள்ளின், பின்னர் அப்பழக்கம்

---

* சாமுயல் ஜான்ஸன் என்பார் வரைந்த 'பழிக்குப் பழி' (Revenge) என்னும் கட்டுரை தழுவி வரையப்பெற்றது.

சுடுகாடுமட்டும் நிலைத்துவிடக்கூடும். ஆதலின், தீயதைத் தொலைத்து நல்லதைக் கைக்கொள்ள 'நாள்' பார்க்கவேண்டா. 'நன்றும் இன்றே செய்தல் நன்று; அதுவும் இன்னே செய்தல் இனிது.' நாம் பிறரிடம் பெற்ற அவமானத்தையே நாளும் நினைத்து நைவதைவிட—அவ்வவமானத்திற்குப் பிரதி அவமானம் செய்வதெப்படி என யோசிப்பதிலேயே நமதரிய நேரத்தைக் கழிப்பதைவிட—அக்குற்றம் செய்தோரை மன்னித்து மன அமைதி கொள்ளலே மாண்புடைத்தாகும்.

அறிஞன் ஒருவன் தனக்குப் பிறர் இழைத்த பழியைப் பெருந்தன்மையோடு மன்னித்து, அதனை அக்கணமே மறந்து, மன அமைதியோடு வாழ்வன்; அவன் தன் அரிய நேரத்தைப் பழி வாங்கும் பயனற்ற யோசனையிற் கழியான். அறிவற்ற மூடரே பழிக்குப் பழி வாங்கப் பதைப்பர்; தம் உயிர்போன்ற அரிய நேரத்தைப் பழி வாங்க எண்ணுதலிலேயே இழப்பர்; தம் மன அமைதியையும் பிற போகங்களையும் துறப்பர்; இறுதியில் மன ஏக்கத்துடன் மடிவர். அத்தகையர் மக்களினத்தில் மாக்கள் இனத்தவர் ஆவர்; அவர், மக்கள் சுகத்தையும் அமைதியையும் இழந்தவர் ஆவர். பழிக்குப் பழி வாங்கித் தம் பகைவர் படும் துன்பத்தைக் கண்டு களிக்கும் அக்கயவர் கொள்ளும் 'இன்பம்' பொய்யின்பமேயாம்; ஏன்? அவ்வின்பம் சிறிது போழ்திருந்து மறைவதேயன்றோ! அதனால் அவர் பெறும் பேறுதான் யாது?

அறிந்தும் அறியாமலும் குற்றம் செய்தல் மனித இயல்பென்பதை இனிதுணர்ந்தவன், 'மன்னித்த'லின் மாண்பை அறிவான். ஒருவன் மற்றவனுக்குத் தனது அறியாமை மிகுதியால் தீமையைச் செய்தலும் கூடும்; அவசரத்தில் நன்மை செய்தற்குப் பதிலாகத் தீமை செய்தலும் கூடும்; அசட்டையாலும் இக்கேடு நிகழும். இவற்றை எல்லாம் பொருட்படுத்தி, இவற்றுக்கெல்லாம் பழிவாங்கப் பதைத்தல் மதியுடைமை யாமோ? இக்குற்றங்கட்கும் பிறவற்றுக்கும் மதிப்புத் தராமல் 'மன்னித்தல்' மன அமைதிக்குரிய மருந்தாகும்; குற்றஞ் செய்தலினின்றும் காக்கும் காவலன் ஆகும். ஆயின், இம் 'மன்னித்த'லை மனத்தில் நிலைபெற ஒட்டாது தடுப்பது—'தான்' என்னும் தருக்கே யாகும். தன்னை ஒருவன் அவமதித்ததால் உலகம் முழுவதுமே தன்னைக் கேவலமாக நினைக்கும் என்னும் தவறான எண்ணம் ஒருவனுக்கு உண்டாகிறது. அவன் அவ்வெண்ணத்தால் தன் பகைவனிடம் பதைப்புக் கொள்கிறான்; பழிவாங்க முயல்கிறான். தன்னை பெரியவன் எனத் தவறாக எண்ணிய அவன்—உலகினர்முன்னர்ப் பகை

வன் தன்னை அவமானப் படுத்தினன்; இனி உலகினர் தன்னைக் கேவலமாகக் கருதுவர் என்னும் தவறுனதும் பொய்யானதுமான எண்ணங்கொண்ட அவன்—தன் மன அமைதியையும் களங்கமற்ற இயற்கை மனிதத் தன்மையையும் இழந்து விடுகிறான். இதற்குத் 'தான்' என்னும் 'தருக்கே' காரணம் ஆகும். அவன் உலகினர் கொள்ளும் தவறுன எண்ணங்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தன் உள்ளுணர்வு தெள்ளிதின் அளிக்கும் ஆணைப்படி 'மன்னித்தல், மன அமைதி, நேர்மையான நடை' இவற்றை உடையனுயின், ஆ! அவன் பெறும் இன்பப் பேறு இயம்பும் திறத்ததோ!

ஒருவன் 'பழிக்குப் பழி' வாங்கும் நினைவை அறவே ஒழித்து, கைம்மேல் பயன் தராவிடினும் நேர்மையான முறையையே கடைப்பிடித்து, 'மன்னித்தல்' என்னும் மாண்புடை அருஞ்செயல் ஒளிர வாழ்தல் வேண்டும். அவனது எண்ணம் இறைவனை இன்புறுத்துவதாகவும், எஞ்ஞான்றும் நிலையுள்ள நியாயப்படி நடப்பதாகவும், இறையருள் பெறத்தக்கதாகவும் அமைதல் வேண்டும். இந்நோக்கம் இன்றிக் கேவலம் புலன்கட்கு அடிமையாகிப் 'பழிக்குப் பழி'யே நினைக்கும் பாதகன் இம்மை இன்பத்தையும் இறைவன் அருளையும் மறுமைப் பேற்றினையும் இழந்தவன் ஆவான். கேவலம் உலகத்தவரை மதிப்பதினும் மகிழ்விப்பதினுமே தன் அரிய நேரத்தையும் ஐம்புலன்களையும் ஒருமைப்படுத்தும் வீணன் வீழ்ச்சியடைந்தவனே யாவன்.

இறைவனது மன்னிப்பை விரும்பிப் பெறுதவன் எவனும் இருத்தல் அருமையினும் அருமை. நம் குற்றங்களை மன்னிக்கும்படி இறைவனிடம் மன்றுடும் நாம்—பிறர் நமக்குப் பேதைமையாற் செய்யும் குற்றங்களை மன்னித்தலன்றே மாண்பு? பிறரை அவர் குற்றத்திற்காக மன்னிக்க மனமற்ற கொடியவன் இறைவனது மன்னிப்பைப் பெறுன்; அவனது அருட்பொலிவினை எய்தான்; அவனது இன்பப் பேற்றில் கலவான்; இன்ப உலகில் உலவான்.

வரலாற்றுப் பகுதி: History & Biography

ஆறுமுக நாவலர்

[திரு. A. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M. A.]

ஆறுமுக நாவலர் தோன்றிய காலம் பாட்டுக்களிலேயே எல்லா நூல்களையும் இயற்ற வேண்டுமென்ற நோக்கம் மலிந்த காலம்; அவரவர் கற்ற கல்வியை அவரவர் பொருளேயென நினைத்துக் கொண்டு பிறர்க்கீந்தாற் குறைந்துவிடுமென்று கருதிய காலம்; நாம் அரும்பாடுபட்டு அறிந்த பலவற்றைச் சிலநாளில் அறிந்து செல்ல நினைக்கும் இவர்க்கு நாம் கூறுவதோ வென்று கருதிய புலவரிருந்த காலம்; சுவடி யொன்றிருக்குமேயாகில் அதனைப் பிறரெவர்க்குங் காட்டாது இல்லையென்றும் பலர் சொல்லி வந்த காலம்; உதாரணமாக, 'மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், சிவதருமோத்திரச் சுவடிபெற அரிதின் முயன்றும் முடியாமல் சுந்தரம்பிள்ளை யென்ற ஒருவர் செய்த தந்திரத்தாலன்றோ அவரதனைப் பின்னர்ப் பெற்றார்? அம்பலவாண முனிவரிடம் அவர் பாடங் கேட்கச் சென்றபொழுது விரைவில் அறிந்து கொண்டு செல்ல நினைத்து அவர் வந்திருப்பதாகவன்றோ கருதப்பட்டு முதலிற் பாடஞ் சொல்லி வைக்கப்படுதற்கு உரியரென மதிக்கப் பட்டாரல்லர். யமகந் திரிபந்தாதிகளும் சொற்சுவை மலிந்த கவிகளுமல்லவோ இப்புலவராலும் அக்காலத் தியற்றப் பட்டன?

இக்காலத்திலே "யாரும் பாடு புகழ் ஆறுமுக நாவலர்' இருள் நீக்கி ஒளியளிக்கவல்ல ஒரு கதிரவன்போற் றோன்றினார். மடற்பனைகள் நிரம்பிய வூரில் தென்னைமரமும், ஆலமரமும் போல வந்து பயனளித்த பெரியாராகிய இவர் 1823-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தப்பிள்ளை, சிவகாமியம்மையார் இவர்களுக்குப் புதல்வராகத் தோன்றினார். தோன்றிய இவர் நல்ல பரம்பரையில் வந்தவர்; சிவஞானசித்தியாருக்கு ஒரு நல்லுரை இயற்றிய ஞானப்பிரகாசர் மரபில் வந்த இவர், கையில் எழுத்தாணியுஞ் சட்டமுங் கொண்டே ஒரு தமிழ் நாடகத்தை யெழுதியக்காலே துஞ்சிய ஒருவரது புதல்வராகப்

---

*இது கொழும்பு விவேகாநந்தர் சபையில் ஆறுமுக நாவலர் குருபூசை நாளில் தலைமை வகித்து 28 11-37-இல் திரு. செட்டியாரவர்கள் செய்த விரிவுரையின் சுருக்கம்.

பிறந்த இவர், புராணப் பிரசங்கங்கட்கெல்லாம் இவரது சிறு வயதில் அழைத்துச் சென்ற மயில்வாகனரை மைத்துனராகப் பெற்றிருந்த இவர், சேனாதிராயர், சரவணமுத்துப் புலவர் ஆகிய பெரியார்களை ஆசிரியராகப் பெற்றிருந்த இவர் பிற்காலத்தில் பெருமையும் பீடுமுற்றது வியப்பன்று. ஓய்வு நேரங்களையெல்லாம் வீணே கழிக்காது குடியில்லாத் தனியிடங்கள் கண்டு ஆங்குச்சென்று புத்தகங்களைப் படிப்பதில் பயன்படுத்திய இவர், உரைக்கப்படும் பொருளை உளத்தமைத்து மாணவர் கொள்ளு மாற்றலறிந்து அதற்கேற்பப் பலரைக் கல்வி பயிற்றுவித்த இவர், தம் மாணவரில் ஒருவர் வைசூரி நோயால் வருந்தியபொழுது அவரை இவர் போய்ப் பார்க்கக் கூடாதென்று பலர் ஒருபால் வற்புறுத்திச் சொல்லவும் கேளாது அவரிருந்த இடஞ்சென்று அவரைக்கண்டுபேசி இருந்து ஆவனபுரிந்து வந்தமையால் மாணவர்பால் இருந்த அன்பினைப் புலப்படுத்திய இவர், சிதம்பரத்திலும் யாழ்ப்பாண வண்ணார்பண்ணையிலும் பள்ளிக்கூடங்களை யமைத்துப் பலருக்கு அறிவு புகட்டி வந்த இவர், பின்னாளிற் பெரிய பிரசங்கியாராகவும், பதிப்பாளராகவும், உரையாசிரியராகவும் ஆனது வியப்பன்று. "வார்த்தை நூறாயிரத்தொருவர்" என்பதில் நம்பிக்கைகொண்டு சில சொல்லுஞ் சொல்லா மக்கள் நிறைந்திருந்த காலத்தில் எடுத்துக்கொண்ட ஒரு பொருள்பற்றித் தொடுத்துப் பலமணி நேரம் ஆடாமல் அசையாமல் இருந்து பிரசங்கிக்கும் ஆற்றல் படைத்தவர் இவர். "ஆயத்தமில்லை," "சைவசமயமே சமயம்" என்ற தலைப்புகளின் கீழே இவர் செய்த பிரசங்கங்கள் மிகச் சிறந்தவெனக் கூறுவர். நன்னூல் விருத்தியுரை, திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து ஆகியவற்றைப் பிழையறப்பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்த வள்ளலார் இவர். நன்னூற் காண்டிகையுரை, கோயிற் புராணவுரை, சிவதருமோத்திரவுரை ஆகியவற்றை இயற்றிப் புகழைத் தமதாக்கிக்கொண்டவர் இவர். வசன நடை கைவந்த வல்லாளர் எனத் திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களாற் பாராட்டப்பட்ட பெருமையையுடையவர் இவர். பாலபாடங்கள், சைவ வினாவிடை, திருவிளையாடல்வசனம், பெரியபுராண வசனம் ஆகியவற்றையெழுதித் தமிழ்மக்கள் வசன நடை யெழுதப் பயில்வதற்கு அடிகோலியவர் இவர். இவர் எழுதிய பால பாடங்களை வசனநடை எழுத முற்படும் சிறுவர்கள் கைக்கொள்ளத்தக்க நடைவண்டியென்று சொல்லலாமென்றும், பெரிய புராண வசனத்தை வசனமுங் கதையுமெழுத முற்படும் பெரியார்களும் விரும்பி

நோக்கத்தக்க வழிகாட்டி யென்றியம்பலா மென்றும் திரு மணம் செல்வகேசவராய முதலியார் கூறியுள்ளார். தமிழ் வசன நடைச் சரித்திரத்தில் இவருக்கு என்று மழியாப் பேரிடமுண்டு.

தமிழ்க்கவிகளிற் பயின்ற இவர் கவிஞராக இராது வாழ்ந் திருத்தல் முடியாது. விரும்பினரே யாயின் இவருடைய சம காலத்தவராகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை, இராமலிங்க சுவாமி கள் இவரைப்போன்ற கவிஞர்க் கொப்பக் கவியும் இயற்றி யிருப்பர். இதன் உண்மை இவர் பற்பல சமயங்களிற் பாடிய தனிப்பாடல்களானும் "கதிரை யாத்திரை விளக்கப்" பகுதி யானும் பெறப்படும். பலரும் அறியத்தக்க வசனமே அக் காலத்தில் வேண்டப் படுவது என்ற வுணர்ச்சியால் இவர் கவி செய்து பெறத்தக்க புகழைத் தியாகஞ் செய்தாராதல் வேண் டும்.

இவ்வளவு பெருமைவாய்ந்த இவரை அக்காலத்தில் தமி ழர் போற்றுதிருந்தாரல்லர். திருவாவடுதுறை யாதீனத் தலை வர் நாவலர் என்ற பட்டத்தை வழங்கியும், மதுரைத் திரு ஞானசம்பந்த சுவாமி மடத்தலைவர் இவருக்கு ஆறு கட்டிச் சுந்தர வேடங்களை உரியவெனத் தர முற்பட்டும், திருவண்ணா மலைக் குன்றக்குடி மடத்தலைவர் இவரைச் சிவிகையிலேற்றி ஊரெங்கும் உலாவரச் செய்தும், சில சைவ அன்பர் இவரை ஞானாசிரியரெனக் நினைத்துப் பேணியும் வந்ததாக அறிகின் றோம். ஆறு கட்டிச் சுந்தர வேடங்களைத் திருஞான சம்பந்த மடத்தார் கொடுப்ப இவர் அவற்றைப் பெற்றுக் கொள்ளாதது, "கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர் கொள் ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று" என்ற பழம் பாடற் பகுதிக்குத் தக்கதொரு பிற்கால உதாரணமாதல் காண்க.

இவர் ஒழுக்கத்திற் றலைசிறந்தவர் என்றும் தமிழுக்கும் சைவத்திற்குந் தொண்டாற்றும் பொருட்டு மணந்து பெறு மின்பத்தை வேண்டாமெனத் துறந்தவரென்றும், தருமசிந்தை யுடையவர் என்றும் பிறரைப் பாதுகாக்கும் பெற்றி யுடைய வர் என்றும் அறிகின்றோம். "நனவிலும் நன்னடை தவறாத சீலன்" என்று சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்களாற் சிறப்பிக்கப் பட்டவர் இவர். கொடுக்கப்பட்ட பொருள்களைப் பற்பல சமயங்களிற் பெற மறுத்தாரென்பு தால் இவரது தன்னலமின்மை புலப்படும். இவர் சைவர் களுக்குச் செய்ததொரு விஞ்ஞாபனம். திரு. த. கைலாசம் பிள்ளை அவர்கள் இவரைக் குறித்தெழுதிய புத்தகத்தில் வெளி யிட்டிருப்பது இவரது தருமசிந்தையைத் தெற்றெனக் காட்டும்.

நந்தனார் சரிதம் இயற்றிய கோபாலகிருஷ்ண ஐயர் என்பாரை இவர் பாலித்தது பிறரைப் பாதுகாக்கும் இவரது பெற்றியைக் காட்டும். சென்னையில் வாழ்ந்துவந்த ஒரு காலத்தில் மடைப்பையன் எவனும் இல்லாத காரணத்தினாலே பூசை நைவேத்தியங்களை மாத்திரமே யுண்டு பிறிதொன்றும் வேண்டாது இவர் இருந்துவந்தது இவருடைய தியாக புத்தியை யன்றோ வுணர்த்தும்!

இவரது சைவப்பற்று சொல்லுந் தரத்ததன்று "அவநெறியாய வனைத்துங் களைந்து சிவநெறி வளர்க்கும் திவ்விய குணத்தர்" என்றும், "சைவமெனும் பயிர் வளர்க்கும் எழிலி போல்வார்" என்றும் மீனாட்சிசுந்தர நாவலர் அவர்கள் இவரைப் போற்றியுள்ளாரேயாயின் இவர் திறன் எத்தகைத்தாயிருத்தல் வேண்டும்! திருநீறு பூசியே எக்காலும் வேலைக்கு வருவேனென்ற நிபந்தனையைப் பர்சிவல் துரை என்பவரிடத்தில் இவர் செய்துகொண்டனரென்றால், தமையனார் தியாகராசர் என்பார் பெரிய புராணக்கதைகள் கட்டுக்கதைகள் என்றுசொல்லியதைக்கேட்டு வாளினால் அவரைக் கொல்ல இவர் முற்பட்டனரென்றால், இவருடைய அழுத்தமான சைவப் பற்று சாதாரண மக்களிடைக் காணப்படுவதொன்றன்று என்பது எளிதிற்புலனாம்.

"சுண்ணவெண் சந்தனச் சாந்தும்...................தின்னென் செடிலப்புனலும்" உடையார் ஒருவரது தமராகிய இவர் அஞ்சத்தக்கதும் உண்டோ? உண்டெனின், இவர் அஞ்சியன வெல்லாம் பழியே. அஞ்சாதிருந்தது வலியுடைய மக்களையாம். இதற்கு உதாரணமாக, செல்வாக்குமிக்க டைக் துரை யென்பார்க்கு இவர் வாய்பேசாது கையினால் தமையனாருடைய வீட்டைக் காட்டிச் சென்றமை சொல்லப்படுவதுண்டு. அங்ஙனமே பொருள் மிகப்படைத்த சேதுநாட்டுத் தலைவர் பொன்னுசாமித் தேவரிடம் இவர் வருவதா யிருந்தால் தேவர் எழும்போதெல்லாந் தாமெழுமாறு வற்புறுத்தக் கூடாதென்றும், அவர்முன் இவர் மேற்றுணி எடுத்து விடவேண்டுமென்று பணிக்கக் கூடாதென்றும் இனைய பிறவாறும் நிபந்தனைகளைச் செய்துகொண்டு இவர் அங்குச் சென்றார் என்றால், இது பொருளுடையாரிடத்தில் அஞ்சாதிருந்த இவரதாற்றலை வெளிப்படுத்துகின்றதன்றோ?

இவர் பழமையைப் பெரிதும் போற்றி யொழுகி வந்தவரென்பது, "ரோசாமலர்" இவரது பூசையில் உபயோகப்பட்டு வந்ததேனும், வடமொழிப் புட்ப விதியில் சொல்லப்படாத காரணத்தால் தாம் இயற்றிய தமிழ்ப் புட்பவிதியில் இவர்

சேர்க்காது விட்டமையால் இனிது புலப்படும். இப்பழமை விரும்பியார் பிரிட்டோ துரைக்கெதிராக, திரு. பொ. இராமநாதன் அவர்களுக்குதவியாக இலங்கைச் சட்டமன்றத் தேர்தலில் உழைத்ததை யறியும் நாம் இவர் புதுமையிலும் சிலகால் இணங்கினவர் என்பதை யறிதல் கூடும்.

எல்லாவற்றிலும் சிறப்பாக இவருடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து எனக்கு உவகையளிக்குஞ் செய்தி இவர் சைவமக்களாவார் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களையே செய்யவேண்டும் என்று வற்புறுத்தியிருப்பது. இவர் இங்ஙனம் நான்காம் பால பாடப்புத்தக முதற்பாடத்தில் மாத்திரமன்றித் தம் தமையனருக்கு எழுதிய கடித மொன்றிலும் வற்புறுத்தியுள்ளார். "சிவ வழிபாட்டிற்கு அங்கம் பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும். இவையல்லாத வழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியங் கொள்ளாமலும் தின்கிற மருந்துக்குச் சமானமாகும்" என்னும் பகுதி அக்கடிதத்திற் காணப்படுகிறது.

இப்பெரியார் இவ்வுலகை நீத்து ஐம்பத்தெட்டாண்டுகளாகியும் அவரை இன்றுகாறும் தமிழ் நாட்டாருஞ் சைவரும் போற்றி வருவதொன்றே இவரது சிறப்பை விளக்கும். இவர் பெயர் தமிழ்நாட்டிற் புல்லும் பூண்டும் உள்ளவரையில் மக்களால் மறக்கப்படாது என்று கூறுவது மிகையாகாது.

நாவலர் நல்லிசை பரவுக!

விலங்குப் *பட்டிகள்

[திரு. மா. பாலசுப்ரமணியம், M. A.]

விலங்கினங்களை வளர்த்தல் சில மாந்தர்க்கு ஒரு [1]விளையாட்டுப் பழக்கம். சிலர் மான்களை வளர்ப்பர்; ஒரு சிலர் குரங்குகளை வளர்ப்பர்; சிற்சிலர் கிளிகளை வளர்ப்பர்; பிற சிலர் புறாவுகு பூனைகளை வளர்ப்பர்; பெரும்பாலார் நாய்களை வளர்ப்பர். ஆயின் எவரும் பாம்புகளையாதல் முதலைகளையாதல் வளர்க்க நாம் கண்டிலம். எனினும் இன்று மேனாடுகளில் பாம்புகளையும் முதலைகளையும் வைத்து வளர்க்கும் பட்டிகள் சில இருக்கின்றன என்பது நாம் அறிதற்குரியது.

---

*பட்டி = Farm, 1. விளையாட்டுப் பழக்கம் = Hobby.

இத்தகைய விலங்குப் பட்டிகளை முதன்முதலில் நிறுவிய சிலருள் [2]காம்பெல் என்னும் ஆங்கிலேயரும் ஒருவர். அமெரிக்காவில், [3]அர்கன்ஸாஸ் என்னும் நாட்டில், [4]ஹாட் ஸ்ப்ரிங்ஸ் என்னும் இடத்தில், இவர் ஒரு முதலைப் பட்டியை ஏற்படுத்தினர். இம்முயற்சியினல் பொருள் வருவாய் மிகுதிப்படுவதற்கு வழியிருத்தலைக்கண்ட பலர் இத்தகைய பட்டிகளை அமெரிக்காவில் பல இடங்களில் தோற்றுவித்தனர்.

செயற்கைத் திரிபுகளில்லாத இயற்கைப் பாங்கான இடங்களில் வளர்க்கப்படின், முதலைகள் விரைவில் பெருகும். ஒரு தாய்முதலை ஒரு முறையில் அறுபது முட்டைகளும் இடும்: பொதுவாக ஒரு முறையில் முப்பது முட்டைகளுக்குக் குறையாமல் இடும். இம்முட்டைகளை அத்தாய் விலங்கு மணற்பரப்பின்மேல் இட்டு, அம்மணலைக் குவித்து முட்டைகளை மறைத்து வைக்கும். ஒவ்வொரு முட்டையும் ஏறக்குறைய ஒரு வாத்து முட்டையளவினதாக இருக்கும். மணற்பரப்பில் மறைத்து வைக்கப்பட்ட இம்முட்டைகள் நாளடைவில் சூரிய வெப்பத்தால் பக்குவப்பட்டுக் குட்டிகளை வெளிப்படுத்தும். இக்குட்டிகள் யாவும் நன்கு முதிரும்வரை பெருமுதலைகளுக்கு உணவாகக் கிடத்தலின், இறுதியில் ஒருசில குட்டிகளே வளர்ந்து முதிர்ந்து நிற்கின்றன. ஆயின் பட்டிகளில் முட்டைகள் தாமே முதிர்ந்து வெடிபட விடப்படுவதில்லை. அவை அடைப் பொறிகளில் வைத்துப் பொரிக்கப்படுகின்றன. இம்முறையால் தாய்முதலை இடும் முட்டைகள் யாவும் குட்டிகளாகத் தேர்கின்றன.

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பது பழமொழியாயினும், இன்று, பட்டிகளில் வளர்க்கப்படும் முதலைகள் தம் மூர்க்கத்தன்மையை விடுத்து, சிறுசிறு விளையாட்டுச் செய்கைகளைக் கற்றுக்கொள்கின்றன. சிறு வண்டிகளை ஈர்த்து நகர்ந்து செல்லவும், உயர்ந்திருக்கும் நிலையிலிருந்து சாய்பலகை வழியாக விரைந்து இழிந்து தரையைச் சேரவும் அவை பழக்கப்படுகின்றன.

நிற்க, அண்மையில், தென் அமெரிக்காவில் ஒரு பாம்புப் பட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதும் நாம் அறிதற்குரித்து. பலவகைப்பட்ட பாம்புகளின் நஞ்சுகளை ஆராய்ந்து அவை தமக்கு ஏற்ற முறிவுகளைக் கண்டுபிடிக்க, இப்பட்டியில், முயற்சிகள் நடைபெறுகின்றன. பாம்பு நஞ்சினைச் சிறுகச்

2. Mr. Campbell. 3. State of Arkansas. 4. Hot Springs.
5. Incubator.

சிறுக விலங்குகளின் செந்நீர்க்குள் ஏற்றி அவ்வாற்முன் அச்செந்நீரை நஞ்சால் ஊறுபடாத பொருளாக மாற்றி, அதனின் நீர்ப்பாகத்தை எடுத்து, பாம்பால் கடிக்கப்பட்டவர் தம் செந்நீரினுள் ஏற்றினல் நஞ்சு முறிந்து இடையூறு நீங்கும் என்று முடிவாகக் கண்டறிந்திருக்கின்றனர்.

இற்க, மேற்கூறப்பட்ட பட்டிகள் தவிர புறப் பட்டிகளும், கோழிப் பட்டிகளும், கிளிப்பட்டிகளும், எருதுப்பட்டிகளும் இஞ்ஞான்று உலகத்துப் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

செய்திகளும் குறிப்புகளும் : News and Notes

புதுக்கவி :

தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி

[திரு. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்]

வேங்கடங் குமரியின் விரிந்திடு அமிழ்தே!
விளம்பிய இனிமையின் சிகரமாங் கொழுந்தே!
பாங்குடைப் புலவர்கள் பயின்றிடு கனியே!
பண்புடன் பாரினில் பரந்திடு பரப்பே!
நீங்ககல் நலனுறு செந்தமிழ்த் தேவி!
தீஞ்சுவைப் பாதரு சீருடைச் செல்வி!
ஓங்கிய புகழுடை உத்தம நிதியே!
உயர்தமிழே பள்ளி எழுந்தருளாயே! (1)

புலவர்கள் நாவினில் பொருந்திட என்றும்
பொய்யகல் உள்ளத்தில் விருந்தென உணர்வோய்!
அலகினில் ஆதியும் அந்தமு மில்லா
அருந்தமிழே உனதழகதே அழகு!

பலனெலா மொன்றெனு உந்தனைக் கண்டோர்
பற்றுவர் உண்மையைப் பார்நிறை செல்வி !
நலமுற அருள்பெற நயமுற இன்றே
நற்றமிழே பள்ளி எழுந்தருளாயே ! (2)

தென்மதுரை நகர் சீர்பெருந் தகைத்தாய்
தெரிந்திடு தலைச்சங்கந் தனிலிருந் தாயே !
உன்னரும் இறைவனும் உடனுனை வளர்க்க
ஓம்பினர் மன்னரும் மக்களும் ஒருங்கே !
பன்னருங்கலை யுடைப் பாவையே நீயும்
பார்த்தவர்க் கருள்நிலை பார்த்தனம் மறக்கேம்.
இன்னருள் புரிந்தெமக் கேற்ற மதளிப்பாய் !
இன்தமிழே பள்ளி எழுந்தருளாயே ! (3)

நற்கபாடபுர நன்னகரிருந்து
நல்லிடைச் சங்கத்தை நாட்டினர் புரப்ப
பொற்புடைச்செல்வியே ! பூந்தமிழ்த் தாயே !
புண்ணியம் பயந்தருள் இன்னிய முதல்வி !
விற்பனர் கற்றவர் மற்றவர் யாரும்
விரும்பிடும் இன்தமிழ் விருந்தெனு மமுதே !
அற்புதம் அற்புதம் நின்மொழிப் பெருமை
அருந்தமிழே பள்ளி எழுந்தருளாயே ! (4)

இயற்கையில் இறைவனின் ஏற்ற மதுணர்ந்தே
எடுத்துரைத் தார்அதை இனியநற் றமிழில்
அயர்ச்சியை அகற்றுவர் நின்நிலை உணர்ந்தோர்
ஆண்மையும் பெறுவர்மற் றவனியிற் றிகழ்வர்
மயக்கம தறுத்துமே மாண்பொரு ளுணர்வர்
மற்றெவை உற்றெதிர் வருத்தினும் இடரார்
தயக்கமில் இனிமையில் வாழ்குவர் தாயே !
தண்டமிழே பள்ளி எழுந்தருளாயே ! (5)

ஐம்பெருங் காப்பிய அணிநல முடையாய் !
அரும்பெரும் பத்துப்பாட் டாடையு முடையாய் !
நம்புறு பதினெண் கீழ்க் கணக்கினை உடையாய் !
நாட்டிய கலைகளின் நலமெலா முடையாய் !
இன்பத் தொல்காப்பிய இலக்கண முடையாய் !
இனியநல் இறையனார் அகப்பொருள் உடையாய் !
அன்புடைத் தமிழ்மொழி ஆகிய முதலே !
அருளுருவே பள்ளி எழுந்தருளாயே (6)

முப்பெரு வேந்தர்கள் ஒருபுறம்புரக்க
முத்தமிழ்ப் புலவர்கள் ஒருபுடை தாலாட்
டொப்பினில் பாடிட உயர்திரு மகவாய்
ஓங்கினை இன்றிவண் உற்றிடு தாயே!
செப்பிடு அகப் பொருட் செறிவினை உடையாய்
தெய்விகக் காதலைத் தெரித்திடு முதல்வி!
ஒப்புனக் கொருவரு மில்லையி துண்டு
உத்தமியே பள்ளி எழுந்தருளாயே! (7)

எக்குலத் தாரெனும் வேற்றுமை யின்றி
எம்மதத் தாரினும் இரண்டெனலின்றி
மிக்குடை ஒற்றுமை வழிதனைக்காட்டி
மேன்மைத் தமிழர்கள் எனஉணர்த் திட்டாய்!
ஒக்கலும் நண்பரும் உளமுவந் துன்னை
உச்சரிப்பார் கண்ட வுடனருந் தமிழே!
பக்குவ உணவெலாம் நீ யெனப்புகழும்
பைந்தமிழே பள்ளி எழுந்தருளாயே! (8)

களவெனும் மணமதிற் காணரு மின்பம்
காட்டியே காதலை மீட்டிடுந் தேவி!
உளமுவந் தாரெலாம் ஒண்மைமிழ் தாக
ஓங்குவர் நின்புகழ் ஓங்குக என்றும்!
அளவிலா மக்களும் ஆகும் இயற்கை
அனைத்தும் நின் நிலைத்திறம் ஆகுவதறிந்தே
உளமடை திறந்துனை ஓதிடக் கண்டார்
உயிர்த் தமிழே பள்ளி எழுந்தருளாயே! (9)

உன்னரு மக்கள் யாம் உன்னருள் மொழியால்
உணர்ந்துவம்! அயர்ச்சியை ஒழித்திடல் வேண்டும்!
இன்னருங் கலைஅணிந் தினியநன் முகத்தோ
டெங்கள்முன் எழுந்தருள் எமதருட் டமிழே!
மன்னவர் மற்றவர் மாற்ற மொன்றின்றி
மண்ணின்மேல் சமமென வந்துனைப் பணிந்தோம்!
உன்னருள் விழியுடன் கண்டெமைப் புரக்க
ஓங்குமென் தமிழன்னை உடனெழுந்தருளே 10

தமிழ்க்குமரன் தாழிசை

[வித்துவான் மு. ரா. கந்தசாமிப்பிள்ளை, மதுரை]

குமரன். கண்மலர் துளிசிந்தக் காரிகை முகம் வாடக்
காரணம் ஏனோ? தெய்வ யானையே கண்ணே
(காரணம்)

தேவசேனை: வாழிய! வஞ்சக! மையல் வலையிற் பட்டீர்
வந்தெனைத் தீண்டலை மன்னரே சுவாமி
(வந்தெனை)

குமரன்: மன்னவன் என்றிருந்தும் மையலிற் படுவேனோ
மையலை உரைத்திடேன் மாதராய் இன்னே
(மையலை)

தேவசேனை: மான்வயிற் றிற்பிறந்த வள்ளிக்கொடி வலையில்
மன்னிய நீரறிய வல்லீரோ சுவாமி (மன்னிய)

„ வேடர் குலக்குமரி மேல்மயல் ஆகிநீரும்
வேட விருத்த ராக வில்லையோ சுவாமி (வேட)

குமரன்: அல்லிகள் நடுவொரு தாமரை வாய்த்திடினும்
அக்குளம் அல்லியின்பேர் ஆகுமோ மாதே
(அக்குளம்)

„ எவ்வகை யாயினும் நினது மகிழ்நனேயான்
எனதுமனை யவள்வே றியாவளோ மாதே
(எனது)

தேவசேனை: இவ்வகை கூறியே என்னை மயக்குகின்றீர்
என்னிடம் செல்லா துங்கள் மாயமேசுவாமி
(என்னிடம்)

குமரன்: இன்னதற் காகநீ இதயம் வருந்தலாமோ
என்பிழை பொறுத்திடின் என்னவோ செல்வி
(என்பிழை)

தேவசேனை: வருந்தலை வள்ளல்நின் மகிழ்முகங் காண்பதன்றி
மற்றொரு பேறெனக்கு வேண்டுமோ நாதா
(மற்றொரு)

இன்னவ ளுடன்மகிழ்ந் தேகிடு வோனைக்கண்டு
எழின்மனைக் கதவந்தாள் இட்டனள் வள்ளி

(எழின்மனை)

வள்ளி : வள்ளிக் கொடிமனையில் தெள்ளு தினைமாவுண்ட
கள்ளக் குமர! நினைக் காணலேன் சுவாமி

(கள்ள)

குமரன் : என்னுளங் கொள்ளைகொண்ட வள்ளிக்கொடி-
மயிலே
என்பிழை சொல்லாமோ இன்பமேபெண்ணே

(என்பிழை)

வள்ளி : ஒன்றுரைத் தொன்றுசெய் உத்தம நின்னைமாய
வித்தகன் என்றுரைக்க வேண்டுமே சுவாமி

(வித்தகன்)

குமரன் : மாயங்கள் அறிகிலேன் மாதேஎன் மனநோகும்
மறுமொழி வேண்டுவதோ மங்கையே வள்ளி

(மறுமொழி)

வள்ளி : ஆனையின் மாயத்தால் அன்று மணந்திலீரோ
இன்று பிறர்நலங் கொண் டீரையா சுவாமி

(இன்று)

குமரன் : கற்பினும் பெரிதாகும் காதலே என்றறிந்தும்
கலங்கிட வேண்டுவதென் கண்மணி-வள்ளி

(கலங்கிட)

வள்ளி : ஈதறியாதுநொந்தேன் என்னுயிர்க் காதலயான்
இன்னே கதவந்திறந் தேனையா சுவாமி

(இன்னே)

என்னநன் மனைவியர் ஊடல்தவிர்ந்து மகிழ்
எங்குலக் குமர! நின் தாள்களே—சரண்

(எங்குல)

விடியற் காலம்

[லால்குடி திரு. சே. வேங்கடேசன்]

வையகம் விளங்க வேற்கை வைத்தவர் விளித்து நோக்க
துய்யகுக் குடமும் சால தொனியெடுத் துரக்கக் கூவ,
வெய்யவஞ் ஞானம் ஞானம் வருவவும் போவ போனும்
பய்யவே பய்யக் கங்குல் பொழுதது போயிற் றம்மா. 1

உழுபவர் பண்ணை நன்றாய் உழுதபின் விதைகள் தூவி
பழுதுகள் வாரா வண்ணம் பயிரது செழிக்கப் பார்க்கும்
விழுமிய தன்மை யாளர்வேளா ளர்துயில் களைந்து
மழுவினைத் தோளில் தாங்கி மேதிக ளோட்டிச் சென்றார். 2

புள்ளினம் கூவாநிற்பப் பொழுதது புலரக் கண்டு
நள்ளிருள் நீங்க வெய்ய நாற்காலி மறைத லுற்ற
ஒள்ளிய கருப்பு வில்லோன் ஓடினு னினித்தன் செய்கை
எள்ளுவ ரினியெல் லோரு மென்பது கருத்தில் கொண்டு. 3

காகமும் கரைய கோழி குருவியும் கிள்ளை கூவ
மேகத்தைக் கண்டுகூவும் மயில்குயில் முதல வெல்லாம்
ஆகம திரக்கை கொண்டு அடிக்கடித் தாநந் தித்து
தேகத்தை மறந்த தெய்வத்தொண்டர் போன்றிருந்த வம்மா. 4

இருளது விரும்பு மாந்தை இருளது விட்டு நீங்க
இருளது நாடி ஏகி இருந்தது மலைப்பி லங்கள்
மருவுபுள் ளினங்க ளெல்லாம் மனையாளை விட்டுநீங்கி
அருமைதம் குஞ்சு கட்கும் ஆகாரம் தேட லுற்ற. 5

காதலர் துயில்களைந்தார் காலைவந் தணுகிற்றென்று
ஓகருந் துயருள் புக்கார் ஓர்சிறு போழ்துதன்னில்
போதது விடிந்ததின்று புல்கவுமில்லோ மென்று
நாதனும் நாயகியும் நனிமிக வருந்த லுற்றார். 6

வருந்தியும் வருந்தி நன்றாய் விடிவதன் முன்னர் விடு
தெருமுதல் சுத்தி செய்து தேர்ந்ததோர்கோ லம்போட
புருடனின் கரமகற் றிப்பொற் பாதமும் வருடிப் பின்னர்
இருகரத் தாலே பாதம் கண்களில் ஒற்றிக் கொண்டார். 7

நல்லதோர் நாளதாக நாதனுக்காக வேண்டும்
பொல்லன நேராவண்ணம் பொழுதது போக வேண்டும்
கல்லினும் கடிய நெஞ்சும் கணவனுக் குருகவேண்டும்
புல்கவும் நேரவேண்டும் பொழுதது விடியு முன்னர். 8

என்றுமே தெய்வம் வேண்டி ஏந்திழை மார்களெல்லாம்
சென்றுமே கொல்லை புக்கு செய்கடன் முடித்த பின்னர்
கொன்றை யதனிந் தவேணிக் கடவுளைக் கருத்தில் கொண்டு
கன்றினர் தங்கள் தம்மைக் காப்பாற்ற வேணுமென்று. 9

அரிசியின் மாவெடுத்து அழகான கோல மிட்டார்
வரிசை யதிசைவாய் நேர வளையல் கள்கல கலென்ன
சிரித்தன என்பநேர செய்கையதிரவில் தம்மை
திரிதர வொட்டாவண்ணம் தேக்கிய கைகளம்மா. 10

ஆடவர் துயில்களைந்தா ரருகினி லவளைக் காணார்
தேடவும் தேடி வினை தயங்கவும் நிற்க லுற்றார்
ஈடல்ல இவள் நமக்கென்செய்குவோ மிவளை யென்று
ஊடல்கள் கொள்ள லானார் உயிருக் குத்துணை வரன்னார். 11

துயிலது நீத்தவர்தம் துகில்களைத் திருத்திக் கொண்டு
தயிலத் தைதலைக் குஇட்டு சிவினர் சவுசம் செய்தார்
பயிரது பார்த்தார் பின்னைப் பற்களைச் சுத்தி செய்தார்
வெயினிற பூதிகொண்டு விற்றனர் விதிகள் செய்ய. 12

மைவண் ணத்தண்ணலாரின் மகிமையைப் பாடிக்கொண்டு
செய்வண்ண மத்தினாலே செங்கை கள்சிவந் துசோர
நெய்கொண்ட வெண்ணெய் மேலே நெருங்கியே மத்தில்சேர
தையலர் கடையலுற்றார் தாழியில் தயிரைத் தானே. 13

இன்பா லின்வாசம் வீச எழுந்தது பூனைபெல்லாம்
நன்பாலிங்கு உண்டு நாமிதைக் கொள்ளவேண்டும்
என்றவண் வந்துவந்து வாலதை யுயரத் தூக்கிக்
கன்றுதல் அவர்பாட்டிற்குக் கனசுதி போன்றதம்மா. 14

கதிரவன் கிரணங் கொண்டு குணதிசைக் கடலில் தோன்ற
மதியமும் மேலே மேற்குத் திக்கிலே மழுங்கி நிற்க
விதிவலி யுயரத்தூக்க விற்பன் னராலோர்தம்முன்
அதிகமாய்க் கற்றுமற்பர் அடையும் பேறொத்தவம்மா. 15

தாமரை விரித்த தந்தம் செய்யிதழ் கயங்களெல்லாம்
சோமனின் கிரணத்தாலே சுகமுறு மாம்பலெல்லாம்
வேமெனத் தங்கள் புட்பம் வெய்யவன் கிரணத்தாலே
சாமென உன்னியுன்னிச் சேர்ந்தன யிதழை யெல்லாம். 16

விதிவலி பலமதாக விந்தனர் பெரியோர் ஆசு
மதியிலா ரவரையென்னி ஏளனமிகழ்தல் செய்வார்
அதிதனை நேர்ந்து அன்னோர் அடைபவும் பழைபதானம்
சதிபுறு சிறியோர் தன்மை சேர்ந்தன ஆம்பலெல்லாம். 17

தன்னிகழ் விரித்த செய்ய தாமரை மலர்களெல்லாம்
பொன்னிற வர்ண வெய்யில் பார்க்கவும் பூரித்தன்ன
இன்னுயிர் எற்கு ஏற்ற இறைய வரிண்டுவந்தார்
என்றவை யெண்ணி ஏக்கம் நீத்தன மலர்ந்தவன்றே 18

மஞ்சத்தில் மெத்தைமீது மயிலிய லாடலாட
கொஞ்சியே கேளிசெய்யும் கொழுநனும் கூர்ந்து நோக்கி
எஞ்சிய வித்தை யெல்லாமியற்றவே ஊடல் பொங்கி
மிஞ்சியே முறுவல்மீறி நகுவன போன்றிருந்த. 19

வண்டினம் சுருதி மீட்ட வாகான அன்னம் தானும்
தின்னென சப்தம் செய்ய சேவல் மந்திரங்கள் சொல்ல
வண்ணம் செய்தாமரையி லுறைபவள் முன்னதாக
பண்ணிய வதுவை போலும் பரிதி பங்கயம தற்கும். 20

மதிமுகம் மங்கைதன்னின் மலர்வதும் போன்றிருந்த
பதிபது வரவு நோக்கி பொலிவதும் குன்றிருந்த
அதியவ சரமதான அலுவல் மேலயலாருக்கு
நிதியதுகொண்டு சென்ற நாயகனுவியன்ன. 21

இந்தியால் தமிழுக்கு ஆபத்தே நேரும்

[திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார்சுவாமிகள்]

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீபாடலீஸ்வரர் சுவாமியின் வருடோத்சவம் இம்மாதம் இரண்டாம் தேதியில் இருந்து செவ்வனே நடைபெற்று வருகிறது. பிரதி தினமும் அம்மன் கோயிலில் தமிழறிஞர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள் தலைமையின்கீழ் பல தமிழ் அறிஞர்கள் பற்பல விஷயங்களைப்பற்றி உபன்யாசித்து வருகின்றார்கள். "தேவர் குறளும் மூவர் தமிழும்" என்பதைப் பொருளாகக் கொண்டு சில பெரியார்கள் சொற்பொழி வாற்றினார்கள். அச்சமயம் தமிழின் சிறப்புகளைப்பற்றியும் புகழ்ந்து பேசப் பட்டது.

இது சமயம் தலைமை வகித்திருந்த தமிழ்பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் அவர்கட்கு திரு. எம். என். முத்துக்குமாரசுவாமிப் பாவலர்

அவர்கள் ஓர் கடிதம் எழுதி அதில் இந்தியால் தமிழுக்கு இன்னல் உண்டா? இல்லையா? என்பதைத் தயவுசெய்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தார். சுவாமி அவர்கள் அவ்விதமே தெரிவிப்பதாகக் கூறித் தமது முடிவுரையில் கீழ்க் கண்ட விதம் கூறினர்:

தேவர் குறளைப்பற்றியும் மூவர் தமிழைப்பற்றியும் பல அறிஞர்கள் இனிது பேசினர்கள். இத்தமிழ் நூல்கள் நமக்குக் கிடைத்தது பெரும் புண்ணியமாகும். இத்தகைய அரிய நூல்கள் உள்ள தமிழைத் தமிழர்கள் சிதைக்காமலிருப்பின் அது தமிழுக்குச் செய்த பெரிய உதவியாகும். தற்போது இந்நகரின் பெயரைப் பெரும்பாலும் சிதைத்துக் குறைத்துக் கூறுகின்றார்கள். திருப்பாதிரிப்புலியூர் என்றிருக்க திருப்பாப் புலியூர் எனவும், திருப்பாபூர் எனவும், குறைத்துக்கூறுகிறார் கள். தமிழ்ப் பாஷை இந்நிலையடையுங் காலையில் அந்நிய பாஷைகள் வேறு புகுந்து தமிழைக் கெடுத்துவிட்டன.

நமது தமிழர்களிடையே சிறந்த குணமொன்றுண்டு. அதாவது உடனிருப்பவர்களை மறந்துவிட்டு விருந்தினராக வருபவர்களை வரவேற்கும் மனப்பான்மையே! ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு சமஸ்கிருதம் தமிழ்நாட்டில் புகுந்தது. அதை நன்கு வரவேற்றோம். அதன்பால் நம்பிக்கை வைத் தோம். சில நூற்றாண்டுகட்கு முன்னர் ஆங்கிலம் வந்தது. வாருங்கள், இருங்கள் என்றோம். நன்கு உபசரித்தோம். நாம் பிரதிபலன் என்ன கண்டோம்? அவ்விரு பாஷைகளும் நம் தமிழை நாளடைவில் ஜீரணம் செய்து வருகின்றன. இப்போது இந்தி பாஷையும் வருகின்றதாம். அதுவும் கட்டாயமாக வரப்போகின்றதாம். வரட்டும். இருக்கட்டும். இந்தியால் தமிழ் அழியட்டும், ஒழியட்டும்! தமிழன்பர்கள் இதற்குடந்தையாக இருக்கட்டும் என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். உள்ள பாஷையைச் சரிவரக் கவனியாது மற்ற பாஷைகளை ஆதரிப்பதன் பலனை நன்கு கண்டுவிட்டோம். மற்ற பாஷைகள் உயர்வுடையதெனினும், எங்கள் முருக னருளிய முத்தமிழுக் கீடாகாது என்று மட்டும் இதுசமயம் கூறி நிறுத்திக் கொள்ளுகிறேன் என்று கூறி முடித்தார். அங்கிருந்தோர் அனைவரும் சுவாமிகள் தமது இந்தி எதிர்ப்பைச் சந்தர்ப்பம் பார்த்துக்கூறியதை ஆமோதித்துக் கரகோஷம் செய்தனர்.

—(நம் நாடு)

மூடியுடை மூந்நாட்டுச் சிறப்பியல்புகள்

[வேலணையூர் பண்டிதர் திரு கா. போ. இரத்தினம் அவர்கள்]

மூந்நாடு	நதி	மலை	துறை	தலைநகர்	அரசர்கள்
1. சேரநாடு	பேரியாறு	கொல்லி	முசிரி	வஞ்சி	சேரர்
2. சோழநாடு	காவிரி	நேரிமலை	புகார்	காவிரிப்பூம் பட்டினம்	சோழர்
3. பாண்டிநாடு	வைகை	பொதிய மலை	கொற்கை	மதுரை	பாண்டியர்

	வமிசம்	கொடி	மாலை	குதிரை	சிறந்த நிலையங்கள்	அதிகமாகக் காணப்பட்ட பொருள்கள்
1	அக்கினி	வில்	பனை	கனவட்டம்	அட்டிற்சாலைகள்	யானை
2	சூரியன்	புலி	ஆத்தி	பாடலம்	அறச்சாலைகள்	சோறு
3	சந்திரன்	மீன்	வேம்பு	கோரம்	தமிழ்ச்சங்கங்கள்	முத்து

	சிறந்த அரசர்கள்	புலமைநிறைந்த அரசர்கள்	பெண்பாற் புலவர்கள்	சிறப்பாக உரிய சங்க நூல்கள்	கண்ணகியின் தொடர்பு	மூன்னாட்டிற்கு முரிய நூல்கள்
1	சேரன், செங்குட்டுவன்	இளங்கோ அடிகள்	ஔவையார்	பதிற்றுப்பத்து	சுவர்க்கம் சென்ற நாடு	சிலப்பதிகாரம்
2	கரிகாற்பெருவளத்தான்	கோப்பெருஞ்சோழன்	ஆதிமந்தி	பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை	பிறந்த நாடு	
3	பாண்டியன் நெடுஞ்செழியன்	பூதப்பாண்டியன்	மாறோகத்து நப்பசலையார்	மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை	கணவனை இழந்த நாடு	

குறிப்பு: இவ்வட்டவணை சங்க நூல்களையும் சில தனிச் செய்யுள்களையும் ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்டது

பிரதம மந்திரியின் பிடிவாதம்

நமது பிரதம மந்திரியினிடத்தில் எதேச்சாதிகாரம் தலை விரித்தாடுகிறது. தமிழர்களது சம்மதத்தைப் பெறாது, அவர்களது வெறுப்பையும் கவனியாது, உணர்ச்சியையும் உணராது உண்ணாவிரதத்தாலும் மனம் இளகாமல், சத்தியாக்கிரகத்தையும் சிந்திக்காமல் இந்திக் கட்டாயப் பாடத்தை நுழைத்தே தீருவேனென்று நமது முதன் மந்திரி கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். இந்திக் கட்டாயப் பாடத்தை எதிர்த்து தமிழர்கள் விடுத்த வினாக்களுக்கு விடை பகர வழி தெரியாது விழிக்கிறார். இரு தமிழ் வீரர்கள் இந்திக் கட்டாயப் பாடத்தை எதிர்த்து உண்ணாவிரத மிருக்கிறார்கள். இன்னும் அநேகர் உண்ணாவிரத மிருக்க, தலைவர்களின் உத்தரவை எதிர் பார்த்த வண்ண மிருக்கின்றனர். இந்தியால் பிரதம மந்திரியார் கோரும் பயன்களை ஒன்றையேனும் பெற முடியாதென்று பல அறிஞர்கள் புட்டுப்புட்டுக் காட்டிவிட்டார்கள். ஆனால் ஆச்சாரியாரது பிடிவாதம் தளர்வடையவில்லை. தமிழர்களனைவருமே ஒன்றிரண்டு இந்திக் கட்டாயப் பாடத்தை எதிர்ப்பது தெரிந்திருந்தும் இது ஒன்றிரண்டு தேசத் துரோகிகள் செய்யும் சூழ்ச்சி யென்று நெஞ்சறிந்த பொய் சொல்கிறார் ஆச்சாரியார். உண்ணாவிரத மிருப்பதை இரட்டைப் பலாத்கார மென்கிறார் மகாத்மா பட்டம் பெற்றக் காந்தியார். இந்தியை எதிர்ப்பவர்களைப் போலீஸ் படைகொண்டு நசுக்க வேண்டு மென்கிறார் விளம்பர மந்திரி கனம் ராமநாதன். கரைத்தால் கல்லும் கரையும். ஆனால், ஆச்சாரியாரின் உள்ளம் கரையாது போலும். பழங்குடி பெருமக்களாகிய தமிழர்கள் இனிமேல் ஆச்சாரியாரது எதேச்சாதிகாரத்திற்கு பயப்படமாட்டார்கள். தமிழர்களது ஆதிகால உணர்ச்சியை மீண்டும் பெற்றுவிட்டார்கள். உயிரினும் பெரியதாய்த் தமிழ்த் தாயை மதிக்கின்றார்கள். கண்யமான முறையில் அறப்போர் தொடுத்து கட்டாய இந்தியை ஒழித்து தமிழையும், தமிழரது கலையையும், தமிழரது நாகரிகத்தையும் காப்பாற்ற முன்வந்து விட்டார்கள். தமிழர்கள் இவ்வறப் போரில் வெற்றிமாலையுடன் மீளுவர். இல்லையேல் தமிழ்த் தாயுடன் தாங்களும் மடிவர்.

கடைசி முறையாகக் காங்கிரஸ் மந்திரி சபைக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். தமிழர்களது உணர்ச்சியின் வேகம் அதிகரித்து விட்டது. இனி அவர்களது உணர்ச்சியை அடக்க, இந்திக் கட்டாயப் பாடத்தை ஒழிப்பதைத் தவிர நேர்மையான வழி வேறில்லை. இதை நமது பிரதம மந்திரியார் உணரும்படி வேண்டிக்கொள்கிறோம்.

—"தமிழரசு"

ஆனைந்து

நூல்முகம்

[தி. லோ. க. கல்யாணசுந்தரமூர்த்தி குருக்கள், இலங்கை]

(1) ஆனைந்தின் பொருள்களை நமது மக்கள் இறைவன் அருளிய முதல்நூற்கு மாறாக உண்மைப்பொருள்களை மாற்றியும், யுக்திக்கு மாறாக கூட்டி இறைவற்கு ஆட்டியும், உண்டும் வருவது அறிந்து, அப்பொருள்கள் இவை இவை யென உண்மையை உணர்த்துதற்கு எழுந்தது இந்நூல்.

(2) ஆனைந்து இறைவனின் வியாபகமுள்ளது. ஆனைந் தாடலில் இறைவன் விருப்புள்ளான். ஆதலின், உண்மைப் பொருள்கள் இன்னின்ன என வகுத்தும், மெய் நூற்களாம் தமிழ் மறைகள் முதல் நூற்கு மாறுறாது வெளிப்படக் கிடக்கும் பொருள்களை விளக்கியும் கூறுவது இந்நூல்.

(முதல் நூல்=சிவாகமம்)

(3) ஆனைந்தின் பொருள்கள் :—ஆனைந்தின் தோற்றப் பொருள்கள் இயல்பு—திரிபு என இருவகைப்படும்.

அவற்றுள், ஆப்பீ—ஆநீர்—பால்—கோரோசனம் என்னும் நான்கும் இயல்புப் பொருள்களாம்.

தயிர்—வெண்ணெய்—நெய்—மோர் என்னும் நான்கும் திரிபுப் பொருள்களாம்.

பால்—தயிர்—நெய்—ஆப்பீ—ஆநீர் என்னும் பொருள் களுடன் குசநீரும் சேர்ந்து தற்காலம் சிலர் பஞ்சகவ்வியம் என்றும், மேற்சொன்ன பொருள்களுடன் கோரோசனையை யும் சேர்த்து ஷட்கவ்வியம் என்றும் கூறுவர்.

(குசநீர்=தருப்பையோடுங்கூடிய நீர்)

இவ்வாறு சில ஆகமங்களில் காணப்படுகிறது. இவை களைக் கூர்ந்து நோக்கின் உண்மை விளங்கும்.

(4) ஆவினது பிறப்பிலேயே அமைந்துள்ளது ஆப்பியும், ஆநீரும்.

இறைவன் அருளினால் இடைக்காலத்துப் பருவமுற்ற காலத்தே கன்று ஈன்ற பின்னர் வெளிப்படுவதாயுள்ளது பால்.

உயிர் நீத்த பின்னர், கடைக்காலத்து உடலைச் சேதித்து எடுக்கப்படுவது கோரோசனம்.

ஆகவே, பிறப்பிலேயே எவ்வுயிர்க்கும் போல அமைந்துள்ளதும், இயல்பாகவே வெளிப்படுவதும், உடலைச் சேதித்து எடுக்கப்படுவதும் எனப் பொருள்கள் மூன்று வகைப்படும்.

எவ்வுயிர்க்கும் போல, பிறப்பிலேயே ஆவின் உடலில் அமைந்துள்ள ஆப்பியும் ஆநீரும் கழிவுபொருள்கள் ஆகும்.

உடலைச் சேதித்து எடுக்கப்படும் கோரோசனம் இழிவு பொருள் ஆகும்.

ஆகையால் அருள் வடிவாய் வெளிப்படும் பாலையும்—பாலின் திரிபுப்பொருள்களையும் பற்றியேதான் ஆகமங்கள் கூறுநிற்கும்.

கழிவு பொருள்களும் இழிவு பொருள்களும் இறைவற்கு ஆட்டப்படாதன ஆகையால், அவைகளைப் பற்றி ஆகமங்கள் கூறா. உண்மையும் இதுவே.

(5) கவ்வியப் பொருள்கள் ஐந்தும் கிடையாவிடத்து, நெய்யை மட்டும் வைத்து ஆனைந்தாய்ப் பாவித்துப் பூசிக்க என

"பஞ்சகவ் யேசு யஸ்யஸ்யாத் தத்பாவே
க்ருதம் பவேத்" என

வாதுளாகமம் கூறுகின்றது. ஆதலின், பாலின் வழியே தோன்றிய ஐம்பெரும் பொருள்களுள் நெய்யும் ஒன்றாதலின் அவ்வாறு கூறப்பட்டது என்க.

"விறகிற்றீயினன் பாலிற்படுநெய் போல்"

என்னும் தமிழ்மறை வாக்கையும் நோக்குக.

மேலும், ஆனைந்தை அமைத்துப் பூசிப்பதற்கு அமைந்துள்ள மந்திரங்களை உற்றுணர்வார்க்கு உண்மைப் பொருள் விளங்கும்.

(மந்திரங்களை, குருமுகத்து வைத்துணர்தல் என்னுல நியமம் பற்றி விரித்து உணர்ந்த ஈண்டு இடம் பெற்றி).ம்

என்னை? அம் முதல் மந்திரமானது ஏனைய நாற்பெரும் மந்திரங்களையும் தோற்றுவித்து காரணமாய்த் தானும் அம்மந்திரங்களோடொன்றுப் ஐந்தென விளங்கும். அவ்வகையே,

இயல்புப் பொருளாகிய பாலும் திரிபுப்பொருள்களாகிய தயிர்—மோர்—வெண்ணெய்—நெய் ஆகிய நாற்பெரும் பொருள்களைத் தோற்றுவித்து, காரணப் பொருளாகிய தானும் ஒரு பொருளாய் நின்று ஆனைந்தென விளங்காநிற்கும்.

இவற்றுள், ஆப்பி—ஆநீர்—கோரோசனம் என்னும் பொருள்களின் சத்துக்கள் அறவே இன்று என்பதும் உரைக்கிடக்கின்றதும் அன்றி, பால் ஒன்றே கொள்ளத்தக்கது ஆம் எனும் உண்மை பெறப்படுதல் காண்க.

ஆதலின், கழிவுப் பொருள்களாகிய ஆப்பியும்—ஆநீரும், இழிவுப் பொருளாகிய கோரோசனமும் இவ்விடத்துக் கொள்ளத்தக்கன அன்றெனவும், அருள் மயமாம் இயல்புப் பொருளாகிய பாலும் அதன் திரிபுப் பொருளாகிய தயிர்—மோர்—வெண்ணெய்—நெய் என்னும் ஐம்பெரும் பொருள்களுமே கொள்ளத்தக்க தெனவும் காண்க,

Vide:—

(1) "கோவிரிப் பாலானஞ் சாடிய கொள்கையும்"

(2) "பாலாம் ஐந்துடனுடும் பிரமனர்"

(3) "கோதனத்தில் ஐந்தாடியை"

என்னும் வேதவாக்குகளையும் நோக்குக.

(6) மற்றும், ஆனைந்தாகிய இவ்வுண்மைப் பொருள்களிலேயே இடையீடின்றி இறைவன் வசிக்கின்றான் என்றும், தனது அருட் சத்தியோடும் வசிக்கின்றான் என்றும், அவன் ஆனைந்தாடலில் மிகவும் விருப்பன் என்றும், அதனால் இறைவன் அழகுறுகின்றான் என்றும், ஆனைந்தை உண்மையோடு ஆட்டுவிக்கும் அன்பர்கட்கு இறைவன் அருளுகின்றான் என்றும் அடியில் கூறப்பட்ட தமிழ்மறைப் பகுதிகள் முழங்குகின்றன :—

1. "ஆனிடை ஐந்தமர்ந்தான்"
2. "ஆன் உற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே"
8. "ஆவில் ஐந்தமர்ந்தவன் அரிவையோடும்'
4. "ஆனிற் பொலி ஐந்தும் அமர்ந்து ஆடி"
5. "ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி"
6. "ஆவில் ஐந்துகப்பர் அவரே அழகியரே"
7. "அஞ்சுங் கொண்டாடிய வேட்கையினர்"

8. "ஆவின் மேவிய ஐந்தும் அமர்ந்து ஆடுமவன்"

9. "ஆவிடை ஐந்துங்கொண்டு ஆட்டுகந்த அடிகள்"

10. "ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்"

11. "நல் வெண்ணெய் விழுது பெய்தாடுதிர்"

12. "ஆன் அமர் ஐந்துங் கொண்டாட்டுகந்த அடிகள்"

13. "ஆனஞ்சாடு முடியான் உமையாளுடை ஐயனே"

14. "ஆனகம் அஞ்சும் ஆடும் அடிகள்"

15. "நெய்யும் பாலும் தயிருங் கொண்டு"

16. "ஆனொடஞ்சும் ஆடினானை"

17. "மாதனத்தை மாதேவனை மாறிலாக் கோதனத்தில் ஐந்தாடியை வெண்குழைக் காதனைக் கடுவாய்க்கரைத் தென்புத்தூர் காதனைக்கண்டு நானுய்யப் பெற்றேனே"

(7) இந்நூலாசிரியர் மேற்கூறிய தமிழ் மறைப் பகுதிகளை அரிதின் உணர்ந்து, உறுநெறி வழுவுறாது ஒழுகிவரும் உயர் சைவத்திருவாளர் துடிசைகிழார் அ. சிதம்பரனார் ஆவர்.


அவர்கள் ஆனைந்தின் உண்மைப் பொருள்களை சுருதி—யுக்தி—அநுபவங்கட்கு இயைய விளக்கிக் காட்டியிருப்பது மிகவும் புகழ்தற் குரியது.

இற்றைநாள் வரை இவ்வாசிரியர் ஒருவரே முதன்முதலாக இவ்வுண்மைப் பொருள் கண்டு விளக்கி, சைவ உலகம் உண்மைப் பயன்பெற உபகரித்துள்ளார்கள்.

"அத்துவிதம்" என்னும் தொடர்மொழிக்கு உண்மைப் பொருள் கண்ட மெய்கண்டார் போல, இவரும் "ஆனைந்து" என்னும் தொடர்மொழிக்கு உண்மைப்பொருள் கண்டார்.

உண்மைப் பொருள் காண்பது மெய்கண்டாருக்கும் அவர் பரம்பரையில் வந்த இந்நூலாசிரியருக்குமே எளிது அல்லது ஏனையோருக்கு முடியாத காரியம்.

மேலே கூறியுள்ள உண்மைகளையெல்லாம் முற்றும் உணர்ந்து, அன்பர்கள் ஆதரித்து, உண்மைப்பயன் பெறுமாறு பெரிதும் விரும்புவதோடு இந்நூலாசிரியர் அவர்கள் இதுபோன்ற உண்மை நூல்களைச் சைவ உலகம் பயன்பெற வெளிப்படுத்தி உபகரித்து, நீடூழி இந்நிலவுலகின்கண் வாழ, மனம், மெய், மொழிகளால் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.


12. DRAVIDIAN LANGUAGES
IN
INDIA.
MOHENJO-DARO.
HARAPPA.
BRAHUI.
ORĀYĀN.
RAJMAHAL.
GŌND.
KŪ.
CANARESE.
TELUGU.
TAMIL.
MALAYALAM
TULU
KUDAKU
TUDA
KOTA
UNCULTIVATED D.L.
1._TUDA.
2._KŌTA.
3._GŌND.
4._KU.
5._ORĀYŌN.
6._RAJMAHAL.
CULTIVATED D.L.
1._TAMIL.
2._TELUGU.
3._CANARESE.
4._MALAYALAM.
5._TULU.
6._KUDAKU.
பண்டை இந்தியப் பன்னிரு மொழிகள்.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௬] வெகுதானிய—ஆனி [பரல்-௧௧

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்

மெய்த்த வன்காண் மெய்த்தவத்தி னிற்பார்க்கெல்லாம்
விருப்பிலா விருப்புமன வினையர்க் கென்றும்
பொய்த்த வன்காண் புத்தன் மறவாதோடி
யெறிசல்லி புதுமலர்க ளாக்கினான்காண்
உய்த்த வன்கா ணுயர்கதிக்கே யுள்கினாரை
யுலகனைத்து மொளித்தளித்திட் டுய்யச்செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பியேத்தும்
விண்ணிழி தண்வீழி மிழலையானே.

பதவுரை :—

மெய்த்தவத்தின் நிற்பார்க்கு—(மனம் ஐம்பொறிகளை முற்றிலும் தம் வயப்படுத்திச் சிவனையே அடைதல் வேண்டுமென்று நினைத்துக் கொண்டு) உண்மைத் தவஞ்செய்துகொண்டு நிற்கின்றவர்களுக்கு

எல்லாம்—முழுவதும்

மெய்த்தவன்—உண்மைப்பொருளா யிருக்கின்றவனும்

விருப்பிலா—மெய்யன்பு இல்லாத

இருப்புமன வினையர்க்கு—இரும்புபோலும் கடினமான மனதை உடையராய் உயிர்களுக்குக் கொடிய செயல் செய்கின்றவர்களுக்கு

என்றும் பொய்த்தவன் காண்—எப்பொழுதும் வெளிப்படாமல் மறைந்துகொண்டிருக்கும் பொய்ப் பொருளா யிருக்கின்றவனும்

புத்தன்—(புத்த நெறியில் நின்று சைவ சமய உண்மையை அறிந்தும் தமது புத்தவேடத்தை விடாது சைவ சமய உண்மைப்படி ஒழுகிவந்த) சாக்கிய நாயனார்

மறவாது—(சிவலிங்கப் பெருமானை நினைந்து கொண்டிருப்பதற்கு அடையாளமாக நாடோறும் சிவலிங்கத்தின்மேல் கல்லெறிந்து வருங்காலத்தில் ஒரு நாள் அக்கல்லெறியாமல் உண்ணப்போக) அதனை மறவாது நினைந்து கொண்டு

ஓடி எறி சல்லி—(உண்ணு மிடத்திலிருந்து சிவலிங்க மிருந்த இடத்திற்கு) ஓடிப்போய் அச்சிவலிங்கத்தின் மேலெறிந்த கல்லை

புதுமலர்கள் ஆக்கினான் காண்—அக் கல்லெறிந்தவருடைய அன்பின் திறத்தை அறிந்து அதனை உவந்து அன்று பூத்த புதியமலராகச் செய்து

உய்த்தவன்—அச்சாக்கிய நாயனாரைச்சிவ போகத்திலே சேர்த்தவனும்

உயர்கதிக்கே உள்கினாரை—சிவன் திருவடிகளை அடைதலென்னும் உயர்ந்த நிலைமையையே நினைத்துக்கொண்டிருக்கின்றவர்களை

உலகனைத்தும் ஒளித்து அளித்திட்டு—(அவர்கள் மனதில்) உலகம் முழுவதும் தோன்றாதிருக்கும்படி அருள் செய்து (உலகத்திலே வந்து பிறவாமல்)

உய்யச் செய்யும் வித்தகன்—சிவகதி அடைந்து பிழைக்கும்படி செய்கின்ற பேராற்றலுடையவனும்

வித்தகர் விரும்பி ஏத்தும்—மெய்யறிவர்கள்மறவாத மெய்யன்பினாலே வணங்குகின்ற

விண்ணிழி—விண்ணுலகத்தைத் தாழும்படி செய்கின்ற

தண்வீழி மிழலையானே—குளிர்ச்சி பொருந்திய திருவீழிமிழலையிலே திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான்.

விளக்கவுரை:—

மெய்த்தவத்தின் நிற்பார்க்கு—மெய்த்தவம் என்பது சிவப்பேற்றினை அடைதற்கு மனம் ஐம்பொறிகளைப் புலன்வழியே செல்லாமல் தடுத்துச் சிவனையே நினைத்துக் கொண்டிருத்தலாகும். நிற்பார்க்கு என்றதனாலே சிவத்தையே மெய்ப்பொருளெனத் தெரிந்தவர் தவத்திினின்றும் சிறிதும் நழுவ விடாமல் எப்பொழுதும் ஒருநிலையாய் நினைத்துக் கொண்டிருத்தல் கூறப்பட்டது. உலக போகங்களை அடைதற்கு விரும்பிச் செய்கின்றவர்களுடைய தவம் பொய்த்தவமாகும்.

மெய்த்தவன்—மெய்த்த—மெய்மை—பகுதி. அ-பெயரெச்ச விகுதி. த்—இறந்தகால இடைநிலை. த்—சந்தி. மெய்த்த + அன்.

அன்—ஆண்பால்விகுதி. வ்—உடம்படுமெய். மெய்மை என்பதிலுள்ள மெய்மை விகுதி கெட்டது விகாரம். இங்ஙனமே பின் வருகிற பொய்த்தவன் என்ற சொல்லுக்கும் பகுதி முதலியன கொள்க. மெய்ப்பொருளாயிருப்பவன், அதாவது மறைந்திராமல் உள்ளுணர்வுக்கு வெளிப்பட்டுத் தோன்றுகிறவன். மெய்த்தவனுக்குப் பின்னேவருகிற காண் என்பதும், பின் மூன்று அடிகளில் வருகிற காண்களும் முன்னிலை அசைகள்.

விருப்பிலா இருப்பு மனவினையர்க்கு—விருப்பு—உண்மை யன்பு, மெய்அன்பு. இருப்புமனவினையர்—இரும்பு என்பது இருப்பு என வலித்தல் விகாரம் பெற்றது. இருப்பு மனம் என்பது உயிர்களிடத்து அவர்கள் படுந்துன்பத்துக்கு இரங்காது இரும்பு போலக் கடினமாயிருந்து கொடுமைசெய்யும் மனம். கொடுஞ் செயலானது அன்பில்லாத மனங் காரணமாக நிகழ்தலால் இருப்பு மன வினையார் என்றார்.

பொய்த்தவன்—தெரியாமல் மறைபொருளாக இருக்கிறவன். உயிர்களிடத்துஅன்பில்லாதவர் சிவனிடத்தும் அன்பில்லாதவ ராதலின் அத்தகைய அன்பில்லாதவருக்குச் சிவன் அறியப்படாத மறை பொருளா யிருத்தல்பற்றிப் பொய்த்தவன் என்றார்.

புத்தன்—என்பது 63 நாயன்மார்களில் ஒருவராகிய சாக்கிய நாயனாரைக் குறிக்கிறது. சைவ சமயத்தினுண்மையை யறிந்து அவ்வுண்மைப்படி சிவனை அன்பினால் வழிபட்ட சாக்கியநாயனார் தாம் முன் கொண்டிருந்த புத்தவேடத்தை விடாமலிருந்ததினாலே அடிகள் அவரைப் புத்தனென்று குறிப்பிட்டார்.

சல்லி புதுமலர்கள் ஆக்கினான்—என்றதனாலே ஒருவர் செய்யுஞ் செயலின் தன்மை அச்செயலுக்குக் காரணமாயிருக்கும் உள்ளக் கருத்துப்பற்றியே துணியப்படும் என்பது பெறப்பட்டது. மன்மதன் எறிந்த பூ சிவனால் ஏற்றுக் கொள்ளப்படா திருத்தற்கும் சாக்கியநாயனார் எறிந்த கல் அவனால் உவந்து ஏற்றுக் கொள்ளப்படுதற்கும் அவ்வச் செயலின் கருத்தே காரணமாயுள்ளது. ஆக்கினான் என்ற வினைமுற்று இங்கே ஆக்கி என்னும் வினையெச்சப் பொருளில் வந்தது. அது உய்த்த என்னும் வினைமுற்றைக் கொண்டு நின்றது.

உய்த்தவன்—சேர்த்தவன், அதாவது புத்தனைச் சிவபோகத்தில் சேர்த்தவன்.

உயர் கதிக்கே உள்கினாரை—ஆரா இன்பம் நுகரும் பேரா இயற்கைத் தாகிய சிவப்பேற்றினை அடைதலே எவற்றினும் உயர்ந்த கதியாதலால் அதனை உயர்ந்தகதி என்று அடிகள் குறிப்பிட்டார். உள்கினார் என்றதனாலே அவ்வுயர்ந்த கதியை மனதிலே நினைந்து அதன்மேல் அவாக்கொண்டு இருக்கின்றவர்களுக்கே அவ்வுயர்ந்த கதியைச் சிவபெருமான் அடைவிப்பனாதலின் உயர்

கதிக்கே உள்கினாரை என்றார். கதிக்கே என்பதிலுள்ள ஏ—பிரிநிலை ஏகாரம் கதிக்கே—கதியையே; உருபு மயக்கம். பிற தாழ்ந்த கதிகளை நினையாது சிவகதியையே நினைத்துக் கொண்டிருந்தல் என்னும் பொருளை அப்பிரிநிலை ஏகாரம் தந்து நிற்கிறது.

உலகனைத்தும் ஒளித்து அளித்திட்டு உய்யச் செய்யும் வித்தகன்—சதசத்துப் பொருளாகிய ஆன்மாவுக்கு உலகம் தோன்றுங்கால் சிவம் தோன்றாது; சிவம் தோன்றுங்கால் உலகம் தோன்றாது. ஆதலின் சிவமே மெய்ப்பொருள் (சத்துப்பொருள்) என்று அறிந்தொழுகுதலுக்கு உலகமாகிய பொய்ப்பொருள் (அசத்துப் பொருள்) தோன்றாதிருத்தல் இன்றியமையாதது. அதனால் சிவபெருமானை உலகனைத்தும் ஒளித்தளித்திட்டுய்யச் செய்யும் வித்தகன் என்றார். சிவமே மெய்ப்பொருளெனத் தெரிந்த உண்மை அறிவர்களுக்கு உலகம் தோன்றாது என்ற உண்மைக் கருத்தைத் திரித்து ஏகான்மவாதிகள் உலகமானது கிளிஞ்சலில் வெள்ளிபோற்பொய்ப்பொருளென்று (மித்தைப் பொருளென்று) மயங்கிக் கூறி இடர்ப்படுகின்றனர். அங்ஙனம்கூறும் பொய்ப் பொருளாகிய உலகத்திலிருந்து என்ன உண்மை அநுபவம் உண்டாகக் கூடுமென்பது அவர்அறிந்திலர். உய்யச்செய்யும் என்பது நிலையில்லாத உலகவாழ்க்கையிலிருந்து தப்பிச் சிவகதியை அடைந்து பிழைக்கும்படி செய்தல். வித்தகன்=வித்தகம் என்பது மெய்யறிவு. அறிவினாலாற்றலுண்டாவதால் அதுஇங்கே ஆற்றலைக் குறிக்கிறது. உயர்கதிக்கே உள்கினாரை ஒளித்தளித்திட்டுய்யச் செய்யும் வித்தகன் என்றதனாலே சிவபெருமான் தனதுஆற்றலைச் சிவப்பேறுஅடையும்தகுதியுடையவர்களிடத்தே செய்வானென்பதும் அத்தகுதியும் சிவப்பேற்றை அடையும் பேரவா உடையவர்களுக்கே உண்டாகும் என்பதும் இதனால் பெறப்பட்டன. இதே கருத்தை அடிகள் திருப்புகலூர்த் திருவிருத்தம் 3-வதுபாட்டில் 4-வதுஅடியில் "உன்னளவே யெனக் கொன்று மிரங்காத உத்தமனே" என்று கூறினார். திருவள்ளுவரும், "நன்றாற்றலுள்ளும் தவறுண்டவரவர் — பண்பறிந்து ஆற்றாக் கடை" என்று கூறினார்.

வித்தகர்தாம் விரும்பி ஏத்தும்—வித்தகர் என்பது சிவமே மெய்ப்பொருளெனத் தெளிந்தமெய் அறிவரைக் குறிக்கிறது. வித்தகர் தாம் விரும்பி ஏத்தும் என்றதனாலே முறையே மெய்யறிவும் மெய்யன்பும் மெய்ச்செயலும் கூறப்பட்டன. இம்மூன்றும் கூடிய நிகழ்ச்சியே பேரின்பம் நுகர்தற்கு ஏதுவாகுமென அறிக.

விண்இழி தண்வீழி மிழலையானே—விண்—என்பது இங்கே விண்ணுலகத்தை (தேவலோகத்தை)க் குறிக்கிறது. விண்ணுலகத்தையும் தாழ்ந்ததாகச் செய்கின்ற வீழிமிழலை என்பது பொருள்; அதாவது விண்ணுலகத்திலுஞ் சிறந்த வீழிமிழலை. தண்— என்பது வீழி மிழலையானுக்கு அடைமொழியாகக் கூறினும்

பொருந்தும். அப்பொழுது தண் என்பது உயிர்களிடத்தில் பேரிரக்கமுடையஎன்பதுபொருள். மெய்த்தவன், பொய்த்தவன், உய்த்தவன், வித்தகன், இந்நான்கும் எழுவாய்கள். வீழிமிழலையான்--பயனிலை. மெய்த்தவனும், பொய்த்தவனும், உய்த்தவனும் வித்தகனும், வீழிமிழலையான் என இயைத்து முடிவுசெய்க. வீழிமிழலையானே என்பதிலுள்ள ஏ—ஈற்றசை.

இந்தப்பாட்டில் மெய்த்தவன் என்றும் பொய்த்தவன் என்றும் கூறப்பட்டதனாலே சிவபெருமானுடைய மெய் அறிவின் திறனும், சல்லி புதுமலர்கள் ஆக்கினான் உய்த்தவன் என்றதனாலே அவருடைய மெய்யன்பின் திறனும், உயர்கதிக்கே உள்கினாரை உலகனைத்தும் ஒளித்தளித்திட்டுய்யச்செய்யும் வித்தகன் என்றதனாலே அவனது வரம்பிலாற்றலின் திறனும் கூறப்பட்டன. இதனாலே மெய்யறிவும் மெய் அன்பும் அவற்றாலுண்டாகும் ஆற்றலும் உடையவர்களுக்கே சிவ பெருமான் வீட்டின்பத்தை அளிப்பானென்பது பெறப்படும்.

பேரின்பத்தை அடையும் பேரவா உடையவர்களாய்த் தம் அறிவு அன்புசெயல்களைநிகழ்த்துகிறவர்களைச் சிவபெருமான் தம்வயப்படுத்தி அவர்களுள்ளத்தில் உலக இன்பம் தோன்றாதிருக்கும்படி செய்து பேரின்பம் அடையச் செய்வன் என்பது இப் பாட்டின் கருத்து. "சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே-மற்றின்பம்வேண்டு பவர்" என்பது திருக்குறள்.

—மா. வே. நெல்லையப்பபிள்ளை.

தலை நிமிர் தமிழா !

[புதுவை உயர்திரு சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள்.]

இந்தியரானாலும் சரி, கிறிஸ்தவரானாலும் சரி, இஸ்லாமியரானாலும் சரி, தமிழ்நாட்டிற் பிறந்து தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரெல்லாம் தமிழரே; ஒருகுலத் தமிழ் மைந்தரே. இந்த ஒற்றுமையுணர்வு பெருக நாம் முன்னேறுவோம். இவ்வுணர்ச்சி குறுகக்குறுக நாம் வீழ்ச்சியடைவோம். இந்து யார்? எங்குங் கடவுளைக்கண்டு எல்லா வுயிர்களையும் இறைவன் திருமேனியாக மதித்து நன்மை செய்வோனே இந்து. இஸ்லாமியன் யார்? கடவுளுறுதி கொண்டு மனித சமுதாயத்தை ஒரு குல சகோதர சகோதரிகளாகக் காண்பவனே இஸ்லாமியன். கிறிஸ்தவன் யார்? அன்பும் பொறுமையும் கொண்டு, இன்னற் சிலுவை தாங்கியும் தன்னலமின்றிப் பொதுநலம் புரிவோனே கிறிஸ்தவன். புத்தன் யார்? எல்லா வுயிர்த் துடிப்பையும் தன் உள்ளத் துடிப்பில் ஆருயிர்களுக்கு அறப்பணி புரிவோனே பௌத்தன். தமிழ் முனிவர், பாரத ரிஷிகள், ஏசுநாதர், முகம்மது நபிநாயகம், புத்தர் அனைவரும் என்ன உபதேசம் செய்தனர்? "மனச்சாட்சிக்கு உண்மையாக நடந்துகொள். சுத்தம் பேணு. எல்லா வுயிர்களுக்கும் அன்பாயிரு. முடிந்தமட்டும் பிறர்க்குதவு. பொய், கொலை, களவு, சூது, விபசாரங்களைச் செய்யாதே. உணர்ந்து, ஆசையாணவங்களை நீத்து, ஆசையாணவப் பேய்களைத் துரத்தியடி. எல்லாரும் நலம்பெற நினை" என்று தானே உபதேசித்தனர்? இக்கொள்கையில் யாருக்காவது வேற்றுமையிருக்குமா? இக்கொள்கையைக் கடைப்பிடிக்காமல் வீண் வேடத்திலும் பூச்சிலும் அழுத்தங்கொண்டு பிறரை வெறுப்பவன் உண்மையாளனா? எந்தச் சமயமாவது பிறரை இழிவு செய்யச் சொல்லுமா? எந்த தீர்க்கதரிசியாவது அச்சம், பகை, சூது, வஞ்சம், பொறாமைகளை உபதேசித்தாரா? உலகில் வந்த தீர்க்கதரிசிகளெல்லாம் நல்லதுதான் சொன்னார்கள். மாந்தரெல்லாம் ஒற்றுமையாக, அன்பாக வாழத்தான் வழிகாட்டினர். வேற்றுமைப் பித்தம் பிடித்து உலகிற் கலகஞ் செய்வதெல்லாம் மனித மனதிற் புகுந்த சைத்தான் வேலை தவிர வேறில்லை. அந்த மனமாயச் சைத்தானை இன்றோடு விரட்டுங்கள்.!

தமிழர்களே! நீங்கள் எந்த சாதிச் சமயங்களைச் சேர்ந்தவராயினுஞ் சரி, நாம் தமிழர், நமது தாய்மொழி தமிழ், நமது நாடு தமிழ்நாடு என்பதைக் கனவிலும் மறக்காதீர்கள். உலகைச் சுற்றிப்பாருங்கள். ஒவ்வொரு நாடும் எவ்வாறு முன்

னேறிக் கொண்டிருக்கிறது பாருங்கள். ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தாய்மொழியை எவ்வாறு முன்னேற்றிக் கொண்டிருக்கிறார்கள் பாருங்கள். வங்கத்தையும் இந்தியையும் நோக்குங்கள். நேற்றெழுந்த ஒரு இந்திமொழி இன்று இந்திய மொழியாகப் போகிறது. இந்த பாரத நாட்டில் மட்டுமல்ல. பர்மா, திபேத்து, மலேயா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலும் ஒரு காலத்தில் வழங்கிய உலகின் முன்மொழி தொன் மொழியான நமது தமிழ் எந்நிலையிலிருக்கிறதென்று பாருங்கள். சோம்பல், வேற்றுமை, பொறாமை இவையே ஒரு நாட்டை வீழ்த்தும் பகைகள். காலத்திற்கேற்ற முன்னேற்றப் பணி, சுறுசுறுப்பு, ஒற்றுமை, கூட்டுறவு, அன்பு இவையே ஒரு நாடு முன்னேறும் துணைகள். வங்காளி வங்காளியைக் கண்டால் வங்காளத்திற் பேசுகிறான்; 'நான் வங்காளி' என்கிறான். ஆந்திரன் ஆந்திரனிடம் எப்பொழுதும் தெலுங்கே பேசுகிறான். மனவாடுக்களைப் பெருமையுடன் காண்கிறான். குஜராத்தி குஜராத்தியைக் கண்டால் குஜராத்திலேயே பேசுகிறான். பிரெஞ்சுத் தெரிந்தாலும் ஒரு ஆங்கிலேயன் ஜினிவா மகாநாட்டில் ஆங்கிலமே பேசுவான். தனது தாய்மொழியில் ஆங்கிலேயன் பெருமை கொள்ளுகிறான். தனது தாய் நாட்டிற்கு உயிரைத் தருகிறான். இத்தகைய மொழியன்பு தமிழனுக்கு வரவேண்டும். தமிழ் தெரிந்த தமிழனிடம் ஆங்கிலத்தில் பேசுவதை ஒரு அவமதிப்பாகக் கருதவேண்டும். தாய்ச் சோற்றைவிட்டு விலைச் சோறுண்ணும் வின்மையை யார் ஒப்புவர்? தென்னாடு, பர்மா, மலாயா, தென்னாப்பிரிக்கா, பிஜி, சையாம், இலங்கை முதலிய நாடுகளிலெல்லாம் தமிழர் வாழுகின்றனர். பர்மாவைப் பசுநிலமாக்கியது தமிழர் நெற்றி வேர்வை. தென்னாப்பிரிக்காவைச் செழிக்கவைப்பது தமிழர் உழைப்புத்தான். மலேயா இரப்பர்த்தோட்டங்களைப்பெருக்குவது தமிழர் பாடுதான். இவ்வாறு வஞ்சமில்லாத தமிழர் பிற நாடுகளிற் பாடுபடுகிறார்கள். ஆங்குள்ள தமிழர் வேறுபாடின்றித் தமிழரை மதிக்க வேண்டும். அந்தந்த நாட்டிலுள்ள தமிழர் தமிழனைக் கண்டால் அன்பு ஆதரவாக நட்புரிமை காட்ட வேண்டும். ஆங்கிலச் செருக்கும் அன்னிய மோகமுங் கொண்டு தாயையும், ஒரு தாயின் மைந்தரையும், தாய் மொழியையும் இழிவுறுத்துவது இழிகுணமாகும். தமிழைப் புறக்கணிக்கும் தமிழன் தாயைப் புறக்கணித்தவனாவான். தமிழைப் போற்றாத தமிழன் தாயை மறந்தவனாவான். பெற்ற தாயை மறக்கலாமா? இதோ நமது தாய் என்றும் இளமையுடன் இருக்கிறாள். உலக மொழிகளிடையே இம்முதிய தாய் ஆதரவின்றிக் கண்ணீர் விடுகிறாள். தாயின் கண்ணீரைத்

துடைக்க மைந்தர் வருவரோ? தமிழருக்குத் தாயுணர்வு பெருகினால் தன்னலம் இருக்குமா? தாய்முன் தருக்குஞ் செருக்கும் தலை தூக்குமா? நாம் ஒரு தாயின் மைந்தர் என்னும் உணர்வு மேலிட்டால் சாதிமத வேறுபாடுகள் தோன்றுமா? தமிழர் உலகின்முன் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் ஒரே வழி தான் உண்டு. வங்காளி தனது தாய்மொழியை உலகம் நன்மதிக்கச் செய்தது போலவே நீ தமிழ் மொழியை உலகளாவச் செய். உன்முன் நல்ல கவிகள் உள்ளனர். வீரருள்ளனர்; கலைவாணர் உள்ளனர்; புலவர் உள்ளனர். அவர்களை எல்லாம் போட்டி பொறாமையின்றி நன்றாக ஆதரி. ஒவ்வொரு நாளும் தமிழுக்கு ஏதாயினும் ஒரு பணிசெய். அல்லும் பகலும் தமிழின் நலத்தைக் கருது. இந்தியாவிலுள்ள மற்ற மொழிகளெல்லாம் தலை நிமிர்ந்து நிற்கின்றன. மலையாளம், தெலுங்கு, கன்னடங்கூட எவ்வளவோ முன்னேறி விளங்குகின்றன. தமிழ் நாளுக்கு நாள் தலை குனியும் நிலைமையிலிருக்கிறது. தமிழ்ப் பயிர் வாடுகிறது. இந்தப் பழந்தமிழ்ச்சோலை உன் அன்பழைப்பை நாடுகிறது. உன் அன்பால் அது கற்பகச் சோலையாகி உலகிற்கெல்லாம் நன்னிழலளிக்கும். தமிழா! தமிழை மதி. ஆங்கிலம் படி. வேண்டாமென்கவில்லை. ஆங்கிலத்தின் பயனைக் கொண்டு தமிழைப் பெருமைப்படுத்து. ஆங்கில மோகினி வலையிற்பட்டுத் தமிழ்த் தாய்க்குச் சிறுமை செய்யாதே. ஆங்கிலத்திற்குத் தமிழைப் பலி யாக்காதே. தாசி கையில் வாளைக் கொடுத்துத் தாய் கழுத்தை அறுக்க சொல்லுவாயா? தமிழா! நீ எத்தனை பிறமொழிகள் கற்றாலும் தாய் மொழிதான் உனக்கு நலமாகும். நீ எந்த நாடு சென்றாலும் தமிழகமே உனக்குச் சொந்தமாகும். பர்மாவில் நீ அன்னியனாகவே மதிக்கப் படுவாய். பிற மொழி நலங்களை யெல்லாம் உரமிட்டுத் தமிழ்க் கற்பகத்தை உனது அன்புப் பாலூற்றி வளர். நீ எந்த நாட்டில் பிழைத்தாலும் தமிழகம் உனது தாயகம் என்பதை மறக்காதே.

தமிழா! உலகம் முன்னேறி வருகிறது; நாடுகள் போட்டி போட்டு முன்னேறுகின்றன. இந்தியைக் காட்டாயமாக்க வேண்டுமென்று ஒரு வங்காளியிடம் சொல்லு பார்ப்போம். "நான் வங்காளி; எனது தாய்மொழியைத் தாழ்த்தும் எந்த மொழியையும் ஆதரிக்கமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லுவான் உண்மையான வங்காளி. தமிழா! உனக்குத் தமிழன்பு போதாது; தமிழ் வெறிபிடிக்க வேண்டும். தமிழ்க் கனல் உனது உள்ளத்தில் ஏறவேண்டும். அக்கனலைக் கொண்டு தமிழருக்கு நேரும் தீமைகளை யெல்லாம் பொசுக்கி யெறிய வேண்டும். அக்கனலிலே தமிழித்தங்கத்தைப் போட்டுருக்கி

இன்னும் இன்னும் மாற்றேற்றி நமது தமிழ்ச் சமுதாயதேவிக்கு வெற்றித்திருமுடி செய்தணிவிக்க வேண்டும். தமிழா விழித்துக்கொள்! நீ எங்கிருந்தாலும் சரி; நீ பர்மா தமிழனானாலுஞ் சரி, மலேயா தமிழனானாலுஞ் சரி, டர்பன் தமிழனானாலுஞ் சரி, இலங்கைத் தமிழனானாலுஞ் சரி, தமிழன் தமிழனே. அவனது தாய்மொழி தமிழ். எந்தச் சமயத்தைச்சேர்ந்தவனானாலுஞ் சரி, இந்து, இஸ்லாம், கிறிஸ்து என்று நீ வீட்டிலே, கோயிலிலே, மசூதியிலே, சர்ச்சிலே சொல்லிக்கொள். அதற்குத் தடையில்லை. வீதியிலே, நாட்டிலே யாராவது 'நீ யார்?' என்று கேட்டால் 'நான் பிராமணன், வேளாளன், பிள்ளை, முதலியார், நாயுடு, சேர்வை, அந்த மதம், இந்த மதம்' என்று வேற்றுமைப் புத்தியுடன் பேசாதே. 'நான் தமிழன், தமிழ் நாடு என்னது; நான் எங்கிருந்தாலும் தமிழர் கூட்டத்தைச் சேர்ந்தவன்; தமிழே எனது தாய்மொழி, அதையே முதலிற் பேசுவேன். அதிலேயே எழுதுவேன், தமிழின் நன்மையே என் முதல் வேலை, தமிழ்ப்பணியே முதற்பணி, தமிழ் முன்னேற்றமே எனது முதல் விருப்பம்' என்று சொல்லித் தலைநிமிர் தமிழா!' முன்னேறும் உலகின் முன் உனது தாயைப் பெருமைப் படுத்து. அன்னிய மோகத்தாலும் ஆங்கிலச் செருக்காலும், சாதிமத சாத்திர கோத்திர வேற்றுமை யுணர்வாலும் தமிழருக் கெல்லாம் பொதுவான தமிழ்த் தாயைத் தமிழ்மொழியைச் சிறுமைசெய்யாதே. தமிழின் பெருமை தமிழர் பெருமை: தமிழின் சிறுமை தமிழர் சிறுமை. இதையுணர்! இன்று பெருமை பெற்று விளங்கும் வங்கமும் இந்தியும் ஆங்கிலமும் எவ்வாறு முன்னேறின? அந்தந்த மொழியினர் அன்பாலும் முயற்சியாலுந்தானே? நீயும் உனது தாய்மொழியைப் பெருமைப்படுத்தி, விடாமுயற்சியினால் ஒன்றுபட்டு முன்னேற்றினால் பிறமொழிகளைப் போலத் தமிழும் ஏன் முன்னேறலாகாது? தமிழா தலை நிமிர்! நிமிர்! நிமிர்! எம் தாய் வாழ்க! இதுவே உன் மந்திரம்.

தலை நிமிர் தமிழா!

(ஒவ்வொரு தமிழனும் இதைப் பாடுக)

1

தலைநிமிர் தமிழா—பெற்ற
தாயின் மனங் குளிர....!
மலை குலைந்தாலுங்—தமிழா
மனங் குலையாதே!

2

வீரக்கனல் வளர்ப்போம்—ஆன்ம
வீறுகொண்டே யுழைப்போம்!
சூரத்துணிவொடு நில்—தமிழா
சொந்த உரிமையை வெல்ல்! (தலை)

3

குன்றினுயர் தோளா—ஓங்குங்
குவலயத் தோழா....!
வென்றிமேல் வென்றி பெற்றே—கால
வேகத்தை யாண்டிடு வாய்! (தலை)

4

இசைக் கொழுந்தேறி—விண்ணை
யெட்டிப் பிடித்திடு வோம்
திசை மூலைக ளெல்லாம்—தமிழ்க்கொடி
திகழ நாட்டிடுவோம்! (தலை)

5

காலக் கடலினிலே—வாழ்வுக்
கப்பலை முன்செலுத்தி....
ஞாலத் திரைக ளெல்லாம்—அளப்போம்
நல்ல புகழ் பெறுவோம்!

6

கன்னித் தமிழென்றால்—சக்திக்
கனல் பிறக்குதையே....!
அன்னையி னன்பினிலே—உயிருக்
கமுதம் ஊறுதையே! (தலை)

7

ஞானச் சிங்காதனம்வைத்—தன்னையை
ஞாலமெல் லாம் தொழுவோம்....
வானொளிர் மீனணியால்—வெற்றி
வாகை புனைந் தணிவோம்! (தலை)

8

தமிழ்த் திருமறைமுன்—உலகம்
தலை வணங்க வைப்போம்....
தமிழ கத்தினிலே—யுலகின்
தாயகஞ் சமைப்போம்! (தலை)

9

போட்டி பொறாமை யற்ற—இன்பப்
பொதுநிலை வகுப்போம்....
நாட்டின் இருள் வறுமை—நலிய
நாளும் பணி புரிவோம்! (தலை)

10

ஒற்றுமைச் சங்கொலிப் போம்—தூய
உண்மைக் குயர் கொடுப்போம்
வெற்றி முரசடிப்போம்—ஆன்ம
விறுகொள் மெய்த் தமிழா! (தலை)

—சுத்தானந்த பாரதியார்.

பண்டைத் தமிழ்ப் பெண்மணிகள்

[திரு. வி. அண்ணாமலை முதலியார் அவர்கள், பல்லாவரம்]

உயிர் தங்கும் உடல்நிலைமைக் கேற்றவாறு அறிவு வளர்கின்றது. அதனால் உயிர்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூன்றறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என்று முறையே ஆன்றோர் வகுத்தனர். அவற்றில் மக்கட் பிறவி ஆறறிவுடையதால், அப்பிறவி மற்றெல்லாப் பிறவியினும் விழுச்சிறப்புடைத்து.

இம்மக்கட் பிறவியினர் ஆண் பெண் என இருபாலராக வகுக்கப்படுவர். முந்தைநாள் தண்டமிழ் வழங்கும் செந்தமிழ் நாட்டில் ஆண் பெண் இருபாலரும் சமஉரிமை பூண்டு வாழலாயினர். ஆடவர்களைப்போன்றே பெண்டிர்களும் கொடை, வீரம், தியாகம், கல்வி முதலியவைகளில் தலைசிறந்து விளங்கினர். இடைக்காலத்தில், அந்தோ! தண்டமிழ்நாடு செய்தவத் தளர்வால் பெண்களுக்கு உரிமை இன்றென அறைகூவும் ஒருபிரிவு உட்புகுந்து கொழுந்துவிட்டு வளர ஆரம்பித்தது. அது வளரும் வளர்ச்சியைக் கண்ட நந்தமிழ் மக்கள் அதை வேருடன் களைந்து எறியாமல் அவ்வளர்ச்சியினூடே கள்ளுண்ட மாந்தரென மயங்கினர். அம்மயக்கத்தால் தம் செய்கையின் உண்மையை ஓர்ந்திலர். உலகத்தில் மக்கள் தலைசிறந்து முன்னணியில் நிற்றற்கு அச்சாணி போன்றவர் பெண்டிர் என்பதை மறந்தனர். பெண்ணொருத்தி உலகஞானம், கல்வி, ஆற்றல் பொதிந்தவளாய் இருப்பாளாயின் அவள் தன் குழவிக்குத் தானறிந்த ஞானம், கல்வி, வீரம் முதலியவைகளைப் பாலுடன் ஊட்டி வளர்ப்பள். அன்றியும், குழந்தைக்கு நீராட்டித் திலகமிட்டு, ஐம்படைச் சதங்கை சாத்தி, அணிமணிச்சுட்டி முடித்துப், பிறைநுதல் வதனத்தை முத்தமிட்டுத் தொட்டிலில் வளர்த்து உறங்கச் செய்யுங்கால், வீரம், ஞானம் பொதிந்த பாக்களையே தேனூறு வாக்கால் அன்பூறப் பாடுவள். அக்காலை அக்குழவியும் செவி வாயாகவும் நெஞ்சு களனாகவும் கொண்டு நுகரும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற ஆன்றோர் மொழிக்கிணங்கத் தொட்டிலில் வளர்ந்த காலை கேட்ட வீர வுணர்ச்சியும், வீரமகளால் ஊட்டப்பட்ட வீரப்பாலினுணர்ச்சியும், நாளும் நாளும் நம்மை நீங்காது தொடர்வுறும் நிழலைப்போன்று, நாம் வளர வளர நம்முடனேயே வளர்ந்துகொண்டே வரும்.

இவ்வுண்மை மறந்த மக்கள் பெண்களுக்கு இருந்த உரிமையை வீழ்த்தினர்கள். அதனால் பெண்கள் கேணியிலுற்ற மண்டூகமென உலகியல் அறிவு அற்று, வீரம், தியாகம் முதலியவைகள் நீங்கி அடிமையுடன் வாழலாயினர். இக்காரணத்தால் தற்காலப் பெண்கள் தாங்களீன்ற குழவிகளுக்கு ஞானம், வீரம், பொதிந்த உடலைப் பாதுகாக்கும் பாலூட்ட ஏது அற்றவர்களாய் ஊனுடலைக் காக்கும் பாலையே ஊட்டுவாராயினர். அப்பாலுண்டு வளர்ந்தவர்களும் தடியுடலைக் காக்கின்றாரொழிய வீரவுடலைக் காக்கின்றாரல்லர். நம் தமிழ் நாட்டின் எதிர்கால வாழ்வு தமிழ் இளைஞர்பாலுள்ளதால், தமிழ் இளைஞர்கள் ஞானம், வீரம் பெறவேண்டுதல் அவசியமாதலால், இன்றே நந்தமிழ்ப் பெண்களுக்கு, ஞானம் வீரம்

அடையும் உரிமை ஒவ்வொருவரும் கொடுத்தல் வேண்டும். அத்தகு வீரஞ்செறிந்த தமிழ்ப் பெண்மணிகள் முந்தைநாள் தமிழ்நாட்டில் இருந்தனரா? என்பதை ஆராய்வோம்.

பண்டைத் தமிழர்களின் கொடை, அறிவு, வீரம், கல்வி முதலியவைகளை அறிவிக்கும் ஆதாரங்கள் பல. அவற்றில் ஒன்று பண்டைய இலக்கியங்கள். தற்போது நமக்குக் கிடைத்துள்ள அளவில், இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமும், கடைச்சங்க நூல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூல்களும் மிகப்பழையனவாகக் கருதப்படுகின்றன. தொகை நூல்களில் ஒன்றாகிய புறப்பாட்டு, பல காலங்களில், அருங்கலை கற்ற ஆண் பெண் முதலிய பல தண்டமிழ்ப் பாவாணர்களால் ஆக்கப்பட்டுக் கடைச்சங்க காலத்தில் தொகுக்கப்பட்டது. இந்நூலுதவியால் ஒருவாறு பழந்தமிழ்ப் பெண்மணிகளின் வீரத்தை உணர்வோம். அத்தகைய வீரப் பெண்கள் வரலாறுகளை இங்குக் காண்போம்.

ஒருநாள் பெருங் கண்களையுடைய பகைவரின் தடாரிப் பறை போர்க்களத்தினின்று இடியேறென முழங்கிக்கொண்டிருந்தது. முதிய வீரமறக்குடியிற் போந்த வீரமகளொருத்தி செவியுற்றாள். வீரவுணர்ச்சி பொங்க ஆவேசமுற்றாள். இடியேறுண்ட கலாபமென்ன, இம்மகளும் இப்பறையின் இடியேற்றைக் கேட்டு ஆனந்தங் கொண்டாள். வீரவுணர்ச்சி அப்போதைக்கப்போது கொந்தளிக்க ஆரம்பித்தது. என் செய்வது என ஆய்ந்தாள். முந்நாள் நடந்த போரில் இவள் தந்தை களிறால் தாக்கப்பட்டு வீரவுலகம் புகுந்ததையும் மறந்தாள். பின்னால் நடந்த செருவில் இவள் தலைவன் பெரும்பகைவிரரை மறித்து, அவருடன் போராடி, அவ்விடத்தே தன் உடல் நீத்ததையும் மறந்தாள். முரசொலி மேலும் மேலும் எழுவதைக் கேட்கக் கேட்க, வீரவுணர்ச்சி பொங்கி அடியுண்ட வேங்கையெனச் சீறினள். அன்று நடக்கும் மறச்செருவிற்கு எவரை ஏவுவோம் என்று அங்குமிங்கும் ஓடினள்; கண்டாள்; தெளிவுற்றாள்; தனக்கு மறமகனொருவன் உண்டென்பதை ஓர்ந்தாள்; வீதியினிடத்துச் சென்றாள். தலைவிரிப்புடன் விளையாடுஞ் சிறுவனை அழைத்து இல்லிற் புகுந்தாள். அவன் சிகைக்கு எண்ணெய் நீவினள்; கோடு எடுத்து வாரினள்; பால்நிற முண்ட ஆடையை அணிந்தாள்; கொழுநிணமாறு வேல்கைக் கொடுத்து; "வீரமகனே! இன்று மாற்றலரின் செருக்களம் போந்து, அவர்களின் பகைமை மாற்றி என்னைக் காண்பாய்! அன்றேல், உந்தையையும், எந்தையையும் கண்டு களிப்பாய்". என்று வீரமொழி பகர்ந்து, தன்குடி தழைக்க வந்த ஓரே

மகனைப் போர்க்களத்து ஏவினள். தனக்குள்ள ஒரே சிறுமகன் போர்க்களத்தில் மரிப்பான் என்ற எண்ணம் அவள் மனத்தில் கொண்டாளில்லை. போர் முரசு செவியுறச் செவியுறப் பகைவரை எதிர்ப்பதற்கே தனக்கு ஒரு மகன் இருப்பதாக எண்ணினள். தன் ஒரு மகன் உயிரைக் காத்தலினும், தன் நாட்டின் பல்லுயிரைக் காத்தலே கடனென உணர்ந்தாள். இதை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் ஒரு பெரும் பாவாணர் வியந்து கூறியுள்ளார்:—

‘கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறு மயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே. —(புறம்: 279)

மற்றொரு வீர மகளொருத்தி, நரம்புகளெல்லாம் தளரப் பெற்றும், தளர்ச்சியால் மென்மையுண்ட தோலையுடையவளுமாய்ப், போர்க் களத்தைக் குறித்த செய்திகள் கிடைக்குமோ எனத் தலைவாயிற்படியில் நின்று எதிர்பார்த்திருந்தாள். அப்பொழுது அவ்வீதியில் சென்ற சிலர் அம் முதியோளைக் குறிப்பிட்டு ‘இவள் மகன் பகைவரின் பகைமை மாற்ற ஏலாதவனாய்ப் புறங்கொடுத்தான்’ என்றார்கள். இதைக்கேட்ட அம்மகள் மனந்துடித்தாள். அடங்காச் சினமுண்டாள். ‘என் மைந்தன் பகைவருக்குப் புறங்கொடுத்தனனா? அவ்வாறாயின் அவனுக்குப் பாலுண்பித்த மார்பை இன்றே அறுத்தெறிவேன்’ என வீரமொழி பகர்ந்தாள். ‘இதன் உண்மை அறிவேன்’ எனவுறுதி கூறினள். இல்லினுட் சென்றாள்; கூரிய வாளைக் கைக்கொண்டாள்; செருமுகத்தை நோக்கினள்; செருக்களஞ் சென்றாள்; இரத்தவெள்ளம் புரள்வதைக் கண்டாள்; அதில் மானிட மகரங்கள் ஓடுவதைக் கண்ணுற்றாள். தன் மகன் அதில் கிடக்கின்றானா என ஆய்ந்தாள்; கண்டாள்; தலைவேறு உடல்வேறு காணப் பூரித்தாள்; ‘ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்’ என்ற முறையில் கேட்ட அளவிலே பெரிதுவக்கும் ஒருதாய் தன்முது மறக்குடிக் கேற்றவாறு தன்னாடு நலமுய்யத் தன்னுயிரையும் பொருட்படுத்தாது போராடி வீரவுலகம் புகுந்ததைக் கண்ட

ஒரு வீரத் தாயின் மனமகிழ்ச்சியைச் சொல்லவும் கூடுமோ? அவள் மனநிலையை நன்குணர்ந்த காக்கை பாடினியார் நச்செள்ளையார் மிக அழகாகக் கூறுவார் :

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. —(புறம் : 278)

மற்றொரு வீரத்தாய் கொக்கின் சிறகுகளென்னத் தூய வெள்ளிய கூந்தலை யுடையவளாய், மறக்களஞ் சென்ற தன் மகன் வரவு எதிர்நோக்கி நின்றாள். அக்காலை அவ்விடம் குழுமிய சிலர் செருக்களத்தில் போராடிய வீரர்களின் திறத்தை வியந்து பேசிக்கொண்டிருந்தனர். வீரர்கள் வீரர் களைத் தாக்கியது மன்றி யானைகளையும் தாக்கி அழித்த திற த்தை வியந்து பேசினார்கள். அத்தருணம் அம்முதியோள் அவர்களை நெருங்கினாள். அம்முதியோளைக் கண்ட அக் கூட்டத்தினர், வியப்புற்று 'நின் மகன் நெடுநேரம் வீரர்க ளுடன் போராடிப் பகைமை ஒழித்தான். பிறகு யானைப் படையைத் தாக்கி அவைகளையும் வீழ்த்தினனாயினும், ஒரு களிறு அவனைத் துகைத்தது. அதனால் அவன் உடல் நீத்தான்' என்றார்கள். அதுகேட்ட அம்முதுமகள் என் செய்தாள்? தன் ஒருமகன் உடல் நீத்ததற்கு வருந்தினாளா? உடல் தளர்ந்த காலத்தில் தனக்கு உதவி செய்வாரின்றித் தன்னைப் பிரிந்த தற்கு ஏங்கினாளா? இல்லை! இல்லை! வீரத்தாயின் உள்ளத்தில் வருத்தமென்பது ஏது? வீரமன்றோ பொங்கும்! வீரத்தா யன்றோ அவள்! வீரம் அன்றோ அவள் உள்ளத்தில் நடம் புரியும்! அம்முதியோள் தன் மகன் வீரர்களோடு போராடிய செய்தியையும், யானைப் படையைத் தாக்கிய திறத்தையும் உன்னி உன்னி உண்மையுணர்ந்து ஆனந்த பரவசமாயினள். இக்கூற்றைப் பூங்கணுத் திரையார் பின்வருமாறு கூறுகிறார்:—

'மீனுண் கொக்கின் றூவி யன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந் து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே. —(புறம்: 277)

இத்தகைய சிறப்புற்ற பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை யையும் தற்காலத் தமிழர்களின் போக்கையும் நோக்குழி, நோக்குழி, அது நமக்கு ஆறாத் துயரையே விளைவிக்கிறது. தமிழர்கள் சிறப்புடையவர்களென்னில், அப்பேறு பண்டைத் தமிழர்களால் உண்டாயதே. ஒரு வீரத்தாய் தன் மகன் போர்க்களத்தில் மாறுபட்டான் என்று கேட்டவுடன், அவனு க்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவன் என்றாள். ஏன்? அப் பாலோ வீரவுணர்ச்சி பொங்கும் பால். அவளுக்கு வீர வுணர்ச்சி இன்றேல் அவள் இரத்தத்தால் உண்டாய அப் பாலிற்கும் வீரவுணர்ச்சி யுண்டாகாது. அவ் வீரவுணர்ச்சி யில்லாப் பாலுண்ட மகனும் வீரனாகான். ஆதலால் தன் மகன் போர்க்களத்தில் புறங் கொடுப்பானாயின், அது தன் குற்றமே யென உணர்ந்தாள். அதனால் அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன் என்று வீரமொழி பகர்ந்தாள்.

மேற்கூறிய வரலாறுகளால் ஒரு மகன், வீரமகனாவதற்கும், ஞான மகனாவதற்கும் கல்வியறிவு நிறைந்த நல்மகனாவதற்கும் தாயே காரண மாகின்றாள் என்பது புலனாகும். ஆதலால் பெண்களுக்குக் கல்வி, அறிவு, கொடை, வீரம் முதலியவை நிறைந்த கல்விகளைப் புகட்டினாலன்றி, அவர்கள் கல்வி, அறிவு, கொடை, வீரம் நிறைந்த மக்களாகமாட்டார்கள். நந்தமிழ் நாடு எதிர்காலத்து வரும் இளைஞர்பா லுள்ளதால், அவர்கள் தழைத்தோங்க, பெண்களை முன்னேறச் செய்யும் செய்கை ஆடவர்பா லுள்ளது. முப்பத்தாறு கோடி மக்கள் தொகை யுள்ள இப்பரத நாட்டில் நூற்றுக்கு ஒரு பெண்மணியே கல்வி யறிவுடையவளென்றால் நம் பேதமையை என்னென்று விளிப் பது! ஜெர்மனி தேயத்தில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட பெண்மணிகள் அனைவரும் பள்ளிக்கூடம் போதல் வேண்டும் என்னும் கட்டளையை ஓர்மின்! இன்றே நம்நாட்டுப் பெண்க ளுக்கு உரிமை அளிக்க வேண்டும்; கல்வி புகட்ட வேண்டும்; இப்படி வருங்காலந்தான் நந்தமிழ் நாடு பண்டைத் தமிழ் நாடாகும் காலமாகும். அந்நாள் எந்நாளோ?

திருவள்ளுவர்—ஒரு மரநூற் பேராசிரியர்

Thriuvalluvar—A Great Botanist

"அன்பகத்தில்லா வுயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரம்தளிர்த் தற்று." —குறள்.

இக்குறளின் சில முக்கியமான பொதுக் குறிப்புகள், சென்ற கட்டுரையில், செந்தமிழ்ச் செல்வி ஏழாம் சிலம்பில் விளக்கிக் காட்டப்பட்டன. இனி இக்குறளின் சொற்றொடர்களை முன்காட்டிய முறையில் ஆராய்வோம்.

அன்பகத்தில்லாவுயிர்

இத்தொடரிலுள்ள 'உயிர்' என்ற சொல்லிற்கு, நம்முரையாசிரியர் பரிமேலழகியார் மக்கள் உயிரெனப் பொருள் காட்டி அக்கருத்துக் கேற்ப, மனத்தின்கண் அன்பில்லாத உயிரென்றும்; பின் வாழ்க்கையென்றதற்கு, இல்லறத்தோடு கூடி வாழ்தலென்றும் பொருள் கூறியுள்ளார். ஆனால் மணக்குடவர் 'தன்னிடத்து அன்பில்லாத உயிரினது' என்று பொருள் கூறியுள்ளார். இங்ஙனம், பரிமேலழகியார் 'உயிர்' என்ற சொல்லை யாகு பெயராய், மக்களைக் குறித்துப் பொருள்வரையு முறையும்; மணக்குடவர் உயிரெனவே பொதுப்படக் கூறுமுறையும்; பொருள்விரித் தாராயின், மிகவும் வேற்றுமை காட்டுவனவாம். இக்கட்டுரையின் முதற்கண் எடுத்துக் காட்டியதுபோல், நமாசிரியர் செல்லுமிடத்து ஒவ்வோ ரதிகாரத்திலும், முக்கியமாய் ஒன்று அல்லது இரண்டு எடுத்துக்காட்டால், தான் அவ்வதிகாரத்தில் விளக்கிய பொருளை, மிகவும் திறம்படத் திரட்டிக்காட்டுவர். மற்றப் புலவர்கள் ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளை விளக்குவதற்குக் காட்டும் எடுத்துக்காட்டுகள் போலன்றி, அவ்வதிகாரத்தின் பொருளுக்கேற்ப, பல துறைகளினின்று மாராயினும் திரண்ட பொருள்களைக் காட்டுமாறு விளக்குவர். இங்ஙனம் உபமானம் உபமேயம் அமைக்கு முறையில், நம்மாசிரியருக்கு மேம்பட்ட புலவர்கள், நம் தமிழ் நாட்டிலின்றும் காணப்பட்டிலரென்பது மிகையாகாது. தனிப் பொருளைக் குறிக்கும், சிலவெடுத்துக் காட்டுகள், காமத்துப் பால் முதலிய விடங்களில் காட்டுவர். அவ்வெடுத்துக்காட்டுகளை மேற் குறித்துள்ள வெடுத்துக் காட்டுகளுடன், சீர்தூக்குதல் முறையன்றாம். ஆதலின் நம்மாசிரியர் 'உயிர்' எனப் பொதுப்படக் கூறியிருக்கும் சொல், மிகவும் நுணுகியாராயின் மிகவும் விரிந்த பொருளைக் குறித்து நிற்கும். இங்கு மக்களு

யிரைச் சுட்டிக்காட்டும் அடைமொழியின்றி 'உயிர்' எனப் பொதுப்படக் கூறியிருத்தலின், இச்சொல் மக்களுயிரன்றி மற்ற உயிரையும் குறித்து நிற்கின்றதென்பது மிகவும் வெளிப்படை. அற்றாயின் இங்கு உயிர் என்ற சொல்லுக்கு முன் " பிறப்பொக்குமெல்லா உயிர்க்கும் ", " அவாவென்ப வெல்லாவுயிர்க்கும் ", "ஊனுடையெச்சமுயிர்க் கெல்லாம்" என்ற குறள்களில் காட்டியிருக்கும் "எல்லாம்" என்னும் அடைமொழி யமைக்கப் பெறாமையின் இக்குறளில் காட்டியிருக்கும் 'உயிர்' என்ற சொல் இவ்வுலகின்கண்ணுள்ள, 'விலங்கு', 'தாவரம்' என்னும் பல்லுயிர்த்தொகுப்பனைத்தையும் குறிக்காதென்பது உய்த்துணரக் கிடப்பதொன்றாகும். இதனால் இக்குறளில் குறிக்கப்படும் 'உயிர்' என்னும் சொல், மக்களுயிரன்றி மற்றவுயிரையும் குறித்து நிற்குமென்றமையானும்; ஆனால் இவ்வுலகில் காணும் பல்லுயிர்த் தொகுப்பில் எல்லா உயிரையும் குறிக்காதென்றமையானும், இச்சொல் இவ்வுலகில் காணும் பல்லுயிர்த் தொகுப்பில் எத்தொகுப்பைக் குறித்து நிற்கின்றதென்பதும், அன்றி எத்தொகுப்பில் எவ் வகுப்பைக்குறித்து நிற்கின்றதென்பதும் ஆராய்ந்து அறியகிடப்ப தொன்றாகும்.

இக்குறளைச் சற்றான்றியாராயின், அன்புடைமையென்னும் இவ்வதிகாரத்தில், நம்மாசிரியர் திருவள்ளுவர், அன்புதோன்று மியல்பு மிடமும்; அன்பிற்றோன்றும் ஆர்வமும், நட்பும்; அன்பின் செயலாம் அறனும் மறனும்; அன்பின் வழியதாம் உயிரும் உடலும்; அன்பின்பயனும் இன்பமும் சிறப்பும் எனப்படும் பரந்த பல பொருள்களை ஒன்பது குறள்களில், மிகவும் சுருக்கமாய் அறிவுடையோர் ஆராய்ந்துணர இவ்வுலகிற்கு அருளியுள்ளார். இங்ஙனம் அருளிய பரந்த பொருள்கள் அனைத்தையும் ஆர்வமுடைய மாணவனுக்குத் தெளிவுறுத்துவான் வேண்டி, அவைகளைக் கண்ணழித்து எதிர்மறையில் ஒரு எடுத்துக்காட்டால் (உதாரணத்தால்) இக்குறளில் விளக்கியுள்ளார். இக் காரணம் ஒன்றாலேயே, இக்குறள் மிகவும் ஆழ்ந்த கருத்துக்களை அமையப் பெற்றமையுடன்மிகவும் நுணுகியாராயும் தோறும், மிகவும் விரிந்தபொருளை விளக்குவதாகும். அன்றியும் நம் பண்டைத் தமிழர் முன்னாள் கண்டிருந்த நுண்ணூற் சிறப்பையும் (Scientific achievements), நம்மாசிரியர் திருவள்ளுவர் அப்பரந்த பொருள்கள் அனைத்தையும் சுருக்கி விளக்கும் வன்மையையும் தெளிவுறுத்தும். இனி, எதிர்மறையில் விளக்கவேண்டி, ஆசிரியர் அருளிய 'உயிர்' என்னும் சொல்லுக்கு இரண்டாவது அடியிலுள்ள மரம் என்னும் சொல்லை உபமானமாகக் காட்டி யுள்ளார். மரம் என்னும் 'உயிர்' தாவரத்தொகுப்பின், ஒரு பெரும் உயிர்

வகுப்பாதலால், அவ்வகுப்பனைத்திற்கும் காட்டாய் நிற்ப தாகும். எனவே முதலடியிலுள்ள, உயிர் என்னும் சொல்லு டன், தாவரவுயிர்த் தொகுப்பின், ஒரு பெரும் வகுப்பை, (மர வுயிர் வகுப்பை)யே யாராய்ந்து சீர்தூக்கி யுள்ளாரென்பதும் பெறும். இதனல் ஈண்டு ஆராயும் 'உயிர்' என்னும் சொல் தாவரத் தொகுப்பு நீங்கிய—(Plant kingdom) மற்றைய உயிர்த் தொகுப்பைக் குறித்து நிற்கின்றதென்பது பெறும். தாவர உயிர்த்தொகுப்பு நீங்கி யெஞ்சி நிற்பது விலங்குயிர்த் தொகுப்பாதலின், நாம் ஆராயப்புகும் 'உயிர்' என்னும்சொல் விலங்குயிர்த் தொகுப்பைக் குறித்து நிற்பதாகும். அற்றெனில், ஈண்டு உயிர் என்றசொல், விலங்குயிர்த் தொகுப்பில் காணும் எல்லா விலங்குயிரையும் குறிக்குமோவென்னில்: அங்ஙனம் குறிக்காது. என்னே? ஆசிரியர் கீழடியில் தாவரவுயிர்த் தொகுப்பில் சிறப்புற்று நிற்கும், மரவுயிர் வகுப்புடன் சீர் தூக்கி நிற்கின்றமையால், ஈண்டு 'உயிர்' என்னும் சொல்லும், விலங்குயிர்த் தொகுப்பில் சிறப்புற்று, ஓங்கி நிற்கும் விலங்குயிர் வகுப்பையே குறிக்குமென்க. அவ்விலங்குயிர் வகுப்புத்தான் என்னேவெனில், நம்மாசிரியர் 'அன்பகத்தில்லா' என்னும் எச்ச அடைமொழியை உயிர் என்னும் சொல்லுடன் அணி பெறத்தழுவவைத்தமையால், ஈண்டு உயிர் என்றது அன்பு டைமையெய்தும் சிறப்புற்று ஓங்கி நிற்கும் விலங்குயிர் வகுப் பையேசுட்டி நிற்பதாகும். அவ்விலங்குயிர் வகுப்பு, மக்களுயி ரன்றி மற்றைய விலங்குயிரையும் தழுவி நிற்பதாகும். ஈண்டு விளக்கியவற்றல், இக்குறளில் எடுத்துக்காட்டிய உயிர் என் னும்சொல், இவ்வுலகில் காணும் எல்லாவுயிரையும் பொதுவில் குறிக்காதென்பதும்; தாவரவுயிர்த்தொகுப்பு நீங்கிய மற்றைய உயிரையே குறிக்குமென்பதும், எஞ்சிநிற்கும் விலங்குயிர்த் தொகுப்பில், அன்புடைமை யெய்தும் சிறப்புற்ற நிலையுடைய விலங்குயிர் வகுப்பையே குறிக்குமென்பதும்; அவ்வகுப்பில், மக்களுயிரும் அடங்குமென்பதும் பெறும். ஆதலின் மணக் குடவர் உரையே பொருந்தும் என்க.

அன்பு :—

இக்குறளில் அன்பு தன்னகத்தில்லா வுயிர்வாழ்க்கை தளிர்க்காதென்னும் உண்மையை ஆராயுமுகத்தால், வன்பாற் கண் வற்றன்மரம் தளிர்க்காது என்னும் உண்மையை எடுத் துக்காட்டி, சிறப்புற்ற விலங்கு மரம் என்னும் இரு உயிர் வகுப்புகளில் காணும் இயற்கை உண்மையை விளக்கிக் காட்டியுள்ளார். இம்முறையில் மரவுயிர்பால் காணும் உண்மை யிலிருந்து, விலங்குயிர்பால் ஓர் உண்மையை யாராய்ந்தறிய

வும் அங்ஙனம் ஆராய்ந்தறிந்த உண்மையினின்று, மரவுயிர்பால் மேற்கொண்டும் விளக்கம் கொள்ளவும்; அதினின்று மீண்டும் விலங்குயிர் ஆராய்ச்சியைத் தெளிவுறுத்தவுமாக, இவ்விரண்டு உபமானம் உபமேயங்களையும் நூனுகி யாராயுந் தோறும் ஒன்றோற்கொன்று புணைக்கப்பட்டும் துணையுமாய் நிற்கும் வகையில் அமைத்தும் விளக்கியும் காட்டியுள்ளார். இப் பிணைப்பைக் களைந்து, ஆசிரியர் கருத்தை யறியவேண்டின், இக்குறளின் ஒவ்வொரு சொல்லின் நுண்ணூல் கருத்துக்களை யாராய்தல் வேண்டும்.

அன்பு என்னும் சொல் தமிழ்நாட்டில் எவராலும், மிகவும் இளகுவிலும் மிகவும் வழக்கத்திலும், பழகிவரும் ஒரு சொல். இச்சொல்லின் வழக்கத்தின் பெருக்கத்தை யாவரும் அறிவர். யாவர் யாவர்மாட்டு இச்சொல் பழகப்படுகிறதோ, அவரவரின் அறிவிற்கேற்ற முறையில் அறியப்படுவதாகும். ஆதலின் இச் சொல்லின் பொருளை யறியாதவருமில்லை, யறிந்தவருமில்லை. ஐயாண்டுப் பையனும் அரங்கத்தில் அன்பின் ஆராய்ச்சி யறைகுவன்; பல்லூழிகால முழைப்பினும் நுண்ணூல் கழகங்கள் அன்பின் நுண்ணிய பொருள் காணுது மயங்கும். இம் மூன் றெழுத்துச் சிறு சொல்லின் பரந்த பொருளை விளக்குமாற்றல், வாய்ந்தேனல்லேன் எனினும், ஆசிரியர் விளக்கியுள்ள, மரம் நிலத்தினின்று நீர் உட்கொள்ளு மிலக்கணத்தை, விளக்கு முகத்தால் இவ்வாராய்ச்சியில் சற்று புகநேர்ந்தமைக்கு மிகவும் வருந்துவன். இனி, அன்பாவது தன்னுல் விரும்பப்பட்ட விடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி என்ற முறையில் நம் பிற்காலத்துத் தமிழர் உரை விளக்கியுள்ளார்கள். இவ்விளக் கத்தைக் குறிக்கோளாகக்கொண்டு, ஈண்டு ஆசிரியர், தன்னகத்து அன்பின்மையால் விலங்குயிர் வாழ்க்கைத் தளிர்க்காது என்னும் உண்மையை, வன்பாற்கண் வற்றன் மரம் தளிர்க்காது என்னும் உண்மையையெடுத் துக் காட்டி, விளக்கியுள்ளதுடன் நேர் நோக்கில் மேற் காட்டிய அன்பின் பொருள், விளக்க மின்மையுடையதாகும். மாமும் விலங்கும் தனிப்பட்ட உயிரென்பது ஆசிரியர் கருத் தன்று. அன்றி அவ்விரண்டும் ஒன்று என்பதும் ஆசிரியர் கருத்தன்று. ஆனல் அவ்விரு பெருவகுப்புயிர்களும், ஆவின் இருகொம்புபோல, ஓர் ஒற்றுமைப்பட்ட விடத்தில் தோன்றி தன் செய்தொழில் வேற்றுமையால், தனிப்பட்ட உயிராகக் காணுறுவதாகவே யாசிரியர் கொண்டனர். அதனல் அவ்விரு பெருவகுப்பு உயிருக்கும் பொதுவாய்ப் பரந்த இயற்கை இலக் கணம் உண்டென்பதே யாசிரியர் கருத்தாகும். அதனலே 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்றூர். ஈண்டு எல்லாம்

என்றசொல் இவ்வுலகின் பல்லுயிர்த் தொகுப்பனைத்தையும் குறிப்பதாகும். அதனால் விலங்குயிரின் அன்புடன், மரவுயிரின் ஒன்றைச் சேர்த்தாக்கியுள்ளாரென்பது உய்த்துணரக் கிடப்பதாகும். அற்றாயின் மேற் காட்டிய அன்பின் விளக்கம், இரு உயிரின்பாலும் காணுறும் பொது விலக்கணத்தைக் காட்டாமையால் பொருந்தாததாகும். பிற்காலத்தில், பலவறிவுடையோர்கள் அன்பைப்பற்றிப் பலவாராய்ச்சிகள் செய்துள்ளார்கள். அவைகள் மிகுதியும், நம்மாசிரியர் நக்கீரனார் 'அன்பின் ஐந்திணை' என்னும் இறையனார் அகப்பொருளின் சூத்திரத்திற்கு அருளியிருக்கும் விளக்கத்தைத் தொடர்ந்தே செல்வதாகும். ஆசிரியர் வள்ளுவர் போன்று, ஆசிரியர் நக்கீரனார், ஆங்கு அன்பைப் பற்றிய ஒரு பொது வராய்ச்சி செய்ய புகுந்தாரில்லை. பின் அவர் எடுத்துக்கொண்ட நூலிற் கேற்ப, காதலிகாதலன் மாட்டு நிகழும் அன்பைப் பற்றியே விளக்குவாராயினர். அந்த நிலையில், பொருந்துவதாய் ஆராயப்படும் அன்பின் விளக்கம், அன்பின் சிறப்புற்ற நிலையையே குறிக்கும் என்க. ஈண்டு மரம் விலங்கின் பொது விலக்கணம் ஆராயுமிடத்தும், அப்பொருளையே புனைந்துரைக்கின், அது பொருந்தாது நிற்பதில் வியப்பில்லையாம். அங்ஙனம் சிறப்பில் ஆராயுமுறையினும், ஆசிரியர் நக்கீரனார் கூறும் விளக்கம் வருமாறு:- "அன்பைத் தந்து காட்டலாகாது" என்று கூறி காதலன்பை மூன்று முறைகளால் விளக்கியுள்ளார். ஒன்றில் காதலன் பின் மிகவும் உன்னத நிலையைப்பற்றி 'சாவிற்சாதல்' முதற்கொண்டு ஆறு எடுத்துக் காட்டுகளால் விளக்கி அவன் இறந்து பட்டவாறே தானும் இறந்து பட்டவழி அன்பினானே ஆயிற்றெனக் கொள்க" என விளக்கினர். இரண்டாவது முறையில் அன்பைப்பற்றிச் சற்று புறத்திலாராய்ந்து "அல்லதூஉம் அன்பெனப்பட்டது தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி" என்றனர். மூன்றாவது முறையில், "அன்பு உண்மை மாத்திரையால் உணர்த்தி, பிழம்பு உணர்த்தப்படாதது" என விளக்கினர். இரண்டாவது குறிப்பை மேலும் விளக்கவேண்டி 'அன்பென்பதுதான் கருதப்பட்டபொருளின்கண் தோன்றும் வேட்கையன்றே ஈண்டு நம்மால் அன்பென்று விகற்பிக்கப்படாநின்றது" என்று காட்டியுள்ளார். இங்கு ஆசிரியர் ஆண்டிருக்கும் "விகற்பிக்கப்படாநின்றது" என்ற சொற்றொடரை அறிவுடையோர் ஆராய்தற்பலாது. ஈண்டு வேட்கை என்ற சொற்கு, வேட்கை யென்னோவெனில் ஒருவரொருவரை இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா வுணர்வினையும் நீக்கித் தானேயாய், நான்வழி காசுபோலவும், நீர்வழி மிதவை

போலவும், பான்மை வழியோடி இருவருயிரையும் புணர்விக்கு மென்பது" என்று காட்டியுள்ளார். ஈண்டு ஆசிரியர் நக்கீர ஞர் விளக்கிய குறிப்புகளால், மக்கள்பால் சிறப்புற்று நிலவும் காதலன்பை யாராய்ந்துள்ளார் என்பது வெளிப்படை. அத ஞல் அவர் அன்பின் பொதுவிலக்கணம் ஆராய்ந்து காட்ட வில்லையென்பதும் வெளிப்படை.

என்ருலும் தான் காட்டிய அன்பின் சிறப்பிலக்கணத்தில் சிறிது அன்பின் உன்னத நிலையையும் விளக்கி, அன்பு உயிரைப் பற்றி நிற்பது என்னும் உண்மையை விளக்கவே 'தானேயாய்' என்றும், 'ஈருயிரையும் புணர்விக்குமென்றும்' குறித்துள் ளார். இக்கருத்தை யாசிரியர் மெய்கண்டார் "அவனேதா னே யாகியவந்நெறி" என்று பத்தாவது சூத்திரத்தில் விளக்கி "அயரா வன்பின ரன்கழல் செலுமே" என்று பதினேரா வது சூத்திரத்தில் எடுத்துக் காட்டியதற்கும், சிவஞான முனிவர், சிற்றுரையில் 'ஏகனுகி இறைபணி நிற்குமுயிர்' முதல்வன் இங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து நிற்கும் உரிமையை நோக்குமாயின், நோக்கும் தோறும் நோக்கும் தோறும் அப்பொருட்கண் செல்லுமிச்சை அடங்காது மீதூரு மாகலின் அவ்வழி அவ்விச்சையே தானுக விளங்கித்தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப் படுமென அறிவிச்சைசெயல் கள் மூன்றுங்கண்டு விடயிக்குமாறு உணர்த்தி அதே நிலை இயல்பு கூறியவாறுமென்க" எனக் காட்டிய சிற்றுரையுட னும் "அறிவிக்கவறிவதாகிய, அவ்வான்மா விடயத்தையறியு மாறுமுதல்வன் பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதனை அறி வித்துத் தான் அறிந்து வருதலான்" என்ற சிவஞான பாடிய உரையுடனும் சீர்தூக்கில் நம்மாசிரியர் நக்கீரனுர் அன்பின் அதீதநிலைமையையும் ஈண்டு ஒருசிறிது விளக்கியுள்ளாரென் பது புலனும்.

அஃதவ்வாருக, நமது தமிழ் நாட்டிற்குத் திலகமென விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும் கண்ணப்ப நாயனுர் புராணத்திற்குச் சூசனம் எழுதுமுறையில் அன்புடை மையைப்பற்றி ஒரு குறிப்பு எழுதியுள்ளார். தற்காலத்தில் திரு வாளர் டி. பி. மீனுக்ஷி சுந்தரன், M. A., B.L. அவர்கள் "சேக் கிழாரும் திருகண்ணப்பரும்" என்ற கட்டுரையின் கீழ் "அன்பு ஆராய்ச்சி" என்ற விரிந்த உரை நடை கலாநிலயத்தில் வரைந்துள்ளார். இவைபோல்வன பல நம் தமிழ் நாட்டில் வெளிவந்துள்ளன. பொதுவாக இக்கட்டுரைகளில் "எமக்கு இனியரென்று எம்மாலே தெளியப்பட்டவர் யாரோ அவ ரிடத்தே எமக்கு விருப்பம் நிகழும். எமக்கு யாரிடத்து விருப்

பம் நிகழுமோ அவ்விடத்தே எமக்கு அன்பு நிகழும். அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி" என்று கண்ணப்ப நாயனார் சூசனத்திலும்; "யாம் எவரிடத்து அன்பு பாராட்டுகிறமோ அவரை நோக்க அவ்வுள்ளநிலை அன்பெனப் பெயர்" என்றும்; அன்பாவது என்னை? என்னும் ஒரு வினா எழுப்பியதற்கு விடை கூறு முகத்தால், 'ஒருவகையால் நோக்குமிடத்து உவகை அல்லது இன்பமே அன்பின் உருவகமாகும்' என்று கலாநிலயத்திலும், விளக்கிக் காட்டப்பட்டன. இக்குறிப்புகளெல்லாம் அன்புடைமையையாராய்தற்கு மிகவும் துணைக் கருவிகளாக உள்ளவென்பது அறிவுடையார் துணிபு.

எனினும், இவ்வாராய்ச்சிகள் பெரும்பாலும் ஆசிரியர் நக்கீரனார் ஆராய்ச்சியின் மேற்காட்டிய இரண்டாவது முறையையே முதலாகக்கொண்டு தொடர்ந்து வந்தவைகளாம். அங்ஙனமிருப்பினும், ஆசிரியர் நக்கீரனார் விளக்கிய காதலன்பின் அதீத நிலையையும்; ஆசிரியர் மெய்கண்டாரும், சிவஞான போதத்திற்கு உரையெழுதிய சிவஞான முனிவரும் விளக்கிய இறைவன் அன்பின் அதீத நிலையையும்: பிற்காலத்தில் விளக்கப்பட்ட பொது அன்பின் அதீத நிலையுடன் நடுவு நிலைமையினின்று ஆராயின், நம்பண்டைத்தமிழர் ஆராய்ச்சியின் முடிபும் அஃதைத் தொடர்ந்து பிற்காலத்தார்கள் காட்டிய விளக்கமும் மிகவும் வேற்றுமை காட்டுவதுடன், முதலினின்று வந்த வழி தொடர்பற்று நிற்பதாகும். நம் பண்டைத் தமிழர் வல்லிய மலத்தினின்றும் (பழம்வினை) அறவே நீங்கி ஏகனாகி நின்ற உயிரின் மாட்டு, அத்துவிதமாய் அறிவித்து அறியுமுறையில், அதிட்டித்து நிற்கும் இறைவன் சக்தியையே அன்பென்றார்கள். பிற்காலத்தார்கள், அக்கருத்தையே, மிகவும் புறத்திலிழுத்து, தொடர்பின்றி, மக்களுக்கே அன்பைச் சிறப்புடையதாக்கி, மக்களின் செய்வினை வகுப்பு வாதத்தி லீடுபடுத்தி, பொருள் விளக்குவராயினர். இதனால் புலவர்கள், தாங்கள் எடுத்துக்கொண்ட நிலைக்கேற்ப, விரித்த அன்பின் வெவ்வேறு நிலைக்கும், தொடர்புகாட்டல் இயற்கையில் இயலாததாகி, வலிந்து பொருள்விளக்கிக் காட்டல், வேண்டுவதாயிற்று. அல்லதூம், அன்புடைமையை ஒவ்வொரு நிலையினின்று மாராய்ந்து அன்பின் உன்னத நிலையாராயுங்கால் இக்குறிப்புகள் அவ்வித ஒவ்வொரு நிலைக்குமுள்ள தொடர்பு காட்டுமுறை, யும் சுருங்கிய அன்பின் நிலைக்கும் மிகவும் பரந்து உச்சியிற் தோன்று முன்னத நிலைக்கும் புணர்ந்து காட்டுங் காரணங்கள் தெளிவுறு திருப்பதுடன் மயக்கத்தைக் கொடுப்பதாகும். காட்டாக, திருவாளர் டி. பி. மீனாக்ஷிசுந்தரன் பிறவிடத்தில்

கூறும் "அவ்வாறே உலகத்தில் அலேபவர்களும் அன்பை வளர்ப்பார்களானல், இவர்களும் அன்புரு வாவார்கள்." "சிவ மாக்கி யெனையாண்ட என்று பாடுவார்கள். அதுபற்றியல்லவா அன்பே கடவுள் என்றது" என்னும் வாசகத்தை முதலில் காட்டிய 'யாம் எவரிடத்து அன்பு பாராட்டுகிறமோ அவரை நோக்க அவ்வுள்ள நிலே அன்பெனப் பெயர்" என்னும் வாசகத்துடன் சீர்தூக்கின், இரு கருத்துகளும், ஒரு வித்தி னின்று தோன்றி யோங்கி வளர்ந்து நிற்கும் தொடர்புடைய ஒரு மரம்போலன்றி, நடுவில் ஒட்டவைத்த ஒரு ஒட்டுக்கன்று போலவே தோன்றுகிறது. அல்லதூம், நம் பண்டைத்தமிழர் காட்டும் வெவ்வேறு நிலேயன்பை மேற்காட்டிய விளக்கம் கொண்டு ஆராயின் ஒருதொடர்புடைய கருத்தை முட்டின்றி முடித்துக்காட்டுவதன்ருகும். "காட்டாக நம்மணிவாசகர் தாம் அருளிய திருவாசகத்தின் முற்பகுதியில் கூறும் "இடையருவன் புனக் கென்னூடகத்தே நின்றுருகத் தந்ததருளெம்முடை யானே" என்றும், "சுருக்குமன்பின் வெற்றடியேனே" என்றும், "வாழி யிதென்ன உறக்கமோ வாய்திறவா யாழியானன்புடை மையாமாறு மிவ்வாறே" என்றருளியவைகளுடன், அவர் பிற் பகுதியில் அருளும் "இன்பமே மென்னுடைய வன்பே" என்ற தொடருடன் ஆராயினும்; அல்லதூம் திருமூலர்கூறும் :—

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரு மறிகிலார்
அன்பே சிவமாவது யாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே"

என்ற திருமந்திரத்துடன் ஆராயினும்; அல்லதூம், இங்குவாராய எடுத்துக்கொண்ட 'அன்பகத்தில்லா' என்ற குறளில், விலங் குயிரன்புடன் மரத்தின் ஒன்றைச் சீர்தூக்கிய முறையுடன் ஆராயினும் இவ்வேறுபட்டநிலேகளினுள்ள அன்பிற்குத்தொடர் புகாட்டல், மேற்காட்டிய விளக்கங்களால் கூடாமல் மிகவும் முரண்படுதல் காண்க. ஈண்டுக் காட்டியவற்ருல், எவர் கட்டுரை யினும் இழுக்குக்காட்டுதல் குறிக்கோளன்ரும். மற்று நம் பண்டைத் தமிழர் கண்ட ஆழ்ந்த நுண்ணூற் கருத்துகள், மேற்கொண்டு மாராயப்பட்டு யேன்மையுருமல், பிற்காலத்தில் நிலேதடுமாறிப் புராணக்கூற்ருய், சீழ்மையுற்றதற்கே வருந்துவ தாகும். அவைகளே நுண்ணூல் முறையிலாராய்ந்து மேன்மை யுறச்செய்தல் ஒவ்வொரு தமிழர் கடமையெனினும், அவ் வகைப்பணி எம்போன்ற அறிவிற் சிறியோரால், முட்டின்றி முடித்தல் முடியாததொன்ருயினும், அறிவுடையார் கருத்தை யிம்முறை யாராய்ச்சிக்கு இழுத்தற் பொருட்டே நம்மாசிரியர்

இக்குறளில் காட்டிய அன்புடைமையின் ஆராய்ச்சியை விளக்கு முகத்தால், ஈண்டு அன்பை யாராயப் புகுந்ததாகும். இங்கு விளக்கப்புகும் அன்பின் ஆராய்ச்சி இதுகாறும் ஆராய்ந்த முறைகளினின்றும் பலவகைகளில் மாறுபட்டதாகும். இம் முறை மிகுதியும் நுண்ணூற் கருத்தைத் தழுவியே புகுந்து செல்லும். ஆதலால் இம்முறையில் குற்றங்கள் காணுமின் அவையனைத்தையும் என்னுடையதாக்கி, பெற்றிமை காணுறின் அவையனைத்தையும் ஆசிரியருடையதாகக் கண்டு வியப்பீர்களாக.

அன்பும்—என்பும்

பொதுவில் இவ்வண்டங்களனைத்தையும் புவனங்களனைத்தையும் அவற்றுள் சிறப்பில் ஞாயிறும் திங்களும் கனிபெற மிளிரும் இவ்வுலகையும் அதில் தடவரைத் தண்கடலையும்; ஓங்கு பெருவானையும்; இவ்வுலகில் காணுறும் அவன், அவள், அது, அவை எனும் சுட்டுப்பொருளுக் குள்ளாகிய பல்லுயிர்த் தொகுப்பனைத்தையும், நம்மாசிரியர் கண்ணழித்து, 'இவ் வேறு வேறுருவும்', 'வேறுவேறியற்கையும்', 'நூறுநூறாயிர மியல்பினதாகி' 'எல்லாவுயிர்க்கும் தோற்றமாய்' 'எல்லா வுயிருக்கு முயிராய்', 'எல்லாவுயிர்க்கு முடலொடுயிர்தானுய்', எல்லாவுயிருமாய்த் தழைத்து' 'எங்கும் பிரகாசமாய் ஆனந்த மெய்ப்பொருளாய் அருளொடு நிறைந்த' பூரண வியற்கையின் அருள் சக்தி என்னும் தொடர்பாய் நிலவுற்று உயிர்கள்மாட்டு அதிட்டித்து நிற்குமுறையில், சிறப்புற்ற எவ்வுயிரில் இவ்வருள் சக்தி அன்பெனும் சிறப்புற்று ஓங்கி மிளிருமென்பதை யாராய்ந்து சுட்டி யறிவிப்பான் வேண்டி,

"அன்போ டியைந்த வழக்கென்ப, வாருயிர்க்
கென்போடியைந்த தொடர்பு"

என்று நம்மாசிரியர், அன்போடியைந்த உயிர்களின் இலக்கணம் கூறியுள்ளார்.

(தொடரும்)

நம் தமிழ் மொழி

(நேரிசை யாசிரியப்பா.)

ஆராய் வுடையோர் அலகிட்டுக் காலம்
இவ்வள வென்று இயம்புத லாகா
அத்துணைத் தொன்மைத் தாகிய நம்மொழி;
தன்னை யொத்த தனிமொழி யெல்லாம்
தாமழிந் தொழியவும் தரணியில் தானே
இன்று மிளமையோ டிலங்கும் நம்மொழி;
பகருமோர் எழுத்தைப் பலவெழுத் தாகப்
பெருக்கிக் கொள்ளப் பேரிட மாகப்
பன்மொழி யார்க்குப் பண்டையி லாதியாய்
நீண்டு நின்று நிலவிய நம்மொழி;
பல்நாட் டவரொடு பண்டைய நாளில்
பெருந்தொகைக் குறிப்பினைப் பெறுவாய்க் கணக்கில்
வாணிபஞ் செய்து வளங்கொண்ட நம்மொழி;
தேன்பலா கதலி தீஞ்சுவை யினுமேல்
இனித்தச் சுவையாய்ச் சொரிவது மாய
இலக்கிய மல்கிய இணையிலா நறுமொழி;
இயன்மொழி; இசைமொழி; எவரும் எளிதில்
பயிலற் குரிய பண்புசா லும்மொழி;
மெல்லிய ஓசை மேவிய இன்மொழி;
இறைபோ லென்றும் இலங்குஞ் செம்மொழி;
மாசிலா தொளிருந் தூய நம்மொழி;
கள்ள மறியா உள்ளமு மிக்க
உண்மையும் ஒழுக்கும் உயிரின் விழுமிய
மானமும் வீரமும் வழங்கலும் பெரிதாத்
தானர சியற்றிய தனித்த நம்மொழி;
அண்டினோர் எவரையும் ஆதரிக்கும்மொழி;
அகநிலைப் படாதது அவர்மொழி, அதனால்
ஆரியர் தங்கள் அறிவிவுக் குரியதாய்
பிறமொழி யாயவர் பேசிய நன்மொழி;
அன்னிய மாதாம் ஆரிய அணங்கொடு

கலந்துதன் கவ்வளம் குன்றினும் இன்றும்
தன்னளவு திரியாது தானியங் கும்மொழி ;
ஆரியப் படையைக் கடந்ததும் அன்று
ஆரியம் நன்று தமிழ்தீ தென்ற
ஆரியன் அழிய வசவு தந்ததும்
ஆரிய மழிய காரண மாயதும்
பற்பல சித்திகள் படைத்ததும் நம்மொழி ;
உள்ளலும் உள்ளத் துணர்வாய் எழுவதும்
வாழ்க்கைப் படுப்பதும் வண்மைக் குரியதும்
நந்தாய் நவில நயந்து கற்றதும்
இந்நாட் டுரிமையா இயைவதும்
நம்மொழி யாகிய செந்தமிழ் மொழியே.

—வ. ச. ஏகாம்பரன், தமிழ் மருத்துவன்.

குறுந்தொகை

50-வது பாட்டின் தெளிவுரை.

[சேனுதிபதி திரு. நடேசசெட்டியார்[1] அவர்கள்.]

மருதம்

50 ஞாயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலோடு தாஅய்த்
துறைஅணிந் தன்றுஅவர் ஊரே ; இறைஇறந்து
இலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்புஅணிந் தன்றுஅவர் மணந்த தோளே.

இக் குறுந்தொகையைத் தொகுத்துமுடித்த பூரிக்கோ என்பார் இச்செய்யுள் கொண்ட கருத்தின் குறிப்பை உணர்த்திய தாவது:—

"கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது" என்றும் பரத்தைபர் மாட்டுப் பிரிந்த கிழவற்காக வாயிலாக வந்தோர்கட்குத் தலைவி தன் மெலிவு கூறிக் குறிப்பால் வாயில் நேர்ந்தமை உணருமாறு உரையாநிற்றல் என்பது.

இக் குறுந்தொகை நூலினுக்கு உரை வரைந்து உதவிய பேரறிஞர் இச் செய்யுட்கு இறைச்சியாகத் தந்த பொருளாவது:— அவன் ஊரிடத்துத் துறையை ஞாழல் மருதின் பூவொடு தாஅய் அழகு செய்தது; அவன் மணந்த தோள் மெலிந்து நுயரைத் தாங்கியது. "இஃதொரு வியப்பிருந்தவாறென்னே!" என்று இச் செய்யுளில் ஒரு வியப்புக் கண்டு மகிழ்கிறார் உரையாசிரியர்.

வித்துவான். திரு. இரா. சிவ. சாம்பசிவ சர்மா அவர்கள் முறையே உதவும் உரைவிளக்கத்தில் இச் செய்யுட்கு மேற்கோள்விளக்கத்துடன் இறைச்சிப்பொருளும் எழுதி, சேந்தமிழ்ச் செல்வி சிலம்பு 16: பரல் 2- பக்கம் 72 ல் உதவியதாவது:

புலிநகக் கொன்றையின் மலர்கள் மருதத்தின் பழம் பூக்களுடன் கலந்து பரந்து நீர்த்துறையை அழகு செய்தன என்பது பரத்தையர் பலரோடுங் கூடிச் செவ்வி அழிந்து நின்ற தலைவனைச் செவ்வி குலையாத தான் கூடிப் பொலிவதாகத் தலைவி குறிப்பித்தவாறும் என்பது.

ஆசிரியர் குன்றியனார் ஒரு ஆறு பல நிலத்து மலர்களையும் ஒரு துறையில் சேர்க்குந் திறத்ததேனும் இருநிலத்து மலர்களை ஒருஊர்த் துறையில் சேர்ந்ததை குறித்துள்ளதால் தலைவரும் ஒரு தனிப் பரத்தையுடன் கூடி மகிழ்ந்தார் என்று விளக்கிய திறத்திற்கு மாறாகத் தலைவர் பலபரத்தையரோடுங் கூடி செவ்வி அழிந்தார் என்பது மாறுகும். செவ்வி (அழகு) குலையாதும், செவ்வி (பருவம்) அறியாதும் இருந்தவர் தலைவர்தாம் என்றும்; ஆனால் தலைவி, தன் தலைவர் பிரிவால் செவ்வி குலைந்தும், செவ்வி அறிந்தும், அவர் மணந்த தோள் நெகிழ்ந்தும், அணிவன சரிந்தும், புலம்பும் நிலையில்உள்ள தலைவியைச் செவ்வி குலையாது இருக்கும் என்றும் விளக்கியது ஆசிரியர் கருத்துக்கு மாறுகும்.

நல்லிசைப் புலவராம் குன்றியனார் ஓர் இல்லக் கிழத்தியை ஊடலால் பிரிந்த இல்லக் கிழவர் பரத்தைபால் தங்கிப் பிரிந்தபின், அவர் அனுப்பிய தூதுவர்கள் அத் தலைவியைக் கண்ட ஞான்று உடல் மெலிந்து, தோள் நெகிழ்ந்து, அணிந்தன புலம்பும் நிலையில் உள்ளாள் என்று கண்டதை உணர்த்துங் கருத்துடையது இச் செய்யுளின் ஒரு தெளிவுரை.

இச் செய்யுளின் அன்வயம்:—

ஐயவி அன்ன ஞாழல் சிறுவீ செவ்விமருதின் வீயொடு தாஅய் செம்மலவர் (தங்கிய) ஊர்த்துறை அணிந்ததே;

இறந்த (பிரிந்த) இறையவர் மணந்த தோள் நெகிழ இலங்குவளை சாஅய் அணிந்தன புலம்பினவே. அன் றுகள்-அசைகள்.

ஐயவி = சிறுவெண்கடுகு ; ஞாழல்வீ = நாவல்பூ ; நெய்தல் நிலத்தரு. மருதின்வீ = மருதநிலத்தரு. செவ்வி = அழகு, பருவம்; செம்மல் = தலைவர்; தாஅய் = தழுவி, கலந்து; தாஅய்த் துறை = ஒதுக்கிடம் ; சாஅய் = சரிந்து; புலம்பு அணிந்தன்று = அணிந்தன புலம்பின ; தோள் = தோளும் அதன் அணிக்கும் ; வளை = அணியும் முன்கைக்கும் உணர்த்தும்; செம்மலவர், = இறையவர்.

இதன் பொருள்:—

சிறிய உருவினதான வெண்கடுகை ஒத்து, உதிர்ந்து, கிடக்கும், ஞாழல்மரத்தின் சிறிய உருவினதான, பொன்னிறத்த மலர்கள், மருதின் மலர்களோடு தழுவிக்கலந்து, நெய்தல் நிலத்து ஊர்த்துறையின் கரையின் ஓரத்தில் நீரால் ஒதுக்குண்டு தம்முன் நிறத்தாலும், உருவத்தாலும், மாறுபட்ட இரு நிலத்து இருமலர்களும் நீர் மோதுதலால், அலைப்புண்டு, அசைந்து, புரளுதல் போல், தன் தலைவர் உடன் இருந்து, தோள் மணந்த ஞான்று, தன்உடல் பூரிப்பால் நெகிழாது, சாயாது, இருந்த தோளணியும் வளையலும், தன்னைத் தணந்து, பரத்தையர் தோள் மணந்து, புறந்தங்கியதால், உடல் மெலிவால் மணந்ததோள் நெகிழ்ந்தும், ஒளிவீசுகின்ற தோளணியும் வளையலும் தம் இடம் பெயர்ந்து, சரிந்து, அசைந்து, ஒலி செய்யும் திறத்தனவாயின என்று தூதுவர் காணத் தலைவி இருந்த நிலையைஉணர்த்துங் கருத்துடையது இச் செய்யுளாகும்.

இருமலர்களும் உதிர்ந்து துறையின் கரையில் விழுந்து சேர்ந்து அலைப்புறுதல் போல் தலைவி அணிந்த வாகுவலயமும் கை வளையல்களும் மெலிவால் நெகிழ்ந்து முன்னங் கைப்புறத்தில் சரிந்து சேர்ந்து ஒலிசெய்வதை அவள் அணிந்தனவே உள்ளத்தில் தோன்றும் துயரை வெளிப்படப் புலம்பிக் காட்டுவனவாகும் என்று விளக்கியதால் ஒரு காதலி தன்காதலனுக்குக் கொள்கலனாக இருக்கும் காதலரின் ஊடலால் நிகழும் உடல் மெலிவை விளங்கச் செய்வதாகும் இச்செய்யுள்.

போக் கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ் சேர்ஊடல் அணிமருதம்—நோக்குங்கால்
இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருக்கும் ஐம்பாற் றுறைகை.

என்பதால்

மருதம் ஊடற்கும், நெய்தல் இரங்கற்குமாதலால் மருதநிலத்துக் கருப்பொருளாம் மருதின் உதிர்ந்த மலர்கள் நெய்

தல் நிலத்துக்கருப் பொருளாம் ஞாழலின் உதிர்ந்த சிறு மலர்களுடன் ஆற்றுவெள்ளம் சுமந்து சென்று நெய்தல் நிலத்துநீர்த்துறையில் அழகுபெற ஒதுக்கிய தோற்றத்தை மருதநிலத்து மகிழ்நன் தன் இல்லக்கிழத்தியை ஊடலால் பிரிந்து, பரத்தையர் இல்லந்தங்கி, அவளை இரங்கித் தோள்மணந்திருத்தலை, ஒப்புமை கூறிய சொல்வன்மை கொண்டது இச் செய்யுள்.

ஓர் ஆற்றின் இருகரையினும் உதிர்ந்த இருமரங்களின் இருமலர்களையும் துறைகளில் சேர்த்தியது தலைவி தன் இரு கரங்களினும் தோள்களினும் அணிந்த அணிகள் மரங்களினின்று மலர்கள் உதிர்வனபோல் நெகிழ்ந்து சாய்ந்து முன்னங்கைப்புறத்தில் சேர்ந்து ஒலித்தது அவன் புலம்பும் தொழிலை அணிகளே நிகழ்த்தியன என்னுங் கருத்துடையது.

இதனால் பரத்தையர் இல்லஞ் சார்ந்து பிரிந்தபின் தன் இற்கிழத்தியின் தோள் மணக்க விருப்பங்கொண்ட இற்கிழவர் தூது அனுப்பி அவள் காதல்வன்மை தேர்ந்து தூதுவர்தம் மொழிப்படியே தம்இல்லம் சேரவிரும்பி வாழ்வது மருதநிலத்திற்குரிய ஊடிக் கூடலால் ஊடல் உவகையால், ஊடலினால் கூடல்இன்பந் தேர்ந்து மகிழ்வது அக்காலத்துத் தமிழ் மக்கள் மனப்பான்மை என்பதை செஞ்சொற் புலவராம் குன்றியனார் தம் காலத்து நூல்வழக்கையும், உலகவழக்கையும் நன்கு உணர்ந்த பேரறிஞராதலால் தாம் கொண்ட சிரிய கருத்துண்மையை உவமைமுகத்தால் அமைத்து விளக்கிய உள்ளுறைப் பொருளை ஓர்ந்து பொருள் தேர்தலே சிறப்புடையதாகும்.

இருநிலத்து இரு மலர்களும் ஒரு துறையில் ஆற்று வெள்ளத்தால் கலந்திருத்தலைப் பரிபாடல்: வையை 12-ம்பாட்டால் அறியத்தகும்.

வளிபொரு மின்னொடு வான்இருள் பரப்பி
விளிவுஇன்று கிளையொடு மேன்மலை முற்றித்
தளிபொழி சாரல் ததர்மலர் தாஅய்
ஒளிதிகழ் உத்தி உருகெழு நாகம்
மகரவாழை தெங்கு ஆரம் இனையத்
தகரமும் ஞாழலுந் தாரமுந் தாங்கி
நளிகடன் முன்னியது போலுந் தீநீர்
வளிவரல் வையை வரவு
வந்து மதுரை மதில் பொரூஉம் வான்மலர் தாஅய்
அந்தண் புனல் வையை யாறு........

என்பது நல்வழுதியார் பாடியது.

இடையறாது மழை பொழிவதால் மலை மேலும், சாரலிலும், நானிலத்திலும் வளர்ந்த பலசிறந்த மலர்களுடன் தகரமும், ஞாழலும், தேவதாரமும் தரும் மலர்களையும் தன் மேல் பரக்க ஏந்திக்கொண்டு வையை ஆறு மதுரையின் மதில் புறத்தில் சேர்க்கும் என்றதால் குன்றியனாராம் குறுந் தொகைச் செய்யுள் ஆசிரியரும் இருநிலத்து இருமலர்களையே ஓர் ஊர்த்துறையில் ஆற்று வெள்ளம் சேர்த்தது என்பதிலும்,

கந்தபுராண வெண்பா : ஆற்றுப்படலம்

14. ஐந்திணையா மன்னைமா ராங்காங் களித்தபொரு
ளுந்துதிரைக் கையா லுகந்துகொடு—சிந்துவெனுந்
தன்பதியு வோகையுறத் தந்து கலந்ததே
வன்பதிநீர்ப் பாலி மகிழ்ந்து.

என்று எனது ஆருயிர் ஆசான் வெண்பாப்புலி திரு. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் 6556 பொருள் செறிவெண்பாக்களால் இயற்றிய கந்தபுராண வெண்பாவில் (பாலாற்றின்) தொண்டை நாட்டுப் பாலாற்றின் வெள்ளப் பெருக்கைப் புகழ்கையில் நீர் பாலியாகிய நங்கை தன் தந்தைமார்களாகிய ஐம் பெரும் நிலங்களும் தரும் விளைபொருள்களை உந்தும் தன் திரையாகிய கைகளால் உகந்துகொண்டு சிந்து எனும் தன் பதியாகிய பெருங் கடலுக்கு உவகை உறத் தந்து கலந்ததே என்று பாலாறு தன் நீர்ப் பெருக்கால் பல நிலவளமுங் கொண்டு கடல் கலக்கும் என்றதாலும் குறுந்தொகைச் செய் யுள் ஆசிரியர் இரு மலர்களால் இரு நிலங்களைக் குறித்தும் மருத நிலத்து மகிழ்நன் ஊடலால் பிரிந்து ஒரே பரத்தையின் இல்லந்தங்கினன் என்பது அமைத்து விளக்கிய ஒளி பொருளை ஓர்ந்து எடுத்துரைத்தலே சிரியதாகும்.

இதன் தெளிவுரை :—

இக்குறுந் தொகைச் செய்யுளாசிரியர் ஞாழல் சிறுவீயும், மருதின்வீயும் குறித்ததால் இரு நிலத்தையும் இரு மலர்களும் ஒரே ஒரு ஊர்த்துறையில் ஒதுக்கப்பட்டுத் தங்கியதால் மருத நிலத் தலைவர் ஊடலால் தன் இல்லந் தணந்து பரத்தை இல்லம் சேர்ந்தார் என்றும் அப்படிச் சேர்ந்த அவர் தமது இல்லம் மறந்ததால் மருத மலர்கள் நெய்தனிலத்து ஊர்த்துறையில் தங்கி யிருப்பதைக் கண்டேனும் தன் மருதநிலத்து இல்லத்தை விரும்புவார் என்று நினைவு ஊட்டுதல்போல மருதின் மலர் ஞாழல் மலருடன் சேர்ந்தது இங்கிழத்தி அனுப்பிய மலர் விடு தூதுபோல் இருந்ததென்பதை உணர்த்துவதென்பதும், வாகுவலயமும், வளையலும் ஓர் உறுப்பின் ஈர் அணிகளாத

லால் உடல் மெலிவால் நெகிழ்ந்து சாய்ந்து ஒளிதரும் வளை யுடன் மேலணியாம் தோளணியும் சேர்ந்து கலந்து ஒலித் தது ஒரே ஆறு இருநிலத்து மலர்களையும் புணர்த்தியதுபோ லாகும் என்றும்; தலைவர் காம வெள்ளத்தால் உந்தப்பட்டுப் புறம் போந்தது, தலைவி துன்ப வெள்ளத்தால் துயருழன்று உடல் மெலிந்து அணிகள் உந்தப் பட்டன என்றும்; மருத மும், ஞாழலும் ஒரே காலத்தில் பூத்துக் காய்ப்பன என்பதை உணர்த்தி இவ்விரு மலர்களும் பூத்து உதிர்ந்த செவ்வி (பரு வம்) அறியாது பரத்தைதோள் மகிழ்ந்து பின் தூதுவரால் தலைவி தன் காதல் வன்மை தேர்ந்து அவள் உள்ளத்துத் தோன்றும் துயரை வாய்விட்டு அரற்றாது வாயில் சேர்ந்தார் காண அவள் அணிகளே புலம்பின என்றும், பரத்தை இல் லம் பிரிந்து தன் இல்லம் சேர்ந்து தலைவியுடன் தான் மகிழ்ந்த காலத்து மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்போக எஞ்சியவை பெருத்துக் காய்த்துப் பலன்தரும் பருவத்தால் கிழவனும் கிழத்தியும் தோள் மணந்து மக்கட்பேறுபெற்று மகிழ்வார் என்றும் பரிபாடல். 9: 23-24. "அகல்தல் அறியா அணி இழை நல்லார் இகல்தலைக் கொண்டு துனிக்குந் தவறிலர்" என்றதால் தலைவரை விட்டுப் பிரிந்தறியாத நங்கை நல்லார்கள் தலைவரொடு மாறுகொண்டு குற்றமுடையார் அல்லர் ஆதலால் உடற் பிரிவால் மெலிந்தும் கூடல் சிறப்பால் மகிழ்ந்தும் உடல் நெகிழாது வாழ்வது நங்கை நல்லார்களின் நற்குணமாகும் என்பதையும் உணர்த்திய செம்பொருள் செறிந்த தீஞ்சொற் செய்யுளால் புலமை சான்ற புலவர் பெருமான் குன்றியனார் கொண்ட கருத்தாகும்

ஒரு செய்யுளின் உரை விளக்கும் முறை :—

பழந் தமிழ்ப் புலமை சான்ற பாவலர்கள் தாங்கள் செய் யும் செய்யுள்களில் சொற்களை அகன்ற இடத்து வைத்துப் பொருள் மயக்கம் தோன்ற அமைத்துச் செய்யும் திறத்தினைக் "கம்பசூத்திரம்" என்பர். கம்பம், கம்பிதம், கம்பித்தல்: அசைத்தல், பெயர்த்து வைத்தல் என்று பொருளாதலால் சூத்திரம், உபாயம், இரகசியம் (ஒளி பொருள்) என்பதால் தாம்கொண்ட கருத்தை விளக்குஞ் சொற்களைச் சீர்தளைக்கேற் பப் பெயர்த்து வைத்து அமைத்ததை உரை கொள முயல் வோர் பொருள்தரும் சொற்களை ஏற்புழி அமைத்துப் பொருள் தேர்தல் உரையாசிரியர்தம் திறமாகும்.

இத்தகைய திறம் பத்துப் பாட்டு முதலிய பழஞ் செய் யுள் நூலகத்துக் காணப்படுதலால் இலக்கியத்திற்கு இலக் கணம் செய்த பெரியார்கள் சூத்திரங்கள் தந்துள்ளார்கள்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல்: 522

"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்."

இதன் அன்வயம்: பாட்டின் பொருள் (தரும் மொழிகள்) செய்யுளின் பல அடிகளில் அகன்று கிடப்பினும் அணுகிய நிலையில் கொணர்ந்தும்) (செய்யுளைத்) தந்தனர் (கொண்ட) பொருள் முடிய வழக்கியலில் இயன்று உணர்த்தலை மாட்டு என மொழிப (புலவர்.) "பாட்டியல் வழக்கின்" என்பதை பாட்டின் வழக்கியல் என்று மாற்றுக. செய்யுளியலை வழக்கியலில் அமைத்தல் என்பதே மாட்டுப் பொருள்கோள் என்ப. இச் சூத்திரந் தந்த தொல்காப்பியனாரே இதன் பொருள் கோளை மாட்டுப் பொருள்கோளால் பொருள் கொள அமைத்தது அவர் தந்திரத்தை விளக்குவதாகும்.

இதனை நன்னூலார்,

"யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
எற்புழி இசைப்பது கொண்டு கூட்டே"

என்பதால் அறிக.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

மக்கள் தாம் பெற்ற நெறி அறி அறிவுடன் நூலறிவும் பெற்று மெய்ப்பொருள் கண்டோரே மண்ணுலகத்தும் விண்ணுலகத்தும் மேம்பா டுடையவராவதுடன் தலைவர் எனவும் படுவர். மற்றவர் இம் மண்ணுலகத்தே பகுத்தறிவும், நூலறிவும் பெறுதும் தலைவர் எனப்படாதும் கயவர் எனப்படுவர் என்பது.

கம்ப ராமாயணப் புதையல்

[ஐயா. பா. வே. பொன்னுசாமி நாய்க்கர், செவ்வாப்பேட்டை.]

(பதிப்புரிமை ஆசிரியருக்கே.)

ஆரணியகாண்டம்—மாரீசன் வதைப்படலம்.

68-ஆவது செய்யுள்,

ஆரவ ளென்ன லோடும் அரக்கியு மைய வாழ்ந்து
தேரவடிரண்ட கோங்கை செம்பொன் செய்குலிகச்செப்பு
பாரவள் பாதந் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா
பேரவள் சீதையென்று வடிவெலாம் பேசலுற்றாள்.

(இ-ள்.) அவள் - அவள், ஆர் என்னலோடும்-யார் என்று (இராவணன்) வினவலும், அரக்கியும் - அரக்கியாகிய (சூர்ப்பனகை), ஐய - ஐயனே, ஆழ்ந்துதேர் - நன்றாய் ஆலோசித்துத் தெரிந்து கொள்; அவள் திரண்ட கொங்கை - அவளுடைய திரண்ட முலைகள், செம்பொன்செய் குலிகம் செப்பு - சிவந்த பொன் போன்ற நிறமும் காந்தியும் வாய்ந்த சாதிலிங்கச் சிமிழ்போன்றன; அம்மா-!; அவள் பாதந் தீண்ட - அவளுடைய கால் அடிகளைத்தொட, பார் பாக்கியம் படைத்தது - நிலம் அதிர்ஷ்டம் பெற்றது; அவள் பேர் சீதையென்று - அவளுடைய பெயர் சீதையென்று சொல்லி, வடிவெலாம் பேச லுற்றாள் - அவளுடைய அங்கங்களின் அமைப்பு அழகுகளை எடுத்துக்கூறத் தொடங்கினாள்.

விளக்கம்: மேற்பாட்டில் சூர்ப்பனகை இலக்குமியல்லவென்று பொருள்படச் சொல்லி, இடை தோள் மேனி இவைகளை மட்டும் வர்ணித்துச் சொன்னாள். இராவணனுக்கு இன்னாள் இன்ன அழகுடையாள் என்று உணர்தற்கில்லை யாதலின், மாருதி சீதையைக் கண்டு திரும்பி இராமனிடத்தில் வந்தவன், "கண்டனன் கற்பினுக் கனியைக் கண்களால்" என்று சொன்னது போல அவள் யார் என்றுதான் "ஆரவள்" என்று விரைந்து வினவினான். இவள் இதுதான் சமயமென்று இராவணனுக்குக் காமம் அதிக முண்டாக்க "எனக்கு யாரென்று அறிய அவ்வளவு ஆற்றலுண்டா? ஆபிர மறைப்பொருளறிந்து அறிவமைந்த நீயே ஆழ்ந்தாலோசித்து இன்னாளென் றறிந்துகொள்—! நானவளை நேரிற் கண்டிருப்பதால் அவள் அங்கங்களையும் அழகையுந்தான் சொல்லத்தெரியும்" என்பாள் போன்று முதலிற் சீதையின் கொங்கையைப்பற்றிச் சொல்லுகிறாள். மேற்பாட்டில் சொன்ன மேனி நிறத்தையும் காந்தியையும்

கொங்கை ஏற்றிருக்கு மாதலால் குலிகச் செப்புக்கு அடைமொழியாகச் "செம்பொன் செய்" சேர்த்துச் சொன்னாள். பொன்நான்கும் செம்மையுடையன அங்ஙனமிருக்க, செம்பொன் என்று சொல்வானேனெனின், நான்கிலும் உயர்ந்தது சாம்புநதம் என்பதற்கு. தமையன் ஆரென்றவுடன், காமங்கொண்ட ஆணுக்குப் பெண்ணின் கொங்கை மேலும் பெண்ணுக்கு ஆணின் தோளின் மேலும் நோக்கம் விழுவது இயற்கை யாதலின் முதலில் கொங்கையைச் சொன்னாள். மிதிலை சென்று இராமனும் கன்னிமாடத்திலிருந்த சீதையும் மேற்குறித்தபடி. நோக்கினார்கள் என்று மிதிலைக்காட்சி படலம் செய்யுள் 36.

> "நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலிணை
> யாக்கிய மதுகையாள் றோளி னாழ்ந்தன
> வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
> தாக்கணங் கனையவ டனத்திற் றைத்ததே"

இச் செய்யுளில் கண்கள் ஆழ்ந்தன தைத்தன வென்பதே கருதற்பாலது. இதுவரை சாதாரண தேவமாதர்களின் பாதங்கள்கூட தன்மேல் படப்பெறாத நிலம் மூவுலகத்து எம்மாதர்களுக்கும் உபமானமான இலக்குமியைக் காட்டிலும் அழகிய சீதையின் பாதங்கள் தன்மேல்பட பாக்கியம் பெற்றது (அம்மா !) ஆச்சரியம் என்றாள். "பாக்கியம் படைத்தது" தரித்திரம் என்ற சொல் தரித்து+இரம் என்ற பொருளில் இருப்பினும் தன்னிடம் என்றும் தரித்திருக்கிறது என்ற எண்ணங்கொண்ட வறியவன் ஒருவனுக்கு அதிர்ஷ்டவசத்தால் பெரும் பாக்கியம் கிடைத்தால் எப்படியோ அப்படியாம் சீதை பாதங்கள் நிலத்திற்குத் தீண்டக்கிடைத்தது. இராமகாதை உள்ளளவும் இப்பாக்கியமும் உளதாதலின் சூர்ப்பனகை வாயிலாகப் 'படைத்தது' என்கிறார் கம்பர்; பெற்றது என்று சொல்லவில்லை.

கொங்கையைச் சொன்னவுடன் பாதங்களை ஏன் சொன்னாள் என்னின், கோவைநூலிற்கண்ட தெய்வப் பெண்ணோ என்ற "ஐயத்துக்குத்" தன் தமையன் சென்றுவிட்டால் சீதையைத் தேடப் போகான். ஏன்? தெய்வப் பெண்ணா யிருந்தால் இதற்குள் தெய்வலோகம் போயிருப்பாள். அங்கு அவளை எங்கெங்கு எப்படித் தேடுவதென்று சலிப்படைவானாதலின் நிலத்தைப் பாதம் தீண்டுதலால் மானிடப் பெண்ணென்றறியும் தெளிதற்றுறையைச் சொன்னாள் என்க. காமுகர்கள் பேரைச் சொல்லியும் அழகை நினைந்தும் உருகி உருகி வேதனைப்படுவார்களாதலின் அடுத்தபடியாகப் பெயர் சீதை என்கிறாள்.

இராவணன் அதிக காமம் கொண்டுவிட்டான் என்பதறிந்து சிதையின் வடிவெல்லாம் (அழகு) பேச ஆரம்பத்துவிட்டாள்; இன்னும் குற்றத்தின் சம்பவம் புகன்றாளில்லை.

பாடபேதம்: "ஆழித்தேரவளல்குல்" இதை மற்றைய அங்கங்களைப்பார்த்து வர்ணிப்பதுபோல் வர்ணிப்பதல்ல. பாராமலே பார்த்தது போலத் தேர்த்தட்டை உவமித்து வர்ணிப்பது வழக்கம். அன்றியும் இப்பாடத்தை வைத்துக்கொண்டால் கொங்கையின் அடைமொழி "திரண்ட" என்பது சிதைந்து போகிறது. "ஐய" அண்மைவிளியை இப்பாடத்திற்கு அழகு என்று பொருள் கொளினும் கொள்ளலாம். இப்படலம் 78 செய்யுளில் 'தேர்ந்தவல்குற்' சீதை என்று வருவதால் இப்பாடம் சிறந்ததன்று. வேறு உபமானத்திலும் கூறவில்லை.

குறிப்பு: சூர்ப்பனகை தன் தமையனை அண்ணு வென்றழையாது "ஐய" என்று அண்மை விளியில் அழைக்கிறாள். அதிக ஆச்சரியத்தைக் கூறும்போது முறைமைப்பெயர்களை விடுத்து ஆணை 'ஐயா' வென்றும் பெண்ணை 'அம்மா' வென்றும் பொதுப்படக் கூறுவது வழக்கம். குலிகம் இங்குலிகத்தின் விகாரம். அவள்பேரென்றது 'பேரவள்' என்றது செய்யுள் எதுகை நோக்கி மாறிநிற்கிறது.

தமிழின் தொன்மை*

[திரு. வித்வான் மா. இராசமாணிக்கம் P. O L.]

1. திராவிட மொழிகள்

இப்போது இந்தியாவில் உள்ள திராவிட மொழிகள் 12 ஆகும். அவற்றுள் ஆறு செப்பம் செய்யப் பெற்றவை; ஆறு செப்பஞ் செய்யப்பெறாதவை. செப்பஞ் செய்யப்பட்டவை: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு. செப்பஞ் செய்யப்படாதவை: தூடா, கோடா, கோண்ட், கூயி, ஒராயான், இராஜ்மஹால் என்பன. முகப்புப் படத்தைப் பார்த்தால் இவை இன்னும் பேசப்படும் இடங்களைக் காணலாம்.

---

*இது சென்னை 'மாணவர் மன்றம்' 6-ம் ஆண்டு நிறைவு விழாவிற் பேசியது.

இம்மொழிகள் அனைத்தும் வேறுமொழி ஒன்றிலிருந்து பிரிந்தன என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. திராவிட ஒப்பிலக்கண ஆராய்ச்சியைத் திறம்பட நடத்திய கால்ட்வெல் பாதிரியாரும் இக்கருத்தே கொண்டுள்ளனர். ஆயின், அப்பெரியார் இவை அனைத்தினும் சிறந்தது தமிழே என்றும், அதனிடந்தான் பழைய திராவிட பாஷைக்குரிய அமைப்புகள் முற்றக் காணக்கிடைக்கின்றன என்றும் கூறியுள்ளார்.[1] மேலும் செப்பஞ்செய்யப்பட்ட பாஷைகளை எடுத்துக்கொண்டு ஆராய்கையில் அவர் கொண்ட முடிபாவது:

1. பழைய தெலுங்கு = பழைய தமிழ்
2. பழைய கன்னடம் = ,, ,,
3. பழைய மலையாளம் = ,, ,,
4. துளு = குடகு
5. குடகு = தமிழ் மலையாளத்தை ஒட்டியது.[2]

எனவே, செப்பஞ் செய்யப்பட்ட மொழிகள் அனைத்தும் தமிழை ஒட்டியனவே என்பது பெறப்படல் காண்க. ரிக் வேதத்தைச் சேர்ந்த 'அயித்ரேய பிராம''ணத்தில் ஆந்திரர் குறிப்பிடப்பட்டுள்ளமையால் வேதகாலத்துக்கு முன்னரே தெலுங்கு தமிழினின்று பிரிந்ததாகல் வேண்டும்.[3] கன்னட மொழி கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்திலேயே வேறுபட்டிருத்தல் கூடியதே என்பது மோரியன் படையெடுப்பைப்பற்றி வருகிற அகநானூற்றுப் பாடல்களாலும், "வேங்கடத்தும்பர் மொழிபெயர் தேயம்" எனத் தமிழ்ப் புலவர் அப்பண்டைக் காலத்திலேயே கூறியமையாலும், கி. மு-வில் செய்யப்பட்ட உரோம நாடகமொன்றில் கன்னட மொழியமைந்த காட்சி (Scene) ஒன்று காணப்படலாலும் நன்கறியக் கிடக்கிறது. "வடவேங்கடம் தென்குமரி" எனப் பனம்பாரனார் பாயிரம் தமிழகத்தெல்லை கூறலாலும் தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னரே (சுமார் கி. மு. 500-க்கு முன்பே) கன்னடம் தனிமொழி யாயிற்றென்றும் உண்மை உரைலாம். மலையாளமொழி தமிழினின்றே பிரிந்த தென்பதை மறுப்பார், 'தம்மை மறுப்பார்' ஆவர். மலையாள நாடே தமிழ்நாடாக இளங்கோ அடிகள் காலத்தில் இருந்த தென்பது இலக்கியம் கண்ட சான்று. கன்னடத்தின் தொடர்பாலும் கிரந்த எழுத்துக்களின் வன்மையாலும் நம்பூதிரிகள்

---

1. Vide Comparative Grammar, p. 81 - 83 (Int.) (ed. 3.)
2. Ibid (Int.) pp. 14-33.
3. Ibid (Int.) p. 26, 'Dravidic Studies', p. 32.

(ஆரியப் பார்ப்பனர்) செல்வாக்காலும், பௌத்த-சமண மதப் பிரசாரம் வடமொழி கலந்த தமிழில் செய்யப்பட்டமையாலும் மலையாளம் கொடுந் தமிழாகி மிகப் பிற்பட்ட காலத்தே வேறு பிரிந்தது. இதனைத் தமிழின் சகோதரி என்பதைவிட 'மகள்' எனக்கூறலே மாண்புடைத்து[4] கன்னடம் வேறுபட்ட காலத்திற்குப் பிறகு கன்னடத்தினின்று சிறிதளவு வேறுபட்டுப் பிரிந்தது 'துளு' என்னல் தவறாகாது. குடகுமொழி தமிழின் தூய்மையைப் பலவழிகளிலும் போற்றி வருகிறது. அதன் மொழி அமைப்பு நடை இரண்டும் தமிழ்-மலையாள மொழிகளை ஒத்துள்ளது. கன்னட - மலையாளிகள் பழக்கங்களில் பிற்காலத்தில் மாறினுற்போலக் குடகு நாட்டார் மாறுமல் பண்டைத் திராவிடர் நாகரிகத்தை இன்னும் பெரிய அளவில் பின்பற்றுதல் கவனிக்கத்தக்கது.[5]

இனி, செப்பஞ் செய்யப்படாத திராவிட மொழிகளைக் காண்போம்:

1. தூடா = பழைய கன்னடம்(கால்ட்வெல், பக். 626)
2. கோட்டா = ,, ,,
3. கோண்ட் = தமிழைப் பெரிதும் தழுவியது (,, 627)
4. கூயி = தமிழும் கன்னடமும் தழுவியது (,, 630)
5. இராஜ்மஹால் = தமிழ் (,, 631,2)
6. ஒராயான் = தமிழ் (,, 632)

இவை செப்பஞ் செய்யப்படாத மொழிகளாயினும் இவை தமிழை ஒத்திருத்தலை நோக்க, இம்மொழிகள் பரவியிருந்த—இருக்கின்ற இடங்களை நோக்க, ஆரியர் வருகையால் சிதறுண்ட இம்மக்கள் மலைப் பிராந்தியங்களிற் சென்று வசிக்கலாயினர் என்பதும், அங்ஙனம் சென்றபோதிருந்த நிலைமையிலேயே இம்மொழிகள் பெரிதும் அமைந்துள்ளன என்பதும், பின்னர் ஆரிய மக்கள் தொடர்பால் மிகச் சிறிதளவே இவை வேறுபட்டுள்ளன என்பதும் ஈண்டு உணரத்தகும் செய்திகளாகும்.

படத்தை உற்றுக் கவனிப்பின் பலுசிஸ்தானம் என்னும் இடத்தில் 'ப்ராஹி' மொழி ஒன்று குறிப்பிடப் பட்டுள்ளமை காணலாம். அது திராவிட மொழியைச் சேர்ந்தது என்று கூறுவதைவிடத் தமிழைச் சேர்ந்தது எனக் கூறுதலே ஏற்புடையது எனக் கால்ட்வெல் கூறுதல் கவனிக்கத் தக்கது.[6]

---

4. Vide Comparative Grammar, (Int.) p. p. 18, 19.
5. Ibid ,, p. 33.
6 Ibid. pp. 39,633

தமிழுக்கே உரிய பால்பகா அஃறிணைப் பெயர் இம்மொழியில் காணப்படுவதும் இப் ப்ராஹியர் தென்னிந்தியத் தமிழ் மக்களை எல்லா அம்சங்களிலும் ஒத்துள்ளமையும் அவர்கள் தமிழரே எனக் கூறத் துணிவு தருகிறது. 1911-ல் எடுக்கப்பட்ட மக்கட் கணக்கிலும் ப்ராஹியைத் திராவிட மொழிகளிலேயே சேர்க்கப்பட்டதும் கவனிக்கத் தக்கது. “ப்ராஹி திராவிட மொழி எனக் கூறக்கூடவில்லை; ஆயினும், அது திராவிடமொழியின் உயிர் நாடியைப் பெற்றுள்ளதென்பதில் ஐயமில்லை.’ [7] எனவே பலுசிஸ்தானத்துக் கருகில் மிகப் பழைய திராவிட நாகரிகம் இருந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது.[8]

இங்ஙனம் கால்ட்வெல் பாதிரியார் கூறியது முற்றும் உண்மை என்பதைச் சிந்துப் பிரதேச திராவிடர் நாகரிகம் விளக்கி நிற்கின்றது. மோஹஞ்சோதாரோ, ஹரப்பா என்னும் இரண்டு இடங்களில் (சிந்து, பஞ்சாப் மாகாணங்களைச் சேர்ந்த 400 மைல்களுக்கப்பாற்பட்ட இடங்கள்) தோண்டிப் பார்த்த போது இரண்டு பழைய திராவிட நகரங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. அந்நகரங்களின் காலம் ஆரியர்க்கு (கி. மு. 2600-க்கு) முற்பட்டதென சர். ஜான் மார்ஷல் கூறுவர். அங்குக் கிடைத்துள்ள எழுத்து முறைகள் ‘சித்திர சங்கேதக் குறிகள்’ என ஹீராஸ் பாதிரியார் கூறி, அவ் வெழுத்துக்கள் தமிழ் மொழியையே குறிப்பன எனவும் வற்புறுத்துப் பல மேற்கோள்களோடு காட்டியிருத்தல் கவனிக்கத்தக்கது.

(மோ)　　　　(ஹ)　　　　(தமிழ்)



(1)　　　　(2)　　　　(3)


இம் மூன்று எழுத்துக்களையும் நோக்க எழுத்துவளர்ச்சி நன்கு புலனாகுதல் காண்க.

பின்வரும் படங்களைப் பார்க்க.

4. வேல்　5. ஆள்　6. வேல்+ஆள்=வேலாள்
7. கால்　8. கால்+ஆள்=காலாள்　9. நாய்
9.+4. நாய்+வேல்=நாய்வேல், ஒருவகைச் செடி.

---

7 Vide Dr. Bellew's "From the Indus to the Tigris"
8 Caldwell's, p. 633.


(4)


(5)


(6)


(7)


(8)


(9)


(10)


(11)



(12)


(13)


(14)


(15)


(16)


(17)


(18)

10. எண் × ஆள் 10 + 5. = எண்ணாள் } எண்குணத்தாள்
= எண்ணான் } = சிவன்

11. பேர் (பெருமை) 12. பேராள் } சிவன்.
பேரான் }

Comp. பேரானை பெரும்பற்ற புலியூரானை.'—தேவாரம்

13. நண்டு. 14. ஊர் 15. நண்டூர் 16. வேலூர்.

இவற்றை விரிப்பிற் பெருகும். இச்சித்திர சங்கேதக் குறிகளே உரு எழுத்துக்கள் என்பர் மயிலைநாதர்?[9] இவ்வகை எழுத்துக்கள் மேலும் பலவகையாக யாப்பருங்கல விருத்தியுரையிலும், கண்ணெழுத்து என்பது சிலப்பதிகாரத்திலும், கரந்தெழுத்து என்பது சிந்தாமணியிலும் காணலாம். இவ்வாறு பல்வகை எழுத்துக்களைக் கூறும் மொழி இந்தியாவில் தமிழ் ஒன்றே. எனவே தமிழ் மொழி ஒன்றுதான் இந்தியாவில் முழுவளர்ச்சியுற்று முழுதும் பரவியிருந்த மொழியாகும் என்பது இதனால் இனிதுணரப்படும். இங்ஙனம் தமிழ் பேசிய சிந்துப் பிரதேச திராவிடர் சைவ சமயத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இச் சிந்துப் பிரதேசமக்கள் எட்டு ராசிகளைக் கண்டு பிடித்த காலம் சுமார் கி. மு. 5610 எனக் கூறுவர் ஹீராஸ் பாதிரியார். எனவே, ஆரியர் வருகைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர் வான சாஸ்திர வல்லுநராகவும் பெரு நாகரிகம் படைத்த வகுப்பாராகவும் விளங்கி யிருந்தனர் என்பது தேற்றம்.[10]

இனி, இச்சிந்துப் பிரதேச நாகரிகம் இந்தியா முழுவதும் பரவி இருந்ததா? எனின், ஆம். சிந்துப்பிரதேச எழுத்துக் குறிகள் ஹைதராபாத் - சமாதிகளிலும், திருநெல்வேலிச் சீமையில் அகப்பட்ட நாணயங்களிலும் மட்பாண்டங்கள் மீதும், நீலகிரியில் உள்ள கல்வெட்டுகளிலும் காணக் கிடைத்தலால் சிந்துப்பிரதேச நாகரிகம் இமயமுதல் குமரிவரை பரவி யிருந்ததெனை ஐயமறக் கூறலாம். இவற்றுக்குரிய சான்றுகள் பலவாம். அவற்றுட்சில கூறுவோம்: (1) யான், நான் என்பன தமிழ், மலையாளம், கூயி, கோண்ட் பாஷைகளில் இருத்தல்—மிகப் பழைய மொழிகள் எனப்படுவனவற்றின் கால எல்லையையும் கடந்திச் செல்கிறது. அஃதாவது (இப்போதுள்ள தமிழ் நூல்களில் பழமையானது தொல்காப்பியம். அதன் காலம் சுமார் 2500 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கொள்ளினும்) அக்காலத்துக்கு மும்முறை மிகுதிப்

---

9. Vide last Sutra or Elutatikaram.

10. Vide Mohenjo-daro & The Indus Civilisation, Vl. II, p. 414

பட்ட காலத்தே பண்டைத் தமிழரும் கோண்ட்-கூயிமக்களும் வடஇந்தியாவில் ஒன்றுபட்டிருந்து ஒரே மொழியைப் பேசி வந்த காலத்துக்கு 'நான்-யான்' என்பன நம்மை அழைத்துச் செல்கிறது.[11]

இங்குக் கூறப்பெற்ற மக்களுள் 'கோண்ட்' வகுப்பினர் பழைய தமிழ்ப் பழக்க வழக்கங்களை இன்றும் விட்டிலர் என்பதை அறிதல் வேண்டும். அவர்கள் நிலமகளைத் 'தரைப் பேண்' என்று அழைக்கின்றனர்; வழிபடுகின்றனர்.[12] தொல்காப்பியம் சற்றேறக்குறைய 2500 ஆண்டுகட்கு முற்பட்டது. அதைவிட இரண்டு மடங்கு காலம் சென்றிருக்க வேண்டும் என்னும் கூற்றால் சுமார் 7500 ஆண்டுகட்கு முன்னரே தமிழர்-கோண்டர் முதலியோர் ஒன்றாக மத்திய இந்தியாவில் வாழ்ந்து வந்தனராதல் வேண்டும் என்னும் கால்ட்வெல் கூற்று நோக்கத்தக்கது; அஃதாவது கி. மு. 5500 வருடங்கட்கு முன். இதனோடு 'சிந்துப் பிரதேச திராவிடர் வான சாஸ்திர வல்லுநராக இருந்தது கி. மு. 5610 எனக் கூறிய ஹீராஸ் பாதிரியார் கூற்று ஒப்பு நோக்கத்தக்கது. எனவே, கி. மு. 5000-ல் இந்தியா முழுவதும் தமிழ்மொழி பரவி இருந்ததென்பது இங்கு அறியத்தகும் செய்தியாகும்.

"ப்ராக்ருத மொழிகள் இப்போதுள்ள வட இந்திய மொழிகளாக மாறுவதற்குப் பல காலமுன் 'கூயி' வகுப்பாரும் தமிழரும் மத்திய இந்தியாவில் ஒன்றுபட்டவராய் ஒரேமொழி பேசியவராய் (சரித்திர காலத்துக்கு வெகுகாலமுன்) இருந்திருத்தல் வேண்டும். என்னை? கூயி பாஷையினும் பன்மையைக் குறிக்கப் பிரதிபெயர்ச் சொற்களில் 'ம்' (நாம், நீம், தாம்,) வழங்கப்பட்டிருத்தலே போதிய சான்றாதலின் என்க."[13].

'திராவிட மொழிகளைப் பேசும் கோண்டர், கூயிகள் முதலியோர் மத்திய இந்தியாவிலும் வங்காளத்தின் அருகிலும் இன்னும் காணப்படல்—இந்தியா முழுவதும் இத்திராவிட மக்கள் இருந்தமையை இனிது விளக்குவதாகும்."[14]

"வங்காள மக்களிடையே மிகப்பரந்த அளவில் திராவிடக் கலப்பு ஏற்பட்டு உள்ளது. வங்காளத்திலும் சூடிய நாகபுரி,

11. Vide Caldwell's Grammar. p. 368.
12. Thurstons 'Castes and Tribes of Southern India', Vol. iii., p. 372.
13. Vide Caldwell's Grammar, p. 412.
14. Ibid Int. p. 37.

ஒரிஸ்ஸா முதலிய இடங்களிற் பரவியுள்ள 'ப்ரூஹியர்' திராவிடரே யாவர். 'காக்' என்பவரும் இவ்வினத்தையே சேர்ந்தவர். இவ்விருவர் தொகை சுமார் 40 லட்சமாகும்."[15]

இதுகாறும் கூறியவற்றால் ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் திராவிட மொழி (தமிழ்) பரவி இருந்த தென்பது நன்கு புலனாகி யிருக்கும். இங்ஙனம் பரவியிருந்தமை உண்மை என்பதைப் பின் வரும் உண்மைகளும் மெய்ப்பித்தல் காண்க:

வடமொழிகொண்ட கலப்பு:

"Ghota (கோட்டா) என்பது குதிரையைக் குறிக்கும் வடசொல். (குர்ரம்—தெலுங்கு, குதிரை—தமிழ், குதுரை—கன்னடம்). குதிரை இந்தியாவில் உள்ளது. எனவே, வடசொல் (கோட்டா) திராவிடச் சொல்லிலிருந்தே வந்திருக்கவேண்டும். அங்ஙனமாயின், டெக்கான் பிரதேசத்தின் தென்பால் உள்ள திராவிட மொழிகள் ஒரு காலத்தில் வட இந்தியாவில் (ஆரியர் வந்த போது) இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகும். எனவே, இந்தியாவில் ஆரியமொழிக்கு முற்பட்டது திராவிட மொழி."[16]

"கழுதை—தமிழ், கல்தெ—கன்னடம், காடிதெ—தெலுங்கு, கர்தபா—வடமொழி, கலெத்தெ—செல்லிபிஸ் தீவினர் சொல். 'கழுதை' இந்தியாவிற்றான் உண்டு. எனவே, திராவிடச் சொல்லிருந்தே 'கர்தபா' என்னும் வடசொல் தோன்றியிருத்தல் வேண்டும். வெருகு—பூனை, தமிழ்; பெர்கு பெக்கு—கன்னடம், பில்லி—தெலுங்கு, பில்—ஆல, பிர் ஆல, பிட் ஆல—வடசொற்கள். எனவே, இதுவும் திராவிடத்தினின்றும் கடன்வாங்கிய சொல்லே.[17] பூனை, பூசை—தமிழ், புசெக்—பெர்ஷியன் சொல், பிசோ—ஆப்கானிய மொழி, பிசி—திபேத்திய சொல், பூசி—முண்டர் மொழி, பிசி—ப்ராஹி மொழி, பூசி—வடமேற்கு எல்லைப்புற மொழிகள். இவற்றால் தமிழுக்கும் பிற எல்லைப்புற மொழிகளில் உள்ள சில சொற்கட்கும் உள்ள ஒருமைப்பாடு காண்க.[18].

---

15. Vide Col. Daltons 'Ethnology of Bengal', p. 243.
16. Vide 'Pre-Aryan and Pre-Dravidian in India', pp. 47—49.
17. Ibid. p. 50.
18. Ibid. p. 51 (foot-note).

வடமொழியும் திராவிடமொழியும் வெகுகாலம் ஒன்றோடொன்று நெருங்கி இருந்தன என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை."[19].

விசிறி—தமிழ், விசு—தமிழ், விசு, விசறு—தெலுங்கு, பிசு—கன்னடம், விஜன, வ்யஜன—வடசொற்கள். இச் சொல்லும் திராவிட மொழியினின்றும் கடன் வாங்கப்பட்டதே. இங்ஙனமே மயூரம் (மயில்), பல (பழம்), ஓடா (ஓடம்), முக்தா (முத்தம்) என்பன.

முகா (முகம்)—வடமொழி, மூகு—(மூக்கு) கன்னடம், மூக்கு—தெலுங்கு, மூக்கு—தமிழ். இவையாவும் 'முன்' என்பதை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, 'முகா,' 'முகர்' (mukha) என்னும் வடசொல் திராவிடச் சொல்லிலிருந்து கடன் பெற்றதாதல் வேண்டும். இன்றோ ஆரிய பாஷைகளில் வரும் 'ப்ஹிர் (phir)—திரும்பு, திருப்பு, மாற்று என்பதற்கும் 'பெர—கன்னடம், பிஜ்ஜ—கோண்ட் (பின்புறம், பின்னல் என்பது பொருள்). பிற—தமிழ், பெரெ—தெலுங்கு என்பவற்றுக்கும் உள்ள ஒருமைப்பாடு காண்க[20].

"ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர். ஆதலின் இந்தியாவில் அவர்கள் கண்ட புதிய செடி-மரங்கள் வேறு பொருள்கள் இவற்றுக்குச் சொற்கள் இயல்பாகவே பெற்றிருத்தல் இயலாதன்றோ? எனவே, பஞ்சாப் பிரதேசத்தில் அவர்கள் குடியேறியதும் அங்கிருந்த திராவிடரோடு கலப்புண்டு திராவிட சொற்கள் பலவற்றைப் பெற்றிருத்தல் இயல்பே. அவர்கள் வருமுன்பே பஞ்சாப், சிந்து மாகாணங்கள் திராவிட பாஷை பேசிவந்த பிரதேசம் என்பதை மோஹஞ்சோ-தாரோ, ஹரப்பா, ப்ராஹுி பேசப்படும் இடம் இவை நன்கு விளக்குகின்றன என்பதை முன்னரே குறித்தோம் அல்லவா? எனவே, ஆரியரது முதல் வேதமாகிய ரிக் வேதத்திலேயே எண்ணிறந்த திராவிடச் சொற்கள் இடம் பெற்றமை இயல்பே. கதலி (வாழை), ஓடா (ஓடம்) முக்தா (முத்தம்), (பால) வால்-மயிர், தாம்பூலா (தமல ஆக்கு—தெலுங்கு) முதலியன. பாண-வடமொழி, அம்பு, பாணம்-யாழ், யாழ்வாசி எனக் கோல், சன்

---

19. Vide "Pre-Aryan and Pre-Dravidian on India" P. 52.
'பூஜை' என்பது வடமொழிச் சொல்லாயினும் திராவிட மூலத்தையே கொண்டிருத்தல் வேண்டுமென்பது ஆராய்ச்சியாற் புலனும். Vide 'Dravidic Studies' Vol. iii, p. 60.

20. Ibid. pp. 50&57.

டால், முண்டா மொழிகளில் பொருள் படுகிறது; பாணர்—யாழ் வாசிப்பவர் (தமிழ்) பண-அம்பு (பிலிப்பைன் மொழிகளில் வழங்கும் சொல்-பொருள்) போர்னியோவில் உள்ள 'டயக்ஸ்' என்னும் வகுப்பாரிடம் 'பனஃற'—வில்; பன, பல்ல-வில், அம்பு (மடகாஸ்கர் தீவினர் சொற்கள்). எனவே, 'பாணம்' என்பது திராவிடச்சொல் அல்லது முண்டர் மொழிக் கூட்டச்சொல் (Austro-Asiatic) என்பதும் அது ரிக் வேதத்தில் இடம்பெற்றுள்ள தென்பதும் நோக்கத்தக்கது[21]. "லிங்க (லிங்கம்") என்பது ஆரியச்சொல் ஆகாது"[22] 'யமன்' என்பது வடமொழி கடன்பெற்ற திராவிடச் சொல்[22a]. மலைய, வளைய, பட்டின, கடம்ப என்பவை தமிழ்ச்சொற்களே[22b].

"திராவிட மொழிகளை நன்கு பரிட்சித்துப் பார்க்கையில் அவை இரானிய மொழிகளான பைசாஸ பாஷைகளோடு தொடர்புடையன என்பதை நன்குணரலாம். அப்பைசாஸ பாஷைகளே 'ப்ராக்ரித பாஷைகள்' என்பன. இவை ஆரியர் வருகைக்கு முன்னரே இந்தியாவில் நுழைந்தவை. இவை, இந்தியாவில் தமக்கு முன்னிருந்த முண்டாவருக்க மொழிகளோடு கலப்புண்டன. இக்கலப்பில் தோன்றியவையே திராவிட மொழிகள் எனக்கூறலாம். இவற்றுக்கும் வடமொழிக்கும் சில இடங்களில் ஒருமைப்பாடும் உண்டு. இப்ராக்ருத மொழிகளிலிருந்து தோன்றியவையே இப்போதைய வட இந்திய மொழிகள்." ஆரியர் வருகைக்கு வெகுகால முன்னரே திராவிடர், இந்தியா முழுவதும் பரவி இருந்தனர் என்பதில் ஐயமில்லை.[23]

"வடமொழியில் சில சொற்கள் வேற்று முகத்துடன் காணப்படுகின்றன. அவற்றின் பகுதி முதலியவற்றை வடமொழித் துணைக்கொண்டு அறியக்கூடவில்லை. அவை வடமொழி யல்லாத பழைய இந்திய மொழியைச் சேர்ந்தவையாக இருத்தல் வேண்டும். "பழைய மொழி ஒன்று வடமொழியின் உயிர் நாடியிலேயே கைவைத்து விட்டதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்."[24]

---

21. I bid. p. 22. Ibid. Int. p. xx.
22a. Vide Dr. Kittels Kannada Dictionary, Preface, p. 22.
22b. Vide 'Dravidic Studies' Part iii. pp. 14, 26.
23. Vide C. Narayana Rao's 'An Indroduction to D. Philology pp. 104, 105, 47.
24. Vide Dr. Beames's 'A comparative Grammar of the Modern Aryan Languages of India' p. 128.

"த,ட—இவற்றை முதலாகக் கொண்ட சொற்கள் 'சிந்தி மொழியில்' ஆரியச் சொற்களாகக் காணப்படவில்லை. 'த,ட' இரண்டுமே ஆரியத்துக்கே புதியவை. எனவே, இவை பழைய இந்திய மொழி ஒன்றிலிருந்து கடன்பெற்றனவாதல் வேண்டும்"[25] இவை திராவிடமொழிக்கே உரியவை[25a].

சிந்திபாஷை பேசப்படும் சிந்துப் பிரதேசமே கி. மு. 5000 ஆண்டுகட்கு முன்பிருந்து திராவிடபாஷை பேசப்பட்ட பிரதேசம் என்பது போல் ஆராய்ச்சியால் விளக்கப்பட்டதன்றோ ? எனவே, ஆசிரியர் குறிப்பிடும் பழைய இந்திய பாஷை திராவிட மொழியே என்பது அறியத்தகுவதாம்.

"ஹிந்து எண்ணங்கள் முதலியன உரம்பெற்ற ரிக்வேத காலத்திலேயே திராவிட மொழியும் திராவிடர் பழக்க வழக்கங்களும் ஆரியர் மதத்தையும் அவர்தம் மொழியையும் தாக்கியுள்ளன என்பது அறியக் கிடக்கிறது. ரிக்வேதத்தில் 'மறுபிறவி' பற்றிய பேச்சே இல்லை. திராவிடர் தெய்வங்கள் (சிவன், முருகன், கொற்றவை முதலியன) ஆரிய வேதங்களில் இடங்கொண்டன. ரிக்வேத நடை, மொழி, உணர்ச்சியாவும் தூய ஆரிய முறையில் இருப்பினும், உச்சரிப்புத் திராவிட மொழியால் மாறுதல் பெற்றுவிட்டது; ரிக்வேத வடமொழி திராவிடத்தினின்றும் கோல் மொழிகளிலிருந்தும் வார்த்தைகளைக் கடன் பெற்றுவிட்டன. திராவிட மொழிக் கலப்பு வட மொழியில் மிகுந்த அளவில் ஏற்பட்டதாற்றான் 'ப்ராக்ருத மொழிகள்' தோன்றலாயின."[26]

"வட இந்திய 'பிராமி' எழுத்துமுறை ஆரியரால் கொள்ளப்பட்டு விருத்தி செய்யப்பட்டது. அவர்கள் இந்தியா புகுந்தபோது எழுதக் கற்றிருந்திலர். தென் பிராமி எழுத்துக்கள் திராவிடரால் வளர்க்கப்பட்டவை."[27]

"பிராமி எழுத்துக்கள் தமிழுக்கெனவே ஏற்பட்டவை என்பதும், அவை வேறு விகற்பங்களுடன் வடமொழியாக ஆரியரால் மாற்றிக் கொள்ளப்பட்டன என்பதும் அறியக்கிடக்கிறது."[28]

---

25. Vide, 'Dr. Earnest Trumpp's 'Grammar of the Sindhi Language.'

25 a. Vide Dravidic, Studies' Part iii. p. 58.

26. Vide Dr. S. K. Chatterji's 'Origin & Development of the Bengali Language.' Vol. i. pp. 42, 45.

27. Vide, Heras's Article in "The New Review", p. 7 July, 1936.

28. Vide P. N. Subramanya Iyer's Article in "Kalai Magal" Part 70.

மோஹெஞ்ஜோ-தாரோ எழுத்துக்களே பிராமிலிபியாக மாறின என்பதும், அந்த லிபியிலிருந்து வடமொழிக்குரிய எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன என்பதும் மேற்படத்திற் காணப்படும் 17-ஆம் எண்ணுள்ள மோஹென்ஜதாரோ எழுத்தையும், 18-ம் எண்ணுள்ள வடபிராமி எழுத்தையும் ஒப்பு நோக்கத் தெரியவரும்.

"வடமொழியையும் பிராக்ருத மொழிகளையும் திராவிட மொழிகளையும் நன்கு ஆராய்கையில், ஒரு காலத்தில் வட இந்தியா முழுவதும் திராவிடர் இருந்தனர் என்பது நன்கு புலனாகும். பாலி முதலிய பிராக்ருத மொழிகள் வடமொழிக்குரிய முற்கூட்டு உருப்புகளை (Post-positions) அறவே விட்டுத் திராவிட மொழிகள் பயன்படுத்தும் பிற்கூட்டு உருபுகளைக் (Post-positions) கையாளலாயின." 29.

இதுகாறும் விளக்கமாகக் கூறியவற்றால் பண்டைத் தமிழ் மொழியே இந்தியா முழுவதும் பரவியிருந்ததென்பதும், ஆரியர் வந்து ரிக் வேதம் செய்த காலத்தில் அந்நூலுள் இடம்பெற்ற புதிய சொற்கள் தமிழ்ச் சொற்களே என்பதும், வடமொழியின் உச்சரிப்பை மாற்றிப் ப்ராக்ருத மொழிகளைத் தோற்றுவித்தது தமிழே என்பதும், பழைய தமிழுக்குரிய எழுத்துக் குறிகளே சில மாறுதல்களோடு வடமொழிக்குரிய எழுத்துக்களாக மாற்றப்பட்டன என்பதும், எனவே, வடமொழி எழுத்துக்கட்கே பிறப்பிடம் தமிழ் எழுத்துக் குறிகளே என்பதும், பழைய தமிழ்ச் சொற்கள் பலவும் வேதம் முதலிய நூல்களில் மாறுபட்டு வழங்கலால் அவை இப்போதைய தமிழ்ச் சொற்களோடு சிறிது வேறுபடக் காணலைக் கொண்டு வடமொழியிலிருந்து வந்தவை இவை எனக் கண்ட சொற்கள் எல்லாவற்றையும் கூறல் தவறு என்பதும் இங்கு நன்கறியத் தருவன.

தமிழ்

[M. C. கல்யாண சுந்தரம் பிள்ளை, திருச்சி]

நிலமகளின் திலகம்போன்ற திராவிட நாட்டில் ஆதிகாலந் தொட்டுத் திராவிட மக்களின் தாய்மொழியாகத் தமிழ் இருந்து வருகிறது. பிறமொழிகள் தோன்றுவதற்கு முன்பே, பல பெரிய, அரிய, உயரிய நூல்களைப் பெற்றுப் பரிபூரணத் தன்மையை அடைந்திருந்த தனிப்பெருமையைத் தமிழினிடர்

29. Vide 'Dravidic Studies,' Part iii, pp. 57, 61.

தான் நாம் காண்கிறோம். "சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின் முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே" என்று மனோன்மணீயம் ஆசிரியர் தமிழைப் புகழ்ந்துள்ளார். உலகம் போற்றும் திருக்குறளையும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தையும் உடைத்தாயிருப்பது நம் தமிழ் மொழியன்றோ? நமது முன்னோர்கள் சிறுவர்களாய் மழலைகூறியதும், காளைப்பருவத்தில் பாடி மகிழ்ந்ததும், அரசியல் காரியங்களை அழகுபெற நடத்தியதும் தமிழ் மொழியில்தான். தென்னாட்டு மூவேந்தர் காலத்தில் தமிழ் அரியணையின் மீதிருந்து நாடுமுழுவதிலும் தனியரசு புரிந்து வந்தது. அது கணக்கு வழக்கைக்கடந்த காலத்திற்குமுன்பிருந்தே வழங்கிவரும் மொழியாக இருந்தபோதிலும் எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல் தன் பெருமை குன்றாது அன்று இருந்தது போன்றே இன்றும் அழகுடனிருந்து வருகிறது.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்ற பொருளும் உண்டு. அதற்கிணங்கவே தமிழும் அமிழ்திலுமினிதாய் இன்பமளித்து வருகிறது. பாலொடு தேன் கலந்தாற்போன்று இனிக்கும் நம் தாய்மொழிக்கு "தமிழ்" என்ற பெயரிட்டழைத்த நம் முன்னோர்களின் சிறந்த அறிவின் நுட்பத்தை யாவர் அளக்க வல்லோர்? பூவுலகிலுள்ளவர்களைப் பூவுலகிற்கும் அனுப்பிவைக்கக்கூடிய ஆற்றல் தமிழுக்குத்தான் உண்டு. தமிழின் இனிமை பற்றியே குமர குருபரர் "தெய்வத் தமிழ்க் கூடல் தழையத் தழைத்தவளாகிய மீனாட்சி யம்மையாரை "நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையே" என்று அழைத்துள்ளார். முருகக்கடவுள் அதன் இனிமை நோக்கியே தன்னை முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கிறார். தேருந்தோறும் இனிதாம் தமிழின் பெருமையை என்னென்று கூறுவது?

தமிழ் மிகுந்த தெய்வத்தன்மை வாய்ந்த மொழியாகும். குகையிலடைப்பட்டு சிந்தை கலங்கிய நக்கீர தேவரை சிறையினின்றும் மீட்டதும், "தொண்டர் காதனைத் தூதிடை விடுத்ததும், முதலை உண்ட பாலனை யழைத்ததும், எலும்பு பெண்ணுருவாக்கண்டதும், கன்னித்தண்டமிழ்ச் சொல்" என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. "மனங் கரைத்து மலங்கெடுக்கும்" திருவாசகத்தை அருளிச்செய்த மணிவாசகப்பெருமானை ஒரு கோவைபாடச் சொல்லி சகல உயிர்களுக்கும் பதியாகிய நடராசப்பெருமானே தமது திருக்கரத்தால் அதை

எட்டில் எழுதினரென்றால், தமிழின் தெய்வத் தன்மையை யாவர் எடுத்துக் கூறமுடியும்?

இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ்மொழியை, தாய் மொழியாகப் பெற்ற நாம் மிகுந்த புண்ணியஞ் செய்தவர்க ளாகவே இருக்கவேண்டும். ஆகவே, தமிழர்கள் தமிழ் மொழியைப் பலவகையிலும் போற்றி, அதன் பெருமையை உலகமுழுவதிலும் பரப்புவதற்கு வேண்டிய காரியங்களை அவசியம் செய்ய முன்வரவேண்டும். தமிழின் நிலைமை எவ்வ ளவு உயர்வடைகிறதோ அவ்வளவு தமிழின் பெருமையும் உயருமென்பதை நாம் கருத்தில் வைக்கவேண்டும்.

கட்டாய இந்திப் படிப்பா?

வங்காளத்திலும் இந்திப் படிப்புக்குச் சலுகை காட்டும் முயற்சி எதிர்க்கப்பட்டு வருகிறது. இந்தியோ இந்துஸ்தா னியோ இந்தியாவின் பொது மொழியாகக்கூடும் என்ற கொள் கைக்கே எதிர்ப் பேற்பட்டு வருகிறது. வங்காளியர்கள் மிகவும் கட்டுதிட்டமுடையவர்களென்றும் அவர்களுடைய மொழியா கிய வங்காளி மொழியும் அவ்வாறே கட்டுதிட்டம் அமைந்த தொன்றென்றும் இந்தியோ அல்லது இந்துஸ்தானியோ அத்த கையதொன் றன்றென்றும் எடுத்துக் காட்டப்படுகிறது. வங்காளி மொழி ஐந்தேகால் கோடிக்கு மேற்பட்ட வங்காளி யர்க்குத் தாய்மொழியாக இருந்து வருகிறது; அவர்கள் அனைவரும் ஒரே விதமான எழுத்து முறையையுங் கையாண்டு வருவதால், எல்லா மக்களாலும் அம் மொழி ஒருங்கே நன்கு பயிலப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. பேச்சு முறைக்கும் எழுத்து முறைக்கும் இவ்வாறு ஒற்றுமை யிருப்பது வங்காளி யொன்றைத் தவிர வேறு எம்மொழிக்கும் இல்லை யென்றே கூறலாம். இந்தி மொழியிலோ கணக்கு வழக்கற்ற வேறுபாடு கள் உள; எழுத்து முறையிலுஞ் சரி, பேச்சு முறையிலுஞ் சரி, வேறுபாடுகள் பலப் பல; ஆதலால் பிஹார் மாகாணத்தி லேயே ஒரு பகுதி மக்களாற் பேசப்படும் இந்தி பிற பகுதிகளி லுள்ளவர்களால் அறியப் படுவதில்லை. ஐக்கிய மாகாணத்திற் பயின்றுவரும் இந்தி மொழியும் இத்தகையதே. இந்தியோ இந்துஸ்தானியோ இந்தியாவிற் பெரும்பாலான மக்களாற் பேசப்பட்டு வரும் மொழியென்று கூறுதற் குரியதாகாது. சிறு பான்மையோர்களுக் குள்ளேயே அதிக தொகையினரால் அது பேசப் படுகிறது என்று கூறுவதற்கே போதிய ஆதாரங் கிடையாது. எழுத்து முறையிலும் பேச்சு முறையிலும் அதன் மாட்டுள்ள கணக்கற்ற வேறுபாடுகளை யெல்லாம் ஒதுக்கிப்

பெயரளவில் எடுத்துக்கொண்டால்மட்டுமே அது சிறுபான்மையா யுள்ளவர்களிற் பெருந்தொகையினரால் பேசப் படுகிறது என்று கூறலாம். இவ்வாறு விட்டுக்கொடுத்து இந்தியைப் பெரிய மொழியாக்குவதை விட வங்காளிக்கே அவ்வுரிமை அதிகமுள்ளதென்று கூறலாம். ஆகவே இந்தியாவிலுள்ள சிறுபான்மையான மக்களாற் பேசப்படும் மொழிகளில் ஏதாவது ஒன்று இந்தியப் பொதுமொழி யாகக்கூடுமானல் அது வங்காளி மொழியேதான். பெருந்தொகை மக்களாற் பேசப்படுகிறதென்ற ஒரு சிறப்பேயன்றிப் பிறசிறப்புகளும் வங்காளி மொழியினுக் குள்ளன. இந்திய மொழிகளுக்குள் வங்காளி மொழிக்குத்தான் இலக்கியச் சிறப்புண்டு. கலைச் சொற்களை யாக்கி எளிதிற் பொருளுணரச் செய்யும் மொழிவளமும் அதற்கே இயல்பில் வேறெம் மொழியினும் அதிகமாக அமைந்துள்ளது. உயர்ந்த தத்துவங்களையும் கருத்துக்களையும் அம்மொழியில் நன்கு எழுதக்கூடும் என்பது யாவரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

*	*	*

இந்தியையோ இந்துஸ்தானியையோ படிக்க வேண்டாமென்று நாம் சொல்வதாக எண்ணிவிடக்கூடாது. அதைக் கட்டாய பாடமாக்கக் கூடாதென்பதே நங் கொள்கையாகும்..................... காங்கிரஸின் ஆட்சிக் கழகம் பல ஆண்டுகளாய் வங்காளி அல்லாத பிற வகுப்பினரின் கைக்குள் இருந்து வருவதனுலேயும், அக் குழுவினரால் இந்தியே பொது மொழியாக பயிலப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருவதனுலேயும், நம்மிற் சிலர் அத் தொல்லையை எதிர்த்துப் போரிடாது ஏற்றுக்கொண்டு வந்துள்ளார்கள். சிறுபான்மை மக்களாற் பேசப்படும் ஒரு மொழியை இந்தியப் பொது மொழியாக்க எடுத்துக் கொள்ளப்படும் முயற்சி தோல்வியடைவது திண்ணம். எல்லா இந்தியர்களும் ஒரே மொழியை, அது எம்மொழியாயினும் சரியே, பேச வேண்டும் என்பது, வேண்டப்படுவதே. ஆனல் வேண்டப் படுவதெல்லாம் கைகூடுவதென்பது இல்லை. இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டாலும் சென்னை மாகாணப்பொதுமக்களாலோ வங்காள மாகாணப் பொதுமக்களாலோ தெரிந்துகொள்ளப்படாது. படித்த சிறு தொகையினராலும் பொதுமக்களில் இலட்சத்திற்கு ஒருவராலுமே தெரிந்துகொள்ளப்படலாம். —"அமிர்த பஜார்"

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொதுக்கூட்டம், தஞ்சை.

1938-ம் ஆ.ஜூன் 11-ம் நாள் அன்று கரந்தைத் தமிழ்ச் சங்க ஆதரவில் திரு. இராவ்பகதூர் சர். A. T. பன்னீர்ச்செல்வம், Bar-

at-law, M. L. A. அவர்கள் தலைமையில் கூடி கீழ்க்காணும் முடிவுகளை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியது.

1. சென்னை அரசாங்கத்தார் 'இந்தியைப்' பள்ளிக்கூடங்களில் எல்லா மாணவர்களும் கட்டாயமாகவோ பொதுவாகவோ பயில முயல்விப்பது தாய்மொழிப் பயிற்சியைத் தடைப்படுத்தி நாட்டு மக்களைப் பிற்போக்கும் அறிவற்ற தன்மையும் உடையராக ஆக்குதலால் இச்செயலை இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

2. இந்தி மொழியைத் தொடங்கும் வகுப்பு வரையில் தாய்மொழிக் கட்டாய பாடமாக்கப்படும் என்பது மக்களை ஏமாற்றுவதும் வஞ்சிப்பதாகவும் இருப்பதோடு தாய்நாட்டுக் கலாசாலைகளின் எல்லா வகுப்புக்களிலும் ஆங்கிலத்தில் இருப்பனபோல முறைப் படுத்தப் பெற்ற இலக்கண, இலக்கிய, உரை நடை, செய்யுட் கோவை நூல்கள் தாய்மொழியில் ஒவ்வொரு வகுப்பின் எல்லா மாணவர்களும் கட்டாய பாடமாகப் பயின்றாலன்றி தாய் மொழி வளர்ச்சி ஏற்படாது. ஆகையால் அத்தகைய திட்டம் ஒன்றினை ஏற்படுத்தித் தாய்மொழி வளர்ச்சிக்குத் துணை புரியுமாறு அரசாங்கத்தாரை இச்சங்கம் வேண்டி வற்புறுத்துகின்றது.

3. வார்தா கல்வித் திட்ட ஆசிரியப் பயிற்சிக்கு இந்தி மொழிப் புலமையை வற்புறுத்துவது 'இந்தி மொழி பயின்றவர்களே ஆசிரியர்களாதற்கு உரியர்' என ஏற்படுவதால், அக்கொள்கையை இச் சங்கம் வன்மையாகக் கண்டித்து இந்தி மொழி அறியாவிட்டாலும் தக்கவாறு தொண்டு செய்யும் திறம்பெற்ற ஆசிரியர்களையே தேர்ந்தெடுக்குமாறு இச் சங்கம் வற்புறுத்துகிறது.

4. பிற பாடங்களைத் தமிழிலேயே கற்பிப்பது என்பதனால் தாய் மொழிக்கு வளர்ச்சி வராது. தாய் மொழிப் பயிற்சியற்ற பிற மொழிப் புலவர்கள் கொச்சைத் தன்மையுடைய பொருந்தாத இழிந்த சொற்களால் தம் பாடங்களை விளக்குவதால் தாய் மொழி கெடுமேயன்றி வளராது. ஆகையால் இத்தகைய வீண் மருட்சியினால் மக்களை ஏமாற்றாது உண்மைத் தொண்டு புரிய அரசாங்கத்தாரை இச் சங்கம் வேண்டுகிறது.

திருவள்ளுவர் விழா

இலட்சுமிபுரம் உயர் திருவாளர் ந: சொ. அரு. அருணாசலம் செட்டியாரவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள சொக்கலிங்க வித்தியா சாலையில் நாளது பகுதான்ய வருடம் வைகாசி மீ 12ம் நாள் (25-5-38) மாலை 4-மணிக்கு திருவள்ளுவர் விழா மாணவ மாணவிகள் இறை வணக்கம் பாட இனிது ஆரம்பமாயிற்று. அது சமயம் திருவள்ளுவப் பெருமானின் திருவுருவப் படம் பீடத்தில் அலங்கரிக்கப் பெற்று மாணவ மாணவிகள் பாதபூஜை செய்தனர்.

விழாத் தலைவர் உயர் திருவாளர் ராம. அரு. அருணாசலம் செட்டியாரவர்கள் தலைமை தாங்கி தமது முன்னுரைப் பிரசங்கத்தை நிகழ்த்திய பின்னர் திருக்குறள் போட்டி நடைபெற்றது. அதில் பல மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். "திருவள்ளுவர் பெருமை"

என்னும் கீதத்தை ஈ. மீனாட்சி என்னும் மாணவி இன்னிசையுடன் பாடினான். வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. K. சுப்ரமண்யம் அவர்கள் "செந்நாப் போதாரும் செந்தமிழ் நாடும்" என்னும் பொருள் பற்றியும், உதவி ஆசிரியர் திரு. S. அருணாசலம் பிள்ளை அவர்கள் "திருவள்ளுவரும் நெசவுத்தொழிலும்" என்னும் பொருள் பற்றியும் சொற்பெருக் காற்றினார்கள். நூல் நூற்றற் போட்டி ஒன்று நிகழ்ந்தது. அதிலும் பல மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளில் கலந்துகொண்ட பிள்ளைகளுக்கும் அவற்றில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் திருக்குறள், தக்ளி முதலியன சிறப்புப் பரிசாகவும் பொதுப் பரிசுகளாகவும் தலைவரால் வழங்கப்பெற்றன.

இறுதியில் தலைவரவர்கள் தகுந்த முடிவுரை கூறியதும் வந்திருந்தோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கற்கண்டு வழங்கப்பெற்று வந்தன வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

தமிழ்ப் பணி

I am glad to announce that the Chintadripet High School authorities, have accepted my proposal to group togethor the L. T. assistants in the High School section and the Senior Pandits placing them both in the same scale of pay, so that there might be at least in this institution no longer any room for the complaint that even the pandits taking the higher forms had to enjoy a lower status. I hope that the other institutions will emulate this example.

T. P. MEENAKSHISUNDARAM,
M. A. B. L., M. O. L.,
ALDERMAN, *Corporation of Madras.*
Secretary: The Chintadripet Secondary School Association Ltd., Madras.

சிந்தாதிரிப்பேட்டை உயர்தரப் பள்ளியில் எல். டி. தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும், உயர்தர வகுப்புக்களுக்குத் தமிழ்ப்பாடங் கற்பிக்கும் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்களும் ஒரே சம்பளத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப் படுதல்வேண்டும் என்று முடிவுசெய்து அதனைச் செயல் முறையிற்கொண்டுவந்த திரு. T.P. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் நன் முயற்சியை நாம் பாராட்டுகிறோம். தமிழ்க்குரிய தலைப்பணிகளில் ஒன்றும் இதனைச்செய்து முடித்த அப்பெரியாருக்குத் தமிழாசிரியர்களும், தமிழ் மக்களும் என்றென்றுங் கடமைப் பட்டவர்களாவார்கள்.



தமிழாசிரியர்

இ. வை. அனந்தராமய்யர்.

அறிக்கை

செந்தமிழ்ச் செல்விக் கையொப்ப நண்பர்கட்கு

அன்புடையீர்!

நம் "செந்தமிழ்ச் செல்வி"க்கு இத் திங்களுடன் பதினாறாவ தாண்டு நிரம்பப் பெறுகின்றது. அடுத்த பதினேழாம் சிலம்பினை மிகவும் திருத்திய புதிய முறையில் வெளியிடக்கருதி வேலைசெய்து வருவதால், அதன் முதற்பரல் அதற்குரிய அரிய கட்டுரைகளும் பிறவும் தொகுக்கப்பெற்றபின் வெளியிடப்பெறும். அதற்குமுன் அங்கங்கேயுள்ள நம் அன்புடைக் கையொப்ப நண்பர்களும், தமிழ் மெய்யன்பர்களும் நஞ் "செல்வி" பல்வகை நலங்களுடன் நீடுவாழ்தற்பொருட்டுத் தங்கள் தங்களா லியன்றவரை புதிய சில கையொப்பங்கள் சேர்த்தனுப்பி யுதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழ் நாட்டில் கற்றோரும் மற்றோரும் போற்றத்தக்க நிலையில் நடைபெறும் திங்கள் வெளியீடுகள் (மாதப் பத்திரிகைகள்) ஒரு சிலவேயாகும். அவற்றுள் இலக்கணம், இலக்கியம், தத்துவம்; சமயம், வரலாறு முதலியவற்றைப்பற்றிப் பல்வகைக் கட்டுரைகள் அமைந்து சென்ற பதினாறுண்டுகளாகத் தட்டுத் தடைகளின்றி முறையே வெளிவந்து கொண்டிருப்பது நமது "செந்தமிழ்ச் செல்வி"யே யாகும்.

ஆதலால் இச்சீரிய வெளியீட்டினைப் போற்றித் தமிழ் நாடெங்கணும் பரவச் செய்யவேண்டியது நம் தமிழ் மெய்யன்பர்களின் தனிப்பெருங் கடமையாகும். ஆயினும் அதனை நடத்தி வரும் நாங்களும் தங்கள் போன்றோரை நினைப்பூட்டி உதவிபெற வேண்டியது எங்கள் கடமையாகும்.

செல்வி பதினேழாஞ் சிலம்பு இரண்டொரு மாதங்கள் கடந்து வெளிவரப் போவதைப்பற்றிப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

சென்னை,
25-8-38.

இங்ஙனம்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

The Jupiter Press, Madras

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௧௬] வெகுதானிய—ஆடி [பரல்-௧௨

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவேகம்பம்-திருத்தாண்டகம்

வருந்தான்காண் மனமுருகி நினையா தார்க்கு
வஞ்சன்காண் அஞ்செழுத்து நினைவார்க் கென்று
மருந்தவன்காண் வான்பிணிக டரும் வண்ணம்
வானகமு மண்ணகமு மற்று மாகிப்
பரந்தவன்காண் படர்சடையெட் டுடையான் றான்காண்
பங்கயத்தோன் றன்சிரத்தை யேந்தி யூரு
ரிரந்தவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே.

பதவுரை :—

அஞ்செழுத்து என்றும் நினைவார்க்கு—அஞ்செழுத்தினது உண்மையை அறிந்து அவ்வஞ்செழுத்தின் பொருளை மனதிலே இடையறாது அன்பினாலுருகி நினைத்துக் கொண்டிருக்கின்ற சத்திநிபாதர்க்கு

மருந்தவன்—அவர்கள் தாங்கள் அடைந்திருக்கிற அருள்நிலையினின்று வழுவும்படி செய்யு மல வாசனைகளை அணுக வொட்டா திருத்தற்கு மருந்தாகிய அவனும்

(அஞ்செழுத்து ஓதி) மனம் உருகி நினையாதார்க்கு வருந்தான்—அங்ஙனம் அஞ்செழுத்தை ஓதி அதனுடைய உண்மைப் பொருளை மனமுருகி நினையாதிருக்கிற உலகர்க்கு அவர்கள் தன்னை அடைந்து இன்பநலம் பெறுதிருத்தற்கு வருந்தாதவனும்

வஞ்சன்—அவ்வுலகர்க்கு அவர்கள் தங்களுணர்வினுள்ளே தனது சிறப்பியல்பை உணரச் செய்யாதிருக்கிறவனும்

வான்பிணிகள் தீரும் வண்ணம்—(தனது சிறப்பியலை அறியமாட்டாத அவ்வுலகர் தனது பொதுவியல்பை அறிந்து கொள்ளும் வண்ணம்) அவர்களைப் பிணித்துக் கொண்டிருக்கிற வலிய ஆணவம் கன்மம் மாயை மலங்கள் ஒழியும்படி

வானகமும் மண்ணகமும் மற்றும் ஆகிப் பரந்தவன்—விண்ணுலகமும் நிலவுலகமும் பிறஉலகங்களும் தனது அருட் சத்தியினால் கலந்து படர்ந்திருக்கிறவனும்

படர் சடை எட்டு உடையான்—தனது எட்டுத் தலைகளின் மேலும் விரிந்த சடைகளையுடையவனும்

பங்கயத்தோன் தன் சிரத்தை ஏந்தி ஊர் ஊர் இரந்தவன்—நான்முகனுடைய தலை யோட்டைக் கையிலேந்திக் கொண்டு ஊர்கடோறும் சென்று வீடுகளில் பிச்சை எடுக்கிறவனும்

எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி ஏகம்பன்—அழகு பொருந்திய சோலைகள் நிறைந்த திருக்கச்சி யேகம்பத் தலத்தில் (காஞ்சிபுரத்தில்) திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கிற சிவபெருமான்

அவன்—அத்தகைய சிறப்புக்களையுடைய சிவபெருமான்

என் எண்ணத்தான்—என்மனதில் நான் எப்பொழுதும் நினைந்து கொண்டிருக்கின்ற எண்ணத்திலேயுள்ளவன்.

விளக்க உரை :—

அஞ்செழுத்து என்றும் நினைவார்க்கு—அஞ்செழுத்தில் ஆன்மாவானவன் பாசத்தைவிட்டு நீங்கி அதனின்றும் வேறாய தானே அறிவுடைப் பொருளாய் அருளிலடங்கித் தன்னறிவு (தற்போதம்) முற்றிலும் ஒழிந்து சிவமே தானாகும் வீடு அடைதல் என்ற உண்மை அடங்கி யிருக்கின்றது. உலகர் ஓதவேண்டிய தூல அஞ்செழுத்து ஆன்மா அறநெறிகொள் உலக இன்பத்திலழுந்துதலையும் (involution), சத்திநிபாதர் ஓதவேண்டிய சூக்கும அஞ்செழுத்து அப்பாசத்தினின்று நீங்கி அருளிலடங்கி சிவமாதலையும் (evolution) குறிக்கின்றன. தன்னை அன்புடன் ஓதுகிறவர்களுடைய மலத்தை ஒழித்து சிவத்தை விளங்கச் செய்யும் மந்திரமாயிருப்பதோடு உலகவாழ்வின் குறிக்கோளையும் நினைப்பூட்டும் அஞ்செழுத்தைப்போலுள்ளதோர் வாய்பாடு சைவசமயத்திலன்றி வேறெந்தச் சமயத்திலுங் காணமுடியாது. "ஆறாறகன்று 'நம' விட்டறிவாகி வேறானதானே யகாரமாய் மிக்கோங்கி—ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்—பேறார் 'சிவாய' அடங்கும் பின் முத்தியே" என்று திருமூலர் திருமந்திரம் 2291 வது பாட்டில் கூறியிருக்கிற கருத்தையும் அறிக.

வீடு பேற்றையே கருத்தாகவுடைய சத்திநிபாதர்கள் மும்மலங்கள் நீங்கியபின்பும் மலவாசனையை ஒழித்தற்கு மனங்கரைந்துருகி அஞ்செழுத்தை இடையறாது நினைந்துகொண்டிருக்கும்படி சிவஞானபோதம் 9-வது சூத்திரம் கூறுகின்றது.

சத்திநிபாத ராவார் இருவினை யொப்பும் மலபரிபாகமுமடைந்து அருட்சத்தித் தங்களிடம் பதியப்பெற்றுப் பதியப்பெற்ற அளவுக்குத் தக்கவாறு தங்களுள்ளுணர்வில் மெய்யறிவு விளங்கப் பெற்றவர்கள். அவர்கள் நால்வகையர். இத்தகைய சத்திநிபாதர்க்கன்றி ஏனையோர்க்கு அஞ்செழுத்தி னுட்பொருளை எப்பொழுதும் நினைதலும், உடலிலுயிர்ப்பை யொடுக்கி ஒண் சுடரான விளக்கையேற்றிச் சிவத்தை உணர்தலும் கூடாது; ஆதலின் நினைவார்க்கு என்பதற்கு நினையும் சத்திநிபாதர்க்கு என்று உரை செய்யப்பட்டது.

மருந்தவன்—மருந்தாகிய அவன். அஞ்செழுத்தை அன்புடனோதி அகங்குழைந்து உருகி சிவபெருமானை நினைத்தலினால் மலமும் மலவாசனையும் நீங்குகின்றன; ஆதலின் அடிகள் சிவபெருமானை அம் மலவாசனை நீங்குதற்கு மருந்து என்றார். மருந்தானது ஓர் நோயை ஒழித்தல்போல சிவபெருமானை நினைத்தலானது மலத்தையும் மலவாசனையையும் ஒழிக்கிறது என்பது கருத்து. "மாசுபடுமலமாயை யருங்கன்ம மனைத்து—மரனடியையுணரும் போதகலும்பின்னணுகும்" என்ற சிவஞானசித்தியார் எட்டாவது சூத்திரம் 39-வது பாட்டில் கூறப்பட்டிருத்தலையும் "பின் செய் வினை—மாயையுடனில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே—யாயவதனாலுணரு மச்சு" என்ற சிவஞானபோதம் பத்தாவது சூத்திர வெண்பாவில் கூறப்பட்டிருத்தலையும் நோக்குக. மருந்தவன் என்பதற்குப் பின் வரும் காண் என்ற சொல்லும் ஏனைய ஆறு இடங்களில் வருவனவும் முன்னிலை அசைகள்.

மனம் உருகி நினையாதார்க்கு வருந்தான்—மனம் வருந்தான் என்பதற்கு முன் அவாய் நிலையால் அஞ்செழுத்தை ஓதி என்ற சொற்றொடர் தொக்கிநிற்பதை வருவித்துப் பொருளுரைக்கப் பட்டது.

வருந்தான்—வினையாலணையும் பெயர்.

இங்கே மனமுருகி நினையாதார் உலகபோகத்தில் அழுந்தி உழலும் உலகர் என்று பொருளுரைக்கப் பட்டது. அவ்வுலகர் தங்கள் பக்குவக்குறைவால் தன்னை மனமுருகி நினையாதிருக்கிறார்கள்; ஆதலினாலும் உலக வாழ்வின் அநுபவபயனாகத்தக்க பருவம் வந்த காலத்தில் உலக இன்பத்தை உவர்த்துத் தன்னை நினைப்பார் ஆதலினாலும் வருந்தான் என்றார்.

வஞ்சன்—பொய்யன். தனது சிறப்பியல்பை உலகர்க்குத் தெரியவொட்டாது மறைத்து வைத்திருக்கிறவன்.

உண்மையில் சிவபெருமான் வஞ்சன் அன்று. பக்குவம் வராத ஆன்மாக்களுக்குத் தனது சிறப்பியல்பு தெரியாதிருப்பது அவர்களுடைய பக்குவக்குறைவு. அப் பக்குவக்குறைவு அவர்களுடைய தவமுயற்சிக் குறைவால் வந்தது. இங்கே அடிகள் உலகமக்கள் பேசும் மொழியில் வைத்து சிவபெருமானை நகைச் சுவைபட வஞ்சன் என்றார். தனது மனதிலுள்ள கருத்தை வெளியிடாது மறைத்து வைத்துப் பிறிதோர் கருத்தைக் கூறுகிற ஒருவனையும் அங்ஙனம் ஒழுகுகிறவனையும் வஞ்சன் என்று கூறுதல் உலக வழக்கு.

வான்பிணிகள் தீரும் வண்ணம் வானகமும் மண்ணகமும் மற்று மாகிப் பரந்தவன்—வான் என்ற சொல் இங்கே வலிமையைக்குறிக்கிறது. உலகிலுள்ள தீமைக்குக் காரணமாகிய ஆணவ மலப்பிணிப்பை விட்டு உயிர்கள் நீங்குதற்காகவே மாயை (matter) யிலிருந்து இறைவன் உலகங்களைப் படைத்தார். அங்ஙனம் படைக்கப்பட்ட மாயை உலகில் உயிர்கள் தங்கள் அறிவு, இச்சை, செயல்களை நிகழ்த்தும்பொழுது கன்மம் உண்டாகின்றது. இந்த ஆணவமலமும் அஃது ஒழிதற்கு வந்து அதனோடு சேர்ந்து தொழில் செய்கின்ற மாயை கன்மமலங்களையும் அடிகள் இங்கே வான்பிணிகள் என்றார். உயிரினை அனாதியேபற்றி யிருக்கிற ஆணவமலம் ஆடையிலுள்ள அழுக்குப்போலும்; மாயை கன்ம மலங்கள் அவ்வாடை அழுக்கை யொழிப்பதற்கு வண்ணான் சேர்க்கிற உவர்மண்ணும் சாணமும்போலும். வண்ணான் ஆடையின் அழுக்கைப் போக்கும்பொழுது அதனோடு சேர்ந்த உவர் மண் முதலிய அழுக்கையுஞ் சேர்த்துப் போக்குதல் போல இறைவன் ஆணவமல அழுக்கை அதனோடு சேர்க்கப்பட்ட மாயை கன்மமல அழுக்குகளோடு சேர்த்துப் போக்குகின்றான். இங்ஙனம் மும்மல அழுக்குகளுந் தீர்தற்கு இறைவனது அருட் சத்தி மாயை உலகிற் கலந்திருப்பது இன்றியமையாதது. மாயை உலகிற் கலந்து மறைந்திருக்கும் அருட்சத்தியின் வகைகளைத்தான் அறிவியல் நூலார்கள் (Scientists) கண்டுபிடிக்கிறார்கள். உலகில் விளங்குகிறதாகக் காணப்படுகிற எல்லாச் சத்திகளும் அருட்சத்தியின் கூறுபாடுகள்தான். இங்ஙனம் இறைவனது அருட்சத்தி கலந்திராவிட்டால் உலகப்பொருள் ஒன்றும் இயங்காது. அதுவன்றி உலகிலுள்ள மக்கள் தங்கள் ஆராய்ச்சி அறிவால் அச்சத்தியின் வலியை அறிந்து அச் சத்தியை உடையவன் ஒருவன் உளன் என்ற உண்மையை அநுமானித்து அறிந்து அவனை வழிபடமாட்டார்கள். இங்ஙனம் மக்கள் தங்களுக்கு வேறுயொரு அளவிடப்படாத சத்தியுடையவன் ஒருவன் உளன் என்று அறிதலே இறைவனுடைய பொது வியல்பை அறிதலினாலே அவனை அறிதலாகும். இறைவனுடைய பொது இயல்பை அநுமானித்து அறிதலானது அவனுடைய சிறப்பியல்பை அவனோடு அத்துவிதமாய்க் கலந்து உணர்தற்கு வழியாயுள்ளது. சிறப்பியல்பை உணர்தலே வீடுபேற்றிற்கு ஏதுவாயுள்ளது. ஆதலின் மேலே கூறப்பட்ட

படி தனது சிறப்பியல்பைத் தங்கள் பக்குவக் குறைவாலுணரா திருக்கிற உலகர் நிலையைக் கண்டு வருந்தாதிருந்த இறைவன் வாளா விருக்காது அவர்கள் பக்குவப்படும் வண்ணம் அவர்களை உலகில் வாழவைத்து அவ்வுலக வாழ்விற்கு வேண்டுவன அமைத்து வைத்திருக்கின்றான் என்பார், வான் பிணிகள் தீரும் வண்ணம் வானகமும் மண்ணகமும் மற்றுமாகிப் பரந்தவன் காண் என்று அடிகள் கூறினர். மண்ணுலகிலுள்ள உயிர்களைப் பக்குவப்படுத்த மண்ணுலகிலும், விண்ணுலகிலுள்ள உயிர்களையும் பிற உலகங்களிலுள்ள உயிர்களையும் பக்குவப்படுத்த அந்தந்த உலகங்களிலும் இறைவன் கலந்திருக்கின்றான் என்பார் வானகமும் மண்ணகமும் மற்றுமாகிப் பரந்தவன் என்றார். வேதாந்திகள் என்று உலகவழக்கத்தில் அழைக்கப்படுகிற ஏகான் மவாதிகள் கூறுகிறபடியன்றி, உலகத்தில் நிலையன்றி அடிக்கடி மாறுவதாயிருப்பினும் உண்மையான உலகம் என்பதும், உலகில் அறநெறிக்குட் பட்டு வாழ்ந்து உலகநெறியிற் சிற்றின்பம் துய்த்தல் மக்கள் பேரின்பத்தை அடைவிக்கவல்ல துறவு நெறி யிற் புகுதற்குத் தக்க பருவம் அடைதற்கு வழியாக இறைவன் அமைத்திருக்கிறார் என்பதும் இதனால் நாம் அறியக்கிடக் கின்றன. திருமூலர் திருமந்திரம் 2163-வது பாட்டில் இக்கருத்தை "ஆசான் முன்னே துயில் மாணவகரைத்— தேசாய தண்டாலெழுப்புஞ் செயல்போல—நேசாய வீசனும் நீடா ணவத்தரை—ஏசாத மாயா டன்று லெழுப்புமே" என்று கூறியருளினர். அடிகளும் திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகம் 2-வது பாட்டில் "மறையார்ந்த வாய்மொழியான் மாயயாக் கையை வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே" என்று இக்கருத்தைக் கூறியருளினர்.

படர் சடை எட்டு உடையான்—இஃது இறைவனுடைய ஆற்றலைக் குறிக்கிறது. தான்—அசை.

பங்கயத்தோன் தன் சிரத்தை ஏந்தி ஊர் ஊர் இரந்தவன்— உண்மையில் இறையவனுக்குப் பசியுமில்லை, பசியை நீக்க வேண்டிய உணவுப் பொருள்களை இரக்கவேண்டியவனு மல்லன். இக்கருத்தை திருஞான சம்பந்த அடிகள் திரு இலம்பயங் கோட்டூர்ப்பதிகம் 6-வது பாட்டில் "மனமுலா மடிய வர்க்கருள் புரிகின்ற வகையலால் பலிதிரிந் துண்பிலான்" என்று கூறி யருளினர். தம் திருவடிகளை அடைய விரும்பித் தவஞ் செய்யுந் துறவிகளுக்கு வழிகாட்டுதற்கு இறைவன் பிச்சை எடுக்கின்றான் என்று திருமந்திரம் 1888-வது பாட்டிற் கூறு கின்றார். பங்கயத்தோன் என்ற சொல்லிற்குப் பின்வரும் தன்—அசை.

அவன் என் எண்ணத்தான்—எனது நெஞ்சில் திருக்கச்சியே கம்பனைப் பற்றிய எண்ணங்களே எப்பொழுதும் நிறைந்திருக்

கின்றன. அவன் என் நெஞ்சை விட்டகலாதிருக்கின்றான் என்பது கருத்து. ஏ—ஈற்றசை.

இப்பாட்டில், வருந்தான், வஞ்சன், மருந்தவன், பரந்தவன், உடையான், இரந்தவன்—இவ்வாறு பெயர்ச் சொற்களும் எழுவாய்கள். இவ்வெழுவாய்களுக்கு ஏகம்பன் பயனிலை. பின்னும் அவன், எழுவாய்; எண்ணத்தான் பயனிலை.

இப்பாட்டில் அடிகள் சத்திநிபாதர்கள் அஞ்செழுத்தை நினைந்து அடையும் பயனையும் உலகர் அப்பயனை அடையாதிருப்பதையும் உலகர் அப்பயன் அடையாதிருப்பதற்குத் தான் வருந்தாமல் அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டி அவர்களை உலக வாழ்வில் வாழ்ந்து தனது பொதுவியல்பை அறியச் செய்தற்காக உலகில் கலந்துள்ளான் என்பதையும் இத்தகைய சிறப்புக்களை உடைய சிவபெருமான் தமது நெஞ்சை விட்டு அகலாதிருக்கின்றான் என்பதையுங் கூறுகின்றார்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

நூல் வரவு

ஆறுபடை வீடு :—திரு. ஜி. சுந்தரமையர் B. A., B. L. அவர்கள் எழுதியது. 97 பக்கங்கள்கொண்டது. ஆறுபடை வீடு அனுதினமும் பாடு, சிவவேட்கை அகவல், நாராயண நினைவு அகவல், பாலன் அகவல், என்ற நான்கு பகுதிகள்கொண்டது. விலை அணு 4.

பதிஞானம்:—மெய்வழிச் சபையார் வெளியீடு. திரு. மா. மாசிலாமணிப் பிள்ளை B. A. அவர்கள் இயற்றியது. திருப்புத்தூர் மார்க்கநாத ஆண்டகையார் காட்டும் ஏகநாயக நெறியை விளக்குவது. 90 பக்கங்கள் கொண்டது. விலை அணு 4.

கம்ப ராமாயணப் புதையல்

[ஐயா. பா. வே. பொன்னுசாமி நாய்க்கர், செவ்வாய்ப்பேட்டை]

ஆரணியகாண்டம்—மாரீசன் வதைப்படலம்

69-ஆவது செய்யுள்

காமர முரலும்பாடல் கள்ளெனக் கனிந்த வின்சொற்
றேமலர் நிரந்தகூந்தற் றேவர்க்கு மணங்கா மென்னத்
தாமரை யிருந்ததையல் சேடியாந் தரமு மல்லள்
யாமுரை வழங்குமென்ப தேழைமைப் பாலதன்றே.

(இ - ள்.) காமர முரலும் பாடல் கள்ளென=வண்டுகள் ஒலிக்கும் பாடலும் (அவைகள் உண்ணும் தேனும் போலும்); கனிந்த இன்சொல்=முதிர்ந்த இனிய சொற்களையுடைய; தேம்மலர் நிரந்த கூந்தல்=வாசனைபொருந்திய மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய; தேவர்க்கும்=தேவ மாதர்களுக்கும்; அணங்குஆம் என்ன=மேற்பட்ட அழகுடையவளென்று சொல்லக் கூடிய ;தாமரையிருந்த தையல்=தாமரையிலிருக்கும் தையலாகிய இலக்குமியும்; சேடியாம் தரமுமல்லள்=அவளுக்குத் தாதியாயிருக்கவும் அழகு வாய்ந்தவளல்ல வென்றால்; யாமுரை வழங்குமென்பது=நாம் அவளழகை எடுத்துச் சொல்லலாகு மென்பது; ஏழமைப்பாலது அன்றே=அறிவின்மையின் தன்மையது அல்லவா ?

விளக்கம் :—"பாடல்கள்ளென" வண்டுகள் கள்ளையுண்டதனால் இனிமையாய்ப் பாடுகின்றனவாம். அவைகளைப்போல தேவப்பெண்களும் சுரா(கள்) உண்டு சுரர் எனப்பெயர் தாங்கி இன்சொல் பேசுகிறார்களாம். நிரனிரைப் பொருளில் பாடலைப் போல் கனிந்த கள்ளைப்போல் இனியசொல் பேசுகிறார்களாம். கனிந்தசொல்லென்றது கனிந்தவின்சொல்லென்றது அன்போடு பொருந்திய குற்றமற்ற சொற்களைக் குறிக்க. குறள்:—

"இன்சொல்லா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"

பாடலாகிய கள்ளெனினும் பொருந்தும்.

தெய்வப்பெண்களை அணங்கென்றழைப்பது வழக்கம். ஏன்? கண்டமானிடரைக் காமத்தில் வீழ்த்தித் துன்புறச் செய்வதால் (அணங்கு=துன்பம்). மானிடப் பெண்களில் அழகு வாய்ந்தவர்களையும் அணங்கென்றழைப்பதுண்டு. தேவமாதர்

களனைவரும் அணங்காம்; அவ்வணங்குக்கும் அணங்காயுள்ள வள் இலக்குமி. எவ்வுலகத்துப் பெண்களுக்கும் அணங்காகவும் உபமானமாகவும் உள்ள இலக்குமி சிதையின் அழகுக்கு மிகக் குறைந்திருப்பதால் "தாமரை யிருந்த தையல் சேடியாம் தரமுமல்லள்" என்கிறாள். இலக்குமிக்கு தாமரைத் தவிசின் பெருமைதான் உண்டென்பது தோன்ற தாமரையிருந்த வென்றும், அவளுக்குள்ள அழகு சிதையாள் அழகுக்கு மிகத் தாழ்ந்திருப்பதால் சாதாரணப் பெண்களைக் குறிக்கும் சொற்றொடரால் இலக்குமியென்று பெயர் சொல்லாமல் தையல் என்கிறாள். ஒரு நாயகிக்குத் தோழியாகவுள்ளவள் அழகு வாய்ந்தவளாக இருக்கவேண்டும். இலக்குமி சிதைக்குமுன் மிக்க அழகற்றவளாயிருப்பதால் "சேடியாம் தரமுமல்லள்" என்கிறாள். இதற்கு எடுத்துக்காட்டாக பிரபுலிங்கலீலையில் மாயை பூசனைகதி செய்யுள் 25 "வயங்குமாயை யங்கரும் பினிற்றாழ்ந்தவர் மாவினுயர்ந்த மாதரா ரூற்றிருந்தொழுகு கண்மலரை நயந்து சூழ்தரு மாரியி னண்ணினர் பிறர்காலா லியங்குமாதிரு புடையினுமிடையற வீண்டி". மேல் 67-ஆம் செய்யுளில் சிதை பொன் (இலக்குமி) வயின் மேனிகொண்டு இலக்குமியின் பொலிவைக் குன்றச்செய்து விட்டபடியால் தேவப்பெண்களுக்கெல்லாம் இல்லாத தாமரைத் தவிசைப் பெற்றிருந்தும், தெய்வப்பெண்களாகிய அணங்குக்கும் அழகில் அணங்காயிருந்தும் சிதைக்குச் சேடியாம் தரமுமல்லள் என்கிறாள். சிதையின் அங்கங்கள் ஒவ்வொன்றும் சிறப்புற்றிருப்பதாலும் இலக்குமியாள் அங்கங்கள் சிலவே சிறப்புற்றிருப்பதாலும் சிதையை யார் என்று கேட்ட இராவணனுக்கு அவள் இன்னளென்று சொல்ல எனக்குத் தெரியாது; நீயே ஆழ்ந்துதேர் என்றுசொன்னவள் இப்போது என்ன சொல்லுகிறாளென்றால் அவளையும் சேர்த்து நீ அவளை நேரில் பார்த்தாலும் அவள் அழகை வர்ணிக்க முடியாதென்றும், வர்ணிக்கமுயன்றால் அறிவறிந்த நீயும் அறிவற்ற நானும் சமமாய் அறிவற்றவர்களாவோம் என்றும் பொருள் தோன்ற "யாமுரை வழங்குமென்ப தேழைமைப்பால தன்றோ" என்கிறாள். எப்பெண்பாலர்க்கும் உபமானமாய் நிற்கும் இலக்குமி சேடியாக சிதைக்குமுன்னிற்கத் தரமில்லை யென்றால் நீயும் நானும் வர்ணிப்போம் என்பது ஏழைமை யென்றும் எவராலும் வர்ணிக்க முடியாதென்றும் சூர்ப்பனகை சொல்லுகிறாள்.

குறிப்பு: தேவர்க்கு மென்பது பால் உருபுமயக்கத்தி லிருப்பினும் அதற்கு முன் கூந்தல் என்றிருப்பதால் பெண்

பாலாகக்கொள்ளல்வேண்டும். வழங்கும் என்பது வழங்குதும் என்பதில் து தொகுத்தல் விகாரம். சூர்ப்பனகை யாம் என்பதை மரியாதைப் பன்மையில், தான் திரிலோகாதிபதியின் தங்கையாதலின் கூறினாளெனினும் பொருந்தும் (Royal We). புலவர்கள் "யாம்" என்று தனித்தன்மைப் பன்மையிற் கூறும் வகையில் கூறினாள் எனினும் பொருந்தும். தேவர்க்கும்= தேவர்கள் ஆண்பெண் இருதிறத்தாருக்கும் ("காமர முரலும் ....அணங்காமென்ன") அணங்கென்பது கொல்லக்கூடியவள். தாமரையிருந்த தையல் சிதைக்குச் சேடியாந் தரமும் அல்லள் என்று பொருள்கொள்ளினும் கொள்ளலாம். இப்பொருளுக்கு விளக்கம் அழகுள்ள பெண்கள் ஆடவருக்குத் தான் அணங்கென்றால் இலக்குமி தேவர்கள் ஆண்பெண் இருதிறத்தார்களுக்கும் அணங்காம்; இவளுக்குச் சிதை அணங்காம். சிதை ஆண்களுக்கு என்னவாயிருப்பாளென்பது சொல்லாமலே விளங்கும். இதை சூர்ப்பனகை சிதையைக்கண்டு நினைக்கிறாள் "கண் பிறபொருளிற் செல்லா கருத்தெனினஃதே கண்ட பெண்பிறந் தேனுக்கென்றா லென்படும் பிறருக்கென்றாள்" இதற்கிணங்க சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 95-ம் செய்யுளில் "பெண்டிரு மாண்மை வெஃகிப் போதறு முலையினாளை" என்றிருத்தல் காண்க. தையல் என்ற சொல் இளித்துக்கூறும் தொனியை உடையதென்பதற்குத் "தையல் சொற்கேளேல்" என்று ஔவையாரும் கூறியது காண்க.

உவில்பர் ரைட்டு (Wilber Wright)

காற்றை வென்ற வீரர்

[திரு. M. K. வேலன், B. A.]

உவில்பர் ரைட்டு என்னும் பேரறிஞரும் இவர்தம் உடன் பிறந்தார் ஆர்வில்(Orville) என்பவரும் வானவூர்தியைக் கண்டு பிடித்துப் பெரும்புகழ் அடைந்துள்ளனர். இவர்களுடைய தந்தையார் அமெரிக்க நாட்டில் டேட்டன் (Dayton) என்னும் நகரத்தில் கிறித்தவ மத குருவாக அமர்ந்திருந்தனர். ரைட்டும் ஆர்வில்லும் கல்விச்சாலையை விட்டு அகன்றவுடன் அச்சுப் பொறியொன்றை வைத்துக்கொண்டு வாரத்திற்கு ஒருமுறை ஒரு செய்தித்தாள் வெளியிட்டுவந்தனர். இக்காலத்தில் சைகிள் என்னும் ஈருருளி புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதால்

வில்பரும் அவர் தம்பியாரும் சிறிய தொழிற்சாலை பொன்றும் ஏற்படுத்தி வண்டிகள் செய்து விற்றுவந்தனர்.

1896-ஆம் ஆண்டில் லிலியேந்தல் (Lilienthal) என்னும் ஜெர்மானியர் முதன்முதலாகக் காற்றுாடி (Glider) ஒன்று செய்து அதில் ஏறிப் பறந்துபார்த்தார். அக்காற்றுாடி பறக்க முடியாது கிழேவிழுந்து நொறுங்கியதால் லிலியேந்தல் அடிபட்டு இறந்தார். இதே முயற்சியில் பிட்சர் (Pitcher) என்னும் ஆங்கிலேயரும் உயிர் துறந்தார். இதற்குப்பின் உவில்பரும் ஆர்வில்லும் நான்கு ஆண்டுகளாக இடைவிடாது ஆராய்ச்சி செய்து 1900-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் வானவூர்தி யொன்றைச் செய்து முடித்தனர். இவ்வூர்தி சிலவிநாடிகளே பறக்கக்கூடியதாக இருந்தது. ரைட்டும் அவர் தம்பியும் இன்னும் இரண்டு ஆண்டுகள்வரை ஓயாது உழைத்து மற்றோர் ஊர்தியைச் செய்தனர். அதனை இருவரும் ஒரு மறைப்பாங்கான இடத்திற்கு எடுத்துச்சென்று ஆயிரம் முறைக்குமேல் பறந்து பார்த்து அதில் பல சீர்திருத்தங்களைச் செய்தனர். முடிவில் அது 622 அடி தொலைவு பறந்து செல்லக்கூடியதாக ஆயிற்று.

பின்னுட்கழித்து ரைட்டும் அவர் தம்பியும் மண்எண்ணெயின் உதவியால் வானவூர்தியை ஓட்டுவதற்கு முயன்றனர். அடுத்த ஆண்டின் இறுதியில் 250 பவுண்டு எடையுள்ள மோட்டாரை வானவூர்திக்குள் அமைத்து உவில்பர் ரைட் அதனை ஓட்டிச்சென்றார். எடை மிகுந்துவிட்டதால் அவ்வூர்தி நூறு அடி மட்டும் பறந்து சென்று ஒரு மலைச்சரிவில் விழ்ந்து நொறுங்கிப் போயிற்று. ஏதோ நல்வினைப்பயனால் உவில்பர் தீங்கின்றித் தப்பினார். இரண்டு நாட்கழித்து ஆர்வில் அங்ஙனமே பறக்க முயன்றார். இம்முறை வானவூர்தி 12 விநாடிகள் வரை காற்றிற் பறந்து 120 அடிக்கு அப்பால் இறங்கிற்று. மூத்தவர் மறுமுறை முயன்று 200 அடி பறந்து சென்றார். இங்ஙனம் இருவருமாக அன்று முழுவதும் பன்முறை பறந்து பார்த்து அவ்வூர்தியை 59 விநாடிக்குள் 852 அடி வரை பறக்குமாறு செய்தனர்.

இவர்கள் தாம் கண்டுபிடித்த இவ் வியத்தகு ஊர்தியில் பல திருத்தங்கள் செய்து அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் அரைமணி நேரம் வரையில் தொடர்ந்து பறக்கும் வண்ணம் அதனை மாற்றி அமைத்தார்கள். இவர்களின் முயற்சி கைகூடாதென எண்ணிப் பலர் இவ்வறிஞர்களை எள்ளனம் செய்துவந்தனர். காற்றினும் எடைமிகுந்த வானவூர்திகளில் ஏறிப் பறக்க முயல்வது பயனற்ற செயலென்றும், உயிருக்குத் தீங்கு தருவ

தென்றும் சொல்லி அறிவியற் புலவர்களும் எதிர்த்துவந்தனர். ஆயினும் ரைட்டும் அவர் தம்பியாரும் தங்கள் முயற்சியைக் கைவிடாது பொறுமையுடன் உழைத்துவந்தனர். முதன் முதலில் வானவூர்தியை நேராகவே பறக்கவைக்க முடிந்தது. நாளடைவில் இவர்கள் தங்கள் விருப்பம்போல் ஊர்தியை எல்லாப் பக்கங்களிலும் திருப்புவதற்கு கற்றுக்கொண்டனர். இங்ஙனம் திருப்பும்பொழுதெல்லாம் அது தலைகீழ் கவிழ்ந்து குப்புற விழுந்தது. அதன்பின் ஓர் ஆண்டிற்குள் ஆர்வில் ரைட் வான வூர்தியிற் பறந்துகொண்டிருக்கும் பொழுது அதனைத் திருப்புவதற்கும், வட்டமிடச் செய்வதற்கும் வழிகளைக் கண்டுபிடித்தார்.

ரைட்டும், அவர் தமையனாரும் வானவூர்தியில் இன்னும் பல விந்தைகளைச் செய்து காட்டினர். 1908-ஆம் ஆண்டில் உவில்பர் தமது பொறியைப் பிரான்சு நாட்டிற்கு எடுத்துச் சென்று பாரிஸ் (Paris) நகரத்திற்குமேல் சுற்றிச் சுற்றிப் பறந்து காண்பித்தபோது அந்நகர மாந்தர் பெருவியப்படைந் தனர். இதுவுமன்றி, ஆர்வில் காற்றைவிட எடைமிகுந்த ஊர்தியில் பறந்ததற்காக நல்ல பரிசும் பெற்றார்.

ரைட்டும் அவரது உடன்பிறந்தாரும் கண்டுபிடித்த வான வூர்தி பலதிறப்பட்ட மாறுதல்கள் அடைந்து இக்காலத்தில் மிகச்சிறந்த நிலையினை அடைந்திருக்கின்றது. மணிக்கு 200 கல் விரைந்துசெல்லும் ஊர்திகளும், பெருஞ்சுமைகளையும், நூற்றுக் கணக்கான ஆட்களையும் தாங்கிச்செல்லும் வானவூர்திகளும் உண்டாக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றின் உதவியால் உலகத் தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு மக்கள் விரைந்து செல்கின்றனர். அமெரிக்காவில் தூங்குவதற்கு வசதியுடைய வானவூர்திகள் செய்யப்பட்டிருக்கின்றன. தாழ் வாயும் உயரமாயும் பறப்பதற்கான வசதிகளும் மெதுவாக இறங்கக்கூடிய வசதிகளும் இவற்றில் உண்டு. கடல் மட்டத் திற்குமேல் 35,000 அடி உயரத்திற் பறக்கக்கூடிய ஊர்திகளும் விரைவில் தோன்றக்கூடும். இவ்வளவு உயரத்தில் காற்று மிகக்குறைவாக இருப்பதால் வானவூர்தி மணிக்கு 365 மைல் விரைந்துசெல்ல முடியும். 1492-ஆம் ஆண்டில் கொலம்பஸ் (Columbus) ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காபோக 69 நாள் சென்றது. இதே பயணத்தை இவ் இருபதாம் நூற்றாண்டில் ஒரு வாரத்தில் செய்து முடித்தவர்களும் உண்டு.

வானத்திற் பறக்கும் பொறிகளில் மிகச் சிறந்தது 'ஆட்டோ கிரோ' (Auto-giro) என்னும் வியத்தகு ஊர்தி யாகும். இவ் வூர்திக்குச் சிறகுகள் கிடையாது. இதன் உச்சி

யில் மூன்று குறுகிய தகடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகடுகள் இடையிலுள்ள ஓர் அச்சாணியைச் சுற்றிச் சுழல்கின்றன. இவற்றின் உதவியால் வானவூர்தி நேரே முன்னுக்குப்போய் மேலே எழும்புவதற்குப் பதிலாக அப்படியே மேலெழும்புகின்றது. ஏனைய வானவூர்திகள் பறவைகளைப் போன்று தோன்றுகின்றனவெனில் ஆட்டோ கிரோ ஒரு கொசுவைப்போல் காணப்படுகின்றது. இதன் உதவியால் வானத்தில் செங்குத்தாய் ஏறவும், தலைகீழாய் இறங்கவும், வெட்டுக்கிளியைப்போல் தத்தித் தத்திக் குதிக்கவும் கூடும். இப்பொறி கீழே இறங்குவதற்கு அகன்று விரிந்த இடங்கள் தேவையில்லை. இதனை மோட்டார் வண்டிகளைப்போல் எங்கு வேண்டுமானாலும் நிறுத்தி வைக்கலாம்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த வானவூர்தியை உண்டாக்குவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் உவில்பர் ரைட்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வானவூர்தியின் உதவியால் முதன்முதலாகக் காற்றைவென்ற பெருமை ரைட்டுப் பெருமகார்க்கே உரியது. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்ற நன்னம்பிக்கையை உறுதுணையாகக் கொண்டு ஒருமைப்பாட்டுடன் உழைத்து இடர்கள் மிகுந்த இவ்வாழ்க்கையின் இடையில் வெற்றி கண்ட ரைட்டு வீரர்களை உலகம் என்றும் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றது.

நாஞ்சில்வேள் அல்லது வள்ளுவன்

[கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.]

நாஞ்சி நாடு (=நாஞ்சில் நாடு) என்பது பண்டைக் காலந்தொட்டே பெயராலும், புகழாலும் சிறந்து 'கேரளம்' என்னும் மலையாளத்தின் நிலப்பரப்பில் விளங்குகிறது. தற்காலம் *அந்நாடு திருவாங்கூர் இராச்சியத்தின் ஒரு பகுதியில் உள்ளது. அந்நாட்டைத் தலைமைத் தானத்தினின்றும் வளம்படுத்துவது 'நாஞ்சில்' என்னும் பெயரிய மலை. அம்மலையின் பெயரே அந்நாட்டிற்கும் பெயராய் அமைந்துள்ளது.

புலவர் பாடும் புகழ்படைத்து வரையாதளிக்கும் வண்மை மிகுந்து இரவலர்க்கு இல்லையென்னுதியும் அருங்குணமுடைய'

---

*இந் நாஞ்சில் நாடு தென்பாண்டி நாட்டின்கண்ணதென்று திரு மு இராகவையங்கார் அவர்கள் கூறுகின்றனர்.

அந்நாட்டு அரசனுக்கு "நாஞ்சில்வேள்" என்னும் பெயர் இயற்பெயராய் வழங்கப்பட்டுவந்தது.

பண்டைக் காலத்தில் தமிழ் வழங்கிய நாடு ஐம்பத்தாறு தேயங்களாகப் பகுக்கப்பட்டு இருந்தபோது, தென்பாகம் சேர, சோழ பாண்டியர்களால் ஆளப்பட்டு வந்தது. அம் மூவரும் முடியுடைய மூவேந்தர் எனப்படுவர். அவ்வரசர்கள் காலத்தில் சிற்சில பகுதிகள் தனிப்பட்ட உரிமைவாய்ந்த சிற்றரசர்களால் அரசு செய்யப்பெற்றுவந்தன. அத்தகைய நாடுகளில் நாஞ்சி நாடும் ஒன்று.

இந்த நாஞ்சி நாட்டை ஆண்ட அரசன் வேளாண் மரபைச்சேர்ந்த குறுநில மன்னன் ஆனதால், "நாஞ்சில்வேள்" எனப்பட்டான். இச்சிற்றரசனுக்கு இன்னொரு பெயர் "நாஞ்சில் வள்ளுவன்" என்பது.

வள்ளுவன் என்னும் பெயர் சங்ககாலத் தமிழகத்தில் ஆதிதிராவிடரின் ஒரு வகுப்பார்க்குச் சாதிப் பெயராகாமல், தகவுடைய முடிமன்னர்கட்கு (மகட்கொடைக்குரிய வேளிராகிய குறுநில மன்னர்கட்கு) வழங்கிவந்த செய்தி ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

புறப்பாட்டில் ஒருசிறைப் பெயரியனார்; மருதனிளநாகனார்; கருவூர்க்கதப் பிள்ளை' என்னும் பண்டைத் தமிழ் வாணர்கள் பாடிய நாஞ்சில்வேளின் பெயர் 'வள்ளுவன்' எனச் சுட்டப்படுகிறது. அஃது அச்சிற்றரசன் சேர அரசன் மாட்டு அன்புடையனாய் அவனுக்குத் துணைநின்று அச்சேர அரசன் கொற்றத்து அருங்கடம்பூண்டு *உள்படு கருமத்தலைவனாயிருந்தபடியால் எய்திய பட்டப் பெயராகும்.

இஃது "கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி" என்னும் பாண்டிய அரசனுடைய உள்படு கருமத் தலைவராயிருந்த திருக்குறள் ஆசிரியராகிய நெடுமாறனுக்கு ஏற்பட்ட 'வள்ளுவர்' என்னும் பட்டம்போன்றது. அந்த நெடுமாறன் வள்ளுவனாரும், வேளிர்குலத்திற் பிறந்து சில காரணங்களால் வள்ளுவர் குலத்தில் வளர்ந்து பிறகு வேளிர் குலத்து மகளிரையே மணந்து பாண்டியனிடத்து உள்படு கருமத் தலைவராகி வள்ளுவன் என்னும் பட்டம்பெற்றுத் "திருக்குறள்" என்னும் பெரிய நூலை இயற்றினர்.

---

* உள்படு கருமத் தலைவர் என்பதற்கு, அரசர்கீழ்க் காரியத் தலைமை வகிக்கும் அதிகாரி என்பது பொருள்.

'மன்னர் உள்படு கருமத் தலைவர் *'வள்ளுவர்' என்று சேந்தன் திவாகரம் கூறுமாற்றானும் இப்பெயருண்மை அறியலாகும்.

முற்காலத் தமிழகத்தில் 'வள்ளுவசாதி' என்று ஒரு சாதியில்லை. தொல்காப்பியம், துடியர்—பாணர்—இடும்பர்—பறையர்—கடம்பர் எனப் பேசுவதல்லது வள்ளுவ சாதியைப்பற்றிப் பேசுமாறில்லை. அக்காலத்தில் புலைக்குல வகுப்பினராகிய பறையருக்கு 'வள்ளுவர்' என்னும் பட்டம் வழங்கவில்லை.

சாதாரணமாகப் பறையர் சாற்றும் பறையும், அதை அவர் அறையும் முறையும் வேறு. ஆனால் வள்ளுவரோ,

"அரசு கொற்றத் தருங்கடம் பூண்டவர்
கோற்றொழில் வேந்தர் கொற்ற முரசம்
பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி ஓச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையார்"

(காண்டம் 2 : பகுதி 2 : வரி 29—33)

எனப் பெருங்கதை பேசுகின்றது.

மேலேகூறிய மூன்று நாட்களிலும்தான் வள்ளுவர் என்பார், தமிழ் முடியரசர் இமிழ் கடி முரசை வச்சிர கோட்டத்தினின்றும் எடுத்து யானைப்பிடர்த் தலையேற்றி அரசனையும், அனைவரையும் வாழ்த்தி முரசறைவர்; வேறு காலங்களில் செய்யார்.

அத்தகைய வள்ளுவரை 'முதுகுடிப் பிறந்தோன்' ஆகவும், 'உயர்ந்தோன்' ஆகவும், மணிமேகலை (விழா—27-28)பினும், பதிற்றுப்பத்திலும் (30) கூறியிருக்கிறது.

வேந்தர் பெரும்பணைக் கொட்டில் உள்ளும், வச்சிரக் கோட்டத்துள்ளும் (கோட்டம்=கோவில்)சென்று பலியிட்டுப் பூசைசெய்து முரசை யெடுத்து வேழத்தின் பிடர் மிசையேற்றி "மறவரும் தேரும் மாவுங் களிறும் சூழ்தர" உலகை

---

* அரசர்க்குக் கருமத் தலைவராய் உயர்பதவி வகித்தவர்க்கு 'வள்ளுவன்' என்ற சிறப்புப்பெயர் முன்பு வழங்கப்பட்டது. அரசனது கருமத் தலைவனாயிருந்தது பற்றியே இப்பெயரை அவன் பெற்றிருத்தல்வேண்டும். "ஸ்ரீசோகிரத்துப்பருடையாரும்....இராயசேகரராயின வள்ளுவருங்கூடிச் செய்த கச்சமாவது" என்ற சாசனத் தொடரும் இக்கருத்தினையே வலியுறுத்தல் காண்க (S. I. I. Vol. V, No., 776.) மு. ரா.

அரசொடு வாழ்த்தி அணிவிழா அறையும்] வள்ளுவனை இழி குலப் புலைமகனுகக் கருத இடமுண்டா? என்று பாருங்கள்.

பறையைக் கழுத்திலிட் டறைந்து காலால் நடந்து கரையும் பறையரின் குலம் வேறு.

முரசத்தை யானையின் பிடர்த் தலையேற்றிச் சேனைகள் சூழ்தர வேழமேறி உலகையும் அரசையும் வாழ்த்தி அணிவிழா அறையும் வள்ளுவரின் குலம் வேறு என்று கொள்ளக் கிடக்கின்றது. அத்தகைய வள்ளுவரைத் 'தொல்குடிப் பிறந்தோன்,'முதுகுடிப்பிறந்தோன்' எனக் கூறியிருக்கத் தற்காலம் பறையரின் குலகுரு வகுப்பினராயுள்ள வள்ளுவரில் ஒருவ ரென்று கொள்வதற்குச் சான்று சிறிதேனுங் கிடையாது.

புறநானூறு 137, 138, 139, 140, 180-ஆம் செய்யுட் களில் புகழப்பெற்ற நாஞ்சில் வள்ளுவன் என்பான் மேலே கூறிய நாஞ்சில் நாட்டுவேளாகிய சிற்றரசனே ஆவன்.

இனி இவ்வரசனது அருங்கொடையைப் பற்றியும், சிறந்த புகழைப்பற்றியும், இரப்போர்க்கு இல்லையென்னு தியும் இனிய குணத்தைப்பற்றியும், பாடும் புலமையில் வல்லார்களாகிய 'ஒருசிறைப் பெயரியனுர், மருதனிளனுகர், கருவூர்க்கதப் பிள்ளை' என்னும் புலவர் பெருமக்களால் பாடப்பட்டுள்ள செய்யுட்களை இதன் கீழ்க் கூறி இக்கட்டுரையை முடிப்பாம்.

"அரிசி கேட்க யானை கொடுத்த நாஞ்சில் வள்ளுவனை மருதனிளனுகனர் பாடியது:—

அகவற்பா*

"தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர்†படப்பைக் கொய்த
அடகின்**கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
‡இருங்க டறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கியோனே! யன்னதோர்
தேற்றா வீகையு முளது கொல்!
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே" (புறம் 140)

* இச்செய்யுளைத் தமிழ்மூதாட்டி அவ்வையார் பாடியதென்றுங் கூறுவர். தடவு நினைப்பலவி' தேற்றா வீகையுமுண்டு கொல்' என்பன 'பாட பேதங்கள். படப்பை=மலைப்பக்கம். கண்ணுறை= மேல் தூவுவது. ‡ கடறு=சுரம்.

செவ்விய நாவையுடைய புலவீர்! வளையணிந்த கையையுடைய விறலியர் மனைப்புறத்தின்கண் பறித்த இலைக்குமேலே தூவுவதாக யாங்கள் சிறிது அரிசி வேண்டினோம். அஃதுணர்ந்த பரிசிலர்க்கு உதவும் முறைமை யறிதலால், அவ்வள்ளல் எம்முடைய வறுமைப் பிணியைப் பார்த்ததேயன்றித் தன் மேம்பாட்டிற்குத் தக்கதொரு மலையென மிகரும் பெரிய யானையை அளித்தனன். ஆகவே பெரியோர்கள் தாங்கள் தக்கார்க்குச் செய்யும் முறையைத் தெரிந்து பாதுகாத்துச் செய்வார், என்பது பாட்டின் பொருள்.

ஒருசிறைப் பெயரியனார் பாடியது:—

அகவற்பா

இரங்கு முரசி னினஞ்சால் யானை
முந்நீ ரேணி விறல்கெழு மூவரை
யின்னு மோர்யான் வரவறி யேனே
நீயே, முன்யா னறியு மோனே! துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது
கழைக்கரும்பி னொலிக்குந்து
கொண்டல் கொண்டநீர் கோடை காயினுங்
கண்ணன்ன மலர்பூக்குந்து
கருங்கால் வேங்கை மலரினும்
பொன்னன்ன வீசுமந்து
மணியன்ன நீர் கடற் படருஞ்
செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந!
சிறுவெள் ளருவிப் பெருங்க ணுடனை
நீவா ழியர்நின் றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே. (புறம் 137)

நீர் நிறைந்த பள்ளத்தின்கண் விதைத்த வித்தானது நீரில்லாவிடினும் கரும்புபோல் செழிப்புற்றுத் தழைக்கும்; மழையால் முகந்து சொரியப்பட்ட நீர் கோடைகாலத்தும் மகளிர்கண் போல்வதாகக் குவளை முதலிய மலர்கள் மலர்ந்திருக்கும். கரிய தாளையுடைய வேங்கை மரமானது நாடோறும் பொன்போலும் பூவைத் தம்மிடத்துச் சுமந்திருக்கும்; மணிபோலும் நீரானது கடற்கண் செல்கின்ற செழுமையான மலைப்பக்கத்தையுடைய நாஞ்சில் என்னும் மலையையுடைய வேந்தே!

ஒலிக்கின்ற முரசினையும் மிகுந்த யானைப்படையினையும் கடலாகிய எல்லையையுமுடைய இந்நிலத்தின்கண்ணே யான் இன்னமும் மூவேந்தரைப் பாடினேனில்லை. நீ தான் எனக்கு முன்னே தொடங்கி அறியும் வள்ளல்;

சிறிய அருவிகள் ஒல்லென வீழாநின்ற பெரிய மலையை யுடைய நாட்டையுடையாய்! நீ நெடுங்காலம் வாழ்வாயாக. நின்னைப் பெற்றோராகிய தாய்தந்தையரும் வாழ்வாராக!'' என்பது இச்செய்யுளின் பொருள்.

இச்செய்யுளில் நாஞ்சில் வள்ளுவரின் கொடைத்திறம் எத்துணைச் சிறந்ததாகக் காண்கின்றது! அன்றியும், அப்புலவர் பெருந்தகை 'யான் இன்னமும் மூவேந்தரைப் பாடினேனில்லை. நீ தான் எனக்கு முன்னே தொடங்கி அறியும் வள்ளல்' என்று வியந்து கூறுவதனால், வள்ளல் இரவலன்பால் வைத்த பேரன் பும், அவன் தகுதியறிந்து நல்கிய பரிசும் மிகுதியும் பாராட்டற் குரிய தகுதியுடையதென்றும் அறியப்படுகிறது.

இதுவும் மருதனிளநாகர் பாடியது:—

ஆனினங் கலித்த வதர்பல கடந்து
மானினங் கலித்த மலைபின் னொழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
யுள்ளிவந்த வள்ளுயிர்ச் சீறியாழ்ச்
சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண
நீயே பேரெண் ணலையே நின்னிறை
மாறி வாவென மொழியலன் மாதோ
வொலியிருங் கதுப்பி னாயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மானணி பெருங்குர லனைய னாதலி
னின்னை வருத லறிந்தனர் யாரே'' (புறம் 138)

"வள்ளிய ஓசையுடைத்தாகிய சிறிய யாழையும், சிதாராகிய உடையையுமுடைய மூத்த பாணரே! நீதான் நாஞ்சில் வள்ளுவனாகிய பெருந்தகை யிடத்துச் சிலவற்றைக்கருதிப் போகின்றமையின், பெரிய எண்ணங்களையுடையை; நின் னுடைய அவ்வள்ளல் இப்பொழுது போய்ப் பின்பு ஒருநாள் பரிசிற்கு வாவென்றும் கழறான்; கிளிப்பிள்ளைகள் மருவிய அகன்ற புனத்தின்கண்ணே! பெரிய கதிர்களை அவன் ஒப்பானாதலின், நீ அவன்பாற் பரிசுபல பெற்றுவருமிடத்து நின்னைப் பழைய பாணன் என்று அறிவார் யார்?'' என்பது பாட்டின் பொருள்.

இதுவும் அவர் பாடியது:—

சுவலழுந்தப் பலகாய
சில்லோதிப் பல்லிளைஞருமே
யடிவருந்த நெடிதேறிய
கொடி மருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டிப்

பொய் கூறேன் மெய் கூறுவ
லோடாப் பூட்கை யுரவோர் மருக!
வுயர்சிமைய வுழாஅ நாஞ்சிற் பொருந!
மாயா வுள்ளமொடு பரிசி றுன்னிக்
கனிபதம் பார்க்கும் காலை யன்றே
யீத லானுன் வேந்தே! வேந்தற்குச்
சாத லஞ்சாய் நீயே யாயிடை
யிருசில மிளிர்ந்திசி னூஅங் கொருநா
ளருஞ்சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே. (புறம் 139)

"இவரைப் பலபடப் புனைந்து வாழ்தலை விரும்பிப் பொய் சொல்லேன்; மெய்யே சொல்வேன்; புறங்கொடாத வலியோர் மரபில் உதித்தோனே! உயர்ந்த உச்சியையும் உடைய மலைக்கு அரசே!

நின்னுடைய அரசன் நினக்கு வேண்டியவற்றைக் கொடான். அதுபொழுது நினக்கும் அரசனுக்கும் ஒரு நாள் பூசலேனும் வரும்; நீயும் அரசன் பொருட்டுச் சாதலுக்கு அஞ்சாய்! அதற்குள் வறுமையால் பீடிக்கப்பட்டு வாடிய என் சுற்றமானது மிகவும் துன்புறும் ஆதலால்,

போர் வருவதற்கு முன்னரே எனக்குப் பரிசில் தந்து விடுவாயாக!" என்பது பாட்டின் பொருள்.

இவைகொண்டு வள்ளலாகிய நாஞ்சில் வள்ளுவரிடத்துச் செல்கின்றவர் எதனையும் நிச்சயமாகப் பெற்றே வருவரென்பது புலவர்கள் தம் வாக்குகளால் நன்கு தெளியப்பெறுகின்றது.

'கருவூர்க் கதப் பிள்ளை' என்னும் புலவர் பாடியது.

தென்பவ் வத்து முத்துப் பூண்டு
யடகுன்ற................................
..................................ங்கடற்றானை
யின்னிசைய விறல் வென்றித்
தென்னவர் வய மறவன்
மிசைப் பெய்தநீர் கடற்பரந்துமுத் தாகுந்து
நாறிதழ்க் குளவியொடு கூதழங் குழைய
வெறு பெ..........................த்துந்து
தீஞ்சுளைப் பலவி னாஞ்சிற் பொருநன்
றுப்பெதிர்ந் தோர்ந்தே யுள்ளாச் சேய்மைய
னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்
வல்வேற் கந்த னல்லிசை யல்ல
........................த்தார்ப் பிள்ளையஞ் சிறாஅர்
இலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே. (புறம் 380)

மேற்குறித்த செய்யுட்களும், அவற்றின் பொருள்களும் வள்ளல் பெருந்தகையாகிய நம் வள்ளுவரின் பெருங்கொடைத் தன்மையையும், அரும்பெரும் மேன்மைக் குணத்தினையும், அழகுபெற எடுத்துக் கூறுகின்றன. மற்றும் அவனது சிரிய ஒழுக்க நலம், செம்மை சான்ற புகழ், கருணைப் பெருக்கம், இரவலரின் தகுதியறிந்து ஈயும் வண்மை, அஞ்சாவீரம், யாரும் மதிக்கும் அறிவின் செயல் ஆகிய மாபெருந்தன்மைகளும் தெளிவாக அறியப்படுவதோடு, அவன் கடைபெழுவள்ளல் களைப்போல் வரையாதளிக்கும் வள்ளன்மையனாகவும், சிறந்த போர்வீரனாகவும்; முடியுடைய வேந்தனுக்கு உறுதுணைவனாகவும், சேரனல் வள்ளுவன் என்னும் பட்டம் பெற்றவனாகவும், புலவர் பாணர்—கூத்தர் முதலியோர்க்கு இல்லையென்னுதியும் ஈகையாளனாகவும், தகுதியறிந்தீயும் சதுரனாகவும், வேளிர் குலத்தலைவனாகவும் விளங்கியிருந்தான் என்பவற்றையும் நன்கு உணர்த்துகின்றன.

இவ்வேளிர் குலத்துவேந்தனை, தற்காலம் 'வள்ளுவர்' என்று வழங்கும் வள்ளுவசாதியைச் சார்ந்தவன் என்று கூறுவார் கூற்று வலியுடைத்ததாகாது. சங்க இலக்கியங்களை ஆராய்ந்து தெளிந்தார்க்கு உண்மை புலனாகும்.

செந்தமிழ்த் தாய் வழிபாடு

[வேலணைக்கிழார். க. வேந்தனார்]

கட்டளைக் கலித்துறை

செந்தமிழ்த் தாயைத் திருவுறு செல்வியைத் தென்பொதியக்
கொந்தலர் சோலையி லேழிசை கூவுங் குலக்குயிலை
நந்தலி லெல்லை நறைபொழி கொண்டலை நன்றெனுளம்
வந்து புகுந்திட மாமறை யாட்டியை வாழ்த்துவனே. 1

தொன்மை மலர்ந்தா ரினிமை பழுத்துச் சொலும்பொருளோர்
தன்மை கனிந்தோங் கிளமை செறிந்து தவழ்திருவே
பொன்னையொப் பாய்புக லென்றுன் கழலிணைப் போதடைந்த
வென்னையாண் டுன்மக் களிலொ ருவனு வெடுத்தருளே. 2

சொல்லினுங் கேட்கினுஞ் சிந்தை நிறைக்கினுந் தோன்றுமின்ப
நல்லியல் நோக்கித் தமிழென் றுறைந்தனர் நல்லறிஞர்
மெல்லிய லேயவ் விழுப்பொருள் ஆயாது வேறுசொலும்
புல்லியர் தம்மையான் புல்லா வகைபு புரிந்தருளே. 3

பொருளா ரிலக்கணச் செவ்வியும் நாற்பா புகல்வகையும்
திருவார் திணைப்பகு பாடும் பிறவுந் திகழ்ந்துநனி
யருளார் வினைகள் பலசெய் தரும்புக ளாருமுனை
மருளா ருளத்தர் தனித்தியங் காயெனும் மாற்றமென்னே. 4

என்னே யிவர்த மறிவின் றகைமை யிரும்புகழார்
பொன்னே யுனதின் பொருணலந் தோயும் புலமையிலார்
கொன்னே யுனைக்குறை கூறினும் யானுளங் கொள்ளுவனோ
தன்னேர் பிறிதி லுனதருள் வைப்பெனத் தாங்கிடுமே. 5

திங்கட் குழவி தவழுந் திருமுடிச் செல்வனுஞ்சீர்
தங்கும் புலவனு முன்நவ முண்ட தகையை யெனிற் -
பொங்கும் பொருளார்ந் தினிமை கனிந்த பொலங்கொடியே
யிங்குன் புகழை யெடுத்தார் முழுது மியம்புவரே. 6

“ மாணிக்க வாசகர் ” வண்மறைக் காவில் மணிக்குயிலோ
டாணிப்பொன் னம்பலத் தண்ணலைக் கூவு மருட்குயிலே
காணி னுளக்கண் பொலியும் பொருளே கடலமுதே
பேணி யுனதருட் போதினை யான்புகழ் பேறருளே. 7

அருளே யினிமை கனிந்த வமுதே யரும்புகழார்
திருவே சிவம்பொலி சேக்கிழார் உள்ளந் திகழொளியே
பொருளே புலவ ருளமார் புதுநலப் பூங்கொடியே
மருளே வளர்வினை யேனுன் னடிக்காம் வகையருளே. 8

தீயிற் கிடந்துநீ ரிற்சென் றுசெப்பருந் தின்முதலை
வாயிற்சேர் பிள்ளையைத் தந்து மறைக்காட்டு வண்மைவளர்
கோயிற் கதவந் திறந்து புகழார்ந்த கோமளமே
தாயிற் பெரிது மருள்சுரந் தென்னைநீ தந்தருளே. 9

பொன்னுற்ற நீண்முடி மன்னர் புரந்த பொலங் கொடியே
பன்னுற்ற செம்பொருட் பாடல் மலிந்து பரும்புகழால்
மன்னுற்ற வுன்சீர் வழுத்திப் பணியா வளர் வினையேற்
கென்னுற்ற போதினு மின்ப மளித்தில வென்னிதுவே. 10

குன்றா கியபுகழ்க் கொள்கல மேயுன் கொடைபுகழ்ந்து
சென்றா ரளித்த செழும்பொருள் வைப்பைச் சிறியவனும்
நன்றாய் முகந்து நறைநனி யுண்டு நலமுறவுன்
பொன்றாள் வணங்கிப் புகழ்ந்தே னருளப் பொருளெனக்கே.

தேவர் மணிமுடி சூடித் திருநின்றார் சிந்தைகொளும்
மூவ ரலங்கல் புனைந்து திருக்கோவை முத்தணிந்து

காவ லிளங்கோ சிலம்பொலிப் பவாடுங் கண்மணியே
ஆவ துனதரு ளல்லா வடியேற்கிங் கார்துணையே. 12

தொல்காப் பியனெனும் உன்னருந் தோன்றல் துறைபலவும்
பல்காற் பயின்று பழமை பழுத்த பரும்புகழை
யொல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியத்தில்வைத் தோதினனால்
நல்கா யதன்பயன் நான்நனி துய்க்க நறுநுதலே. 13

சிந்தா மணியிருக் கத்திருக் கோவையென் தேனிருக்க
நந்தா வொளிசே ரகம்புற நானூறு நன்கிருக்க
எந்தா லுனதி னியல்தேரா தூற்ற விருவினையேன்
பிந்தா வுனதின் பொருணலந் தோய்மாறு பெய்வளையே. 14

அறியா மையிலுன் னடியிணைப் போற்று தருவினையேன்
சிறியார் செயல்விழைந் தேதிரிந் தேனதைச் சிந்தைதனிற்
குறியா துனதளி யான்பெறத் தந்தருள் கோதிவரும்
நெறியா ருளத்தர் நனியாய் பொருள்செறி நேரிழையே. 15

காணற் கரியவுன் செவ்வியு மின்பமுங் கண்டவன்பர்
பேணத் தகுமுன் புகழ்சிறி யேனும் பெறுவகைநீ
பூணத் தருவது பொற்பல்ல வென்று புறக்கணித்தால்
மாணப் பொலிந்த வருளே யெனையார் வளர்ப்பவரே. 16

கல்லைக் கலமாய்க் கடலைக் கடக்கக் கருதறிவின்
சொல்லிற் கிறைவர் சிவனைத் தொழவரு தூமணியே
யெல்லைப் புரையும் புகழுடை யின்பத் திளங்கொடியே
நல்லை யெனைநீ யுனதடிக் காளாய் நலமருளே. 17

வண்ணீர் தருவையை சூழ்பாண்டி நாட்டில் வளருமுன்சீர்
கண்ணீர் தரநின் றெடுத்துப் புகழாக் கடையவனைத்
தண்ணீர் தருமுன் பொருட்டீங் கடலினிற் றூளவருள்
பண்ணீர் தருவையம் போற்றும் பரும்புகழ்ப் பைங்கொடியே. 18

அருளார் முருகன் பெரிதாய் அகப்பொருள் ஆர்ந்தபெருந்
திருவே யுனதி னரும்புகழ் பாடித்தஞ் சிந்தைநனி
யுருகார் பணியா ருவமையி லுன்னடி யுற்றுநலம்
பருகா ரிருந்தெ னிறந்தென் பரும்பொறை பாரினிற்கே. 19

வாயார வுன்புகழ் வாழ்த்துகின் றேனருள் வண்மைதனிற்
சாயாத செந்தமிழ்த் தாயே யுனதருந் தாளிணைக்கே
ஓயாத வன்பென துள்ளத்தி லூறு மொருதிருநீ
தாயான தன்மையிற் றந்தருள் வாயித் தமியனுக்கே. 20

தெளிவுரைத் தென்றல்

[வேலணைக்கிழார் க. வேந்தனார்]

1

ஒருவன் தன்னிடத்தில் இல்லாத தொன்றை யுள்ளதாக எப்பொழுது நடிக்கத் தொடங்குகின்றானோ அப்பொழுதே யவன் தனது வாழ்க்கைக்குக் கேடு சூழ்கின்றான்.

2

தாய் மொழியில் நிரம்பிய புலமை யடையாது பிறமொழி யைக் கற்றுத் தாய் மொழியை இகழ்பவனுடைய வாழ்க்கை யுள்ளது போல வில்லதாய்க் கெடும். அவனை யறிவுளோர் எட்டுணையும் பொருட்படுத்தார்.

3

பெருங்குடிப் பிறந்த மக்கள் பேரிடர் வந்தெய்தினும் திருந்திய தம் பண்டை நிலையிற் சிறிதுந் திரியார். திரிவாராகில் அஃதொன்றே அவர் பெருங் குடிக்குப் பேரிழுக்காகும். என்னை?

> "குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
> மதிக்கண் மறுப்போ லுயர்ந்து."

என்றாராதலின்.

4

உலையா முயற்சியும் அலையா வுள்ளமும் உயிர்களிடத் தன்பும் உடைய வள்ளியரே உலகிற்றலையாய பேறெய்திச் சாவா வுடம் பெய்தினரென்க.

5

செல்வம் உளகாலத்துச் சேர்ந்தொழுகினாற் போல் அல்லல் உள காலத்தும் அணைந்தொழுகுபவனே உண்மை நண்பனாவான்.

6

பிறரை யொறுத்துத் தாம்வாழ வென்றும் புல்லியர்கள் அறநெறி புணரா மறவோரென்க. இவர்கள் உலகிற் கழுவா யில் வழுக்கொண்டு கலக்கமெய்தி மறுமையில் ஒழியாத நிரயத் துன்ப முறுவரென்பது உண்மை நூற்றுணிவு.

7

பழந்தமிழ் மக்கள் எங்கெங்கே தமது உள்ளத்தை ஈர்க்கின்ற இயற்கையழகு அமைந்துள்ளதோ அங்கெல்லாம் இறைவனின் அருள் நலங்கண்டின்புற்றாரென்க. நக்கீரனார் நிறையொளி ஞாயிற்றை நீடருள் முருகனாகவும் நீலநிறக் கடலை மயிலாகவும் இயற்கையிற் கண்டு இன்பத்திலிருந் தூற்றெடுத்தே திருமுருகாற்றுப்படை யெனும் தீந்தமி ழருட்பா செவியக மெல்லாந் தேனூற்றி யொலித்துப் பாய்ந்து சென்று தெவிட்டாத பேரின்பத் துறையில் வீழ்ந்த தென்றுணர்க.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு."

என்பதே பாட்டின் ஊற்றிடமாகிய இயற்கையழகு.

8

பிறமொழி கலவாத தனித்தமிழ் உரை நடையில் ஊற்றெடுத்துப் பாய்ந்தொழியா வுவகை யூட்டுமின்பம், உணர்ந்தின்புறுவதன்றி உரைக்கலாகா ஒண்மையதாகும். இதற்கெடுத்துக் காட்டாக மறைமலை யடிகளார் ஆக்கிய முல்லைப் பாட்டாராய்ச்சியுரை பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை முதலியவற்றை நோக்குக.

பொன்னாலை நாராயணன் பதிகம்

[நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்]

அருளோங்கு பொன்னாலை அச்சுதன்மே லஞ்சொற்
பொருளோங்கு பாடல் புகலத்—தெருளோங்கு
நம்பிக்கை கொண்டார் நயக்க வருளுதவுந்
தும்பிக்கை கொண்டார் துணை.

ஆராயு முத்தமிழும் அன்பர்செழு நாவினிலே
சீரா யிருந்துரைசெய் தேமொழியே—நேராகப்
பொன்னாலைக் கோவிந்தன் பொற்பதங்கள் போற்றிசெய
என்னாவி லேவீற் றிரு.

பொல்லா மலமயக்கம் போக்குநெறி காட்டவரும்
வல்லாளன் பாதம் வழுத்திஞல்—செல்லாத
தீவினைபோம் ஞானத் திறம்மருவுஞ் செஞ்சொலணி
பாவினையுங் கைகூடும் பார்.

நூல்

சீர்பூத்த மெல்லிதழ்த் தாமரைப் பூவெனச்
செப்புமருள் விழியி-னழகுஞ்
செம்பவழ நடுவிலே முல்லைமலர் பூத்தெனத்
திகழுமிள நகையி—னழகும்
ஏர்பூத்த மரகதக் குன்றைப் பழித்து வளர்
ஈரிரு புயத்தி—னழகும்
இன்பமட மங்கையர்கள் இளமுலைச் சுவடுபெற்
றெழில்கொள்மணி மார்பி—னழகும்
பார்பூத்த திருவயிற் றழகுமணி நூபுரப்
பாததா மரையி—னழகும்
பாவியேன் கண்டருட் பேறடைய
வுவணமேற் பரிவுடன் முன்வருகுவாய்
நார்பூத்த வளமெனப் பொன்னலை யம்பதியுள்
நன்றமர்ந் தருளுமரி ஓம்
நாராய ணுயநம நாராய ணுயநம
நாராய ணுயநமவே. க

பூமலி திருச்சடைப் புண்ணிய னிடத்திற்
பொருந்தியே யுலகுமுயிரும்
பூந்தன்பர் பவவினைகள் காய்ந்திடும் மரகதப்
பொற்கொடிக் கொருமுன் னவா
காமனைப் பெற்றிடுங் கண்ணனே திசைமுகக்
கடவுளைத் தருபன் னவா
கலபமர கதநடன மயிலினெழு மீரா று
கையுடைக் கருணைமுருகன்
மாமனே மலர்மங்கை புவிமங்கை இருவர்கண்
மணியான மண வாளனே
வாசுதே வாதேவ கிக்குமக னேகுலிச
வாசவற் கொருபின் னவா
நாமேவு பாடல்கொண் டருளுவாய்
பொன்னலை நன்றமர்ந் தருளுமரி ஓம்
நாராய ணுயநம நாராய ணுயநம
நாராய ணுயநமவே. உ

பஞ்சவர்க் குத்தூது போனபாதம் நாலு
    பழமறை புகழ்ந்த பாதம்
  பைந்தமிழ்க் கவியோடு சென்றபா தம்மூன்று
    பார்முழு தளந்த பாதம்
மஞ்சுதவழ் மருதினை யுதைத்தபா தஞ்சகட
    வசுரனை வதைத்த பாதம்
  மாவலி முடித்தலை மிதித்தபா தம்வீர
    மாருதி சுமந்த பாதம்
பஞ்சுபடு மெல்லடிப் பாவையொடு கானிற்
    படர்ந்தபா தம்வேந் தெனப்
  பதினான்கு வருடமாய் அரியணை யிருந்துலகு
    பாலித்த பதும பாதம்
நஞ்செருக் கறவருள்செய் பொன்னூலை யம்பதி
    நயந்தருள் வழங்குமரி ஓம்
  நாராய ணாயநம நாராய ணாயநம
    நாராய ணாயநம வே. ௯

கோமேவு நந்தகோ பன்மனையி லெழின்மேவு
    குழவியாய் வந்த செல்வக்
  கோபாலர் மனைதொறும் வெண்ணெய்க் கிரந்தருட்
    கூத்தாடி யாடி யுண்டும்
காமேவு மிந்திரன் கன்மழை தடுத்துமொரு
    கன்றினால் விளவெ றிந்தும்
  காளிங்கன் முடியிலே விகடநட மாடியுங்
    கஞ்சனைக் கொன்ற ருளியும்
ஆமேவு கொன்றையந் தீங்குழற் பண்ணமுதம்
    ஆயர்கள் செவிக் கருளியும்
  அளவிலா வாயிரங் கோடிதிரு விளையாடல்
    ஆடிவரு மாழி முதல்வா
நாமேவு பைந்தமிழ்ப் பாமேவு பொன்னூலை
    நன்றமர்ந் தருளுமரி ஓம்
  நாராய ணாயநம நாராய ணாயநம
    நாராய ணாயநமவே. ௰

ஒன்றாக வையவியு நெய்யுமிட் டுக்கட்டு
    முச்சியின் முச்சி மிளிர
  ஒளிகொண்ட நுதலிலே நவமணிச் சுட்டியுடன்
    உருமேவு திலக மிலக
அன்றே யலர்ந்தசெந் தாமரைச் சோதிவிழி
    யங்கு மிங்கும் புரளவே

ஆரமும் வீரகே யூரமும் மின்னமலர்
அடிகள் தெற்றித்து நின்றே
கொன்றையந் தீங்குழலை யம்பவள வாயினிற்
கொண்டிசைத் தேற வருளும்
கோமளத் திருமேனி யழகிலே வேறுகோ
பாலனே யாசை கொண்டேன்
நன்றாக ஒருவரந் தருகுவாய் பொன்னாலை
நன்றமர்ந் தருளுமரி ஓம்
நாராய ணயநம நாராய ணயநம
நாராய ணயநமவே. ௫

அல்லவைசெய் திட்டபத் தாத்தலை யரக்கனை
யழித்தருள் புரிந்த பெருமாள்
ஆடகனை யொருதூணில் நரசிங்க மாகிவன்
தாருயிர் குடித்த பெருமாள்
தொல்லவையில் வைதசிசு பாலனை முடித்தலை
துடித்திட வறுத்த பெருமாள்
சூதுபுரி கஞ்சனை வதைத்த பெருமா ளெண்ணில்
துட்டரை முடித்த பெருமாள்
கொல்லவரு குவலயா பீடத்தை யுச்சியிற்
குத்தியே கொன்ற பெருமாள்
கூராழி கொண்டவுணர் குழுவினை யழித்துலகு
குறைதபக் காத்தபெருமாள்
நல்லபெரு மாளென்று போற்றவருள் பொன்னாலை
நன்றமர்ந் தருளுமரி ஓம்
நாராய ணயநம நாராய ணயநம
நாராய ணயநமவே. ௬

கஞ்சமலர் வாவியி னிடங்கர்பற் றியமதக்
கடகரியை மீட்க வில்லையோ
கதிர்மணித் தேர்கடவு வலவனா யைவரைக்
காவல் செய்தருள வில்லையோ
அஞ்சியே கோவிந்த காவிந்த வேலையென்
றழுதவட் கருள வில்லையோ
அன்புடைய விடணனை யாளவில்லையோ பிரக
லாதனற் கருள வில்லையோ
கொஞ்சிமுத் தாடிய வசோதைப் பிராட்டியார்
குளிரவருள் புரிய வில்லையோ
கூறுமுனி வாய்மையாற் கல்லான வட்குமுற்
கோலமருள் செய்ய வில்லையோ

நஞ்சஞ் சலங்கடித லருமையோ பொன்னலை
நன்றமர்ந் தருளுமரி ஓம்
நாராய ணாயநம நாராய ணாயநம
நாராய ணாயநமவே. எ

அந்தாம ரைக்கணா நின்னருளை வேண்டுவோர்
ஆற்றரிய நோன்பாற் றியும்
அம்பொற் றிருக்கோயில் வீதிவல மாகவந்
தங்கத்தி னுலுருண்டும்
பைந்தார் நறுந்துளவு சாத்தியும் நின்பெருமை
பாடியுங் கூத்தா டியும்
பசியதென் னம்பிள்ளை பொன்னுட னளித்
துமே காதசி பசித்திருந்தும்
செந்தாதினுற் பசுந் தொட்டிலுங் குழவியுஞ்
செய்துவைத் தும்வேண் டுவார்
தேர்விழாக் காணவரு மேழைக்கு மருள் தரத்
திருவுள்ள மோவறி கிலேன்
நந்தா விளக்கனைய பொன்னலை யம்பதி
நயந்தருள் வழங்குமரி ஓம்
நாராய ணாயநம நாராய ணாயநம
நாராய ணாயநமவே. அ

செம்பொற் சிலம்பு கிண்கிணி கிணுத்திடும்
செந்தா மரைச் சீறடிச்
செய்யமலர் மதிமுகத் தமுதொழுகு குமுதவாய்த்
தேனெழுகு மதுர மழலை
அன்புற்ற கோமளச் செவ்விநிறை செல்வர்தமை
அருளென் றிரந் திரந்துன்
அடியினை பிடித்துவழி படுகின்ற வர்க்கருளு
மையனே முகின் மெய்யனே
துன்புற்ற மிடிபிணி தொலைத்திடுங் கடவுளே
துளவ மணிமணிமார்பனே
தொல்லையிரு வினையுந் துடைத்துயிரை யாள்கின்ற
சோதியே யுனை நம்பினேன்
நம்பிக்கு மொருமகன் நல்கியருள் பொன்னலை
நற்பதி விரும்புமரி ஓம்
நாராய ணாயநம நாராய ணாயநம
நாராய ணாயநமவே. கூ

மாதவா கேசவா மதுசூத னநெடிய
மாலவா குறள் வாமனா

வாசுதேவா முகுந் தாவுவண கேதன
வனமாலை மணி மார்பனே
சீதரா செந்தா மரைக்கண்ணா ஐம்படைத்
தேவ தேவா முகுந்தா
ஸ்ரீ ராம ராமதா மோதரா மீனுமை
செய்ய நரசிங்க வடிவா
பூதரா பதுமநா பாநந்த கோமகன்
புத்திரா கொண்டல் வண்ணா
பூதனை முடிந்திடப் பாலுண்ட வாயனே
பொருவரிய மா மாயனே
நாதவா துன்னும மோதவா பொன்னாலை
நன்றமர்ந் தருளுமரி ஓம்
நாராய ணாயநம நாராய ணாயநம
நாராய ணாயநமவே. ம

தமிழ்த்தாயிடம் அன்பில்லாமை கருதி ஆற்ருது வருந்தல்

[தமிழ் மருத்துவர் வ. ச. ஏகாம்பரம்]

எண்சீர் விருத்தம்

என்னுளத்தே யுணர்வாகி எழுந்தின் பத்தேன்
எனநிரம்பித் ததும்பிஇறைக் கின்ற என்றன்
இன்னுயிராந் தூயதமிழ்த் தாயே தம்மின்
இனியமொழி உயிரினுமேல் என்று இங்கே
உன்பொருட்டுண் ணாவிரதம் உஞற்று கின்ருர்
உறுஞ் சிறைதான் மேவுகின்ருர் உதவுகின்ருர்
நின்பொருட்டால் என்செய்தேன் நெடுமரம் போல்
நிலவுகின்றேன் தமிழனென நேர நின்றேன்.

புதுமலரே மலருநாள் போந்த தென்றே
புகன்றுவிடக் கலந்தமைத்துப் புதுக்கித் தந்த
மதுவருந்தி யவர்பிறகே மயங்கிச் சென்று
வருவதறி யாதவொரு மடையன் போல
இதுநாளில் எச்சிலைக்கே விழைந்து நிற்கும்
ஏக்கற்றுக் கிடந்துழலும் எருமை போல்வேன்
எதுசெய்தேன் நின்றனக்கா இந்த நாளில்
என்னம்மே தமிழனென இயம்ப நின்றேன்.

பண்டையநின் கலைவளங்கள் பரசு நாட்கள்
    பாரினிலே அடுத்ததென்று பரிவு யாங்கள்
கொண்டிருப்ப வஞ்சகர்கள் கொணர்ந்த தூது
    குறுக்கிட்ட தென்றுள்ளம் கொதிப்பு மீறி
அண்டிதுயில் கொள்வாரும் அதிர்ந் தெழுந்தே
    ஆர்க்கின்றார் செவிடனென அம்மா யானிங்
கென்னுது சும்மாஇ ருக்கின் றேன்நல்
    லியல்பில்லேன் தமிழனென இருக்கின்றேனே.

யான்முளைத்த போதெனுட னியங்கி நின்று
    யான்வளர என்னுள்ளே தழைத்து ஓங்கி
தேன்முளைத்த தாமென்ன தினமி னிக்கும்
    செந்தமிழாம் என்னரிய தெய்வத் தாயே
ஏன்முளைத்தேன் தமிழ்த்தொண்ட ருன்பொ ருட்டால்
    எங்கெங்கும் தம்பணியை இயைக்கக் கண்டும்
கான்முளைத்த கட்டையென காண நின்றேன்
    ஈருத்தறியா கண்மூடிக் கழுதை யொத்தேன்.

உடலுருகி உணர்வுருகி உள்ள மெல்லாம்
    உருகியொரு திரளாகிக் குழம்ப இங்கே
அடுத்தடுத்து உயிர்க்குறுதி இன்ப மீயும்
    அருமைதிகழ் கின்றதமிழ் அன்னாய் நின்சீர்
எடுத்தெடுத்து வாயினிக்கப் பரவு கின்றார்
    எழுந்திருங்கள் உறங்காதீர் என்கின்றார் யான்
மடுத்துமதை வாளாஇங் கிருக்கின்றேன் நன்
    மதியில்லேன் தமிழனென மதிக்க நின்றேன்

இன்றேநீ சென்றுவெற்றி யுடனே மீள்க
    இன்றேல்நின் உயிர்விடுத்து மாள்க அங்கே
என்றேதன் மகற்குரைத்துப் போர்க்க னுப்பும்
    எண்ணரிய தாய்மாரைப் பெற்று வந்த
என்னுயிராந் தமிழன்னாய் நின்பொருட்டா
    என்செய்தேன் ஒருசிறிய இடர்க்கு அஞ்சி
மன்னுபுதர் அதனுள்ளே ஒளித்துக் கொள்வேன்
    மாநிலத்தே தமிழனென வழங்க நின்றேன்.

என்சிறிய குடிலகத்தே அரும்பிப் பூத்து
    இன்காயாய்க் கனிந்துசுவை ஈதலான
என்னரிய வாழ்வினிலே இனித்துத் தோன்றும்
    இனியதமிழ் எனுமன்னே எனக்கே நானே

இன்னல்வரும் புதுப்பேயின் மோகத் தாலென்
றெவ்வெவரும் எடுத்துரைப்பக் கேட்டு மந்தோ
இன்றுணர்வு பெற்றுமுனே மறந்தே வாளா
இருக்கின்றேன் தமிழனென இருக்கின் றேனே.

உளங்குளிர்ந்து உயிர்குளிர்ந்து உவகை மேவ
உவட்டாதே இனிக்குமடை திறந்தே யோடும்
களங்கமிலா வெள்ளமெனப் பெருக்கெ டுத்தென்
கடத்து ளெலாம் பாய்கின்ற ஒரணங்காய்
விளங்கலுறும் செந்தமிழாம் என்னம்மே நின்
விரைமலர்த்தாள் போற்றிமுடி சூடா மேயான்
களிபடு குரங்குதனைத் தலைமேல் வைத்துக்
காக்கின்றேன் தமிழனெனக் காண நின்றேன்.

வாதுமையும் கற்கண்டும் பாலும் தேனும்
பலாப்பழமும் மாகதலிப் பழமும் இக்கின்
தாதுநறு முந்திரியோ டேலம் சேர்த்து
சாலஆ நெய்விட்டே சமைத்த ஒன்றுண்
டோதுசுவை யினுமேலாய் இனித்தல் செய்யும்
உறுந்தமிழாம் என்னம்மே இட்ட எச்சிற்
கோதுணுங்கிழ்ப் பன்றியெனக் குமைகின் றேன் நின்
குணம்நாடேன் தமிழனெனக் குலவு கின்றேன்.

தென்னன்முத லாமன்னர் சீர ளிப்பத்
திகழ்சங்கத் திருக்கையிலே தானு மோங்கி
இன்கவிவா ணர்தங்கள் வாயி லூற்றாய்
எழுந்தைந்து திணைநாடு களிலே மல்கி
மன்னியருள் ஆட்சியினல் மகிழ்வு தந்த
மாகருணைச் செந்தமிழாம் தெய்வத் தாயே
என்னபணி ஆற்றினனுன் இழுதை நெஞ்சேன்
ஏன்பிறந்தேன் தமிழனென இங்கு யானே.

செந்தமிழோம்பல்

[போன். சுப்பிரமணியன், அரசர் கல்லூரி, திருவையாறு.]

தமிழ் என்றால் வடவேங்கடந் தென் குமரியிடை இப்பொழுது வழங்கும் மொழி; பண்டைக்காலத்து இமயமலை வரை வழங்கிய ஒப்பற்ற தனி மொழி. வடமொழியாளர்கள் தமிழ் என்ற சொல் திரவிடம் என்ற சொல்லின் திரிபு என்று கூறி அதற்குப் பல காரணங்கள் காட்டுவார்கள். அன்னாரெல்லாங் கூறுவது கூறுக. தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளைக் குறிக்கும் ஒப்பற்ற தனிச்சொல். தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருள் தரும் என்பதனை, சிந்தாமணி, சுரமஞ்சரியாரிலம்பகத்தி லுள்ள,

"இன்தமிழ் இயற்கை இன்பம்"

என்ற தொடரால் அறியலாம்.

ஐரோப்பியர்கள் எல்லாம் இம்மொழிக்குத் "தமுலியன்" அல்லது "தல் முலிக்" என்று பெயர் வழங்கி யுள்ளார்கள். கால்டுவெல் "திராவிடமொழி" என்று இதற்குப் பெயர் வழங்கியுள்ளார். மேலும், தமிழ்மொழி ஏனைய மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு, கூர்க்கு, தூத, கோடா, கோண்டா, கோண்டு, ஒராயோன், இராஜ்மஹால் முதலிய மொழிகளைப் பார்க்கினும் பழமையும் திருத்தமும் பெற்றிருத்தலோடு, இயற்சொற்களையும், மிகப் பண்டைய வழக்கங்களையும் தலைமையாகக் கொண்டுள்ளது என்றுங் கூறியுள்ளார்.

பண்டு தமிழ்மொழி செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற இரண்டு பிரிவையுடைத்தாயிருந்தது. இவ்விரு பிரிவையும் முறையே, இலக்கியமொழி, பேச்சுமொழி என்னலாம். இக்காலத்தில் மேற்கூறிய இரு பிரிவுகளோடு வெண்டமிழ், கருந்தமிழ், தஞ்சைத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், மலையாளத் தமிழ், சென்னப்பட்டனத் தமிழ், என்று பலவாறாகப் பிரிக்கலாம். ஏனெனில் ஒவ்வோர் ஊருக்கும் நேரில் சென்று பார்த்தால் வேறுபாடு உண்டென்பது யாவருக்கும் தெற்றென விளங்கும்.

இனி, தமிழின் சிறப்பு நிலையை ஒருவாறு நோக்குவோம். பண்டு தமிழ் எத்தகைய சிறப்புற்றிருந்தது? "கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து" ஆராய்ந்த மொழியன்றோ இது! "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்"

என்று ஆழ்வார்களால் சிறப்பிக்கப்பட்ட மொழி எது எனில் தமிழ் என்று தானே கிடைக்கும். மேலும், ஆன்றோர்கள் பலரும், அறிஞர்கள் பலரும் வாழ்த்தியுள்ள மொழி நஞ்செந் தமிழ் மொழிதானே!

இத்தகைய சிறப்பு வாய்ந்த நந்தாய் மொழி இன்று எந் நிலையில் உள்ளது? எடுப்பார் கைப்பிள்ளையா யன்றோ இருக் கின்றது. காரணம் என்ன? தமிழைச் சிறப்படைந்த மொழி யென்று ஒவ்வொரு தமிழ் மகனும் கருதாததே யன்றோ! நந் தமிழன்னை இது பொழுது சிறையிலன்றோ அடைபட்டிருக் கின்றாள்! நந்தமிழ் நாட்டில் தமிழ்மொழியின் ஆக்கங் கருதி, ஒருவர், இருவர் தொண்டு செய்ய முன்வந்தால் அன்னவர் கட்கு ஆதரவளிக்குந் தமிழ்மகன் ஒருவனும் இல்லையே! மேலும், தமிழ் மொழியைத் தன்னுயிர்போல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ்மகனின் கடமை அல்லவா? நிற்க,

இத்தகைய சீர்கேடடைந்த தமிழ் மொழி மற்றைய மொழிகளைப் போல் முன்னேறிச் சிறப்புற வேண்டுமானால் ஒவ்வொரு தமிழ் மகனும் என்ன செய்ய வேண்டும்?

> " சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
> தமிழ்முழக்கஞ் செய்தல் வேண்டும் "

என்ற பாரதியாரின் பொன் மொழியின்படி கிராமங்கிராம மாகத், தெருத் தெருவாகச் சென்று தமிழ் முழக்கஞ் செய்தல் வேண்டும். கல்வி யில்லாதவர்களைக் கற்குமாறு தூண்டல் வேண்டும். இலவசக் கட்டாயக் கல்விக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ் நாட்டில் குறைந்தது நூற்றுக்கு ஐம்பதின்ம ராவது கல்வியுடையவர்களாக ஆக்குதல்வேண்டும். மேற்கூறிய வெல்லாம், செல்வந்தர்களும், அரசாங்கத்தினரும் தாராள மாகப் பொருளுதவி செய்தால்தான் முடிவுபெறும்.

இது நிற்க, தமிழ்மொழி முன்னேற்ற மடைந்து சீரும், சிறப்புமுற விளங்கவேண்டுமானால், தமிழ்படித்த புலவர்களை நன்கு ஆதரிக்கவேண்டும். தமிழ்படித்த புலவர்கள் வறுமை யின்றி மகிழ்வுடன் இருந்தால் தானே, மொழி மேலும், மேலும் முன்னேற்றமடையும். தமிழ்படித்த புலவனொருவன் நாள் தோறுங் காலையில் உறங்கி விழித்தவுடன், இன்றைய செல விற்கு நாம் என்செய்வது என்று ஏங்கிய வண்ணம் இருந்தால், அப்புலவன் தாய்மொழிக்குத் தொண்டு செய்வது எங்கே? இக்காலத்துப் பண்டிதர்களின் நிலையைச் சிறிது நோக்குவோம். படிக்கச்செல்லும் தமிழனே மிகக் குறைவு. அவ்வாறு படிக்கச்

சென்றாலும் தாய்தந்தையர் மனது ஒருப்படுவதில்லை. யாவரும் மனமொத்தால் பொருள் வசதி இருப்பதில்லை. "வித்தைக்குச் சத்துரு விசனம் தரித்திரம்" என்ற பழமொழிப்படி, ஏதாவது சில பல இடையூறுகள் படிப்பவனுக்கு இருந்தே தீரும். இவற்றுள் எல்லாம் அகப்படாது, பல இன்னல்கட்குட்பட்டு ஒருவன் படித்துவந்தால் அவனுக்கு வேலை கிடைப்பதில்லை. கற்றுத் தேர்ந்த தமிழ் வித்துவான்கள் ஒவ்வொருவரும் வேலைக்கு அலைந்து திரியும் அந்தப் பரிதாபகரமான நிலையைப் பார்த்தால், பார்ப்பவர்கள் தங்கள் மனமுருகி அழத்தான் வேண்டும்.

இத்தகைய இன்னல்களுளெல்லாம் படிக்கும் ஒருவன் அகப்பட்டால் அவன் செந்தமிழன்னையை ஓம்புவதெக்காலம்! இப்பொழுதே தமிழ் படித்த புலவர்கள் இந்த நிலையில் இருந்தால், இனி வருங்கால நிலை சொல்லாமலே விளங்கும். ஆங்கிலத்தில் பி. ஏ., தமிழ் ஆனர்ஸ் பட்டம் பெற்றவர்கள் கல்லூரிகளில் தமிழாசிரியராக இருக்கத் தகுதியுடையவர்கள் என்று அரசாங்கச் சட்டமும் வந்துளது. இனி, தனித் தமிழ் ஆசிரியர்கட்கு நாட்டில் என்ன வேலை? ஒன்றிரண்டிருக்கும் தனித் தமிழ்க் கல்லூரிகள்தானும் எதற்கு? வாழ்நாள் முழுதும் தமிழையே படித்து நன்கு ஆராய்ந்த ஒருவனுக்கும், இரண்டு மூன்று ஆண்டு தமிழை விருப்பப் பாடமாக எடுத்துப் படித்த ஒருவனுக்கும் வேறுபாடு இல்லையா? ஊதியத்தையும் நோக்குங்கள்! ஆங்கிலம் பயின்ற ஆசிரியர்கட்கு நூறு ரூபாய் என்றால், அதே நிலையில் வைத்து எண்ணக்கூடிய தமிழ் வித்வான்கட்கு முப்பது ரூபாய் தானே ஊதியம்! ஊதியத்திலும் இத்தகைய வேறுபாடு இருந்தால் தமிழாசிரியர்கள் கடைத்தேறுவது எக்காலம்! தமிழ் மொழி முன்னேறுவதெக்காலம்!

இந்தி

ராஜமந்திரி, 7—8—38.

5-8-38 வெள்ளிக்கிழமை அரசாங்க ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை மாணவ ஆசிரியர் சங்கத்தில் தலைமைபூண்ட ஆந்திர பல்கலைக் கழகத் தலைவர் டாக்டர் C. R. ரெட்டி அவர்கள் பேசியது:

இன்றைய நிலைமையில் மாணவர்கள் ஐரோப்பிய மொழிகளாகிய பிரஞ்சு ஜெர்மன் அல்லது ஆங்கிலமாவது தெரிந்திருக்க வேண்டியது முதன்மையாகும்.

இந்தியை நான் மைசூர்ப் பல்கலைக் கழகத்தலைவராயிருந்தபோது 1918-ல் விருப்பப் பாடமாக வைத்தேன். 1926-ல் ஆந்திர பல்கலை கழகத்திலும் இண்டர்மீடியட் வகுப்புக்கு விருப்பப் பாடமாக

வைத்தேன். இவ்வாண்டு முதல் பி. ஏ. வகுப்புக்கு விருப்பப் பாடமாக வைத்திருக்கிறேன். ஆந்திர நாட்டு நாட்டாண்மைக் கழகக் கல்லூரிகளில் இந்தி விருப்பப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

வேண்டுமானால் இந்தியைப் பள்ளி இறுதி வகுப்புக்கும் இண்டர் மீடியட் வகுப்புக்கும் விருப்பப்பாடமாக வைக்கலாம். கீழ் வகுப்புகளில் கட்டாயபாடமாக வைத்தால் ஒரு பயனும் அடைய முடியாது. அந்தப் படிப்பு நீடித்திருக்காது.

கீதாஞ்சலி

[திரு. க. ப. சந்தோஷம் B,A., L.T.]

9

உனது தோள்கள்மேலே உன்னையே சுமந்து செல்ல முயலும் மடமைதான் என்னே! உனது வாசலிலேயே வந்து இரந்து நிற்கும் உன் மிடி தான் என்னே!

எல்லாவற்றையுந் தாங்க வல்லவனது கைகளில் உனது பாரச்சுமையைப் போட்டுவிடு. கழிவிரக்கங் கொண்டு பின் திரும்பிப் பாராயாக.

உனது ஆசையின் மூச்சு எந்த விளக்கிற் படுகிறதோ அவ்விளக்கின் ஒளியை அது உடனே அவித்துப் போடுகிறது. அது தூய்மையற்றது—அழுக்குள்ள அதன் கைகள் மூலமாய் உனக்கு வரும் நன்மைகளைப் பெறவேண்டாம். களங்கமற்ற அன்பு தருவதெதுவோ அதையே ஏற்றுக் கொள்.

10

உனது திருவடிகள் தங்கும் பீடம் இங்கே இருக்கின்றது; இங்கே பரம ஏழைகளும், எல்லோரினுந் தாழ்ந்தோரும், கைவிடப்பட்டோரும் வாழ்கின்றனர்.

உன்முன் வந்து நான் என் தலையைத் தாழ்த்த முயலுங்கால், பரம ஏழைகளும், எல்லோரினும் தாழ்ந்தோரும், கைவிடப் பட்டோருமாகிய இவரினிடையே மிகக் கீழேயுள்ள உன் திருவடி வரையிற் செல்லும் அந்தணைப் பணிவு என் வணக்கத்துக் கில்லை.

பரம ஏழைகளும், எல்லோரினுந் தாழ்ந்தோரும் கைவிடப் பட்டோரு மிருக்கு மிடத்தில் எளியவர்களி னுடையணிந்து நீ திரியுமிடத்தைப் பெருமை படைத்த உள்ளம் வந் தறுகலா காது.

பரம ஏழைகளும், எல்லோரினுந் தாழ்ந்தோரும், கைவிடப்பட்டோருமாகிய இவர்களினடுவில் நண்பரல்லாதவரோடு கேண்மை பாராட்டி நீயிருக்குமிடத்திற்கு வழியை என்னுள்ளம் காணுமாறில்லை.

11

பாராயணம் செய்வதையும், பாடுவதையும், ஜபிப்பதையும் விட்டுவிடு. கதவுகள் பூட்டப்பட்டிருப்பதால் இருள் நிறைந்து தனிமை மிகுந்த இக்கோவிலின் மூலையில் யாரைத் தொழுகின்றாய்? கண்களைத்திறந்து நீ வணங்குந் தெய்வம் உன் முன் இல்லை என்பதைக் கண்டுகொள்.

கரட்டு நிலத்தை உழுது பயிர்செய்யுந் தொழிலாளியினருகிலும், கற்களை யுடைத்துப் பாதையைச் செவ்வை செய்கின்றவன் உழைக்குமிடத்திலும் அவன் (கடவுள்) இருக்கின்றான். வெயிலிற் காய்ந்தும், மழையில் நனைந்தும் அவர்களோடு அவனிருக்கின்றான். அவனுடைய ஆடையிற் புழுதி படிந்திருக்கின்றது. தூயதென்று நீ போற்றுகின்ற உன்னுடைய வணக்க உடையை (மடியை) நீ கழற்றி எறிந்துவிட்டு, அவனைப்போல் புழுதிநிலத்திற்கு இறங்கிவா.

'முக்தி, முக்தி' என்கின்றாயன்றோ? முக்தியை எங்கே தேடிக்காணலாம்? நமதாண்டவன் தான் படைத்தவற்றின் பந்தத்தைத் தானே மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றான்; நம்மெல்லோருடனும் அவன் எக்காலத்தும் இணையுண்டு இருக்கின்றான்.

உனது தியானத்தைவிட்டு எழுந்துவா; மலர்கொண்டு தொழுவதையும் தூபங் காட்டுவதையும் சிறிது அகற்றி வை. உனது ஆடைகள் கிழிந்து கறைப்பட்டுப் போவதால் யாது குற்றம் நேர்ந்துவிடும்? அவனை வந்து பார்த்து, உழைப்பிலும் நெற்றியின் வேர்வையிலும் அவனோடு ஒன்றுபட்டு நில்.

12

நான் நீண்டகாலப் பயணம் போக வேண்டியதாயிருக்கிறது; தூரமும் நெடுந்தூரம்.

முதலிலே தோன்றிய ஒளியாகிய தேரிலே யான் வெளி வந்தேன். எண்ணிறந்த உலகங்களூடே என் வழியைத் தொடர்ந்து சென்று விண்மீன்கள் பலவற்றிலும், கோள்களிலும் அடையாளம் விட்டுவந்தேன். எல்லாவற்றினுந் தூரமான

வழியே உனக்கு அண்மையிற் செல்லும்வழி. ஓர் இராகத்தின் மிகமிக எளிய தன்மையை விளக்க வல்லதான பயிற்சியே எல்லாவற்றினும் சிக்கல் நிறைந்த பயிற்சியாகும்.

வீட்டைவிட்டுப் பிரயாணம் போனவன் திரும்பி வருங் கால், அயலார் அகத்தில் தட்டிப்பார்த்துத் தன் வீட்டையடைய வேண்டியதாயிருக்கிறது. இங்ஙனமே, இறுதியில் எல்லாவற் றிற்கும் உள்ளிருக்குங் கோவிலை யடைவதற்கு வெளியுலகங்கள் பலவற்றினுந் திரியவேண்டியதாயிருக்கிறது.

என்கண்கள் வெகுதூரந் திரிந்தலைந்த பின்னரே, நானவை களை மூடி, "நீ இங்கே யிருக்கின்றாய்" யென்றேன்.

'ஆ, எங்கே', என்ற கேள்வியும் அழுகையும் கண்ணீர் பெருகும் பல்லாயிரம் ஆறுகளாய் உருகி, "நானிருக்கின்றேன்" என்ற உறுதிமுழங்கும் வெள்ளமாய் உலகத்தை நிரப்புகின்றன.

13

நான் பாடவேண்டுமென்று வந்த பாட்டு இன்றளவும் பாடப்படவில்லை.

எனது இசைக்கருவியின் நரம்புகளை முறுக்குவதிலும் தளர்த்துவதிலும் என் வாழ்நாளைக் கழித்துவிட்டேன்.

தாளம் ஒத்துவரவில்லை; சொற்கள் சரியாய் அமையவில்லை. விருப்பத்தாலாகிய ஏக்கம் மாத்திரம் உள்ளத்திலிருக்கின்றது.

மொட்டு மலரவில்லை. காற்று மாத்திரம் பெருமூச்சுடன் அருகில் வீசி விரைந்து போகிறது.

நான் அவனது முகத்தைப் பார்த்ததில்லை. அவனுடைய குரலை நான் கேட்டதுமில்லை; என்னுடைய வீட்டின் முன்னே அவனது சிரடி செல்லு மோசையை மாத்திரங் கேட்டிருக்கின் றேன்.

அவனுள்ளே வந்து அமரும்பொருட்டு ஆசனம் அமைப் பதிலேயே பகற்பொழுதெல்லாம் கழிந்துவிட்டது; வீட்டில் விளக் கேற்றப்படாததால் அவனை உள்ளே வருமாறு நானழைப்ப தெங்ஙனம்?

அவனைக் காண்பேனென்ற நம்பிக்கையால் உயிர் வாழ் கின்றேன். அதற்கு இன்னும் நேரம் வரவில்லை.

14

எனது ஆசைகள் பல. எனது அழுகை இரங்கத் தக்கதாயிருக்கிறது. ஆனால், நான் கேட்பவற்றைக் கண்டிப்பாய் மறுத்து என்னை நீ உய்வித்தாய்; இங்ஙனம், நீ காட்டிய பேரிரக்கம் என் வாழ்க்கையை ஊடுருவிச்சென்றிருக்கின்றது.

நான் கேளாமலே நீ எனக்களித்த பெரிய நன்மைகளாகிய இந்த விண், ஒளி, உடல், உயிர், மனம் ஆகிய இவற்றுக்கு நாள்தோறும் நான் தகுதியுடையேனாகும் வண்ணம், அளவு கடந்த ஆசையினால் வருந் தீதிலிருந்து என்னைக் காத்தாய்.

நான் தளர்ச்சியுற்றுச் சும்மாவிருக்கும் நேரமுமுண்டு விழித்தெழுந்து நான் சேரவேண்டிய விடத்தை நாடி விரையும் நேரமுமுண்டு. ஆனால், சற்றும் இரக்கமின்றி நீ ஒளித்துக் கொள்கின்றாய்.

என்னை அடிக்கடி தள்ளிவிடுவதனாலும், குறிப்பில்லாத உறுதியற்ற ஆசைகளின் மோசத்திலிருந்து என்னை விலக்குவதனாலும், உன்னால் நான் அங்கீகரிக்கப் படுவதற்கு ஒவ்வொரு நாளும் என்னைத் தகுதியுடையவனாக்குகின்றாய்.

15

உன்முன் பாடுவதற்கு நான் இங்கே யிருக்கின்றேன். உனது இந்த மன்றத்துள் ஒரு மூலையில் எனக்கு இடங்கிடைத்தது. உன்னுடையதான இவ்வுலகத்தில் செய்வதற்கு வேலையொன்று மெனக்கில்லை. பயனற்ற எனது வாழ்க்கை, இலக்கற்ற இராகங்களிற்றான் வெளிவரக்கூடும்.

நள்ளிரவின் இருண்ட கோவிலில் அமைதியோடு உன்னை வணங்கும் நேரம் வரும்பொழுது, எனதையனே! நான் உன்முன்னின்று பாடக்கட்டளை தருக.

காலைப்பொழுதின் காற்றில், பொன்யாழ் இசைகூட்டப் படுகையில், நான் உன்முன் வந்து நிற்க உத்தரவு பெறும் பாக்கியத்தை எனக்குத் தருக.

16

இவ்வுலகத்தின் திருவிழாவிற்கு வர அழைப்பு எனக்கு வந்தது. அதனால் என்வாழ்க்கை பாக்கியமுடையதாயிற்று. என் கண்கள் கண்டன, என் காதுகள் கேட்டன.

இத்திருவிழாவிலே எனது இசைக்கருவியை வாசிப்பது என் கடமையாயிற்று. நானும் என்னுற் கூடியதைச் செய்தேன். இப்பொழுது நான் உள்ளே சென்று உனது திருமுகத்தைப் பார்த்து அமைதியாய் என் வணக்கத்தை உனக்குச் செலுத்த நேரமாயிற்ருே? என்று உன்னைக் கேட்கிறேன்.

17

அவனுடைய கரங்களிற் போயடைவதற்குக் காதல் தோன்றுமட்டும் நான் காத்துக்கொண்டிருக்கிறேன்; காலங் கடந்துவிட்டதற்கும் பலவற்றை நான் செய்யாமல் விட்டதற்குங் காரணமதுவே. அவர்கள் தங்கள் சட்டங்களுடனும் வழக்கங்களுடனும் வந்து என்னை இறுகக் கட்டப் பார்க்கிருர்கள். ஆனுல் அவைகளினின்றும் நான் என்றும் விலகி, அவனுடைய கரங்களிற் போயடைவதற்குக் காதல் தோன்றும் வரையிற் காத்துக்கொண்டிருக்கிறேன். ஜனங்கள் வந்து நான் ஒன்றையுங் கவனிப்பதில்லை என்று சொல்கின்ருர்கள்; அவர்கள் குறைகூறுவது சரி என்பதில்லயமின்று.

சந்தை நாள் முடிந்து போயிற்று, உழைப்போருடைய வேலையெல்லாம் ஆகிவிட்டது. என்னைக் கூப்பிட வந்தவர்கள் அதன் பயனின்மை கண்டு சிற்றத்துடன் போய்விட்டார்கள். அவனுடைய கரங்களிற் போயடைவதற்குக் காதல்வரும் வரையில் நான் காத்துக்கொண்டிருக்கிறேன்.

18

மேகங்கள் திரண்டுவந்து இருட்டாகிறது. காதலா! நான் தனியே வாயிலுக்கு வெளியே நின்று காத்திருக்கும்படி என் செய்கிருய்?

வேலையதிகமான மத்தியான நேரத்திலே, நான் மற்ற மக்களிடையே இருக்கின்றேன். ஆனுல், தனிமைமிகுந்த இருண்ட நாளில் உன்னையே நான் எதிர்பார்க்கின்றேன்.

உன் முகத்தை எனக்குக் காட்டாயாகில், என்னை முற்றும் புறக்கணித்து விடுவாயாகில், மழைபொழியும் இந்த நீண்ட நேரத்தைக் கழிக்கும் வகையை நானறியேன்.

நெடுந்தூரத்திற்கப்பால் ஆகாயம் இருண்டு தோன்றுவதை நான் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். ஓய்வின்றி வீசுகின்ற காற்றுடனே எனதுள்ளம் கதறித் திரிகின்றது.

(தொடரும்)

புரவலர் புகழும் பாவலர் பண்பும்

[திரு. நா. சிவபாதசுந்தரம், தோல்புரம்.]

முன்னுரை.

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடு"

என்றாற்போல அறிஞர்களாற் புகழப் பெற்றது நம்தமிழகம். தொன்னலம் வாய்ந்த இத்தமிழகத்தைப் பைந்தமிழின் தேங்கு சுவையறிந்த புரவலர்கள் ஆண்டுவந்தார்கள். இதனால் பைந் தமிழ்ப் பாவையானவள் நறுமணம் வீசி வளமுற்றுத் திகழ்ந் தாள். ஆனால் தண்டமிழணங்கின் நல்லருள் மிகப் பெற்றுக் கண்ணியம் வாய்ந்த பாவலர்கள் மிடியின் வாய்ப்பட்டு வருந் தினர். இவர்களை அருந்தமிழ் அறிந்த புரவலர்கள் போற்றி ஆதரித்தார்கள். இப்புரவலர்கள் தம்மிடம் இல்லை என்று, வந்தாருக்கு இல்லையெனாது, இனி அவர்களுக்கு வறுமையே இல்லை என்று கொடுக்கும் வள்ளன்மை வாய்ந்தோராய் விளங்கினார்கள். இம்மட்டோ! தமிழ்மொழியின்பால் வைத்த தலையாய அன்பால் அம்மொழியின் ஆழம் கண்ட அரும்புலவரைத் தம் உயிரினும் அன்பாய்ப் போற்றினார்கள். இத்துடனா! தம் உயிரையும் விடுத்தார்கள். புலவர்களைக் காணுந்தோறும் தாயைக் கண்ட சேயைப்போல பரவசம் எய்தினார்கள். இவ்வுண்மையைப் பின்வரும் சிறு கதைகளால் இனிது உணரலாம்.

கோப்பெருஞ் சோழனும், ஆந்தையாரும்

சோழ நாட்டை ஆண்ட கோப்பெருஞ்சோழன் புலவர் பாடும் புகழமைந்தவனாய் அறவோர் போற்றும் அற நெறி வழுவாதவனாய் ஆன்றோர் புகழும் அன்பு வாய்ந்தவனாய் விளங்கினான். இப்புலவலரின் புகழை அறிந்த புலவரான பொத்தியார்,

"பாடுநர்க்கீத்த பல்புகழன்னே
ஆடுநர்க்கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோலன்னே
திறவோர் புகழ்ந்த திண் அன்பினனே"

என்று இவனைப் புகழ்ந்தார்.

அக்காலத்தில் பாண்டிய நாட்டில் அமைந்த பிசிர் என்னும் சிற்றூரில் ஆந்தையார் என்னும் நாமம் சூடிய ஒரு புலவர் விளங்கினர். இவர் பிசிர் ஊரில் வாழ்ந்ததால் பிசிராந்தையார் என்று தமிழ்நாடு புகழ்ந்தது. இவரும் சோழனும் உடலும் உயிரும் போல் வாழ்ந்தார்கள். அரசன் தன்பால் வைத்த அன்பின் திறலை ஆகாயவழியே விரைந்து சென்ற ஒரு அன்னத்தை நோக்கிக் கூறும் அழகிய மொழி யொல் அறியலாம். அன்னத்தை நோக்கிய ஆந்தையார்,

"அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர் குவையாயின் இடையது
சோழ நன்னாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்(கு)எம்
பெருங் கோக்கிள்ளி கேட்க, 'இரும் பிசிர்
ஆந்தையின் அடியுறை' எனினே, மாண்டநின்
இன்புறு பேடை அணியத்தன்
அன்புறு நன்கலன் நல்குவன் நினக்கே"

என்று நல்லுரை கூறி மகிழ்ந்தார்.

அன்னச் சேவலே! அன்னச் சேவலே! நீ தென்குமரி யாற்றின் துறையில் அயிரை மேய்ந்து வடமலையில் உள்ள உன் மனையை நோக்கிச் செல்லுகின்றாயாயின் ஒன்று சொல்லு வேன் கேள். நீ செல்லும் வழியில் சோழ நன்னாடு அமைந் திருக்கின்றது. அந்நாட்டின் தலை நகரமாகிய கோழியென்னும் உறையூரில் உயர்ந்த நிலையையுடைய மாடத்தில் சோழ மன்னன் வாழ்கின்றான். அங்கு இறங்கி வாயில் காப் போனிடம் ஒன்றும் பேசாது நேராக மாளிகையின் உள்ளே சென்றால் கோப்பெருஞ் சோழன் என்னும் என் கோவைக் காண்பாய். அம்மன்னன் முன்னின்று "ஐயனே! நான் பிசிர் என்னும் ஊரில் உள்ள ஆந்தையின் அடியுறை" என்று சொல்லுவாயின் அப்புரவலன் நின் மனைவி அணிந்து மகிழத்தக்க அழகிய அணிகலனை உனக்கு உவந்து அளிப்பான் என்று ஆந்தையார் அன்னத்தை நோக்கிக் கூறும் மொழி களால் புரவலரின் புகழ் நன்கு விளங்கும்.

இம் மட்டா! இம்மன்னன் காடு அடைந்து தவம் செய் தான். இதை ஆந்தையார் கேள்விப்பட்டுக் காட்டை அடைந் தார். அங்கு அரசன் ஆவி துறந்தான் என்பதை அறிந்தார்; அந்நிலையே அன்பன் பிரிவாற்றாது தாமும் உயிர் துறந்தார். ஆ; என்னே! பாவலரின் பண்பு! புரவலன் நாடு துறந்த செய்

தியைக் கேட்டுத் தாமும் விடு துறந்து, நண்பன் ஆவி நீத்ததை அறிந்து தாமும் ஆவி நீத்த ஆந்தையின் பெருமை சொல்லவும் வேண்டுமோ? அன்னாரின் பண்பைப் பொத்தியார்,

"நினைக்கும் காலை மருட்கை யுடைத்தே:
இசைமரபாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்;
வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழுதன்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே."

என்று போற்றிப் புகழ்ந்தார்.

பெருஞ்சேரல் இரும்பொறையும் மோசிகீரனாரும்

சேரநாட்டை ஆண்ட 'பெருஞ்சேரல் இரும்பொறை' என்னும் அரசன் ஆண்மையினும் வண்மையினும் ஒப்பற்று விளங்கினான். இப்புரவலன் புகழை,

"பல்வேல் தானை அதிக மானொடு,
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசும் குடையும் கவினும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப் பறுத்துத்
தகடூர் எறிந்த நொச்சிதந்து எய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை."

என்று பைந்தமிழ் நூல்கள் நுவல்கின்றன.

இத்தகைய புகழ் வாய்ந்த சேரமானது கொடைத்திறம் அறிந்த மோசிகீரனார் என்னும் முது தமிழ்ப் புலவர் தம் வறுமை நோய் தீர்க்குமாறு மன்னன் மாளிகையை நோக்கிச் சென்றார். அப்போது மன்னன் நீர் விழாவைக்காண விழைந்து வெளியே போயிருந்தான். ஆயினும் புலவர் உள்ளே சென்று மாளிகையின் அமைப்பைப் பார்த்தார். அப்போது அகமும் களித்தார். மந்த மாருதமும் மெல்லெனத் தவழ்ந்தது. பசியால் நலிந்து வெய்யிலால் உலர்ந்து நடையால் தளர்ந்த புலவர்பெருமான் இளைப்பாறும் பொருட்டு அம் மாளிகையின் ஓர் அறையில் உள்ள மஞ்சத்தில் மெல்லெனச் சார்ந்தார். அப்போது அன்னார் கண் துயின்றார்.

இவ்வாறு செம்மையற்ற அங்கியுடுத்த செந்தமிழ்ப் புலவர் செம்மையாய் உறங்குகையில் அரசனும் விழாமுடித்து மஞ்சத் தருகே சென்றான். அங்கு பழுத்த மேனியும் நரைத்த சடையும் தளர்ந்த கண்ணுமுடைய பெரியாரைக் கண்டான்,

அவரது வதன அழகைக் கண்டு நாமகளின் நல்லருள் பெற்ற நல்லிசைப் புலவர் என அறிந்தான். ஆயினும் அவரது நடையுடை பாவனையால் பூமகளால் புறக்கணிக்கப்பெற்ற புலவர் எனத் தெளிந்தான். பின் அவருக்குப் பணி செய்ய எண்ணி விசிறி எடுத்து விசிறினான்.

இவ்வாறிருக்கையில் கவிஞரும் கண்விழித்தார். தான் மஞ்சத்தில் இருப்பதையும் காவலன் தனக்குக் கவரி வீசுவதையும் கண்டு மனம் பயந்தார். இதைக்கண்ட சேரமான் அன்பளாவிய இன்ப மொழிகளால் அவரைத் தேற்றி அச்சத்தை மாற்றினார். புலவரும் நடுக்கம் தீர்ந்து புரவலரின் பெருமையை மனமாரப் புகழ்ந்தார். அரசே!

......................................எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்; நற்றமிழ் முழுதறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத் தோள் ஓச்சித்
தண்ணென வீசியோயே

என்று வாழ்த்தினர். என்னே!; பாவலரின் பண்பு!!

எண்ணெயின் நுரைமுகந்தாற் போன்ற மெல்லிய பூவையுடைய உனது மஞ்சத்தில் அறியாது எளியேன் ஏறித் துயின்றேன். இத்தகைய பிழை செய்த என்னை வாளால் துணியாது தமிழ் அறிந்தவன் என வாளாவிடுத்தாய்; இதுவே காணும் நீ பாவலர்மேல் வைத்த அன்பும் தமிழ்த்தாயின் கண் வைத்த தகைமையும்; ஆயினும் அவ்வளவில் விடுத்தாயா? இல்லை; கடையேனாகிய எனக்கும் கவரி விசவும் இசைந்தாயே! என்னே உன் பெருமை! என்னென் றுரைப்பேன்!! என்று சிறப்பித்தார். இதனால் புரவலர் புகழும் பாவலர் பண்பும் நன்கு விளங்கும்.

அதிகமானும் ஔவையாரும்

இவ்வதிகமான் உண்ணின் இறவாது இருக்கும் கருநெல்லிக் கனியைப் பெற்றான். தனக்கென வாழாப் பிறர்க்குரியனாகையின் அதைத் தான் உண்ணாது கவியரசியாம் ஔவை அதனை உண்டு நெடுங்காலம் வாழவேண்டும் என்ற சிரிய நோக்கத்தால் அதிகன் அக்கனியை ஔவைக் களித்தான். அதிகனது கொடைத் திறமைக்கும் புரவலர் பெருமக்

களைப் புரக்கும் பெருந்தகைமைக்கும் இது போதிய சான்றன்றோ?

மால்வரைக்
கமழ்பூஞ்சாரற் கவினிய நெல்லி,
அமிழ்து விளை தீங்கனி ஔவைக் கீந்த
.................................அகனும்

என்ற வாக்கியத்தால் குறிக்கப்படுகிறது. ஔவை அவன் ஈந்த கனியைப் பெற்று

"போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீந் தனையே

என அவனை வாழ்த்திய அவரது புறநானூற்றுச் செய்யுளையுங் காண்க. என்னே பாவலர் பண்பு! "பகைவர்களைப் போரின்கட் கொல்லும் வீரச் செல்வத்தையும், பொன்னாற் செய்யப்பட்ட மாலையினையுமுடைய அஞ்சி! பெரிய மலையின் விடரினுள்ள உச்சியினின்று நீ கொண்ட நெல்லிக்கனி பெறலரும் பெற்றித்தாயினும் சாவை நீக்கும் என்பதை எமக்கு உரையாது நின்னுள்ளே யடக்கி, யாம் இறப்பொழிய எமக்கீந்தாயாதலின் பிறைச்சந்திரனையுடைய சடையும் நீலகண்டத்தையும் உடைய சிவபிரான் சாதற்குக் காரணமான நஞ்சுண்டும் நிலை பெற்றிருந்தாற் போல, நீயும் சாவாதிருத்தல் வேண்டும் என வாழ்த்தினர். இச்செய்தியை,

"பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையு
மாங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றி னௌவை
யறப்பித்தா யாமலகந் தந்து."

என்று தனிப்பாடலினும் ஔவை சாற்றுகின்றாள்,

குமணனும் பெருந்தலைச் சாத்தனும்

செந்தமிழ் மணம் சந்ததமும் வீசப்பெற்ற முதிரைமலையடுத்த நாட்டைக் குமணன் ஆண்டான். அன்னான் முதிர்ந்த அறிவுடையவன். இரவலர்க்கு இன்புடன் கொடுக்கும் புரவலன். பாவாணர் மிடிக்குப் பகைவன். நாவலரும் பாவலரும் போற்றும்

பேறு பெற்றவன். பாவலரைக் கண்டவுடன் அகமலர்ச்சி கொண்டு எதிர் அழைத்து அறு சுவை அமுது அருத்திப் பின் தண்டமிழ் மொழியின் இனிய ஓசை, அரிய அமைதி, இலக்கண அழகு முதலிய பன்னயங்களைப் பற்றி உரையாடிப் புலவர்தம் மாட்சி உணர்ந்து வியந்து புலவர் முடி அடியோடு நீக்கும் வண்ணம் பொன்னும் மணியும் வரையாது அளிக்கும் வள்ளலா யிருந்தான்.

நிற்க, குமணனது புகழைக் கண்டு நெஞ்சம் பொறாது இளங்குமணன் நஞ்சனைய வஞ்சனைச் செயல்களால் குமணனைக் காட்டிற்கு ஓட்டினன். குமணனோ அநித்தியமாகிய செல்வத்தில் ஆசை நீக்கிக் காடு சேர்ந்து கரந்துறைந்தான். புலவர்க்கேற்ற புரவலனான புனிதக் கோமான் குமண வள்ளல் "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்ற மொழிப்படி காடுறைதல் நாடுறைதலினும் இனிதாகக் கொண்டுவருவானாயினன்.

இவ்வாறிருக்க, கல்விச்செல்வக் கடல்கடந்தும் செல்வக் கடலைக் கடக்க வகைகாணாது அல்லலுற்ற பெருந்தலைச் சாத்தனார் என்னும் பெரும் புலவர் தமது மிடிதீரப் பரிசில் பெற்று வரலாம் எனக்கருதிக் குமணன்தன் நாட்டைநோக்கிச் சென்றார். ஆனால் ஆண்டு நடந்ததை அறிந்து திடுக்குற்றுக் கலங்கி அருங்குணச் செம்மல் குமணன் இருந்த காட்டை எளிதில் அடைந்து கண்டனர். கண்ணுறும் களிப்புற்று, "புலவர் குறைதீர்க்கும் புரவலனே! வாழிய!! வாழிய!!!" என்று வாழ்த்தினர். வாழ்த்தொலிகேட்ட வள்ளல் புலவரைக் கண்ணுற்றுச் "செந்தமிழ்ச் செல்வீர்! வருக!! வருக!!! கானுறை வாழ்க்கை கொண்ட கடையேனிடம் நீர் கருதி இது பொழுது வர, யான் முன் செய்த தவப்பயன்தான் என்னையோ!" என்றார். வள்ளலை நோக்கிய புலவர் "செந்தமிழ்ச் சுவையினை நன்குணரும் செம்மால்! சிரிய வள்ளலே!!

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்பசி உழலப்
பால்இல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா மார்பினைச்
சுவைத் தொறழூஉந் தன் மகவுமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதம் மழைக்கணென்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர் குமண

என்று கூறித் தமது வறுமை நிலைமையை விளக்கி வருந்தி நின்றார்.

செவியுற்ற வள்ளல் திகைத்தார். பாவம்; என் செய்வார்! பல பல யோசித்தும் கையில் ஒன்றுமில்லை என உணர்ந்தார். தன் இளவல், தன் தலைக்குக் கோடி பொன் கொடுப்பதாய்ப் பறையறைவித்தது நினைவிற்கு வந்தது. வரனும் "இத்தகைய நிலையிலும் இலை என்று கூறுத பெரும்பேறுபெறச் செய்த எம்பியினும் இனியோர் உண்டோ?

> "அந்தநாள் வந்திலீர் அருந்தமிழ்ப் புலவீர்
> இந்தநாள் வந்துநீர் நொந்தனி ரடைந்தீர்
> தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
> விலைதனைப் பெற்றும் வறுமை நோய்களைமின்"

என்று கூறிப் புலவரது கரத்தில் தன் உடைவாளைக் கொடுத்தனன்.

என்செய்வார் இந்நிலையில் புலவர் பெருமான்? துடித்தார்! வெருண்டார்!! வள்ளல் தலையினை வாளால் கொய்து என்று மழியாப் பழியினை ஏற்க ஒருப்படுவரோ புலவர் சிகாமணி? உடனே வாளை வேண்டினர்; தலைக் கொடையாளியே? ஒரிடத்திலும் நிலைத்திரா இச்செல்வத்தின் பொருட்டோ யான் நின் தலை துணிப்பது! அதினும் அழியாப் பழி வேறுண்டோ? என்று புகழ்ந்தார். பின் புலவர் அமணனிடம்போய் அவனுக்குச் சகோதர வாஞ்சை எழுப்பிக் குமணனையும் மறுபடி நாடாளும் நற்பதம் கொடுத்து அமணனை மூத்தோன் ஏவல் செய்யும்படி பணித்தார்.

தம் தீரா வறுமைப்பிணி போக்கத்தக்க நன் மருந்து பெறவந்த புலவர் பண்பு உன்னுந்தோறும் உவகை பொங்கும். மற்றும் குமணன் செங்கோல் கொள்ள மறுத்தபோது அவன் மாற்றம் உரையா வண்ணம் முடிபுனைந்த பாவலர் ஆற்றல் பண்புடன் விளங்கும். இதுவே புரவலர் பெருமையும் பாவலர் பண்புக்கும் போதிய சான்றாகும்? வேறு வேண்டுவதென்ன?

முடிவுரை

இதனல் அக்காலத்திய தமிழரசர் அருந்தமிழ் அறிந்த புலவரை எவ்வாறு ஆதரித்துப் போற்றினர்கள் என்பது இனிது அறியப்படும். இவ்வாறு தமிழ் மன்னரும், தலைவரும் போற்ற வாழ்ந்த புலவர்கள் செந்தமிழ் மொழியில் செவ்விய நூல் இயற்றிப் புரப்போர் பெருமையைப் பொன்றுது நிலைநிறுத்தினர்கள்.

பறக்கும் வித்தை

[திரு. N. K. குழந்தைவேலன், பி. ஏ.]

ஏரோப்ளேன் கண்டு பிடிப்பதற்கு முன்னால் பலூன் என்னும் புகைக் கூண்டின் உதவியினாலேயே மக்கள் வானத்திற் பறக்கக் கற்றுக்கொண்டனர். ஈசியன் (Etienne) என்ற பிரெஞ்சுக்காரரும் அவரது தம்பி மான்ட்கோல்பியரும் (Montgolfier) 1782-ஆம் ஆண்டில் இப்புகைக் கூண்டினைக் கண்டுபிடித்தனர். இவ்அறிஞர்கள காற்றினும் இலேசான நீர்வளியைப் (Hydrogen) பைகளில் நிரப்பி அவற்றை வானத்திற் பறக்கவிட்டுப் பார்த்தனர். இவ் வாராய்ச்சியின் பொருட்டு ஒரு முறை 35 அடி குறுக்களவுள்ள பெரிய பலூன் ஒன்று பாரிஸ் (Paris) நகரத்திலிருந்து அனுப்பப்பட்டது. இக்கூண்டு 3000 அடி உயரத்திற்குக் கிளம்பி 15 கல்லுக்கு அப்பாலுள்ள ஒரு சிற்றூரில் இறங்கியது. அப்பொழுது அறுவடைக்காலமாதலால் குடியானவர்கள் வயற்புறங்களில் வேலை செய்து கொண்டிருந்தனர். பலூன் வானத்தினின்றும் கீழே இறங்கியவுடன் அதனை ஏதோ கொடிய பறவையென எண்ணி அரிவாள் கோடரி முதலியவற்றினால் ஆங்கிருந்தோர் துண்டுதுண்டாக வெட்டி வீழ்த்தினர். இதற்குப் பின் அரசாங்கத்தினர் புகைக் கூண்டு ஆராய்ச்சியைப் பற்றி ஓர் அறிக்கை விடுத்து வானத்தினின்றும் கீழே விழும் பலூன்களுக்கு எவரும் தீங்கிழைக்கலாகாதென எச்சரிக்கை செய்தனர்.

மான்ட்கோல்பியர் மீண்டும் பல ஆராய்ச்சிகள் செய்து புகைக் கூண்டின் அடிப்புறத்தில் கூடைகளைக்கட்டி அவற்றில் சுமைகளைப் ஏற்றிப் பறக்கவிட்டார். இக்கூண்டு 300 அல்லது 400 பவுண்டு எடையைச் சுமந்து கொண்டு மேலே பறக்கக் கூடியதாக இருந்தது. பின்னர், பலூன் கூடைகளில் கோழி, வாத்து, ஆடு முதலியன ஏற்றி அனுப்பப்பட்டன. இவை அனைத்தும் பலூனில் தீங்கு ஏதுமின்றிப் போய்ச்சேர்ந்தன. ஆயினும் பலூனில் மக்கள் ஏறிச் செல்வதற்கு அந்நாட்டு மன்னர் அனுமதி கொடுக்கவில்லை. பலூனில் ஏறிச் செல்வதால் மக்கள் உயிருக்குத் தீங்கு நேரிடுமென அஞ்சிய அரசர் அங்ஙனம் எவரும் பறக்கலாகாதெனக் கட்டளை யிட்டிருந்தனர். சின்னாட் கழித்து குற்றவாளிகளை மட்டும் பலூனில் ஏற்றிப்பார்க்க அம்மன்னர் விரும்பினர். முதன்முதலாகக் காற்றிற் பறக்கும் பேறு குற்றவாளிகளுக்குக் கிடைக்கக் கூடாதென ரோசியர்ஸ் (Rosiers) என்னும் வீரர் அரசருக்கு

எடுத்துக்காட்டித் தமக்கே அநுமதி கொடுத்தருளும் வண்ணம் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அங்ஙனமே இவருக்கு அநுமதி கிடைத்தது.

இதன் பொருட்டு 74 அடி உயரமும் 48 அடி குறுக்களவுமுள்ள பலூன் புதிதாகக் கட்டப்பட்டது. 1783-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் ரோசியர்ஸ் முதன் முதலாகப் பலூனில் ஏறி 84 அடி உயரம் பறந்து சென்றார். இதற்குப் பின்னரே காற்றிற் பறப்பதற்குப் பலர் முன் வந்தனர். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் பலூனில் ஏறிச்செல்லும் பழக்கம் மிகுதியாகப் பரவத் தொடங்கிற்று. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் ரோசியர்ஸ் தமது தம்பியுடன் பொலோன் (Boulogne) என்னுமிடத்திலிருந்து இங்கிலாந்துக்குப் பறந்துசெல்ல முயற்சிசெய்தார். பலூன் 700 அடி உயரம் மேலே கிளம்பிப் பறந்து செல்லும்பொழுது தற்செயலாய்த் தீப்பிடித்துக் கொண்டதால் அது கீழே முறிந்து விழுந்தது. இதனால் அடிபட்டு ரோசியர்ஸ் உடனே உயிர் துறந்தார்; அவருடைய தம்பியும் சில விநாடிகளே உயிருடன் இருந்தார். வீரம் செறிந்த இவர்களது வாழ்க்கை இங்ஙனம் முடிவுற்றதைக் கண்டு யாவரும் வருத்தமுற்றனர்.

இதற்குப்பின் மாரெட் (Moret) என்னும் பிரெஞ்சுக்காரர் செல்ஸீ (Chelsea) என்ற இடத்திலிருந்து பறந்து செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார். இதைக் காணச் சற்றேறக்குறைய 60,000 மக்கள் கூடியிருந்தனர். மூன்று மணி நேரம் வரையில், பலூனில் காற்று ஏறாததால் பறப்பதற்குத் தடை ஏற்பட்டது. அங்குக் கூடியிருந்தோர் பலர் தங்கள் பொறுமையை இழந்து பலூனைக் கிழித்துப் பாழாக்கி விட்டனர். மாரெட்டு அம்முரடர்களிடமிருந்து தப்புவதே அரிதாகப் போய்விட்டது.

இங்கிலாந்தில் முதன்முதலாகப் பறந்து காட்டியவர் லூனார்டி (Lunardi) என்னும் வீரர் இவர் பலூனில் ஏறிச் செல்லும்பொழுது தம்முடன் பூனை, நாய், புறா இம்மூன்றையும் எடுத்துச் சென்றார். இவையுமன்றி இரண்டு துடுப்புகளையும் எடுத்துச் சென்றார் நீரில் படகுகளைத் தள்ளுவது போன்று இவர் அத்துடுப்புகளின் உதவியால் பலூனைக் காற்றில் ஓட்டிச் சென்றார். இவ்வேடிக்கையைக் காண அரசரும் குடும்பத்துடன் வந்திருந்தார். நாட்டுப்புறங்களிலுள்ள மக்கள் மேலே பறக்கும் பலூனையும் அதனுடன் தோன்றிய மனித உருவத்தையும் கண்டு இயற்கையாகவே வானில்

ஏதோ அற்புதம் நிகழ்கின்றதென எண்ணி அச்சமும் வியப்பும் ஒருங்கே அடைந்தனர். லூனார்டியின் கையிலிருந்த துடுப்பு ஒன்று தவறிக் கீழே விழுந்துவிட்டது. அத்துடுப்பு வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணின் அருகில் திடீரென்று வந்து விழுந்தது. அப்பெண் அதனை இன்னதென்று உணராது அஞ்சி நடுநடுங்கி மூர்ச்சித்தனள். இதனால் அவள் நோய்வாய்ப்பட்டு சில நாட்களுக்குள் உயிர் துறந்தனள் எனக் கூறப்படுகின்றது.

லூனார்டி எடுத்துச் சென்ற புறு பலூனிலிருந்து தப்பிச் சென்று அவரது வீட்டை அடைந்தது. பூனை குளிர் தாங்க முடியாமல் நடுங்கத் தொடங்கிற்று. லூனார்டி நெடுநேரம் வரையில் பறந்துசென்று முடிவில் எரிபோர்டுஷயர் (Herefordshire) என்னும் இடத்திற்கு வந்துசேர்ந்தார். அங்கு ஒரு தோட்டத்தில் இறங்கிப் பலூனைப் பிடித்துக் கட்டுவதற்கு உதவியளிக்கும்படி அங்குள்ள குடியானவர்களை வேண்டிக் கொண்டார். அவர்கள் அதுவரை பலூனைக் கண்டிராதவர்கள்; ஆதலால் அதிலிருந்து வெளிக்கிளம்பிய லூனார்டியை ஒரு பிசாசு என நினைத்து அவரிடம் அணுகுவதற்கு அஞ்சினர். லூனார்டி அவர்களிடம் மிகவும் கெஞ்சிக் கேட்டபிறகு அவர்கள் உதவியளித்தனர்.

இங்ஙனம் லூனார்டி அடிக்கடி காற்றிற் பறந்து செல்வது வழக்கம். இவர் ஒருமுறை எடின்பரோவிலிருந்து (Edin burgh) பறந்து சென்றபொழுது காற்று கடுமையாக வீசி பலூனை வடக்குக் கடலில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டது. நலவினைப்பயனால் லூனார்டியை செம்படவர்கள் கடலினின்றும் காப்பாற்றினர். இவர் பறக்கும் வித்தையில் நன்கு தேர்ச்சியடைந்த பிறகு ஸ்டாண்டன் (Standon) என்னுமிடத்தில் தொடர்ச்சியாக இரண்டரை மணி நேரம் வானத்திற் பறந்து காட்டினர். இங்ஙனம் இவர் முதன்முதலாக நீண்டநேரம் பறந்து கீழே இறங்கிய இடத்தில் ஒரு கல் நாட்டப்பட்டிருக்கின்றது. அக்கல்லில் இவர் தம் வீரச்செயல்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

பிளாஞ்சார்டு (Blanchard) என்னும் வீரரே முதலில் பலூன் உதவியால் கடலைக் கடந்தவர். பலூன் காற்றுவீசும் பக்கங்களிலெல்லாம் அலைந்து ஓடாமல் இருப்பதற்கும், நினைத்தபடி அதனைத் திருப்புவதற்கும் இவர் வழிகளைக் கண்டுபிடித்தார். இவர் பாரிஸ் நகரத்திலிருந்து பறக்கத் தொடங்கியபொழுது இவருடன் பறந்து செல்வதற்குப் பலர் விரும்

பினர். உலகம் போற்றும் நெப்போலியனும் (Napoleon) இவருடன் பறந்துசெல்ல முயன்றார். ஆயினும் பிளாஞ்சார்டு இவரையும் தம்முடன் அழைத்துச்செல்ல மறுத்துவிட்டார்.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலுள்ள கடற் பகுதி 21 கல் குறுக்களவு உடையது. இதனைக் கடந்து செல் வதற்குப் பிளாஞ்சார்டு முயற்சி செய்தார். இவர் தாமாகவே ஒரு பலூன் செய்து அதன் இருபுறத்திலும் சிறகுகள் போன்ற கருவிகளை யமைத்தார். புகைக் கூண்டிற்கும் உட்காருமிடத் திற்கும் இடையில் விரிந்தகுடை ஒன்றைக்கட்டிவைத்தார். பலூன் விரைவாகக் கீழே இறங்கித் தரையில் மோதிவிடாமல் பைய இறங்கும்பொருட்டே இக்குடை வைக்கப்பட்டிருந்தது. ஜெப்ரீஸ் (Jeffries) என்ற அமெரிக்கரிடம் பிளாஞ்சார்டு 600 பவுன் பெற்றுக்கொண்டு அவரையும் தம்முடன் பலூனில் ஏற்றிச் சென்றார். பலூன் டோவர் (Dover) குன்றிலிருந்து பகல் ஒரு மணிக்குப் புறப்பட்டது. இடைவழியில் பலூன் திடீரெனக் கீழ்நோக்கிச்சென்று கடலில் விழுந்துவிடும்போல் தோன்றியது. பலூனின் எடையைக் குறைக்கும்பொருட்டு பிளாஞ்சார்டு அதனுள் வைத்திருந்த பொருள்களை யெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய்க் கீழே எறிந்துகொண்டே வந்தார். உணவுக்காக வைத்திருந்த ரொட்டி, பழம் முதலியவற்றையும் அவர் கடலுக்கு இரையாக்கினார்.

எத்தனை முயன்றும் பலூன் கடலை நோக்கித் தாவிச் சென்றது. பிளாஞ்சார்டும் அவர் தம் நண்பரும் தங்கள் நம்பிக் கையை இழந்து, மிதக்கும் உடையை அணிந்துகொண்டு நீரில் குதித்துவிடலாமென முடிவுசெய்தனர். இவ்வேளையில் எதிர்பாராத விதமாய் ஒரு பெருங்காற்று வீசிப் பலூனை மேலே இழுத்துச்சென்றது. இறைவனருளால் இருவரும் தப்பிப் பிழைத்தனர். ஒரு மணிக்கு இங்கிலாந்தில் புறப்பட்ட பலூன் 3 மணிக்குப் பிரான்ஸ் நாட்டுக்குவந்து கேலே (Calais) என்னுமிடத்திற்கு அருகிலுள்ள ஒரு காட்டில் இறங்கிற்று.

அங்கு பிளாஞ்சார்டுக்கு ஒரு பெரிய வரவேற்பு அளிக் கப்பட்டது. அந்நாட்டு வேந்தர் இவருக்கு 500 பவுன் பரிசாக அளித்தார். இவர் தம் வீரச்செயலைக் காட்டுவதற்கு அறிகுறி யாக இவரது பலூன் இறங்கிய இடத்தில் ஒரு கல் நாட்டப் பட்டது. பலூன் உலகில் தோன்றி ஒரு நூற்றாண்டுக்குப் பின்னரே வானவூர்தி கண்டுபிடிக்கப்பட்டது. பறக்கும் வித்தை நாளடைவில் வளர்ச்சியுற்று இக்காலத்தில் மிகச்சிறந்த நிலையினை அடைந்திருக்கின்றது. வானவூர்தியின் உதவியால் பறக்கும் வீரர்கள் எண்ணிறந்த விந்தைகளைச் செய்து காட்டி

யுள்ளனர். பெருங் கடல்களையும், கொடிய பாலைவனங்களையும் வானளாவிய மலைகளையும் பனிமிகுந்த இடங்களையும், அடர்ந்த காடுகளையும் இவ்வீரர்கள் ஒரு நொடிப்பொழுதில் கடந்து செல்கின்றனர். இம் மனிதப் பறவைகளைக் கண்டு உலகம் வியந்து பாராட்டுகின்றது. "பழையன கழிதலும் புதியன புகுதலும்" காலத்திற்கேற்றபடி மாறிமாறி வருகின்றன.

செருத்துணை நாயனார் திருப்பதி

[திரு. வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.]

சைவமும் தமிழும் தழைக்கத் தோன்றிய அறுபத்து மூன்றுநாயன்மார்களில் செருத்துணைநாயனார் ஒருவர். இவர் சோழநாட்டில் தஞ்சாவூரில் வேளாண் குலத்துத் தோன்றித் திருவாரூர் எய்திப் பல திருத்தொண்டுகள் செய்துவரு நாட்களில், ஒருநாள் பல்லவ வேந்தராகிய கழற்சிங்க நாயனார் தம் அரச மாதேவியோடு, திருவாரூர்க்குச் சிவதரிசனத்திற்கு வந்திருந்தபோது, திருப்பூமண்டபத்துக் கிடந்ததொரு பூவை எடுத்து மோந்த குற்றத்திற்காக, அவ்வரசியாரது மூக்கை, அஞ்சாது அரிந்த வீரத் தொண்டராவர். அத்தகைப் பெரியார் பிறக்கத் தவஞ்செய்த திருப்பதி, யாது என ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி அடிகள் "தஞ்சை மன்னவனும் செருத்துணை" என்று அருளிச் செய்தார். இவரது திருப்பதியை நம்பியாண்டார் நம்பிகள் "செழுநீர் மருகல் நன்னாட் டமர்தஞ்சை" எனவும் சேக்கிழாரடிகள் "பொன்னி நீர் நாட்டு மருகல் நாட்டுத் தஞ்சாவூர்" என்றும் கூறியருளினர்.

எனவே மருகல் நாட்டுத் தஞ்சாவூரே இவர் பிறந்த தலமாகும். அத்தஞ்சாவூர் யாது? தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் தாலுகாவில் திருமருகல் என்னும் தேவாரம் பெற்ற தலம் ஒன்றுளது. அதனைத் தலைமையாகக் கொண்ட நாடே நம்பிகள் காலத்தும், சேக்கிழார் காலத்தும், மருகல் நாடென வழங்கி வந்தது. இத்திருமருகலுக்கு இரண்டு கல் தூரத்தில் புத்தாற்றின் தென்கரையில் தஞ்சாவூர் என்று ஓர் ஊர் இருக்கின்றது. அதுவே மருகல் நாட்டுத் தஞ்சாவூராகும். எனவே அதுவே செருத்துணை நாயனார் பிறந்த திருப்பதியுமாகும். ஈண்டு ஓர் பெரிய பழைய சிவன்கோயிலுண்டு. செருத்துணையாரின் தனிப்படிவமும் ஆங்கு இருக்கின்றது.

இம் மருகல் நாட்டுத் தஞ்சாவூர், தென் இந்தியக் கல்வெட்டின் இரண்டாம் தொகுதி எழுபதாம் எண்ணுள்ள கல்வெட்டொன்றில் "க்ஷத்திரிய சிகாமணி வள நாட்டு மருகல் நாட்டுத் தஞ்சாவூர்" என்று குறிக்கப்பெற்றுள்ளது. இம் மருகல் நாட்டில் அடங்கியனவாய்க் கல் வெட்டுக்களில் குறிக்கப்பெறும் பூதனூர், வைப்பூர் என்ற ஊர்கள் இத் தஞ்சைக்கு அண்மையில் இன்றும் நிலைபெற்றுவருகின்றன.

இஃது இங்ஙனமாக, சென்னைப் பல்கலைக் கழகத்துச் சரித்திரப் பேராசிரியர் உயர்திரு. க. அ. நீலகண்ட சாத்திரியர் அவர்கள் தாம் எழுதிய "The History of Pandyan Kingdoms" என்ற நூலில் தஞ்சாவூர் ஜில்லா தஞ்சாவூர் தாலூகாவின் தலைநகரும் இராசராசேச்சரத்தைத் தன்னகத்தே கொண்டதுமாகிய தஞ்சாவூரே செருத்துணைநாயனார் பதியென்று குறிப்பிட்டுள்ளார்கள். அது பொருந்துவது அன்று. அவர் கூறிய தஞ்சாவூர் பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரேயாகும் (S. I. I. Vol. II, Inscription No. I.)

எனவே மேற்கூறிய மருகல் நாட்டுத் தஞ்சாவூரே செருத்துணையார் பதியாதல் வலியுறுதல் காண்க. —(தமிழ்க்கலை)

மதிப்புரை :

(தமிழ்க்கலை—ஒரு திங்கள் வெளியீடு)

இது வித்வான் திரு. அ. மு. பரமசிவானந்தமவர்களை ஆசிரியராக ஏற்றுக் காஞ்சி புரத்திலிருந்து ஆவணித்திங்கள் முதல் திங்கள் வெளியீடாக வருகின்றது. தெருவெல்லாம் தமிழ் முழக்கஞ் செழிக்கச் செய்தல் வேண்டுமென்பதே இதன் அடிப் படையான கொள்கை.

இதற்குக் குறைந்த ஆண்டுக்குக் கை யொப்பம் அணு 8.

கட்டாய இந்தி வேண்டாம்

இந்தித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இந்திப் பிரசார சபை ஆதரவில் தேர்ச்சி யிதழ் அளிக்கையில் பண்டித இருதயநாத குன்சுரு பேசியதாவது :

இந்தியை எல்லாரும் படிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துவதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. இந்தியை மக்கள் மன முவந்து கற்க முன்வந்தால்தான் இந்தி இயக்கம் முடிவில் வெற்றிபெறும். உத்தியோக தொடர்பில்லாத் தன் முயற்சியினாலேயே இந்தி இதுவரை பரவி வந்திருக்கிறது.

இந்தியை எல்லாரும் படித்தால் மட்டும் போதாது. இந்தியை விரும்பவேண்டும். எனவே இந்திப் பயிற்சி மேலும் பெருகிவர

வேண்டுமானால் கட்டாயம் என்பது கூடாது. மக்கள் மன முவந்து படிக்கத் தக்கவகையில் மட்டும் பரப்புவதே சிறந்தாகும்.

வித்துவான் மறைத்திருநாவுக்கரசு எழுதியது.

அரசியல் மொழியாக விளங்கும் மொழிகளே இன்றைய உலகில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்கின்றன. அரசியல் மொழியாக இல்லாத தமிழ் முதலிய மொழிகள் ஆட்சிக்குரிய இடங்களில் சீருஞ் சிறப்பும் பெறுமல் ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்கள்போல் ஒதுக் கிடங்களில் தம் பண்டைப் பெருமைகள் அனைத்தும் இழந்து குற்றுயிரும் குறையுயிருமாய் வாழ்கின்றன. நந் தமிழைப்பற்றி மட்டுங் கருதுகையில் அதன் பண்டைக்கால ஆட்சியும் மாட்சியும் தனிச் சிறப்புடையன. அதனுற்ருன் இலக்கிய இலக்கணங்கள் சீர்திருந்திய மொழிகட்குரிய சிறப்புகள் யாவும்பெற்று அறிஞர் உலகின் நன்மதிப்புக்கும் வியப்புக்கும் உறைவிடமாய் விளங்கு கின்றன. சங்கக் கலைநூல்கள் திருக்குறள், தொல்காப்பியம், சிலப் பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை முதலிய நூல்களைக் கண்டவர்கள் இவ்வுண்மையை நன்கறிவர்.

சமயங்களைப்பற்றிய வரையில், இறைவனருள் பெற்ற அடிய வர்கள் ஆழ்வார்களைப் பற்றியவரையில், உலகினர் தமிழ் மறைகட்கும் தமிழ்ச் சமயப் பெரியார்கட்கும் பெரிதுங் கடமைப்பட்டிருக்கின்றனர். என்பதைத் துணிந்து கூறக்கூடும். உலக நாகரிகத்துக்கும் சீர் திருந்திய அரசுக்கும், அறத்தொடுபட்ட மறத்துக்கும் தமிழ் நாடே வழிகாட்டி என்பதை ஆங்கில நாட்டு வரலாற்று அறிஞர்கள் தக்க சான்றுகளுடன் துணிந்துரைக்கின்றனர்.

இத்துணை வியத்தகு தமிழ்க்கலை—தமிழ்ச்சமயம்—தமிழர் நாகரி கம் எல்லாம் ஆரியர் வருகையாலும் ஆங்கில அரசினுலும் கற்பாரின் றியும் போற்றுவாரின்றியும் தன்னொளி—உரிமை முதலியன வின்றித் தாழ்ந்து கிடக்கின்றன—இறக்கும் நிலையில் ஊசலாடிக்கொண்டிருக் கின்றன என்ருல் மிகையன்று. பிறமொழிகள் ஒன்றல்ல பல கற்பினும் இழுக்கில்லை. ஆனுல் அவற்றை—அரசியல் மொழியாக, கட்டாய மொழியாகக் கற்பதனுல் வருங்காலத்தில் அதனுல் தமிழ்க் கலை சமயம் நாகரிகம் முதலியன அடியோடு அழியும் என்பதில் ஐயமேது? ஐயமுறுவோர் வரலாற்று ஒளியைக் காணட்டும். ஆங்கிலம் ஆட்சிமொழியாக வந்த காலத்தில் தாய்மொழிகள் இப் போதிருக்கும் நிலையை யடையும் என்பதை அப்போதிருந்தவர்கள் அறிந்ததாகத் தெரியவில்லை இந்தியைக் கட்டாயமாகக்கொண்டு வருபவர்கள் நல்லெண்ணத்துடன்தான் அங்ஙனம் செய்கிறுர்கள். என்பதை நான் நம்புகிறேன். ஆனுல் கல்வியற்ற தமிழ் நாட்டில், உணர்ச்சியற்ற தமிழுலகில், உரிமையற்ற தமிழ் நிலத்தில் பிற்கா லத்தில் இப்போது ஆங்கிலம் இருக்குமிடத்திலன்ருே இந்தியும் இருந்து, தமிழை—தமிழ் உரிமையை—தமிழ்க் கலைகளை—தமிழ்ச் சமயத்தை—தமிழர் நாகரித்தை அழிக்கும்!! —(விடுதலை)

ஓம்

சென்னை மாகாண

மூன்றாவது தமிழர் மகாநாடு,

திருச்சி



திறப்பாளர்

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.

26-12-1937.

ஓம்

சென்னை மாகாண
மூன்றாவது தமிழர் மகாநாடு, திருச்சி.

நாளது 1937 டிசம்பர் 26-ஆம் நாள்

திருவாளர்

கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எம். ஏ., எம். எல்.,

நிகழ்த்திய

திறப்புரை

தமிழன்பர்களே,

தமிழர் என்பார் தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள் ஆவர். தமிழ் நாட்டிற் பிறந்தும் தமிழைத் தாய்மொழியெனக் கருதாதவர் தமிழராகார். தமிழ் நாட்டிற் பிறவாதிருந்தும் தமிழைத் தாய்மொழி போற் போற்றுபவரைத் தமிழர் என்பது இழுக்காகாது. தமிழ் நாகரிகத்தை உயர்ந்ததெனக் கருதுபவருந் தமிழரே. தமிழ் நாட்டிலே தமிழிலேயே இறைவனை வாழ்த்தி வழிபடல் வேண்டும்; தமிழிலேயே சமயச் சடங்குகள் யாவும் நடைபெறல் வேண்டும்; தமிழிலேயே அரசியல் நிகழ்ச்சிகள் எழுதப்பெறல் வேண்டும்; தமிழிலேயே எக் கலைகளையும் கற்பித்தல் வேண்டும்; தமிழிலுள்ள அறிவுக் களஞ்சியங்களைப் பாதுகாத்தல் வேண்டும்; தமிழ் நாட்டில் தமிழ்மொழி ஒன்றே கட்டாயமொழிப் பாடமாக இருத்தல் வேண்டும். என்ற கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகுபவரே உண்மைத் தமிழராவர். உண்மைத் தமிழர் ஒருங்கு வீற்றிருந்து தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கம் நாடும் பேரவை தமிழர் மகாநாடு எனப் பெயர் பெறும். இத் தமிழ்ப் பேரவையிற் புகுவோர் நினைவில் வைத்தற்குரிய சிலவற்றை இங்கே குறிப்பிடக் கருதுகின்றேன்.

தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்வதில் உண்மையாக உழைப்பவர்களுள் சாதி சமயம் பற்றிய பிளவுகள் கருதப்படமாட்டா. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறிஸ்தவர், மகமதியர், ஐரோப்பியர் முதலிய யாவரும் தமிழன்னைக்குத் தொண்டுசெய்வதில் ஒன்று சேரலாம். பல்வேறு வகையாகப் பிரிந்துநிற்குந் தமிழர் யாவரையும் ஒற்றுமைப் படுத்துதற்குரிய சிறந்த கருவி தமிழ்மொழிப்பற்று ஒன்றேயாகும். தாய்மொழிப் பற்றில்லாத தாய்நாட்டுப் பற்று உயிரில்லாத உடம்பு போல்வதாகும்.

தமிழ் அறநூல் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" எனவும், தமிழ்ச் சமயநூல் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனவும், பழந்தமிழ்ப்பனுவல் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனவும் முழங்குங்காலை தமிழ்மக்களைச் சாதியால் வேறுசெய்து, சமயத்தால் மாறுசெய்து, மொழியினாற் கூறுசெய்து அவர்களுக்குள் ஒற்றுமைக் கேடுண்டாக்கியது யாது? மரத்தின் அடியில் யாவருங் கலந்து முதல்வனைத் தொழுத தமிழர்பால் வருணம்பற்றிக் கோயில் புகுதல் கூடாது என்ற கோட்பாடு எப்படி நுழைந்தது? தொடுக்குங் கடவுட் பழம் பாடற் றொடையின் பயனும் பரமற்கு மிடுக்குமிகுந்த உரை கொண்டு நிகழ்த்தும் பூசனை எவ்வாறு உவப்பாயிற்று? நிறைமொழி மாந்தர் மறைமொழி நடுவிற் பிறமொழி மந்திரப் பெருமை புகுந்த தேன்? மலையிலும் கடலிலும் காட்டிலும் நாட்டிலும் பாலை வனத்திலும், பாமரமக்களும் பண்பாய் ஒலித்த யாழும் குழலும் செய்தியறைந்த பறையும் எங்கே போயின? இசைக்குரியது ஏனையர் மொழியெனும் வசைக்கருத்து யாங்ஙனம் வந்தது? பன்னிரு முறையிலும், நாலாயிரப் பனுவலிலும் பயின்ற இன்னிசைப் பண்ணும் திறனும் பரந்து நிலவாமைக்குக் காரணம் யாது? ஓவியக் கலைக்கும், உயரிய சிற்பத்திற்கும் உரிய தமிழ் நூல்கள் எங்கே ஒளிந்தன? சித்தர் மருத்துவம், சிறந்த வாதநூல், வானூல், கற்பநூல், யோகத் தமிழ் நூல், அறிவர் ஞானநூல் என்பன மாசுபடிந்து மங்கிக் கிடத்தற்கு மந்திரம் செய்தார் யார்? தமிழர் தம் சமய நிலையங்களிலும், அற நிலையங்களிலும் மூடபத்தி தலையெடுப்ப முதன்மையான அறிவைக் கொன்றது யாது? என்பனவைபோன்ற வினாக்கட்குத் தக்க விடை தேட வேண்டும். தேடுமிடத்து, கல்லாமையாலும், நூல் காவாமையாலும், கற்றுரைப் பேதைமையாலும் தமிழினத்தார் தாழ்நிலையடைந்து எதிரிகளின் சொல்லம்பிற்கு இரையாகிப் பொய்ச் சொற் பொலிவென்னும் சாட்டினாற் பிணிக்கப்பட்டு 'மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே! பொய் போலும்மே!! பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே! மெய்போலும்மே!!' என்ற முதுமொழிக்குத் தக்க எடுத்துக்காட்டாக இலங்குதலே தெளிவாகத் தெரியவரும். ஆரியர்க்கு நாகரிகத்தைக் கொடுத்து அவரது ஆடம்பர மொழிகளைத் தாங்கள் பெற்று அம்மொழியைத் தாமும் அவரும் பொதுமொழியாகக் கருதித் தம்முடைய கருத்துக்களை அதுவாயிலாக விளக்கவே மொழியுங் கருத்தும் ஆரியருடையனவே என்ற தப்புக்கொள்கை தலையெடுக்கலாயிற்று. இந்நாட்டத்தை ஆய்ந்தறிந்த டாக்டர் கில்பேர்ட் சிலேட்டர் (Gilbert Slater) 'While the Aryans were dravidised in Culture, the Dravidians were aryanised in language' என்று சுருக்கமாகவும் அழகாகவுங் கூறினர்.

'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' எனச் சேக்கிழார் பெருமான் அருளிய வண்ணமும்; 'சதுர்மறை ஆரியம் வருமுன் சக

முழுதும் நினதாயின் முதுமொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே' என்று காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் மொழிந்த வண்ணமும் ஒரு காலத்தில் உலக மெங்கும் தமிழ்மொழியானது பரவியிருந்தபோது மதியிற்களங்கம் போல அதன் பகுதி ஒன்றில் ஆரியங் கிளைப்பதாயிற்று. அதை மொழிநூலாராய்வார் நன்கறிவார். அந்நிலை இங்கு விரிப்பின் பெருகும். நம்மளவில் பார்க்கும்பொழுது இந்திய நாடு முழுவதிலும் குமரி முனைக்குத் தெற்கேயும் தமிழானது பதினாயிரம் ஆண்டுகட்குமுன் பரவிச் செழித்தோங்கிற்று. வடமேற்கு இந்தியாவில் ஆரியம் தோன்றுமுன்பே செந்தமிழ் நாகரிகமும் செம்பொருள் வழிபாடும் நாடெங்கும் சிறப்புற்று விளங்கின. அவற்றின் பழமையைக் குறித்து 51 ஆண்டுகட்கு முன்னேயே காலஞ்சென்ற சென்னைக் கவர்னர் கனம் கிராண்ட் டப் (Grant-Duff) ஆய்ந்துரைத்த அமுதமொழி தமிழ் நாடெங்குந் தங்க எழுத்தில் பொறிக்கத்தக்கது.

Their institutions……… go back to a period as compared with which the hoariest Indo-Aryan Antiquity is as the news in Reuters' latest telegram.

இறந்தாரை எழுப்பும் மந்திரம் வல்லராய்த் தண்டமிழர் இலங்கினர் என்பது இருக்கு வேதத்தால் குறிக்கப்பட்ட தொன்றாகும். நெருப்புக் கடவுளை வழிபட்ட ஆரியக் குருக்கள் சிலர் முதன்முதல் வடநாட்டில் வாழ்ந்த தமிழ் மன்னன் ஒருவன்பால் உயர்ஞானம் கற்றனர் என்பது உபநிடத ஆராய்ச்சியால் புலனாகும். எல்லைகடந்த செல்வச் செருக்கில் திளைத்த தமிழர் அறம் பொருள் இன்பம் வீடு கூறும் மறைநூல் மறந்தனர். அகத்தியர் முதலிய ஐம்முனிவர் உணர்த்திய அருள்நூல் என்னும் ஆகமம் இழந்தனர். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரையாம் என்பதுபோல ஆரியர் வேதமும் தந்திரமும் தலைநூல்களாயின. தம் வரலாற்றினை அறவே மறந்த ஆதித்தமிழர் ஆரியர் சூழ்ச்சியால் சொல்வலைக்குள் அகப்பட்டனர். ஆரியச்சொல்லம்பால் தாக்கப்பட்டுத் தாய்மொழி பேசும் நாடு குறுகப்பெற்றுக் கிளைமொழியாகிய கன்னடம், தெலுங்கு முதலியவற்றை இழந்து வடவேங்கடம் குமரிக்குள் ஒடுங்கிக் கோயிலிலும் வீதியிலும் வீட்டிலும் ஆற்றிலும் எவ்விடத்தும் ஆரிய மொழிக்கும் அம்மொழித் தலைவர்க்கும் அடிமையாயினர். பண்டைத் தமிழ்ப் பனுவல்களும் பாங்கிற்சிறந்த வரலாறுகளும் பதுங்கிக்கிடப்ப, ஆரியக் கலைகளும் காவியங்களும். ஆடல்களும் பாடல்களும் யாண்டும் பரவித் தாண்டவமாடலாயின. இங்ஙனம் விளைந்த குறைகள் பலப்பல. அவையாவற்றாலும் ஊனம்பெறாது தனது உண்மையியல்பின் செம்மையினால், பழையவற்றுள் பழையதாயும் புதியவற்றுள் புதியதாயும் மூவாது சாவாது என்றும் உயிர்வாழும் தண்டமிழ் அன்னை இன்னும் உயிரோடு வாழ்ந்து வீற்றிருப்பதைக் கண்டு பொறாமைகொண்ட பகைச் சொல்லினர் ஆரியம் முதலிய மொழி

போற் றமிழ்மொழியையும் இறந்தமொழியாக்குங் கருத்துடன் அவள் மக்களின் அறியாமையைக் கருவியாகக்கொண்டு, அவள் இன்னுயிரைச் செகுத்து விடலாமென்று துணிந்துகொண்டு இற்றைக் காலத்தில் முன்வந்திருக்கின்றனர். இந்தி என்னும் குளிர்செந்நியை அவள் இனிய உடம்பில் சிறிது சிறிதாக நுழைத்துவிடலாமென்று கருது கின்றார்கள். இந்தி வளர இடம் பெறுமாயின், இன்னுஞ் சில ஆண்டுகளில் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் தமிழ் மணம் அறவே யொழிந்து பள்ளிப்புத்தகம், பத்திரிகை யுலகம், சினிமாக் காதை, சிறந்த நூல்கள், செவ்விய பாடல், அரசியல் நிகழ்ச்சி, ஆல யப் பூசனை, அகத்திற் பேசும் உறவினர் மொழி ஆயவெல்லாம் இந்தி மயமாய்த் தமிழர் நாடும் இந்திநாடாகவே இந்தியநாடும் நடுவெழுத் தாய உயிரினை இழக்கும். உலக சரித்திரம் ஊனம் எய்தும். தமிழர் நாகரிகமே இந்திய நாகரிக உயிரெனும் நுட்பம் ஒழிந்திடலாகும். தமிழர்க்கு இகழ்ச்சியும் கேடும் இதனின் வேறேது?

இப்பேரிடையூற்றை நீக்குதற்குத் தமிழ்மக்கள் கண் விழித் துக் கடமையாற்றுஞ் சமயமிதுவே. கடமையை நிறைவேற்றுதற்கு உண்மைத் தமிழர் உடல் பொருள் ஆவி மூன்றும் அர்ப்பணம் செய் தற்குப் பிற்படலாகாது. மிகுதியால் மிக்கவை செய்வாரைத் தகுதி யால் தாக்கித் தலைகுனியச் செய்யாவிடில் தமிழர் என்னும் பெயர்க்குத் தமிழ் நாட்டினர் தகுதியிலார் என்பதே முடியும். தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாயப் பாடமாக ஆக்குவதை எதிர்த்தவர்கள் பலர், இப் போது இந்தியை வற்புறுத்தக் கங்கணங்கட்டி நிற்கின்றார்கள். இனி வரும் எவ்வகைத் தேர்தல்களிலும் அத்தகையார்க்கு முன்னேற்றங் கிட்டுமாயின் 'அறிவிலி' என்ற சொல் தமிழர்க்கே வாய்ப்புடைத்தாகும்.

தமிழரின் பெருங்குறை யாதெனின், தயவினால் தலைக்கேடு தேடிக்கொளல். அவர்கள் தம் உரிமையைப் போற்றுதலைத் தந்நலந் தேடும் தாழ்வென்று நினைத்துத் தாழ்வடைபவர். வீரமாய் எதனையுந் தொடங்கி விடாமுயற்சி யின்மையால் மோசம் போவார். தந்நூல் பேணாது பிறநூல் கற்பவர். உலகம் புகழும் தலைசான்ற கல்விகற்பார் சிலர். அவர் சொற் கேளார் பலர். சுற்றந்துட் குற்றம் காண்பார், இனத்தார் பசித்திருப்ப அயலார்க்கு வயிறார அமுதிடுவர். தமிழ்ச் செல்வர் பலர் எதிரியின் முகமன் வலையில் அகப்பட்டுப் பெருமை பிதற்றி உரிமை இழப்பர்.

இத்தகைய குறைகளை எதிரிகள் நன்கறிவர். அன்னோர் சொல் நலங்காட்டிப் பொருட் பழம்பறிப்பார்; மாணவராய் நின்று ஆணவ ராய் ஆசிரியராய் ஆட்சிபுரிவார். தமிழரைப் பிரிக்காளும் பெற்றியில் இணையற்ற திறமை சான்றவர். எதிர்ந்தாற் பதுங்கி அற்றம் பார்த் துத் தங் கருத்தை மெல்லென நுழைத்து இடைவிடா முயற்சியால் நாளடைவில் தமது வெற்றி நாட்டுவர். இந்நுட்பங்களைத் தமிழ் மகா

நாட்டுத் தலையறிஞர் தங்கடமை நிறைவேற்றுமிடத்து மனதில் பதி வித்துக் கொள்ளல் வேண்டும்.

இனிச் செய்யற்பாலன சில தொகுத்துரைப்பாம். தமிழன்னை யின் பெருமையைத் தமிழ்மக்கள் யாவரும் தெள்ளத்தெளிய உணரும் படி பத்திரிகையும் பிரசாரமும் ஓய்வில்லாமல் நடைபெற வேண்டும். தமிழின் ஏற்றத்தை உண்மையாகக் கருதும் எவரையும் நம்மவ ராகவே தழுவிக்கொள்ளுதல் வேண்டும். தமிழுக்கு உழைக்கும் அறிஞர்க்கு நேரும் இன்னல்களை முற்பட்டு அகற்றல் வேண்டும். தமிழுக்கு நேராகவோ மறைவாகவோ ஊறுசெய்யும் பத்திரிகைகளை ஆதரியா தொழிதல் வேண்டும். போதுமான மொழிப்பற்று இல் லாத தமிழ்ச் செல்வர்களின் ஆதரவைக்கொண்டு பகைப் பத்திரிகைகள் பெருமிதமுற்று பெருநடை நடந்து பெருந்தீங்கு விளைக்கின்றன. அவர்கள் சூழ்ச்சியினின்று நம்மை விடுதலை செய்யும் வீரப் பத்திரி கைகளை வேரூன்றச் செய்தல் வேண்டும்.

சிறந்த தமிழ் நூல்களுக்குத் தமிழ்மாண்பு விளக்கும் ஆராய்ச்சி முறையில் உரைகண்டு வெளிப்படுத்துவதற்குப் பெருந்துணை புரி தல் வேண்டும். தமிழ் நாகரிகத்திற்குக் கண்ணாடியாய் அமைந்த தொல்காப்பியத்திற்கு ஏற்பட்டிருக்கும் உரைகள் அது தோன்றிச் சில்லாயிரம் ஆண்டுகள் கழிந்தபின் வடநூல் ஒளியினில் வகுக்கப் பட்டனவாகும். உரைக்கேற்ப நூற்பாக்கள் புகுத்தப்பட்டும் திருத் தப்பட்டும் வைப்புமுறை மாற்றப்பட்டும் இருப்பதை ஆராய்ச்சி யாளர் அறிவர். அவ்வுரைகொண்டு நூல்கற்பவர் கலப்பற்ற உண்மை யைக் காண இயலாதவரே யாவர். அவ்வாறே திருவள்ளுவர் நூலுக் கும் தமிழ்நலங்காட்டும் புத்துரை இனியே அமையவேண்டும். பரிமே லழகர் உரையில் கொள்ளத்தக்கன பல உள. எனினும் அதன் நிறம் தமிழ்நிறமன்று. வள்ளுவர் கூறிய பொதுஅறத்தை ஒரு குலத்துக் கொருநீதி கூறும் மனு முதலிய நூல்களிற் காண்கவென்று அது கற் பிக்கின்றது. பெண்கல்வி வேண்டாமென்று பேசுகின்றது. அரசி யற் கொள்கைக்கு ஆரிய நூலில் ஆதாரம் தேடுகின்றது. காமத்துப் பாலும் வடவர்வழித் தொன்கின்றது. அதனால் தமிழரது பண்டைப் பொதுநெறி மறைவுற்று வருணக்கொள்கை மதிப்புறுவதாயிற்று. சங்க நூல்களுக்கும் தமிழர் மனப்பான்மையைத் தெள்ளிதின் உரைக் கும் தெளிவுரைகள் ஏற்படல்வேண்டும். தண்டமிழ்க் காப்பிய நலங் களைக் கவினுற விளக்கும் நற்றமிழ் வாசகநூல்கள் நவநவமாக நனி பரவுதல் வேண்டும். புராணப் பனுவல்கள் ஆராய்ச்சியில் புடைக்கப் படுதல் வேண்டும். மெய்யாராய்ச்சியில் நிலைபெறுவனவே தழுவத் தக்கன. ஏனைய தள்ளத்தக்கன. சரித்திரம் செம்மை பெறுதல் வேண்டும். தமிழின் விழுமிய கருத்தும் நூலும் ஆங்கில முதலிய பிறமொழி தம்மினும் பிறங்குதல் வேண்டும். சித்தர் நூலாராய்ச்சி செவ்விதிற்றிகழ்ந்து மருத்துவ சோதிட மந்திர யோகநூல் முறை

களைத் தெற்றென விளக்குந் தெளிவு நூல்கள் பலப்பல ஆதல்வேண்டும். மேனாட்டு அறிவியல் நூல்கள் பலவும் தமிழிற் பாங்குற அமைத்தல் ஆங்கிலங் கற்றவர் முதற்கடமையாகும். நயமிக்க வடநூல் பிற நூல்கள் தமிழிற் கொணர்தல் அவ்வம் மொழியில் வல்லுநர் கடமை. செந்தமிழிசைகளே தமிழ் நன்மக்களால் போற்றத் தக்கன. இசைவல்ல தமிழர் இன்றமிழ்ப்பாட்டே பாடுதல் வேண்டும். இசைத்தமிழ் முழக்கம் தமிழ்மக்கள் யாவர் வீட்டினும் நிறைதல் வேண்டும். நாடகக் கலைகள் தமிழர் சீரை நாடுதல் வேண்டும். பண்டைத் தமிழர் வாழ்க்கைச் சிறப்பும் ஆடல்பாடல் கூடல் வனப்பும் இன்பம் வீரம் முதல் எண்வகைச் சுவையும் நாடகமேடையிலும், பேசும்படச்சாலைகளிலும் பொங்கித் ததும்பிப் பூரணமாதல் வேண்டும். ஓவியமும் சிற்பமும் ஒண்டமிழ்முறையில் அமைதல் வேண்டும். அவற்றை விளக்கும் நூல்கள் தமிழின்கண்ணே மிகுதல் வேண்டும். தமிழ் கல்லாத தமிழரும் தமிழ் நூலில்லா வீடும் தமிழகத் திருத்தல் கூடாது. சுருங்கக்கூறின் தமிழ் தமிழ் என்ற முழக்கம் நாடெங்கும் செழித்தல் வேண்டும்.

தமிழ்மொழி பேணுந் தகுதியில்லார்க்கு அரசியல் அதிகாரம் கிட்டுதலாகாது. பல்கலைக் கழகங்களிலும் அவர்களுக்கு ஆதிக்கம் இருத்தல் கூடாது. எவ்வகைப் பொதுநிலையங்களிலும் அவர்களுக்கு மதிப்பு ஏற்படுதல் கூடாது. இது பாமரர் மனத்திலும் பண்டிதர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோற் பதிதல் வேண்டும். தாய் மொழிப் பகைவர்க்கு உரிமைச்சீட்டு உதவி உயர்வுகொடுத்தல் தமிழன்னைக்குச் செய்யும் நன்றியில் பெருங் கேடாகும். தமிழ்நலம் நாடும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்க்கே மதிப்பும் மாண்பும் அரசியலாற்றலும் கல்லூரித்தலைமையும் திண்ணமாக அமைதல் வேண்டும். தமிழ்ப் பொதுமக்கள் கண்ணுங்கருத்துமாகத் தமிழ்த்தொண்டர்க்கே எவ்வகை உரிமைச்சீட்டையும் உதவுதல் வேண்டும். அங்ஙனம் உதவத் தவறுதல் மன்னிக்கத்தகாத பெருங்குற்றமாகும். இக் கருத்தினைத் தமிழர் என்பார் யாவருள்ளத்தும் நிலைபெற்றுப் பயனுறச் செய்தல் தமிழர் மகாநாட்டின் தலைக்கடமையாகும்.

தமிழுக்குழைத்து உயிரை அளித்த தமிழ்ப்பெரியார் திருநாள் எங்கும் என்றும் கொண்டாடப்படுதல் வேண்டும். தமிழர் வீடு தோறும் தமிழ்ப் பெரியார் திருவுருப்படங்கள் திகழ்தல் வேண்டும். அவர் திருநாள் கொண்டாடாது பிறநாட்டுத் தலைவர் திருநாள்மாத்திரமே கொண்டாடுதல் தமிழரின் உணர்ச்சியின்மையைக் காட்டும் இழிசெயலாகும். எந்நாட்டுப் பெரியாரினும் நந்நாட்டுப் பெரியார் கழி பெருஞ்சிறப்புடையா ரென்பதைக் கருதுதல் வேண்டும். அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர், திருமூலர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கப்புலவர்கள், பிற்காலப் பெரும் புலவர்கள், அருள் வள்ளல்கள் முதலியோர்க்கு ஈடாகப் பிறநாட்டுப் பெரியாரைக் கூறு

தல் ஒன்றுமோ! தமிழ்ப் பெரியார்க்குத் தனிச்சிறப்புச் செய்து
பிறபெரியாரையும் பேணுதல் நன்றே.

தமிழாது மொழிமாண்புடனே பிற மாண்பினையும் தமிழர்
மகாநாடு நாடுதல்வேண்டும். தமிழரின் சமுதாய ஒற்றுமைப்
பொருட்டு, நாகரிகத்திற்கு மாறில்லாமல், பல இனத்தாரும் உடன்
உண்ணுதல், மகட் கோடல், மகற்கோடல் என்பனவற்றை யாரும்
மறுத்துரைத்தல் கூடாது. அவ்வாறே ஒரு கடவுளுண்மை, உயிர்க்
கிரங்குதல், மறுபிறப்பு, உருவழிபாடு, ஒழுங்காசியல் என்பவற்றை
யும் பொதுக் கூட்டங்களில் மறுத்தலின்மை ஒற்றுமைக்கு ஊஞ்செய்
யும். தமிழரின் பொருள் வசதியின் பொருட்டுப் பாங்கு முதலியன
நடத்தல், தங்கிடம், உணவு வசதியின் பொருட்டு மாணவர் விடுதி
பொது விடுதிகள் அமைத்தல், சமய முன்னேற்றத்திற்காகத் திருத்
தப் பிரசாரம் பயிற்றுதல், தொழில் வளர்ச்சிக்காகக் கல்லூரிகள்,
கழகங்கள் நிறுவுதல், வேறெவ்வகை வளர்ச்சிக்கும் உரிய திட்டங்கள்
வகுத்தல், முதலியன படிப்படியாக, ஆட்சிக்கு வருதல் வேண்டும்.
கல்வித்துறை, செல்வத்துறை, தொழிற்றுறை, அரசியற்றுறை, சம
யத்துறை முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழர் ஒற்றுமையுற்றுப்
பெருநலம் பெறுதற்கு ஆவனயாவும் ஆற்றுதல் கடனே. தமிழர்க்கு
மாகாணம் தனியே அமைதல் நன்மைகள் பலவற்றிற்கும் அடிப்படை
யாகும். யாவற்றிற்கும் அடிப்படை மொழிபேணுதலே, ஆதலின்
அதனை விரித்திங் குரைத்தாம். உலகமுழுவதும் ஒரு குடைக்
கீழாண்ட உயர் தமிழ் மொழிக்கே இந்திய நாடு முற்றிலும் உரியது.
நேற்றுத் தோன்றிய வரம்பிலா மொழிகள் தமிழ்க்கு முன்னர்த் தலை
யெடுக்காமல் அடங்கிச்செல்லப் பணித்தல் வேண்டும். அன்னையை
மீறும் அகந்தை மொழிகளை அகற்றி ஒழித்தலே அறிஞர் கடமை.
போலிப்பற்றை ஒழித்து நடுநிலை நின்று பொதுநலம் நாடின் இந்தி
மொழியினும், எங்கும் பரவிய ஆரிய மொழியாம் ஆங்கிலமொழியே
பொது மொழியாக அமைதற்பாலது. ஆயிரத்திலொரு தமிழன்
வடநாடு சென்றால் . செல்லுங்காலை வேண்டுமாயின் இந்தி கற்க.
அதற்காகத் தாய்க்கொலை செய்தல் சால்புடைத்தன்று. இந்தக்
கருத்தை எல்லாத் தமிழரும் கடைப்பிடித்தல் ஆகிய ஒரு பெருங்
கடமை முற்றிலும் நிறைவேறின், இடையூறு யாவையும் எளிதில்
விலக்கி அழியாப்பொறியும் அந்தமில் இன்பமும் எந்நாளும் தமிழர்
பெறுவர். ஆதலின் இப் பெருங் கடமையும் பிற எப்பெருங் கடமை
யும் இறைவன் அருள்கொண்டு செவ்விதின் இயற்றுவான் தமிழர்
இயக்கம் தழைத்தல் வேண்டும். தமிழர் இயக்கம் நீடூழி நிலவ, இத்
தமிழர் மகாநாடு சிறப்புற்றுச் சிறப்புற்றோங்குக.

The Jupiter Press, Madras.